Issued—10-6-1960]

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

THURSDAY, 10TH MARCH 1960

VOLUME XXVIII—No. 1

SECRETARIAT LIBRARY
- 6 JUL 1960
GOVERNMENT OF MADRAS

CONTENTS


| | PAGES |
|---|---|
| I Obituary reference to Sri A. B. Shetty, Dr. Mahomed Usman and Sri G. Harisarvothama Rao .. .. .. .. .. | 1-2 |
| II Swearing in of Members .. .. .. .. .. .. | 2 |
| III Announcements— | |
| (1) Panel of Chairmen .. .. .. .. .. .. | 2 |
| (2) Decisions of the Business Advisory Committee .. .. | 69 |
| IV Questions and Answers .. .. .. .. .. .. | 2-27 |
| V Discussion re Questions .. .. .. .. .. .. | 27-28 |
| VI Presentation of the Budget for the year 1960-61 .. .. | 29-68, 75-155 |
| VII Papers laid on the table of the House .. .. .. .. | 69-74 |


©
GOVERNMENT OF MADRAS
1960

*Legislative Assembly Department*
*Madras*

PRICE, 50 *naye Paise*]

D
V 2,11,31 N60
N61·2851
61315

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Thursday, 10th March 1960.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at eleven of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

MR. SPEAKER: இந்தச் சட்டசபைக் கூட்டத்திற்கு உங்கள் எல்லோரையும் வரவேற்கிறேன். இந்தக் கூட்டத்தில் வரவு-செலவுத் திட்டம் விவாதிக்கப்படும். அதுவுமல்லாமல் முக்கியமான மசோதாக்கள் இந்தச் சபையின் முன்பு வைக்கப்படும். அவற்றையெல்லாம் நிறைவேற்றிவைக்க உங்களுடைய ஆதரவை எனக்கு கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

## I.—OBITUARY REFERENCE TO SRI A. B. SHETTY, DR. MAHOMED USMAN AND SRI G. HARISARVOTHAMA RAO

MR. SPEAKER: இந்தச் சட்டசபையின் பழைய காலத்து அங்கத்தினர்கள் இருவரும், தற்கால மேல்சபை அங்கத்தினர் ஒருவரும் இறந்துவிட்டார்கள் என்ற செய்தியை உங்களுக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதன் முதலாக ஸ்ரீ ஏ. பி. ஷெட்டி அவர்களைப்பற்றிக் குறிப்பிடுகிறேன். அவர்கள் பழைய காலத்தில், மேல் சபைக்கு—அந்தக் காலத்தில் அதற்கு மெட்ராஸ் லெஜிஸ்லேடிவ் கவுன்சில் என்று பெயர்—1926-ம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார். பத்து ஆண்டுகளுக்கு அந்தச் சபையின் அங்கத்தினராக இருந்தார். தென் கன்னடப் பிராந்தியத்தில் மூன்று வருஷங்கள—1932-லிருந்து 1935-ம் ஆண்டு வரைக்கும்—ஜில்லா போர்டு தலைவராக இருந்தார். அந்தப் பகுதியில் ஹரிஜனங்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் நல்ல சேவை செய்து வந்தார். 1937-ம் ஆண்டில் சென்னை சுகாதார மந்திரிக்கு பார்லிமெண்டரி செக்ரடரியாக வந்தார். விடுதலைப் போராட்டத்தில பங்கெடுத்துக்கொண்டு 194[illegible]-ம் ஆண்டில் ஒன்பது மாதம் சிறையில் இருந்தார். இந்த அசெம்பிளி ஆரம்பித்த பிற்பாடு, தென் கன்னடப் பிராந்தியத்தில் இருக்கும் குந்தாபூர் தொகுதியிலிருந்து இந்தச் சபையின அங்கத்தினராக வந்தார். 1947-ம் ஆண்டில் சுகாதார மந்திரியாக வந்தார். ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் மந்திரி சபையிலும், ஸ்ரீ குமாரசாமி ராஜா அவர்கள் மந்திரி சபையிலும், ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் மந்திரி சபையிலும், நமது முதல் மந்திரி காமராஜ் அவர்கள் மந்திரி சபையிலும் சுகாதார மந்திரியாக இருந்து நல்ல முறையில் வேலை செய்து வந்தார். ராஜ்யப் பிரிவினைக்குப் பிறகு அவர்கள் மைசூரில் சுகாதார மந்திரியாக நல்ல சேவை செய்து வந்தார். அவர் கடைசியாக எந்தத் தேர்தலிலும் நிற்காமல் ஓய்வு எடுத்துக்கொண்டார். அவர் வேலை செய்யும் காலத்தில் எல்லோருக்கும் நல்லவர் என்ற பெயர் வாங்கி, அவர்களிடத்தில் இருந்த இலாகாவை நல்ல முறையில் ஆண்டு வந்தார். அவர் இறந்துபோகும் போது அவருக்கு வயது 78.

இரண்டாவதாக, ஸர் முகமது உஸ்மான் அவர்கள் இறந்து போனார். 1924-ம் ஆண்டிலிருந்து கவுன்சில் அங்கத்தினராக இருந்தார்கள். சென்னை நகரசபையில் 1918-ல் இருந்து ஏழு ஆண்டுகள் அங்கத்தினராக இருந்தார். நகரசபையின் தலைவர் பதவியைக்கூட 19[illegible]4-ம் ஆண்டில் ஏற்றுக்கொண்டு நன்றாக வேலை செய்து வந்தார். நம்முடைய சென்னை அரசாங்கத்தில் அந்தக் காலத்தில் எக்ஸிகியுடிவ் கவுன்சில் என்று சொல்லப்பட்ட மந்திரி சபையில் அங்கத்தினராக இருந்தார். மத்திய அரசாங்கத்தில் மந்திரியாகக்கூட விளங்கி நன்றாக வேலை செய்து வந்தார். நம்முடைய சென்னை மாகாணத்தின் ஆக்டிங் கவர்னராக 1934-ம் ஆண்டில்

[Mr. Speaker] [10th March 1960

அவர் பதவி ஏற்றுக்கொண்டு நன்றாக வேலை செய்து வந்தார். பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக 1942-ம் ஆண்டிலிருந்து 1946-ம் ஆண்டு வரைக்கும் மிக நன்றாக வேலை செய்து வந்தார். ரோட்டரி, ரெட்கிராஸ், அஞ்சுமான் என்கிற பொது ஸ்தாபனங்களில் அங்கம் வகித்து நல்ல முறையில் வேலை செய்து வந்தார். முஸ்லிம்களுக்கு மாத்திரமல்லாமல் எல்லோருக்கும் நல்லவராக விளங்கி பேரும் புகழும் பெற்றார். அவர் இறந்துபோகும்போது நமது மேல்சபையில் அங்கத்தினராக இருந்தார். இறந்துபோகும்போது அவருக்கு வயது 75.

கடைசியாக, ஸ்ரீ ஜி. ஹரிஸர்வோத்தம ராவ் என்பவர் பழைய காலத்தில் கர்னூல் தொகுதியிலிருந்து மெம்பராக வந்தார். அவரும் பழைய சென்னை சட்டசபையில் அங்கத்தினராக இருந்து நல்ல வேலை செய்து வந்தார்.

இவர்கள் மூன்று பேரும் இறந்த செய்தியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர்கள் குடும்பத்தார்களுக்கு இந்தச் சபையினுடைய அனுதாபத்தைத் தெரிவிக்கும் முறையில் எல்லோரும் ஒரு நிமிஷம் எழுந்து நிற்கும்படி கனம் அங்கத்தினர்கள் எல்லோரையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(சபை அங்கத்தினர்கள் ஒரு நிமிஷ நேரம் மௌனமாக நின்றார்கள்.)

### II.—SWEARING-IN OF MEMBERS.

Sri R. J. Sundar Singh and Sri S. Pandiaraj were sworn in.

### III.—ANNOUNCEMENTS.

(1) PANEL OF CHAIRMEN.

MR. SPEAKER : Under rule 14 (1) of the Madras Legislative Assembly Rules, I nominate the following to be the Panel of Chairman :—

1. Srimathi Kamalambuja Ammal.
2. Sri V. K. Krishnamurthy.
3. Sri T. Sampath.
4. Sri A. Govindasamy.
5. Sri M. Jagannathan.
6. Sri K. Sattanatha Karayalar.

### IV.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*District Board School Teachers*

* 245 Q.—SRI K. ANBAZHAGAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) how many teachers in the District Board Schools were transferred in Ramanathapuram District in the months of June and July 1959;

(b) the amount of expenditure involved in the transfers by way of travelling allowance and daily allowance and personal effects;



10th March 1960]

(c) the reasons for the large scale transfer; and

(d) whether it is a fact that the teachers were not paid their salary for the months of April and May 1959 even at the time of transfer?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) 314 out of a total of 3,000.

(b) Rs. 3,722·89.

(c) The teachers were transferred for the following reasons, viz :—

(1) some at their own request;

(2) some because of complaints received against them;

(3) some to give place to couple teachers who were working in different places; and

(4) some on mutual transfer;

(d) No, Sir.

SRI K. ANBAZHAGAN : கடந்த 1959-ம் ஆண்டு ஜூன்-ஜூலை மாதங்களில் 314 ஆசிரியர்களை திடீர் என்று மாற்றுகிறபோது, அவர்களுக்கெல்லாம் ஏப்ரல், மே ஆகிய இரண்டு மாதங்களுக்கு சம்பளம் தரப்படாமல் இருந்தது என்பது உண்மையா? இரண்டு மாதச் சம்பளம் பாக்கி இருக்கும்போது திடீர் என்று மாற்றுவது அவர்களுக்கெல்லாம் பெரும் துன்பத்தை அளிக்காதா?

THE HON SRI C. SUBRAMANIAM: (டி) என்ற பகுதிக்கு 'இல்லை' என்று பதில் சொன்னேன். டிரான்ஸ்வர் ஆகும்போது எல்லோருக்கும் ஏப்ரல், மே மாதங்களுக்கான சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல்தான் என்னிடத்தில் இருக்கிறது. யாருக்காவது கொடுக்கவில்லை என்பதற்கு அவர்கள் கையில் ஏதாவது தகவல் இருக்குமானால் அதை என்னிடத்தில் கொடுத்தால் விசாரிக்கிறேன்.

SRI S. LAZAR: பொதுவாக ஜில்லா போர்டுகளில் இருக்கும் ஆசிரியர்களை மாற்றுவது சம்பந்தமாக எந்தெந்த அடிப்படையில் மாற்றலாம் என்று ஏதாவது ஒரு கொள்கை வரையறுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான்கு விஷயங்கள் சொன்னேன். அதைப்பொறுத்து அவர்களை மாற்றலாம். பள்ளிக்கூட ஆரம்பகாலம் ஜூன் ஆனதினாலே அந்தக் காலத்தில்தான் மாறுதல் ஏற்படுகிறது.

SRI K. ANBAZHAGAN : அமைச்சர் அவர்கள் அளித்த பதிலிலே ஆசிரியர்களைப்பற்றி புகார்கள் வந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எத்தனை ஆசிரியர்களைப்பற்றி புகார்கள் வந்து விசாரிக்கப்பட்டிருக்கின்றன? விசாரிக்கப்படாமலேயே மாற்றல்கள் செய்யப்பட்டனரா?

THE HON. SRI C. SUBRAMANIAM: 113 ஆசிரியர்கள், இம்மாதிரி புகார் வந்ததின் பேரில் மாற்றப்பட்டார்கள்.

SRI T. S. RAMASWAMI : May I know what sorts of complaints were received and from whom and who enquired into these cases?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஜில்லா போர்டு ஆசிரியர்கள் விஷயத்தில் யார் யார் பேரில் என்னென்ன புகார் என்பதுபற்றி இப்பொழுது கேட்டால் உடனடியாக பதில் சொல்ல முடியாது.

[10th March 1960

SRI A. A. RASHEED : May I know how many husbands and wives were united by the transfer?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தக் கட்டத்திலே மாறுதல் அடைந்தவர்கள் 51 பேர்கள்.

SRI A. V. P. ASAITHAMBI : ஆசிரியர்களை ஓர் இடத்தில் இருந்து இன்னொரிடத்திற்கு மாற்றுவது, இடைக்காலத்தில் மாற்றப்படுவதினால் மாணவர்களுடைய படிப்பு பாதிக்கப்படுகிறது. எனவே ஏன் மார்ச் அல்லது ஏப்ரல் மாதத்தைத் தவிர இடைக்காலத்தில் ஆசிரியர்களை மாற்றுவதில்லை என்று முடிவு கட்டி ஏதாவது புகார்கள் வந்தால் அவர்களை அங்கேயே வைத்திருந்து நிவர்த்திக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : மாற்றல் பூராவும் ஜூன் மாதத்தில் நடந்தது. ஆகையால் இந்தக் கேள்விக்கும் கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கும் உப கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

SRI S. NAGARAJA MONIGAR : இம்மாதிரி குறைகள்பற்றி ஏற்கெனவே அந்தந்த ஜில்லா பிரதிநிதிகளிடமிருந்தும், அங்கத்தினர்களிடமிருந்தும் ஏதாவது புகார்கள் வந்திருக்கின்றனவா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் யார் யாரிடமிருந்து என்னென்ன புகார் வந்தது என்ற தகவல் என்னிடம் இல்லை.

SRI A. GOVINDASAMY : இந்த மாறுதல் செய்த நேரத்தில் டி. இ. ஓ. வின் அங்கீகாரம் பெற்று செய்யப்பட்டதா? அல்லது ஸ்பெஷல் ஆபீஸரே செய்தார்களா?

THE HON. SRI C SUBRAMANIAM : எந்த அடிப்படையில் மாறுதல்கள் செய்யவேண்டுமென்பதற்கு விதிகள் இருக்கின்றன. அவைகளின் அடிப்படையில் மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

*Police Station in Somarasampettai.*

*246 Q.—SRI G. ANNAMALAI MUTHURAJA : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) திருச்சி சோமரசம்பேட்டை போலீஸ் நிலையத்தை நிரந்தரமாக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) அப்படியானால் உடனடியாக போலீஸ் சிப்பந்திகளுக்குரிய வீடுகள் அமைக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.
(b) Does not arise.

*Javvadu Hill Tribes.*

*247 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) ஜவ்வாது மலையிலுள்ளவர்களை தாழ்த்தப்பட்ட இனமாக (Scheduled Tribes) சர்க்கார் அங்கீகரித்துள்ளார்களா?

(ஆ) 1958-ல் அவர்களுக்காக ஒதுக்கிய பணம், செலவிடப்பட்ட பணம் எவ்வளவு?

THE HON. SRI P. KAKKAN : (a) The Malayalees who are found in the Javvadu Hills have been classified as Scheduled Tribes. The Sugalis and Lambadis are classified as Backward Classes.



10th March 1960]

(b) An allotment of Rs. 91.906 was made for the year 1958–59 for the hill tribes in the Javadis of which a sum of Rs. 67,454.14 nP. was spent.

SRI P. U. SHANMUGAM : ஒதுக்கிய பணத்தை குறைவாக செலவு செய்ததற்கு காரணம் சொல்ல முடியுமா?

THE HON. SRI P. KAKKAN : கூட்டுறவு இயக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் கொஞ்சம் செலவு செய்யவில்லை. அந்த சொஸைட்டி 1959-ம் ஆண்டு ஆகஸ்டுமீ 21உ-ல் ரெஜிஸ்டர் செய்யப்பட்டது. தவிர. குழந்தைகளுக்கு சாப்பாடு போடும் விஷயம் பின்னால் முடிவு செய்யப்பட்டதால் தாமதம் ஏற்பட்டது.

*Javvadu Hill Tribes*

*248 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலையில் வாழ்கின்ற மக்களுக்காக குடிசைத்தொழில் ஆரம்பிக்கும் திட்டம் உண்டா?

(ஆ) அப்படியானால் எந்தெந்த இடத்தில்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) A bee-keeping nursery has been started at Pattaraikadu in Javvadu Hills. A bee-keeping area office of the Khadi and Village Industries Commission has also been located at Jannamarudur village on the same hills with sub-stations at Kambukudi, Pudhur, Veerappanur, Govilur and Pattaraikadu.

*Iron ore deposits in Talankulam village*

*249 Q.—SRI K. GOPALA KOUNDER : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

தென்னாற்காடு ஜில்லா, செஞ்சி தாலூக்கா, தாழங்குளம் கிராமத்தில் உள்ள இரும்பு கனிப்பொருள்களை மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் எடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN : There are no such proposals at present.

SRI A. GOVINDASAMY : செஞ்சி தாலுகாவிலிருந்து எடுக்கப்பட்ட இரும்புகனி சர்க்காரின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது வாஸ்தவமா?

THE HON. SRI R. VENKATARAMAN : அதை பரிசீலனை செய்ததுகூட 36o/oவிலிருந்து 40o/o வரை அங்கு இரும்பு சத்து இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

SRI R. SRINIVASA IYER : May I know, Sir, whether any general survey of the availability of iron ore in the State has been taken up by the Geological Department of this State and whether there is iron ore near Coonoor with 63 per cent iron content?

MR. SPEAKER : I think it is a separate question.

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. That is a separate question.

SRI A. GOVINDASAMY : அந்த 36o/o "அயன் ஓர்" தொழில்களுக்கு பயன்படுத்த வசதியிருக்குமென்று சர்க்கார் கருதுகிறதா அல்லது பயன்படாது என்று கருதுகிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN : இது சர்க்கார் கருத்து இல்லை. எக்ஸ்பர்ட்ஸ், நிபுணர்கள் கருதுவதாகும். இதுவரையில் அபிப்பிராயம், 36o/o உள்ள கனிப்பொருள்களை உபயோகிக்க முடியாது என்று இருந்தது.

[10th March 1960

இப்பொழுது ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் அதை உபயோகப்படுத்தலாம் என்று பரீட்சார்த்தமாக வெற்றி பெற்றிருப்பதால் நாமும் அதைச் செய்ய முடியுமென்று நினைக்கிறோம்.

*Madras State Co-operative Farming Board*

• 250 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the names of members of the Madras State Co-operative Farming Board;

(*b*) the basis on which they were nominated; and

(*c*) the functions of the Board?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The following are the members of the Madras State Co-operative Farming Board :—

(1) Minister in charge of Co-operation.

(2) Minister in charge of Agriculture.

(3) Minister in charge of Revenue.

(4) Development Commissioner.

(5) Additional Development Commissioner.

(6) Member, Board of Revenue (Land Revenue).

(7) Director of Agriculture, Madras.

(8) Registrar of Co-operative Societies, Madras.

(9) Chief Engineer (Irrigation).

(10) Commissioner for Hindu Religious and Charitable Endowments.

(11) Sri K. P. V. Giri, Secretary, Tamil Nadu Congress Committee.

(12) Sri K. Arunachalam, Chairman, State Gramadhan Board.

(13) Sri R. Srinivasa Iyer, M.L.A.

(*b*) It is presumed that the hon. Member refers to the non-official members of the State Co-operative Farming Board. They were nominated for a period of one year in view of their interest in the co-operative movement and their knowledge and experience of conditions in villages.

(*c*) The Board is expected to advise and help in the formulation schemes for the promotion of co-operative farming in the State and to review the progress of the movement from time to time.

SRI D. S. AUTHIMOOLAM : இந்த போர்டில் 13 மெம்பர்கள் இருக்கிறார்கள். அது நல்லதொரு லக்கமல்ல. ஆகவே ஆப்போஸிஷன் லீடர் அவர்களையும் அந்த போர்டில் சேர்த்துக்கொள்ள சர்க்கார் முன்வருமா ?

(பதில் இல்லை)

SRI K. ANBAZHAGAN : இந்த மாநில கூட்டுறவு பண்ணை பற்றிய கோவாப்பரேடிவ் பாரம்பற்றிய நிர்வாகக் குழுவில் உறுப்பினர்களாக இருப்பவர்களில் பெரும்பாலோர் அரசாங்க அலுவலகங்களில் ஈடுபட்டவர்களாக இருக்கிறார்கள். உத்தியோகத்தில் இல்லாத தனிப்பட்டவர்களை அதிகமாக உறுப்பினர்களாக சேர்ப்பதில் அரசாங்கத்திற்கு என்ன கஷ்டமிருக்கிறது.



10th March 1960]

THE HON. SRI R. VENKATARAMAN : ஆரம்ப காலத்தில் நிர்வாகத்தில் சிக்கல்கள்தான் அதிகமாகயிருக்கும். அந்தச் சிக்கல்களை எல்லாம் சரிபடுத்துவதற்காக அந்தந்த இலாகா அதிகாரிகளாக இருப்பவர்களை போட்டிருக்கிறோம். காலாகாலத்தில் அதில் மற்ற உத்தியோகப் பற்றற்றவர்களையும் போடுவோம்.

*Co-operative Spinning Mill, Srivilliputtur*

• 251 *Q.*— SRI V. K. KOTHANDARAMAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூரில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் கூட்டுறவு நூல் ஆலையில் கட்டிடம் கட்ட காண்ட்ராக்டுக்கு விடப்பட்டதா ?

(ஆ) எவ்வளவிற்கு ? எவ்வளவு நாளாகிறது ?

(இ) இப்போது எந்த நிலையில் உள்ளது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) Rupees two lakhs sixty-six thousand four hundred and twenty-nine (Rs. 2,66,429).

The site for the construction of building was handed over to the contractors on 17th August 1959.

(*c*) *Blow-room.*—Concrete columns and chimney beams have been erected in the blow-room celler. Brick walls have been constructed up to a height of twelve feet in the chimney portion and all around. Lintels and sunshade have been provided. Eleven numbers of trusses are ready for fixing.

*Preparatory and spinning shed.*—The north-south wall on the western side has come up to a height of twelve feet.

*Reeling halls.*—Stone masonry on all four sides has come up to a height of eight and three-fourths feet.

*Verandah.*—Brick walls on all the sides have come up to two feet height over the concrete lintel level.

SRI V. K. KOTHANDARAMAN : குறைந்த ரேட் டெண்டருக்கு ஒரு நபர் கேட்டிருந்தும் அவருக்கு விடுவதற்குப் பதிலாக ஒரு பணக்கார காங்கிரஸ்காரரும், இந்த சட்டசபையில் அங்கத்தினராக இருக்கக்கூடியவரும் அதிபதியாக இருக்கக்கூடிய ஸவுத் இந்தியா கார்ப்பரேஷனுக்கு அதிக ரேட்டுக்கு. . . .

MR. SPEAKER : That does not arise from the question before us now. I am afraid the whole question is out of order. The question is whether the construction entrusted to somebody has been finished. But the hon. member is raising some other point.

SRI V. K. KOTHANDARAMAN : அவருக்கு அதிகப்படியான ரேட்டுக்கு கொடுக்கப்பட்டது உண்மையா ? அப்படியானால் அதற்கான காரணங்கள் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த மில் கட்டுவதற்கு இரண்டு காண்ட்ராக்ட்கள் கொடுக்க வேண்டியிருந்தது. ஒன்று, கல் கட்டிடம் கட்டும் காண்ட்ராக்ட்; இரண்டாவது, இரும்பு வளைகள் வைத்து மேல்கூரை போடும் காண்ட்ராக்ட். கல் கட்டிடம் கட்ட டெண்டர் கொடுத்தவர் 3,000 ரூபாய் குறைவாக கொடுத்தார்கள். ஆனால் அவர் மேற்கூரை கட்டும்

[10th March 1960

கான்ராக்டை எடுக்கமாட்டேன் என்று கூறிவிட்டார்கள். 3,000 ரூபாய் அதிகமாக கொடுத்து கான்ராக்டர் மேல்கூரை போடுகிற கான்ராக்டையும், கல் கட்டிடம் கட்டும் கான்ராக்டையும் சேர்த்து கட்ட ஒத்துக் கொண்டதால் கொடுக்கப்பட்டது. இதில் தவறுதல் ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை.

Sri V. K. KOTHANDARAMAN : இந்த கட்டிடத்தை கட்டுவதற்காக வேண்டி வாங்கிய நிலம் ஏக்கர் ஒன்றுக்கு 200 ரூபாய் பெறமுடியாத நிலத்தை ஆயிரக்கணக்கான ரூபாய் போட்டு வாங்கியது உண்மைதானா? அது யாரிடத்தில் வாங்கப்பட்டது? இது சம்பந்தமாக காங்கிரஸ்காரர்களுக்குள்ளேயே பலத்த அபிப்பிராயபேதம் இருக்கிறது. ஆகவே இதை தனியாக விசாரணைக்கு விடுவதற்கு சர்க்கார் முன்வருமா?

The Hon. Sri R. VENKATARAMAN : அங்கத்தினர் அவர்களுக்கு லாண்ட் அக்விஸிஷன் ஆக்ட் பற்றி தெரியும் என்று நினைக்கிறேன். அந்த சட்டப்படி நாம் எந்த நிலத்தை "அக்வயர்" செய்யவேண்டுமென்று நினைக்கிறோமோ அதுபற்றி நோட்டிஸை செய்கிறோம். அப்ஜக்ஷனஸ் கேட்கிறோம். கலெக்டர் அதன் மதிப்பை நிர்ணயம் செய்கிறார்கள். அதன்படி கொடுக்கிறோம். ஆகவே, தனிப்பட்டவர்கள் குறைவாக கொடுத்துவிட்டார்கள் அல்லது அதிகமாக கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால் அதை சர்க்கார் எடுத்துக்கொள்ள முடியாது. ஆக்ட் பிரகாரம் தான் செய்ய முடியும்.

Sri R. KRISHNASAMI NAIDU : பிரஸ்தாப மில்லுக்காக அக்வயர் செய்யப்பட்ட நிலம், ரெவின்யூ டிப்பார்ட்மெண்ட்டாரால் ஏக்கர் ஒன்றுக்கு 200 ரூபாய்க்கு அதிகமாக மதிப்பீடு சிபார்சு செய்யப்படவில்லை என்பதும் மொத்தம் வாங்கும் நிலத்திற்கு, சுமார் 37 ஏக்கர் நிலம் 80,000 ரூபாய்க்குள்தான் அடங்கும் என்பது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா? ஆகவே, இப்படிப்பட்ட பொறுப்பற்ற கேள்விகள் கேட்காமல் இருப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமா?

Mr. SPEAKER : கேள்வியின் முதல்பகுதிக்கு விடை அளிக்கலாம். இரண்டாவது பகுதிக்கு சபாநாயகர்தான் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

The Hon. Sri R. VENKATARAMAN : The hon. Member is giving information and not putting a question.

Sri M. KALYANASUNDARAM : இந்த பஞ்சாலைக்கு வேண்டிய நிலங்களை எல்லாம் நில ஆர்ஜிதச் சட்டப்படிதான் எடுக்கப்பட்டதா? அல்லது சர்க்கார் நேரடியாக பேச்சுவார்த்தைகள் நடத்தி ஏதாவது நிலங்கள் வாங்கப்பட்டதா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க முடியுமா?

The Hon. Sri R. VENKATARAMAN : A separate question may be put, Sir, as the main question relates only to construction.

### *Cine Wall Posters*

*252 *Q.*—Sri P. S. K. LAKSHMIPATHI RAJ : சனம் உள்ளிவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

வால் போஸ்டர்களில் சினிமா விளம்பரங்கள் அருவருக்கத்தக்க நிலையில் இருப்பதை தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Section 292, Indian Penal Code and the Madras Open Places (Prevention of Disfigurement) Act, 1959, contain provisions for penalising such advertisements. The Government do not have under consideration any proposal to take any further measurers to put down such advertisements.



10th March 1960]

Sri P. G. MANICKAM : இந்த சினிமா விளம்பரங்கள் மோட்டார்கள் மூலமாகவும் வண்டிகள் மூலமாகவும் (ரோடுகளில்) செய்து கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக பொது ஜனங்களுக்கு போக்குவரத்து இடைஞ்சல் ஏற்படுவதோடுகூட குழந்தைகளுக்கும் ஆபத்து ஏற்படுகிறது. இவ்விதத்தில் சில குழந்தைகள் இறந்திருப்பது அரசாங்கத்திற்கும் தெரியும் என்று நினைக்கிறேன். ஆகவே இதைப் போல ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அந்தமாதிரி யோசனை ஒன்றும் சர்க்காரிடத்தில் இல்லை.

Sri A. A. RASHEED : May I know whether it is a fact that car accidents have increased because of the obscene posters found on the walls in the Madras City? (Laughter.)

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I am not aware of that, Sir.

Sri K. VINAYAKAM : May I know, Sir, how many cases were charge-sheeted under the relevant section of the Indian Penal Code referred to by the Hon. Minister?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I would like to have notice, Sir.

### *Pay Commission*

* 253 *Q.*—Sri S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the factors that the Madras Pay Commission have been asked to take into consideration to decide the scales of pay to the Government servants; and

(*b*) whether the Commission have been asked to take into consideration the scales of pay obtaining under private employees and the annual income and average standard of living of the common man?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I am not aware of reference to the Pay Commission include in following :—

"The Pay Commission will take into consideration the present structure of the different scales of pay, dearness allowance, other compensatory concessions and retiring benefits of State Government servants both gazetted and non-gazetted and recommend a suitable structure for the future. In making the recommendation the Commission will take into account the recommendations of the Central Pay Commission, the resources at the disposal of the State Government and the general standard of living of the people of the State." No other specific instruction has been given to the Pay Commission.

Sri S. LAZAR : When is this ody expected to submit its report to the Government, Sir?

The Hon. Sri C. SUBRAMANIAM : It might be at a very early date, Sir.

[10th March 1960

SRI T. T. DANIEL : May I know, Sir, whether the report will be placed before the House for consideration before the Government take any decisions on the recommendations made by the Commission?

THE HON. SRI C. SUBRAMANIAM : When the report is submitted to the Government, the Government will take decisions.

SRI C. N. ANNADURAI : நீண்டகாலமாக ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்கும் மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் இடையே இருக்கின்ற ஊதிய வேறுபாட்டை திருத்த வேண்டும் என்று இந்த கமிஷனிடம் அரசாங்கம் ஏதாவது கோரிக்கை செய்துள்ளதா? அதன் மூலம் இந்த வேற்றுமை தீர்க்கப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : கமிஷனின் அறிக்கையில் என்ன இருக்கிறது என்று இப்போது என்னால் ஜோஸ்யம் பார்த்துச் சொல்ல முடியாது.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : இவ்வாறு சர்க்கார் ஊழியர்களுடைய ஊதியங்களை கவனிப்பதற்கு கமிஷனை நியமிக்கும்போது இதன் காரணமாக குறைந்த சம்பளம் வாங்கிக்கொண்டு வேலை செய்து கொண்டிருக்கும் வேறு ஏழை தொழிலாளர்கள் எல்லாம் இதன் மூலம் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்வதற்கு இந்த கமிஷனின் முன்னால். . .

MR. SPEAKER : இதற்கும் இந்த கேள்விக்கும் என்ன சம்பந்தம்?

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : அதாவது சமுதாயத்தில் குறைந்த சம்பளம் வாங்கிக்கொண்டிருக்கும் ஏழை தொழிலாளர்கள் இதன் காரணமாக பாதிக்கப்படாமல் இருப்பதற்கு அரசாங்கம் இம்மாதிரி கமிஷன் நியமிக்கும்போது கவனித்துக்கொள்ளுமா?

MR. SPEAKER : பதில் இல்லை.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, this question has been hanging fire for a very long time. The Hon. Minister even during the last session said that the report would be published as early as possible. Now the Hon. Minister's answer is not specific. Therefore may I know from the Hon. Minister when exactly the Commission would conclude its delibrations and submit its report?

THE HON. SRI C. SUBRAMANIAM : Certainly, the Hon. the Leader of the Opposition does not expect me to coerce the Pay Commission to submit their report. After all they are a responsible body and they have to take into consideration the various aspects of the matter. I may assure, Sir, that they are functioning in a responsible manner and after they submit the report, certainly all the other things will follow.

SRI C. N. ANNADURAI : ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்கும், மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் இடையே இருக்கும் வித்தியாசத்தை நீக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கைதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : பே கமிஷனின் அறிக்கையில் சர்க்காருடைய கொள்கையைப்பற்றி ஒன்றும் சொல்ல முடியாது. வரவு-செலவு திட்டத்தைப் பற்றி பேசும்போது இதைப்பற்றி கிளப்பினால் அப்போது அதற்குப் பதில் சொல்லுகிறேன்.



10th March 1960]

SRI P. S. CHINNADURAI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சம்பள கமிஷன் தன் இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு முன்னால் இடைக்கால அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும்படி அரசாங்கம் கோருவார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்கள், இந்த அறிக்கை சமர்ப்பிப்பதற்கு இன்னும் ஆறுமாத காலம் ஆகுமோ என்று எண்ணுகிறார்கள் என்று நினைக்கிறேன். அப்படியொன்று மில்லை, இந்த மாத இறுதிக்குள்ளாகவே அறிக்கையை கொடுத்துவிடும் என்று எதிர்பார்க்கிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR : May I know whether the Commission will also go into the question of travelling allowance and dearness allowance granted to Government?

THE HON. SRI C. SUBRAMANAIM : I am not quite sure. I do not have the information, Sir.

*Family Welfare Centres*

* 254 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

1959-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 18-ம் தேதியிலிருந்து 20-ம் தேதி வரைக்கும் மதுரையில் நடைபெற்ற ராஜ்ய சமூக சேவா மகாநாட்டில் "நாடெங்கும் நல்ல முறையில் குடும்பம் நடத்துவதற்கான குடும்ப சேம நல ஆபிஸ்கள் ஏற்படுத்த வேண்டும்" என்ற தீர்மானத்தின்மீது சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Government do not consider the present the appropriate time for establishing Family Welfare Bureaus in this State.

SRI P. G. MANICKAM : நாட்டின் எதிர்கால செல்வங்கள் குழந்தைகளே. ஆகவே குழந்தைகளை வளர்ப்பதற்கு அரசாங்கத்தால் ஏதாவது திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதா? அப்படியென்றால் அதைத் தெரிவிக்கமுடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: குழந்தைகளுக்காக பல திட்டங்கள் இருக்கின்றன.

*Vaigai Reservoir Project*

MR. SPEAKER : Question 255. The hon. Member Sri K. Ramachandran is not in his place.

SRI K. SATTANATHA KARAYALAR : I put the question on his behalf, Sir.

MR. SPEAKER : The hon. Member should be more alert. I will pass on to the next question if he does not respond when I call the question.

* 255 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of SRI K. RAMACHANDRAN) : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the capacity of Vaigai Reservoir Project; and

(*b*) whether there is any proposal to increase its capacity by extending the Vaigai Reservoir area?

THE HON. SRI P. KAKKAN : (*a*) 6,800 m.c.ft.

(*b*) No, Sir.

[10th March 1960

*Admission to Medical Colleges*

MR. SPEAKER : Questions Nos. 256 and 257 may be taken up together.

• 256 *Q*.—SRI K. N. PALANISWAMI GOUNDER : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any member of the Selection Committee constituted to select candidates for admission to the Medical Colleges in the State in 1959 has ceased to work in the above committee;

(*b*) the number of applications for admission to Medical Colleges received from the Coimbatore District in 1959;

(*c*) the number of applicants selected; and

(*d*) the number of applications rejected?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Sri A. Gajapathy Nayagar, the Chairman of the Committee, did not function on the Selection Committee from 14th July 1959 due to ill-health.

(*b*) 165.

(*c*) 41.

(*d*) 124.

• 257 *Q*.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any member or Chairman of the Selection Committee for the Pre-Professional Course in Medicine for 1959 has resigned; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) The Chairman did not function on the Selection Committee from 14th July 1959 because of ill-health.

SRI T. S. RAMASWAMI : May I know when the Government knew of his ill-health and what exactly is the cause of his ill-health?

THE HON. SRI M. A. MANICKAVELU : The Government knew of the fact when a doctor's certificate was submitted to the Government.

SRI A. A. RASHEED : May I know whether it was legal and constitutional to carry on with the interview and selection of candidates without the Chairman?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, we created a new Chairman by a separate order and the Committee functioned.

SRI K. SATTANATHA KARAYALAR : ஸார், இது மாதிரி கல்லூரி மாணவர்களை சேர்க்கக்கூடிய கமிட்டியை சர்க்கார் எந்த அடிப்படையில் நியமிக்கிறார்கள்? அதேபோல அரசாங்கம் நியமிக்கக்கூடிய கமிட்டியில் எதிர்கட்சி அங்கத்தினர்களையும் உள்படுத்தி இதற்கான கமிட்டி அமைக்கப்படுமா?

MR. SPEAKER : I think a separate question must be put.



10th March 1960]

• SRI T. S. RAMASWAMI : May I know whether the malady was a longstanding malady or an urgent malady and was the ill-health a sudden one or a longstanding one?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது எப்படியென்றால், "கடல் ஆழம் பார்த்தாலும் பார்க்கலாம், நெஞ்சாழம் பார்க்க முடியாது" என்பது போலதான்.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களைக்கொண்ட ஒரு கல்வி கமிட்டி ஏற்கனவே இயங்கி வருகிறது. கல்வி சம்பந்தமான இம்மாதிரிப்பட்ட குழுக்களை நியமிக்கும்போது இந்தக் கல்விக் கமிட்டியையும் கலந்து கொண்டு எல்லாக் கட்சிகளுக்கும் அதில் பிரதிநிதித்துவம் கொடுத்தால் இம்மாதிரிப்பட்ட ஊழல்கள் ஏற்படுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படாது.

THE HON. SRI C. SUBRAMANIAM : I object to the word 'Oozhal'. So far no 'Oozhal' has een pointed out unless there is some 'Oozhal' in the mind of the hon. Member.

MR. SPEAKER : I was about to rule the question out of order. Having earlier ruled the question of the hon. Member Sri Karayalar out of order, I rule this question also out of order and therefore the point raised by the hon. Leader of the House does not arise.

*Misappropriation of panchayat funds*

(The Hon. Speaker observed the hon. Member did not rise in his place when Question No. 258 was called.)

MR. SPEAKER : Hon. Members when they put the question must stand up and say they are putting the question.

* 258 *Q*.—SRI A. A. RASHEED : Will the Hon. the Chief Minister be pleased to state the number of Panchayat Executive Officers who were involved in misappropriation of panchayat funds in the years 1957–58 and 1958–59 in North Arcot District?

THE HON. SRI C. SUBRAMANIAM : Two Executive Officers, Sir.

SRI A. A. RASHEED : May I know the amount involved and whether it has been recovered?

THE HON. SRI C. SUBRAMANIAM : Both the cases were cases of temporary misappropriation. It necessarily means that the moneys were recovered.

SRI V. SANKARAN : ஸார், வட ஆற்காடு மாவட்டத்தில் கனம் அங்கத்தினர் அவர்களுடைய தொகுதியான வாணியம்பாடியில்தான் அதிகமான அளவில் கையாடல்கள் ஏற்பட்டிருக்கிறது என்பது வாஸ்தவமா?

MR. SPEAKER : The hon. Member should not insinuate against another hon. Member like that. The hon. Member against whom insinuation is made can ask about Madurai if he wants.

[10th March 1960

11-30 a.m. SRI V. K. KOTHANDARAMAN : ஸார், வட ஆற்காடு ஜில்லாவின் பேர்ணம்பட்டு பஞ்சாயத்திலே ஆயிரக்கணக்கான ரூபாய்கள் கையாடல்செய்யப் பட்டது என்று நீதி ஸ்தலத்திலே தீர்ப்புக் கொடுக்கப்பட்டிருந்தும் அதே பஞ்சாயத்திலே மீண்டும் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் கையாடப்பட்டு ஊழல் ஏற்பட்டிருக்கிறது என்று அந்த பஞ்சாயத்து போர்டிலே இருக்கக் கூடிய அங்கத்தினர் திரு. பி. ரஷீத் அகம்மத் அவர்கள் 4-3-60-ல் நிதி அமைச்சர் அவர்களுக்கு லெட்டர் எழுதியிருப்பது தெரியுமா? அப்படி யானல் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

MR. SPEAKER : It is not in the question at all.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்வியைப் படித்துப் பார்த்தால் 1957-58, 1958-59-ம் ஆண்டுகளில் இந்த மாதிரி கேஸ்கள் எவ்வளவு என்று கேட்கப்பட்டிருக்கிறது. அதற்குத்தான் நான் இரண்டு என்று சொன்னேன். 4-3-60 என்று சொன்னல் அது இந்தக் காலத்திற்குள் வரவில்லை.

*Provident Fund benefits*

* 259 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government of India have sought the opinion of this Government on the proposal for extending the Provident Fund benefits to the employees of commercial firms and other industries ; and

(*b*) what reply has been sent by this Government?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) This Government generally agreed to the extension of the Act to commercial firms and other industries.

SRI S. PAKKIRISAMI PILLAI : இந்த பிராவிடெண்ட் பண்ட் தொகையை 8-1/3 சதவிகிதத்திற்கு உயர்த்த வேண்டுமென்ற ஒரு முயற்சி இருந்து கொண்டிருக்கிறதே அந்தத் தொகையை இவர்களுக்கும் கொடுக்க வேண்டும். இதர பாக்டரி தொழிலாளர்களுக்கும் கொடுக்கவேண்டும் என்று அரசாங்கம் சிபாரிசு செய்திருக்கிறார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : இது சம்பந்தமாக மத்திய சர்க்கார் ஒரு கமிட்டி போட்டிருக்கிறார்கள். எந்தெந்த தொழிற் சாலைகளில் 8-1/3 சதவிகிதத்திற்கு உயர்த்த வேண்டுமென்று பரிசீலனை செய்து அந்தக் கமிட்டி சிபாரிசு செய்கிறதோ அதன்படி உத்திரவு போடு வார்கள். ஆகவே இதிலே இந்த சர்க்கார் ஒன்றும் செய்வதற்கில்லை.

*Leprosy Sub-Centre, Paramankurichi*

* 260 Q.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Leprosy Sub-Centre at Paramankurichi in Tiruchendur taluk (Tirunelveli district) is located in the temporary building donated by the villagers;

(*b*) if so, why;

(*c*) when the permanent building will be constructed;

(*d*) whether necessary plans and estimates, etc., have been got ready; and

(*e*) whether there are schemes for the rehabilitation of the outgoing patients after treatment?



10th March 1960]

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) The Leprosy Subsidiary Centre, Paramankurichi, Tiruchendur taluk, Tirunelveli district is housed in a private building taken on lease on a monthly rental of Rs. 15. The building donated by the villagers is in a damaged condition, built with mud-walls and some of the tiles have fallen down. At present it is being used for running an out-patient clinic attached to the above centre.

(*c*) The proposal is under consideration in connexion with the Budget Estimate for 1960-61.

(*d*) & (*e*) Yes.

SRI M. S. SELVARAJAN : What are the other improvements thought of to be carried out in the Centre? Will the Government think of the possibility of introducing poultry-keeping as a rehabilitation measure in such centres?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது கவனிப்பது என்னவென்றல் சிகிச்சைக்கு என்னென்ன செய்வது என்பது. ரீஹாபிலிடேஷன் என்பது தனி சமாச்சாரம். அது இப்போது எழவில்லை. அதை போகப்போகப் பார்க்கலாம்.

*Madras Children Act*

* 261 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that in some criminal appeals the Judges have suggested that changes in the provisions of the Madras Children Act are necessary; and

(*b*) if so, whether the Government propose to bring amendments to the said Act?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under examination.

*Drainage work in Kumbakonam taluk*

* 262 *Q.*—SRI T. SAMPATH : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the drainage work under progress in Kumbakonam taluk has been stopped; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) It is presumed that the Member is referring to the drainage scheme for Kumbakonam town. This scheme has not been stopped.

(*b*) Does not arise.

SRI T. SAMPATH : The Hon. Minister has stated that the scheme has not been stopped. May I know the reasons for the slow progress?

THE HON. SRI M. A. MANICKAVELU : The reason for the slow progress is that there is a good deal of sub-soil water in the area. So we have to wait for the water level to subside. In fact during certain months of the year, no work could be done when the water level is high.

*Training for Co-operative Department Officers*

* 263 *Q.*—SRI M. P. SARATHI: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கூட்டுறவு இலாகா அதிகாரிகள் (Gazetted Officers) ஊழியர்கள் (Non-Gazetted Officers) எவ்வளவு பேர் பம்பாய், டில்லி முதலிய வெளி ராஜ்யங்களுக்கு பயிற்சி பெற அனுப்பப்பட்டனர் ?

(ஆ) அந்தப் பயிற்சிகளை இந்த ராஜ்யத்தில் அளிக்க முடியாத காரணம் என்ன ?

(இ) இந்தப் பயிற்சிக்காக அதிகப்படி செலவு எவ்வளவு ஆகியது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) In 1956–57, twelve Co-operative Sub-Registrars and six Senior Inspectors of Co-operative Societies were deputed to the Co-operative Training College, Poona, to undergo training in Co-operative Marketing. In addition, one Co-operative Sub-Registrar and thirteen Senior Inspectors have been deputed so far to Delhi and Punjab to undergo the courses for Educational Instructors for training, non-official personnel of the co-operative movement under the auspices of the All-India Co-operative Union, Delhi.

(*b*) Facilities for giving training in Co-operative Marketing were not available formerly in this State and hence the candidates were sent to Poona for training. This course has since been instituted in the Regional Training Centre at Madras, and our candidates are now being trained here. No course for training Instructors, for training non-official personnel is being conducted in this State, and so the few candidates required each year, are being sent for training at the Centres selected by the All-India Co-operative Union.

(*c*) The travelling allowance of the candidates was met by the Reserve Bank of India and the All-India Co-operative Union and the Government had to bear only the extra expenditure on account of the substitutes appointed in the place of those undergoing training. The total expenditure borne by the State Government is about Rs. 15,000.

SRI M. P. SARATHI : ஸார், இந்தப் பயிற்சிக்கு மத்திய சர்க்காரிடமிருந்து எதாவது பணம் நம் அரசாங்கத்திற்குக் கிடைக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அவர்களுக்கு ஆகக் கூடிய டிராவெலிங் அலவன்ஸ் செலவையெல்லாம் கோவாப்பரேடிவ் யூனியனும் ரிஸர்வ் பாங்கும் ஒத்துக்கொள்கிறது. அவர்களுக்காக வேறு மாற்று ஆட்கள் போடுவதனாலான செலவை மட்டும் சென்னை அரசாங்கம் ஒத்துக்கொள்கிறது.

*State Livestock Farm, Orthanad*

* 264 *Q.*—SRI R. SRINIVASA IYER : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) what is the area of land in Orthanad, Tanjore District, in which the State Livestock Farm is situated ;



(*b*) to whom does the area belong at present and under what arrangement is it being occupied ;

(*c*) whether the Government have taken steps to acquire this land for the farm; and

(*d*) if so, at what stage the acquisition proceedings stand?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 262·67 acres.

(*b*) The area belongs to the Tanjore Chatram Endowments administered by the Tanjore District Board. Pending acquisition, the lands and buildings were handed over to the Animal Husbandry Department by the Special Officer, District Board, under instructions from Government. A lease agreement for occupying the land free of rent is under preparation.

(*c*) Yes, Sir.

(*d*) Land Acquisition proceedings are kept pending the settlement of ownership of lands with reference to the Estates Abolition Act.

SRI R. SRINIVASA IYER : ஸார், இந்த நிலங்களை மட்டில் கால் நடைப் பண்ணை நடப்பதற்காக விட்டு, மடங்களைத் தனியாகக் குத்தகைக்கு விட்டு விடுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதனால் ஏராளமான இடைஞ்சல் ஏற்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானால் அதைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உண்மைதான். ஆனால் அது தாற்காலிக இடைஞ்சல்தான்.

*Surplus waters of Cauvery*

* 265 *Q.*—SRI S. SAMIKANNU PADAYACHI : Will the Hon. the Minister for Works be pleased to state whether there is any proposal under the consideration of Government to divert the surplus waters of Cauvery (which are now flowing into the sea) to Vellar and Pennar rivers by constructing an anicut near Salem?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த காவேரி நீரைப் பயன்படுத்துவது குறித்து சென்னை சர்க்காருக்கு மைசூர் சர்க்கார் எதாவது எழுதியிருக்கிறார்களா ?

THE HON. SRI P. KAKKAN: இந்தக் கேள்விக்கும் கனம் அங்கத்தினர் கேட்கக்கூடிய கேள்விக்கும் சம்பந்தமில்லை.

SRI A. VEDARATHNAM : காவேரி நதி பாய்கிற இடங்களில் இன்னும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கொடுக்கப்படாமல் இருக்கும் காரணத்தினால், இதை வேறு பக்கம் திருப்புவதற்காக இருக்கும் அந்த யோசனையைக் கைவிட அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : அரசாங்கத்திடம் அந்த மாதிரி எந்த வித யோசனையும் இல்லை. அதற்காக அங்கத்தினர் கவலைப்படவேண்டியதில்லை.

SRI M. R. KANDASAMI MUDALIAR : சேலம் ஜில்லா வறண்ட பிரதேசம். காவேரியிலிருந்து ஏற்கனவே பல திட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சேலத்தின் நன்மையைக் கருதி இந்தத் திட்டத்தை மீண்டும் பரிசீலனை செய்து, வெள்ளாற்றிலிருந்து வாய்க்கால் வழியாகக்கொண்டு வந்து சேலம் ஜில்லாவிற்குப் பாசன வசதி கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : நான் முன்பேயே சொன்னேன். இந்தக் கேள்வி மூலக் கேள்வியிலிருந்து எழவில்லை.

SRI A. GOVINDASAMY : ஸார், இந்தத் திட்டத்தை நிறைவேற்றி உபயோகப்படாமல் கடலில் விழக்கூடிய காவேரித் தண்ணீரை வெள்ளாற்றிற்கு லிப்ட் இர்ரிகேஷன் மூலமாககொண்டு வருவதற்காக ஒரு திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்ததே அதைப்பற்றிய தகவல் என்ன என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI P. KAKKAN : இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

*Minimum Wages for Match Factory Workers*

*266 *Q.*—SRI V. SUBBIAH : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவுக்கூலி வீதங்களை நிச்சயிக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) அப்படியானால், எப்போது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government have issued a notification including the employment in match manufactory in the Schedule to the Minimum Wages Act, 1948. The minimum wages for this employment will be fixed before 2nd November 1960.

SRI V. SUBBIAH : ராஜ்யம் பூராவிலுமுள்ள தீப்பெட்டித் தொழிலாளர்களையும் இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள உத்தேசம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : குறைந்த பட்சக் கூலி என்பது ராஜ்யத்தில் இருக்கிற எல்லாத் தொழிலாளர்களுக்கும்தான்.

SRI K. SATTANATHA KARAYALAR : தீப்பெட்டித் தொழில் பல துறைகளாகப் பிரிவு படடிருக்கிறது. இது தீக்குச்சிகளை அடுக்குவது, தீப் பெட்டிகளை ஒட்டுவது என்ற பல துறைகளாகப் பிரிவு பட்டிருக்கிறது. இந்த பல வேலைகளைப் பிரித்து குறைநத பட்சக் கூலி எந்த எந்த முறையில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது ? இந்த பல துறைகளைப் பொறுத்தும் சட்டத்தை எந்த முறையில் அமல் நடத்த சர்க்கார் உத்தேசிக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இதற்காக ஒரு கமிட்டி நியமிக்கப்படலாம். அந்தக் கமிட்டியில் தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் முதலாளிகளின் பிரதிநிதிகளும் இருப்பார்கள். அவர்கள் ரிப்போர்டு கொடுத்த பிறகு இது முடிவு செய்யப்படும்.

*Houses for Harijans*

* 267 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, கல்செப்பட்டி பிளாக், கோட்டைப்பட்டி, சில்நாய்க்கன் பட்டி, சாப்டூர் முதலிய ஊர்களில் ஹரிஜனங்களுக்கு கட்டியுள்ள 48 வீடுகள் சென்ற 3 வருடங்களாக முடிக்காமல் பாதியில் நிற்கும் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : The contractors who were entrusted with the work failed to complete the houses and hence the Harijan colonies remained incomplete. Action is however, being taken to get them completed.



*Foreign scholarships*

* 268 *Q.*— SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) அமெரிக்கா முதலிய வெளிநாடுகளுடைய உபகாரச் சம்பளம் பெற்று இம்மாநிலத்திலிருந்து, எத்தனை மாணவர்கள் என்னென்ன பயிற்சிகளுக்காக எந்தெந்த இடங்களுக்குச் சென்றிருக்கிறார்கள் ?

(ஆ) இன்ஜினியரிங், மருத்துவப் பயிற்சிக்காக எத்தனை மாணவர்கள் வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள் ?

(இ) இவர்கள் தொகையை அதிகரிக்க வசதி உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) No student was sent abroad for advanced studies. But 46 officers were deputed to countries like U.S.A., U.S.S.R., U.K., Canada, West Germany and others for advanced studies in subjects like Engineering, Medicine and Agriculture. Out of these 25 officers went abroad for advanced study in various branches of Engineering and eight in Medicine.

(*c*) The Government of India have been requested to allot to this State a larger number of scholarships for the study of Medicine under their Central Overseas Scholarships Scheme. Their reply is awaited.

SRI A. VEDARATHNAM : அமெரிக்கா, ஜெர்மனி முதலிய நாடுகளில் உயர்தரப் படிப்புப் பெறுவதற்கு இந்நாட்டு மாணவர்களுக்கு அந்நாட்டினர் ஸ்காலர்ஷிப் கொடுக்க முன் வந்திருக்கிறார்களா ? அப்படியானால், அவர்கள் அவ்வாறு முன் வந்திருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருந்தால், அந்த உயர்தரப் படிப்பில் ஆர்வமுள்ள மாணவர்களை அந்நாடுகளுக்கு அனுப்ப அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மாணவர்களைப் பொறுத்த வரையில், சர்க்காருக்குத் தகவல் இல்லை. அரசாங்கத்தில் பணியாற்றும் அதிகாரிகளையே அங்கே அனுப்ப நாங்கள் முயற்சி எடுத்துக்கொள்கிறோம். அவர்களை இன்னும் அதிகமாக அனுப்புவதற்கும் முயற்சி செய்து வருகிறோம்.

SRI S. LAZAR : How many of these officers are elderly? Will the Government think of sending qualified young officers abroad so that their services may be available to Government for a long time after they gain experience from their training abroad?

THE HON. SRI C. SUBRAMANIAM : That is always kept in mind. I do not think we send officers who are past the age of 45.

SRI N. R. THIAGARAJAN : இந்த மாணவர்களை எந்த அடிப்படையில், யார் தேர்ந்தெடுக்கிறார்கள் ? மருத்துவப் பயிற்சிக்காக வெளிநாடுகளுக்குச் சென்ற மாணவர்கள் அங்கேயே தங்கிவிடுகிறார்கள். அவர்களால் நம் நாட்டுக்குப் பிரயோஜனமில்லாமல் போய்விடுகிறது என்று சொல்லப்படுவது வாஸ்தவமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் முன்பே சொன்னேன். 'நாங்கள் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதில்லை. அரசாங்கத்தில் பணியாற்றும் அதிகாரிகளைத்தான் தேர்ந்தெடுத்து அனுப்பி இருக்கிறோம்." பல மாணவர்கள் அவர்களாகவே தனிப்பட்ட முறையில் ஏற்பாடு செய்துகொண்டு வெளிநாடுகளுக்கு மேல் படிப்பிற்காகச் செல்கிறார்கள்.

[10th March 1960

SRI A. GOVINDASAMY : பாரெஸ்ட் ஆபீஸர் ஸ்ரீ. தியாகராஜனுக்கு காலம் கடந்து உத்திரவு வந்ததால், அவர் அமெரிக்காவுக்கு போவதில் தடை ஏற்பட்டது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

MR. SPEAKER : கனம் அங்கத்தினர்கள் தனிப்பட்ட நபர்களைப் பற்றி இங்கே கேள்வி போட முடியாது; வேண்டுமானால் அதை அவர் கனம் மந்திரிக்கு எழுதிக் கொடுக்கலாம். கனம் அங்கத்தினர் பொதுவாகக் கேள்வி போடுவாரானால், அதை நான் அனுமதிப்பேன்.

SRI A. A. RASHEED : May I know the basis of such selection of officers?

THE HON. SRI C. SUBRAMANIAM : Aptitude for higher study and their record of service.

SRI T. S. RAMASWAMI : May I know what the facilities are that this Government are giving to young and brilliant officers who are going overseas. That is one . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : One question at a time, please.

MR. SPEAKER : Thank you for coming to my rescue.

THE HON. SRI C. SUBRAMANIAM : Generally expenses abroad are met by the foreign countries under mutual aid programme. They are also paid their basic salaries here in India for maintenance of their families.

SRI S. NAGARAJA MONIGAR : எஞ்சினியர்கள் முதலானவர்கள் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அனுப்பப்படுவதாக கனம் அமைச்சர் கூறினார். அப்படியானால் டிராக்டர்கள், புல்டோசர்கள் போன்ற பெரிய அளவு இயந்திரங்களைத் தவிர்த்து, நம் நாட்டுக்குரிய சிறிய மெஷின்களைச் செய்வதற்குரிய பாடங்களைக் கற்பதற்கும் தகுந்தவர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்களா ?

(பதில் இல்லை)

SRI T. S. RAMASWAMI : Are the Government aware of the fact that there are instances wherein brilliant officers are permitted by other Governments and given all encouragement by way of scholarship and other things to pursue higher studies abroad? Even their passages to and fro are sanctioned by Government. But here certain officers who want study leave abroad are not being given such permission. If that is so, will the Government look into the matter?

THE HON. SRI C. SUBRAMANIAM : We make the selection and send the officers. I do not know what instance the hon. Member is having in his mind.

MR. SPEAKER : Why should not the hon. Member write to the Minister?

SRI A. V. P. ASAITHAMBI : வெளிநாடுகளிலிருந்து மாணவர்களுக்கென்றே உபகாரச் சம்பளங்கள் ஒதுக்கப்பட்டு ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் மாணவர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். இந்த மாதிரி ஒதுக்கப்பட்ட உபகாரச் சம்பளங்களில் இந்த மாநில



10th March 1960]

மாணவர்கள் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்களா இல்லையா ? இன்னின்ன உபகாரச் சம்பளங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்பது இந்த மாநில அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கத்தால் அறிவிக்கப்படுகிறதா ?

MR. SPEAKER : மாணவர்களைப் பொறுத்தவரையில் சர்க்காருக்குத் தகவல் இல்லை என்று ஏற்கெனவே கனம் மந்திரி சொன்னார்.

THE HON. SRI C. SUBRAMANIAM : மாணவர்களைப் பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை.

*Ammonium Sulphate*

* 269 Q.—SRI K. VASUDEVAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is sufficient stock of Ammonium-Sulphate for the use of ryots;

(b) if not, whether any steps are taken to import sufficient quantity of Sulphate to meet the demand;

(c) whether the Government are aware of any cases where merchants, taking advantage of the great demand for Sulphate, have resorted to mix common salt and market the same as genuine stuff in Tiruchirappalli District; and

(d) if so, the action taken against them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No Sir.

(b) The Government of India arrange to procure and supply fertilisers to the States. Fertilisers are in short-supply in the country at present, owing to the fact that the indigenous production is far less than the demand and imports to meet the deficit are limited by the foreign exchange position. The Government have been making every effort to secure as much fertilisers as possible to meet the demand by pressing the Government of India from time to time.

(c) Yes, Sir. One case of adulteration of Ammonium Sulphate in Ariyalur has been brought to the notice of the Government in November 1959.

(d) The adulterated stocks were immediately seized by the Deputy Tahsildar, Ariyalur, and the samples drawn from the stocks have been sent for analysis. Further action under Fertiliser (Control) Order, 1957, will be taken on receipt of the results of the analysis.

SRI R. SRINIVASA IYER : May I know whether representations have been received by Government that such distribution of fertilisers should be made through co-operative societies and panchayats?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Government have recently taken a decision that distribution of fertilisers is to be done exclusively by co-operative organisations.

[10th March 1960

SRI P. S. CHINNADURAI : இந்த ரசாயன உர வினியோகத்தில் கள்ளத்தனம் செய்பவர்களுக்கு மிகவும் கடுமையான தண்டனை விதிக்க அரசாங்கம் வகை செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நடவடிக்கை சட்டப்படி எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. அவர்கள் சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள்.

SRI S. LAZAR : இருக்கக்கூடிய உரத்தை அந்த அந்தப் பகுதிக்கு உரிய காலத்தில் கொடுக்கும்பொருட்டு அந்த அந்த ஜில்லாவில் அதை தேவையான காலத்திற்கு முன்பே சேமித்து வைத்திருப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் இந்த ஆண்டு முதற்கொண்டாவது மேற்கொள்ளுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கம் இதில் கவனம் செலுத்திக்கொண்டுதான் இருக்கிறது. இருந்தாலும், போதிய அளவு கிடைக்காமல் பற்றுக்குறை இருப்பதால் இதை பரிபூரணமாக திருப்திகரமாகச் செய்ய முடியவில்லை.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : May I know whether Government are having " quality tests " at the consumers' level?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The test is made But as to how often it is made, I would like to have notice.

SRI M. R. KANDASWAMI MUDALIAR : இந்த உர வினியோகத்தில் பளாக் மார்க்கெட்டு நடப்பதும் அதிகம் நம் நாட்டில் கலப்படம் செய்வதும் அதிகமாக இருப்பதால், இந்த உரத்தில் பற்றுக்குறை இருப்பதாக நினைக்க வேண்டியிருக்கிறது. எனவே, இதை வெளிநாட்டிலிருந்து அதிகமாக இறக்குமதி செய்தோ அல்லது உள்நாட்டில் அதிகமாக உற்பத்தி செய்தோ விவசாயிகளுக்கு காலாகாலத்தில் கொடுக்க அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விஷயத்தில் வேண்டிய கவனம் செலுத்தப்பட்டுத்தான் வருகிறது.

SRI K. B. S. MANI : இம்மாதிரி கலப்படம் செய்த கள்ள மார்க்கெட்காரர்களில் இதுவரையில் அரசாங்கத்தாரால் எத்தனை பேர்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனர் ? அவர்களில் எத்தனை பேருக்கு தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : இந்த உர வினியோகத்தில் பல தவறுகள் நடப்பதற்குக் காரணம், தனிப்பட்டவர்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதுதான் என்று தெரியவருகிறது. எனவே அதை ரத்துசெய்து, கூட்டுறவு முறைக்கு ஆதரவு கொடுக்கும் முறையில் கூட்டுறவு சொஸைடிகளுக்கு லைசென்ஸ் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுபற்றி நான் சற்று முன்புதான் விடை அளித்திருக்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : மூன்று மாதங்களுக்கு முன்பு குடியாத்தம் தாலுகாவில் உர மோசடியில் 24 மூட்டைகள் பிடித்துக் கொடுக்கப்பட்டன. அதன் பேரில் இதுவரையிலும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. கனம் அமைச்சர் இது விஷயமாக துரிதமாக ஏதாவது நடவடிக்கை எடுப்பாரா, அல்லது ஏற்கெனவே நடவடிக்கை எடுத்திருக்கிறாரா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுபற்றி தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்வேன்,



10th March 1960]

SRI A. R. SUBBIAH MUDALIAR : இந்தப் புதுத் திட்டத்தை, கூட்டுறவு முறைத் திட்டத்தை, எப்போது முதல் அமல்நடத்த சர்க்கார் உத்தேசித்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இனி வரும் புது வருஷத்தில் இந்தப் புதிய முடிவு அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

SRI A. GOVINDASAMY : நமது ராஜ்யத்திற்கு மத்திய அரசாங்கம் வழங்கிய உரம் போதுமானதல்ல என்று கூறி இன்னும் அதிகமாக உரம் வேண்டும் என்று அந்த அரசாங்கத்திடம் ராஜ்ய அரசாங்கம் வற்புறுத்திருக்கிறதா ? அப்படியானால் நமக்கு எவ்வளவு உரம் கூடுதலாகக் கிடைத்தது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நாங்கள் அப்போதைக்கப்போது மத்திய அரசாங்கத்தாருடன் பேசி, இந்த ராஜ்யத்திற்கு எவ்வளவு அதிகமாக ரசாயன உரம் பெற முடியுமோ அவ்வளவு அதிகமாக அதைப் பெறுவதில் கவனம் செலுத்திக்கொண்டுதான் இருக்கிறோம். இந்த ஆண்டில் ஒதுக்கப்பட்டிருப்பதைவிட அதிகமாக அடுத்த ஆண்டு கிடைக்கும் என்று நம்ப இப்போது இடம் இருக்கிறது.

SRI T. SAMPATH : Sir, may I know whether the Government have constitúted any committee to consider this question, namely, equitable and fair distribution of fertilisers, and, if so, whether that committee has submitted any report on this matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think, Sir, there is any such committee as is referred to by the hon. Member.

SRI T. T. DANIEL : Sir, may I know whether there is any difficulty in getting foreign exchange and also any difficulty in getting shipping facilities? May I know whether these are the reasons for not getting the necessary quantity?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is, of course, difficulty about foreign exchange, because foreign exchange facilities are limited. Apart from this, there is sometimes delay in the transport of the chemical fertilisers either by sea or by rail.

SRI K. ANBAZHAGAN : இந்த உர விநியோகத்திலுள்ள குறைபாடுகளைக் குறித்து முன்னர் அமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில், பல ஜில்லாக்களுக்கு அனுப்பப்படுவதும் ரசாயன உரம் ஒரு பெரிய கம்பெனியால் வாங்கப்பட்டு அதனால் பெரிய ஊழல்கள் ஏற்படுகிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த மாதிரி நடக்கும் பெரிய கம்பெனிகள் மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஒரு கம்பெனி என்று நான் சொல்லவில்லை. ஒரு நபர் பல ஜில்லாக்களில் தொடர்பு வைத்துக்கொண்டு கள்ள மார்க்கட்டில் வியாபாரம் செய்கிறார்கள் என்று சொன்னேன். அந்த மாதிரி கள்ள மார்க்கட் வியாபாரம் செய்கிறவர்களைப் போலீசார் கண்காணித்து வருகிறார்கள். அவர்களைக் கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*Licentiate in Sanitary Engineering Diploma Course*

* 270 *Q.*—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the reasons for closing the Licentiate in Sanitary Engineering Diploma Course in Central Polytechnic, Madras ; and

(*b*) when it was closed?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) The course was not popular and the scope of employment of the Sanitary Engineering Diploma holders was also limited. Only the candidates not selected for admission to the major Engineering courses took this course. The performance of the students was also not satisfactory.

(b) with effect from the academic year 1959-60.

SRI K. R. VISWANATHAN : Sir, are the Government aware that some candidates, who have taken this diploma course, were not employed by the Government, because the Madras Public Service Commission do not recognise this course for appointment in Government service?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I do not have the information with me. But unless we have vacancies, certainly we cannot employ them.

### *Arni Road Railway Station*

* 271 *Q.*—SRI S.M. ANNAMALAI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) களம்பூர் ஊராட்சி மன்றத்தாரிடமிருந்து ஆரணிரோடு இரயில்வே ஸ்டேஷனை களம்பூர் என்று மாற்றவேண்டுமென்ற கோரிக்கையின் மீது மத்திய சர்க்கார் மாநில சர்க்காரின் ஆலோசனையைக்கேட்டார்களா ?

(ஆ) அப்படியானால், என்ன சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Does not arise.

SRI S. M. ANNAMALAI : ஸார் இந்த ஆரணி ரயில்வே ஸ்டேஷனின் பெயரை மாற்றவேண்டுமென்று நான் அனுப்பிய கடிதமாவது சர்க்காருக்குக் கிடைத்ததா ? அதன் மீது இந்த சர்க்கார் மத்திய சர்க்காருக்கு என்ன சிபாரிசு செய்தது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் எழுதிய கடிதம் கிடைத்து அரசாங்கத்தின் அபிப்பிராயமும் கனம் அங்கத்தினர்களுக்கு தெரிந்திருக்கும். ரெயில்வேயிலிருந்து கூட இதை அப்படி மாற்றலாமா என்று கேட்டார்கள். இந்த அரசாங்கத்தின் அபிப்பிராயம், ஆரணி என்ற பெயர் களம்பூர் என்ற பெயரை விட பிரசித்தி பெற்றிருக்கிறது என்பதாகும். ஆரணி என்பதைக் களம்பூர் என்று மாற்றவேண்டிய அவசியம் இல்லையென்பது இந்த அரசாங்கத்தின் அபிப்பிராயம்.

SRI B. DORAISAMI REDDIAR : " தன் தன் இடத்தில் இருப்பதே தகுதியாம் " என்ற பழமொழிக்கு இணங்க . . .

MR. SPEAKER : கேள்வி நேரத்தில் பழமொழிகளெல்லாம் சொல்லக்கூடாது. பட்ஜெட் விவாதத்தில் சொன்னாலும் கேட்டுக்கொள்ளலாம். கேள்வி நேரத்தில் சொல்லக்கூடாதென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI B. DORAISAMI REDDIAR : ஆரணி என்பதைக் களம்பூர் என்று போட்டால் ஆரணிக்கு வடக்கே இருந்து போகிறவர்கள் கன்னியா குமரிக்கும், தெற்கே இருந்து போகிறவர்கள் சென்னை வரையில் போனாலும் ஆரணியைக் கண்டுபிடிக்க முடியாது. ஆகவே, ஆரணி என்பதைக் களம்பூர் என்று மாற்றாமல் ஆரணி என்று வைத்திருப்பதே நல்லது என்று சொல்ல விரும்புகிறேன்.

MR. SPEAKER : This is not a question.



### *Scales of pay of compounders*

* 272 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether there is any difference between the scales of pay of compounders of modern medicine and indigenous medicine employed in this State; and

(b) if so, whether there is any proposal by the Government to remove the disparity?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Yes, Sir.

(b) None at present.

### *Reservation of seats in Arts and Professional Colleges.*

* 273 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the percentage of reservation of seats in the Arts and Professional Colleges for (i) Harijans, (ii) students from most Backward Classes, and (iii) students from Backward Classes;

(b) whether Christians belonging to any of these classes are eligible for these seats;

(c) if not, the reasons for the same; and

(d) whether there is any proposal by the Government to provide separate reservations proportionate to the Christian population amongst the said three classes?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) (i) 16 per cent for Scheduled Castes and Scheduled Tribes.

(ii) & (iii) 25 per cent for Backward Classes.

Students of the Most Backward Classes will be treated only as Backward Classes for purposes of reservation of seats.

(b) & (c) Christian students who are themselves converts from the Harijan community are treated as Backward Classes for this purpose. Christians belonging to Backward and Most Backward Classes are treated as Non-Backward communities and are not eligible for any reservation of seats. It is considered that there is no need for making any such reservation for them.

(d) No, Sir.

SRI V. SANKARAN : ஜாதி ஹிந்துக்கள், ஹிந்து ஹரிஜனங்கள் என்று இருப்பதைப் போல ஜாதி கிறிஸ்தவர்களோ, கிறிஸ்துவ ஹரிஜனங்கள் என்று பிரிவுகள் இருப்பதாக நம்முடைய அரசாங்கத்திலாவது மத்திய அரசாங்கத்திலாவது, மற்ற மாநில அரசாங்கங்களிலாவது அங்கீகரிக்க பட்டிருக்கிறதா ? அப்படி இல்லையென்றால் இது போன்ற சலுகை கோரும்படியான கோரிக்கைக்கு அவசியமோ, அடிப்படையோ, நியாயமோ இருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஜாதி ஹிந்துக்கள், ஜாதி கிறிஸ்தவர்கள் என்ற அடிப்படையில் அல்ல. எல்லா சமுகத்திலும் எல்லா மதத்தினரிலும் பின் தங்கியவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சில சலுகைகள் கொடுக்கவேண்டுமென்ற முறையில் இந்த ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

[10th March 1960

**SRI S. LAZAR:** எந்தெந்த காரணங்களுக்காக இந்த சமூகங்களிலுள்ள ஹிந்துக்களுக்கு சலுகைகளை அரசாங்கம் வழங்குகிறதோ அதே காரணங்கள் இந்த சமூகங்களிலுள்ள கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தாதா? அப்படியானால் அந்த சலுகைகள் கிறிஸ்தவர்களுக்கும் வழங்கப்படுமா?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** இதையெல்லாம் பரிசீலனை பண்ணித்தான் பின் தங்கிய வகுப்பினர்கள் என்ற முறையிலே இந்தச் சலுகைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

**SRI A. GOVINDASAMY:** ஆதி திராவிட கிறிஸ்தவர்களில் பின்தங்கியவர்களுக்கு கொடுக்கப்படுகிற சலுகையைப் போல் பொருளாதாரத்தில் பின் தங்கிய கிறிஸ்தவர்களுக்கும் இந்த சலுகையைக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** இன்றைக்கு இருக்கக்கூடிய முறையிலே வெறும் பொருளாதாரத்திலே பின்தங்கிய வகுப்பினர்களுக்கு மட்டுமல்ல. அத்துடன் கல்வித் துறையில் பிற்போக்காக இருக்கிறவர்களுக்கு அதிகச் சலுகை கொடுத்து படிப்பில் அவர்களுக்கு ஊக்கத்தை அதிகப்படுத்தவேண்டுமென்ற நோக்கத்துடனும் கொடுக்கப்படுகிறது. கிறிஸ்தவர்கள் மற்ற வகுப்பினரைக் காட்டிலும் கல்வித் துறையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். அவர்கள் இன்னும் அதிகமாக முன்னேற்றம் அடைய வேண்டுமென்பதில் ஆட்சேபணை இருக்க முடியாது கல்வித் துறையில் யார் அதிகமாக பின் தங்கியிருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் இந்தச் சலுகை முதன்மையாகக் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது.

**SRI S. LAZAR:** Sir, the Hon. Minister stated that, based on the question of untouchability, Harijans are given certain special privileges. Is it not a fact, Sir, that even Christian converts from these communities, and specially from the Scheduled Castes community, were treated and are being treated as untouchables by the Hindu section of the community, who form 98 per cent of the people, in the State, and, if so, are not these converts to Christianity entitled to the same privileges?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** கிறிஸ்தவ மதத்திற்கு மாறுவதன் மூலம் அதிலே இருக்கக் கூடிய ஜாதி வித்தியாசம் போய்விடுகிறது என்று நான் நினைக்கிறேன். அந்த அடிப்படையில் அவர்கள் கிறிஸ்தவர்களாகும் போது தொடக்கூடாதவர்கள் என்ற நிலைமை மாறிவிடுகிறது. ஆகையால் இந்தக் கேள்வி இதிலே எழுவதில்லை.

*Small-scale Industries*

* 274 *Q*—**SRI P. G. MANICKAM:** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

மத்திய அரசாங்கத் தீர்மானம் பிரகாரம் சிறு கைத்தொழில் துறையில் விசேஷ கண்டுபிடிப்புகளை செய்பவர்களுக்குப் பரிசுகளும் நிதியுதவியும் அளிப்பதற்காக சென்னை ராஜ்யத்திலே போர்டு எப்போது அமைக்கப்படும்?



10th March 1960]

**THE HON. SRI R. VENKATARAMAN:** The Government of India have informed this Government that they do not propose to constitute the State Small Inventions Development Board at present, as originally announced in their Resolution, dated 20th April 1959.

**SRI P. G. MANICKAM:** இவ்வித பரிசுகள் அல்லது நிதி உதவிகள் அளிக்க யாராவது நம்முடைய சென்னை ராஜ்யத்திலிருந்து சிபாரிசு செய்யப்பட்டு நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்களா? என்ன தொழிலில் விசேஷ திறமை பெற்றிருக்கிறார்கள் என்பதற்காகப் பரிசு கொடுக்கப் போகிறார்களா?

**THE HON. SRI R. VENKATARAMAN:** தனிக் கேள்வி போடவேண்டும்.

MR. SPEAKER: Question are over.

## V. DISCUSSION RE QUESTIONS.

MR. SPEAKER: The Hon. the Minister for Finance will now present the Budget for the year 1960–61.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, copies of the Budget speech may be distributed to hon. Members.

THE HON. SRI C. SUBRAMANIAM: They are being distributed.

MR. SPEAKER: While copies of the Budget speech are being distributed, I should like to make an announcement. This House might remember that on the last occasion when I gave some directions regarding questions I suggested that unimportant questions need not be brought before this House and the time of the House taken up. I requested hon. Members to write to Hon. Ministers or to the departments concerned and get answers to their questions. But hon. Members are still complaining to me that the departments do not answer their letters. So, I would take this opportunity to request Hon. Ministers to inform their departments to treat with respect the letters from M.L.As. and answer them. Otherwise, the only solution will be for me to allow those questions to come before this House, and Hon. Ministers may give any answers they like.

THE HON. SRI C. SUBRAMANIAM: May I make a suggestion that in that case, hon. Members may address the Ministers? That would be easier.

MR. SPEAKER: I have no objection.

**SRI S. M. ANNAMALAI:** கனம் தலைவர் அவர்களே, பல கடிதங்கள் அமைச்சர்களுக்கு எழுதியும் கூட, அப்படிப்பட்ட கடிதங்களுக்கு பதில்களே வருவது கிடையாது. சுமார் இரண்டு ஆண்டுகள் சென்றும் கூட அமைச்சர்களிடமிருந்து ரசீது வருவது கிடையாது. மேலும், ரிமைண்டர்கள் அனுப்பினாலும் கூட, பதில் வருவது கிடையாது. அமைச்சர்களுக்குத் தபால் எழுதியும் எம். எல். ஏ.-க்களுக்குப் பதிலே கிடையாது என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தை நான் சொல்வேன்,

[10th March 1960

MR. SPEAKER : உதாரணம் வேண்டாம். சொல்லவேண்டியதைச் சீக்கிரமாகச் சொல்லி முடித்துவிடுங்கள்.

SRI S. M. ANNAMALAI : சட்ட மன்றத்திலேயே அமைச்சரிடத்தில் நேரடியாகக் கொடுத்த ஒரு தாலுகா ரசீது வந்திருக்கிறது. ஆனால், அமைச்சர் அவர்களை அது சம்பந்தமாக கேள்வி நான் கேட்டதற்கு, இல்லை என்று பதில் அளித்திருக்கிறார். ஆகவே, நேரடியாகக் கேள்விகள் போடுவதற்குச் சபைத் தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR rose.

MR. SPEAKER : Let there not be a discussion.

SRI K. SATTANATHA KARAYALAR: கனம் சபாநாயகர் அவர்களே, அங்கத்தினர்கள் அனுப்பக் கூடிய கேள்விகளை ஆராய்ந்து செய்து இலாக்கா மூலமாக அவைகளை விசாரித்து, எங்களுக்குப் பதில் கொடுக்க முடியுமா என்று கேட்கிறேன்.

MR. SPEAKER : That question has been examined and I do not think it is correct for the Speaker to write to the department. Because, there are many questions involving controversial and confidential statements, and the Speaker does not want to get involved in the correspondence between the Members and the departments. The suggestion that the Members may write to the Ministers is a good one and we may see how it works. So far, the complaints I have received were that the departments did not write to the Members and the Members were not getting replies to their letters. Let us try this experiment, viz., the Members writing to the Ministers. Let us see how the new arrangement works.

Now, the Hon. the Minister for Finance may present the Budget.

SRI S. LAZAR rose.

MR. SPEAKER : I have called the Hon. Minister to present the Budget.



10th March 1960]

## VI.—PRESENTATION OF THE BUDGET FOR THE YEAR 1960-61.

THE HON. SRI C. SUBRAMANIAM :

**சபைத் தலைவர் அவர்களே,**

1960–61-ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையை இச் சபைக்கு அளிக்க முன்வந்துள்ளேன். அத்துடன் 1958–59-ம் ஆண்டின் முடிக்கப்பெற்ற வரவு-செலவுக் கணக்கும் 1959–60-ம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடுகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.[a] 1958–59-ன் திருத்திய மதிப்பீடுகளின்படி ரூ 2·65 லட்சம் உபரி ஏற்படலாம் என்று எதிர்பார்த்தோம். ஆனால் முடிவுற்ற கணக்குப்படி ரூ 1·60 லட்சம்தான் உபரி நின்றிருக்கிறது. நடைமுறை ஆண்டின் மதிப்பீடுகளின்படி உபரி ரூ. 1·39 லட்சம் ஏற்படலாம் என்று கணக்கிடப்பட்டிருந்தது. அதற்குப் பதிலாகத் திருத்தப்பட்ட மதிப்பீடுகளின்படி ரூ. 58 லட்சம்தான் உபரி எதிர்பார்க்கப் படுகிறது. 1960–61-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தின்படி ரூ. 34 லட்சம் துண்டு விழுகிறது. சம்பளக் கமிஷன் செய்யவிருக்கும் சிபார்சுகளை ஒட்டி ஏற்படவிருக்கும் செலவுத் தொகைகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் இன்னும் அதிகமான துண்டு விழும். இருப்பினும் இவ்வாண்டும் புதிய வரி எதுவுமின்றியே வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. (Cheers) முன்னுரை 12-02 p.m.

1960–61-ம் ஆண்டுடன் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் முடிவடைகிறது. ஆகவே, இந்த ஆண்டின் வரவு-செலவுத் திட்டம் தனிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இரண்டாவது திட்டக் காலத்தில் நாம் ஏற்றுக்கொண்ட பல்வேறு பணிகளை நிறைவேற்றுவதில் எந்த அளவிற்கு வெற்றி கண்டிருக்கிறோம் என்பதை அளவிடக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இரண்டாவது திட்டத்தை அடிப்படையாகக் கொண்டுதான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக வேண்டியிருக்கிறது. ஆகவே இரண்டாவது திட்ட விவரங்கள் சிலவற்றை இச்சபை முன் வைப்பது அவசியமெனக் கருதுகிறேன்.

2. விவசாய வளர்ச்சிதான் பொருளாதார வளர்ச்சியின் அடித்தளம். விவசாய உற்பத்தி பெருகுவதன் மூலமே தொழில் வளர்ச்சியும் ஏற்பட முடியும். அத்துடன் பெரும்பான்மையான மக்கள் விவசாயத்திலே ஈடுபட்டிருக்கின்ற காரணத்தால், விவசாயவளம் பெருகினால்தான் அவர்கள் வாழ்க்கைத் தரம் உயர வழி ஏற்படும். ஆகவே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத் துறைக்கு முதலிடம் கொடுத்து விவசாயப் பொருள்கள் உற்பத்தியைப் பெரும் அளவில் அதிகரிக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. விவசாயத் துறை.

உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஆண்டு ஒன்றுக்கு 12·79 லட்சம் டன் அதிக உற்பத்தி ஏற்பட வேண்டுமென்று நிர்ணயித்

---

[a] Printed as Appendix I on pages 75-155 infra.

[Sri C. Subramaniam] [10th March 1960

திருந்தோம். இந்த இலக்கை அடைவதற்குக் கீழே விவரிக்கப்பட்டிருக்கின்ற பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது:—

(1) பெரிய நீர்ப்பாசனங்கள், (2) சிறிய நீர்ப்பாசனங்கள், (3) நில அபிவிருத்தி முறைகள், (4) உரங்கள், உயர்தர வித்துக்கள், (5) முற்போக்கான விவசாய முறைகள். இந்த இலக்குகளை நாம் எந்த அளவிற்கு நிறைவேற்றியுள்ளோம் என்பதை கீழ்க்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம்:-

| | 1955-56. | 1956-57. | 1957-58. | 1958-59. | 1959-60. | முதல் நான்கு வருடங்களில் அதிக உற்பத்தி. |
|---|---|---|---|---|---|---|
| | | | (லட்சம் டன்) | | | |
| அரிசி .. | 29·55 | 31·96 | 32·36 | 32·98 | 34·19 | 4·64 |
| புன்செய் தானியங்கள். | 14·66 | 14·83 | 15·27 | 15·35 | 15·70 | 1·04 |
| மொத்தம் உணவு தானியங்கள். | 44·21 | 46·79 | 47·63 | 48·33 | 49·89 | 5·68 (அதாவது சுமார் 6 லட்சம்) |

இதைப் பார்க்கும்பொழுது முதல் நான்கு வருடங்களில் சுமார் 6 லட்சம் டன் அளவுக்கு உணவு உற்பத்தி அதிகமாகியிருக்கிறது என்று கணக்கிலிருந்து தெளிவாகிறது.

நிலக்கடலை, பருத்தி, கரும்பு இவைகளைப்பற்றிய புள்ளி விவரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நிலக்கடலை. | 8·27 | 8·69 | 9·11 | 9·08 | 9·14 | 0·87 |
| | | (லட்சம் பேல்கள்) | | | | |
| பருத்தி .. | 3·11 | 3·39 | 3·46 | 3·56 | 4·05 | 0·94 |
| | | (லட்சம் டன் வெல்லம்) | | | | |
| கரும்பு .. | 3·35 | 3·26 | 4·03 | 3·84 | 3·92 | 0·57 |

திட்டக் காலத்தில் உணவு தானியங்களின் உற்பத்தி 9 லட்சம் டன் அளவில் உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. நாம் எதிர்பார்த்த அளவு ரசாயன உரம் கிடைக்காததே இக்குறைவுக்கு முக்கிய காரணம். மூன்றுவது திட்டக் காலத்தில் இக்குறையை நிவர்த்திப்பதற்கான வழிகள் வகுக்கப்பட்டு வருகின்றன. நெய்வேலித் திட்டத்தில் 350,000 டன் அம்மோனியம் சல்பேட்டுக்குச் சமமான 150,000 டன் "யூரியா" உரம் தயார் செய்யப்படும். 1962-ல் இந்த உற்பத்தி ஆரம்பமாகும் என எதிர்பார்க்கலாம். இதன் மூலம் நம் ராஜ்யத்திலுள்ள உரக்குறை பெரிதும் நீக்கப்படும். அதுவரையில், கிடைக்கின்ற உரத்தைச்



10th March 1960] [Sri C. Subramaniam]

சரியான முறையில் வினியோகம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டில் 1·09 லட்சம் டன் உரம் வழங்கப்பட்டது. 1960—61-ல் 2·07 லட்சம் டன் வழங்கத் திட்டமிட்டிருக்கிறோம்.

இரசாயன உரத்துடன் இயற்கை உரத்தை அதிகமாக உற்பத்தி செய்யவும் உபயோகப்படுத்தவும் ஏற்பாடு செய்திருக்கிறோம். எல்லா முனிசிபல் நகரங்களிலும் கழிவு உரம் உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்து, உரம் நல்ல முறையில் தயார் செய்யப்பட்டு வருகிறது. பெரிய பஞ்சாயத்துக்களிலும் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சில பஞ்சாயத்துக்களில் உரம் தயார் செய்வதற்கு வேண்டிய நிலம் இல்லாத குறை இருந்து வருகிறது. அதற்கான நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இவ்வகையில் வழங்கப்பட்ட உரத்தினுடைய புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| 1956—57 | .. | .. | 2·53 | லட்சம் டன். |
| 1957—58 | .. | .. | 2·59 | ,, |
| 1958—59 | .. | .. | 2·80 | ,, |
| 1959—60 | எதிர்பார்க்கப் படுவது. | | 3·00 | ,, |
| 1960—61 | | | 4·00 | ,, |

சிறு கிராமப்புறங்களிலும், குப்பை செத்தைகளைக் கொண்டும் மலக் கழிவுகளைக் கொண்டும் உரம் தயார் செய்யும் திட்டத்தைப்பற்றிச் சென்ற ஆண்டு அறிக்கையிலேயே குறிப்பிட்டிருந்தேன். இதன் மூலம் உற்பத்தியான உர விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | | மல உரம். (லட்சம் டன்) | குப்பை உரம். (லட்சம் டன்) | |
|---|---|---|---|---|
| 1956—57 | .. | .. | 1·73 | இந்தக் கணக்கில் அபிவிருத்தி வட்டாரங்களில் உற்பத்தியானது சேர்க்கப்படவில்லை. |
| 1957—58 | .. | .. | 1·27 | |
| 1958—59 | .. | .. | 9·54 | (அபிவிருத்தி வட்டாரங்களும் சேர்ந்து.) |
| 1959—60 | எதிர்பார்க்கப்படுவது. | .. | 9·00 | |
| 1960—61 | | 2·37 | 12·50 | |

பசுந்தழை உரத்தை உபயோகிப்பதில் மற்றப் பகுதிகளுக்கு ஒரு வழிகாட்டியாக நம் ராஜ்யம் அமைந்துள்ளது பெருமைக்குரிய விஷயம். 1960—61-ம் ஆண்டில், திட்டத்தில் எதிர்பார்த்ததுபோல் 38 லட்சம் ஏக்கராக்களுக்குப் பசுந்தழை உரம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும். இதற்காக 1,500 டன் தழை உர வித்துக்கள் வழங்கப்படும். இத்திட்டங்களில் நாம் எதிர்பார்த்த அளவு வெற்றி கண்டுள்ளோம்.

தைப் ண்ணைகள்.

3. சர்க்கார் விதைப் பண்ணைகள் நடத்துவதில் ஏற்பட்ட குறைகளைக் களைவதற்குத் தீவிர முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பண்ணைக்கும் பண்ணையாட்களை நிரந்தரமாக நியமிப்பதன் மூலமும், வேண்டிய கருவிகள், மாடுகள் இவைகளை வழங்குவதன் மூலமும், இப்பண்ணைகள் சரிவர நடைபெறுவதற்கான வழி ஏற்படும் என்று எதிர் பார்க்கலாம். திட்டக் கால முடிவிற்குள் 190 விதைப் பண்ணைகள் ஏற்பட்டு நடைபெற்றுவரும். நடைமுறை ஆண்டில் 22,000 டன் உயர்தர நெல் வித்துக்கள் வழங்கப் பட்டன. இதன் மூலம் 30·30 லட்சம் ஏக்கராக்கள் பயன் பெற்றுள்ளன. அடுத்த ஆண்டு 29,000 டன் வித்துக்கள் வழங்கப்படும். இவ்வாறு முதல் திட்டக் காலத்திலும் இரண்டாம் திட்டக் காலத்திலும் எடுத்துக்கொண்ட முயற்சி களின் காரணமாக எல்லா நிலங்களிலும் உயர்தர வித்துக்கள் பயன்படுத்தப்படும்.

4. மேலே கண்டவாறு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்ததன் காரணமாக ஏக்கர் ஒன்றுக்கு விளைச்சல் கணிசமாக உயர்ந்திருக்கிறது. இதைப் பற்றிய சில புள்ளி விவரங்கள் சென்ற ஆண்டு அறிக்கையில் கொடுக்கப்பட்டன. நம்முடைய ராஜ்யத்தில் ஏக்கரா ஒன்றுக்கு விளைச்சல் 1,300 ராத்தல் (அரிசி) அளவில் உள்ளது. அகில இந்தியச் சராசரி 1958–59-ல் 816 ராத்தலாக இருந்தது. நடைமுறை ஆண்டு விளைச்சலின் கணக்குப்படி நம் ராஜ்ய சராசரி விளைச்சல் 1,344 ராத்தல் அளவிற்கு உயர்ந் திருப்பதாகத் தெரிகிறது. இருப்பினும், விளைச்சல் ஜப்பானில் 2,650 ராத்தல், அமெரிக்காவில் 2,150 ராத்தல், சைனாவில் 1,610 ராத்தல் ஆக உள்ளது. நம் ராஜ்யத்திலும் விவசாயிகளுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தால், மற்ற நாடுகளில் ஏற்படுகின்ற விளைச்சலை இங்கும் எடுக்கலாம் என்ற நம்பிக்கையிருக்கிறது. நம் ராஜ்யத்தில், ஓர் இணைக்கப்பட்ட முழுத்திட்டத்தை ஒரு ஜில்லாவில் நிறை வேற்ற, மத்திய அரசாங்கத்தின் மூலம் ''போர்டு பௌண் டேஷன்'' என்ற அமெரிக்க நிறுவனம் உதவி அளிக்க முன் வந்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்குப் போதிய கடன் வசதி, உரம், பூச்சி மருந்து, உயர்தர விதைகள் இவைகளை வழங்க ஏற்பாடு செய்ய முடியும். தஞ்சை ஜில்லாவில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதாக முடிவு செய்துள்ளோம்.

ணெய் துக்கள்.

5. எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி இரண்டாவது திட்டக் காலத்தில் வருடம் ஒன்றுக்கு 1·66 லட்சம் டன் அளவுக்கு அதிகரிக்க வேண்டுமென நிர்ணயித்தோம். முதல் மூன்று ஆண்டுகளில் 0·66 லட்சம், அதாவது 66,000 டன்





அளவில் உயர்வு ஏற்பட்டது. நடைமுறை ஆண்டில் அது 1·53 லட்சம் டன் அளவிற்கு உயருமென எதிர்பார்க்கிறோம். ஆகவே அடுத்த ஆண்டிற்குள் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எய்துவது எளிது.

6. ஐந்தாண்டிற்குள் பருத்தி விளைச்சல் 1·55 லட்சம் பேல் அதிகரிப்பதற்குத் திட்டமிட்டோம். நடைமுறை ஆண்டு முடிவிற்குள் 0·94 லட்சம் பேல்கள் அளவிற்கு விளைச்சல் உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. திட்டமிட்ட இலக்கு 1960–61-ல் பூர்த்தியடைந்துவிடும். பருத்தி.

7. கரும்பு உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பல திட்டங் கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வடபாதிமங்கலத்திலும், பாண்டியராஜபுரத்திலும் இரு பிராந்தியக் கரும்பு அபிவிருத்திப் பண்ணைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கடலூரில் மத்தியக் கரும்பு ஆராய்ச்சி நிலையமும், திருச்சி ஜில்லா குமரமங்கலத்திலும், வட ஆர்க்காடு ஜில்லா குடியாத் தத்திலும் இரு கரும்பு ஆராய்ச்சி நிலையங்களும் நிறுவப் பட்டுள்ளன. கரும்புக்கு வரும் நோயைத் தடுக்கவும் ஒரு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. மண்வளத்தை ஆராய்ந்து கரும்பு உற்பத்திக்குச் சாதகமான நிலத்தைத் தேர்ந் தெடுக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். இத்திட்டங் களின் மூலம் கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குத் தக்க ஆலோசனைகளைக் கூறவும், வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. திட்டக் காலத்தில் ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் டன் அதிக உற்பத்தி செய்யவேண்டுமெனத் திட்டமிட்டிருந்தபடி அடுத்த ஆண்டிற் குள்ளாக இந்த இலக்கை அடைய முடியுமென நம்பலாம். நம் ராஜ்யத்தின் தற்போதையத் தேவையைக் கணக்கிட்டுப் பார்த்தால் சர்க்கரை உற்பத்தியில் சுமார் 40,000 டன் பற்றாக்குறை இருப்பதாகத் தெரிகிறது. மூன்றாவது ஐந் தாண்டுத் திட்டத்திற்குள் இக்குறை 60,000 டன் அளவில் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனைச் சரிக்கட்ட வேண்டுமென்றால் இன்னும் 6 லட்சம் டன் கரும்பு அதிகமாக உற்பத்தி செய்ய வழி செய்யவேண்டும். கரும்பு.

8. காடுகளை ஒட்டிய நிலங்களில் 46,000 ஏக்கர் அளவில் முந்திரி பயிரிடுவதெனத் திட்டமிட்டிருந்ததில் நடைமுறை ஆண்டு முடிவில் 38,000 ஏக்கர்களில் முந்திரி பயிரிடப்பட் டுள்ளது. அடுத்த ஆண்டில் மேலும் 9,000 ஏக்கராக்களில் பயிரிட ஏற்பாடு செய்யப்படும். விவசாயிகள் தங்கள் சொந்த நிலங்களில் முந்திரி பயிரிட உதவி அளிக்கும் திட்டத் தின்கீழ் முதல் நான்கு வருஷங்களில் 7,000 ஏக்கராவிலும் அடுத்த் ஆண்டு 7,000 ஏக்கராவிலும் முந்திரி பயிர் செய்யப் படும். முந்திரி.

**தேங்காய்.**

9. தேங்காய் உற்பத்தியைப் பெருக்குவதற்காகத் தஞ்சை ஜில்லா வேப்பன்குளத்தில் ஒரு பிராந்திய ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தியிருக்கிறோம். தென்னம்பிள்ளைகளை உற்பத்தி செய்வதற்கான பண்ணைகள் பட்டுக்கோட்டை, திண்டிவனம், கன்னியாகுமரி, செங்கோட்டை, கோயமுத்தூர் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. இதன் மூலமும் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் பண்ணைகள் மூலமும் 1960–61-ம் ஆண்டில் 2·50 லட்சம் தென்னங்கன்றுகளை விவசாயிகளுக்கு வழங்க முடியும்.

**விவசாயக் கல்வி ஆராய்ச்சி.**

10. புதிய முறைகளைக் கையாண்டு அதன் மூலம் விவசாய வளர்ச்சிக்கு வகை செய்ய வேண்டுமானால், விவசாய விஞ்ஞானத்தில் பயிற்சி பெற்ற பலர் நமக்குத் தேவை. இத்தேவையைப் பூர்த்தி செய்வதற்காகக் கோவையில் உள்ள விவசாயக் கல்லூரி விரிவாக்கப்பட்டுள்ளது. அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் கீழ் ஓர் விவசாயக் கல்லூரியும் 1959-ல் இருந்து ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது திட்டக் கால முதலாவது ஆண்டிலேயே, கோவைக் கல்லூரியில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டு ஒன்றுக்கு 108-லிருந்து 162-ஆக உயர்த்தப்பட்டது. அத்துடன் மேல் பட்டப் படிப்புக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன; இவைகளுக்கான கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு வேண்டிய கருவிகளும் வாங்கப்பட்டுள்ளன. அதற்கான ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

விவசாய ஆராய்ச்சி நிலையங்களில் கோவில்பட்டி, திண்டிவனம், ஆடுதுறை, பெரியகுளம், கடலூரில் உள்ளவைகளைப் பிராந்திய நிலையங்களாக உயர்த்த ஏற்பாடு செய்துள்ளோம். கோவையிலுள்ள ஆராய்ச்சி நிலையம் முக்கிய மத்திய நிலையமாகத் தொடர்ந்து இயங்கிவரும்.

**மண்வளப் பாதுகாப்பு.**

11. இரண்டாவது திட்டக் காலத்தில் மண்வளத்தைப் பாதுகாக்கும் திட்டம் 100,000 ஏக்கராக்களுக்குப் பயன்பட வேண்டுமென்று நிர்ணயித்திருந்தோம். 1958–59-ம் ஆண்டு வரை 48,000 ஏக்கரா மண்வளப் பாதுகாப்புப் பெற்றுள்ளது. நடைமுறை ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 29,000 ஏக்கரா பயனடையும். 1960–61-ல் 36,000 ஏக்கரா நிலம் மேலும் எடுத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே மொத்தம் 113,000 ஏக்கராவில் இப்பணி நிறைவேறும் என எதிர்பார்க்கலாம்.

மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தில் இருக்கக்கூடிய சிக்கல்களை உணர்ந்து, அவைகளை நீக்கச் "சென்னை நில அபிவிருத்தித் திட்டச் சட்டம்" சமீபத்திலே நிறைவேற்றப்பட்டுள்ளது. இச்சட்டம் அமுலுக்கு வரும்பொழுது எல்லா



விவசாயிகளின் சம்மதத்தைப் பெற்றபின்தான் இவ்வேலையை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற தடங்கல் நீங்கிவிடும். மேலும், தற்போதிருக்கும் ஏற்பாட்டின்படி, எல்லா வேலைகளையும் சர்க்கார் இலாகா மூலமே செய்து முடித்து, பின்னர் செலவின் ஒரு பகுதியை நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து வசூல் செய்ய வேண்டியிருக்கிறது. இதை மாற்றும் வகையில் ஒரு புதிய ஏற்பாடு தற்போது பரிசீலனையில் உள்ளது. இந்த ஏற்பாட்டின்படி, எந்த முறையில் வரப்புகள் அமைய வேண்டும் என்பதை மட்டும் அரசாங்க அதிகாரிகள் அடையாளமிட்டுக் காட்டுவார்கள். மற்ற வேலைகளை நிலச் சொந்தக்காரர்களே செய்துகொள்ள வேண்டும். இதன் மூலம் இதற்காகும் செலவையும் குறைத்து, கிராமங்களிலேயுள்ள மக்களின் உழைப்பையும் பயன்படுத்த முடியும்.

**மண்வளச் சோதனை.**

12. ஆங்காங்குள்ள நிலங்களின் மண்வளத்தைச் சோதனை செய்து மண்வாக்கை அறிவதன் மூலமாகத்தான் உரம், விதை இவைகளை நல்ல முறையில் உபயோகிக்க முடியும். அதற்காக டி.சி.எம். உதவியின்கீழ் ஒரு சோதனை நிலையம் கோயமுத்தூர் ஜில்லாவில் ஏற்பட்டு 1959-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31-ம் தேதி வரை மத்திய அரசாங்கச் செலவில் நடந்து வந்தது. இப்போது சென்னை சர்க்கார் இந்நிலையத்தை எடுத்து நடத்தி வருகிறார்கள். மூன்றாவது திட்டத்தில் ஜில்லா ஒன்றுக்கு ஒரு நிலையமாவது ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யப்படும்.

**நீர்ப்பாசன வசதிகள்.**

13. முதல் திட்டக் காலத்தில் எடுத்துக்கொண்ட ஒன்பது பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களில் இரண்டு, முதல் திட்டக் காலத்திற்குள்ளாகவே முடிவடைந்துவிட்டன. பாக்கியுள்ள ஏழு திட்டங்கள், அதாவது மேட்டூர்க் கால்வாய், அமராவதி, மணிமுத்தாறு, ஆரணியாறு, வைகை, சாத்தனூர், கிருஷ்ணகிரி ஆகியவை இப்பொழுது முடிவடைந்து விட்டன. இரண்டாவது திட்டக் காலத்தில் கீழ்க்கண்ட புதிய திட்டங்களை எடுத்துக் கொண்டுள்ளோம்: (1) கட்டளை மேல் கால்வாய், (2) புள்ளம்பாடிக் கால்வாய், (3) வீடூர் அணைத் தேக்கத் திட்டம், (4) பரம்பிக்குளம்-ஆளியாறுத் திட்டம், (5) நெய்யாறு (இரண்டாவது பகுதி), (6) கன்னியாகுமரி ஜில்லாவில் சில இடைநிலைத் திட்டங்கள். முதல் இரண்டு திட்டங்களின் முற்பகுதி 1959-ம் ஆண்டு செப்டம்பரில் முடிவுற்றது. இத்திட்டங்கள் முழு அளவில் 1960–61-ல் நிறைவேற்றப்பட்டு விடும். வீடூர்த் திட்டம் 1959-ம் ஆண்டு டிசம்பரில் முடிவுற்றது. இரண்டாவது திட்டக் காலத்தில் மேலே குறிப்பிட்ட திட்டங்களின் மூலம் புதிதாக 2·92 லட்சம் ஏக்கராக்களுக்குப் பாசன வசதி செய்து கொடுப்பதென நிர்ணயம் செய்திருந்தோம். இவ்வாண்டு முடிவில், அதாவது நான்கு ஆண்டுகளில் 2·52 லட்சம் ஏக்கராக்கள் பாசன

[Sri C. Subramaniam] [10th March 1960

வசதி பெற்றுள்ளன. 1960–61-ல் மேலும் 0·40 லட்சம், அதாவது 40,000 ஏக்கரா பாசனத்திற்கு வரும். ஆகவே திட்டமிட்டபடியே 2·92 லட்சம் ஏக்கராவும் பயனடையும்.

நமது இன்ஜினீயர்கள் திறமையுடன் பணியாற்றிக் குறித்த கால வரம்புக்குள்ளாகப் பல்வேறு பாசனத் திட்டங்களையும் கட்டி முடித்ததுமல்லாமல், செலவையும் சிக்கனமாகச் செய்து, குறிப்பிட்ட தொகைக்குக் குறைவாகவே பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். தேக்கங்கள் கட்டுவதற்கும், தண்ணீர் பயன்படுவதற்கும் இடையில் காலதாமதம் ஏற்படாத வகையில் திட்டங்கள் இணைக்கப்பட்ட முறையில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இதற்கு நமது இன்ஜினீயர்களுக்கு நம் பாராட்டு உரியது.

இரண்டாவது திட்டக் காலத்தில் நாம் எடுத்துக்கொண்டிருக்கும் திட்டங்களில் மிகப் பெரியது பரம்பிக்குளம்-ஆளியாறுத் திட்டம். 1958 நவம்பரில் இது ஆரம்பம் செய்யப்பட்டது. 1958–59-ல் சில பூர்வாங்க வேலைகளுக்காக 1 லட்சம் ரூபாய் அளவிற்குச் செலவு ஆயிற்று. 1959–60-ல் ஒரு கோடி ரூபாய் செலவாகலாம். இவ்வாண்டில் ஆளியாறுத் தேக்கத்தை ஏற்கனவே கட்ட ஆரம்பித்துள்ளோம். அத்துடன் குடியிருப்பு வீடுகள், சாலைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல், மின்சாரக் கம்பிகள் போடுதல் போன்ற பல பூர்வாங்க வேலைகள் முடிவுறும். 1960–61-ல் பரம்பிக்குளம், துணைக்கடவு, திருமூர்த்திமலை ஆகிய இடங்களில் தேக்கங்களைக் கட்ட ஆரம்பிப்போம். மேலும், பரம்பிக்குளம், துணைக்கடவு ஆகிய இரண்டு தேக்கங்களை இணைக்கும் சுரங்க (tunnel) வேலையும் ஆரம்பமாகும். மலை வழியாகத் தண்ணீர் கொண்டுபோவதற்கான வாய்க்கால் அமைக்கும் வேலைகளும் ஆரம்பமாகும். ஆளியாறுத் தேக்க வேலைகளில் கணிசமான முன்னேற்றம், அடுத்த ஆண்டில் ஏற்படுமென எதிர்பார்க்கலாம். இத்தேக்கத்திலிருந்து தண்ணீர் கொண்டு போவதற்காக, பொள்ளாச்சி, உப்பாறு வாய்க்கால்களும் துரிதமாக வெட்டப்படும்.

*சிறிய நீர்ப் பாசனங்கள்.*

14. நமது ராஜ்யத்தில் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவும் அனேகமாக நிறைவேறிவிட்டன. மேலும், பெரிய திட்டங்களை எடுத்துக் கொள்ளுவதென்றால், அண்டை ராஜ்யங்களில் ஓடுகின்ற ஆறுகளின் நீரை நம் பக்கம் திருப்புவதன் மூலந்தான் முடியும். மற்ற ராஜ்யங்களுடன் பேசி அவர்களுடைய சம்மதத்தின் பேரில்தான் அத்திட்டங்களை எடுத்துக்கொள்ள முடியும். அதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன. இதற்கிடையில் நீர்ப்பாசன வசதிகளை விரிவாக்குவதற்கு இரண்டு முறைகளே உள்ளன. ஒன்று, இருக்கின்ற நீர் வசதியைச் சிக்கனமாக உபயோகப்படுத்துவது.



10th March 1960] [Sri C. Subramaniam]

இரண்டாவது, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை ஏற்று நிறைவேற்றுவது. திட்டக் கமிஷனும் இதைப் பரிசீலனை செய்து, தற்போதுள்ள நிலைமையில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்துள்ளார்கள். இதன் மூலம் குறைந்த செலவில் குறுகிய காலந்தில் பலன் ஏற்படுவதோடு பரவலாகப் பல இடங்களும் இதன் பயனைப் பெறமுடியும். ஆகவே, நாம் சிறிய நீர்ப்பாசனங்களை எடுத்துக்கொள்வதில் பெருங் கவனம் செலுத்தி வந்திருக்கிறோம். திட்ட அளவிற்கு மேலாகவே பல பணிகளை எடுத்து முடித்துள்ளோம். குளங்களைச் சீர்படுத்தி அதன் மூலம் நீர்ப்பாசன வசதியைப் பெருக்க முயற்சி செய்து வருகிறோம். முதல் நான்கு ஆண்டுகளுக்குள் 1,319 குளங்களில் வேலை முடிவுற்றுள்ளது. 1960–61-ல் மேலும் 309 வேலைகள் முடிவுறும்.

குளங்களைச் சீரமைப்பதில் புதிய முறை ஒன்று சமீப காலமாகக் கையாளப்பட்டு வருகிறது. அதாவது, குளங்களின் ஆழத்தை அதிகப்படுத்தி அதன் மூலம் குளத்தின் பரப்பைக் குறைக்கவும், வெட்டி எடுக்கும் மண்ணைக்கொண்டு கரையை உயர்த்தவும், நீர்ப்பிடியிலுள்ள முன்வாய் நிலங்களின் மட்டத்தை உயர்த்தவும் ஏற்பாடு செய்யப்படுகிறது. குளத்தில் தேங்கும் தண்ணீர் அளவு இதனால் குறைவுபடுவதில்லை; அதே சமயத்தில் சிறிது அளவு நிலம் சாகுபடிக்குக் கிடைக்கிறது. இம்முறையின் மூலம் இதுவரை 29 குளங்கள் சீர்படுத்தப்பட்டிருக்கின்றன. சுமார் 1,200 ஏக்கர் நிலமும் புதிதாகச் சாகுபடிக்குக் கிடைத்திருக்கிறது. இவ்வாண்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட 19 குளங்களிலும், புதிதாக 20 குளங்களிலும் 1960–61-ல் வேலை நடைபெறும். இம்முறையில் அதிகப் பலன் ஏற்படுவதாக நிச்சயம் ஏற்பட்டால் இத்திட்டத்தை விரிவாக்க உத்தேசித்துள்ளோம்.

ஐந்தாண்டில் வடிகால் கிணறுகள் 3,000 ஏற்படுத்த வேண்டுமெனத் திட்டமிட்டிருந்தோம். முதல் மூன்று ஆண்டுகளில் 1,472 கிணறுகள் முடிவுற்றன. 1959–60-லும், 1960-61-லும் 600 கிணறுகள் வீதம் எடுத்துக்கொள்ளப்படும்.

புதிய கிணறுகள் வெட்டுவதற்குக் குடியானவர்களுக்கு உதவி அளிப்பதற்காக 1958-ம் ஆண்டு இறுதியிலிருந்து ஒரு திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. நில அபிவிருத்திக் கடன் சட்டத்தின் கீழ் முதன் முதலில் கிணறு ஒன்றுக்கு ரூ. 1,000 வீதம் கடன் கொடுக்கப்படுகிறது. கிணறு வெட்டி முடிந்ததும் செலவில் 25 சத விகிதத்தை மானியமாக உதவி, பாக்கியுள்ள தொகையை நீண்ட காலத் தவணையில் வசூலிப்பதாக ஏற்பாடு. 1960–61-ல் 3,000 கிணறுகளுக்கு உதவி யளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

[Sri C. Subramaniam] [10th March 1960

ஆயில் என்ஜின்களும், மின்சார பம்புகளும் குடியானவர்களுக்குத் தவணைக் கடன் முறையில் வழங்கும் திட்டமும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. முதல் மூன்று ஆண்டுகளில் 297 ஆயில் என்ஜின்களும், 592 மின்சார பம்புகளும் வழங்கப்பட்டன. நடப்பு ஆண்டில் 60 ஆயில் என்ஜின்களும், 96 மின்சார பம்புகளும் வழங்கப்படும். 1960-61-ல் 175 ஆயில் என்ஜின்களும், 475 மின்சார பம்புகளும் வழங்க நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**கால்நடை வளர்ப்பு.** 15. விவசாய வளர்ச்சியுடன் இன்றியமையாததாக இணைந்திருப்பது கால்நடை வளர்ச்சி. விஞ்ஞான அடிப்படையில் கால்நடை வளத்தைப் பெருக்கப் பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இவைகளின் மூலம் நம் ராஜ்யத்தில் கால்நடைகளின் தரத்தை உயர்த்த முயற்சித்து வருகிறோம்.

கேந்திர கிராம நிலையங்கள் இத்திட்டங்களில் முக்கியமானவை. திட்டக் காலத்தில் 18 கேந்திர நிலையங்கள் அமைய வேண்டுமென நிர்ணயித்திருந்தோம். முதல் மூன்று ஆண்டுகளில் 12 நிலையங்கள் திறக்கப்பட்டன. நடப்பு ஆண்டில் 4 நிலையங்கள் ஆரம்பித்துள்ளோம். 1960-61-ல் மேலும் 5 நிலையங்கள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. மொத்தம் 21 நிலையங்கள் திட்டக் காலத்திற்குள் ஏற்படும்.

முதல் மூன்று ஆண்டுகளில் ஒன்பது செயற்கைக் கருமுறை நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. 1959-60-ல் நான்கு நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. 1960-61-ல் மேலும் நான்கு நிலையங்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திட்டத்தில் எதிர்பார்த்ததைவிட ஏழு நிலையங்கள் அதிகமாகவே அமைக்கப்படும்.

திட்டக் காலத்திற்குள் 41 புதிய விஸ்தரிப்பு நிலையங்கள் ஏற்பாடு செய்யத் திட்டமிட்டிருந்தோம். அவைகளில் முதல் மூன்று ஆண்டுகளில் 17 நிலையங்கள் அமைக்கப்பட்டன. 1959-60-ல் 12 நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டில் மேலும் 15 நிலையங்கள் ஏற்பட்டு மொத்தம் 44 நிலையங்கள் இயங்க ஏற்பாடு செய்துள்ளோம்.

தஞ்சை ஜில்லாவில் இரண்டு பசுப் பராமரிப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. 1960-61-ல் இன்னுமொரு நிலையம் ஏற்படவும் வழி செய்யப்பட்டிருக்கிறது. திட்டமிட்டிருந்தபடியே ஜில்லா ஒன்றுக்கு ஒரு "மோட்டார் வாகனம் மூலம் இயங்கும் கால்நடை மருத்துவ நிலையம்", ஏற்பாடு செய்யப்படும்.

**காடுகள்.** 16. காடுகள் அபிவிருத்திக்காக அரசாங்கம் பல திட்டங்கள் வகுத்துள்ளது. முதல் நான்கு ஆண்டுகளில் 74,000 ஏக்கராக்களில் விறகுக்கான மரங்களும், 7,000 ஏக்கராக்களில்



10th March 1960] [Sri C. Subramaniam]

தேக்கு மரமும், 6,000 ஏக்கராக்களில் மென் மரமும் (soft wood), 400 ஏக்கராக்களில் மூங்கிலும், 200 ஏக்கராக்களில் பலரகக் காட்டு மரவகைகளும், 16,000 ஏக்கராக்களில் வாட்டில் மரமும், 2,000 ஏக்கராக்களில் யூகலிப்டஸ் மரமும், 2,400 ஏக்கராக்களில் சவுக்கு மரமும் பயிர் செய்யப்பட்டுள்ளன. மாட்டுத் தீவனத்திற்காகப் புல்வகைகள் 10,000 ஏக்கராக்களில் உற்பத்தி செய்ய ஏற்பாடாகியுள்ளது. வரும் ஆண்டில் 16,000 ஏக்கரில் விறகு மரங்களும், 2,200 ஏக்கரில் தேக்கு மரங்களும், 1,900 ஏக்கரில் மென் மரங்களும், 6,200 ஏக்கரில் வாட்டில் மரமும், 90 ஏக்கரில் மூங்கில் மரமும், 800 ஏக்கரில் சவுக்கு மரமும் வளர்க்கப்படும். 1,500 ஏக்கரில் மாடுகள் மேய்வதற்கான புல்தரைக் காடுகள் ஏற்பாடு செய்யப்படும். இவற்றையல்லாமல் மருந்துச் செடிப் பண்ணை ஒன்றை நீலகிரியில் ஏற்படுத்துவதற்கு மத்திய அரசாங்கத்தார் முடிவு செய்திருக்கிறார்கள்.

1960-61-ல் கிராமப்புறங்களிலே காட்டு வளத்தைப் பெருக்குவதற்காக ஒரு திட்டம் அமுலுக்கு வரும். பரீட்சார்த்தமாகச் செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு ஜில்லாக்களில் ஆறு அபிவிருத்தி வட்டாரங்களில் 6,600 ஏக்கராக்கள் இத்திட்டத்தின் கீழ் அபிவிருத்திக்கு எடுத்துக் கொள்ளப்படும். இவ்விடங்களில் விறகுக்கான மரங்களும், மாட்டுத் தீவனத்திற்கான புல்வகைகளும் வளர்க்க ஏற்பாடு ஆகிறது. இன்னொரு முக்கியமான திட்டம், கன்னியாகுமரி ஜில்லாவில் ரப்பர் தோட்டங்கள் நிறுவுவதாகும். முதற்படியாக 3,000 ஏக்கராவில் ரப்பர் மரங்கள் நட ஏற்பாடு ஆகின்றது. இது பிற்காலத்திலே நல்ல வருவாய் கொடுக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

**மீன் வளம்.** 17. இது வரையிலும் 65 பாப்லோ முறை யந்திரப் படகுகள் கட்டி அவற்றை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தனிப்பட்ட மீனவர்களுக்கும் குறைந்த விலைக்கு வழங்கியுள்ளோம். இந்தப் படகு பலராலும் விரும்பி உபயோகப்படுத்தப்படுகின்றது. நடைமுறை ஆண்டில் 37 படகுகளும், 1960-61-ல் மேலும் 30 படகுகளும் வழங்கப்படும். நைலான் வலைகள் வழங்கும் திட்டமும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக மீன் விற்பனைக்கான வசதிகள் செய்துகொள்ளவும், கடன் பளுவைத் தீர்ப்பதற்கும் மீனவர்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் முதல் மூன்று ஆண்டுகளில் 14 லட்ச ரூபாய் வழங்கியுள்ளோம். 1959-60-ல் 4 லட்சம் ரூபாயும், 1960-61-ல் 4 லட்சமும் வழங்கப்படும். நாகப்பட்டினம், கடலூர், ராயபுரம், வீபுரம் ஆகிய இடங்களில் மீன்துறைகள் கட்ட ஏற்பாடு செய்திருக்கிறோம். தூத்துக்குடியிலும், மேட்டூரிலும் மீன்களைச்

சேமித்து வைப்பதற்கான இரண்டு 'உறை நிலையங்கள்' (cold storage plants) கட்டப்பட்டு வருகின்றன. 1960–61-ல் கன்னியாகுமரியிலும், ராமேஸ்வரத்தை அடுத்த தங்கச்சி மடம் என்ற இடத்திலும் மேலும் இரண்டு நிலையங்கள் கட்டப்படும். ஆழ்கடல் பகுதிகளில் மீன் பிடிக்கக்கூடிய திட்டம் ஒன்றை உருவாக்க முயற்சி செய்து வருகிறோம்.

சமுதாய நலத் திட்டம்.

18. நமது ராஜ்யத்தை 360 அபிவிருத்தி வட்டாரங்களாகப் பிரித்திருக்கிறோம். இந்த வட்டாரங்கள் ஒவ்வொன்றும் சுமார் 66,000 மக்கள் கொண்டதாக அமையும். 1958–59 முடிய 176 வட்டாரங்களில் சமுதாய நலத் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நடைமுறை ஆண்டு முடிவிற்குள்ளாக இத்திட்டம் மொத்தம் 211 வட்டாரங்களிலே செயல்படும். அதன் மூலம் நம் ராஜ்யத்தில் மொத்தமுள்ள 18,000 கிராமங்களில் சுமார் 10,500 கிராமங்கள் இத்திட்டத்தின்கீழ் வந்துவிடும். 1960–61-ல் மேலும் 32 வட்டாரங்கள் எடுத்துக்கொள்ளப்படும். இத்திட்டங்களுக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 13,92 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1956–59 முடிய 6,78 லட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. 1959–60-ல் 2,88 லட்சமும், 1960–61-ல் 3,08 லட்சமும் செலவாகும் என எதிர்பார்க்கிறோம். ஆகவே, திட்டகாலச் செலவு 12,74 லட்சம் அளவில் இருக்கும்.

பஞ்சாயத்து அமைப்பு.

19. ஜில்லா அபிவிருத்தி சபைச் சட்டம் 1959-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதி முதல் அமுலுக்கு வந்துள்ளது. நீலகிரி, கன்னியாகுமரி, செங்கல்பட்டு ஆகிய ஜில்லாக்களுக்கு ஒவ்வொரு சபையும், மற்ற ஜில்லாக்களில் ஜில்லா ஒன்றுக்கு இரண்டு சபைகளும் அமைக்கப்பட்டுள்ளன. ஜில்லாக்களில் இதுவரையில் இயங்கி வந்த எல்லா ஆலோசனைக் கமிட்டிகளும் கலைக்கப்பட்டு, அவைகள் செய்து வந்த பணிகளை இந்த அபிவிருத்தி சபைகள் மேற்கொள்ளும். ஜில்லாவில் பல்வேறு துறைகளின் பணிகளையும் இணைத்துத் திட்டமிட, இச்சபை பெரிதும் உதவும். சென்னைப் புதிய பஞ்சாயத்துச் சட்டம் 1960-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதியிலிருந்து, கன்னியாகுமரி ஜில்லா, செங்கோட்டை தாலூகாப் பகுதிகளைத் தவிர, மற்ற எல்லா இடங்களிலும் அமுலுக்கு வந்துள்ளது. 1960-ம் ஆண்டின் இறுதிக்குள்ளாக எல்லாக் கிராமங்களிலும் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட்டுவிடும். மூன்று தவணைகளில் எல்லா அபிவிருத்தி வட்டாரங்களிலும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களைக் கொண்டுவரத் திட்டம் இடப்பட்டுள்ளது. முதல்படியாகச் சமுதாய நலத் திட்டம் அமுல் நடந்து வருகின்ற 75 வட்டாரங்களில் 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதியிலிருந்து பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் இயங்க ஆரம்பிக்கும். இரண்டாவது படியாக 130 அபிவிருத்தி வட்டாரங்கள்





1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14-ம் தேதியிலிருந்தும், கடைசியாக உள்ள பகுதிகளில் 1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதியிலிருந்தும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் இயங்க ஆரம்பிக்கும். பஞ்சாயத்துச் சட்டப்படி பஞ்சாயத்துகளுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் நிதி வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப்படும். இதற்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்க ஏற்பாடாகியிருக்கிறது. சமுதாய அபிவிருத்தித் திட்டங்களும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படும். இது நிர்வாகத்திலேயே ஒரு புரட்சிகரமான மாறுதல். அதிகாரம் ஒரே இடத்தில் குவிந்து கிடப்பதற்குப் பதிலாகப் பரவலாக மக்கள் பிரதிநிதி சபைகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுகின்றது. புதிய பொறுப்புகளை ஏற்றுக் கொள்கின்ற அந்தக் கிராம ஸ்தாபனங்கள் நல்ல முறையில் இயங்குவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதில் எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கும் நடைபெறும் தேர்தல்களிலே அரசியல் கட்சிகள் ஈடுபடாமல் இருப்பது நன்மை பயக்கும் என்பது என்னுடைய கருத்து.

கூட்டுறவு.

20. கூட்டுறவு இயக்கத்தின் மூலம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 85 சத விகித கிராமங்களில் 45 சத விகித மக்களுக்குக் கடன் வசதி செய்து கொடுப்பது என்று திட்டமிட்டிருந்தோம். ஆனால், இப்பொழுது நடைமுறை ஆண்டின் முடிவிற்குள்ளாகவே எல்லாக் கிராமங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தாக வேண்டும் என்றும், 45 சத விகித மக்களுக்கு அதன் மூலம் பயன் ஏற்பட வேண்டும் என்றும் திட்டமிட்டு அதை நிறைவேற்றி வருகிறோம். நடைமுறை ஆண்டில் 19 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது. 1960–61-ல் 50 சத விகித மக்கள் கூட்டுறவு இயக்கத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டு 22·5 கோடி ரூபாய் கடன் வழங்க ஏற்பாடாகியிருக்கிறது.

இதுவரையிலும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகப் போதுமான சொத்துள்ள விவசாயிகளுக்கே கடன் வழங்கப்பட்டு வந்துள்ளது. சொத்துக் குறைவாக உள்ள குடியானவர்களுக்கும், குத்தகைதாரர்களாக உள்ள விவசாயிகளுக்கும் இப்பொழுது கடன் வழங்கப்படுவதில்லை. வரும் ஆண்டில் இவர்களுக்கும் கடன் வழங்குவதன் மூலம் கூட்டுறவுச் சங்கங்கட்கு நஷ்டம் ஏற்பட்டால் அந்த நஷ்டத்தை ஈடு செய்வதற்கு சர்க்கார் பொறுப்பேற்றுக்கொள்ள முன் வந்துள்ளது. அதற்காக ஒரு நஷ்ட ஈடு நிதியும் நிறுவப்படுகிறது. இதன் மூலம் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள எல்லா மக்களுக்கும் போதிய அளவு கடன் வசதி கிடைக்க வழி ஏற்படும்.

[Sri C. Subramaniam] [10th March 1960

விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதில் இருக்கக்கூடிய இன்னொரு முக்கியமான பிரச்சினை மத்திய காலக் கடன் (medium-term loan) பற்றியது. தற்போது இதற்குப் போதுமான அளவு நிதி கிடைக்க வாய்ப்பு இல்லாது இருக்கின்றது. இதுபற்றி ரிசர்வ் பாங்குடன் ஆலோசனை நடத்தி வருகிறோம். மத்திய காலக் கடன் போதுமான அளவுக்குக் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் விரைவாகச் செய்யப்படும்.

திட்டக் காலத்தில் 25 பிரதம கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் நிறுவ வேண்டுமென்றும் 245 கிடங்குகள் கட்ட வேண்டுமென்றும் திட்டமிட்டிருந்தோம். முதல் மூன்று ஆண்டுகளில் 14 விற்பனைச் சங்கங்கள் ஏற்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 11 சங்கங்கள் ஆரம்பமாகியுள்ளன. நடப்பு ஆண்டு முடிவிற்குள்ளாக 193 கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கும். 1960–61-ல் மேலும் 100 கிடங்குகள் கட்டப்படும். அடுத்த ஆண்டில் தொடர்ந்து எங்கெங்கு அவசியமோ அங்கெல்லாம் விற்பனைச் சங்கங்கள் ஆரம்பிக்கப்படும்.

கூட்டுறவுப் பண்ணை.

21. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 30 கூட்டுறவுப் பண்ணைகள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நிர்ணயித்திருந்தோம். முதன் மூன்று ஆண்டுகளிலேயே 26 சங்கங்கள் நிறுவப்பட்டு விட்டன. நடப்பு ஆண்டில் 74 சங்கங்கள் ஏற்படுவதோடு 1960–61-ல் மேலும் 20 சங்கங்கள் நிறுவப்படும்.

பெருந் தொழில்கள்.

22. நெய்வேலிப் பழுப்பு நிலக்கரித் திட்டம் நாம் எதிர்பார்த்தபடி முன்னேறி வருவது திருப்திக்குரிய விஷயம். இத்திட்டத்திற்கு ஏற்படக்கூடிய மொத்தச் செலவு 86 கோடி ரூபாய். 1959-ம் ஆண்டு மார்ச் மாதம் முடிய 11 கோடி செலவாயிற்று. நடப்பு ஆண்டில் 15·47 கோடி ரூபாய் செலவழிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாக 49 கோடி ரூபாய் இத் திட்டத்திற்காகச் செலவழிக்கப்படும். இத்திட்டத்தில் முக்கியப் பகுதி நிலக்கரியை வெட்டி எடுத்தலாகும். வருஷம் ஒன்றுக்கு 35 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதற்கான இயந்திரங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. 35 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி கீழ்க்கண்டவாறு உபயோகப்படுத்தப்படும்: 15 லட்சம் டன் பழுப்பு நிலக்கரியை உபயோகித்து 2·5 லட்சம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். 5 லட்சம் டன் பழுப்பு நிலக்கரியை உபயோகித்துச் செயற்கை உரமாகிய யூரியா 1·5 லட்சம் டன் தயார் செய்யப்படும். பாக்கியுள்ள 15 லட்சம் டன் நிலக்கரியைச் சுட்ட நிலக்கரி அச்சுக்கள் தயாரிக்க உபயோகப்படுத்தப்படும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 60 லட்சம் டன் பழுப்பு நிலக்கரி வெட்டி



[10th March 1960] [Sri C. Subramaniam]

எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். திட்டமிட்டபடி மின்சக்தி, '' யூரியா '' உரம், சுட்ட நிலக்கரி அச்சுக்கள் இங்கு தயார் செய்யப்படும். இதற்கான தொழிற்சாலைகள் நிறுவப்பட்டு வருகின்றன.

நெய்வேலிப் பழுப்பு நிலக்கரியை உபயோகித்துச் சேலம் இரும்புக் கனிகளைக் கொண்டு இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்துவதற்காகப் பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக மத்திய அரசாங்கம் ஒரு தொழில் நுட்பக் குழுவை அமைத்திருக்கிறார்கள்.

இம்மாநிலத்தில் காவிரிப் பகுதியில் பூமிக்கடியில் எண்ணெய் இருக்கிறதா என ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது கனம் அங்கத்தினர்கள் அறிந்த விஷயமே. நமது வேண்டுகோளின்பேரில் இந்திய அரசினர் இம்முயற்சிகளைத் தீவிரப்படுத்த ஒப்புக்கொண்டுள்ளனர்.

நீலகிரியில் கச்சா பிலிம் தொழிற்சாலை அமைப்பதற்காக ஒரு பிரெஞ்சுக் கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. 1962-ம் ஆண்டிற்குள்ளாக அங்குக் கச்சா பிலிம் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதல் கட்டத்தில் இதற்கு 5 கோடி ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இத்தொழில் மூலம் 1,300 பேர் வேலை பெறுகிறார்கள்.

நேஷனல் இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்டு கார்ப்பொரேஷன் மூலமாகக் கிண்டியில் ரண சிகிச்சைக் கருவிகள் (Surgical Instruments) உற்பத்தி செய்ய மத்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்கள். வருஷம் ஒன்றுக்குப் பல ரகமான 20 லட்சம் கருவிகள் இதில் தயார் செய்யப்படும். இதற்கு ரஷ்ய உதவி கிடைத்துள்ளது. இதிலே 2,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும்.

கூட்டுறவு முறையில் எடுத்துக்கொள்ளப்பட்ட மூன்று சர்க்கரை ஆலைகளும் முடிவடையும் தருவாயில் இருக்கின்றன. 1960–61-ல் இருந்து இவ்வாலைகளில் உற்பத்தி ஆரம்பமாகும் என எதிர்பார்க்கிறோம். இந்த மூன்று ஆலைகள் முறையே மதுராந்தகம், உடுமலைப்பேட்டை, ஆம்பூர் ஆகிய மூன்று இடங்களிலே அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் நான்கு சர்க்கரை ஆலைகள் அமைக்க ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

தனியார் துறையிலும் பல புதிய பெரும் தொழில்கள் ஆரம்பிக்க முன்வந்துள்ளார்கள். சென்ற ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்ட பிரகாரம் திருநெல்வேலியில் அமைக்கப்பட்டுள்ள சோடா உப்புத் தொழிற்சாலையில் உற்பத்தி ஆரம்பமாகி

நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. கோவை ஜில்லாவில் செயற்கைப் பட்டுத் தொழிற்சாலைக்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அதற்கான இயந்திரங்களை வரவழைக்க ஏற்பாடாகிவிட்டது. இத்தொழிலுக்கு வேண்டிய மூலதனம் 3·5 கோடி ரூபாய். சென்னை சர்க்கார் 10 லட்ச ரூபாய் அளவிற்கு இதில் பங்கு எடுத்துக்கொண்டுள்ளது. இதில் 1,500 பேர் வேலை பெறுவார்கள்.

ராமனுதபுரம் ஜில்லாவில் நிறுவப்பட்டிருக்கும் சிமென்ட் தொழிற்சாலையில் 1960-ம் ஆண்டு மத்தியில் சிமென்ட் உற்பத்தி ஆரம்பமாகும் என எதிர்பார்க்கலாம். இந்தத் தொழிற்சாலையின் மொத்த மூலதனம் ஒரு கோடி ரூபாய். முதற்படியாக, இத்தொழிற்சாலையில் ஆண்டொன்றிற்கு 66,000 டன்கள் சிமென்ட் உற்பத்தியாகும். இறுதியாக வருடமொன்றிற்கு 132,000 டன்கள் சிமென்ட் உற்பத்தியாகும்; 700 பேர்களுக்கு வேலை கிடைக்கும்.

சேலத்தில் கிடைக்கும் மாக்னசைட்டைக்கொண்டு உயர்தர அடுப்புக் கற்கள் (Refractories) செய்வதற்காக பர்ன் அண்டு கம்பெனியார் எடுத்துக்கொண்ட திட்டம் முடிவடையும் தருவாயில் உள்ளது. 1961-ல் முழு அளவில் இங்கு உற்பத்தி ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு மாதம் ஒன்றுக்கு 1,000 டன் மாக்னசைட் செங்கற்கள் உற்பத்தியாகும்.

மேட்டூரில் அலுமினியத் தொழிற்சாலை அமைப்பதற்கு ஓர் இத்தாலிய கம்பெனியாரின் உதவியுடன் ஏற்பாடுகள் நடந்துவருகின்றன.

சிமென்ட் உற்பத்தி செய்யும் இயந்திரங்கள், சர்க்கரை உற்பத்தி செய்யும் இயந்திரங்கள் இவைகள் போன்ற பல்வேறு இயந்திரங்களை உற்பத்தி செய்யக்கூடியதும், திருவொற்றியூரில் அமைந்துள்ளதுமான தொழிற்சாலையை விரிவாக்க ராமகிருஷ்ணு அண்டு சன்ஸ் கம்பெனியார் முன்வந்து அதற்கான அனுமதியும் பெற்றுள்ளார்கள். இது பிரெஞ்சு தொழில் ஸ்தாபனம் ஒன்றின் உதவி பெற்று அமைக்கப்பெறும். இப்பொழுதே சில இயந்திரங்கள் இத்தொழிற்சாலையில் செய்யப்பட்டு வருகின்றன. இதை விரிவாக்குவதற்கு உரிய முயற்சிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

ரயில்வே வாகன்கள் கட்டுவதற்கான தொழிற்சாலை ஒன்று ஆவடியை அடுத்துள்ள பட்டாபிராமில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அங்கு வருஷம் ஒன்றுக்கு 1,000 வாகன்கள் கட்டப்படும். இதன் மூலதனம் ஒரு கோடி ரூபாய். சென்னை சர்க்கார் பங்குத் தொகையாக 2 லட்ச ரூபாய் வழங்கியுள்ளது.



நாள் ஒன்றுக்கு 50 முதல் 60 டன் காகிதம் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்று மேட்டூரில் அமைக்க சேஷசாயி பிரதர்ஸ் முன்வந்துள்ளார்கள். இதற்கு வேண்டிய மூலதனம் நான்கு கோடி ரூபாய். ஒரு கோடி ரூபாய் அளவிற்கு மதராஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பொரேஷன் பங்கெடுத்துக்கொள்ள ஒப்புக்கொண்டிருக்கிறது. அதற்கான இயந்திரங்கள் அமெரிக்காவிலிருந்து தருவிக்க ஏற்பாடாகியுள்ளது.

ஒரு கோடி ரூபாய் முதலுடன் மாதம் ஒன்றுக்கு 15,000 மோட்டார் சக்கரங்களும், ரிம்களும் தயார் செய்வதற்காக மதுரை டி.வி.எஸ். கம்பெனியார் பெரிய தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்துவதற்கு முன்வந்துள்ளார்கள்.

ரசாயன உரங்கள் செய்யக்கூடிய தொழிற்சாலைகள் இரண்டை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் நடந்து வருகின்றன. இதற்கான ஏற்பாடுகளும் சீக்கிரம் முடிவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு பல தொழிற்சாலைகள் நம் ராஜ்யத்தில் ஏற்பட இருந்தாலும்கூட இவைகள் போதுமான அளவில் இல்லை என்பதைப்பற்றிக் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆகவே தொடர்ந்து இன்னும் பல கனரகத் தொழிற்சாலைகள் இங்கு ஏற்படுவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த முயற்சிகளுக்கு அடிப்படையாக உள்ளவை நெய்வேலித் திட்டமும், அதை ஒட்டி ஏற்படவிருக்கும் இரும்பு உற்பத்தித் தொழிற்சாலையுமாகும். இவைகளைப்பற்றி நன்கு ஆராய்ந்து மூன்றுவது திட்டக் காலத்தில் முயற்சிகள் எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன்.

தேசீய பொருளாதார ஆராய்ச்சிக் குழுவினர் நம் தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை ஆராய்ந்து ஒரு பூர்வாங்க அறிக்கையை சமர்ப்பித்துள்ளார்கள். இந்த அறிக்கை இப்பொழுது பரிசீலனையில் உள்ளது. மூன்றுவது திட்டத்தில் நாம் மேற்கொள்ள வேண்டிய தொழிலபிவிருத்திக்கான திட்டங்களை உருவாக்க இந்த அறிக்கை உதவும் என நம்பலாம்.

23. சிறு ரகத் தொழில் திட்டத்தின்கீழ் 19 முன்னேட்ட உற்பத்தி நிலையங்களும், 19 பொதுத் தொழில் வசதி தொழிற்சாலைகளும், 5 சமுதாய நல நிலையங்களும், 11 விற்பனை நிலையங்களும், ஒரு தொழில் நுணுக்கத் தகவல் நிலையமும், ஒரு கச்சாப் பொருள்கள் வழங்கும் கிடங்கும், சிறு ரகத் தொழில்கள்.

[Sri C. Subramaniam] [10th March 1960

தொழிற் பள்ளிகள் ஒவ்வொன்றையும் ஒட்டி ஜூனியர் டெக்னிகல் பள்ளிகள் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டிலேயே அது ஆரம்பம் செய்யப்பட்டு மூன்றாவது திட்டக் காலத்தில் முழுதும் நிறைவேற்றப்படும்.

நடப்பு ஆண்டில் இன்டியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி, சென்னையில் மத்திய அரசாங்கத்தாரால் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதற்கான கட்டிடங்கள் கட்ட ஆரம்பித்து உள்ளார்கள்.

இப்பொழுது தொழிற் பயிற்சி நிறுவனங்களும் நிலையங்களும் 10 இருக்கின்றன. இவற்றில் 4 இரண்டாவது திட்டத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்டன. மற்ற ஆறும் 1—11—1956 மத்திய அரசாங்கத்திடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டுத் திட்டக் காலத்தில் விரிவு படுத்தப்பட்டன. இப்பத்து நிலையங்களும் கடலூர், நாகப்பட்டினம், விருதுநகர், பேட்டை, கிண்டி, மதராஸில் இரண்டு, மதுரை, கோயமுத்தூர், நாகர்கோயில் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இந்தப் பத்து நிலையங்களிலும் மொத்தம் 2,668 மாணவர்கட்கு இடம் இருக்கிறது. இந்தத் தொகையில் 1,212 இடங்கள் இரண்டாந் திட்டக் காலத்தில் அதிகமாக்கப்பட்டவையாகும். இவற்றில் ஏழு நிலையங்களின் மாணவர் தொகையை 1960–61-ல் இன்னும் 500 வரை அதிகப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். 1960–61 வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கென ரூ 8·80 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி ஜில்லாவில் நாகர்கோயிலில் இன்னும் ஒரு நிலையம் 1960–61-ல் தொடங்க ஏற்பாடாகியுள்ளது. இதில் 200 பயிற்சியாளர் இடம் பெறுவர். இந்த நிலையத்திற்காக ரூ. 4·54 லட்சம் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ளோம். இரண்டாம் திட்டக் கால முடிவில் இந்நிலையங்கள் அனைத்திலும் அதிகப்படுத்தப்பட்ட இடங்களின் எண்ணிக்கை 1,912-ஆக இருக்கும்.

27. நமது ராஜ்யத்தில் 4·6 லட்சம் கைத்தறிகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இரண்டாவது திட்டக் காலத்திற்குள் சுமார் 2 லட்சம் கைத்தறிகளைக் கூட்டுறவு அடிப்படையில் இயக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. முதல் நான்கு ஆண்டுகளில் சுமார் 75,000 தறிகள் கூட்டுறவு இயக்கத்தின்கீழ் கொண்டுவரப்பட்டன. அடுத்த ஆண்டில் மேலும் 18,000 தறிகளைக் கூட்டுறவு முறைக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கைத்தறித் துணி விற்பனை விலை வகையில் சலுகை கொடுப்பதற்காக 75 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.



10th March 1960] [Sri C. Subramaniam]

கைத்தறித் தொழில் அபிவிருத்தி அடைவதற்கான பல திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவும் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது :—

| | (லட்சம் ரூபாய்) |
|---|---|
| ஆராய்ச்சி, தொழில் முறைப் பயிற்சி .. | 9 |
| விற்பனை, விளம்பரம் .. .. .. | 7 |
| குடியிருப்பு வசதிக்காக .. .. | 15 |
| கைத்தறித் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள். | 5 |
| பட்டு, செயற்கைப்பட்டு நெசவுத் தொழில் .. .. .. .. | 6 |

இரண்டாவது திட்டக் காலத்தில் கைத்தறிக்காக 4,14 லட்ச ரூபாய் செலவு செய்ய முடிவு செய்தோம். முதல் மூன்று ஆண்டுகளிலேயே 4,00 லட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 1,25 லட்ச ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1960–61-ல் இத்துறைக்காக 1,29 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே திட்டக் காலச் செலவு 6,54 லட்சம் அளவில் இருக்கும்.

28. கிராமப் பகுதிகளில் புதிய வேலை வாய்ப்புகள் ஏற் கதர்
படுத்துவதற்கும், வருடங்களில் சில மாதங்கள் மட்டும் வேலை கிடைத்து மற்றக் காலங்களில் வேலையில்லாது கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவவும் கதர்த் திட்டம் பெரிதும் பயன்பட்டு வந்திருக்கிறது. சென்னை சர்க்கார் 1947-ம் ஆண்டிலிருந்தே கதர்த் திட்டத்திற்கு ஒரு முக்கிய இடம் கொடுத்து, அதை நடத்தி வந்துள்ளது. இந்தப் பன்னிரண்டு ஆண்டுகளில் எடுத்துக்கொண்ட முயற்சிகளால் இன்றைக்கு 2·5 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இத்திட்டத்தின் மூலம் வேலை பெற்றுள்ளார்கள். தனியார் துறையில் நடத்தப்பட்டுவரும் கதர்த் திட்டங்களிலும் பல லட்சக்கணக்கான ஏழை மக்கள் வாழ்க்கை நடத்துவதற்கான வசதியை கதர்த் தொழிலின் மூலம் பெற்றுள்ளார்கள். சர்க்கார் துறையில் வருடத்திற்கு வருடம் கதர்த் துணி உற்பத்தி பெருகிக்கொண்டே வந்துள்ளது. 1958–59-ம் ஆண்டில் 58·44 லட்சம் ரூபாய் பெறுமான கதர் உற்பத்தி செய்யப்பட்டது. இவ்வாண்டு அது ஒரு கோடி ரூபாய் அளவிற்கு உயருமென எதிர்பார்க்கிறோம். வரும் ஆண்டுகளிலும் உற்பத்தி இதே அளவில் இருக்கும்.

அம்பர் சர்க்காத் திட்டமும் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிறது. தற்போது 30 பரிசிரமாலயங்களில் அம்பர் ராட்டையில் நூல் நூற்கும் பயிற்சி கொடுக்கப்பட்டு

[Sri C. Subramaniam] [10th March 1960

வருகிறது. இப்பயிற்சி மூன்று மாத காலம் நடைபெறுகிறது. இம்முறையில் ஒவ்வொரு பரிசிரமாலயத்திலும் வருடம் ஒன்றுக்கு 400 பேர் பயிற்சி பெறுகின்றனர். இதுவரை 15,000 பேர்களுக்கு மேல் பயிற்சி பெற்றுள்ளார்கள். 1960–61-ல் மேலும் 16,000 பேர்களுக்கு பயிற்சி அளிக்கத் திட்டமிட்டு அதற்காகப் புதிய பரிசிரமாலயங்கள் 9 திறக்க ஏற்பாடாகியுள்ளது. இவ்வாண்டு 5 லட்சம் கஜம் அம்பர் நூல் துணி உற்பத்தியாகும். அடுத்த ஆண்டில் உற்பத்தி இரட்டிப்பு ஆகலாம் என எதிர்பார்க்கிறோம்.

உற்பத்தியாகும் துணிகளை விற்பனை செய்வதுதான் முக்கியம். அதற்காகப் பல இடங்களில் விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டு வருகின்றன. இப்போதிருக்கும் 38 நிலையங்களுக்கு மேல் 1960–61-ல் 20 புதிய விற்பனை நிலையங்கள் திறக்கப்படும். சென்ற ஆண்டில் கதர் மொத்த விற்பனை 68 லட்ச ரூபாய்க்கு ஆயிற்று. இவ்வாண்டு, முதல் எட்டு மாதங்களிலேயே 61 லட்சம் அளவிற்கு விற்பனையாகியுள்ளது. ஆகவே இவ்வாண்டில் மொத்தம் 90 லட்ச ரூபாய் கதர் விற்பனையாகலாம் என எதிர்பார்க்கிறோம்.

குடியிருப்பு வசதி.

29. தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் இரண்டாவது திட்டக் காலத்தில் 2,700 வீடுகள் கட்ட முடிவு செய்துள்ளோம். முதல் மூன்று ஆண்டுகளில் 516 வீடுகள் கட்டி முடிந்தன. நடப்பு ஆண்டில் 446 வீடுகள் கட்டப்படும். அடுத்த ஆண்டில் 1,350 வீடுகள் கட்ட நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தில் 3,748 வீடுகள் திட்டக் காலத்திற்குள்ளாகக் கட்ட முடிவு செய்யப்பட்டது. முதல் மூன்று ஆண்டுகளில் 1,351 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 846 வீடுகள் கட்டப்படும். 1960–61-ல் 55 லட்ச ரூபாய் நிதி இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தவகையான திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை 2,08·11 லட்சம். இப்பொழுது 2,78·67 லட்சம் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சேரிச் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 6,970 மனைக்கட்டுகள் தயாரிக்கவும் 2,600 கட்டிடங்கள் கட்டவும் திட்டமிடப்பட்டது. முதல் மூன்று ஆண்டுகளில் 1,209 மனைக்கட்டுகள் மட்டும் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. நடப்பு ஆண்டில் 1,219 மனைக்கட்டுகள் ஏற்பாடு செய்யப்படும். அத்துடன் 950 வீடுகளும் கட்டப்படும். 1960–61-ல் 2,740 மனைக்கட்டுகள் தயாரிக்கவும் 1,134 வீடுகள் கட்டவும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே திட்டக் காலத்தில் 5,168 மனைக்கட்டுகளும் 2,084 வீடுகளும் முடிவடையும். திட்டக் காலச் செலவு 1,68 லட்சம் என்று நிர்ணயித்ததற்குப் பதிலாக 1,69 லட்சம் செலவழியும் என எதிர்பார்க்கப்படுகிறது.



10th March 1960] [Sri C. Subramaniam]

சாலைகள்.

30. ராஜ்யப் பெருவழிகளை அமைப்பதில் இரண்டாவது திட்டக் காலத்தில் சிமெண்ட் ரோடு 10 மைல் அளவிற்கும், ஆஸ்பால்டிக் காங்கிரீட் ரோடு 28 மைல் அளவிற்கும், தார் ரோடு 325 மைல் அளவிற்கும் அமைக்கத் திட்டமிடப்பட்டது. முதல் நான்கு வருஷங்களில் 8 மைல் சிமெண்ட் ரோடும், 19 மைல் ஆஸ்பால்டிக் காங்கிரீட் ரோடும், 325 மைல் தார் ரோடும் அமைக்கப்பட்டிருக்கின்றன. 1960–61-ல் 3 பர்லாங்கு சிமெண்ட் ரோடும், 5 மைல் ஆஸ்பால்டிக் காங்கிரீட் ரோடும், 22 மைல் தார் ரோடும் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மற்ற சாலைகளில் 397 மைல் நீள மண் சாலைகளைக் கப்பி ரோடுகளாக மாற்ற வேண்டுமென்று திட்டமிடப்பட்டுள்ளது. முதல் நான்கு ஆண்டுகளில் 217 மைல் கப்பி ரோடுகள் போடப்பட்டன. அடுத்த ஆண்டு 116 மைல் ரோடு மேலும் எடுத்துக் கொள்ளப்படும். சாலைகளைத் திருத்தி அமைப்பதற்காக 28 திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அவைகளும் இவ்வாண்டிற்குள்ளாகவே செய்து முடிக்கப்பட்டுவிட்டன. மேலும் 14 புதிய திட்டங்கள் 1960–61-ல் எடுத்துக்கொள்ளப்படும். திட்டத்தில் 105 சிறிய பாலங்களும் 46 பெரும் பாலங்களும் கட்ட நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவைகளில் 82 சிறிய பாலங்களும் 27 பெரும் பாலங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டில் 16 சிறிய பாலங்களும் 16 பெரும் பாலங்களும் எடுத்துக்கொள்ள வகைசெய்யப்படும். சென்ற ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டபடி ஜில்லா போர்டுகளின் நிர்வாகத்தின்கீழ் இருந்த எல்லா முக்கியச் சாலைகளையும் சர்க்காரே தங்களுடைய நிர்வாகத்தின்கீழ் கொண்டு வந்துள்ளனர். முதல் நான்கு ஆண்டுகளில் ஜில்லா போர்டு சாலைகளுக்குரிய இலக்குகளும் முடிக்கப்பட்ட பணிகளும் கீழே தரப்பட்டுள்ளன :—

| | 1956—61 இலக்குகள். | 1956—60-ல் முடிக்கப் பெற்றவை. |
|---|---|---|
| தார் ரோடுகள் முதலியன .. | 74 | 102 |
| புதிதாகக் கப்பி போடுதல் .. | 708 | 667 |
| சிறு பாலங்கள் .. .. | 131 | 95 |
| பெரும் பாலங்கள் .. .. | 35 | 11 |
| புதிய சாலைகள் அமைத்தல் .. | 1,700 | 947 |

1960–61-ல் முடிக்க வேண்டிய வேலைகளின் அளவு இன்னும் நிர்ணயம் ஆகவில்லை.

1960–61-ல் 81 லட்ச ரூபாய் அளவிற்குப் பெருஞ்சாலை வேலைகள் எடுத்துக்கொள்ளப்படும். இவ்வேலைகளில் புதிய சாலைகள் அமைப்பதற்கு 5 லட்ச ரூபாய் செலவிடப்படும். மத்திய சாலை நிதியிலிருந்து எடுத்துக்கொள்ளும் சாலைத் திட்டத்தில் முதல் நான்கு ஆண்டுகளில் 266 மைல் தார் ரோடு அமைக்கவும், 37 மைல் புதிய ரோடு அமைக்கவும்,

மத்தியான உணவுத் திட்டம் பரவலான முறையில் நடைபெற்று வரும்பொழுது இதில் ஆங்காங்குச் சில குறைகள் தென்படுவது இயற்கையே. அக்குறைகளைப் பரிசீலனை செய்து அவற்றை நீக்க வழி காணுவதற்கு மூன்று அசெம்பிளி அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பல இடங்களுக்குச் சென்று நிலைமையைப் பரிசீலனை செய்து தங்களுடைய அறிக்கையைச் சமர்ப்பிப்பார்கள். அத்துடன் அங்கத்தினர்களும் இதில் சிறிது அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். பொது மக்களினுடைய ஒத்துழைப்பின் மூலந்தான் இத்திட்டத்தில் வெற்றி காணமுடியும்.

பள்ளிச் சீரமைப்பு இயக்கத்தின் மூலமாகப் பள்ளிகளின் தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் பெரு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை 80-க்கு மேற்பட்ட பள்ளிச் சீரமைப்பு மகாநாடுகள் நடைபெற்று இருக்கின்றன. இந்த இயக்கத்தின் காரணமாகப் பொதுமக்கள் பல் வேறு பணிகளை மேற்கொண்டு பள்ளிகளுக்குப் பல வசதிகளைச் செய்து கொடுத்துள்ளார்கள். இதுவரை பொதுமக்கள் ஏற்றுக் கொண்ட திட்டங்களின் மொத்த மதிப்பு சுமார் 4·5 கோடி ரூபாய். அதில் 2 கோடி ரூபாய் அளவிற்கு மகாநாடுகளிலேயே ரொக்கமாகவும் பொருளாகவும் பணிகள் மூலமும் மக்களால் வழங்கப்பட்டுள்ளது. இந்த இயக்கத்தைத் தொடர்ந்து நடத்துவதன் மூலமாகப் பொதுமக்களிடமிருந்து கல்வித்துறைக்கான பல வசதிகளைப் பெற முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பணிகளை ஏற்றுத் திறமையாக நடத்திவரும் கல்வி இலாகா அதிகாரிகளுக்கு நம் பாராட்டுதலைத் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளோம். ஆசிரியர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக இதுவரையில் அவர்களுக்குப் பல சலுகைகள் அளிக்கப்பட்டு வந்துள்ளன. சென்ற நான்கு ஆண்டுகளில் சம்பள உயர்வு மட்டும் மாதம் ஒன்றுக்கு 17 ரூபாய் அளவிற்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மட்டும் சர்க்காருக்கு வருஷம் ஒன்றுக்கு இரண்டு கோடி ரூபாய் செலவு அதிகரிக்கிறது. ஆசிரியர்களுக்கு மேலும் என்ன சலுகைகள் கொடுக்கவேண்டும் என்னும் விஷயம் சம்பளக் கமிஷனுடைய பரிசீலனையில் இருக்கிறது.

யர்நிலைக் ல்வி.

32. உயர்நிலைப் பள்ளிகளில் 450 புதிய வகுப்புகள் ஆரம்பித்து, 14 முதல் 17 வயது வரை உள்ள மாணவர் 18,000 பேர் 4, 5, 6 பாரங்களில் சேர்க்கப்படவேண்டுமென்று திட்டமிட்டிருந்தோம். இதுவரை 552 புதிய வகுப்புகள் ஏற்பட்டு 22,000 மாணவர்கள் அதிகமாக உயர்நிலைப் பள்ளிகளில் சேர்ந்திருக்கிறார்கள். 1960-61-ல்



மேலும் பல புதிய வகுப்புகள் ஏற்படுத்தப்படும். அதற்கான வசதிகளைச் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக அநேக திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தமிழ் வளர்ச்சி.

33. தமிழ் மொழி வளர்ச்சிக்காக எல்லாவிதமான முயற்சிகளையும் திட்டமிட்டுச் செய்வதற்காகத் " தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சிக் குழு " ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழு பிரச்சினைகளை ஆராய்ந்து தமிழ் மொழி நல்ல முறையில் வளர்வதற்கான திட்டங்களை வகுத்து வருகின்றது. தமிழ் மூலமாக பி.ஏ. வகுப்புகளில் பாடம் சொல்லிக் கொடுக்கவேண்டுமென்று நாம் எடுத்துக்கொண்டுள்ள முடிவு மிக முக்கியமானது. கோயம்புத்தூரில் உள்ள சர்க்கார் கலைக் கல்லூரியில் அடுத்த ஆண்டிலிருந்து பி.ஏ. முதல் வருஷ வகுப்பில் பாடங்களைத் தமிழ் மொழி மூலம் சொல்லிக் கொடுக்க ஆரம்பம் செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்காகப் புத்தகங்கள் தமிழிலே இப்பொழுது தயாராக்கப்பட்டு வருகின்றன. 1963-64-ல் இருந்து எல்லாக் கல்லூரிகளிலும் பி.ஏ. வகுப்புகளில் தமிழ் மொழி மூலம் சொல்லிக்கொடுக்க ஆரம்பம் செய்யவேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம். சென்னை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களைக் கலந்து ஆலோசித்து இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. விஞ்ஞானக் கல்வி, தொழில் கல்வி ஆகியவைகளைப் பொறுத்த வரையில் தொடர்ந்து இன்னும் கொஞ்ச காலத்திற்கு ஆங்கிலமே போதனா மொழியாக இருந்து வரும். அகில இந்திய அடிப்படையில்தான் இந்தப் பகுதிகளில் மாறுதல் ஏற்படுத்தவேண்டுமென முடிவு செய்திருக்கிறோம்.

இவ்வாறு தமிழ் போதனா மொழியாகின்ற சமயத்தில் ஆங்கிலத்தையும் நம்முடைய மாணவர்கள் நல்ல முறையிலே கற்பதற்கான வசதிகள் செய்வது அவசியம். கீழ் வகுப்புகளிலிருந்தே ஆங்கிலத்தை நல்ல முறையில் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதுவரை ஆரம்பப் பள்ளிகளில் 6 வது வகுப்பிலிருந்துதான் ஆங்கிலம் சொல்லிக்கொடுக்கப் பட்டு வந்தது. அடுத்த ஆண்டிலிருந்து 5-வது வகுப்பிலிருந்தே ஆங்கிலம் சொல்லிக்கொடுக்க ஆரம்பிக்கப்படும். பள்ளிகளில் ஆங்கிலம் கற்பிக்கும் முறையைச் சீர்திருத்தவேண்டிய அவசியத்தை உணர்ந்து, அதற்காக பிரிட்டிஷ் கவுன்சிலினுடைய உதவியைக் கொண்டு, செகண்டரி கிரேட் பள்ளி ஆசிரியர்கள் எல்லோருக்கும் ஆங்கிலம் கற்பிக்கும் முறையில் மறு பயிற்சி அளிப்பதற்காக ஒரு திட்டம் வகுத்துச் சென்ற மூன்று மாதங்களாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. எல்லா ஆசிரியர்களுக்கும் இம்மறுபயிற்சி அளிக்க இரண்டு வருஷ காலத்திற்குமேல் ஆகலாம்.

[Sri C. Subramaniam] [10th March 1960

பின்தங்கிய வகுப்பினர்.

34. சமுதாயத்தில் பின்தங்கிய பகுதியினர் நலனை ஒட்டிய திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதுவரை மத்திய அரசாங்கத்தார் நேரே கொடுத்து வந்த உபகாரச் சம்பளச் சலுகைகளை இனி ராஜ்ய சர்க்கார் மூலமாக வழங்க ஒப்புக்கொண்டு அதற்கான நிதியை நம்மிடம் ஒப்படைத்துள்ளார்கள். உபகாரச் சம்பளம் வழங்குவதில் இருக்கக்கூடிய தாமதங்கள், இதனால், அடுத்த ஆண்டிலிருந்து நீங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை 14,000 மாணவர்களுக்கு மாணவர் விடுதிகளில் தங்குவதற்கான வசதி செய்யப்பட்டுள்ளது. ஹரிஜன மாணவர்கள் விடுதிகளைச் சர்க்காரே எடுத்து நடத்த வேண்டுமென்கிற திட்டத்தின் கீழ் இதுவரை 96 மாணவர் விடுதிகள் சர்க்காரால் எடுத்து நடத்தப்பட்டு வருகின்றன. 1960–61-ல் மேலும் 31 மாணவர் விடுதிகள் சர்க்கார் நிர்வாகத்தின்கீழ்க் கொண்டு வரப்படும்.

மருத்துவம்- சுகாதாரம்.

35. கிராமப் புறங்களிலுள்ள மக்களுக்கு வைத்திய வசதிகள் ஏற்பாடு செய்வதற்காக அபிவிருத்தி வட்டாரங்களில் இதுவரை 122 பிரதம சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. 1960–61-ல் மேலும் 20 நிலையங்கள் திறக்கப்படும். 112 நிலையங்களில் பணியாற்றும் டாக்டர்களுக்கும் மற்றப் பணியாளர்களுக்குமான குடியிருப்பு வசதிக்காகக் கட்டிடங்கள் கட்ட ஏற்பாடாகியிருக்கிறது. பிரதம நிலையங்களில் பணியாற்றும் டாக்டர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டுமெனத் தீர்மானித்துள்ளோம். இச்சலுகைகளின் காரணமாகப் போதிய அளவு டாக்டர்கள் இந்நிலையங்களில் பணியாற்ற முன் வருவார்கள் என எதிர்பார்க்கலாம்.

மாவட்டத் தலைநகரங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளை விரிவாக்கவும் அபிவிருத்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது திட்ட ஆரம்ப காலத்தில் சர்க்கார் மருத்துவ நிலையங்களில் 9,812 படுக்கைகளுக்கு வசதி இருந்தது. திட்டக் கால முடிவிற்குள்ளாக இது 15,000 அளவிற்கு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது செங்கல்பட்டு, பாளையங்கோட்டை, ராமநாதபுரம் ஆகிய இடங்களில் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. தாலுகா தலைநகரத்திலுள்ள ஆஸ்பத்திரிகள் எல்லாம் சர்க்கார் நிர்வாகத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளன. அவைகளுக்கான கட்டிடங்களை விஸ்தரிக்கவும் பல்வேறு வசதிகளைப் பெருக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திட்டக் காலத்திற்குள்ளாக 3,15 லட்ச ரூபாய் அளவிற்கு மருத்துவ நிலையங்களினுடைய கட்டிடங்களுக்காகச் செலவிடப்படும்.



10th March 1960] [Sri C. Subramaniam]

மலேரியா வியாதியை முழுவதும் அகற்றுவதற்கான விரிவான திட்டம் ஒன்றை நடைமுறையில் எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதற்காக நடப்பு ஆண்டில் 1,14 லட்ச ரூபாய் செலவிடப்படும். அடுத்த ஆண்டில் 1,04 லட்ச ரூபாய் செலவாகும். இதன் மூலமாக ராஜ்யத்தில் மலேரியா உள்ள இடங்களில் தக்க மருந்துகளை உபயோகப்படுத்தி அவ்வியாதியை முழுவதும் அகற்றிவிட முடியும்.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டமும் எதிர்பார்த்தபடி முன்னேறி வருகிறது. இப்பொழுது நகரப் புறங்களில் 26, கிராமப் புறங்களில் 64 குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள் இயங்கி வருகின்றன. சென்னை நகரில் தாய்மார்களுக்கு ஆலோசனை சொல்லக்கூடிய 43 நிலையங்களும், ஆண்களுக்கு ஆலோசனை சொல்லக்கூடிய 32 நிலையங்களும் இயங்கி வருகின்றன.

கிராமப் புறங்களில் குடி தண்ணீர் வசதி செய்துகொடுக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து அதற்காகப் பல திட்டங்கள் வகுத்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. திட்டக் காலத்தில் 8,500 கிணறுகளும் 340 இணைக்கப்பட்ட திட்டங்களும் நிறைவேற்றப்படவேண்டுமெனத் திட்டமிட்டுள்ளோம். இந்த வேலைகள் எல்லாம் திட்டக் காலத்திற்குள்ளாக முடிவு அடையும் என்று எதிர்பார்க்கலாம். ஆற்றோரங்களில் அமைந்திருக்கக்கூடிய கிராமங்களில் ஏற்படும் வியாதிகளைத் தடுப்பதற்காக அக்கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வழங்கக்கூடிய ஒரு திட்டம் அமுலில் இருப்பது அங்கத்தினர்களுக்குத் தெரிந்ததே. இத்திட்டங்கள் முதலில் தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, ராமநாதபுரம் ஆகிய ஜில்லாக்களில் நடந்து வந்தன. இப்பொழுது மதுரை, வட ஆர்க்காடு, செங்கல்பட்டு ஜில்லாக்களிலும் இத்திட்டம் அமுலுக்கு வந்துள்ளது. 334 கிராமங்களில் இவ்வாண்டு முடிவிற்குள்ளாகப் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதி ஏற்படும். நகரப் புறங்களிலும் நகரக் குடி தண்ணீர் கிடைப்பதற்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இரண்டாவது திட்டக் கால முடிவிற்குள்ளாக 50 முனிசிபல் நகரங்களிலும் 15 பெரிய பஞ்சாயத்து நகரங்களிலும் குடி தண்ணீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படும். இதன் மூலம் 32 லட்சம் மக்கள் பலன் அடைவார்கள்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்.

36. ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நமது சாதனைகளை விரிவாக எடுத்துக்காட்டக்கூடிய வெளியீடு ஒன்று அங்கத்தினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழிலும் இருக்கிறது; ஆங்கிலத்திலும் இருக்கிறது. இரண்டாவது திட்டக் காலத்தில் மொத்தம் ரூ. 1,52 கோடியளவிற்குத்

[Sri C. Subramaniam] [10th March 1960

திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டது. ஒவ்வொரு வருஷமும் கீழ்க்கண்டவாறு திட்டப் பணிகளுக்காகச் செலவாகி வந்துள்ளது :—

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| 1956-57 .. .. .. | 28·7 |
| 1957-58 .. .. .. | 30·3 |
| 1958-59 .. .. .. | 34·6 |
| 1959-60 (திருத்தப்பட்ட மதிப்பீடு). | 39·5 |
| 1960-61 (மதிப்பீடு) .. .. | 38·4 |
| மொத்தம் .. | 1,71·5 |
| இத்துடன் குந்தாத் திட்டத்திற்காகக் கனடாவிலிருந்து கிடைத்த இயந்திரங்களுக்கான விலை கூட்டப்பட வேண்டும். அதன் மொத்தம் .. | 9·3 |
| ஆக மொத்தம் .. | 1,80·8 |

அதிகமாகச் செலவாகியிருக்கும் தொகையில் பெரும் பகுதி உற்பத்திப் பெருக்கத்திற்கான துறைகளுக்காகவே செலவாகியுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

அதிகச் செலவு ஏற்பட்டிருக்கும் துறைகள்—

| | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|
| மின்சாரம் .. .. .. | 24,00 |
| விவசாயமும், சமுதாய நல அபிவிருத்தித் திட்டமும் .. .. | 3,00 |
| நீர்ப்பாசனம் .. .. .. | 2,00 |
| தொழில் .. .. .. .. | 3,00 |
| கல்வி .. .. .. .. | 2,00 |
| சுகாதாரம், குடியிருப்பு வசதிகள் .. | 1,00 |
| | 35,00 |

திட்டத்தை நிறைவேற்றுவதில் நிதி வசதி கீழ்க்கண்டவாறு கிடைத்துள்ளது—

| | முதலில் நிர்ணயித்தபடி. (ரூபாய் கோடியில்) | நிறைவேற்றப் பட்டிருக்கிறபடி. (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| திட்டமொத்த அளவு .. .. | 1,52 | 1,81 |
| புது வரிகள் மூலம் திரட்ட வேண்டியது .. .. | 13 | 20 |
| பொதுமக்களிடமிருந்து கடன் எழுப்புவதன் மூலம் .. .. | 33 | 47 { 38, *9 } |
| சிறு சேமிப்பு மூலம் .. .. | 8 | 10 |

* 9 கோடி ரூபாய் மின்சார போர்டு கடனாகத்திரட்டியது.



10th March 1960] [Sri C. Subramaniam]

| | முதலில் நிர்ணயித்தபடி. (ரூபாய் கோடியில்) | நிறைவேற்றப் பட்டிருக்கிறபடி. (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| ராஜ்யப் பொது நிதியிலிருந்தும் மின்சார போர்டிலிருந்தும் சாதாரணச் செலவுகள் போக ஏற்படும் உபரி .. .. | 25 | 14 |
| மத்திய சர்க்கார் உதவி கடனாகவும் மான்யமாகவும் .. .. | 73 | 90 { 81, †9 } |
| | 1,52 | 1,81 |

பொது நிதியிலிருந்து 25 கோடி திட்டச் செலவுக்காகக் கிடைக்குமென்று எதிர்பார்த்ததில் 14 கோடிதான் கிடைத்துள்ளது. அதற்கு முக்கிய காரணம் திட்டக் காலத்தில் சர்க்கார் ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஊதிய உயர்வு கொடுக்கப்பட்டதுதான்.

| | வருடம் ஒன்றுக்கு. | திட்ட காலத்தில். |
|---|---|---|
| 1956 நவம்பரில் கொடுத்த உயர்வு (நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 5 முதல் ரூ. 7 வரை) .. .. | 2 | 2 × 4½ = 9·0 |
| 1957 மார்ச்சில் கொடுக்கப்பட்டது (ரூ. 7 முதல் ரூ. 5 வரை) .. | 1·8 | 1·8 × 4 = 7·2 |
| 1959 ஜனவரியில் கொடுக்கப்பட்டது (நபர் ஒன்றுக்கு மாதம் ரூ. 5) .. .. .. | 1·8 | 1·8 × 2¼ = 4·0 |
| | | ரூ. 20·2 கோடி. |

இவ்விதம் 20·2 கோடி ரூபாய் சம்பள உயர்வில் திட்டக் காலத்தில் செலவு செய்துள்ளது. இதற்காக மத்திய சர்க்கார் கொடுத்திருக்கும் உதவி மொத்தம் 9 கோடி ரூபாய்.

37. ராஜ்ய சர்க்கார் ஊழியர்கள், ஆசிரியர்கள் இவர்களுடைய சம்பள விகிதங்களைப் பரிசீலனை செய்து சர்க்காருக்குச் சிபார்சு செய்ய ஒரு சம்பளக் கமிஷனை நியமித்திருக்கிறோம். அதன் அறிக்கை கிடைத்ததும் கமிஷன் செய்துள்ள சிபார்சுகளைப் பரிசீலனை செய்து சர்க்கார் முடிவுகள் எடுக்க வேண்டும். அதை யொட்டி ஏற்படுகின்ற செலவுக்கு மூன்றாவது திட்டக் காலத்தில் வழிவகை செய்ய வேண்டியிருக்கும்.

† 9 கோடி ரூபாய் குந்தா வகையில் கனடா உதவி மூலம் கொடுத்தது.

[Sri C. Subramaniam] [10th March 1960

விலைவாசிகள்.

38. இவ்வாறு சர்க்கார் ஊழியர்களின் ஊதிய உயர்வின் காரணமாக நிர்வாகச் செலவு, வருடம் ஒன்றுக்குப் பல கோடிக் கணக்கில் அதிகரிக்க நேரிடுகிறது. இதற்கு அடிப்படையான காரணங்கள் யாவை என்பதைப்பற்றி ஆராய்வதவசியம். விலைவாசிகள் மேலும் மேலும் உயர்ந்து கொண்டே போகின்ற காரணத்தால் ஒரு குறித்த அளவு சம்பளம் பெற்று வாழ்க்கை நடத்துவோருடைய வாழ்க்கை நிலை, பெரிதும் பாதிக்கப்படுகிறது. ஆகவே அவர்கள் சம்பள உயர்வு கேட்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. இதே கஷ்டங்கள் சர்க்கார் ஊழியர்களுக்கு மட்டுமல்ல, தொழிலாளர்களுக்கும் ஏற்படுகிறது. இந்தச் சங்கடத்தைத் தவிர்க்க ஊதிய உயர்வு கொடுப்பது அவசியமுமாகிறது; அத்துடன் அது நியாயமுங்கூட. ஆனால் விலைவாசிகள் உயர்ந்திருக்கும் அளவிற்கு ஊதிய உயர்வு கொடுக்க முடிவதில்லை. ஆகவே இப்பகுதியினரிடையே ஊதிய உயர்வு பெற்ற பின்பும் மனக்கசப்புத் தொடர்ந்து இருந்து வருவதைக் காண்கிறோம். மேலும் ஊதிய உயர்வின் காரணமாகத் தொழில்களின் மூலம் உற்பத்தியாகும் பொருள்களின் விலையும் உயருகிறது. ஆகவே பொதுவாகப் பொருள்களின் விலை ஏறுமுகமாகவே இருந்து வரக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. விலை உயர்வு மேலும் ஓரளவுக்கு ஏற்படும்பொழுது மறுபடியும் ஊதிய உயர்வு கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இவ்வாறாக ஒரு சுழலில் மாட்டிக் கொண்டு விலை உயர்வும், அதையொட்டி ஊதிய உயர்வும், அதைத் தொடர்ந்து மேலும் விலை உயர்வுமாக ஏற்பட்டுக் கொண்டே போகக்கூடிய நிலையைக் காண்கிறோம். சர்க்காரைப் பொறுத்தவரையில் இந்த அதிகச் செலவைச் சரிகட்டப் புதிய வரிகள் போட வேண்டியிருக்கிறது. இவ்வரிப் பணம் மக்களுக்கு அத்தியாவசியமான சேவைகளுக்கோ அல்லது அபிவிருத்தித் திட்டங்களுக்கோ பயன்படாமல் நிர்வாகச் செலவிலேயே அழிந்து விடுகின்ற காரணத்தால் பொது மக்களிடையேயும் அதிருப்தி வளர ஆரம்பிக்கிறது. மேலும், பல்வேறு பணிகளையும், குறித்த செலவில் முடிக்க முடியாத நிலையும் ஏற்பட்டு விடுகிறது. ஆகவே குறித்த அளவில் செலவு செய்தாலும் எதிர்பார்க்கும் அளவிற்குப் பலன் ஏற்படாது போய்விடுகிறது. தொழில் துறையிலேயும் இதே நிலையைத்தான் காண்கிறோம். உற்பத்திப் பெருக்கில்லாமலேயே ஊதிய உயர்வு கொடுக்கும்பொழுது தொழில்களில் வருவாய் குறைகிறது. ஆகவே தொழிலை விஸ்தரிக்கவோ அல்லது புதிய தொழில்களை ஆரம்பிப்பதற்கோ ஆன மூலதனம் தொழில்களில் போதிய அளவு சேராமல் தொழில் வளர்ச்சியும் குன்றிவிடுகிறது. புதிய புதிய தொழில்கள் ஏற்பட வேண்டுமென்றால் மக்களுடைய சேமிப்பிலிருந்து போதுமான மூலதனம் கிடைக்கவேண்டும். விலையுயர்வின் காரணமாகப் பெரும்பான்மையான மக்களுக்குச் சேமிக்கக்



10th March 1960] [Sri C. Subramaniam]

கூடிய சக்தியே இல்லாது போய் விடுகிறது. இதன் காரணத்தால்தான் சென்ற ஆண்டு அறிக்கையில் விலையுயர்வினால் ஏற்படக்கூடிய ஆபத்தை எடுத்துக் காட்டியிருந்தேன். அங்குக் குறிப்பிட்டது போலத் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கும் தாறுமாறாகக் கட்டுப்பாடில்லாத விலையுயர்விற்கும் பெரிய முரண்பாடுள்ளது என்பதை உணர வேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வகுக்கும் இத்தருணத்தில் இரண்டாவது திட்டக் காலத்தில் ஏற்பட்டிருக்கும் இந்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு விலைவாசிகளை, அதிலும் முக்கியமாக அத்தியாவசியமான பொருள்களின் விலைவாசிகளை, ஓரளவுக்குள் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகளை வகுக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதை மறுமுறையும் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்

39. இதுவரை கொடுத்துள்ள புள்ளி விவரங்களிலிருந்து திட்டத்தை நிறைவேற்றுவதில் திட்ட இலக்குகளுக்கு மேலாகவே நம் ராஜ்யம் காரியங்களைச் சாதித்து வெற்றி கண்டிருப்பது நன்கு விளங்கும். நமது நிர்வாக இயந்திரம் நல்ல முறையில் இயங்கியதே இச்சாதனைக்கு முக்கிய காரணம். ஒவ்வொரு இலாகாவினரும் தாங்கள் ஏற்றுக்கொண்ட இலக்குகளை அடைவதற்கான முறையில் ஆர்வத்துடன் பணியாற்றியுள்ளார்கள். முன்பெல்லாம் பெரும்பாலும் பல வேலைகள் வருடக் கடைசியில் அவசர அவசரமாகச் செய்து முடிக்க வேண்டிய நிலையில் இருந்து வந்தன. இப்போது ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு மூன்று மாதங்களிலும் செய்ய வேண்டிய வேலைகளைப் பங்கிட்டு வருடம் முழுவதிலும் தொடர்ந்து வேலை நடக்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு மூன்று மாதத்திற்குப் பின்பும் சென்ற மூன்று மாதங்களின் சாதனைகளை ராஜ்ய அபிவிருத்திக் குழுவின் கூட்டத்தில் ஆய்வதற்கான முறை வகுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஆய்கின்ற காலத்தில் பணிகள் நிறைவேற்றுதலில் இருக்கக்கூடிய சங்கடங்களை உடனடியாக நீக்க முடிகிறது. குறித்த காலத்தில் குறித்த அளவு வேலைகளை முடிப்பதற்கு இம்முறை பெரிதும் உதவியிருக்கிறது. இருப்பினும் சில பழங்கால நடைமுறை விதிகள், வேகமாகப் பணிகள் ஆற்றுவதற்குத் தடையாக இருப்பதையும் காண்கிறோம். நாம் ஏற்றுக் கொண்டிருக்கிற புதிய பொறுப்புகளுக்கேற்ப விதிகளும் மாற்றியமைக்கப்படவேண்டியது அவசியம். அத்துடன் குறித்த வேலையை முடிப்பதற்கு இன்னார்தாம் பொறுப்பு என்பதையும் அவசியம் நிர்ணயம் செய்ய வேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இன்னும் பெரிய அளவில் திட்டங்கள் நிறைவேற வேண்டுமென்றால் அதற்கான மாறுதல்களைச் செய்து நிர்வாக இயந்திரம் ஒழுங்காகவும் விரைவாகவும் இயங்குவதற்கான வழி செய்வது அவசியம்.

[Sri C. Subramaniam] [10th March 1960

மேலே குறிப்பிட்ட விவரங்களை அடிப்படையாகக் கொண்டுதான் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தை நாம் உருவாக்க வேண்டியிருக்கிறது. திட்டத்தை உருவாக்குவதற்கான யோசனைகளைச் சொல்வதற்காக எல்லா அரசியல் கட்சித் தலைவர்களையும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் ஒத்துழைப்புடன் நம் ராஜ்யத்தில் அபிவிருத்திக்கான நல்லதொரு திட்டத்தை உருவாக்க முடியுமென நம்புகிறேன்.

*1958-59-ம் வருஷத்திய கணக்கு.*

40. சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்த பொழுது 1958–59-ம் வருஷத்திய திருத்தப்பட்ட மதிப்பீடுகளின்படி வரவு இனம் ரூ. 69,49 லட்சம் என்றும் செலவு இனம் ரூ. 66,84 லட்சமாகும் என்றும், ஆகவே உபரி ரூ. 2,65 லட்சம் அளவில் இருக்கும் என்றும் கணக்கிடப்பட்டது. அந்த ஆண்டிற்கான முடிவுற்ற கணக்குகள் இப்பொழுது கிடைத்திருக்கின்றன. அதன்படி வரவு ரூ. 69,95 லட்சமாகவும் செலவு ரூ. 68,35 லட்சமாகவும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே 1,60 லட்ச ரூபாய்தான் உபரி ஏற்பட்டுள்ளது. அதிகச் செலவுக்கு முக்கிய காரணம் எல்லா கெஜட் பதிவு இல்லாத ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் 1958 டிசம்பரிலிருந்து 5 ரூபாய் அதிக ஊதியம் கொடுத்ததேயாகும். கைத்தறித் துணிக்கு விற்பனை விலை வகையில் சலுகைக்காக எதிர்பார்த்ததைவிட 35 லட்சம் ரூபாயும், கட்டிடங்கள் முதலியவைகளில் 71 லட்ச ரூபாயும், அதிகமாகச் செலவு ஏற்பட்டுள்ளது. வருஷக் கடைசியில் கையிருப்புத் தொகை ரூ. 3,28 லட்சம்.

*1959-60 திருத்திய மதிப்பீடு.*

41. சென்ற ஆண்டின் அறிக்கையின் பிரகாரம் 1959–60-ம் வருஷத்திய வரவு ரூ. 73,08 லட்சமாகவும் செலவு ரூ. 71,69 லட்சமாகவும் மதிப்பிடப்பட்டிருந்தது. 1958-ல் டிசம்பரில் கொடுத்த சம்பள உயர்வு இந்த மதிப்பீடுகளிலும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இதன் மூலமாக வருஷம் ஒன்றுக்கு 1,80 லட்சம் ரூபாய் செலவு அதிகப்பட்டுள்ளது. திருத்திய மதிப்பீடுகளின்படி வரவு ரூ 78,30 லட்சம் ஆகவும் செலவு ரூ. 77,72 லட்சமாகவும் கணக்கிடப்பட்டிருக்கிறது. உபரி 58 லட்ச ரூபாய் அளவில் நிற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசாங்கத்திலிருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய வரிப் பங்குகளில் எதிர்பார்த்ததைவிட 75 லட்ச ரூபாய் அதிகமாகக் கிடைக்கலாம் எனத் தெரிகிறது. நம் ராஜ்ய இனங்களில் மோட்டார் வாகன வரியில் 41 லட்சமும், மத்திய விற்பனை வரியில் 20 லட்சமும், தமாஷா வரியில் 15 லட்சமும், ஸ்டாம்புகளில் 43 லட்சமும் அதிக வருமானம் கிடைக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. பாக்கி இருக்கக்கூடிய அதிக வருமானம் பெரும்பாலும் வரி அல்லாத மற்ற இனங்களில் ஏற்பட்டுள்ளது. இந்த வருவாய் அதிகரிப்புக்குத் தகுந்த பிரகாரம் திட்டச் செலவும் அதிகரித்திருக்கிறது என்பதைக் காண்கிறோம்.



10th March 1960] [Sri C. Subramaniam]

ரெவின்யூக் கணக்குச் செலவினங்கள் திருத்திய மதிப்பீட்டின் பிரகாரம் 77,72 லட்சம் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நிதி நிலை அறிக்கையில் கண்டதைவிட 6,03 லட்ச ரூபாய் அதிகச் செலவு ஏற்படலாமெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அதாவது, ஊதிய உயர்வின் காரணமாக ஏற்படும் செலவு நீக்கி 4,23 லட்சம் அதிகச் செலவு ஏற்பட்டிருக்கிறது. இவைகளில் 1,49 லட்சம் கல்விக்காகவும், 1,16 லட்சம் சுகாதாரத் துறைக்காகவும், 58 லட்சம் சமுதாய நலத் திட்டத்திற்காகவும், 71 லட்சம் கட்டிடங்கள் ரோடுகள் இவைகளுக்காகவும் அதிகச் செலவு வகையில் எதிர்பார்க்கப்படுகிறது. 75 லட்ச ரூபாய் எதிர்பாராத செலவு நிதிக்கு (Contingency Fund) ஒதுக்கியதால் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. 56 லட்ச ரூபாய் ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

*மூலதனச் செலவு 1959-60*

42. நடப்பு ஆண்டில் ரூ. 10,59 லட்சம் மூலதனச் செலவு ஏற்படுமென மதிப்பிட்டிருந்தோம். இப்பொழுது அது ரூ. 12,77 லட்ச அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம். ரூ. 31 லட்சம் ஜமீன்தாரி ஒழிப்புக்காகவும், ரூ. 85 லட்சம் முக்கியமாகப் பரம்பிக்குளத் திட்டச் செலவுக்காக நீர்ப்பாசனத் துறையிலும், சென்னை ராஜ்யக் கூட்டுறவு பாங்குகளுக்கும் ஜில்லா மத்திய பாங்குகளுக்கும் பங்கு நிதிக்காகக் கொடுத்தது 1,20 லட்ச ரூபாயும் ஆக அதிகச் செலவு ஏற்பட்டிருக்கிறது. மூலதனச் செலவைப் பற்றி ப்ட்ஜெட் அறிக்கைக் குறிப்பில் விவரமாக விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. மின்சாரத் துறையில் ஏற்படும் செலவு தனியாக மின்சார போர்டுக் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. 11 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிட்டிருந்ததற்குப் பதிலாக இப்பொழுது 14 கோடி ரூபாய் செலவாகலாம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை குந்தாத் திட்டத்திற்காகக் கனடா மூலம் கிடைத்த இயந்திரங்களின் மதிப்பைத் தவிர்த்து ஏற்பட்டிருக்கிறது. கனடாவிலிருந்து பெற்ற இயந்திர வகையில் மின்சார போர்டுக்கு மேலும் அதிகச் செலவு ரூ. 9,34 லட்சம் ஏற்பட்டிருக்கிறது. ராஜ்ய நிதியிலிருந்து மின்சார போர்டுக்கு ரூ. 18,84 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நடைமுறை ஆண்டில் பொதுவாக நிதி வசதி நிலைமை திருப்திகரமாகவே உள்ளது. இவ்வருஷத்தியக் கணக்கு 3,73 லட்சம் ரூபாய் இருப்புடன் முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

*1960-61 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.*

43. 1960–61-ல் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரெவின்யூக் கணக்கில் வரவு ரூ. 80,87 லட்சமாகவும், செலவு ரூ. 81,21 லட்சமாகவும் இருக்கின்றன. இதனால் ரூ. 34

லட்சம் துண்டு விழுகிறது. ரூ. 81 கோடி ரெவின்யூ வரவு-செலவில் இந்தச் சிறு தொகை துண்டு விழுவது ஒரு பெரிய காரியமல்ல.

நடைமுறை ஆண்டுத் திருத்தப்பட்ட மதிப்பீட்டில் ஏற்படும் வரவைக் காட்டிலும் அடுத்த வருஷத்தில் ரூ.2,57 லட்சம் அதிகம் வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அதிக வரவு, மத்திய வரிகள் (ரூ. 64 லட்சம்), பொது விற்பனை வரி (ரூ. 38 லட்சம்), முத்திரைத் தாள்கள் (ரூ. 25 லட்சம்), மோட்டார் வாகன வரி (ரூ.11 லட்சம்), வட்டி (ரூ.85 லட்சம்), இதர இனங்கள் (ரூ. 34 லட்சம்) என்ற தலைப்புகளில் கிடைக்கலாம். அடுத்த ஆண்டில் ரெவின்யூக் கணக்கில் செலவு, நடப்பு ஆண்டைவிட ரூ. 3,49 லட்சம் அதிகமாக இருக்கும். செலவுக் கணக்கில் அதிகப் பற்றைக் காட்டக்கூடிய இனங்கள், கடன் தீர்ப்புப் பணிகள் (ரூ. 1,71 லட்சம்), கல்வி (ரூ. 72 லட்சம்), தொழில்கள் (ரூ. 80 லட்சம்), சமுதாய நலத் திட்டம் (ரூ. 25 லட்சம்) என்பனவாகும். 1959-60-ன் திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கும் 1960-61 வரவு-செலவுத் திட்டத்திற்கும் உள்ள வேறுபாடுகள் நிதி நிலைக் குறிப்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. 1960-61 வரவு-செலவுத் திட்டத்தில் அபிவிருத்திக்கான செலவினங்கள் பின்வருமாறு :—

| | (ரூபாய் லட்சங்களில்.) |
|---|---|
| கல்வியும், விஞ்ஞானத் துறைகளும் .. | 15,53 |
| மருத்துவம் .. .. .. .. | 4,80 |
| பொதுச் சுகாதாரம் .. .. .. | 2,08 |
| விவசாயம் .. .. .. .. | 3,12 |
| கால்நடை வளர்ப்பு .. .. | 1,11 |
| கூட்டுறவு .. .. .. .. | 1,88 |
| தொழில், வழங்கு துறைகள் .. | 4,89 |
| ஹரிஜன முன்னேற்றம் .. .. | 2,95 |
| சமுதாய நலத்திட்டங்கள் .. .. | 3,31 |

ஸ்தல அபிவிருத்தித் திட்டம்.

44. 1959-60 ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் முன்னரே மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வந்த பணிகளோடு கிராமங்கட்குக் குடிதண்ணீர் வழங்கும் பணி மட்டுமே நடைபெற்றன. இவற்றோடு பக்கத்திலுள்ள பெரு வழியிலோ அல்லது ரயில்வே நிலையத்திலோ கொண்டு சேர்க்கின்ற சாலைகளை அமைத்தல், கிராமப் பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றையும் 1960-61-ல் ஸ்தல அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளுகிறது.





இந்திய அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் இந்த ராஜ்யத்தின் பங்கு ரூ 50 லட்சம் அளவில் இருக்குமென்று எதிர்பார்க்கலாம். ராஜ்ய அரசாங்க நிதியிலிருந்தும் இத் திட்டத்திற்காக ரூ. 25 லட்சம் ஒதுக்கியுள்ளோம். ஆகவே 1960-61-ல் ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களை ரூ. 75 லட்ச அளவிற்கு எடுத்துக்கொள்ள முடியும்.

1960-61 மூலதனச் செலவு.

45. 1960-61-ல் மூலதனச் செல்வுக்காக 10,85 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இச்செலவு விவரம் வருமாறு :—

கட்டிடங்கள், சாலைகள் ரூ. 3,70 லட்சம் ; நீர்ப்பாசனம் ரூ. 1,71 லட்சம் ; சிறிய நீர்ப்பாசனம் ரூ. 1,06 லட்சம் ; தொழில் வளர்ச்சி ரூ. 1,69 லட்சம் ; பஸ்கள் வாங்க ரூ 53 லட்சம் ; எஞ்சிய தொகை பலவகை இனங்களில் செலவிடப்படும். மின்சார அபிவிருத்திச் செலவு ரூ 12,07 லட்சம் ஆகுமென எதிர்பார்க்கிறோம். அரசாங்கம் கொடுக்கும் கடன் போக மீதித் தொகையை மின்சார போர்டு தனது நிதியிலிருந்து எடுத்துக்கொள்ளும்.

கடன் வழங்கும் வகைகள்.

46. 1960-61-ல் கடனாக வழங்க மொத்தம் ரூபாய் 16,46 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 5·66 லட்சம் மின்சார போர்டுக்கு அதன் மூலதனச் செலவுக்காகக் கொடுக்கப்படும். சென்னை நகர சபைக்கு ரூ. 84 லட்சமும், நகர அபிவிருத்தி டிரஸ்ட்டுக்கு ரூ. 74 லட்சமும், பல்வேறு ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் குடிதண்ணீர், சாக்கடைத் திட்டங்களுக்காக ரூ. 1,48 லட்சமும், குடியானவர்களுக்காக ரூ. 2,68 லட்சமும், தொழில் அபிவிருத்திக்காக ரூ. 28 லட்சமும், கைத்தறித் தொழிலுக்காக ரூ. 24 லட்சமும், குடியிருப்பு வசதி வகைகளுக்காக ரூ.85 லட்சமும், சமுதாய நலத் திட்டத்திற்காக ரூ. 1,20 லட்சமும் கடனாக வழங்கப்படும்.

நிதி வழி வகை.

47. நாம் முன்பு எழுப்பிய கடனைத் திருப்பிக் கொடுக்கும் வகையில் அடுத்த ஆண்டில் ரூ 7,17 லட்ச ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதில் நம் சர்க்காரின் பங்கு ரூ. 3,66 லட்சம், ஆந்திர, மைசூர், கேரள சர்க்கார்களின் பங்கு ரூ. 3·51 லட்சம். அடுத்த ஆண்டு மூலதனச் செலவுக்கு வழி செய்வதற்காக 10 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் எழுப்ப வேண்டியிருக்கும்.

வரிச் சலுகைகள்.

48. புதிய விற்பனை வரிச் சட்டம் சென்ற ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து நடைமுறையிலிருந்து வருகிறது. இச்சட்டத்தினால் ஏற்படும் பிரச்சினைகளை ஒரு ஆண்டிற்குப் பின் ஆராய்ந்து ஏதாவது வரி விலக்கவோ அல்லது குறைப்போ அவசியமானால் அவைகளைக் கவனிப்பதாகம் இந்தச்சட்ட இச்சபையில்

[Sri C. Subramaniam] [10th March 1960

விவாதிக்கப்பட்டபோது உறுதிகொடுக்கப்பட்டது. அதை யொட்டிக் கீழ்க்கண்ட பொருள்களின் மீதுள்ள விற்பனை வரி நீக்கப்படுகிறது :—

(1) காய்கறிகள், உருளைக்கிழங்கு, பழங்கள், வெற்றிலை, வாழையிலை, பூக்கள், முட்டை, இறைச்சி, மீன். (கரகோஷம்).

(2) உள்நாட்டுச் செக்கில் உற்பத்தியாகும் எண்ணெய்.

(3) தேயிலைப் பசுந்தழை (green leaf tea).

முடிவுரை. 49. இவ்வாண்டு எனது உரை வழக்கத்திற்கு மாருகச் சிறிது நீண்டுவிட்டதற்கு அங்கத்தினர்கள் என்னை மன்னிப் பார்கள் என நம்புகிறேன். இவ்வுரையை முடிக்கு முன் நிதி இலாகாப் பொறுப்பை நிர்வகிப்பதில் எனக்குப் பெரிதும் உதவி புரிந்துவரும் எல்லா அதிகாரிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இவ் வாண்டிலிருந்து திட்டத் துறையையும் திரு. டி. ஏ. வர்கீஸ் அவர்களே ஏற்றுப் பணியாற்றி வருகிருர். புதிய திட்டத்தை வகுப்பதிலும், நிதித் துறையை நிர்வகிப்பதிலும் திரு. வர்கீஸ் அவர்களும் அவர் கீழ்ப் பணியாற்றும் திரு. வெங்கிட்டரமணன், திரு. குகன் ஆகியோரும் ஆற்றி வரும் அரிய பணிக்கு நாம் எல்லோரும் நம் பாராட் டுதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

50. 1960-61-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை
1-19 p.m. இச்சபை ஏற்றுக்கொள்ளும் என்ற முழு நம்பிக்கையுடன் என்னுரையை முடிக்கிறேன்.

MR. SPEAKER : இந்த அறிக்கையின்மீது பொது விவாதம் நாளைக் காலை ஆரம்பமாகும். இப்போது சில செய்திகள் படிக்கிறேன்.



10th March 1960]

## III.- ANNOUNCEMENTS—*cont.*

### (2) DECISIONS OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

MR. SPEAKER : Under Rule 153 of the Madras Assembly Rules, I have consulted the Business Advisory Committee and the Hon. Leader of the House and I fix six days for the General Discussion and appoint 11th, 12th, 14th, 15, 16th and 17th March 1960 for the same.

The Business Advisory Committee met to-day morning (10th March 1960) and decided as follows :—

1. The Vote on Account may be discussed on the 17th March 1960 and the Appropriation Bill on the same introduced on the same day.

2. Supplementary Statement of Expenditure may be presented on the 18th March and discussion on the same may be taken up on the 23rd March and Appropriation Bill on the same introduced on the same day, viz., 23rd March.

3. Appropriation Bills may be passed on the 24th March.

4. The Demands for Grants may be taken up from 18th March onwards and the House may adjourn on the 25th March.

5. The House will not be sitting on Sunday the 13th and on 19th and 20th March 1960.

I shall have the decisions of the Business Advisory Committee circulated to the hon. Members.

The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow. 1-20 p.m.

The House then adjourned.

## VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### *A. Statutory Rules and Orders.*

*1. *Notification issued with G.O. Ms. No. 3310, Revenue, dated 11th November 1959, exempting from the tax payable under the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959), the purchases of cotton effected by the Gandhi Ashram, Tiruchengode, Salem district, for distribution to spinners in the Madras State. [Laid on the table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]*

*2. *Amendment issued with G.O. No. 3128, Revenue, dated 27th October 1959 to the Madras Cultivating Tenants Protection Rules, 1955, made in Notification I. [Laid on the table of the House under section 7 (2) of the Madras Cultivating Tenants Protection Act, 1955 (Madras Act XXV of 1955).]*

[10th March 1960

* 3. *Amendments issued with G.O. No. 3128, Revenue, dated 27th October 1959, to the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Rules, 1956, made in Notification II.* [*Laid on the table of the House under section 17 (3) of the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 (Madras Act XXIV of 1956).*]

* 4. *Amendment issued with G.O. No. 3128, Revenue, dated 27th October 1959, to the Tanjore Pannaiyal Protection Rules, 1952, made in Notification III.* [*Laid on the table of the House under section 16 (2) of the Tanjore Tenants and Pannaiyal Protection Act, 1952 (Madras Act XIV of 1952).*]

* 5. *Amendment issued with G.O. No. 3128, Revenue, dated 27th October 1959, to the Pannaiyal Protection (South Arcot) Rules, 1953, made in Notification IV.* [*Laid on the table of the House under section 16 (2) of the Tanjore Tenants and Pannaiyal Protection Act, 1952 (Madras Act XIV of 1952).*]

* 6. *Amendment issued with G.O. No. 3128, Revenue, dated 27th October 1959, to the Tiruchirappalli Kaiaeruvaram and Mattuvaram Rules, 1959, made in Notification V.* [*Laid on the table of the House under section 13 of the Tiruchirappalli Kaiaeruvaram and Mattuvaram Act, 1958 (Madras Act XXXVI of 1958.)*]

† 7. *Notification issued with G.O. Ms. No. 2919, Home, dated 15th October 1959 amending the Madras Motor Vehicles Rules, 1940, relating to the provision of parking lights.* [*Laid on the table of the House under section 133 of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).*]

† 8. *Notification issued with G.O. Ms. No. 2940, Home, dated 17th October 1959, amending the Madras Cinemas (Regulation) Rules, 1957.* [*Laid on the table of the House under section 10 (3) of the Madras Cinemas (Regulation) Act, 1955 (Madras Act IX of 1955).*]

† 9. *Notification issued with G.O. R. No. 745, Revenue, dated 6th November 1959, exempting from liability to entertainments tax the benefit film shows in aid of the Flag Day Fund to be held in December 1959.* [*Laid on the table of the House under section 16 (4) of the Madras Entertainments Act, 1939 (Madras Act X of 1939).*]

† 10. *Notification issued with G.O. Ms. No. 3312, Home, dated 23rd November 1959, amending the rule 37 and Form 'A' of the Madras Cinemas (Regulation) Rules, 1957.* [*Laid on the table of the House under section 10 (3) of the Madras Cinemas (Regulation) Act, 1955 (Madras Act IX of 1955).*]



10th March 1960]

† 11. *Notification containing the rule regarding the period within which a Member of Parliament or a Member of the State Legislature should intimate his decision to serve on a particular District Development Council, issued with G.O. No. 1997, Local Administration, dated 27th November 1959.* [*Laid on the table of the House under section 14 of the Madras District Development Councils Act, 1958 (Madras Act XVIII of 1958).*]

† 12. *Notification issued with G.O. Ms. No. 2629, Home, dated 15th September 1959, amending the Madras Motor Vehicles Rules, 1940 regarding the registration of Motor Vehicles (Chapter III).* [*Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).*]

† 13. *Notification issued with G.O. Ms. No. 4004, Industries, Labour and Co-operation (Labour), dated 15th October 1959, amending the rule 7 (1) of the Madras Industrial Establishments (National and Festival Holidays) Rules, 1959.* [*Laid on the table of the House under section 12 (3) of the Madras Industrial Establishments (National and Festival Holidays) Act, 1958 (Madras Act XXXIII of 1958).*]

† 14. *Notification issued with G.O. Ms. No. 2867, Home, dated 12th October 1959, amending the Madras Cinemas (Regulation) Rules, 1957.* [*Laid on the table of the House under section 10 (3) of the Madras Cinemas (Regulation) Act, 1955 (Madras Act IX of 1955).*]

† 15. *Notification issued with G.O. Ms. No. 2913, Home, dated 15th October 1959, amending the rule 56 of the Madras Cinemas (Regulation) Rules, 1957.* [*Laid on the table of the House under section 10 (3) of the Madras Cinemas (Regulation) Act, 1955 (Madras Act IX of 1955).*]

† 16. *Notification issued with G.O. Ms. No. 4285, Industries, Labour and Co-operation (Labour), dated 5th November 1959, amending the rule 35, regarding the 'appointment of Labour Officers as appellate authorities' of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Rules, 1959.* [*Laid on the table of the House under section 41 (3) of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act, 1958 (Madras Act XXXII of 1958).*]

† 17. *Notification issued with G.O. Ms. No. 3422, Home, dated 2nd December 1959, amending the rules 294-D, 294-E and 294-G regarding the 'Authorisation of Secretary to Government, Home Department, to take decision on behalf of Government', of the Madras Motor Vehicles Rules, 1940.* [*Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).*]

[10th March 1960

‡ 18. *Notification issued with G.O. Ms. No. 2018, Local Administration, dated 30th November 1959, containing the rule extending the term of office of the members of the Minjur Panchayat (Chingleput district). [Laid on the table of the House under section 113 (4) of the Madras Village Panchayats Act, 1950 (Madras Act X of 1950).]*

‡ 19. *Notification issued with G.O. Ms. No. 3712, Revenue, dated 11th December 1959, amending the Madras Agricultural Income-tax Rules, 1955. [Laid on the table of the House under section 61 (3) of the Madras Agricultural Income-tax Act, 1955 (Madras Act V of 1955).]*

‡ 20. *Notification issued with G.O. Ms. No. 3033, Public (General-M), dated 8th December 1959, amending the Public Department Notification S.R.O. No. A-415 of 1958, dated 11th January 1958, regarding the Madras Official Language. [Laid on the table of the House under section 6 of the Madras Official Language Act, 1956 (Madras Act XXXIX of 1956).]*

‡ 21. *Notification issued with G.O. Ms. No. 3517, Home, dated 11th December 1959, amending the Form 'C' of the Madras Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Madras Cinemas (Regulation) Act, 1955 (Madras Act IX of 1955).]*

‡ 22. *Notification issued with G.O. Ms. No. 2015, Local Administration, dated 30th November 1959, containing the rule extending the term of office of the members of the Idayacottai Panchayat (Madurai district). [Laid on the table of the House under section 113 (4) of the Madras Village Panchayats Act, 1950 (Madras Act X of 1950).]*

‡ 23. *Notification issued with G.O. Ms. No. 2019, Local Administration, dated 30th November 1959, containing the rule extending the term of office of the members of the Mannampandal Panchayat (Thanjavur district). [Laid on the table of the House under section 113 (4) of the Madras Village Panchayats Act, 1950 (Madras Act X of 1950).]*

‡ 24. *Notification issued with G.O. Ms. No. 3705, Home, dated 29th December 1959, amending the rule 6 of the Madras Rectified Spirit Rules, 1959. [Laid on the table of the House under section 54 (3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937).]*



10th March 1960]

¶ 25. *Notification issued with G.O. Ms. No. 2020, Local Administration, dated 30th November 1959, containing the rule extending the term of office of the members of the Achankuttapatti and Kuppanur Panchayats (Salem district). [Laid on the table of the House under section 113 (4) of the Madras Village Panchayats Act, 1950 (Madras Act X of 1950).]*

B.—REPORTS NOTIFICATIONS AND OTHER PAPERS.

* 1. *Notification issued with G.O. Ms. No. 3000, Home, dated 22nd October 1959, amending the rules for the " management of Special Homes and Work Houses for Beggars in the City of Madras ", 1955.*

§ 2. *Particulars relating to the Kodaikanal Sheep Breeding Co-operative Society (vide answer to Legislative Assembly Starred question No. 147, given by the Minister for Industries, on the floor of the House on the 24th April 1959).*

§ 3. *Statement showing the resolutions passed at the meeting of the State Harijan Welfare Committee held from the year 1956 to 30th September 1958, and the action taken hereon (vide answer to question No. 112, dated 23rd April 1959).*

|| 4. *Statement IX showing action taken by Government on assurances, promises and undertakings given during the sessions of 1958–59 of the Madras Legislative Assembly.*

† 5. *Notification amending the Madras Plantations Labour Rules [Amendment to clause (iv) of sub-rule (1) of rule 54], issued with G.O. No. 3063, Industries, Labour and Co-operation (Labour), dated 5th August 1959.*

‡ 6. *Notification issued with G.O. Ms. No. 3655, Industries, Labour and Co-operation (Labour), dated 18th September 1959, amending the rule 71 (1) of the Madras Plantations Labour Rules, 1955.*

‡ 7. *Notification issued with G.O. Ms. No. 969, Industries, Labour and Co-operation (Labour), dated 18th September 1959, amending the rule 15 of the Madras State Warehousing Corporation Rules, 1958. [Laid on the table of the House under section 52 (3) of the Agricultural Produce (Development and Warehousing) Corporations Act, 1956 (Central Act 28 of 1956).]*

‡ 8. *Balance sheet as at 31st March 1959 of the Madras State Warehousing Corporation, together with the auditors' report. [Laid on the table of the House under section 42 (9) of the Agricultural Produce (Development and Warehousing) Corporation Act, 1956 (Central Act 28 of 1956).]*

[10th March 1960

¶ 9. *Notification issued with G.O. Ms. No. 3853, Industries, Labour and Co-operation, dated 3rd October 1959, amending the Madras Pawn-brokers Rules*, 1944.

¶10. *Notification issued with G.O. Ms. No. 2305, Home, dated 11th August 1959, exempting from the payment of the tax leviable under the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931), the 1956 Willys Jeep Station Wagon, belonging to the Co-operative for American Remittances of Everywhere Inc., Madras. [Laid on the table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]*

* Placed on the table on 17th December 1959.
† Sent by post on 22nd January 1960.
‡ Sent by post on 9th February 1960.
§ Sent by post on 6th January 1960.
|| Sent by post on 16th January 1960.
¶ Sent by post on 3rd March 1960.

APPENDIX I.

[Vide item VI on page 29 supra].

பொருளடக்கம்


| | | | பக்கங்கள் |
|---|---|---|---|
| இணைப்பு | I. | சென்னை மாநில ரெவின்யூக் கணக்கில் வருவாயும், செலவினமும் .. .. | 77- 83 |
| இணைப்பு | II. | மூலதனச் செலவின் விவரம் .. .. | 84–89 |
| இணைப்பு | II-அ. | சென்னை மாநிலத்தின் ரெவின்யூக் கணக்கில் சேராத மூலதனச் செலவினம் .. .. | 90 |
| இணைப்பு | III. | கடன் நிலையைக் காட்டும் பட்டியல் .. .. | 91–93 |
| இணைப்பு | IV. | சென்னை அரசாங்கத்தின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் செலவின விவரம் காட்டும் பட்டியல் .. .. | 94–95 |

# இணைப்பு I.

[1953–4 கடைசி வரைக்கும் உள்ள கணக்கில் ஆந்திர மாநிலக் கணக்கும் சேர்ந்திருக்கிறது. 1956–7 முதல் உள்ள கணக்கு 1956 நவம்பர் 1-ம் தேதி முதல் அமுலுக்கு வந்த மாநிலங்களின் சீரமைப்பு அடிப்படையில் அமைந்தது.]

## சென்னை மாநில ரெவின்யூக் கணக்கில் வருவாயும், செலவினமும்.

| தலைப்புகள். | 1938-9. | 1952-3. | 1953-4. | 1954-5. | 1955-6. | 1956-7. | 1957-8. | 1958-9. | 1959-60. திட்ட மதிப்பீடு. | 1959-60. திருத்த மதிப்பீடு. | திட்ட மதிப்பீடு, 1960-1. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| | | | | | (ரூபாய் இலட்சத்தில்) | | | | | | |
| | | | | அ. வருவாய். | | | | | | | |
| மத்திய ஆயத் தீர்வைகள். | .. | 2,88·75 | 2,25·44 | 1,66·49 | 1,82·56 | 1,75·14 | 3,14·43 | 5,88·53 | 5,81·00 | 6,00·00 | 6,10·00 |
| கார்ப்பொரேஷன் வரி நீங்கலாக இதர வருமான வரிகள்— | | | | | | | | | | | |
| வருமான வரியில் பங்கு .. .. | 22·60 | 9,42·44 | 7,50·82 | 5,67·38 | 5,59·54 | 5,23·85 | 6,16·07 | 6,36·72 | 6,25·00 | 6,50·00 | 4,37·00 |
| விவசாய வருமான வரி .. .. | .. | .. | .. | .. | 1,41·94 | 1,12·51 | 1,29·67 | 86·55 | 1,47·00 | 1,47·00 | 1,80·00 |
| ஆஸ்தி வரி .. .. .. .. | .. | .. | .. | 5·28 | 17·57 | 22·35 | 28·41 | 25·18 | 28·41 | 24·00 | 24·00 |
| இரயில்வே கட்டண வரி .. .. | .. | .. | .. | .. | .. | .. | 31·07 | 70·37 | 70·00 | 80·00 | 82·00 |
| நில வரி— | | | | | | | | | | | |
| நீர்ப்பாசன வருவாய் உள்பட மொத்த வருவாய். | 7,00·78 | 8,70·85 | 6,68·67 | 5,95·41 | 5,97·34 | 6,19·86 | 6,91·52 | 6,67·34 | 6,68·38 | 6,55·35 | 6,61·35 |
| மாநில ஆயத் தீர்வைகள் .. .. | 3,72·23 | 47·26 | 30·86 | 27·22 | 28·62 | 30·29 | 27·97 | 22·63 | 25·70 | 23·39 | 23·39 |
| முத்திரைத்தாள் .. .. .. | 1,73·37 | 4,51·88 | 3,69·23 | 2,62·47 | 3,59·56 | 3,62·76 | 3,50·00 | 3,91·81 | 3,60·45 | 4,02·63 | 4,27·63 |
| காட்டுவளம் .. .. .. .. | 45·63 | 1,58·17 | 1,22·14 | 1,31·89 | 1,77·08 | 1,75·17 | 1,29·19 | 1,30·63 | 1,00·09 | 1,34·29 | 1,35·84 |
| பத்திரப்பதிவு .. .. .. .. | 32·70 | 1,01·03 | 90·60 | 60·46 | 69·66 | 78·85 | 79·42 | 86·26 | 76·94 | 87·03 | 87·03 |
| வாகன வரி .. .. .. .. | 81·22 | 4,25·95 | 4,17·04 | 3,59·89 | 4,00·87 | 4,37·73 | 4,54·29 | 4,99·58 | 4,78·02 | 5,19·01 | 5,30·02 |

சென்னை மாநில ரெவின்யூக் கணக்கில் வருவாயும், செலவினமும்—தொடர்ச்சி.

| தலைப்புகள். | 1938–9. | 1952–3. | 1953–4. | 1954–5. | 1955–6. | 1956–7. | 1957–8. | 1958–9. | 1959–60. திட்ட மதிப்பீடு. | 1959–60. திருத்த மதிப்பீடு. | திட்ட மதிப்பீடு, 1960–1. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| | | | | | (ரூபாய் இலட்சத்தில்) | | | | | | |
| அ. வருவாய்—தொடர்ச்சி. | | | | | | | | | | | |
THE HON. SRI R. VENKATARAMAN : The Government are painfully aware of the shortages in all sections, not only in the non-agricultural quota and the Government development works quota, but in every other quota for allocation of steel. But the shortage of steel in this country is not eased, and that is the reason we are unable to get it. Sometimes the Government are obliged to purchase in the open market, because they have to balance between the relative advantages of either delaying the schemes or buying it at a higher cost. Occasionally, Government decide to buy it at a higher cost, because they do not want to delay the schemes.

SRI S. LAZAR : Sir, in view of the importance we give to industries, more especially to small-scale industries, is there any proposal to allot a higher quota of steel to small-scale industries, perhaps even by going to the extent of reducing the allotment for the other four purposes mentioned in the statement?

THE HON. SRI R. VENKATARAMAN : The question *inter se* of allocation between the various items of development is constantly under review, and whenever there is demand for greater allocation for small-scale industries and less demand for steel processing industries or agricultural or non-agricultural sector, the relative allocation would be made.

SRI K. ANBAZHAGAN : நம்முடைய மாகாணத்திற்குத் இரும்பு எஃகு வகையில் செய்யப்படுகிற பல பொருள்களுக்கு கோட்டா முறையில் அவைகள் இன்ன இன்னார்களுக்கு வழங்கப்பட





வேண்டுமென்று விதியிருக்க வேறு சில மாகாணங்களில் உள்ள சில தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் சிலவகை பொருள்கள் கோட்டா முறையில் மாகாணங்களுக்கு விநியோகிக்கப்படாத காரணத்தினால் நம் மாநிலத்திற்கு எவ்வளவு பங்கு கிடைக்க வேண்டுமோ அவை வந்து சேரவில்லையென்பது உண்மையா? அந்தத் தொழிற்சாலைகளிலிருந்து கிடைக்க வேண்டிய பங்குக்கு மத்திய அரசாங்கத்தினிடம் அமைச்சரவர்கள் விண்ணப்பிப்பார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I am unable to give details on this particular question. If a separate question is put, I will have it examined.

SRI K. B. S. MANI : சர்க்காரிலிருந்து ஒவ்வொரு சிறு கைத்தொழிலிற்கும் கொடுக்கப்படுகிற கோட்டா விகிதாசாரப்படியுள்ள கோட்டா குறிப்பிட்ட காலத்தில் கிடைக்காமல் இருக்க அதேநேரத்தில் ப்ளாக் மார்க்கட்டில் அதை விட அதிகமான அளவிற்கு கிடைப்பது சர்க்காருக்குத் தெரியுமா? அப்படித் தெரிந்திருந்தால் அவர்கள்மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன? எத்தனை பேர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?

THE HON. SRI R. VENKATARAMAN : நமக்குத் தேவையான அளவுக்கு எஃகு இல்லை என்பது எல்லோரும் அறிந்த விஷயம். ஒவ்வொருவருக்கும் தொழில் செய்வதற்காக அவர்களுக்கு சிறு கோட்டாக்களை நாம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். தொழில் செய்வதைவிட ப்ளாக் மார்க்கட்டில் விற்பது அதிக லாபமாகயிருந்தால் அவர்கள் அதை ப்ளாக் மார்க்கட்டில் விற்றுவிடுவார்கள். அதை நாம் இன்ஸ்பெக்டர்களை வைத்து கண்காணித்துக்கொண்டிருக்கிறோம். அவ்வாறு தொழில்கள் செய்வதற்காக வாங்கிய கோட்டாவைக் கொண்டு அவர்கள் தொழில் செய்யாமல் இருந்து விட்டால் அவர்கள் கோட்டாவை ரத்து செய்து விடுகிறோம். பல பேர்களுக்கு அப்படி ரத்து செய்யப்பட்டு இப்பொழுது அவர்களுக்கு கோட்டா "ரெபியூஸ்" செய்யப்பட்டிருக்கிறது.

SRI V. SANKARAN : மத்திய சர்க்கார் ராஜ்யங்களுக்கு எந்த அடிப்படையில் இந்த கோட்டாவை பிரித்துக் கொடுக்கிறது. ஸ்டாக் ஹோல்டேர்ஸ் ஓப்பன் மார்க்கட்டில் கொண்டுவராமல் இருப்பதைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன?

THE HON. SRI R. VENKATARAMAN : ஓப்பன் மார்கெட்டில் சர்க்கார் அனுமதியில்லாமல் எப்பொழுதும் விற்கக் கூடாது, என்று விதிகள் போட்டிருக்கிறோம். அறுபது நாளுக்குள் ஸ்டாக் ஹோல்டர் யாருக்கு கோட்டா கொடுத்திருக்கிறோமோ அவர்களுக்கு விற்க வேண்டும். அப்படி 60 நாளுக்குள் கோட்டா வாங்கியவர்கள் அதை பெறாவிட்டால் வெளியில் விற்கலாம் என்று இதுவரையில் விதிகள் இருந்தன. ஆனால் இப்பொழுது அவ்வாறு விற்பதற்கு முன்னால் மறுபடியும் சர்க்காரைக் கேட்டு அவர்கள் வேறு யாருக்காவது கோட்டா கொடுக்கிறார்கள். இப்பொழுது விதிகள் அப்படி இருக்கின்றன.

[11th March 1960

SRI S. NAGARAJA MONIGAR : திட்டக் கமிஷனோ மத்திய அரசாங்கமோ செய்யும் ஆராய்ச்சிகளிலும், உத்தரவுகளிலும் ராஜ்யங்களுக்கு தேவைப்படும் இரும்பை சரியாக நிர்ணயிக்க முடியவில்லை, அவர்கள் திட்டமிட்டதற்கு மேல் நமது தேவை பெருமளவு நாம் முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கிறோமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நாட்டில் பற்றுக்குறை இருக்கிறது, அதுதான் காரணம்.

*Co-operative farming*

* 280 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) தேயிலை, காப்பி தோட்டங்களிலே வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கூட்டுறவு பண்ணைக்கு விவசாய நிலங்கள் தேவை என்று தோட்டத் தொழிலாளர் சங்கங்கள் அரசாங்கத்திற்கு விண்ணப்பித்திருக்கிறார்களா ?

(ஆ) அவ்வாறு விண்ணப்பித்திருப்பின், அரசாங்கத்தாரால் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கையின் விவரங்கள் யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI P. G. MANICKAM : மேற்கண்ட தொழிலாளிகளின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பழவகைகள், காய்கறிகள் பயிரிட சர்க்கார் தரிசு நிலங்களை அவர்களுக்குக் கொடுப்பதுபற்றி அரசாங்கம் கவனம் செலுத்துமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த விதமாக ஏதாவது மனுக்கள் வந்தால் அது பரிசீலனை செய்யப்படும்.

* 281 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்ச அவர்கள் அயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

கோவில் நிலங்கள் சம்மந்தமான Co-operative Tenants Farming Societies- க்கு அரசாங்க மூலமாக என்னென்ன உதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (i) Financial assistance for the purchase of bulls and agricultural implements;

(ii) Free services of Co-operative and Agricultural Department's staff; and

(iii) Guarantee to the District Co-operative Central Banks for the repayment of loans taken by the societies for cultivation expenses.

SRI P. G. MANICKAM : கூட்டுறவு பண்ணை நிலங்களில் விளையும் வெள்ளாமையையே சொத்து மதிப்பாகக் கணக்கிட்டு அவர்களின் விவசாயத்திற்குத் தேவையான தொகை கொடுப்பது பற்றி சர்க்கார் பரிசீலனை செய்யுமா?



11th March 1960]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விஷயங்கள் எல்லாம் அப்போதைக்கப்போது பரிசீலனை செய்யப்பட்டுத்தான் வருகிறது.

SRI K. B. S. MANI : அரசாங்கம் இந்த கூட்டுறவு பண்ணைகளுக்கு செய்கிற உதவியைக்கொண்டு நல்ல அபிவிருத்தி அடைகிறது என்று தெரிந்து மொத்தக் குத்தகைதார்கள், அதையொட்டிய நிலச் சொந்தக்காரர்களையும், தங்கள் சொந்தக்காரர்களையும் வைத்து கூட்டுறவுப் பண்ணைகள் அமைப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படி ஏதாவது தகவல்கள் வந்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி ஒன்றும் என்னிடம் தகவல் இல்லை.

* 282 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have examined the report on the working of the Valandur Co-operative Joint Farming Society, Madurai;

(*b*) the reason for the failure of the society; and

(*c*) whether any remedy has been suggested to rectify the defect?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) In May 1957, the Government obtained a report on the working of the Valandur Joint Farming Co-operative Society from the Collector of Madurai. The report showed that the Society had to encounter certain initial difficulties. A further report received from the Registrar of Co-operative Societies in March 1959 has revealed that the total extent of land cultivated by the Society decreased during the second and third years, as some of the members have withdrawn from the society.

(*b*) The reasons for the decrease in acreage are (i) dissatisfaction among the members of the society over the rate of ownership dividend paid to them (ii) a misconception of the implications of joint farming and (iii) a feeling that the society is an undertaking run by Government.

(*c*) Yes. The rate of ownership dividend payable to members has been increased from 60 per cent to 90 per cent of the net income of the society. As a result of publicity and persuasion by departmental officials, the members have begun to show a better appreciation of the benefits of co-operative farming. The first set of directors which was nominated by the Registrar of Co-operative Societies consisted of 5 officials and 4 non-officials. It has been replaced by a fresh Board in which out of 9 directors only two are officials.

SRI N. K. PALANISAMI : ஜாயின்ட் கோவாப்பரேடிவ் சொஸைட்டி சர்க்காரிடமிருந்து கடன் வாங்குவதற்காக மட்டும் ஏற்படுத்தப்படுகிறது என்ற ஒரு முறையால்தான் இம்மாதிரியான ஒரு "டிபெக்ட்" அதில் ஏற்பட்டிருக்கிறது. அப்படியானால்

அதற்குப் பதிலாக டிராக்டர்கள் போன்ற மெஷினரிகளைக் கொடுத்து அபிவிருத்தி செய்வதனால் அவை நல்ல முறையில் வேலை செய்யும் என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : அங்கத்தினர் அவர்களின் யோசனைகளை சர்க்காருக்கு எழுதியனுப்பினால் அதைப்பற்றி பரிசீலனை செய்யப்படும்.

SRI N. R. THIAGARAJAN : கூட்டுறவு அல்லது கூட்டுறவு பண்ணைகள் எல்லாம் நடத்தப்படுவது வெறும் லாப நோக்கத்துடன் மட்டுமல்ல என்பதும் அதில் கிடைப்பதை அதிலுள்ளவர்களுக்கு பங்கிட்டு கொடுப்பதுதான் என்பதை சர்க்கார் விளக்குமா? அதோடு கூட்டுறவு பண்ணைகள் நடத்துவது உபயோகமற்றது என்று சொல்லும் பயித்தியங்கள் இதை நன்றாக உணர்ந்து கொள்வதற்காக தங்கள் கூட்டுறவு பண்ணைகளில் விளையும் எலுமிச்சம் பழங்களையாவது சப்ளை செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN : எந்த விஷயத்திலும் அபிப்பிராயப் பேதம் இருப்பது இயற்கை. கூட்டுறவு பண்ணைகள் மூலம் லாபமடைபவர்கள் இந்த முறை வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சர்க்காருக்கு வந்துகொண்டிருக்கும் அப்ளிகேஷன்களைப் பார்த்தால் பொதுவாக இதில் நம்பிக்கை இல்லை என்று சொல்லுவதற்கில்லை.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், பாயிண்ட் ஆப் ஆர்டர், கனம் அங்கத்தினர் பழனிசாமி அவர்கள் கூட்டுறவு பண்ணை முறை தோல்வி அடைந்திருப்பதற்கு காரணம் என்ன என்று கேள்வி கேட்டிருக்கிறார். ஆனால் இவ்விதம் கருதுபவர்கள் "பயித்தியங்கள்" என்று குறிப்பிடுவது பழனிசாமி அவர்களைத் தான் பயித்தியம் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகிறார்களா? அப்படியானால் இது முறையாகுமா?

MR. SPEAKER : இதில் பாயிண்ட் ஆப் ஆர்டருக்கு ஒன்றுமில்லை.

* 283 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have received any communication from the Central Government in the matter of co-operative farming; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) In July 1957 the Government of India sent to this Government the report of the Indian Delegation to China on Agrarian Co-operatives and invited the views of this Government on the recommendations contained in the report. Copies of the report are available in the library of the Legislature. In May 1959 the Government of India informed us of their decision to set up a working group on co-operative farming which has since visited this State. No other important Communication on the subject has been received.





SRI S. NAGARAJA MONIGAR : ஸார், விவசாயத்தை கூட்டுறவு முறையில் அபிவிருத்தி செய்வது எவ்விதம் என்பதைப் பற்றியுள்ள இம்மாதிரிப்பட்ட தகவல்களை தரக்கூடிய ரிப்போர்ட்டை ஒவ்வொரு அங்கத்தினருக்கும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

MR. SPEAKER : அதுதான் லைப்ரரியில் வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்களே, அங்கத்தினர் போய் படித்துக் கொள்ள வேண்டும்.

SRI S. NAGARAJA MONIGAR : அதை தனித் தனியாக இந்த சபையிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினருக்கும் கொடுக்க முடியுமா?

MR. SPEAKER : கொடுக்க முடியாது என்பதற்காகத்தான் லைப்ரரியில் வைக்கப்பட்டிருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவதாக இருந்தால் எனக்கு ஆட்சேபனை ஒன்றுமில்லை.

SRI M. P. SUBRAMANIAM : சைனாவுக்கு போய்வந்த டெலிகேஷன் கொடுத்த அறிக்கையின்மீது அரசாங்கம் என்ன முடிவு எடுத்திருக்கிறது? அவற்றில் எதையெல்லாம் அரசாங்கம் கையாள்வது என்று தீர்மானித்திருக்கிறார்கள்?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒருவர் சொல்லுகின்ற யோசனைகளை எல்லாம் அரசாங்கம் உடனடியாக ஏற்றுக்கொள்ள முடியாது. அவற்றையெல்லாம் பரிசீலனை செய்யவேண்டும். அதில் நமக்கு எதில் சாத்தியமாயிருக்கிறதோ அதை எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக ஒரு "வொர்க்கிங் க்ரூப்" திரு. நிஜலிங்கப்பா அவர்கள் தலைமையில் வேலை செய்து, அது தன்னுடைய யதாஸ்தையும் கொடுத்து விட்டது.

*Death of a worker in Bharat Pulverising Company, Limited*

* 284 Q.—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there was a death of a worker named M. Kannankutty employed in Bharat Pulverising Company, Limited, Tiruvottiyur, Madras, on 14th May 1959 as a result of his having been posted to work in a room containing poisonous powder by name 'Parathion';

(b) the circumstances under which the death occurred;

(c) whether there was a post-mortem examination and with what results; and

(d) whether any compensation has been paid to the worker's family?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) It is reported that on 14th May 1959 the deceased worker was packing in small containers a liquid called "Paramar 50" in the Bharat Pulverising Mills (Private) Ltd., Tiruvottiyur,

[11th March 1960

that he took tea brought in a bottle at about 3 p.m., on that day, along with two co-workers and that he complained of chest pain and later vomitted. He was admitted in the Stanley Hospital, Madras, for suspected poisoning and he died at about 8-45 p.m., on that day.

(c) Yes, Sir. The post-mortem examination revealed that the worker died owing to the intake of poison called 'Parathion'.

(d) Yes Sir. The employer deposited a compensation amount of Rs. 1,800 and the Commissioner for Workmen's Compensation has distributed it to the dependants of the deceased worker on 16—10—1959.

SRI S. PAKKIRISAMI PILLAI : அரசாங்கத்திற்கு கிடைத்திருக்கும் தகவல் உண்மையில்லாதது. இந்த தொழிலாளி இந்த விஷமுள்ள பவுடர் உள்ள இடத்தில் பாதுகாப்பு இல்லாமல் நிர்பந்தமாக வேலை செய்ய சொன்னதின் காரணமாகத்தான் இந்த தொழிலாளி இறந்திருக்கிறான். இது அத்தனை பேருக்கும் தெரியும். ஆகவே இந்த விஷயத்தை புனராலோசனை செய்து சரிவர விசாரணை செய்து அதன்பேரில் தகுந்த தண்டனையை கம்பெனி அதிகாரிகளுக்கு கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN : பாக்டரி சட்டத்தின்படி பாஷாணங்கள் வைத்திருக்கிற இடங்களில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு பாதுகாப்புகள் கொடுக்கவேண்டும் என்று விதிகள் இருக்கின்றன. உதாரணமாக கைகளுக்கு gloves மூச்சு விடுவதற்கு தகுந்த கருவிகள் முதலியவைகள் கொடுக்க வேண்டும் என்று விதிகள் இருக்கின்றன. அதுபோன்று கண்ணுக்கு கண்ணாடிகள் கொடுக்கவேண்டும் என்றும் இருக்கிறது. ஆனால் இதைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு கம்ப்ளெயின்ட் எழுதிக் கொடுத்தால் அதன் பேரில் விசாரணை செய்து பாக்டரி சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

*Employment Market Information Unit*

* 285 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Employment Market Information Unit has completed the second round of employment enquiry in this State; and

(b) if so, the details of the unemployed persons in the State?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The Employment Market Information Unit has completed seven quarterly rounds of employment surveys in this State up to the quarter ended 30th September 1959.

(b) The Scheme of Collection of Employment Market Information relates to employment survey only and the collection of particulars of unemployed does not come under its scope.

The number of persons unemployed as per Live Registers of Employment Offices as on 31st January 1960 is 124,512.



11th March 1960]

SRI N. K. PALANISAMI : ஸார், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 80 லட்சம் பேர்களுக்கு வேலை கொடுப்பதற்கு திட்டங்கள் இருந்த போதிலும் சாதாரணமாக ஒரு எம்ப்ளாய் மெண்ட் எக்ஸ்சேன்சை எடுத்துக்கொண்டால் அதிகமான பேர்கள் வேலை கிடைக்காமல் இருந்து கொண்டிருக்கின்றார்கள். இதற்கு காரணம் என்ன? இதை தவிர்ப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : இன்றைக்கு நம்முடைய ராஜ்யத்தில் சற்றேறக்குறைய 2 லட்சத்தி 80 ஆயிரம் பேர்களுக்கு இரண்டாவது திட்டத்தில் வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால் நமது ராஜ்யத்தில் வேலைவாய்ப்பு இல்லாமல் சுமார் ஐந்து லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அதனால்தான் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேன்சில் அதிகமான பேர்கள் ரெஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படுகிறது.

*Unemployment*

* 286 Q.—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Industries be pleased to lay on the table of the House a statement showing:

(i) the percentage of the population in the State who are unemployed;

(ii) their number;

(iii) the Graduates among them; and

(iv) S.S.L.C. and above; and to state—

(a) the steps taken to give them employment; and

(b) whether there is any proposal to give unemployment allowance to the unemployed?

THE HON. SRI R. VENKATARAMAN : (i) to (iv) Particulars are not available.

(a) Free employment assistance is given by the Employment Officers in the State. Employment seekers who register their names with the Employment offices are referred to employers when suitable vacancies are notified by the employers. One of the objects of the Five-Year Plan is to provide employment opportunities to as many people as possible.

(b) No, Sir.

SRI S. LAZAR : ஸார், தனியாக புள்ளி விவரங்கள் இல்லை என்று சொன்னாலும்கூட பெருவாரியான அளவில் இந்தப் பிரச்னை இருந்துகொண்டிருக்கிறது. இதைத் தீர்ப்பதற்கு தனியாக ஏதாவது முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகள் எல்லாம் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் அதிகமான அளவில் வேலை வாய்ப்புகள் கிடைக்க

[11th March 1960

வேண்டும் என்பதுதான். அதன்படி சர்க்கார் புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கும் புதிய தொழிற்சாலைகளை அமைப்பதற்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுத்தும் வருகிறது. இது தவிர "அன்எம்ப்ளாய்மென்ட் இன்ஷூரன்ஸ்" செய்யும் விஷயத்தில் நமது நாட்டில் அதிலும் குறிப்பாக நமது ராஜ்யத்தில் இப்போது இது இயலாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI A. A. RASHEED: May I know whether there is any proposal to restrict the admission of students into the Universities with a view to reducing the unemployment among the graduates, Sir?

MR. SPEAKER: That will not come under this question. Though the hon. Member has cleverly connected it with his last part of the question, it has no relation to the main question. So, I shall not allow the supplementary question. If the hon. Member wants, he can put a separate question.

SRI M. P. SUBRAMANIAM: கனம் அமைச்சர் அவர்கள் இப்போதுள்ள திட்டத்தின்படி சுமார் இரண்டரை லட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று சொன்னார்கள். ஆனால் திட்ட ஆரம்பத்தில் பத்து லட்சம் பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்று சொல்லப்பட்டது உண்மையல்லவா? அப்படியானால் இப்போதுள்ள திட்டப்படி பார்த்தால் நான்கில் ஒரு பங்கு பேர்களுக்குத்தானே வேலை வாய்ப்பு கிடைக்கிறது என்பது உண்மையல்லவா?

THE HON. SRI R. VENKATARAMAN: பத்து லட்சம் பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்று சொல்லப்பட்டது என்கிற விபரம் எனக்கு இப்போது தெரியாது. இதைப்பற்றி தனியாக கேள்வி போட்டால் விபரமான பதில் சொல்லுகிறேன்.

SRI A. GOVINDASAMY: எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்தும் எத்தனையோ ஆண்டுகள் வேலை கிடைக்காமல் இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா? அப்படியானால், பதிவு செய்துக்கொண்ட ஒரு வருடத்திற்குள் வேலை கிடைப்பதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: வேலை உடனடியாக கிடைப்பதில்லை என்பது சர்க்காருக்கு மட்டும் அல்ல, இங்குள்ள எல்லா அங்கத்தினர்களுக்கும் தெரியும். அதை தவிர்ப்பதற்கு வேலை வசதிகளை பெருக்குவதற்கு வேண்டிய தொழில்களை பெருக்குவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. வேலை வசதிகள் அதிகரித்தால்தான் ஒரு ஆண்டுக்குள் வேலை கிடைக்கச் செய்ய முடியும்.

SRI N. MARUDACHALAM: படித்து பட்டம் பெற்ற மாணவர்களில் வேலை இல்லாமல் தவிக்கும் ஹரிஜன மாணவர்கள் எத்தனை பேர் என்றுக்கூற முடியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: இதற்கு தனிக்கேள்வி போடவேண்டும்.



11th March 1960]

SRI T. S. RAMASWAMI: வேலையில்லாமல் இருப்பவர்களுடைய புள்ளி விவரங்கள் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். நமது ராஜ்ஜியத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் "ஸ்டாடிஸ்டிக்கல் டிபார்ட்மென்ட்"னால் இந்த புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: I am willing to give some information of sample survey that was conducted. Otherwise, to collect all this information will not be worth-while and it will entail enormous amount of time and energy which is not commensurate with the purpose which we want to serve. So far as the City of Madras is concerned there was an enquiry and an economic survey was conducted by the University during the years 1954-57. That survey covered a 5 per cent sample or 13,479 (households) approximately; as per that, the percentage of the unemployed persons to the total population in the City was estimated to be 3.2, which the percentage of the unemployed persons to the economically active population (i.e., total population minus children below 15 years, and adults above 55 years) was estimated as 5.75. Taking into account the household workers contributing to disguised unemployed; the estimate of the percentage of the unemployed in the City was raised to 9.5.

### *"Kulamkorvai" cultivation* 9.00 a.m.

* 287 Q.—SRI M. P. SUBRAMANIAM (on behalf of SRI K. RAMACHANDRAN): Will the Hon. the Minister for Revenue be pleased to state the decision taken by the Government in the matter of recognizing the "Kulamkorvai" (foreshore) cultivation in the erstwhile Zamindari areas of Ramanathapuram district?

THE HON. SRI M. A. MANICKAVELU: The Government have decided to permit the cultivation of "Kulamkorvai" lands in the areas mentioned during off-season wherever possible, subject to certain conditions. The Board of Revenue has been asked to submit, in consultation with the Chief Engineer for Irrigation, a draft of instructions to be issued regarding the grant of annual permits in respect of such cultivation during the off-season. The Board's report is awaited.

SRI K. SATTANATHA KARAYALAR: May I know the conditions under which they are permitted to cultivate?

THE HON. SRI M. A. MANICKAVELU: One of the conditions is this. If the submersion is not for more than two or three weeks, it can be permitted. If it is for a longer period, then it cannot be done.

### *Import of small car components and spare parts*

* 288 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have recommended to the Union Government for increased import of small car components and spare parts to overcome the shortage of small cars?

THE HON. SRI R. VENKATARAMAN: No, Sir.

[11th March 1960

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that spare parts are sold at prices 150 to 200 per cent more than the imported price? Will the Government recommend to the Union Government at least to allow the import of spare parts for motor cars and buses?

THE HON. SRI R. VENKATARAMAN : In the matter of import of spare parts, there is an Import and Export Advisory Council which the Union Government consult. Representations should be made by that Council to the Union Government in this regard. The State Government do not make any representation in these matters.

MR. SPEAKER : Question No. 289.

THE HON. SRI R. VENKATARAMAN : May I request that this question may be taken up next week? The answer was prepared on 22nd December 1959 and it is not up-to-date.

MR. SPEAKER : The question is postponed.

*Garages in the Government House Estate*

* 290 *Q.*—SRI R. SRINIVASA IYER : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the number of Garages in the Government House Estate, Mount Road, and the rent collected for each and the terms of occupation thereof;

(*b*) whether there are any cases of unauthorised occupation of these Garages;

(*c*) whether rent has been collected up-to-date;

(*d*) how many of these Garages are vacant at present; and

(*e*) whether all the Garages are fit for occupation?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The number of Garages in the Government Estate is 19; The standard rent for each Garage is Rs. 8 per mensem. There are no specific terms of occupation except payment of rent, or rent free as the case may be.

(*b*) No, Sir.

(*c*) Yes, Sir, except in the case of Sri D. K. Raju, Ex-M.L.A. and legal action is being taken against him in this regard by the Executive Engineer, South Presidency Division.

(*d*) 3 (Three) of which one has ordered to be allotted to the hon. Member (Sri R. Srinivasa Iyer).

(*e*) No, Sir. Two Garages are under repairs.

SRI R. SRINIVASA IYER : இந்த சர்க்கார் காரெஜ்களில் உத்தியோகஸ்தர்கள் அல்லாத, எம். எல். ஏ- க்களல்லாத நபர்கள் எத்தனை காரெஜ்களை ஆக்குபை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரியுமா?



11th March 1960]

THE HON. SRI P. KAKKAN : இதற்குத் தனியாக ஒரு கேள்வி போட்டால் சொல்லுகிறேன்.

MR. SPEAKER : அடுத்த கேள்வி 291. கனம் அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்கு நாளை பதிலளிப்பதாகத் தெரிவித்தார்கள். ஆகையால் இந்தக் கேள்வியை நாளை எடுத்துக் கொள்கிறேன்.

*Bus permits for Ceylon repatriates*

* 292 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இலங்கை அகதிகளிடமிருந்து பஸ் ரூட் சம்பந்தமாக மகஜர் ஏதேனும் வந்ததா?

(ஆ) அதன்பேரில் என்ன நடவடிக்கை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Under the system in vogue in grant of bus permits, Ceylon repatriates would be given preference by the Regional Transport Authorities, if they apply for permits to ply buses on short routes covering a distance of 15 miles, after forming themselves into a co-operative society, or a registered public limited company, or a registered private company.

Under this system one mark is assigned to applicants for possession of business experience in motor transport. Government have ordered that for this purpose, experience in transport business conducted in Ceylon by a repatriate from Ceylon be treated as business conducted by him in India.

SRI N. R. THIAGARAJAN : அகதிகள் என்றால் அவர்கள் யார்? எத்தகையவர்களை அகதிகள் என்று டிக்ளேர் செய்யப்படுகிறது? ஒரு அகதிக்கு 50,000 ரூபாய் கொடுத்து பஸ் வாங்கி ஓட்ட முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : "ரிபாட்ரியேட்" என்பது ஆங்கில வார்த்தை. "ரெப்யூஜி" என்றால் அகதி. சிலோனிலிருந்து வந்தவர்கள் "ரீபார்ட்ரியேட்ஸ்". அவர்களுடைய வாழ்க்கை நிமித்தம் சில வசதிகள்—சில சலுகைகள் கொடுக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கை. நான் அளித்த விடை அவர்கள் சேர்ந்து கூட்டுச் சங்கமோ அல்லது கம்பெனியோ வைத்துக் கொண்டால் அவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கப்படும் என்பதுதான்.

SRI A. VEDARATHNAM : இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் இந்த மாதிரி சங்கம் அமைத்துக் கொண்டு அரசாங்கத்திற்கு ஏதாவது விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறார்களா? அத்தகைய விண்ணப்பங்களை கவனித்து அவர்களுக்கு ஏதாவது உதவி செய்யப்பட்டிருக்கிறதா?

[11th March 1960

THE HON. SRI M. BHAKTAVATSALAM: 15 மைல் தூரம் வரையில் பஸ் நடத்துவதற்கு ஒரு கூட்டுறவு சங்கம் அல்லது கம்பெனி வைத்துக்கொண்டால் சலுகை கொடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. அந்த மாதிரி விண்ணப்பம் வந்தால் அனுதாபத்துடன் கவனிக்கப்படும்.

SRI A. V. P. ASAITHAMBI: இலங்கையிலிருந்து வந்தவர்களை அங்கு இருக்கமுடியாமல் வந்தவர்கள் என்று அரசாங்கம் கருதுகிறதா அல்லது அகதிகளாகவே கருதுகிறதா? இல்லையென்றால் அகதிகளாகக் கருதுவதில் இடையூறாக என்ன இருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அகதிகள் என்பதற்கு என்ன "டெபனிஷன்" என்பது தெரியாது. சிலோனிலிருந்து வந்தவர்கள்; அங்கு வாழ்க்கை நடத்த முடியாமல் இங்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்குச் சில வசதிகள்—சில சலுகைகள்—கொடுக்க வேண்டியிருக்கிறது. சலுகைகள் கொடுக்கப்படுகிறது.

SRI S. NAGARAJA MONIGAR: பஸ் ரூட் பர்மிட்டுகள் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருப்பதிலிருந்து பஸ்கள் வைத்து நடத்துவது எப்போதும் மிகுந்த லாபமுள்ளதாக இருக்கும் என்பது அர்த்தமா? அப்படியில்லாது நஷ்டம் வந்தால் அகதியாக வந்தவர்கள் என்ன கதியாவார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இவ்வாறு சிலோனிலிருந்து வந்தவர்கள் பஸ் ரூட் பர்மிட்டுகள் மட்டும் கேட்கவில்லை. மற்ற தொழில்கள் வைத்து நடத்துவதற்குக்கூட வசதிகள் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

SRI S. LAZAR: இவர்களுக்கு பஸ் ரூட் பர்மிட்டுகள் கொடுப்பதில் சலுகை கொடுப்பது போல், ரைஸ் மில் லைசென்ஸ் சினிமா லைசென்ஸ் போன்ற துறைகளிலும் இது போன்ற தனிப்பட்ட சலுகைகள் கொடுக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நான் முன்பே சொன்னேன். வேறு தொழில்களில் ஈடுபடுவதிலும் கூட சில வசதிகள், சில சலுகைகள் இவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது என்று.

*Mudukulathur out agency*

* 293 *Q.*—SRI K. ANBAZHAGAN: Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any demand from the public of Mudukulathur for a Southern Railway out agency for the benefit of the people in that area?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Our information is that there is a demand but that there is no justification for it.

SRI K. ANBZHAGAN: முதுகுளத்தூர் வட்டாரம் மிகவும் பின் தங்கியிருக்கிற காரணத்தினால், அங்கு போக்குவரத்து வசதி மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தினால், தென் பிராந்திய ரெயில்வே நிர்வாகத்தில் அங்கு ஒரு "அவுட்-ஏஜென்சி" ஏற்படுத்



11th March 1960]

தினால் அங்குள்ள மக்களுக்கு வசதியாக இருக்கும் என்கிற காரணத்தினால் நமது சென்னை அரசாங்கம் அதற்குச் சிபாரிசு செய்து எழுதுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதைப்பற்றி தென் பிராந்திய இரெயில்வேதான் முடிவு செய்யவேண்டும். அவர்கள் இங்கே அவுட் ஏஜென்சி வைக்கவேண்டுமென்று கருதவில்லை.

*Repatriates from Malaya*

* 294 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மலேயா நாட்டிலிருந்து இதுவரை அகதிகளாக இம்மாநிலத்திற்கு வந்துள்ளவர்களின் தொகை என்ன?

(ஆ) அவர்களின் புனர்வாழ்விற்காக இம்மாநில சர்க்கார் என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளனர்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) 40,674 evacuees including those from Malaya have been given financial assistance in this State. The number of evacuees from Malaya alone is not known.

(*b*) Under the scheme formulated by the Government of India, financial assistance was given to these evacuees in the form of—

(i) monthly maintenance allowance,

(ii) allowance for school education,

(iii) advance for the purchase of clothing, medicine, etc.,

(iv) capital advance for starting business etc., and

(v) advance for typewriting, shorthand, etc.

SRI S. M. ANNAMALAI: சார், மலேயாவிலுள்ள மக்களுக்கு பிரஜா உரிமை கொடுக்கப்படாத காரணத்தினால் இந்த நாட்டுக்கு திருப்பப்படுகிறார்கள். மலேயா, சிலோன் போன்ற பிற நாடுகளிலிருந்து இப்படியே வந்துக்கொண்டிருந்தால் நம் மாநிலம் பாதிக்கப்படாதா? இது விஷயத்தில் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தி ஏதாகிலும் ஆலோசனை கூறியிருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: வேறு பிரச்னை. கேள்வி பொதுவாகக் கேட்கப்பட்டிருக்கிறது. இதற்கு என்ன விடை அளிப்பது என்று தெரியவில்லை.

SRI A. V. P. ASAITHAMBI: மலேயா, திபெத் போன்ற பகுதிகளிலிருந்து வந்தவர்களை அகதிகளாக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் இலங்கையிலிருந்து வந்தவர்களை அகதிகளாக ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நான் முன்பே சொன்னேன். அகதிகள் என்றால் சலுகைகள், வசதிகள் அளிக்கப்படுவதற்கு பதில் என்ன வேண்டுமென்று கருதுகிறார்கள் என்று தெரியவில்லை. சிலோனிலிருந்து வந்தவர்களுக்கும் சில சலுகைகள் கொடுக்கப்பட்டுத்தான் வருகிறது.

[11th March 1960

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, may I make the difference clear? அகதிகள் என்று சொல்லக்கூடியவர்கள் வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள். அங்கு இருக்கக்கூடிய பல நிர்ப்பந்தங்கள் காரணமாக அவர்கள் நம் நாட்டுக்கு வரும்பொழுது அவர்கள் அகதிகள் என ஆகிறார்கள். நம் நாட்டினரே வெளிநாட்டுக்குச் சென்று அங்கு வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்துவிட்டு பிறகு அங்கே இருக்க முடியாமல் நம் நாட்டுக்குத் திரும்பிவரும்பொழுது அவர்கள் நம் நாட்டினராக ஆகிறார்களே தவிர அவர்களை அகதிகள் என்று ஒதுக்கி வைக்க முடியாது; அவர்கள் நம் நாட்டினராகவே இங்கு வருகிறார்கள். இது தான் வித்தியாசம்.

SRI P. G. MANICKAM : மலேயாவில் லட்சக்கணக்கான தமிழர்கள் ரப்பர் தோட்டங்களில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு பிரஜா உரிமை கிடைக்காமல் கஷ்டப்படுவதாக பத்திரிகைகளில் அடிக்கடி செய்திகள் வருகின்றன. அவ்வாறு பிரஜா உரிமை இல்லாமல் எத்தனை தமிழர்கள் அங்கே கஷ்டப்படுகிறார்கள் என்ற புள்ளிவிவரத்தைச் சேகரிக்க வேண்டுமென்று சென்னை சர்க்கார் மத்திய சர்க்காருக்கு அறிவிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மலேயாவிலிருந்து இங்கே திரும்பி வரும் தமிழர்கள் இந்த நாட்டிலிருந்து அங்கே போனவர்கள்தான். சிலர் அங்கேயே தங்கி அங்கு பிரஜா உரிமை கேட்டிருக்கிறார்கள். அங்கு பிரஜா உரிமை பெறாதவர்கள் இந்த நாட்டுக்குத் திரும்பி வருகிறார்கள். அவர்களுடைய பிரச்னை இப்போது கவனிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் எத்தனை பேர்கள் என்ற புள்ளிவிவரம் இப்போது என்னிடம் இல்லை.

SRI M. P. SUBRAMANIAM : நம் நாட்டிலேயே இருந்து அந்நாட்டுக்குச் சென்று பிறகு அங்கிருந்து இங்கே திரும்பி வருகிறவர்கள் எல்லோரும் நம் நாட்டுப் பிரஜைகள், அவர்களை நாம் அகதிகளாக பாவிக்க முடியாது என்று கனம் நிதி அமைச்சர் சொன்னார். அப்படியானால் சிலோனில் இருப்பவர்கள் எல்லோரும் உண்மையிலேயே நம் பிரஜைகள் என்று கனம் நிதி அமைச்சர் தெரிவிக்கிறாரா? சிலோனில் அரசாங்கத்தார் அவர்களை இங்கே அனுப்பிக்கொண்டு இருப்பதால் என்ன நியாயம் இருக்கிறது என்று அவர்களுக்கு கனம் நிதி அமைச்சர் மறைமுகமாக 'ஸஜெஸ்ட்' பண்ணுகிறாரா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்நாட்டிலிருந்து இங்கே அனுப்பப்படுபவர்கள் இந்திய குடிமக்களாக இருந்தால் தான் அவர்களை இங்கே எடுத்துக்கொள்வதற்கு நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம். இந்தியக் குடிமக்களா இல்லையா என்ற சந்தேகத்திற்கு உட்பட்டிருப்பவர்களை, அதாவது, 'ஸ்டேட்லெஸ் பெர்ஸன்ஸை' எடுத்துக்கொள்ள நாம் ஒப்புக்கொள்ளவில்லை; எனவே, அப்படிப்பட்ட ஒருவரும் இங்கே அனுப்பப்படுவதில்லை. இப்போது இங்கே அனுப்பப்படுபவர்கள், பாஸ்போர்ட் வாங்கிக்கொண்டு சென்று அங்கே வாழ்க்கை நடத்திய பிறகு, பாஸ்போர்டின் காலம் முடிந்தவுடன் இங்கே திருப்பி அனுப்பப்படுகிற



11th March 1960]

வர்கள் ஆவார்கள். இதில் உள்ள சிக்கலைப் புரிந்துக்கொண்ட பிறகே, பேசுவதோ கேள்வி போடுவதோ நல்லது. எதையோ யூகித்துக்கொண்டு பேசினால் அதனால் கஷ்டம்தான் ஏற்படும்.

*Bus service in Madurai City*

* 295 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether any Special Officer was deputed to examine whether the present arrangements of bus service in Madurai City are adequate;

(*b*) when the report of the Officer was received by the Government; and

(*c*) the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The Government have constituted a Planning and Development Wing under the Transport Commissioner. A Regional Transport Officer has been appointed to examine the adequacy or otherwise of the bus services in Madras State. This Officer is now engaged in examining the position of city services in Madurai.

(*b*) & (*c*) His report has not yet been received.

*Government offices at Tiruchirappalli*

* 296 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the total amount paid by the Government in 1958-59 so far by way of rent to the various Government offices in the rented buildings at Tiruchirappalli;

(*b*) the number of buildings in the Old Hospital premises that are not used for the sub-jail at Tiruchirappalli;

(*c*) whether there is any proposal before the Government to shift some of the Government offices in rented buildings to these buildings in the Old Hospital premises; and

(*d*) whether there is also a proposal before the Government to put up special buildings at one and the same place to house all Government offices that are now housed in rented buildings?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Rs. 96,216 per annum.

(*b*) Eight.
(*c*) No, Sir.
(*d*) No, Sir.

*Curing of Hides and Skins*

* 297 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்திலே தோல் பதனிடுவதற்கு தேவையான பட்டைகள் கிடைக்கக்கூடிய மரங்கள் எந்தெந்த இடங்களிலே இருக்கின்றன?

[11th March 1960

(ஆ) எத்தனை ரூபாய் மதிப்புள்ள பட்டைகள் அந்நிய தேசங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன?

(இ) மேற்கண்ட பட்டைகள் கிடைக்கக்கூடிய மரங்களை உற்பத்தி செய்வதற்காக அரசாங்கத்தாரால் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் யாவை?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) The trees with barks used in tanning industry are grown in Ramanathapuram, Madurai, Tiruchirappalli, Salem, Coimbatore and the Nilgiris districts.

(b) About 25 lakhs of rupees worth of barks are being imported from foreign countries every year.

(c) The Government have taken steps to increase the growth of wattle on the Nilgiris and Kodaikanal hills.

SRI P. G. MANICKAM: கனம் அமைச்சர் குறிப்பிட்ட இடங்களில் எத்தனை ஏக்கர் நிலப்பரப்பில் இந்த மரங்கள் வைத்து வளர்க்கப்படுகின்றன? இந்த மரங்களை இன்னும் அதிகமாக வைத்து வளர்ப்பதற்கான திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறதா?

MR. SPEAKER: இது சம்பந்தமாக நேற்று கனம் நிதி அமைச்சர் தமது பட்ஜெட் உரையில் குறிப்பிட்டிருக்கிறாரே.

THE HON. SRI R. VENKATARAMAN: இந்தக் கேள்வியை கனம் விவசாய மந்திரியிடம் போடவேண்டும்.

MR. SPEAKER: I think the Hon. Minister in his Budget speech yesterday stated how many acres of wattle are being grown. Did he not?

THE HON. SRI C. SUBRAMANIAM: Yes, Sir.

SRI A. A. RASHEED: What is the total quantity of wattle bark available in our State?

THE HON. SRI R. VENKATARAMAN: It is not possible to estimate what is available in the State. The requirements of the country as a whole have been calculated and the deficit is imported.

### *Beedi industry*

* 298 Q.—SRI S. PAKKIRISAMI PILLAI: Will the Hon. the Minister for Industries be pleased to state the details of the decisions finally arrived at the Conference of the representatives of the managements of the Beedi Industry?

THE HON. SRI R. VENKATARAMAN: The Conference was only held by the Commissioner of Labour to ascertain what arrangements the employers were making to take out licences and to conform to the other provisions of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act, 1958. No decisions were taken at the Conference.



11th March 1960]

SRI S. PAKKIRISAMI PILLAI: சட்டத்தின் பயனைத் தொழிலாளிகள் அனுபவிப்பதன் பொருட்டு இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதை இன்னும் ஆறு மாத காலத்திற்குத் தள்ளிவைத்திருக்கிறார்களே, அதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN இப்போதே இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தால் பீடித் தொழிலை மூடிவிடப்போவதாக பீடித்தொழில் முதலாளிகள் எல்லோரிடத்திலும் எச்சரிக்கை செய்துகொண்டிருக்கிறார்கள். மேலும், இவர்கள் அண்டையிலுள்ள ராஜ்யங்களுக்குச் சென்று அங்கு தொழில் நடத்த முயற்சி செய்கிறார்கள். பீடித் தொழிலில் பெரிய இயந்திரங்கள் போன்றவை இல்லாமலிருப்பதால் அவ்வாறு செய்வது சுலபமாக இருக்கிறது. குடிசையை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குத் தூக்கிச்செல்வது சுலபமாக இருக்கிறது. இதையெல்லாம் கவனித்து, எல்லா ராஜ்யங்களிலும் ஒரேமாதிரியான சட்டத்தைக் கொண்டுவருவதற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. தென் பிராந்திய தொழில் மந்திரிகள் மகாநாட்டில், ஆந்திரா, கேரளம், மைசூர் ஆகிய ராஜ்யங்களின் மந்திரிகள் தங்கள் தங்கள் ராஜ்யத்தில் இதேமாதிரியான சட்டத்தை இயற்றப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த ராஜ்யங்களில் சட்டம் இயற்றப்படும் வரையிலும் நாம் மெதுவாகப் போவதுதான் நல்லது.

MR. SPEAKER: Why should we not take up the next question also which is on the same subject?

THE HON. SRI R. VENKATARAMAN: Yes, Sir. I will answer the question.

* 299 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state the reasons for not implementing the provisions of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act, 1958?

THE HON. SRI R. VENKATARAMAN: In view of the fact that Andhra, Kerala and Mysore Governments have not yet introduced legislation similar to the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act, 1958 this Government have postponed the date of coming into force of the licensing provision of the Act to 1st July 1960. As regards the rest of the provisions of the Act, notifications were already issued fixing 1st January 1960 as the date for coming into force of sections 10, 12, 13, 14, 15 and 16 of the Act and 1st July 1959 for the remaining sections. But these sections could not be enforced from the notified dates due to the stay order of the High Court on the writ petitions filed by certain owners of beedi manufacturing premises questioning the validity of the provisions of the Act.

SRI M. KALYANASUNDARAM: ஹைகோர்ட் தீர்ப்பு இப்போது வெளிவந்து விட்டது. இந்தச் சட்டத்தின் முக்கியமான பகுதியே செல்லத்தக்கது அல்ல என்று ஹைகோர்ட் தீர்ப்பு வந்திருப்பதால் இந்தத் தீர்ப்பை அனுசரித்து இந்தச் சட்டத்தைத் திருத்த எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

[11th March 1960

THE HON. SRI R. VENKATARAMAN அதை சர்க்கார் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

SRI N. K. PALANISAMI : சமீபத்தில், கடைசியாக நடந்த மகாநாட்டில் இந்த 'ப்ரொவிஷன்களை' ஜூன் மாதத்திற்குப் பிறகு அமல் செய்வதாக முடிவு செய்யப்பட்டது. ஜூன் மாதத்திற்குள் மற்ற மாநிலங்களில் இம்மாதிரியான சட்டத்தைக் கொண்டுவருவதற்கு ஏதாவது உத்திரவாதம் இருக்கிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN : மற்ற ராஜ்ய சர்க்கார்கள் என்ன செய்வார்கள் என்பதற்கு இந்த ராஜ்ய சர்க்கார் உத்திரவாதம் கொடுக்க முடியாது. அந்த ராஜ்யங்களில் மந்திரிகள் கூறியதன் பேரில், நாம் இதை ஜூலை மாதம் 1-ம் தேதி வரையில் ஒத்திப்போட்டிருக்கிறோம்.

SRI A. GOVINDASAMY : இந்தச் சட்டம் வரப்போகிறது என்ற அச்சத்தின் விளைவாக கோவையில் மூடப்பட்டிருக்கும் பீடித் தொழிற்சாலையின் நிர்வாகிகளை கனம் மந்திரி சந்தித்து மேற்கொண்ட முயற்சி என்னவாயிற்று? வேண்டிய ஒற்றுமை உணர்ச்சியைக் காட்ட அவர்கள் தயாராயிருக்கிறார்களா?

MR. SPEAKER : It is a separate question.

THE HON. SRI R. VENKATARAMAN : I shall answer the question, Sir. கோவையில் பேச்சுவார்த்தைகள் நடந்ததன் பயனாக, தொழிற்சாலையை மூடுவதாக இருந்த பலர் தொழிற்சாலையை மூடவில்லை. ஆனால், சிலர் பிடிவாதமாக மூடியிருக்கிறார்கள். அவ்வாறு மூடியதினால் பாதிக்கப்பட்டவர்கள் சுமார் 2,100 பேர்கள் என்று நினைக்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : இந்தச் சட்டத்தைத் திருத்தி அமுலுக்குக் கொண்டுவர முயற்சி செய்யும் அதேநேரத்தில் அவசியமான பணத்தை ஒதுக்கி பீடித் தொழிலை கூட்டுறவு முறையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்தால்தான் பீடித் தொழில் முதலாளிகள் சட்டத்திற்குக் கட்டுப்படுவார்கள் என்பதை கனம் அமைச்சர் உணருகிறாரா? அதற்கான ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : தொழில்களை கூட்டுறவு முறையில் நடத்தவேண்டும் என்ற கொள்கையை சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தத் துறையில் உள்ளவர்கள் இத்தொழிலைக் கூட்டுறவு முறையில் கொண்டுவர முயற்சி மேற்கொண்டால் அவர்களுக்கு சர்க்கார் வேண்டிய உதவியை அளிக்கும்.

### *Veterinary dispensary*

* 300 Q.—SRI K. SATTANATHA KARAYALAR (on behalf of SRI K. RAMACHANDRAN) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to convert the minor veterinary dispensary at Paramakudi in Ramanathapuram District into a major hospital; and

(b) if so, the details thereof?



11th March 1960]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) Yes Sir. The proposal could not be considered in connection with the schemes to be introduced in 1960-61 as it was received late.

### *Water-supply to Coonoor*

* 301 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have received any request from Coonoor Municipality for grants to improve and to extend the Municipal Water-supply Scheme?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir.

SRI A. A. RASHEED : What is the amount granted as aid and loan to this Municipality?

THE HON. SRI M. A. MANICKAVELU : Now for making improvements to the water-supply scheme, it has to be investigated first. For that an amount of Rs. 4,000 is required and it has been deposited by the Municipal Council. Now the investigation will take place. For short term improvements, they wanted a loan of Rs. 25,000. The Engineer is being asked to examine it.

### *Industrial Housing Scheme*

* 302 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the total amount allotted by the Central Government for Industrial Housing purposes during the First and Second Plan periods;

(b) the amount utilised so far; and

(c) if the entire amount is not utilised, the reasons therefor?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Rs. 100 lakhs (Rupees one hundred lakhs only).

(b) Rs. 73.77 lakhs (Rupees seventy-three lakhs and seventy-seven thousands only).

(c) The progress in the implementation of the scheme by co-operative societies has been rather slow due to—

(i) inability of the workers to pay their share of 10 per cent cost;

(ii) high cost of land; and

(iii) scarcity of iron and steel.

SRI K. SATTANATHA KARAYALAR : ஸார், இந்த நிலைமையைச் சரிப்படுத்துவதற்கு என்ன செய்வதாக சர்க்கார் உத்தேசித்திருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது ஓரளவு அந்த நிலைமை சமாளிக்கப்பட்டு வருகின்றது. சில இடங்களில் முதலாளிகள் அந்த 10 சத விகிதம் அளவுக்குக் கடன் கொடுத்து

[11th March 1960

உதவுவதாக முன் வந்திருக்கிறார்கள். சில இடங்களில் தொழிலாளர்கள் தாங்களே கட்டவும் முன் வந்திருக்கிறார்கள். இப்போது ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய 100 லட்சத்தை விட இன்னும் அதிகமாக 20, 25 லட்சம் ரூபாய் அதிகமாகப் பெற்றிருக்கிறோம். ஆகவே, 1 கோடி, 25 லட்சம் ரூபாய் இந்தத் தொழிலாளர்களுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும்.

SRI S. PAKKIRISAMI PILLAI : இம்மாதிரி உதவி செய்யும் வகையில் ஒரு வீட்டின் மதிப்பு 3,800 முதல் 4,000 வரை என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இது போதாது. இதை அதிகமாக்கவேண்டும். ப்ராவிடெண்ட் பண்ட் சட்டத்தில் திருத்தம் செய்து அந்தப் பணத்தில் இருந்து 350 ரூபாயோ, 400 ரூபாயோ கொடுக்கும் அளவுக்குச் சீக்கிரமாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார்களா?

THE HON. SRI R, VENKATARAMAN : வீட்டின் மதிப்பு சென்னை நகரத்தில் 3,800. அதற்கு சர்க்கார் மானியமாகக் கொடுப்பது 25 சத விகிதம். தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகக் கட்டினால் அவர்களுக்கு 66 சத விகிதம் கடனாகக் கொடுக்கப்படும். ஆகவே, இப்போது இருக்கின்ற அளவில் 10 சதவிகிதம் தொழிலாளர்களுக்கு அவர்கள் நிதியிலிருந்து கொடுத்தால் போதும். இதைக் கொடுப்பதற்காக மத்திய சர்க்காருக்கு ராஜ்யசர்க்கார் ப்ராவிடெண்ட் பண்டில் நிதி உதவி செய்யவேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறது. ஆனால் அது சரியல்ல என்று மத்திய சர்க்காரின் சட்ட இலாகா சொல்வதாக எங்களுக்குக் கடந்த மகாநாட்டில் தெரிவித்தார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது.

இரண்டாவது, 3,800 ரூபாயை இன்னும் அதிகமாக்க வேண்டுமென்று சொல்லுவது இப்போதிருக்கும் விலைவாசியைப் பொறுத்துச் சரியானதுதான். ஆனால், அதற்காக மத்திய அரசாங்கத்தோடு கடிதப் போக்குவரத்து ஆரம்பித்தால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து மூன்றாவது திட்டம் வந்து விடும். இருக்கின்ற அளவில்தான் வீடுகளைக் கட்டி முடிக்க வேண்டும்.

SRI A. GOVINDAS AMY : சென்னை சர்க்கார் பஸ் தொழிலாளர்கள் கூட்டுறவு முறையில் வீடு கட்டுவதற்காகப் பணம் கேட்டும் நாளது வரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது உண்மையா? அரசாங்கத்தின் பங்குத் தொகை கொடுக்கப்பட்டதா?

THE HON. SRI R. VENKATARAMAN : அதற்குத் தனிக் கேள்வி போட்டால் புள்ளி விவரங்கள் கொடுக்கிறேன்.

MR. SPEAKER : I am afraid hon. Members are going far away from the main question. Of course the Minister might be willing to answer the question. But I must also be willing to allow the supplementary. I am afraid the supplementary question has nothing to do with the main question.



11th March 1960]

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த 10 சதமானம் கொடுக்க முன் வந்தும் மதுரை மாவட்டத்தில் வீடு கட்ட சர்க்கார் மறுத்தது உண்டா? உதவித் தொகை மறுத்ததாகச் சொல்லுவது உண்மையா?

THE HON. SRI R. VENKATARAMAN : கொஞ்சம் கூட உண்மையில்லை. முக்கியமாகத் தொழிலாளர்கள் வீடு கட்டும் விஷயத்தில் ராஜ்ய சர்க்கார் எல்லா உதவிகளும் வெகு வேகமாகக் கொடுத்துக் கொண்டு வருகிறது.

### *Seed farms*

* 303 Q.—SRI M. P. SARATHI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1—4—1959-க்கு பின் துவக்கப்பட்ட விதைப் பண்ணைகள் எத்தனை?

(ஆ) அவைகளில் வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Fourteen farms (up to 31st January 1960).

(b) Nil.

SRI M. P. SARATHI : இந்த விதைப் பண்ணைகளை ஏன் வட ஆற்காடு மாவட்டத்தில் இந்த வருஷம் துவங்குவதாக இல்லை? அங்கு சரியான நிலங்கள் இல்லையா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சரியான நிலங்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இருந்தபோதிலும் கூட பண்ணைகளை அமைக்கவேண்டுமென்பது பரிசீலனையில் இருந்து வருகிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. Minister tell us the quantity of seeds produced from these seed farms and whether they have been sold or the demand is greater than production and if so whether there is any proposal to start more such seed farms?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir, there is a proposal to increase the number of seed farms.

SRI A. GOVINDASAMY : இந்த விதைப்பண்ணைகளில் இருக்கக்கூடிய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு எஸ்டிமேட்ஸ் கமிட்டி செய்த சிபாரிசுகளில் எதையெதை அமுல் நடத்தியிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எஸ்டிமேட்ஸ் கமிட்டி செய்த சிபாரிசுகள் கவனிக்கப்பட்டு அநேகமாக அமுல் செய்யப்பட்டு வருகிறது.

### *Minimum bus fare*

* 304 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

[11th March 1960

பஸ் சார்ஜ் குறைந்த பட்ச கட்டணம் இரண்டணாவாக வைக்கும்படி பஸ் முதலாளிகளுக்கு சர்க்கார் உத்திரவிட உத்தேசமுண்டா?

THE HON. SRI V. RAMAIAH : The answer is in the negative.

SRI N. R. THIAGARAJAN : தற்போது பஸ் கட்டணம் 1 மைலுக்கு 4 அணா, 2 மைலுக்கும் 4 அணா, 3 மைலுக்கும் 4 அணா என்று வாங்கப்படுகிறது. குறைந்தபட்சம் 4 மைல் தூரம் வரை 2 அணா என்று வைப்பது நலமல்லவா? அரசாங்கம் இதைப் பரிசீலிக்குமா?

THE HON. SRI V. RAMIAH : இப்போது ஒன்றும் செய்வதாக உத்தேசமில்லை.

MR. SPEAKER : Questions are over.

## II.—PRIVILEGE MOTION *RE* BOYCOTT OF GOVERNOR'S ADDRESS BY THE MEMBERS OF THE D.M.K. PARTY IN THE LEGISLATURE.

MR. SPEAKER : Hon. Members are aware that the hon. Member Sri S. Lazar raised a matter of privilege on 11—12—1959. In this connection, I also heard on 16—12—1959 the views of the Leader of the House, the Leader of the Opposition and the Leaders of other Opposition parties. I had reserved my ruling and now I shall proceed to give my ruling.

The hon. Member Sri S. Lazar contended among other things that the boycott of the Governor's Address on 5—12—1959 by the Members of the Assembly belonging to the Dravida Munnetra Kazhagam Party amounted to breach of privilege and therefore should be referred to the Committee of Privileges.

It is now my duty to decide whether a *prima facie* case of breach of privilege has been made out or not. To decide this, I must satisfy myself that it is a matter of recent occurrence and that it has been raised at the earliest possible moment and that it involves a matter of privilege. There is no doubt that the matter is of recent occurrence because the incident occurred on 5—12—1959 and the matter has been raised on 11—12—1959. The first two conditions have therefore been satisfied. Now I have to decide whether the matter involves a question of privilege.

In U. K. Parliamentary Privilege originated in the King's protection of his servants but now it is claimed as an independent right. As originally the weaker body, the Commons had a fierce and prolonged struggle for the assertion of their own privileges not only against the Crown and the Courts but also against the Lords. What originated in the special protection of the King began to be claimed by the Commons as customary rights, and some of these claims in the course of repeated efforts to assert them, have hardened into legally recognised "Privileges". Parliamentary privileges are the peculiar rights enjoyed by the Parliament



11th March 1960] [Mr. Speaker]

collectively and by the Members of the House individually. These rights are absolutely necessary for the due execution of the Parliament's powers. They are enjoyed by individual members because the House cannot perform its functions without the unimpeded use of the services of its members and by the House for the protection of its members and the vindication of its own authority and dignity.

Article 194 of the Constitution of India deals with the powers, privileges and immunities of the State Legislatures and their members. It expressly provides for freedom of speech in the Legislature of a State—subject of course to the provision of the Constitution and the rules of procedure of the Legislature—and immunity of the members of the Legislature for anything said or any vote given in the Legislature or any Committee thereof.

It also provides that no person shall be liable in respect of the publication by or under the authority of the House of any report, paper or votes or proceedings. The same article empowers the Legislature to define the other powers, privileges and immunities of the House and of its members and of the Committees of the House. And, it is also provided that until so defined the powers, privileges and immunities will be those of the House of Commons of the Parliament of the United Kingdom and of its members and committees at the commencement of the Constitution. So far neither the Madras Legislature nor any other State Legislature has defined by law the other privileges.

I have examined the issue of privilege raised by the hon. Member Sri S. Lazar in the light of these privileges of the State Legislature. As already stated the Constitution specifically defines two privileges, namely, the freedom of speech in the Legislature and immunity for anything said or done in the Legislature. The matter raised by hon. Member Sri S. Lazar, viz., to boycott of the Governor's Address cannot possibly be brought under any of these two items.

It has to be examined whether it can be brought under the other privileges which though not defined, are the same as those of the House of Commons of the United Kingdom. In the House of Commons some privileges are claimed by the Speaker at the beginning of each new Parliament. They are freedom from arrest, liberty of speech, access to the Royal person and favourable construction of all their proceedings. The boycott of the Governor's Address by a particular group of members cannot be brought under any of the above four items. 9-30 a.m.

The privileges not claimed by the Speaker and which are inherent to the powers of the House are—(1) the right of the House to regulate its own constitution and (2) the power to punish for breach of privilege. Under the first item the House has power to issue writs for the filling up of casual vacancies, to determine

[Mr. Speaker] [11th March 1960

disputed returns, to determine legal disqualifications and to expel persons who are unfit for membership. In India the Representation of the People Act, 1951, provides for the issue of writs, etc.

Courts of justice have power to punish for contempt of Court. Similarly the House has power to protect its privileges and punish their violation. Any act of omission or commission which obstructs or impedes the House in the performance of its functions or which obstructs or impedes any member or officer of the House in the discharge of his duty or has a tendency directly or indirectly to produce such results is treated as contempt. These can be divided into disrespect to any member of the House by a non-member, disrespect to the House collectively whether committed by a member or any other person and disobedience to orders of the House or interference with its procedure, with its officers in the execution of their duty, or with witnesses in respect of evidence given before the House or a Committee. The boycott of the Governor's Address cannot obviously be brought under the first item, namely, disrespect shown by a non-member to a member. Now I shall examine whether it can come under the other two categories, disrespect to the House and disobedience to the orders of the House. Instances of disrespect to the House and disobedience to the orders of the House by members have been broadly defined as acceptance of bribe to influence a member in his conduct as a member or of any fee, remuneration or reward for anything done by him in his capacity as a Member, publication of any report of or evidence given before Select Committees before they are presented to the House, acceptance of payments for the disclosure of information obtained from other members in regard to matters to be brought before Parliament and giving evidence before any Court or in any other House in regard to debates or proceedings in the House of which he is a member without the permission of the House, and refusal of a member to serve on a Committee of that House when his attendance is made compulsory. The boycott of the Governor's Address cannot ostensibly be brought under any of these conditions.

The hon. Member Sri S. Lazar stated that under Article 168 the Governor was part of the Legislature and under Article 175 of the Constitution, the Governor required the attendance of the Members of the Assembly at the address to be delivered by him on 5—12—1959 and since the Members of the Assembly belonging to the Dravida Munnetra Kazhagam, who had taken oath or made an affirmation under Article 188 that they would bear true faith and allegiance to the Constitution, boycotted the Address, it amounted to contempt of the House.

Now two points arise out of this, namely, whether the Members of the Assembly must attend every meeting of the Assembly and whether the assembling of the members of the Assembly to hear the Governor's Address is a meeting of the Assembly. In the



11th March 1960] [Mr. Speaker]

United Kingdom, I understand that when the Queen addresses the Members of the House of Commons and the House of Lords it is a meeting of the House. There the presence of the Speaker is sufficient to constitute a meeting of the House.

Now coming to India, I may inform hon. Members that there was provision in the Government of India Act, 1919 also for the Governor-General to address the Central Legislative Assembly. Section 63 (b) stated that the Governor-General shall have the right of addressing the Legislative Assembly and may for that purpose require the attendance of its members. The question whether the Governor-General addressed the Legislative Assembly sitting as a House or the Members only was considered even then and Sir Frederic Whyte, the first President of the Central Assembly was of the view that it was not a meeting of the Assembly. Later in 1936, Sri Sri Prakasa, then a member of the Central Assembly, raised a point of order whether the Address of the Governor-General formed part of the proceedings of the Assembly. The then President of the Central Assembly, Sri Abdur Rahim, ruled that the meeting addressed by the Governor-General was not a meeting of the Assembly but he addressed only the members of the Assembly and not a duly constituted meeting with the President in the Chair, and hence the Governor-General's speech was not part of the proceedings of the Assembly. Article 175 of the Constitution which is relevant to our purpose reads that the Governor may address the Assembly or the Assembly and the Council assembled together and for that purpose require the attendance of members. It is seen that this Article of the Constitution is similar to Section 63 (B) of the Government of India Act, 1919. The view that the Governor does not address a duly constituted meeting of the Assembly is also evident from our Rules of procedure. Rule 4 of the Assembly Rules states that 'at the first meeting of the Assembly after the Governor's Address, a copy of the Governor's Address shall be placed on the table of the House'. If the Governor had addressed a meeting of the Assembly there was no need to place a copy of the address on the table as the speech itself would form part of the proceedings of the House.

Further in 1952, some members interrupted the Governor when he was addressing and then walked out. There was no provision in the Rules to deal with such a situation. In 1954, when the rules of the Assembly were amended a new provision for observing order during the Governor's Address was incorporated. According to this rule (Rule 8) any obstruction or interruption is to be regarded as a gross breach of the order of the House. Because it was considered that no action could be taken under the existing rules this provision was made. It is therefore clear that when Members assemble to hear the Governor's Address it is not a meeting of the Assembly.

Now I shall consider whether a member must attend every meeting of the Assembly and also the meeting to hear the Governor. There is no provision in the Constitution or in the rules of procedure that a member must attend every meeting of the Assembly. Article 190 (4) states that if for a period of sixty days a member of the House is without the permission of the House absent from all meetings thereof, the House may declare his seat vacant. Thus there is nothing in the Constitution to compel a member to attend the Assembly daily. But to do justice to his constituents, a member is without any doubt morally, though not legally, bound to attend the meeting of the House.

When the Governor in the discharge of a Constitutional obligation requires the attendance of the Members to hear his Address, it is no doubt equally a Constitutional obligation on the part of the members to be present and listen to his Address. There cannot however, be any compulsion behind it nor do we go into the motives of every person who is not present to hear the Governor's Address. But the Governor is the head of the Executive as well as a limb of the Legislature and if the Members do not attend to his address when required to do so by him it would amount to showing discourtesy to the highest dignitary in the State. Boycotting such a meeting after publicly announcing the intention to do so is something worse. But these are acts of discourtesy and they have nothing to do with the privileges of the House. Privileges are attached to the House and not to the Governor. In recent times, even in the United Kingdom one praty did not attend the Queen's Address and it was not considered as breach of privilege.

Hon. Members are aware that walk-outs for one reason or another have nowadays become too frequent in Indian Legislatures. These walk-outs are for the purpose of expressing dissatisfaction against the attitude of the Government. After walk-out the members also abstain from attending the meeting for sometime. Madras is no exception to this. The rules of Procedure of the Madras Legislative Assembly do not provide for preventing or for taking action against such walk-outs. Walk-outs by Opposition parties to express their disapproval of the Government's policy have almost become common methods of protest and if they do it peacefully they are not considered as reflections on the House or on the conduct of the Chair. When abstention from Assembly meetings are not against the rules abstention from the Governor's Address cannot be placed on a different footing. The boycott of the Governor's Address does not therefore involve a matter of privilege though it may not be good parliamentary manners.

The hon. Member Sri S. Lazar has stated that the Dravida Munnetra Kazhagam party members have called the Governor a North Indian appointed by North India. Any Indian citizen can be elected as the President of India. Similarly any Indian citizen can be appointed as a Governor. Therefore, to call the Governor



a North Indian is not in good taste but smacks of bad taste and it certainly does not involve a matter of privilege. Further these words were not uttered in the House when the Governor was addressing the two Houses assembled together. Any such words said outside the Assembly against the Governor cannot be questioned in the House.

The hon. Member Sri S. Lazar has also stated that the speeches of the hon. Members Sri C. N. Annadurai and Sri M. Karunanidhi in the Assembly are also objectionable. A member has freedom of speech in the House, subject of course to the Constitution and the rules of procedure. Members have to observe the conditions laid down in the Rules. If any member transgresses Rule 67 of the Assembly Rules any other member can draw the attention of the Speaker who will deal with the objection appropriately and at the proper time.

Before I give my ruling I would like to invite the attention of hon. Members to the speech of the Prime Minister of India made in the Lok Sabha on 22—2—1954 under similar circumstances when some Members had abstained from the President's Address. The speech runs as follows :—

"Apart from this, there are certain basic things which, I submit, must be borne in mind. If we are to proceed peacefully and democratically there is, under our Constitution, the authority of Parliament; our President who is the symbol of the State, is above party and the rest of it. He may of course, as President in his Address represent what the Government wish to do. It is a different matter. But he is a symbol of the State. There is our Flag; our National Anthem. I am mentioning obvious things. I am mentioning them, and what I say I am not saying by way of complaint but in sorrow; it is a matter of deep grief to me that at the beginning of this session some hon. Members deliberately and ostentatiously kept away when the President addressed the joint session of both Houses of Parliament. I am not going into the merits. But the President is a symbol of the State, of the dignity of the State. And it is not so much here, but in some of our State Assemblies also this is being done with the Governor there, who is also a symbol. It is totally immaterial whether you like the Governor, whether he is beautiful to look at or not so attractive to look at. These are symbols of the State, of the unity of the State. And if we do not respect that symbol we do injury to the conception of the unity of that State. If one party does it and another does it, it may well become a practice for some group or other to act in that way because they do not like something. I do appeal therefore not only to hon. Members here but elsewhere, that these conventions ought to be observed.

I would request the Members of the House to bear with me again if I quote the views expressed by the late Sri Mavalankar who was Chairman of the Conference of Presiding Officers in 1954

when questions relating to the entire Opposition or a party or group stays out as a mark of protest when the Governor comes to Address the Assembly, a party or group stages walk-out when the Governor begins to address and some others rise to raise points of order or otherwise interrupt the proceedings when the Governor is present to deliver his Address :—

"It is now only two or three years since we have had our last elections. It is too early in a wide country like ours to judge as to whether a particular trend is on the increase or decrease. Conventions or parliamentary forms are not settled in a day. They take years and years and perhaps centuries also. We know as to how people used to behave in the English House of Commons 100 years ago, but nobody thought of making any rules about it. So, I should personally think that we should watch the situation. Let us try to create a sort of public opinion; let the persons who do not behave properly, be made to realise that they are doing a wrong thing, by persuasion, by argument, but not necessarily by the rod. Just as in society we observe many rules of conduct simply because the generality of the people observe them, so in all these matters, the best course would be to create a public opinion and a convention.

* * *

A time there was in this country when some people did not recognise the flag. It is within living memory. But the time has now come when nobody disputes the national character of the national flag. Similarly a time may come very shortly—much more shortly than what we may anticipate now—when all the parties will recognise the Head of the State."

These expressions find a genuine echo in my heart and I would appeal to hon. Members that whatever be their political inclinations, let this Legislature set an example by strictly adhering to parliamentary conventions by showing the courtesy due to the Governor as a limb of the Legislature. Finally and in conclusion I am of the opinion that the matter raised by Hon Member Sri Lazar does not involve a question of privilege of the House. I am therefore of the opinion that no *prima facie* case has been made out.

SRI S. LAZAR : Mr. Speaker, Sir, it is an established convention in the Mother of Parliaments, viz., the House of Commons that after such a ruling is given, members are permitted to bring a motion on the floor of the House for discussion. May I know, Sir, whether such a convention obtains in our House? Can any member or myself bring such a motion? If so, will it be in order? I would like to know the correct position from you, Sir.

MR. SPEAKER : I am glad the hon. Member raised that point. I shall answer it.



When a matter of privilege is raised, the Speaker has to decide whether a *prima facie* case of breach of privilege has been made out or not. If the Speaker holds that a *prima facie* case exists, then any member may move a motion that the matter be referred to the Committee of Privileges or that it be dealt with by the House itself. The Madras Assembly Rules do not provide what should happen if the Speaker holds that no *prima facie* case has been made out.

In the Lok Sabha, to raise a matter of privilege the Speaker's consent is necessary. If the Speaker gives his consent, then the Member can raise the matter and then, if the House permits, the matter can be taken up straightway or referred to the Privileges Committee. If the Speaker does not give his consent, the matter cannot be raised.

Under Rule 186 of the Lok Sabha Rules, a motion shall not raise a question of privilege. It follows that if the Speaker does not give his consent, a privilege motion cannot be raised.

About the House of Commons, what the hon. Member, Sri Lazar has said is right. The position is different there. When a matter of privilege is raised, the Speaker has to decide whether a *prima facie* case of breach of privilege has been made out and whether the matter has been raised at the earliest opportunity. If the Speaker decides that a *prima facie* case of breach of privilege has been made out, then any Member may move that the matter be considered by the House at once or the matter be referred to the Privileges Committee. Even when the Speaker decides that a *prima facie* case of breach of privilege has not been made out, a Member is at liberty to raise the matter on a motion.

In the House of Commons, it is the House that has the power to decide whether there is breach of privilege or not. The Speaker only decides whether the privilege matter can take precedence over other business of the House.

According to Article 194 of the Constitution of India, the powers and privileges of the State Legislature will be the same as those of the House of Commons of the Parliament of the United Kingdom.

It follows that the House alone has the power to decide whether a particular matter is a breach of privilege or not. Though the Madras Assembly Rules do not provide for contingencies when the Speaker rules that no *prima facie* case has been made out, it has to be inferred that a Member can bring the matter by a separate motion.

At the same time this does not seem to apply to the Lok Sabha. In the Lok Sabha, the House itself has framed a rule that a matter of privilege should be raised in a particular manner and that it

[Mr. Speaker] [11th March 1960

cannot be raised by a motion. There the House has delegated its powers of deciding whether a particular matter is a breach of privilege or not, to the Speaker himself. In our Madras Assembly Rules the House has not delegated its power to the Speaker. Perhaps I shall come at a later time to get that power. If the Speaker decides that no *prima facie* case of breach of privilege has been made out, it is open to any Member of the House to bring before the House a motion that this matter be referred to the Committee of Privileges. Then it is for the House to decide. This House has such a right. Of course such a right is not there in Lok Sabha. In Mysore also the House has no such right. But here, in Madras, this House has such a right. We do not have a provision similar to the one in the Rules of the Lok Sabha. So I do not object to any member bringing the matter before the House by means of a motion.

THE HON. SRI C. SUBRAMANIAM : May I make a submission, Sir. No doubt it is true that there is no specific provision in our rules, as to whether a member can bring the matter again before the House by way of motion or not, especially after, you, Mr. Speaker, have given your ruling that no *prima facie* case has been made out. But still, Sir, you are the custodian of the privileges of the House and therefore generally your ruling should be accepted by all Members. But occasions may arise when a Member may not be satisfied with the ruling given by the Speaker. That is again a fundamental privilege which every Member has got. But in a case like this I would respectfully submit to hon. Members that if any hon. Member wants that the matter be brought before the House he should consult at least the Leader of the House. Only when the Leader of the House also feels that a different procedure will have to be adopted, that matter should be brought before the House. I say that we should follow such a convention here so that for everything it should not be necessary for us to bring a motion particularly when the Speaker considers the entire aspect and gives a ruling. I put forward this respectfully for consideration of all members.

MR. SPEAKER : I have no objection.

SRI M. KALYANASUNDARAM : This has developed into a discussion of the procedure. The Hon. Leader of the House has suggested that the matter should come, as an appeal against the rulings of the Speaker, to him, the Leader of the House.

THE HON. SRI C. SUBRAMANIAM : I only said that I should be consulted, before bringing the matter to the consideration of the House.

SRI M. KALYANASUNDARAM : Before Opposition parties bring any motion before the House, there is consultation with the Hon. Leader of the House. We consult each other. We do not bring any motion without consulting the Hon. Leader of the



11th March 1960] [Sri M. Kalyanasundaram]

House. There is no need for any special mention about this. If you will kindly recollect our discussions at the time of framing the rules, you will see that this point was raised and discussed. The Rules Committee felt that the members should have the right to move a separate resolution even when the Speaker ruled that there was no *prima facie* case of breach of privilege. That is why, I submit, Sir, that it will be better that this House does not take any decision now with regard to the procedure. If procedure is to be defined, I would submit that it could be referred to the Rules Committee, and after proper discussion, we can consider it.

MR. SPEAKER : I have no objection.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, it is not as the Leader of a party, but as the Leader of the House, I made the suggestion. It is open to members to accept it or reject it. It is only a question of creating conventions, and I thought it would be good to make the suggestion. It is not merely as the Leader of the Congress Party, but as the Leader of the entire House I made the suggestion. I think any Leader of the House should function in a responsible manner, particularly when the Hon. Speaker has given a ruling taking into account all aspects and has advised the members. That is the only suggestion I made. It is not as if anybody should be bound by my advice.

MR. SPEAKER : Before the House I have given my ruling. It is only when the hon. Member Sri Lazar asked whether a motion could be moved, I said, according to our rules, he would be entirely right in moving it. Not that he is going to do it. If it is a question of delegating power to the Speaker as in the case of the Lok Sabha, I think I will have to bring it before the Rules Committee. This is a matter which will come up later. I leave the matter entirely to the House. For the present I have given my ruling that a *prima facie* case is not made out. It is open to the House to do as it likes.

### III.—STATEMENT BY THE HON. THE FINANCE MINISTER.

THE HON. SRI C. SUBRAMANIAM : The answer given by me on 3rd March 1959 in reply to a supplementary question by Sri A. Govindasamy on starred question No. 523, relating to the contribution made in 1954 and 1955 by the Government to the ' Common Good Fund ' of the Tamilnad Non-Gazetted Government Officers' Union is found to require correction. The correct answer is given in the statement [a] placed on the table of the House.

I am sorry for the mistake. The mistake arose because some relief was given by the Non-Gazetted Officers' Association to some of the bereaved families. But, for that the Government have not contributed anything.

[a] Printed as Appendix III on page 265 infra.

[11th March 1960

## IV.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1960–61.

MR. SPEAKER : We shall now proceed with the discussion on the budget. I have already got before me twelve names. I think I shall allow ten minutes for each member, and I shall now call upon Sri T. L. Sasivarna Thevar to start the discussion.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Fifteen minutes may be given, Sir.

MR. SPEAKER : I have no objection. Sri T. L. Sasivarna Thevar will have fifteen minutes. I have now got four more names, making the number sixteen. The number is going on increasing.

THE HON. SRI C. SUBRAMANIAM : Our difficulty was that formerly for the first two days, we did not have many members to speak.

MR. SPEAKER : Members are more alert now. Sri T. L. Sasivarna Thevar will now speak.

*தங்களுக்கு 15 நிமிடங்களும், தங்களுக்குப் பிறகு மற்றவர்களுக்கு 10 நிமிடங்களும் கொடுக்கப்படும்.*

SRI T. L. SASIVARNA THEVAR : *கனம் சபாநாயகர் அவர்களே, நமது நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள வரவு செலவுத் திட்டத்தின் பேரில் விவாதத்தை ஆரம்பித்து வைக்கும் முறையில் சில கருத்துக்களைச் சொல்ல இஷ்டப்படுகிறேன். நிதி நிலை அறிக்கையில் புதிய வரிகள் இல்லை. அது வரவேற்கத்தக்கது. சமுதாயத்தில் ஒரு சில வர்த்தர்களுக்கு வரிச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், என்.ஜி.ஓ. உத்தியோகஸ்தர்களின் நிலை கொஞ்சகாலத்திற்கு ஒத்திப் போடப்பட்டிருக்கிறது. மக்களுக்குத் தொல்லை தரும் விலைவாசி விஷயங்கள் மூன்றாவது திட்ட காலத்தில் பரிசீலித்து ஒழுங்கு படுத்துவதாக வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. நிதி நிலை அறிக்கையில் புதிய வரிகள் இல்லை என்று சொல்லும்போது, நிதியமைச்சரவர்கள், சில நாட்களுக்கு முன்பே புதிய வரிகள் ஏதும் போடப்படமாட்டாது என்று கூறியிருக்கிறார்கள்.*

(Sri K. Sattanatha Karayalar in the Chair.)

*மக்கள் பெரும்பாலும், வரிப் பளுவிலிருந்து விலக்கு வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். ஆனாலும், அழுகும் பொருள்கள் விஷயத்தில் மட்டும் இப்பொழுது வெற்றி பெற்றிருக்கிறது. அதைச் சந்தோஷத்துடன் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், இதைச் சென்ற ஆண்டிலேயே, நன்றாகப் பரிசீலனை செய்து, விலக்குக் கொடுத்திருந்தால், நன்றாக இருந்திருக்கும். காலம் தாழ்த்தியாவது, வரிச் சலுகை கொடுத்ததற்கு அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். எவைகளுக்கு ஏற்கனவே வரிவிலக்கு இருந்ததோ அவைகளுக்கு தொடர்ந்து விலக்கு இருக்கும் என்று நினைக்கிறேன்.*



11th March 1960] [Sri T. L. Sasivarna Thevar]

*வெங்காயத்திற்கு விலக்கு இருந்ததா இல்லையா என்பது தெரியவில்லை. அதே மாதிரி பால், பாலுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு இருந்ததா, இல்லையா ? (கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமண்யம்: இல்லை, இல்லை, பாலுக்கு இல்லை.) வெங்காயத்திற்கு (கனம் ஸ்ரீ சுப்பிரமண்யம்: நீங்கள் பேசுங்கள் பார்க்கலாம்).*

*விவசாய வளர்ச்சி சம்பந்தப்பட்ட வரையில், நிதி அமைச்சர் தன் உரையில், 10, 12 பக்கங்கள் அதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம் நாடு ஒரு விவசாய நாடு. பெரும் பகுதி மக்கள் விவசாய மக்கள். அவர்கள் நன்மையைப் பார்த்துச் செய்தால் தான், நாடு சுபிக்ஷம் அடையும். சமீபத்தில் அமைச்சர் பேச்சில் சொன்னார்கள் பெரிய நீர்பாசன திட்டங்கள் இனிச் செய்வதற்கில்லை; பெரிய திட்டங்களெல்லாம் முடித்தாகி விட்டது என்று. அது ஒரு பெரிய சாதனை. இவ்வளவெல்லாம் இருந்தும், விலைவாசி மட்டும் இறங்கவேயில்லை. அதன் காரணம் என்ன? ஆகவே, இன்னும் சில திட்டங்களையும் யோசனை செய்ய வேண்டும். சாத்தனூர், கிருஷ்ணகிரி, புள்ளம்பாடி போன்ற இந்தத் திட்டங்களால், 2.52 லட்சம் ஏக்கராக்கள் சாகுபடிக்கு வந்திருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். இருந்தும், விவசாயத்தில் பெரும் முன்னேற்றம் இருந்தாலும், விலைவாசிகள் ஏறிக்கொண்டே போவதின் காரணம் தெரியவில்லை. இன்று, மதுரை நகரத்தில் 50 படி கொண்ட மூட்டை ஒன்று ரூ. 26, 27 என்று விற்கிறது. இன்னும் காலம் போகப்போக ரூ. 30, 35 ஆகிவிடுமோ என்று பயம் இருக்கிறது. விலைவாசி ஏறுவது, உற்பத்தியாளர்களுக்கு சந்தோஷம்தான். ஆனாலும் வாங்குகிறவர்களுக்கு, பொருள்களின் விலை குறையாவிட்டால் கஷ்டம் அதிகமாகிறது. நம் நாட்டில் ஏற்கெனவே, கிருஷ்ணா நதிக் தண்ணீரை நம் இராச்சியத்திற்கு உபயோகிக்கும் நோக்கத்துடன் ஒரு திட்டம் இருக்கிறது. அது சம்பந்தமாக, ஆந்திர அமைச்சர், நம் அமைச்சர்கள் இடையே பேச்சுவார்த்தை நடந்து, நல்ல முடிவு கண்டிருப்பதாகக் கேள்விபடுகிறேன். மேல் பெரியார் திட்டத்தை வெகு நாட்களாகக் கேட்டு வருகிறோம். அதனால், ராமனாதபுரம் மாவட்டத்தில், 2, 3 தாலூக்காக்களுக்கு தண்ணீர் கிடைக்கும். அது விஷயமாக கேரள அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்தி வெற்றிகரமாகச் செய்ய வேண்டியது மிக அவசியம். அதோடு, ஆளியார், பரம்பிக்குளம் திட்டங்கள்கூட நிறைவேற வேண்டும். அந்தப் பரம்பிக்குளம் சம்பந்தமாக, இப்பொழுது ஏதோ எதிர்ப்பு இருப்பதாக பத்திரிகையில் படித்தேன். அதேபோல், மைசூர் அரசாங்கத்திலிருந்தும், காவிரித் தண்ணீர் சம்பந்தமாக ஏதோ தடுப்பு இருப்பதாக கேள்விப்படுகிறேன் அதனால், தகராறு முற்றக்கூடிய . . . (கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமண்யம்: இருந்தாலும், அது திராவிடத் தகராறுதான்".)*

*இது திராவிடத் தகராறு என்பதனால் இதைப் பெரிதாக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். இந்தத் தகராறுகள் தீர்ந்து நல்லமுறையில் இத்திட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டும் என்பது என் விருப்பம். எங்கள் தொகுதி சம்பந்தப்பட்ட*

[Sri T. L. Sasivarna Thevar] [11th March 1960

10 a.m. திட்டமும் புறக்கணிக்கப்படக்கூடாது. புறக்கணிக்கவில்லை என்று முதல் அமைச்சர் சொல்கிறார். அதையும் வெற்றிகரமாக முடித்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக உள்ளது சிறிய பாசன திட்டங்கள். இதைப் பற்றி குறை நிறையப் பேசப்படுகிறது. எங்கள் தொகுதி சம்பந்தப்பட்ட மட்டில் காரியமாக ஒன்றும் குறிப்பிடத்தக்கபடி நடைபெறவில்லை. நீர்ப்பாசன மகாநாடு கூட நடந்தது கலெக்டர் ஆபிசில். அங்கே நாங்கள்கூட இல்லை, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர் மிகவும் பரிதாபகரமாக ஒன்று சொன்னார். "எங்கள் ஆயுட் காலத்திற்குள்ளாவது ஏதாவது ஒரு காரியமாவது நடக்குமா?" என்று கலெக்டரிடத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரே கேட்டார். இப்படி பலபல திட்டங்களைப் போட்டு விட்டு ஒன்றும் நடைபெறாமல் காலதாமதமாகிக் கொண்டிருப்பதைத் தவிர்க்கவேண்டும். இவற்றையெல்லாம் சீக்கிரமாக நிறைவேற்றினால்தான் ஏதாவது ஜில்லா அளவில் பயன் ஏற்படும். அதோடு இந்தத் திட்டங்களுக்கு இத்தனை ரூபாய் வரையில் இவர் சாங்ஷன் செய்யலாம், இதற்கு மேல் இன்னார் செய்யலாம் என்பதாக பல வரையரைகள் இருக்கின்றன. இதனால் அநேகக் காரியங்களுக்குப் பணம் சாங்ஷன் செய்யப்படாமல் தகராறுகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே தொகையைப்பற்றிக் கவலைப்படாமல் ஸ்டேட் அளவில் இன்னார்தான் திட்டங்களுக்கு சாங்ஷன் செய்யலாம் என்பதாக ஒரு அதிகாரியைப் போட்டு விட்டால் நன்றாக இருக்கும் என்று யோசனை சொல்ல விரும்புகிறேன்.

நீர்ப்பாசனம் சம்பந்தமாகக் கிணறுகள் வெட்டவேண்டியது மிகவும் அவசியம். கிணறுகள் வெட்டவேண்டிய பொறுப்பு அரசாங்கத்தையே சார்ந்தது. கிணறு வெட்ட ஆயிரம் ரூபாய் மானியம் கொடுக்கிறோம். வெட்டின பிற்பாடு 250 ரூபாய் கடனாகவும், பாக்கியை மானியமாகவும் செய்கிறோம். இந்த ஆயிரம் ரூபாய் என்பது கிணறு வெட்ட போதுமானதாகவே இல்லை. மேலும் பத்துப் பன்னிரண்டு வருஷங்களாக இந்தக் கிணறு வெட்ட நாம் பணம் கொடுத்து வருவதில் எத்தனை ஊழல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். கிணறு வெட்டாமலேயே பணம் வாங்கியிருக்கிறார்கள். பழைய கிணற்றை காட்டிப் பணம் வாங்கியிருக்கிறார்கள். அதுவும் இந்த ஆயிரம் ரூபாயை வாங்குவதற்குள் முன்னால் மாமூலாக பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்படி பகிரங்கமாகவே வழங்கப்படுகிறது. உங்களுக்கு நான் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பது இல்லை. எங்கும் பரவலாக நடைபெறுகிறது. ஆகையால் நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக இரண்டாயிரம் ரூபாய் இருந்தால் ஒரு சிறிய கிணற்றை பாசனக் கிணற்றை வெட்ட முடியும். இதைச் சர்க்கார் பொறுப்பிலே வெட்டிக் கொடுத்துவிட்டால் காரியம் தகராறுகள் இல்லாமல் நன்றாக நடக்கும். நிலவளம் உள்ள கிராமங்கள் அநேகம் இருக்கின்றன. பத்து கிணறுகள் இருபது கிணறுகள் என்று சர்க்காரே ஆங்காங்கே வெட்டிக் கொடுக்க வேண்டும். குறிப்பிட்ட



11th March 1960] [Sri T. L. Sasivarna Thevar]

தவணையில் இத்தனை கிணறுகள் வெட்டிக்கொடுப்பது என்று திட்டம் வகுத்துவிட்டால் துரிதமாகப் பெரிய முன்னேற்றம் காண முடியும் என்பது என் அபிப்பிராயம். இதைச் சர்க்கார் பரிசீலனை செய்யும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

நம் நாட்டில் தரிசு நிலங்கள் ஜாஸ்தியாக இருக்கின்றன. இதைப் பற்றிக் கேட்க வழியில்லாமல் இருக்கின்றன. என்னுடைய பகுதியில் பெரியார் ப்ராஜெக்ட் ஏரியாவில் பதினைந்து, பதினாறு ஏக்கருக்கு மேல் அபூர்வமான நிலமாக ஆக்கக்கூடிய தரிசு கிடக்கிறது. அதை யாருக்கும் கொடுக்கவும் மாட்டேன் என்கிறார்கள். இந்தமாதிரியாகப் பார்த்தால் நம் மாநிலம் சம்பந்தப்பட்டமட்டில் லட்சக் கணக்கான ஏக்கரா சாகுபடிக்கு லாயக்காக இருக்கிறது. சர்க்கார் பொறுப்பிலேயே இந்தத் தரிசு நிலங்களை சாகுபடிக்கு ஏற்றதாகச் செய்யலாம். இன்றையதினம் ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். வீட்டைக் கட்டிக் கொடுத்துவிட்டு சும்மா இருந்து பயன் என்ன? வீடு கட்டிக்கொடுப்பதோடு ஒரு ஏக்கரா, இரண்டு ஏக்கரா கொடுத்தால் அவர்களுக்குப் பெரிய நன்மையாக இருக்கும். விவசாய அபிவிருத்திக்குக் கூட அதிக நன்மை ஏற்படும் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக தொழில் பண்ணைகள். தொழில் பண்ணைகள் சம்பந்தப்பட்ட மட்டில் அவை பெரிய நகரங்களில் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. விருது நகரில் இருக்கிறது. மதுரையில் இருக்கிறது. கிராமத் தொழில்களை வளப்படுத்துவதற்கு இவை பெரிதும் பயன்படும் என்பதில் சந்தேகமில்லை. இந்தத் தொழில் பண்ணைகளை பக்கா கிராமங்களிலேயே ஏற்படுத்தினால் கிராமத்தில் உள்ளவர்கள் விவசாய வேலை போக பாக்கி நேரத்தில் இந்தத் தொழில்களை எல்லாம் செய்ய முடியும். நகரங்களுக்குக் கூட்டமாக வருவது கூடத் தவிர்க்கப்படலாம். ஆகவே இவற்றைக் கிராமப் பகுதிகளிலேயே ஏற்படுத்த வேண்டும் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

கூட்டுறவு முறையில் கடன் அளிக்க இருக்கிறார்கள். இதில் புதிய ஒரு திட்டம் என்னவென்றால் நிலம் இல்லாதவர்களுக்குக் கூடக் கடன் அளிக்க வசதி செய்யப்போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை ஜாக்கிரதையாகப் பார்த்துச் செய்ய வேண்டும். நிலம் இல்லாதவர்களுக்கும் கடன் அளிக்கப்படும் என்பதனால் இது தவறான முறையில் போய்விடக்கூடாது. ஆரம்பத்திலேயே இதில் நஷ்டம் ஏற்பட்டாலும் சர்க்கார் ஈடு செய்யும் என்கிற ரீதியில் நஷ்டத்தை எதிர்பார்த்தே செய்வதுபோல தவறான முறையில் காரியங்கள் நடந்துவிடக்கூடாது. நிலத்தில் சாகுபடி செய்கிறவர், நிலச் சொந்தக்காரர் ஆகிய இரண்டுபேர்களுடைய ஜாயின்ட் ரெஸ்பான்ஸிபிலிடியில் கடன் அளிக்கத் தக்க ஏற்பாடு செய்யலாம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைன்று, கூட்டுறவு முறையில் கடன் வாங்குவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. கடன் வேண்டும் என்றால் பணம் வாங்குவதற்குள் ஒரு வருஷம் ஒண்ணரை வருஷம் கூட ஆகிவிடுகிறது. ஆகையால் லகுவான முறையில் கடன் அளிக்க ஏற்பாடு

[Sri T. L. Sasivarna Thevar] [11th March 1960

செய்வதும் மிகவும் அவசியம் என்று சொல்ல விரும்புகிறேன். அதுவன்றி அப்படிக் கடன் கொடுக்கிறோம், இப்படிக் கொடுக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருப்பதனால் ஒரு பிரயோஜனமும் ஏற்படாது என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் கல்வி சம்பந்தமாக ஒன்று. இதைப்பற்றி நிறையப் பேசப்படுகிறது. மத்தியான சாப்பாடு போடுகிற விஷயத்தைப் பற்றி நான் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இதைப்பற்றிப் பிரமாதமாகப் பிரசாரம் செய்யப்படுகிறது. உண்மையில் நடைபெறுவது என்னவென்றால் மாணவர்களுக்கு 10 நயா பைசா அளவு உணவு கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. இதில் 6 நயா பைசா சர்க்கார் கொடுக்கிறார்கள். 4 நயா பைசா வாத்தியார்களே வாங்கவேண்டும். இதை வசூலிப்பதற்குள் அவர்களுக்குப் போதும் போதும் என்றாகி விடுகிறது. பாடமும் சரியாக நடப்பதில்லை. மேலும் இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்று கட்சித் தகராறு வேறு. ஆகவே சில இடங்களில் சர்க்கார் கொடுக்கிற 6 நயா பைசாவுக்குள் சாப்பாடு போடுகிறார்கள். என்ன சாப்பாடு அதில் போட முடியும்? எனக்குத் தெரியும். குருணையைச் சமைத்து தட்டாம் பருப்புப் போட்டு ஒரே சாம்பார் வைத்து அளித்துவிடுகிறார்கள். இதனால் குழந்தைகளுக்கு ஒரே சொரிசிறங்கு. பள்ளிக்கு அனுப்புவதில்லை. எல்லா இடங்களிலும் இப்படித்தான் என்று சொல்லாவிட்டாலும் ஒன்றிரண்டு இடங்களில் நன்றாக நடப்பதை வைத்து எல்லா இடங்களிலும் நன்றாக நடப்பதாகச் சொல்லிவிடக்கூடாது. ஆகவே சர்க்கார் இதை 12 நையா பைசாவாக, 2 அணாவாகக் கூட்டிக் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று யோசனை கூறுகிறேன். இன்னொன்று. இப்போது எங்கே பார்த்தாலும் ஹைஸ்கூல்கள் திறக்கப்படுகின்றன. சில ஹைஸ்கூல்களுக்கு வாத்தியார்களே வந்து சேரவில்லை. பல இடங்களில் ஒழுங்காக அவை நடைபெறவில்லை. வகுப்புக்கு பத்து பேர், எட்டு பேர் என்று உட்கார்ந்திருக்கிறார்கள். இந்த மாதிரி எங்கே பார்த்தாலும் அதிகமாக ஹைஸ்கூல்களை ஏற்படுத்துவதைக் காட்டிலும் ஜில்லாவுக்கு குறிப்பிட்ட இடங்களில் சில ஹைஸ்கூல்கள் நல்ல முறையில் நடப்பதற்கு ஏற்பாடு செய்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் பகுதியில் கூட திடீரென்று ஹைஸ்கூல் புதிதாக ஆரம்பித்தார்கள். நான் சந்தோஷப்பட்டேன். ஆனால் வகுப்பில் எட்டு பத்து என்றுதான் மாணவர்கள் இருக்கிறார்கள். காங்கிரஸ் மகாநாட்டுக்கு ஸ்பெஷல் டெலிகேட்டுகள் போனது மாதிரி. மாணவர்கள் அதிகமாக வருகிறது இல்லை. ஆகவே அதை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தமிழ் வளர்ச்சி. அதைச் சிறப்பாக நிதி அமைச்சர் அவர்கள் கவனித்து வருவதுபற்றி நான் பெருமிதமும், மகிழ்ச்சியும் அடைகிறேன். காரணம் நான் ஒரு தமிழ்ப் பித்தன். தமிழ் வளர்ச்சியில் அவர் காட்டுகிற ஊக்கம் அனைத்தும் பாராட்டத் தக்கது. போற்றத் தக்கது. தமிழகம் பூரா அவரை இன்றும் என்றும் அதற்காகப் போற்றும். ஆனால் அதே சமயத்தில் ஒரு



11th March 1960] [Sri T. L. Sasivarna Thevar]

தகராறு வருகிறது. தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபடுகிறேன் என்கிறார். ஒரு சமயம் ஆங்கில வளர்ச்சிக்கும் பாடுபடுவதாகச் சொல்கிறார். இந்தி தேசிய மொழி. அதைப்பற்றி ஒரு பேச்சும் கிடையாது. தேசீய மொழியாகிய இந்திக்கும் நாம் என்ன செய்திருக்கிறோம். 1947-ம் வருஷத்தில் இருந்து நம் அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை. ஆங்கிலத்திற்கு உள்ள மகத்துவம் நமக்குத் தெரியும்.

கடைசியாக அமைச்சருடைய சுற்றுப் பிரயாணம் பற்றி தகவல்கள் தெரிவிக்க விரும்புகிறேன். நிறைய சுற்றுப்பிரயாணம் நடக்கிறது. சுற்றுப்பிரயாணம் நடப்பது கட்சியை வளர்க்க வேண்டுமென்பதற்காகவா அரசாங்கக் காரியங்களுக்காகவா என்று தெரியவில்லை. கட்சிப் பிரசாரமாக நடப்பதைக் கொஞ்சம் சுருக்கிக் கொண்டால் பரவாயில்லை. மாதத்திலே சற்றேறக் குறைய ஒவ்வொரு ஜில்லாவுக்கும் வந்துகொண்டே இருக்கிறார்கள். அதனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவர்களையே கவனிக்கவேண்டியிருக்கிறது. கலெக்டர், டி.எஸ்.பி. முதல் சிறு சிப்பந்திகள் வரை தங்கள் வேலையை விட்டுவிட்டு, இவர்களுடனேயே இருக்கவேண்டியிருக்கிறது. ஆதலால் பரிபூரணமாக பொது வேலை பாதிக்கப்படுகிறது. நான் குற்றம் சாட்டுவதாகச் சொல்லவில்லை. முடிந்த அளவு மாதத்தில் முதல் 5 நாள் அல்லது மாதக் கடைசியில் பத்து நாள் மந்திரிகள் சுற்றுப்பிரயாணம் செய்வதால், மற்ற நாட்களிலாவது உட்கார்ந்து வேலை பார்க்கலாம். மாதம் பூராவும் சுற்றுப்பிரயாணம் வந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மட்டுமல்ல, மத்திய சர்க்கார் மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் வருகிறார்கள், கவர்னரும் சுற்றுப்பிரயாணம் வருகிறார்கள். அந்தச் சமயத்தில் யாரும் எந்த வேலையையும் பார்க்க முடியாமல் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன.

கனம் முதல் அமைச்சர் அருப்புக்கோட்டைத் தேர்தலுக்கு வந்திருந்தார். அதுபற்றி, கலெக்டர் இடமிருந்து ஒரு 'ப்ரோக்ராம்' வந்தது. அதில் ஒவ்வொரு நாளும் குறிப்பிட்டு, இத்தனை மணிக்கு இந்த இந்த இடத்தில் வருகிறார் என்று கண்டிருந்தது. அந்தப் ப்ரோக்ராமைக் கையிலே வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். அருப்புக்கோட்டைத் தொகுதியில் தேர்தல் பிரசாரத்திற்காக அச்சடிக்கப்பட்டிருந்த நோட்டீசிலும் அதே நேரங்கள் குறிப்பிட்டிருந்தன. தேர்தல் பிரசாரத்திற்காக வருகிறார்களா? கலெக்டர் அனுப்பிய ப்ரோக்ராம்படி சர்க்கார் வேலைக்காக வருகிறார்களா என்பது தெரிந்துகொள்ள முடியாமல் இருந்தது. இம்மாதிரி பெரும் பகுதி சுற்றுப்பிரயாணம் அரசியல் கட்சி காரணங்களுக்காக இருக்கிறதேயொழிய வேறு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. வரையறையில்லாமல் இருக்கிறது. குற்றஞ்சாட்டத் தேவையில்லை என்றாலும், அரசியல் கட்சிக்காகத்தான் சுற்றுப்பிரயாணம் செய்தார் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும்.

THE HON. SRI K. KAMARAJ : அதில் ஒன்றும் தப்பு இல்லையே.

SRI T. L. SASIVARNA THEVAR : கட்சிக்காகச் சுற்றுப் பிரயாணம் வருவதால் தப்பு இல்லை என்று முதல் அமைச்சர் சொல்கிறார்கள். ஆனால், கேரளா எலெக்ஷனிலேகூட மந்திரிகள்

[Sri T. L. Sasivarna Thevar] [11th March 1960

தலையிடவில்லை. அதைப்பற்றி என்ன சொன்னபோதிலும்கூட நிச்சயமாக தங்களுக்குள்ள அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதாகத்தான் கருதுகிறேன்.

ஐயாயிரம் ரூபாய் பெறுமான கட்டிடத்தைத் திறந்துவைக்க 2,000 ரூபாய் செலவு செய்து ஏன் வரவேண்டும்? அங்கேயுள்ள சட்டசபை அங்கத்தினர்களே அத்தகைய திறப்பு விழாக்களை நடத்தலாமே. சிறு சிறு பாலங்கள் திறந்து வைப்பது, அவைகளை கொஞ்சம் தியாகிகள் திறந்து வைப்பதற்கு விட்டுவிடலாம். பெரிய திட்டங்களை அமைச்சர்கள் போன்றவர்கள் திறந்து வைக்கலாம்.

THE HON. SRI K. KAMARAJ : யார் வேண்டுமானாலும் திறந்து வைக்கலாம்.

SRI T. L. SASIVARNA THEVAR : உங்களைத்தான் கூப்பிடுகிறார்கள். எங்களைக் கூப்பிடுவதில்லை. எங்களைக் கூப்பிட்டுத் திறந்து வைக்கச் சொல்லவேண்டுமென்று எங்களுக்கு அபிலாஷை இல்லை, ஆசை இல்லை. உங்கள் சம்பந்தப்பட்ட எம்.எல்.ஏ.-க்களையே திறந்து வைக்கச் சொல்லுங்கள், ஆட்சேபணை இல்லை.

இரண்டாவது, நிர்வாகத்தில் தலையிடுவதுபற்றி பல காலமாகச் சொல்லி வருகிறேன். ஆட்சியில் உள்ள அதிகாரிகளின் வேலைகளில் தலையிடுதல் ஜாஸ்தியாக இருந்துகொண்டிருக்கிறது. எக்கச் சக்கமாகத் தலையிடுகிறார்கள். அதைப்பற்றிக்கேட்ட தகவல் நிச்சயமாகத் தெரிந்ததைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். மீனவர் கூட்டுறவு சொசைட்டி ஒன்று இருக்கிறது. கூட்டுறவு முறையில் கண்மாய் ஒன்றைத் துப்புரவு பண்ணவேண்டும் என்று உத்தரவு போடப்பட்டது. அந்த வேலை கூட்டுறவு ஸ்தாபனத்திற்குக் கொடுக்கப்பட்டது. பணம் கட்டியாய்விட்டது. பணம் கட்டினவுடனே தலையீடு ஏற்பட்டது. முதல் அமைச்சர் வந்திருக்கும் காலத்தில் கலெக்டரைக் கூப்பிட்டு எந்த முறையில் கொடுக்கவேண்டுமென்று சொன்னதாகக் கேள்விப்பட்டேன். அதன் பிறகு தனிப்பட்ட ஆளுக்குக் கொடுத்ததாகக் கேள்விப்படுகிறேன்.

THE HON. SRI K. KAMARAJ : யார் சொன்னார்கள்?

SRI T. L. SASIVARNA THEVAR : கேள்விப்பட்டதைச் சொல்லுகிறேன். விசாரித்தால் நன்றாகத் தெரியும். கூட்டுறவு சொசைட்டிக்கு மீன் பிடிக்கும் உரிமை கொடுக்கப்பட்டு, அதற்கு கலெக்டர் சம்மதித்திருந்தும் பின்னால் என்ன காரணத்தினாலோ கவர்ன்மெண்டிலிருந்து உத்தரவு வரவில்லை. மீன் பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள். கூட்டுறவு சொசைட்டிக்குப் பணம் போய்ச்சேரவில்லை. அரசியல் தலையீடு ஏற்பட்டதனால்தான் அம்மாதிரி ஏற்பட்டது என்றுகூடச் சொன்னார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : எந்த ஊரில் நடந்தது?

SRI T. L. SASIVARNA THEVAR ; மதுரை டவுனில்.



11th March 1960]

THE HON. SRI K. KAMARAJ : கனம் அங்கத்தினர் அவர்கள் தகவலைச் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை என்றே நினைக்கிறேன். தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று யாரிடத்திலும் சொல்லவில்லை. "பஞ்சாயத்துக்கு முதல் பிரபரன்ஸ் கொடுக்க வேண்டும். பஞ்சாயத்து சபையார் கேட்டால் அவர்களுக்குக் கொடுங்கள்" என்று சொல்லியிருக்கிறோம். பஞ்சாயத்துச் சட்டத்திலேயே அந்த ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது.

SRI T. L. SASIVARNA THEVAR : ஏற்கனவே இருக்கிற உத்தரவுப்படி கூட்டுறவு சொசைட்டிக்குக் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அதன்படி அதிகாரிகள் கொடுத்திருந்தும் மாற்றுவதற்கு உத்திரவு போட்டிருக்கிறதா என்று தெரிந்து கொள்ள இஷ்டப்படுகிறேன்.

ஆகவே இம்மாதிரி நிர்வாகத்துறையில் தலையீடு ஜாஸ்தியாக இருக்கிறது என்பதை பரிபூர்ணமாக சொல்லிக் கொள்ளுகிறேன். தலையீடு இல்லாமல் இருந்தால்தான் சொசைட்டியினுடைய நன்மை பரிபூர்ணமாக பாதுகாக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

* SRI V. K. KRISHNAMURTHY : கனம் சட்ட மன்றத்தின் சட்டநாதன் அவர்களே,

SRI P. S. CHINNADURAI : கனம் தலைவர் அவர்களே, சட்ட மன்றத்தில் சபைத் தலைவராக வீற்றிருக்கின்றவருடைய பெயரைக் குறிப்பிட்டு, எந்த கனம் அங்கத்தினராவது பேசலாமா என்று அறிய விரும்புகிறேன். அவ்வாறு பேசுவது முறையானதுதானா?

TEMPORARY, CHAIRMAN (SRI K. SATTANATHA KARAYALAR) : பெயரைக் குறிப்பிடுவது முறையல்ல. ஆனால் அந்த பெயருக்கு இரு பொருள் உள்ளதைக் குறிப்பிட்டிருப்பார் என்று எண்ணுகிறேன்.

SRI V. K. KRISHNAMURTHY : கனம் தலைவர் அவர்களே, ஸ்ரீ பி. எஸ். சின்னதுரை பொருள் பொதிந்த பேச்சின் பொருளை அறியாமல் எதிர்த்தமைக்கு வருந்துகிறேன், எனதுரையை ஆற்ற விழைகின்றேன்.

திருவும், தெளிவும் எதிர்மறை எனினும் உடன்பாடாயிலங்கும் அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் அமைத்த வரவு செலவுத் திட்டம் முன் இலங்குகிறது. பல்லாற்றானும் தமிழகம் தழைத்துத் திகழ நடைமுறைக்கேற்ற நல்லவகையில் அமைத்திருப்பது பாராட்டற்குரியது, வரவேற்கிறேன், பாராட்டுகிறேன், மகிழ்ச்சியுறுகிறேன். மற்ற வரவு செலவுத் திட்டங்களைப்போலல்லாமல் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியும் மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் மலர்ச்சியும் இரண்டறக் கலந்த அடிப்படையில் அமைந்திருக்கிறது.

வரியில்லா வரவு செலவுத் திட்டம், வரியகற்றிய வரவு செலவுத் திட்டம், மக்களின் மெய்குரலுக்குச் செவிமடுத்து காய், கறி, பழம், இலை இவை மீதிருந்த வரியகற்றியமை ஜனநாயக அறப்பணியின் எடுத்துக்காட்டு.

[Sri V. K. Krishnamurthy] [11th March 1960

வரிகள் சில்லாண்டுகளுக்கில்லை என்ற முன்னரே அமைச்சர் உரைத்தமை வருங்காலத்தைப்பற்றித் தெளிவுடனும் கூறியமை பாராட்டவல்லதே, மாற்றங்களும்—நிகழ்ச்சிகளும் தோன்றியிருப்பினும் வரி விதிக்காமலிருந்தமை வியத்தற்குரியதே.

விவசாயம், விவசாய வளர்ச்சியின் மீதே இந்நாட்டின் வளர்ச்சியமைந்துள்ளதையுணர்ந்து விவசாயத்திற்கு ஆவனபுரிய முனைந்திருப்பது வரவேற்கவல்லது. உணவு இல்லை என்னும் நிலை ஒழியவேண்டுமென்பதே இன்றியமையாத கொள்கை.

உணவு பற்றுக்குறை இன்று நேற்று ஏற்பட்டதன்று, சங்க காலம்—புறநானூற்றுக்காலம் முதல் பற்றுக்குறை இருந்ததென்பதற்குச் சான்று:

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே;
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப்படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு.

உடம்பும் உயிரும் படைத்திசினோரே (புறம்). அக்காலத்திலிருந்தே தொடர்ந்த பற்றுக்குறையை நீக்க பெரிய நீர்ப்பாசன அணைக் கட்டுகள் கட்டி முடித்திருப்பினும் அன்னிய நாட்டின் உதவி கோராமலும் எய்திருக்கிறோம்.

உரமில்லாக் காரணம்தான் உணவு தானியத்தின் உற்பத்திக் குறைவு என்பது தேற்றம். கழிவு, குப்பை, பசுந்தாள் உரம் முதலியவைகளைக்கொண்டு பயிர் வளர்ச்சிக்கு ஆவன செய்வதில் தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு தலைமையாகத் திகழ்கிறது. இக் குறைகளை களைத்தெறிவதற்கு நெய்வேலி அரண் செய்யும் என்பதோடு ஈடுசெய்யும் என்றுரைத்திருப்பது உவகையுற வைத்திருக்கிறது.

விவசாய வளர்ச்சிக்குரிய கல்வி நிலையங்கள்—ஆராய்ச்சி நிலையங்கள்—மண்வளச்சோதனை நிலையங்கள் அமைந்திருத்தல் நலமுறுதற்குரிய ஒன்றே.

நீரின்றியமையாததுலகமென்பதற்கேற்ப சிறு நீர்ப்பாசன திட்டங்கள் உடனடியாக செம்மையாக்கவேண்டும். ஆறு இருந்தும் நீரில்லா வடாற்காடு மாவட்டம் தமிழகத்தில் தஞ்சைக்கடுத்து உணவு உற்பத்தியில் இரண்டாவதாக விளங்குவதென்பது பெருமைக்குரிய ஒன்றே. விவசாயிகளின் அயரா உழைப்பே காரணம். போதிய உதவிகள் கிடைக்குமாயின் உணவு உற்பத்தியில் முன்னேற்றங்காணும். பாலாறு பேசின் ரூல்ஸ் என்ற சட்டத்தால் பம்பு செட்டு அமைக்கமுடியாமல் விவசாயிகள் தொல்லைப் படுகின்றனர். இத்தொல்லை தொலைய அமைச்சர் அவை ஒன்றுகூடி இதை ரத்து செய்யவேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன். இல்லையெனில் பலனில்லை.

மின்சாரம் மின்னல் வேகத்தில் பரவிய பெருமையிருப்பினும் இதில் ஒரு களங்கமிருக்கிறது. வேலூர் எலெக்டிரிக் கார்ப்பொரேஷனுடன் முட்டுக்கட்டை போடுகிறது. இதனால் பல கிராமங்கள்



11th March 1960] [Sri V. K. Krishnamurthy]

பாதிக்கப்படுகின்றன என்பதையுணர்ந்து விரைவில் விவசாயத்திற்கு பம்பு செட்டு அமைக்க மின்சாரம் வழங்க ஆவன செய்ய வேண்டுகிறேன்.

நெய்வேலி நிலக்கரியும், சேலம் இரும்புக்கனியும் இந்நாட்டுக் கைத்தொழிலுக்கு ஆவனபுரியும் என்பது ஏமமுறவைக்கிறது. நீலகிரியில் கச்சாபிலிம், ஆம்பூர், மதுராந்தகம் உடுமலைப்பேட்டை இவ்விடங்களில் சர்க்கரையாலை யந்திரங்கள், பட்டாபிராமில் இரயில் வாகன்கள் உற்பத்தி இவையாவும் கைத்தொழிலுக்கு எடுத்துக்காட்டு.

மக்கள் பெருக்கத்தைத் தடுக்க குடும்பக் கட்டுப்பாடு திட்டம் நிறைவேறினாலொழிய ஐந்தாண்டுத் திட்டங்கள் வெற்றிபெறா. ஆதலின் இத்திட்டத்தை வெற்றியுறவைக்க அரசாங்கம் ஆவன புரிய வேண்டுகிறேன்.

இவ்வாண்டு கல்விக்காக இரண்டு கோடி இருபது லட்சம் அதிகமாக ஒதுக்கியிருப்பது உயர்தனிச்சிறப்பே. தமிழ் வளர்ச்சிக்கென உரைத்திருப்பது பாராட்டுதற்குரியதொன்றே. தமிழ் வளர்ச்சியின் பெயரால் தளர்ச்சியும் உண்டு என்பதைக் கூறவிழைகிறேன். தமிழுக்கு சங்ககாலமுதல் எதிர்ப்பு இருந்தது. நக்கீரர் காலத்தும் மாதவச்சிவஞான யோகிகள் காலத்தும், சுந்தரம்பிள்ளை காலத்தும் நிலைத்த எதிர்ப்பு இருந்தது. மலையொத்த எதிர்ப்பு மறை மலை அடிகளுக்கும் இருந்தது. எனினும், தமிழ் மறைகளின் மறையாகவும், தமிழ்க்கலை மலைகளின் மலையாகவும் அப்பாலும் அடிசார்ந்த அடியார்களின் அடிகளாகவும் விளங்கிய மறைமலை அடிகள் தனித்தமிழ் வெற்றிகண்டு நிலைக்க வைத்தார்.

சாசர் கால முதல் பெட்ராண்ட்ரசல் காலம் வரையில் தோன்றி ஆங்கில உரைநடைப்புலவர்களின் உழைப்பால் உருவான உரைநடைக்கிடான தனித்தமிழ் உரைநடையை ஒரே மறைமலை அடிகள் கண்டார். "There is music in every line of it, if you have been blessed with an ear of music of prose." என்று ஜார்ஜ் பார்ரோ எழுதிய உரைநடைக்கு பாராட்டு இருப்பதைப்போல் மறைமலை அடிகளின் தமிழ் உரைநடையில் இனிய இசை இலங்கள் வெள்ளிடைமலை. வால்டர் பேட்டர் உரைநடையைப் பற்றி, "It is like music and has the character of poetry" என்று கூறுவதைப்போல் மறைமலை அடிகளின் உரைநடையில் இன்ப இசையும் செய்யுளியலின் சாயலும் விளங்கல் பாராட்டற்குரியது. இவர் யாத்த நூல்கள் நூல் நிலையங்களில் நுழையவில்லை.

பிறமொழிக் கலப்பே தமிழ் வளர்ச்சி என்று கூறுவது தமிழ் அழிவதாகும். சிலப்பதிகாரம் பிறந்த சேரநாடு. கற்றூர் ஏத்தும் கலித்தொகையில் பாலைக்கலி பிறந்த சேரநாடு—கண்ணகி வீடு பேறடைந்த சேரநாடு—சேரன் செங்குட்டுவன் வடநாட்டின் மீது படை எடுத்த சேரநாடு இன்று எந்நிலையில் இருக்கிறது. அங்கு தமிழ் இல்லை. பிறமொழியாம் மலையாளம் இருக்கிறது. தமிழ் தகைந்து மலையாளம் மிளிர்வது பிறமொழிகள் நுழைந்தமையால்.

ஆதலால் பிறமொழிக் கலப்பின்றி தனித்தமிழ் வளர ஆவனபுரிய அமைச்சரை வேண்டுகிறேன். சங்க காலத்திற்குப் பிறகு தனிப்பட்ட புலவர்கள் தமிழை வளர்த்தார்கள். இன்று தமிழ் மாநில அமைச்சர் அவை தமிழ் வளர ஆவன புரிவதற்குப் பாராட்டி குறிப்பாக கல்வி அமைச்சர் அவர்களுக்கு நன்றி நவின்று வணக்கத்துடன் விடைபெறுகிறேன்.

* SRI G. ANNAMALAI MUTHURAJA : சட்டமன்றத் தலைவர் அவர்களே. இன்றையதினம் சபை முன்னால் வைத்திருக்கும் இந்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக் குறை 34 லட்சமாக இருந்தபோதிலும் கூட புதிதாக ஒரு வரியும் போடாதபடி பட்ஜெட்டைக் கொண்டு வந்தது, எல்லோரும் ஆதரிக்கக்கூடிய விஷயமே. அதோடு கூட ஒரு வருடத்திற்கு முன்னால் விற்பனை வரி என்று காய்கறிகள், பழங்கள் போன்ற பதார்த்தங்களுக்கு புதிதாக ஒரு வரி போடப்பட்டது. அதை, இந்த வரவு செலவுத் திட்டத்தில் எடுத்தது பாராட்டக்கூடிய விஷயமே. அது, இந்த சபையில் உள்ளவர்கள் மட்டும் பாராட்டக் கூடிய விஷயமல்ல—சென்னை மாகாணம் பூராவிலும் இருக்கக் கூடிய எல்லோரும் பாராட்டக் கூடிய விஷயமாகும், அது. அப்படி ஒரு வரி போட்டு திரும்ப அடுத்த பட்ஜெட்டில் அதை எடுப்பது என்றால் அது மிகவும் கஷ்டமான காரியமாகும். எதிர்பாராத வகையில் எல்லோரையும் பாதிக்கக் கூடியதாக அது இருப்பதினால் அதை அவசியம் எடுக்க வேண்டுமென்று அமைச்சர்கள் எல்லோரும் கலந்தாலோசித்து அதை அவசியம் எடுக்கத்தான் வேண்டுமென்று தீர்மானித்து அதை எடுத்தது எல்லோரும் பெரிதும் பாராட்டக் கூடிய விஷயமே. அதுமட்டுமல்ல. அடுத்தபடியாக, விவசாயி களுக்கு என்னென்ன உதவிகள் செய்ய முடியுமோ, அவைகள் செய்யப்பட்டு வருகின்றன. முன்பு நிலம் உள்ளவர்களுக்குத்தான் கடன் கொடுத்து வேண்டிய உதவிகள் செய்து வந்தோம். ஆனால் இந்த பட்ஜெட்டில் நிலம் இல்லாதவர்களுக்கும், சாதாரணமாக குத்தகைக்கு நிலங்களை எடுத்து சாகுபடி செய்கிறவர்களுக்கும் கடன் கொடுத்து, அவர்களுக்கும் ஆதரவு கொடுக்க வேண்டுமென்று புதிதாக ஒரு திட்டத்தை இப்பொழுது கொண்டு வந்திருக்கிறார்கள். அதுவும் முக்கியமான விஷயம். விவசாயத்தை நல்ல முறையில் விருத்தி செய்வதற்கு வேண்டிய திட்டங்களை தயார் செய்து கொண்டு வந்திருப்பது பாராட்டத் தக்க விஷயமே. அடுத்த படியாக, சிலயிடங்களில், திருச்சி ஜில்லாவைப் பொறுத்தவரையில் அங்குள்ள சில கிராமங்களுக்கு மின்சார அமைச்சர் அவர்கள் கூட நானும் போயிருந்தேன். புள்ளம்பாடி கால்வாய், மேட்டூர் வாய்க்கால் இவைகள் வெட்டப்பட்டு விவசாயத்திற்கு தண்ணீர் விட்டார்கள். அந்த இடங்களை நான், திருச்சி எம்.எல்.ஏ.-க்கள் சிலரும், அதாவது லாஸர், சுப்பையா அவர்களும், வாசுதேவன் அவர்களும் வந்திருந்தார்கள். ஆக, நாங்கள் பத்துப் பேர்கள் அந்தத் திட்டங்களை சுற்றிப் பார்க்க வேண்டுமென்று போயிருந் தோம். அந்த டிப்பார்ட்மென்ட் என்ஜினியரும் வந்திருந்தார்கள். ஒரு நாள் காலையில் புறப்பட்டு இரவு 12 மணி வரையில் சுற்றிப் பார்த்தோம். 120 மைல்கள் சுற்றிப் பார்த்ததில் ஏராளமான





குளங்களில் நல்லபடி தண்ணீர் நிரப்பப்பட்டு நல்லபடியாக விவசாயம் செய்து வருவதைப் பார்த்தோம். புதிதாக கால்வாய் கள் வெட்டியிருப்பதால், புதிதாக விவசாயிகள் ஏராளமான அளவுக்கு சாகுபடி செய்ய வருவதால் விவசாயிகளுக்கு உரம் தாராளமாக, அதிகப்படியாகக் கிடைப்பதற்கு வேண்டிய திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நெய்வேலியில் இந்த உரங்களை தயார் செய்கிறார்கள். ஆகவே, விவசாயிகளுக்கு நல்ல முறையில் ஏராளமாக உரம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த சல்பேட் போன்ற உரங்கள் விவசாயிகளுக்கு முன்பு வியாபாரிகள் மூலம் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் சென்ற வருடம் ஆர்.டீ.ஓ. அல்லது தாசில்தார் இவர்கள் மூலம் விவசாயிகளுக்கு உரம் கொடுக்கப்பட வேண்டும் என்று திருச்சி கலெக்டர் உத்தரவு போட்டார்கள். ஆக, இந்த வருடத்திலும் விவசாயிகள் தாசில்தாரிடமே நேரில் சென்று கேட்டு உரங்கள் வாங்கிக் கொள்வதற்கு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, உரங்கள் நல்ல முறையில் அதிகமான விலைக் கொடுத்து வாங்காமல் கண்ட்ரோல் ரேட்டுக்கே விவசாயி களுக்கு கொடுக்கப் பட்டதற்கு நான் அரசாங்கத்தை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அதேபோல் இனியும் விவசாயிகளுக்கு நல்ல முறையில் நியாயமான விலையில் சல்பேட் போன்ற உரம் கிடைக்கச் செய்வதற்கு சர்க்கார் உதவி புரிய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தப்படியாக, பால் போன்ற சில பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படவில்லை, என்று சிலர் குறை கூறிக் கொண்டிருக் கிறார்கள். ஆகவே, கூடுமான வரையில் சீக்கிரம் கெட்டுப் போகும் வஸ்துக்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க, அமைச்சர் அவர்கள் ஆலோசித்து கூடுமான வரையில் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI P. U. SHANMUGAM : சட்டமன்ற தாற்காலிகத் தலைவர் அவர்களே, சென்னை அரசாங்கத்தின் 1960-61-ம் வருடத்திய நிதி நிலை அறிக்கை இந்த மாமன்றத்தின் முன் தாக்கல் செய்யப்பட்டு, விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் இந்த சந்தர்ப்பத்தில் நான் எனது கருத்துக்களை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பொதுவாக, வழக்கம் போல் ஒவ்வொரு முறையும் செய்வது போல் இந்த முறையும் நிதிநிலை அறிக்கை மூலம் இந்த மாமன்றத்தின் கவனத்தை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் திருப்பி விட்டு வரவு செலவுத் திட்டத்திலுள்ள குறைபாடுகளை மூடி மறைத்திருக்கிறார்கள் என்று நான் குற்றம் சாட்டுகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தின் ஆரம்பத்தில் நிதியமைச்சர் அவர்கள் புதிதாக வரி ஒன்றும் போடவில்லை என்று சொல்லியதும் அங்கத் தினர்கள் பெருமையோடு கரம் தட்டினார்கள். அதை, உள்ள படியே நானும் பாராட்டுகிறேன். ஆனால் மேலும் வரி போடுவதற்கு இவர்களுக்கு வழியில்லை என்ற காரணத்தினால்தான், வேறு வழி கிடைக்காத காரணத்தினால்தான் புது வரி போடவில்லை. வரி போட வழியிருந்து வரி போடாமல் விட்டு விட்டார்கள் என்று சொல்ல முடியாது.

(கனம் ஸ்ரீ ஆர். வெங்கட்ராமன்: வழியிருந்தால் போடலாமா?) நான் சொல்வதை தயவு செய்து கேளுங்கள். இப்பொழுதுதான் மத்திய அரசாங்கம் 23 கோடி ரூபாய்க்கு மேல் வரிகள் போட்டு நாட்டு மக்களை கசக்கியிருக்கிறார்கள். இந்த நிலையில் மேலும் வரி போட்டு நாட்டு மக்களின் பெரும் அதிருப்திக்கு ஆளாகக் கூடாது என்பதற்காகத்தான் வரி போடாமல் விட்டு விட்டிருக்கிறார்களே தவிர இல்லாவிட்டால் கடன் எழுப்புவதை விட இந்த சர்க்கார் வரிதான் போட்டிருக்கும் என்று நான் நம்புகிறேன்.

10-30 a.m. வழி இருந்தால் இனிமேல் போட்டாலும் போடுவார்கள். ஆனால் இப்போதுள்ள நிலையில் எதை விட்டுவைத்திருக்கிறார்கள்(?). எல்லாவற்றிற்கும் வரிகளை போட்டாய்விட்டது. இனிமேல் வரி போடுவதற்கு ஒன்றுமில்லை. சைக்கிளை எடுத்துக்கொண்டால் இனிமேல் "ஸ்போக்ஸ்"-க்குத்தான் வரி போடவேண்டும், வீல், ரிம் இவைகளுக்கு எல்லாம் ஏற்கனவே வரி போட்டாய் விட்டது. பொதுவாக இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஏற்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பற்றி சிறப்பாக பெருமையாக நமது நிதி மந்திரியார் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதில் குறிப்பாக இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஒதுக்கியிருந்த பணத்திற்கு அதிகமாக பணம் செலவழித்திருக்கிறோம் என்று பெருமையாக சொல்லியிருக்கிறார்கள். பணம் அதிகமாக செலவு செய்யப்பட்டிருக்கிறதா இல்லையா என்பது பற்றி பிரச்னை அல்ல, ஆனால் செலவழித்த பணத்திற்கு தகுந்தபடி என்ன பலன் ஏற்பட்டிருக்கிறது. இதை சர்க்கார் ஆராய்ந்து பார்க்கவேண்டும். பற்பல திட்டங்கள் போட்டுக் கொண்டிருந்தாலும்கூட விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. இதன் காரணமாக பாதிக்கப்படக்கூடியவர்கள் ஏழை மக்கள் மட்டுமல்ல, நடுத்தர குடும்பங்கள்கூட என்பது நாடு அறிந்த உண்மையாகும். ஆகவே இன்னும் அதிகமான திட்டங்களைப் போடப்போட அதிகமான அளவில் மக்களைப் பாதிக்கக்கூடிய வகையில்தான் இருந்து கொண்டிருக்கின்றன. வழக்கமாக நிதி அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கின்ற நேரத்தில் நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற விலைவாசி உயர்வைப்பற்றி மெத்த கவலைப்படுவதாக தெரிவிப்பது உண்டு. ஆனால் இவ்வாண்டு அவ்விதம் கவலை தெரிவிப்பதாக சொல்லப்படவில்லை. அதே நேரத்தில் எந்த விதத்திலாவது இதை கட்டுபடுத்தியே தீர வேண்டும் என்று சொல்லி, வேறு எந்த விதமான யோசனையையும் சொல்லாமல் விட்டு வைத்திருக்கிறார்கள். விலைவாசியை கட்டுபடுத்துவதற்கு இவர்கள் என்ன திட்டத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று இதிலிருந்து தெரியவில்லை. பொதுவாக இரண்டாவது ஐந்தாண்டு திட்டங்களிலுள்ள வேலைகளைப்பற்றி யெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதே நேரத்தில் தங்கள் மூலம் நான் அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறேன், இவ்விதம் இரண்டாவது ஐந்தாண்டு திட்டங்களிலுள்ள வேலைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி அரசாங்கத்தில் ஏற்பட்டிருக்கின்ற தோல்விகளை எல்லாம் மூடி மறைத்திருப்பதன் காரணம் என்ன என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். சென்ற ஆண்டு அதாவது 1959-60-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கை



தாக்கல் செய்தபோது இந்த மாநிலத்திற்கு 2.15 லட்சம் டன் உரம் வழங்க திட்டமிடப் பட்டிருக்கிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டில் சொல்லப்பட்டிருப்பதை பார்க்கும்போது ஒரு லட்சம் டன்தான் வழங்கியிருப்பதாக கூறியிருக்கிறார்கள். இவ்வளவு குறைவு ஏற்பட்டதற்கு என்ன காரணம்? இரண்டு லட்சம் டன் என்று திட்டமிட்டுவிட்டு இப்போது ஒரு லட்சம் டன்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அதே போன்று தான் சென்ற ஆண்டில் நாட்டில் 360 விதைப்பண்ணைகள் ஏற்படுத்தப் போவதாக சொல்லப்பட்டது. ஆனால் இப்போது இருப்பதைப் பார்த்தால் 190 விதைப்பண்ணைகள்தான் இயங்கி வருகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே போல்தான் 1957-58-ல் பாபநாசத்தில் காகிதத் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டி ருந்தது ஆனால் அதைப்பற்றி இப்போது ஒன்றுமே தெரியவில்லை. சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இரண்டு நூல் நூற்பு ஆலை ஆரம்பமாக இருக்கின்றன என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள் அதைப்பற்றி இப்போது ஒன்றுமே சொல்லவில்லை. அதேபோல் பல துறைகளிலும் சர்க்கார் அடைந்திருக்கிற தோல்விகளை இதில் மூடி மறைத்திருக்கிறார்கள் என்று நான் குற்றஞ் சாட்டுகிறேன். கைத்தறிக்கு உதவி செய்வதற்காக சுமார் 81 லட்சம் ரூபாய் சென்ற ஆண்டு ரிபேட் என்ற இனத்தில் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது அது 75 லட்சமாக குறைந்து இருக்கிறது. அதேபோல் இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் இரண்டு லட்சம் தறிகளை கூட்டுறவு அடிப்படையில் கொண்டு வரவேண்டும் என்று திட்டமிடப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டது. ஆனால் இந்த திட்ட கால இறுதிக்குள் 93,000 தறிகள்தான் கொண்டு வர முடியும் என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. இதற்காக மத்திய சர்க்காரிடமிருந்து கிடைக்கக்கூடிய உதவியை சரியான முறையில் வாங்கியிருக்கிறார்களா என்பதைப் பார்த்தால் ஒழுங்கான முறையில் வாங்கவில்லை என்று நான் தங்கள் மூலம் இந்த சர்க்காரை குற்றஞ்சாட்டுகிறேன். அதேபோல்தான் ரோடுகள் எல்லாம் சரியான முறையில் செப்பனிடப்படவில்லை பொதுவாக ரோடுகள் எல்லாம் பெரும்பாலும் பழுதடைந்து இருக்கின்றன என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள் இதற்காக மத்திய சர்க்காரிடமிருந்து ஒழுங்கான முறையில் மாநில சர்க்கார் மான்யத்தை பெற்றுக்கொள்ள தவறி விட்டது என்று நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். 1957-58-ல் இதற்காக 22 லட்சம் ரூபாய் வரும் என்று திட்டமிட்டிருந்தார்கள். ஆனால் 12 லட்சம்தான் வாங்கியிருக்கிறார்கள். அதேபோல் 1958-59-ல் 20 லட்சம் என்று சொல்லப்பட்டிருந்தும் மூன்று லட்சம்தான் வாங்கியிருக்கிறார்கள். அதேபோல்தான் சென்ற ஆண்டு 17 லட்சம் மான்யமாக வரும் என்று எண்ணினார்கள். ஆனால் 9 லட்சம்தான் வந்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி 22 லட்சம், 20 லட்சம், 17 லட்சம் என்று மான்யம் ஒதுக்கப் பட்டிருந்தும் 12 லட்சம், 9 லட்சம், 3 லட்சம் என்று குறைவாகத் தான் வாங்க முடிகிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் என்ன? இந்தத் தொகையை வாங்குவதற்கு சர்க்கார் ஏ

தயங்குகிறது? அல்லது வாங்குவதற்கு ஏன் தயக்கம் காட்டுகிறது என்று நான் தங்கள் மூலம் கேட்க விரும்புகிறேன். எனவே இந்த மான்யத் தொகையை எல்லாம் மத்திய சர்க்காரிடமிருந்து மாநில சர்க்கார் வாங்குவதற்கு தவறியிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதேபோல்தான் இப்போது மத்திய சர்க்காரிடம் நான்கு சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்தும்படி கேட்டிருக்கிறோம் என்றும் அது கிடைக்கும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் வடஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலையில் ஒரு சர்க்கரை ஆலை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டிருந்தார்கள் அங்குள்ள மக்கள். கனம் அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் அங்கு வந்திருந்தபோதும் இதைப்பற்றி கேட்டபோது ஆறு சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்துமாறு மத்திய சர்க்காரிடத்தில் கேட்டு எழுதியிருக்கிறோம். அவ்விதம் ஆறு வந்தால் அதில் ஒன்று திருவண்ணாமலையில் ஏற்படுத்தலாம் என்று சொல்லிவிட்டு வந்தார்கள். அப்போது ஆறு சர்க்கரை ஆலைகளுக்கு எழுதியிருப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் இன்றையதினம் நான்கு ஆலைகள் துவக்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பாக்கி இரண்டு ஆலைகள் வருமா அதைப்பற்றி மத்திய சர்க்காரிடத்தில் கேட்கப்பட்டிருக்கிறதா என்பதைப் பற்றி ஒன்றும் தெரிவிக்கப்படவில்லை. அதைப்பற்றித் தெளிவாக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு முக்கியமாக நம் நிலைமையை நன்றாக எடுத்துரைத்து மத்திய சர்க்காரிடத்திலிருந்து பாக்கி இரண்டு ஆலைகளையும் ஏற்படுத்துவதற்கு வழி செய்தாக வேண்டும். 1957-58-ல் தந்த நிதி நிலை அறிக்கையில் சேலத்தில் "லோ ஷாப்ட் பர்னர்ஸ்" ஒன்று ஆரம்பிக்க அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது. இதுவரை அந்த வேலை ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரிகிறது. அதேபோன்று அங்கு ஒரு அலுமினியத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் என்று சொல்லப்பட்டதும் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. சென்ற ஆண்டு நீலகிரியில் கச்சா பிலிம் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்துவதற்காக கிழக்கு ஜெர்மனி கம்பெனியுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால் இந்த முறை பார்க்கும்போது பிரஞ்சு கம்பெனி ஒன்றுடன் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கிறது, அது முடிந்துவிடும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் . . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM: "கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

SRI P. U. SHANMUGAM: ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தால், அதை விரைவிலேயே ஏற்படுத்துவதற்கு மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு என்னுடைய உரையை முடிக்கும் முன்பாக நான் முக்கியமாக எடுத்துக்கூற விரும்புவது சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு மத்திய சர்க்காரை நாம் வற்புறுத்த வேண்டும். இதற்காக எல்லாக் கட்சிகளும் கட்சி வித்தியாசமில்லாமல் ஒன்றுபட்டு நின்று பாடுபட்டால் ஒழிய சேலத்தில் கனரக, இரும்புத் தொழிற்சாலை ஏற்பட முடியாது. சேலத்தில் இரும்பு





இருக்கிறதா என்று கேட்டதுபோய், சேலத்தில் கிடைக்கிறது, இது மட்டமானது என்று சொன்னதுபோய், சேலத்தில் இத்தனை சதவிகிதம்தான் இரும்பு கிடைக்கிறது என்று சொன்னதும்போய் இப்போது உலகத்திலுள்ள இரும்பையெல்லாம்விட சேலத்திலுள்ள இரும்பு மேலானது என்று சொல்லும் அளவுக்கு நிலைமை வந்திருக்கிறது. இந்த நிலையில் நாம் இதை வற்புறுத்தாமல் விட்டு வைத்து விட்டால் இந்த இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்தப்படாமல் விட்டு போகக்கூடும். அதோடு தென்னகம் பெறவேண்டிய பங்கையும் பெற்றுக்கொள்ளத் தவறிவிடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாமன்றத்திலுள்ள எல்லா அங்கத்தினர்களையும் நான் தங்கள் மூலம் கேட்டுக்கொள்ளுகின்றேன். சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியமான காரியம், இம்மாதிரியான காரியங்களை நிறைவேற்றுவதற்காக பிற மாகாணங்களில் எல்லாம் எல்லாக் கட்சிகளும் போராட்டம் நடத்துவதை நாம் பார்க்கிறோம். எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டும் என்று எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து போராட்டம் நடத்தி வெற்றி கண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். அவ்விதமானால் நாமும் ஏன் சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டும் என்று போராட்டம் நடத்தக்கூடாது? அவ்விதம் போராட்டம் நடத்தி நாமும் ஏன் ஒரு இரும்புத் தொழிற்சாலையைக் கொண்டுவரக் கூடாது என்று கேட்கிறேன். மத்திய சர்க்காரை நாம் தக்கபடி தட்டிக் கேட்காவிட்டால் இத்திட்டம் மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறாமல் போய்விடும். அதன்மூலம் நாம் ஏமாற்றப்பட்டவர்களாவோம். நாம் வஞ்சிக்கப்பட்டவர்களாவோம். ஆகவே தெற்கே கனரகத் தொழிற்சாலைகள் குறைவாகத்தான் இருக்கின்றன என்று சொல்வதோடு நின்று விடாமல் தெற்கே அதிகமான தொழிற்சாலைகளை ஏற்படுத்தி தென்னகத்தை தொழில் பிராந்தியமாக்க முயற்சி எடுக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொண்டு என்னுரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

SRI C. R. RAMASWAMI: கனம் தலைவர் அவர்களே, ஒன்பது வருஷ காலமாக இந்த சபையின் முன்பு இந்த சர்க்காரின் வரவு செலவுத் திட்டத்தை வருஷா வருஷம் நமது இதே நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்து வருகின்றார்கள். நமது அரசாங்கம் நல்ல முறையில் நடந்து வருகிறது. அதற்காக நாம் அவர்களைப் பாராட்ட வேண்டும். அதிலும் முக்கியமாக சென்ற ஐந்து வருஷ காலங்களில் நமது மாகாணம் பல விதத்தில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. இதைப் பார்த்து நாம் மிகவும் மகிழ்ச்சி அடைய வேண்டும். அதோடு, சரியான முறையில் செலவு செய்திருக்கிறார்கள். நல்ல முறையில் எல்லாத் துறைகளிலும் தக்க கவனம் செலுத்தியிருப்பதைப் பார்த்து நாம் எல்லோரும் அவர்களுக்குப் பாராட்டு தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக நமது மாகாணம் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. அதை ஒவ்வொரு அம்சமாகப் பார்ப்போமானால், அதில் எந்த துறையை

எடுத்துக் கொண்டாலும் சரி, அதில் நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறது, அதில் இதர மாகாணங்கள் எல்லாவற்றையும் விட நாம் குறைந்து இருக்கிறோம் என்று சொல்லவே முடியாது. அதிலும் முக்கியமாக நமது வரிகளை எடுத்துக் கொள்ளுங்கள். வரிகளையும் குறைவாகப் போட்டு அரசாங்கத்தை நடத்தி வருகிறார்கள். எல்லாத் துறையிலும் போட்டிருக்கக் கூடிய வரிகள் குன்றவாகத்தான் இருக்கிறது. மற்ற மாகாணங்களைவிடக் குறைவாகத்தான் போட்டிருக்கிறார்கள். இப்போதுகூட காய்கறிகள் மீது உள்ள வரி வேண்டாமென்று மக்கள் சொல்லுகிறார்கள் என்று அதை உணர்ந்து இப்போது எடுத்துவிட்டார்கள். மக்களுக்கு எது நல்லதாக இருக்கும், எது நன்மையாக இருக்கும் என்று உணர்ந்து அவர்கள் வேலை பார்த்து வருகிறார்கள். நாம் அவர்களை நிச்சயம் பாராட்டவேண்டும்.

இத்தருணத்தில் ஒரு சிறிய விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது இருக்கிற விற்பனை வரியினால் சென்னை ராஜ்ய இண்டஸ்ட்ரிகளுக்கு மிகுந்த பாதகம் ஏற்படுகிறது. எப்படி என்றால் இந்த மாகாணத்தில் பொருள்களுக்கு 6 சதவிகிதம் வரி கொடுக்க வேண்டியிருக்கிறது. சென்னை ராஜ்யத்திலுள்ள இண்டஸ்ரிகள் டெண்டர் போட்டாலும் 6 சதவிகிதம் வரி போடுவதால் டெண்டர் அதிகமாக ஆகிவிடுகிறது. அதனால் இவர்களுடைய டெண்டர்களை ரிஜெக்ட் செய்து விடுகிறார்கள். அதனால் இந்த ராஜ்யத்தில் உற்பத்தியாகக்கூடிய பொருள்களை விற்பனை செய்வதில் கஷ்டம் ஏற்படுகிறது. சிலர் கேட்கலாம், நம் ராஜ்யப் பொருள்களை இதர ராஜ்யங்களில் ஏன் விற்கக்கூடாது என்று. அப்படி விற்பதிலும் கஷ்டமாக இருக்கிறது. பெங்களூரில் உற்பத்தியாகக்கூடிய டிரான்ஸ்பார்மர்கள் நமது மாகாணத்தில் சுலபமாக விற்பனை ஆகிறது. அதே நேரத்தில் நமது சென்னை மாகாணத்தில் உற்பத்தியாகக்கூடிய பொருள்களை விற்பனை செய்வதில் கஷ்டம் இருக்கிறது. இதை நமது சர்க்கார் கவனித்து ஏதாவது செய்ய முடியுமா என்று பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதிலே இன்னொன்று ஒரு முனை வரிக்கு பதில் பல முனை வரி வேண்டுமென்று வியாபாரிகள் கேட்கிறார்கள். எல்லாப் பொருள்களுக்கும் இதை மாற்றுவது கஷ்டமாக இருக்கலாம். இருந்தாலும் ஓரளவுக்காவது இதைச் செய்தால் நன்றாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

விலைவாசி உயர்வைப் பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். இப்போது சொல்லப்படுகிற "டெவலப்பிங் இக்கானமி" யில் விலையேற்றம் இருக்கத்தான் இருக்கும். விலைவாசிகள் குறைவாக இருக்கவேண்டுமென்று சொன்னால் உற்பத்தி அதிகமாக இருக்க வேண்டும். உற்பத்தியை அதிகப்படுத்த நமது அரசாங்கம் எல்லா முயற்சிகளையும் செய்துகொண்டு வருகிறார்கள். இப்போது உணவுப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்து வருகிறார்கள். இருந்தும் போதிய அளவு உரம் இல்லாததால் இன்னும் உற்பத்தி அதிகமாக இல்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் விலைவாசிகள் நிச்சயமாகக் குறையும் என்று நான் நம்புகிறேன். விலைவாசிகளின் உயர்வுக்கு நம் மாகாண சர்க்காரை மட்டும் குறை





சொல்ல முடியாது. மத்திய சர்க்காரின் "மானெட்டரி பாலிஸி"யைப் பார்க்கவேண்டும். "ஆல் இன்டியா பாலிஸி"யாகப் பார்க்க வேண்டுமே தவிர நமது மாகாண அரசாங்கத்தைக் குறை கூறுவது சரியல்ல. மொத்தமாக, தேசம் பூராவிற்குமான "மானெட்டரி பாலிஸி"-யைப் பார்க்க வேண்டும். அதைப் பார்த்து ஏன் விலைவாசி அதிகமாகப் போகிறது? இதற்குக் காரணம் என்ன? அவர்களுடைய பாலிஸி என்ன? "டெபிஸிட் பைனான்ஸிங்" என்று சொல்லுகிறார்களே அது சரியா? அது வேண்டுமா? அல்லது வேண்டாமா? இதையெல்லாம் கவனிக்க வேண்டும். இதற்கு ஒரு நிபுணர்கள் கமிட்டி போட்டு விலைவாசிகளை எப்படிக் கட்டுப்படுத்துவது என்று பார்த்து கட்டுப்படுத்த வேண்டும். விலைவாசிகளை நல்ல முறையில் கட்டுப்படுத்தினால்தான் மக்களுக்குத் திருப்தி ஏற்படும் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகையால் இதற்கான நடவடிக்கைகள் எடுப்பதில் நமது சர்க்காரும் முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறேன்.

இப்போது ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நமது சென்னை நகரம் ஒரு பெரிய நகரம்—ஒரு முக்கியமான நகரம். வெளி நாடுகளிலிருந்து வரக்கூடியவர்கள் நமது சென்னை நகரத்திற்கு வருகிறார்கள். பல தலைவர்களெல்லாம் சென்னைக்கு வருகிறார்கள். சென்னை நகரத்தை "ஸிட்டி பியூட்டிபுல்" என்று சொல்லுகிறார்கள். சென்னை நகரத்தின் பராமரிப்பு எப்படி இருக்கிறது என்றால்—கண்காணிப்பு எந்த நிலையில் இருக்கிறது என்றால்—மிகவும் மோசமான நிலையில் போய்க் கொண்டிருக்கிறது. நிதி அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள் "இதைச் செய்து விட்டோம், அதைச் செய்து விட்டோம், எல்லாத் துறைகளிலும் முன்னேறி விட்டோம்" என்று. எவ்வளவு திட்டம் போட்டும் சென்னை நகரமானது மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. இந்த நகரத்தில் இருக்கக்கூடிய எல்லா சௌகரியங்களும் வர வரக் குறைந்து வருகிறதே தவிர, முன் காலத்தில் "ஸிட்டி பியூட்டிபுல்" என்று சொல்லப்பட்ட நிலையில் இல்லை. இப்போது நகரத்திலுள்ள ரோடுகள் சரியாக இல்லை—சகிக்க முடியாத நிலையில் இருக்கிறது. சாக்கடைகள் சரியாக இல்லை. சாக்கடைகளையெல்லாம் பக்கிங்ஹாம் கால்வாயில் விட்டு விடுகிறார்கள். கொசுக்கள் அதிகமாகிவிட்டன. இங்குள்ள அங்கத்தினர்களுக்கும் இது நன்றாகத் தெரியுமென்று நினைக்கிறேன். டிஸம்பர், ஜனவரி மாதங்களில் இங்கு இருந்தவர்களுக்கு இது நன்றாகத் தெரியும். இப்போது நிறைய கொசுக்களை உண்டாக்கியிருக்கிறார்கள். சென்னை நகர கார்ப்பொரேஷனின் நிர்வாகம் மோசமான நிலையில் இருக்கிறது. "லோகல் செல்ப் கவர்ன்மெண்ட்" என்ற முறையில் எங்களுக்குப் பொறுப்பு கிடையாது, அவர்கள்தான் எல்லாவற்றையும் பார்க்க வேண்டும் என்று சொல்வது தவறு. இதிலே அரசாங்கத்திற்கும் பொறுப்பு இருக்கிறது. இங்குள்ள எல்லா அங்கத்தினர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதை அரசாங்கம் நன்றாகக் கவனிக்க வேண்டும். இப்போது கொசு அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது.

எத்தகைய காரியங்களுக்காகக் கடிதம் போட்டாலும் கவனிக்கப் படாமல் இருக்கிறது. இப்போது மைலாப்பூரிலேயே கொசுக்கள் அதிகமாக இருக்கிறது.

(Mr. Speaker in the Chair.)

சென்னை நகரத்திலுள்ள ரோடுகளை எடுத்துக் கொண்டாலும் கவனிப்பதே கிடையாது. நல்ல முறையில் தேர்தல் நடத்தி நல்ல முறையில் செய்து விட்டோம் என்று நினைப்பது தவறு. இப்போது கார்ப்பொரேஷனில் "அமெச்சூரிஷ் பாலிட்டீஷியன்ஸ்" என்று சொல்லக் கூடியவர்கள் இருந்துகொண்டு நிர்வாகத்தை நடத்தி வருகிறார்கள். அவர்களுக்கு நல்ல முறையில் விஷயம் தெரியாமல் நிர்வாகம் செய்து வருகிறார்கள். ஆகையால் நமது அரசாங்கம் அவர்களுக்குச் சொல்லி நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்த அவர்கள் திருத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI A. GOVINDASAMY: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார், கார்ப்பொரேஷனை நிர்வகிப்பவர்கள் சரியாக நடத்தவில்லை என்று சொல்வதும், தவறு செய்கிறார்கள் என்று சொல்வதும் சரியா என்று கேட்க விரும்புகிறேன்.

MR. SPEAKER: பட்ஜெட் விவாதத்தில் சொல்லலாம். ரோடுகள் விஷயத்திலும் மற்ற விஷயத்திலும் கார்பொரேஷனுக்கு அரசாங்கத்திலிருந்து பணம் கொடுக்கிறோம். ஆகையால் அதைப் பற்றி விவாதிப்பதற்கு சட்ட சபைக்கு அதிகாரம் இருக்கிறது.

SRI A. V. P. ASAITHAMBI: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், கார்ப்பொரேஷன் நிர்வாகத்தைப்பற்றிச் சொல்லும்போது "அமெச்சூர்" நடிகர் போன்று என்று சொன்னார்களே, அந்த மாதிரி சொல்லலாமா?

THE HON. SRI C. SUBRAMANIAM எப்போதும் அவர்களுக்கே குத்திக் கொண்டிருக்கிறது. "அமெச்சூரிஷ் பாலிட்டீஷியன்ஸ்" என்றுதான் சொன்னார்கள். ஆனால் நடிகர்தான் அவர் மனதில் எப்போதும் இருக்கிறது.

MR. SPEAKER: சபாநாயகருடைய பொறுப்பு என்னவென்றால், சொன்ன வார்த்தை "பார்லிமெண்டரி"-யா அல்லது "அன்-பார்லிமெண்டரி"-யா என்று பார்ப்பதுதான். அவர்களுக்கு "பிட்" ஆகிறதா இல்லையா என்று தெரியாது.

It is perfectly parliamentary; there is nothing wrong in it.

SRI M. P. SUBRAMANIAM: Can a Member in this House cast aspersions on persons who are Members of some other body and who cannot defend themselves here? The hon. Member is casting aspersions on members of some other constitutional body who are not members of this House.

MR. SPEAKER: I have given a ruling on the point raised by the hon. Member, Mr. Asaithambi, that as long as this House votes some money to be utilised by some other body, this Assembly has a right to discuss whether the money is properly utilised or





not. If the hon. Member uses unparliamentary expressions, I will check him. But he has not used any nor has he mentioned by name any individual. He has mentioned only the institution and he is right. He may continue his speech.

SRI C. R. RAMASWAMI: அரசாங்கத்திற்கு இதிலே பொறுப்பு இருக்கிறது. கார்பொரேஷனை நிர்வகிக்கும்—கார்ப்பொரேஷனில் அங்கம் வகிக்கும்—கட்சியைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. அரசாங்கத்தின் முக்கிய பொறுப்பு சென்னை நகரத்தை நல்ல முறையில் கண்காணிக்க வேண்டும், நல்ல முறையில் பராமரிக்கவேண்டும். நல்ல விதமாகக் கவனித்து "ஸிட்டி பியூட்டிபுல்" ஆக அமைக்கவேண்டும் என்பது. நிச்சயமாக இதிலே அரசாங்கத்திற்கு பொறுப்பு இருக்கிறது. நிதி அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், அதைச் செய்துவிட்டேன், இதைச் செய்து விட்டேன் என்று. சென்னை நகரத்தின் தோற்றத்தையே பூராவிலும் மாற்றி விட்டேன் என்று சொல்லுவதில் என்ன பிரயோசனம்? எத்தனையோ பெரிய மனிதர்கள் சென்னை நகரத்திற்கு வருகிறார்கள். வெளிநாடுகளிலிருந்தெல்லாம் வருகிறார்கள். நல்ல முறையில் ரோடுகளை அமைத்து, நாற்றம் இல்லாமல் வைக்கவேண்டாமா? இதிலே அரசாங்கத்திற்கு பொறுப்பு இல்லை என்று சொல்லுவது தவறு. இதைப்பற்றி இங்கே விவாதிக்க நமக்கு உரிமை இருக்கிறது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதைப் பரிசீலனை செய்ய வேண்டும். கொசுத் தொந்தரவு அதிகமாக ஆகிவிட்டது. சாக்கடைகளையெல்லாம் பக்கிங்ஹாம் கால்வாயில் விட்டு விடுகிறார்கள். கார்ப்பொரேஷன் பொறுப்பிலிருக்கிற எந்த இடத்தில் பார்த்தாலும் சாக்கடைத் தண்ணீரை பக்கிங்ஹாம் கால்வாயில் விழும்படி வெட்டி விட்டிருக்கிறார்கள். இதனால் மீன் பிடிப்பவர்களுக்குக் கூட கஷ்டம் ஏற்படுகிறது. இதற்குக் கார்ப்பொரேஷன் என்ன ஜவாப் சொல்லப் போகிறது. இதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று மிகவும் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு அங்கத்தினருக்கும் பக்கிங்ஹாம் கால்வாயைப்பற்றித் தெரியும். நாற்றம் எடுக்கக் கூடிய சாக்கடைத் தண்ணீரை விடக்கூடாது. நல்ல முறையில் அந்த மாதிரி நடவடிக்கை எடுத்தால்தான் இருக்கக்கூடிய நாற்றம் போகும், கொசுக்கள் போகும், நகரமும் சுத்தமாக இருக்கும். ரோடுகளை எடுத்துக் கொள்ளுங்கள். மவுண்ட் ரோடைப் பாருங்கள். மவுண்ட் ரோடை மிகவும் மோசமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சைனா பஜாரைப் பாருங்கள். அதுவும் மிகவும் மோசமாக இருக்கிறது. ஒன்றும் பிரயோசனமில்லாமல் இருக்கிறது. ஏதோ பணம் ஒதுக்குகிறார்கள். அரசாங்கமும் அப்போதைக்கப்போது எவ்வளவோ பணம் கொடுக்கிறார்கள். அரசாங்கம் பணம் கொடுப்பதில்லை என்ற புகார்தான் எப்போதும். கொடுக்கக் கூடிய பணத்தை ஏன் சரியான முறையில் செலவு செய்யக் கூடாது? ஏறக்குறைய 56 லட்சம் அல்லது 60 லட்சம் ரூபாய். கொடுக்கப்படுகிறது. சைதாப்பேட்டை, மாம்பலம் எல்லாம் ஒன்றும் வசதிகள் ஏதும் செய்யப்படாமல் அப்படியே

[Sri C. R. Ramaswami] [11th March 1960

இருக்கிறது. இவ்வளவு பிற்பட்ட நிலையில் கார்பொரேஷன் நிர்வாகம் இருந்து கொண்டிருக்கிறது. ஆகையால் இந்த அரசாங்கம், கார்பொரேஷன் நிர்வாகம் நல்ல முறையில் நடக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இது விஷயத்தில் கனம் அமைச்சர் அவர்கள் தக்க பதில் கொடுக்க வேண்டுமென்று நான் தாழ்மை யோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த "ஹவுஸிங்" விஷயத்தில் சென்னை நகரத்தில் பல இடங்களில் "லோ இன்கம் ஹவுஸிங்" என்று குறைந்த அளவு வருமானமுள்ளவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இது மிகவும் வரவேற்கத் தக்கது. இருந்தாலும் இப்போது வர வர நில நெருக்கடி அதிகமாக இருக் கிறது. அதைப் போக்க உயர்ந்த வீடுகள் கட்டி, என்.ஜி.ஓ.-க் களுக்கு பிளாட்டுகள் கட்டிக் கொடுக்கலாம். குறிப்பிட்ட பகுதியில் மாடிக் கட்டிடங்களாகக் கட்டி பிளாட்டுகள் முறையில் கொடுத்தால் இட நெருக்கடியை ஓரளவுக்குப் போக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். சிறு சிறு வீடுகளாகக் கட்டி அவைகளில் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துக் கொண்டிருந்தால் அரசாங்கத்திற்கு அதிகப் பணம்தான் செலவாகும். பெரிய பகுதிகளை எடுத்து அங்கே சுமார் 200, 300 குடும்பங்கள் வசிப்பதற்கேற்ற முறையில் பெரிய பெரிய கட்டிடங் களைக் கட்ட வேண்டும். பம்பாய் போன்ற நகரங்களில் ஒரே இடத்தில் 200, 300 பெரிய குடும்பங்கள் வசிப்பதற்கேற்ற முறையில் பெரிய கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. சென்னையிலும் அம்மாதிரி ஏற்பாடு செய்தால்தான் நன்றாக இருக்கும். சிறு வீடுகளையே கட்டிக் கொண்டிருந்தால் சில வருஷங்களுக்குப் பிறகு அவைகளை மாற்றியமைத்து அவைகள் இருக்கும் இடங் களில் பெரிய வீடுகளைக் கட்ட வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே "லோ இன்கம் க்ரூப் ஹௌஸிங்" திட்டத்தை மாற்றி யமைக்க வேண்டும் என்று சர்க்காரை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இப்போது சென்னையில் மனைக்கட்டுகளின் விலை உயர்ந்திருக்கிறது. சில வருஷங்களுக்கு முன் ஒரு கிரௌண்டு 4,000 ரூபாய் வீதம் விலை இருந்துவந்த இடங்களில் இப்போது மனைக்கட்டுகளின் விலை கிரௌண்டு ஒன்று 6,500 அல்லது 7,000 ரூபாய் வீதம் இருக்கிறது. அதற்குக் குறைந்த விலையில் நிலம் இல்லை. எனவே இங்கெல்லாம் அரசாங்கம் நிலங்களை விலைக்கு வாங்கி நல்ல வீடுகளை அந்த நிலங்களில் கட்டி அவைகளை நடுத்தர வகுப்பினருக்கும், குறைந்த சம்பளக்காரர் களுக்கும் குறைந்த விலைக்குக் கொடுத்தால் நன்றாக இருக்கும். முக்கியமாக என்.ஜி.ஓ.-க்களுக்கு இம்மாதிரியான வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். என்.ஜி.ஓ.-க்கள் அதிகமான வீட்டு வாடகை கொடுக்க முடியாத வர்களாக இருக்கின்றனர். அவர்களுக்கு இந்த மாதிரியான வீடுகளைக் கட்டிக் கொடுத்தால் அவர்கள் சந்தோஷமாக வாழ முடியும்.

மீன் இலாகாவைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்போது மீன் பிடிப்பதற்கு மீனவர்களுக்கு பாப்லோ போட்டுகள் கட்டிக் கொடுப்பதாக சர்க்கார் சொல்



11th March 1960] [Sri C. R. Ramaswami]

கிறார்கள். இது சம்பந்தப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கு நான் இரண்டு மூன்று வருஷங்கள் தலைவனாக இருந்திருக்கிறேன். எனவே பாப்லோ போட்டுகளைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். பாப்லோ போட்டுகளைக் கொண்டு மீன் பிடிக்க மீனவர் களே அதிகமாக முன்வருவதில்லை. அவர்களுக்கு அதில் இஷ்டம் இல்லை. பாப்லோ போட்டுகளை உபயோகித்து அதிகமான மீன்களைப் பிடிப்பதற்கு நமது 'ஸீ' கோஸ்ட்-லில் வசதியும் வாய்ப்பும் இல்லை. கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பணம் கடன் வாங்கும் மீனவர்கள் அந்தப் பணத்தை, தங்களுக்குள்ள கடன் தொல்லைகளைத் தீர்ந்துக்கொள்ளப் பயன் படுத்துகிறார்களே தவிர, படகுகளை வாங்கவோ தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவோ பயன்படுவத்துவதில்லை. இது எனக்கு நன்றாகத் தெரியும். இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் எனக்கு நன்றாக அனுபவம் இருக்கிறது. இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் சரியான முறையில் வேலை செய்வ தில்லை. நான் ஒரு கூட்டுறவு பெடரேஷனுக்கு தலைவனாக இருந் திருக்கிறேன். இந்தச் சங்கத்தில் கடன் கேட்பவர்கள் தங்கள் சொந்தக் கடன்களை அடைப்பதற்காகத்தான் கடன் கேட்கிறார்களே தவிர, தங்கள் மீன் பிடிக்கும் வேலைகளை நல்ல முறையில் செய்வதற்காக கடன் கேட்பதே கிடையாது. எனவே இந்தத் திட்டத்தை நல்ல முறையில் நடத்த வேண்டுமானால், சென்னை நகரில் ஒரு பெரிய மீன் கார்ப் பொரேஷன் ஒன்றை அமைத்து காசிமேட்டில் ஒரு கம்பெனியை வைத்து அதன் மூலம் பாப்லோ போட்டுகளை வாடகைக்குக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் இப்போது கடன் வாங்கு பவர்கள் வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுப்பதில்லை. எனவே சர்க்கார் ஒரு மீன் கார்ப்பொரேஷனை அமைக்க வேண்டும். காசிமேட்டுக்கு அருகில் 200 அல்லது 300 பாப்லோ போட்டுகளை வைத்து அரசாங்கமே சொந்தமாக ஒரு கம்பெனியை நடத்தலாம்.

இப்போது நமது மாநிலத்தில் பெரிய கனரகத் தொழில்களை அமைக்க வேண்டும். மாநிலம் பல துறைகளிலும் முன்னேற்ற மடைய வேண்டுமானால் கனரகத் தொழில்களை ஏற்படுத்த வேண்டு மென்பதை யாராலும் மறுக்க முடியாது. நமது மாநிலத்தில் பல பெரிய தொழில்கள் வரப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மேட்டூரில் பேப்பர் ஆலையும் சேலத்தில் இரும்புத் தொழிற்சாலையும் ஏற்படுத்த சர்க்கார் முயற்சி செய்திருக்கிறார்கள். இரும்பு ஆலை மிகவும் முக்கியம். இந்த மாநிலத்தில் எப்படியாவது இரும்பு ஆலையை ஏற்படுத்த வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். தொற்சாலைகள் அதிகமாக ஏற்பட்டால்தான் நம் நாடு வளர்ச்சியடையும் என்பதை யாறும் மறுக்க முடியாது. இந்த விஷயத்தில் அரசாங்கத்தார் கண்காணிப்புடன் இருப் பதற்காக அவர்களுக்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வித் துறையைப் பற்றி இரண்டொரு விஷயங்கள் சொல்ல விரும்புகிறேன். இப்போத் இந்த ராஜ்யத்தில் தொழில் கல்வி யிலும், வைத்தியக் கல்வியிலும் மாணவர்களுக்கு இட நெருக்கடி அதிகமாக இருக்கிறது. கல்லூரிகள் அதிகமாக வேண்டும். கல்லூரிகள் ஜில்லாவுக்கு ஒன்று வீதமாவது அமைக்கப்பட்டால்

[Sri C. R. Ramaswami] [11th March 1960

நன்றாக இருக்கும். வைத்தியக் கல்விக்கு வருகிற மாணவர்கள் எல்லோருக்கும் கல்லூரியில் இடம் கொடுத்தால் நன்றாக இருக்கும். இடம் கிடைக்காததால் சிலருக்கு வெறுப்பு ஏற்படுகிறது. இந்த வெறுப்பைக் குறைப்பதன் பொருட்டு, கல்லூரிகளை எவ்வளவு அதிகப்படுத்த முடியுமோ அவ்வளவு அதிகப்படுத்த வேண்டும். குறிப்பாக வைத்தியக் கல்லூரிகள் மிகக் குறைவாக இருக்கின்றன. என்ஜினியரிங் கல்லூரிகள் கூட இப்போது அதிகமாக இருக்கின்றன. வைத்தியக் கல்லூரிகள்தான் குறைவாக இருக்கின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இரண்டு ஜில்லாக்களுக்கு ஒரு கல்லூரி வீதமாவது வைத்தியக் கல்லூரிகள் அமைத்தால் நன்றாக இருக்கும். இந்த யோசனையை அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். மேலும், பாலிடெக்னிக்குகள், ட்ரேட் ஸ்கூல்கள் முதலியவை இருக்கின்றன. மூன்றாவது பாரம் வரை படித்தவர்களை ட்ரேட் ஸ்கூல்களில் அனுமதிக்க வேண்டும். டிப்ளோமா கொடுக்கக்கூடிய பாலிடெக்னிக்குகளை ஜில்லாவுக்கு ஒன்று வீதமாவது அமைக்க வேண்டும். இதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அவசியம் செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். பேசுவதற்கு எனக்கு அவகாசம் கொடுத்த கனம் சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

SRI R. CHIDAMBARA BHARATHI : கனம சபாநாயகர் அவர்களே, புதிய வரி எதையும் போடாததுடன் ஏற்கெனவே மக்கள் கோரிய வரிச் சலுகைகளையும் அளித்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்கு இன்னும் ஒரு வருஷம் பாக்கி இருக்கும்போதே பெரும்பான்மையான நீர்ப்பாசனத் திட்டங்களையும் கைத்தொழில் திட்டங்களையும் இதர பல திட்டங்களையும் நிறைவேற்றியுள்ள இந்த அரசாங்கத்தை நான் போற்றுகிறேன். இந்த மாநிலத்தில் 9 நீர்த்தேக்கங்கள் கட்டி முடிக்கப்பட்டு 2 லட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் விவசாயத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தாலும் கூட, பிந்திய மழையின் காரணமாக விவசாயம் பாதிக்கப்படுகிறது என்பதை சர்க்கார் அறிவார்கள் என்றே நான் நினைக்கிறேன். அனேகமாக ஒரு ஏக்கரில் ஒவ்வொரு வருடமும் சராசரி 15 அல்லது 20 மூட்டை விளைந்த நிலங்களில் கூட இப்போது நோய்கள் காரணமாக 10 அல்லது 8 மூட்டைதான் விளைந்திருக்கிறது என்று விவசாயிகள் கூறுவது சர்க்காருக்குத் தெரிந்திருக்கும் என்று நான் நினைக்கிறேன். எனவே விவசாயத்திற்கு வந்துள்ள நிலங்கள் அதிகரித்திருந்தாலும் விளைச்சல் குறைந்திருக்கிறது. சர்க்கார் இதை உணர்ந்து, வருகிற மாதங்களில் மக்களுக்கு உணவு தானியங்கள் காலாகாலத்தில் கிடைக்கச் செய்வதற்கு வழிவகை செய்வார்கள் என்று நம்புகிறேன்.

இந்த சர்க்காருக்கு கீழ் ராமநாதபுரம் மக்களின் சார்பாக நான் ஒரு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அங்குள்ள மக்கள் சர்க்காருக்கு அறிவித்தவுடன் மிகக் குறுகிய காலத்தில், அதாவது ஓரிரண்டு ஆண்டுகளுக்குள், வைகை நதிப் பாசனம்



11th March 1960] [Sri R. Chidambara Bharathi]

மக்களுக்கு சரியான முறையில் உபயோகப்படும் வகையில் அங்கே சர்க்கார் பாசன வசதி செய்து தந்திருக்கிறார்கள். அங்குள்ள மக்களுக்கு பல நூறு வருஷங்களாகக் கிடைக்காத இந்த நல்ல வசதியை வைகை அணைக்கட்டிலிருந்து இந்த இரண்டு ஆண்டுகளுக்குள் செய்து தந்திருப்பது மிகவும் போற்றத்தக்கது. இந்தத் திட்டம் ஆரம்பத்தில் ஆங்கில சர்க்காரால் புறக்கணிக்கப்பட்டிருந்தது. இது கிழக்கு ராமநாதபுரம் மக்களின் சார்பாக சர்க்காருக்கு பல தடவை பல வருடங்களாக எடுத்துச் சொல்லப்பட்டும் முன்பெல்லாம் கவனிக்கப்படாமல் இருந்துவந்தது. ஆனால் இந்த இரண்டு வருஷ காலத்தில் இந்த சர்க்கார் அந்தப் பகுதி மக்களின் இந்த கோரிக்கையை கவனித்து பாசன வசதி செய்து தந்திருக்கிறார்கள். அந்த மாவட்டத்திலுள்ள நீர்ப்பாசன அதிகாரிகளுக்கும் ரெவின்யூ அதிகாரிகளுக்கும் சர்க்கார் காலாகாலத்தில் தாக்கீது கொடுத்ததன் காரணமாக, வைகை அணைக்கட்டிலிருந்து தண்ணீர் அங்குள்ள எல்லாப் பகுதிகளுக்கும் விடப்பட்டு, கிட்டத்தட்ட ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட நிலங்கள் விவசாயத்திற்கு வந்திருக்கின்றன. இந்த ஒரு லட்சம் ஏக்கர் நிலங்களும் புதிதாக இந்த வருஷம்தான் விவசாயத்திற்கு வந்திருக்கின்றன என்று கூறினால் அது மிகையாகாது. ஒவ்வொரு வருஷமும் அந்த நிலங்கள் விவசாயம் செய்யப்பட்டு வந்திருந்தாலும்கூட சாவி அறுப்புத்தான் அதனுடைய தன்மையாக கிழக்கு ராமநாதபுரத்தில் இருந்து வந்தது. சென்ற வருஷமும், இந்த வருஷமும்தான் விளைந்து நெல்லாக மக்கள் அறுத்து தானியத்தை வீட்டுக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். அதற்காக நமது சர்க்காருக்கு நான் மிகவும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே சமயத்தில் இந்த இரண்டு வருஷ அனுபவத்தை 11-00 a.m. வைத்துக் கொண்டு வைகை அணைக்கட்டுத் தண்ணீர் விநியோகத்தில் திட்டமான ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். வைகை அணைக்கட்டை வைகைப்பகுதி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக சர்க்கார் செய்திருக்கிறது. கடவுளால் கொடுக்கப்பட்ட மழை, காற்று, தண்ணீர் ஆகியவை எப்படி வரப்பிரசாதமாக இருக்கிறதோ அதே போல் கிழக்கு ராமநாதபுரம் மக்களுக்கு வைகை அணைக்கட்டு ஒரு வரப்பிரசாதமாகக் கிடைத்திருக்கிறது. ஆனால், அந்த அணைக்கட்டுத் திட்டத்தை ஏற்படுத்தியதோடு நில்லாமல் வைகைத் தண்ணீர் விநியோகத்தில் சட்ட திட்டங்கள் ஏற்படுத்த வேண்டும். எந்தப் பகுதி மக்களுக்கு விநியோகிக்க வேண்டும், எந்தப் பகுதி நிலங்களுக்குத் தண்ணீர் கிடைக்கச் செய்ய வேண்டுமென்பதை நன்கு தெரிந்து அதற்குத் தக்கபடி சட்டதிட்டங்கள் அமைக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். முன்பு இருந்த சட்டத்திட்டத்தையே திரும்பவும் புனராலோசனை செய்யும்படி சர்க்கார் அங்குள்ள அதிகாரிகளுக்கு ஆலோசனை கூறியிருப்பதாக அறிகிறேன். அவர்களுடைய ஆலோசனைக்குப் பிறகு அதைப்பற்றி முடிவாகப் பரிசீலனை செய்து முடிவெடுப்பதற்கு முன்னால், அந்தப் பகுதி சம்பந்தப்பட்ட பொது ஜனப் பிரதிநிதிகளையும், அந்தப் பகுதி சட்டமன்றப் பிரதிநிதிகளையும் கலந்து, அவர்களையும் இந்த ஆலோசனைக் கமிட்டியில் சேர்த்துக் கொண்டு சட்டதிட்டங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri R. Chidambara Bharathi] [11th March 1960

பெரியாறு தண்ணீர் பாயும் விஸ்தீர்ணம் (காச்மெண்ட் ஏரியா) எவ்வளவு இருக்கிறதோ அதைப் பார்க்கிலும் வைகை நதியின் விஸ்தீரணம் அதிகமென்பதாக அனுபவத்தில் எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஆகையால் பெரியாறு நில விஸ்தீரணம் எவ்வளவு இருக்கிறதோ அதைப் போன்று வைகை அணைக்கட்டின் விஸ்தீரணத்தையும் விஸ்தரிக்க முடியும். அப்படி விஸ்தரிக்கும் போது, நிரந்தரமாக, நீண்டகாலமாக வைகை நதியின் மூலமாக விவசாயம் நடந்து வந்த நிலங்கள் உள்ள ஊர்களுக்கு முதல் சலுகையாக வைகை அணைக்கட்டின் தண்ணீரைக் கொடுக்க ஏற்பாடு செய்து, மிச்சமிருந்தால் சாத்தியமான இதர பாகங்களுக்குத் தண்ணீர் கொடுக்க யோசிக்க வேண்டும். சிந்தித்து மிகவும் திறம்படச் செய்யவேண்டிய காரியம் இது. இதைத் திறமையாகவும், சாத்தியமாகவும் நமது சர்க்கார் செய்யுமென்று நம்புகிறேன்.

அடுத்து, வைகை நதிப் பகுதிகளில் மீன் பிடிக்கும் சொசைடி ஒன்று ஏற்படுத்தப்பட்டு இரண்டு மூன்று வருஷ காலமாகவே கண்மாய்களில் மீன் பிடிக்கும் குத்தகை அந்த சொசைடிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றது. அந்தக் கண்மாய்கள் எல்லாமே மக்களால் தண்ணீர் கட்டப்படும் கண்மாய்கள். மக்களுடைய முயற்சியால் கால்வாய்கள் வெட்டப்பட்டுத் தண்ணீர் கொண்டு போகப்படுகிறது. ஆதலால் அந்தக் கண்மாய்களில் மீன் பிடிக்கும் குத்தகையை மக்களுக்கே அளித்து தண்ணீர் கொண்டு செல்ல ஏற்படும் செலவைச் சரிக்கட்ட அந்த வருவாய் பயன்படும் என்று சர்க்காரிடம் கூறப்பட்டது. அதன் பிறகு கூட்டுறவுச் சங்கங் களுக்குக் கொடுக்காமல் மக்களுக்கே கொடுத்து வருகிறார்கள். ஆனால் இந்த வருஷம் கூட்டுறவுச் சங்கங்களுக்கே கொடுக்க வேண்டுமென்று முதலில் உத்தேசிக்கப்பட்டது. பிறகு பஞ்சாயத் துக்களுக்குக் கொடுக்கலாமென்று மாவட்ட அதிகாரிகளுக்குக் கூறப்பட்டிருப்பதாக அறிகிறேன். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் இப்பகுகளில் பஞ்சாயத்து ஏற்பாடாவது ஆரம்பகாலமாக இருக்கின்றபடியால் அங்கு எவ்விதம் இருக்கிறதென்றால், பஞ்சாயத்துக்களுக்கும் அந்த ஊரின் கண்மாய்களுக்கும் சம்பந்தமே இல்லாமல் இருக்கிறது. ஊர் மக்கள், விவசாய மக்கள் அந்தக் கண்மாய்களில் தண்ணீர் கட்டுகிறார்கள். அவ்வாறு கட்டுவதற்கு அவர்கள் 4 தினங்கள், 5 தினங்கள் 5, 6 மைல் கட்டுவதற்குத் தலைக்குக் கால் ரூபாய், அரை ரூபாய் வீதம் கூலி போட்டு செலவழிக்கிறார்கள். இந்த விகிதாசாரத்தில் ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் வரை செலவழிக்கிறார்கள். இவ்வாறு மக்களே கண்மாய்களுக்குத் தண்ணீர் கொண்டு செல்லுகிறார்கள் என்பதற்காக அந்த நிலங்களுக்குத் தண்ணீர் வரி விதிக்காமல் இருப்பதில்லை. மற்ற நிலங்களுக்கு விதிப்பதைப் போலவே இந்த மாதிரி கண்மாய்கள் மூலம் தண்ணீர் பாயும் நிலங்களுக்கும் தண்ணீர் வரி விதிக்கப்படுகிறது. இதை மக்கள் சர்க்காராகிய நமது சர்க்கார் நன்கு உணர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த விதத்தில் மக்களுக்கு ஏற்படும் செலவைச் சரிக்கட்ட இந்த மீன் பிடிக்கும் குத்தகையை மக்களுக்கே கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இங்கு மீன் பிடிப்போர் என்று தனியாக ஒரு கூட்டம் இல்லை. விவசாயிகள், வியாபாரிகள் எல்லாம் சேர்ந்துதான் கூட்டுறவுச் சங்கம் வைத்துக் கொண்டிருக் கிறோம். இவர்களுக்குக் குறைந்த குத்தகைக்குக் கொடுக்கும் போது சொந்த லாபத்திற்குப் போகிறது. கிராம நலம் இதனால் பாதிக்கப்படுகிறது. கிராம நலம் பாதிக்கப்படும் என்று தெரிந்து பஞ்சாயத்து போர்டுகளுக்குக் கொடுக்கலாமென்று சர்க்கார் எப்படி அனுமதித்திருக்கிறதோ அதே போன்று கிராம மக்களுக்கும் கொடுக்கலாம் என்பது பற்றி சர்க்கார் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



11th March 1960] [Sri R. Chidambara Bharathi]

மதுரை நகரில், வைகைக் கரையில் குடி தண்ணீர் பம்பிங் ஸ்டேஷனுக்கும், வைகை நதிக்கும் இடையில் ஒரு தொத்து நோய் ஆஸ்பத்திரியைச் சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். சுகாதார அதிகாரிகள் மூலமாகவும், நீரூற்று ஆராய்ச்சி செய்யும் பெரிவர்கள் மூலமாகவும் நான் அறிந்தது என்னவென்றால், சுமார் 100 கஜ அளவில் வியாதியை உண்டாக்கக் கூடிய பூச்சிகள் மண்ணுக்குள் புகுமானால் அந்தப் பூச்சிகளுக்கு அதிக சக்தி ஏற்பட்டு, அதிக வீரியம் ஏற்பட்டு, தொத்து நோய் அதிகமாகப் பரவும் என்று கூறுகிறார்கள். அப்படியிருக்கும்போது வைகைக் கரையில் 50 கஜத்திற்குள்ளாக அம்மை, ப்ளேக், காலரா போன்ற நோய் களுக்குச் சிகிச்சை செய்யும் ஆஸ்பத்திரியை ஏற்படுத்தியிருக் கிறார்கள். அதிலிருந்து 50 கஜ தூரத்திற்குள் குடி தண்ணீர்த் தேக்கம் இருக்கிறது. மதுரை நகரத்தில் 6 லட்சம் மக்களுக்கு மேல் இருக்கிறார்கள். அந்த 6 லட்சம் மக்களும் தொத்து நோய் ஆஸ்பத்திரியினுடைய கழிவு நீரைக் குடிக்கும்படியாக இருக் கிறது. இதனால் தொத்து நோய் அதிகமாகப் பரவ ஏதுவாகிறது. இதைப்பற்றி ஆலோசித்து, கட்டிடம் கட்டிவிட்டோம், ஆகவே வேறு இடத்திற்கு மாற்ற முடியாது என்று சொல்லாமல் அந்த ஆஸ்பத்திரியை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு இந்த இடத்தை வேறு சர்க்கார் காரியாலயங்களுக்காக உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்று கூற விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், சட்ட மன்றத்திலும், வெளியிலும் கள்ளர், மறவர், அகம்பதயர் ஆகிய முக்குலத்தோருக்குக் கல்விச் சலுகை யளிக்கவேண்டுமென்ற காரணத்திற்காக அவர்களை மிகவும் பின் தங்கிய ஜாபிதாவில் சேர்க்க வேண்டுமென்று சொல்லப்பட்டு வந்திருக்கிறது. இதற்காக மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கள்ளர்களில் ஒரு சிலருக்கும், மறவர்களில் ஒரு சிலருக்கும் இப்போது கல்விச் சலுகை கிடைக்கின்றது. மொத்தத்தில் மூன்று பேருக்கும் கிடைக்கவில்லை. ஆனால், இந்த மூன்று வகுப்பாரும் இன்றையதினம் கல்வியிலும் மற்ற துறைகளிலும் மிகவும் பிற்போக்கு உடையவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ளுவார்கள். அவர்கள் மிகவும் நன்கு அறிந்த விஷயம் ஆகையால், அதிலே அக்கறை செலுத்து வார்கள் என்று நம்புகிறேன். அடுத்து ஒரு நிமிஷத்திற்குள்ளாக நான் சொல்ல வேண்டிய ஒரு முக்கிய விஷயத்தைச் சொல்லி உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

கிராம மக்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் நிறைந்திருக்கிறது. என்பதைப்பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். அது வாஸ்தவம். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஆலைகள் ஏற்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆலைகள் ஏற்படுத்த வேண்டியது அவசியம் தான். அதே சமயத்தில் நான் சர்க்காருக்கு ஒரு யோசனை கூற விரும்புகிறேன். பத்து லட்சம், இருபது லட்சம், ஒரு கோடி ரூபாய் என்று இப்படியாக முதல் போட்டு பெரிய ஆலைகளை ஏராளமாக நகர்ப்புறங்களில் ஆரம்பிப்பதைவிட கிராமப் பகுதிகளில் ஓராயிரம், இரண்டாயிரம் ரூபாய் செலவில் நூற்பு ஆலைகள் ஏற்படுத்துவது பற்றி அரசாங்கம் யோசிக்குமானால், நன்றாக இருக்கும். அனேக கிராமங்களில் நூல் உற்பத்தி செய்து நூலை பக்கத்திலுள்ள நெசவாளர்களுக்குக் கொடுக்க ஏதுவாக இருக்கும். கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் இது சாத்தியமாகுமா என்று சந்தேகப்பட்டாலுங்கூட, தீர யோசித்துப் பார்த்தால் இது சாத்தியமாக இருக்கும் என்பதை அறிவார்கள். அதைச் சாத்தியமாக்கவும் அவரால் முடியும். ஜப்பான் போன்ற நாடுகளில் அனுபவத்தில் செய்திருக்கிறார்கள். அம்மாதிரியான விஷயத்தை நம் ராஜ்யத்தில் செய்ய முற்பட்டால் அதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்க முடியும். கிராமப் புறங்களில் இருப்பவர்கள் மூன்று மாதம் வேலை செய்துவிட்டு மற்ற ஒன்பது மாதங்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். மூன்று மாதத்து வருமானத்தை வைத்துக்கொண்டு வருடம் பூராவும் ஜீவிக்கக்கூடிய நிலையில் மக்கள் குறைந்த சக்தியுள்ளவர்களாக இருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றுவதற்கு சிறிய யூனிட்டுகளாக மில்களை கிராமப் புறங்களில் ஏற்படுத்துவதற்கு யோசனை செய்தால் மிகவும் நல்லதாக இருக்கும். நம்முடைய ராஜ்யத்தில் அதிகமான பகுதிகளுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் விஸ்தரிக்கப்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகையால், ஒரு ஆயிரம், இரண்டாயிரம் ஸ்பிண்டில் உள்ள ஆலை ஏற்படுத்துவதற்கு அதிக முதல் வேண்டியிருக்காது. ஆகவே, குறைந்த செலவில் அங்கங்கே சிறு சிறு ஆலைகள் ஏற்படுத்த முடியும். சர்க்காரிடத்திலிருந்தும் அதிகமாக மூலதனத்திற்காக வரமாட்டார்கள். இப்படி ஆலைகள் ஏற்படுத்தினால் தொழிலாளர்களுக்கு வீடு கட்டும் பிரச்னை, வேலை நிறுத்தப் பிரச்னையெல்லாம் நின்றுவிடும். கிராமங்களிலுள்ள மக்கள் நகரங்களுக்குச் சென்று குடியேறும் சுபாவமும் குறைந்துவிடும். அதைப்பற்றியும் சர்க்கார் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN கனம் சபாநாயகர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் வரவு செலவுத் திட்டம் தீட்டியிருக்கிறார். அதை மிகவும் திறமையாக, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு ஓரளவு பார்ப்பதற்கும் கேட்பதற்கும் அழகாக, அவ்வளவு இலேசிலே குற்றங்குறை கண்டுபிடிக்க முடியாத அளவுக்குத் தயார் செய்திருக்கிறார்கள் என்பதை நாம் பாராட்டாமல் இருக்கவே முடியாது. இந்த வரவு செலவுத்





திட்டம் எந்த முறையிலே எந்த அடிப்படையிலே தயார் செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, முன்னால் பார்த்தால் ராவுத்தர் குதிரை மாதிரியும், பின்னால் பார்த்தால் செட்டியார் குதிரை மாதிரியும் தோன்றும்படி அவ்வளவு அழகாகத்தான் தயார் பண்ணியிருக்கிறார். (சிரிப்பு).

THE HON. SRI C. SUBRAMANIAM: இருந்தாலும் குதிரை தானே. (சிரிப்பு).

SRI V. K. KOTHANDARAMAN: வரியே இல்லை என்கிற அளவுக்கு இன்றைக்கு சொல்லப்படுகிறது. ஆனால், உண்மையிலேயே ராஜ்ய சர்க்கார் போட்டால்தான் வரியா, அல்லது மத்திய சர்க்கார் போட்டாலும் வரி ஆகாதா என்று பார்க்க வேண்டியிருக்கிறது. கனம் ராஜாஜி அவர்கள் எப்படி மறைமுக வரி, நேரடி வரி என்று இரண்டு விதத்திலே வரிபோட்டு, அது அமுலில் இருக்கிறதோ, அதுபோன்று இப்பொழுது புதிய வரிகளைப் போடவில்லையென்றாலும், புதிய வரிகளை மத்திய சர்க்கார் போட்டு, அதிலிருந்து பங்குபோட்டு வாங்கிக்கொள்வது என்ற அடிப்படையிலே நிலைமை இருக்கிறது. ஏன் இப்படி என்றால், தேர்தல் நெருங்க இங்கே வரியைப் போட்டால், இந்த ராஜ்யத்திலிருக்கும் மக்கள் மத்தியிலே 'அந்த வரியை போட்டார்கள், இந்த வரியைப் போட்டார்கள்' என்ற எதிர்ப்பு ஏற்படலாம். ஆகவேதான் இந்தப் புதிய முறையைக் கையாளுவதன்மூலமாக 'மத்திய சர்க்கார் வரி போட்டு விட்டார்கள்; நாங்கள் என்ன செய்வது?' என்று சொல்லக்கூடிய அளவுக்கும் சந்தர்ப்பம் இருக்கிறது. தவிர இப்பொழுது புதிய வரிகளைப் போட முடியாதா என்று கேட்டால், போட முடியும்; போடுவதற்கு எத்தனையோ வழிவகைகள் உண்டு; அந்த வழிவகைகளைச் சொல்வதற்கும் நாங்கள் தயாராயிருக்கிறோம். நாங்கள் சொல்லக்கூடிய அந்த வழிவகை அடிப்படையிலே கனம் அமைச்சர் அவர்கள் வரி போடுவாரா என்றால், அதில் தான் சந்தேகம் இருக்கிறது. ஆகவேதான் இன்றையதினம் வரிகளைப் போடவில்லை என்று அவர்கள் சொல்லிவிட்டால் மாத்திரம் போதாது; மறைமுகமாக வரிகளைப் போடக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.

அதேபோன்று சில உண்மைகளையும் இதிலே ஒப்புக்கொண்டிருக்கிறார் என்பதையும் நாம் பார்க்கிறோம். சென்ற ஆண்டுகளின் வரவு செலவுத் திட்டத்தைப் பார்க்கும்போது. 'இந்த ஆண்டு பருவ மழை தவறிவிட்டது, விளைச்சல் குறைவாகப் போய் விட்டது அந்தக் காரணங்களால் விலைவாசி உயர்ந்துவிட்டது, நாங்கள் விலைவாசியைக் கட்டுபடுத்துவதற்கான முயற்சி செய்கின்றோம்' என்று குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலே மேலும் மேலும் விலைவாசிகள் உயர்ந்துகொண்டே வருகிறது என்பதைப்பற்றி அல்ல அவர்கள் ஒப்புக்கொள்வது மாணவர்களுக்குக்கூட நாம் எதிர்பார்த்த அளவு திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லையென்றாலும், அதற்காகவேண்டி, பகல் உணவு என்கிற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்ததன் விளைவாக

[Sri V. K. Kothandaraman] [11th March 1960

பல லட்சக்கணக்கான மாணவர்கள் வருகிறார்கள் என்பதை அவர்கள் எடுத்துக்காட்டக்கூடிய நேரத்திலே, நாம் எதைப் பார்க்கின்றோம்? பகல் நேரத்திலே சாப்பிடுவதற்குக்கூட உணவு இல்லாத அளவுக்கு பல லட்சக்கணக்கான குடும்பங்களிலே இன்றைக்குப் பஞ்ச நிலைமை ஏற்பட்டிருக்கிறது, இப்பொழுது ஒரு வேளை சாப்பாடு சாப்பிடக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதைத்தான் அதிலேயிருந்து பார்க்க முடிகிறது.

இதற்கெல்லாம் முக்கியமான காரணம் விலைவாசிகள் அதிகரித்திருப்பதுதான். ஆகவே, நாம் விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும். உணவு உற்பத்தியை அதிகப்படுத்த முடியாமலிருப்பதற்கு முக்கிய காரணம் உரம் குறைவாகக் கிடைப்பது என்று கூறுகிறார். உரம் குறைவாகக் கிடைப்பது மட்டுமல்ல. நாம் எதிர்பார்ப்பதற்கும் அதிகமான அளவுக்கு நாம் உணவு உற்பத்தியை அதிகப்படுத்த முடியும். அப்படி அதிகப்படுத்த முடியாத ஒரு நிலைமை இருப்பதறகுக் காரணம், நவீன விவசாய முறைகளை அமுலுக்குக் கொண்டுவருவதிலே இதுவரையிலே நாம் கவனம் செலுத்தாததும், நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்குக் கவனம் செலுத்தாததும் ஆகும். ஆனால், சொல்லாம், 'வெகு விரைவிலே வரப்போகின்றன திட்டங்கள்' என்று. அந்தத் திட்டங்களெல்லாம் தேர்தலுக்கு ஐந்தாறு மாதங்களுக்கு முன்னால் வருமோ என்னவோ தெரியாது. அது வேறு விஷயம். ஆகவே தான், உண்மையிலேயே விவசாய அபிவிருத்தியைச் செய்ய முடியும் என்றாலும், செய்வதிலே சரியான கவனம் செலுத்தவில்லை என்பதுதான் நாம் இந்த பட்ஜெட் உரையிலிருந்து பார்க்க முடிகிறது.

அது மட்டுமல்ல. விலைவாசி உயர்வுக்கு அவர் கூறியிருக்கும் காரணம் கூட, மேலும் மேலும் உயருகிற விலைவாசியைத் தடுப்பதற்கு வழிவகை என்னவென்பதை நேரடியாகச் சொல்வதற்குப் பதிலாக, 'சம்பளத்தை உயர்த்துவதன் மூலம் விலைவாசி உயருகிறது, விலைவாசி உயருவதன் மூலமாக சம்பளம் உயர்வாக வேண்டுமென்று கேட்கிறார்கள்' என்பதைக் காட்டி தப்பித்துக் கொள்ளக்கூடிய அளவுக்குத்தான் இந்தத் திட்டத்தில் இருக்கிறது. இன்றைக்கு விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்காக வேண்டி திட்டவட்டமான, சரியான நடவடிக்கை எடுக்க முடியாதா என்று பார்த்தால் எடுக்க முடியும். ஆனால், எடுப்பதிலேதான் இன்றைக்குத் தயக்கம் இருக்கிறது. அப்படி எடுக்கக்கூடிய நிலைமை ஏற்படுமானாலும், தங்களுடைய அணியைச் சேர்ந்தவர்கள் தங்களை விட்டு விலகிவிடுவார்களோ என்ற பீதியின் காரணமாகத் தான் இன்றைய விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை இருக்கிறது. இன்றைக்கு சர்க்கார் சிப்பந்திகளுக்கோ அல்லது தொழிலாளர்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ சம்பள உயர்வு இப்பொழுது கொடுக்கவில்லை என்பதற்குப் பல காரணங்கள் காட்டலாம். சர்க்கார் ஊழியர்கள் தங்களுக்குச் சம்பள உயர்வு தான் வேண்டுமென்று கேட்கவில்லை. சம்பள உயர்வு கொடுக்கவில்லையென்றாலும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்திவிட்டால் போதும், என்றுதான் அவர்கள் சொல்கிறார்கள். சம்பள உயர்வு தான் அவர்கள் கேட்கிறார்கள் என்று அவர்கள் பேரிலே பழி



11th March 1960] [Sri V. K. Kothandaraman]

சுமத்தக்கூடிய தன்மையிலே சுழலிலே மாட்டிக்கொண்டு தவிக்கிறோம் என்று சொல்லி தப்பித்துக்கொள்ளும் அளவுக்கு இந்தத் திட்டத்தில் சொல்லிவிட்டால் போதாது. ஆகவே, உடனடியாகக் கவனம் செலுத்தவேண்டியது விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதுதான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த பட்ஜெட் உரையில், என். ஜி.ஓ.க்களுக்கு ஓரளவு 5 முதல் 10 ரூபாய் வரையில் நிவாரணம் கிடைக்கும் என்று தான் எல்லோரும் எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், இலவு காத்த கிளி போல ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். (சிரிப்பு) இலவு காத்த கிளிபோல ஏமாற்றம் அடையக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது என்பதை நாம் பார்க்கின்றோம். ஆகவே, உடனடியாக அடுத்த மாதம் அல்லது அதற்கு அடுத்த மாதத்திலாவது நிவாரணம் அவர்களுக்கு வரக்கூடிய அளவுக்கு இருக்கமுடியுமா என்றால், அது எந்த அளவு உண்மை என்பதை நடைமுறையில்தான் பார்க்கவேண்டும். ஆகவே, விலைவாசியைக் கட்டுப்படுத்துவதிலே அரசாங்கம் முழு கவனமும் செலுத்த வேண்டும்.

அடுத்து, இன்றைக்கு தொழிற்சாலைகளை நாம் அதிகப்படுத்தி விட்டோம், அதற்கான திட்டங்களை போட்டிருக்கிறோம் என்று சொல்லுவதைப் பார்க்கிறோம். ஆனால், ஏற்கனவே இருக்கக்கூடிய தொழிற்சாலைகள், எத்தனை திட்டங்கள் போட்டு எவ்வளவு பணத்தைக் கொடுத்து ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகள் தொடர்ந்து வேலை செய்யாமல் எவ்வளவு மூடப்பட்டிருக்கின்றன, அந்தத் தொழிற்சாலைகளை தொடர்ந்து நடத்துவதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறதா என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது மாத்திரமல்ல. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக ஏற்கனவே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளில் சச்சரவுகள் இல்லாமல் இருப்பதற்கு வேண்டி என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன, எடுக்கப்போகிறோம் என்பதைப் பார்க்கக்கூடிய நேரத்தில், பீடித் தொழிலாளர்களுக்கோ அல்லது மற்ற மற்ற தொழிலாளர்களுக்கோ வேண்டி கொண்டுவரப்பட்ட சட்டங்கள் ஏட்டளவில் தான் இருக்கின்றன. காரணம், பீடித்தொழிலாளர்கள் சட்டம் உயர் நீதிமன்றத்தில் உடைப்பட்டுப் போய்விட்டது. அந்த சட்டத்தை நல்ல முறையில் உருவாக்குவதற்கு இன்றைக்கு வாய்ப்பு இருக்கிறது. 2-ஜி செக்ஷன் யார் முதலாளி, யார் தொழிலாளி என்பதை நிர்ணயிக்கிறது. சென்னை ராஜ்யத்தில் லைசென்ஸ் வாங்கி ஒரு தொழிற்சாலையை நடத்தக்கூடியவருக்கு இந்த சர்க்காரைக் கேட்டு புகையிலை கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையிலே, மத்திய சர்க்காரும் இந்த சர்க்காரும் கலந்து செய்யக்கூடிய அளவுக்கு இருக்குமானால், இந்த சட்டத்தை பீடி முதலாளிகள் மதிக்காத அளவுக்கு நிலைமை ஏற்படாது. அது மாத்திரமல்ல. டிரேட் மார்க் சொந்தக்காரர் எவரோ அவர்தான் முதலாளி என்ற அடிப்படையில் மத்திய சர்க்காரிலே சட்டத்தை மாற்றக்கூடிய அளவுக்கு நிலைமை. இருக்குமேயானால், பீடித் தொழிலாளர்களுக்காக இந்த சர்க்கார் வகுத்திருக்கிற சட்டத்தை

[Sri V. K. Kothandaraman] [11th March 1960

மதிக்காத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கவே முடியாது. இந்த சட்டத்தைக் கொண்டுவந்த பிறகும் எந்த அளவுக்கு அவர்கள் இதை மதிக்கப்போகிறார்கள் என்பது வேறு சந்தேகமாக இருக்கிறது. ஆகையால் இந்தப் பிரச்னை இவ்வாறு இருக்கக்கூடிய சநதர்ப்பத்தில், கைத்தறி நெசவாளர்களுக்கும், மற்ற தொழிலாளர்களுக்கும் எப்படி கூட்டுறவு முறையில் தொழிற்சாலைகள் அமைத்துக் கொடுக்கப்படுகிறதோ அப்படி பீடித் தொழிலாளர்களுக்கும் கூட்டுறவு முறையில் தொழிற்சாலைகள் அமைத்து நடத்தககூடிய அளவுக்கு சர்க்கார் முன்வந்தால் ஒழிய, பீடி முதலாளிகள் இந்தச் சட்டத்தை மதிக்கப்போவதில்லை. அந்த அளவுக்குத் தான் அவர்களுடைய நிலைமை இருக்கிறது. பல முதலாளிகள் பக்கத்து ராஜ்யங்களுக்கு சென்றுவிட்டார்கள். அதனால் சர்க்காருக்கு கிடைத்து வந்த வருமானம் குறைந்திருக்கிறது என்பதையும் பார்க்கிறோம்.

ஒரு பெரிய 'அஜிடேஷன்' காரணமாக அழுகும் பொருள்களின் மீது விதிக்கப்பட்டிருந்த விற்பனை வரி நீக்கப்பட்டு விட்டது. ஆனால் உணவுப் பொருள்களின் மீது விதிக்கப்பட்டிருக்கிற வரி இன்னும் நீக்கப்படவில்லை. பாலுக்கும் அந்த வரி நீக்கப்படவில்லை. மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கும்பொழுது, கட்டணம் அதிகமாகிக் கொண்டே போகிறதைப் பார்க்கிறோம். நமது ராஜ்யத்தில் மின்சார உற்பத்தி அதிகமாகிக்கொண்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. நமது மதிப்பிற்குறிய பிரதம மந்திரி நேருஜி குந்தாவில் 24-ம் தேதி மின்சார நிலயத்தை துவக்கி வைக்கப்போகிறார். அதிலிருந்து அதிகப்படியான மின்சாரம் நமக்குக் கிடைக்கப்போகிறது. மின்சார உற்பத்தி அதிகரிக்க அதிகரிக்க, மின்சார கட்டணத்தை உயர்த்தக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது. மின்சார வெட்டு பற்றி முன்னமேயே மந்திரி அவர்கள் உத்தரவு போட்டிருக்கிறாரோ என்று நினைக்கிறேன். மின்சார வெட்டு ஏற்படாத அளவுக்கும், மின்சாரக் கட்டணம் உயர்த்தப்படாத அளவுக்கும் மந்திரி அவர்களிடமிருந்து உத்திரவாதம் உண்டா என்றால், இல்லை என்று தான் தெரிகிறது.

பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பது வரவேற்கக்கூடியதுதான். பரம்பிகுளத் திட்ட சம்பந்தமாக ஏதோ சுமுகமான முறையில் ஒப்பந்தம் ஏற்பட்டது என்று சந்தோஷப்பட்டோம். இபபொழுது அது சம்பந்தமாக பத்திரிகையில் வந்த செய்தியை பார்க்கக்கூடிய நேரத்தில் பரம்பிகுளத் திட்டத்தை எந்த அளவுக்கு நிறைவேற்றப்போகிறோமோ இல்லையோ என்று சந்தேகமாக இருக்கிறது. இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்கு நேருஜி அவர்கள் வருகிறார் என்று கூட நாம் செய்தியைப் பார்த்தோம். ஆனால், இன்றையதினம் அது எந்த நிலைமையில் இருக்கிறது என்பது தெரியவில்லை. தஞ்சாவூருக்கு அடுத்து, வட ஆற்காடு ஜில்லாவிலே உணவு உற்பத்தி ஆகிறது என்பதை கனம் நிதி அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்ள முடியாத நிலைமையில் இருக்கிறார்களோ என்னவோ நமக்குத் தெரியாது. நான் சொல்லவில்லை. உணவு மந்திரி அவர்களே வட ஆற்காடு ஜில்லாவில் ஒரு கூட்டத்தில் சொல்லியிருக்கிறார். அப்



11th March 1960] [Sri V. K. Kothandaraman]

பேற்பட்ட தண்ணீர் இல்லாத ஜில்லாவிலே ஒரு மோசமான நிலைமையிலே மக்கள் கஷ்டப்பட்டு அதிக உணவு உற்பத்தி செய்கிறார்கள். பாலாறுக்கு தண்ணீர் கொண்டு வருவது சம்பந்தமாக ஆந்திரா, மைசூர் ராஜ்யங்களுடனும், மத்திய சர்க்காருடனும் சுமார் 10 வருஷ காலமாக பேச்சுவார்த்தை நடந்துகொண்டு வருகிறது என்று சொல்லப்படுகிறதே ஒழிய, அது எந்த நிலைமையில் இருக்கிறது என்பது தெரியவில்லை. அதை உடனடியாக நிறைவேற்றவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பஞ்சாயத்து அமைப்பு சட்டம் ஓரளவுக்கு முன்னேற்றம் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். காலேஜில் தமிழ் போதனா மொழியாக இருக்கவேண்டும், சட்டசபையில் நடவடிக்கைகள் தமிழில் இருக்கவேண்டும் என்றெல்லாம் சொல்லக்கூடிய நேரத்தில் —கிராமத்திலே கைநாட்டுப் பேர்வழிகள் பஞ்சாயத்து மெம்பர்கள் கூட இருக்கிறார்கள் என்று நான் சொல்லாமலே அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்—அந்த நிலைமையிலே அங்கே ஆங்கிலத்தில் கடிதப்போக்குவரத்து நடைபெறுகிறது. சர்க்காருக்கும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும் நடக்கக்கூடிய கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில் நடந்துகொண்டு வருகிறது. அடித்தட்டிலே இருக்கக்கூடிய பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், முனிசிபாலிடிகள் ஆகிய இடங்களில் நடவடிக்கைகள், கடிதப்போக்குவரத்து இவைகள் தமிழிலேயே நடக்கவேண்டும். அப்பொழுது தான் உண்மையை உணர்ந்து, நல்ல முறையில் விவாதம் நடத்தி, நல்லதீர்ப்பைக் காணமுடியும். அவர்கள் உண்மையை உணரக் கூடாது என்று சொன்னால், கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில் இருக்கலாம். உண்மையை உணர்ந்து நல்ல முடிவுக்கு வரவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் நினைப்பார்களேயானால் உடனடியாக தமிழிலேயே அங்கு எல்லாம் நடைபெறவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*SRI S. NAGARAJA MONIGAR: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கை விவாதத்தில பங்கு கொள்ளுவது பற்றி நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். முதலில் நான் என்னையே பாராட்டிக் கொள்ளுகிறேன். (சிரிப்பு). சபை அங்கத்தினர்களையும் பாராட்டுகிறேன். அதன் மூலம் தங்களையும் பாராட்டுகிறேன்.

MR. SPEAKER: என்னை ஏன் பாராட்டுகிறீர்கள்?

SRI S. NAGARAJA MONIGAR: குறிப்பாக நிதி அமைச்சர் அவர்கள், சிறப்பு மிகுந்த முதல் அமைச்சர் அவர்கள், மற்ற சக அமைச்சர்கள், பல்வேறு இலாகாக்கள், ஆகியோரையும் நாட்டு மக்களையும் பாராட்டுகிறேன். (சிரிப்பு). நான் புளகாங்கிதம் அடைகிறேன். நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்தால், இவர்கள் உண்மையிலேயே இந்த நாட்டை அரசாட்சி செலுத்துவார்களா, 'அல்லது யார் கையிலாவது நாட்டை ஒப்படைத்துவிடுவார்களா என்று எண்ணியிருந்தவர்கள், மற்றும் இங்கு இருந்துகூட

[Sri S. Narayana Monigar] [11th March 1960

'சுதந்திரம் கொடுத்துவிடாதீர்கள், எங்களுக்கு தகுதியில்லை' என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள் சிலர் உண்டு. அப்படியிருக்கும் பொழுது சுதந்திரம் கிடைத்து 12, 13 வருஷங்களாக நமது ராஜ்யம் பட்டத்து யானை போன்று வெகு கம்பீரமாக அடி எடுத்து வைத்து மகோன்னதமாக நடந்து நல்ல முறையில் முன்னேறிக்கொண்டு மேல் நோக்கிச் சென்று கொண்டிருப்பதைப் பார்க்கும்பொழுது நாம் வேறு எப்படி இருக்க முடியும்? உள்ளம் மகிழ்ந்து, சந்தோஷமடைந்து நிதி நிலை அறிக்கையை வரவேற்கிறேன். அந்த அளவுக்கு நாடு முன்னேறியிருக்கிறது. ஆனால், ஒரு சிலர் எங்கும் இருக்கலாம். தெரியாதத் தன்மையிலோ, அல்லது சிறிது வயிற்றெரிச்சலோடோ ஒரு சிலர் இருக்கவும் கூடும். இதைக் கண்டு நாம் அஞ்சவேண்டாம். மேலும் திட்டங்கள் போட்டு நாடு முன்னேறவேண்டும் என்று அமைச்சர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். முதலிலேயே இந்த வரவு செலவுத் திட்டத்திற்கு சபை பூரண அங்கீகாரம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரு சிலரை பற்றிச் சொன்னால், அவர்களும் ஒத்துழைத்து இடைஞ்சல் இல்லாமல் இருப்பார்களேயானால், இன்னும் விரிட்டு பிரமாதமாக நாம் முன்னேற முடியும். எதிர்க் கட்சி சகாக்களும், நாமும் இங்கு ஒன்று சேர்ந்து சிந்தித்துப் பேசி, மக்களிடையே முன்னேற்றமும் கண்டு அவர்களை மேலும் மகிழ்விக்கும் அளவுக்கு நாம் நிலைமையை சீக்கிரம் கொண்டுவர முடியும். உண்மையிலேயே சில குறைகள் இருக்கலாம். இல்லை என்று சொல்ல முடியாது. அவைகளை நாம் நிவர்த்தி செய்து கொண்டிருக்கிறோம். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி. அரசாங்கத்தின் கட்சியைச் சேர்ந்தவர்களும் சரி, குறைகளை இங்கே எடுத்துப் பேசுகிறோம். அந்தக் குற்றங்களை தவிர்த்து வேறு ஏதோ சில சந்தர்ப்பங்களில் பேசுகின்ற சில வாதங்களும் உள்ளன. ஏதோ இந்த யானை மீது ஏறவேண்டிய சந்தர்ப்பம் இருந்ததே. எப்படியோ தவறிவிட்டதே, பின்னால் நீதிக் கட்சி, திராவிடக் கட்சி, திராவிட முன்னேற்றக் கட்சி என்றெல்லாம் பல கட்சிகளாகப் பிரிந்துபோய் இப்பொழுது யானை மீது செல்ல முடியவில்லையே, எப்படிச் செல்வது, அதைப் பிடித்து எதிர்த்து அல்லவா நாம் ஏறவேண்டும் என்பதற்காகக் குறைகளைத் தேடிச் செல்ல வேண்டியிருக்கிறது. நாம் வளர்த்த யானை ஆயிற்றே, நாம் அல்லவா மாவுத்தன், அப்படியிருக்க நம் கண் முன்னாலேயே, சில ஆண்டுகளுக்கு ஓய்வு எடுத்துக் கொள்ளுவோம் என்று இருந்தபொழுது நாடு இவ்வளவு முன்னேறி விட்டதே என்று எண்ணுபவர்களையும் அறிவோம். இந்த ராஜ்யத்தில் 80 கோடி ரூபாய் அளவுக்கு பட்ஜெட் தயாரித்திருந்த
11-30 a.m. போதிலும், வரி போடாமல் பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறதே என்று எதிர்ப்பவர்களும், பீஷ்மர் போன்று வீரிட்டு எழுபவர்களும் இருக்கிறார்கள். குற்றங்களைத் திருத்துவதற்காகச் சொன்னால் ஒரு தவறும் இல்லை. ஆனால், எதிர்ப்பதற்குச் சந்தர்ப்பம் இல்லாமல், மதயானையின் வேகத்தைப் பார்த்துத்தான், கட்சியிலிருந்தே தான் கட்சியைத் திருப்புவதற்கு பதில், முன்பு காங்கிரசிலேயே இருந்து நல்ல வேலைகளைச் செய்துகொண்டிருந்த



11th March 1960] [Sri S. Nagaraja Monigar]

வர்கள்கூட இப்படி உன்னதமாக காரியங்களைச் ஸ்ரீ காமராஜ் சர்க்கார் செய்கிறார்களே என்றும் அதே போன்றுதான், சில நண்பர்கள், உண்மயாக இருக்கும், குற்றங்களைச் சொன்னால் எடுத்துக் காட்டினால், ஒத்துக் கொள்ளலாம், ஆனால், இல்லாததைச் சொன்னால், நம் முன்னேற்றத்தைக் கண்டு வெறி பிடித்துச் சொன்னால், அது தமிழன் பண்புக்கே ஒவ்வாத வகையில் அமைகிறது. இவர்கள், இன பேதம், ஜாதி பேதம் இவைகளைக் காட்டி, அரசியலை மகோன்னத யானையிலிருந்து இறக்குவதற்கு வழி தேடுகிறார்கள். இது மிக, மிக வருந்தத் தக்கது. இது தமிழன், தெலுங்கன் யாருடைய பண்புக்கும் ஒவ்வாதது. எல்லோரும் உண்மையாக இருக்கும் குறைகளை எடுத்துக் காட்டி, நம் ராஜ்யத்திற்குப் பக்க பலமாக சொல்லும் காரியங்களை மறுப்பதற்கு இல்லை.

இன்னும் அதிகமாக ரஸ்தா அபிவிருத்திக்கு அதிகமான பணத்தை ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

SRI A. V. P. ASAITHAMBI: இப்பொழுது அந்த யானை எந்த இடத்தில் இருக்கிறது என்று சொல்ல முடியுமா?

*SRI S. NAGARAJA MONIGAR: அங்கத்தினர் ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டியது இல்லை, என்று கேட்டுக் கொள்ளுகிறேன். ரஸ்தா அபிவிருத்திக்கு அதிகமான பணம் ஒதுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கும் விஷயத்தில், இந்த நாட்டில் எவ்வளவு திட்டங்கள் போட முடியுமோ அவ்வளவும் செய்தாகிவிட்டது. ஆகவே, இனி பெரிய நதிகளைக் கொண்டு செய்வதற்கு அதிகமில்லை. சிறு நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்க, அதிகப் பணம் ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன்.

சமீபத்தில் பங்களூரில் கூடியபோதும், காங்கிரஸ் தலைவர்கள், அதிகாரிகளுடைய அதிகாரங்களைப்பற்றிக் கூறினார்கள். இந்த நாடு சுதந்திரம் அடைந்து 12, 13 வருடங்கள் ஆகியும் கூட, நாட்டின் அரசாங்கத்தில் அதிக மாறுபாடுகள் ஏற்பட்டுவிடவில்லை. அதிகாரிகளுக்கு பரவலாக அதிகாரங்களைக் கொடுத்து, வேலைகள் துரிதமாக நடைபெற வழிவகை செய்ய வேண்டும். ஆர். டி. ஓ. போன்றவர்கள் போஸ்டாபீஸ் உத்தியோகம்தான் செய்கிறார்கள். அவர்கள் கலெக்டர்களுக்கும், தாசில்தார்களுக்கும் இடையில் இருந்து அதிக வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதேமாதிரித்தான், பல இலாக்காக்களிலும், ரீஜனல் ஆபீசர்கள் இருக்கிறார்கள். மானில அதிகாரிகள் சரிவர வேலை செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஒரு தபால் சர்க்காருக்குப் போட்டால், ஏழு, எட்டு மாதத்திற்குப் பிறகுதான் பதில் வந்தது. அதற்கு மறு தபால் போடுவதற்குள், அன்று இருந்த நிலைமை மாறிவிட்டது. என் போன்றவர்களுக்கு இந்த நிலைமை என்றால், மற்றவர்கள் விஷயத்தில் என்னவாகும் என்று சொல்ல வேண்டியதில்லை.

[Sri S. Nagaraja Monigar] [11th March 1960

பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசர்களுக்கு ஒரு கமிட்டியை வைத்து இருக்கிறோம். ஆனால், அவர் ஒரு பத்து ரூபாய் கூட தானாக செலவழிக்க சுதந்திரமில்லை. அதற்கு அவருக்கு அதிகாரம் இல்லை. அவர்களுக்கும் ஓரளவு சுதந்திரம் அளிக்கவேண்டும்.

மின்சாரம் சம்பந்தப்பட்ட வரையில், 18 ஆயிரம் கிராமங்களில், 10 ஆயிரம் கிராமங்களுக்கு மின்சார வசதி கொடுக்கப்போகிறோம். ஒரு லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் அளிக்கப்போகிறோம். இதையெல்லாம், 44 பக்கங்கள் கொண்ட அறிக்கையின் மூலம், கனம் நிதி அமைச்சர் விளக்கியிருக்கிறார்கள். இதற்கு வேண்டிய சிரமம் எடுத்து இன்னும் பல விவரங்களைத் தரும் புத்தகங்களையும் அளித்து, பள்ளிப் பிள்ளைகளுக்குப்போல், விவரமாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவ்வளவு சொல்லியும், நாம் அவற்றைப் புரிந்துக் கொள்ளாவிட்டால், என்ன செய்வது. இப்பொழுது பிளாக்குகள் ஜனத் தொகையைக் கொண்டு அமைத்திருக்கிறார்கள். அது விஸ்தீர்ணத்தைக் கொண்டும் பிரிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

விலைவாசி ஏற்றத்தைப் பொருத்த வரையில், அது ஒரு சுழல் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். சுழலானால், அதைச் சரிசெய்ய மார்க்கம் கண்டுபிடித்தாக வேண்டும். இப்பொழுது செய்ய முடியாததை, எப்படி மூன்றாவது திட்டகாலத்தில் செய்துவிட முடியும் ? மொத்தத்தில், வாழ்க்கை வசதிகளைப் பெறுக்கிக் கொண்டே போகிறோம். கஷ்டங்கள் அதிகமாகி விடுகிறது. இதற்கு உகந்த வழி, காந்தீயம் தான். காந்தீயத்தைப் போதித்து, மக்கள் சிக்கனமாக வாழ கற்றுக் கொள்ள வேண்டும். நடுத்தர வகுப்பார்கள் கூட, சினிமாவுக்குப் போவதும், சிகரெட் பிடிப்பதும், மற்ற அனாவசியச் செலவுகளும் அதிகமாகச் செய்கிறார்கள். இதற்கு, காந்தீயத்தைப் போதித்துத்தான் மக்களை மாற்ற முடியும்.

என்.ஜி.ஓ.-க்களுக்கு சீக்கிரமாக நிவாரணம் அளிக்கவேண்டும். மத்திய சர்க்கார் சிப்பந்திகள் அளவுக்கு இல்லாவிட்டாலும் கூட, செய்வதை உடனடியாகச் செய்யாவிட்டால், அவர்களின் மன வருத்தம் அதிகமாகிவிடும்.

ஜில்லாக்கள் பிரிக்கும் விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். நான் சொல்வது, வடக்கு, தெற்கு அல்ல; கிழக்கு, மேற்கு அல்ல. கோயம்புத்தூர் கிழக்கு-மேற்கில் தான் பிரிக்கப்படப் போகிறது. எமது சேலம் ஜில்லா மிகப் பெரியது. அதையாவது பிரிக்க வேண்டும்.

சர்க்கார் லோன் எழுப்பும் போது, டார்கெட் பிக்ஸ் செய்து அதன்படி வசூல் செய்யவேண்டுமென்று அதிகாரிகளுக்குச் சொல்லக் கூடாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். சிறு சேமிப்பு விஷயம் வேறு. இந்த லோன் விஷயத்தில், அவர்களுக்குத் தொந்தரவில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தனிப்பட்டவர்களிடம் லோன் சேகரிக்கச் சென்று அவர்கள் தயவை நாட வேண்டியிருக்கிறது, பிறகு சர்வாதிகாரம் செய்ய முடியாது. மற்றபடி திரு. சசிவர்ணத் தேவர் போன்ற நாட்டின் நன்மையைத் தேட வேண்டியவர் ஒரு தாலூக்காவிற்கு ஒரு



11th March 1960] [Sri S. Nagaraja Monigar]

ஹைஸ்கூல் இருந்தால் போதுமென்கிறார். இது உண்மையில் சொல்லுகிறாரா ? அல்லது பொறுமையோடு சொல்லுகிறாரா என்பதைக் கவனிக்க வேண்டும். ஆகவே நிதி நிலை அறிக்கை சிறப்பானது. இச் சபை இதை முழுமனதோடு அங்கீகரிக்க வேணுமாய் கேட்டுக் கொள்ளுகிறேன். என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRI K. R. VISWANATHAN : தலைவர் அவர்களே, இந்த 1960-61-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் நமக்கு உற்சாகம் ஊட்டக் கூடியதாக இருக்கிறது. முதலாவதாக எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் மகிழும்படி, புது வரிகள் ஏதும் இல்லை என்பது குறிப்பிடத் தக்கது. சுமார் ரூ. 34 லட்சம் அளவில் பற்றுக்குறை இருந்தும், ஒரு 'புது வரியும் இல்லாமல் இருப்பது குறிப்பிடத் தகுந்த விஷயம். அதுமட்டுமல்ல, இருந்த வரியை'யும், காய்கறி இவற்றின் மீது இருந்த வரியை நீக்கியிருப்பது வரவேற்கத்தக்க விஷயம். ஆகவே, எதிர்கட்சிக்காரர்களானாலும் சரி, ஆளும் கட்சிக்காரர்களானாலும் சரி, எல்லோரும் ஒரு மனதாக வரவேற்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தியிருப்பதற்காக, அரசாங்கம் இந்த பெரிய சாதனையைச் செய்திருப்பதற்காக அவர்களை அனைவரும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

கூட்டுறவு இயக்கத்தில் முக்கியமான மாறுதல் செய்திருக்கிறார்கள். இது வரையில் கூட்டுறவு இயக்கத்தில், நிலம் உடையவர்களுக்கும், பொருள்கள உள்ளவர்களுக்கும் மட்டிலும்தான் கடன் கொடுக்க ஏற்பாடு இருந்தது. ஆனால், இப்பொழுது, நிலம் இல்லாதவர்களுக்கும், உற்பத்தி பெறுகவேண்டும் என்ற நோக்கத்தோடு, கடன் வசதிகளை அளிக்க முன வந்திருக்கிறார்கள.

(ஸ்ரீ கே. சட்டநாத கரையாளர் தலைமை.)

அவர்களுக்கு எந்த சொத்தும் இல்லாவிட்டாலும், கடன் வசதி அளிக்க வேண்டும் என்பது மிக வரவேற்கத்தக்கது. அன்றியும் மத்திய காலக் கடன் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்பது ஆலோசனை செய்துவருவதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அநத ஆலோசனையை மிக விரைவிலேயே முடிவு செய்து ஒரு நல்ல ஏற்பாட்டைச் செய்து கொடுப்பார்கள் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால் கிராமத்திலே இருக்கக்கூடியவர்களுக்கு இன்றையதினம் குறுகிய காலக் கடன் உதவி தான் கிடைக்கிறது. குறுகிய காலக் கடன் வாங்கினால் அந்த ஆண்டு முடிவிலேயே வட்டியும், முதலும் திருப்பிக் கொடுத்துவிட வேண்டிய நிலை இருக்கிறது. அப்படிக் கொடுக்க முடியாத காரணத்தினால் கடன் பாக்கி நின்று கொண்டிருக்கிறது. ஆகவே மத்திய காலக் கடன், நீண்ட காலக் கடன் வசதி செய்து கொடுப்பது இன்றியமையாத கடமையாகும். அதற்காகச் செய்யப்படுகிற ஆலோசனைக்கு மிக விரைவிலேயே முடிவு எடுக்கவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. கூட்டுறவு இயக்கத்தில் நம் திட்டம் நம் மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டுறவு சங்கம் அமைக்கப்படவேண்டும். அதன் மூலமாக விவசாயிகளுக்கு கடன்

[Sri K. R. Viswanathan] [11th March 1960

முதலிய உதவி கொடுக்கவேண்டும். இன்றைக்கு நூற்றுக்கு 85 கிராமங்களிலே ஆங்காங்கு கூட்டுறவு சங்கங்கள அமைக்கப்பட்டு இருக்கின்றன என்று அறிகிறோம். அதுமட்டுமல்லாமல் நூற்றுக்கு 50-க்கு மேற்பட்ட கிராமத்தினர்கள் கூட்டுறவு சங்கங்களிலே உறுப்பினர்களாக ஆகியிருக்கிறார்கள் என்று அறிய மகிழ்ச்சி அடைகிறோம். இந்த நிலையில் கூட்டுறவு இயக்கத்திலே பல கட்டங்களிலே கூட்டுறவு யூனியனாக இருந்தாலும், பாங்காக இருந்தாலும் தேர்தல் முறையானது மிகவும் மோசமாக இருக்கிறது. யார் ஒருவர் ஒரு காலத்தில் ஒரு கூட்டுறவு பாங்குக்குத் தலைவராக ஏற்படுத்தப்படுகின்றாரோ அவர் காலம் முடியும் அளவும் அவர் தான் தலைவராக இருக்கவேண்டும் என்ற நியதி உண்டாகி விடுகிறது. காரணம் கைதூக்கி ஓட்டுப் போடும் முறை இருப்பது தான். அவர்களுக்குள் ஒரு முடிவு செய்துகொண்டு இன்னார் தான் தலைவராக இருக்கவேண்டும், இன்னார்தான் நிர்வாக உறுப்பினராக வரவேண்டும் என்று தீர்மானம் செய்து விட்டால் கைதூக்கி ஓட்டுப் போடும் முறையில் அப்படியே நடக்கவேண்டியிருக்கிறது. இநத மாதிரி கூட்டுறவு இயக்கங்களுக்கு நடக்கும் தேர்தல்களில் கை தூக்கி ஓட்டுப் போடும் முறை இருப்பதை மாற்றி ரகசியமாக ஓட்டுப் போடும் முறையைக் கொண்டுவர வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக முக்கியமாக நம் நாட்டைப் பாதிக்கக்கூடியது கல்வியாகும். கல்விக்காக நாம் சென்ற ஆண்டு 13 கோடி ரூபாய் செலவழித்தோம். இவ்வாண்டு பதினைந்தரைக் கோடி ரூபாய் செலவழிக்க முன் வந்திருக்கிறோம். முக்கியமாக தொழில் கல்வியைப் பரப்ப தொழில் கல்லூரி அமைக்க இந்த ஆண்டிலே திட்டம் போட்டிருப்பதனால் இப்படிக் கல்வி இலாகாவின் செலவு அதிகரித்திருக்கிறது. இந்தத் திட்டத்திலே சாதாரணமாக ஆரம்பத் துவக்கப் பள்ளி சரியாக நடைபெறுவதற்கு இன்றைக்கு கல்வி இலாகா தலைவர் அவர்கள் மேற்கொண்டிருக்கிற பள்ளிச் சீரமைப்பு மகாநாடு ஆங்காங்கு நல்ல முறையில் நடந்து கொண்டிருப்பது பற்றி நம் அரசாங்க அறிக்கையில் காண்கிறோம். எண்பது (80) மகாநாடுகள் போன்று நடந்திருக்கின்றன. ,நான்கு ஐந்து கோடிக்கு மேல் பொருள் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று அறிகிறோம். சில மகாநாடுகளுக்கு நேரில் சென்று பார்க்க எனக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அரசியல் மகாநாடுகளை விட இதற்குப் பொதுமக்கள் அதிகமாக வருகிறார்கள். அது எதைக் காட்டுகிறது என்றால் இன்று நாட்டிலே பொதுமக்களுக்கு கல்வியிலே ஏற்பட்டிருக்கிற ஆர்வத்தைக் காட்டுகிறது. இன்றைக்கு ஐந்து கோடி ரூபாயோ, பத்து கோடி ரூபாயோ மக்கள் தாமாகவே மனமுவந்து உதவ முன் வந்திருக்கிறார்கள். அது கல்வியிலே அவர்களுக்கு இருக்கின்ற ஊக்கத்தை, பெற்றோர்களுக்கு இருக்கின்ற ஊக்கத்தைக் காட்டுகிறது. அத்தகைய ஊக்கத்தைப் பயன் படுத்திக்கொண்டு முன்பு "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று சொன்ன பழமொழியைக் கூட மாற்றி, "பள்ளியில்லா ஊரில் படித்திருக்கவேண்டாம்" என்று சொல்லக் கூடிய அளவில் இருக்கின்ற உற்சாகத்தைப் பயன்படுத்தி ஆங்காங்கு பள்ளி, பள்ளிக் கட்டிடம் உண்டாக்குவதோடு பள்ளிச் சீரமைப்பு மகாநாடுகளை நடத்தி இந்தச் சர்க்காரும், கல்வி இலாகா



11th March 1960] [Sri K. R. Viswanathan]

அதிகாரிகளும் பொதுமக்களுக்கு ஆர்வத்தையும், தாங்களும் உதவி செய்யவேண்டும் என்ற நல்ல எண்ணத்தையும் வளர்த்திருப்பதற்கு நாம் அவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதுமட்டுமல்லாமல், உச்சி உணவுத்திட்டம் இருக்கிறதே, அது வறண்ட பிரதேசங்களில் சென்று பார்த்தால் எத்தகைய நன்மையை அளித்து வருகிறது என்று சொல்லலாம். அங்கே போய்ப் பார்த்தால்தான் உண்மை விளங்கும். எங்கள் உடையார்பாளையம் தாலுக்கா போன்ற இடங்களில் நல்ல உணவு இல்லாமல், குழந்தைகள் பள்ளிக்குப் போவதை விட்டு ஏதாவது வேலை செய்யப்போனால் தான் சாப்பிடலாம் என்ற நிலைமை இருக்கிறது. அங்கெல்லாம் மாணவர்களுக்கு உச்சி உணவு கொடுக்கிற காரணத்தினால் பல குழந்தைகள் பள்ளிக்கு வந்து படிக்க முடிகின்றது. ஆகையால் பள்ளிகளில் இருக்கிற குழந்தைகள் எண்ணிக்கை அதிகமாக ஆங்காங்கு துவக்கக் கல்வியானது நல்ல முறையில் நடைபெற்று வருகிறது என்பதை மக்களே தெரிந்து கொள்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதுவும் இன்றி தமிழ் வளர்ச்சிக்கு அரசாங்கத்தார் அதிக ஊக்கத்தோடு பல காரியங்களைச் செய்துவருகிறார்கள் என்பதை அறிய மகிழ்ச்சி அடைகிறேன். 1963-64-ம் ஆண்டில் இருந்து விஞ்ஞானக் கல்வியைத் தவிர மற்ற பாடங்கள் எல்லாம் கல்லூரிகளில் தமிழில் போதிக்கப்பட இருக்கிறது. அதற்கு வேண்டிய முயற்சிகள் யாவும் நடந்து வருகின்றன. அப்படித் திட்டமிட்டு காரியங்கள் செய்து வருவதைப்பற்றி நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

அதற்கு அடுத்தபடியாக குடிநீர் திட்டத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்பகிறேன். அரசாங்கத்தார் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எப்படியாவது எந்த ஊரிலும் குடி தண்ணீருக்குத் துன்பம் இல்லை என்ற ஒரு நிலையை உண்டாக்கவேண்டும் என்று திட்டம் போட்டிருக்கிறார்கள். இருந்தாலும் கூட சில இடங்களில் டெல்டா பிரதேசங்களில் தேசீய நீர் வழங்கும் திட்டம் என்பதை மத்திய சர்க்கார் உதவியைக் கொண்டு தீட்டி காரியங்களைச் செய்து வருகிறார்கள். மற்ற பிரதேசங்களிலும் கூட குடி நீர் வசதி இல்லாத காரணத்தினால் நரம்புச் சிலந்தி போன்ற நோய்கள் அதிகமாக பாதித்துக் கொண்டிருக்கின்றன. அத்தகைய நரம்புச் சிலந்தி நோய் வரக் கூடிய பகுதிகளில் கூட தேசீய நீர் வழங்கும் திட்டத்தின் கீழ் வசதி செய்து கொடுக்கவேண்டும் எனக் கிளர்ச்சி செய்து அதை மத்திய சர்க்கார் ஒப்புக்கொண்டார்கள். ஆனால் டெல்டா பிரதேசத்தில் அண்மையில் உள்ள கிராமங்களில் எங்கே நரம்புச் சிலந்தி நோய் வருகிறதோ அந்த இடங்களுக்கு மட்டும் தான் தேசீய நீர் வழங்கும் திட்டத்தின் கீழ் குடிநீர் வசதி செய்து கொடுக்க முடியும் என்பதாக திருச்சி மாவட்ட கலெக்டருக்கு அறிவித்திருப்பதாகத் தெரிகிறது. அத்தகைய ஒரு மறுப்பை நீக்கி இந்த தேசீய நீர் வழங்கும் திட்டப்படி டெல்டா பிரதேசம் இல்லாத பகுதியிலும், நரம்புச் சிலந்தி வரக்கூடிய இடங்களில் உடனடியாக அமுல் செய்யவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[Sri K. R. Viswanathan] [11th March 1960

அடுத்தபடியாக நீர்ப்பாசன வசதியைப் பொறுத்த வரைக்கும் நாம் பெரிய ஆற்றுத் திட்டங்களை எல்லாம் பயன்படுத்திக் கொண்டு விட்டோம். சிறிய ஆறுகளை இப்போது பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். உடையார்பாளையம் தாலூகாவில் மருதையாறு திட்டத்தை இன்றைக்கு அரசாங்கத்தார் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். அதை உடனடியாக எடுத்து நிறைவேற்றி வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே சமயத்தில் உடையார்பாளையம் தாலூகாவில் ஓரிரண்டு இடங்களில் ஊற்றுக் கிணறுகள் இருக்கின்றன. இன்னும் பலவிடங்களில் அதற்கு வேண்டிய வசதிகளை எல்லாம் செய்தால் அதிகமாக பாசன வசதியைச் செய்துகொடுக்க முடியும் என்று நாங்கள் நம்புகின்றோம். ஆகையால் சுமார் 100 ஆழக் குழாய்க் கிணறுகள் இறக்குவதற்கு உடையார்பாளையம் தாலூகாவில் ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்குப் பவர் ட்ரில்கள் நம்மிடத்தில் இல்லை என்று பெரும் குறையாக நம் அரசாங்கத்தார் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய "பவர் டிரில்" களை மத்திய சர்க்காரிடம் இருந்தோ, வேறு நாட்டில் இருந்தோ நாம் இறக்குமதி செய்து அதை துரிதமாக நிறைவேற்றி வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு விஷயம். ஸ்தல அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் சென்ற ஆண்டு குடி நீர் கிணறுகளுக்காக மட்டும் பணம் ஒதுக்கப்பட்டிருந்தது. இவ்வாண்டு பள்ளிக் கட்டிடங்கள், ரோடு முதலிய வற்றுக்காகச் செலவிட முன் வந்திருப்பது மிகவும் வரவேற்கத் தகுந்த விஷயமாகும். நாம் இன்றைக்கு 1963 அக்டோபர் வரை சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை ஆங்காங்கு விஸ்தரிப்பது என்று திட்டமிட்டியிருக்கிறோம். சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் இல்லாத இடங்களில் ஸ்தல அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் பல காரியங்களைச் செய்ய மக்கள் இப்பொழுதே முன் வருகிறார்கள். மாநில முழுவதும் சமுதாய வளர்ச்சித் திட்டம் பரவும் வரை இடவளர்ச்சித் திட்டம் அமுலில் இருந்தால் மக்கள் நல்ல முறையில் இதைப் பயன்படுத்திக்கொள்வார்கள் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஓரளவு அரசாங்கத்தார் பிற்பட்ட வகுப்புகளுக்கு இந்த ஆண்டிலும் மிக்க நல்ல முறையில் ஆதரவு அளிக்க முன் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய குறைகளை காலதாமதம் இன்றி நீக்க முடியாது போனது பற்றி நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த ஆண்டில் மிக முன்னேற்பாடாக படிப்புக்கு உதவி வழங்குவது ஜூன்-ஜூலை மாதத்தில் மனு வருகிறதென்றால் ஆகஸ்டு-செப்டம்பர் மாத இறுதிக்குள்ளாவது இந்த உதவித் தொகையைக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். இந்த எல்லா உதவிகளையும் பத்து ஆண்டு காலம் நீடித்துத்தர வேண்டும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். பொருளாதார அடிப்படையில் தான் கல்விச் சலுகை அளிக்கவேண்டும் என்று கூறப்படுகிறது. இந்த சலுகைகள் வழங்கத் தொடங்கிய காலத்தில் பிற்பட்ட மக்கள் கல்வி



11th March 1960] [Sri K. R. Viswanathan]

பொருளாதாரத்தில் முன்னேறவேண்டும் என்ற காரணத்தினால் பல கல்விச் சலுகைகள் அளிக்கப்பட்டது. இப்பொழுது பிற்பட்ட வகுப்பினருக்கும், முற்பட்ட வகுப்பினருக்கும் பொருளாதார அடிப்படையில் கொடுக்க என்ன காரணங்கள் இருந்தாலும், பிற்பட்ட சமூகத்தினருக்கு தனிப்பட்ட முறையில் பணம் ஒதுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முற்பட்ட வகுப்பினருக்கும், பிற்பட்ட வகுப்பினருக்கும் சரிசமமான அறிவியல் நிலை (Intellectual States) இருந்தால், அம்மாதிரி பொருளாதார அடிப்படையில் கொடுக்கலாம். ஆனால் இப்பொழுது பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்தவர்கள் அந்த இன்டலக்சுவல் ஸ்டேட்டை ஓரளவுக்குத்தான் அடைந்திருக்கிறார்கள். ஆதலால் பிற்பட்ட சமூகத்தினர் முற்பட்ட சமூகத்தினருக்குச் சமமாக எல்லா வகையிலும் முன்னேற முற்பட்ட சமூகத்தினருக்கும், பிற்பட்ட சமூகத்தினருக்கும் தனித் தனியாக தொகை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **Sri V. SUBBIAH**: கனம் தலைவர் அவர்களே, இந்தச் சபை முன் வைக்கப்பட்டிருக்கும் வரவு—செலவு இனங்களை விவசாய கண்ணோட்டத்தோடு பார்ப்போமானால் மிகவும் பழமையான கிணறுமான்யம், விதைப்பண்ணை, உரம் வருஷா வருஷம் வரவு செலவு இனங்களில் காணக்கூடியதே இந்தத் திட்டத்திலும் இருக்கின்றன. விவசாயிகளுக்கான நன்மை ஏதாவது செய்யப்பட்டிருக்கின்றனவா என்று பார்ப்போமானால் அது மிக மிகக் குறைவாக இருக்கிறது. குறிப்பாக விவசாயிகள் முன்னேற்றம் அடைய வேண்டுமானால் விளைப்பொருள்கள் உற்பத்தி பெருக வேண்டும். என்போன்ற வரண்ட பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு விவசாய மகசூலுக்கு ஈடு இருக்கவேண்டும். இங்கு இருக்கக்கூடிய கால் நடைகளை எடுத்துக்கொண்டால் கால் நடைகள் அதிகமான விலைக்கு விற்கப்படுகின்றன. அவர்கள் அதை ஈடு செய்ய ஒரு இன்ஷூரன்ஸ் திட்டம் இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன். இப்பேர்ப்பட்ட திட்டங்கள் இந்த வரவு செலவு திட்டத்திலே இல்லை என்று சொன்னபோதிலும் சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன. அதற்காக சர்க்காரைப் பாராட்டுகிறேன்.

இன்றைக்கு விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளை பொருள்களெல்லாம் அனேகமாக வானம் பார்த்த பூமியில்தான் விளைகின்றன. பெரும்பாலான விவசாயிகள் மழையை நம்பித்தான் பயிர் செய்கிறார்கள். சில சமயங்களில் நல்ல மகசூல் கிடைக்கிறது. ஆனால் என்னுடைய சங்கரன்கோவில் தாலூகாவில் பல வருஷங்களாக மழையில்லாமல் வரட்சி ஏற்பட்டு நிலம் எல்லாம் தரிசாக இருக்கிறது. அந்த நிலங்களுக்கு வரிவஜா அளிக்கப்படவேண்டும். அந்தப் பகுதியில் பிரிட்டிஷ் ஆட்சி இருந்த காலத்திலேயே கீரி ஆறு, பம்பையாறு திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்று இருந்தார்கள். இப்பொழுது அந்தத் திட்டங்களை நிறைவேற்றவில்லை. அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு இன்னும் நன்மை ஏற்படாதது மிகவும் வருந்ததக்கது. சிலோன், பர்மா போன்ற நாடுகளில் இருந்து மிளகாய் வத்தலுக்கு நிறைய கிராக்கி இருந்தது. 247 ராத்தலுக்கு 500 ரூபாய் விலை இருந்தது, இப்பொழுது 247 ராத்தல் 230 ரூபாய்க்கு வந்துவிட்டது. ஆனால் விவசாயிகளின்

[Sri V. Subbiah] [11th March 1960

உற்பத்திச் செலவு அதிகமாகிக்கொண்டே போகிறது. சாதாரணமாக விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு எவ்வளவு செலவு ஆகிறது என்பதை ஆராய்ந்தால், அவர்களுக்கு எவ்வளவு கஷ்டம் இருக்கிறது என்பது நன்றாகத் தெரியும். ஒரு ஏக்கர் நிலத்திற்கு 500 முதல் 600 ரூபாய் வரை செலவு ஆகிறது.

இது மாதிரி பருத்தியை எடுத்துக்கொண்டால் எங்கள் ஜில்லாவில் பருத்தி நிறைய உற்பத்தி ஆகிறது. அதுவும் நீண்ட இழைக் கருங்கண்ணி பருத்தி இங்குதான் கிடைக்கிறது. அதாவது கெ. 3—கெ. 6 முதலிய உயர்தரமான பருத்தி இங்குதான் விளைகிறது. 40 நெ. 60 நெ. போன்ற உயர்ந்த துணிகளுக்கு வேண்டிய பருத்தி இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் விவசாயிகளுக்கு கொடுக்கப்படும் விலையோ மிகவும் குறைவு. மில் முதலாளிகள்தான் குறைந்த விலையில் வாங்கி அதிக லாபம் அடைகிறார்கள். விவசாயிகளுக்கு லாபத்தில் பங்கு ஒன்றும் கிடையாது. இந்த நிலைமை எல்லாம் மாறி விவசாயிகளுக்கு உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு நல்ல விலையை நிர்ணயம் செய்து கொடுத்தால், அப்பொழுதான் கிராம மக்கள் முன்னேற முடியும்.

இன்றைக்கு இன்டஸ்டிரியல் எஸ்டேட்கள் பல இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. காந்திஜி அவர்கள் இதுபோன்றவைகளை பரவலான முறையில் அமைக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். இப்பொழுது ஒரு எஸ்டேட்டு அமைக்கப்பட்டிருக்கிறது. முனிசிபல் நகரங்களில் திருநெல்வேலி, விருதுநகர், ஈரோட் போன்ற இடங்களில் இன்டஸ்டிரியல் எஸ்டேட்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதனால்தான் கிராம மக்கள் இந்த முனிசிபல் நகரங்களுக்குப் போய் குடியேறிவிடுகிறார்கள். காரணம் கிராமத்தில் வாழ்வதற்கு வேண்டிய போதிய கூலி நல்ல வீடு இவைகள் இல்லாததால்தான். நகரத்தில் அவர்களுக்கு நாளைக்கு 8 மணி வேலையில் 4 ரூபாய் கிடைக்கிறது. கிராமங்களில் ஒரு ரூபாய் கூட கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆதலால் இம்மாதிரித் திட்டங்களை பெரிய பெரிய முனிசிபல் நகரங்களில் அமைக்காமல் மகாத்மா காந்தி அவர்கள் சொன்ன பிரகாரம் பரவலான முறையில் இவைகளை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்பொழுது தான் கிராம மக்கள் சுபிட்சமாக வாழ முடியும்.

அடுத்தபடியாக விவசாயிகளுக்கு வேண்டிய மின்சார வசதிகள் செய்துக் கொடுக்க வேண்டும். இந்த விவசாயிகள் மின்சார வசதி இல்லாமல் அனுபவிக்கக்கூடிய கஷ்டங்கள் ரொம்பவும் அதிகமாக இருக்கின்றன. சொல்ல முடியாத கஷ்டத்திற்குள்ளாகிறார்கள்.

12 noon. சமீபத்தில் பல நிகழ்ச்சிகள் எனது தொகுதியில் நடந்ததை மின்சார அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். விவசாயத்திற்குக் கொடுக்கப்படும் மின்சாரம் இன்று க்ரூப்பிங் ஸிஸ்டம் என்ற ஸிஸ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது. க்ரூப்பிங் ஸிஸ்டம் என்றால், ஒரு லைனில் காலை ஆறு மணியிலிருந்து 12 மணி வரை ஓடும். இன்னொரு பகுதிக்கு



11th March 1960] [Sri V. Subbiah]

மாலையில் கொடுப்பது. இதுதான் க்ரூப்பிங் ஸிஸ்டம் என்பதாகும். இந்த ஸிஸ்டத்தினால் விவசாயிகள் படக்கூடிய கஷ்டங்களைப் பார்த்தால் மிகவும் பரிதாபகரமாகயிருக்கிறது. சமீபத்தில் எங்கள் பகுதியில் இரண்டு எலெக்ட்ரிக் மோட்டார்கள் தீய்ந்துவிட்டன. அது, இந்த ஸிஸ்டத்தின் கோளாறோ அல்லது அங்குள்ள சிப்பந்திகளின் தவறினால் ஏற்பட்டதோ, எப்படியோ ப்யூஸ் (fuse) உருவிக் கொடுத்த காரணத்தினால் இரண்டு மோட்டார்கள் தீய்ந்து போய்விட்டன. இப்படி பல சம்பவங்கள் நடக்கின்றன. இந்த ஸிஸ்டத்தினால் விவசாயிகள் படும் கஷ்டத்தைப் பார்த்தால் மிகவும் சங்கடமாகயிருக்கிறது. மினிமம் சார்ஜ் போன்றவைகள் வசூல் செய்யப்படுகின்றன. ஒருவர் மினிமம் சார்ஜ் 200 ரூபாய் கட்ட வேண்டுமென்றிருந்தால் அந்த விவசாயி 150 ரூபாய்க்குத் தான் கரெண்ட் எடுத்துக் கொள்கிறான். அவர்கள் எடுத்துக் கொள்ளாத கரெண்ட்டுக்கு 50 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. விவசாயம் வளர வேண்டும், விவசாயிகளின் நல்வாழ்விற்காகவே இந்த அரசாங்கம் வாழ்கிறது என்று சொல்லும் இந்த அரசாங்கம் விவசாயிகள்படும் கஷ்டங்களை உணராதிருக்கிறார்கள். அந்த இரண்டு மோட்டார்கள் தீய்ந்து போனதற்கு சிப்பந்திகள் காரணமாகயிருக்கலாம். இப்படியெல்லாம் இருந்தால் விவசாயிகளின் நிலைமை என்னவது என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படி சிந்தித்துப் பார்த்து விவசாயிகளின் கஷ்டங்களைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். அடுத்தபடியாக, இன்று இருக்கக் கூடிய பல கிராமப்புற ரோடுகளைப் பார்க்கும்போது மிகவும் பரிதாபகரமான நிலையில்தான் அவைகள் இருக்கின்றன. ஒரு ரோடு கூட நல்ல நிலையில் இல்லை. ரோடு இல்லாத காலத்தில் கூட அந்தக் கிராமங்களுக்கு சாதாரணமாகப் போய் வர முடியும். ஆனால் இப்பொழுது அந்த கிராமங்களுக்குப் போக முடியாத விதத்தில்தான் கிராம ரோடுகள் இருக்கின்றன. அவைகள் சரியாகச் செப்பனிடப் படுவதில்லை. ஜில்லா மேஜர் ரோடுகள் ஹைவேஸினால் எடுத்துக் கொள்ளப்பட்டு நல்ல முறையில் இருக்கின்றன. ஆனால் கிராம ரோடுகளில் மக்கள் நடமாட முடிவதில்லை. அப்படி நடக்க முடியாத நிலையில்தான் கிராம ரோடுகள் இருக்கின்றன. ஆகவே, இந்த ஓ. டி. ஆர். ரோடுகளை, மற்ற ஜில்லாக்களோடு இணைக்கும் ரோடுகளை எல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும். வரக்கூடிய பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுத்தால் அவர்களால் ஒன்றுமே பார்க்க முடியாது. ஆக, பல திட்டங்களை அரசாங்கம் எடுத்துச் செய்ய வேண்டியிருக்கிறது. ஆக, நான் சொல்வது என்னவென்றால், உடனடியாக கிராமங்களுக்கு ரோடு வசதி செய்து கொடுக்க ஜில்லா போர்டுக்கோ அல்லது ஹைவேஸ் என்ஜினியருக்கோ நிறைய பணம் ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, மத்திய அரசாங்கத்தால் பல மறைமுக வரிகள் போடப்பட்டிருக்கின்றன. சைக்கிள்களுக்கு வரி போடப்பட்டிருக்கிறது, நல்ல பட்டுக்கு வரி போடப்பட்டிருக்கிறது. ஆர்டிபிஷியல் பட்டுக்கு வரி இல்லை. ஆனால் நல்ல பட்டுக்கு வரி போடப்பட்டிருக்கிறது. இப்படி வரி போடப்பட்டால் ஏழை மக்கள் இவைகளையெல்லாம் எப்படி அனுபவிக்க முடியும்? ஆக, கிராமங்களில் விவசாயிகள் நல்ல

முறையில் வாழ்வதற்காக நல்ல பல திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். பல ஆண்டு காலமாக கிராமங்களில் கிணறுகள் வெட்டுவதற்காக மான்யம் கொடுக்கப்பட்டு வருகிறது. இதில் ஒரு மாறுதல் செய்ய வேண்டும். பெரிய பெரிய கிணறுகளாக அரசாங்கம் வெட்டி அவைகளில் மோட்டார் போட்டு வைத்தால் அது மக்களுக்கு பலன் அளிப்பதாக இருக்கும். அதில்லாமல் விவசாயிக்கு கிணறு வெட்ட 100 ரூபாய் கொடுத்துவிட்டு அதில் தண்ணீர் வராவிட்டால் அதை ரிக்கவர் செய்வது என்பது இருக்கக் கூடாது. இதையெல்லாம் யோசித்துப் பார்த்து புது முறை ஒன்றை ஆரம்பித்தால் அது எதிர்காலத்தில் பலனுள்ளதாக இருக்குமென்று சொல்லிக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **SRI V. CHINNIAH:** தற்காலீக சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த 1960-61-ம் வருடத்திய வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து நான் ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது அழுகும் பொருள்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். இருந்த போதிலும் என். ஜி. ஓ.-க்களின் குறை பெரும்பாலும் தீர்க்கப் படாமல்தான் இருக்கிறது. எங்கு பார்த்தாலும் என். ஜி. ஓ.-க்களின் நிலை படுமோசமாகத்தானிருக்கிறது. அதைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் விரைவில் முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். இந்த ஆண்டில் பருவ மழை தவறி விட்டதால் புதுக்கோட்டை பிராந்தியத்திலுள்ள விவசாயிகள் பெரும்பாலோரும் மிகவும் வேதனை அடைந்து கொண்டிருக்கிறார்கள். பருவ மழை இல்லாததனால் விவசாயம் பாதிக்கப்பட்டு விட்டது. மக்களுக்கு உண்ண உணவு இல்லாத நிலைமைதான் அங்கு இருக்கிறது. கால் நடைகளுக்குத் தீவனம் போடுவதற்குக் கூட வழியில்லாமல் இருக்கிறது. உணவு தான்யங்களின் விலை உச்ச நிலையை அடைந்திருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும். கால்நடைகளுக்கு வைக்கோல் வாங்கிப் போட வேண்டுமென்றால் வைக்கோல் கட்டு எட்டு, ஒன்பது ரூபாய் என்று விற்கிறது. ஆக, மாடுகளுக்கு வேண்டிய உணவு இல்லாதிருப்பதால் போதுமான அளவு நிலததை ஒதுக்கி வைத்து புல் பண்ணை ஒன்று வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, பள்ளிக்கூட மாணவர்களை எடுத்துக் கொண்டால் அரசாங்கம் ஆறு நயா பைசா என்றும், பொது மக்கள் நாலு பைசா என்றும் கொடுப்பதாக பட்ஜெட்டில் இருந்து தெரியவந்தது. இது, மத்தியான உணவுக்கு பயன்படுகிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். மாதத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு முறைதான் குழந்தைகளுக்கு மத்தியான உணவு போடுகிறார்களே தவிர மற்ற நேரத்தில் போடுவது கிடையாது என்று தெரிய வருகிறது. இந்த ஆறு பைசாவை மாணவர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் உற்சாகத்தோடு படிக்க முன்வருவார்கள். அந்தந்த ஊரிலுள்ள பெரிய மனிதருக்கோ அல்லது ஓராசிரியருக்கோதான் அந்தப் பணம் பிரயோஜனப்படுகிறதே தவிர அது பள்ளிக் குழந்தைகளுக்குப் போய்ச் சேருவதில்லை. ஓராசிரியர் பள்ளிகள் மூன்று, நான்கு மாதங்கள் பூட்டி வைக்கப்பட்டு அவர்கள் ஊரில் இருந்துகொண்டே சம்பளம் பெற்று வருகிறார்கள். திருச்சி ஜில்லாவில் இப்படி இரண்டு ஆசிரியர்கள் செய்திருக்கிறார்கள் என்று அதிகாரிகளின கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பள்ளிக்கூடத்தைப் பூட்டிவிட்டு நாலு மாத சம்பளத்தை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். இதுபற்றி அந்தக் கிராமத்தில் விசாரணை செய்ததில் அங்குள்ள மணியக்காரரும், ரெவன்யூ இன்ஸ்பெக்டரும் அப்படியே சொன்னார்கள். அவர்கள் மக்கள் பணத்தைச் சாப்பிட்டிருக்கிறார்கள், ஆகவே அந்த ஆசிரியர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இது சம்பந்தமாக கல்வி அமைச்சர் அவர்களிடமும் ஒரு மனு கொடுத்தோம். ஆனால் அதுபற்றி இதுவரையில் ஒரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. உணவுப் பஞ்சத்தைத் தீர்க்க வேண்டுமானால் வெளி நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து அதைத் தீர்த்துக்கொள்ளலாம். ஆனால் அறிவுப் பஞ்சம் ஏற்பட்டால் இன்னொரு நாட்டிலிருந்து அதை இறக்குமதி செய்ய முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். புதுக்கோட்டைப் பிராந்தியத்திற்குப், பல மாநாடுகள் போட்டு காவேரி நீர்ப்பாசனம் வேண்டுமென்று பல தடவைகள் வாதாடினோம். ஆனால இதுவரையில் காவேரி நீர்ப்பாசனம்பற்றி எந்த விதமான நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. காங்கிரஸ் சர்க்கார் இருக்கும் வரையில் புதுக்கோட்டை பகுதிக்கு காவேரி நீர் கிடையாது என்று சொன்னால் இனி அதுபற்றிய பிரச்னையை கிளப்பவே மாட்டோம். அங்குள்ள விவசாய மக்கள் வரி கொடுப்பதற்கு தங்கள் நிலங்களையே விற்று வரி கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படித்தான் செய்து வருகிறார்கள். இனிமேலாவது அங்கு 2,000 ஏக்கருக்காவது தண்ணீர் பாயக்கூடிய நிலையை உண்டுபண்ண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(Deputy Speaker in the Chair.)

புதுக்கோட்டை பிராந்தியத்தில் போக்குவரத்து வசதிகள் குறைவாகவே இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே அந்தப் பிராந்தியங்களில் ரோடுகளை நல்ல முறையில் போடுவதற்கு தக்க பரிசீலனை செய்ய வேண்டும். அதோடு நல்ல முறையில் தார் ரோடுகளை போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்த அளவில் புதுக்கோட்டை பிராந்தியத்தில் பெரும்பாலும், சமஸ்தான பிராந்தியமாக இருந்த போது ஒன்றிரண்டு கிராமங்களுக்குத்தான் கிடைத்து வந்தது. இப்போதும்கூட நல்ல முறையில் மின்சார வசதி பெருகியிருப்பதாகச் சொல்வதற்கில்லை. ஆகவே மற்ற இடங்களுக்கு எல்லாம் எந்த விதத்தில் மின்சார வசதி செய்து கொடுக்கப்படுகிறதோ அதே முறையில் இந்த பிராந்தியத்திற்கும் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாயத்திற்கு கொடுக்கப்படும் மின்சாரத்திற்கும் குறைந்த அளவில் கட்டணம் வசூலிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு அங்குள்ள விவசாயிகளுக்கு நல்ல விதைகள் கிடைப்பதில்லை. ஆகவே விவசாயிகளுக்கு நல்ல முறையில் விதைகள் கிடைப்பதற்கும் வழி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[Sri V. Chinniah] [11th March 1960

மேலும் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில் ஹரிஜனங்களுக்காக அதிகமான தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அந்தப் பணம் ஹரிஜனங்களுக்கு என்று மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கும் போய்ச் சேருகிறது. ஆகவே, இதைத் திருத்தி அமைக்கவோ அல்லது "பேக் வார்ட் கம்யூனிட்டி" என்ற இனத்தின் மீது கொடுக்கவோ வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் ஹரிஜனங்களுக்காக பல முன்னேற்றமான திட்டங்கள் செய்யப்பட்டிருக்கிறது, அவைகளை எல்லாம் நான் வரவேற்கிறேன். ஆனால் வீடு கட்டிக் கொடுக்கும் விஷயத்தில் ஒரு ஜில்லாவுக்கு என்றோ அல்லது ஒரு தாலூகாவுக்கு என்றோ 20 வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். இவைகள் பெரும்பாலும் கண்டிராக்டர்கள் மூலமாக கட்டப்படுகின்றன. இதனால் இவைகளுக்காக செலவு செய்யப்படும் பணம் சரியான முறையில் உபயோகிக்கப்படாமல் பாதிப் பணமும் வீணாகப் போய்விடுகிறது. ஆகவே சர்க்கார் இவ்வளவு பணம் ஒதுக்கியிருந்தும் இம்மாதிரி வீடுகள் கட்டிக் கொடுப்பது வெறும் கண்துடைப்பாகப் போய்விடுகிறது. ஆகவே இதையும் நல்ல முறையில் செய்து கொடுப்பதற்கு வழி செய்ய வேண்டும் என்று தாழ்மையாகக் கேட்டுக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* SRI R. SRINIVASA IYER : Mr. Deputy Speaker, Sir, this Budget of the Hon. Minister for Finance has been welcomed generally by the Press which is an indication of the public welcome. Even though he envisages a deficit of Rs. 34 lakhs, I would state that it is not really a deficit because in some instances the amount taken credit for 1960–61 by way of revenue is far less than the actuals of 1959–60. One such instance is our share of the Central Income-tax which has been reduced from Rs. 680 lakhs in 1959–60 to Rs. 437 lakhs in 1960–61. It has been stated that there is no tax this year but really the Central taxes have been levied. So we must think that since Central taxes have been levied we will get share of those taxes, as has been taken into account in this Budget also, though the amount may not be as accurate as we can expect it to be. In this connection, I would like to say that the Non-Gazetted Government servants had been expecting for a long time that they will get some announcement of some increase at least a temporary increase, in their wages or dearness allowance at the time when the Budget was presented. Though the Hon. Minister for Finance envisages an extra expenditure due to the recommendations of the State Pay Commission, an announcement of the nature made by the Hon. Minister for Finance of the Mysore State would have been welcomed by the Non-Gazetted Government servants. Yet they can have a hope that there will be some enhancement in their emoluments after the Pay Commission's Report which is expected by the end of this month. I would suggest that we must take steps to take away the disparity in the scales of pay between the Non-Gazetted servants of the Central and State Governments working in the same place. Otherwise, this disparity is likely to give room for the non-gazetted servants of the State Government not to do as much work as they



11th March 1960] [Sri R. Srinivasa Iyer]

can be expected to do and to go on agitating for increased emoluments. At the same time, the reference of the Hon. Minister for Finance with regard to rise in prices and the vicious circle of higher emoluments and rising prices, has got to be taken note of. If prices have got to be stabilised, it can be done only in collaboration between the State and the Centre. We must put forward proper figures to the Centre to fix proper floor prices. If agricultural commodities are priced high now, it is only because of the increase in the cost of production by leaps and bounds.

I would also suggest that the Government should take steps to build thousands of houses for the low-paid Government servants on the lines of the type-design houses for persons drawing graded scales of pay, i.e., drawing up to Rs. 100, Rs. 100—200 and so on, as has been built by the Neyveli Lignite Corporation and let these houses to Government servants at a cheap rent, at least not above 10 per cent of their salaries. This scheme is now limited to Madras City but it should be extended to mofussil also so that this question of high rent in particular places will not arise.

I would also suggest that the salaries of technical graduates should be the same. We are increasing the production in agriculture and we want agricultural graduates to go to the villages, work there and increase agricultural production. Similarly we want veterinary doctors to go to villages and improve animal husbandry there. At the same time we do not pay them as much as is given to medical graduates, who are working under better circumstances and who are refusing to go to villages unless they are paid more. Now we find that in Primary Health Centres, an extra sum of Rs. 100 is to be paid to medical graduates. Therefore, I would appeal to the Government that in whatever sphere they may work, all technical graduates—agriculture, medical, veterinary, and engineering—should have the same scale of pay so as to induce them to work hard and turn out as much work as they are expected to do. At the same time I would also point out to the Government that the cost of general administration is mounting up every year. We must reduce the cost of general administration. I would also suggest that the dearness allowance, house-rent and other allowances of the Government servants should all be integrated into one consolidated sum and introduced into the grades of pay at which they are paid. If that is done, and if the Government servants turn out as much work as they are expected to do conscientiously, production will increase, our income will naturally increase, the average income of individuals in the State will increase and their pay will also automatically increase. I appeal to them to just think whether they are turning out as many hours of work as they are expected to do at present, and that much will be enough to induce them to work efficiently and turn out better work. I request them to wait a little more for the announcement of extra remuneration to come and at the same time, to work conscientiously for the betterment of the people in the State.

[Sri R. Srinivasa Iyer] [11th March 1960

Sir, with reference to development, we have been developing very fast and we must congratulate all the Heads of Departments of the State that they have spent nearly Rs. 30 crores more under the Second Five-Year Plan even though a target of only Rs. 152 crores was fixed. At the same time villages which are the bases for our improvement, have not been developed. I repeat the suggestion made by several hon. Members who spoke before me that roads in villages are the most important. If roads in villages are not improved, we will have to answer the charge that the rich man is getting richer, that is, the better roads are getting better and the poor man is gettting poorer, that is, poor roads are getting damaged every year. Therefore I suggest that more amount should be allotted for improvement of roads. In this connection, I would point out that out of 24.047 miles of roads in the State, only 1,087 miles are Central roads, 9,147 miles are State roads and out of 13,816 miles of other roads nearly 9,000 miles are useless roads, inferior roads even according to the classifications of the departments concerned. Village roads should be connected to nearer markets and towns. If only every village road is connected to the nearest rail-head or town competition between railways and parallel roadways will go. Villages will get the benefit of quick and easy transport. At present the condition of the village roads is none too happy. The village roads should be connected to the nearest market. Then the villager could be induced to grow more food crops. If there is a good road he can bring his produce to the market easily and earn more. At present the middlemen take a large slice of the villager's meagre income. The cart-hire, the charge the villager has to pay to the cartman to bring his produce to the nearest market is high. Moreover the bullocks are not able to negotiate these bad roads. If only these village roads had been quite all right, the cart hire may not be much and the roads can also be easily negotiated by the bullocks. There is no phased programme for each district so far as metalling and improvement of village roads are concerned.

The Motor Vehicles Act of 1931 is there. It is now more than 20 years since the Act was passed. The income from motor vehicles has increased much. The Act has got to be amended. The distribution of the proceeds under the Motor Vehicles Act, 1931, needs revision. I would suggest that we must distribute the proceeds of the motor vehicles taxation in a better manner so that every district may get its due share with reference to the population and mileage of roads in each district. I would even suggest that backward areas like Pattukkottai division in Tanjore district and Vedaranyam in Tiruthuraipundi should get a better and special deal at the hands of Government so far as improvement of communications is concerned. In this connection I would also suggest that we must open a large number of roads which are not parallel to railways. We must plan new roads, metal them, blacktop them and the roads should be such that buses and lorries can ply along and it may be possible for any villager to take the bus and go to the nearest railway station or town. Due to the running of



11th March 1960] [Sri R. Srinivasa Iyer]

roads parallel to and by the side of railway lines there is keen competition now and there is also the charge that trains are now going empty and Railways are working at a loss. There is also the fear that some trains between Tiruchirappalli and Villupuram will be stopped because of this.

Of course there is provision in the Budget for distribution of fertilisers, starting of some more seed farms and provision of other amenities to ryots. But there is one important thing and that is minor irrigation. The minor irrigation works programme is at present handled by four departments, i.e., Public Works Department, State Minor Irrigation Projects (Minor Irrigation Wing) under Revenue Board and Food Production Wing under the Ministry of Agriculture. Because of uneven distribution of work and lack of proper distribution of work between these people and overlapping of jurisdiction, minor irrigation works are not being quickly investigated and the necessary amount sanctioned as quickly as it ought to be. I can say that much headway has not been made in the repair of many ex-zamin ex-inam tanks in Tanjore district. As admitted by the Hon. Finance Minister, we have to lay stress on minor irrigation works since we have completed most of our major irrigation schemes. Repairs of irrigation tanks, wells, all these things must be integrated in one or two departments. I would suggest that repairs of minor irrigation tanks should be given to the Food Production Department. Other works should be distributed between Public Works Department and State Minor Irrigation Projects Department. Some adjustments have to be made and minor irrigation works have to be given prominence and placed under the control of one department. I would suggest that Food Production Department having exceeded their target in expenditure and doing good and quick work, they could be expected to handle minor irrigation works also. Therefore I request that Food Production Department should be increased in personnel; additional staff should be sanctioned by merely transferring people from other departments. They should be asked to take up this work in a quicker manner and all the bottlenecks of getting technical sanction, then administrative sanction and then going back again to get Government sanction—all these things should go. Minor irrigation works should be taken up more quickly.

As for getting the required agricultural and veterinary graduates, the statement that admissions have been increased will not be enough. We feel now the need for an additional agricultural college and a veterinary college. In Coimbatore we have already got an agricultural college and a Research institute. At the same time I would add that we concentrate on the development of animal husbandry also. I would suggest the opening of a Veterinary College in Coimbatore where there are facilities in the Central Farm there. An agricultural college should be opened in Tanjore district. When I say Tanjore district, I do not intend that it should be at Tanjore. It may be in any place like Aduthurai or Orthanad. Aduthurai is in old delta and Orthanad is in new

[Sri R. Srinivasa Iyer] [11th March 1960

delta irrigated by the Grand Anicut Canal System. We have a good livestock farm at Orthanad. We are at present advocating mixed farming, viz., agriculture and animal husbandry together. That will be an ideal place for starting an Agricultural College. When I plead for an Agricultural College for Tanjore district, let me not be understood as saying that other districts should not have colleges. Every industrial district should have a technical college. Tanjore is best fitted for an Agricultural College. So, I appeal for the opening of an Agricultural College there.

Now I come to increase in food production. Madras State leads in agricultural production. The average for paddy is 1,878 lb. per acre here in Madras, while in Andhra it is 1,671 lb. per acre. Mysore comes third with 1,665 lb. per acre. These are figures for 1958-59. 1959-60 figures are not yet available. I am sure we would have reached an average of 2,000 lb. per acre. This is an average for the whole State of Madras. In some parts like Tirunelveli, Tanjore and Tiruchirappalli districts, the average is above 3,000 lb. per acre. For the whole State, the average is 2,000 lb. of paddy and 1,300 lb. of rice per acre. The all-India average is 820 lb. If only other States take it into their head and increased their production of foodgrains, so much of foodgrains need not be imported from foreign countries into India. The increase can be doubled if only we supply the fertilisers in a proper manner. Supply of green manure seeds should be done at the proper time. We get green manure seeds in November. Yet prices are not fixed. By December it will not be sold. In the Cauvery-Mettur Project basin, harvest begins in December. Sufficient green manure seeds must be supplied in time with proper prices and distributed to the ryots through co-operative societies. I am glad fertilisers are going to be distributed through co-operative societies, all over the State. That will alleviate to a great extent the difficulties which the ryots are experiencing now in the matter of distribution of fertilisers.

One more important thing. I am speaking on behalf of Tanjore and Tiruchirappalli mirasdars. I want the Government to consider the charges that have been levelled by Mysore against us about the use of Cauvery water which are not at all correct. The charges might be found in the volley of questions that were put in the Mysore Assembly and the answers given by the Hon. Minister for Public Works in Mysore, which have appeared in the press recently. It is said that we have transgressed the terms of the agreement of 1924. We have not at all transgressed any of the terms of the agreement. In this connection I have pointed out already a year ago to this Government that it is Mysore that has transgressed the terms of the agreement. They have built dams across the tributaries of Cauvery above Krishnarajasagar and below Krishnarajasagar. We have got to take note of it. We must properly present our case. Especially in the Cauvery-Mettur project area we have not increased an inch of acreage. We have not yet reached 3,01,000 acres of irrigation. We are not only entitled



11th March 1960] [Sri R. Srinivasa Iyer]

to uninterrupted flow of water as before in all the rivers but we are also entitled to use the entire Cauvery water flowing down Krishnarajasagar in such manner as we please and at the same time we are entitled to use the surplus water going to the sea and extend irrigation thereby, if possible, without prejudice to the lower ayacutdars. We are at perfect liberty to use the surplus water going to the sea. Therefore let us put our case very strongly. I do not know what steps Government are taking. On behalf of Tanjore and Trichy mirasdars I can say that we have never transgressed any agreement or our rights in law. When we present our case we must take care to show proper facts and figures before sending them to Government of India, if and when they arbitrate or while answering the charge levelled against us by Mysore.

DEPUTY SPEAKER: The hon. Member's time is up. I have given him five minutes more.

SRI R. SRINIVASA IYER: **Sir, I will finish in another** minute. We find the Andhra Government claiming that the Nagarjunasagar project must be taken up by the Centre, because it will increase food production and will benefit the whole of India. Why not we say that the Krishna-Pennar project be taken up by the Centre and included in the Third Five-Year Plan? Six lakhs of acres in Chingleput district, which are now dry, will be irrigated by the Krishna-Pennar project. We will go, water for Madras City also.

Only one suggestion more, Sir. It appears that the electrification of the Tambaram-Villupuram railway line is going towards cold storage. New grounds are taken up for saying that there are difficulties in implementing it—difficulties like the use of A.C. current or D.C. current and consequent economy. I request the Madras Government to press before the Centre and the Railway Board that the electrification of the Tambaram-Villupuram line is most urgent and should not in any way be slowed down and other works taken up in preference.

Thank you, Sir, for the extra time given to me.

* SRI T. IRUSAPPAN: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் கொண்டுவந்திருக்கும் 1960-61-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் பேரில் என் கருத்துக்களைச் சொல்ல நான் முன்வந்திருக்கிறேன். நாட்டு மக்களுக்குத் தேவையான அத்தியாவசியமான பொருள்கள் எல்லாம் இந்த ஆண்டு சென்ற ஆண்டைவிடக் கணிசமான முறையில் சீரும் சிறப்புமாக இருக்கின்றன என்று பலர் பாராட்டிப் பேசினார்கள். இந்த ஆண்டு இப்படி இருக்கிறது, அடுத்த ஆண்டு எப்படி இருக்கிறதோ என்ற முறையில்தான் வரவு செலவுத் திட்டம் இருக்கிறதே தவிர, அவர்கள் குறிப்பிட்டதுபோல ஒன்றும் அதில் இல்லை என்று நான் கூற விரும்புகிறேன். விவசாயிகளுக்கு வேண்டிய ரசாயன உரம், கடன் வசதிகள் ஆகியவை நல்ல முறையில் வழங்கப்படாததினால் விவசாயம் பெருகுவதற்கு 12-30 p.m

[Sri T. Irusappan] [11th March 1960

வசதியில்லாது போய்விட்டது என்று கனம் நிதி அமைச்சர் கூறியிருக்கிறார். நாம் கேட்ட உரம் கிடைக்கவில்லை என்று அவர் சொல்லியிருக்கிறார். விவசாயத்திற்கு வேண்டிய அத்தியாவசியமான பொருள்களை சேமித்துவைத்திருந்து கொடுப்பதற்குத் தயங்குகிறது சர்க்கார். இதனால் நாட்டில் பஞ்சமும் பட்டினியும் கோர தாண்டவமாடுகின்றன. இதனால், என்.ஜி.ஓ-க்கள் எல்லாம் சம்பள உயர்வு எதிர்பார்த்து ஏமாறுகிறார்கள். இந்தக் குறைகளைப் போக்குவதற்கு சர்க்கார் நல்லதொரு முடிவுகாண வேண்டும்.

கூட்டுறவுப் பண்ணையைப் பற்றியும் கூட்டுறவு விவசாயத்தைப் பற்றியும் இந்தக் காலத்தில் பேசப்படுகிறது. என் தாலுக்காவில் சிவசங்கரபுரம் என்ற இடத்தில் கூட்டுறவு விவசாய காலனி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அங்கே இரண்டு வருஷங்களுக்கு மேலாகியும் போதிய பணவசதி கிடைக்காமல் அங்குள்ள விவசாயிகள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் காலனியை விட்டுவிட்டுப் போய்விடலாமா என்ற நிலையில் இருக்கிறார்கள். சர்க்கார் நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலம் கொடுக்கிறார்கள்; அவர்களுக்கு கடனாகப் பணம் கொடுக்கிறார்கள். அந்தப் பணத்தை சர்க்கார் அவர்களுக்கு காலதாமதம் இல்லாமல் காலாகாலத்தில் கொடுத்து விவசாயத்தை நல்ல முறையில் பெருக்க முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறு செய்து அந்த விவசாயிகளும் பிழைப்பதற்கு சர்க்கார் வழிவகை செய்ய வேண்டும். விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் கடன்களைப் பற்றி கனம் நிதி அமைச்சர் தமது உரையில் குறிப்பிட்டிருக்கிறார். மத்திய காலக் கடன்கள் கொடுப்பது சிக்கலான பிரச்னை என்றும் அதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். மத்திய காலக் கடன்கள் கொடுத்தால்தான் விவசாயிகளின் வாழ்வு வளம் பெறும். மகசூலின் பேரில் கடன் கொடுக்கிறார்கள். மூன்று மாதத் தவணைக்குள் கடனைத் திருப்பித் தந்து விடுவதாக ஒப்பந்தம் செய்துகொண்டு விவசாயிகள் கடன் வாங்குகிறார்கள். சென்ற ஆண்டில் போல பயிர்களை பூச்சி அரித்துவிட்டால் அவர்கள் அந்த மூன்று மாதத் தவணைக்குள் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாது கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். அவர்கள் அம்மாதிரி கஷ்டத்திற்குள்ளாகாதபடி, அவர்களுக்கு நீண்ட காலக் கடன்களும் மத்திய காலக் கடன்களும் கொடுக்க சர்க்கார் வழிவகை செய்வதைப் பாராட்டுகிறேன். மேலும், குத்தகைதாரர்களுக்கும் கூட்டுறவு சொசைடிகளின் மூலமாகக் கடன் கொடுக்க வழிவகை செய்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

கூட்டுறவுப்பண்ணைகள் நடத்துவது பற்றிப் பேச விரும்புகிறேன். என் தாலூக்காவில் வீணாகக் கிடக்கும் 25,000 ஏக்கர் நிலங்களை நிலமில்லாத ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் கொடுப்பதற்கு சர்க்கார் திட்டம் வகுத்திருக்கிறது. அங்கே ராமநாயக்கன்பாளையம், கம்மான்பேட்டை, நாவலூர், கல்லாத்தூம், சிறுவாச்சூர், ஊனத்தூர், பெரியேரி, நத்தக்கரை, வளையமாதேவி, நடுவலூர், சொக்கனூர், பைத்தூர், மம்மலை, தம்பம்பட்டி, அப்பாம் சமுத்திரம் ஆகிய மற்றும் பல இடங்களிலுள்ள நிலங்களை ஆர்ஜிதம் செய்து அவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. முதலில் ராமநாயக்கன்பாளையத்தையும் நாவலூரையும் எடுத்துக்கொள்வதாக அறிவித்திருக்கிறார்கள். சென்ற வாரம் அந்த இடங்களுக்கு மாவட்ட அதிகாரிகளும், போர்டு மெம்பரும், நானும் சென்று பார்வையிட்டோம். நாங்கள் பார்வையிட்டதில், ராமநாயக்கன்பாளையத்தில் அங்குள்ள மலையிலுள்ள நீர்வீழ்ச்சித் தண்ணீரைத் தேக்க ஒரு ஏரி அமைத்துக் கொடுத்தால் 66 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் 5,200 ஏக்கர் நிலங்களுக்கு நல்ல பாசன வசதி கிடைக்கும் என்று தெரிந்தது. அதற்கான ஏரிகளை சர்க்கார் அங்கே அமைத்துக்கொடுக்க வேண்டும்.



11th March 1960] [Sri T. Irusappan]

மேலும், சென்ற மாதம் கனம் அமைச்சர் ஸ்ரீ. ராமையா என் தாலுக்காவில் நான்கு நாட்கள் சுற்றுப்பிரயாணம் செய்தார். அங்குள்ள ஏரிகளையும் ஓடைகளையும் மலையிலிருந்து வரும் நீர் வீழ்ச்சிகளையும் பார்த்து அவர் பெருமைப்பட்டார். அந்த நீரையெல்லாம் தேக்கினால் அங்குள்ள நிலங்கள் நல்ல பாசன வசதியடையும் என்றும் அங்குள்ள பஞ்சமும் பட்டினியும் போகும் என்றும் அவர் சொன்னார். அங்கே அவ்வாறு பாசன வசதி செய்ய முடியும் என்று நாங்களே எத்தனையோ தடவை இங்கே தெரிவித்திருக்கிறோம். எங்கள் மாவட்டத்தில் மாவட்ட அதிகாரிகளால் கூட்டப்படும் நீர்ப்பாசன மகாநாட்டில் நாங்கள் பல விண்ணப்பங்கள் கொடுத்திருக்கிறோம். ஆனால் இன்னும் ஒன்றும் செய்யப்படவில்லை. அங்குள்ள விவசாயிகள், ஏரிகள் செப்பனிடப்படும், செப்பனிடப்படும் என்று எதிர்ப்பார்த்து, எதிர்ப்பார்த்து ஏமாந்து போயிருக்கிறார்கள். அங்கு வரும் அமைச்சர்களிடத்தில் அவர்கள் எத்தனையோ தடவை விண்ணப்பங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவைகளைப் பரிசீலனைசெய்து வாய்ப்பும் செறியும் உள்ள இடங்களில் நல்ல பாசன வசதிகளைச் செய்துக் கொடுக்க வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். அங்கே கூடிய சீக்கிரம் ஏரிகளை அமைத்தும், அங்குள்ள கால்வாய்களை இன்னும் நன்றாக வெட்டிப் பண்படுத்திக்கொடுத்தும் அங்கு பாசன வசதிகளை அதிகரித்து அங்குள்ள ஏழை விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டும் என்று சர்க்காரைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஆண்டு 2 லட்சம் கைத்தறியாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றாடக் கூலிக்காக நெசவுத் தொழில் செய்யும் கைத்தறியாளர்களுக்கு இதுவரையில் வீடுகள் கிடையாது. இந்த ஏழைக் கைத்தறியாளர்களின் குறைகளை சர்க்கார் உடனடியாகக் கவனித்துப் போக்க வேண்டும்.

அடுத்தபடியாக, எங்கள் மாவட்டத்தில் இருக்கும் பெரிய நீர்த் தேக்கம் மேட்டூர் அணை. அந்த அணையிலுள்ள தண்ணீரை எப்படியாவது சேலத்திற்குக் கொண்டுபோக வேண்டுமென்று அப்பகுதி சட்ட மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும், அப்பகுதி விவசாயிகளும் பல தடவை முயற்சி செய்தோம். நேற்று கூட, அத்தண்ணீரைத் தென்னாற்காடு மாவட்டத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்பது பற்றி இச்சபையில் ஒரு கேள்வி போடப்பட்டது; அப்போது, அதைப்பற்றி நினைக்கக்கூடக்கூடாது என்று

[Sri T. Irusappan] [11th March 1960

கனம் அமைச்சர் குறிப்பிட்டார். இதையெல்லாம் பார்க்கும்போது, எங்கள் மாவட்டத்தில் இருக்கும் மேட்டூர் அணைக்கட்டிலுள்ள தண்ணீர் எங்களுக்குக் கூடப் பயன்படாமல் போய் விட்டதே என்ற வருத்தம் எங்களுக்கு ஏற்படுகிறது. சென்ற வருடம் இடைச்சிபாளையத்திற்கு அருகில் ஒரு நீர்ப்பாசன மகாநாடு அதிகாரிகளால் கூட்டப்பட்டது. அந்த மகாநாட்டில் கூட, மேட்டூர்த் தண்ணீரை திருச்செங்கோடு வழியாக தவிட்டுப் பாளையத்திற்குக் கொண்டுவந்து அங்கே தேக்குவதற்கான திட்டத்தைத் தெரிவித்தோம். அந்தத் தண்ணீரை அவ்வாறு அங்கே கொண்டுவந்து குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாத ஊர்களில் குடிப்பதற்காவது வழங்கலாம் என்று எண்ணினோம். ராசிபுரத்தில் ஒரு குடம் தண்ணீர் மூன்றணா, நான்கணாவுக்கு குறைந்து கிடைக்காது. ராசிபுரத்திற்கு குடிதண்ணீர் வசதியாவது செய்து தர வேண்டுமென்று இந்த அரசாங்கத்தைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அங்கு குடிதண்ணீர் கஷ்டத்தையாவது போக்க வேண்டும். எங்கள் மாவட்டத்திலுள்ள தண்ணீரை நாங்கள் குடிக்கக்கூட முடியாமல் போய்விட்டது. இதைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும் என்று நான் அரசாங்கத்தைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நாமக்கல்லில் சர்க்கரை ஆலை ஏற்படுத்த வேண்டுமென்று எல்லோரும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இப்போது சர்க்கரை ஆலையை எங்கெங்கோ அமைப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தில் மோகனூரில் நல்ல கரும்பு தயாராகிறது. அங்கு கரும்பு விளைச்சல் அதிகமாக இருக்கிறது. ஆகவே, அந்த வட்டாரத்தில் ஒரு கரும்பு ஆலையைத் துவக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் எங்கள் மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய இரும்பு, அலுமினியம் ஆகியவற்றைப் பயன்படுத்தி இரும்புத் தொழிற்சாலையையும், அலுமினியத் தொழிற்சாலையையும் துவக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மேட்டூரில் காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்று பல தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம். அந்தக் காகிதத் தொழிற்சாலையைத் துவக்கினால் அந்தப் பகுதியில் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும். என்னுடைய தாலுகாவில் அமைச்சர் அவர்கள் பார்வையிட்ட இடங்களில் எல்லாம் எந்தெந்த இடத்தில் ஏரிகள் கட்ட வசதி இருக்கிறதோ அங்கெல்லாம் ஏரிகளை அமைத்து விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : உதவி சபாநாயகர் அவர்களே, இன்று இந்த சபையிலே சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜட்டானது எல்லாத் தரப்பினரின் ஆதரவையும் அன்பையும் பெற்றிருக்கிறது என்பதை சந்தோஷத்தோடு தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன்.

குறிப்பாக, நமது இந்தியாவிலுள்ள மற்ற பல மாகாணங்களிலே இருக்கும் நிலைமையைவிட நம்முடைய சென்னை ராஜ்யமானது சகல விதத்திலும் முன்னணியில் இருப்பதைப் பார்க்கிறோம். குறிப்பாக, இந்த ஆண்டு பட்ஜெட்டைப் பார்க்கும்போது,



11th March 1960] [Sri P. S. K. Lakshmipathi Raj]

தமிழனின் தனித்திறமை முழுவதையும் பார்க்கிறோம். இந்த ஆண்டிலே மிகச் சந்தோஷமாக இருக்கிற செய்தி வரி ஏதும் விதிக்கப்படவில்லை என்பதாகும். அதைக் கேட்டவுடன் முதலாவது சந்தோஷப்படுபவர்கள் எம்.எல்.ஏ-க்கள்தான். வரி போடப்பட்ட காலத்திலே அந்தந்தத் தொகுதியிலே எதிர்க் கட்சிக் காரர்கள் பேசும்போது எங்களையெல்லாம் தாக்கிப் பேசுவார்கள். அப்போது பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். இப்போது அந்த நிலைமை இல்லையென்பதை நினைக்கும்போது மிகவும் சந்தோஷம் உண்டாகிறது. வரி போட்டாலும் தாக்கிப் பேசுகிறார்கள். இப்போது அவர்களுடைய பேச்சைப் பார்த்தால் வரி போடாமல் விட்டு விட்டார்களே என்ற ஏக்கம் தோன்றுகிறது. இந்த பட்ஜட்டிலே இருக்கும் பெரிய அற்புதம் புதிய வரிகள் இல்லையென்பதோடு அழுகும் பொருள்களுக்கு வரியை ரத்து செய்திருப்பதுமாகும். அந்த அழுகும் பொருள்களுக்கு வரியை நீக்க வேண்டுமென்று சொல்லி மக்களிடையே இருந்து கோரிக்கைகள் வந்தன. எம்.எல்.ஏ-க்களும் சொன்னார்கள். அதற்கு செவி சாய்த்து அந்த வரியினை எடுத்துவிட்டதற்காக நான் நிதி மந்திரி அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

கனம் நிதியமைச்சர் அவர்கள் நிர்வகிக்கும் இலாகாக்களிலே அவருடைய நுண்ணிய திறமையைக் காண்கிறோம். கல்வி இலாகா அவர் கையில் இருக்கும் காரணத்தால் அவர் செய்திருக்கும் சாதனைகள் இந்தியாவிலேயே வேறு எந்த மாகாணத்திலும் செய்யவில்லையென்று நிமிர்ந்த உள்ளத்தோடு சொல்லுவேன். மத்திய உணவு விநியோகம் சம்பந்தமாக இரண்டொரு குறைகளைச் சொன்னார்கள். கல்வித் துறையில் எவ்வளவோ சாதனைகளைச் செய்திருப்பதைப் பற்றியெல்லாம் கூறாமல் விட்டு விட்டு ஏதோ சிறு குறைகள் இருப்பதைக் கூறியதைக் காண நான் மிகவும் வருத்தப்படுகிறேன். அவர் ஆரம்பித்த திட்டத்தை அனுசரித்து பழனி தேவஸ்தானத்தில் 60,000 ரூபாய் பெறுமான உணவை, நெய்வேத்தியத்திற்குப் பிறகு பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்க ஒப்புக் கொண்டு அந்த முறை அங்கு நல்லபடியாக நடைபெற்று வருகிறது. சில கருத்துப் புரட்சிக் காரர்கள் கோவில்களால் மக்களுக்குச் சிறிதும் பயன் இல்லையென்று சொல்லி வருகிறார்கள். ஆனால் எங்கள் பகுதியில் கோவிலில் இருந்து உதவி பெற்று நடத்தும் அந்தத் திட்டம் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. கிராமப் புறங்களில் இது ஒரு வரப்பிரசாதமாகக் கருதப்படுகிறது. ஒருசில இடங்களில் சிறு குறைகள் இருந்தாலும் கூட பல இடங்களில் நல்ல முறையில் அந்தத் திட்டம் நடைபெற்று வருகிறது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். பள்ளி சீரமைப்புத் திட்டத்தின் கீழ் அந்தந்தப் பள்ளிகளுக்கு வேண்டிய சாமான்களை மாணவர்களே மக்களிடமிருந்து சேகரிப்பது என்ற முறையில் நடந்து வருவதைப் பார்க்கும்போது, இப்போதுதான் நாடு நமது என்ற எண்ணம் குழந்தைகள் உள்ளத்திலும் இடம் பெறத் துவங்கியிருக்கிறது என்பது தெளிவாகிறது. இது ஒரு மகத்தான புரட்சியாகும். இந்த வகையால் ஏராளமாக அனுகூலங்கள் ஏற்பட்டிருக்கின்றன. படித்தவர்களும், நன்கு சிந்திக்கக் கூடியவர்களும் இந்தத் திட்டத்தைப் பாராட்ட வேண்டும். அதை விட்டு

[Sri P. S. K. Lakshmipathi Raj] [11th March 1960

விட்டு அரசாங்கத்தை எப்பொழுதும் கண்டிப்பது என்ற கொள்கையை வைத்துக்கொண்டு கண்டித்துக் கொண்டேயிருப்பதால் பயன் ஒன்றும் இல்லை. நம் ராஜ்யத்தைப் போல் எந்த ராஜ்யத்திலும் நிர்வாகம் சரியானபடி நடைபெற முடியவில்லை. நம்முடைய மாகாணத்தைப் பார்த்தே மற்ற மாகாணங்கள் செயல்படும் அளவில் இருக்கின்றன. எல்லாத் துறையிலும் விவசாயம், மின்சாரம், நீர்ப்பாசனம், ரோடுகள் ஆகிய எல்லாத் திட்டங்களும் இந்தியாவிலேயே நமது மாகாணத்திலேதான் சிறப்பாக நடைபெற்று வருகிறது என்பதைத் துணிந்து கூற முடியும். இந்த சீர்திருத்தங்களையெல்லாம் மக்களுக்கு மத்தியிலே எவ்வளவோ பார்க்கிறோம். முன்பெல்லாம் தார் ரோடு என்று சொன்னால் வேடிக்கையாக இருக்கும். முன்பு திருவனந்தபுரம் ஏரியாவில் தான் முதலில் தார் ரோடு போட்டிருந்தார்கள். அதைப் பற்றிக் கடந்த காலத்தில் டிராமாக்களில் எல்லாம் பாடினார்கள். இப்போதோ நகரப்புறங்களில் மட்டுமல்லாது கிராமப்புறங்களிலும் நல்ல முறையில் ரோடுகள் போடப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. நீர்ப்பாசனத்தில் கூடுமான வரை நல்ல முறையில் சிக்கனமாக திட்டங்களை நிறைவேற்றியிருப்பது விவசாயிகள் மத்தியில் நல்ல எண்ணத்தை ஏற்படுத்தியிருக்கிறது. குறிப்பாக, எங்கள் ஜில்லாவில் வைகையின் மீது அணை கட்டி தண்ணீரைத் தேக்கி வைத்திருக்கும் அந்தக் காட்சியை நீங்கள் எல்லாம் பார்க்கவேண்டும். சினிமாவில் கூட சிலர் கேலியாக "கை—வை" என்று சொன்னார்கள். ஆனால் இன்று வைகையைப் பார்த்தால் காவிரியோ என்று சந்தேகப்படுகிற அளவுக்குத் தண்ணீர் ஓடுகிறது. இந்தச் சாதனையை வேறு யாராலும் செய்து முடிக்க முடியாது. ஆயினும், இன்னும் எவ்வளவோ காரியங்கள் செய்யவேண்டியிருக்கின்றன. அவைகளையெல்லாம் நிறைவேற்றுவதற்குத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அவைகளையெல்லாம் நிறைவேற்றும் நோக்கத்தோடு சிறந்ததொரு பட்ஜட்டைத் தயாரித்த நிதியமைச்சரை இந்தச் சபை மட்டுமல்ல, இந்த நாடே பாராட்டுகிறது. எங்களுக்கு மட்டும் "இந்த நிதி அமைச்சரை எங்கே மத்திய சர்க்கார் தட்டிக்கொண்டு போய்விடுவார்களோ." என்று கொஞ்சம் பயந்தான். இவர் நிதியமைச்சராக இருப்பது மந்திரி சபைக்கே ஒரு சோபையாக இருக்கிறது. தமிழகமே பெருமைப்படக்கூடிய ஒன்றாகும்.

இன்று எங்கு பார்த்தாலும் தமிழிலே பேசுவதைப் பார்க்கிறோம். எல்லா ஜில்லாக்களிலும் அரசாங்க இலாகாக்களிலே தமிழிலே கடிதப் போக்குவரத்து நடத்துவதைப் பற்றிப் பரிட்சார்த்த திட்டங்கள் இருக்கின்றன. இருந்தாலும் கூட இந்த சபையில் சிலர் ஏனோ ஆங்கிலத்தில் பேசுவதைப் பார்க்கும் போது சங்கோஜமாக இருக்கிறது. தமிழர்களே நிறைந்த இந்த சபையிலே, பெரும்பாலும் ஆங்கிலப் புலமை இல்லாதவர்களே நிறைந்த இந்த சபையிலே ஆங்கிலத்திலே பேசாமல் தமிழிலே பேசினால் நல்லது என்று கூற விரும்புகிறேன்.

நான் கொங்கு நாட்டிலிருந்து வந்தவன். எங்கள் பகுதியில் உள்ள குறைகள் சிலவற்றைச் சொல்லிக்கொள்ள பிரியப்படுகிறேன். மேற்குத் தொடர்ச்சி மலையைச் சார்ந்த கொடைக்கானல்



11th March 1960] [Sri P. S. K. Lakshmipathi Raj]

அடிவாரத்திலுள்ளவர்கள் நாங்கள். அந்தப் பகுதியிலேயுள்ள ஆற்றின் நீரை நல்ல விதமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நீண்ட காலமாக நாங்கள் முறையிட்டுக் கொண்டே வருகிறோம். பாலாறு-பொருந்தலாறு, குதிரையாறு போன்ற திட்டங்களை அரசாங்கத்தின் பரிசீலனையில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவைகளை சீக்கிரத்தில் அமுலாக்க வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பழனியானது தமிழ்க் கடவுள் இருக்கும் நகரம். அந்த நகரத்தின் குடி தண்ணீர் நிலைமையைப்பற்றிச் சொல்வதற்கே சங்கடமாக இருக்கிறது. பதினெட்டு ஆயிரம் ஜனங்களைக் கொண்ட நகரமாக இருந்தது, இப்பொழுது 50 ஆயிரம், 60 ஆயிரம் ஜனங்களைக் கொண்ட நகரமாக மாறியிருக்கிறது. இலட்சக் கணக்கான ஜனங்கள் வந்து போகிறார்கள். குடி தண்ணீர்த் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாக மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பழனி முனிசிபாலிடியானது தங்களுடைய வரவு செலவைச் சரிக்கட்ட முடியாமல் தத்தளிக்கிறது. அந்த நகரத்திற்கு வந்து போகும் யாத்திரிகர்களின் எண்ணிக்கை பெருவாரியாக இருப்பதால், பழனி நகரத்திற்குச் செலவழிக்க வேண்டிய தொகை அதிகமாக இருக்கிறது. ஆகையால், யாத்திரீகர் வரி விதிக்க அனுகூலமாக நம்முடைய மாநில சர்க்கார் மத்திய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்யவேண்டுமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பழனியையும், மைசூரையும், திருப்பூர், சாமராஜநகர் வழியாக இணைக்கும் ரயில்பாதை அமைப்பதற்காக 50 அல்லது 60 ஆண்டுகளுக்கு முன்னாலே சர்வே செய்யப்பட்டு ஆலோசனையில் இருந்து வந்தது. அந்த ரயில்பாதை இணைப்பை ஏற்படுத்துவதற்கு மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

விவசாயிகளுக்கு உரம் விநியோகம் செய்வதிலே பல பெரிய தவறுதல்கள் நடக்கின்றன. ஆங்காங்கு உள்ள கூட்டுறவு சொசைட்டிகளுக்கு அந்த உப்பை அதிகமாகக் கொடுக்கவேண்டும். தனிப்பட்டோருக்குக் கொடுக்கும் உப்பு மூட்டை உடனே கைமாற்றப்பட்டு பல இடங்களுக்குப் போய் விடுகிறது. கோயமுத்தூர் ஜில்லாவும் மதுரை ஜில்லாவும் சந்திக்கும் இடத்திலே இருக்கும் நாங்கள், அந்த உப்பு கிடைக்காமல் கஷ்டப்படுகிறோம். மதுரை ஜில்லாவிலே உப்பு வரும்போது, அது உடனே கள்ளச் சந்தையிலே விற்கப்பட்டு பவானி பகுதிக்குப் போய்விடுகிறது. பழனி பகுதிக்கு உப்பே கிடைக்கவில்லை என்ற பெரிய குறை இருக்கிறது. அதை அரசாங்கம் கவனித்து, தனிப்பட்டோருடைய பர்மிட்டை ரத்து செய்து, கூட்டுறவு சொசைட்டிக்குக் கொடுக்கும்படியாகச் செய்ய வேண்டும். கடனுக்கு அதிகமாகக் கொடுத்துவிட்டு, சில்லரை விற்பனையைக் கட்டுப்படுத்தியிருப்பதின் காரணமாக கஷ்டமாக இருக்கிறது.

கடனுக்கு ஒரு பகுதி, சில்லரைக்கு ஒரு பகுதி என்று இரண்டு விற்பனைக்கும் கொடுக்குமாறு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றும் நமது சென்னை ராஜ்யத்திலே உள்ள ஜில்லாக்களை நிர்வாகத் திறமையை அனுசரித்து இரண்டு இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். பொதுவாக, ஒரு கலெக்டர் தன்னுடைய ஜில்லாவின் கோடி வரைக்கும் சென்று வரவேண்டுமென்றால், அது சிரமமாக இருக்கும். குறிப்பாக மதுரை ஜில்லாவில் ஏறக்குறைய 100 மைல் செல்ல வேண்டியிருக்கிறது. ஒரு புறம் கேரள எல்லை வரையில் போய்ப் பார்க்க வேண்டும். ஒரு புறம் கோவை ஜில்லா எல்லைக்கு வரவேண்டும். இன்னொரு புறம் கரூர் எல்லைக்கு வரவேண்டும். ஒரு புறம் திருச்சி எல்லைக்கு வரவேண்டும். அந்த முறையில் மிகவும் கஷ்டமானதொரு நிலைமையில் கலெக்டரை வைத்து, அவருக்கு நிர்வாகப் பொறுப்பை அதிகமாகக் கொடுத்திருக்கிறோம். புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின்படியும் அவர்களுக்கு அதிகமான பொறுப்பு கொடுத்திருக்கிறோம். நீண்ட தூரம் சென்று பரிசீலனை செய்ய முடியாத காரணத்தால் பல தவறுகள் ஏற்பட ஏதுவாக இருப்பதை முன்னிட்டாவது ஜில்லாவை இரண்டாகப் பிரிக்க வேண்டும். மதுரை ஜில்லாவிலுள்ள பழனி, திண்டுக்கல், நிலக்கோட்டை, கொடைக்கானல் இவைகளைக் கொண்டு ஒரு ஜில்லா அமைத்து, திண்டுக்கல்லைத் தலைநகரமாகச் செய்து, திண்டுக்கல் ஜில்லாவாக மாற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பழனி தாலூகா மிகவும் பின்தங்கிய தாலூகாவாக இருக்கும் காரணத்தால், அங்கு தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தை இன்னும் சில பிர்க்காக்களுக்கு விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். அதற்குக் காரணம், தமிழ்க் கடவுள் இருக்கும் பகுதி என்று பழனியைச் சொல்வார்கள். அதைச் சுற்றியிருக்கும் மக்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறிக்கொண்டிருக்கும் திடுக்கிடும் நிலைமையை நமது அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கூட்டம் கூட்டமாக, குடும்பம் குடும்பமாக, கிறிஸ்துவ மதத்திலே சென்று கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம், கிறிஸ்துவ மிஷனரிகள் அங்கு பலமாக வேலை செய்வதுதான். அமெரிக்காவிலிருந்து வரும் பணத்தைக் கொண்டு, அங்கிருக்கும் ஹரிஜனங்களை கும்பல் கும்பலாக விலைக்கு வாங்கிக்கொண்டிருக்கும் கண்ராவிக் காட்சியை அங்கு நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகையால், ஒட்டன்சத்திரம், கோரிக் கடவூர் பகுதிகளை தேசீய விஸ்தரிப்புத் திட்டப் பகுதிகளாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**SRI R. SRINIVASA IYER:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் ஆங்கிலத்தில் பேசினதைப்பற்றியும், நான் ஆங்கிலத்தில் பேசுவதைக் கொஞ்சம் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் நண்பர் அவர்கள் பேசினதற்கு நான் நன்றி செலுத்துகிறேன். கொடுக்கும் அவகாசம் பத்து நிமிஷங்கள்தான். அதற்குள் என்னுடைய அபிப்பிராயங்களைத் தமிழில் வெளியிடச்





சக்தி இல்லாததால் ஆங்கிலத்தில் பேசினேன். பத்து நிமிஷங்களுக்கு மேல் பேசுவதற்கு சபாநாயகர் அவர்கள் அனுமதிக்கும்படி எல்லோரும் சிபார்சு செய்தால் கூடுமானவரை தமிழில் என்னுடைய அபிப்பிராயங்களை வெளியிட்டுவிடுகிறேன். வணக்கம்.

**SRI V. S. MANICKASUNDARAM:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் இந்தச் சபைக்குச் சமர்ப்பித்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையை நான் மிகவும் மனமார பாராட்டுவதற்கு இரண்டு பொதுவான காரணங்களும் ஒரு குறிப்பான காரணமும் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவான காரணம் என்று நான் குறிப்பிடுவது, இந்த வருஷம் நமது ராஜ்யத்தில் எந்தவிதமான புதிய வரியும் விதிக்கப்படவில்லை என்பதை நான் மிகவும் மனமார வரவேற்கிறேன். இரண்டாவதாக, அழுகும் பொருள்கள் மீது விதிக்கப்பட்டிருந்த விற்பனை வரியை நீக்குவதற்காகவும் நான் அவர்களை மிகவும் மனமார பாராட்டுகிறேன். இந்த இரண்டு காரியங்களையும் நமது ராஜ்யத்திலுள்ள மக்களுடைய மனப்போக்கை அனுசரித்து ஏற்படுத்தியதற்காக நான் அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

குறிப்பாக நான் பாராட்ட வேண்டுமென்று நினைத்தது, எங்கள் பகுதியிலேயும் நான் இந்தச் சபையிலும், சபைக்கு வெளியிலும் தெரிவித்துக் கொண்டுவந்திருந்த கீழ் பவானித் திட்டத்திலுள்ள சிக்கல்களை நீக்கிக் கொடுத்ததற்காக அவர்களுக்குக் குறிப்பாகக் கடமைப் பட்டிருக்கிறேன். நீர்ப்பாசன முறையிலே எங்களுக்கு ஏற்பட்டிருந்த அத்தனை சிக்கல்களையும் பெருவாரியாக நீக்கிக் கொடுத்திருக்கிறார்கள், முறையை மாற்றியமைத்து, பயிர்க் கட்டுப்பாட்டை ஓரளவு நீக்கி, இப்பொழுது எங்களுக்கு நல்ல வசதி அளித்திருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு தங்கள் மூலமாக இந்த சபைக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எங்கள் கீழ் பவானி பகுதியைப் பொறுத்தவரையில், இன்னும் சில காரியங்களை நாங்கள் கேட்டுக்கொண்டு வந்திருக்கிறோம். அவைகளையும் அவர்கள் செய்து முடிப்பதாக வாக்களித்திருக்கிறார்கள். அந்தத் துறையிலே சிறிது விசாரணை செய்திருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரிந்த விஷயம்தான். அந்தக் காரியங்களை மீண்டும் எடுத்து அவைகளைத் தொடர்ந்து நடத்தி அவைகளை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தை மிகவும் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன். நான் குறிப்பிடுவது என்னவென்றால், அங்கேயுள்ள உபரி நீரை அந்தப் பகுதி மக்கள் பயன்படுத்திக் கொள்வதற்காக சென்ற வருஷம் அவர்கள் அங்கே வந்து பார்த்தபோது வெளியிட்ட காரியங்களைத்தான் நான் குறிப்பிடுகிறேன். ‘அப்பர்’ காலிங்கராயன் வாய்க்காலில் ஓடக்கூடிய தண்ணீரைத் தடுத்து அணைக்கட்டு ஏற்படுத்தி, அதிலே கிடைக்கும் தண்ணீரை அந்தப் பகுதி மக்கள் உபயோகப்படுத்துவதற்காகத் திட்டங்கள் வகுத்து, அந்தத் திட்டங்களைப் பரிசீலனை செய்வதற்குச் சில உத்தியோகஸ்தர்களை

[Sri V. S. Manickasundaram] [11th March 1960

நியமித்து ஓரளவு பரிசீலனை நடந்திருக்கிறது என்பது எனக்குத் தெரியும். அந்தக் காரியங்களை மீண்டும் தொடர்ந்து எடுத்துக் கொண்டு, அந்தத் திட்டங்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து அவைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்றும் இவர்களை மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கீழ் பவானிப் பகுதியைப் பொறுத்தவரையில், அந்தப் பகுதிகளிலே மின்சார விஸ்தரிப்பு அவ்வளவு நல்ல முறையிலே ஏற்படவில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்திற்கு நான் தெரியப் படுத்திக் கொள்ள விரும்புகிறேன். அங்கே மேட்டூரிலே கிடைக்கக் கூடிய மின்சாரமும், குந்தாவிலிருந்து கிடைக்கப்போகிற மின்சாரமும், பைக்காரா மின்சாரமும் ஈரோட்டில் சந்தித்து, அங்கேயிருந்து பல பகுதிகளுக்கும் பிரித்து அனுப்பப்பட்ட போதிலுங்கூட, அந்தப் பகுதியிலே மின்சார விஸ்தரிப்பு எவ்வளவு துரிதமாக ஏற்பட்டால் நாட்டுக்கு நல்ல பலன் கிடைக்குமோ அந்த அளவு துரிதமாக ஏற்படவில்லை என்பதை நான் மிகவும் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்தக் குறையை நீக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு நான் மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நான் சொல்லவேண்டுமென்று நினைத்தது ஜில்லா பிரிவினை பற்றிய விஷயமாகும். கோயமுத்தூர் ஜில்லாவைப் பொறுத்தவரையில், அதை இரண்டாகப் பிரிப்பதாக அரசாங்கத்தின் கொள்கை இருந்துவருவதாக சென்ற இரண்டு வருஷங்களுக்கு மேலாகவே தெரிவித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் அரசாங்கத்தினுடைய ஒரு அங்கீகாரத்தைப் பெற்றிருந்தும்கூட, அதற்காக டெவலப்மெண்ட் கவுன்சில் கூட இரண்டு பாகமாக ஏற்பட்டிருந்துங்கூட, நாங்கள் எல்லாக் காரியங்களுக்கும் கோயமுத்தூருக்குச் சென்று கவனிக்க வேண்டியிருப்பதால் பல இடையூறுகளும் கஷ்டங்களும் ஏற்படுகின்றன. கூடிய சீக்கிரத்திலே கோயமுத்தூர் ஜில்லாவை இரண்டாகப் பிரித்துத் தனிக் காரியாலயங்கள் ஏற்படுத்திக் கொடுத்தால் நல்ல நன்மை கிடைக்கும் என்பதையும் நான் மிகவும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதில் முதன் முதலாக நடத்தப்படவேண்டியது என்ன என்பதையும் நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்தச் சபை முன்பு நான் பல தடவைகள் முன்னர் சொல்லியிருக்கக்கூடிய கஷ்டத்தை முதன் முதலாக நிவர்த்தித்துவிட்டு அதற்குப் பிறகுதான் இந்தக் கொள்கையை அமுலாக்க வேண்டும் என்பதையும் நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். கோயம்முத்தூர் ஜில்லாவில் பல இலாகாக்கள் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்
1 p.m. பட்டு பல துறைகளிலே ஜில்லா தலைமை காரியாலயங்கள் ஈரோட்டில் நிறுவப்பட்டிருக்கின்றன. அத்தனை காரியாலயங்களும் அங்கே வாடகை கட்டிடங்களிலும், குடியிருப்பதற்காக ஏற்பட்ட கட்டிடங்களிலும் அமைந்திருக்கின்றன. ஒரு காரியாலயத்தை இரண்டாகப் பிரித்து ஒரு புது இடத்திற்கு மாற்றுவதற்கு முன்பாக, அதற்கு வேண்டிய கட்டிட வசதிகளை ஏற்படுத்திக்கொண்டு அதற்குப் பிறகு அந்தக் காரியாலயங்களை மாற்றுவது நமது கடமையாகும் என்பது



11th March 1960] [Sri V. S. Manickasundaram]

என்னுடைய அபிப்பிராயம் என்பதை நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்தக் காரியாலயங்களில் வேலை செய்யக்கூடிய பணியாளர்களுக்கும் பெரிய மனக்குறை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் தாங்கள் வேலை செய்யக்கூடிய இடத்தில் வேண்டிய வசதிகள் தங்களுக்கு கிடைக்கவேண்டும் என்று நினைப்பது அவர்களுடைய உரிமை என்பதையும் நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு அங்கே ஊரிலே இருக்கக்கூடிய மக்களுக்கு குடியிருப்பு வசதியிலே பல இடையூறுகள் ஏற்படுகின்றன என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதோடு இல்லாமல் அங்கே வந்து இருக்கக்கூடிய மக்கள் குடியிருக்க வீடுகள் கிடைக்காமல் திண்டாடவேண்டிய ஒரு அவசியமும் ஏற்பட்டிருக்கிறது. புதிதாக ஊருக்கு வரக்கூடிய மக்களுக்கு வேண்டிய குடியிருப்பு வசதிகளுக்கு ஏற்பாடுகள் முன்னதாக செய்யப்பட்டு, அதோடுகூட காரியாலயங்கள் மாற்றப் படவேண்டும் என்பதையும் நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஜில்லா பிரிவினைக் காலத்திலே இந்தக் கருத்துக்களை மனதில் வைத்து காரியங்களை ஈடேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ரோடு பராமரிப்பு சம்பந்தமாக நான் சில விஷயங்களை எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன். புதியதாக நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட ஒரு காரணத்தினாலே நல்ல நிலைமையிலே இருந்த பல நெடுஞ்சாலைகள் இப்பொழுது மிகவும் பழுதான நிலைமையில் இருக்கின்றன. அவைகள் நல்ல முறையிலே திட்டமிடப்பட்டு செப்பனிடப்படாத காரணத்தினாலே வருஷத்திற்கு 4, 5 தடவைகளுக்கு மேலாக ரிப்பேர் செய்யவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. முக்கியமாக தண்ணீர் அதிகமாகப் போகவேண்டிய அந்தப் பகுதிகளிலே குழாய்களை வைத்து தண்ணீர் போவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. அந்தக் குழாய்கள் போதிய அளவு தண்ணீரை எடுத்துச் செல்லாத காரணத்தினாலே தண்ணீர் தேங்கி ரோடுக்கு மேலே வழிந்து ரோடுக்கு அடிக்கடி ரிப்பேர் ஏற்படுகிறது. ஆகவே, வேறுவிதமாக ஒரு நல்ல திட்டத்தை அமைத்து அவைகளை செப்பனிடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டிய அவசியத்தை இந்த சந்தர்ப்பத்திலே நான் மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இது சம்பந்தமாக பணம் செலவழித்தும், அதனால் மக்களுக்கு சௌகரியம் ஏற்படவில்லை. அதனால் பெரிய தொகையை நாம் வீணாக்குகிறோம் என்ற குற்றத்திற்கு ஆளாக வேண்டிவரும் என்பதை நான் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அரசாங்க ஊழியர்கள் மக்களோடு எந்த எந்த முறையில் பழக வேண்டும் என்பதற்கும் அவர்கள் காலத்தை அனுசரித்து, நாட்டில் ஏற்பட்டிருக்கிற மாறுதலை அனுசரித்து தங்களது மனப்பான்மையை, மனப்போக்கை மாற்றிக்கொள்ளுவதற்கும் ஒரு திட்டம் வகுத்து அதற்காக வேண்டிய பிரசாரத்தையும், அறிவுரைகளையும் நடத்தவேண்டியது நமது கடமையாகும் என்பதை மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். நாட்டு மன்னன் என்று பெரியோர்களால் கருதப்படும் ஒரு குடியானவன் டிரெஷரிக்குப் போய், ஒரு செலான் எழுதி பணம் கட்டிவிட்டு வெளியே வர

[Sri V. S. Manickasundaram] [11th March 1960

வேண்டுமானால், அவன் எவ்வளவு கஷ்டத்திற்கும் அவமானத்திற்கும் ஆளாகவேண்டியிருக்கிறது என்பதை கொஞ்சம் யோசனை செய்து பார்த்து, இம்மாதிரி பல காரியங்கள் நடைபெறுவதனால், அவைகளை நிவர்த்திப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வது நமது கடமையாகும். இந்தக் குறை ஒரு குறிப்பிட்ட இலாகாவை மட்டும் சேர்ந்தது என்று நினைக்க வேண்டியதில்லை. சாதாரணமாக சிறிய இடங்களிலே பார்க்கும்பொழுது இது மிகவும் பரவலான குறை என்பதையும் நான் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதை நிவர்த்திக்கவேண்டியது நமது கடமையும், பொறுப்புமாகும் என்பதை மிகப் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதுபோல் 'பப்ளிக் யுடிலிடி சர்வீஸ்' என்று சொல்லக்கூடிய இடங்களிலே பொது ஜனங்கள் போகும்பொழுது அவர்களுக்கு நல்ல மரியாதையோடு, நல்ல முறையில் காரியங்களைச் செய்து கொடுக்க வேண்டும் என்ற உணர்ச்சி ஏற்படும் வகையிலே நாம் ஏற்பாடுகள் செய்யவேண்டும். அங்கே பணியாற்றக்கூடிய பணியாளர்களுக்கு ஒரு சேவை மனப்பான்மையும், மக்களுடைய சௌகரியத்திற்கு தாங்கள் பணியாற்ற வேண்டும் என்ற மனோபாவமும் ஏற்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டியது நமது கடமையும் பொறுப்புமாகும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நாம் விவசாயிகளுக்கு பல காரியங்களையும், பல அனுகூலங்களையும் திட்டமிட்டு செய்துவந்தாலும் கூட, பல துறைகளிலே அந்தத் திட்டங்களின் நல்ல பலன் விவசாயிகளுக்கு அவ்வப்பொழுது கிடைக்கவில்லை என்பதை பலதடவைகள் காதிலே கேட்க வேண்டியிருக்கிறது. அதில் ஒரு பெரிய அளவுக்கு உண்மை இருக்கிறது என்பதையும் நான் மிகவும் வருத்தத்துடனும், பணிவுடனும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். உர வினியோகத்தைப் பொறுத்த வரையிலே, உரம் போதிய அளவு கிடைக்கிறதா, கிடைக்கவில்லையா என்பதைப்பற்றி எங்கள் மனதிலே ஒரு சிறிய சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. எந்த சமயத்தில் வேண்டுமானாலும் கள்ள மார்கெட்டில் உரம் வாங்குவதற்கு தயாராக இருந்தால், நமக்கு வேண்டிய அளவு உரம் கிடைக்கிறது. அப்படியிருக்கும் பொழுது நியாயமான விலைக்கு உரம் கிடைக்காத காரணத்தை நாம் நன்றாக அலசி தேடிக் கண்டுபிடிக்கவேண்டியது நமது கடமை என்பதை நான் மிகவும் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். நான் வரக்கூடிய பகுதியில், என்னுடைய தொகுதியில் ரசாயன உரங்களை பெரும் அளவில் உபயோகிக்கிறார்கள். மக்களுக்கு உரம் கிடைப்பதில்லை என்பது என் பகுதியிலிருந்து வரக்கூடிய குறையே அல்ல. கள்ள மார்கெட்டில் வேண்டிய அளவு உரம் கிடைக்கிறது, சரியான முறையில் நியாயமான விலையில் உரம் கிடைக்கவில்லையே என்பதுதான் என் பகுதி மக்களுடைய குறை. இதற்குக் காரணம் என்னவென்பதைப் பரிசீலனை செய்து, அதை நீக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நான் மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

நாட்டிலே விலைவாசிகள், வாழ்க்கைத்தர புள்ளிவிவரங்கள் அதிகரித்துக்கொண்டே போவது உண்மைதான். இதற்குக் காரணம் விவசாயப் பொருள்களின் விலையும், முக்கியமான உணவுப்



11th March 1960] [Sri V. S. Manickasundaram]

பொருள்களின் விலையும் அதிகமாயிருப்பது ஒன்று; அல்லது டெவலப்பிங் எகானமியால் ஏற்பட்ட ஒரு விளைவா இது என்பதைக் கொஞ்சம் பரிசீலனை செய்து, இந்த விலை ஏற்றத்தின் பளுவைத் தாங்குவதற்கு விவசாயிகளுக்கு தங்களுடைய விளைபொருள்களுக்கு வேண்டிய அளவு விலை கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டிய பொறுப்பு நமக்கு இல்லையா என்பதை யோசிக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். மஞ்சள் விலையைப் பொறுத்தவரையில் 1952-ம் வருஷத்தில் 10 மணங்கு கொண்ட இரண்டு மூட்டைகள் அடங்கிய ஒரு சாட்டை ரூ. 375 ஆக இருந்தது. அடுத்த வருஷத்தில் 1953 ஏப்ரலில் 55 ரூபாய்க்கு இறங்கிவிட்டது. இப்படி விலை (Fluctuate) ஆகக்கூடிய நிலை இருக்கிறது. தான் வாங்கவேண்டிய பொருள்களின் விலை பல மடங்கு ஏறியிருந்தும்கூட, குறிப்பிட்ட ஒரு விளைபொருளின் விலை மிக மோசமாக விழுந்துவிட்டதை அந்த விவசாயி சமாளித்து, அதை அனுசரித்து நடக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இம்மாதிரி சமயத்தில் அவனுக்கு உதவிக்காக மற்ற விளைபொருள்களின் விலையாவது ஓரளவு ஏறியிருக்கும் பட்சத்தில், ஓரளவுக்கு அதை அனுசரித்து அவன் தன்னுடைய வரவு செலவுத் திட்டத்தை நல்ல முறையில் ஏற்பாடு செய்துகொள்ள முடியும். அதற்காக அவர்களுக்கு ஒரு 'மினிமம் பிரைஸ்' ஏதாவது ஒன்று நிர்ணயம் செய்து, அதற்கு கீழே விலை அடிபடாமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்வது நமது கடமையாகும் என்பதை மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். உணவுப் பொருள்களின் விலைகளும் ஓரளவுக்குக் கீழே வந்துவிடாமல் இருந்தால்தான் நல்லது. இல்லாவிட்டால், விவசாயம் செய்வதும் கஷ்டமாகிவிடும். அந்த மாதிரி நிலைமை ஏற்பட்டுவிடாமல், விவசாயிகளைக் காப்பாற்றினால் ஒழிய, உற்பத்திப் பெருக்கம் ஏற்படாது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மற்றொரு விஷயம். இந்த லாண்ட் ஸீலிங் பிக்ஸ் பண்ணப் போகும் நாம் ஸ்டாண்டர்ட் ஏக்கருக்குச் சமமான மற்ற பூமிகளை அதிகப் படுத்திச் செய்ய வேண்டும். நீர்ப்பாசன வசதியற்ற தோட்டக்கால் நிலங்களை பெரும் அளவிற்கு பிக்ஸ் செய்யவேண்டும். புஞ்சையாக இருந்த நிலங்கள், நீர்ப்பாசன வசதி பெற்றிருக்கும் காரணத்தால், விவசாயிகள் பண்படுத்தி நல்ல முறையிலே, விவசாயம் செய்ய வேண்டிய கஷ்டங்கள் ஒரு புறம் இருக்க, இந்த லாண்ட் ஸீலிங் டேபிள் அவர்களுக்கு விரோதமாக அமைந்து விடுமோ என்ற அச்சம் இருக்கிறது. புஞ்சை பூமி, ஸ்டாண்டர்ட் ஏக்கர் ஒன்றுக்கு 4 ஏக்கர் என்பதற்குப் பதிலாக, 1½ ஏக்கர் என்பது அவர்களுக்கு அதிக உற்சாகம் அளித்து விவசாயத்தில் ஊக்கம் அளிக்காது.

நீதி நிர்வாகத்தைப் பொறுத்த வரை, சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நாம் சமீபத்தில் கொண்டு வந்துள்ள பல சட்டங்களில் என்டோமண்ட் ஆக்ட், வருமானவரி சட்டம்—விசாரணை செய்யும் அதிகாரியே ஜட்ஜ் ஆக இருக்கும் நிலைமையைப் பார்க்கிறோம். பிராஸிக்யூட்டர் வேறாகவும், ஜட்ஜ் வேறாகவும் இருக்க வேண்டும். நில வரி சம்பந்தப் பட்ட மட்டில், வாட்டர் செஸ் சம்பந்தமாகவும், பிராசிக்யூட்டர் பங்க்ஷன்களையும், ஜட்ஜ்

[Sri V. S. Manickasundaram] [11th March 1960

பங்க்ஷன்களையும் பிரித்து அதற்கு வேண்டிய அதிகாரிகளையும் நியமிக்க வேண்டும் என்று பணிவாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஓரளவு, சிவில் கோர்ட், கிரிமினல் கோர்ட் இவைகளின் தரம் குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்பொழுது ஸ்டாடிஸ்டிக்ஸ் பிரகாரம், க்வான்டிடேடிவ் டிஸ்போஸல் பேரில்தான் எம்பஸிஸ் இருக்கிறதே ஒழிய, க்வாலிடி என்ன என்பதைப் பார்க்க ஏதாவது விதி இருக்கிறதா என்றால் இல்லை. இதைச் சரிசெய்ய என்ன செய்ய வேண்டுமோ அதை செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

* **SRI M. SELVARAJ :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மேல் என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக இந்த ஆண்டில், இரண்டாவது திட்டத்தில் சாதனைகள் என்று பல இலக்குகளை சர்க்கார் அடைந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நாம் பல துறைகளிலும் அதிகமான செலவுகள் செய்திருக்கிறோம், எந்த அளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்று கேட்டால், இல்லை என்ற பதில்தான் எதிர் பார்க்கிறோம். பொதுவாகப் பொருளாதாரத் துறையில் மக்கள் எவ்வளவு பயன் அடைந்திருக்கிறார்கள் என்றால், இல்லை என்ற பதில்தான் வருகிறது. உணவு உற்பத்தியைப் பார்க்கும்போதும், பல கோடி ரூபாய்களைச் செலவு செய்திருக்கிறோமே, திட்டத்தில் வெற்றி கண்டு விட்டோம் என்கிறார்களே என்றால், உணவு உற்பத்தியிலும் பற்றாக்குறையைத்தான் பார்க்கிறோம். ஆகவே, உணவு உற்பத்தி எந்த அளவு பெருக வேண்டுமோ அந்த அளவுக்கு முன்னேறவில்லை என்ற பதிலைத்தான் நாம் எதிர் பார்க்கிறோம். உணவு உற்பத்திக்கு, அதைப் பெருக்க, விவசாயிகளுக்கு உரம், குறித்த காலத்தில் கடன் தொகை இவற்றை அவர்களுக்குக் கொடுக்க வேண்டியது.

இந்த ஆண்டு அறிக்கையில், மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்கள் நெய்வேலியில் உரத் தொழிற்சாலை, 1962-ம் ஆண்டு உற்பத்தி ஆரம்பிக்கலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். முன்பு இந்த ஆலை 1960-ம் ஆண்டுக்குள்ளேயே ஆரம்பிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. வருடம் ஆக, ஆக, காலம் நீண்டுகொண்டே போகிறது. அப்படியானால், அந்த அளவுக்கு வேலைகள் துரிதமாக நடைபெறவில்லையா என்று கேட்க விரும்புகிறேன். அப்படியென்றால், நம் சர்க்கார், மத்திய சர்க்கார் இடம் வற்புறுத்தி, எவ்வளவு சீக்கிரத்தில் அந்த திட்டத்தை நிறைவேற்ற முடியுமோ அந்த அளவுக்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, உணவு உற்பத்திக்கு நீர்பாசன வசதிகள் செய்யும்போது மேட்டூரிலிருந்து உபரியாகப் போகும் தண்ணீரை, வெள்ளக்காலத்தில் மற்ற மாவட்டங்களுக்குத் திருப்பி, ஏரிகளில் தேக்கி நீர்பாசனம் செய்து கொடுத்தால், குறைந்தது ஒரு லட்சம் ஏக்கரா நிலங்கள் சாகுபடிக்கு வரமுடியும். குறிப்பாக மேட்டூரில் வெள்ளக்காலத்தில் போகும் உபரித் தண்ணீரை ஒரு நாளைக்கு மாறிப் போகச் செய்தால், தென்னாற்காடு மாவட்டத்தில் சுமார் 40,000 ஏக்கர் சாகுபடிக்கு வரலாம். இந்த விஷயத்தில், மைசூர்



11th March 1960] [Sri M. Selvaraj]

சர்க்கார் ஆட்சேபணை செய்கிறார்கள் என்றால், அதை நாம் மத்திய சர்க்காரிடம் எடுத்துரைத்து, வெள்ள காலத்தில் தென்னாற்காடு மாவட்டங்களுக்குத் திருப்பி விட ஏற்பாடு செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மின்சார சம்பந்தமாகக் கூறும் போது, தென் ஆற்காடு மாவட்டம் மிகவும் பிற்போக்கான நிலையில் இருக்கிறது. அதிகமான கிராமங்களுக்கு பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் தரப்படவில்லை என்ற கூக்குரல் அதிகமாக இருக்கிறது. ஆகவே, அந்த மாவட்டத்தில் மின்சாரத்தை அதிகமாக விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், என் தொகுதியில், கிளிமங்கலம் கிராமத்தில், 200, 250 பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் கொடுப்பதாக வாக்குறுதியளிக்கப்பட்டது. விவசாயிகளிடம் சொன்னார்கள். மின்சார போர்ட் ஸர்வே செய்தார்கள். ஆனால், 250 செட்டுகளை ஒரே கிராமத்துக்குக் கொடுக்க முடியாது, 40, 50 கிராமங்களுக்கு, கிராமத்திற்குப் பத்து வீதம்தான் கொடுக்க முடியும் என்று சொல்லிவிட்டார்கள். அதாவது 250 பம்பு செட்டுகளுக்கு ஒரு கிராமத்திற்கு கொடுப்பதை பிரித்து பல கிராமங்களுக்கு கொடுப்பது சரி அல்ல. இந்த ஆண்டிலாவது தவக்கமில்லாமல், மின்சார வசதி செய்து கொடுத்து, நல்ல முறையிலே அவர்கள் உணவு உற்பத்தி செய்வதற்கான வழிவகைகளைச் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பொழுதுதான் அவர்கள் விவசாய உற்பத்தியைப் பெருக்கும் வாய்ப்பை அடைவார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ளுகிறேன். மினிமம் காரண்டி சம்பந்தமாக ஒரு கமிட்டி அமைத்து இருக்கிறோம் அந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது என்று கூறப்படுகிறது. அந்தப் பரிசீலனை துரிதமாக நடந்து விவசாயிகளுக்கு நிவாரணம் அளித்தால்தான் அவர்கள் விவசாய உற்பத்தியில் உற்சாகத்தோடு ஈடுபடுவார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

கைத்தறியை எடுத்துக் கொண்டால், எந்த அளவுக்கு கதர் துணிக்கு ரிபேட் கொடுக்கிறார்களோ, அந்த அளவுக்காவது; அதிகம் இல்லாவிட்டாலும் கூட, ரிபேட் கொடுக்க வேண்டும், அப்படிச் செய்தால்தான் நெசவாளர்களுக்கு நிவாரணம் ஏற்படும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த அளவுக்கு நிதி ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த ஆண்டு அறிக்கையில், கெஜட் பதவியில்லாத உத்தியோகஸ்தர்களும், ஆரம்ப ஆசிரியர்களும், நிவாரணத்தை எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். அந்த விஷயம் பே கமிஷனின் பரிசீலனையில் இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. உடனடியாக அந்த கமிஷன் ஒரு மாதகாலத்திற்குள் தன் ரிபோர்ட்டை அளிக்கச் செய்து, அதைத் துரிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்களுக்கு உயர்ந்த அளவுக்கு நிவாரணத்தை அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். சர்க்கார் இந்த ஆண்டு பின் தங்கிய வகுப்பினருக்கும் ஹரிஜனங்களுக்கும் சலுகை வழங்குவது பற்றி கல்விச் சலுகை பற்றி குறிப்பிட்டார்கள். பின் தங்கிய

[Sri M. Selvaraj] [11th March 1960

வகுப்பினர்களிடம் இருந்து ஆண்டுதோறும் அதிகமாகச் சலுகை கோரி விண்ணப்பங்கள் வருகின்றன. ஆனால் ஒரு தரம், இரண்டு தரம், மூன்று தரம் என்பதாக அலாட் செய்கிறார்கள். எல்லோருக்கும் அந்தச் சலுகை கிடைப்பது இல்லை. ஆகவே இதற்காக அதிகத் தொகை ஒதுக்கியாவது பிற்பட்ட இனத்தவர்களுக்கு எல்லாம் கல்விச் சலுகை அளிக்கவாவது ஏற்பாடு செய்தால் மிகவும் உதவியாக இருக்கும். அதிக மாணவர்கள் படித்து முன்னேற வசதி ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மத்திய சர்க்கார் கொடுக்கின்ற கல்விச் சலுகையை நமது மாநில சர்க்காருக்கு மாற்றிவிட்டார்கள். இனி இவர்கள் மூலம் அந்தத் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தச் சலுகை அளிப்பதில் இத்தனை மார்க்கு வாங்கியவர்களுக்குத்தான் கொடுக்கப்படும் என்று இருப்பதனால் ஓரளவு வசதி உள்ளவர்கள், பணக்காரர்கள் இவர்களுடைய குழந்தைக்கே போகும்படியாக வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே 70 சத விகிதம் மார்க்கு வாங்கியவர்களுக்குத்தான் என்று இருப்பதற்குப் பதிலாக 50 சத விகிதம் வாங்கியிருந்தாலும் அதற்கும், அதற்கு மேற்பட்டவர்களுக்கும் சலுகை அளிக்கப்படும் என்று செய்தால் மிகவும் உதவியாக இருக்கும். அப்படிச் செய்யவேண்டும் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக தென் ஆற்காடு மாவட்டத்தில் விருத்தாசலம், சிதம்பரம், கள்ளக்குறிச்சி முதலிய இடங்களில் அண்மையில் நடந்த வெள்ளத்தின் காரணமாக பல லட்சக்கணக்கான மதிப்புள்ள வீடுகளையும், சொத்துக்களையும் பலர் இழந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதோ ஓரளவு நிவாரணம் அளிக்கப்பட்டு வருகிறது. அந்த நிவாரண வேலைகளைத் தொடர்ந்து துரிதப்படுத்த வேண்டும். மேலும் சில அணைகள் உடைந்து இருக்கின்றன. அந்த அணைக்கட்டுகளை சரிப்படுத்துவதற்கு வேண்டிய காரியத்தில் உடனடியாக ஈடுபடவேண்டும் என்று அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை மூலமாகவாவது அனுப்பி தக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சர்க்கார் ஓரளவுக்கு கடன் எழுப்ப இருப்பதாக கூறியிருக்கிறார்கள்.—கடன் எழுப்பும நேரத்தில் சர்க்கார் அதிகாரிகள் கிராமப்புறங்களுக்குச் சென்று வற்புறுத்திக் கடனை வசூலிக்கிறார்கள். அதனால் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே இதையும் சுற்றறிக்கை மூலம் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி, " யாரையும் வற்புறுத்த வேண்டாம், அவர்களாகவே கொடுப்பதை பெற்றுக் கொள்ளுங்கள் " என்பதாகச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*** SRI K. P. PALANISWAMI :** கனம் தலைவர் அவர்களே, 1960-61-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை ஒட்டி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த வருஷம் புதிய வரி எதுவும் இல்லாமல் நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருப்பது எல்லோருக்கும் சந்தோஷம் உண்டாக்குகிறது. குறிப்பாக உருளைக் கிழங்கு வியாபாரிகளுக்கு அதிகக் கவலையாக இருந்தது என்று சொன்னார்கள். நான் வரும்போது கூட மேட்டுப் பாளையத்தில் அந்த வியாபாரிகள் எல்லோரும் என்னைச் சந்தித்து மந்திரி அவர்களைப் பேட்டி காணவேண்டும் என்றாலும் தாங்கள் வருவதாகச் சொன்னார்கள். எனக்கும் ஒரு விஷயத்தில் பயமாக இருந்தது. இதை கமர்ஷியல் க்ராப் என்று சொல்லி, சீக்கிரமாக இவை அழுகாது என்று வரியை எடுக்காது விட்டுவிடுவார்களா என்று கூட நான் சந்தேகப்பட்டுச் சொன்னேன். நேற்று இந்த பட்ஜெட்டில் பார்க்கும்போது எல்லோருக்கும் சந்தோஷமாக இருக்கிறது. குறிப்பாக வரி எதுவுமே இல்லாமல் நமது நிதி அமைச்சர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்தைச் சீரிய முறையில் தயாரித்துக் கொடுத்திருப்பதற்காக மக்கள் சார்பில் அவருக்கு நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



11th March 1960] [Sri K. P. Palaniswami]

குறிப்பாக இந்த ஆண்டிலே மக்களுடைய முன்னேற்றத்தைக் கருதி பல துறைகளில் அநேகமாகப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். குறிப்பாக கிணறு வெட்டுவதற்காகப் பணம் ஒதுக்கியிருக்கிறோம். சென்டிரல் ஸ்கீம்படி ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. இதில் நான்கில் ஒரு பாகம் மானியமாகவும், பாக்கி கடனாகவும் கருதப்படுகிறது. இது சம்பந்தமாக இப்போது புதிதாக ஒரு உத்தரவு வந்திருக்கிறதாகவும் கேள்விப்பட்டேன். அதாவது கிணறு வெட்டுவதானால் வெடி மருந்து அவசியம். முன்பு ரெவின்யூ இன்ஸ்பெக்டரோ, தாசில்தாரோ இந்த வெடி மருந்தை விநியோகிக்கலாம் என்று இருந்தது. இப்போது கலெக்டரே தான் வெடி மருந்தை விநியோகிக்கவேண்டும் என்று செய்திருப்பதாகத் தெரிகிறது. அப்படி இருந்தால் கிணறு வெட்ட பல இடைஞ்சல் இருக்கும். அதைத் தளர்த்தி முன்போலவே ரெவின்யூ இன்ஸ்பெக்டரோ, தாசில்தாரோ கொடுக்கலாம் என்று செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கூட மண்வள பாதுகாப்பு நம் ராஜ்யத்தில் நடைபெற்று வருகிறது. நாற்பது ஆண்டுகளுக்குக் கவனிக்காவிட்டால் பாறையாகப் போய்விடும் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். ஆகவே இந்த மண் வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். ஆனால் நிலத்துச் சொந்தக்காரருக்கு எவ்வித அறிவிப்பும் இல்லாமல் வரப்புகளைக் கட்டிவிடுகிறார்கள். இது சரியல்ல. பூமிக்காரர்களுக்கு அறிவித்துவிட்டு இந்த வரப்புகளைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக இன்னொன்று. என்னுடைய தொகுதியில் அண்மையில் மதுக்கரை கிராமத்தை எடுத்துக்கொண்டால் அங்கே சிமெண்டு பாக்ட்டரி இருக்கிறது. அந்த பாக்ட்டரி ஏற்பட்டு சுமார் பதினைந்து ஆண்டுகள் ஆகின்றன. நான்கைந்து மைல் ரேடியஸ் உள்ள இடத்தில் ஒரே வெண்மையாக டஸ்ட் படிந்து இருக்கிறது. அதனால் அங்கே இருக்கும் ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள். டஸ்ட்

[Sri K. P. Palaniswami] [11th March 1960

மலையாக இருக்கிறது. விஞ்ஞான முறையில் இதைப் பரிசீலனை செய்து இந்த டஸ்டுகளைக் கிளியர் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதாகவும் கேட்டுக் கொள்கிறேன். ஜனங்கள் எல்லோரும் கேட்டுக்கொண்டதன் பேரில் அரசாங்கம் இதற்குத் தக்கதொரு திட்டத்தைத் தீட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கூட கோவை நகரம் சில வருஷங்களாக குடிநீர் வசதி போதாமல் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாகிறது. சுமார் இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இப்போது இருக்கிற ரிசர்வாயர் கட்டப்பட்டது. அப்போது நகரத்தின் ஜனத்தொகை இருபதாயிரம், முப்பதாயிரம் இருந்திருக்கும். இப்போது மூன்று லட்சம் ஜனத்தொகை உள்ள அந்த நகரத்திற்குப் போதுமான குடி நீர் சப்ளை செய்ய அந்த ரிசர்வாயர் போதுமானதாக இல்லை. அங்குள்ள முனிசிபாலிடி சென்ற ஆண்டே ஒரு டெபுடேஷன் வந்த மாதிரி அவர்களிடத்திலும், அரசாங்கத்தினிடத்திலும் இதைப்பற்றி தெரிவித்திருக்கிறார்கள். அதன்பேரில் இது வரையில் ஒருவித நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவே அதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது சேர்த்து அந்த ரிசர்வாயரை ஆழப்படுத்தவும், அடிஷனல் பைப்புகளைப் போடவும் எல்லாவிதமான ஏற்பாடுகளையும் செய்து அந்த நகர மக்களுக்குள்ள குடிதண்ணீர் கஷ்டத்தைப் போக்கவேண்டும்.

அதோடு கூட முன்பெல்லாம் ஜாயிண்ட் பட்டாதார்களுக்கும் கடன் கொடுத்து வந்தார்கள். இப்போது ஜாயிண்ட் பட்டாதார்களுக்குக் கடன் கொடுக்க மறுத்து வருகிறார்கள் என்று தெரிகிறது. அதையும் சற்றுத் தளர்த்தி ஜாயிண்ட் பட்டாதார்களுக்கும் கடன் கொடுக்க வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

பூமிதான நிலங்கள் அநேக இடங்களில் இப்போது வழங்கப்பட்டு வருகிறது. அதிலும் குறிப்பாக விவசாயத்தில் அதிகமாக ஈடுபட்டிருக்கக் கூடிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வினியோகம் செய்தால் அந்த பூமியை நல்ல முறையில் பயன்படுத்த ஏதுவாக இருக்கும். பூமி தானம் செய்கிறபோது நல்ல முறையில் பயன்படுத்துகிறவர்களுக்குக் கொடுத்து உதவ வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த பூமியில் விவசாயம் செய்வதற்கும், விதை, இன்னும் வண்டி மாடு முதலியவை வாங்குவதற்கும், தாழ்த்தப்பட்ட மக்கள் முடியாதவர்களாக இருப்பதினால் அவர்களுக்குக் கடன் வசதி அளித்து உதவி செய்ய வேண்டும் என்பதாக தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கூட இப்போது ஹரிஜனங்களுக்கு சர்க்காரிலே பூமி ஆர்ஜிதம் செய்கிறார்கள். அதில் பல கஷ்டங்கள் இருக்கிறது. பூமியை பட்டா செய்து, அவார்டு பாஸ் செய்தாலும் அங்கே குடியிருக்க முடியாமல் இருக்கிறது. காரணம் அதை எதிர்த்து ஹைக்கோர்ட்டிலோ, சுப்ரீம்கோர்ட்டிலோ அப்பீல் செய்து கொண்டால்



11th March 1960] [Sri K. P. Palaniswami]

அதன் தீர்ப்பு வரவேண்டியிருக்கிறது. பத்தாயிரம், முப்பதாயிரம் என்று இப்படிச் செலவு செய்து அங்கே போய் குடியிருக்க முடியாமல் இருப்பதைத் தவிர்க்க ஏதாவது செய்யவேண்டும். ரயில்வே முதலியவற்றுக்கு சர்க்கார் நில ஆர்ஜிதம் செய்வது போலவே இதையும் செய்து பட்டா பண்ணி, அவார்டு பாஸ் செய்துவிட்டால் உடனே அங்கே போய்க் குடியிருக்க வசதி பண்ணித் தரவேண்டும் என்பதாகப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கூட பள்ளிகளில் அநேக மாணவர்களுக்கு மத்தியான உணவு கொடுக்கப்பட்டு வருகிறது. அதிலே பொதுஜனங்களிடத்திலும் அதிகமாக டொனேஷன் பெற்று வருகிறார்கள். சில ஊர்களில் இதனால் அதிகம் உதவி தந்து வருகிறார்கள் என்றாலும் 1–32 p.m. பட்டிக்காடுகளில் எல்லாம் முன்வருவது கிடையாது. இங்கெல்லாம் பள்ளிகளில் மாணவர்களுக்கு மத்தியான உணவு தருவதற்கு ஏற்பாடு செய்தால் இன்னும் அதிகமான மாணவர்கள் படிக்க ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

### V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

*A. Statutory Rules and Orders.*

* 26. *Notifications issued by Regional Inspector of Municipal Councils and Local Boards, relating to the division of Wards of Panchayats, etc., in Chingleput, North Arcot, Ramanathapuram, Madurai, Coimbaore, Salem, Tanjore, Tiruchirappalli and Tirunelveli districts.* [*Laid on the table of the House under section* 133 (3) *of the Madras Village Panchayats Act*, 1950 (*Madras Act* X *of* 1950).] (75 *notifications*).

@ 27. *Notification issued with G.O. Ms. No.* 3672, *Revenue, dated* 5th *December* 1959, *appointing the* 1st *day of January* 1960 *as the date on which the provisions of the Madras Hindu Religious and Charitable Endowments Act*, 1959 (*Madras Act* 22 *of* 1959) *except those mentioned in clause* (b) *of sub-section* (4) *of section* I *of the said Act, shall come into force in the whole State of Madras.* (*Laid on the table of the House under section* 116 (3) *of the Madras Hindu Religious and Charitable Endowments Act*, 1959 (*Madras Act* 22 *of* 1959).

@ 28. *Notification issued with G.O. Ms. No.* 2016, *L.A. dated* 30th *November* 1959 *containing the rule extending the term of office of the Members of the Santhiyur, Attayampatti Panchayat* (*Salem district*). [*Laid on the table of the House under section* 113 (4) *of the Madras Village Panchayats Act*, 1950 (*Madras Act* X *of* 1950).]

[11th March 1960

*B.—Reports, notifications and other papers.*

@ 11. *Statement regarding the results and the extent of success achieved by the Joint Farming Co-operative Society of Valandur village, Madurai district.* (*Answer to Legislative Assembly Question No.* 241, *dated* 29*th April* 1959 *and Assurance No.* 667 *of* 1959.)

@ 12. *Notification issued with G.O. Ms. No.* 4308 (*Co-operation*) *Industries, Labour and Co-operation, dated* 6*th November* 1959, *amending the rules published with late Development Department Notification No.* 264, *dated the* 1*st August* 1933, *regarding the diversion of surplus funds of a society under the Madras Co-operative Societies Act,* 1932 (*Madras Act VI of* 1932). [*Laid on the table of the House under section* 65 (5) *of the Madras Co-operative Societies Act,* 1932 (*Madras Act VI of* 1932).]

@ 13. *Notification issued with G.O. Ms. No.* 3806, *Revenue, dated* 17*th December* 1959, *amending the Madras Sales of Motor Spirit Taxation Rules,* 1939, *regarding the grant and renewal of certificates of registration.*

@14. *Notification issued with G.O. Ms. No.* 3407, *Home, dated* 2*nd December* 1959 *containing the rule relaxing rule* 2 (1) (c) *and* 9 *of the Madras Denatured Spirit, Methyl Alcohol and Varnish* (*French Polish*) *Rules,* 1959, *in favour of the Indian Sugars and Refineries, Limited, Madras, so as to enable them to sell the unexported stock of denatured spirit in their godown at Madras.*

@ 15. *Notification issued with G.O. Ms. No.* 3562, *Home, dated* 16*th December* 1959, *exempting from the payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931) *all transport vehicles with valid permits issued by the Mysore Government or Kerala Government and which ply on the Kozhikode-Gudalur-Mysore Road in the Madras State on account of the collapse of the bridge on the road Gundleput to Sultan's Battery for a period of six months or till the said bridge is reconstructed.* [*Laid on the table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

---

@ Sent by post on 4th March 1960.

* Sent by messenger on **4th March 1960.**



11th March 1960]

## APPENDIX I.

[Vide answer to starred question No. 276 asked by Sri S. M. Annamalai at the meeting of the Legislative Assembly held on 11th March 1960, page 158 supra.]

*A.*—The allotments made during 1956-57 to 1958-59 and the number of villages electrified during the period are as follows :—

| *Year.* | | *Budget Estimate.* | *Revised Estimate.* | *Actual expenditure.* | *Number of villages electrified.* |
|---|---|---|---|---|---|
| | | RUPEES IN LAKHS | | | |
| 1956-57 | .. | 490 | 555 | 514 | 1,279 |
| 1957-58 | .. | 446 | 441 | 438 | 1,301 |
| 1958-59 | .. | 306 | 447 | 554 | 1,397 |

The budget allotments are regulated with reference to the expenditure already incurred and the balance available within the plan ceiling. It may however be observed that even though there has been a reduction in the budget allotment, the number of villages electrified has progressively increased from year to year. This is due to—

(1) Use of less costly supports such as R. C. C. poles, wood poles and palmyrah poles in the place of steel supports and less costly ACSR and Aluminium conductors in the place of Copper conductors.

(2) Long high tension lines having already been erected in earlier years, electrification of villages en-route involves only tapping of these main lines, thus reducing the cost on H. T. lines in the rural electrification programme.

(3) More and more additional applicants coming forward to avail supply in the existing distributions and this means more and more service connections with smaller capital outlay.

## APPENDIX II.

[Vide answer to starred question No. 279 asked by Sri S. Lazar and Sri N. K. Palaniswami at the meeting of the Legislative Assembly held on 11th March 1960, page 161 supra.]

The particulars of allotment of iron and steel materials during the four quarters of 1958–59 and the first quarter of 1959–60 and the increases made by the Government of India are furnished below:—

| *Quota heads.* | *Allotment (tons).* | | | | | *Increase in allotment over previous quarter (tons).* | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1958–59 *First quarter.* | 1958–59 *Second quarter.* | 1958–59 *Third quarter.* | 1958–59 *Fourth quarter.* | 1959–60 *First quarter.* | 1958–59 *First quarter.* | 1958–59 *Second quarter.* | 1958–59 *Third quarter.* | 1958–59 *Fourth quarter.* | 1959–60 *First quarter* |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| Government Development Schemes .. .. | 600 | 600 | 1,275 | 1,686 | 1,686 | .. | .. | 675 | 411 | .. |
| Steel Processing Industries .. .. .. | 812 | 812 | 812 | 1,216 | 1,216 | .. | .. | .. | 404 | .. |
| Small Scale Industries .. .. .. .. | 641 | 761 | 1,236 | 1,753 | 2,830 | 41 | 120 | 475 | 517 | 1,077 |
| Agricultural .. .. .. .. .. | 704 | 601 | 593 | 1,100 | 2,231 | .. | .. | .. | 507 | 1,131 |
| Non-agricultural .. .. .. .. .. | 1,816 | 1,816 | 1,820 | 2,720 | 6,318 | .. | .. | 4 | 900 | 3,598 |



## APPENDIX III.

[Vide item III on page 193 supra.]

The following statement is placed on the table of the House with reference to the answers given by the Minister for Finance to supplementary questions to main question No. 523 answered on 3rd March 1959:—

* 523 *Q.*—SRI M. P. SARATHI; Will the Hon. the Minister for Finance be pleased to state the amount contributed by the Government in 1957 and 1958 to the "Common Good Fund" of the Tamil Nad Non-Gazetted Government Officer's Union ?

*A.*—There was no Government contribution in 1957 and 1958 to the Common Good Fund of the Tamil Nad Non-Gazetted Government Officers' Union.

| *Serial number and supplementary question.* | *Answer given by the Minister for Finance.* | *Correct answer.* |
|---|---|---|
| 1 Sri A. Govindasamy, M.L.A.: Whether this grant was made in the previous years ? | The grant was made in 1954 and 1955. | No. |
| 2 Sri A. Govindasamy, M.L.A.; If so, what is the reason for not sanctioning the grant during the subsequent years without continuing it ? | Grant of assistance (to the families of the deceased members of the Non-Gazetted Government Officers' Association) from this fund was very meagre. Just for this reason, no such contribution was made subsequently. I expect that the Pay Commission now appointed will consider this matter also and express their opinion. | Does not arise. I expect that the Pay Commission now appointed will consider this matter also and express their opinion. |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Saturday, 12th March 1960.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS

## STARRED QUESTIONS.

MR. SPEAKER: SRI N. R. Thiagarajan has not come and question No. 291 standing in his name will be taken up later. All questions to be answered by the Hon. Minister for Electricity have been postponed. Questions to be answered by the Hon. Minister for Industries and Labour will be taken up as soon as he comes.

*Educational Broadcasts Advisory Committee*

* 307 *Q*.—SRI P. G. MANICKAM: *கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—*

*(அ) 9 மார்ச்சு 1959-ல் திருச்சிராப்பள்ளியில் கூடிய கல்வி ஒலிபரப்புக்கான ஆலோசனைக்குழு கூட்டத்தினரால் என்னென்ன திட்டங்கள் கலந்தாலோசிக்கப்பட்டு அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்தப்பட்டன?*

*(ஆ) இத்திட்டங்களிலே எந்தெந்த திட்டங்கள் அமுலாக்கப்படும்?*

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) No communication has been received by Government from the Panel.

(*b*) Does not arise.

*Participation of Government Departments in Exhibitions*

MR. SPEAKER: Next question.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I shall answer all the four questions from 310 to 313 together since they all relate to the same subject.

* 310 *Q*.—SRI A. A. RASHEED: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the South Indian Athletic Association, Madras, have requested the Government for the participation of various departments in the exhibition conducted by the Association for the year 1959–60; and

(*b*) if so, the action taken theron?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

[12th March 1960

* 311 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether anybody else other than the organizers of the Congress Exhibition at Teynampet have requested the Government to participate in their Exhibitions; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) In every case where a request is received for Government participation in exhibition, it is examined in consultation with Heads of Departments, and with reference to the general principle that Government Departments are not usually permitted to participate in more than one exhibition at a time. During 1959–60 requests were received from 14 organisations out of which selected Government Departments were permitted to participate in eight.

* 312 *Q.*—Sri M. KALYANASUNDARAM, Sri V. K. KOTHANDARAMAN, Sri M. P. SARATHI } Will the Hon. the Chief Minister be pleased to place a copy of the statement on the table of the House showing—

(i) the departments which took part in the Exhibition organized by the Tamilnad Congress Committee at Teynampet for the year 1959–60; and

(ii) the expenditure incurred by each department for the construction of stalls, for production of the exhibits, and for ground rent paid to the Exhibition Committee?

The Hon. Sri C. SUBRAMANIAM : (i) The following Departments have taken part in the Exhibition :—

Agriculture, Animal Husbandry, Approved Schools and Vigilance Service, Education, Electricity Board, Family Planning (Corporation of Madras), Fisheries, Forests, Harijan Welfare, Industries and Commerce, Information and Publicity, Jails, Khadi, Medical, Police, Public Health, Public Works, Statistics and Women's Welfare.

(ii) Particulars regarding the expenditure incurred by each department have been called for.

* 313 *Q.*—Sri S. M. ANNAMALAI: கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னையில் நடந்த காங்கிரஸ் பொருட்காட்சிக்கு சர்க்கார் பண உதவி செய்துள்ளார்களா ?

(ஆ) அப்படியாயின் எவ்வளவு பணம் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) No, Sir. Only stall rents were paid at a concessional rate for the departments taking part in the exhibition.

(*b*) Does not arise.



12th March 1960]

Sri A. A. RASHEED : May I know whether the attention of the Government has been drawn to the statement of Rajaji accusing the Government of favouritism?

The Hon. Sri C. SUBRAMANIAM : Yes, Sir. As a matter of fact, the attention of the Government was drawn to it and during this year, as I already stated, there was no request from the South Indian Athletic Association that the Government should participate in that exhibition. I may also point out that when Rajaji himself was Chief Minister in 1952–53, the S.I.A.A. made a request to the Government to participate in their exhibition and orders were passed then that since the Government were participating in the Teynampet Exhibition, they need not participate in the S.I.A.A. Exhibition.

Sri S. M. ANNAMALAI: மற்ற கட்சிகள் நடத்தும் கண்காட்சிகளில் சர்க்கார் பங்கு எடுத்துக்கொள்ளவில்லை. அந்த மாதிரி பொருட்காட்சிகளிலே சர்க்கார் பங்கு எடுத்துக் கொள்ளுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: அந்தந்த பொருட்காட்சியின் தன்மையையும் தகுதியையும் உத்தேசித்து சர்க்கார் பங்கு எடுத்துக்கொள்ளுகிறது. அந்த பொருட்காட்சியில் பங்கு எடுத்துக்கொள்வதன் மூலம் சர்க்கார் திட்டங்களுக்கு நல்ல விளம்பரம் ஏற்படுவதற்கும் மக்களுக்கு விஷயங்களை தெரிவிப்பதற்கும் பொருட்காட்சியில் கலந்துக்கொள்ளுகிறோம்.

Sri S. NAGARAJA MONIGAR: பதவியில் இருந்தும் இப்போது பதவியை எச்சல் என்று ராஜாஜி சொல்வது சர்க்காருக்குத் தெரியுமா ?

(பதில் இல்லை.)

Sri A. A. RASHEED : May I know the year when the Government last participated in the S.I.A.A. exhibition?

The Hon. Sri C. SUBRAMANIAM : I know we have not participated since 1952–53. I do not know when we last participated in that exhibition.

Sri V. K. KOTHANDARAMAN: எந்தெந்த கண்காட்சிகளில் பங்கெடுத்துக்கொள்வது என்பது பற்றி சர்க்கார் கொள்கை என்ன? அதே நேரத்தில் தங்களுடைய தன்மையைப் பொறுத்திருக்கிறது என்று சொல்லும்போது காங்கிரஸ் கண்காட்சியின் வருமானம் குறைந்துவிடும் என்பதற்காகத்தான் மற்ற பொருட்காட்சிகளில் கலந்துக்கொள்ள முடியாத தன்மையில் தன்மை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதை விளக்க முடியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: இப்பொழுது தேனாம்பேட்டை பொருட்காட்சிக்கு மக்கள் எந்த அளவிற்கு போகிறார்கள் என்பதை கனம் அங்கத்தினர் கணக்குப் பார்த்தால் தெரிய வரும். இதன் மூலம் சர்க்கார் திட்டங்களுக்கு நல்ல விளம்பரம்

[12th March 1960

கிடைக்கிறது. இதுமாதிரி வேறு இடங்களில் கூட்டம் வரும் அதனால் மக்கள் பலன் அடைவார்கள் என்று தெரிந்தால் அத் தகைய பொருட்காட்சிகளிலும் சர்க்கார் பங்கு எடுத்துக் கொள்ளும்.

SRI S. LAZAR: வேறு அரசியல் கட்சிகள் இம்மாதிரி பொருட்காட்சிகள் நடத்த முன் வந்ததா? முன்வந்து அர சாங்கத்திடம் கோரியது உண்டா? அப்படி கோரி மறுக்கப் பட்டது உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am sorry, I do not have information with regard to exhibitions conducted by any of the other political parties.

SRI V. K. KOTHANDARAMAN: தேனும்பேட்டைக் கண் காட்சியில் சர்க்கார் பங்கு எடுத்துக்கொண்டதன் விளைவாகத் தான் மக்கள் ஏராளமாகக் கலந்துக்கொண்டார்கள் என்று சொல்லப்படுகிறது. இதுபோன்று சர்க்கார் பங்கு எடுத்துக் கொள்வதன் மூலம் மற்ற பொருட்காட்சிகளிலும் மக்கள் ஏராளமாக கலந்துக்கொள்ளவேண்டுமென்று உத்தேசித்து, அவைகளிலும் சர்க்கார் பங்கு கொள்ளுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: சில வகைகளில் மக்களுக்கு வழக்கமாகப் போகக் கூடிய பழக்கம் ஏற்பட்டு விடுகிறது. அதைவிட்டு விட்டு வேறு கண்காட்சிகளில் மக்கள் வருகிறார்களா இல்லையா என்ற விஷப்பரீட்சை பார்க்கத் தயாராய் இல்லை.

### *Avenue trees*

MR. SPEAKER: ஸ்ரீ தியாகராஜன் அவர்கள் வந்துவிட்டார். 291-வது கேள்வியை எடுத்துக்கொள்வோம். கனம் மந்திரி அவர்கள் பதில் கூறுவார்.

*291 *Q.*—SRI N. R. THIAGARAJAN: கனம் பொது மரா மத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்கு பதிலளிப்பாரா—

(அ) சாலை மரங்கள் கண்டபடியாக வெட்டப்படுவதைத் தடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) மதுரையிலிருந்து உசிலம்பட்டி வரையிலும் மரம் ஒன்றுகூட உருப்படியாக இல்லையென்பதை சர்க்கார் அறியுமா?

THE HON. SRI P. KAKKAN: (*a*) Necessary steps have been taken to prevent indiscriminate cutting of avenue trees on roads. Further steps are also under consideration.

(*b*) It has been reported that some of the avenue trees on this road are not in good condition, due to vandalism.



12th March 1960]

SRI N. R. THIAGARAJAN: இந்தசாலைமரங்களை பகுதி நிலக்காரர்களுக்கு மரப்பட்டா விட்டாவது, சாலைமரங்களை வெட்டினால் பகுதி ஊரிலுள்ளவர்களுக்கு கூட்டு அபராதம் விதிப்பது போன்ற காரியங்களைச் செய்ய அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI P. KAKKAN: இந்த மரங்களை எவ்வாறு பாதுகாப்பது என்பதுபற்றி ஏற்கனவே அரசாங்கம் ஒரு கமிட்டி அமைந்து பரிசீலனை செய்திருக்கிறது. இதிலே இப்பொழுது எந்தெந்த ஊர் பஞ்சாயத்து போர்டுக்கு பகுதி மரங்களை ஒரு வருஷத்திற்கு டெம்பரரியாகவாவது குத்தகை கொடுத்து மரங் களைப் பாதுகாக்க அரசாங்கம் பரிசீலனை செய்துவருகிறது.

SRI A. VEDARATHNAM: இந்தக் குறிப்பிட்ட சாலைகளில் உள்ள மரங்கள் அனேகமாக வெட்டி தீர்ந்தாகிவிட்டது. அதை ஒரே நாளில் வெட்டுவதில்லை. தினம் கொஞ்சம் கொஞ்சமாக வெட்டுகிறார்கள். ஆரம்பத்திலேயே அதைத் தடுக்க முயற்சி எடுத்துக்கொண்டிருந்தால் இவ்வளவு சேதம் ஆகாமல் பார்த் துக்கொண்டிருக்கலாம். இனிமேலாவது சேதம் ஆகாமல் இருக்க அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக்கொள்ளும்?

THE HON. SRI P. KAKKAN: எல்லா மரங்களும் வெட்டப் படவில்லை. இன்னும் ஜாஸ்தி மரங்கள் இருக்கின்றன. மரங் களைப் பாதுகாக்க இப்போது அரசாங்கம் நல்ல கவனம் செலுத்திவருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

### *Fixation of wages for agricultural labour*

*305 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) விவசாயிகள் கூலி நிர்ணயத்தைக் குறித்து சர்க்கார் வெளியிட்ட அறிக்கைக்கு ஆட்சேபணைகள் ஏதாகிலும் வந்ததா?

(ஆ) அப்படியானால் அதன்மீது எடுக்கப்பட்ட நட வடிக்கை என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (அ) & (ஆ) சர்க்கார் வெளியிட்ட அறிக்கைக்கு ஆட்சேபணைகள் வந்தன. அவைகளை பரிசீலனை செய்தபிறகு விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

SRI S. M. ANNAMALAI: ஸார், இப்போது நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிற குறைந்தபட்ச கூலிக்கும் சாதாரணமாக விவசாயிகள் செய்த பழக்கவழக்கங்களுக்கும் ஒருவித சம்பந்த மும் கிடையாது. கூலி எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது? அந்த நிர்ணயிக்கப்பட்ட கூலியானது மினிமம் வேஜஸ் ஆக்டின் கீழ் நோடிபிகேஸன் செய்யாமல், அதற்குத் தனியாக ஒரு மசோதா தயாரித்து இந்த மன்றத்தின் முன்னால் கொண்டுவரமுடியுமா?

[12th March 1960

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் இப்போது சொல்லுகிற ஆட்சேபணையைக்கூட சர்க்கார் பரிசீலனை செய்துதான் நிர்ணயித்திருக்கிறது. கனம் அங்கத்தினர் சொல்லுகிற ஆட்சேபணைகூட சர்க்காருக்கு வந்தது. இது சம்பந்தமாக ஒரு கமிட்டி போடவேண்டியதில்லை. இப்போது இருக்கிற சட்டப்படி கெஜட் நோட்டிபிகேஷன் செய்தார்கள். இதற்கு ஒரு புதுச்சட்டம் தேவையில்லை. கெஜட் நோட்டிபிகேஷன் செய்தபோது பல மக்களிடமிருந்து ஆட்சேபணைகள் வந்தன. அவைகளையெல்லாம் பரிசீலனை செய்த பிறகுதான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

SRI N. MARUDACHALAM: ஸார், சர்க்கார் விவசாயப் பண்ணையில் இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்கு சர்க்கார் நிர்ணயம் செய்த கூலி இதுவரையில் ஏன் கொடுக்கப் படவில்லை? அந்தக் கூலி கொடுக்க அரசாங்கம் உத்திரவு போடுவார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN: இந்தக் கேள்வியை விவசாய இலாகா மந்திரி அவர்களிடம் போட்டால் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

SRI K. B. S. MANI: ஸார், இந்த நிர்ணயிக்கப்பட்ட கூலி அமுலாக்கப்பட்டிருக்கிற எல்லா ஜில்லாக்களிலும் கொடுக்கப் படுகிறதா? இதை சூபர்வைஸ் செய்ய ஏதாவது அதிகாரிகளை அரசாங்கம் நியமித்திருக்கிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN: இதற்கு சூபர்விஷன் செய்ய வேண்டியதில்லை. எந்தெந்த இடங்களில் குறைந்தபட்ச கூலி கொடுக்கவில்லையோ அதைப்பற்றி தொழிலாளர்கள் புகார் செய்யலாம். புகார்கள் செய்யப்படும்போது சட்டப்படி பரிசீலனை செய்து வேண்டிய நிவாரணம் அளிக்கப்படும்.

SRI A. A. RASHEED: May I know whether it is a fact that the main objection came from the labourers?

THE HON. SRI R. VENKATARAMAN: I do not think so, Sir. The objection came from the landowners also.

SRI S. M. ANNAMALAI: குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யும்போது எட்டு மணி நேரம்தான் வேலை செய்யவேண்டு மென்ற நியதியிருக்கிறது. ஆனால் விவசாயத் துறையில், விடியற் காலை 3 மணி முதல் மாலை 6 மணி வரை வேலை செய்யவேண்டி யிருக்கிறது. அதற்கு, அவர்களுக்கு கூலி தான்யமாக தரப் பட்டது. அதை மாற்றி 4 ரூபாய் என்று கொடுக்க வேண்டிய தற்குப் பதிலாக ஒரு ரூபாய் என்று மாற்றி நிர்ணயம் செய்திருப் பது சரியா? ஆகவே, அதை குறைந்தபட்ச கூலி என்று சொல்வதில் அர்த்தமில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: அங்கத்தினர் அவர் களின் அபிப்பிராயத்தில் இது அர்த்தமில்லையென்று நினைக்க லாம். ஆனால் சர்க்கார் பல அபிப்பிராயங்களை கேட்டு ஒரு



12th March 1960]

காரியத்தை செய்யவேண்டியிருக்கிறது. இதுவே அதிகம் என்று வந்த புகார்களையும் சர்க்கார் கேட்க வேண்டியிருந்தது. ஆகவே இதில் சர்க்கார் செய்யக்கூடியது, சட்டத்திற்கு புறம்பாக ஏதாவது நடக்கிறதா என்றும் 8 மணி நேரத்திற்கு அதிகமாக வேலை வாங்கப்படுகிறது என்ற புகார் வருமானால், அதையும் பரிசீலனை செய்ய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. அதைச் செய்யும்.

*Labour dispute*

* 308 Q.—SRI P. S. CHINNADURAI (on behalf of SRI S. PAKKIRISAMI PILLAI): Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have referred the dispute between the workers and the management of Sri Rama Machinery Corporation, Limited, Madras, to a Tribunal?

THE HON. SRI R. VENKATARAMAN: Yes, Sir.

*Rebate for handloom cloth*

* 309 Q.—SRI N. K. PALANISAMI / SRI S. LAZAR }: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to reduce the rebate given to handloom cloth;

(b) if so, the reason for the same;

(c) whether the rebate paid to the handloom textiles will be continued during the current year at the same rate; and

(d) to what extent the handloom industry has been encouraged by the payment of rebate?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) No, Sir.

(b) Does not arise.

(c) During the current year the rebate on retail sales of handloom cloth continues to be 6 naye Paise in the rupee which was the rate during last year.

(d) Marketing is the crux of the problem in the handloom industry. Rebate scheme is the most important among the measures designed to promote the marketing of handloom cloth. Experience of the past six years has fully justified the need for the rebate scheme in the development of handloom industry. By quick turnover, continuous employment is assured to the handloom weavers.

SRI N. K. PALANISAMI: மில் துணிக்கும், கைத்தறித் துணிக்கும் இருக்கக்கூடிய போட்டியை ஓரளவு சமாளிப்பதற்காகத்தான் ரிபேட் தொகை கொடுக்கப்படுகிறது. அப்படியானால் இப்பொழுது அதிகப்படியான போட்டி எந்தளவுக்கு குறைந்திருக்கிறது? சர்க்கார் இந்த ரிபேட் தொகையை குறைக்க என்ன காரணம்?

THE HON. SRI R. VENKATARAMAN: நான் குறைக்கவில்லை என்று சொன்னேன்.

[12th March 1960

SRI A. MARIAPPAN: சர்க்கார் தள்ளுபடி தொகை செப்டம்பருக்கு பிறகு பிரதம சங்கங்களுக்கு கிடைக்கவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா? உடனடியாக அது கிடைக்க ஏற்பாடு செய்வார்களா?

THE. HON. SRI R. VENKATARAMAN: மத்திய சர்க்காரிலிருந்து நமக்கு 1 கோடி 15 லட்சம் வரவேண்டியிருக்கிறது. அது வந்தவுடன் பட்டுவாடா செய்யப்படும்.

SRI S. M. ANNAMALAI: இந்தக் கைத்தறித் தொழிலானது அடிக்கடி தள்ளுபடி பணத்தை நம்பி வாழும் நிலையிருக்கிறது. அதைக் காப்பாற்றுவதற்காக நிரந்தர பரிகாரம் காண சர்க்கார் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது?

MR. SPEAKER: தனி கேள்வி போடுங்கள், அதற்கு இதில் பதில் சொல்லமுடியாது.

SRI A. A. RASHEED : Sir, is it a fact that the Central Government has categorically stated that the handloom industry should stand on its own legs and not depend on rebates?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. Each person has his own view and so each Government has also its own views.

SRI V. K. KOTHANDARAMAN: கதருக்கு கொடுப்பது போல் கைத்தறிக்கும் ரிபேட் கொடுக்க வேண்டுமென்று கோரி கைத்தறி நெசவுத்தொழிலாளர்களிடமிருந்து சர்க்காருக்கு தகவல் வந்திருக்கிறதா? அதன்பேரில் சர்க்கார் எடுத்த நடவடிக்கைகள் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: கைத்தறிக்கு ஓரளவு ரிபேட் கொடுக்கப் படுகிறது. அது எந்த அடிப்படையில் என்பதைத் தெரிந்து கொண்டால் இதிலிருக்கிற பிரச்னை புரிந்துவிடும். மில்லில் நூற்கிற நூல் நேரடியாக நெசவாலைகளில் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு ரீலிங் என்ற ப்ரோஸஸ் கிடையாது. அதனால் நெய்கிற மில்களுக்கு சலுகை இருக்கிறது. கைத்தறி நெசவுக்கு நூல் ரீல் செய்ய மீண்டும் கைத்தறி நெசவாளர்களுக்கு கொடுக்க வேண்டியிருக்கிறது. ரீலிங் ப்ரோஸஸில் ஏற்படக் கூடிய அதிகபட்சமான செலவை ஈடுகட்ட ரிபேட் கொடுக்கப்படுகிறது. விலையைப் பொறுத்தல்ல. ரீலிங் ப்ரோஸஸ் போன்றவை இப்பொழுது இல்லை, கதரைப் பொறுத்தவரையில். இதற்கும் அதற்கும் சம்பந்தமேயில்லை.

SRI P. S. CHINNADURAI: சரியான சமயத்தில் தள்ளுபடி தொகை கிடைப்பதில்லை என்று அடிக்கடி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் புகார் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிற காரணத்தினாலும் மத்திய சர்க்கார் இந்தத் தொகையை கொடுப்பதில் நீண்ட தாமதம் உண்டாக்குவதின் காரணத்தினாலும் ராஜ்ய சர்க்கார் கணிசமான தொகையை முன்பணமாக மத்திய சர்க்காரிலிருந்து பெற்றுக்கொண்டு அதிலிருந்து இதனை சரிக்கட்ட முன்வருவார்களா?



12th March 1960]

THE. HON. SRI R. VENKATARAMAN: கணிசமான தொகையை மத்திய சர்க்காரிலிருந்து பெறவில்லை. ராஜ்ய சர்க்காரே தன் நிதியிலிருந்து இன்றைக்கு முன்பணமாக கொடுத்துவருகிறது.

SRI N. K. PALANISAMI: நமக்கு செஸ் பண்டிலிருந்து எவ்வளவு தொகை கிடைக்கிறது? அதிலிருந்து எந்தளவு ரிபேட்டுக்காக ஒதுக்கப்படுகிறது? இவ்வளவு வருஷமாக, இவ்வளவு தொகை மத்திய சர்க்காரிலிருந்து வராததற்கு காரணம் என்ன? செஸ் பண்டிலிருந்து அதிகப்படியான தொகையை ஒதுக்கி இந்தத் தேக்கத்தைப் போக்க சர்க்கார் முயற்சி செய்யக் கூடாதா?

THE HON. SRI R. VENKATARAMAN: 1959–60-ம் வருடத்திற்கு மத்திய சர்க்கார் ஒதுக்கிய தொகை 92 லட்சம். ஆனால் கைத்தறி நெசவுக்காக ராஜ்ய சர்க்கார் செலவழிக்க ஒதுக்கிய தொகை 1 கோடி 30 லட்சம். மத்திய சர்க்கார் கொடுத்த தொகையை விட ராஜ்ய சர்க்கார் சற்றேறக்குறைய 30 லட்சம் ரூபாய் அதிகமாக செலவு செய்யும் திட்டத்தை பட்ஜெட்டில் ஒதுக்கி அங்கத்தினர்களால் அங்கீகரிக்கப்பட்டு செலவு செய்யப்பட்டுவருகிறது. மத்திய சர்க்கார், தொகை கொடுப்பதில் கால தாமதம் ஏன் என்று கேட்டார்கள். சரியான கணக்கு வைக்காமல் தவறுதலாக ரிபேட் கோரியதாலும் அதைப் பரிசீலனை செய்து கணக்குகள் அனுப்பியபிறகுதான் கொடுக்க முடியும். இந்தத் தவறுதல் ஒன்றிரண்டு ஜில்லாக்களில் ஏற்பட்டது. கணக்குகளை மத்திய சர்க்காருக்கு சரியாக அனுப்பமுடியவில்லை, அதனால்தான் தாமதம்.

SRI R. KRISHNASAMI NAIDU: நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் ரிபேட் கணக்குகள் வைத்துக் கொள்ளும் முறையில் ஏற்பட்ட தவறுதல்கள் காரணமாக அநேக சங்கங்களுக்கு ஒரு ஆண்டுக்கு மேலாக ரிபேட் கொடுக்கப் படாமல் இருந்து வருகிறது. அவைகள் எல்லாம் பரிசீலனை செய்ததற்குப் பின்னும் இன்னும் கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. சீக்கிரமாக அதைக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: தவறுதல் செய்த சங்கங்கள் சற்று பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும். தவறுதல்கள் நடந்த எல்லாச் சங்கங்களையும் இப்பொழுது பரிசீலனைசெய்து அந்த சங்கங்கள் தவறாக கணக்குகள் கொடுத்ததை எல்லாம் சரிபார்த்து எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இனிதான் அவர்களுக்கு பணம் கொடுக்கவேண்டும். தவறு செய்தவர்களுக்கு உடனடியாக சகாயம் செய்யவேண்டுமென்று கேட்பது சரியல்ல.

SRI K. SATTANATHA KARAYALAR: தவறு செய்ததாக கணக்கிட்ட போகஸ் சொஸைட்டிகள் மொத்தம் எத்தனை? இதில் சம்பந்தப்பட்ட தறிகள் மொத்தம் எவ்வளவு?

THE HON. SRI R. VENKATARAMAN: அதற்கு கணக்குகள் கொடுக்க முடியாது. ஆனால் ஒன்றிரண்டு ஜில்லாக்களில் இந்த தவறுதல் ஏற்பட்டிருக்கிறது. அவற்றிலும் கணக்குகள் பார்த்தாய் விட்டது.

*Outbreak of fire at R.S. Puram, Coimbatore*

* 314 Q.—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the reasons for the outbreak of fire at R.S. Puram in Coimbatore on 9th December 1959; and

(b) the extent of damage caused and the number of persons injured thereby?

THE HON SRI M. A. MANICKAVELU: (a) The outbreak of fire is reported to be accidental. One hut caught fire from the lighted oven inside and the fire spread to other huts.

(b) Twenty-six thatched houses were gutted by fire and two tiled houses were affected. No one was injured in the fire accident. The value of loss is estimated to be Rs. 11,700 roughly.

SRI K. SATTANATHA KARAYALAR: இவர்களுக்கு உடனடியாக ரிலீப் மெஷர்ஸ் ஏதாவது செய்யப்பட்டதா? நஷ்ட யீடு இவர்களுக்கு உடனடியாக கொடுக்கப்பட்டதா?

THE HON. SRI M. A. MANICKAVELU: ஆமாம். குடிசை போடுவதற்காக 30 ரூபாயும் துணிமணி வாங்குவதற்காக 10 ரூபாயும் ஆளுக்கு கொடுக்கப்பட்டது.

*Buildings for the officials of the Plan Projects*

* 315 Q.—SRI N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) the amount of expenditure incurred on buildings for the officials of the Plan Projects such as Lower Bhavani, Vaigai, Sathanur, Krishnagiri, Araniar, Amaravathi, Periyar Hydel Projects; and

(b) the purposes for which the buildings are to be used after the execution of the projects?

THE HON. SRI P. KAKKAN: (a) & (b): A statement* containing the particulars is placed on the table of the House.

SRI N. R. THIAGARAJAN: திட்ட பிரதேசங்களில் இந்த ஸ்டேட்மெண்டில் உள்ளபடி ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து கட்டிடங்கள் கட்டப்பட்டது. எங்கள் தொகுதியில் வைகை ப்ராஜெக்ட்டில் 8 லட்சம் செலவு செய்து

* Printed as Appendix on pages 378–379 infra.





கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கிறது. அவைகளை நான் போய் பார்த்திருக்கிறேன். பல கட்டிடங்கள் காலியாக கிடக்கின்றன. அதை சர்க்கார் காரியங்களுக்கு உபயோகிக்க நடவடிக்கைகள் எடுப்பார்களா? இதுபற்றி எத்தனையோ தடவைகள் கூறியிருக்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN: வைகை நீர்தேக்கத்தின் பக்கத்தில் கட்டப்பட்ட இடங்கள் சில காலியாகயிருக்கிறது. அதை செப்பனிட்டுக் கொள்ளவேண்டும். அங்கு வருகிறவர்கள் தங்குவதற்கு நல்லபடி வைக்க திட்டமிட்டு இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

*Panchayats*

* 316 Q.—SRI A. VEDARATHNAM: கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து தலைவர்களையும், உப தலைவர்களையும் இந்தியா முழுதும் ஒரே பெயரில் அழைக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கம் நம் மாநில அரசாங்கத்தாரைக் கேட்டு இருக்கிறதா?

(ஆ) என்ன பெயரால் அழைக்க வேண்டுமென்று கோரியிருக்கிறது?

(இ) நம் அரசாங்கம் அதற்களித்த பதில் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) The Fifth meeting of the Central Council of Local Self Government held at Hyderabad in October 1959 approved the use of certain common terms at All-India Conferences, etc., connected with Panchayats. A copy of the main recommendations and conclusions reached at the meeting has been communicated by the Government of India to all State Governments for information and necessary action.

(b) The Central Council has approved the use of the terms Sar-Panch and Upa-Sar-Panch to denote the President and the Vice-President of a Panchayat respectively.

(c) The matter is under consideration and no reply has yet been sent to Government of India.

SRI A. VEDARATHNAM: இந்த பதங்களை நம்முடைய மாநில சர்க்கார் அங்கீகாரம் செய்திருக்கிறதா? அப்படியானால் அது எப்போது அமலுக்கு வரும்?

THE HON. SRI C. SUBRAMANIAM: என்னுடைய விடையின் கடைசிப் பகுதியில் குறிப்பிட்டிருக்கிறேன்.

The matter is under consideration and no reply has yet been sent to the Government of India.

இதில் இன்னும் ஒரு முடிவு எடுக்கவில்லை.

[12th March 1960

*Disposal of cases in courts*

*317 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீதி மன்றங்களில் வழக்குகள் குவிந்திருப்பதைக் குறைக்க வேலை நேரங்களையும் வேலை நாட்களையும் அதிகமாக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரிடமிருந்து மாநில சர்க்காருக்கு சிபாரிசுகள் ஏதாகிலும் வந்துள்ளதா?

(ஆ) அப்படியானால் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: One of the recommendations made by the Law Commission of India relates to the reduction of pendency in the High Court. The Commission's report is under examination.

SRI S. M. ANNAMALAI: ஸார், சட்ட கமிஷன் செய்த சிபாரிசுகளின் நகல் இந்தச் சர்க்காருக்கு கிடைத்து விட்டதா? அப்படியானால் அதனுடைய நகல் ஒன்று இந்தச் சட்டசபையின் மேஜை மீது வைக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்த சிபாரிசுகள் எல்லாம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதென்று நான் முன்னமேயே சொன்னேன். இதை பரிசீலித்து அரசாங்கம் என்ன முடிவுகளை எல்லாம் செய்திருக்கிறதோ அதைப்பற்றி கேள்வி கேட்டால் விவரங்கள் கொடுக்கலாம்.

SRI V. SUBBIAH: ஒரு ஜீவனாம்ச கேஸ் தீர்ப்புப் பிரகாரம் தனக்கு கிடைக்க வேண்டிய பணத்தை வசூல் செய்து தர வேண்டும் என்று ஒரு பெண் எஸ்.டி.எம். கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்து 14 வாய்தாக்கள் ஆகியும் கூட இதுவரையிலும் பணம் கிடைக்காமல் இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியானால் இப்படிப்பட்ட காலதாமதம் ஏற்படாமல் இருப்பதற்கு அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக் கொள்ளும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: வாய்தாக்கள் கேட்பது அனேகமாக கட்சிக்காரர்களே கேட்கிறார்கள். இதனால் தான் தவிர்க்க முடியாத தாமதமும் ஏற்படுகிறது.

SRI A. A. RASHEED: May I know, Sir, whether the number of judes has been increased for the speedy disposal of the cases?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I do not think, Sir, there is any necessity to increase the number of judges sanctioned.

SRI S. NAGARAJA MONIGAR: ஸார், வழக்கு மனைக்கு தகராறுகளை கொண்டு போன பிறகு வாய்தாக்கள் கேட்டாலும் அதை அனுமதிக்காமல் இருப்பதற்கு சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதற்கு சர்க்கார் ஒன்றும் ஏற்பாடு செய்ய முடியாது. இதைப்பற்றி கோர்ட்டார் தான் முடிவு செய்யவேண்டும்.



12th March 1960]

SRI V. K. KOTHANDARAMAN: அடிக்கடி கட்சிக்காரர்களே வாய்தாக்கள் கேட்பதற்கு காரணம் கோர்டுகள் எல்லாம் வெகு தூரத்தில் இருப்பது தான் காரணம் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அப்படியானால் இதை முன்னிட்டாவது மூன்று லட்சம் ஜனத்தொகை கொண்ட தாலூகா ஒன்றுக்கு இப்போது இருக்கிற அடிஷனல் கோர்ட்டை நிரந்தர நீதி மன்றமாக ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: வழக்குகளைப்பற்றி கனம் அங்கத்தினர்களைப்போல் அவ்வளவு அனுபவம் எனக்கில்லை. ஆனால் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகின்ற காரணம் மட்டும் காலதாமதத்திற்கு காரணம் அல்ல. அதற்காக கோர்டுகளை அதிகரித்து கொண்டு போனால் அரசாங்கத்திற்கு அனாவசியமான செலவு தான் ஏற்படும்.

*Centage charges*

*319 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இலாகாக்கள் மூலமாக ஆர்ஜிதம் செய்யப்படும் மனைக்கட்டு நிலங்களுக்கு எந்த முறையில் Centage Charge விதிக்கப்படும்.

THE HON. SRI R. VENKATARAMAN: Apparently the member refers to centage charges levied by the Director of Town-Planning, in respect of plans, etc., approved by his Department for Housing Schemes. Under the existing orders, centage charges at ½ to 1 per cent are levied by the Director of Town-Planning, for work relating to Housing Schemes done by his Department. The State Housing Board has recommended the levy of centage charge at Rs. 25 per acre, or part thereof, for approval of layout plans by the Town-Planning Department for co-operative housing schemes. A decision on this question has not yet been taken.

SRI P. G. MANICKAM: ஸார், ஸ்தல ஸ்தாபனங்கள் மூலம் அரிஜனங்களுக்கு நில ஆர்ஜிதம் செய்யப்படும் காலத்தில் கூட ஸென்டேஜ் சார்ஜ் டவுன் பிளானிங் சட்டப்படி 100-க்கு 25 என்ற விகிதத்தில் வசூலித்து வருகிறார்கள். இம்மாதிரி வசூலிக்கும் சென்டேஜ் சார்ஜிலிருந்து விலக்கு அளிப்பது பற்றி சர்க்கார் ஏதாவது கவனம் செலுத்துமா?

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு யோசனையை கூறுகிறார்கள். இந்த ஸென்டேஜ் சார்ஜ் அதாவது அவர்கள் செய்கிற சேவைக்காக ஒரு பகுதி வாங்கப்படுகிறது. இதை விலக்க வேண்டும் என்றால் அதைப் பற்றி நிதி அமைச்சர் அவர்கள்தான் பரிசீலனை செய்யவேண்டும்.

[12th March 1960

*Sales tax on hides and skins*

* 322 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the attention of the Government has been drawn to the High Court judgment regarding the levy of sales tax on skins and hides; and

(*b*) if so, whether skins and hides trade has been exempted from levy of sales tax?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) It is presumed that the hon. Member refers to the judgment of the Madras High Court, dated 1st October 1959 in W.P. Nos. 14, 15, 20, etc., of 1958, in which the High Court has struck down rules 15 and 16 of the Madras General Sales Tax (Turnover and Assessment) Rules, 1939 as invalid. The judgment has been brought to the notice of the Government.

(*b*) The Government have decided that it is necessary to validater the rules referred to. They have accordingly introduced a Bill in this House for the purpose. The attention of the hon. Member is invited to L.A. Bill No. 24 of 1959 introduced in this House on 8th December 1959 and passed by the House on 15th December 1959. The question of exempting the dealers in hides and skins does not, therefore, arise.

SRI A. A. RASHEED : Will the Government at least consider the question of reducing the rate of levy of sales tax on hides and skins to give more incentive to exports?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, that is a different question.

*Buckingham Canal*

* 323 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether any research work was undertaken by the Poondy Irrigation Research Centre to devise ways and means to keep the Buckingham Canal open towards the sea at Madras; and

(*b*) if so, the results thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) No research work has been done by the Irrigation Research Station, Poondi, to devise ways and means to keep the Buckingham Canal open towards the sea; but studies are being conducted in the Research Station to keep the mouth of that portion of the Cooum river in the Madras City (which links the North and South Buckingham Canals) open towards the sea.

SRI K. SATTANATHA KARAYALAR: ஸார், இவர்கள் ஆராய்ச்சி (ஸ்டடி செய்து) செய்ததின் முடிவு என்ன? முடிவு ஏற்படவில்லையென்றால் இப்போது எந்த நிலையில் இருக்கிறது?



12th March 1960]

கழிந்த இரண்டு ஆண்டுகளாக இவர்கள் செய்கின்ற ஆராய்ச்சி இன்னும் முடியவில்லையா? இல்லையென்றால் அதற்கு காரணம் என்ன?

THE HON. SRI P. KAKKAN: இன்னும் இறுதியான முடிவு வரவில்லை.

SRI A. VEDARATHNAM: ஸென்ட்ரல் வாட்டர் வே கமிஷன் இந்த பக்கீம்காம் கனாலுக்கு விமோசனம் ஏற்பட ஏதாவது வழி கூறியிருக்கிறார்களா? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

THE HON. SRI P. KAKKAN: இதற்கு தனியான கேள்வி போடவேண்டும்.

*Scholarships to Backward Communities*

* 324 *Q.*—SRI N. R. THIAGARAJAN: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1958-ல் மத்திய சர்க்கார் பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு கொடுத்த ஸ்காலர்ஷிப்புகளை எத்தனை பேருக்கு கொடுக்காமல் நிறுத்தியது? அதற்குக் காரணம் என்ன?

(ஆ) மத்திய சர்க்கார் கொடுக்காமல் நிறுத்தியவர்களுக்கு மாகாண சர்க்கார் கொடுத்தார்களா?

(இ) தற்போது மத்திய ஸ்காலர்ஷிப் தொகையை மொத்தமாக மாகாண சர்க்காரிடம் கொடுத்து விடுகிறதா?

(ஈ) அந்தத் தொகையை எப்படி விநியோகிக்க உத்தேசம்?

THE HON. SRI P. KAKKAN (*a*) The Government of India did not renew the scholarships in respect of 82 Backward Class students belonging to this State during 1957–58 as they treated the applications of these students as applications for fresh awards.

(*b*) No, Sir.

(*c*) Yes, Sir.

(*d*) The Government of India have prescribed certain regulations for the award of their scholarships. The scholarships are being sanctioned by the Director of Harijan Welfare according to these regulations. A statement explaining these regulations has been placed on the table of the House on 12th September 1959.

SRI N. R. THIAGARAJAN: மத்திய சர்க்கார் கொடுப்பதற்கும் மாகாண சர்க்கார் ஸ்கார்லர்ஷிப் கொடுப்பதற்கும் தனித்தனியாக அப்ளிகேஷன் போடவேண்டியிருக்கிறது. அதோடு ஸென்ட்ரல் என்றால் 360 மார்க் எடுக்கவேண்டும் என்றும் வேறு பல வேறுபாடுகளும் வைக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து ஒரே முறையில் ஏற்படுத்தி மத்திய சர்க்காரிடமிருந்து ஸ்காலர்ஷிப்பை வாங்கி இந்தச் சர்க்காரே வாங்கி விநியோகிக்க முன் வருமா?

THE HON. SRI P. KAKKAN: எல்லாவற்றிற்கும் அப்ளிக்கேஷன் இங்கு தான் போடவேண்டும். ஆனால் மத்திய சர்க்கார் சில கன்டிஷன்கள் கொடுத்திருக்கிறார்கள். அதன்படி தான் போட இயலும்.

SRIMATHI KOLANTHAI AMMAL: இவ்விதம் ஸ்காலர்ஷிப் கொடுப்பதில் பெண்களுக்கு என்று தனியாக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? ஆண் மாணவர்களைவிட அதிக மார்க் வாங்கியிருக்கும் பெண் மாணவர்களுக்கு அதிக சலுகை கொடுப்பதற்கு உத்தேசம் உண்டா?

THE HON. SRI P. KAKKAN: கொடுக்கின்ற மொத்த ஸ்காலர்ஷிப்பில் 25 சத விகிதம் மாணவிகளுக்கு, அதாவது பெண்களுக்கு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான மாணவிகள் இல்லாவிட்டால் மாணவர்களுக்குத் தான் கொடுக்கவேண்டியிருக்கிறது. மேலும் மாணவர்கள் வாங்கும் மார்க்குகளை விட ஐந்து சதமானம் குறைவாக இருந்தாலும் மாணவிகளுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது.

9.00 a.m. SRI A. GOVINDASAMY: ஸார், மத்திய அரசாங்கம் இந்த உபகாரச் சம்பளம் வழங்கி வந்தபோது பின்தங்கிய மாணவர்கள் 60 சதவீதம் மார்க் வாங்கியவர்களுக்கு வழங்கி வந்தார்கள். இப்போது ராஜ்ய சர்க்கார் வழங்கும்போது 70 சதவீதம் வாங்கவேண்டுமென்று வற்புறுத்துவது உண்மையா? அப்படியானால் 60 சதவீதமாக மீண்டும் செய்வதற்கு அரசாங்கம் உத்திரவு பிறப்பிக்குமா?

THE HON. SRI P. KAKKAN: 60 மார்க்குகள் யார் எடுக்கிறார்களோ அத்தகைய பின்தங்கிய மாணவர்களும் உண்டு. மாணவர்கள் அதிகம் இருந்தால் மேலேயிருந்து மார்க்குகளை பார்த்து ஸ்காலர்ஷிப் கொடுத்துவந்தார்கள். ஆனால் 60-க்கு மேல் இருக்கக்கூடியவர்களைப் பார்த்து எல்லோருக்கும் கொடுக்கவேண்டும் என்பதுதான் கருத்து.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR: ஸார், மத்திய அரசாங்கம் கொடுத்துவந்த ஸ்காலர்ஷிப்பில் முதல் ஒரு வருஷம் கொடுத்து அடுத்த வருஷம் நிறுத்தப்பட்டு புகார் செய்யப்பட்டிருக்கிறது. இப்போது சென்னை அரசாங்கத்திடம் பணத்தைக் கொடுத்திருப்பதால், மீண்டும் அந்தமாதிரி தவறி விட்ட மாணவர்களுக்குக் கொடுக்க உத்தேசித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI P. KAKKAN: மத்திய அரசாங்கம் renewal scholarship கொடுக்காவிட்டால் இந்த அரசாங்கம் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது.



SRI K. SATTANATHA KARAYALAR: ஸார், மத்திய சர்க்கார் ஸ்காலர்ஷிப் கொடுக்கக் கூடியதில் விதித்திருக்கிற "கண்டிஷன்"-ல், குறைந்தது 70 சதவிகிதம் இருக்க வேண்டும் என்று நமது ராஜ்யத்திலுள்ள மாணவர்களுக்கு விதித்து விட்டு, இதர மாகாணங்களில் இந்த கண்டிஷனுக்குக் குறைந்த மார்க் வாங்குகிறவர்களுக்குக் கொடுத்திருப்பது சர்க்காருக்குத் தெரியுமா? அதைப்பற்றி இந்த சர்க்கார் மத்திய சர்க்காருக்கு ஏதாவது எழுதியிருக்கிறதா?

THE HON. SRI P. KAKKAN: பின்தங்கிய மாணவர்கள் 60 சத விகிதம் மார்க்குகள் எடுக்கவேண்டும் என்று இருக்கிறது. இதர மாகாணங்களைப் பற்றி எனக்குத் தெரியாது.

SRI P. G. MANICKAM: ஸார், இதற்கான அப்ளிகேஷன் பாரங்கள் தயாரிக்கப்பட்டு இருக்கிறதா? தயாரிக்கப்பட்டிருந்தால் ராஜ்ய சர்க்காரால் வெளியிடப்பட்டிருக்கிற அப்ளிகேஷன் போன்றவாறு இருக்குமா? அல்லது இந்திய சர்க்கார் அப்ளிகேஷன் பாரம் போன்று இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: இந்திய சர்க்கார் எவ்வாறு தயாரித்துள்ளதோ அதேமாதிரி தயாரித்துக் கொடுக்கப்படும்.

SRI T. S. RAMASWAMI: May I know whether all the Backward Communities included in the Central List will be included in the State List also? Now they are different. May I also know whether all the communities benefited by the Central Government scholarship will continue to be benefited by the State Government scholarship also?

THE HON. SRI P. KAKKAN: மத்திய சர்க்காரில் அங்கீகரிக்கப்பட்ட பின்தங்கிய வகுப்பினர் இங்கே இருந்தால் அவர்களுக்கு கொடுக்கப்படும்.

SRI T. KARIA GOUNDER: தலைவர் அவர்களே, பொருளாதாரத் துறையில் பின்தங்கியவர்களுக்கு இந்த ஸ்காலர்ஷிப் கொடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா? கனம் நிதி அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு மதுரையில் பொருளாதாரத் துறையில் பின்தங்கியவர்களுக்கு கொடுக்கப்படும் என்று சொன்னதை அமுலுக்குக் கொண்டுவருவார்களா?

(பதில் இல்லை)

*Orphanages*

*325 Q.—SRI A. VEDARATHNAM: கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் ஆலய நிதியிலிருந்து அனாதை குழந்தைகள் பராமரிப்பு எங்கெங்கே நடைபெறுகின்றன?

(ஆ) அவை ஒவ்வொன்றிலும் எத்தனை குழந்தைகள் பராமரிக்கப்படுகின்றன?

[12th March 1960

(இ) இதை மேலும் விஸ்தரிக்க உத்தேசம் உண்டா?
(ஈ) அப்படியானால் அதன் விவரம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) The names of the orphanages and the number of orphans in each orphanage are :—

| | |
|---|---|
| 1. Orphanage run by Sri Kapaleswarar temple, Mylapore, Madras-4 ... ... ... ... ... ... | 24 |
| 2. Dharmapuram Adheenam Devasthanam, Hindu Orphanage, Vaitheeswarankoil, Sirkali Taluk, Tanjore District ... ... ... ... ... ... | 37 |
| 3. Hindu Orphanage, Nachiarkoil, attached to Sri Srinivasaperumal temple, Nachiarkoil, Kumbakonam Taluk, Tanjore District ... ... ... ... | 19 |
| 4. Sri Singaravelavar Hindu Orphanage, Sikkil, attached to Sri Navaneethakrishnaswamy temple, Sikkil, Tanjore District ... ... ... | 14 |
| 5. Poor Home run by Sri Dhandayuthapaniswamy temple, Palni, Madurai District ... ... | 23 |
| 6. Sri Meenakshi Orphanage, Kallupatti, attached to Sri Meenakshisundareswarar temple, Madurai ... ... ... ... ... ... ... | 16 |
| 7. Swami Nellaiappar Anbu Ashramam, Palamcottah, attached to Sri Swami Nellaiappar temple, Tirunelveli ... ... ... ... ... | 90 |
| 8. Senthil Murugan Siruvar Illam, attached to Sri Subramaniaswamy temple, Tiruchendur ... | 20 |

(c) No, Sir.

(d) Does not arise.

SRI A. VEDARATHNAM: ஹிந்து அனாதைக் குழந்தைகள் அரசாங்க உதவி பெற்று நடக்கும் இதர மத ஸ்தாபனங்களின் மூலம் மத மாற்றத்திற்கு இரையாவதைத் தடுக்க, அரசாங்க உதவி, அற நிலைய நிதி இவைகளைச் சேர்த்து அனாதை ஆசிரமங்களை அதிகரிக்க சர்க்கார் முன் வருமா? அப்படி யோசனை ஏதேனும் உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்தப் பிரச்னையில் மத மாற்ற விஷயம் வரவில்லை. ஆனால், மேலும் இம்மாதிரி அனாதை இல்லங்களை அதிகரிப்பதைப் பற்றி அற நிலயங்களைப் பற்றிய ஆலோசனைக் குழுவில் பரிசீலனை செய்யப்பட்டது. இப்போது நடைபெறுகிற அனாதை இல்லங்கள் எவ்வாறு நடைபெறுகின்றன, என்னென்ன திருத்தங்கள் வேண்டும் என்று பார்த்து, அதற்குப் பிறகு விஸ்தரிப்பதை எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அது பரிசீலனையில் இருந்து வருகிறது.



12th March 1960]

SRI A. GOVINDASAMY: அனாதைக் குழந்தைகளை இல்லங்களில் சேர்க்கும் விஷயத்தில் மதத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் அவர்கள் அனாதையாக இருப்பதை அடிப்படையாக வைத்து அவர்களைச் சேர்த்துக்கொள்ள ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சமீபத்தில் இந்த மன்றம் நிகழ்த்திய அற நிலையப் பாதுகாப்புச் சட்டத்தின்படிதான் இதெல்லாம் கவனிக்கப்படும். அந்தச் சட்டத்தின் பிரிவுகளை கனம் அங்கத்தினர் அவர்கள் கவனித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI S. LAZAR: மதம் மாறினால் மத ஸ்தாபனங்கள் அள்ளி அள்ளிக் கொடுக்கிறார்கள் என்று தவறான கருத்து கொண்டு மதம் மாறிய பிறகு சலுகைகள் இல்லை என்று தெரிந்து வெளியே வந்து பலவாறாகத் தூற்றுகிறார்கள் என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு அடிக்கடி கொண்டுவரப்பட்டிருக்கிறதா? அப்படி தூற்றுபவர்களுக்கு இந்த அரசாங்கம் என்ன தண்டனை கொடுக்க முற்படும் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அடிக்கடி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது என்று சொல்வது சரியாகாது, இருந்தாலும் இதைப்பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குத் தகவல் வந்துதான் இருக்கிறது.

SRI T. S. RAMASWAMI: In the list read out by the Hon. Minister, one orphanage at Nagerkoil has been left out. On another occasion when a question about it was put on the floor of the House, the Hon. Minister said that that orphanage was not closed but it was being transferred. May I know whether that orphanage at Nagerkoil run with the Devaswom funds of the temples of the locality is still functioning or has it been closed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I would like to have notice.

SRI K. B. S. MANI: இந்த மடாலயங்களினால் நடத்தப்பட்டு வரும் அனாதை விடுதிகளைக் கண்காணிக்க அரசாங்கத்தினால் தனிப்பட்ட உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? உண்மையில் அனாதைக் குழந்தைகள்தான் இருக்கிறார்களா அல்லது மற்றைய நிர்வாகத்திலுள்ளவர்களின் குழந்தைகள் இருக்கிறார்களா என்று பரிசீலிக்கப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதைப்பற்றியெல்லாம் மேற்பார்வை பார்க்க தனியாக அதிகாரிகள் யாரும் நியமிக்கப்படவில்லை. இதிலே ஏதாவது குறைபாடுகள் இருந்தால் கனம் அங்கத்தினர் கவனத்திற்கு வந்தால் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[12th March 1960

SRI P. S. SANTHANAM: ஆலய நிதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருக்கிற அனாதைப் பள்ளிகளில் ஆதித்திராவிடர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா? அப்படி இல்லையென்றால் சேர்த்துக் கொள்ள உத்திரவு பிறப்பிக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஆதித்திராவிடர்கள் சேரக்கூடாது என்று விலக்கு ஒன்றும் இல்லை.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR: இந்த ஆலய நிதியிலிருந்து நடத்தப்படும் அனாதை விடுதிகளுக்கு மத்திய அரசாங்கம் நிதி உதவி கொடுக்கிறதா? ராஜ்ய சர்க்கார் நிதி உதவி கொடுக்கிறதா? அல்லது தனியாக ஆலய நிதியிலிருந்து மாத்திரம் நடத்தப்படுகிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்த அனாதை இல்லங்களைப் பொறுத்தமட்டில் ஆலய நிதியிலிருந்து மட்டும் நடத்தப்பட்டு வருகின்றன.

*Rise in the prices of electric goods*

* 326 *Q.*—SRI S. M. ANNAMALAI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the rise in the prices of electric motors, starters, switches and other electrical goods; and

(*b*) if so, the action taken to reduce the prices?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes, Sir. Enquiries show that the prices of electrical equipments were normal till the year 1955 and that they began to rise from January 1956.

(*b*) Recent reports show that the supply position of electric motors, etc., has eased. The prices of the indigenous makes are reported to be considerably higher than the foreign makes as in the case of most of the other electrical equipments. There has been no increase in the prices of indigenous makes during the recent months.

SRI S. M. ANNAMALAI: ஸார், ஒரே மோட்டாரின் விலை ஒரு கடையில் ஒரு விலையாகவும், மற்றொரு கடையில் 50 அல்லது 100 ரூபாய் அதிகமாகவும் வித்தியாசம் இருக்கிறது. இப்போது பம்பாயில் இப்படிப்பட்ட சாமான்கள் சம்பந்தமாக விலைகளின் பட்டியலைத் தொங்க விடவேண்டுமென்று செய்திருக்கிறார்கள். இங்கேயும் இப்படிப்பட்ட பட்டியல் தொங்கவிடவேண்டுமென்று சர்க்கார் உத்திரவு போடுவார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN: ஒரு கடையில் 50 ரூபாய் குறைவாக இருந்தால் நிச்சயமாக எல்லோரும் அங்கேதான் போய் வாங்கிக்கொள்வார்கள். பட்டியல் தொங்கவிடவேண்டுமென்றால் விலை நிர்ணயம் செய்தால்தான் செய்ய முடியும். பம்பாயில் என்ன நடக்கிறது என்று எனக்குத் தெரியாது. இதைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் எழுதி அனுப்பினால் பரிசீலனை செய்யச் சொல்லுகிறேன்.



12th March 1960]

SRI S. NAGARAJA MONIGAR: இந்த நிலைமை தற்போது சற்று சீர்பட்டு வருகிறது என்று கனம் அமைச்சர் கூறினார். அப்படியானால் அது அவ்வாறு சீர்பட்டு வருவதற்கு காரணம் என்ன? இந்தச் சாமான்கள் இங்கேயே அதிகமாகத் தயாரிக்கப்படுகிற காரணத்தினாலா அது சீர்பட்டு வருகிறது? அப்படியானால், அந்த பாக்டரிகள் யாவை? சமீபத்தில் எங்கெங்கு அவை ஆரம்பிக்கப்பட்டன?

THE HON. SRI R. VENKATARAMAN: இன்றைக்கு நமது ராஜ்யத்தில் ஸ்டார்டர்ஸ், ஸ்விச்செஸ் முதலியவை ஓரளவு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை முக்கியமாக கோவை ஜில்லாவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதுவுமல்லாமல் நம் நாட்டில் இவைகளில் லைஸென்ஸ் கெபாஸிடியை அதிகரித்திருக்கிறார்கள். அந்தக் காரணத்தாலும் இன்னும் பாக்டரிகள் புதிதாக வர ஆரம்பித்திருக்கின்றன.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: இந்தச் சாமான்களின் விலை குறைந்திருப்பதாக கனம் அமைச்சர் சொன்னார். அது அவ்வளவு சரியல்ல. சென்ற இரண்டு வருஷங்களில் இருந்த விலையையும் இப்போது இருக்கும் விலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இவைகளின் விலை அதிகரித்துக்கொண்டே வருவது தெரியும். தவிரவும், மத்திய சர்க்கார் பல பொருள்களுக்கு 15 சத விகிதம் வரி போட்டிருக்கிறார்கள். எது எப்படி இருந்தாலும், விவசாயிகள் உபயோகப்படுத்தும் இந்த மோட்டார் ஸெட்டுகளுக்குச் சலுகை கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN: நான் பதிலளிக்கையில், விலை குறைந்துவிட்டது என்று சொல்லவில்லை. 'the supply position of electric motors has eased' என்றுதான் சொன்னேன். இப்போது அவை அதிகமாகக் கிடைக்கின்றன என்றுதான் சொன்னேன். விலையைக் கட்டுப்படுத்துவது வேறு விஷயம். அது இந்த சர்க்கார் செய்யக்கூடிய காரியம் அல்ல. அதற்கு மத்திய சர்க்கார்தான் முயற்சி செய்யவேண்டும்.

*Moral and spiritual education in schools and colleges*

* 327 *Q.*—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal before the Government to set up a committee to make recommendations to the Government on the ways and means of imparting moral and spiritual education in schools and colleges?

THE HON. SRI C. SUBRAMANIAM: The Government have appointed a committee for examining the question of provision of religious and moral instruction in educational institutions. The committee's report is awaited.

SRI S. LAZAR: May I know the names of the members of the committee and may I also know when this committee is supposed to commence its sittings and submit its report?

[12th March 1960

THE HON. SRI C. SUBRAMANIAM: The names of the members of the committee are as follows :—

1. Dr. A. L. Mudaliar, Chairman.
2. Sri Swami Chitbavananda.
3. Sri Lawrence Sundaram, Principal, Loyola College.
4. Srimathi Rukmani Devi.
5. Sri V. R. Ranganatha Mudaliar.
6. Sri K. Kurivalla Jacob.
7. Sri A. W. Bokhari.
8. Sri K. Balasubramania Ayyar.

The Committee held its first meeting on 15th June 1959.

SRI T. T. DANIEL : May I know whether the Central Government have sent a communication to our Government to evolve a particular form of prayer which may be acceptable to members of all religion and which may be followed in every school and college?

THE HON. SRI C. SUBRAMANIAM : My recollection is that the Central Government have suggested a silent form of prayer at the beginning of the session of every school. But meanwhile I am sure hon. Members are aware that the Government of India appointed a committee to consider the same subject-matter under the chairmanship of our ex-Governor, Shri Sri Prakasa. That Committee has already submitted its report. A copy of the same has been forwarded to this Government.

SRI A. A. RASHEED : Is it a fact that indiscipline amongst students in schools and colleges is due to lack of moral education?

MR. SPEAKER : I am afraid the hon. Member is going beyond the scope of the original question.

SRI K. ANBAZHAGAN: ஒழுக்க போதனைக்குரிய நூல்கள் தமிழில் ஏராளமாக இருக்கின்றன. திருக்குறளும், அதுபோன்ற வேறு நூல்களும் தமிழில் இருக்கும்போது இந்தக் குழுவில் தமிழ்ப் பேராசிரியரோ தமிழ் அறிஞரோ எவரும் சேர்க்கப் படவில்லையே ஏன்? ஒழுக்க போதனையை வேறு மொழியிலிருந்து கொண்டுவருவது நோக்கமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: தமிழ் மொழிக்கும் இதற்கும் ஒன்றும் சம்பந்தம் இல்லை. எல்லா மதத்தினரும் ஒப்புக்கொள்ளக்கூடிய முறையில் ஒரு திட்டத்தை வகுக்க வேண்டும் என்பது எங்கள் நோக்கம். ஆகையால்தான் இதில் எல்லா மதங்களின் பிரதிநிதிகளையும் சேர்த்துக்கொண்டு, கான்ஸ்டிட்யூஷனுக்குப் புறம்பாக இல்லாத முறையில் ஒரு திட்டத்தை வகுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தமிழுக்கும் இதற்கும் ஒரு போட்டியை ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.



12th March 1960]

*Copper ore at Veppur*

*328 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு ஜில்லா வெப்பூரிலும், திருச்சிராப்பள்ளி ஜில்லா ஒலபாடியிலும், செம்புக்கனி எடுப்பதுப்பற்றி நிபுணர்களால் ஏதாவது பரிசோதனை நடத்தப்பட்டதா?

(ஆ) அவ்வாறு பரிசோதனை நடத்தப்பட்டிருப்பின் விவரங்கள் யாவை?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Preliminary investigation on the occurrence of copper in Kallakurichi taluk in South Arcot district only has been made by the Geological Survey of India. No recent investigation has been made in respect of copper ore in Tiruchirappalli district.

(*b*) Sulphide mineralization has been found in some places. The Geological Survey of India has proposed to conduct a detailed investigation of the occurrence of copper ore in South Arcot district with a view to assess the economic possibilities.

*Foodgrains*

MR. SPEAKER : I think questions 329, 330, 331 and 332 may be taken up together. They all relate to foodgrains.

*329 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to fix floor price of paddy and grains?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

*330 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any decisions have been taken in December 1959 to create buffer stock of rice in the State: and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No decision was taken in December 1959 regarding the creation of buffer stock of rice in the State.

(*b*) Does not arise in view of answer to clause (*a*).

*331 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government propose to procure samba rice during the next harvest;

(*b*) if so, the quantity to be procured; and

(*c*) the reason for such procurement?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) & (*c*) Do not arise in view of answer to clause (*a*).

[12th March 1960

* 332 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state the reasons for the decision to close down Fair Price Shops in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It has been proposed to close down the Fair Price Shops as the price of rice in the open market has fallen and rice is available in the open market at comparable prices.

SRI N. K. PALANISAMI : கண்ட்ரோலை எடுத்த பிறகு ஒரு வாரத்திற்குள்ளாக மறு-படியும் விலை ஏறியிருக்கிறது. விலை மறுபடியும் அதிகமாகி ஒருவேளை நியாயவிலைக் கடைகளை மறுபடியும் திறக்க வேண்டும் என்ற எண்ணம் சர்க்காருக்கு ஏற்பட்டால் அப்போது போதுமான ஸ்டாக்குகள் எப்படிக் கிடைக்கும். மத்திய சர்க்காரிடமிருந்து ஏதாவது உத்தரவாதம் கிடைத்திருக்கிறதா ? அப்படியானால் ஏன் "பஃபர் ஸ்டாக்" வைத்திருக்கவில்லை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது அரிசியின் விலையும் நெல்லின் விலையும் ஏறுவதும் இறங்குவதுமாக இருக்கின்றன. இந்த விலைகளை போன வருஷ விலைகளோடு ஒப்பிட்டுப்பார்த்தால், இவை அவைகளை விடக் குறைவாக இருக்கின்றன என்றுதான் சொல்லவேண்டும். இருந்தாலும், இப்போது நியாயவிலைக் கடைகள் வைக்கவேண்டிய அவசியம் இல்லை என்றுதான் அரசாங்கம் கருதுகிறது. அரசாங்கம் பிப்பிரவரி மாதம் கடைசிவரை நியாயவிலைக் கடைகளை வைத்திருந்தது. இப்போதும் கூட கோவை போன்ற சில முனிசிபல் நகரங்களிலும், இன்னும் சில இடங்களிலும் சில நியாயவிலைக் கடைகள் வைக்கப்பட்டுத்தான் இருக்கின்றன. எப்போது விலை அதிகமாகி நியாயவிலைக் கடைகள் வைக்கவேண்டிய நிமித்தம் ஏற்படுகிறதோ அப்போது அதற்கு வேண்டிய ஸ்டாக் வைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that though rice is easily available still the price is high for the low income group in our State, Sir?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : That is so. Prices are no doubt high. I may tell the hon. Member that in several of the districts particularly in Coimbatore which I visited recently the Collector there told me that there was no offtake so far as boiled rice was concerned though the same was available in fair price shops. Therefore I may tell the hon. Member that there is no need, in spite of high prices, for fair price shops to continue just at present.

SRI K. ANBAZHAGAN : சென்னை நகரத்தில் கடந்த ஒரு வார காலத்தில் அரிசியின் விலை ஏற்றமுள்ளதாக இருப்பதாக வணிகர்கள் அறிவிக்கிற காரணத்தால் அரசாங்கத்தின்



12th March 1960]

கையிருப்பிலுள்ள பர்மா அரிசியையாவது—அதை முன்பு படி 12 அணா வீதம் கொடுத்து வந்ததுபோன்று—விற்கும்படி சிறு வியாபாரிகளுக்கு அளிக்க அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வியாபாரிகளுக்கு பர்மா அரிசி கொடுத்தால், அது அவர்களுக்கு நல்ல லாபகரமானதுதான், ஆனால் பர்மா அரிசி அதிகமாக இல்லை. பர்மா அரிசியை யாரும், ரொம்பப் பணக்காரர்களாக இருப்பவர்கள் கூட, வாங்கத் தயாராயிருக்கிறார்கள். அதன் விலை அவ்வளவு குறைவாக இருக்கிறது. ஆனால் அது ஸ்டாக் ரொம்பக் குறைவாக இருக்கிறது. இருக்கிற ஸ்டாக்கை எங்கெங்கு நியாய விலைக் கடைகள் மூலம் கொடுக்க வேண்டுமோ அங்கங்கு அதைக் கொடுப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தும்.

SRI N. K. PALANISAMI : உணவுப் பொருள்களின் விலையை நிர்ணயிப்பதற்காக மத்திய சர்க்கார் ஒரு கமிட்டியை அமைத்தார்கள். விலை நிர்ணயம் சம்பந்தமாக அந்தக் கமிட்டியிலிருந்து இந்த சர்க்காருக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி இந்த அரசாங்கத்திற்கு இதுவரையிலும் ஒரு தகவலும் வரவில்லை:

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : சேலம் ஜில்லாவில் நீண்டநாட்களாகவே, இரண்டு, மூன்று ஆண்டுகளாகவே பருவமழை இல்லாததால் அது பஞ்சப் பிரதேசமாக இருக்கிறது. மேலும் அங்கே நெசவாளர்களும் விவசாயத் தொழிலாளர்களும் அதிகமாக இருக்கிறார்கள். இக்காரணங்களினால், அங்கே நியாய விலைக் கடைகளைத் தொடர்ந்து வைத்திருக்க அரசாங்கம் உத்தேசிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சேலம் ஜில்லாவில் நிலைமை, கனம் அங்கத்தினர் சொல்வது போல அவ்வளவு மோசமாக இல்லை. இப்போது அங்கே நியாயவிலைக் கடைகளைத் தொடர்ந்து நடத்தவேண்டிய அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது. நியாயவிலைக் கடைகளை அங்கே எப்போது நடத்த வேண்டியது அவசியம் என்று அரசாங்கம் கருதுமோ அப்போது அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யும்.

SRI A. A. RASHEED : Is it a fact that fair price shops have been closed in all districts except Coimbatore or do they still continue?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Except in a few municipal areas, fair price shops have been closed from the end of February.

SRI K. ANBAZHAGAN : அண்மையில் நியாய விலைக் கடைகள் மூடப்பட்ட காரணத்தால் அரிசியின் விலை ஏறுகிறது என்பது முழு உண்மை. இந்நிலையில் அரசாங்கம் தன்

[12th March 1960

கையிருப்பிலுள்ள அரிசியைக் கூட வினியோகிக்காததால், அரிசியின் விலை ஏற்றத்திற்குத் துணைபுரிய வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அவ்வாறு ஒன்றும் இல்லை. அவ்வாறு ஒன்றும் அரசாங்கம் கருதவில்லை.

SRI V. K. KOTHANDARAMAN: வட ஆற்காடு ஜில்லாவில் பல இடங்களில் அறுவடையாகக்கூடிய இந்தக் காலத்தில் சென்ற வாரத்தில் படி 1 ரூபாய் 2 அணா வீதம் நானே ஒரு மூட்டை அரிசி வாங்கினேன். இப்போது வெயில் காலம், அங்கே மழை இல்லை, விவசாயத்திற்கும் தண்ணீர் இல்லை, குடிப்பதற்கும் தண்ணீர் இல்லை. இன்னும் என்ன ஏற்படும் என்று சொல்ல முடியாது. ஆகவே தயவுசெய்து உடனடியாக நியாய விலைக் கடைகளைத் திறக்க சர்க்கார் முயற்சிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினருக்குக் கொஞ்சம் பண சௌகரியம் இருக்கலாம். அதன் காரணமாக அவர் படி 1 ரூபாய் 2 அணா வீதம் அரிசி வாங்கக் கூடும். ஆனால் நாங்கள் படி 14 அணா வீதமே அரிசி கொடுத்து வந்தோம். வேண்டியவர்கள் அதை வாங்கினார்கள். அதற்குப் பிறகு, அந்த அரிசி கேட்பாரற்ற நிலைமை ஏற்பட்டபோது நியாய விலைக் கடைகளை மூடினோம். எப்போது அரிசியின் விலை அதிகமாகி ஏழை மக்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டிய அவசியம் ஏற்படுமோ அப்போது அரசாங்கம் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

SRI S. LAZAR: Sir, is it not a fact that, the moment the Government decided to relax all controls relating to foodgrains and also decided to close down the fair price shops, the prices came down very fast, and is it not also a fact that the soaring price is mainly due to the feeling that is being spread amongst the people that there is going to be scarcity of foodgrains? Therefore, will the Government see that such a wrong notion does not enter into the minds of the people?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I do not think there is any justification for the feeling that there would be scarcity of foodgrains. Of course, it is quite clear to people that there is no question of scarcity at all.

SRI S. M. ANNAMALAI: ஸார், அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது சென்ற ஆண்டு விலையை விட இந்த ஆண்டு விலை குறைந்திருக்கிறதென்று சொன்னார்கள். சென்ற ஆண்டு இதே காலத்தில் அரிசியின் விலை என்ன? இந்த ஆண்டு விலை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சென்ற ஆண்டு அரசாங்கம் கொள்முதல் தொடங்கி நடத்தி வந்தது. அப்பொழுது விலை அதிகமாக இருந்தது. புள்ளி விவரங்கள் வேண்டுமானால் தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்லுகிறேன்.



12th March 1960]

SRI V. SANKARAN: மத்திய சர்க்காருடன் ஸோனல் சிஸ்டம் சம்பந்தமாகப் பேச்சு வார்த்தை நடத்தியபோது இனிமேல் நியாய விலைக்கடைகள் தேவைப்படும்போது மத்திய சர்க்காரே தேவைப்படும் அரிசியை நேரடியாகவே சப்ளை செய்வதாக வாக்களித்தார்கள் அல்லவா? அப்படியிருந்தால் இனி நியாய விலைக் கடைகள் தேவைப்பட்டாலும் கொள்முதல் செய்யவேண்டிய அவசியம் இருக்காது அல்லவா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கொள்முதல் செய்ய வேண்டியதில்லை என்று உறுதி கூற முடியாது. அவசியம் ஏற்படும்போது மத்திய அரசாங்கத்திடமிருந்து வாங்குவது பற்றி யோசிக்கப்படும்.

SRI K. R. VISWANATHAN: நியாய விலைக் கடைகளை எடுத்துவிட்ட பிறகு குறைந்த விலையில் அனாதை இல்லங்கள் முதலிய ஏழைக் குழந்தைகளைப் பராமரிக்கும் ஸ்தாபனங்களுக்கு அரிசி கிடைப்பது கஷ்டமாக இருப்பதால், பர்மா அரிசியை அனாதை இல்லங்களுக்குக் கொடுக்கும்படி கலெக்டர் அவர்களுக்கு அரசாங்கம் உத்தரவு இடுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பர்மா அரிசி எவ்வளவு கையிருப்பு இருக்கிறதென்ற தகவல் இல்லை. போதிய அரிசி இருந்தால் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது போல் அனாதை இல்லங்களுக்குக் குறைந்த விலைக்குக் கொடுக்க முடியுமா என்பதைப் பரிசீலனை செய்கிறேன்.

SRI A. MARIAPPAN: நியாய விலைக் கடைகளை மூடியதால் அரிசி விலை சேலம் நகரத்தில் கூடியிருக்கிறது என்பது தெரியுமா? மொத்த விற்பனை பண்டகசாலையில் உள்ள ஸ்டாக் கெட்டுப்போகும் நிலைமையில் இருப்பதால் சேலம் நகரத்தில் நியாய விலைக்கடைகளைத் திறக்க உத்தேசமிருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இப்போது சேலம் நகரத்தில் புதிதாக நியாய விலைக் கடைகளைத் திறக்க உத்தேசமில்லை.

SRI T. T. DANIEL: May I know, Sir, whether the Government have reasonable grounds to believe that the price of rice will go down to twelve annas per Madras measure or that at least it will not go beyond fourteen annas after closing down the fair price shops?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I am sorry I cannot give any such forecast.

SRI A. GOVINDASAMY: அரிசி விலை குறைந்துவிட்டதன் காரணமாக நியாய விலைக் கடைகள் அவசியமில்லையென்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் முன்பு 15 அணாவுக்கு விற்ற அரிசி ஒரு ரூபாய் என்றும், 1 ரூபாய் விற்ற அரிசி 1 ரூபாய் 2 அணா என்றும் விற்கப்படுகிறது என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ?

[12th March 1960

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பர்மா பச்சரியைப் பொறுத்தமட்டில் 12 அணுவுக்குக் கிடைத்துக் கொண்டிருந்தது. அந்த அரிசி இப்போது நம்மிடத்தில் கையிருப்பு இல்லை. கையிருப்பு இருந்தால் நிவாரணம் அளிக்கலாம். அவ்வளவு அதிகமாக இல்லை. இப்போது மீண்டும் மத்திய அரசாங்கத்திடம் பேசி அதை விநியோகிக்கலாம் என்றாலும் தற்போது அதற்கு அவசியமில்லையென்று கருதுகிறேன். புழுங்கல் அரிசியைத் தான் ஏழை மக்கள் நகரங்களிலும், கிராமங்களிலும் சாப்பிடுகிறார்கள். அரசாங்கம் இதுவரை நியாய விலைக் கடைகளில் விற்று வந்த அரிசி தேவையில்லை என்று புலப்படுகிறது.

SRI N. R. THIAGARAJAN: ரேஷன், ப்ரொக்யூர்மெண்ட் என்று வந்த உடனே, கால் சோம்பேறிகளும், அரைச் சோம்பேறிகளும் ரேஷன் ஒழிக ஆறு அவுன்ஸ் ஒழிக என்று கூச்சல் போடுகிறார்கள். இவர்களை சோம்பேறிகளாக ஆக்கும் வகையில் அரசாங்கம் கொள்முதல் விநியோகம் செய்யாமல் இருக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கொள்முதல் தேவைப்பட்டால் செய்யவேண்டியதுதான். கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது பழங்கதை.

SRI K. SATTANATHA KARAYALAR: அறுவடை சந்தர்ப்பத்திலே பெரும் அளவில் வியாபாரிகள் வாங்கி பதுக்கல் செய்வதைக் கண்காணிக்க ஏதாவது ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: வியாபாரிகள் பெருவாரியாகப் பதுக்குவதாகத் தகவல் வந்தால் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

SRI K. ANBAZHAGAN: அரசாங்கத்திலே அரிசியும் வேறு பல உணவுப் பொருள்களும் மீதம் வைக்கப்படுகிற காரணத்தினால் பின்னர் பழுதாகி, கெட்டுப் போனவுடன் ஏலத்தில் விடும் நிலைமை ஏற்படுகிறது. ஏலம் விடும் நிலைமைக்குக் கொண்டு போகாமல் பொதுமக்களுக்குக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அப்படிக் கெட்டுப் போகும் அளவுக்கு அரசாங்கத்திடம் ஸ்டாக் இல்லை. பர்மா அரிசியை வியாபாரிகளுக்குக் கொடுக்காததன் காரணமாக அவர்கள் லாபம் அடைய முடியவில்லை என்ற காரணத்திற்காக அவர்கள் கூறுவதை மனதிலே வைத்துக்கொண்டு அங்கத்தினர் அவர்கள் சொல்லுகிறார்கள்.

SRI N. K. PALANISAMI: நேற்றையதினம் இந்து பத்திரிகையைப் பார்த்தால் இந்த விலை 501 புள்ளியாக இருந்தது. ஒரே வாரத்தில் 510 புள்ளியாக உயர்ந்திருக்கிறது. இந்த மாதிரி விலைவாசி ஏறிக்கொண்டே போவதைத் தடுக்க சர்க்காரிடம் என்ன திட்டம் இருக்கிறது?



12th March 1960]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பொதுவான பிரச்னை விலைவாசி ஏற்றம். அதை இந்த உப கேள்விக்கு விடையளிப்பதால் பதில் சொல்ல முடியாது.

*Legal assistance to the poor*

* 333 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

(அ) ஊழியர்கள் நஷ்ட ஈட்டுச் சட்டத்தின்கீழ் வழக்குகளை நடத்துவதற்கு ஏழைகளுக்கு சர்க்கார் உதவ தீர்மானித்திருக்கிறதா?

(ஆ) அதன் விபரமென்ன?

(இ) உதவி பெறக் தகுந்தவரென முடிவு செய்யும் பொறுப்பு யாருடையது?

(ஈ) சர்க்கார் வக்கீல்களே இவர்கள் வழக்குகளை நடத்துவார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes, Sir.

(*b*) The Additional Commissioner for Workmen's Compensation is authorised to sanction payment of Rs. 10 to the workmen or their dependants for each day of hearing subject to a maximum of Rs. 30 for each case and the Commissioner for Workmen's Compensation is authorised to sanction the payment of amount exceeding the maximum up to Rs. 50 in special cases.

(*c*) Commissioner for Workmen's Compensation and Additional Commissioner for Workmen's Compensation.

(*d*) No, Sir.

SRI A. VEDARATHNAM: இதுவரையில் இந்தமாதிரி உதவி கோரி எந்த ஏழைத் தொழிலாளரிடமிருந்தாவது விண்ணப்பம் வந்திருக்கிறதா? அந்த முறையில் ஏதேனும் வழக்குகளை அரசாங்கம் எடுத்து நடத்தியிருக்கிறதா? அதன் விவரங்களை அறிவிக்க முடியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: இந்தச் சலுகை இப்பொழுது கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்கான புள்ளி விவரங்கள் சாதாரணமாக வருஷத்திற்கு ஒரு முறைதான் தயாரிக்கப்படுகிறது. கனம் அங்கத்தினர் இரண்டு, மூன்று மாதத்திற்கான புள்ளி விவரங்கள் தேவையென்று சொன்னால் தனிக் கேள்வி கேட்டால் கொடுக்கிறேன்.

SRI S. LAZAR: ஸார், "ஒர்க்மென்ஸ் காம்பன்சேஷன் ஆக்ட்" கீழ் வரக்கூடிய தாவாக்களும் சரி, தொழிலாளர்கள் சம்பந்தமான பிரச்னைகளைத் தீர்ப்பதாக இருந்தாலும் சரி, அது சம்பந்தமாக இருக்கக் கூடிய அலுவலகங்கள், அதிகாரிகள், சென்னை போன்ற நகரங்களில் இருக்கும் காரணத்தால் தொழிலாளர்கள் அதிகப்படியான செலவு செய்யவேண்டியிருக்கிறது என்பதை அரசாங்கம் உணருகிறதா? இந்தத் தகராறுகளைத் தீர்க்க அதிகாரிகள் அந்தந்த ஸ்தலத்திற்கே செல்லக்கூடிய வாய்ப்பை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்குமா?

[12th March 1960

THE HON. SRI R. VENKATARAMAN: அந்தச் சலுகை இப்பொழுதே இருக்கிறது.

SRI T. S. RAMASWAMI: May I know, Sir, whether legal assistance is given to poor clients in cases coming under the Workmen's Compensation Act alone or also in cases coming under the Industrial Disputes Act, Labour Disputes Act, and other Labour Acts?

THE HON. SRI R. VENKATARAMAN: This facility is available only to cases coming under the Workmen's Compensation Act.

*Sudarsanam Oil Mills, Limited, Katpadi*

* 334 *Q.*—SRI M. P. SARATHI: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) காட்பாடி "சுதர்சனம் ஆயில் மில்ஸ் லிமிடெட்" டிற்கு வழங்கிய கடனில் இதுவரை வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) இன்னும் வசூலிக்கப்படவேண்டிய தொகை எவ்வளவு?

(இ) இதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) A sum of rupees one lakh twenty-one thousand four hundred and twenty-five (Rs. 1,21,425) has been credited to Government.

(*b*) & (*c*) The distribution of sale proceeds of the Mills is still in Court.

MR. SPEAKER: Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—STATEMENT BY THE HON. MINISTER FOR LOCAL ADMINISTRATION.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON: Mr. Speaker, Sir, on 6th March 1959 in reply to starred question No. 607 by Sri V. K. Kothandaraman, M.L.A., I gave certain particulars about the chank and pearl fisheries in Madras State. Arising therefrom and in reply to a supplementary question by Sri K. B. S. Mani, M.L.A., seeking information as to whether the State Government would recommend to the Central Government to provide facilities for free medical aid to the pearl and chank divers, in view of the large income derived by the Central Government in the pearl and chank fisheries, I stated that the matter would be considered. What I actually meant was, the question of medical relief to the divers would be considered by this Government inasmuch as the pearl and chank fisheries in



12th March 1960] [Srimathi Lourdhammal Simon]

Madras State are the properties of the Government of Madras and the profit realised or the loss sustained in conducting the above pearl and chank fisheries will be the charge of the Government of Madras only and the Central Government have nothing to do with it.

## III.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1960-61—*cont.*

MR. SPEAKER: இப்பொழுது பட்ஜெட்டின் மீது பொது விவாதம் தொடர்ந்து நடக்கும். கனம் அங்கத்தினர் சின்ன துரை அவர்கள் முதலில் பேசுவார்கள். அவர்களுக்கு 20 நிமிஷம் ஒதுக்கிவைக்கிறேன். அவர்கள் பேசலாம். 9-30 a.m.

* SRI P. S. CHINNADURAI: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, ஒரு கட்சியினுடைய பொருளாதாரக் கொள்கை அந்தக் கட்சியினுடைய தன்மையையும், அந்தக் கட்சி ஏற்றுக் கொண்டிருக்கிற தத்துவத்தின் தன்மைகளையும் வெளிப்படுத்திக் காட்டும் என்று கருதப்படுவது உண்டு. அதேபோல ஒரு சர்க்காரினுடைய வரவு செலவு அறிக்கை அந்த சர்க்கார் அனுஷ்டிக்கின்ற பொருளாதார கொள்கையை தெளிவுபட எடுத்துக் காட்டும் என்று கருதப்படுகிறது. அந்த வகையிலே கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த சபை முன்பு சமர்ப்பித்திருக்கும் நிதி நிலை அறிக்கையை பார்க்கிறபொழுது, இந்த சர்க்கார் சார்பாக அது சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறதா, அரசாங்கத்தை நடத்துகிற காங்கிரஸ் சர்க்கார் சார்பாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறதா அல்லது சுதந்திரக் கட்சியின் சார்பாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறதா என்ற ஐயம் இயல்பாகவே என்னுடைய மனதில் எழுகின்றது. இதை நிதி அமைச்சர் அவர்கள், நாட்டை ஆளுகின்ற காங்கிரஸ் சர்க்கார் சார்பாக தெளிவுபடுத்தவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். வெளிப்படையாகப் பார்த்தால் காங்கிரஸ் கட்சி சர்க்கார் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையாக தோற்றம் அளித்தபோதிலும், உள்ளே நன்குக ஆராய்ந்து பார்த்தால் சுதந்திரக் கட்சி எந்த தத்துவங்களை இன்றைக்கு பேசிவருகின்றதோ, எந்தக் கொள்கைகளை அனுசரிக்கவேண்டும் என்று வெளிப்படையாக பறைசாற்றி வருகிறதோ, அவைகளை மறைமுகமாக ஏற்றுக்கொண்டு அனுஷ்டிக்கிற முறையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற ஒரு நிதி நிலை அறிக்கைதான் என்று எனக்குத் தோன்றுகிறது. அதனுலே தான் நான் நினைக்கிறேன், இந்த நிதி நிலை அறிக்கை சம்பந்தமாக தன்னுடைய அபிப்பராயங்கள் சொல்லுகிறபொழுது ஒரு சுதந்திரக் கட்சி பிரமுகர் "இது மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது" என்று சொன்னுர்கள். உண்மையிலேயே இது அவர்களுக்கு பெரிய ஏமாற்றமாகத்தான் இருக்க வேண்டும். தாம் அனுசரிக்கப்போவதாகச் சொல்லிக்கொண்டிருந்த கொள்கைகளை காங்கிரஸ் சர்க்கார் அனுசரித்துவிட்டதே, நாம் சொல்லுவதற்கு இனி என்ன இருக்கிறது என்று அவர்களுக்கு இது பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கக்கூடும் என்று நான் நினைக்கிறேன். அது எப்படி இருக்குமோ தெரியாது. உண்மையிலேயே சோஷலிஸ தத்துவத்தை அமுல் நடத்தவேண்டும்

என்று காங்கிரஸ் சர்க்காரை நோக்கி எதிர்பார்த்துக் கொண்டிருந்த கோடிக்கணக்கான மக்களுக்கு பெருத்த ஏமாற்றத்தையும் மிகுந்த வருத்தத்தையும் கொடுக்கக்கூடியது இந்த நிதி நிலை அறிக்கை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.

உதாரணமாக பல விஷயங்களை நாம் எடுத்துப்பார்த்தால் உண்மை விளங்கும். இருந்தாலும், எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற குறுகிய கால அவகாசத்தை உத்தேசித்து என்னுடைய அபிப்பிராயங்களை சுருக்கமாக சொல்லிக் கொள்ளுகிறேன். விவசாயம் நமது பொருளாதாரத்திற்கு அடிப்படையானது என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. கனம் நிதி அமைச்சர்கூட அதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். விவசாயத் துறையில் நம்முடைய சாதனை எந்த அளவுக்கு போற்றத் தக்க முறையில் கடந்த காலத்தில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது, அல்லது வருகின்ற ஆண்டிலே எந்த அளவுக்கு செயல் படுத்தப் போகிறோம் என்பதில் நாம் சற்று கவனம் செலுத்திப் பார்க்க வேண்டும் என்று நினைக்கிறேன். இரண்டாவது திட்ட காலத்தில் 12-1/2 லட்சம் டன் அதிகப்படியான தானியம் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற லட்சிய அளவை ஏற்படுத்திக் கொண்டோம். ஆனால், நாம் அதனை அடைய முடிகிறதா, அடைய முடியுமா என்று பார்த்தால், அடைய முடியாது என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் வெகு தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார்கள். 12-1/2 லட்சம் டன் அதிகப்படியாக உணவு தானியத்தை உற்பத்தி செய்ய முடியாது, ஏறத்தாழ சுமார் 9 லட்சம் டன் அளவு தான்யம்தான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட கால முடிவிலே அதிகமாக உற்பத்தி செய்ய முடியும் என்று குறிப்பிட்டிருக்கிறார். அது ஏன்? எதனாலே இப்படி நேர்ந்துவிட்டது என்பதைப் பற்றி ஆராய்ந்து பார்த்து, அந்தக் குறைகளை போக்குவதற்கு ஏதாவது மார்க்கங்கள் சரிவர குறிப்பிடப்பட்டிருக்கிறதா இந்த நிதி நிலை அறிக்கையில் என்று பார்த்தால் இல்லை. பருத்தி, நிலக்கடலை போன்ற எண்ணெய் வித்துக்கள், கரும்பு ஆகியவைகள் சாகுபடியிலும் நாம் ரொம்ப பின் தங்கியிருக்கிறோம்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கணக்கைப் பார்த்துவிட்டுச் சொல்லவும்.

SRI P. S. CHINNADURAI : கணக்கைப் பார்த்துவிட்டுச் சொல்லுமாறு கனம் அமைச்சர் கூறுகிறார். கணக்கைப் பார்த்துவிட்டுத்தான் சொல்லு-கிறேன். வருகிற ஆண்டிலே செய்துவிடுவோம் என்ற நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கிறதே தவிர, கடந்த ஆண்டிலே நாம் அடைந்திருக்கிற முன்னேற்றத்தைப் பார்க்கிறபொழுது நாம் எந்த அளவுக்கு முன்னேற்றம் அடையவேண்டுமோ அந்த அளவுக்கு முன்னேற்றம் அடையவில்லை என்று நான் குறிப்பாக எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பொதுவாக, உணவு தானியத்தை அதிகப்படியாக நிலத்தில் விளைச்சல் செய்ய முடியாமல் போய்விட்டது. என்ன காரணம்? நாம் ஏற்கனவே நிர்ணயம் செய்திருந்த அளவின் தன்மை குறைவானது. ஏன் நாம் அந்த லட்சியத்தைக்கூட அடைய முடியவில்லை? கூட்டுறவு சாகுபடி முறையை சரிவர அமுல் நடத்தியிருந்தால் இது முடிந்திருக்கக்கூடுமா என்பதை நாம் ஆராய வேண்டும். கூட்டுறவு சாகுபடி முறை மூலம் அதிகப்படியான உணவு தானியத்தை உற்பத்தி செய்ய முடியும் என்று சர்க்கார் முதலில் நம்புகிறார்களா என்பதற்கு வெளிப்படையாகவும் முடிவானதாகவும் பதில் வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அப்படி கூட்டுறவு சாகுபடி முறை மூலம் அதிகப்படியான விளைச்சலுக்கு வகை செய்யமுடியும் என்பதிலே சர்க்காருக்கு நம்பிக்கை இருக்குமானால், அதை எந்த அளவு நடத்திவைப்பதற்கு இந்த சர்க்கார் முன்வந்திருக்கிறார்கள், எந்த அளவுக்கு முன்வருவதற்கு தயங்குகிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். வெளியே பார்த்தால் இதற்கு பெருத்த எதிர்ப்பு பிரசாரம் நடத்தப்பட்டு வருகிறது சுதந்திரக் கட்சியினால். கனம் நிதி அமைச்சர் அவர்கள் கூட சுதந்திரக் கட்சியினுடைய கொள்கைகளை தாக்கி அடிக்கடி பேசுவதாக நான் பத்திரிகையிலே பார்க்கிறேன். நேராகக் கேட்பதற்கு எனக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. அதனால் இங்கு கேட்டு தெரிந்துகொள்ளவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். உண்மையிலேயே சுதந்திரக் கட்சிக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் பெரிய அடிப்படையான ஒரு கருத்து வேறுபாடு கூட்டுறவு முறையில் விவசாயத்தை அமுல் நடத்துவது பற்றிதான். இதிலே இந்த சர்க்காருடைய கொள்கை என்ன என்பதை திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும். கூட்டுறவு முறையில் விவசாயத்திற்கு ஆக்கம் தருவதுதான் இந்த சர்க்காரின் கொள்கை என்றால், அதற்காக இந்த சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கை இந்த ஆண்டில் எந்த அளவுக்கு உண்மையான பலனை கொடுக்கும் என்பதை விவரித்துச் சொல்ல கனம் நிதி அமைச்சர் அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்த அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறபடி பார்த்தால் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்வதற்கான சில சங்கங்கள் அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எத்தனை சங்கங்கள் ஏற்படுத்தவேண்டுமென்று தீர்மானித்திருந்தார்களோ அதைவிட அதிகப்படியான சங்கங்கள் நிறுவப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே நாம் ஒன்றும் திருப்தி அடைய முடியாது. கனம் நிதி அமைச்சர் அவர்களும் திருப்தி அடையக்கூடாது. ஏனென்றால், அத்தனை சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்ட பின்பும் கூட, எவ்வளவு நிலம் சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். நமது ராஜ்யத்தில் சுமார் 1 கோடி 45 லட்சம் ஏகர் சாகுபடிக்கு லாயக்கான நிலம் இருக்கிறது. ஆனால், இந்தக் கூட்டுறவு முறை சாகுபடியின் கிழே வரக்கூடிய நிலம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதைப் பார்த்தால், சுமார் 13,000, 14,000 ஏகர் தான். இது ஆயிரத்தில் ஒரு மடங்கு. ஒரு ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கூட்டுறவு முறையின் கீழ் சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டிருக்கும் நிலம், மொத்த நிலத்தில் ஆயிரத்தில் ஒரு மடங்கு என்றால், இதைப் பூர்த்தி செய்வதற்கு எத்தனை ஐந்தாண்டு திட்டங்கள் நடத்தப்பட வேண்டும்? நான்

நினைக்கிறேன் 500 அல்லது 1,000 ஐந்தாண்டுத் திட்டங்கள் நடத்தப்படவேண்டுமென்று. இந்த சர்க்கார் அனுஷ்டிக்கிற கொள்கையையும், செயல்படுகிற செயல் திறனையும் வைத்துப் பார்க்கின்றபொழுது எல்லா நிலத்தையும் கூட்டுறவு முறையில் சாகுபடிக்கு கொண்டுவருவதற்கு 2,500, 3,000 ஆண்டுகள் வேண்டியிருக்கும் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. அது சரியா, இல்லையா என்பதையும், இதனை விரிவுபடுத்தவும், தீவிரப் படுத்தவும் சர்க்கார் என்ன செய்யப்போகிறது என்பது பற்றியும், சர்க்கார் தரப்பிலிருந்து மிக உறுதியுடன் எடுத்துச் சொல்லவேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன். நாங்கள் கூட்டுறவு முறை சாகுபடிக்கு ஆக்கம் அளிக்கிறோம், நாங்கள் எதிர்பார்த்த அளவுக்கு சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு விட்டன என்று மட்டும் சொல்லிக்கொண்டிருப்பதில் ஒன்றும் பிரயோசனம் இல்லை. குழந்தைகள் பொம்மை கலியாணம் செய்வது போல்தான் இது. பொம்மை கலியாணம் செய்து விளையாடிக் கொண்டிருப்பதைப் பார்த்து பெற்றோர்கள் வேண்டுமானால் மகிழ்ச்சி அடையலாம். அது தவிர, அதில் யாதொரு உபயோகமும் இருக்க முடியாது. கூட்டுறவு முறை சாகுபடி சம்பந்தமாக அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கை சமுத்திரத்தில் புளி கரைப்பது போல்தான இருக்கிறது. ஆயிரத்தில் ஒரு மடங்கு நிலம்தான் கூட்டுறவு முறை சாகுபடிக்கு கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது காங்கிரஸ் சர்க்கார் இதிலே பெருமைப் படுவதற்கு ஒன்றுமில்லை. உண்மையிலேயே பெருமைப்பட வேண்டியது சுதந்திரக் கட்சி தலைவர்கள் என்று நான் சொல்ல விரும்புகிறேன். அவர்களுடைய ஒரு கடுமையான எதிர்ப் பிரசாரத்திற்குப் பயந்து ஒருசமயம் இம்மாதிரி இவ்வளவு தாமதமாக, இவ்வளவு மெதுவாக—நத்தை கூட அதிக வேகமாகப் போகும், அதைவிட மோசமான வேகத்திலே—இருக்கும் நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்திருக்கும் காங்கிரஸ் கட்சி சர்க்கார் எப்படிப் பெருமைப்படலாம்? அந்தப் பக்கத்தில் இருக்கும் மதிப்பிற்குரிய நண்பர்கள், புதிய வரி போடாததற்கு ரொம்பவும் பெருமைப்பட்டுக்கொண்டார்கள். அதனால் ஏதோ பெரிய சாதனை சாதித்துவிட்டதாக, எதிர்க் கட்சிக்காரர்கள் ஒன்றுமே சொல்வதற்கு முடியாது என்ற அந்த அளவுக்குப் பெரிய மகத்தான காரியத்தை நாம் சாதித்துவிட்டோம் என்ற மன மயக்கத்திலே ஆழ்ந்துகிடக்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன்—மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எப்படியும் வரி போட வேண்டியதாக இருக்கும் என்று மத்திய நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் தயவு செய்து படித்துப் பார்க்க வேண்டும். "வரி போட்டுத்தான் ஆகவேண்டும்; வரி இல்லாமல் முடியாது" என்று சொல்லிக் கொண்டு வருகிறார். நேற்றைக்கும் சொல்லியிருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே வரி இருக்கும் என்று. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே இறுதி ஆண்டாக இருக்கும் காரணத்தால் ஒரு சமயம் விட்டு வைத்திருக்கிறார் போல் இருக்கிறது. மூன்றாவது





ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே அடுத்து வரும் தேர்தல் முடிந்த பின்னால் ஒரு சமயம் புதிய வரியைப் போடுவதற்கு [illegible]வார்களோ என்னவோ தெரியவில்லை. அது [illegible] என்னுடைய அபிப்பிராயத்தைப் பொறுத்தவரைக்கும் [illegible] போட்டால்தான் வருமானம் சர்க்காருக்கு என்ற நிலையை மாற்றாமல் சோஷலிச சர்க்காராக செயல்பட முடியாது. சோஷலிச சர்க்காராக செயல்படவேண்டுமானால் வரி போட்டால்தான் வருமானம் சர்க்காருக்குக் கிடைக்கும் என்ற நிலையை தயவு செய்து மாற்றவேண்டும். வருமானத்தை உயர்த்த என்ன வழி செய்திருக்கிறீர்கள்? வரி போட்டால்தான் வருமானம், வரி இல்லையென்றால் வருமானம் இல்லை என்று சொல்வது? தொழில் துறையில் தேசிய மயமாக்கவேண்டுமென்று [illegible]யிலே கூட—மற்ற தொழில்கள் இருக்கட்டும்—[illegible]டார் போக்குவரத்து, ரோடு போக்குவரத்து சம்பந்தமாக என்ன செய்யப்பட்டிருக்கிறது? கடந்த மூன்று ஆண்டுகளாக கவனித்துக்கொண்டு வருகிறேன், எனக்கு ரொம்ப வேண்டிய அமைச்சரவர்கள் ஏதாவது செய்வார்களா என்று பார்த்துக்கொண்டிருக்கிறேன். இரண்டு புதிய பஸ் ரூட்களை, நகர ரூட்டுகளைத்தான், எடுத்துக்கொண்டார்களே தவிர, ஆயிரக்கணக்கான ரூட்டுகளை இன்னும் தனிப்பட்டவர்கள் கையிலேயே விட்டு வைத்திருக்கிறார்கள். இதற்காக கட்டம் கட்டமாக அதிகரிக்கத்தக்க ஒரு கொள்கையை ஏன் அனுசரிக்கக் கூடாது? இந்த ஆண்டு 500 பஸ்கள், அடுத்த ஆண்டு இத்தனை பஸ்கள் என்று கட்டம் கட்டமாக நிறைவேற்றத்தக்க முறையிலே ரோடு போக்குவரத்தை தேசீய மயமாக்குவது என்ற கொள்கையை ஏன் அனுசரிக்கக்கூடாது? இப்படியாக ஏன் பல பத்து லட்சம் ரூபாய்களை வருமானமாக உண்டாக்கக்கூடாது? ஏன் சரியான கொள்கையை அனுசரிக்கவில்லை? இதைச் செய்யாமல் விட்டுவிட்டு "எங்களுடைய நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்து இருக்கிறோம், இதுதான் காங்கிரஸ் கட்சி பட்ஜெட்" என்று சொன்னால், நான் இன்றைக்கு காங்கிரஸ் கட்சியிலே ஒருக்கால் இருந்தால், ஒரு பொழுதும் இதைச் சகித்துக் கொள்ள மாட்டேன். (சிரிப்பு) கனம் நிதி அமைச்சர் அவர்கள் கவனிக்கவில்லை. அதற்காக நான் மறுபடியும் சொல்கிறேன். இப்படியெல்லாம் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்யத் தவறிவிட்டு, இதுதான் காங்கிரஸ் சர்க்காருடைய பட்ஜெட் என்று நிதி அமைச்சர் அவர்கள் சொல்வார்களானால், நான் இன்றைக்கு காங்கிரஸ் கட்சியில் ஒருக்கால் இருந்திருக்கும்பட்சத்தில் நான் அதை ஒருபொழுதும் ஏற்றுக்கொண்டிருக்க மாட்டேன் என்று சொல்ல விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: நல்லவேளையாக முன்னாலேயே அவர் காங்கிரஸை விட்டுப் போய்விட்டார். அவரைத் திருப்பி எடுத்துக்கொள்வதாக எங்களுக்கு உத்தேசம் இல்லை.

SRI P. S. CHINNADURAI: இருக்கட்டும். அது ரொம்ப நல்லதுதான். நல்ல வேளையாக காங்கிரசில் இன்னும் கொஞ்சம் ஜனநாயகம் பாக்கி இருக்கிறது. கனம் நிதி

அமைச்சர் அவர்களின் சர்வாதிகாரத்துக்கு காங்கிரஸ் உட்பட்டுவிடக்கூடிய அபாயம் இன்னும் இல்லை, அந்த அளவுக்கு காங்கிரஸ் கட்சியில் ஜனநாயகம் இருக்கிறது என்று நான் நம்பு கிறேன். அது போகட்டும்.

புதிய தொழில்கள் ஆரம்பிக்கிறார்களே, அவைகளைத்தான் சர்க்கார் எடுத்துக்கொள்கிறார்களா என்று பார்த்தால் அதுவும் இல்லை. புதிய தொழில்கள் சம்பந்தமாக என்ன கொள்கை அனுசரிக்கப்படுகிறது? வெளியே சுதந்தரா கட்சி சொல்லு கிறது: தொழில்களையெல்லாம் தனிப்பட்டவர்களிடமிருந்து எடுத்துக்கொள்வதற்கு முற்படுகிறார்கள், முதலாளிகளிடம் தான் விடவேண்டுமென்று பங்களூரில் முழங்கினார் ஒரு சுதந்தரா கட்சித் தலைவர். பங்களூரில் முழங்கின ஒரு தலைவர் யாரை எதிர்த்து முழங்கினார்? காங்கிரஸை எதிர்த்து முழங்கி னார். ஆனால் உண்மையிலேயே காங்கிரஸ் சார்பாக கனம் நிதி அமைச்சர் அவர்கள் என்ன செய்து வைத்திருக்கிறார்? பங்க ளூரில் சுதந்தரா கட்சித் தலைவர் என்ன முழங்கினாரோ, அதையே அமுல் நடத்திக்கொண்டிருக்கிறார் நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த பட்ஜெட்டின்—மூலமாக. நான் புத்தகத்திலிருந்து படிக்காமலேயே தெரிவிக்கின்றேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: எனக்குத் தெரியும்.

SRI P. S. CHINNADURAI: இங்கே படிக்க நேரம் போதாது. நான் இங்கே படிக்கப்போவதுமில்லை. விஷயங்களை மட்டும் குறிப்பிடுகிறேன். சோடா உப்புத் தொழிற்சாலை தனிப்பட்ட ஆள் கையில் இருக்கிறது. சிமெண்டு தொழிற்சாலை தனிப் பட்ட ஆள் கையில் இருக்கிறது. சேலம் மாக்னசைட்டைக் கொண்டு உயர்தர அடுப்புக் கற்கள் ரிப்ராக்டரிக்காகச் செய்வது பர்ன் அண்டு கம்பெனியிடம் இருக்கிறது. மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலை தனிப்பட்டவர் கையில் விடப்படுகிறது. இன்னும் இயந்திரங்களை உற்பத்தி பண்ணக்கூடிய ஒரு தொழிற்சாலை, அதுவாவது சர்க்கார் கையில் இருக்கிறதா என்று பார்த்தால், அதுவும் இல்லை; இது ராமகிருஷ்ணா அண்டு சன்ஸ் கையில் விடப் படுகிறது. ரயில்வே வாகன் கட்டும் தொழிற்சாலை பட்டாபிராம் அருகில் ஏற்படப் போகிறதே, அது யாரிடம் விடப்படுகிறது? தனிப்பட்டவர்கள் கையில் விடப்படுகிறது. காகிதத் தொழிற்சாலையாவது கூட்டுறவு முறையில் விடப்படும் என்று நினைத்தேன். அதுவுமில்லாமல், சேஷாயி கம்பெனிக்கு விடப்படுகிறது. மோட்டார் சக்கரங்கள், ரிம்கள் செய்யும் தொழில் டி.வி.எஸ். கம்பெனியார் கையில் போகிறது. ரசாயன உரத் தொழிற்சாலைகள் இரண்டு ஏற்படுத்துவதற்கு முயற்சி நடந்துகொண்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அந்த இரண்டு பேர்களுக்கு விடப்போவதாகக் கேள்விப்படுகிறோம். அந்த இரண்டு பெரியவர்கள் யார் என்றால், இரண்டு பேர்களும் பெரிய மாக்னட்கள். அவர்கள் தனிப்பட்ட முதலாளிகள். அவர்கள் கைக்குப் போய்ச்சேருகின்றன. காங்கிரஸ் சர்க்கார் அனுஷ்டிக்கும் சோஷலிசம் இப்படித்தானா இருக்கவேண்டும்?





இதை ஏன் சுதந்திரா கட்சித் தலைவர்கள் ஆட்சேபிக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. சுதந்திரா கட்சிக்காரர்கள் என்ன சொல்கிறார்களோ அதை அமுல் நடத்தி வைப்பதற்குத் தயார் என்று காங்கிரஸ்காரர்கள் காத்துக்கொண்டிருக்கிறபோது, அவர்களை ஏன் வீணாக எதிர்க்கிறார்கள்? அந்தக் கேள்வியை நான் சுதந்திராக் கட்சியாருக்குத்தான் போடவேண்டு மென்றாலும், அவர்கள் தரப்பிலே இங்கே யாராவது பதில் சொல்லக்கூடும் என்றும் எதிர்பார்க்கிறேன். சுதந்திரா கட்சி காங்கிரஸை எதிர்ப்பதற்கு காரணம் என்ன என்று புரியவில்லை. ஆகையால், எந்த வகையிலே வைத்துப் பார்த்தாலும், தொழில் துறை, கூட்டுறவுத் துறை எந்தத் துறையிலாகட்டும், இது காங்கிரஸ் சர்க்கார் அனுஷ்டிக்கக்கூடிய பட்ஜெட்டாகவே இல்லை. அவர்கள் அனுசரிக்கவேண்டிய கொள்கையாகவே இல்லை என்பதை மிகுந்த வருத்தத்தோடு தெரிவிக்கிறேன்.

சாதாரணமாக இவர்கள் வரவையும் செலவையும் சரிக் கட்டியிருக்கிறார்கள் என்று நான் சொல்லிவிட்டுப் போகலாம். சென்ற வருஷம் அப்படித்தான் சொன்னேன். இந்த வருஷம் நிலைமை அப்படியே இருக்கிறது. அப்படித்தான் சொல்ல வேண்டு மென்ற நிலைமை இருக்கிறது. அதையே சொல்லிக்கொண்டி ருப்பதால் என்ன பிரயோசனம்? ரோடு போடுவதும், விளக்கு போடுவதும் தேவைதான். அதனால் மாத்திரம் மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிட்டதாக சர்க்கார் திருப்தியடைய முடியுமா? முடியாது. வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் முறையிலே நாம் என்ன செய்கிறோம் என்பதைத் தான் நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அந்தச் சிந்தனை இதிலே சற்று குறைவாக இருக்கிறது என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன்.

நிர்வாகத்திலே சிக்கனம் செய்வதாக கனம் அமைச்சர் அவர்கள் இரண்டு ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே இந்தச் சபையிலே சொன்னார். அதற்காக ஒரு விசேஷ அதிகாரியை நியமித்திருப்பதாகவும் சொன்னார்கள். என்ன ஆச்சு அந்த விசேஷ அதிகாரியினுடைய பரிசீலனை? நிர்வாகத்தில் சிக்கனம் என்பது எப்பொழுது வரப்போகிறது? நிர்வா கத்திலே சிக்கனம் செய்ய முடியுமா? முடியாதா? ஒருக்கால் "முடியாது" என்று நீங்கள் நினைப்பதனால் அந்த ஏற்பட்டை ரத்து செய்துவிடுவதுதானே? அப்படிச் செய்வதற்குப் பதிலாக ஒரு அதிகாரியை நியமித்திருப்பதாக ஆசை காட்டி, இங்கே எங்களுக்கு நம்பிக்கை உண்டாக்குகிற வார்த்தை சொல்லிவிட்டு, ஒன்றுமே செய்யாமல் தாமதம் செய்வதில் என்ன பயன்? திட்டங்கள் உருவாகும்போது, விஸ்தரித்துக்கொண்டு போகும் நிலைமை நேரத்தில் எப்படி சிக்கனத்தை உண்டாக்கப் போகிறீர்கள்? பொதுவாக இருக்கும் செலவில் சிக்கனம் செய்யவேண்டுமானால், அந்தச் சிக்கனத்தை யார் அனுஷ்டித்துக் காட்டவேண்டும்? முதலில் அமைச்சர்கள்தான் அனுஷ்டித்துக் காட்டவேண்டுமென்று நான் நினைக்கிறேன். நமது அமைச் சர்கள் இன்றைக்கு ரொம்ப ஆடம்பரமாக இருக்கிறார்கள்

[Sri P. S. Chinnadurai] [12th March 1960

என்று நான் கூறவில்லை. உண்மையில் ஓரளவு பாராட்ட வேண்டியதுதான். கொஞ்சம் ஆடம்பரம் குறைவாகத்தான் இருக்கிறார்கள். இன்னும் சற்று அதிகமாக சிக்கனத்தைக் கையாண்டால் மற்ற அதிகாரிகளுக்கு ஒரு சரியான உதாரணமாக விளங்கலாம் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். ரயிலிலே பிரயாணம் செய்யும்போது நான் பார்க்கிறேன். பல சந்தர்ப்பங்களில் உயர்தர அதிகாரிகள் பிராயணம் செய்கிறபோது அவர்கள் இரவில் படுக்கையை போடுவதற்கு, காலையில் படுக்கையை மடித்துக் கட்டுவதற்கும்கூட அவர்களுக்கு ப்யூன்கள் வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். அந்த அதிகாரிகளும் இளைஞர்களாக இருக்கிறார்கள். இளைஞர்களாக இருக்கும் அதிகாரிகளா இப்படி நடந்துகொள்கிறார்கள் என்றால் அதை என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை. முதுமை அடைந்திருந்தாலுங்கூட பரவாயில்லை; நானேகூட அவர்களுக்சாக படுக்கையை மடித்துக்கட்டி விடுவேன். இளைஞர்களாக உள்ள அதிகாரிகள்கூட ப்யூன் வந்து அதைச் செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். அந்த மனப்பான்மை எங்கே இருந்து ஏற்படுகிறது ? அதைத் தடுக்க என்ன மார்க்கம் கண்டுபிடித்திருக்கிறீர்கள் ? எப்படியாவது இந்த மனப்பான்மை போக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் சிக்கனம் என்பது நிர்வாகத்திலே சாத்தியமாகும் என்று நான் கருதுகிறேன். ஒவ்வொரு இலாகாவிலும் சிக்கனத்தை அப்பொழுதுதான் நம்மால் புகுத்த முடியும் என்று கருதுகிறேன். நிர்வாகத்தில் சிக்கனம் என்பது மிகவும் இன்றியமையாத ஒன்று. அதிலே அரசாங்கம் தக்க கவனம் செலுத்தவேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன்.

மின்சார இலாகா சம்பந்தமாக அதற்கென்று தனி பட்ஜெட் வருகிறது என்று நினைக்கிறேன். அதன்பேரில் பேச அப்பொழுது அதிக அவகாசம் கிடைக்கும் என்று நம்புகிறேன். அதைப்பற்றி ஒரு விஷயம் குறிப்பிட விரும்புகிறேன். அதிலேயும் சுதந்திரா கட்சிக் கொள்கை தான் பிரதிபலிக்கிறது. 7, 8 தனி மின்சார நிறுவனங்கள் இருக்கின்றன. அவைகளிலே ஏதாவது ஒன்றிரண்டையாவது இந்த ஆண்டில் எடுத்துக்கொண்டார்களா என்றால் இல்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலாவது செய்வார்களா, செய்ய மாட்டார்களா என்று தெரியவில்லை. அப்பொழுதுகூட செய்வதற்கான அளவுக்கு இந்த சர்க்கார் முன்வராது என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்த ஆண்டிலே அவர்களுக்கு 25 லட்சம் ரூபாய் கடன் கொடுக்கப் போகிறார்களாம். எதற்காகக் கடன் கொடுக்கவேண்டும் ? அந்த நிறுவனங்களை நாமே எடுத்துக் கொண்டால் என்ன ? அதிலே என்ன தடையாக இருக்கிறது ? அந்த நிறுவனங்களை நாம் எடுத்துக்கொண்டு, அந்த நிறுவனங்கள் இன்றைக்கு எங்கே செயல் படுகின்றனவோ அந்த பகுதி மக்களுக்குச் சேவை செய்தற்குப் பதிலாக அவர்களுக்கு 25 லட்சம் ரூபாய் கடன் ஏன் கொடுக்க வேண்டும் ? இதில் சுதந்திரா கட்சியினுடைய கொள்கையல்லாமல் வேறு என்ன கொள்கையை இந்தச் சர்க்கார் அனுஷ்டிக்கிறார்கள் என்று நான் கேட்கிறேன் ? தனிப்பட்ட



12th March 1960] [Sri P. S. Chinnadurai]

மின்சார நிறுவனங்களுக்கு லட்சக் கணக்கான பணம் கொடுத்து மின்சார வினியோகம் செய்யுங்கள் என்றால் என்ன ஆகிறது ? அவர்கள் இஷ்டப்படியேதான் கட்டண விகிதங்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கும் மற்ற உபயோகிப்பவர்களுக்கும் பலவிதமான தொல்லைகள் இருக்கின்றன. அவைகளைப் போக்குவதற்கு வழிவகை செய்யாமல் ஏதோ ஒப்புக்கு கண்ணைத் துடைக்கிற மாதிரி 25 லட்சம் ரூபாய் கடன் கொடுக்கிறோம் என்று அவர்களுக்குக் கொடுத்து உதவி பண்ணப் போகிறார்கள் என்பதுதானே இருக்கும் நிலைமை ? இது ஒரு மிகப் பெரிய தவறு ஆகும்.

அதற்கடுத்தாற் போல், நீர்பாசனம் சம்பந்தமாக, எல்லாப் பெரிய வேலைகளையும் செய்தாகிவிட்டது. இனிமேல் செய்வதற்கு வேறொன்றுமேயில்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அண்டை ராஜ்யங்களோடு உடன்பாடு ஏற்பட்டால் தான், மிச்சமிருக்கும் திட்டங்களை அமலாக்க முடியும் என்று கூறுகிறார்கள். ஆனாலும், சிறிய நீர்பாசன வசதிகளைப் பெருக்கும் வகையில், எவ்வளவெல்லாம் செய்யலாம் என்பதெல்லாம் அமைச்சரவர்களுக்கு தெரியாதது இல்லை. சுமார் 30,000 நீர் நிலைகள் உள்ளன. (கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமண்யம்: ஏதோ புதிய விஷயம் சொல்லப் போகிறீர்கள் என்று நினைத்தேன்.) புது விஷயம் ஒன்றும் இல்லை. இருக்கிற விஷயம் தான். எப்படி செயல் படுத்துவது என்பதைப் பற்றித்தான் அபிப்பிராயம் சொல்லுகிறேன். இருக்கும் நீர் நிலையங்களைத் திருத்தி சீர்படுத்தினால், ரொம்ப நலமாக இருக்கும். ஆனால், இந்த விஷயத்தில், கனம் நிதி அமைச்சர்கள் கொடுத்திருக்கும் விவரங்களைப்பார்த்தால், ரொம்ப வருந்தத் தக்கதாக இருக்கிறது. கிராமப் புறங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்ற கருத்தை தான் வெளியிடத் தோன்றுகிறது. குளம், குட்டைகள், ஏரிகள் இவைகளைக் கூட சீர்படுத்த பெரிய என்ஜினியர்கள் வேண்டுமென்று அரசாங்கம் நினைக்கிறது போலும். இந்த நீர் நிலைகளை உண்டாக்கிய காலத்தில், பெரிய என்ஜினியர்களா இல்லை ; என்ஜினீரிங் கல்லூரிகள் கிடையாது. அப்படியிருந்தும், நம் முன்னோர்கள், இவைகளை நிறுவியிருக்கிறார்கள். இப்பொழுது குவிந்து கிடக்கும் வண்டல் மண்ணைஎடுக்க என்ஜினியர்கள் வேண்டுமென்று அரசாங்கம் நினைத்தால், அது துரதிர்ஷ்டந் தான். என்னுடைய தொகுதியிலும் கனம் அங்கத்தினர்கள் குழந்தையம்மாள், பழனிசாமி கௌண்டர் அவர்கள் பகுதியில் உள்ள குட்டைகளைச் சீர்திருத்துவதற்காக, ஒரு பத்து லட்சம் ரூபாய்த் திட்டம் கொடுத்தார்கள். அந்த திட்டத்தை நிறைவேற்றவில்லை. ஏன் ? ஏன் தாமதம் ? அது புரியவில்லை. அதே மாதிரி, எல்லாத் தொகுதிகளிலும், அந்த மாதிரி சாதாரண வேலைகள் பல இருக்கின்றன. அவைகளைச் செய்ய சர்க்கார் ஏன் முன் வருவதில்லை? அதற்கு ஏன் அதிகமாகப் பணம் ஒதுக்கவில்லை ? அம்மாதிரி தொகைகளை ஒதுக்குவதை இந்த நிதி நிலை அறிக்கையில் காணமுடியவில்லை. கஷ்டமாக இருக்கும் இடங்களில் திட்டங்களைக் காணவில்லை. ஆனால் காலால் மடை

[Sri P. S. Chinnadurai] [12th March 1960

மாறும் பிரதேசத்தில் திட்டம் செய்கிருர்கள். எங்கள் பக்கங்களை விட்டு விட்டு, மண்வெட்டியால்கூட இல்லாமல், காலால் மடை மாறும் பிரதேசங்களுக்கு மட்டும் செய்ய வேண்டிய காரணம் என்ன? எங்கள் பகுதியில் அம்மாதிரி செய்யக் கூடாதா? அம்மாதிரி திட்டங்களை எங்கள் பகுதிகளிலும் செய்ய வேண்டும் என்று கனம் நிதி அமைச்சர் அவர்களையும், சம்பந்தப்பட்ட விவசாய அமைச்சரவர்களையும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். சுதந்திராக் கட்சி சொல்லும் கொள்கைகளில் கூட, இதற்கெல்லாம் இடம் இருக்கிறது.

சபா நாயகர் அவர்களே, தாங்கள் மணியடித்து விட்டீர்கள். அதிகம் பேசுவதற்கில்லை. ஆனல், ஒரே ஒரு பாராட்டுதலைச் சொல்ல வேண்டிய அவசியம். உண்மையிலேயே கனம் நிதியமைச்சரவர்கள், உடல் நலம் அவ்வளவு சரியில்லா விட்டாலுங் கூட இவ்வளவு நீண்ட நிதி நிலை அறிக்கையை வெகு நேரம் நின்று கொண்டு வாசித்ததற்கு, அவர்களுக்கு என் அனுதாபத்தையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(Srimathi Kamalambuja Ammal in the Chair.)

* SRI A. P. C. VEERABAHU: தற்காலிகத் தலைவியவர்களே, புதிய வரி ஏதும் இல்லாத இந்த வரவு செலவு திட்டத்தை வரவேற்கு முகத்தான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அதோடு, வரி விலக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த இனங்களோடு, இன்ஞெரு இனத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். பனை மரத்திலிருந்து செய்யப்படும் சின்னத் தொழிலாகிய, தும்பு ஈர்க்குத் தொழிலையும் வரி விலக்கு இனங்களோடு சேர்த்துக் கொள்ள வேண்டும். அந்தத் தொழில் மூலமாக, சுமார் ரூ. 45,000 தான் சர்க்காருக்கு வருமானம். இந்தத் தொழிலால் பாதிக்கப்படுகிறவர்கள் பலர். இந்தத் தொழிலுக்கு உதவியாக இருப்பது, இந்தப் பொருள்கள் அமெரிக்க நாட்டுக்கு அதிகமாக ஏற்றுமதியாவதால்தான். நிறைய ஸிந்தெடிக் பைபர் வந்து விட்ட காலத்தில், இந்த கைத்தொழில் பொருளுக்கு, சர்வ தேச மார்க்கெட்டில் அதிக விலைவாசி கிடைப்பதில்லை. விலைவாசி உயர்ந்திருக்கும் பொருள்களுக்கு வரி விதித்தால், இது ஒப்புக் கொள்ளக்கூடியது. ஆனல், இந்த இனத்தை விற்பனைவரியிலிருந்து விலக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்பொழுதுதான், இந்தச் சிறு கைத்தொழிலுக்கு அதிக வாய்ப்புக் கிடைக்கும்.

அதே போல், பனை மரத்திலிருந்து எடுக்கும் பதனிக்கு லைசென்ஸ் கொடுக்கும் விஷயத்திலும், ஒரு சிறு மாறுதல் செய்ய வேண்டியதவசியம் ஆகிறது. ஒரு வருஷ காலத்திற்கு மாற்றுவதால், எந்தவிதமான கஷ்டமும் ஏற்பட்டுவிடாது. ஒரு வருஷத்தில் திரும்பப் பெறுவதில், அதிக காலதாமதம் ஏற்படுகிறது. அப்படியில்லாமல், ஒரு வருஷ காலத்திற்கு, லைசென்ஸை வழங்கினல், அது பெரிய சௌகரியமாக இருக்கும். ஜீனி



12th March 1960] [Sri A. P. C. Veerabahu]

பற்ருக்குறையாக இருக்கும் இந்தக் காலத்தில், பனையேறிக்குச் சந்தர்ப்பம் அளித்தால், அவர்கள் உண்டாக்கும் கருப்பட்டி, ஜீனிக்கு மாற்றுப் பொருளாக அமையும். ஆகவே இந்த விஷயத்தையும், சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

பெரிய தொழில்களின் சாத்தியக் கூறுகளை விமரிசனம் செய்துள்ள, நிதியமைச்சரவர்கள், சேலத்திலுள்ள இரும்புக் கனியைப் பற்றியும் கூறியிருக்கிருர்கள். அங்கு கிடைக்கும் இரும்பு கச்சாப் பொருள், உலகிலேயே, மிகத் தரம் வாய்ந்தது என்று நிபுணர்கள் கருதுவதாகத் தெரிகிறது. அந்தத் திட்டத்தை வெகு சீக்கிரத்தில் அமுலாக்க ஆவன செய்ய வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் சின்ன துரையவர்கள் பேசும் போது சொன்ஞர்கள், தனிப்பட்டவர்களுக்கு பெரும் அளவில் ஆக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது என்று. அவர்கள், ரூ. 10 ஆயிரம் கோடிக்குப் பதிலாக, ரூ. 50 ஆயிரம் கோடி மூன்ருவது திட்டத்தில் செலவு செய்யவேண்டும், அமுலாக்க வேண்டும் என்று கூறியிருந்தார்களேயானல், அது பொருத்தமாக இருந்திருக்கும். ஆனல், நமது சர்க்கார் சோஷலிஸ பாணியில் இயங்குகிறது, ஆதலால், அது நேரடியாக தனிநபர் நடத்தும் எல்லாத் தொழில்களையும் தேசீயமாக்கவேண்டும், அப்பொழுது தான் சர்க்கார் சோஷலிஸ பாணியில் செயல் பட்டதாக முடியும் என்ற கருத்தோடு கூறியிருப்பதை ஆட்சேபிக்கிறேன். பெரிய தொழில்களில் உள்ள கஷ்டங்களும், மூலதனம் பற்ருக்குறையும் கண்கூடு. அவற்றிலிருந்து சர்க்காருக்கு, கலால் வரி கிடைக்கிறது. வருமான வரி மூலமாகவும் பெருவாரியான வருமானம் கிடைக்கிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சோஷலிஸ பாணியென்ருல், எல்லாவற்றையுமே தேசீயமாக்கினல் தான் என்பதில்லை. அப்பொழுதுதான் சோஷலிஸ பாணி என்ற வாதத்தை நாங்கள் ஒப்புக்கொள்ள முடியாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட்டில், கோஆபரேடிவ் இயக்கத்திற்கு பெரிய ஊக்கத்தையும் முக்கியத்துவத்தையும் கொடுத்திருக்கிருர்கள். ரூ. 22 கோடி நிலம் இல்லாத விவசாயிகளுக்கும், கொடுத்து, கடன் வாய்ப்புகளை அளிக்க விருக்கிருர்கள். அதே சமயத்தில் அவர்கள் இன்ஞென்றையும் கவனிக்கவேண்டும். கூட்டுறவு இயக்கத்தின் மூலம் செய்யப்படும் வியாபாரிக்கும், மற்ற வியாபாரிக்கும் வித்தியாசம் இல்லை. ஆதலால், இதற்கும் வருமான வரி போடுவோம் என்கிருர்கள். அவர்கள் கூறுவது, "நீங்கள் கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக பல தொழில்களை நடத்தி வியாபாரம் செய்கிறீர்கள்" என்பதாகும். இதில் நம் சர்க்கார் சிறிது உன்னிப்பாக கவனிக்க வேண்டும். 10-00 a.m.

[Sri A. P. C. Veerabahu] [12th March 1960

சொசைடியின் அடிப்படை நிதி வசதி, மற்றத் தரங்கள் எப்படி என்பதையெல்லாம் கவனித்துத்தான், அந்த சொசைடிகள் நிதி பல பட்டிருந்தால் மாத்திரந்தான், வருமான வரி விதிக்க வேண்டியது அவசியம். ஆகவே, அந்த முறையிலே இந்தப் பிரச்சினையை, மத்திய சர்க்காரிடம் நம் சர்க்கார் வற்புறுத்த வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன். நம்முடைய பட்ஜெட்டில் எவ்வளவுதூரம் நம்முடைய பொருளாதார நிலைமையை உயர்த்திக்கொள்வதற்கு சிறிய தொழில்கள் பெரிய தொழில்கள் முதலியவற்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து கவனித்திருக்கிறோமோ அவ்வளவு தூரம் விவசாயத்தையும் புறக்கணிக்காது விவசாய அபிவிருத்தியின் முக்கியத்துவத்தையும் உணர்ந்து பெருவாரியான ஏற்பாடுகளைச் செய்து வருவது இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடத் தக்கது. ஆனால் ஆங்காங்கேயுள்ள சிறு நீர் நிலையங்களைக் குளங்களை மராமத்து செய்வது என்ற கொள்கையை ஒப்புக்கொண்டு ஆண்டுக்கு 300 குளங்கள் மராமத்து செய்வது என்று போய்க் கொண்டிருந்தால் நம்முடைய ராஜ்யத்தில் உள்ள சிறிய பாசன வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நூறு வருஷங்களுக்கு மேலாகும். ஆகவே இந்தக் கொள்கை சம்மந்தப்பட்ட மட்டில் உடனடியாக விரிவானதொரு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். சிறிய நீர்ப்பாசன வசதியைப் பெருக்குவதற்கு விரிவான முறையில் அமுல் நடத்துவதற்கு அதற்கேற்ற ஒரு திட்டத்தை மேற்கொள்ளவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.

மேலும் விவசாயப் பண்டங்களைப் பெருக்குவதற்கு நாம் உரம், பொறுக்கு விதை சம்பந்தப்பட்ட மட்டில் பல காரியங்களைச் செய்துக் கொண்டு வருகிறோம். உரம் என்பதை மட்டும் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது ஒன்பது அல்லது பன்னிரண்டு லட்சம் டன் அளவுக்கு நம் உர உற்பத்தி இருக்கிறது. இயற்கை உரம், ரசாயன உரம், கம்போஸ்டு உரம் ஆகிய எல்லாவற்றையும் சேர்த்துக் கணக்கெடுத்தாலும் பன்னிரண்டு லட்சம் டன்தான் உற்பத்தி செய்கிறோம். ஆனால் நம்முடைய உணவு உற்பத்தி 52 லட்சம் டன்னாக இருக்கிறது. சீனா தேசம் அல்லது ரஷ்ய தேசம் முதலிய தேசங்களில் நடக்கும் விவசாயத்தை நாம் பார்க்கும்போது அவர்கள் எந்த அளவுக்கு தங்களுடைய உணவு உற்பத்தியை வைத்திருக்கிறார்களோ அந்த அளவுக்கு உர உற்பத்தியை வைத்திருக்கிறார்கள். நம்முடைய உணவு உற்பத்தி 52 லட்சம் டன் என்று வைத்துக்கொண்டால் நம்முடைய ராஜ்ய உரத் தேவையின் அளவும் 52 லட்சம் டன்னாக வைத்துக் கொள்ளவேண்டும். அப்படியின்றி 12 லட்சம் டன் என்று தேவையை வைத்துக்கொண்டு இதற்கு மேல் ஒன்று இரண்டு டன் உற்பத்தியைத் தேடுவது நல்ல முறையாகாது. நம்முடைய உரத் தேவையின் அளவை 52 லட்சம் டன் லட்சிய அளவாகக் கொண்டு மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள்ளாகவே இந்த லட்சியத்தை அடைவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



12th March 1960] [Sri A. P. C. Veerabahu]

விவசாய விஷயத்தில் இம்மாதிரி பல ஏற்பாடுகளைச் செய்யும் போது அந்த விவசாய மானியம் அல்லது நீர்ப்பாசன மானியம் இவற்றில் குறிப்பிட வேண்டிய ஒன்றிரண்டு விஷயங்களை இங்கே நான் இப்பொழுது குறிப்பிட விரும்புகிறேன். நெல்லை ஜில்லாவில் அணைக்கட்டு ஏற்பட்ட பிறகு வரி விகிதாசாரத்தில் புதிய மாறுதல் ஏற்படுத்தியிருக்கிறார்கள். மணிமுத்தாறு நீர் பாசன ஏரியாவில் இப்போது திடீரென்று ஏக்கர் ஒன்றுக்கு எட்டு ரூபாய் வரி விதித்திருக்கிறார்கள். அரசாங்கத்தாரின் இந்த ஏற்பாட்டினால் பெருவாரியான மக்கள் கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். அதோடு ரெவின்யூ வரி விகிதாசாரத்தை உயர்த்தப் பார்க்கும்போது 20 சதவிகிதத்திற்கு மேல் நிலத்தீர்வை வரி விகிதாசாரம் உயர்த்துவது சட்டத்தில் இடமில்லை. அதிகப்படியான அளவு வரியைத் கூட்டுவதாக இருந்தாலும் நிலத்தின் தரம், பாசன வசதியின் நன்மை, ஏற்கனவே இருந்த நிலத்தீர்வை இவை எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக்கொண்டு நிலத்தின் தரத்திற்கு ஏற்றாற்போல விதிக்கவேண்டியது தான் நியாயமாகும். அதைவிட்டு பாசன வசதி செய்து கொடுத்துவிட்டோம் என்று நூறு சதம் என்று ஆர்பிட்ரரியாக அரசாங்கமே தீர்மானம் செய்வது என்பது அவ்வளவு நல்லது அல்ல. அது விவசாயத்தை ஊக்குவதற்குப் பதிலாக விவசாய ஊக்கத்தைக் குலைப்பதற்கே இடமளித்துவிடும். இதுசம்பந்தப்பட்ட மட்டில் அரசாங்கத்தார் புனராலோசனை செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். ஏக்கர் 1-க்கு மூன்று அல்லது ஐந்து ரூபாய் அளவில் இருந்து நிலத்தின் தரத்திற்கு ஏற்றாற்போலப் பரிசீலனை செய்து வரிவிதிக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். "ப்ளாட்டாக" எட்டு ரூபாய் என்று விதிப்பது முறை இல்லை. இதைச் சரியான முறையில் பரிசீலனை செய்து செட்டில்மெண்டு முறையில் வரி விதிக்க அரசாங்கத்தார் முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி இல்லாதமட்டில் இந்தப் பகுதி மக்களுக்குப் பெரிய அநீதி விளைத்ததாகவே ஆகும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன். இதனால் பாதிக்கப்படுகிறவர்கள் ஒன்றிரண்டு பெரும் நிலச்சுவாந்தார்கள் என்று அல்ல. பல்லாயிரக்கணக்கான பட்டாதார்கள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள் என்று வலியுறுத்திக் கூறவேண்டியது அவசியமாக இருக்கிறது. பத்தாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் மிகையாகாது. தண்டத் தீர்வை விஷயமாக கொண்ட கொள்கை முறைப்படிகூட இல்லாமல் நன்றாக விளைந்து இருந்தால் அந்தச் சமயத்தில் தண்டத் தீர்வையை குறைக்காமல் ஏக்கர் ஒன்றுக்கு 250 ரூபாய் விதிக்கக்கூடிய அளவில் வரி விகிதாசாரங்கள் அமைந்திருக்கிறது. இது சம்பந்தமாக மந்திரிகள் இடத்திலும், அரசாங்கத்திடத்திலும் பலமுறை சொல்லியிருக்கிறோம். சர்க்கார்கூட மந்திரி சபை சப் கமிட்டி போட்டு நேரடியாகப் பரிசீலனை செய்தார்கள். எந்த விதமாகப் பரிசீலனை செய்தாலும் அவர்களுக்கு இதுவரையில் எவ்விதமான நிவாரணமும் கிடைக்கவில்லை என்பதை இந்தச்

சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன். இருக்கிற சட்டங்களை வைத்துக்கொண்டு எப்படிப் பரிசீலனை செய்வது, என்ற உணர்ச்சியோடு பார்க்காமல் உண்மையில் நியாயமான நிவாரணம், நியாயமான வரி விகிதாசாரம் என்ற முறையில் இப்பிரச்சனையை அணுகவேண்டும். அநுதாபத்தோடு இப்பிரச்சனையைக் கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதாகச் சொல்ல விரும்புகிறேன். இப்போதே அந்தத் தண்டவரியை வசூல் செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். ஏப்ரல் மாதத்தில் இருக்கிற மாடுகளையும், வீடுகளையும் ஜப்தி செய்வது என்ற முறையில் விவசாயிகளைப் பயமுறுத்தி வருகிறார்கள். இப்படிப்பட்ட அநீதியை எடுத்துக்காட்டினால் ஒவ்வொரு பட்டாதாரும் தனிப்பட்ட முறையில் அதை எதிர்த்து அப்பீல் செய்திருக்க வேண்டும் என்கிறார்கள். இதைத் தனிப்பட்ட பட்டாதாருடைய பிரச்சனை என்று கொள்ளக்கூடாது. இது பல்லாயிரக் கணக்கான மக்களை பாதிக்கின்ற காரணத்தினால் இதைப் பொதுப் பிரச்சனையாகவே கருதி சர்க்கார் சீக்கிரத்தில் இதைப் பரிசீலனை செய்து அநீதியைப் போக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துகளுக்கு விரிவான அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நாம் இதில் ஒரு கொள்கை மாற்றம் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. பஞ்சாயத்துகளின் வருமானத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். ஆகவே நிலத்தீர்வையை பஞ்சாயத்துகளுக்கு ஒதுக்குவது என்ற கொள்கையை ஆரம்பத்தில் இருந்தே நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அவர்களுக்கு நிலத்தீர்வை கொடுப்பதனால் நமக்குக் கஷ்டம் ஏற்படாது. இந்த 84 கோடி ரூபாய் நிலத்தீர்வைகள் பஞ்சாயத்திற்குக் கொடுப்பதனால் நஷ்டம் ஏற்படாது. இந்தக்கொள்கை மாற்றத்தை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

SRI G. NARAYANASWAMI NAIDU: கனம் தலைவி அவர்களே சற்று நேரத்திற்கு முந்திதான் எதிர்த்தரப்பில் இருந்த நண்பர்கள் இந்தப் பகுதியில் இருப்பவர்களை "ஆம் என்கின்ற கூட்டத்தைச் சேர்ந்தார்கள், ஆகவே பட்ஜெட்டில் இருக்கிற விசித்திரங்களை எல்லாம் பிற்போக்குகளை எல்லாம் ஏற்றுக்கொள்கிறார்கள்" என்று சொன்னார்கள். அவர்கள் ஒரு வேளை இந்தப் பகுதியில் இருந்திருந்தால் "இந்த நிதி நிலை அறிக்கையை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்க மாட்டோம்" என்று தெரிவித்தார்கள். ஒருவேளை நாங்கள்கூட அந்தப் பக்கத்தில் இருந்திருந்தால் எதையும் சாதிக்காவிட்டாலும் பலத்த கைதட்டு ஏற்படும் வகையில் பலவற்றைச் சொல்லிக்கொண்டிருக்கலாம், யோசனைகளை அடுக்கிக் கொண்டே இருந்திருக்கலாம். குறைகளையே சொல்லிக்கொண்டிருக்கலாம். அதுகூட எனக்கு ஆசைதான். ஆனால் நடைபெறக்கூடிய விஷயங்களை—கனவிலே, கற்பனையிலே சொல்லிக் கொண்டிருப்பதைக் காட்டிலும்—நடக்கக்கூடிய விஷயங்களைச் செயலிலே காட்டுவது நல்லது என்கிற முறையில் நாங்கள் இந்தப் பகுதியில் இருக்கிறோம். காரியத்தில் பலவற்றைச் செய்கின்ற வழியில் இருக்கிறோம். சொல்கின்ற வழியில் இல்லை.





வெகுநீண்ட காலமாக எங்கள் ஜில்லா உழவர்கள் சமாசாரத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். எனக்கு முன்னால் பேசிய நண்பர் அவர்கள் எங்கள் ஜில்லாவில் காலால் நெரடி விட்டு மடைபாய்ச்சுவதாகச் சொன்னார்கள். தண்ணீர் அத்தனை உழைப்பு இல்லாமல் இங்கெல்லாம் பாய வறண்ட பகுதியில் உள்ளவர்கள் நீர்ப்பாசனத்திற்கு திண்டாடும்போது அங்கெல்லாம் அதிக வசதிகள், ஏற்பாடுகள் செய்யவேண்டாமா என்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் தண்ணீர் பாய்கிறது; நல்ல வருமானம் வருகிறது. யாருக்கு இவை போய்ச் சேருகிற தென்பதைப்பற்றி நண்பர்கள் தெரிந்துகொள்ளவில்லை. சென்ற எட்டு வருஷ காலத்தில் இந்த நிலைமையை, ஆயிரம் வருஷமாக இருந்த நிலைமையை மாற்ற என்ன செய்திருக்கிறோம், செய்து வருகிறோம்? அங்குள்ள நிலைமை இருக்கிறதே இது உலக சரித்திரத்தில் இவ்வாறு வேறு எங்கேயும் நடைபெறாத நிலைமை என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். பத்து வருஷங்களுக்கு முந்தி எனக்குச் சொத்துக்கிடையாது. நிலம் கிடையாது. வேறு ஒருவர் நிலத்தில் உழை என்றால் உழைக்கவேண்டும். போ என்றால் வெளியேறவேண்டும். ஆடுமாடுகளைப் போல உழைப்பது தவிர வேறு எவ்வித பாத்யதையோ, உரிமையோ இல்லாமல் இருந்திருக்கிறோம். அப்படிப்பட்ட எங்களுக்கு இப்போது நிலத்தில் பாத்தியம், உழைப்பில் உறுதி, ஊதியத்தில் பங்கு இவைகள் வரையறுக்கப்பட்டிருக்கிறது. இதைச் செய்தது யார், எப்படிச் செய்திருக்கிறார்கள் சுலபமாக என்பதைத் தெரிந்துகொள்ள நாம் முந்துவது இல்லை. நாங்கள் அதைத் தெரிந்துக் கொண்டுதான் இருக்கிறோம். அதனால்தான் இந்தப் பக்கத்திலே நாங்கள் இருக்கிறோம் என்பதையும் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆனால், நாங்கள் எதிர்ப்பார்த்தபடி, அவ்வளவு நடந்துவிட்டதா என்று பார்க்கின்றபோது அவ்வளவும் நடக்கவில்லை. கொஞ்சநஞ்சமல்ல, நிறைய கூட குறைகள் இன்னும் இருக்கின்றன. அவைகளில் படிப்படியாக மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். இப்பொழுது நம்முடைய பட்ஜெட்டிலே நாங்கள் எதிர்ப்பார்த்ததிலே ஒன்று ஏற்பட்டிருக்கிறது. இதுவரையிலும் நிலம் உடையவர்களுக்குத்தான் கடன் கொடுக்கப்பட்டுவந்தது. நிலத்தில் சாகுபடிசெய்து வந்தவர்களும் இப்பொழுது கடன் பெறலாம் என்ற உரிமையை இந்த பட்ஜெட்டிலே கொடுத்திருக்கிறார்கள். இது பல வருஷங்களாகவே, எங்கள் ஜில்லாவிலே இருக்கும் சட்டசபை அங்கத்தினர்களெல்லாம் வற்புறுத்திவந்த ஒரு விஷயம். அதிலே

நாங்கள் வெற்றியடைந்திருக்கிறோம் என்பதற்காக சர்க்காருக்கு நாங்கள் எங்களுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

எந்தச் சட்டங்கள் எப்படிச் செய்தாலும் ஹை கோர்ட்டிலே இந்தச் சட்டங்களுக்கு எல்லாம் புதிய வியாக்கியானம் கொடுக்கப்பட்டு, அந்தச் சட்டங்களினுடைய பலன்களை மக்கள் அடைய முடியாமல் இருக்கிறது. இது நம்முடைய சர்க்காருடைய சட்டம் செய்கின்ற இலாகாவுக்கும் அவர்களுக்கும் போட்டியோ என்று கருதக்கூடிய அளவுக்கு இவர்கள் எதைச் செய்தாலும் அதிலே இழுக்கு கண்டுபிடித்து வக்கீல்கள் வாதாடுகிறார்கள். அந்தச் சட்டத்தின் நோக்கம் எதுவோ அதற்கு நேர் மாறான தீர்ப்புகள் வந்துக்கொண்டே இருக்கின்றன. சர்க்கார் இதிலே கொஞ்சம் கண்ணும் கருத்துமாக இருந்து அப்படி ஏற்படும் நேரத்தில் - அப்போதைக்கப்போது சட்டத்தைத் திருத்த வேண்டும்.

வேறு ஜில்லாக்களிலிருந்தும் எங்கள் ஜில்லாவிலிருந்தும் குத்தகை என்ற பெயராலேயே லட்சக்கணக்கான ஏக்கர்களை எடுத்துக்கொண்டிருக்கும் தரும ஸ்தாபனங்கள் உங்களுக்குத் தெரியும். மணலி எஸ்டேட் என்று இருக்கிறது. அது ஒரு பெரிய தரும ஸ்தாபனம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட அந்த ஸ்தாபனத்திலுள்ளவர்களுக்கு உறவு என்று நினைக்கிறேன். எங்கள் மந்திரியார்கூட உறவினராக இருக்கலாம். அந்த ஸ்தாபனம் அதிலிருந்து அடைவது ஏக்கருக்கு 6 மூட்டை நெல். ஆனால் குத்தகைதாரர்கள் பல நூற்றுக்கணக்கான மூட்டை நெல் அடைகிறார்கள். (ஸ்ரீ வி. கே. ராமசாமி முதலியார் குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவருக்கு உறவு இல்லை என்று சொல்லுகிறார்கள். ஒரு வேளை இரண்டுபேருக்கும் உறவினராக இருக்குமோ என்று நினைத்தேன். அப்படியிருந்தால் அவர்களே சொல்லலாம் என்பதற்காகச் சொன்னேன். தருமத்திற்கும் அந்தப் பணம் போகவில்லை. யார் அந்த தருமத்தை நடத்திக்கொண்டு வருகிறார்களோ அவர்களுக்கு இந்த லாபம் போகவில்லை. குடிகளுக்காவது போகிறதா என்றால் அதுவும் இல்லை. தருமமாவது நடக்கிறதா என்றால், கிடையாது. இவர்கள் யாருக்கும் இல்லாமல் இடையிலே யாரோ ஒருவர் நிலத்தில் உழைக்காதவர், நிலத்தில் வசிக்காதவர், நிலத்திற்கே சம்பந்தம் இல்லாதவர் அனுபவித்துக்கொண்டிருக்கும் பல கிராமங்கள் அங்கிருக்கின்றன. மணலி ஸ்தாபனத்திற்குச் சொந்தமான இரண்டு இடங்களை இப்பொழுது விலைபோக்குவதற்காக, ஏதோ ரொம்ப பெரிய சிபார்சுகளை வைத்துக்கொண்டு அந்த நிலத்தை விற்றுவிடுவது, அதற்குப் பதிலாக சென்னைக்குப் பக்கத்தில் ஏராளமான விஸ்திரணமுள்ள நிலங்கள் பெறுவது என்று ஏதோ வியாபாரங்கள் நடந்துக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. திருவாளப்புத்தூரைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கும் நிலங்களில் வசிக்கும் குடிகள் அந்த நிலத்தை விலைக்குப் பெற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கும்போது





மூன்றாவது மனிதர் அதைப் பெறுவது என்ற நிலைமை இல்லாமல் சர்க்கார் கவனித்துக்கொள்ளவேண்டும். மற்றொரு இடத்தில் பெரும் பகுதியும் அதே நிலைமையில் இருக்கிறது. "பக்தி வலையில் படுவோன்" கடவுள் என்று தேவாரத்தில் பாடியிருக்கிறார்கள். ஆனால் பக்தி வலையில் படுவதற்குப் பதிலாக, பண வலையில் படும்படியும், வேறு என்ன என்னவோ வலைகளில் எல்லாம் படும்படியும், நிலத்திலிருக்கும் குடியானவர்களை வெளியேற்றுவது எப்படியாவது பணத்தைச் சேர்ப்பது என்ற முறையில் கடவுள் தன்மையையே மாற்றியமைத்து விட்டார்கள். கடவுள் நிலத்தை வைத்துப்பராமரிப்பவர்கள். ஸ்ரீ தியாகராக பிள்ளை போன்றவர்கள் டிரஸ்டியாக இருக்கும் இடங்களில் சவுக்கு மரம் முதலியவைகளிலிருந்து வருமானம் கோவிலுக்கு வரலாம். அந்த அளவு அவர்கள் பார்க்கிறார்கள். ஆனால், பாக்கி இடங்களில் அப்படி இல்லை. சுண்ணாம்பு, செங்கல் கொண்டு வீடு கட்டி விடுவதோடு திருப்தியடைந்துவிட்டு, இந்தக் கும்பாபிஷேகம் செய்தேன், அதற்கு இத்தனை லட்ச ரூபாய் செலவாயிற்று, அந்தக் கும்பாபிஷேகம் செய்தேன், அதற்கும் இத்தனை லட்சம் என்று ஏதோ வருமான கணக்கு காட்டுவது மாதிரி செய்வது முறையல்ல என்றுதான் நான் நினைக்கிறேன். ஆகவே, இம்மாதிரியெல்லாம் கடவுளுடைய கோவிலையே சில பேர் குத்தகை எடுத்து, குடிகளுக்கும் உதவாமல் கடவுளும் அந்த வருமானத்தை அடையமுடியாது செய்யும் நிலைமையை நாங்கள் சென்ற எட்டு வருஷங்களாக எடுத்துச் சொல்லிவருகிறோம். அதிலே ஒருவிதமான மாற்றமும் இன்னும் ஏற்படவில்லை. குத்தகைக்காரர்கள் ஒழிக்கப்படவில்லை. இன்னும் ஒரு நிமிஷ நேரம் ஆனாலும் தலைவர் அவர்கள் தயவு செய்து பொறுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கூட்டுறவு சங்கங்கள் அமைக்கும் இடங்களில் எல்லாம் கடவுளுக்குப் பிடிக்கவில்லை. கடவுளுக்கு பக்கத்தில் நந்தி பரம்பரையில் உள்ள பண்டாரச் சந்நதிக்குச் சில இடங்களில் பிடிக்கவில்லை. இன்னும் சில இடங்களில் பணக்காரர்களுக்குப் பிடிக்கவில்லை இன்னும் சில இடங்களில் சுதந்தரரா கட்சிக்காரர்களுக்குப் பிடிக்கவில்லை. இன்னும் சில இடங்களில் புரட்சிகரமானவர்களுக்குப் பிடிக்கவில்லை என்று இப்படி என்ன என்னமோ சொல்லியும் வெற்றிகரமாக பல இடங்களில் நடந்து வருகிறது. அதற்கு எவ்வளவு இடைஞ்சல்கள் கொடுக்க முடியுமோ அவ்வளவும் கடவுள் பேரால் கொடுக்கப்பட்டு வருகிறது. அதற்குக் காரணம் எக்சிக்யூடிவ் ஆபிசர் என்று சொல்லிக்கொண்டு பரம்பரையாக இருந்துக்கொண்டுவரும் சூரிய வம்ச ராஜாக்கள்கூட போய்விட்டார்கள், ஆனால் பண்டாரச்சந்ததியார் என்ற பெயரை வைத்துக்கொண்டு கடவுளுக்குப் பக்கத்தில் நந்தி பரம்பரை என்று சொல்லிக்கொண்டிருக்கும் பரம்பரை மாத்திரம் நம்மால் ஒழிக்கப்படவில்லை. அவர்கள் ஒழியவேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால் அவர்கள் வைத்துக்கொண்டிருக்கும் சொத்துக்களை

[Sri K. G. Palaniswamy Gounder] [12th March 1960

அல்லது 1-1/2 வீதம் பில் கொடுக்கும் நிலையில் இருக்கிறார்கள். எங்கள் பகுதி பாக்வேர்ட் ஏரியாவாதலால் அதற்கு அரசாங்கம் நிச்சயமாக சப்ஸிடி கொடுத்தாக வேண்டும். அப்பொழுது தான் விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் அதை நம்பி அதில் நிரந்தரமாக ஈடுபடமுடியும். ஆகவே, ஹார்ஸ் பவருக்கு இருக்கும் நிரந்தரமாக இருக்கக்கூடிய காரண்டியை மாற்றி ஹார்ஸ் பவர் ஒன்றுக்கு 50 ரூபாய் என்று இருப்பதை 10 ரூபாய் என்று மாற்றவேண்டும். எங்கள் பகுதி பாக்வேர்ட் ஏரியாவாக இருப்பதால் இந்த சலுகையை அளிக்கவேண்டும். இந்த மாகாணத்தில் எங்கள் பகுதியைப் போன்று பிற்பட்ட பகுதிகள் பல இருக்குமானால் அவைகளுக்கும் இந்த சலுகையை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியில் பெரிய நீர்பாசனத் திட்டங்கள் ஒன்றும் கிடையவே கிடையாது. சிறு சிறு குட்டைகளுக்கான திட்டங்களை கொடுத்திருந்தோம். அவைகள் இன்னும் அமுலாக்கப்படவில்லை. உடனடியாக அவைகள் அமுலாக்கப்பட வேண்டும். அதோடு மண் அரிப்புத் தடுப்பு திட்டத்தை எங்கள் பகுதிக்கு மேலும் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியில் மழை மிக குறைவாகப் பெய்துக் கொண்டிருக்கிறது. அப்படி வருகிற தண்ணீர் அடித்துக்கொண்டுபோகாதிருப்பதற்காக மண் அரிப்புத் தடுப்பு திட்டத்தை எங்கள் பகுதியில் விஸ்தரித்து மழைத் தண்ணீரை தேக்கிவைக்க வழிவகை செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் எங்கள் பகுதியில் விவசாயிகள் இருக்க முடியும். இப்பொழுது அங்குள்ள விவசாயத் தொழிலாளர்கள் பலர் தங்கள் ஜீவனத்திற்காக அந்தயிடத்தை விட்டு வெளியேறிவிட்டார்கள். எந்தத் தொழிலை எடுத்துக்கொண்டாலும் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி இருக்கும் இந்தக் காலத்தில் விவசாயத் தொழில் செய்வதற்கு ஆள் கிடைக்காமல் திண்டாடும் நிலை ஏற்பட்டு வருகிறது. விவசாயத் தொழில் செய்வதற்கு ஆள் குறைந்து கொண்டிருக்கும் நேரம் வந்து கொண்டிருக்கிறது. இப்பொழுதுள்ள இந்த நிலை நீடித்துப் போகுமானால் வருகிற ஜெனரேஷனில் விவசாயத் தொழிலில் ஈடுபடக்கூடியவர்கள் யாருமே இருக்கமாட்டார்கள் என்ற நிலைதான் ஏற்படும். ஆகவே விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு உற்சாகம் கொடுக்கத்தக்க விதத்தில் அவர்களின் சம்பளத்தை உயர்த்த வேண்டும். அப்படி செய்தால்தான் நம் உணவு உற்பத்தி பெருகுவதற்கு வழிவகை ஏற்படும். அந்த முறையில் அவர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கத்தக்க வகையில் பல திட்டங்களைப் போட்டு அவர்களை நன்கு வாழ்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுதுதான் எங்கள் பகுதியிலுள்ள விவசாயிகள் விவசாயத்தில் ஈடுபட முடியும். கீழ்பவானி திட்டத்தில் எவ்வளவோ சிக்கல்கள் இருந்தும் கூட அவைகளை எல்லாம், அமைச்சர் அவர்கள் நேரில் பார்த்து அவைகளை தீர்த்து நல்ல முறையில் ஏற்பாடு செய்ததற்காக நான் அவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதில் ஒரே ஒரு சிக்கல் மட்டும் இருக்-



12th March 1960] [Sri K. G. Palaniswamy Gounder]

கிறது. பயிரைப் பொறுத்து வரி விதிக்கும் நிலை இருக்கிறது. அதை மாற்றி நிரந்தரமாக ஒரு தரம் விதிக்க ஏற்பாடு செய்தால் இன்னும் இருக்கிற சிக்கல் தீர்ந்து நல்ல முறையில் விவசாயிகள் வாழ்வதற்கு வசதி ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு அண்மையில் வர இருக்கிற பரம்பிக்குளத் திட்டத்தை நல்ல முறையில் உருவாக்க கண்ணுங்கருத்துமாக இருந்து, தாராபுரம் தாலுகாவில் இருக்கிற பஞ்சத்தை நிரந்தரமாக போக்குவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு எனக்கு இந்த சந்தர்ப்பத்தை அளித்த தலைவி அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* DR. E. P. MATHURAM: அவைத் தலைவி அவர்களே, இந்த வரவு செலவுத் திட்டத்தில் புதுவரிகள் ஒன்றும் போடாத போதிலும், மக்கள், புதுவரிகள் போடப்படவில்லையே என்று ஓரளவிற்கு சந்தோஷப்பட்டாலும், மத்திய அரசாங்கத்தினுடைய மறைமுகமான வரிகள் மக்களிடையே அதிக அதிருப்தியை உண்டுபண்ணிக்கொண்டிருக்கிறது. விலைவாசிகள் ஒரு பக்கம் இறங்குவதற்கு சில உணவுப் பொருள்கள் மீதுள்ள விற்பனை வரி நீக்கப்பட்டாலும், அதனால் உணவுப் பொருள்களின் விலை குறைந்து போகும் என்ற நம்பிக்கை எனக்கில்லை. ஏனென்றால், மத்திய அரசாங்கத்தின் மறைமுகமான வரிகள் மூலம் விலைவாசிகள் அதிகமாவதால் மக்கள் மேற்கொண்டும் கஷ்டத்தை அனுபவிக்கும் நிலைதான் இருக்கிறது. ஆனால் நமது மாகாண பட்ஜெட்டைப் பொறுத்தவரையில் மக்கள் மேற்கொண்டு அதிகமாக பாதிக்கப்படவில்லை. ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள வரிகள் ரத்தாகவும் இல்லை, குறையவும் இல்லை. ஆக, இருக்கிற நிலைமையில் இருக்கிறபடியே இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் நமது கனம் நிதியமைச்சர் அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. மத்திய அரசாங்கம் இந்த விதமாக மறைமுகமான வரிகளை ஏற்றாமல் இருந்திருந்தால் நமது நிதியமைச்சர் அவர்களும் ஏதோ சில வரிகளை போட்டுப் பார்த்திருப்பார்கள். கூக்குரல் அதிகமாகும் என்பதினால்தான் வரிகளை மேலும் போடாமல் நிறுத்திவிட்டார்கள். மற்றபடி பட்ஜெட்டில் உள்ள பக்கங்களைப் பார்க்கும்போது வருடா வருடம் செய்யும் முயற்சியாலும், பணம் செலவு செய்ததன் பயனாகவும் முன்னேற்றம் அடைந்ததாக மிகவும் தெளிவாக 44 பக்கங்களில் தெளிவுற கூறப்பட்டிருக்கிறது. ஆனால் ஏட்டளவில் அதிகம் என்று சொல்லலாமே தவிர செயலளவில் அந்தளவு எட்டவில்லை. அந்தந்த இடங்களில் நடந்த வேலைகளையும், மக்களிடம் இருக்கிற உற்சாகத்தையும் பார்க்கிறபோது ஓரளவுக்குத்தான் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு நான் என் மகிழ்ச்சியைத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. சொல்லியிருக்கும் நிலையை எட்டவேண்டுமென்றால், மக்களிடையேயுள்ள ஊக்கக் குறைவாலும், சர்க்காரில் உள்ள மற்றவிதமான தடைகளினாலும், வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில் அல்ல இன்னும் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றினால்தான் இந்த

[Dr. E. P. Mathuram] [12th March 1960

களில் இந்த பதனீரானது, அறுப்பு காலத்தில், வேலை செய்யக்
கூடிய அனேகாயிர ஜனங்களுக்கு உதவுகிறது. இவர்கள் தங்கள்
தாகத்தைத் தணிக்க இந்தப் பதனீரைத் தேடுவார்கள்.
இவ்விதம் இவர்களிடம் கொண்டுபோய் விற்க வேண்டுமென்றால்,
அங்கங்கே வயல்களுக்குப் பானைகளாகக் கொண்டுபோய் இறக்கி
அங்கு வைத்துத்தான் விநியோகம் செய்யமுடியும். அங்கே
வேலை செய்துக்கொண்டிருப்பவர்கள் உடனடியாகத் தங்கள்
தாகத்தைப் போக்கிக் கொள்வார்கள். இப்போது ஏற்பட்டிருக்
கின்ற தடை உத்தரவினால் இந்த இருதரப்பாருக்கும் கஷ்டம்
ஏற்பட்டிருக்கிறது. திருச்சிராப்பள்ளியைப் பொறுத்தவரையில்
இந்தத் தடை உத்தரவு இருந்தால் அறுப்புக் காலத்தில் அங்கு
வேலை செய்யக்கூடிய மக்களுக்கு பயன்படுகிற பதனீர் அங்கு
கொண்டுபோய்க் கொடுக்க முடியாத நிலைமை ஏற்படும். அதே
சமயத்தில் இதற்கு என்று வைத்திருக்கும் கடைகளில் கொண்டு
போய் விற்பனை செய்யவும் முடியாது. இதனால் விற்கிறவர்
களுக்கும் எந்த விதமான பயனும் இல்லாமல் தங்களுடைய
பிழைப்பும் இல்லாமல் போய்விடும். ஆகவே, இதற்கு ஏதாவது
ஒரு விதிவிலக்குக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதன் பிறகு, மைக் உபயோகிப்பதைப் பற்றி எவ்வளவோ
சட்டங்கள் இருக்கின்றன. அதாவது "ஹெவி ட்ராபிக்"
(அதிக போக்குவரத்து) இருக்கக்கூடிய இடங்களில் உபயோகிக்
கக்கூடாது என்று சட்டங்கள் எல்லாம் இருந்தும்கூட, சில
இடங்களில் கார்கள், லாரிகள் இவைகளுடைய சத்தங்கள் போக
ஒலிபெருக்கிகளின் சத்தமும் அதிகமாக கேட்பதினால் போக்கு
வரத்துக்கு இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. ஆகவே இதைக்
குறைந்த அளவில் உபயோகிக்க வேண்டுமென்றோ, அல்லது சில
குறிப்பிட்ட இடங்களில் உபயோகிக்கக் கூடாது என்றோ
ஏதாவது ஏற்பாடு செய்தால் பல விதத்திலும் பிரயோஜனகர
மாய் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இதில் பேச
சந்தர்ப்பம் கிடைத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு
முடித்துக்கொள்கிறேன்.

DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN:
சபைத் தலைவி அவர்களே, இந்த வரவு செலவுத் திட்டத்தில்
புது வரிகள் இல்லை என்பது மட்டுமல்ல, பெரிஷபில் ஆர்ட்டிக்
கிள்ஸ் (அழுகும் பொருட்கள்) மீதுள்ள வரியை நீக்க வேண்டும்
என்று பல நாட்களாக ஜனங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க
வரிவிலக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதோடு கொடுக்கப்
பட்டிருந்த ஸ்தல ஸ்தாபன திட்டங்கள் (லோக்கல் டெவலப்
மென்ட் வொர்க்ஸ்) என்று மட்டுமில்லாமல், இதில் கிணறுகளை
மட்டும் சேர்த்துக் கொள்ளாமல், பள்க்ளிகூடங்கள் சிறு சிறு
ரஸ்தாக்கள், மற்றும் இவை போன்ற வேலைகளுக்கு எல்லாம்
வழி செய்யப்பட்டிருக்கின்றன. இது எல்லாம் மிகவும் வரவேற்
கத்தக்க விஷயம். அதற்காக மக்களுடைய சார்
பில் நாங்கள் நன்றியை சொல்லிக்கொள்ள விரும்புகிறோம்.
அதோடு வரப்போகிற காலத்தில் ராஜ்யம் பூராவும் பஞ்சாயத்
ராஜ்யம் என்ற முறையில், அதாவது கிராமங்களை ராமராஜ்ய



12th March 1960] [Dr. (Srimathi) T. S. Soundaram Ramachandran]

அடிப்படையில் எல்லா இடங்களிலும் பஞ்சாயத்து யூனியன்களை
யும் அமைத்தாக வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்
கிறது. இதில் தைரியமாக எல்லா இடங்களிலும் ஏற்படுத்த
வேண்டும் என்று தீர்மானம் எடுத்திருப்பது எனக்கு மிகவும்
மகிழ்ச்சி தருகிறது. விவசாயமும் கைத்தொழிலும் நம்முடைய
நாட்டில் எவ்வளவு முன்னேறுகிறதோ அவ்வளவு தூரம் மக்க
ளுடைய வாழ்க்கைத் தரமும் முன்னேறமுடியும். அதுதான்
நம்முடைய அளவுகோலாகும். விவசாயம் நம்முடைய தமிழ்
நாட்டில் வெகு காலமாக நடைபெறுகிறது. நாம் எவ்வளவோ
நன்றாக விவசாயம் செய்து வருகிறோம் என்றாலுங்கூட நாம்
நம்முடைய குறிக்கோளை அடைய முடியவில்லை. அதற்கும்
குறைவாகவே இருக்கிறோம். இதற்குக் காரணம் "பெர்ட்டி
லைஸர்ஸ்" (ரசாயன உரங்கள்) சரியான முறையில் கிடைக்கா
மல் இருப்பது மட்டும்தானா காரணம் என்று சர்க்கார் ஆராய
வேண்டியது அவசியம். பெர்ட்டிலைஸர்ஸ் இப்போது நமக்கு
கிடைப்பதைவிட இன்னும் வருங்காலத்தில் அதிகமாக தேவைப்
படும். நம்முடைய தேவையும் இனிமேல் அதிகரித்துக்
கொண்டே போகும். ஆகவே ரசாயன உரங்களை மட்டும்
நம்பாமல், எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் அவர்கள்
சொன்னதுபோல் பசுந்தழைகளை அதிகமாக உபயோகப்படுத்
தினால் அதிகமான பலன் காண முடியும் என்று நினைக்கிறேன்.
அதோடு கம்போஸ்ட் உரத்தையும் உபயோகிப்பது மட்டுமல்ல,
விவசாயத்தை சரியான முறையில் இப்போது இருப்பதைவிட
இன்னும் தீவிரமான முறையில் ஈடுபடுவதற்கு ஏற்பாடு செய்ய
வேண்டும். பிளாக் ஏற்பட்டிருக்கின்ற இடமாக இருந்தாலும்
சரி, பிளாக் இல்லாத இடங்களாக இருந்தாலும் சரி, எல்லா
இடங்களிலும் விவசாயத்தில் அதிகமான முன்னேற்றம் காண
வேண்டும் என்ற எண்ணத்துடன் கிராம மக்களோடு அதிகாரிகள்
ஒத்துழைத்தால் நம்முடைய குறிக்கோளை அடுத்த வருஷத்
திற்குள் அடைய முடியும் என்பதுதான் என்னுடைய நம்பிக்கை.
ஆகவே இப்போது நாம் கொண்டிருக்கிற கவனத்தோடு நின்று
விடாமல் இன்னும் அதிக கவனத்துடன், தீவிரமாக கவனம்
செலுத்த வேண்டியது நம்முடைய கடமையுமாகும்.

அதோடுகூட இப்போது தஞ்சை ஜில்லாவிலே "பாக்கேஜ்
டீல்" என்று அதாவது மிகத் தீவிர முறையில் விவசாயிகளுக்கு
வேண்டிய சகல வசதிகளையும் கொடுக்க, கெமிக்கல் பெர்ட்டி
லைஸர் உட்பட எல்லாம் கொடுத்து உதவி செய்ய அதற்கான
தீவிரத் திட்டம் அமலுக்கு வரப் போகிறது. அது நமக்கு ஒரு
பெரிய மகிழ்ச்சி யென்பது மட்டுமல்ல, இந்தியாவுக்குள் நமது
ராஜ்யம் நன்றாக வேலை செய்ய முடியும் என்ற முறையில் தஞ்சை
ஜில்லா பேக்கேஜ் டீலை அமுலாக்கிக் கொடுக்க ரொம்பவும்
நன்றாக வேலை செய்ய வேண்டும். இதிலே மக்களுடைய
ஒத்துழைப்பை அடைந்து நாம் முன்னிலையில் நிற்க வேண்டு
மென்று தெரிவித்து நமக்குக் கிடைத்ததற்காக மகிழ்ச்சியைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

[12th March 1960
[Dr. (Srimathi) T. S. Soundaram Ramachandran]

கால்நடை வளர்ச்சிக்கு கொஞ்சம் அதிகமாக ஒதுக்கியிருப்பதும் திட்டம் கொஞ்சம் கூடப் போட்டிருப்பதும் உண்மைதான் என்றாலும் இது போதும் என்று தோன்றவில்லை. ஏனென்றால் வரண்ட பிரதேசத்தில் விவசாயிகளுக்கு உப தொழிலாக இருப்பது கால்நடை வளர்ப்பதுதான். அதோடு ஒரு நண்பர் சொன்னார் நம் கிழக்குக் கடற்கரை ஓரத்தில் மீன்கள் அதிகமாகக் கிடைப்பதில்லை என்று. அது ஓரளவுக்கு உண்மைதான். ஆனாலும் நமது கடற்கரை நீளம் அதிகமாக இருப்பதால் மீன் பிடிக்கும் தொழிலை மிக மிக அதிகமாக விருத்தி செய்ய போதுமான வாய்ப்பு இருக்கிறது. மீன் சாப்பிடாதவர்கள் சாப்பிடாமல் இருக்கலாம். ஆனால் மீன்கள் சத்துள்ள உணவு என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய மீன்பிடிப்பவர்களுக்கு உற்சாகம் கொடுக்கவேண்டுமானால் குடிதண்ணீர் வசதிகூட இல்லாமல் இருக்கிற மீனவர்கள் வசிக்கக்கூடிய கிராமங்களுக்கு குடிதண்ணீர் திட்டமும், மணலில் நடக்க முடியாமல் சுமந்து கொண்டு செல்ல வேண்டிய இடங்களில் போக்குவரத்திற்கு ஹை பிரயாரிட்டி (முதலிடம்) கொடுத்தால் பல லட்சக் கணக்கான ஜனங்களுக்கு பிழைப்பது மாத்திரமல்ல, உணவு உற்பத்தியில் கணிசமான முன்னேற்றம் உண்டாகும். இப்போது இதற்காக ஒதுக்கியிருக்கக்கூடிய பணம் போதாது. இந்தத் துறையில் தீவிரமாக ஒதுக்கியிருக்கக்கூடிய பணத்தைச் செலவு செய்துவிட்டால் மேலும் இதற்குப் பணம் ஒதுக்க வேண்டும். அவர்களுக்கெல்லாம் நல்ல வசதிகள் செய்துகொடுக்க வேண்டும். ஆகையால் இன்னும் ஒரு முறை குடிதண்ணீர் வசதியும், போக்குவரத்து வசதி இல்லாத இடங்களில் போக்கு வரத்து வசதியும் செய்து கொடுக்க வேண்டும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

கூட்டுறவு முறையில் குறுகிய காலக் கடன் கொடுப்பது போல, மத்திய காலக் கடன்களும், நீண்ட காலக் கடன்களும் கொடுத்தால் விவசாயி தானாக முன்னேறி விடுவான். நல்ல முறையில் உணவு உற்பத்தி செய்வான். 'கைத்தொழில்களையெல்லாம் கூட்டுறவு முறையில் கொண்டுவர வேண்டும், இண்டஸ்டிரியல் எஸ்டேட்டுகளையெல்லாம் கூட்டுறவு முறையில் கொண்டுவர வேண்டும்' என்ற பேச்சு இருந்தது. ஆனால் இப்போது கொண்டுவரப்பட்டுள்ள நிதித் திட்டத்தில் இதைப் பற்றிய பேச்சையே காணோம். அதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப் போகிறார்கள் என்று தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கூட்டுறவு முறையில் தொழில் பண்ணைகளைக் கொண்டுவரவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தொழில்களை எடுத்துக்கொண்டால் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்ஸ் (தொழில் பண்ணைகள்), இண்டஸ்ட்ரியல் காலனீஸ் (தொழில் காலனிகள்) எல்லாம் ஜில்லா தலைநகரங்களில் வைக்கிறோம். கிராமங்களில் தொழில் நுணுக்க மனப்பான்மை வளர்ச்சி அடைய முடியாது இதனால். விவசாயம் செய்ய வழி



12th March 1960]
[Dr. (Srimathi) T. S. Soundaram Ramachandran]

யில்லாத இடங்களிலும் பஞ்சப் பிரதேசங்களிலும் தொழில் பள்ளிகளை—அது முடியாது என்று நினைக்கிறேன்—கைத் தொழில் பள்ளிகளையாவது ஏற்படுத்தி, அதையும் நகரங்களில் வைக்காமல் தாலுக்கா தலைநகரங்களில் எங்கு வசதி இருக்கிறதோ அங்கெல்லாம் வைத்து கிராமத்திலுள்ள வாலிபர்களுக்கு வசதியாக ஏற்படுத்தவேண்டும். அதிலே நான் ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மதுரை ஜில்லா இரண்டாகத்தான் இருக்கிறது. தனித்தனியாக ஆபீஸர்கள் மதுரை-வடக்கு, மதுரை-தெற்கு என்று இருக்கிறார்கள். திண்டுக்கல்லில் ஒரு பாலிடெக்னிக்கும் ஒரு தொழில் பண்ணையும் அவசியம் ஏற்படுத்துவதற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் வருஷத்திலாவது ஏற்படுத்த திட்டம் போட வேண்டும். இது பெரிய தாலூகா என்பது மாத்திரமல்ல, விவசாயத்திற்கு வசதி மிகவும் குறைந்தது. அவர்கள் சார்ப்பில் எனது மனுவைச் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அடுத்தபடியாக ஆரோக்கியத்தைப்பற்றிச் சில வார்த்தைகள் நான் சொல்லாமல் இருக்க முடியாது. குடிதண்ணீர் திட்டம், முக்கியமாக கிணறுகள்—பெரிய பெரிய காம்பொஸிட் (கூட்டு) திட்டங்களைப்பற்றி, 80,000 ரூபாய், 10,00,000 ரூபாய் 1-1/4 லட்சம் ரூபாய் திட்டங்களைப்பற்றிச் சொல்லவில்லை—கிராமத்திற்கு ஒரு கிணறு என்றும், கிராமத்திலிருந்து தள்ளி ஹரிஜனக் குடியிருப்பு இருந்தால் அதற்கு ஒரு கிணறும் இருக்க வேண்டும். 8,500 கிணறுகள் வெட்ட திட்டம் இருப்பதாக இந்த நிதி அறிக்கையில் இருக்கிறது. அதோடு முடிந்துவிடும் என்ற நம்பிக்கை காணப்படுகிறது. ஆனால் உண்மையில் அவ்வளவையும் செய்து முடிக்க முடியுமா? இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த வருஷத்தில் இன்னும் 1,000 அல்லது 2,000 செய்து முடிக்க முடியுமா என்று தெரியவில்லை. இப்போது இருக்கக்கூடிய முறையில் ஒரு கிணறுக்கு சாங்ஷன் (அனுமதி) வாங்குவதற்குள் கிராம ஜனங்களுக்கு கஷ்டங்கள், தாமதங்கள் எல்லாம் ஏற்படுகின்றன. இதற்குக் காரணம் போதுமான இர்ரிகேஷன் சூபர்வைசர்கள் (நீர்ப்பாசன மேற்பார்வையாளர்கள்) இல்லை என்று சொல்லப்படுகிறது. கிராமத்திலுள்ள கிணறுகளுக்கு அனுமதி பரவலாகத்தான் வேண்டுமே தவிர அவ்வளவு அத்தியாவசியமாகத் தேவையில்லை. ஒரு கிணறுக்கு சர்க்கார் எவ்வளவு கொடுக்கும் என்று நிர்ணயித்து அதைக் கொடுத்து, வெட்டி முடித்தவுடன் "செக் மெஷர்மெண்ட்" எடுத்தால் போதும் என்று சொன்னாலொழிய, இந்தக் குடி தண்ணீர்ப் பஞ்சம் எப்படித் தீரும் என்று தெரியவில்லை. நான் இந்தப் பிரச்னை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தோடு முடிந்துவிடும் என்று நினைத்தேன். ஆனால் நிச்சயமாக முடிகிற அறிகுறியைக் காணோம். கிராம ஜனங்களுக்கு சர்க்காரிடமிருந்து கேட்டு வாங்கிக் கொள்ளும் அளவுக்குச் சக்தி போதவில்லை. ஆகவே இதற்குத் தனிப்பட்ட திட்டம் இருந்தாலொழிய குடிதண்ணீர்ப் பஞ்சம் தீராது.

[12th March 1960
[Dr. (Srimathi) T. S. Soundaram Ramachandran]

அடுத்தபடியாக பப்ளிக் ஹெல்த் (பொது சுகாதாரம்) இப்போது பார்த்தால் ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் போதுமான அளவில் இல்லை என்று சொல்லலாம். சுவரை வைத்துக் கொண்டுதான் சித்திரம் எழுதலாம். மக்களுடைய ஆரோக்கியம் நன்றாக இருக்க வேண்டுமென்பதில் ஆட்சேபணை இருக்க முடியாது. போதுமான பயிற்சி பெற்ற ஆட்கள், உதவி நர்ஸ்கள், மருத்துவப் பெண்கள் முதலியவர்கள் இல்லாமல் இருக்கிறது. கட்டிடமெல்லாம் கட்டியாகிவிட்டது. ஆனால் அதற்கு வேண்டிய ஆட்கள் கிடையாது. டாக்டர்களைத் தவிர பலவித தொழில் நுட்ப ஊழியர்கள், நர்ஸ்கள், ஹோம் விஸிட்டர்ஸ், ஆக்ஸிலரி நர்ஸஸ், மிட்வொய்ப்ஸ் முதலியவர்களுக்கு அதிகத் தேவை இருப்பதால் இந்த வருஷம் ஆரம்பிக்கப் போகிறோமா இல்லையா என்றுகூடத் தெரியவில்லை. எல்லாம் தயாராக இருந்தும் போதுமான ஆட்கள் கிடைப்பதில்லை. நான் இங்கே வரும் போதெல்லாம் 10 பேர், 8 பேர் இருக்கிறார்களா என்று என்னிடம் ஏதோ இவர்களை உற்பத்தி செய்கிற தொழிற்சாலை இருப்பது போன்று கேட்கிறார்கள். அதற்கு அவ்வளவு டிமான்ட் இருக்கிறது. ஆகையால் அதிகமான பயிற்சி பெற்றவர்கள் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மெடிகல் காலேஜ் பற்றி குறிப்பாகச் சொல்ல வேண்டியதைத்தான் சொல்லப்போகிறேன். சென்னையில் இருக்கிற ஜீ.ஸீ.ஐ.எம். என்பது இப்படியும் இல்லை, அப்படியும் இல்லை என்ற முறையில், இரண்டுங்கெட்டான் நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. அங்குள்ள மாணவர்களுக்கும் தொல்லை, சர்க்காருக்கும் தொல்லை. அதை மாடர்ன் மெடிஸன் காலேஜாக மாற்றவேண்டுமென்று ஒரு யோசனை உலவி வருவதாக வேடிக்கையாக மந்திரி அவர்கள் சொன்னார்கள். உலவித்தான் வருகிறதா அல்லது நிச்சயமாக காலேஜ் ஆரம்பிக்கப் போகிறோமா—இந்த ஆண்டில் இல்லையென்றாலும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது வருமா என்று தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆரம்பிப்பதற்கு வேண்டிய கட்டிடமெல்லாம் இருக்கிறது. ஆகையால் இதை ஆரம்பிப்பதில் கஷ்டம் எதுவும் இருக்காது. அதோடு கோயம்புத்தூரில் வரப்போகிறதாகக் கேட்டுக் கொண்டிருக்கிற காலேஜையும் நிச்சயமாக ஒன்றிரண்டு வருஷத்திற்குள் அமைத்தால்தான் வரும் காலத்தில் வைத்தியர்கள் இல்லாமல் கஷ்டப்படக்கூடிய நிலை மாறி நாம் நல்ல முறையில் வேலை செய்ய முடியும்.

இன்னும் சொல்வதானால் எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லலாம். இன்னும் கம்யூனிட்டி டெவலப்மெண்ட் முதலியவைகளிலெல்லாம் தீவிர முயற்சி எடுத்து விவசாய உற்பத்தியை நிச்சயமாக அதிக அளவு பெருக்கவும், நமது சிறு நீர்ப்பாசனத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றியும், எடுத்துக் கொள்ளாமல் இருக்கிற பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை



[Dr. (Srimathi) T. S. Soundaram Ramachandran]
12th March 1960]

எடுத்து நிறைவேற்றியும், இரண்டு போகம் என்று ரிஜிஸ்டராகியிருந்து ஒரு போகம் மட்டும் விளைகிற நிலங்களை தீவிர உற்பத்தியின்கீழ் கொண்டுவந்தும், மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இன்னும் அதிக முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI K. S. ARDHANAREESWARA GOUNDER: கனம் சபைத் தலைவி அவர்களே, இந்த சபையின் முன் கனம் அமைச்சர் வைத்திருக்கும் 1960–61-ம் வருஷ வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். கனம் நிதி அமைச்சர் இந்த ஆண்டு தமது பட்ஜெட் உரையை மிக விரிவாக ஆற்றியிருக்கிறார். சென்ற எட்டு வருஷங்களில் அவர் கொண்டு வந்த வரவு செலவுத் திட்டங்களுக்கும் இந்த வருஷ வரவு செலவுத் திட்டத்திற்கும் மிகுந்த வித்தியாசம் இருக்கிறது. பட்ஜெட்டைப் பொறுத்த வரையிலும், அதை எவ்வளவு பெரிய புத்தகமாக அச்சடித்து வைத்தாலும் கனம் அங்கத்தினர்கள் அதை சரியாகப் புரிந்துகொள்வதில்லை என்று இந்த சபையில் அவர் அடிக்கடி எடுத்துச் சொல்லியிருக்கிறார். அந்தக் காரணத்தால்தான், கனம் நிதி அமைச்சர் இந்த ஆண்டு தமது பட்ஜெட் உரையை விரிவாக 44 பக்கங்களில் அச்சடித்திருக்கிறார். அவ்வளவு விரிவாக இருந்தால் அது இங்குள்ளவர்களுக்கு நன்றாகப் புரியும் என்ற காரணத்தால்தான் அவர் அப்படிச் செய்திருக்கிறார். இதற்கு, கனம் அங்கத்தினர் ஸ்ரீ. சின்னதுரை, ஏதோ, "பாராட்டுகிறேன்" என்று சொன்னார். அவர் எப்படிப் பாராட்டினார் என்பது தெரிகிறது. கனம் அமைச்சரின் பட்ஜெட் உரையைப் படித்துப் பார்த்தால் எல்லாம் நன்றாக விளங்கக்கூடிய முறையில் அது இருக்கிறது. சர்க்காரின் வரவு செலவுக் கணக்கு நிலை அதில் நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்தைப் பொறுத்த வரையிலும், உணவுப் பிரச்னை அதிகமாக இருக்கும் இந்தக் காலத்தில் அதற்கு முதலிடம் கொடுத்திருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். சர்க்கார் விதைப் பண்ணைகளைப் பொறுத்தவரையிலும், அவை நல்ல முறையில் நடக்காததால், இனிமேல் இங்குள்ள உத்தியோகஸ்தர்களை பெர்மனெண்டாக வைத்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது மிகவும் போற்றத்தக்கது. விவசாயப் பண்ணையோ, விதைப் பண்ணையோ நன்றாக நடைபெறவில்லை என்றால், அதற்கு முக்கிய காரணம் அங்குள்ள அதிகாரிகளை அடிக்கடி மாற்றுவதுதான் என்று சொல்ல விரும்புகிறேன். பண்ணையில் இருக்கும் பண்ணை மானேஜரை அங்கேயே நிரந்தரமாக வைத்து, நன்றாக உற்பத்தி செய்கிறவர்களுக்கு போனஸ் கொடுத்தால்தான் இந்தத் திட்டம் நன்றாக நடைபெறும் என்பது என் அபிப்பிராயம். நிலத்தின் வளத்தை ஆராய்ந்தறிந்து முடிவுகள் செய்ய வேண்டியிருப்பதால், அந்த உத்தியோகஸ்தர்கள் அங்கேயே இருந்தால்தான் இந்தத் திட்டத்தால் நல்ல பலன் ஏற்படும் என்பதை வலியுறுத்துகிறேன்.

[Sri K. S. Ardhanareeswara Gounder] [12th March 1960

அடுத்தபடியாக, நீர்ப்பாசனம் மிகவும் முக்கியமானது. நமது மாநிலத்தில் எல்லா பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களையும் நிறைவேற்றி விட்டதாகவும், இனிமேல் நிறைவேற்றுவதற்கு எந்தப் பெரிய நீர்ப்பாசனத் திட்டமும் இல்லை என்றும் கனம் நிதி அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். என்னைப் பொறுத்தவரையிலும் நான் ஒன்று சொல்வேன். நமது மேட்டூர் அணையைப் பொறுத்தவரையிலும், முன் இங்கே சீப் என்ஜினியராக இருந்த சி. ஜி. பார்பர் மேட்டூர் அணையைப்பற்றி எழுதிய வரலாற்றில் ஒரு விஷயத்தைத் தெரிவித்திருக்கிறார். அணையைக் கட்டும்போதே, இன்னும் 10 அடி உயரம் உயர்த்துவதற்கு வசதியான முறையில் அணையின் அஸ்திவாரத்தையும் அதற்கு தகுந்தபடி கதவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று அவர் தமது ரிப்போர்டில் எழுதியிருக்கிறார். அதாவது, அதிகமான தண்ணீரை தேக்குவதற்கு, வெளியேற்றுவதற்கு வசதியான முறையில், ஸர்பிலஸ் பாலமும் அதன் பலகைகளைத் தூக்குவதற்கு வசதியான முறையில் அது அமைந்திருப்பதாக அவர் எழுதியிருக்கிறார். தற்போது இருக்கும் உயரத்திற்கு அதற்கு மேல் இருக்கக்கூடிய தண்ணீரைப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய நிலங்கள் அப்போது இல்லாத காரணத்தினால்தான் அப்போது அது அவ்வாறு உயரம் குறைவாகக் கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் பிற்காலத்தில் அதிகமான நீரை வெளியேற்றி நிலங்களுக்குப் பாய்ச்சக்கூடிய முறையில், "டிஸைன்" செய்யப்பட்டு அந்த அணைக்கட்டு கட்டப்பட்டிருக்கிறது. நாம் மைசூர் எக்ரிமெண்டைப் பற்றிப் பேசுகிறோம். அது 20, 25 வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட எக்ரிமெண்டாக இருக்கக்கூடும். இப்போது, மேட்டூர் அணைக்கட்டிலுள்ள தண்ணீர் எவ்வளவு, அதிலிருந்து எவ்வளவு தண்ணீர் பாசனத்திற்காக நிலங்களுக்கு விடப்பட்டது, எவ்வளவு தண்ணீர் சமுத்திரத்திற்குப் போய் சேதாரமாகப் போய்விட்டது என்ற கணக்குகளை எஞ்சினியரிங் இலாகாவினர் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களும், இந்த அணையை இன்னும் 10 அடி உயர்த்தலாம் என்று அபிப்பிராயப்படுகிறார்கள். ஒரு கோடி ரூபாய் செலவில் இதைச் செய்யலாம். அதனால் 2 லட்சம் ஏக்கர் நிலங்கள் பயனடையும். இரண்டு லட்சம் ஏக்கர் நிலங்கள் அந்த பாசன வசதிக்கு அருகதையான நிலையில் இருக்கின்றன. இதற்கு வேண்டிய தண்ணீர் இருக்கிறது என்பது அந்த எஞ்சினியர்களுடைய கணக்கிலிருந்து தெரிகிறது. நம் மாநிலத்தில் கூடிய விரைவில் 2 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு காவேரி ஆற்றிலிருந்து தண்ணீர் பாய்ச்சுவதற்கு வழிவகை இருக்கிறது என்பது நம் எஞ்சினியர்களுடைய ரிப்போர்டிலிருந்து தெரிகிறது. இதைச் செய்வதற்கு செலவு குறைவாகத்தான் ஆகும். மேட்டூர் அணைக்கட்டில் இதற்கு அவசியமான ஏற்பாட்டைச் செய்ய ஒரு கோடி ரூபாய் செலவாகக்கூடும். இதை இன்னும் அதிகமாக விஸ்தரிக்க வேண்டுமானால் கால்வாய்களை வெட்ட 2 கோடி ரூபாய் செலவாகக்கூடும். ஆக மொத்தம் 3 கோடி ரூபாய் செலவாகக்கூடும். இந்த 3 கோடி ரூபாய் செலவில் 2 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு நல்ல பாசன வசதி செய்து தர முடியும் என்பதை நான் வலியுறுத்துகிறேன்.



12th March 1960] [Sri K. S. Ardhanareeswara Gounder]

அடுத்தபடியாக, சேலம் இரும்புக் கனி சிறந்த இரும்புக் கனி என்று நிபுணர்கள் சொல்வதை நாங்கள் பாராட்டுகிறோம். இவ்வாறு நான் ஏன் சொல்கிறேன் என்றால், மேட்டூர் அணை கட்டப்பட்டபோது, அந்த அணைக்கட்டிலிருந்து பாசன வசதியடையக்கூடிய நிலங்கள் 40,000 ஏக்கருக்கு சேலம் ஜில்லாவில் இருக்கின்றன என்பது தெரிவிக்கப்படாமல் இருந்திருக்கிறது. அதன் காரணமாக அப்போது நாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறோம். ஆனால் அப்போது பாசன வசதிக்குரிய நிலங்கள் 40,000 ஏக்கருக்கு சேலம் ஜில்லாவில் இருந்தபோதிலும் அந்த விஷயத்தை யாரும் கவனிக்காததால், "பிரதேசம் மேடு பள்ளமாக இருக்கிறது, பாசனத்திற்கு வசதி இல்லை" என்று தெரிவிக்கப்பட்டு நாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கிறோம். அதற்குப் பிறகு இப்போதுதான் கனம் அமைச்சர்கள் அங்கு 41,000 ஏக்கருக்கு பாசன வசதிக்கு ஏற்பாடு செய்ய நேர்ந்தது. அதேபோல இரும்புக் கனி விஷயத்தில் நாங்கள் ஏமாற்றப்படவிருந்தோம். அந்த இரும்புக் கனி பிரயோஜனமற்றது என்று சென்ற ஆண்டு சொல்லிக்கொண்டிருந்தார்கள். இந்த ஆண்டுதான் அது சிறந்த கனி என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே அவ்வாறு சொல்வதைப் பாராட்டுகிறோம். அந்தத் திட்டத்தை அதிவிரைவில் நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். சேலத்தைப் பொறுத்தவரையிலும் ஒவ்வொரு திட்டத்திலும், திட்டத்தை ஆரம்பித்து நிறைவேற்றுவதில் காலதாமதம் ஆகிறது. சேலத்தில் உள்ள இரும்புக் கனியைப் பயன்படுத்தி நடத்தக்கூடிய தொழிலையும், மேட்டூரில் ஆரம்பிக்கவிருக்கும் அலுமினியத் தொழிற்சாலையையும் காகிதத் தொழிற்சாலையையும் அதிவிரைவில் ஆரம்பித்து நடத்த வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மேலும் நான்கு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளைத் திறக்க வழிவகைகள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. மோகலூரில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலையை அமைக்கவேண்டுமென்று நான் இந்த சபையில் பல தடவை சொல்லியிருக்கிறேன். மேலும், கோபிசெட்டிபாளையத்தில் இன்னொரு சர்க்கரை ஆலை ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது என்ற செய்தியை சென்ற வாரம் பத்திரிகைகளில் பார்த்தோம். இந்த இரண்டு இடங்களிலும் சீக்கிரம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்தினால், உண்மையிலேயே, உயர்ந்த ரக கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் அங்கே இருப்பதால் நல்ல சர்க்கரையை உற்பத்தி செய்ய முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மேட்டூரிலிருந்து மைசூருக்குப் போவதற்கு ஒரு குறுகிய ரஸ்தா போடமுடியும். மைசூர் சர்க்கார் நமது மாநில பார்டர் வரையிலும் சாலை போட்டுக்கொண்டிருக்கிறார்கள். நான் குறிப்பிட்ட குறுக்கு ரஸ்தாவை சேலத்திலிருந்து மைசூருக்குப் போவதற்கு அமைத்தால், உண்மையிலேயே, இப்போதுள்ள பாதைப்படி போகவேண்டிய தூரத்தைவிட

[Sri K. S. Ardhanareeswara Gounder] [12th March 1960

100 மைல் குறைவாக இருக்கும், அந்த ரஸ்தாவின் மூலம் போக வேண்டிய தூரம். அந்த ஒரு ரஸ்தா நமது அரசாங்க காலத்திற்கு முன்பே, அதாவது முகமதிய அரசாட்சிக் காலத்தில் இருந்து வந்தது. ஆனால், பிற்காலத்தில் அணை கட்டியதன் காரணமாக பல இடங்களில் தண்ணீரில் மூழ்கிவிட்டதால் அங்கே போக்குவரத்தில் இடைஞ்சல் ஏற்பட்டுவிட்டது. நான் குறிப்பிட்ட போக்குவரத்து ஏற்பாட்டை உடனடியாகச் செய்து தர வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

(Mr. Speaker in the chair.)

மண் வளச் சோதனை நிலையங்கள் ஜில்லாவுக்கு ஒன்று வீதம் இருக்கவேண்டும் என்று சொல்வதை நான் பாராட்டுகிறேன். அதற்கும் மேலாக, ஒவ்வொரு அபிவிருத்தித் திட்டப் பிரதேசத்திலும் ஒரு மண் வளச் சோதனை நிலையம் இருக்கவேண்டியது அவசியம். உணவு உற்பத்தியை அதிகமாகப் பெருக்க வேண்டுமானால், ஒவ்வொரு அபிவிருத்தித் திட்டப் பிரதேசத்திலும் ஒரு மண் வளச் சோதனை நிலையம் இருக்கவேண்டும்.

11.00 a.m. அடுத்தபடியாக, கிணறுகளுக்காக ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சேலம் ஜில்லாவைப் பொறுத்தவரையிலும் இந்தத் தொகை போதாது. அங்கே 20 அடி ஆழத்தில் தண்ணீர் வருவதில்லை. அங்கே எங்கு பார்த்தாலும் 150 அல்லது 180 அடி ஆழம் வெட்ட வேண்டியிருக்கிறது. அங்கே வெட்ட 3,000, 4,000 ரூபாய் வேண்டியிருக்கிறது. சேலம் ஜில்லாவில் ராசீபுரம் தாலூகாவில் 130, 150 அடி ஆழம் வெட்டினால்தான் தண்ணீர் வருகிறது. ஆகவே சேலம் ஜில்லாவைப் பொறுத்தவரையிலும், இந்தத் தொகையை, செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள நிலைமையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு நிர்ணயிக்காமல், இன்னும் உயர்த்த வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, டீசல் வரியை சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இங்கு போடும்போது விவசாயிகளுக்கு நாங்கள் சலுகை கொடுக்க யோசிக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எப்படி அழுகும் பொருள்களுக்குச் சலுகை கொடுத்தார்களோ அதே மாதிரி, குறிப்பாக விவசாயிகள் பம்ப் செட்டுகளுக்குப் பயன்படுத்தக் கூடிய டீசல் எண்ணைக்கும் வரிச் சலுகை கொடுக்க வழி வகைகளைச் செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களிடம் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நம் மாகாணத்தில் மின்சாரத்தை உபயோகித்துத் தண்ணீர் இறைக்கும் யந்திரங்கள் அதிகமாகத் தேவையாக இருப்பதால் மத்திய சர்க்கார் எலக்ட்ரிக் மோட்டார்களுக்குப் போட்டிருக்கக்கூடிய வரியிலிருந்து விவசாயிகளுக்குச் சலுகை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த வரியிலிருந்து விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும்படி மத்திய சர்க்காரை நம் சர்க்கார் கேட்டுக் கொள்ளவேண்டுமென்று கூறி, இந்த சந்தர்ப்பத்தை எனக்கு அளித்ததற்காக சபாநாயகருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



12th March 1960]

* SRI S. RAMASAMI THEVAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வருஷ நிதி ஆண்டிலே புதிய வரி ஒன்றையும் நிதியமைச்சர் போடவில்லையென்ற மகிழ்ச்சி எல்லோராலும் தெரிவிக்கப்பட்டது. உண்மையிலேயே பார்க்கும்போது ஏற்கனவே போடப்பட்டிருக்கும் வரிப்பளுவை மக்கள் தாங்க முடியாமல் தவித்துக் கொண்டிருப்பதும், கடன்களைக் கொடுக்கமுடியாமல் மக்கள் பரிதவித்துக் கொண்டிருப்பதுமான நிலைமையைப் பார்ப்போமானால், இந்த ஆண்டு வரியில்லை என்பதைப் பெரிய மகிழ்ச்சியாகக் கொள்ளமுடியாது. உதாரணமாகப் பார்க்கும்போது, எங்கள் தாதுக்காவில் 30 லட்சம் ரூபாய்க்குமேல் இன்னும் வரி பாக்கி மக்களிடம் இருந்து வசூலிக்கப்பட வேண்டியிருக்கிறது. அவர்கள் வரி பாக்கியை செலுத்த முடியாத நிலைமையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கடன்களையும், ஏற்கெனவே உள்ள வரிகளையும் கொடுக்க முடியாத நிலைமையில் மக்கள் இருக்கும் போது புதியவரி எதுவும் போடவில்லை என்பதற்காக மகிழ்ச்சி கொள்ளுதல் பெருமையாகாது. மக்களுடைய வரிப்பளு இன்னும் குறைக்கப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்போது எங்கள் தாலுகாவில் வரி வசூல் மிகவும் கடுமையாக இருந்து வருகிறது. சென்ற ஆண்டில் மழை மிகவும் குறைவு. ஆண்டுதோறும் பெய்யும் மழையில் பாதி கூடப் பெய்யவில்லை. பரிபூரண பஞ்சம் நிலவுகிறது. அப்படியிருந்தும் வரி வசூல் கடுமையின் காரணமாக மக்கள் மிகவும் கொடுமைக்குள்ளாகிறார்கள் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சிறிய நீர்ப்பாசன வசதிகள் எல்லாம் செய்து கொடுப்பதாகச் சொல்லுகிறார்களே தவிர, அதிகமாக ஒன்றும் செய்யப்படவில்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிதி ஆண்டிலே கூட சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக அதிகமான தொகை ஒதுக்கப்படவில்லையென்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். குளங்கள் வெட்டுதல், ஆழப்படுத்துதல் மாத்திரம் போதாது. ஆழப்படுத்துவதால் மட்டும் நீர் வந்து சுரந்துவிடாது. வாய்க்கால்கள் நீர் வரத்து வழிகளிலும் முக்கிய கவனம் செலுத்தவேண்டும். முக்கியமாக இனும் கிராமங்களில் உள்ளவர்கள் கிராமங்கள் செட்டில்மெண்ட் ஆகிவிடப் போகிறது என்று நினைத்து, நீர் வரக்கூடிய வாரி கால்கள், வாய்க்கால்கள் ஆகியவற்றை அழித்து நிலங்களைச் சொந்தமாக்கிவிட்டார்கள். இதனால் நீர் வரத்து தடைப்படுகிறது. முதலிலே இந்த வடிகால்களைச் செப்பனிடவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, காட்டாறுகள் அதிகமுள்ள இடங்களிலும் வீணாகப் போகும் தண்ணீரை அணைகள் மூலமாகத் தேக்கி விளைச்சலைப் பெருக்குவதற்கு சர்க்கார் உடனடியாக உதவி செய்யவேண்டும். எங்கள் தாலுகாவில் இது பற்றிய பல திட்டங்கள் இருக்கின்றன. அந்தத் திட்டங்களையெல்லாம் கூடிய சீக்கிரம் பூர்த்தி செய்து கொடுத்தால் அவ்விடம் உள்ள மக்கள் நல்வாழ்வு வாழ வகை ஏற்படுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[Sri S. Ramasami Thevar] [12th March 1960

புதிதாகக் கிணறுகள் வெட்டுவதற்கு அரசாங்கம் பணம் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தப் பணத்தை வாங்க மக்கள் படும் கஷ்டம் அதிகம். பூராப் பணமும் கிடைப்பதில்லை. இது பற்றி நான் ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். முக்கியமாக, சில இடங்களில் மக்கள் கிணறுகளை வெட்டும்போது ஊற்று இல்லாவிட்டால் தண்ணீர் உள்ளது போல் பாவனை செய்து காட்டிவிடுகிறார்கள். தாங்கள் வாங்கிய பணத்திற்குக் கணக்குக் காட்ட வேண்டுமென்பதற்காக அவ்வாறு செய்கிறார்கள். அவ்வாறு இல்லாமல், நீர் ஊற்று உள்ள இடங்களை நல்ல நிபுணர்களைக் கொண்டு கண்டு பிடித்து சர்க்காரே கிணறுகளை மக்களுக்கு வெட்டிக் கொடுத்தால் அதிகப் பயன் ஏற்படும். மக்களிடம் இருந்துகூட கொஞ்சம் செலவுத் தொகை வசூல் செய்து கொள்ளலாம். மற்றப்படி அவர்களிடம் பணத்தைக் கொடுத்தால் அவர்கள் சில சமயங்களில் செலவு செய்து விடுகிறார்கள். இன்னும் பல வழிகளில் சர்க்கார் மக்களுக்குக் கடன் உதவி செய்து கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற கடன், காலா காலத்திலும், வேண்டிய நேரத்திலும், பூராத் தொகையும் கிடைப்பதில்லை என்பது பல முறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் சர்க்கார் கவனம் செலுத்தவேண்டும்.

கூட்டுறவு இயக்கங்கள் மூலம் கடன் கொடுப்பது சரியான முறையில் கொடுக்கப்படுவதில்லை. ஒரு கூட்டுறவு இயக்கம் வருஷத்திற்கு 75,000 ரூபாய் வருஷத்திற்குக் கொடுப்பதாக இருந்தால், வருகிற வருஷத்தில் அந்தத் தொகை முழுவதும் செலுத்திய பின்புதான் பணம் மறுபடியும் வாங்கும் நிலைமை இருக்கிறது. சிலர் பணத்தை முன்னதாகக் கொடுத்திருப்பார்கள். சிலரால் முன்னதாகக் கொடுக்க முடியாது. அவர்கள் முழுத் தொகையையும் கட்டுவதற்காக அதிக வட்டிக்குக் கடன் வாங்கி அதைக் கொண்டுபோய்க் கட்டிவிட்டு பணம் பெற்று வருகிறார்கள். இதனால் மக்கள் அதிக வட்டிக்கு வெளியில் கடன் வாங்கும் நிலைமை ஏற்படுகிறது. அவ்வாறு இல்லாமல் கடன் அடைய அடைய, ஒரு அளவு தொகையை மக்கள் செலுத்தியிருந்தால் அந்தத் தொகையைக் கொண்டு மறுபடியும் திரும்பக் கடன் கொடுத்து வந்தால் பணம் அதிகமாகப் புழக்கத்துக்கு வந்துவிடும். மக்களுக்கும் கஷ்டம் இராது.

நில அடமான பாங்கால் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. நிலம் அவர்களுடைய மதிப்பீட்டின்படி ரொம்பக் குறைவாக இருக்கிறது. சி.எம்.பி. ஏரியா போன்ற பகுதிகளில்கூட அந்த மதிப்பைப் பொறுத்துத்தான் கடன் கொடுக்கிறார்கள். மக்கள் அந்த நிலத்தை நல்ல முறையில் வளப்படுத்தி வந்திருக்கிறார்கள். முன்பு இருந்ததைவிட இப்போது விலை அதிகமாக இருக்கிறது. மார்க்கட் விலை என்னவோ அந்த அளவுக்கு மதிப்பீடு செய்து நில அடமான பாங்கு கடன் கொடுக்க உத்தரவு இடவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



12th March 1960] [Sri S. Ramasami Thevar]

அடுத்தபடியாக, சாலைகள் அமைப்பு பற்றி அதிகமான பணம் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. நகர மக்கள் எல்லாம், சாலை வசதி போதாது, இன்னும் அதிக வசதியாக ரோடுகள் போடவேண்டியிருக்கிறது என்று கூச்சலிடுகிறார்கள். கிராமங்களைப் பார்க்கும்போது, வண்டிகூட அந்தச் சாலைகளில் போகமுடியாது. மக்கள் நடந்து கூடப் போக முடியாது. முட்புதர், வரப்பு வாய்க்கால்களைக் கடந்து போக வேண்டிய நிலைமை இருக்கிறது. கனம் மின்சார அமைச்சர் கூட சமீபத்தில் கிராமந்தோறும் சென்றார்கள். போதிய ரோடு வசதி இல்லாத காரணத்தினால் அவர்கள் ஒரு கூட்டத்தில் கூட காலா காலத்தில் கலந்துகொள்ள முடியவில்லை. கிராம மக்களுக்கும் விவசாய மக்களுக்கும் வசதி செய்து கொடுக்கும் வகையில் கிராமங்களில் போக்குவரத்து வசதிகளை அதிகரிக்க வேண்டும். கிராம ரோடுகளை மெயின் ரோடுகளோடு இணைக்கவேண்டும். சென்ற நவம்பர் மாதத்தில் பட்டுக்கோட்டையில் ஒரு மகாநாடு நடத்தப்பட்டது. அன்று பேசும்போது நமது "சீப் எஞ்சீனியர்" கூட, அரந்தாங்கி பகுதியில் 10, 15 வருஷங்களுக்கு முன் என்ன நிலைமை இருந்ததோ அதே நிலைமையில்தான் இன்றும் இருக்கிறது என்பதை அவர்களே ஒப்புக் கொண்டார்கள். ஒரு மைல் அளவுக்குக் கூட அரந்தாங்கி பகுதியில் ரோடுகள் போடப்படவில்லையென்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். பிற்போக்காகவே எங்கள் தாலுகா விடப்பட்டிருக்கிறது என்பதை மீண்டும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். ரோடு வசதி இல்லாவிட்டால் உழவனுக்கு மிகுந்த கஷ்டம் ஏற்படுகிறது. அவனுடைய தானியங்களைக் கொண்டு போகவோ அல்லது அவனுக்கு வேண்டிய உரம் மற்ற பொருள்களைக் கொண்டு வரவோ மிகவும் கஷ்டம் உண்டாகிறது. ஆகவே, ஒவ்வொரு கிராமத்திலும் ரோடு வசதியை விஸ்தரிக்கவேண்டுமென்று மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். பிள்ளைகள் பள்ளிக்கூடம் வருவதற்காக மத்தியான உணவு ஓரளவு பயன்படுகிறது என்றாலுங்கூட, இந்தப் பொறுப்பை ஆசிரியர்களிடத்தில் விடுவது பெரிய தவறு ஆகும். இது அவர்களுக்கு பெருத்த கஷ்டத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு வேலை என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன். ஆசிரியர்கள் பெற்றோர்களிடத்திலே வீடு வீடாகப் போய், மத்தியான உணவுக்காக பொருள், மற்றவை கேட்கும்போது, அவர்கள் வசைமொழிகள் கேட்க ஆளாகவேண்டி ஏற்படுகிறது. உபாத்தியாயர்களுக்கு நாட்டில் மதிப்பு கிடையாது. அவர்களுக்குச் சரியான ஊதியமும் கிடையாது. மக்கள் அவர்களை மதிப்பதில்லை. அரசாங்கம் அவர்களுடைய குறைகளைப் போக்குவதில்லை. அத்தகைய நிலையில் இருக்கும் ஆசிரியர்களைப் பெற்றோர்களிடத்தில் போகும்படிச் சொல்வதனால், "உனக்கு என்னடா வேலை? நீ சம்பாதித்துக் கொடுக்கிறதுதானே?" என்று வசைமொழி பெற்றோர்களிடத்தில் கேட்கவேண்டி ஏற்படுகிறது. உண்மையிலேயே மத்தியான உணவு போடுவது பிள்ளை

களுக்கு உதவியளிக்கக்கூடியதாக இருக்கவேண்டுமானால், இந்த வேலையை பஞ்சாயத்துக்களுக்கு விட்டுவிடுவது நல்லது என்று நான் கருதுகிறேன்.

மற்றபடி, எங்கள் பகுதி, முக்கியமாக என்னுடைய தாலூகாவிலுள்ள கிராமங்கள் செட்டில்மென்ட் ஆய்விட்டன. செட்டில்மென்ட் ஆவதற்கு முன்னமே இருந்த வரியைவிட, இப்பொழுது பல மடங்கு அதிகமான வரியை சர்க்கார் வசூலித்திருக்கிறார்கள். இதுபற்றி உயர்நீதி மன்றத்திலே கூட "ரிட்" போடப்பட்டுங்கூட அவர்களுடைய தீர்ப்பை சர்க்கார் உதாசீனம் செய்து, அதிகமான வரியை வசூலித்திருக்கிறார்கள். செட்டில்மென்ட் ஆய்விட்டது. செட்டில்மென்ட்டிலே வரி எவ்வளவு என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த அளவுதான் வரி விதிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வதோடு, அதிகமாக வசூலித்த வரித் தொகையை பாக்கிக்கு சேர்த்துக் கொள்ளும்படியாக நான் தாழ்மையாக கேட்டுக்கொள்ளுகிறேன். எந்தத் திட்டங்களை நாம் போட்டாலுங்கூட, எவ்வளவு வரிகள் விதித்தாலுங்கூட, நிர்வாகம் நல்ல முறையிலே நடக்கவேண்டும். நிர்வாகத்திலே இன்று பல ஊழல்கள், தாட்சண்யங்கள் மலிந்து விட்டன. இவைகளைப் போக்குவதற்கு சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன். வணக்கம்.

* SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM: கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் 1960–61-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை ஆமோதிக்கும் வகையிலே சில வார்த்தைகள் பேச விழைகின்றேன். இங்கு பேசிய எதிர்க்கட்சி அங்கத்தினர்களில் ஒருவர், எல்லாம் தேசீய மயமாக்கப்பட வேண்டும், அதுதான் சோஷலிசம் என்ற கருத்தை வலியுறுத்திக் கூறினார்கள். நான் தங்கள் மூலமாக ஒரு விஷயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நம் அரசியல் சட்டத்தை நிர்ணயம் செய்யும்போது நமது நாட்டினுடைய பண்புக்கு ஏற்றவாறு அரசியலமைப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அதிலே சோஷலிசம் என்பதற்கு அர்த்தமும் உண்டு. ஆகவே, சோஷலிசம் என்று சொன்னால், முழுக்க முழுக்க சர்க்கார்தான் எல்லாம் செய்வது என்று அர்த்தம் அல்ல. பலப் பல பெரிய கன ரகத் தொழில்களைத் தனியார்கூட செய்யலாம் என்ற ஒரு கருத்து எங்களுடைய கொள்கையிலே இருக்கிறது. நாம் வேறு நாட்டிலிருந்து வருகின்றவர்களுடைய முதலீட்டையும் விரும்புகிறோம். அப்படி இருக்கும்போது நம்முடைய நாட்டின் முதலீட்டை ஏன் விரும்பக்கூடாது? அதை வைத்துக்கொண்டு தொழில் முன்னேற்றம் ஏன் செய்யக் கூடாது என்பதைத்தான் நான் தங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

மேலும், இந்த நிதி நிலை அறிக்கையை நாம் படித்துப் பார்க்கும்போது, எதை விட்டிருக்கிறார்கள் என்று நோக்குவோமானால், எதையும் விடாமல், எந்த முறையிலே நம் நாட்டினுடைய முன்னேற்றத்தைக் கருதவேண்டுமோ அந்த வழிவகைகளையெல்லாம் கருதி, இந்த நிதி நிலை அறிக்கையானது தயார் செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக நாம் அனைவரும் நமது நிதி அமைச்சர் அவர்களைப் பாராட்டத்தான் வேண்டும்.





மேலும், கல்வி சம்பந்தமான விஷயமாக ஓரிரண்டு வார்த்தைகள் நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். இந்த அறிக்கையிலே இந்த ராஜ்யத்தில் ஆரம்பக் கல்வி பெற வேண்டியவர்கள் 45 லட்சம் பேர்கள் இருக்கின்ற அளவிலே, 6 வயதிலிருந்து 11 வயது வரையுள்ள 27-1/4 லட்சம் பேர்களுக்கு கட்டாய ஆரம்பக் கல்வி கொடுக்க முடியும் என்கிற ஒரு விஷயத்தையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். மீதியாக இருக்கும் 17 லட்சம் குழந்தைகள் யார் என்று நாம் சிந்தித்துப் பார்ப்போமானால், அவர்களில் முக்கால் வாசி பேர்கள் பெண்களாகத்தான் இருக்கமுடியும். ஆகவே, 27-1/4 லட்சத்தோடுகூட கிராமத்திலே இருக்கும் ஹரிஜன பெண் குழந்தைகளுக்கும், இன்னும் வறுமையிலே விளையாடிக்கொண்டிருக்கிற மிக அடித்தளத்திலே இருக்கும் பெண் குழந்தைகளுக்கும் எப்படி நாம் ஆரம்பக் கல்வி அளிப்பது, எந்த முறையிலே அவர்களைக் கட்டாயப்படுத்தி சேர்ப்பது என்பதைச் சர்க்கார் மிக முக்கியமாக கவனித்து அந்த மிகுதிப்பட்ட பெண் குழந்தைகள் விஷயத்திலும் அதிகமான சிரத்தை எடுத்து அவர்களையும் பள்ளிக்கூடத்திலே சேர்ப்பதற்கு நாம் முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பொதுவாக, கிராமங்களிலும் சரி, நாட்டுப் புறத்திலும் சரி, ஏழைப் பெண்கள் ப்ரைவேட்டாக தனிப்பட்ட முறையிலே படித்து, ஈ.எஸ்.எல்.ஸி. பரீட்சைக்குப் போகலாம் என்ற விதி உண்டு. இன்றைக்குப் பல விதவைப் பெண்களும் பல கஷ்டப்படுகிற பெண்களும், கணவன்மார்களால் கைவிடப்பட்ட பெண்களும் ஈ.எஸ்.எல்.ஸி. படித்து அதனால் ஒரு சில நன்மை அடைந்துவருகிறார்கள். ஆகையால், ஈ.எஸ்.எல்.ஸி. மாத்திரம் அல்ல, எஸ்.எஸ்.எல்.ஸி. கூட அவர்கள் ப்ரைவேட்டாகச் சென்று படித்துப் பாஸ் செய்யலாம் என்ற விதியைச் சர்க்கார் அமைப்பார்களானால், அதனால் இன்னும் பல கஷ்டப்படுகிற பெண்மணிகள் ஒரு நலனை அடைவார்கள் என்று கருதுகிறேன். அதிகமாக பெண்கள் கிராமங்களிலே இருக்கும் பெண்களாகத்தான் இருக்கவேண்டும் அல்லது நகரத்தில் இருப்பவர்களாக இருந்தாலுங்கூட கிராமங்களிலே ஏற்படுத்தப்பட்ட ஒரு விடுதியிலே சென்றுதான் படித்து பாஸ் செய்தாக வேண்டும். ஆகையால், அவர்கள் மூலமாக கிராமங்களுக்குச் சேவை செய்யக்கூடிய வசதியும் அவர்களுக்குக் கிடைக்கும், நமக்கு நல்ல ஒழுக்கமாக உள்ள, பொறுப்புள்ள பெண்கள் கிடைப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, கிராம முன்னேற்றத்தை அனு

[Sri S. Ramasami Thevar] [12th March 1960

களுக்கு உதவியளிக்கக்கூடியதாக இருக்கவேண்டுமானால், இந்த வேலையை பஞ்சாயத்துக்களுக்கு விட்டுவிடுவது நல்லது என்று நான் கருதுகிறேன்.

மற்றபடி, எங்கள் பகுதி, முக்கியமாக என்னுடைய தாலூகாவிலுள்ள கிராமங்கள் செட்டில்மென்ட் ஆய்விட்டன. செட்டில்மென்ட் ஆவதற்கு முன்னமே இருந்த வரியைவிட, இப்பொழுது பல மடங்கு அதிகமான வரியை சர்க்கார் வசூலித்திருக்கிறார்கள். இதுபற்றி உயர்நீதி மன்றத்திலே கூட "ரிட்" போடப்பட்டுங்கூட அவர்களுடைய தீர்ப்பை சர்க்கார் உதாசீனம் செய்து, அதிகமான வரியை வசூலித்திருக்கிறார்கள். செட்டில்மென்ட் ஆய்விட்டது. செட்டில்மென்ட்டிலே வரி எவ்வளவு என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ, அந்த அளவு தான் வரி விதிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வதோடு, அதிகமாக வசூலித்த வரித் தொகையை பாக்கிக்கு சேர்த்துக் கொள்ளும்படியாக நான் தாழ்மையாக கேட்டுக்கொள்ளுகிறேன். எந்தத் திட்டங்களை நாம் போட்டாலுங்கூட, எவ்வளவு வரிகள் விதித்தாலுங்கூட, நிர்வாகம் நல்ல முறையிலே நடக்கவேண்டும். நிர்வாகத்திலே இன்று பல ஊழல்கள், தாட்சண்யங்கள் மலிந்து விட்டன. இவைகளைப் போக்குவதற்கு சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன். வணக்கம்.

* SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM: கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் 1960–61-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை ஆமோதிக்கும் வகையிலே சில வார்த்தைகள் பேச விழைகின்றேன். இங்கு பேசிய எதிர்க்கட்சி அங்கத்தினர்களில் ஒருவர், எல்லாம் தேசீய மயமாக்கப்பட வேண்டும், அதுதான் சோஷலிசம் என்ற கருத்தை வலியுறுத்திக் கூறினார்கள். நான் தங்கள் மூலமாக ஒரு விஷயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நம் அரசியல் சட்டத்தை நிர்ணயம் செய்யும்போது நமது நாட்டினுடைய பண்புக்கு ஏற்றவாறு அரசியலமைப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அதிலே சோஷலிசம் என்பதற்கு அர்த்தமும் உண்டு. ஆகவே, சோஷலிசம் என்று சொன்னால், முழுக்க முழுக்க சர்க்கார்தான் எல்லாம் செய்வது என்று அர்த்தம் அல்ல. பலப் பல பெரிய கன ரகத் தொழில்களைத் தனியார்கூட செய்யலாம் என்ற ஒரு கருத்து எங்களுடைய கொள்கையிலே இருக்கிறது. நாம் வேறு நாட்டிலிருந்து வருகின்றவர்களுடைய முதலீட்டையும் விரும்புகிறோம். அப்படி இருக்கும்போது நம்முடைய நாட்டின் முதலீட்டை ஏன் விரும்பக்கூடாது? அதை வைத்துக்கொண்டு தொழில் முன்னேற்றம் ஏன் செய்யக் கூடாது என்பதைத்தான் நான் தங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

மேலும், இந்த நிதி நிலை அறிக்கையை நாம் படித்துப் பார்க்கும்போது, எதை விட்டிருக்கிறார்கள் என்று நோக்குவோமானால், எதையும் விடாமல், எந்த முறையிலே நம் நாட்டினுடைய முன்னேற்றத்தைக் கருதவேண்டுமோ அந்த வழிவகைகளை யெல்லாம் கருதி, இந்த நிதி நிலை அறிக்கையானது தயார் செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக நாம் அனைவரும் நமது நிதி அமைச்சர் அவர்களைப் பாராட்டத்தான் வேண்டும்.



12th March 1960] [Srimathi P. K. R. Lakshmikantham]

மேலும், கல்வி சம்பந்தமான விஷயமாக ஓரிரண்டு வார்த்தைகள் நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். இந்த அறிக்கையிலே இந்த ராஜ்யத்தில் ஆரம்பக் கல்வி பெற வேண்டியவர்கள் 45 லட்சம் பேர்கள் இருக்கின்ற அளவிலே, 6 வயதிலிருந்து 11 வயது வரையுள்ள 27-1/4 லட்சம் பேர்களுக்கு கட்டாய ஆரம்பக் கல்வி கொடுக்க முடியும் என்கிற ஒரு விஷயத்தையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். மீதியாக இருக்கும் 17 லட்சம் குழந்தைகள் யார் என்று நாம் சிந்தித்துப் பார்ப்போமானால், அவர்களில் முக்கால் வாசி பேர்கள் பெண்களாகத் தான் இருக்கமுடியும். ஆகவே, 27-1/4 லட்சத்தோடுகூட கிராமத்திலே இருக்கும் ஹரிஜன பெண் குழந்தைகளுக்கும், இன்னும் வறுமையிலே விளையாடிக்கொண்டிருக்கிற மிக அடித் தளத்திலே இருக்கும் பெண் குழந்தைகளுக்கும் எப்படி நாம் ஆரம்பக் கல்வி அளிப்பது, எந்த முறையிலே அவர்களைக் கட்டாயப்படுத்தி சேர்ப்பது என்பதைச் சர்க்கார் மிக முக்கியமாக கவனித்து அந்த மிகுதிப்பட்ட பெண் குழந்தைகள் விஷயத்திலும் அதிகமான சிரத்தை எடுத்து அவர்களையும் பள்ளிக்கூடத்திலே சேர்ப்பதற்கு நாம் முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பொதுவாக, கிராமங்களிலும் சரி, நாட்டுப் புறத்திலும் சரி, ஏழைப் பெண்கள் ப்ரைவேட்டாக தனிப்பட்ட முறையிலே படித்து, ஈ.எஸ்.எல்.ஸி. பரீட்சைக்குப் போகலாம் என்ற விதி உண்டு. இன்றைக்குப் பல விதவைப் பெண்களும் பல கஷ்டப்படுகிற பெண்களும், கணவன்மார்களால் கைவிடப்பட்ட பெண்களும் ஈ.எஸ்.எல்.ஸி. படித்து அதனால் ஒரு சில நன்மை அடைந்துவருகிறார்கள். ஆகையால், ஈ.எஸ்.எல்.ஸி. மாத்திரம் அல்ல, எஸ்.எஸ்.எல்.ஸி. கூட அவர்கள் ப்ரைவேட்டாகச் சென்று படித்துப் பாஸ் செய்யலாம் என்ற விதியைச் சர்க்கார் அமைப்பார்களானால், அதனால் இன்னும் பல கஷ்டப்படுகிற பெண்மணிகள் ஒரு நலனை அடைவார்கள் என்று கருதுகிறேன். அதிகமாக பெண்கள் கிராமங்களிலே இருக்கும் பெண்களாகத் தான் இருக்கவேண்டும் அல்லது நகரத்தில் இருப்பவர்களாக இருந்தாலுங்கூட கிராமங்களிலே ஏற்படுத்தப்பட்ட ஒரு விடுதியிலே சென்றுதான் படித்து பாஸ் செய்தாக வேண்டும். ஆகையால், அவர்கள் மூலமாக கிராமங்களுக்குச் சேவை செய்யக் கூடிய வசதியும் அவர்களுக்குக் கிடைக்கும், நமக்கு நல்ல ஒழுக்கமாக உள்ள, பொறுப்புள்ள பெண்கள் கிடைப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, கிராம முன்னேற்றத்தை அனு

[Srimathi P. K. R. Lakshmikantham] [12th March 1960

சரித்தாவது பெண்கள் எஸ்.எஸ்.எல்.ஸி. வரையில் ப்ரைவேட்டாகப் படிக்கலாம் என்ற விதியை சர்க்கார் நிர்ணயிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதுபோக, மதுரையிலே பெண்களுக்கென்று ஒரு பாலிடெக்னிக் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டில்லியில் ஒன்று ஏற்படுத்தியிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். அதில் பெண்களுக்கு வியாபார விளம்பர (கமர்ஷியல் அட்வர்டைஸ்மென்ட்) த்திற்கான கல்வி கற்றுக் கொடுக்கலாம். அந்த பாலிடெக்னிக்கிலே ப்ளான்கள் போடுவதற்கு பெண்களுக்கு பயிற்சிக் கொடுக்கலாம். ட்ராப்ட்ஸ்மென் வேலை செய்வதற்கும் அவர்களுக்கு பயிற்சி அளிக்கலாம். எலெக்ட்ரிக் வயரிங் சம்பந்தமாக பெண்கள் செய்யக்கூடிய சில பகுதிகள் இருக்கின்றன; அவைகளைச் செய்ய பெண்களுக்குப் பயிற்சியளிக்கலாம். தையலில் உயர்தரக் கல்வி கொடுக்கலாம். ஆகவே, இப்பேர்ப்பட்ட ஒரு பாலிடெக்னிக் ஒன்றை மதுரை போன்ற நகரத்திலே ஏற்படுத்தும்பட்சத்தில், டில்லியில் ஏற்படுத்தியிருக்கும் பள்ளிக்கு ஏதாவது தேவை என்று சொல்லும்போது, நாம் இங்கேயிருந்துகூட அனுப்புவதற்கும் தயாராக இருக்கமுடியும். ஆகவே, இத்தகைய பாலிடெக்னிக் ஒன்றை ஒவ்வொரு இடத்தில் வைப்பதோடு, குறிப்பாக மதுரையில் ஒன்று வைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, கைத்தறி சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 4·6 லட்சம் கைத்தறிகள் நமது சென்னை மாகாணத்தில் இருப்பதாக புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இரண்டு லட்சம் கைத்தறிகளைக் கூட்டுறவு அடிப்படையில் இயக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருந்தது- ஆனால் 75,000 தறிகளைத்தான் கொண்டுவர முடிந்திருக்கிறது. அடுத்த வருஷம் மேலும் 18,000 தறிகளை கூட்டுறவு முறைக்குக் கொண்டுவரவேண்டுமென்று எதிர்பார்ப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையாகவே நம்முடைய கூட்டுறவு முறையில் என்ன குறைகள் இருக்கின்றன. ஏன் அத்தனை நெசவாளர்களும் கூட்டுறவு சங்கங்களிலே வந்து சேரவில்லை, அவர்கள் அப்படி சேராததற்கு என்ன காரணம் என்பதை நாம் நன்றாக ஆராய்ந்து பார்த்து இதில் ஈடுபடுவோமானால் நாம் நினைக்கிறபடி ஓரளவுக்கு லட்சியத்தை அடைய முடியும் என்று நான் நம்புகிறேன். அதோடுகூட நான் வருஷா வருஷம் எப்பொழுது பேசினாலும் ஒரு விஷயத்தைத் பற்றி சொல்லுவதற்கு தவறுவது கிடையாது. ஒரு லட்சம் தறிகளைத்தான் கூட்டுறவு முறையில் கொண்டுவர முடிகிறது. ஆகவே, இந்த சர்க்காரினால் தரப்படுகின்ற எல்லா உதவிகளும் அந்த ஒரு லட்சம் தறிகளிலே வேலை செய்கின்ற தொழிலாளருக்குத்தான் கிடைக்கின்றன. மற்ற மூன்று பகுதி தொழிலாளர்களுக்கு நம்முடைய அரசாங்கத்தின் மூலம் எந்த விதமான



12th March 1960] [Srimathi P. K. R. Lakshmikantham]

நன்மையும் கிடைப்பதில்லை. தொழில் என்பது வேறு, கூட்டுறவு முறை என்பது வேறு. கூட்டுறவு முறையில் சேர்க்கப்பட்ட அத்தனை தொழிலாளர்களும் தொழிலை நன்றாக வளர்க்க முடியும் என்பதை திட்டமாகச் சொல்ல முடியாது. தொழிலை வளர்க்கிறவர்கள் மாஸ்டர் வீவர்களாக இருக்கின்றார்கள். தொழில் நடத்துவதை அவர்கள் நன்றாக அறிந்தவர்கள். ஆகையால் அவர்களால்தான் இந்தத் தொழிலை சீராக, நன்றாக பாதுகாக்க முடியும் என்கின்ற ஒரு எண்ணமானது என்போன்றவர்களுக்கு இருக்கிறது. ஆகையினால் அவர்களிடத்திலே தொழில் செய்கின்ற நெசவு தொழிலாளர்களுக்கு எந்த முறையிலாவது நம் அரசாங்கத்தினிடமிருந்து உதவி அளிக்கத்தான் வேண்டும் என்கின்ற ஒரு யோசனையை இந்த இடத்திலே எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன்.

வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்திலே அவர்களுக்காக கொஞ்சம் தொகை ஒதுக்கி அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கலாம். எந்த முறையில் என்று சொன்னால் ஒரு வீடு கட்டுவதற்கு 3,000 ரூபாய் ஆகிறது என்று சொன்னால், மான்யமாகக் கொஞ்சம் தொகையும், நீண்ட காலக் கடனாக கொஞ்சம் தொகையும் கொடுத்து நாம் அவர்களை ஊக்குவித்தால், அந்தத் தொழிலாளர்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் உதவியாக இருந்தது என்கின்ற ஒரு பெருமையும் நமக்கு இருக்கும். இதனால் மாஸ்டர் வீவர்கள் ஏதோ நன்மை அடைந்துவிடப் போகிறார்கள் என்று கருத வேண்டிய அவசியம் இல்லை. அவர்களிடத்தில் தொழில் செய்கின்ற தொழிலாளர்களுக்குத்தான் நான் சொல்லுகிறேன். ஆகவே, அவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கும் ஒரு புது திட்டத்தை புதியதாக கொஞ்சம் தொகையை ஒதுக்கி அவர்களுக்காக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் இந்த இடத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொரு விஷயத்தையும் நான் இந்த இடத்திலே சொல்லலாம் என்று நினைக்கிறேன். கூட்டுறவு சங்கங்களிலே இப்பொழுது ஒரு விதி இருக்கிறது. அதாவது ஸ்டேட் சொஸைடிகளில் தான் நூலை பெற்றுக்கொள்ளவேண்டுமென்று ஒரு விதி உண்டு. சில சமயங்களில் தேவையான, வேண்டிய நூல் ஸ்டேட் சொஸைடியில் இல்லாதபொழுது, அவர்கள் வெளியிலே போய் வாங்கி விடுகிறார்கள். அதற்காக அவர்களுக்கு கொடுக்கப்படும் ரிபேட் தொகை தடுக்கப்படுகிறது. அதாவது அந்த ரிபேட் தொகை கொடுக்கக்கூடாது என்று ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தொழில் அமைச்சர் அவர்களுக்கு தங்கள் மூலம் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் வேண்டுமென்றே ஸ்டேட் சொஸைடிகளில் வாங்காமல் தனிப்பட்டவர்களிடத்தில் வாங்குவது கிடையாது. ஸ்டேட் சொசைடிகளில் இல்லாதபொழுதுதான் வெளியில் வாங்குகிறார்கள். அதனால் இவர்களுக்குக் கொடுக்கப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ரிபேட் தொகையை மீண்டும் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்

[Srimathi P. K. R. Lakshmikantham] [12th March 1960

சரித்தாவது பெண்கள் எஸ்.எஸ்.எல்.ஸி. வரையில் ப்ரைவேட்டாகப் படிக்கலாம் என்ற விதியை சர்க்கார் நிர்ணயிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதுபோக, மதுரையிலே பெண்களுக்கென்று ஒரு பாலிடெக்னிக் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டில்லியில் ஒன்று ஏற்படுத்தியிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். அதில் பெண்களுக்கு வியாபார விளம்பர (கமர்ஷியல் அட்வர்டைஸ்மென்ட்) த்திற்கான கல்வி கற்றுக் கொடுக்கலாம். அந்த பாலிடெக்னிக்கிலே ப்ளான்கள் போடுவதற்கு பெண்களுக்கு பயிற்சிக் கொடுக்கலாம். ட்ராப்ட்ஸ்மென் வேலை செய்வதற்கும் அவர்களுக்கு பயிற்சி அளிக்கலாம். எலெக்ட்ரிக் வயரிங் சம்பந்தமாக பெண்கள் செய்யக்கூடிய சில பகுதிகள் இருக்கின்றன; அவைகளைச் செய்ய பெண்களுக்குப் பயிற்சியளிக்கலாம். தையலில் உயர்தரக் கல்வி கொடுக்கலாம். ஆகவே, இப்பேர்ப்பட்ட ஒரு பாலிடெக்னிக் ஒன்றை மதுரை போன்ற நகரத்திலே ஏற்படுத்தும்பட்சத்தில், டில்லியில் ஏற்படுத்தியிருக்கும் பள்ளிக்கு ஏதாவது தேவை என்று சொல்லும்போது, நாம் இங்கேயிருந்துகூட அனுப்புவதற்கும் தயாராக இருக்கமுடியும். ஆகவே, இத்தகைய பாலிடெக்னிக் ஒன்றை ஒவ்வொரு இடத்தில் வைப்பதோடு, குறிப்பாக மதுரையில் ஒன்று வைக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, கைத்தறி சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 4·6 லட்சம் கைத்தறிகள் நமது சென்னை மாகாணத்தில் இருப்பதாக புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இரண்டு லட்சம் கைத்தறிகளைக் கூட்டுறவு அடிப்படையில் இயக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருந்தது- ஆனால் 75,000 தறிகளைத்தான் கொண்டுவர முடிந்திருக்கிறது. அடுத்த வருஷம் மேலும் 18,000 தறிகளை கூட்டுறவு முறைக்குக் கொண்டுவரவேண்டுமென்று எதிர்பார்ப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையாகவே நம்முடைய கூட்டுறவு முறையில் என்ன குறைகள் இருக்கின்றன. ஏன் அத்தனை நெசவாளர்களும் கூட்டுறவு சங்கங்களிலே வந்து சேரவில்லை, அவர்கள் அப்படி சேராததற்கு என்ன காரணம் என்பதை நாம் நன்றாக ஆராய்ந்து பார்த்து இதில் ஈடுபடுவோமானால் நாம் நினைக்கிறபடி ஓரளவுக்கு லட்சியத்தை அடைய முடியும் என்று நான் நம்புகிறேன். அதோடுகூட நான் வருஷா வருஷம் எப்பொழுது பேசினாலும் ஒரு விஷயத்தைத் பற்றி சொல்லுவதற்கு தவறுவது கிடையாது. ஒரு லட்சம் தறிகளைத்தான் கூட்டுறவு முறையில் கொண்டுவர முடிகிறது. ஆகவே, இந்த சர்க்காரினால் தரப்படுகின்ற எல்லா உதவிகளும் அந்த ஒரு லட்சம் தறிகளிலே வேலை செய்கின்ற தொழிலாளருக்குத்தான் கிடைக்கின்றன. மற்ற மூன்று பகுதி தொழிலாளர்களுக்கு நம்முடைய அரசாங்கத்தின் மூலம் எந்த விதமான நன்மையும் கிடைப்பதில்லை. தொழில் என்பது வேறு, கூட்டுறவு முறை என்பது வேறு. கூட்டுறவு முறையில் சேர்க்கப்பட்ட அத்தனை தொழிலாளர்களும் தொழிலை நன்றாக வளர்க்க முடியும் என்பதை திட்டமாகச் சொல்ல முடியாது. தொழிலை வளர்க்கிறவர்கள் மாஸ்டர் வீவர்களாக இருக்கின்றார்கள். தொழில் நடத்துவதை அவர்கள் நன்றாக அறிந்தவர்கள். ஆகையால் அவர்களால்தான் இந்தத் தொழிலை சீராக, நன்றாக பாதுகாக்க முடியும் என்கின்ற ஒரு எண்ணமானது என்போன்றவர்களுக்கு இருக்கிறது. ஆகையினால் அவர்களிடத்திலே தொழில் செய்கின்ற நெசவு தொழிலாளர்களுக்கு எந்த முறையிலாவது நம் அரசாங்கத்தினிடமிருந்து உதவி அளிக்கத்தான் வேண்டும் என்கின்ற ஒரு யோசனையை இந்த இடத்திலே எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன்.



வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்திலே அவர்களுக்காக கொஞ்சம் தொகை ஒதுக்கி அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கலாம். எந்த முறையில் என்று சொன்னால் ஒரு வீடு கட்டுவதற்கு 3,000 ரூபாய் ஆகிறது என்று சொன்னால், மான்யமாகக் கொஞ்சம் தொகையும், நீண்ட காலக் கடனாக கொஞ்சம் தொகையும் கொடுத்து நாம் அவர்களை ஊக்குவித்தால், அந்தக் தொழிலாளர்களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் உதவியாக இருந்தது என்கின்ற ஒரு பெருமையும் நமக்கு இருக்கும். இதனால் மாஸ்டர் வீவர்கள் ஏதோ நன்மை அடைந்துவிடப் போகிறார்கள் என்று கருத வேண்டிய அவசியம் இல்லை. அவர்களிடத்தில் தொழில் செய்கின்ற தொழிலாளர்களுக்குத்தான் நான் சொல்லுகிறேன். ஆகவே, அவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கும் ஒரு புது திட்டத்தை புதியதாக கொஞ்சம் தொகையை ஒதுக்கி அவர்களுக்காக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் இந்த இடத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொரு விஷயத்தையும் நான் இந்த இடத்திலே சொல்லலாம் என்று நினைக்கிறேன். கூட்டுறவு சங்கங்களிலே இப்பொழுது ஒரு விதி இருக்கிறது. அதாவது ஸ்டேட் சொஸைடிகளில் தான் நூலை பெற்றுக்கொள்ளவேண்டுமென்று ஒரு விதி உண்டு. சில சமயங்களில் தேவையான, வேண்டிய நூல் ஸ்டேட் சொஸைடியில் இல்லாதபொழுது, அவர்கள் வெளியிலே போய் வாங்கி விடுகிறார்கள். அதற்காக அவர்களுக்கு கொடுக்கப்படும் ரிபேட் தொகை தடுக்கப்படுகிறது. அதாவது அந்த ரிபேட் தொகை கொடுக்கக்கூடாது என்று ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தொழில் அமைச்சர் அவர்களுக்கு தங்கள் மூலம் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் வேண்டுமென்றே ஸ்டேட் சொஸைடிகளில் வாங்காமல் தனிப்பட்டவர்களிடத்தில் வாங்குவது கிடையாது. ஸ்டேட் சொசைடிகளில் இல்லாதபொழுதுதான் வெளியில் வாங்குகிறார்கள். அதனால் இவர்களுக்குக் கொடுக்கப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ரிபேட் தொகையை மீண்டும் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்

[12th March 1960

[Srimathi P. K. R. Lakshmikantham]

கொண்டு, எனக்கு பேசுவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தை கொடுத்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* SRI V. CHINNIAH: மதிப்பிற்குரிய சபா நாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் 1960–61-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை ஆதரிக்கும் வகையில் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பொதுவாக நம்முடைய நாட்டிலுள்ள விவசாயிகள் நலனுக்காக அதிகப் படியான சலுகைகள் இந்த வரவு செலவுத் திட்டத்திலே குறிப்பிட்டிருப்பதானது விவசாய மக்கள் அனைவரும் மகிழ்ச்சி அடையக்கூடிய விஷயம். பெரிய நீர்ப்பாசன திட்டங்களெல்லாம் நிறைவேற்றப்பட்டு விட்டன என்றுகூட கூறலாம். சிறிய நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்ற அரசாங்கம் இப்பொழுது பெரிய அளவுக்கு முயற்சிகள் செய்துகொண்டிருப்பது மிகவும் சந்தோஷப்பட வேண்டிய விஷயம். அம்மாதிரி சிறிய நீர்ப்பாசன திட்டங்களினால் பரவலாக விவசாய மக்கள் நன்மை அடைய முடியும். சின்னஞ்சிறு திட்டங்களினால் ஆயிரக் கணக்கான ஏகரா நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டு விவசாயிகள் நன்மை அடைவதற்கு ஏதுவாக இருக்கும். அம்மாதிரி சிறு நீர்ப்பாசன திட்டங்கள் வெகு விரைவாக அமுல் நடத்தப்பட வேண்டும் என்பதையும் கூற விரும்புகிறேன்.

மணப்பாறையை பொறுத்த வரையில் 2, 3 திட்டங்கள் இருக்கின்றன. பாலாறு என்ற ஒரு இடத்தில் அளியாறு கண்ணூத்து என்று சொல்லப்பட்ட 2, 3 அணைக்கட்டுகளை உடனடியாக கட்டிக் கொடுத்தால், அந்தப் பகுதியிலே ஆயிரக் கணக்கான ஏகர் நிலம் விவசாயத்திற்கு லாயக்காக வரும் என்பதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன். இதை பல தடவைகள் அதிகாரிகள் வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். கனம் அமைச்சர் அவர்கள் கூட வந்து பார்த்துவிட்டு வந்தார். பூர்வாங்கமான வேலைகள் சில இடங்களில் நடைபெற்றுவிட்டன. ஆனால் வேறு ஏதோ தகராறு காரணமாக இன்னும் வேலை ஆரம்பிக்கப்படவில்லை என்பது குறித்து அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகள் மிகவும் வருத்தமடைகிறார்கள். ஆகவே, எங்கள் பகுதியிலுள்ள இந்த 2, 3 சிறிய நீர்ப்பாசன திட்டங்களை உடனடியாக அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தப்படியாக, கிராமங்களில் போக்குவரத்து வசதிகளைப் பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். சாதாரணமாக அங்கு ரோடுகள் போடப்பட்டு அவைகள் இப்பொழுது பழுதாகப் போய்விட்டன. மக்களுடைய பணம் ஒரு பகுதியாகவும், அரசாங்கத்தின் பணம் ஒரு பகுதியாகவும் அந்த ரோடுகள் போடப்பட்டன. கொஞ்ச இடங்களிலே இரண்டு பர்லாங்கு, ஒரு பர்லாங்கு நிலச் சொந்தக்காரர்கள் தடை செய்கிறார்கள். அதனால் ஆயிரக் கணக்கான ரூபாய் செலவழிக்கப்பட்டும் அந்த ரோடுகள் இப்பொழுது பராதீனமாக இருந்து



12th March 1960] [Sri V. Chinniah]

கொண்டிருக்கின்றன. 5 மைல் நீளத்திற்கு ஒரு ரோடு போகிறது என்று சொன்னால், நடுவிலே ஒரு பர்லாங்கு, இரண்டு பர்லாங்கு நிலம் வைத்திருப்பவர்கள் நிலத்தை கொடுக்காமல் ஆட்சேபிக்கிறார்கள். அதனால் அந்த ரோடுகள் போடப்பட்டும்கூட, பழுதடைந்து போகின்றன. இம்மாதிரி ரோடு வசதி செய்துக் கொடுப்பதற்கு தடங்கள் செய்பவர்களுடைய நிலங்களை அரசாங்கமே எடுத்துக் கொள்வதற்கு இலகுவான முறையில் ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். அந்தப் பகுதியிலே அந்தந்த ஜில்லா டிவிஷனல் இன்ஜினியர்களுக்காகிலும் இந்த அதிகாரம் கொடுக்கப்படவேண்டும். இந்த அதிகாரம் மேலே இருப்பதினால் திடீரென்று ஒன்றும் செய்ய முடியவில்லை. ஏதோ குறிப்பிட்ட அளவுக்கு, 2 மைல், 5 மைல் அளவுக்காவது ரோடுகள் போடும் விஷயத்தில் டிவிஷனல் என்ஜினீயர்கள் அந்த நிலங்களை "அக்வயர்" செய்துகொள்ளுவதற்கு அதிகாரம் உண்டு என்ற முறையில் ஒரு சட்டம் ஆக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் கிராமங்களில் ரோடு போக்குவரத்து வசதிகளை பூர்த்தியாக செய்துக் கொடுக்க முடியும் என்பதை நான் மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதற்கு சர்க்கார் ஆவன செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அரசாங்கம் விவசாயிகளுக்காக கடன் உதவி, கிணறு மானியம், மாடு வாங்குவதற்கும் மானியம் மற்றும் பலவகைகளில் கடன்கள், மானியங்கள் அளிக்கிறார்கள். அதுவுமல்லாமல் நில அடமான பாங்குகள் மூலமாகவும், கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் விவசாயிகளுக்கு கடன்கள் வழங்கப்படுகின்றன. இம்மாதிரி அநேக துறைகளில் கடன்கள் வழங்கப்படுவதன் மூலம் மக்கள் ஏதோ பெருவாரியாக பயன் அடைகிறார்கள் என்று வைத்துக் கொண்டாலும்கூட, இதிலே ஒரு பெரிய தடை இருக்கிறது. இந்த லேவாதேவிக்காரர்கள்கூட இருக்கும் வரை, அரசாங்கம் விவசாயிகளுக்கு எவ்வளவு உதவி செய்தாலுங்கூட, அதனால் அவர்கள் சரியான முறையில் பயன் அடைய முடியவில்லை. அரசாங்கமே எல்லா லேவாதேவியும் எடுத்து நடத்தும் போது, கூட்டுறவு சங்கங்கள் மூலம் பல துறைகளில் கடன்கள் வழங்கும்பொழுது, இம்மாதிரி லேவாதேவிக்காரர்கள் இருக்க வேண்டிய அவசியமென்ன என்பதை கேட்க விரும்புகிறேன். குறிப்பாகச் சொல்லப்போனால் லேவாதேவிக்காரர்களுக்கு பயந்துக் கொண்டு விவசாயிகள் கிராமச் சந்தைகளுக்கு கூட போவது கிடையாது. ஒரு விவசாயி கிராமச் சந்தையில் போய் மாடு வாங்கவேண்டுமென்று நினைத்தால் அங்கேயும் லேவாதேவிக்கார்கள் வந்துவிடுகிறார்கள். அதனால் பயந்துக் கொண்டு தங்களுக்கு வேண்டிய சாமான்கள் வாங்குவதற்கு சந்தைக்குக் கூட போக முடியவில்லை. அதற்கு லேவாதேவிக்காரர்கள் தடங்கலாக இருக்கிறார்கள். இந்த லேவாதேவிக்காரர்களினால், ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள்கூட "கேட்டு" பக்கம் வராமல் ஒரு பக்கமாக தாண்டி குதித்துக் கூட வெளியே வரவேண்டிய நிர்ப்பந்தம்

கொண்டு, எனக்கு பேசுவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தை கொடுத்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

*SRI V. CHINNIAH: மதிப்பிற்குரிய சபா நாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் 1960–61-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை ஆதரிக்கும் வகையில் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பொதுவாக நம்முடைய நாட்டிலுள்ள விவசாயிகள் நலனுக்காக அதிகப் படியான சலுகைகள் இந்த வரவு செலவுத் திட்டத்திலே குறிப்பட்டிருப்பதானது விவசாய மக்கள் அனைவரும் மகிழ்ச்சி அடையக்கூடிய விஷயம். பெரிய நீர்ப்பாசன திட்டங்க ளெல்லாம் நிறைவேற்றப்பட்டு விட்டன என்றுகூட கூறலாம். சிறிய நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்ற அரசாங்கம் இப்பொழுது பெரிய அளவுக்கு முயற்சிகள் செய்துகொண் டிருப்பது மிகவும் சந்தோஷப்பட வேண்டிய விஷயம். அம்மாதிரி சிறிய நீர்ப்பாசன திட்டங்களினால் பரவலாக விவசாய மக்கள் நன்மை அடைய முடியும். சின்னஞ்சிறு திட்டங் களினால் ஆயிரக் கணக்கான ஏகரா நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டு விவசாயிகள் நன்மை அடைவதற்கு ஏதுவாக இருக்கும். அம்மாதிரி சிறு நீர்ப்பாசன திட்டங்கள் வெகு விரைவாக அமுல் நடத்தப்பட வேண்டும் என்பதையும் கூற விரும்புகிறேன்.

மணப்பாறையை பொறுத்த வரையில் 2, 3 திட்டங்கள் இருக் கின்றன. பாலாறு என்ற ஒரு இடத்தில் அளியாறு கண்ணூத்து என்று சொல்லப்பட்ட 2, 3 அணைக்கட்டுகளை உடனடியாக கட்டிக் கொடுத்தால், அந்தப் பகுதியிலே ஆயிரக் கணக்கான ஏகர் நிலம் விவசாயத்திற்கு லாயக்காக வரும் என்பதை ஞாபகப் படுத்த விரும்புகிறேன். இதை பல தடவைகள் அதிகாரிகள் வந்து பார்வையிட்டிருக்கிறார்கள். கனம் அமைச்சர் அவர்கள் கூட வந்து பார்த்துவிட்டு வந்தார். பூர்வாங்கமான வேலைகள் சில இடங்களில் நடைபெற்றுவிட்டன. ஆனால் வேறு ஏதோ தகராறு காரணமாக இன்னும் வேலை ஆரம்பிக்கப்படவில்லை என்பது குறித்து அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகள் மிகவும் வருத்தமடைகிறார்கள். ஆகவே, எங்க்ள் பகுதியிலுள்ள இந்த 2, 3 சிறிய நீர்ப்பாசன திட்டங்களை உடனடியாக அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தப்படியாக, கிராமங்களில் போக்குவரத்து வசதிகளைப் பற்றி சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். சாதாரணமாக அங்கு ரோடுகள் போடப்பட்டு அவைகள் இப்பொழுது பழுதாகப் போய்விட்டன. மக்களுடைய பணம் ஒரு பகுதி யாகவும், அரசாங்கத்தின் பணம் ஒரு பகுதியாகவும் அந்த ரோடுகள் போடப்பட்டன. கொஞ்ச இடங்களிலே இரண்டு பர்லாங்கு, ஒரு பர்லாங்கு நிலச் சொந்தக்காரர்கள் தடை செய்கிறார்கள். அதனால் ஆயிரக் கணக்கான ரூபாய் செலவழிக் கப்பட்டும் அந்த ரோடுகள் இப்பொழுது பராதீனமாக இருந்து



கொண்டிருக்கின்றன. 5 மைல் நீளத்திற்கு ஒரு ரோடு போகிறது என்று சொன்னால், நடுவிலே ஒரு பர்லாங்கு, இரண்டு பர்லாங்கு நிலம் வைத்திருப்பவர்கள் நிலத்தை கொடுக்காமல் ஆட்சேபிக்கிறார்கள். அதனால் அந்த ரோடுகள் போடப் பட்டும்கூட, பழுதடைந்து போகின்றன. இம்மாதிரி ரோடு வசதி செய்துக் கொடுப்பதற்கு தடங்கள் செய்பவர்களுடைய நிலங்களை அரசாங்கமே எடுத்துக் கொள்வதற்கு இலகுவான முறையில் ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். அந்தப் பகுதியிலே அந்தந்த ஜில்லா டிவிஷனல் இன்ஜினியர்களுக்காகிலும் இந்த அதிகாரம் கொடுக்கப்படவேண்டும். இந்த அதிகாரம் மேலே இருப் பதினால் திடீரென்று ஒன்றும் செய்ய முடியவில்லை. ஏதோ குறிப்பிட்ட அளவுக்கு, 2 மைல், 5 மைல் அளவுக்காவது ரோடுகள் போடும் விஷயத்தில் டிவிஷனல் என்ஜினீயர்கள் அந்த நிலங்களை "அக்வயர்" செய்துகொள்ளுவதற்கு அதிகாரம் உண்டு என்ற முறையில் ஒரு சட்டம் ஆக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் கிராமங்களில் ரோடு போக்குவரத்து வசதிகளை பூர்த்தியாக செய்துக் கொடுக்க முடியும் என்பதை நான் மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதற்கு சர்க்கார் ஆவன செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அரசாங்கம் விவசாயிகளுக்காக கடன் உதவி, கிணறு மானியம், மாடு வாங்குவதற்கும் மானியம் மற்றும் பலவகை களில் கடன்கள், மானியங்கள் அளிக்கிறார்கள். அதுவுமல்லாமல் நில அடமான பாங்குகள் மூலமாகவும், கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் விவசாயிகளுக்கு கடன்கள் வழங்கப்படுகின்றன. இம்மாதிரி அநேக துறைகளில் கடன்கள் வழங்கப்படுவதன் மூலம் மக்கள் ஏதோ பெருவாரியாக பயன் அடைகிறார்கள் என்று வைத்துக் கொண்டாலும்கூட, இதிலே ஒரு பெரிய தடை இருக்கிறது. இந்த லேவாதேவிக்காரர்கள்கூட இருக்கும் வரை, அரசாங்கம் விவசாயிகளுக்கு எவ்வளவு உதவி செய்தாலுங்கூட, அதனால் அவர்கள் சரியான முறையில் பயன் அடைய முடியவில்லை. அரசாங்கமே எல்லா லேவாதேவியும் எடுத்து நடத்தும் போது, கூட்டுறவு சங்கங்கள் மூலம் பல துறைகளில் கடன்கள் வழங்கும்பொழுது, இம்மாதிரி லேவா தேவிக்காரர்கள் இருக்க வேண்டிய அவசியமென்ன என்பதை கேட்க விரும்புகிறேன். குறிப்பாகச் சொல்லப்போனால் லேவா தேவிக்காரர்களுக்கு பயந்துக் கொண்டு விவசாயிகள் கிராமச் சந்தைகளுக்கு கூட போவது கிடையாது. ஒரு விவசாயி கிராமச் சந்தையில் போய் மாடு வாங்கவேண்டுமென்று நினைத்தால் அங்கேயும் லேவாதேவிக்கார்கள் வந்துவிடு கிறார்கள். அதனால் பயந்துக் கொண்டு தங்களுக்கு வேண்டிய சாமான்கள் வாங்குவதற்கு சந்தைக்குக் கூட போக முடியவில்லை. அதற்கு லேவாதேவிக்காரர்கள் தடங்கலாக இருக்கிறார்கள். இந்த லேவாதேவிக்காரர்களினால், ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள்கூட "கேட்டு" பக்கம் வராமல் ஒரு பக்கமாக தாண்டி குதித்துக் கூட வெளியே வரவேண்டிய நிர்ப்பந்தம்

[Sri V. Chinniah] [12th March 1960

ஏற்படுகிறது. இந்த லேவாதேவிக்காரர்கள் கடைகள் எங்கள் மணப்பாறையில், 56-க்கு மேல் இருக்கின்றன. அவர்கள் ரூ. 5,000 முதலில் வைத்துக் கொண்டு ஆரம்பித்தால், சில ஆண்டுகளில், ரூ. 5 லட்சம் ஆக்கி விடுகிறார்கள். அது எப்படி என்று சற்று சிந்திக்க வேண்டும். நமது அரசாங்கம் சட்டம் இயற்றினார்கள். அரை வட்டிச் சட்டம் என்று ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் காலத்தில் போட்டார்கள். கிணறு வெட்ட பூதம் புறப்பட்டாற் போல, அதற்குப் பிறகுதான் இந்த லேவாதேவிக்காரர்கள் அதிகமாகி விட்டார்கள். ஒரு ஆயிர 11-30 a.m. ரூபாயை வைத்துக் கொண்டு, இந்த லேவாதேவிக்காரர்கள் இரண்டாயிரத்திற்கு எழுதி வாங்கிக் கொள்ளுகிறார்கள். பிறகு வட்டியும் முதலுமாக அது ரூ. 3,000 ஆகிறது. கோர்ட்டில் டிக்ரி ஆகிறது. பத்தாயிரம் ரூபாய் சொத்தை ஜப்தி செய்கிறார்கள். அதை ரூ. 15 ஆயிரத்திற்கு விற்று, அமோக லாபம் அடைகிறார்கள். ஆக, ஒரு ஆயிர ரூபாயில் ஆரம்பித்து பதினையாயிரத்துக்குக் கொண்டு வந்து விடுகிறார்கள். இந்த முறையில் அவர்கள் பணம் சேர்க்கிறார்கள். சர்க்கார் உரங்களைக் கொடுத்தாலும், விஷப் பூண்டுகள் இருக்குமேயானால், அந்த உரம் பயிர்களுக்குப் பயன்படுவதில்லை. விஷப் பூண்டுகளுக்குத்தான் போய்ச் சேர்க்கிறது. அதே போல, அரசாங்கம் மக்களுக்கு எவ்வளவு உதவியளித்தாலும், அது இந்த மனித இரத்தத்தை உறிஞ்சும் விஷமக்காரர்களுக்குத்தான் போய்ச் சேருகிறது. சர்க்கார் கொடுக்கும் லோன்களில் லாபமெல்லாம் இந்த லேவாதேவிக்காரர்களுக்குத்தான் கிடைக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம், சர்க்காரே நேரிடையாக எடுத்து இந்த லேவாதேவிக்காரர்களையெல்லாம் நீக்கி விடத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களிடம் உள்ள கடன்களையெல்லாம் கணக்குப் போட்டு சர்க்காரே எடுத்துக்கொண்டு, மக்கள்சர்க்காருக்கு நேரிடை கடன்காரர்களாக்கி மாற்றிவிட வேண்டும். சர்க்காருக்கே அவர்கள் கடன்காரர்களாக வைத்துக் கொண்டாலும், அதுவே சிறந்தது. இப்பொழுது எங்கள் பகுதியில் கும்பகோணம் பாங்கு, தஞ்சாவூர் பாங்கு முதலியவை இருக்கின்றன. அவைகளால் எந்தக் கஷ்டமும் இல்லை. ஆனால், இந்த தனிப்பட்டவர்கள் நடத்தும் லேவாதேவியில்தான் மக்கள் அவதிப்படுகிறார்கள். தனிப்பட்டவர்கள் லேவாதேவியில், எவ்வளவு பணம் உண்மையாக கொடுக்கப்பட்டது என்பதை கவனிப்பதேயில்லை. முன்சீப் கோர்ட்டிலும், "நீ கை யெழுத்துப் போட்டிருக்கின்றாய் அல்லவா" என்று சொல்லி டிகிரி ஆகிவிடுகிறது. ஆகவே இந்த விஷயத்தை நன்றாக பரிசீலனை செய்து, இதற்கென்று ஒரு தனி அதிகாரியையும் நியமித்து, எவ்வளவுக்கு எழுதிக் கொடுத்தது எவ்வளவு உண்மையாகப் பெற்றுக் கொண்டது என்பதையெல்லாம் விசாரித்து சரி செய்ய வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகிறேன். முன்பு விவசாயிகளுக்கு ஒரு வருஷ ஒத்தி வைப்பு என்று வந்தது. நாங்கள் நினைத்தோம் பெரும் மாறுதல் ஏற்படும் என்று. ஆனால் அப்படியொன்றும்



12th March 1960] [Sri V. Chinniah]

ஏற்பட்டு விடவில்லை. ஆகவே, இந்த விஷயத்தில் சர்க்கார் தீவிர கவனம் செலுத்தி ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது புதிய கிணறுகள் வெட்ட மானியம் அளிக்கிறார்கள். பழைய கிணறுகளும் ஏராளமாக இருக்கின்றன. ஒரு 10, 100 ரூபாய் செலவழித்து தூர் எடுக்க முடியாமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்தப் பழைய கிணறுகளுக்கும், கொஞ்சம் மானியம் கொடுத்து, அவைகளை ரிப்பேர் செய்ய உதவி செய்தால், விவசாயிகளுக்கு மிகுந்த உதவியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது தாழ்த்தப்பட்டவர்களுக்கு மாடு வாங்க என்று ஏராளமான மனுக்கள் கலெக்டர் அவர்களுக்கு வந்திருக்கின்றன. அதே மாதிரி விவசாயக் கருவிகளுக்கும் வந்திருக்கின்றன. உடனடியாக எல்லோருக்கும் இந்த லோன்கள் கிடைக்கும்படி சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு பேச இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த சபாநாயகர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* SRI M. P. SUBRAMANIAM: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 1960–61-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில், சர்க்கார் ஊழியர்கள், ஆசிரியர்கள், கிராம அதிகாரிகள் இவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்று எதிர் பார்த்து அவர்கள ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள், என்பதைப் பார்க்கிறோம். நிவாரணம் கிடைக்கலாம் என்பதை கனம் நிதியமைச்சரவர்கள் சூசகமாக குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தாமதமாவதற்குக் காரணம் என்ன என்பதுதான் நமக்குப் புரியவில்லை. சென்னை சர்க்கார் ஊழியர்கள் குறைகளைப் போக்க, ஒரு சம்பளக் கமிஷன் வேண்டும் என்று ஆரம்பத்தில் நாங்கள் சொன்ன காலத்தில், கமிஷன் இப்பொழுது தேவையில்லை, தேவை என்ன என்பது எங்களுக்குத் தெரியும் என்றனர். பிறகு மத்திய சர்க்கார் கமிஷனின் அறிக்கை வெளிவரட்டும் என்று சொன்னார்கள். இப்பொழுது தாங்களே ஒரு கமிஷனை நியமித்த பிறகும், ஏன் இந்த தாமதம் என்று விளங்கவில்லை. கிராம அதிகாரிகள் சம்பந்தப் பட்ட மட்டில், தனி முறையில் கவனிக்கப்படும் என்று சொல்லி, இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன், அமைச்சர்கள் உண்டாக்கிய குழு ஒன்று ஏற்படுத்தப்பட்ட போதிலும், இந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் கிராம அதிகாரிகளுக்கு என்ன நிவாரணம் இந்த அமைச்சரவை கொடுத்திருக்கிறது? உண்மையிலேயே அவர்களுக்கு நல்ல எண்ணம் இருக்கிறதா என்பதைச் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.

[Sri M. P. Subramaniam] [12th March 1960

இந்த 1960-61 ஆண்டிலே, புதிய வரிகள் எதுவும் இல்லையென்றும், அதற்காக கனம் நிதியமைச்சரவர்களைப் பெருமையோடு பாராட்டுகிறோம் என்று பல கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே, அப்படிப் பெருமை படக்கூடியது ஒன்றும் இல்லை யென்றுதான் நான் கருதுகிறேன். வரிகள் போட்டால் மக்களுக்குக் கொடுமை யென்றால், அதைவிட மோசமான கொடுமைக்கு மக்கள் இப்போது ஆளாகியிருக்கிறார்கள் என்பதை சபாநாயகர் அவர்கள் மூலமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆண்டுதோறும் விலை ஏறிக்கொண்டே போகிறது. விலைவாசிகள் எல்லாப் பொருள்களின் விலைகளும் ஏறுமுகமாகவே இருக்கிறது. அப்படியிருக்கும் போது, நிரந்தர வருவாய் உள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், தொழிலாளிகள், ஒவ்வொரு பொருள் வாங்கும் போதும், அதிகம் பணம் கொடுக்க வேண்டிய நிலைமை யிருக்கிறது. ரூ. 15-க்கு வாங்க வேண்டிய ஒருபொருளை ரூ. 20-க்கு வாங்கினால், அதில் ரூ. 5 வரியாகப் போகிறது. ஆனால், வரி யென்று சொல்லாமல், விலையேற்றத்தால் அதை சுமத்தி விடுகிறார்கள். இதைவிட கொடுமையானது வேறொன்றும் இல்லை. அத்தியாவசியமான சில பொருள்களை பயன் படுத்த வேண்டியிருக்கிற அத்தனை மக்களும், நேரிடையாக இந்த விலையேற்றத்தால் பாதிக்கப் படுகிறார்கள் என்றுதான் நான் கருதுகிறேன். விலையேற்றம் இன்று நேற்று ஏற்பட்டதில்லை. பல வருஷங்களாகவே இது இருந்துக் கொண்டு வந்திருக்கிறது, அதை இந்த அமைச்சரவையும் ஒப்புக் கொண்டிருக்கிறது-. இது ஒரு சுழல் என்று நிதி அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இப்பொழுதாவது இது ஒரு சுழல், அதற்குப் பரிகாரம் தேவை என்பதை அவர்கள் உணர்ந்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன்.

இரண்டாவது திட்டத்தில், 152 கோடிக்குப் பதில், 180 கோடி செலவழிக்க இருக்கிறோம் என்று பெருமைப்படுகிறார்கள். பணத்தை அதிகமாகச் செலவழித்திருக்கலாம். ஆனால், அதனால் ஏற்படக்கூடிய நன்மை, சாதனைகள், எந்த அளவுக்கு லட்சிய எல்லையை அடைந்திருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும்.

ஆகவே விலைவாசிகளை கட்டுப்படுத்தி செய்யும் செலவினங்களின் முழுப் பலனையும் மக்களுக்கு கிடைக்கக்கூடிய வகையில் அரசாங்கம் ஒரு பரிகாரம் தேட வேண்டும். கஷ்டங்களைச் சொல்லிவிட்டால் போதாது. அதற்குப் பரிகாரம் செய்ய வேண்டும். அதைவிட முக்கியமாக நான் இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நமது ராஜ்யத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் எவ்வளவு பரவலாக, எவ்வளவு அதிகமாகப் பெருக்கிக் கொண்டிருக்கிறது என்பதை எல்லோரும் உணருகிறார்கள். நேற்றைய தினம் சட்ட சபையில் ஒரு கேள்வி கேட்ட நேரத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் கூறினார்கள், "இரண்டாவது ஐந்தாண்டு திட்ட கால இறுதிக்குள்ளாக $2\frac{1}{2}$ லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு இங்கே கிடைக்கலாம்" என்பதாக. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வகுத்



12th March 1960] [Sri M. P. Subramaniam]

தக் காலத்தில் இந்தியா பூராவுமாக 80, 90 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடும்" என்று சொல்லப்பட்டது. நமது சென்னை ராஜ்யத்தில் மட்டும் பத்து லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடும் என்றனர். இதன் அடிப்படையில் வகுக்கப்பட்ட இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் பூர்த்தியாகும் இந்த சமயத்தில் இங்கே $2\frac{1}{2}$ லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று சொல்லுவதானது மிகவும் ஆபத்தான நிலைமை, அடைந்து கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டி நான் எச்சரிக்கைச் செய்ய விரும்புகிறேன். ஆகவே இன்றைய தினம் நாம் வகுக்கக்கூடிய திட்டங்களை, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கக்கூடிய திட்டங்கள் என்ற அடிப்படைக் கொள்கையைக் குறிக்கோளாகக் கொண்டுபோட வேண்டும் என்பதை நான் இங்கே வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இன்று எல்லோருடைய கவனத்திலும் இருப்பது உணவு உற்பத்தி. உணவு உற்பத்தியை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் எத்தனை அதிகப்படுத்த வேண்டும் என்று லட்சியமாக வைத்து நாம் பல திட்டங்களைப் போட்டோமோ அந்த லட்சிய அளவை அடைந்து விட்டோமா என்றால் இல்லை. கடந்த நான்கு ஆண்டுகளாக, 12-1/2 லட்சம் டன் ஆண்டு ஒன்றுக்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும் என்கிற குறிக்கோளோடு பல காரியங்களைச் செய்தும் 6 லட்சம் டன்தான் நம்மால் உற்பத்தி செய்ய முடிந்திருக்கிறது. கடை ஆண்டில் இன்னும் இரண்டு மூன்று டன்கள் அதிகப்படலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நமது அரசாங்கம் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு பற்பல திட்டங்களை வகுத்தும்கூட அவைகளெல்லாம் நல்ல முறையில் இயங்கி இருக்கின்றனவா என்றால் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும்.

இன்றைய தினம் அரசாங்கம் எடுத்துக் கொள்ளக்கூடிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எதுவும் இல்லை. இனி சிறிய நீர்ப்பாசன திட்டங்களிலேயே அதிக கவனம் செலுத்த வேண்டும். சிறிய நீர்ப்பாசன திட்டங்களை அபிவிருத்தி செய்வதனால் தான் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதாக அரசாங்கத்தார் கடந்த சில வருஷங்களாகவே வற்புறுத்தி வருகிறார்கள். இருந்தும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சிறிய நீர்ப்பாசன அபிவிருத்திக்காக செலவிடுவது என்று ஒதுக்கிய பணத்தைக்கூட அவர்கள் செலவிடவில்லையென்றால் அரசாங்கம் அதன் அவசியத்தைப் பூரணமாக உணரவில்லை என்றுதான் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே பேசிய அங்கத்தினர்களெல்லாம் தங்கள் வட்டாரத்தில் தங்கள் மாவட்டத்தில் எவ்வளவு திட்டங்கள் இன்னும் நிறைவேற்றப்படாமலிருக்கின்றன, எத்தனை குளங்கள், ஏரிகள் எல்லாம் துருவாரப்படாமல் இருக்கின்றன என்பதைப் பற்றி குறிப்பிட்டார்கள். இருக்கக்கூடிய வேலைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது செய்திருக்கக்கூடிய வேலைகள் எல்லாம் 5 சதவீதம் கூட இருக்காது என்று

[Sri M. P. Subramaniam] [12th March 1960

குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக சிறிய குளங்கள், ஏரிகள் இவைகளில் தூருவாருவதற்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 50 லட்சம் பணம் ஒதுக்கியிருக்கிறோம் என்று சொன்னால் அந்த ஐம்பது லட்சம் ரூபாயில் இதுவரைக்கும் செலவு செய்திருக்கிறது எவ்வளவு என்று பார்க்க வேண்டும். இரண்டாவது திட்ட முடிவில் 38 லட்சம் தான் செலவு செய்ய முடியும் என்று சொல்லப்படுகிறது. அந்தப் பணம் சரியான முறையில் செலவு செய்யப்படவில்லை. ஏற்கெனவே இருந்த ஏரிகள் தூர்ந்து கிடக்கின்றன. மூன்று மாதத்திற்கு தண்ணீர் நிற்கக்கூடிய இடங்களில் எல்லாம் பதினைந்து நாட்களுக்குக்கூட தண்ணீர் நிற்கவில்லை. தூருவாருவதற்கு முன்பு பரிட்சார்த்தமாக செங்கல்பட்டு மாவட்டத்தில் வேலை செய்து பார்த்து வருவதாகச் சொல்கிறார்கள். எத்தனை ஆண்டுகாலம் பரிட்சார்த்தமாக செய்கிறோம் என்று சொல்லி, பரிசீலித்துப் பார்த்து மற்ற இடங்களுக்கு விஸ்தரிக்கப் போகிறார்களோ தெரியவில்லை. தூருவாருகிற காரியத்திற்கு பரிட்சை தேவை இல்லையென்று சொல்ல விரும்புகிறேன். புதிய இயந்திர சாதனங்களைக் கொண்டு உறுதியாக நாம் செய்ய முடியும். அதில் கவனம் செலுத்தி துரிதமாக இவ்வேலையை எல்லா இடங்களுக்கும் விஸ்தரித்தாலொழிய உணவு உற்பத்திப் பெருக்கில் நம் லட்சியத்தை அடைய முடியாது என்று குறிப்பிட விரும்புகிறேன். பெரிய திட்டங்களை விட சிறிய நீர்ப்பாசன திட்டங்களிலேயே அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று சொல்கிற அரசாங்கத்தார் இது விஷயத்தில் போதிய கவனம் விரைவில் செலுத்தாமல் இருப்பது வருந்தத் தக்கது என்று இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மற்றும் ஒன்று. உணவு உற்பத்திக்கு அத்தியாவசியமான ரசாயன உரம் போதிய அளவுக்கு விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிறதா என்றால் அதுவும் கொடுக்கப்படுவது இல்லை என்று இந்த நோத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். 1956-57-ம் ஆண்டுக்கு 125 ஆயிரம் டன் கொடுக்கவேண்டும் என்றதற்கு 120 ஆயிரம் டன்தான் கொடுக்கப்பட்டது. அடுத்த ஆண்டு 140 ஆயிரம் டன்னுக்கு 84 ஆயிரம் டன் தான் கொடுக்கப்பட்டது. அடுத்த ஆண்டு 150 ஆயிரம் டன்னுக்கு 90 ஆயிரம் டன் தான் கொடுக்கப்பட்டது. அதுவும் அமோனியம் சல்பேட்டு என்ற உரத்தில் மட்டும் இந்த நிலைமையே இருந்து கொண்டிருக்கிறதென்றால் உரத்தைக் கொண்டுதான் உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்கிற கொள்கையில் நம்பிக்கை வைத்து இருப்பது எப்படி என்று தெரியவில்லை. உணவு உற்பத்தி அமோனியம் சல்பேட்டை அதிகமாக உபயோகப்படுத்துவதனால் தான் சாத்தியமாகும் என்று சொல்லிக்கொண்டு தேவைக்கு அவசியமான உரத்தைக் கூட விநியோகிக்காவிட்டால் உற்பத்தியை எவ்வாறு பெருக்க முடியும் என்று கேட்க விரும்புகிறேன். ரசாயன உரத்தை நம்முடைய தேவைக்கு ஏற்றபடி பெருக்குவதற்கு முன்னேற்பாடாக எல்லா விதமான காரியங்களையும் செய்யவேண்டும் என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். உற்பத்தி செய்ய முடியாவிட்டால் வெளி



12th March 1960] [Sri M. P. Subramaniam]

நாடுகளில் இருந்தாவது உடனடியாக இறக்குமதி செய்தாக வேண்டும். அதற்கு அந்நியச் செலாவணி தடையாக இருந்தால் மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தி இறக்குமதி செய்ய முயற்சி செய்யவேண்டும். இதில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மற்றும் அடுத்தபடியாக சாலைகள் விஷயத்தில் இங்கே முக்கியமாகச் சில விஷயங்கள் பேசப்பட்டது. சென்னை நகரத்தைப் பொருத்த மட்டில், சென்னை கார்ப்பரேஷன் சரியான முறையில் ஒதுக்கப்பட்ட பணத்தைக்கொண்டு சாலைகளைப் பராமரிக்கவில்லை என்று நேற்றைதினம் குறிப்பிட்டார்கள். ஆனால் உண்மையில் நம் ராஜ்யத்தைப் பொறுத்த மட்டிலும் எப்படி இருக்கிறதென்றால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சாலைகளின் அபிவிருத்திக்காக 6;78 கோடி செலவு செய்வது என்று திட்டமிட்டிருந்தார்கள். ஆனால் பல சாலைகள் சீரான முறையில் இன்றும் இல்லாத நிலைமையில் அதற்காக ஒதுக்கப்பட்ட பணம் பூராவும் செலவு செய்ய முடியாது இருக்கிறது என்று அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுவரையில்—கடந்த நான்கு ஆண்டு காலத்திற்குள்ளாக செலவு செய்யப்பட்டிருப்பது 4 கோடி தான். அடுத்த ஆண்டு செலவையும் சேர்த்தால் மொத்தமாக 5-1/4 கோடி தான் செலவு செய்யப்படும் என்று தெரிகிறது. சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் கீழும், தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழும் போடப்பட்ட சாலைகள் இன்றைய தினம் சாலைகள் இருக்கிற இடம் கூடத் தெரியாமல் போய்க்கொண்டிருக்கின்றன. அவற்றை சரியான முறையில் மேல்பார்வை செய்து, மெயின்டெயின் பண்ணுவதற்குக் கூட தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை. நாட்டில் விவசாயம் பெருகவேண்டியிருக்கிறது. விவசாயப் பெருக்கத்திற்கு, விவசாயிகளுக்கு அதிக நன்மை அளிக்கக் கூடியது சாலைகள் தான் என்று சொல்வார்கள். ஆனால் சாலைகளுடைய அபிவிருத்திக்காக ஒதுக்கிய பணத்தைக் கூட அரசாங்கத்தார் செலவிட முடியவில்லை.

* SRI A. R. SUBBIAH MUDALIAR: கனம் சபாநாயகர் அவர்களே, 1960-61-ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லப் பிரியப்படுகிறேன். விவசாயம் சம்பந்தமாக நமது ராஜ்யம் நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறது. இருந்தாலும் உணவு உற்பத்தி லட்சிய அளவுக்குத் தடையாக உர விநியோகம் செய்ய முடியாமல் இருப்பதாக இந்த அறிக்கையில் இருந்து தெரிகிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஆண்டுக்கு 12 லட்சம் டன் அதிகமாக உணவு உற்பத்தி செய்ய திட்டமிட்டிருந்தும் 9 லட்சம் டன் தான் உற்பத்தி செய்ய வழி ஏற்பட்டிருக்கிறது. காரணம் அந்த உரம் எதிர்பார்க்கின்ற அளவுக்கு நம்மிடம் இல்லாததனால், அதுவே தடையாக இருப்பதாக அறிக்கையின் மூலம் தெரிய வருகிறது.

[Sri A. R. Subbiah Mudaliar] [12th March 1960

அதுபோக உரம் பல வழியில் அதிகப்படுவதற்கு வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. கம்போஸ்ட் உரங்கள், பசுந்தாள்; இதன் மூலம் ரசாயன உரம் கிடைக்காததனுல் ஏற்படும் குறையை நிவர்த்திக்க இந்த திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. அவையும் நல்ல முறையில் பயன் அளிக்கும். உர விநியோகம் சம்பந்தமாகவும் சமீபத்தில் புதிய திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அதாவது நான்கு ப்ளாக் ஏரியாவில் கூட்டுறவு முறையில் விநியோகம் செய்யவேண்டும் என்று ஆரம்பித்திருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். இதுபோக எண்ணெ வித்து, மற்ற தென்னை, முந்திரி முதலான வர்க்கங்கள் விருத்தி அடைவதற்கான திட்டங்களை வகுத்திருப்பது கண்டு சந்தோஷம் அடைகிறோம். ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு சாயில் டெஸ்டிங் யூனிட் வகுக்கப்படவில்லை. கோயம்பத்தூரில் மட்டும் மாகாண ரீதியில் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. அது காணுது. ஜில்லாதோறும் சாயில் டெஸ்டிங் யூனிட் தேவை என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். அதுபோக தென்னைக் கன்று வளர்ப்பு சம்பந்தமாக சமீபத்தில் ராமநாதபுரத்தில் பல்லாயிரம் கன்றுகள் போடப்பட்டிருக்கின்றன. அது ரொம்பவும் வரவேற்கத் தகுந்தது. அதுமாதிரி அநேக இடங்கள் சமுத்திரக்கரை ஓரங்களில் இருக்கின்றன. அங்கெல்லாம் தென்னைக் கன்றுகள் வைப்பதற்கு வழி செய்துவிட்டால் நன்ருக இருக்கும்.

நீர்ப்பாசனம் சம்பந்தமாக ஒதுக்கப்பட்ட தொகை ரொம்பக் குறைவாக இருக்கின்றன. 130 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது, சிறிய நீர்ப்பாசன திட்டத்திற்காக. அது ரொம்பவும் குறைவான தொகை என்று அபிப்பிராயப்படுகிறேன். நமக்கு வேறு பெரிய திட்டங்கள் இல்லை. சிறிய திட்டங்களை வைத்துத்தான் நாம் முன்னேறவேண்டும். Desilting-cum-Reclamation யூனிட் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஏற்படுத்தினுல் சிறிய பாசனத் திட்டங்களுக்கு அதிக நன்மை ஏற்பட வழியேற்படும். மேலும் ஆயிரம் கிணறுகள் வெட்டுவதற்குத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் ஆயில் என்ஜின், மோட்டார்கள் வாங்குவதற்காகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது எல்லாம் சேர்த்து 40 லட்சம் ரூபாய் தொகைதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது காணுது, கிணறுகள் கூடுதலாக வெட்டுவதற்கு திட்டம் வகுக்கவேண்டும். புதிய திட்டத்தின்படி 25 சத விகிதத்தை உடனடியாக மான்யம் கொடுக்கப்படுகிறது, பாக்கி 75 சதவிகிதம் தொகை பல வருஷங்கள் தவணை மூலம் கொடுக்கவேண்டும். விவசாயிகள் முன்னேறுவதற்கும், அவர்களிடையே உற்சாகம் ஏற்படுவதற்கும் புதிய திட்டத்தின் மூலம் வழி ஏற்படும் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக கால்நடைகளை எடுத்துக்கொண்டால் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டில் 16 கேந்திர நிலையங்கள் இதுவரையில் திறக்கப்பட்டிருக்கின்றன. 1960-61-ல் மேலும் 5 நிலையங்கள் திறக்க திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இதுவரைக்கும் 13 செயற்கை கருமுறை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இவ்வருடம் நான்கு நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. எக்ஸ்டன்ஷன் சென்டர்கள் இரண்டாவது ஐந்தாண்டு காலத்திற்குள் 41 நிலையங்கள் திறப்பதற்கு திட்டமிடப்பட்டது. இதுவரைக்கும் 21 நிலையங்கள் அமைக்கப்பட்டன. 1960-61-ல் மேலும் 15 நிலையங்கள் அமைக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. அத்துடன் மிகவும் முக்கியமானது ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு காடில் பாரம் (மாட்டுப் பண்ணை) தேவை. சர்க்காரிடம் திட்டம் இருக்கிறது. ஆனுல் அதை அமுல் நடத்துவதில் தான் தாமதம் ஏற்படுகிறது. சர்க்கார் இந்த விஷயத்தில் ஆராய்ந்து இந்தத் திட்டத்தை அமுல் நடத்த வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



12th March 1960] [Sri A. R. Subbiah Mudaliar]

இது போக பசு பராமரிப்பு நிலையங்கள் அவசியம். தேவஸ்தானங்கள் நடத்த ஏற்பாடு செய்யலாம். திருமலை தேவஸ்தானம் போன்ற இடங்களில் இதற்காக ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அமுல் நடத்துவதில் தாமதம் ஏற்படுகிறது.

குடிதண்ணீர் விஷயத்தை எடுத்துக்கொண்டால் இந்தத் திட்டம் எல்.டி.ஸ்கீம், ஆர்.டபிள்யூ ஸ்கீம், என்.டபிள்யூ சப்ளை ஸ்கீம் (L. D. Scheme, R. W. Scheme, N. W. Scheme) என்று பல திட்டத்தின் கீழ் வருகின்றன. மூன்று இனங்களின் கீழ் இந்தத் திட்டம் வகுக்கப்பட்டுவருவதால் பல நிர்வாக சிக்கல்கள் ஏற்படுகின்றன. அதனுல் அமுல் நடத்துவதில் கால தாமதம் ஏற்படுகிறது. ஆகவே குடிதண்ணீர் பூராவும் ஒரே டிபார்ட்மெண்டின் கீழ் செயல்படும்படி திட்டம் வகுத்தால் நன்மை ஏற்படும். திருநெல்வேலி ஜில்லாவை எடுத்துக் கொண்டால், ஒதுக்கப்பட்ட தொகையெல்லாம் செலவிடப்படாமல் மறுவருஷத்தில் செலவிடவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே குடிதண்ணீர் ஒரு டிபார்ட்மெண்டின் கீழ் அல்லது ஒரு திட்டத்தின் கீழாவது கொண்டுவர வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கூட்டுறவு சங்கம் மூலமாக விவசாயிகளுக்கு 20 கோடி ரூபாய் கடன் கொடுப்பதற்கு ஒரு திட்டம் இருக்கிறது. இது மிகவும் முக்கியமானது. ஆனுல் உடனடியாக பணம் பெற முடிவதில்லை, காலதாமதம் ஏற்படுகிறது. காரணம் இப்போது இருக்கக்கூடிய சட்டத்தில் சில சிக்கல்கள் இருப்பதனுல்தான். ஆகையால் இதை உடனடியாக நிவர்த்திக்க முயற்சி செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக தொழிலை எடுத்துக்கொண்டால் பல இடங்களில் பல தொழில்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. பல டிரெயினிங் சென்டர்கள் உருவாக்கப்படுகின்றன. ஆனுல் இதற்கு வேண்டிய மெஷின்கள் N.S.I. மூலமாகத்தான் பெற வேண்டியிருக்கிறது. சமீபத்தில் பிப்ரவரி 22, "மெட்ராஸ் மெயில்" பேபரில் நான் ஒரு செய்தியைப் படித்தேன். N.S.I.C. tender மூலமாக இம்போர்ட்டட் அமெரிக்கன் மெஷின்களைக் (Imported American Machines) கொடுப்பதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்

தது. அதாவது அம்மாதிரி நடத்தினுல் பணம் படைத்த தனிப் பட்டவர்கள்தான் வாங்கமுடியும். டெண்டர்கள் மூலம் அல்லாமல் இருந்தால்தான் சிறு தொழில் நடத்துவதற்கு முன்வர வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக பஞ்சாயத்து யூனியன் 2—10—1960-லிருந்து நமது ராஜ்யம் முழுவதும் 75 இடங்களில் இயங்க ஆரம்பிக்க இருக்கின்றன. எல்லாப் பஞ்சாயத்து யூனியன்கள் 1960-61-க்குள் இயங்க ஆரம்பிக்கும். பஞ்சாயத்து கிராமங்களில் ஒரு விழிப்பு ஏற்பட்டிருப்பதால் போட்டி மனப்பான்மையும் பூசல் நிலவ ஆரம்பித்திருக்கிறது. ஆகவே பஞ்சாயத்து தலைவர்களே ஆட்டோமாடிக்காக யூனியன் பிரதிநிதியாக இவ் வருஷம் கொண்டுவந்தால்தான் நல்லது. அப்படிச் செய்தால் இந்தக் கட்சி பூசல், போட்டி மனப்பான்மையும் இருக்க இடம் இல்லாமல் போய்விடும்.

நிர்வாகச் செலவை எடுத்துக்கொண்டால் 25 கோடி ரூபாய் கணக்கில் தெரிகிறது. 32·5 சதம் நிர்வாகச் செலவிற்குப் போகிறது. நிர்வாகச் செலவு அதிகம் ஏற்பட்டு இருக்கிறதே தவிற வேலைகள் அவ்வளவு அதிகமாக நடைபெறுவதாகத் தெரியவில்லை. நிர்வாகச் செலவைக் குறைப்பதற்கு வழிவகைச் செய்யவேண்டும்.

வட்டியை எடுத்துக்கொண்டால் நாம் 6 கோடி ரூபாய் வட்டி கொடுக்கவேண்டியதாய் இருக்கிறது. அதாவது வருமானத்தில் 7 சதம் வட்டிக்கு ஒதுக்கப்படவேண்டியதாய் இருக்கிறது.

அடுத்தபடியாக கிராம ரஸ்தாக்களுக்கு மிகக் குறைவாகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நம் நாடு முன்னேறவேண்டுமானுல் கிராமங்களில் உள்ள ரஸ்தாக்கள் நன்ருக இருக்கவேண்டும். இப்பொழுது கிராமத்தில் போகவேண்டுமானுல் மந்திரிகள்கூட ஜீப்பில்தான் போகவேண்டியிருக்கிறது. கார்கள் போகமுடியாத நிலைமையில் ரஸ்தாக்கள் அவ்வளவு மோசமான நிலைமையில் இருக்கின்றன. சில இடங்களில் போட்ட ரஸ்தாக்கள் இருக்கும் இடம் தெரியவில்லை. ஆகவே கிராம ரஸ்தாக்களுக்கு நிறைய பணம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த சபாநாயகர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI N. V. CHOCKALINGAM: கனம் சபாநாயகர் அவர்களே, 1960-61-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை ஆதரித்து சில வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது விவசாயம் மிகவும் அவசியம் என்று கருதிய நமது சர்க்கார், பல நல்ல திட்டங்களை வகுத்திருக்கிருர்கள். ஆனுல் மிகவும் பிற்போக்கான ராமநாதபுரம் ஜில்லாவிற்கு அப்பர் பெரியார் ஒரே திட்டம்தான் மிகவும் அவசியம் என்று கருதியதால் அது சம்பந்தமாக சென்ற பட்ஜெட் கூட்டத்திலேகூட சொல்லப்பட்டது. அப்படி சொல்லியும்கூட இந்த வருஷ பட்ஜெட்டிலே இதைக் குறிப்பிடாதது கண்டு நான் மிகவும் வருந்துகிறேன். ராமநாதபுரம் ஜில்லாவில் உள்ள திருவாடானை தாலுக்காவில் அப்பர் பெரியார் திட்டத்தைத் தவிர வேறு திட்டம் கிடையாது என்பது எல்லோருக்கும் நன்ருகத் தெரிந்த விஷயம். அப்படி இருக்கும்போது அந்த திட்டத்தை இந்த பட்ஜெட்டில் சேர்க்காமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. திருப்பத்தூர் தாலுக்கா பூராவும் விவசாயம் இல்லாமல் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. ஆனுல் இதற்கு முன்னமேயே இந்தச் சட்டசபையில் சொல்லியிருக்கிறேன்—சில காட்டாறுகள் பல இடங்களில் ஓடிக் கொண்டிருக்கின்றன. அங்கங்கே சிறு சிறு தேக்கங்கள் கட்டினுல் அதன் மூலம் விவசாயம் செய்ய முடியும், அதனுல் விவசாயிகளுக்கு மிகவும் நன்மை ஏற்படும். இம்மாதிரி ஒரு திட்டத்தை இந்த பட்ஜெட்டிலேயே சர்க்கார் சேர்க்காதது ஏன் என்று தெரியவில்லை. இம்மாதிரி இந்த ஆற்று நீரைப் பயன் படுத்திக் கொண்டு சிறு நீர்த்தேக்கங்கள் கட்டாவிட்டால் விவசாயம் மிகவும் பாதிக்கும்.



மீன் பிடிக்கும் பாத்தியதையை கிராமப்பொது மக்கள் ஏற்கனவே அனுபவித்து வந்தார்கள். அதற்குப் பிறகு கூட்டுறவு சொசைடிகளுக்கு கொடுக்கப்படவேண்டுமென்று விதி செய்யப் பட்டது. இப்பொழுது மீண்டும் பஞ்சாயத்திற்கு கொடுக்கப் படவேண்டுமென்று சொல்லப்பட்டது நேற்றையதினம் கூட சட்டசபையில் நடந்த விவாதத்தில் அங்கத்தினர்கள் கிராமத்திடமே கொடுக்கவேண்டுமென்று சொன்னுர்கள். இது நல்லது அல்ல.

பஞ்சாயத்து வேறு, கிராமம் வேறு என்று பலவிதமான போராட்டங்கள் கிராமங்களில் ஏற்படும். ஆகவே, பஞ்சாயத்துக்கு கொடுப்பதுதான் சரி என்று சொல்லிக் கொள்கிறேன். 12-noon.
ஒவ்வொரு ஜில்லாவிலும், ராமநாதபுரம் ஜில்லாவை எடுத்துக் கொண்டால் அதற்கு அடுத்ததாக மதுரை ஜில்லா மேற்புரம் இருக்கிறது, திருச்சி ஜில்லா வட புரத்தில் இருக்கிறது. திருச்சி ஜில்லா பார்டருக்கு ஒரு ரோடு போட்டால் 1-1/2 மைல், 2 மைல் என்று இடை இடங்களில் போடாமல் அதனுல் போக்கு வரத்து தடைப்பட்டுப் போகிறது. அந்த ஜில்லாக்காரர் ரோடு போடாமல் இருந்தால் இவர்களும் அந்த வேலையை அறைகுறையாக விடுகிருர்கள். ஆகவே, இது சம்பந்தமான என்ஜினியர்களிடம் அறிவித்து இடையில் பொருத்த வேண்டியதை பொருத்தி போக்குவரத்து வசதியை சுலபப் படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருப்பத்தூரில் பொட்டப்பட்டி அணை கட்டுவதற்கு திட்டம் இடப் பட்டிருந்தது. இப்பொழுது அங்கு ப்ளானிங் போர்ட்டு மீட்டிங்கில் அதை கைவிடப்படுவதாக அறிவித்தார்கள். காரணம், அதில் வரும் தண்ணீர் 6,000 ஏக்கருக்கு திருப்பத்தூர் பெரிய கண்மாவரையில் பாயும் நிலை இருக்கிறது என்றும் ஆகவே அது தேவையில்லை என்று சொன்னுர்கள். இருக்கிற காவேரி தண்ணீரை குளித்தலை வழி போகிற அதிகப்படித் தண்ணீர் காவேரிக்கு போகும்போது பொட்டப்பட்டி அணை

[Sri N. V. Chockalingam] [12th March 1960

கட்டி பற்றாக்குறை ஏற்படும்போது திருப்பத்தூர் தாலுகாவுக்கு கொடுக்கவேண்டும். எங்கள் பகுதி பிற்பட்ட பகுதியாகும். இயற்கையாக வரும் தண்ணீர் காணாதலால் இதை கைவிட்டு விட்டோம் என்று சொல்கிறார்கள். ஆகவே, பிற்பட்ட பகுதி யாக இந்தப் பகுதியை அமைச்சர் அவர்கள் கவனித்து இந்த அணையை மீண்டும் கட்ட வேண்டியது பற்றி கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருப்பத்தூரிலுள்ள விவசாயிகள் மிகவும் கீழான நிலையில் இருப்பதோடு, அங்கு மற்றைய தொழிற்சாலைகளும் கிடையாது. ஒரு மில் கூட அங்கு கிடையாது. சாதாரண சிறு தொழிற்சாலை கூட அங்கு கிடையாது. எந்த விதத்திலும் அங்குள்ள மக்கள் தொழில் செய்ய வசதியில்லாதவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, திருப்பத்தூரில் சிறிய தொழிற்சாலைகளையும் ஏற்படுத்தவேண்டு மென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள் கிறேன்.

*SRI D. S. AUTHIMOOLAM: *மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார்;* இந்த 1960–61-ம் வருட அரசாங்க வரவு–செலவுத் திட்டத்தில் இரண்டொரு நல்ல அம்சங்கள் தவிர விசேஷமாக ஒன்றும் சொல்வதற்கில்லை. தமிழ்மொழியின் விருத்திக்கான நடவடிக் கைகள், அழுகும் பொருள்களுக்கு வரியிலிருந்து விதி விலக்கு. இதைத் தவிர விசேஷமாக கிராம வாசிகளுக்கு, விவசாயிகள் நிறைந்த ஒரு ராஜ்ய மக்களுக்கு விசேஷமாக ஒன்றும் செய்யப் படவில்லை. பொதுவாக வரவு செலவுத் திட்டத்தினால் சர்க் காருக்கு நிறைய பணம் கிடைக்கிறது. போன வருடம் 73 கோடி ரூபாய் வரவு வரும் என்று எதிர்பார்த்ததற்குப் பதிலாக கூட ஐந்து கோடி கிடைத்திருக்கிறது. அதே நேரத்தில் செலவு போக 1-1/2 கோடி மிச்சம் வரும் என்று நினைத்ததற்கு மாறாக, ஐந்து கோடி கூடுதல் கிடைத்தும் கூட, 50 லட்சம்தான் மிச்சப் பட்டிருக்கிறது. ஆகவே இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால் சர்க்கார் நிர்வாகத்தில் வர வர சிக்கனம் கையாளப் படவில்லை என்பதுதான். தற்சமயம் இருக்கிறது போக மேலும் மேலும் செலவு அதிகமாகிக் கொண்டிருக்கிறது என் பதைத்தான் காட்டுகிறது. இப்பொழுது மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்கும் இடையே, என்.ஜி.ஓ.-க்களிடையே சம்பள வித்தியாசம் நிறைய இருக்கிறது. விலைவாசி கட்டவில்லை என்று நமது ராஜ்ய சர்க்கார் ஊழியர் கள் அரசாங்க உதவியை எதிர்பார்க்கிறார்கள். இடைக்காலத் திற்கு ஒரு நிவாரணம் கிடைக்குமென்று எதிர்பார்க்கிறார்கள். அதுபற்றி சென்னை சட்டசபை வரவு செலவு கூட்டத்தில் ஏதாவது வெளியிடுவார்கள் என்று சர்க்காரை எதிர்பார்த்தார் கள். ஆனால் ஒரே ஏமாற்றம். போன வருடத்தில் இவ்வளவு செலவாகும் என்று நினைத்ததை விட ஆறு கோடி அதிகப் படியாக செலவாகியிருக்கிறது. அதே நேரத்தில் அவர்களுக்கு ஒன்றுமே செய்யப்படவில்லை இந்த பட்ஜெட்டில். ஆனால் அண்டை ராஜ்யத்தில், மைசூர் சர்க்கார் என்.ஜி.ஓ.-க்களுக்கு ஏதோ ஓரளவுக்கு செய்திருக்கிறார்கள். நம்மை விட 20 கோடி



12th March 1960] [Sri D. S. Authimoolam]

குறைந்த வருவாய் உள்ள ராஜ்ய சர்க்கார் அது. அதே நேரத்தில் நாங்கள் "நோ டாக்ஸ்" என்ற கொள்கையை வகுத்து விட்டோம் என்று இங்கு சொல்லப்படுகிறது. இந்தியா பூராவிலுள்ள ராஜ்யங்களிலும் அநேகமாக வரி விதிப்பில்லை. அதோடு பற்றாக்குறை திட்டமாகத்தான் எல்லா ராஜ்யங்களி லும் இருக்கிறது. ஆனால் மொத்தத்தில் இதற்கு காரணம் இந்திய சர்க்கார் வந்து ஏற்கனவே 60 கோடிக்கு நோட்டு அடிக்கப் போகிறார்கள், இன்னும் வேண்டுமானால் 40 கோடி கூட அடித்துக் கொள்ளலாம், ஆகவே வரிகள் போடவேண்டா மென்று ஏதாவது சொல்லியிருப்பார்களோ என்னவோ, தெரி யாது. திட்டம் திட்டம் என்ற பெயரால் வருடம் ஒன்றுக்கு 100 கோடி ரூபாய் நோட்டு அடித்து வீசி விட்டு ஏழை எளிய மக்களிடமுள்ள தங்கங்களையும் மற்ற சாமான்களையும் கொள் முதல் செய்து அதன் மூலம் விலைவாசிகளை தூக்கி விட்டு பெரிய வசதி படைத்தவர்கள் தொழில் செய்வதற்கு இயந்திரங்களாக வும், ரூபாய் கடனாகவும் கொடுத்துக்கொண்டு வருகிறது. மத்தியதர வர்க்கமும், என்.ஜி.ஓ.-க்களும் கிராம வாசிகளும் விலையேற்றத்தினால் தத்தளிக்கிறார்கள். இதற்கு பரிகாரம் கண்டுபிடிக்காத நிலையில் அரசாங்கம் ஒரு பட்ஜெட்டை தயார் செய்வதும் அதை வெளியிடுவதும், அதற்கு அந்தப் பக்கத்தி லிருந்து சிலர் பேசி விட்டுப் போவதும் இந்த ராஜ்யத்திற்கு உகந்ததல்ல. மக்கள் எல்லோரும் முக்கியமாக எதிர்பார்க்கக் கூடிய நன்மைகள் சிலவற்றையாவது, பெரிய க்ஷேமநல கொள் கையை, சோஷியலிஸ கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிற அரசாங்கம் செய்தாக வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று கேட்டால், நன்மை யாருக்கு செய்யமுடியும், செய்யவேண்டுமென்று கேட்டால், கிராம வாசிகளுக்குத்தான் அத்தகைய நன்மைகள் செய்யப்படவேண்டும், முதலாவதாக. கிராமவாசிகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்பது முக்கிய மானதொன்றாகும். விவசாயத்தை நம்பியிருக்கும் 60 சத விகிதம் கிராமவாசிகளுக்கு நன்மை செய்யவேண்டும். அதற்கு அஸ்திவாரம் என்ன என்பது எல்லோருக்கும் தெரியும். நீர் பாசன வசதிகள், மற்றும் விவசாயத்திற்கு வேண்டிய தேவைகள் இவைகளாகும். முக்கியமாக உரத்தை எடுத்துக்கொண்டால் அம்மோனியம் சல்பேட் சப்ளை திருப்திகரமாக இல்லை. இந்த ராஜ்யத்திற்கு வேண்டிய தேவைபற்றி சென்ற ஆண்டு நிதி யமைச்சர் அவர்கள் சொன்னார்கள், 1,37,000 டன் உரம் வழங்கப் போகிறோம் என்று. ஆனால் இந்த அறிக்கையில் 1,09,000 டன் தான் வழங்கப்பட்டதாக சொல்லப்பட்டிருக் கிறது. அடுத்த வருடத்திற்கு ஏதோ 2 லட்சம் டன் வழங்கப் போவதாக சொல்கிறார்கள். அதோடு 1963-ல் ஏதோ நெய் வேலித் திட்டம் நிறைவேறி அதில் உரம் உற்பத்தியாகி அதற்குப் பிறகு அது நமக்கு கிடைக்கப் போவதாக சொல்கிறார்கள். இதைப்பற்றியெல்லாம் இந்திய சர்க்காரிடம் வாதாடி ஏராள மான முறையில் சென்னை ராஜ்யத்திற்கு நாம் உரம் சப்ளை செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். அப்படியில்லாத நிலையில் ஏதோ இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 12 லட்சம் டன் நாங்கள்

[Sri D. S. Authimoolam] [12th March 1960

உற்பத்தியைப் ஜாஸ்தியாக்கி விடுவோம் என்று சொல்லி 1961-ம் வருடக்கடைசியில் 9 லட்சம் டன் வந்து விடும் என்று கணக்குகளைப் போட்டு அழகாக ப்ரின்ட் செய்யப்பட்டிருக்கிறது.

இது 1955–56-லிருந்து சென்ற வருஷம் வரை கிட்டத் தட்ட ஐந்தரை லட்சம் டன் தான் உணவு உற்பத்தியை பெருக்க வேண்டும் என்று இருந்தாலும் கூட ஆண்டு ஒன்றுக்கு இவ்வளவு என்று கணக்கு போட்டுப் பார்த்தாலும் கூட இன்னும் வேண்டுமானால் ஒரு லட்சம் டன் உணவு தான் அதிகமாகும். ஆகவே ஐம்பது சதமானம் தான் கிடைத்திருக்கிறது. இதன்படி பார்த்தால் நாம் எதிர்பார்த்ததை விட மிகவும் குறைந்திருக்கிறது என்பதை நம்மால் சொல்ல முடியும். ஆகவே இதையெல்லாம் ஏராளமாக்க வேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி நாம் நன்றாக ஆலோசிக்கவேண்டும். நமது நாடு ஒ ரு விவசாய நாடு. நூற்றுக்கு 70 பேர்கள் வெறும் விவசாயத்தை நம்பியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நாம் கவனம் செலுத்தி வேலை செய்ய ஆரம்பித்தால் தான் நாம் எல்லாவற்றுக்கும் பரிகாரம் காண முடியும். அப்படியில்லாத நிலைமையில் சிறு பாசனத் திட்டங்களுக்கு என்று ஒரு கோடி என்று மட்டும் ஒதுக்கிவிட்டால் போதாது. அதுவும் இவ்விதம் ஒதுக்கப்பட்ட ரூபாயும் காலாகாலத்தில் செலவு செய்வதும் கிடையாது. அது வேறு கஷ்டம். இப்போது வேண்டுமென்றால் பெரிய அணைக் கட்டுகள் எல்லாம் கட்டி முடித்து விட்டோம் என்று பெருமையாக சொல்லிக்கொண்டு இருக்கலாம். ஓரளவுக்கு அது பெருமைப்படக்கூடிய விஷயம் தான். இருந்தாலும் இன்னும் பல திட்டங்கள்—அதாவது 8,000, 10,000 ஏக்கர்கள் என்று இருக்கக்கூடிய அனேக இடங்களுக்கு பயன்படக்கூடிய பல திட்டங்கள் இருக்கின்றன. இவ்விதமான திட்டங்கள் தமிழ் நாட்டில் எத்தனையோ இருக்கின்றன. இவைகளை எல்லாம் நிறைவேற்றினால் கணிசமான உற்பத்தியை காண முடியும். இப்போதுள்ள கணக்கின்படி பார்த்தால் இவைகள் எல்லாம் இருபோக சாகுபடி என்று இருக்கும். ஆனால் ஒரு போக சாகுபடி கூட இதில் கிடைப்பதில்லை. ரெவன்யூ கணக்கை மட்டும் வைத்துக்கொண்டு பாராமல் உண்மை நிலைமையைப் பார்த்தால் ஒரு போகம் கூட சாகுபடியில்லாத அனேக ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் இருக்கின்றன. இவைகளை மந்திரிமார்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டு ஏதாவது ஏற்பாடுகள் செய்தால் நன்றாக இருக்கும். அதல்லாமல் வெறும் ரெவன்யூ கணக்கை மட்டும் எடுத்துக்கொண்டு ஏமாந்துவிடக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக திருநெல்வேலி ஜில்லாவில் கருணையாறு திட்டம் என்று திட்டம் ஒன்று இருக்கிறது. இதன் கீழ் இருக்கும் நிலங்கள் எல்லாம் இருபோக சாகுபடி கிடைக்கக்கூடியது என்று கணக்கு இருந்தாலும் கூட அங்கு உண்மையில் ஒரு போகம் கூட சாகுபடி செய்யமுடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. . . . .



12th March 1960]

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினர் அவர்கள் இதைப் பற்றி கழிந்த வருடமும் சொன்னார்கள். இப்போது அந்தத் திட்டம் அடுத்து வரப்போகிற திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI D. S. AUTHIMOOLAM: அதற்காக கனம் மராமத்து அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் அதைச் சொல்கிறேன் என்றால், நீங்கள் இம்மாதிரிப்பட்டவைகளுக்கு ஒதுக்கிற பணம் மிகவும் குறைவாக இருக்கிறது ஆகவே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவைகளை எல்லாம் சேர்த்துக்கொள்வதற்கு இப்போது ஆயத்தம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன். கிணறுகள் வெட்டுகிற விஷயத்தில் இந்த வருடத்தில் 3,000 கிணறுகள் வெட்டப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன்படி பார்த்தால் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் 250 கிணறுகள் ஆகின்றது, அதன் கீழ் இருக்கின்ற தாலூகாக்களைப்பார்த்தால் ஒவ்வொரு தாலூகாவுக்கும் 30 கிணறுகள் வீதம் வருகிறது. இதுபோதாது. இன்னும் நிறைய கிணறுகள் வெட்ட வேண்டும். கிணறுகளை வெட்டுவதற்கு வசதியில்லாமல் விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்போது இருக்கின்ற நிலையில் இன்னும் குறைந்தது 5,000 கிணறுகள் அதிகமாக வெட்டுவதற்கு ஏதாவது சீர்திருத்தம், அல்லது வேறு ஏதாவது வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகள் போதுமான கிணறுகள் வெட்டுவதற்குப் பணமில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உதவித் தொகை 50 சதமானம் மான்யமாக கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் விவசாயம் ஜாஸ்தியாகி அதன் மூலம் உணவு உற்பத்தியும் பெருக முடியும்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். அதாவது இந்திய சர்க்காரிலிருந்து வருஷந்தோறும் இன்கம்டாக்ஸ் இனத்தில் ஒரு பகுதி நமது சர்க்காருக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது சென்ற வருடத்தில் 6 கோடி ரூபாய் என்று இருக்கிறது. சென்ற வருஷம் ஆறு கோடி ஐம்பது லட்சம் என்று கிடைத்திருக்கிறது. ஆனால் இந்த வருஷத்தில் நான்கு கோடி முப்பத்திஏழு லட்சம் ரூபாய் என்று இருக்கிறது. ஆனால் மற்ற மாகாணங்களுக்கு எல்லாம் 10, 15, 17, என்று கொடுக்கின்றார்கள், ஆனால் நமது சர்க்காருக்கு 8 பர்சண்டு தான் இந்திய சர்க்காரிலிருந்து கொடுக்கிறார்கள். முன்னால் ஆறு கோடி என்று இருந்தது இப்போது நான்கு கோடி ரூபாயாக குறைந்திருக்கிறது. இவ்விதம் இரண்டு கோடி ரூபாய் குறைந்திருக்கிறது. இதை நமது மந்திரிகள் கவனத்தில் இருத்தி மேலே போய் நமக்கு உரிய பணத்தை பெற்றுக் கொண்டு வரவேண்டும்.

ஜில்லா போர்டு ரோடுகள் விஷயமாக, ஒவ்வொரு ஜில்லாக்களிலும் 100 மைல்கள் பழுது பார்க்கப்படாமல் இருக்கின்றன. ராஜ்யம் முழுவதிற்குமாக கிட்டத்தட்ட 10 ஆயிரம் மைல்கள்

உங்களால் புறக்கணிக்கப் பட்டிருக்கிறது. கிராமத்திலுள்ள மக்கள் இதையெல்லாம் பார்த்து மனம் கொதித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக இந்த பட்ஜெட்டில் இதற்கு ஏதாவது வழிவகை செய்தாக வேண்டும். இல்லையென்றால் கிராம மக்களுக்கும் சுயராஜ்யத்திற்கும் எந்த விதமான தொடர்பும் சம்மந்தமும் இருக்காது. இதை நீங்கள் அவசியம் கவனிக்கவேண்டும், என்பதோடு மட்டும் அல்ல, உடனடியாக இதற்கு என்று தனியாக 50 லட்சம் அறுபது லட்சம் என்று இல்லாவிட்டாலும் குறைந்தது ஒரு ஜில்லாவுக்கு ஐந்து லட்சம் ரூபாயாவது கொடுத்து உடனடியாக பழுது பார்க்கச் சொல்லுங்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதல்லாமல் மொத்தமாக இந்த வரவு செலவுத் திட்டத்தில் 80 கோடியாக செலவு இருந்தும் கிராம மக்களுக்கு எந்த விதமான பயனும் இல்லாமல் போய்விடும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

* SRI G. VAGHEESAM PILLAI : கனம் சபா நாயகர் அவர்களே, சபை முன் வைத்திருக்கும் வரவு செலவுத் திட்டத்தை நான் ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இதில் விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கு செயற்கை உரத்தைப்பற்றியும் இயற்கை உரத்தைப் பற்றியும் விவாதம் ஏற்பட்டது. செயற்கை உரம் தேவையா என்று சொல்லப்பட்டது. சாதாரணமாக விவசாயத்திற்கு 100-க்கு 75 பங்கு இயற்கை உரமும் 25 பங்கு செயற்கை உரமும் போடுவதாக இருந்தால் நல்ல முறையில் பயன் அடைய முடியும். அதோடு இப்போது 1,500 டன் பசுந்தழைகள் உரம் விதைகள் கொடுக்கப்படவிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இது 100-க்கு 40 பங்கு விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. இதை இன்னும் குறைத்து அதாவது 100-க்கு 50 பங்கு மட்டும் விவசாயிகள் விலை கொடுத்து வாங்கக்கூடிய நிலைமையில் ஒரு முறையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(Deputy Speaker in the Chair.)

அதோடு பயிரை பாதுகாப்பதிலும் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். அதாவது பூச்சி மருந்துகள் எல்லாம் விவசாயிகளுக்கு பாதி விலையில் கொடுக்கிறார்கள். அதோடு இதில் முக்கியமாக பூச்சி மருந்துகள் உபயோகிப்பதில் எந்த நோயை உடனடியாகத் தடுக்க வேண்டும், எதை கொஞ்சம் பொறுத்திருந்து தடுத்தால் போதும் என்பதைப்பற்றி விவசாயிகளுக்கு நல்ல விளம்பரம் கொடுக்க வேண்டும். இதைப்பற்றி விவசாயிகளுக்கு நன்கு தெளிவு படுத்தினால் தான் இதில் நன்கு பலன் காண முடியும்.

சூப்பர் பாஸ்பேட் பொறுத்த அளவில் இது பாதி விலைக்கு விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டது. இவ்விதம் இரண்டு வருடங்களுக்கு மட்டும் கொடுத்து விட்டால் போதாது. இவ்விதம் கொடுத்துவிட்டு பின்னால் அதை நிறுத்திவிட்டால்



நல்லதல்ல. ஆகவே அதை இன்னும் அதிகமாக கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மண் சோதனையைப் பற்றி இதில் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு நிலையம் ஏற்படுத்தப்படும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. இது மிகவும் அவசியம். நான் கூட எனது சொந்த நிலத்தில் மண் சோதனை செய்து பார்த்ததின் பிரகாரம் விவசாயம் செய்ததில் ஏக்கர் ஒன்றுக்கு பத்து கலம் அதிகமாக நூறு ஏக்கருக்கு 1,000 கலம் நெல் கூடுதலாக கிடைத்திருக்கிறது. ஆகவே இதில் ஆர்வம் இருக்கிற விவசாயிகளை எல்லாம் நான் கேட்டுக் கொள்வது, இதனால் நல்ல பலன் ஏற்படுவதால் இதை எலோரும் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சிதம்பரத்தைப் பொறுத்த அளவில் அண்ணாமலை பல்கலை கழகத்தில் இதனுடைய பிரிவு ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளலாம் என்று அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். வைஸ் சான்ஸிலர் அவர்களும் இதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். குறைந்த செலவில் மண் வளத்தை பரிசோதிப்பதற்கு இது மிகவும் உதவியாக இருக்கும். சாதாரணமாக தென்னாட்டில் உள்ள நிலங்களில் எல்லாம் சாம்பல் சத்து அதிகமாக இருக்கிறது என்று ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். ஆகவே இதன் மூலம் பரிசீலனை செய்து பார்த்து எது தேவையாக இருக்கிறதோ அதை சேர்த்துக் கொள்ள முடியும். ஆகவே சீக்கிரமாகவே ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு யூனிட் ஏற்படுத்தினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

மேலும் அண்ணாமலை யூனிவர்ஸிட்டியின் கீழ் ஒரு விவசாய கல்லூரி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்போது அதில் 48 பேர்களை அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அதிகமான மாணவர்களை அனுமதிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் மேலும் அங்கு ஒரு விதைப்பண்ணை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு இன்னும் கூடுதலாக மான்யம் கொடுத்தால் இன்னும் அதை நல்ல முறையில் நடத்துவதற்கு வசதியாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இரும்புகோட்டா கொடுக்கும் விஷயத்தில் கிராமத்திலுள்ள விவசாயிகளுக்கு இப்போது வண்டிகட்டு, மற்றும் விவசாயத்திற்கு வேண்டிய சாதனங்களுக்கு வேண்டிய இரும்பு கிடைப்பது மிகவும் கஷ்டமாய் இருக்கிறது. இப்போதுள்ள முறைப்படி விவசாயிகளுக்கு கொடுப்பதற்காக ஒரு பகுதி ஒதுக்கப்படுகிறது. இப்போது பெரும்பாலும் குறைவாகவே கொடுத்து வருவதால் விவசாய வேலைக்கு பெரும் தடங்கல் ஏற்படுகின்றன. ஆகவே உற்பத்தியாகி இரும்பில் அல்லது நமக்குக் கிடைக்கிற இரும்பில் வேறுவகைகளுக்கு ஒதுக்கப்படுவதில் விவசாயத்திற்கு முதலிடம் (டாப் ப்ரையாரிட்டி) கொடுத்தால் விவசாயத்திற்கு வசதியாக இருக்கும். அப்போது விவசாயிகள் கஷ்டமில்லாமல் தங்களுடைய சாமான்களை தயாரித்துக் கொள்ள முடியும். ஆகவே இதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

[Sri G. Vagheesam Pillai] [12th March 1960]

நீர்ப்பாசனத்தைப் பொறுத்த வரையில் இந்த ராஜ்யத்திலுள்ள எல்லாத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது. அண்டை ராஜ்யத்திலிருக்கிற கிருஷ்ணா-கோதாவரி திட்டத்தை அமுல் நடத்தினால் நம் பகுதிக்கு குறிப்பாக, செங்கற்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு பகுதிகளுக்கு, பலன் அளிக்கும். இதற்காக ஒரு தனி டிவிஷன் ஏற்படுத்தி பூர்வாங்க விசாரணை எல்லாம் செய்தாகி விட்டது. அதையும் உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும். சிதம்பரத்திலுள்ள சேத்தியா தோப்பு அணைக்கட்டில் விழும் படியாக அதற்கான ப்ளூ பிரிண்ட்களெல்லாம் தயாரித்தாகி விட்டது. சீக்கிரமாக அண்டை ராஜ்யத்திலுள்ள மந்திரிகளோடு கலந்து அதற்கு ஆவன செய்து அதையும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

சிறிய ஏரிகளெல்லாம் இப்போது புதிய முறையில் பரீட்சார்த்தமாக புதுப்பிக்கும் வேலை நடைபெற்று வருகிறது. அவைகள் நல்ல பலன் அளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. நல்ல பலன் இருந்தால் விஸ்தரிக்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. அதையும் நல்ல முறையில் விஸ்தரிக்கவேண்டும்.

சிறு சிறு அணைகள், குறிப்பாக எங்கள் பகுதியில் மணிமுத்தாறு, கடிலம், பெண்ணையாறு முதலிய நதிகள் குறுக்கேயுள்ளவைகள் தூர்ந்து போய் விட்டன. இவைகளை எடுத்து மணப்போக்கி (Sand vents ) வேலை செய்தால் கொஞ்ச அளவில் ஒவ்வொரு அணைக்கட்டும் 20,000 அல்லது 30,000 ரூபாய் செலவு செய்தால் நல்ல முறையில் பலன் அளிக்கும். இப்போது விருத்தாசலம் அணைக்கட்டில் மண் போகச் செய்து அதனால் நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறது. எங்கள் மாவட்டத்தில் இது போன்று 10 அல்லது 15 அணைகள் இருக்கின்றன. அதையெல்லாம் சீர்திருத்த வேண்டுமென்று சொல்ல விரும்புகின்றேன். சாதாரணமாக டெல்டாப் பிரதேசத்தில், சிதம்பரம் தாலூக்காவில் இரண்டு வருஷங்களாக 800 ஏக்கர் ஆயக்கட்டிற்கு வாய்க்கால்கள் சர்க்கார் செலவில் வெட்டப்பட்டதால் அதிக உற்பத்தி ஏற்பட்டிருக்கிறது. அதனால் அநேக ஏக்கர் நிலங்கள் இரு-போக உற்பத்தியின் கீழ் வந்திருக்கின்றன. இரண்டு வருஷங்களில் 65,000 ரூபாய் செலவில் வாய்க்கால்கள் வெட்டப்பட்டு நல்ல பலன் அளித்திருக்கிறது. சிறு நீர்ப் பாசனத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது போல் இதற்கு ஒரு ஸப்-டிவிஷன் போட்டு வேலை செய்தால், 6 மாதம் வேலை செய்தால் போதும். டெல்டாப் பிரதேசத்தில் ஜலம் வரும் இடங்களில் க்ளோஷர் பிரியட் 1-1/2 மாதம் இருக்கிறது. அதற்குள்ளாகச் செய்ய வேண்டும். அதற்காகத் தனியாக செக்ஷன் ஆபீஸர் போட்டு துரிதமான நடவடிக்கை எடுத்தால் நல்ல பலன் அளிக்கும். பல லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்கள் இதனால் இருபோக சாகுபடிக்கு வரும் என்பதில் ஐயமில்லை. உதாரணமாக சிதம்பரம் தாலுகாவில் 40,000 அல்லது 50,000 ஏக்கர்கள் இரு-போக சாகுபடிக்கு வந்திருக்கின்றன. இந்த விஷயத்தில் தக்க கவனம் செலுத்தவேண்டும்.



12th March 1960] [Sri G. Vagheesam Pillai]

சாதாரணமாக ஆர்டிஷ்யன் கிணறுகள் எங்கள் மாவட்டத்தில் வெட்டப்படுகின்றன. இன்னும் 50 கிணறுகளுக்கு சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இதற்கு பணம் ஒதுக்கப்போகிறார்கள். ஆனால் விசை டிரில்கள் கிடைக்காததால் வேலை துரிதமாகச் செய்ய முடியவில்லை. சீக்கிரத்தில் நமது அரசாங்கம் ஃ பாரின் எக்சேஞ்ஜ் விஷயத்தில் கவனம் செலுத்தி, பவர் டிரில்கள் வரவழைக்க ஏற்பாடு செய்தால்தான் இந்த வேலை துரிதமாக முடியும். அதே போல சப்-ஆர்ட்டீஷ்யன் சம்பந்தமாக இப்போது மான்யம் கொடுக்கப்படுகிறது. இந்த வருஷம் 75 குழாய் கிணறுகளை வெட்டுவதற்குத் திட்டம் வந்திருக்கிறது. எங்கள் ஜில்லாவில் பல தாலுக்காக்களில் 50 அல்லது 100 அல்லது 150 அடி ஆழம் வெட்டினால் ஜலம் இருக்கிறது. இதையும் பயன் படுத்திக் கொள்ளலாம். அதையும் பயன் படுத்திக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மீனவர்களுக்கு ரோடு மிகவும் அவசியம். எங்கு பார்த்தாலும் அவர்கள் இருக்கும் இடங்களிலிருந்து மெயின் ரோடுக்கு வரும் வரையில் நல்ல ரோடு வசதி இல்லாமல் இருக்கிறது. சென்ற வருஷத்தில் கூட பணம் ஒதுக்கி சில வேலைகள் நடந்து வருகிறது. இன்னும் அதிகமாக பணத்தை ஒதுக்கி அந்த வேலைகளைச் செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். கூட்டுறவு முறையில் அவர்களுக்குப் பணமாகக் கொடுப்பதை விட சாமான்களாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்ல விரும்'கிறேன்.

கூட்டுறவு முறையில் நிலம் இல்லாதவர்களுக்கு இந்த வருஷம் கடன் கொடுக்கச் சொல்லியிருப்பது ரொம்ப நல்லது. கூட்டுறவு இயக்கத்தின் கீழ் நிலம் இல்லாதவர்களுக்குக் கடன் கொடுப்பதற்காக நஷ்ட ஈடு நிதி இருக்கிறது. கூட்டுறவு சங்கங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டால் அந்த நஷ்டத்தை அரசாங்கமே ஒத்துக் கொள்ளவேண்டும் என்ற முறையில் இந்த வருஷமே ஒதுக்கியிருப்பது பாராட்டவேண்டிய விஷயம்.

மின்சார மினிமம் காரண்டி சம்பந்தமாக ஒரு கமிட்டி போட்டு, அதன் பரிசீலனை முடிந்து அரசாங்கத்திற்கு ரிபோர்ட் கிடைத்திருப்பதாக தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. மினிமம் காரண்டி 50 ரூபாய் என்று இருப்பதை இன்னும் குறைத்தால் நலமாக இருக்கும். ஒரு ஊரில் எடுத்துக் கொண்டால் என்றைக்கு மின்சாரம் கொடுக்கப்படுகிறதோ அதிலிருந்து மினிமம் காரண்டி கொடுக்க வேண்டுமென்று இருப்பதை மாற்றி அந்தத் தேதியிலிருந்து ஒரு வருஷம் கழித்து 10 வருஷ காரண்டி பீரியட்டை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

சாலைகள் சம்பந்தமாக பல அங்கத்தினர்கள் பேசினார்கள். ஜில்லா போர்டுகளின் நிதி நிலைமை மோசமானதாக இருந்தால் அவைகளின் பராமரிப்பு நல்ல முறையில் இல்லாமல இருந்து கொண்டு வருகிறது. இரண்டு கிராமங்களை இணைக்கக்கூடிய

[Sri G. Vagheesam Pillai] [12th March 1960

சாலைகளையெல்லாம் ஹைவேஸில் எடுத்துக் கொண்டு பணம் ஒதுக்கி வேலைகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சாதாரணமாக டெல்டாப் பிரதேசத்தில் சில ஊர்களுக்கு ரோடே இல்லாமல் இருக்கின்றன. அவைகளை யெல்லாம் அரசாங்கத்தார் பி.டபில்யூ.டி. வில்லேஜ் ரோடு வரம்பில் சேர்த்துக் கொண்டு அவைகளை உடனடியாக எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

கல்விக்கு சென்ற வருஷம் 12 கோடி ரூபாய் ஒதுக்கியதை விட இந்த ஆண்டு 15 கோடியே 79 லட்சம் ரூபாய் ஒதுக்கி யிருப்பதால் அதிகமான பிள்ளைகள் படிக்க வாய்ப்புக் கொடுக் கப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியும். மத்திய உணவுத் திட்டம் கிராமங்கள் தோறும் நடந்து வருகிறது. இன்னும் நம் அரசாங்கம் பலப்படுத்தினால் அநேக பிள்ளைகள் படிக்க முடியும். பெற்றோர்களெல்லாம் இது நல்ல முறையில் நடக்க வேண்டுமென்று, ஏழை கிராமங்களிலுள்ளவர்கள்கூட சொல்லு கிறார்கள். பள்ளிச் சீரமைப்புத் திட்டத்திலும் பல கோடி ரூபாய்கள் வருகின்றன.

சுகாதாரத்தைப் பற்றிச் சொல்லும்போது எங்கள் பகுதியில் சிதம்பரத்தில் 100 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரி சீக்கிர மாக நிறுவுவதற்கு ஒரு திட்டம் இருக்கிறது. அதையும் உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

சிதம்பரத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்து முடிக்கப் போவதாகச் சொல்லியிருந்தார்கள். சென்ற வருஷங்களில் எடுத்துக் கொள்ளவில்லை. அதையும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முக்கியமாக இந்த வருஷத்தில் ஸ்தல அபிவிருத்தி திட்டத்தின்கீழ் குடிதண்ணீருக்காக ஒதுக்கியிருப்பதில் 50 லட்சம் ரூபாய் இந்தியச் சர்க்காரும், நம் சர்க்கார் 25 லட்சம் ரூபாயும் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதிலே அரசாங்கம் 50 சதவிகிதமும் ஸ்தல ஸ்தாபனம் 25 சத விகிதமும், மக்கள் 25 சதவிகிதமும் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. ஜில்லா போர்டுகளிடம் பணம் இல்லாததால், இப்போது புதியதாக பஞ்சாயத்து போர்டுகள் ஏற்பட்டிருப் பதால் அவர்களிடமும் பணம் இல்லாததால், 75 சதவிகிதத்தை அரசாங்கம் கொடுத்தால் தான் பல வேலைகள் நடக்க முடியும். அவைகளையும் அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாய நலத் திட்டப் பகுதியில் லோகல் டெவலப்மெண்ட் பணத்தைச் செலவழிக்க முடியாத நிலை இருக்கிறது. அதிக அளவு முன்னேற்றம் இல்லாத இடங்களில் அரசாங்கத்தின் பர்மிஷன் வாங்கி அந்த வேலைகளை நிறைவேற்றுவதற்கு ஏற்ற வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். அந்த மாதிரியான இடங்களைப் பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு



12th March 1960] [Sri G. Vagheesam Pillai]

வந்தால் இந்த ஸ்தல அபிவிருத்தித் திட்டத்திற்கு ஒதுக்கப் பட்டுள்ள பணத்தைச் செலவழிக்கலாம் என்ற முறையில் உத்தரவு போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஹரிஜன முன்னேற்றத்திற்குச் சென்ற வருஷத்தை விட இந்த வருஷம் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. வீடுகள் கட்டுவது, மனைக்கட்டுகள் வாங்கி கொடுப்பது விஷயங்களிலும் கவனம் செலுத்தப்படுகிறது. டெல்டாப் பிரதேசத்தில் மனைக்கட்டுப் பிரச்னை மிகவும் முக்கியமான பிரச்னை. இந்த கிராமங்களில் புஞ்சை நிலம் இல்லாததால், நஞ்சை நிலம் அதிக மாக இருப்பதால், இவ்விஷயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இதற்காக சிதம்பரம் தாலுக்காவில் இரண்டு தாசில் தார்கள் போட்டு வேலை நடந்து வருகிறது. மத்திய உணவுத் திட்டத்தில் ஹரிஜனங்களுக்கு டிஸ்டிரிக்ட் வெல்பேர் ஸ்கூல் களில் தான் மதிய உணவுக் கொடுக்கப்படுகிறது. வேறு பள்ளி களில் படித்தாலும், ஹரிஜன மாணவர்களுக்கு சென்ற வருஷம் பல இடங்களில் கொடுத்தார்கள். அது இந்த வருஷம் நிறுத்தப் பட்டிருக்கிறது. காரணம் என்ன என்று தெரியவில்லை. அவர் கள் வேறு எங்கு படித்தாலும் சென்ற வருஷம் மாதிரி இந்த வருஷமும் தொடர்ந்து கொடுக்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

கொள்ளிடம் ரிவர் கான்ஸெர்வன்ஸி 50 அல்லது 60 கிராமங் களுக்கு இணைக்கப்பட்டிருக்கிறது. இதை ஹைவேஸ் எடுத்து கொள்ள முடியாமல் இருக்கிறது. வீராணம் தேக்கரோடை ஹைவேஸில் எடுத்துக்கொண்ட மாதிரி இந்த ரோடுகளையும் எடுத்துக் கொண்டால் சௌகரியமாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

ஹரிஜன காலனிகள் போக்குவரத்துக்கான வழிகள், மயான வழிகள் இதெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதற்காக ஸ்பெஷல் ஸ்கீம் போட்டு செய்துக்கொண்டு வருகிறார்கள். இதற்காக இரண்டு தாசில்தார்கள் போட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் தொடர்ந்து நல்ல முறையில் செய்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

* SRI S. RAMAKRISHNA THEVAR: கனம் உதவி 12 30 p.m.
சபாநாயகர் அவர்களே, கனம் நிதியமைச்சர் கொண்டுவந்திருக் கும் 1960–1961-ம் வருஷ வரவு செலவுத் திட்டத்தின் பேரில் சில வார்த்தைகள் சொல்ல முன் வருகிறேன். இந்த பட்ஜெட்டை நமது நிதியமைச்சர் அவர்கள் வெகு நுண்ணிய முறையில் கூர்மையாகக் கவனித்துக் கொண்டுவந்திருக்கிறார்கள். யாரும் இந்த பட்ஜெட்டை வரவேற்காமல் இருக்க முடியாது. ஆனால், சிலர் ரொம்பக் குறுகிய மனப்போக்குடன், பொறாமை கொண்டே இதை வெறுக்கிறார்கள். காரணம், அகிலமே ஒப்புக் கொள்ளக்கூடிய ஒரு பட்ஜெட்டை இவர் கொண்டு வந்து விட்டாரே என்ற ஒரே ஆத்திரம் தான் அவர்களுக்கு ஏற்பட்டி ருக்கிறது. எந்தப் புதிய வரியையும் போடாமல் பல ஆயிரக்

[Sri S. Ramakrishna Thevar] [12th March 1960

கணக்கான திட்டங்களை நிறைவேற்றுவதற்கேற்ற முறையில் இந்த பட்ஜெட்டை அவர் தயாரித்திருக்கிறார். இதைக் குறைக் கூறிக்கொண்டே போவது முறையல்ல. நாடு செழிக்க நல்ல திட்டங்கள் இந்த பட்ஜெட்டில் அமைக்கப்பட்டிருக்கின்றன. விவசாயம் செழிக்கவும், மின்சாரம் ஒளிர்க்கவும், மக்கள் வீண் பொழுது போக்காமல் படிக்கவும், காடுகள் செழிக்கவும், கால் நடைகள் வளரவும் பல நல்ல திட்டங்கள் வகுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மராமத்து இலாகாவை எடுத்துக்கொண்டால், அது எத்தனையோ பல காரியங்களைச் செய்து வருகிறது. "ராம பாணம் புறப்பட்டது" என்று சொல்வார்கள். அது போல் மரமாத்து இலாகா பூகோளத்தையே திருத்தியமைத்துக்கொண்டு வருகிறது. இந்த நிலையில் எதைக் குறைச் சொல்லுவது என்றே எனக்குத் தெரியவில்லை. குறை கூறுபவர்கள் எதைக் குறை சொல்லுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. விவசாயத் துறையை எடுத்துக்கொண்டால் மூலைக்கு மூலை மகாநாடுகளைக் கூட்டி, கிராமந்தர மக்களின் ஆலோசனைகளைக் கேட்டு, ஆங்காங்கு என்ன என்ன செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் விவசாயத் துறையினர் செய்து வருகிறார்கள். அமைச்சர்கள் ஊர் ஊராக வந்து மக்களைப் பார்த்து "உங்களுக்கு விதை வேண்டுமா? உரம் வேண்டுமா? அரசாங்கத்திடமிருந்து உங்களுக்கு என்ன வேண்டும்? உங்களுக்கு விவசாயக் கருவிகள் வேண்டுமா?" என்று மக்களை விசாரித்து வருகிறார்கள். இந்த நிலையில் இவர்கள் என்ன செய்து விட்டார்கள் என்று சொன்னால் சொல்ல முடியவில்லை. இவர்களைப் பற்றி குறை கூறுவதற்கு என்ன இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. மின்சாரத்தை எடுத்துக்கொண்டால், நமது மாநிலத்தின் மின்சாரம் மின்சார வேகத்தில் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. மின்சார அமைச்சரோ அதைக் காட்டிலும் அதிக வேகத்தில் கிராமம் கிராமமாகச் சென்று "மின்சாரத்தைப் பெற்று பயனடையுங்கள்" என்று மக்களிடம் சொல்லிவருகிறார். சுகாதார அமைச்சரோ கிராமங்களிலெல்லாம், மூலை முடுக்குகளிலெல்லாம், எங்கு பார்த்தாலும் சுகாதாரத்தைப் பரப்ப, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார். இந்த நிலையில், "இது என்ன பட்ஜெட்" என்று சொல்கிறார்கள். இதற்கு முன்பு இருந்த எது இப்போது இல்லாமல் போய்விட்டது என்று எனக்குத் தெரியவில்லை. பல லட்சக்கணக்கான ரூபாய், கோடிக்கணக்கான ரூபாய் துண்டு விழுகிறது, சரிகட்ட முடியவில்லை என்றெல்லாம் சொல்கிறார்கள். நமது எண்ணம் எவ்வளவு வேகமாகப் போய்க் கொண்டிருக்கிறதோ அதற்குத் தகுந்த வாறு பல கோடிக் கணக்கான ரூபாய்கள் நமக்குத் தேவைப்படுகின்றன. இந்த நிலையில் பல திட்டங்கள் உருவாகி வருகின்றன. இதற்கெல்லாம் காரணம், இவையெல்லாம் இவ்வளவு நல்ல முறையில் நடப்பதற்குக் காரணம், நமது முதலமைச்சரின் ஆழ்ந்த சிந்தனையும், அதி நுட்பமான நோக்கங்களும்தான் ஆகும். மக்களுக்கு எக்காலமும் சேவை செய்ய வேண்டும் என்ற அவருடைய ஒரே நோக்கத்தின் காரணமாக இக்காரியங்கள் எல்லாம் உருவாகிக்



12th March 1960] [Sri S. Ramakrishna Thevar]

கொண்டிருக்கும் இத்தருணத்தில் குறைகூறிக் கொண்டிருப்பது உசிதமல்ல. நாம் இப்போது ஆக்க வேலை செய்ய முற்பட்டிருக்கிறோம். ஆக்கவேலைக்கு உறுதுணையாக இருக்கக்கூடியவர்கள் தான், மக்கள் நலனில் அக்கறையுள்ளவர்கள் தான் நமக்குத் தேவை. ஆகையால் இப்பொழுது குறைகள் இருந்தாலும் குறையைக் கலைந்து ஆவன செய்ய முன்வர வேண்டும். இப்போது என் தாலூகாவை எடுத்துக்கொண்டால், அது மிக, மிகப் பிற்பட்ட பகுதி. அந்தப் பகுதியிலும் சர்க்கார் பல காரியங்களைச் செய்துதான் வருகிறார்கள். இருந்தாலும் இயற்கை அங்கே முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கிறது. இயற்கை தடையாக இருந்தால், யார் என்ன செய்ய முடியும்? அந்த வருஷம் எங்கள் பகுதியில் ஒரு பக்கத்தில் நல்ல விளைச்சல், மற்றொரு பக்கத்தில் சுத்தச் சாவி. சாவியாகப் போய்விட்டதற்கு சர்க்காரைக் குறைசொல்லிக்கொண்டிருக்கலாமோ? சாவியாகப் போயிருக்கும்போது ஏன் விளையவில்லை என்று கேட்டால் யார்தான் என்ன பண்ண முடியும்? எங்கள் பகுதியில் குறிப்பாக என் ஜில்லா ரொம்ப மோசமான நிலைமையில், சீர்கெட்ட நிலைமையில் ரொம்ப காலமாக இருந்து வந்திருக்கிறது. அங்கே செப்பனிடும் வேலைகளெல்லாம் செய்யத்தான் செய்கிறார்கள். செப்பனிடும் வேலைகள் செய்யப்பட்டாலும் முன்னேற்றம் கண்ணுக்குத் கணிசமாகத் தெரியவில்லை என்றால், அதற்குக் காரணம் அந்தப் பகுதி பல காலமாக கவனிக்கப்படாமல் மோசமான நிலைமையில் இருந்ததுதான் ஆகும். கண்ணுக்கு நன்றாகத் தெரியக்கூடிய அளவுக்கு அங்கே முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால் அங்கே இன்னும் பல அபிவிருத்தி வேலைகள் செய்தாக வேண்டும். அந்தப் பகுதி மற்றப் பகுதிகளுக்குச் சமமான நிலையை அடைவதற்கு, பல அபிவிருத்தி வேலைகள் அங்கு செய்யப்படவேண்டும், அதற்கு வெகு காலம் பிடிக்கும். சர்க்கார் அங்கும் பல காரியங்களைச் செய்துதான் வருகிறார்கள். எனக்கு முன்பு பேசிய திருப்பத்தூர் தொகுதி அங்கத்தினர் அவர்கள் "அப்பர் பெரியார்" திட்டத்தை அங்கே கொண்டுவர வேண்டும் என்று சொன்னார்கள். நாங்கள் அந்தத் திட்டத்தை வரவேற்கிறோம். அந்தத் திட்டம் அங்கே வந்தால் அங்கே பல தாலூகாக்கள் அதனால் பயனடையும். அத்திட்டம் எக்காரணத்தினால் விடப்பட்டிருந்தாலும், அதை ஸப்ளிமெண்டரி பட்ஜெட்டில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் திட்டம் வந்தால்தான் நாங்களும் சுகமாக வாழ முடியும். எங்கள் பகுதி ரொம்பப் பிற்பட்ட பகுதி என்பது கனம் அமைச்சர்களுக்கும், மற்றவர்களுக்கும் தெரியும். அந்தப் பகுதியில் ரோடு வசதியே எந்தக் காலத்திலும் கிடையாது. அங்கு இருக்கக்கூடிய குறுகிய ரோடுகளும் செப்பனிடப்படுவதில்லை. இந்தக் குறையைப் போக்குவதற்குத் திட்டம் தீட்டப்பட்டுவருகிறது. அத்திட்டம் நல்ல முறையில் அமையும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

நீர் நிலைகளை எடுத்துக்கொண்டால், எங்கள் பகுதியில் பல பெரிய அமைப்பகளைப் செப்பனிடாவிட்டாலும் சிறிய திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். அவைகளை ஏன் இதற்குள் நிறை

வேற்றவில்லை என்று சிலர் கேட்கிறார்கள். கல்யாணம் ஆவதற்கு முன்னால் " குழந்தைகளை ஏன் நல்ல முறையில் படிக்கவைக்கக் கூடாது " என்று கேட்பது போல இருக்கிறது இந்தக் கேள்வி. ஒரு திட்டத்தைத் தீட்டுவதற்கே எத்தனையோ ஆண்டுகள் பிடிக்கின்றன. ஒரு திட்டத்தைத் தீட்டுவதிலேயே எத்தனையோ சிக்கல்கள் இருக்கின்றன. எனக்கு முன்பு பேசிய ஒரு கனம் அங்கத்தினர், ஏதோ ஒரு ஜில்லாவில் யாரோ ஒருவன் தடை செய்வதால் பல காரியங்கள் தடைப்படுகின்றன, பல பெரி!!! காரியங்கள் நின்றுபோய் விடுகின்றன என்று சொன்னார். அதே போல எங்கும் சிக்கல்கள் ஏற்படுகின்றன. எங்கும் சிக்கல்கள் உண்டு பண்ணுகிறார்கள். எனவே பல காரியங்களைச் செய்ய இன்னும் சில காலம் பிடிக்கும். நாட்டிலுள்ள குறைகளையும் நாட்டு மக்களின் கஷ்டங்களையும் போக்குவதற்கும், நாட்டை நல்ல நிலைமைக்குக் கொண்டுவருவதற்கும் வகைசெய்யக்கூடிய பல திட்டங்கள் இந்த பட்ஜெட்டில் இருக்கின்றன. இது சம்பந்தமாக பட்ஜெட்டிலுள்ள புள்ளி விவரங்கள் எல்லாவற்றையும் பற்றிப் பேச நமக்கு இடம் கொடுக்க மாட்டார்கள். அப்படியே இடம் கொடுக்கப்படுமானாலும், பட்ஜெட்டை ஒரு பெரிய புஸ்தகமாக பைண்ட் பண்ணி அதை முழுவதும் படிப்பதற்கு, இது ராமாயணச் சாவடி போன்ற இடமல்ல. சர்க்காரின் ஆக்க வேலைகளை நாம் ஆதரிக்கவேண்டும். அவர்களுடன் ஆக்க வேலையில் நாம் ஒத்துழைக்க வேண்டும்.

இந்த பட்ஜெட்டை நான் முழுமனதுடன் ஆதரிக்கிறேன். " அப்பர் பெரியார் " திட்டத்தை எங்கள் பகுதிக்குக் கொண்டு வர வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இம்மாதிரியான நல்ல திட்டங்களை எங்கள் பகுதிக்குக் கொண்டுவந்து, நாங்கள் மற்றத் தாலூகா வாசிகளுக்குச் சமமாகவும் மற்ற ஜில்லா வாசிகளுக்குச் சமமாகவும் நல்ல முறையில் வாழ வகை செய்ய வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* SRI C. NATARAJAN : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இம் மன்றத்தில் கொண்டு வந்திருக்கும் நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளுக்கு நல்ல முறையில் வசதிகளையெல்லாம் செய்திருப்பதாக நாம் இது ஏட்டளவில் அதிகமாகப் படித்திருக்கிறோம். புள்ளி விவரங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. ரசாயன உரம் இப்போது பற்றாக்குறை நிலைமையில் இருக்கிறது. நெய்வேலியில் அம்மோனியா தயார் செய்து கொடுக்க நாங்கள் ஏற்பாடு செய்திருக்கின்றோம் என்று கூறியிருக்கிறார்கள். தயார் செய்யக்கூடிய நிலைமையில்தான் இருக்கிறதே தவிர உண்மையிலேயே விவசாயிகளுடைய வசதிகள் பூராவும் இன்னும் கவனிக்கப்படவில்லை.

விவசாயிகளுக்குக் கடன் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் அந்தக் கடன் அவர்களுக்குக் குறித்த காலத்தில் கிடைப்பதில்லை. அதே நேரத்தில் விவசாயிகளுக்கு வரி இல்லையென்று சொல்லுகிறோம். ஆனால் " ஸ்மால் சேவிங்ஸ் சர்டிபிகேட் " டை வாங்குங்கள் என்று பல விவசாயிகளை வலியுறுத்தி வாங்கச் செய்கிறார்கள். இம்மாதிரி பல தொல்லைகளுக்கு ஏழை விவசாயிகள் உள்ளாகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்வதற்காக இப்போது அதிகாரிகளை நியமித்திருக்கிறோம். அந்த அதிகாரிகள் விவசாயிகளுக்கான வசதிகளை நல்ல முறையில் செய்து கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். எள் நடுவதைக் கவனிக்க விவசாய அதிகாரி நியமித்திருக்கிறோம். விலைகளை நிர்ணயிப்பதற்கு அதிகாரிகள் இருக்கிறார்கள். எள் எண்ணெயாக மாறியவுடன் என்ன விலை நிர்ணயிப்பது என்பதற்கு அங்கு ஒரு அதிகாரி இருக்கிறார். அது பிறகு புண்ணாக்காக மாறி விலைக்குப் போகும்போது அதைக் கவனித்துக் கொள்ள ஒரு அதிகாரி இருக்கிறார். இது போன்று எள்ளில் இருந்து புண்ணாக்கு வரை கவனித்துக் கொள்ள அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், இதனால் நல்ல முறையில் விவசாயிகளுக்கு ஏதும் பயன் ஏற்படவில்லை. இது நல்ல முறையில் பயன்படவேண்டுமானால் சிவப்பு நாடா முறையைத் தளர்த்தி அதிகாரிகளுக்கு அதிகமான அளவில் அதிகாரங்களைக் கொடுக்கவேண்டும்.





எங்கள் பகுதியில் ஆட்டுப் பண்ணை வைத்திருக்கிறார்கள். அங்கு ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்கள் அத்தனையையும் ஆட்டுப் பண்ணை ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்த முடியாது. விவசாய வளர்ச்சிக்கு வழிவகைகளை வகுக்கும்படியான ஒரு விவசாய ஆராய்ச்சிப் பண்ணையை நிறுவ வேண்டுமென்ற ஆலோசனையை நான் கூற விரும்புகிறேன்.

சிறு நீர்ப்பாசனத் திட்டங்களைச் நிறைவேற்றி வருகிறோம் என்று சொல்லுகிறார்கள். விவசாயிகளுக்குப் பயன்படும் முறையில் நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். பல இடங்களில் தண்ணீர் வீணாகப் போய்க்கொண்டிருக்கின்றது. இப்படிப்பட்ட இடங்களில் கொஞ்சம் பணம் அதிகமாகச் செலவு செய்து வரண்ட பிரதேசங்களுக்குத் தண்ணீர் கொண்டு செல்லக் கூடிய முறையில் நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். என்னுடைய தொகுதியான கள்ளக்குறிச்சி பகுதியில் வடக்க நந்தல் அருகிலும் சூளாங்குறிஞ்சி அருகிலும் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று இதே மன்றத்தில் பல தடவை எடுத்துக் கூறியிருக்கிறேன். பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

சமுதாய நலத் திட்டம் மக்களுக்குப் பயன் தரத்தக்க வகையில் நடத்தப்படவேண்டும். பல லட்சக் கணக்கான ரூபாய்கள் அதற்காகச் செலவழிக்கப்படுகிறது. 10,000 கிராமங்கள் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்படும், இத்தனை லட்சம் ரூபாய் இந்தத் திட்டத்திற்காகச் செலவழிக்கப்படுமென்றெல்லாம் அமைச்சர்கள் புள்ளி விவரங்கள் கொடுக்கிறார்கள். பல பெண்கள்

[Sri C. Natarajan] [12th March 1960

இத்திட்டத்தை அமுல் நடத்தும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். கிருஷ்ண பஜனை 10 நடந்ததும், ராம பஜனை 20 நடந்தது என்று புள்ளி விவரங்களைக் கொடுக்கிறார்கள். எதற்காக இந்த முறையிலே பணம் விரயமாக்கப்பட வேண்டும்? இந்தத் திட்டத்தை விளம்பரத்திற்காகப் பயன் படுத்தாமல் உண்மையிலேயே கிராம மக்களுக்கு நன்மை அளிக்கக் கூடிய விதத்தில் பயன்படுத்த வேண்டும்.

தொழில்கள் வளரவேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தொழில்கள் வளர போக்குவரத்து வசதிகள் அதிகரிக்க வேண்டியது அவசியம். வியாபாரத்திற்கு ரயில் போக்குவரத்து மிகவும் தேவைப்படுகிறது. என்னுடைய பகுதியில் சின்ன சேலத்திலிருந்து திருவண்ணாமலைக்கு ரயில் பாதை வேண்டுமென்று எத்தனையோ முறை கூறப்பட்டிருக்கிறது. இது பற்றி அமைச்சர்கள் மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்ய வேண்டும்.

கைத்தறியை எடுத்துக் கொண்டால் அவர்களுக்காக மொத்தம் கொடுத்திருக்கும் ரிபேட் தொகை 75 லட்சம். நம்முடைய மாகாணத்தில் 4 6 லட்சம் கைத்தறிகள் இருக்கின்றன. அந்தக் கைத்தறி நெசவாளர்களுக்கெல்லாம் வீடு கட்டிக் கொடுக்க வேண்டும்.

கல்வித் துறையில் வளர்ச்சி காண்பதற்கான வழிவகைகளையெல்லாம் காணவேண்டும். ஆசிரியர்களுடைய ஊதியம் உயர்த்தப்படவேண்டும். அப்போதுதான் நல்ல முறையில் கல்வி வளர வழி ஏற்படும். பாடத்திட்டங்கள் மாற்றப்படவேண்டும். ஒரு ஊரில் ஒரு பையன் தக்களி நூற்றுக் கொண்டிருக்கும்போது தூங்கிக் கொண்டே கண்ணைக் குத்திக் கொண்டான். சிறிய மாணவர்களுக்கு இந்த மாதிரித் தொல்லைகளையெல்லாம் கொடுக்கக்கூடாது. உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் ராணுவப் பயிற்சிக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்தை நல்ல முறையில் பயன்படுத்தி அவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். ஹரிஜன மாணவர்கள் படும் தொல்லையைச் சொல்லி முடியாது. தனியார் வைத்து நடத்துகின்ற ஹாஸ்டல்களில் எல்லாம் அவர்கள் இஷ்டம்போல் நடந்துகொள்ளுகிறார்கள். அதிகாரிகள் தொடர்பு இருக்கிறது என்ற எண்ணத்தில் பல வகைத் தொல்லைகளைக் கொடுக்கிறார்ஞ்கள். ஹரிஜன ஹாஸ்டல்கள் எல்லாம் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டு நல்ல முறையில் நடத்தப்பட வேண்டும்.

விலைவாசி உயர்ந்து விட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே நேரத்தில் என்.ஜி.ஓ.-க்களுக்கு எந்த வித வசதியும் கொடுக்கப்படவில்லை. கிராம அதிகாரிகளின் நிலைமையும் அதுதான். சம்பளக் கமிஷன் ஏற்படுத்தியிருக்கிறோம். அவர்கள் சிபாரிசு வந்தவுடன் கவனிக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். இதே நேரத்தில் மத்திய சர்க்கார் மட்டும் எப்படி சம்பளத்தை உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள்?



12th March 1960] [Cri C. Natarajan]

நம்முடைய ராஜ்யத்தில் வரி போடவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் மத்திய சர்க்காரில் ஏழை மக்களுக்கு உபயோகப்படக் கூடிய சைக்கிள் சாமான்கள், சாதாரண எலக்ட்ரிக் சாமான்கள் ஆகியவற்றுக்கு வரி போட்டிருக்கிறார்கள். இங்கே வரி விதிப்பு இல்லாவிட்டாலும் கடனை எழுப்பியிருக்கிறார்கள். கடனையாவது நிறுத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

* Sri V. SANKARAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1960–61-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையைப் பார்த்தால் அரசாங்கத்தின் பொருளாதார நிலை, நிதி நிலை சீராக இருப்பது மட்டுமல்லாமல், அபிவிருத்தி வேலைகளிலே நாம் " டார்ஜெட் " போட்டதற்கும் அதிகமாகச் செய்து முடித்திருக்கிறோம் என்று தெரிகிறது. 152 கோடி ரூபாய் திட்டச் செலவுக்கான " ஔட்லே ", போட்டிருந்த போதிலும் 1961-ம் வருடம் முடிய 181 கோடி ரூபாய் நாம் செலவழிக்க இருக்கிறோம், அனேகமாக பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், மின்சாரத் திட்டங்கள் எல்லாம் பூர்த்திசெய்து விட்டோம் என்ற விவரம் எல்லாம் தெரிய வருகிறது. பெரிய தொழிற்சாலைகள் உருவாகி, ஒரு சில ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு நடந்துகொண்டிருக்கின்றன. உரப்பற்றாக்குறையை நீக்குவதற்கு மூன்று உர உற்பத்திச்சாலைகள் ஆரம்பிப்பதாக இருக்கிறது. சென்ற வருஷத்தின் நிதி நிலை அறிக்கையைப் பார்க்கும் போது, சென்ற வருஷம் 2·15 லட்சம் டன் அமோனியம் சல்பேட் கொடுப்பதாக இருந்தபோதிலுங்கூட, கடைசியில் 1·09 லட்சம் டன்தான் விநியோகிக்கப்பட்டது என்று இந்த வருஷ அறிக்கையிலே காணப்படுகிறது. அந்த முறையில் இப்பொழுது இருக்கும் அறிக்கையில் பார்த்தால் 1·09 லட்சம் டன்தான் விநியோகிக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவருகிறது. இந்த ஆண்டு அறிக்கையிலே 2·07 லட்சம் டன் அமோனியம் சல்பேட் விநியோகிக்கப்படுவதாக கண்டிருக்கிறது. சென்ற வருஷம்போல் இல்லாமல் இந்த வருஷம் முன்ஜாக்கிரதையாக இருந்து இரண்டு லட்சம் டன்னுக்கு மேற்பட்ட அமோனியம் சல்பேட் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக, இவ்வளவு முன்னேற்றம் அடைந்தபோதிலும், இவ்வளவு திட்டங்களினாலே பரிபூரணமான பலன் கிடைக்காததற்கு முக்கியமான காரணம் விலைவாசிக் கட்டுப்பாடு இல்லாததுதான் என்று நிதி அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது விலைவாசிகளை நிரந்தரமாக ஒரு கட்டுக்குள்ளே வைப்பதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார். காய்கறி, பழம், மீன், இறைச்சி போன்ற உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விதி விலக்கு அளித்திருப்பது இந்த விஷயத்திலே உதவிகரமாக இருக்கும் என்று கருதுகிறேன். உணவுப் பொருள்கள் என்னும்போது, இன்னும் ஒன்றிரண்டு பொருள்களை விதிவிலக்கிலே சேர்த்திருக்கவேண்டும். பாலுக்கும் நெல்லுக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்திருக்க

[Sri V. Sankaran] [12th March 1960

வேண்டும். பாலானது காய்கறி போன்று சீக்கிரம் கெட்டுப் போகும் பொருள். அதையும் சேர்த்திருந்தால் நன்றாக இருக்கும். அதைச் செய்தால் உதவிகரமாக இருக்கும். உணவுத் தானியங்கள் சம்பந்தமாக விதி விலக்கு அளிக்கவேண்டுமென்று பல காலமாக முறையிட்டு வந்திருக்கிறார்கள். குறைந்த பட்சம் நெல்லுக்காவது விதி விலக்கு அளித்தால் நல்ல "ஜெஸ்ட்யூர்" ஆக இருக்கும். "நெஸஸிடீஸ் ஆப் லைப்"-இல் நெல் முக்கியமாக இருக்கிறது. நெல்லுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளித்தால் நல்ல காரியமாக இருக்கும். பால், நெல் இரண்டையும் விற்பனை வரியிலிருந்து விலக்கிவிட வேண்டும். அடுத்த வருஷ ஆரம்பத்திலாவது இவைகளுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். வரி மூலம் சில கோடி ரூபாய்கள் அதிகம் வந்து இருப்பதால் ஒரு சில லட்சம் குறைந்தாலும் "எகானமி" பாதிக்கப்பட மாட்டாது.

சென்ற வருஷ ஆரம்பத்திலேயே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நல்ல நிதி நிலை ஏற்பட்டால் விற்பனை வரியின் மூலம் வருமானம் திருப்திகரமாக இருந்து நிதி நிலை நன்றாக இருந்தால் அடுத்த வருஷம் "கம்பௌண்டிங்" அளவை 25 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரத்துக்கு உயர்த்துவது பற்றி யோசிக்கலாம் என்று உறுதி கூறினார்கள். ஒரு சில கோடிக்கு அதிகம் வரி வந்து பொருளாதாரம் குறையாது திருப்திகரமாக இருப்பதால், 25 ஆயிரம் என்று இருப்பதை 50 ஆயிரம் ஆக்க முயற்சி செய்ய வேண்டுமென்று யோசனை கூற விரும்புகிறேன்.

ரெவினியூ கணக்கிலிருந்து அபிவிருத்தி செலவினங்களுக்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எட்டில் மூன்று பகுதி கல்விக்காகவும், விஞ்ஞான வளர்ச்சிக்காகவும் ஒதுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க ஒரு விஷயம். அப்படியிருந்தும், அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டதுபோல், நாம் சீக்கிரத்திலே ஆரம்பக் கல்வி எல்லாக் குழந்தைகளுக்கும் அளிக்கும் விஷயத்தில் இலக்கு எட்டிப் போய்க்கொண்டே இருக்கிறது. அப்படியிருக்கும்போது, ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரையில் ஷிப்ட் முறையில் சொல்லிக் கொடுப்பதுபற்றி யோசனை செய்தால் எல்லோருக்கும் ஆரம்பக்கல்வியை விஸ்தரிக்கும்படி செய்வது என்ற யோசனையையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சர்க்கரை சம்பந்தமாகச் சொல்லவேண்டுமானால், பத்து லட்சம் டன் கரும்பு அதிக உற்பத்தி செய்வதற்கு இன்றையதினம் திட்டமிடப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 6-1/2 லட்சம் டன் கரும்பு உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. மூன்று சர்க்கரை ஆலைகள் ஏற்கனவே நிறுவப்பட்டு அவை வேலை துவங்கும் தருவாயில் இருக்கின்றன. இன்னும் நான்கு ஆலைகள் நிறுவப்பட இருக்கின்றன. அவையெல்லாம் முடிந்து, பலனளிக்க ஒரு சில வருஷங்கள் ஆகலாம். தற்போது மத்திய அரசாங்கத்திலிருந்து மாதம் பத்து ஆயிரம்



12th March 1960] [Sri V. Sankaran]

டன் சர்க்கரை நமது ராஜ்யத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். பத்தாயிரம் டன் என்பதை பதினைந்தாயிரம் டன் அளவுக்காவது கொடுக்கவேண்டுமென்று மத்திய சர்க்காரை வற்புறுத்திக் கேட்டுப் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற வருஷம் சர்க்கரைக் கட்டுப்பாடு கடுமையாக இருந்தது. க்ளப்களுக்கோ, காண்டீனுக்கோ போனாலும், சர்க்கரை கிடைக்காததால் எல்லோரும் ஏசும்படியான அவல நிலை எம்.எல்.ஏ.-க்களுக்கு ஏற்பட்டிருந்தது. ஆகவே, மத்திய சர்க்காரிடமிருந்து பத்து ஆயிரம் டன்னுக்குப் பதிலாக பதினைந்தாயிரம் டன் அளவுக்கு சர்க்கரை உடனடியாகப் பெற வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மோட்டார் வரி சம்பந்தமாக 1930, 1934-லிலே பிரித்துக் கொடுக்கப்பட்டது. முனிசிபாலிடி போன்றவைகளுக்கு, டோல் கேட் எடுத்தபோது அந்த வருமானத்திற்குப் பதில் மோட்டார் வரியிலிருந்து ஒரு பகுதி கொடுப்பது என்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்குப் பிறகு போக்குவரத்து பல மடங்கு அதிகரித்திருக்கிறது. வாகனங்களின் எண்ணிக்கையும் பதின் மடங்கு அதிகரித்திருக்கிறது. அதற்குத் தகுந்தாற்போல் அதிகமான அளவுக்கு ஸ்தல ஸ்தாபனங்களுக்கு நிதி வசதி கிடைக்கும்படி, மோட்டார் வரியிலிருந்து துகைகள் கொடுக்க வசதி செய்ய வேண்டும்.

சேரிச் சீரமைப்புத் திட்டம் சம்பந்தமாக 1959–60-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையை எடுத்துக்கொண்டு பார்த்தால், 60 லட்ச ரூபாய் அளவுக்குத் திட்டங்கள் மதுரை, கோயமுத்தூர், திருச்சி, சென்னை போன்ற நகரங்களிலேயும் எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த வருஷ அறிக்கையில் அதுபற்றி எந்தவிதமான குறிப்பும் இல்லை. வருஷாவருஷம் சேரி அபிவிருத்தி நடந்துவருகிறபோது ஏன் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்று தெரியவில்லை. சென்ற வருஷ நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருந்துங்கூட, மதுரை நகரிலே 1959–60-ல் அபிவிருத்தி வேலை நடந்ததாகத் தெரியவில்லை. 1959–60-திலே ஒதுக்கப்பட்ட தொகை "லாப்ஸ்" ஆகியிருந்தாலும், இந்த வருஷம் செய்யப்படும் வேலைகளோடாவது சேர்த்துக்கொள்ள வேண்டும். சேரி சீரமைப்பு சம்பந்தமாக மதுரை நகரத்திற்கு சென்ற வருஷம் நடை முறையில் நடந்ததாகத் தெரியவில்லை. திட்டத்தில் இருக்கலாம். ஆனால், நடைமுறையில் ஒருவிதமான வேலையும் செய்ததாகத் தெரியவில்லை.

மதுரை நகரம் சம்பந்தமாக சொல்லும்போது, இரண்டு மூன்று முக்கியமான விஷயங்களைக் குறிப்பிடவேண்டும். நகரத்தின் குடிதண்ணீர் சப்ளை நல்ல முறையிலே அமைய வேண்டும். சாலைகள் நல்ல முறையில் அமையவேண்டும். மூன்றாவதாக எடுத்துக்கொண்டால், நல்ல ஹௌஸிங் காலனி இருக்கவேண்டும். மதுரை நகர குடிதண்ணீருக்கு மேலக்கால்

[Sri V. Sankaran] [12th March 1960

திட்டம் நடந்து கொண்டுவருகிறது. அது ஆமை வேகத்தில் தான் நிறைவேற்றப்படுகிறது. "லாண்டு அக்விஸிஷன்" சம்பந்தமாக தாமதம் இருக்கிறது. அதைச் சீக்கிரம் முடிக்க ஏற்பாடு செய்தால், மதுரை நகர குடிதண்ணீர்ப் பிரச்னை நீங்கி விடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் மதுரையில் ஒரு பாகத்தில் இன்னும் கட்டப்படாத ட்ரெயினேஜ் ஸ்கீம் நிறைவேற்றப்பட வேண்டும். வைகை நதி மீது இரண்டாவது ஓவர்ப்ரிட்ஜ் கட்டியாகிவிட்டது. பக்கத்தில் இருக்கும் நிலங்கள் அக்விஸிஷன் செய்து இருமருங்கும் சரியாக அமைக்கப் படவில்லை. அதைச் செய்தால் பல ஆயிரக் கணக்கான ரூபாய் லாபம் ஏற்படும். சீக்கிரம் இரண்டு பக்கத்திலும் ரோடு போட்டாகவேண்டும். இரண்டு லெவல் க்ராஸிங்குகள் திருப்பரங்குன்றம் ரோடிலே இருக்கின்றன. கவர்னர் வந்தபோதும், நமது முதலமைச்சர் காமராஜ் அவர்கள் வந்தபோதும்கூட அந்த லெவல் க்ராஸிங்கினால் காத்திருக்க வேண்டிய அநுபவம் ஏற்பட்டது. இதனால் ரயில் இழந்தவர் பல பேர். பஸ்ஸைப் பிடிக்க முடியாது கஷ்டப்பட்டவர் சிலர். விசேஷங்களுக்குப் போக முடியாது தாமதப்பட்டவர் பலர். அந்த லெவல் கிராஸிங் குறுக்கிட்டு "ஹர்டில்" மாதிரி தொந்தரவு அளித்துக் கொண்டிருக்கிறது: ஓவர்ப்ரிட்ஜ் கட்டினால் இந்த சிரமத்தைத் தவிர்க்கலாம். அதற்கு சற்று காலமானாலுங் கூட, நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். ஏற்கனவே இருக்கும் ஓவர்ப்ரிட்ஜ் பஸ் ஸ்டாண்டு பக்கத்திலே இருக்கிறது. புது வைகைப் பாலத்திலிருந்து திருப்பரங்குன்றம்–பழங்கானத்தம் அருகே சேர்ப்பதற்கு வசந்தநகர் வரையும் உத்தேச ரோடை உடனடியாக போட்டுவிட்டால் கஷ்டம் நீங்கி விடும். நாஷனல் ஹைவேஸ் திட்டம் இருக்கிறது. ஆதலால் பஸ் ஸ்டான்ட் ஓவர்ப்ரிட்ஜிலிருந்து தேனி ரயில்வே லெவல் க்ராஸிங் வழியாக இரண்டே இரண்டு ரயில்கள் தினசரி போகின்றன. ஆதலால் கஷ்டம் ஏற்படாது. சீக்கிரத்திலே முடித்துவிட்டால் அந்தக் கஷ்டங்கள் தவிர்க்கப்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதையும் சீக்கிரத்தில் முடிக்கவேண்டும்.

மதுரை நகரத்தில் ஸிடி இம்ப்ரூவ்மென்ட் ட்ரஸ்ட் போன்ற ஆர்க்கனைஸேஷன் கண்டிப்பாக ஒன்று அவசியம். இப்பொழுது இருக்கும் நிலைமையிலே ஒன்றும் இல்லை. "அன்-அபிஷியல்" ஆக ஒன்று நடக்கிறது. இப்பொழுதிருக்கும் திருநகர் ஐந்தாறு மைல் தள்ளி இருக்கிறது. ஸிடி இம்ப்ரூவ்மென்ட் ட்ரஸ்ட் போன்று மதுரையில் போற்றுவிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

தொத்துநோய் ஆஸ்பத்திரி ஆற்றின் பக்கத்தில் அமைந்திருக்கிறது. அதனால் ஆற்றின் வழியாக பல ஊர்களுக்கு நோய்கள் பரவி சுகாதாரக் கேடு ஏற்படுகிறது. அந்த ஆஸ்பத்திரியை அந்த இடத்திலிருந்து மாற்றிவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.



12th March 1960] [Sri V. Sankaran]

அடுத்தபடியாக, சிறு நிலச் சுவாந்தார்களின் பிரச்னை பல 1-00 p.m.
காலமாக தீர்க்கப்படாமல் இருந்துவருகிறது. இதுபற்றி இவர்களுக்கு விவசாயச் சட்டங்களிலிருந்து நிவாரணம் அளிப்பதாக பல காலமாக மந்திரி அவர்கள் வாக்களித்து வந்திருக்கிறார்கள். வரப்போகிற "காம்ப்ரெஹென்ஸிவ் பில்லில்" ஆனாலும் சிறு நிலச் சுவாந்தார்களுக்கு நிவாரணம் அளிக்கப்படுமா என்று தெரியவில்லை. இவர்களுக்கு கண்டிப்பாக கூடிய சீக்கிரம் நிவாரணம் அளிக்கப்பட வேண்டும். இந்த "காம்ப்ரெஹென்ஸிவ் பில்லில்" ஆனாலும் சரி, அல்லது அடுத்தபடியாகவாவது சீக்கிரம் இவர்களுக்கு நிவாரணம் அளிக்க வழி வகுத்தாகவேண்டும்.

கிராம அதிகாரிகளின் பிரச்னை சம்பந்தமாக பரிசீலிக்க அமைக்கப்பட்ட மந்திரி சபைக் கமிட்டி அறிக்கை இதுவரை, வெளிவந்ததாகத் தெரியவில்லை. இவர்களுக்கு உடனடியாக ஒரு சிறிதளவாவது ஊதிய உயர்வு அளிக்கவேண்டும். சம்பளக் கமிஷனுக்கு முன் வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப் படுகிறது. மந்திரி சபைக் கமிட்டியும் இதை நீண்ட காலமாக பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. முடிவு இன்னும் வெளி வந்ததாகத் தெரியவில்லை. இது விஷயமாக சீக்கிரத்திலே ஒரு முடிவு எடுக்கப்படவேண்டும்.

போன ஆண்டு அறிக்கையிலே தேசீய பொருளாதார ஆராய்ச்சிக் குழுவினர் நம் தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை ஆராய்ந்து ஒரு பூர்வாங்க அறிக்கையை ஏப்ரல் இறுதிக்குள்ளாக சமர்ப்பிப்பார்கள் என்று கண்டிருந்தது. இந்த் ஆண்டு அறிக்கையில், அந்த அறிக்கை கிடைத்துவிட்டதென்றும், அது பரிசீலனையில் இருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழிலபிவிருத்திக்காக வேண்டிய திட்டங்களை உருவாக்க இந்த அறிக்கை உதவும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இதற்காக ஏன் இவ்வளவு கால தாமதம் ஆகவேண்டும்? இனியும் கால தாமதம் ஆகாமல் உடனடியாக, வரப்புகள் இருக்கும் இடங்களிலாவது உடனடியாகத் தொழில்கள் அமைக்கப்பட வேண்டும். முக்கியமாக கிராமங்களில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டு அங்கேயே சிறு தொழில்களை அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். இதன் மூலம் வேலையில்லா திண்டாட்டத்தை ஓரளவு போக்க முடியும்.

ஆதாரக் கல்விதான் நாம் முடிவாக ஏற்றுக்கொண்டிருக்கும் ஆரம்பக் கல்வித் திட்டம் என்பதாக சென்ற ஆண்டில் நிதிநிலை அறிக்கையில் வலியுறுத்தப்பட்டது. ஆனால் இதுபற்றி இந்த ஆண்டு அறிக்கையில் குறிப்பு ஒன்றும் காணோம். ஆரம்பப் பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்றியமைப்பதில் எவ்வளவு தூரம் முன்னேற்றம் காணப்பட்டிருக்கிறது, என்ன வேலைகள் நடந்து இருக்கின்றன என்பதுபற்றி நிதி அமைச்சர் அவர்களை விளக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri V. Sankaran] [12th March 1960]

மத்திய அரசாங்கத் துறையில் எடுத்துக்கொள்ளப்பட்ட சென்னை துறைமுக விஸ்தரிப்பு, பெரம்பூர் ரயில் பெட்டி தொழிற் சாலை விஸ்தரிப்பு, தாம்பரம்–விழுப்புரம் ரயில் பாதையை மின்சாரப் பாதையாக அமைத்தல் ஆகிய பல்வேறு திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்று சென்ற ஆண்டு அறிக்கையில் கூறப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு அறிக்கையில் அவைகளைப் பற்றிய "ப்ராகிரஸ்" என்ன? எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறது என்பது பற்றி குறிப்பிடப்படவில்லை. அது பற்றியும் அமைச்சர் விளக்கிக் கூறவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* Sri P. M. PERIA KARUPPAN AMBALAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் கொண்டு வந்திருக் கும் வரவு செலவுத் திட்டத்தை நான் மிகவும் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். விவசாய உற்பத்தி பெருகவேண்டும் என்பதற் காக விவசாயிகளின் நலனுக்காக அரசாங்கம் பல நல்ல திட்டங் களை வகுத்திருக்கிறது. நமது நாட்டிலுள்ள பற்றுக்குறையை போக்குவதற்கு விவசாயிகள் அதிக அக்கரை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பற்றுக் குறையை நிவர்த்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கை என் போன்றவர்களுக்கு நிச்சயம் இருக்கிறது.

உரம் சம்பந்தமாக நமது நாட்டில் பற்றுக்குறை இருந் தாலும், அதை நாம் நல்ல முறையில் விநியோகம் செய்வதற்கு முற்படுவோமானால், நிச்சியம் அதனால் நாம் நல்ல பலனை எதிர் பார்க்க முடியும். ஓரளவுக்கு நமக்கு உரவிஷயத்தில் பற்றுக் குறை இருந்தாலும், கூட்டுறவு சங்கங்களின் மூலம் அதை நல்ல முறையில் வினியோகம் செய்தால், நல்ல பலன் தரும். சில்லரை வியாபாரிகளுக்கும் தனிப்பட்ட வியாபாரிகளுக்கும் லைஸென்ஸ் கொடுக்காமல், கூட்டுறவு சங்கங்களுக்கே உரம் வினியோகம் செய்வதற்கு லைசென்ஸ் கொடுத்தால், இந்த கள்ள மார்கெட் போன்ற ஒழுங்கீனமான காரியங்கள் நடவாது. அப்படிப் செய்தால் உண்மையாகவே வசதியில்லாதவர்கள்கூட அந்த ரசாயன உரங்களைப் பயன் படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும். அந்த முறையை அரசாங்கம் கையாளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இரண்டாவதாக, விவசாயிகளுக்கு மிகவும் முக்கியமாக இருக்கிற குளங்களை சீர்படுத்தவேண்டும். ஏ-2 குளங்கள் பெரும்பாலும் பெரியாறு பகுதியில் அதிகமாக இருக்கின்றன. அந்தக் குளங்களை அரசாங்கம் செப்பனிடுவதில்லை. குடிமரா மத்து செய்ய வேண்டுமென்ற ஒரு விதி இருக்கிறது. அந்த விதியின் கீழே யாரும் அந்தக் குளங்களை கவனிப்பதில்லை. குடியானவர்களும் அந்த மராமத்து வேலையை செய்வதில்லை. அந்தக் கண்மாய்களில் தூர்ந்து போன மண்ணை வெட்டி எடுத்து வெளியே போட்டு கரையை சரிபடுத்துவது போன்ற மராமத்து வேலைகள் செய்வதற்கு சந்தர்ப்பம் இல்லாமலே போய்விடுகிறது.



12th March 1960] [Sri P. M. Peria Karuppan Ambalam]

இவைகளை பெரியாறு டிபார்ட்மெண்டில் எடுத்துக்கொண்டு வேலை செய்தால், பெரியாறு பாசனமுள்ள இடங்களில் ஆற்றில் தண்ணீர் குறைவாக இருக்கும் சமயத்தில் குளங்களில் தேங்கி உள்ள தண்ணீரைக் கொண்டு விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்க ஏதுவாக இருக்கும். ஆகவே, ஏ-2 குளங்களை பெரியாறு டிபார்ட்மெண்டில் எடுத்துக்கொண்டு செப்பனிடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

முக்கியமாக விவசாயிகளுக்கு வேண்டிய பட்டை, மண் வெட்டி, கொழு போன்ற இரும்பு சாமான்கள் நிச்சயமாகக் கிடைத்தாக வேண்டும். உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, விவசாயிகளுக்கு வேண்டிய சாதனங்களை நாம் கொடுக்காமல் இருந்தால், அவர்கள் எப்படி விவசாயத்தை பெருக்க முடியும்? இதில் நாம் ஓரளவு கவனம் செலுத்த வேண்டும். அந்த சாமான்கள் விவசாயிகளுக்கு கிடைப்பதில்லை. பட்டை அதிகமான விலை. இரண்டு மடங்கு, மூன்று மடங்கு அதிகமான விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. ஏதாவது ஒரு பர்மிட் வாங்க வேண்டுமென்றால் விவசாயிகளுக்கு கிடைப்ப தில்லை. பல மாதங்கள் ஆகியும் பர்மிட் கிடைப்பதில்லை. எல்லா தாலூக்காக்களிலும் கூட்டுறவு விற்பனை சங்கங் கள் இருக்கின்றன. அந்த சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு வேண்டிய இரும்பு சாமான்கள் கிடைக்கும்படி செய்ய அரசாங் கம் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தாலூகா தலைநகரத்தில் இருக்கும் தாலூகா அதிகாரிகளுக் கும், ரெவின்யூ அதிகாரிகளுக்கும், பெரியாறு டிபார்ட்மெண்டு அதிகாரிகளுக்கும் தாலுகா தலைநகரத்தில் வீடுகள் கிடைப்ப தில்லை. அவர்களுக்கு வாடகை வீடுகள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதனால் அவர்கள் பல மாதங்களாக அவர்களுடைய வேலையைக்கூட கவனிக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. குடியிருக்க வீடுகள் கிடைக்காமல் அவர்கள் மிகவும் அல்லல் உறுகிறார்கள். இது அரசாங்கத்திற்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். ஓரளவு போலீஸ் அதிகாரி களுக்கு மட்டும் தாலுகா தலைநகரத்தில் போலீஸ் ஸ்டேஷ னுக்கு பக்கத்தில் சில வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக் கின்றன. அதே மாதிரி தாசில்தார் போன்ற தாலுகா அதிகாரி களுக்கும், பெரியாறு டிபார்ட்மெண்டு அதிகாரிகளுக்கும் வீடுகள் கட்டிக் கொடுத்தால் மிகவும் நலமாக இருக்கும். அரசாங்கம் பல வீடுகள் கட்டும் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு வீடுகள் இல்லாவிட்டால், அவர்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்பதை அரசாங்கம் ஆராய்ந்து பார்த்து அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் தாலுகாவில் தென் பகுதி பிராந்தியத்தில் சுமார் 1,000 ஏக்கர் தரிசாக கிடக்கிறது. அந்த இடத்தில் ஒரு கால் நடைப் பண்ணை ஏற்படுத்தினால் மிகவும் நலமாக இருக்கும். விவசாய மக்கள் நிறைந்த அந்த இடத்தில் நல்ல மாடுகள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. 50, 60 மைல்

களுக்கு அப்பால் சென்றுதான் விவசாயிகள் தங்களுக்கு வேண்டிய மாடுகளை வாங்கிவர வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த இடத்தில் ஒரு மாட்டுப் பண்ணை ஏற்படுத்தினால் விவசாயி களுக்கு மிகவும் சௌகரியமாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்யுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

எனக்கு முன் பேசிய பல அங்கத்தினர்கள் பெருவாரியாக கிராமங்களில் ரோடு வசதி கிடையாது என்று சொன்னார்கள். கிராம மக்கள் தங்கள் விளைபொருள்களை நல்ல விலைக்கு விற்ப தற்கு வேண்டிய பக்கத்திலுள்ள நகரங்களுக்கு செல்வதற்கோ அல்லது தங்களுடைய களத்திலிருந்து விளைபொருள்களை வீட்டிற்கு கொண்டு போவதற்கோ ரோடு வசதியில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். விவசாய மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்றால், கிராமப் புறங்களில் நிச்சயமாக நல்ல ரோடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் அரசாங்கத்தை மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த வேலைகளைச் செய்யுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டு, எனக்கு இந்தச் சந்தர்ப்பம் அளித்ததற்கு சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI A. PERUMAL: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1960–61-ம் வருஷத்தின் பட்ஜெட் வரவு செலவு கணக்கை கனம் நிதி அமைச்சர் கொண்டு வந்ததை முன்னிட்டு ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். முதலாவதாக, நமது மாநிலத்தில் விவசாயத்தைப் பெருக்குவதற்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்க நமது சர்க்கார் முன்வந்துள்ளது. ஆனால் அப்படி சர்க்கார் அளிக்கும் உதவிகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நல்ல முறையில் விவசாயிகளுக்கு கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், என் தொகுதியில், சில பகுதிகளில், விவசாய ஆபீஸ்களில், பயிர்களுக்காகக் கொடுக்கப்படும் மருந்து, ஒரு மாதத்திற்கு முந்தி வந்திருந்தும், ஒரு மாதத்திற்குப் பிறகு வரை, விலை நிர்ணயம் செய்து சர்க்காரி லிருந்து உத்தரவு வரவில்லை என்று சொல்லி மருந்துகளைக் கொடுக்காமல் இருந்துவிடுகிறார். ஆபீசில் வைத்துக்கொண்டு விலை நிர்ணயம் செய்யவில்லையென்று மருந்தைக் கொடுக்காமல் இருந்ததால் விவசாயிகளுக்கு அதிக நஷ்டமாகி விட்டது. விவசாயிகள் கேட்டதற்கு உத்தரவு வரட்டும் அதற்குப் பிறகு தருகிறோம் என்று சொல்லிவிட்டார்கள். அவர்கள் கொடுப்ப தற்குள், பயிர்கள் நாசமாகிவிட்டது சில பகுதிகளில். பல முறை விவசாய ஆபிசர்களிடம் சொல்லிப் பார்த்தேன். அவர்கள், "நாங்கள் என்ன செய்வோம், சர்க்கார் உத்தரவு வரவில்லை" என்று சொல்லி விட்டார்கள். சென்னை சர்க்கார் இந்த விஷயத்தில் நல்லதொரு உத்தரவை பிறப்பிக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.



இந்த இரண்டாவது திட்டம் ஏறக்குறைய மூன்று வருஷம் ஆகிவிட்டது. இருந்தாலும், இந்த மூன்று வருஷ காலத்தில், எங்கள் முதுகளத்தூர் பகுதியில், ஏறக்குறைய 30 மைல் தூரம் போகும் நாராயணக் கால்வாய் ஒன்று இருக்கிறது. அதைச் செப்பனிட்டுக் கொடுத்தால், ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் பயிரிட்டு லட்சக்கணக்கான மக்கள் பயன் அடைவார்கள், அதற்கு வாய்ப்பு இருக்கும் என்று நான் பலமுறை எடுத்துச் சொல்லியும், அமைச்சர் அவர்கள் முன்னாலும் சொன்னோம், இருந்தும் ஒன்றும் நடைபெறவில்லை. இரண்டாவது திட்டம் கழிந்து விட்டது. வரப்போகும் வருஷத் திட்டத்திலாவது, அதைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கனம் அமைச்சரவர்களை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். எங்கள் தொகுதி பிற்போக்கான தொகுதி என்று எல்லோருக்கும் தெரியும். நான் மூன்று வருஷ காலமாகச் சொல்லியும் அதன் விளைவாக ஒன்றும் கனம் அமைச்சரவர்கள் செய்யவில்லை.

இந்த விஷயத்தைச் சொல்லுவதற்கு மனம் புண்படுகிறது. அரை லட்ச ரூபாய் செலவழித்து, காலனி கட்டினார்கள். ஆனால், அது குடியிருக்க மார்க்கம் இல்லாமல் இருக்கிறது. ஆனால், கனம் அமைச்சரவர்கள், கடந்த ஒரு வாரத்திற்கு முன் சுற்றுப் பிரயாணம் வரவிருந்த காலத்தில், நேரே பார்த்து ஏதாவது சொல்லலாம் என்றிருந்தேன். ஆனால், அவர்களுடைய சுற்றுப் பிரயாணம், அங்கே ரத்தாகி விட்டது. அங்கே 5, 6 வீடுகளில், சுவர்கள் சாய்ந்து, ஓடுகள் சரிந்து நொறுங்கி விட்டன. அந்த ஓட்டை இறக்கி வைத்தால், சில வீடுகள் கட்ட உதவும். 100 குடும்பங்கள் இருக்கலாம் என்று கட்டிய காலனியில் 10, 15 குடும்பங்கள்தான் இருக்கின்றன. (கனம் ஸ்ரீ பி. கக்கன்: எங்கே அது?) கமுதியில். கமுதிக் காலனியைப் பற்றிச் சொல்லு கிறேன்.

THE HON. SRI P. KAKKAN: அங்கே முதலில் யாரும் குடி வரவில்லை. இப்பொழுது குடி வந்திருக்கிறார்கள். ரிப்பேர் பண்ணிய பிறகு பெரும் பகுதியில் குடியேறியிருக்கிறார்கள்.

SRI A. PERUMAL: கனம் அமைச்சரவர்கள் சொல்வதை நம்புகிறேன். குடியேறியிருப்பது வாஸ்தவந்தான். ஆனால், குடியேறிய பிறகு, சில வீடுகளின் சுவர்கள் வீழ்ந்து விட்டன, ஓடுகள் சரிந்து நொறுங்கி விட்டன. மந்திரி நேரிடையாக போனால் பார்க்கலாம். அந்த காலனியில் இருக்கும் ஓடுகளை யெல்லாம் ரிப்பேர் ஆகவிருக்கும் வீடுகளில் ஓட்டை இறக்கி வைத்தால், அதைக் கொண்டு 10 வீடுகள் கட்டலாம். புது வீடுகள் கட்ட உதவும் என்ற அபிப்பிராயத்தை கனம் அமைச்ச ரவர்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

கமுதியில் ஒரு போஸ்டாப்பீஸ் இருக்கிறது. அந்த போஸ்டாபீசில் ஏறக்குறைய 15 சிப்பந்திகள் வேலை செய் கிறார்கள். அவர்கள் வேலை பார்க்கும் இடம் ஒரே ரூம், அந்த ரூம் போன்ற இடத்தில், 15 சிப்பந்திகளும், வேலை செய்ய

[Sri A. Perumal] [12th March 1960

இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே, நமது சர்க்கார், மத்திய சர்க்காருக்குச் சொல்லி, உடனே அந்த போஸ்டாபீசுக்கு வசதியான கட்டிடத்தைக் கட்டிக் கொடுத்து உதவிசெய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம் மாகாணத்தில் ஹரிஜன மாணவர்களுக்குச் செய்துள்ள உதவியை நான் பாராட்டுகிறேன். அதற்காக நம் சென்னை சர்க்காரை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

அதில் மாணவர்கள் விடுதியில், ஒவ்வொரு வருஷமும் புதிதாக மாணவர்கள் சேர்க்கிறார்கள். ஆனால், என் பகுதியில் இருக்கக் கூடிய மாணவர்களுக்கு நன்மை கிடைப்பதில்லை. அதற்கென்றிருக்கும் கமிட்டி மெம்பர்கள் மூலமாகவும், அந்தக் கிராமப் பகுதியில் இருக்கக்கூடிய காங்கிரஸ்காரர்கள் மூலமாகவும், கொண்டுவரப்படும் மாணவர்களைச் சேர்க்கிறார்களே தவிர அந்தப் பிராந்தியத்து எம்.எல்.ஏ. என்ற ஹோதாவில் நான் சிபார்சு செய்த பிள்ளைகளைச் சேர்க்க அனுமதி கொடுக்கப்படவில்லை. கனம் அமைச்சரவர்கள் நேரில் வந்து பார்த்து என்னை கமிட்டி மெம்பர்களின் ஒருவனாக சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: அது கலெக்டர் பார்த்துப் போடுவது. கலெக்டரிடம் எம். எல். ஏ. என்று சொன்னால் அவர்கள் கவனிப்பார்கள்.

SRI A. PERUMAL: கலெக்டருக்கு நேரே இரண்டு ரிபோர்ட்டு அனுப்பியும், என்ன ஏது என்று கவனிக்கவில்லை...... (கனம் ஸ்ரீ கக்கன்: பார்த்துச் செய்யச் சொல்கிறேன்.)

கனம் மந்திரி அவர்களுக்கு இன்னொரு விஷயம் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எங்கள் முதுகளத்தூர் ஏரியாவில் சில பகுதிகள் இருக்கிறது. அவைகளில் எந்தவிதமான சாலை வசதியும் கிடையாது. எந்தவிதமான சாலையும் அமைப்பதற்கு வசதி ஒன்றும் இல்லாமல் இருக்கின்றன. ப்ளாக் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சாலைகள் அமைப்பதற்கு திட்டம் போட்டால் அந்த கிராமத்தில் உள்ளவர்களும் கொஞ்சம் தொகை தரவேண்டும் என்கிறார்கள். இந்தத் தொகையை அங்குள்ள ஏழை மக்கள் கொடுக்க முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே சர்க்காரே முழுச் செலவுத் தொகையையும் ஏற்று அந்தச் சாலைகள் போட்டுத் தர வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*SRI M. R. KANDASWAMI MUDALIAR: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இப்போது சட்டமன்றத்தில் வந்திருக்கும் பட்ஜெட்டை வரவேற்று சிற்சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். வழக்கத்திற்கு மாறாக இந்த பட்ஜெட்டை மற்ற எதிர்க்கட்சியில் உள்ள கனம் அங்கத்தினர்கள் எல்லாம் ஏமாற்றம் அடையக்கூடிய முறையில் நமது நிதி அமைச்சர்



12th March 1960] [Sri M. R. Kandaswami Mudaliar]

அவர்கள் தயாரித்து சமர்ப்பித்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஏதோ வருஷா வருஷம் போல் இந்த வருஷ பட்ஜெட்டின் பேரில் அமைச்சர் அவையையும், மந்திரிகளையும் தாக்குவதறகுப் பல விஷயங்கள் இருக்கக்கூடும் என்று எண்ணியிருப்பார்கள். அப்படி இவ்வாண்டு இல்லையே என்று ஒரு பக்கம் அவர்களுக்கு உள்ளுக்குள் மனது சஞ்சலம்தான். அந்த முறையில் எப்போதும் போல் நிதி அமைச்சர் அவர்கள் செய்யாது புதிய முறையில்—நீண்ட சொற்பொழிவாக எல்லாவற்றுக்கும் விளக்கம் தரக்கூடிய வகையில் தயாரித்து சமர்ப்பித்திருக்கிறார்கள். இது எதிர்க்கட்சிக்காரர்களுக்கு ஏமாற்றத்தையே அளிக்கும். காரணம் அவர்களுக்கு எப்போதும் திட்டுவதற்குச் சந்தர்ப்பம் இருந்தால்தான் கொஞ்சம் பிரியம். அதற்கு வழியில்லாதபடி அமைச்சர் அவர்கள் செய்துவிட்டார்கள்.

அதோடு நம்முடைய அரசாங்கம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பற்பல சாதனைகளைப் போற்றுவதற்குரிய முறையில் செய்து இருக்கிறார்கள். பலர் அதைப்பற்றி எவ்வளவோ பெருமை அடைந்தாலும், ஒன்றிரண்டு குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையிலே விளக்கமாகக் கொடுத்திருக்கிறார்கள். நமக்குத் தேவை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. நமக்குக் கிடைக்கிற மூலப் பொருள்கள் குறைவாக இருக்கிற காரணத்தினால் எல்லாக் காரியங்களையும் திறம்பட நடத்தி பூரணத்துவம் அடைந்துவிட்டோம் என்று சொல்லக் கூடிய முறையில் செயல்பட முடியாதபடி நம் நாட்டுப் பொருளாதார அமைப்பு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள்.

எப்படி இருந்தாலும் மின்சார அபிவிருத்தியை எடுத்துக் கொண்டால் நாம் முதல் திட்டம், இரண்டாவது திட்டம் இவைகளில் எல்லாம் அதிகமான முன்னேற்றம் அடைந்து இருக்கிறோம். பல காரியங்களைச் செய்து இருக்கிறோம். எதிர்க்கட்சி நண்பர்கள் சிலர் சொல்கிறார்கள். "விவசாயத்தில் அதிகமான முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்று சொல்கிறார்களே, உபரியாக தானியம் உற்பத்தி செய்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்களே, இருந்தும் உணவு விலை குறையவில்லையே" என்கிறார்கள். உணவு விலை ஏற்றமாக இருக்கிற காரணத்தை வைத்து மந்திரி சபையைக் குறை சொல்கிறார்கள். விலை ஏற்றமாக இருப்பதால் நாம் உபரியாக உற்பத்தி செய்யவில்லை என்பது தவறு. நம்முடைய நாட்டில் எவ்வளவு உற்பத்தி செய்ய முனைந்து இருக்கிறோமோ அதைக் காட்டிலும் செலவும் அதிகரித்து இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. உணவு உற்பத்தி பெருகிக் கொண்டு வருவதோடு கூட உணவு உபயோகப்படுத்தக்கூடிய நபர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டு வருகிறது. உற்பத்தியைக் காட்டிலும் தேவை அதிகமாகிக் கொண்டே இருப்பதன் காரணத்தினால்தான் நம்மால் உபரி உற்பத்தி ஏற்பட்டும் கூட தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

[Sri M. R. Kandaswami Mudaliar] [12th March 1960

இன்னொன்று, நம் நாட்டில் ஒரு ஏக்கருக்கு எவ்வளவு உற்பத்தி செய்கிறோமோ அதைக் காட்டிலும் அதிகமாக வெளி நாட்டில் உள்ளவர்கள் உற்பத்தி செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படிச் சொன்னாலும் ஏற்கனவே நாம் பல நூற்றாண்டு காலமாக அடிமையாக இருந்த காரணத்தினால் அப்போது இருந்த அரசாங்கம் விவசாய அபிவிருத்தியில் கொஞ்சங்கூட கவனம் செலுத்தவில்லை. நிலம் நல்லமுறையில் அது பாதுகாக்கப்படாமையினால், உரம் இடப்படாமையினால் இன்றையதினம் நாம் அதிகமாக நிலத்தைப் பண்படுத்தி, உரமிட்டு வேலை செய்யவேண்டியிருக்கிறது. நாம் செய்கிற வேலையின் முழுப்பயனையும் நம்மால் பெற முடியவில்லை. ஏற்கனவே எந்த வேலையும் செய்யப்படாத காரணத்தினால் இன்றையதினம் நாம் செய்கிற உபரி வேலையினால் நிலத்தின் தரம் அதிகமாக்கப்பட்டு உற்பத்தியின் அளவு நாம் எதிர்பார்த்தபடி பெருகாவிட்டாலும் முன்பு இருந்ததை விட அதிகமாகப் பெருகியிருக்கிறது. முன்பு பலநூற்றாண்டு காலமாக நிலம் கவனிக்கப்படாத காரணத்தினால் அதில் பூரண வெற்றி காணமுடியாத நிலைமையில் நாம் இருக்கிறோம். அதில் நம் ராஜ்ய அதிகாரிகளையும் ஒரு விஷயத்தில் எச்சரிக்கை செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

உணவு உற்பத்தி விஷயத்தில் விவசாயிகள் தங்கள் முழு பலத்தை உபயோகப்படுத்தி வேலை செய்து உற்பத்தியைப் பெருக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு விவசாய அபிவிருத்திக்கு வேண்டிய உதவிகளை எதை எதை எந்த எந்த இடத்தில் பெறுவது என்று தெரியவில்லை. அவர்களுக்குத் தேவையான விவரங்களை அதிகாரி இடத்தில் சென்று கேட்டால் அதிகாரிகள் அசட்டையாகப் பதில் சொல்கிறார்களே தவிர அவர்களுக்கு வேண்டிய உதவிகளை உடனே முன்வந்து செய்வதில்லை. ஆகவே அதிகாரிகள் விவசாயிகள் அவர்களிடத்தில் வந்து விவரங்கள் கேட்கும் போது அசட்டை செய்யாமல் வேண்டிய உதவிகளை எல்லாம் செய்ய வேண்டும் என்பதாக உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கூட ரசாயன உரத்தை எவ்வாறு உபயோகப் படுத்தவேண்டும் என்பதைப்பற்றி விவசாயிகளிடத்தில் நல்ல முறையில் பிரசாரம் செய்யவேண்டியது அவசியமாக இருக்கிறது. அவர்களுக்கு சரியான விவரங்கள் கொடுக்கப்படுவது இல்லை. மேலும் எந்த இடத்தில் சென்று உரத்தைப் பெற்று வரவேண்டும் என்கிற விவரமும் தெரிவிக்கப்படுவது இல்லை. அதையும் அமைச்சர் அவர்கள் கவனித்து விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டிய கடன் வசதி, இன்னும் இதர வசதிகள் இவற்றையெல்லாம் அவர்கள் காலாகாலத்தில் தக்க முறையில் பெறும் படியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு கடன் வசதி அளிப்பது, பொறுக்குவிதை, உரம் முதலியவை அளிப்பது, பம்பு செட்டுகள் அளிப்பது இவற்றில் விவசாயிகளுக்கு அதிகாரிகள் மிகுந்த உறுதுணையாக



12th March 1960] [Sri M. R. Kandaswami Mudaliar]

இருக்க வேண்டும் என்பதாக கேட்டுக் கொள்கிறேன். இவைகள் எல்லாம் நாளுக்குநாள் சரிப்பட்டு வருகிறது என்றாலும் கூட அதிகாரிகள் போதிய சிரத்தையுடன் காரியங்களைச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் சர்க்கார் செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். அரசாங்கம் விவசாய அபிவிருத்திக்கு தகுந்த பல நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருப்பதன் காரணமாகத்தான் இன்றையதினம் குறிப்பிடத்தக்க அளவுக்கு அதிக உற்பத்தி செய்ய முடிந்திருக்கிறது. அதோடு கூட நம் நாட்டிலே வெளிநாடுகளில் இருந்து அந்நியச்செலாவணியைச் சம்பாதித்துத் தரத்தக்க வகையில் முந்திரி சாகுபடி வளர்ந்திருக்கிறது. எதிர்க்கட்சி நண்பர்கள் கூட "வடக்கே சிந்திரி கொழிக்கிறது. தெற்கே முந்திரி கொழிக்கிறது" என்று கேலியாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களால் கேலி செய்யப்பட்டதே இன்றையதினம் நமக்கு அதிக அளவு அந்நியச் செலாவணியைத் தேடித் தருகிறது. அதுவும் அதிக உற்பத்தி செய்யக் கூடிய முறையில் 38 ஆயிரம் ஏக்கரா பயிர் செய்கின்ற அளவுக்கு வந்திருக்கிறார்கள் என்று சொன்னால் எந்த எந்தத் துறையில் நம் நாட்டை அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதை நன்றாகத் தெரிந்து கண்காணிப்புடன் அரசாங்கத்தார் காரியங்களைச் செய்து வருகிறார்கள் என்று சொல்லலாம். இன்னும் அதிக அளவில் நம் எதிர்க்கட்சி நண்பர்கள் கேலி செய்தவர்கள் வியக்கத்தக்க அளவில் உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்பதாக, அதற்குத் தகுந்த முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதாக கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கூட நீர்ப்பாசன வசதிகளை நாம் அதிக அளவுக்குப் பெருக்கியிருக்கிறோம். வீணாக இதுவரையில் கடலில் சென்று வீழ்ந்த நீரை எல்லாம் அதிக அளவுக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதோடு இன்னும் சிற்சில வசதிகளைச் செய்கின்ற முறையில் அமைச்சர் அவர்கள் அதில் பங்குகொண்டு வருகிறார்கள் என்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அதில் அவர்கள் இவ்வளவு அக்கறை எடுத்துக்கொள்ளாவிட்டால் நமது பரம்பிக்குளத் திட்டமோ, குந்தாத் திட்டமோ ஏற்பட்டிருக்க முடியாது என்று நான் உணர்கிறேன். அப்படி இருந்தும் கூட நமது நாட்டில் உணவுப் பற்றாக்குறை இருக்கிற காரணத்தினால் இன்னும் கேரள ராஜ்யத்தோடு ஒப்பந்தம் நல்லமுறையில் செய்துகொண்டு அவர்களுடைய ராஜ்யத்தில் இன்றையதினம் வீணாகப் போய்க்கொண்டிருக்கிற ஆற்று நீரை இந்தப் பக்கம் விவசாயத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ள முயற்சி செய்யவேண்டும். மேலும் ஆந்திர தேசத்தில் வீணாகக் கடலில் போய் வீழ்ந்து கொண்டிருக்கிற நீரையும் அவர்கள் முன்பு கொடுத்து உதவி செய்ய முன் வந்தார்கள். பிறகு அதில் ஏதோ கருத்துவேற்றுமை ஏற்பட்ட காரணத்தினால் அந்தப் பேச்சுவார்த்தைகள் தடைபட்டுப்போய் இருப்பதாகத் தெரிகிறது. அந்தக் கருத்துவேற்றுமைகளையும் நமது அமைச்சர் அவர்கள் நீக்கி, நமது அண்டை ராஜ்யத்தில் உள்ள உபரி நீரை

[Sri M. R. Kandaswami Mudaliar] [12th March 1960

நம் ராஜ்யத்திற்குக் கொண்டுவருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். அப்போது அதிகமான உணவு உற்பத்தி செய்ய வசதி ஏற்படும்.

அதோடு இன்னொன்று. சேலம் ஜில்லா மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறது. காவேரியில் இருந்து உபரித் தண்ணீரைக் கால்வாய் மூலமாகக் கொண்டு வந்து சேலம் ஜில்லாவுக்குப் பயன்படக்கூடிய முறையில், அந்த ஜில்லா மக்களுடைய கஷ்டத்தை நீக்குவதற்குச் சர்க்கார் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தை சர்க்கார் உடனடியாகப் பரிசீலனை செய்யவேண்டும். மேலும் இந்த வரண்ட பிரதேசங்களில் கிணறு வெட்டிக்கொள்ள மான்யம் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். மற்ற ஜில்லாக்களுக்குக் கிணறு வெட்ட கொடுக்கக் கூடிய பணத்தைக் காட்டிலும் இங்கே ஆயிரம் ஐநூறு அதிகமானாலும் கொடுத்து உதவவேண்டும்.

1-30 p.m. நீலகிரியில் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வகையில், குந்தா ப்ரோஜெக்ட் வேலை முடிந்ததுபற்றி பெருமைப் படுகிறோம். உலகமே வியக்கத் தக்க முறையில் குந்தா திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். அதைப்பற்றி நாம் பெருமைப்படுகிறோம். (பெல்) ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். நெய்வேலி துரிதமாக வேலை செய்வதோடு கூட, சேலத்தில் இருக்கக் கூடிய இரும்புக் கனிப்பொருள்களை உபயோகப்படுத்துவதற்காக அங்கு ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் துரிதமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டும். இரண்டு மூன்று வருடங்களாக, இப்படியே நாம் கடந்துக் கொண்டு போனால் மக்கள் ஏமாற்றம் அடையும் நிலை ஏற்படும். ஆகவே, சேலத்தில் இரும்புத் தொழிற்சாலையும், அலுமினியத் தொழிற்சாலையும், மேட்டூரில் காகிதத் தொழிற்சாலையும் ஏற்படுத்துவதற்கு அமைச்சரவை உடனடியாக துரிதமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m., on Monday, the 14th March 1960.

The House then adjourned.

## IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

### A. Statutory rules and orders.

@ 29. *Notification issued with G.O. Ms. No. 2017, L.A., dated 30th November 1959 containing the rule extending the term of office of the members of the Tirumangalam and Santhavelur Panchayats (Chingleput district). [Laid on the table of the House under section 113 (4) of the Madras Village Panchayats Act, 1950 (Madras Act X of 1950).]*



**12th March 1960]**

@ 30. *Notification issued with G.O. Ms. No. 119, Home, dated 12th January 1960, amending the rule 47 of the Madras Cinemas (Regulation) Rules, 1957 regarding the refund of appeal fees. [Laid on the table of the House under section 10 (3) of the Madras Cinemas (Regulation) Act, 1955 (Madras Act IX of 1955).]*

* 31. *Notification issued with G.O. Ms. No. 41, L.A., dated 11th January 1960, declaring each of the local areas forming a Development Block in North Vellore Development District for the purposes of the National Extension Service Scheme of Community Development to be a Panchayat Development Block and to constitute for such Panchayat Development Block a Panchayat Union. [Laid on the table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]*

* 32. *Notification issued with G.O. Ms. No. 42, L.A., dated 11th January 1960, declaring each of the local areas forming a Development Block in South Vellore Development District, for the purposes of the National Extension Service Scheme of Community Development to be a Panchayat Development Block and to constitute for such Panchayat Development Block a Panchayat Union. [Laid on the table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]*

** 33. *Notification issued with G.O. Ms. No. 43, L.A., dated 11th January 1960, declaring each of the local areas forming a Development Block in North Cuddalore Development District for the purposes of the National Extension Service Scheme of Community Development to be Panchayat Development Block and to constitute for such Panchayat Development Block a Panchayat Union. [Laid on the table of the House under section 179 (4) of the Madras Panchayat Act, 1958 (Madras Act XXXV of 1958).]*

---

@ Sent by Post on 4th March 1960.
* Sent by messenger on 9th March 1960.
** Sent by messenger on 10th March 1960.

## APPENDIX.

[Vide answer to clauses (a) and (b) of the starred question No. 31 asked by Sri N. R. Thiagarajan at the meeting of the Legislative Assembly held on 12th March 1960, page 276 supra].

*Statement showing the amount spent on the construction of quarters in Major Irrigation and Hydro-Electric Project.*

| *Serial number and name of the project.* (1) | *Amount spent on the construction of quarters.* (2) | *Use of buildings in places the projects have been completed.* (3) |
|---|---|---|
| | RUPEES IN LAKHS. | |
| 1 Krishnagiri Project .. | 5.28 | A few buildings have been transferred to Public (Rural Development Project) Department for location of a Rural Extension Training Centre and other buildings are still required for the project since the project works have not been fully completed. |
| 2 Mettur Canals Scheme .. | 2·48 | Almost all the buildings are occupied by Public Works Department, Fisheries and Medical Departments. |
| 3 Vaigai Project .. .. | 8·07 | The project has not been fully completed in all aspects and hence the buildings are under use. |
| 4 Manimuthur Canal Scheme .. | 1·37 | A few buildings have been transferred to Medical and Forest Department and certain buildings are occupied by the Public Works Department staff. |
| 5 Pullambadi Canal Scheme .. | 0·88 | The scheme is under execution. |
| 6 New Kattalai High Level Canal Scheme. | 0·71 | Do. |
| 7 Sathanur Reservoir Project Canals Division. | 0·95 | The project works are still in progress and all the buildings are in use. |
| Headworks Canals Colony .. | 5·15 | Almost all the buildings are occupied by Public Works, Forest, Fisheries, Medical, and Police Departments. |
| 8 Araniar Project .. .. | 1·04 | Certain buildings are still occupied by the Public Works Department staff and the rest are vacant. This Project is in Andhra Pradesh now. |
| 9 Vidur Reservoir Project . | 1·14 | The Project is not yet completed. All the quarters are occupied by the staff of the Public Works Department. |
| 1 Amaravathi Project .. .. | 5·62 | The Project is not yet completed. Some quarters have been transferred to the Forest Department and the rest are occupied by the staff of the Public Works Department. |



| *Serial number and name of the project.* (1) | *Amount spent on the construction of quarters.* (2) | *Use of buildings in places the projects have been completed.* (3) |
|---|---|---|
| | RUPEES IN LAKHS. | |
| 11 Lower Bhavani Project Canals Division. | 6·54 | All the buildings are in the beneficial use by the staff of the Public Works Department. |
| Lower Bhavani Project Head-works Division. | 15·01 | After completion of the project, the buildings are used for the accommodation of the staff of the various departments located in Bhavanisagar in addition to the Public Works Department. |
| Total .. | 21·55 | |
| 12 Periyar Hydel Project .. | 17·01 | All the permanent and temporary buildings are occupied by operation and maintenance staff of the board. If some of the Building are vacant they are leased to other departments. Most of the sheet type quarters, after the completion of the project will either be dismantled or auctioned as the case may be. |
| 13 Pykara Hydro-Electric Scheme. .. | 17·34 | Do. |
| 14 Moyar Hydro-Electric Scheme. | 15·05 | Do. |
| 15 Mettur Hydro-Electric Scheme. .. | 1·62 | Do. |
| 16 Kundah Hydro-Electric Scheme. .. | 32·23 | Do. |
| 17 Papanasam Hydro-Electric Scheme. . | 4·09 | Do. |
| 18 Madurai Thermal Scheme .. | 3·65 | Do. |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Monday, 14th March 1960.**

The House met in the Assembly Chamber, Fort St. George at half-past eight of the clock, the Deputy-Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

DEPUTY SPEAKER: Question No. 335.

SRI N. K. PALANISAMI: What about questions left over on the previous day?

DEPUTY SPEAKER: They will be taken up tomorrow.

*Prohibition Act*

*335 Q.—SRI S. M. ANNAMALAI: *கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—*

*(அ) கள்ளச்சாராயம் காய்ச்சுகிறவர்களையும், குடிப்பவர்களையும் பிடித்துத் தந்த கிராமங்களுக்குப் பரிசுகள் வழங்கப் பட்டனவா ?*

*(ஆ) எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது ?*

*(இ) மதுவிலக்குச் சட்டம் திருத்தியமைக்கப்பட்டதின் காரணமாக குற்றங்கள் குறைந்துள்ளனவா ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) Government have sanctioned rewards in the shape of a reading room with a radio set to two villages, viz., Poondi and Tiruvanmiyur in Chingleput district for help rendered by the villagers in the detection of illicit distillation cases. A total sum of Rs. 6,230 has been sanctioned for the construction of a reading room and for the installation and maintenance of a radio set in each of the two villages.

(c) Yes, Sir.

SRI S. M. ANNAMALAI: *இந்த மதுவிலக்குச் சட்டம் வந்த பிறகு வழக்குகள்தான் குறைந்து வருகிறதேயொழிய வருடா வருடம் ஊழல் அதிகமாகயிருக்கிறது என்பது சர்க்காருக்குத்*

[14th March 1960

தெரியுமா? அந்தக் காரணத்தால்தான் மதுவிலக்குத் திட்டம் தோல்வியுற்றது என்று மக்களால் பேசப்படுகிறது சர்க்காருக்குத் தெரியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: குற்றங்கள் குறையாமல் வழக்குகள் மட்டும் குறைந்திருக்கிறது என்று அங்கத்தினர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

SRI A. A. RASHEED: May I know whether individuals also are awarded any prizes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: If a particular individual is responsible for detection of crime, the award of some recognition would also be considered.

SRI T. T. DANIEL: May I know on what basis these awards are given? Is it on the basis of the number of cases that are detected in the village or on what?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: With reference to the cases which are referred to in the answer, the community in the village made their own contribution in the detection of crime which it was found difficult to detect before. Therefore, as a recognition of the service rendered by the people of the village, these radio sets and other things were presented to the villagers.

SRI V. K. KOTHANDARAMAN: போலீஸ் போடும் சாராயக் கேஸ்களில் பாதிதான் தண்டிக்கப்படுகிறது, பாதி தள்ளுபடி செய்யப் படுகிறது. அதனால், ஏழைகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது சர்க்காருக்குச் தெரியுமா? ஆகவே இனிமேல், நான் குடிக்கவில்லை என்று சொல்லுகிறவர்களின் ரத்தம் போன்றவைகளை பரிசீலனைக்கு அனுப்பி வைத்து அதன் முடிவு தெரிந்த பிறகு தான் கேஸ் போட ஏற்பாடு செய்யப் படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: போலீஸ் கேஸ் போடுகிறார்கள். அந்தக் கேஸ்களை கோர்ட் முடிவு செய்கிறார்கள். தண்டிக்கப்படாத கேஸ்களை போடக் கூடாது என்று சொன்னால் ஒரு விவகாரமும் நடத்தமுடியாது.

SRI A. GOVINDASAMY: குடித்திருக்கிறார்கள் என்பதற்கு சர்டிபிகேட் கொடுக்க வேண்டிய டாக்டர், குடித்த தினத்தில் கொடுத்தால்தான்செ ல்லுமா? மறுதினம் சர்டிபிகேட் கொடுப்பது தெரியுமா? அதுவும் செல்லுபடியாகிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மறுதினம் கொடுக்க முடியுமா இல்லையா என்பது டாக்டர்கள் சொல்லவேண்டியது. டாக்டர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்று சொன்னால் அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாம்.



14th March 1960]

*Agricultural College, Coimbatore*

* 336 *Q.*—SRI S. LAZAR
SRI K. SATTANATHA KARYALAR } Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the nature of research work that is done in the Agricultural College, Coimbatore;

(*b*) how the knowledge of research is utilised in actual cultivation by agriculturists; and

(*c*) the methods by which the said knowledge is imparted to agriculturists?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) to (*c*) A statement[a] is placed on the table of the House.

SRI K. SATTANATHA KARAYALAR: அப்போதைக்கப்போது ஆராய்ச்சிகளில் தெரியக்கூடிய முடிவுகளை டெமான்ஸ்ட்ரேட்டர்களுக்கும், பீல்ட் ஆபீஸர்களுக்கும் தெரிவிக்கவேண்டிய வகையில் ரெப்ரஷர் கோர்ஸ் நடத்தப்படுகிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: டெமான்ஸ்ட்ரேட்டர்களுக்கு ரெப்ரஷர் கோர்ஸ் நடத்துவது இல்லை. ஆனால் அப்போதைக்கப்போது ஏற்படுகிற முடிவுகள்பற்றி ப்ளாக் டெவலப்மென்ட் மூலமாக, எக்ஸ்டென்ஷன் ஆபீஸர் மூலமாக அப்போதைக்கப்போது விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டு வருகிறது.

SRI S. NAGARAJA MONIGAR: இந்த ஆராய்ச்சி நிலயங்களில் புதுமுறை விவசாயக் கருவிகளும் செய்யப்படுவதற்கு முயற்சி செய்யப்படுவதாக கூறப்பட்டுள்ளது. அப்படியானால் நமக்கு உதவாத பெரிய ஸைஸ் ட்ராக்டர்கள் இல்லாது சிறிய அளவு உழும் யந்திரங்கள் தயார் செய்கிறார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கோவை ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயக் கருவிகளும், புதுக் கருவிகளும் அங்கு ஆராய்ச்சி முறையில் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு காட்டப் பட்டு வருகிறது. ஆனால் பெரிய ட்ராக்டர்கள் விஷயத்தை நாம் ஆராய்ச்சியில் எடுத்துக்கொள்ளவில்லை. நம் நாட்டில் ட்ராக்டர்கள் செய்ய இப்பொழுதுதான் சிலர் முன்வந்து, செய்வதற்கு முற்பட்டிருக்கிறார்கள்.

SRI A. VEDARATHNAM: மேஜைமீது வைக்கப்பட்டிருக்கிற ஏட்டில், புது ரக விதைகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதாக கூறப் படுகிறது. என்னென்ன ரக விதைகள், அதை உபயோகித்தால் என்ன அனுகூலம் என்ற விஷயத்தை எல்லாம் குறிப்பிட்டிருந்தால் நலமாயிருக்கும். அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி தயவு செய்து சொல்ல முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தனி கேள்வி போட்டால் அந்த விவரங்களை எல்லாம் மேஜையின்மீது வைக்கிறேன்.

---

[a] Printed as Appendix I on page 490 infra.

[14th March 1960

SRI K. VINAYAKAM : In order to provide better propaganda and publicity for the achievements of the Government in the agricultural field, will the Government undertake distribution of the monthly journal ' Mezhi Chelvam ' to the individuals concerned instead of distributing the journal in Block areas?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Perhaps the hon. Member means broadcast circulation. That is not practicable. It will not also be quite useful if we throw it out as a broadcast.

SRI T. S. RAMASWAMI : May I know whether these newly recognised methods are applied in the seed farms? May I also know whether these farms are developed into model farms in each district?

THE HON. SRI M. BHHAKTAVATSALAM : Yes, Sir. That is also being done.

SRI S. M. ANNAMALAI : இந்தக் கல்லூரி சார்பில் சினிமா படங்கள் எடுக்கப்பட்டு அதன் மூலம் விளம்பரம் செய்யப் படுகிறதா ? இவை சமுதாயநலத் திட்டப் பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறதா ? அப்படியானால் எத்தனை சினிமா படங்கள் இதுவரையில் எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எனக்குத் தெரிந்த வரையில் ஒரு சினிமா படம் எடுக்கப்பட்டது. அது எங்கெங்கு காட்டப்பட்டு வருகிறது என்ற விவரம் என்னிடம் இப்பொழுது இல்லை.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருப்பது யார் ? எம்.எஸ்.ஸி. மாணவர்களுக்கு ஆராய்ச்சி ஒரு பாடமாக இருப்பதால் அவர்களும் இந்த ஆராய்ச்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மாணவர்கள் ஈடு படுவது என்றால் கற்றுக்கொள்வதற்கு ஈடுபடுவார்கள். நிபுணர்கள் தான் ஆராய்ச்சி செய்வது ; அதைப் பார்த்து கற்றுக்கொள் கிறார்கள் எம்.எஸ்.ஸி. மாணவர்கள்.

SRI A. GOVINDASAMY : அண்மையில் டெல்லியில் நடந்த உலக விவசாய மாநாட்டிற்கு இந்த ஆராய்ச்சியாளர்கள் நம் ராஜ்யத்திலிருந்து அனுப்பப்பட்டு புது முறைகளை, மற்ற ராஜ்யங் களில் கடைப்பிடிப்பதைப் போல் இங்கும் நடைமுறையில் கொண்டுவர ஏதாவது திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சில ஆராய்ச்சி நிபுணர்கள் அங்கு போய் பார்த்து வந்திருக்கிறார்கள். அங்கு பார்த்தவைகளை எல்லாம் எவ்வளவுதூரம் நம் நாட்டில் கை யாள்வது சாத்தியம் என்பதுபற்றி பரிசீலனை செய்து அதற்கு வேண்டிய ஆலோசனைகளை கொடுப்பார்கள். நாம் ஏற்றுக்கொள் வோம்.



14th March 1960]

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : இந்தப் பண்ணையில் எழுத படிக்கத் தெரியாத ஏழை கிராம வாசிகள் இந்தத் துறையில் மிகுந்த தேர்ச்சியும் திறமையும் பெற்றிருப்பதால் அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள ஏதாவது திட்டமிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM எழுதப் படிக்கத் தெரிந்திருந்தாலும் தெரியவில்லை என்றாலும் ஆராய்ச்சியில் அவர்கள் கற்றுக்கொண்டால் அவர்களுடைய அனுபவம் அப்போதைக்கப்போது பயன்படுத்தப்பட்டுத்தான் வருகிறது.

SRI A. VEDARATHNAM : இந்தப் பயிற்சி முகாம் மூலம் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டிருக் கிறதே, அவர்களோடு ஏதாவது தொடர்பு அரசாங்கம் வைத்துக் கொண்டிருக்கிறதா ? அந்தப் பயிற்சிக்குப் பின் அந்தப் பயிற்சி யைப் பயன்படுத்திக்கொள்ள ஏதாவது f llow-up முறை கையாளப்படுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எத்தகைய பயிற்சி யைப்பற்றி கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிறார்கள் என்று எனக்கு புலப்படவில்லை. ஆறு மாத பயிற்சி கிராமத்தார்களுக்கு அளிக்கப் படுகிறது. அவர்கள் திரும்ப கிராமங்களுக்குச் சென்று அதைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். follow-up இருப்பதுபற்றி என்னிடம் தகவல் வில்லை. கிராம சேவகர்களுக்கு நல்ல பயிற்சி கொடுக்கப்படுகிறது. அவர்கள் கிராம சேவக்களாக பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள்.

SRI G. GOMATHISANKARA DIKSHITAR : அம்பாசமுத் திரம் அரிசி ஆராய்ச்சி பண்ணையில் சிறந்த விதைகள் உற்பத்தி செய்யப்படுவதால் அந்தப் பண்ணையில் அதை அதிகம் பெருக்கி விவசாயிகளுக்கு உபயோகப்படும்படி செய்ய அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசாங்கம் நடத்தி வரும் எல்லா ஆராய்ச்சி பண்ணைகளையும் எடுத்து பரிசீலனை செய்து எதை எதை எந்தளவிற்கு பெருக்குவது என்பதுபற்றி இப்பொழுது அரசாங்கம் தீவிரமாக கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

*Use of electric fans in Government offices*

* 337 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether it is a fact that the N.G.Os. working in City Government Offices are denied the use of electric fans during office hours in their respective offices during certain months in a year (i.e.), from November to April or so;

(b) if so, the reasons therefor;

[14th March 1960

(c) whether the Gazetted Officers in those offices and N.G.Os. in the Secretariat Departments are allowed this privilege during the said period; and

(d) if so, the reasons for this discrimination?

THE HON. SRI P. KAKKAN : (a) The use of fans by the N.G.Os. working in the City Government Offices is ordinarily limited to the months of April to September, but the Head of an Office may allow such use during the months of March and October also, if it is really necessary. In exceptional cases the head of Department may allow the use of electric fans by non-gazetted establishment during other parts of the year also, if he is satisfied that there is a real necessity for it.

(b) Use of fans from October to March are not generally allowed, as these months are not considered as hot months.

(c) Gazetted Officers are allowed to use fans throughout the year, when they consider them absolutely necessary. In the case of Non-Gazetted staff of the Secretariat, the Superintendents of the Sections and the Central Branches should ensure that the fans are used only when absolutely necessary and should as far as possible avoid using them during the period from November to February.

(d) The present policy is based on financial grounds. N.G.Os. also are allowed the use of fans in certain cases on merits. So there is no question of discrimination.

SRI A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware that fans will be used during sultry and hot days and if so, will the Government remove the ban and allow the N.G.Os. in the City to use the fans?

THE HON. SRI P. KAKKAN : I have stated in my answer that, after looking into the merits of each case, they will be allowed.

SRI S. LAZAR : ஸார், மாகாணத்திலுள்ள மற்ற இடங்களுக்கும் இதே விதிகள்தான் அனுசரிக்கப்பட்டு வருகிறதா? சீதோஷ்ணம் என்பது கெஜட்டட் ஆபீஸர்களுக்கும் நான்-கெஜட்டட் ஆபீஸர்களுக்கும் ஒரே மாதிரிதான் இருக்கும். ஆகவே சீதோஷ்ண நிலையை உத்தேசித்து எல்லோருக்கும் ஒரே அடிப்படையில் விதிகள் அமைக்கப்படுமா? அதன்மூலம் இந்த வித்தியாசத்தைப் போக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI P. KAKKAN ; இதற்கான தகவல் என்னிடம் இல்லை. தனியாக கேள்வி போட வேண்டுகிறேன்.

SRI J. MATHA GOWDER : கீழ் பிரதேசங்களில் விசிறிகள் கொடுப்பது போல் மலைப் பிரதேசங்களில் வேலை செய்துகொண்டிருக்கும் என்.ஜி.ஓ.க்களுக்கு "ஹீட்டர்" கொடுப்பதற்கு சர்க்கார் முன்வருமா?

THE HON. SRI P. KAKKAN ; கொடுப்பது நல்லதுதான், அதைப் பற்றி பரிசீலனை செய்யலாம்.



14th March 1960]

SRI N. R. THIAGARAJAN : ஸார், நவம்பர், டிசம்பர் மாதங்களில் அதாவது குளிர் சமயங்களில் மேல் அதிகாரிகள் சம்பளியை போர்த்திக்கொள்வார்கள். ஆனால், என்.ஜி.ஓ.க்களுக்கு அவ்விதம் செய்துகொள்ள முடியாததினால் குளிர் ஜன்னி முதலியவை வந்துவிடுகின்றன. ஆகவே, அவர்களுக்கும் மேல் அதிகாரிகளைப் போல் கம்பிளி, விசிறி (பான்) முதலியவை சப்ளை செய்யப்படுமா?

THE HON. SRI P. KAKKAN ; கம்பிளி எங்கு போர்த்திக்கொள்கிறார்கள் என்று தெரியவில்லை. அப்படி ஒன்றும் இல்லை என்று நினைக்கிறேன்.

SRI P. S. CHINNADURAI : தலைவர் அவர்களே, பொதுவாக புழுக்கத்திலிருந்தும் வெப்பத்திலிருந்தும் விடுபட்டு திறமையாக செயல்படுவதற்காகத்தான் மின்சார விசிறிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று நான் கருதுகிறேன். அது சரியானால் மேல் அதிகாரிகள், கீழ் அதிகாரிகள் என்ற வித்தியாசமில்லாமல், பாரபட்சமின்றி எல்லோருக்கும் இந்த சலுகையை அளிப்பதின் மூலம் அவர்களுடைய செயல் திறமையை பெருக்குவதற்கு அரசாங்கம் உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN ; பாரபட்சம் ஒன்றும் காட்டுவதில்லை. அரசாங்கத்தின் நிதி நிலைமையைப் பார்த்தும், எங்கெல்லாம் சலுகை காண்பிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்படுகிறதோ அந்த இடங்களுக்கு எல்லாம் சலுகை காட்டப்பட்டு வருகிறது.

SRI A. A. RASHEED : சென்னையில் செக்ரட்டேரியட்டுக்கும் மற்ற ஆபீஸ்களுக்கும் இடையில் வித்தியாசம் இருப்பதற்கு காரணம் என்ன? ஏன் இந்த டிஸ்கிரிமினேஷன் காட்டவேண்டும்?

THE HON. SRI P. KAKKAN : தனியாக கேள்வி போட வேண்டும்.

SRI S. NAGARAJA MONIGAR : அவசியமுள்ள போதுதான் மின்சார விசிறியை உபயோகிப்பார்கள், தேவையில்லாதபோது குளிர் நேரத்தில் யாரும் விசிறியை உபயோகிக்கமாட்டார்கள். ஆகவே, எல்லோருக்கும் ஒரே மாதிரியாக இந்தச் சலுகையை அனுமதிக்க முடியாதா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN ; எல்லோருக்கும் இந்த சலுகையை கொடுப்பது என்றால் ஜாஸ்தியாக பணம் வேண்டும், அதோடு இதற்கான சாமான்களும் வேண்டும். இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. கூடியமட்டும் தேவைப்படுகிற இடங்களுக்கு எல்லாம் வேண்டிய சமயத்தில் கொடுக்கப்பட்டு வருகிறது.

SRIMATHI A. S. PONNAMMAL : தலைவர் அவர்களே, தாலூகா தலைநகரங்களில் எல்லாம் இப்போதும் பங்கா இழுக்கும் பழக்கம் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. அந்த முறைகளை மாற்றி மின்சார விசிறி உபயோகப்படுத்த அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI P. KAKKAN ; எங்கெங்கு மின்சாரம் நமக்கு அதிகமாக கிடைக்கிறதோ அங்கெல்லாம் மின்சார விசிறி வசதி கொடுக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் விருப்பம். அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

*Photographic materials*

* 338 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any shortage is felt in the availability of photographic materials in the State; and

(*b*) the steps taken to improve the position?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) In March 1958, the South Indian Photographic and Allied Trades Association represented to this Government about the shortage in the availability of photographic materials. In the light of these representations, this Government suggested to the Government of India that the import policy in regard to photographic materials should be reviewed and a steady quota for imports given. Some reliefs were granted by the Government of India by increasing the quota for imports. We have not received any further representations in the matter in recent months.

SRI N. K. PALANISAMI : வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதைவிட இங்கேயே இதற்காக ஒரு யூனிட்டு ஆரம்பிப்பதாக அரசாங்கத்தினிடம் ஒரு யோசனை இருந்து வந்ததல்லவா? அதனுடைய நிலைமை என்ன என்பதை அறிய வேண்டுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கு தனியாக கேள்வி போடவேண்டும்.

SRI A. VEDARATHNAM : மேல்நாட்டு கம்பெனிகள் நீலகிரியில் போட்டோ பிலிம் உற்பத்தி செய்வதற்காக நமது அரசாங்கத்தை (ஆபர்) கேட்டிருந்தார்கள் அல்லவா? அது இப்போது எந்த நிலைமையில் இருக்கிறது என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இவற்றிற்கு எல்லாம் எப்படி பதில் சொல்ல முடியும். ஆனால் மூலக்கேள்வி இறக்குமதியைப்பற்றியது. இவைகள் எல்லாம் இந்தக் கேள்வியில் எழவில்லை.

*Improvement of Javvadu Hills area*

* 339 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of Sri M. P. SARATHI) கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வடஆற்காடு ஜில்லாவிலுள்ள ஜவ்வாது மலைப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?





(ஆ) அங்கு நல்ல பாதைகள் அமைக்க, மரங்கள் வளர்க்க திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளனவா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) A net work of roads covering a distance of about 7 miles has been laid in the Javvadu Hills area in order to facilitate the extraction of Sandalwood, bamboos and firewood. Rest houses have also been constructed, where necessary, for the use of the inspecting officers. Schools have also been opened for imparting education to the Malayalees, who are the ancient inhabitants of that area.

(*b*) It is proposed to lay fresh roads covering a distance of about 10 miles. About 2,313 acres have so far been planted with fuel and commercial species and further areas will be taken up for planting in due course.

SRI S. M. ANNAMALAI : ஸார், ஜவ்வாது மலையில் சந்தன மரங்களும் வளருகின்றன. அவற்றில் இப்போது நோய் அதிகமாக பரவியிருக்கின்றன. அவற்றைத் தடுத்து இன்னும் அதிகமாக சந்தன மரங்களை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சந்தன மரங்களை உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. அதோடு அதிலுள்ள நோயை தடுப்பதற்காக ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இருந்தாலும் ஆராய்ச்சி பூர்த்தியாய்விட்டது என்று சொல்லுவதற்கில்லை.

SRI S. NAGARAJA MONIGAR : ஜவ்வாது மலையில் மரம் நடும் திட்டத்தில், புளியின் விலை இப்போது அதிகமாக ஏறிக்கொண்டுப் போவதால், புளிய மரங்களை அதில் அதிமாக வளரச் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஜவ்வாது மலையில் தான் புளியமரம் நடவேண்டும் என்பது அவசியமில்லை. காட்டு இலாகாவின் மூலமாக எல்லா இடங்களிலும் புளிய மரங்களை அதிகமாக நடவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதோடு "அவன்யூ ட்ரீஸ்" வைப்பதில் அதிகமாக புளிய மரங்களை நடவேண்டும் என்று கனம் மதிப்பிற்குரிய ராமத்து இலாகா அமைச்சர் அவர்களிடமும் கேட்டிருக்கிறேன்.

DEPUTY SPEAKER : Questions 340 and 342 are postponed.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Why, Sir, when the Hon. Minister is there?

DEPUTY SPEAKER : The Hon. Minister wanted some time to answer them. Therefore, they have been postponed.

[14th March 1960

*Sand storm in Periakulam taluk*

* 341 *Q.*—**Sri N. R. THIAGARAJAN :** கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலுகா, ஆண்டிப்பட்டி பிர்க்காவில் கல்லுப்பட்டி, அம்மாபட்டி, கிரைப்பாத்தம்பட்டி என்னும் ஊர்களில் மணல் காற்றால் வீடுகளும் நிலங்களும் மூடப்பட்டுவருவது சர்க்காருக்குத் தெரியுமா ?

(ஆ) இதில் கல்லுப்பட்டி என்னும் ஊர் சுற்றிலும் சுமார் நூறு அடி மண் மேடிட்டும், ஊரை மூழ்கவைக்கும் நிலையிலும் இருப்பதைத் தடுக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசம் ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) A scheme for checking the sand dunes spreading to agricultural lands in Bodinaickanur and Andipatty area of Periakulam taluk has been sanctioned by the Government. Under this scheme an area of 16 miles in length and one mile in width from Combay to Bodinaickanur and Shunmugasundarapuram to Jakkampatti in Periyakulam taluk is proposed to be tackled by checking the drifting of sand by vegetative cover and protecting the area against wind erosion by raising wind breaks. The preliminary survey work is in progress and a length of 3½ miles has already been planted with prosofis to form a wind break.

**Sri N. R. THIAGARAJAN :** ஜக்கம்பட்டி, ஆண்டிப்பட்டி, போடிநாயக்கனூர், கோம்பை என்ற இடங்களுக்கும் இந்த மூன்று ஊர்களுக்கும் சம்பந்தம் இல்லை. இந்த மூன்று ஊர்களுக்கு மற்ற திட்டங்களும் சேர்ந்து தனியாக ஒரு திட்டம் தயாரிக்க அரசாங்கம் முன்வருமா ?

**The Hon. Sri M. A. MANICKAVELU :** இப்போது போட்டிருக்கக்கூடிய திட்டம் அங்கே இந்த மணற்காற்று வீசி மேடு ஆகிறதைத் தடுப்பதற்காகப் போடப்பட்டிருக்கிறது. அதற்காக சர்வே செய்துகொண்டிருக்கிறார்கள். சர்வே இன்னும் பூர்த்தியாகவில்லை. இப்போது தாற்காலிகமாக 3½ மைலுக்கு செடி வைத்திருக்கிறார்கள். இந்தச் செடி வைத்தால் மணற்காற்றைத் தடுக்க முடியுமா என்று ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். ஆராய்ச்சி முடிந்த பிறகுதான் இதையெல்லாம் செய்யவேண்டும்.

*Scarcity of paper*

* 343 *Q.*—Sri S. LAZAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any scarcity of paper in the State; and

(*b*) the basis on which paper quota is allotted to the State?



14th March 1960]

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Scarcity of paper seems to exist in this State as in revealed from the large number of applications received by the Director of Industries and Commerce for importing, packing and wrapping paper, white printing and cream laid paper, poster paper and other special varieties of paper.

(*b*) This is not within the sphere of State Government's authority.

Sri S. NAGARAJA MONIGAR : Will the Hon. Minister say what the percentage of shortage is?

The Hon. Sri R. VENKATARAMAN : It is not possible to estimate it State-wise. That there is a great shortage is recognized in the whole of India.

**Sri S. LAZAR :** இந்தப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறதா ?

**The Hon. Sri R. VENKATARAMAN :** நிதி அமைச்சர் அவர்களுடைய உரையில் 50 அல்லது 60 டன் பேப்பர் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்று வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுதான் பெரிய முயற்சி.

**Sri P. S. K. LAKSHMIPATHI RAJ :** ஸார், மதுரை ஜில்லாவில் பேப்பர் தொழிற்சாலை வைத்து நடத்துவதற்காக மனுக்கள் வந்திருக்கிறதா? அது சம்பந்தமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

**The Hon. Sri R. VENKATARAMAN :** இதற்குத் தனியாகக் கேள்வி வேண்டும்.

*Oil refinery in Madras*

* 344 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to construct an oil refinery in Madras?

The Hon. Sri R. VENKATARAMAN : This will depend upon the investigations which are now going on to find out the possibilities of oil in the Cauvery Basin. There is, therefore, no proposal now to construct an oil refinery in Madras.

Sri A. A. RASHEED : In view of the importance of the industry, will the Government reconsider their decision and start an oil refinery in Madras? In Bombay they have a refinery even though they have no oil wells in the State. In the same way why should we not have a refinery in our State also?

The Hon. Sri R. VENKATARAMAN : That will depend on the availability of crude oil. Government are examining the question of carrying out intensive investigations in the Cauvery basin and it is only on that the establishment of an oil refinery in this State will depend.

[14th March 1960

SRI N. K. PALANISAMI : ஸார், காவிரி பேஸினில் இருக்கக் கூடிய பெட்ரோலியத்தை எடுக்க சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ? அப்படியானால் அது என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் நிபுணராக ஒரு அபிப்பிராயம் சொல்லியிருக்கிறார் "இருக்கிறது" என்று. அவ்வாறு இருந்தால் நல்லதுதான். இப்போது இருக்கிறதா என்றுதான் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

SRI P. S. CHINNADURAI : காவிரி பேஸினில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டால்தான் சுத்திகரிப்புத் தொழிற்சாலை அமைக்க முடியும் என்று சொல்லுவதானது "நாளை தாலி கட்டுகிறேன், கழுத்தே சுகமாயிரு" என்று சொல்லக்கூடிய பழமொழி போல் இருக்கிறது. காவிரி பேஸினில் எண்ணெய் கண்டுபிடிப்பதற்காகக் காத்திராமல் நம் ராஜ்யத்தில் உடனடியாக ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை உடனடியாக ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் ஒரு பழமொழி சொன்னார்கள். நான் சொல்லுகிறேன், "கழுத்தே இல்லையே, என்ன செய்வது". எண்ணெய் ரிபைனரி வைக்க வேண்டுமென்று சொன்னால் வேண்டிய அளவு க்ரூட் ஆயில் கிடைக்க வேண்டும். அஸ்ஸாம் பகுதியிலிருந்து இந்தப் பகுதிக்குக் கொண்டுவந்து சுத்தகரிப்புச் செய்தால் என்ன செலவாகும், "இக்கானமி" என்ன என்று கணக்குப் போடவேண்டும். அதனால்தான் இப்போது லாபகரமாக இருக்காது என்று சொல்லப்படுகிறது.

SRI T. SAMPATH : ஸார், காவிரி பேஸினில் எந்த அளவுக்கு எண்ணெய் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : அது கிடைக்கிறதா என்றே தெரியவில்லை. கிடைக்கிறது என்று தெரிந்தால் ரொம்பவும் நன்றாக இருக்கும்.

*Government loan to private industry.*

* 345 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the total amount of loan advanced by this Government to private industries during the last three years; and

(b) the total shares owned by this Government in private industries, industrieswar?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) A statement[a] is placed on the table of the House.

[a] Printed as Appendix II on page 491 infra.



14th March 1960]

SRI N. K. PALANISAMI : ஸார், ஒவ்வொரு தொழிற்சாலையிலிருந்தும் டிவிடெண்ட் எவ்வளவு கிடைக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்கார் எந்தெந்தத் தொழிற்சாலைகளில் மூலதனம் போட்டிருக்கிறார்கள் என்பதைக் குறித்து தனியாக ஒரு ஸ்டேட்மெண்ட் பட்ஜெட் பேப்பர்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து எவ்வளவு டிவிடெண்ட் கிடைக்கப் பெற்றிருக்கிறது என்று பார்த்துக்கொள்ள முடியும்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. Minister tell us whether the amount that was given to the Industrial Investment Corporation has been completely distributed or whether there is any balance left and if so, with the balance left will the Government go to the rescue of other industries by advancing loans?

THE HON. SRI R. VENKATARAMAN : The investment of the Madras Government in the Industrial Corporation is rupees one crore and odd but that is not enough to meet the needs of industrial investment in this State. The Corporation has raised deposits and other public revenues to a very large extent, and thev are now able to satisfy the dequirements of the industries in the Stage. It is true that in 1957 they did not have enough funds to meet the requirements of the industries (But to-day the position has eased.

SRI N. K. PALANISAMI : ஸார், தொழிற்சாலைகளில் உற்பத்தியாகக்கூடிய பொருள்களில் விலைகளைக் கட்டுப்படுத்தி அபிவிருத்தி செய்ய சர்க்கார் 50 சதவிகிதம் ஷேர் எடுத்துக்கொள்ள வழிவகை செய்வார்களா ? அப்படியில்லையென்றால் அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : That question relates to policv, namely, whether the Government should have 51 per cent of shares in each industry or whether they can take minority shares. But that has nothing to do with the control of price level.

SRI K. SATTANATHA KARAYALAR : ஸார், இந்த மதராஸ் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன் யார் யாருக்கு எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தனியாகக் கேள்வி போட்டால் சொல்லலாம். இருநூறு அல்லது மூன்னூறு இண்டஸ்ட்ரீஸ் அளவுக்குத் தகவல் கொடுக்க வேண்டியிருக்கும். வேண்டுமானால் தயாரித்துக் கொடுக்கலாம்.

SRI V. K. KOTHANDARAMAN : சர்க்கார் ஷேர் எடுத்திருக்கக் கூடிய தொழிற்சாலைகளில் சர்க்கார் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா ? அல்லது நிர்வாகப் பொறுப்பு தனியார் கையில் இருக்கிறதா ?

[14th March 1960

THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்காருக்கு மெஜாரிட்டி ஷேர் இருக்கும் இடத்தில் சர்க்கார் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும். சர்க்கார் குறைவான பங்கு எடுத்திருக்கக்கூடிய இடங்களில் தனியார் நிர்வாகப் பொறுப்பில் இருக்கிறது. அதிலே சர்க்காருக்கு ஒரு டைரக்டர் உண்டு.

SRI A. GOVINDASAMY : ஸார், நல்ல வருமானம் வரக்கூடிய த்ரங்கத்ரா கெமிகல் போன்ற ஸ்தாபனங்களில் சர்க்கார் குறைவான பங்கு எடுத்துக்கொள்ளக் காரணம் என்ன ? அதிக பங்கு கொள்ள அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒரு சமயத்தில் சர்க்கார் 10 லட்சம் ரூபாய் போட்டது தப்பு என்று ஒரு அபிப்பிராயம் சட்ட சபையில் கூறப்பட்டது. இதில் பல விதமான அபிப்பிராயங்கள் இருக்க முடியும் என்பதை அது காட்டுகிறது. த்ரங்கத்ரா கெமிகல்ஸில் 10 லட்சம் ரூபாய் போடும்போது சர்க்கார் ஏதாவது நாமினல் பங்கு எடுத்துக் கொண்டால்தான் பொது மக்கள் ஊக்கமாய்ப் பங்கு எடுப்பார்கள் என்று சொன்ன காரணத்தினுல் 10 லட்சம் ரூபாய் ஷேர் எடுத்துக்கொண்டோம். முழுவதையுமே நடத்துவது என்ருல் அது பெரிய ஸ்கீம். அத்தகைய காரியம் முடியுமா என்று யோசிக்க வேண்டும். தனியார் துறையில் முன் வந்ததால் சர்க்கார் வேண்டிய உதவியை அளிக்கும்.

SRI A. A. RASHEED : In view of the establishment of the Industrial Investment Corporation, have the Government stopped giving loans to private industries, Sir?

THE HON. SRI R. VENKATARAMAN : There are two schemes. One is the loan scheme to small-scale industries to the extent of Rs. 25 lakhs per annum distributed under the Madras State Aid to Industries Act. The other is the Madras Industrial Investment Corporation which functions as a bank and takes shares as well as market loans.

### *Uranium*

* 346 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state the results of exploratory drilling for Uranium ores?

THE HON. SRI R. VENKATARAMAN : Exploratory drilling has recently been started in the Kullampatti area of the Salem district. The quantity and quality of the ore from the above deposit can be assessed only after a sufficient amount of drilling followed by development work has been carried out. The work is in progress.



14th March 1960]

SRI K. SATTANATHA KARAYALAR : சேலம் மாவட்டத்தைத் தவிர மற்ற மாவட்டங்களிலும் இந்தப் பரிசீலனை செய்யப்படவிருக்கிறதா ? 9-00 a.m.

THE HON. SRI R. VENKATARAMAN : அடாமிக் எனர்ஜி கமிஷன் எந்த எந்த இடங்களில் இந்த அணுசக்திப் பொருள்கள் கிடைக்கும் என்று பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. ஆனல் சேலம் ஜில்லாவில் இந்தப் பகுதியில்தான் ரேடியோ ஆக்டிவிடி இருக்கிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டு, அங்கே மேற்கொண்டு ட்ரில்லிங் அதாவது தோண்டுதல், நடந்துகொண்டிருக்கிறது.

### *Preservation of Neera*

* 347 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) சென்னை பல்கலை கழகத்தின் பயோ-கெமிஸ்டிரி ( Boi-chemistry )இலாகா பதனீர் விரைவாக கள்ளாக மாறிவிடாமலிருக்க பாதுகாப்பு முறை ஏதேனும் கண்டுபிடித்துள்ளார்களா ?

(ஆ) திருநெல்வேலி ஜில்லா உடன்குடியில் இவ்வாராய்ச்சி நடைபெறுகிறதா ? அதன் முடிவென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Dr. P. S. Sarma, Professor of Bio-Chemistry, University of Madras has reported to Government that he has evolved a new process of preservation of neera, with "Pamdrine". The question whether neera treated according to the new process can be preserved without fermentation is under examination in consultation with the Director of Medical Services.

(b) The research referred to in clause (a) above was conducted by Dr. Sarma at Udangudi in Tirunelveli district during 1958–59. No other research is being done at Udangudi at present.

SRI A. GOVINDASAMY : நீராவை இவ்வாறு ப்ரிஸர்வ் பண்ணினுல் அது மதுவின் தன்மையை அடைகிறது. அது மது சக்தியை அடைகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானுல், மதுவிலக்கை அமல் நடத்தும் இந்த அரசாங்கம் இதில் கவனம் செலுத்துவது சரியா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நீரா புளிக்காமல் இருந்தால், அதில் மதுவைப் போன்ற கெடுதலான அம்சம் ஒன்றும் இல்லை. அது நல்ல பானம். இதை சோடாவைப் போல பாட்டில் செய்து கொடுக்க வேண்டும் என்பது என் ஆசை; அதுபற்றி இப்போது ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது.

SRI K. VINAYAKAM: May I know for how long the properties of this "neera" could be preserved, according to the expert?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, it is now pointed out that it could be preserved for only 24 hours, but we are doing further research. By application of a particular chemical substance, we are told that we can keep 'neera' even indefinitely by packing it in bottles.

SRI A. VEDARATHNAM: வேறு பல்கலைக் கழகம் ஏதாவது இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறதா? அப்படியானால், அந்தப் பல்கலைக் கழகம் செய்த ஆராய்ச்சியின் முடிவு என்ன என்பதை கனம் அமைச்சர் தயவுசெய்து அறிவிப்பாரா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: வேறு பல்கலைக் கழகங்கள் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றனவா என்பது பற்றிய விவரம் என்னிடம் இல்லை. ஆனால் அகில இந்திய காதி கிராமக் கைத்தொழில் கமிஷன் இது சம்பந்தமாக ஆராய்ச்சி நடத்தி வருகிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். அதன் ஆராய்ச்சி இதுவரையில் வெற்றிகரமாகவே இருந்திருக்கிறது. கோவையில் குன்றத்தூர் என்ற கிராமத்தில் நடந்த ஒரு மகா நாட்டில் கூட, இதைச் செய்துகாட்டினார்கள். அதை மேலும் தொடர்ந்து நடத்தவேண்டும் என்று இப்போது எண்ணப் படுகிறது.

SRI A. GOVINDASAMY: நீரா உடம்புக்கு நல்லது என்றும் அதை சோடா பாட்டிலில் போட்டு மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் கனம் அமைச்சர் சொன்னார். அந்தக் கருத்து உண்மையானால் இப்போது நீராவைப் பானையில் கொண்டுவந்து விற்கும் தாய்மார்கள் பேரில் போலீசால் கேஸ்கள் போடுவதைத் தடுக்க அரசாங்கம் முயற்சிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அசல் நீராவாக இருந்தால் கேஸ் போட மாட்டார்கள். அதை விற்க லைசென்ஸ் வாங்க வேண்டும். புளித்த நீராவாக இருந்தால் அது நீரா அல்ல, அது கள்.

SRI V. K. KOTHANDARAMAN: நீரா நல்ல பானம் என்று சொல்லும் கனம் அமைச்சர், அதைக் குறிப்பிட்ட இடங்களில் ப்ரிஜிடேர் போன்றவைகளில் பாதுகாத்து வைத்திருந்தோ குளிர்ந்த இடங்களில் பாதுகாத்து வைத்திருந்தோ விற்பதற்கான லைசென்ஸுகளை முனிசிபல் ஏரியாக்களில் வழங்க கனம் அமைச்சர் முன்வருவாரா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அவ்வாறு கொடுக்கக்கூடிய லைசென்ஸுகளை தனிப்பட்ட நபர்களுக்குக் கொடுப்பதாக இல்லை. அவைகளை கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கத் தயாராயிருக்கிறோம். சென்னையில் கூட ஒரு கூட்டுறவுச் சங்கத்



அதை அம்மாதிரி ப்ரிஜிடேரில் வைத்திருந்து, குளிர்ச்சியான இடத்தில் வைத்திருந்து, புளிக்காமல பாதுகாத்து வினியோகித் துக்கொண்டிருக்கிறார்கள்.

DEPUTY SPEAKER: The hon. Member, Sri S. Lazar, is not putting his question, viz., question No. 348. So, we will proceed to the next question.

*Fair Price Shops.*

* 349 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the reasons for selling rice in the fair price shops at Rs. 42 per bag while the cost of a bag of rice is only Rs. 35;

(*b*) the reasons for allowing shrinkage allowance to Central Co-operative Stores when there is excess of rice in each bag supplied to the Stores; and

(*c*) the reasons for not distributing rice in the Fair Price Shops through linking up scheme as it was done during July 1959?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The selling price of rice in Fair Price Shops is worked out by adding to the purchase price the cost of gunny, sales tax at wholesalers' stage, railway freight plus a margin of Rs. 1·87 per maund and sales tax at the retail stage.

(*b*) Shrinkage allowance is given to meet the loss due to shrinkage in stocks on account of natural conditions during the period of storage. There is no excess of rice in each bag as suggested in the question.

(*c*) There was no distribution of rice in Fair Price Shops through linking up scheme at any time.

SRI N. K. PALANISAMI: ரெவின்யூ போர்டில் இப்பொருள்களை ஸென்ட்ரல் ஸ்டோர்ஜுக்கு ஒரு மாண்டுக்கு (மணங்குக்கு) 46 படி என்று கொடுக்கிறார்கள். ஆனால் அது 47 படி வரையில் இருக்கிறது. புழுங்கல் அரிசியாக இருந்தால் அது 46½ படிக்கு வருகிறது; அதாவது ½ படி அதிகம் வருகிறது. அப்படியானால் அதற்கு ஏன் 'ஷ்ரிங்கேஜ் அலவன்ஸ்' கொடுக்க வேண்டும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: முன்பு ஏற்பாடு செய்தபடி கூட்டுறவுச் சங்கங்களுடன் கலந்துபேசி முன்பு ஏற்பாடு செய்தபடியே 'ஷ்ரிங்கேஜ் அலவன்ஸ்' கொடுக்க வேண்டியதைக் கொடுத்து வந்தார்கள். ஆனால் இப்போது அதுவெல்லாம் முடிந்து விட்டது. இப்போது அந்தப் பிரச்னை ஒன்றும் இல்லை. இனிமேல் மறுபடியும் இந்த மாதிரி கூட்டுறவுச் சங்கங்களுடன் ஒப்பந்தம் செய்துக்கொண்டு கொள்முதல் செய்து அவர்கள் மூலம் விற்பதையிருந்தால், அப்போது எல்லாப் பிரச்னைகளும் மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## *Intensified Foodgrains production*

* 350 *Q*.—SRI A. A. RASHEED, SRI S. M. ANNAMALAI, SRI M. P. SARATHI } Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government of India have recommended for intensified foodgrains production in selected areas in the State; and

(*b*) if so, the places selected for this scheme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) Thanjayur district has been selected for implementation of this scheme.

SRI A. A. RASHEED: Why not the Government select North Arcot and Salem, dry areas, for intensification of foodgrains production?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Government have selected Thanjavur district because of the possibility of high production of foodgrains in that district than in any other district.

SRI P. S. CHINNADURAI: கோவை ஜில்லாவில் நஞ்சை தானியங்களும் புஞ்சை தானியங்களும் பொதுவாக நல்ல விளைச்சல் கொடுத்து வருவது கனம் அமைச்சருக்குத் தெரியும். அந்த நல்ல விளைச்சலை அங்கே அதிகப்படுத்துவதற்கு வகைசெய்யும் முறையில், கோவை ஜில்லாவையோ அல்லது அங்கே குறிப்பிட்ட சில தாலூகாக்களையோ, அதாவது கோபி, பவானி போன்ற தாலூகாக்களையோ, இத்திட்டத்திற்கு எடுத்துக்கொள்ள அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கோவை மாவட்டத்தில் விவசாயிகள் நன்றாக உழைத்து அதிகமாக உற்பத்தி செய்வதை நான் பாராட்டுகிறேன். தஞ்சாவூரிலுள்ள விவசாயிகள் அந்த அளவுக்கு உற்பத்தி செய்வதில்லை. எனவேதான் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ளவர்களை இன்னும் உற்பத்தி செய்யும்படி செய்வதற்காக இந்த 4 லட்சம் ஏக்கர் இப்போது தஞ்சாவூர் ஜில்லாவில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

SRI M. P. SUBRAMANIAM: நெல் உற்பத்தி தஞ்சாவூரில் ஆவதைவிட அதிகமாக வேறு மாவட்டங்களிலும் ஆகியிருக்கிறது என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா? இந்தியாவிலேயே மிக அதிகமாக நெல் உற்பத்தியாகியிருக்கும் ஜில்லா சேலம் என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா? அவ்வளவு அதிகமாக உற்பத்தியாகியிருக்கும் சேலத்தில் இந்தத் திட்டத்தை அரசாங்கம் ஏன் கொண்டு வரவில்லை?



THE HON. SRI M. BHAKTAVATSALAM: சேலத்தில் அவ்வளவு அதிகமாக உற்பத்தியாகியிருப்பதற்காக கனம் அங்கத்தினரை நான் பாராட்டுகிறேன். நான் எதிர்பார்க்கவில்லை; சேலத்தில் கோவையைவிட அதிகமாக உற்பத்தி செய்து காட்டியிருக்கிறார்கள். ஆனால், அதிகமாக உற்பத்தி செய்யாதவர்களை அதிகமாக உற்பத்தி செய்யும்படி செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் தஞ்சாவூர் ஜில்லா திட்டத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

SRI S. M. ANNAMALAI: இந்தத் திட்டத்திற்கு அமெரிக்காவிலிருந்து ஏதாவது பணம் கிடைக்கிறதா? அவ்வாறு பணம் கிடைக்கிறது என்றால், எந்தெந்த கண்டிஷன்களின் பேரில் அது கொடுக்கப்படுகிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதற்கு அமெரிக்காவின் உதவி இருக்கிறது. நாம் சாதாரணமாக எவ்வளவு உற்பத்தி செய்கிறோமோ அதைவிட எவ்வளவு அதிகம் உற்பத்தி செய்ய வேண்டுமோ அவ்வளவு அதிகம் உற்பத்திசெய்வதற்கு வேண்டிய உதவிகள் அமெரிக்காவிலிருந்து கிடைக்கும்.

SRI R. KRISHNASAMI NAIDU: இந்த விவசாயப் பொருள்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், இந்த நாட்டில் பற்றாக்குறையாக இருக்கும் எல்லா விவசாயப் பொருள்களையும் அதிகமாக உற்பத்தி செய்யும் முயற்சி மேற்கொள்ளப்படும் என்று நான் நினைக்கிறேன். அப்படியானால், இந்தத் திட்டத்தின் கீழ், நெல் விளைச்சலைப் பெருக்குவதற்குத் தஞ்சாவூரும், வேர்க்கடலை, பருத்தி போன்ற இதர தினுசுப் பொருள்களைப் பெருக்குவதற்கு, அவைகளில் எந்த எந்தப் பொருள்கள் எந்தெந்த ஜில்லாக்களில் நன்றாக விளையுமோ அந்த அந்த ஜில்லாக்கள் அந்த அந்தப் பொருள்களுக்காகவும் எடுத்துக்கொள்ளப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஒரு ஜில்லாவை ஒரு யூனிட்டாக வைத்து நிறைவேற்றுவது இந்தத் திட்டம். இதற்கு தஞ்சாவூர் ஜில்லாவை எடுத்துக்கொண்டிருக்கிறோம். வேறு ஜில்லாக்களில் இதை இப்போது நிறைவேற்றுவதாக இல்லை. இத்திட்டத்தின் கீழ், தஞ்சாவூரில் நெல் மாத்திரமன்றி வேறு என்னென்ன பொருள்கள் விவசாயம் செய்யப்படுகின்றனவோ அந்தப் பொருள்கள் பற்றியும் கவனம் செலுத்தப்படும். மேலும், இந்தத் திட்டத்தின் சில முக்கியமான அம்சங்களை கனம் அங்கத்தினர்களுக்கு இந்த சமயத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்:—

### *Salient features of the Scheme.*

(*a*) Supply of credit on basis of production potential.

(*b*) Supply of adequate quantities of fertilizers over and above the present deficit allocation.

(*c*) Organization of the essential agricultural supplies of improved seed, fertilizer, implements, etc.

[14th March 1960

(*d*) Guarantee to co-operative societies for under-writing losses for stocking supplies recommended.

(*e*) Guarantee to farmers about compensation for conducting recommended practices (in case production falls below normal for the season).

(*f*) Decentdalisation of authority at the District level and placing the District Magistrate/Collector in charge of a co-ordinated food production programme.

(*g*) An assurance to farmers of a guaranteed reasonable floor price for selected cereal crops.

In addition to scientific demonstrations, the following measures would be taken to saturate the entire area :—

(*a*) Green manuring practices and maitenance of compost pits.

(*b*) Effective distribution of improved seeds.

(*c*) Plant protection.

(*d*) Efficient utilization of irrigation facilities.

(*e*) Programme of upgrading cattle and reducing useless cattle.

(*f*) Educating ryots in improved farming practices through the supply of extension type literature, visual aids, films and the radio.

*Health Museum*

* 351 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state whether any sum was allotted for the construction of Health Museum in the City of Madras under the Second Five-Year Plan?

THE HON. SRI M. A. MANICKAVELU : A provision was made in the State Plan but the scheme has to be deferred for want of funds.

SRI N. K. PALANISAMI : May I know the reason?

THE HON. SRI M. A. MANICKAVELU : There are two sets of schemes. For one set of schemes we get aid from the Centre. For another set of schemes we do not get Central aid. Therefore, we have taken more number of schemes for which we get Central aid and which are more essential. That is why this scheme could not be taken.

*Manufacture of glass bangles, toys, etc.*

* 352 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the manner in which the recruitment of persons for training in the manufacture of glass bangles, toys, etc., is made; and



14th March 1960]

(*b*) the possibilities of employment for these persons after the training?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The recruitment is made after inviting applications by advertisment in newspapers and after interview of the candidates who respond to the advertisements.

(*b*) Wherever possible Industrial Co-operative Societies are organized for the trainees to enable them to continue the indnstdy and undertake production on commercial scale. Some of the trainees have set up their own units and a major portion of them have found employment in Colleges and Research Laboratories.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்தப் பயிற்சி எங்கெல்லாம் அளிக்கப்படுகிறது? எவ்வளவு பேருக்கு அளிக்கப்படுகிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

| Name of training centre. | Minimum educational qualifications. | Age. | Number of trainees selected every year. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 Scientific Glass Training Centre, Madras. | S.S L.C. with eligibility for college course. | 16 to 25 years. | 10 |
| 2 Glass Bangle and Bead Training Centre, Madurai. | III Form .. .. | 1- to 25 years. | 15 |
| 3 Glass Bangle Training Centre, Nedumarathy. | Must be literate. Artisans are preferred. | 25 years. | 6 |

SRI A. GOVINDASAMY : நம் நாட்டில் சங்கு வளையல் உற்பத்தி செய்ய அரசாங்கம் முயற்சி எடுக்காததன் காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சங்கு வளையல்களை அணிந்து கொள்ள பெண்மணிகள் தயாராக இருந்தால் அல்லது ஆண்கள் தயாராக இருந்தால் (சிரிப்பு) அந்தத் தொழிலை நம் நாட்டில் ஆரம்பிக்கலாம். வங்காளப் பெண்மணிகள் கல்யாண சமயத்தில் சங்கு வளையல்களை அணிவது என்று வழக்கம் இருந்து வருகிறது. இங்கே அந்தப் பழக்கம் இல்லை.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், நடுமாத்தி ட்ரெயினிங் சென்ட்ரில் ஒரு மின்சார பர்னல் இல்லாமல் சரிவர அல்லது ட்ரெயினிங் கொடுப்பதற்கு வசதியின்றி இருக்கிறது என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா? அதை உடனடியாக அளிப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப் பற்றிய விவரம் ஏதும் இல்லை. தனியாகத் தகவல் கொடுத்தால் கவனிக்கிறேன்.

SRI A. GOVINDASAMY : நம் நாட்டிலே உற்பத்தியாகின்ற சங்கைக் கொண்டு வளையல் செய்ய வேண்டுமென்று வங்காளத்திலிருந்து நிபுணர்களை நம்முடைய ராஜ்ய சர்க்கார் கேட்டது உண்மையா? கேட்டு அந்த சர்க்கார் மறுத்தது உண்மையா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றி இப்போது தகவல் இல்லை. எனக்கு நினைவும் இல்லை. ஒருக்கால் மறுத்திருக்கலாம். அவர்கள் மறுப்பதால் நாம் செய்யாமல் இருக்கவேண்டியதில்லை. நாம் அந்தத் தொழிலில் ஈடுபட்டால் அதை விற்க நம்முடைய நாட்டில் வசதி இருக்கிறதா என்பது தான் முக்கியம்.

SRI A. A. RASHEED : வங்காளத்தில் ஆண்கள் வளையல் போடுகிறார்கள் என்பது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எனக்குத் தெரியாது. கனம் அங்கத்தினர் அவர்களுக்கு இதைப் பற்றிக் கொஞ்சம் அதிகமாகத் தெரிந்திருக்கும்.

*Starting of village industry*

* 353 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தாலுகா கடினவயல் கிராமத்தில் தாழை ஓலை மூலம் கிராமக் கைத்தொழில் ஆரம்பிக்கும் திட்டம் என்ன நிலையில் இருக்கிறது ?

THE HON SRI M. BHAKTAVATSALAM : An investigation regarding the suitability of the screw pipes leaves available at the Kadinavaval village in Tiruthuraipoondi taluk for the manufacture of silken mats is being made and the question of starting a departmental centre for the purpose will be considered after the result of the investigation is known.

SRI A. VEDARATHNAM : அந்த ஆராய்ச்சி எந்நிலையில் இருக்கிறது ? எப்போது முடிவு பெறும் ? இந்தத் தொழிலை அங்கே ஆரம்பிக்க ஏதாவது காலம் குறிப்பிட முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த இலைகளை வேதாரண்யத்திலிருந்து பெற்று அதை நாகர்கோயிலில் இருக்கும் ட்ரெயினிங் சென்டரில் பரிசீலனை செய்து திருப்திகரமாக இருந்தால் மேற்கொண்டு தொழிலை நடத்துவது என்பது அரசாங்கத்தின் எண்ணம்.

*Water-supply to Dalmiapuram*

* 354 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Works be pleased to state whether any agreement has been entered into between the Dalmia Cements, Limited, and the Government regarding the taking of water through pipe lines from Natham village to Dalmiapuram and if so, the terms thereof?

THE HON. SRI P. KAKKAN : An agreement entered into previously between the Dalmia Cements, Limited, and the Government regarding supply of water to Dalmiapuram from the river



Coleroon covered a period of 10 years from 1st October 1948. The question of revision of the agreement and its renewal is under consideration. The terms of the revised agreement have not yet been finalised.

SRI S. LAZAR : ஸார், இந்த ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கின்ற போது அங்கே எடுத்துக்கொள்ளக்கூடிய தண்ணீர் அரசாங்கத்தின் தண்ணீராக இருக்கிறது. வழி நெடுக பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அவைகளுக்கும் தண்ணீர் கொடுக்கக்கூடிய முறையிலே ஒப்பந்த கண்டிஷன்களைச் சேர்த்து அதற்கான தொகை வேண்டுமானாலும் அரசாங்கத்திற்குச் செலுத்திவிட வேண்டுமென்ற முறையிலே அரசாங்கம் அந்த ஒப்பந்தத்தைச் செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : தண்ணீர் கொடுக்கும்போது அரசாங்கம் ரொம்ப கவனமாகக் கவனிக்க வேண்டியிருக்கிறது. கீழே இருக்கும் அயக்கட்டுக்காரர்களைப் பாதிக்கக்கூடாது. கனம் அங்கத்தினர் அவர்கள் தனிக் கேள்வி கேட்டால் மற்ற விவரங்களைக் கூறுகிறேன்.

*Government Textile Institute*

* 355 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries be pleased to state the amount received as compensation from the Government of India for taking over the Government Textile Institute, Madras?

THE HON. SRI R. VENKATARAMAN : No compensation has been received from the Government of India so far, for taking over the Government Textile Institute, Madras.

SRI A. A. RASHEED : May I know the reasons for handing over the Madras Textile Institute to Central Government?

THE HON. SRI R. VENKATARAMAN : Government of India wanted to run it as an All-India Institute.

SRI A. A. RASHEED : May I know whether students of Madras will get priority in admission to this institute?

THE HON. SRI R. VENKATARAMAN : They will also get admission. Naturally more number of people from Madras State will get admission here.

*Collectors' conference.*

* 356 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any decisions have been taken at the Collectors' conference held on 6th November 1959 at Madras regarding the implementation of the Panchayats Act and the District Development Councils Act; and

(*b*) if so, the details of the same?

[14th March 1960

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) The programme of implementation of the Madras District Development Councils Act, 1958, and the Madras Panchayats Act, 1958, drawn up with reference to the discussions at the departmental meeting of the District Collectors has been placed on the table of the House under G.O. No. 2013, L.A., dated the 28th November 1959.

**SRI N. K. PALANISAMI :** *ஸார், இன்னும் பல கிராமங்களில் பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப்படவில்லை. இந்த பஞ்சாயத்துகள் எல்லா கிராமங்களிலும் ஏற்படுத்தப்படும் என்று திட்ட வட்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?*

**THE HON. SRI C. SUBRAMANIAM :** *எல்லா கிராமங்களிலும் இந்த வருஷத்திற்குள்ளாக பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப்படும். இந்த பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் முதல் படியாக 75 வட்டாரங்களில் எடுத்துக்கொள்ளப்படும் என்று பட்ஜட் உரையிலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது. மறுபடியும் தொடர்ந்து மற்றப் பகுதிகளிலும் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை படிக்காமல் இருந்தால் அதைப் படிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.*

**SRI M. P. SUBRAMANIAM :** *1960-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களுக்கு பஞ்சாயத்து போர்டு தலைவர்களே உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்களா ? அல்லது பஞ்சாயத்திலிருந்து டெலிகேட்டுகள் தேர்ந்தெடுக்கப்படுவார்களா ?*

**THE HON. SRI C. SUBRAMANIAM :** *இப்போது இருக்கும் சட்டப் பிரகாரம் பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்குத் தனியாக ஒரு பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றிருக்கிறது. இதை ஏதாவது மாற்றலாம் என்று கட்சித் தலைவர்களைக் கலந்து ஆலோசிக்கலாம் என்ற யோசனை இருக்கிறது.*

**SRI M. KALYANASUNDARAM :** *பஞ்சாயத்து சட்டத்தின் கீழும், மாவட்ட வளர்ச்சி மன்ற சட்டத்தின் கீழும் பிறப்பிக்க வேண்டிய விதிகள் எப்போது பிறப்பிக்கப்படும் ?*

**THE HON. SRI C. SUBRAMANIAM :** *30—11—1959-ல் பிறப்பிக்கப்பட்டது.*

**SRI M. KALYANASUNDARAM :** *30—11—1959-ல் பிறப்பிக்கப்பட்டது தேர்தல் சம்பந்தமாக மட்டுந்தான். இந்தச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட வேண்டிய மற்ற விதிகள் இன்னும் பிறப்பிக்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?*

**THE HON. SRI C. SUBRAMANIAM :** *கவனித்து சொல்லுகிறேன். இங்கு கொடுத்திருக்கும் தகவல் பிரகாரம்* The notification was issued on 30th November 1959. Perhaps it was before the formation of the Development Councils.



14th March 1960]

*Press Council.*

* 357 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government propose to form a Press Council for Madras; and

(b) if so, the manner and the purpose of its constitution?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) There is a proposal to form a Press Advisory Committee in the State and not a Press Council.

(b) This Committee is to be formed for safeguarding the rights of the Press in regard to freedom of publication of news and comments. The Convenor of the Committee is to be nominated by the Government in consultation with the President of the All-India Newspaper Editors' Conference who will, in turn, choose his colleagues in the Committee in consultation with the State Government. These details have not been finalised so far.

**SRI K. SATTANATHA KARAYALAR :** *ஸார், இந்த பிரஸ் அட்வைசரி கமிட்டி அமைப்பதற்காக நமது மாவட்டத்திலே இருக்கக்கூடிய முக்கிய பத்திரிகை நடத்துபவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரைக் கலந்து ஆலோசிக்கப்பட்டதா ?*

**THE HON. SRI C. SUBRAMANIAM :** *அவர்களைக் கலந்து ஆலோசித்துத்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டது.*

*Depression in the Bay of Bengal*

* 358 *Q.*—SRI A. VEDARATHNAM : *கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—*

*(அ) இம்மாநிலத்தின் அருகில் வங்கக் கடலில் அடிக்கடி காற்றழுத்தம்* (depression) *ஏற்பட்டு கடையோரப் பிரதேசங்களை பெரும் நாசத்திற்குள்ளாக்கி வருவதைப்பற்றி நிபுணர்களை அரசாங்கம் கலந்து ஆலோசித்ததா ? அவர்கள் கூறும் காரணம் என்ன ?*

*(ஆ) இதற்குப் பரிகாரம் ஏதேனும் செய்யக்கூடிய நிலை உண்டா ?*

*(இ) அப்படியானால் அதன் விவரம் என்ன ?*

THE HON. SRI P. KAKKAN : (a) No, Sir.

(b) & (c) Do not arise.

SRI A. VEDARATHNAM : *வங்கக் கடலில் இருக்கும் டெம்பரேச்சருக்கும், இந்து மகா சமுத்திரத்திலிருந்து வரும் காற்றுக்கும் 2 டிகிரி வித்தியாசம் இருக்கும் காரணத்தால் இந்த*

[14th March 1960

டிப்ரஷன் அடிக்கடி உண்டாகிறது என்று நிபுணர்கள் கருதுகிறார்களா? அதைப்பற்றி ஆராய்ந்து அடிக்கடி இந்த வங்கக் கடலில் ஏற்படும் புயல் காற்று ஏற்படாவண்ணம் செய்ய அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது?

THE HON. SRI P. KAKKAN: எப்போது அந்த மாதிரி புயல் காற்று ஏற்படுகிறது என்று கண்டுபிடிக்க முடியவில்லை. ஆகையால் இதிலே அதிக கவனம் செலுத்தவில்லையென்று தெரிகிறது. எங்கெங்கு பாதிக்கப்படுகிறது என்று கவனித்து அரசாங்கம் ஆவன செய்து வருகிறது.

*Indiscipline among hostel students.*

* 359 Q.—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Finance be pleased to state the steps taken to prevent students in some of the Government College Hostels like Madras Institute of Technology, Engineering College at Guindy and Coimbatore take to "*ragging*"?

THE HON. SRI C. SUBRAMANIAM: Ragging in Engineering Colleges has now been stopped by gradual persuasion. The Government have not received any complaint of ragging this year. As regards the Madras Institute of Technology, Chromepet, which is not a Government institution, the Director of Institute has reported that he put up a warning to students at the beginning of the year against excesses in this direction and that the students did not indulge in any excess.

SRI S. LAZAR: Sir, may I know from when this has been stopped? Because even at the commencement of the year, I received a number of complaints from the students. Is it not a fact that this is fast spreading to other Government colleges in the State—not only to private colleges? If so, will the Government take some more serious steps to stop this completely, because the new students are simply menaced by this kind of activity on the part of the students?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதில் சட்டம் போட்டோ வேறு நிர்ப்பந்தப்படுத்தியோ எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கை எதுவும் இல்லை என்பது என்னுடைய கருத்து. புதிதாக வரக்கூடிய மாணவர்களைத் தங்கள் கூட்டத்திலே சேர்த்துக் கொள்ளும் சமயத்தில் சில கலாட்டாக்கள் செய்வதுண்டு. 'இனிஷியேட்' பண்ணுவது என்று சொல்வார்கள். ஏதோ கேம்ப்ரிட்ஜ், ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடிகளில் இருப்பதாக நினைத்து நாமும் பின்பற்றினால் நம்முடைய தரம் உயர்ந்துவிடும் என்று நினைத்துக்கொள்கிறார்கள். இந்த இரண்டு வருஷங்களில் மிகவும் குறைந்திருக்கிறது. சென்ற வருஷ விளையாட்டை அதிகமாகப் பார்க்க வேண்டியதில்லை.



14th March 1960]

SRIMATHI KAMALAMBUJA AMMAL: பெண்கள் ஒருவேளை இம்மாதிரி கல்லூரிகளில் சேர வேண்டுமென்றால், இந்த வழக்கம் அப்படியே இருந்துகொண்டிருந்தால் மிகவும் கடினமாக இருக்கும். ஆகையால், இதை நிறுத்த ஏதாவது செய்ய முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இன்ஜினீரிங் காலேஜிலே அனேகமாக பெண்கள் சேருவதில்லை. மெடிகல் காலேஜிலே இது கிடையாது. எப்படியிருந்தாலும், பெண்களும் இருந்தால் இந்த விளையாட்டுகூட இருக்காது என்று நினைக்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM: Sir, what is this ragging, and what is the source of this infection in our institutions?

THE HON. SRI C. SUBRAMANIAM: I have already stated, Sir, that Western Universities have these practices of initiating new students into the practices of the institutions. Unfortunately, this had reached a proportion which was considered to be a menace to the new students. That is why, the Government had to interfere, and, by persuasion, it has been stopped now. Whatever exists now is tolerable.

SRI V. SANKARAN: Sir, may I know what are the methods of initiation that are practised in these colleges?

THE HON. SRI C. SUBRAMANIAM: அதற்கு விளம்பரம் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. (சிரிப்பு.)

*Search by Police without warrant*

* 360 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the attention of the Government has been drawn to the remarks of the High Court Judge in the course of the judgment given on the 21st November 1959, regarding search by Police without warrant; and

(b) if so, the action taken by the Government thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) No, Sir. It is however understood from the Inspector-General of Police that he had on receipt of a copy of the High Court Judgment referred to from the Registrar, High Court, communicated the observation of the High Court Judge to all Superintendents of Police and Commissioner of Police, Madras, for strict compliance with the relevant provisions of Law.

SRI A. A. RASHEED: Sir, may I know the circumstances under which these remarks were passed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Some learned Judge of the High Court observed in the course of a judgment in a particular case that, where the police could do the search without a warrant, they had to conform to certain provisions of the

[14th March 1960

Criminal Procedure Code. The Judge observed that they were not followed. So this remark of the High Court has been communicated to the Superintendents of Police and other officers for strict compliance with the provisions of the Criminal Procedure Code.

*Report of the International Labour Organization Expert*

* 361 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR:
SRI N. K. PALANISAMI:
SRI S. M. ANNAMALAI:
SRI M. KALYANASUNDARAM: } Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have received the report of the International Labour Organization Expert; and

(*b*) if so, the decision taken on it?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) Yes, Sir.

(*b*) The report is under the consideration of the Government.

SRI K. SATTANATHA KARAYALAR: இதைப்பற்றி எப்பொழுது முடிவு எடுக்கப்படும்?

THE HON. SRI R. VENKATARAMAN: ரிப்போர்ட் வந்துவிட்டது. அதற்கு 'டிபார்ட்மென்ட் கமெண்ட்ஸ்' ஒவ்வொன்றுக்கும் தயார் செய்துகொண்டிருக்கிறோம். 'ரெகமென்டேஷன்ஸ்', 'கமென்ட்ஸ்' இரண்டையும் சேர்த்துப் பிரசுரிப்பது என்பது அபிப்பிராயம். ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்களுக்குள்ளாக அது பிரசுரமாகிவிடும்.

SRI N. K. PALANISAMI: ட்ரான்ஸ்போர்ட்டுக்கு வேண்டிய ஸ்டோர்ஸ் அதிகப்படியாக வாங்கியதைப்பற்றியும், 'ப்யூவல்' அதிகப்படியாக வாங்கியதைப்பற்றியும் கமிட்டி அதனுடைய கண்டனத்தைச் சர்க்காருக்கு அந்த ரிபோர்ட்டில் தெரிவித்திருக்கிறதா? அப்படியானால், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

THE HON. SRI R. VENKATARAMAN: இந்த ரிபோர்ட் 'கான்பிடென்ஷியல்' ஆக இருக்கிறது. கனம் அங்கத்தினருக்கு இதெல்லாம் எப்படித் தெரிந்தது என்று புரியவில்லை. அதனால், அது நிஜமா இல்லையா என்றுகூட சொல்வதற்குத் தயாராக இல்லை.

*Special Minor Irrigation Programme*

* 362 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any arrangements have been made to form ponds under Food Production Programme in the block and non-block areas; and



14th March 1960]

(*b*) whether any amount has been allotted for each district for Special Minor Irrigation programme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) A scheme for the execution of pond works in districts like Coimbatore and Salem is under examination on a representation made by the hon. Member.

(*b*) It is presumed that the hon. Member refers to allotment for the scheme. Allotment of funds will be considered after the scheme is approved by Government.

SRI A. GOVINDASAMY: புதிய குளம் குட்டைகளை மற்ற மாவட்டங்களிலேயும் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காததற்குக் காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இது புதிய திட்டம். சேலம், கோவை ஜில்லாக்களில் நிறைவேற்றிப் பார்த்து, அது எவ்வளவு தூரம் திருப்திகரமாகவும் வெற்றிகரமாகவும் இருக்கும் என்று பார்த்து, அதற்குப் பிறகு மற்ற ஜில்லாக்களிலே எடுத்துக் கொள்ளலாம் என்பது உத்தேசம்.

SRI M. P. SUBRAMANIAM: சேலம், கோவை, நீலகிரி மாவட்டங்களுக்கு சேர்ந்து ஏற்கனவே ஸ்பெஷல் மைனர் இரிகேஷன் டிவிஷன் ஒன்று சேலத்திலே திறக்கப்பட்டிருக்கிறது என்று தெரியுமா? அப்படியானால், அவர்களுடைய செலவினங்களுக்காக எவ்வளவு தொகை ஏற்கனவே அரசாங்கம் ஒதுக்கி இருக்கிறது என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தனியாக ஒரு பகுதி இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால், எவ்வளவு செலவாயிற்று என்பதற்குத் தனி கேள்வி வேண்டும்.

SRI P. S. CHINNADURAI: ரொம்ப காலமாக இது தாமதமாக இருக்கும் காரணத்தால், தயவு செய்து இந்த ஆண்டிலாவது முடித்து வைப்பதற்கு அரசாங்கம் யோசனை செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதைப்பற்றி அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

*Home for the Children of the Tibetan Refugees*

* 363 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) திபேத்திய அகதி குழந்தைகளுக்கு திருவான்மியூரில் ஓர் திபேத்திய விடுதி கட்டப்படப்போகிறதா?

(ஆ) இதற்கு மத்திய அல்லது மாகாண அரசாங்க உதவி உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) This Government have no information.

[14th March 1960

SRI A. VEDARATHNAM : திபேத் அகதிகளை இங்கே வைத்துப் பராமரிக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திலிருந்து நமது அரசாங்கத்திற்கு ஏதேனும் கோரிக்கை வந்ததா? அதன் பேரில் அரசாங்கம் என்ன முடிவு எடுத்தார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப்பற்றி ஒரு தகவலும் இந்த அரசாங்கத்தினிடம் இல்லை.

*Dalmia Cement (Bharat), Limited*

* 364 *Q*.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any death occurred at Dalmiapuram near the Dalmia Tram line in the month of November 1959;

(*b*) the number of accidents to the lives of men and animals that have taken place in 1959 in the said tram lines; and

(*c*) whether the Dalmia Cement (Bharat), Limited, Dalmiapuram, have been asked to shift the tram line?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Nil.

(*c*) No, Sir.

SRI S. LAZAR : Sir, is it not a fact that this line runs very close to the village—a few feet off from the village—and that there had been fire accidents and also accidents to life. If so, will the Government direct this company to lay their tram lines at least a few yards away in their own lands, which they are already owning?

THE HON. SRI R. VENKATARAMAN : If the hon. Member sends a written representation, that will be forwarded to the company for its comments, and then the Government would examine it.

SRI S. LAZAR : Sir, this suggestion was made even two and a half years back. Even then a similar answer was given. Will the Government therefore expedite this proposal?

THE HON. SRI R. VENKATARAMAN : I have already stated that if the hon. Member makes a written representation giving details, the Government would call for the comments of the company, and then take further action. It is not possible to act on unilateral representation.

SRI M. KALYANASUNDARAM : Sir, are the Government aware that this line is not fenced and that it passes through residential areas? Will the Government instruct the company to put up fences along the line?

THE HON. SRI R. VENKATARAMAN : I wish to repeat the same answer to the hon. Member.



14th March 1960]

SRI S. LAZAR : Sir, there had been some accidents to life also. I do not see how this information is given to the Government. Will the Government just institute an enquiry into this matter and see whether really there had been some accidents or not?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, if the hon. Member has specific information, then he should furnish it to the Government and not ask, 'Was there any accident in 1959'? The information which the Government have is that there was no such accident. If the hon. Member has specific cases, I would like him to write to the Government so that we may take action thereon.

DEPUTY SPEAKER : Questions are over.

## II. CALLING ATTENTION TO THE NOTIFICATION ISSUED BY THE COLLECTOR OF TIRUNELVELI *RE* LEVY OF ENHANCED WATER-CESS FOR IRREGULAR IRRIGATION UNDER THE TAMBARAPARNI SYSTEM.

* SRI M. S. SELVARAJAN : கனம் உதவி சபாநாயகர் 9.30 a.m.
அவர்களே, கடந்த வருஷம் செப்டம்பர் மாதம் 8-ம் தேதி திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் பத்திரிகைக்கு ஒரு குறிப்பு அனுப்பியிருந்தார். அதன் பிரகாரம் 'வாடர் ரேட்' பயிரீட்டை தடை செய்து, தண்டத் தீர்வை விதிக்கப்படுமென்று பயமுறுத்தல் செய்யப்பட்டிருந்தது. அவர் தன்னுடைய குறிப்புக்கு ஆதாரமாகக் கொண்டது, அந்த நேரத்தில் பாபநாசம், மணிமுத்தாறு நீர் நிலையங்களில் தண்ணீர் இல்லாததும், மழை தாழ்ச்சியும்தான். ஆனால், அவர் குறிப்பு வெளி வந்த சில தினங்களுக்குள்ளாக பருவ மழை பெய்து, அதன் மூலம் இரண்டு அணைக்கட்டுகளின் நீர் நிலை உச்ச அளவுக்கு உயர்ந்து சில நாட்கள் தண்ணீர் வீணாக கடலில் போகக்கூடிய நிலைமையும் உண்டாகியிருந்தது. அத்தகைய நிலைமையின் காரணமாக தாம்பரபரணி, மணிமுத்தாறு பகுதிகளில் முற்றும் பயிர் செய்யப்பட்டு விளைந்திருக்கிறது. இன்றும்கூட கணிசமான அளவுக்கு இந்த இரண்டு தேக்கங்களிலும் நீர் நிலை இருந்துகொண்டிருக்கிறது. மணிமுத்தாறு தேக்கத்தின்கீழ் உள்ள 'ஷெட்யூல்டு' குளங்கள் 303 குளங்களுக்கும் அதைத் தவிர, புதியதாக சேர்ப்பதாக பரிசீலனையில் இருந்த 44 குளங்களுக்கும்கூட ஸ்பெஷலாக இந்த வருஷம் தண்ணீர் கொடுப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையிலும்கூட கலெக்டருடைய தடை உத்தரவு பத்திரிகைக் குறிப்பு மூலம் விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது அர்த்தமற்றது. அந்த ஜில்லா விவசாயிகளுக்கு அது மொத்தத்தில் மனக்குழப்பத்தை உண்டுபண்ணியிருக்கிறது. கலெக்டர் வெளியிட்டால் கட்டுப்படுத்தப்பட்ட வாடர் ரேட் பயிரீடு இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. 1936-ம் வருஷம் முதல் ஏறத்தாழ 25 வருஷ காலமாக தொடர்ந்து, படர்ந்து நடைபெறக்கூடியது. நஞ்சைக்கு மத்தியில் இருக்கக் கூடிய புஞ்சை நிலம், அதை அடுத்து இருக்கக்கூடிய புஞ்சை நிலம் ஆகியவைகளில் கசிவு கழிவுத் தண்ணீரின் செயலால் இத்தகைய பயிரீட்டை வாடர் ரேட்டுக்கு உட்பட்ட நஞ்சைப் பயிராக மாற்றி விடுவது தவிர்க்க முடியாததாக இருந்துகொண்டிருக்கிறது.

*தாம்பரபரணி பகுதியில் அம்மாதிரி 20,000 ஏக்கர் நிலங்கள் பல வருஷங்களாக நஞ்சைப் பயிராக இருந்துகொண்டிருக்கின்றன. மணிமுத்தாறு அணை கட்டுவதற்கு நினைத்த காலத்திலேயே இத்தகைய 20,000 ஏக்கர் நிலம் இம்மாதிரி தாம்பரபரணிப் பகுதியில் உபயோகப்படுத்தப்படுகிறது என்று கணக்கிட்டிருப்பதாகக் கருதுகிறேன். அந்த நாட்களிலேயே தாம்பரபரணி பகுதியில் இருக்கக்கூடிய 83,000 ஏகர் நஞ்சையுடன், இதுபோன்று 20,000 ஏகர் தவிர்க்க முடியாத நஞ்சை வாடர் ரேட் நிலங்கள் 'ஸ்டெபிலைஸ்' செய்யப்படும் என்று வாக்களிக்கப்பட்டது.*

**DEPUTY SPEAKER** : *தயவு செய்து கனம் அங்கத்தினர் சுருக்கமாகப் பேசவேண்டும். 'லாங் ஸ்டேட்மெண்டு' கொடுப்பதில் பிரயோசனமில்லை. மந்திரி அவர்கள் ஸ்டேட்மெண்டு கொடுக்க வேண்டும்.*

**SRI M. S. SELVARAJAN** : *20,000 ஏக்கர் 'லோகலைஸேஷன்' செய்யப்படும் என்ற நம்பிக்கையோடு விவசாயிகள் இருக்கிறார்கள். அது முற்றிலும் நியாயமானது. புதியதாக மணிமுத்தாறு பகுதியின் கீழ் இருக்கக்கூடிய பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டபொழுது, ஏற்கனவே தவிர்க்கமுடியாமல் நஞ்சையாக மாறிய நிலங்களுக்கும் நிவர்த்தி காணுவது முற்றிலும் நியாயமே. அதற்கு முன்பாத்தியதை வழங்கவேண்டும் என்று அரசாங்கம் ஒத்துக் கொள்ளும் என்று நினைக்கிறேன். இந்த நிலைமையில் மணிமுத்தாறு தேக்கத்தின் பலன் இப்பொழுது கிடைத்திருக்கிறது. ஆகவே, இந்த வாடர் ரேட்டுக்கு உட்பட்ட நிலங்களை துரிதமாக 'லோகலைஸேஷன்' செய்து 'ஸ்டெபிலைஸ்' செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டியது அவசியம். சென்ற வருஷம் கார் பிசானக் காலத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய மழையினால் தாம்பரபரணி, மணிமுத்தாறு பகுதிகளில் நீர்நிலைகளின் திருப்திகாமான அளவு, சென்ற வருஷத்தை ரெகார்டு வருஷமாக்கியிருக்கிறது. அத்தகைய நிலைமையில் கலெக்டர் அவர்களுடைய தாக்கீது நீடிப்பது அவசியமில்லை. ஆகவே, அதை எந்த அளவுக்கு ரத்து செய்யக்கூடுமோ அந்த அளவுக்கு ரத்து செய்வதோ அல்லது தகுந்தபடி மாற்றி அமைப்பதோ அரசாங்கத்தின் கடமை என்று கருதுகிறேன். ஆகவே, அரசாங்கத்தின் கவனத்தை இதிலே இழுப்பதற்கு இத்தகைய அவசர முக்கியத்துவம் உள்ள ஒரு பிரேரணையை கொண்டு வந்திருக்கிறேன்.*

* **THE HON. SRI M. A. MANICKAVELU** : Sir, the subject raised by the hon. Member Sri Selvarajan relates to the revision of the forewarning notification issued on 8th September 1959 by the Collector of Tirunelveli stating that enhanced water-cess will be levied for the irregular irrigation of any crop in dry and poramboke





lands in Pishanam season of fasli 1369 under the Tambaraparani System by using the water of any Government source of irrigation either directly or indirectly.

The Tambaraparani System irrigates 83,000 acres of wet lands. The Manimuthar Project is intended to stabilise this irrigation and to provide irrigation to an additional extent of 20,000 acres under tanks. Under the Manimuthar Water-Cess Rules, irrigation of all lands other than those included in the ayacut is to be treated as irregular. Penalties are generally levied for irregular irrigation of crops. Irregular irrigation arises in the following cases :—

(1) Cultivation of dry, waste or poramboke lands with water from Tambaraparani and Manimuthar Systems ;

(2) Cultivation of a second wet crop in single crop wet lands without permit under Tambaraparani System; and

(3) Cultivation of double crop wet lands by unauthorised interference with the Government source of irrigation.

Even before the introduction of Manimuthar Project, the extent of irregular irrigation under the Tambaraparani System had been increasing over the years. Encouraged by the concessions under Grow More Food Programme, the extent under unauthorised irrigation was steadily increasing. This resulted in a strain on the Electricity Grid System. The Government after detailed examination of the availability of water in 1955, ordered that irregular cultivation should not be allowed, and that the rules regarding the levy of penalty should be strictly enforced. This strict enforcement of the rules regarding penalty was objected to by the ryots. On their representation, the Government ordered that as the ryots were not informed of the prohibition of irregular cultivation sufficiently in advance of the agricultural operations, the penalties might be reduced to five rates for faslis 1365, 1366 and 1367. It was ordered that the Collector of Tirunelveli should publish warning notice every year in the district gazette and by beat of tom-tom in the concerned villages prohibiting irregular cultivation sufficiently early and that penalties should be levied only afterwards. The forewarning notice referred to by the Member was issued in pursuance of this Government Order.

The position of the current Pishanam season of fasli 1369 was reviewed by the Collector of Tirunelveli on 29th August 1959. The water level in Papanasam Reservoir was forecast at 113 feet on 1st October 1959, the beginning of the Pishanam cultivation season in the district. A notification was issued by the Collector on 8th September 1959 prohibiting the water rate cultivation.

[Sri M. A. Manickavelu] [14th March 1960

Because of the good supply position, water was allowed by the Government in all the four reaches of the **Manimuthar canal and** to the 39 tanks in the reserved list. This, however, was only for the lands included in the ayacut. The Collector would review the situation after the special release from Papanasam Reservoir is obtained. Therefore, no revision by Government of the notification issued by the Collector arises now.

## III.—GOVERNMENT BILL.

### THE MADRAS BUILDINGS (LEASE AND RENT CONTROL) AMENDMENT BILL, 1960.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I beg leave to introduce the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, [a] 1960.

DEPUTY SPEAKER : The question is—

"That leave be granted to introduce the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1960."

The motion was put and carried.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I introduce the Bill.

DEPUTY SPEAKER : The Bill is introduced.

## IV.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1960-61—*cont.*

* SRI K. VINAYAKAM : மிஸ்டர் டெப்யூடி ஸ்பீக்கர், ஸார், இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தை கனம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருப்பதை நன்கு ஆராய்ந்து பார்த்து அதை மனப்பூர்வமாக நான் ஆதரிக்கிறேன். நடப்பு ஆண்டிலே நம் மாகாணத்தில் என்னென்ன அபிவிருத்திக் காரியங்கள் செய்திருக்கிறார்களோ அவைகளையெல்லாம் கூர்ந்து கவனிக்கும்பொழுது, மாகாணம் முழுவதிலும் நல்ல அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. ஆயினும் எங்களைப்போல் உள்ள சென்னை வாசிகள், சென்னை நகரத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் சென்னை வளர்ந்திருக்கிறதா என்று தான் சிந்திக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. பொதுப் பிரச்னையை ஒட்டிப் பார்க்கும்பொழுது கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள், 'விலை வாசி ஏறிக்கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் மக்கள் தொல்லைப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். அந்த விலைவாசியை சமாளிக்க முடியாமல், உத்தியோகஸ்தர்கள் அவர்களுக்கு போதிய ஊதியம் இல்லை என்று கிளர்ச்சி செய்கிறார்கள். அவர்களுடைய பிரச்னையை சிந்திப்பதற்கு 'பே கமிஷன்' நியமித்து ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்' என்று சொல்லுகிறார்.

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 14th March 1960.



14th March 1960] [Sri K. Vinayakam]

இதற்குத் தகுந்த பரிகாரம் என்ன என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும். இதை ஆங்கிலத்தில் 'விஷஸ் ஸர்கிள்' என்று சொல்லுவார்கள். இவைகளையெல்லாம் பற்றி விவரிக்கப்பட்டாலும்கூட, அவைகளுக்கு பரிகாரம் என்ன என்பதை பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள். இதற்கு ஓரளவு அரசாங்கமே பொருளாதார நிபுணர்களைக் கலந்து, Economic Adviser களைக் கேட்டு, அவர்கள் ஏதாவது வழி சொல்கிறார்களா என்று பார்த்து, ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது, மத்திய தர வகுப்பைச் சேர்ந்த மக்களுக்குத்தான் தொல்லை அதிகமாக இருக்கிறது. அதைத் தீர்ப்பது நம் கடமை. நமது சர்க்கார் செய்ய வேண்டிய கடமை. தலைவர் அவர்களே, இந்த அறிக்கை முழுவதையும் படித்துப் பார்த்தால் எங்கெங்கே பெரிய பெரிய நீர்பாசன திட்டங்கள் செய்ய வேண்டுமோ, அங்கெல்லாம் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள்; விவசாயத்திற்கு வேண்டிய பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள்; தொழில் அபிவிருத்தியைச் செய்திருக்கிறார்கள். இம்மாதிரி மாகாணம் பூராவிலும் அபிவிருத்திகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், சென்னை நகரைப் பொருத்த வரையில் பார்த்தால், ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைமை போலவே, இப்பொழுதும் இருக்கிறது. குறை சொல்வதற்காகவோ, குற்றம் கண்டு பிடித்ததற்காகவோ இவைகளை எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் சொல்லவில்லை. சென்னையில் பெரிய சாலைகளாகிய மவுண்டு ரோடு, பூந்தமல்லி ஹைரோடு, முதலிய சாலைகளில் கனம் மந்திரிகள் மோட்டார் கார்களில் போய் இருப்பார்கள்; அந்த ரோடுகள் எந்த நிலையில் இருக்கின்றன என்று பார்த்திருப்பார்களோ என்னவோ, அந்த ரோடுகளின் நிர்வாகத்தைக் கவனித்திருக்க முடியாது. From the point of view of the voter or that of the member representing the voter அவர்களுக்கு இந்த எண்ணம்தான் தோன்றும்; நிர்வாகஸ்தர்கள், இந்த சாலைகளை சென்னை நகரத்தில் சரியாக கண்காணிக்கிறார்களா, கவனித்துப் பார்க்கிறார்களா என்று தான் கொடுக்கும் பணத்தை நல்ல வழியிலே செலவழிக்கிறார்களா என்ற எண்ணங்கள்தான் தோன்றும். அதிகாரிகளைக் கேட்டால், அவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? "நாங்கள் என்ன செய்வோம், கவுன்சில் தடுக்கிறது" என்று. இந்த கவுன்சிலைப் பொருத்தவரையில், நாங்கள் முன்பு ரூ. 30 லட்சம் துண்டாக இருந்ததையும் சமாளித்து ரூ. 35-ம் உபரியாகச் செய்திருக்கிறோம் என்று ஊர் ஊராகப் பிரசாரம். என்ன அபிவிருத்திகளைச் செய்திருக்கிறார்கள்? இதைத்தான் செய்கிறார்கள். ஆனால், சென்னை மக்களைப் பொருத்த வரையில், நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டியிருக்கிறது. இதற்கு ஓரிரு உபமானங்களை நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது.

நாம் வசிக்கும் பகுதியாகிய கோடம்பாக்கம் வட்டத்தில், இரண்டு வீதிகளுக்கு சீர்திருத்தும் திட்டம் எஸ்டிமேட்டு அப்ரூவ் செய்துவிட்டு, வந்து பார்த்துவிட்டு அது அவர் பகுதி, அவர்

[Sri K. Vinayakam] [14th March 1960]

செல்வாக்கு பெருகும், ஆதலால் நிறுத்திவிடுங்கள் என்று, மக்கள் பிரதிநிதியைக் குறைகூறி, இந்த திட்டத்தில் மண்ணைப் போட்டு விட்டார்கள்.

SRI M. P. SUBRAMANIAM : On a point of order, Sir.

SRI K. VINAYAKAM : It must be a relevant one.

SRI M. P. SUBRAMANIAM : How can he say it must be relevant?

DEPUTY SPEAKER : It is for the Chair to decide and not for the hon. Member.

SRI M. P. SUBRAMANIAM : I would like to know whether we are discussing the Budget or something beyond that.

DEPUTY SPEAKER : The hon. Member is speaking only on the State Budget.

SRI M. P. SUBRAMANIAM : He is talking about the Corporation and maintenance of roads by that body.

DEPUTY SPEAKER : We are giving grants to the Corporation. So, he is competent to speak on it.

SRI K. VINAYAKAM : சபைத் தலைவர் அவர்களே, நாம் ஸ்டேட் பட்ஜட்டில், கார்ப்பொரேஷனுக்கு இவ்வளவு கடனைக் கொடுக்கிறோம் என்று ஒதுக்கியிருக்கிறோம். ஆகவே, அந்தப் பணத்தையெல்லாம், அவர்கள் எப்படிச் செலவு செய்கிறார்கள் என்று கண்காணிப்பது சர்க்கார் செய்யவேண்டியது என்று வேண்டிக்கொள்ளுகிறேன். மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டும் என்று ஒரு கவுன்சிலை வைத்துக்கொண்டு, அரசாங்கம் என்ன செய்கிறது ?

DEPUTY SPEAKER : The hon. Member need not go into details when talking about the Corporation.

SRI K. VINAYAKAM : சென்னையிலிருந்து வரும் அங்கத்தினர் என்ற ஞாபகம்தான் என்னைப் பொருத்த வரையில் வரும். கன்யாகுமரியில் ஆலை வைத்திருக்கிறோம், மணிமுத்தார் திட்டம் போட்டிருக்கிறோம் என்றால், அவைகளால் வரக்கூடிய பொது இலாபம் இருக்கலாம். ஆனால், எங்களைப் பொருத்த வரையில், சென்னை நகருக்கு என்ன நன்மை செய்திருக்கிறார்கள், இந்த கவுன்சில் என்ன செய்திருக்கிறது என்ற கண்ணோட்டத்தோடுதான் நாங்கள் பார்க்கிறோம். இப்பொழுது கார்ப்பொரேஷன் நிர்வாகத்தில் செயல் படும் திட்டங்கள் மக்களுக்குப் பயன் அளிப்பதாக இல்லை. உதாரணமாக, கோடம்பாக்கத்தில் ஓவர் பிரிட்ஜ் போடுவது பற்றி எந்த ஏற்பாடுகளோ, செயல்களோ சிந்திக்கப் படவில்லை என்று வருத்தத்துடன் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.. மந்திரியவர்கள் மாலை 6 மணிக்கு கோடம்பாக்கத்தில் ஒரு கூட்டத்திற்குப்



14th March 1960] [Sri K. Vinayakam]

போக வேண்டும், அப்பொழுது காரில் போனாலும், கேட் பக்கத்தில் நிற்க வேண்டும் என்று விரும்புகிறேன். (சிரிப்பு.) காரிலேயே குறைந்தது ஒரு மணி நேரம் காத்துக்கொண்டிருக்கவேண்டும். அமைச்சர்களுக்கே அந்த நிலை யென்றால், பொதுமக்கள் நிலை என்னவென்று சிந்திக்க வேண்டும். அதற்காகவே உபமானங்களைத் தந்தேன். இவ்வளவு அதிகமாகத் தொகைகளை வைத்துக் கொண்டு, எவைகளை செவ்வனே செய்யவேண்டும் என்பதை பரிசீலனை செய்து, பரிகாரங்களைத்தேட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அந்த முறையில், கார்ப்பொரேஷன் நிர்வாகத்தை சீர்திருத்த ஏற்பாடு செய்யக்கூடாதா என்று அரசாங்கத்திற்கு ஞாபகம் மூட்டுகிறேன்.

குடியிருப்பில் வசதி குறைவு இருக்கிறது. அதை ஸி.ஐ.டி. ஓரளவு தீர்த்து வருகிறார்கள், உதவி செய்கிறார்கள். உதவி கோரும் மனுக்களை சீக்கிரமாகவே முடிவுசெய்து அவர்களை அதிக வீடுகளைக் கட்ட செயல் படுத்த வேண்டும். இருந்தும், சேரிகளிலெல்லாம், திடும், திடும் என்று குடிசைகள் கிளம்புகின்றன. "ஆசைத்தம்பி நகர்" என்று கூட ஒரு இடத்திற்கு பெயர் வைத்திருக்கிறார்கள். அவர்கள் தலைமையிலேயே அதுவும் செய்யப்பட்டது. எங்கள் ஆதரவில் போட்ட குடிசைகளானால், கூடவேயிருந்து, லாரிகளில் பிரித்து எடுத்துப் போகவேண்டும். அவர்களோ, அதுவும் செய்யமாட்டார்கள்; கூடவே இருந்து, அங்கே கொடிவேறு போட்டுக்கொண்டு உட்கார்ந்து விடுகிறார்கள். (சிரிப்பு.)

தலைவர் அவர்களே, ஏப்ரல் ஒன்றாம் தேதி, 350 கிராமங்கள் நமது ராஜ்யத்தோடு சேருவதாக இருக்கின்றன. அவைகளுக்கு வசதி செய்ய பட்ஜெட்டில் பணம் ஒன்றும் ஒதுக்கி வைக்கவில்லை. அதை நான் குறைகூறவில்லை. That is against the tenets of Budget making. அந்த கிராமங்களைச் சேர்ந்தவர்கள் 10 ஆண்டுகளாக எந்தவிதமான அபிவிருத்தியும் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கு ரோடுகள் இல்லை, தண்ணீர் இல்லை, குடிதண்ணீர் இல்லை. விவசாய அபிவிருத்தி இல்லை. சமீபத்தில், கனம் மாணிக்க வேலு நாயகரும், கனம் வெங்கட்ராமனும் திருத்தணிக்கு வந்ததால் நிலைமை அவர்களுக்குத் தெரியும். அவர்கள் அவற்றை நிதி அமைச்சரவர்களிடம் சொல்லி, வருகிற ஆண்டில், கண்டின்ஜென்ஸி பண்டில் இருக்கும் 1½ கோடியிலிருந்து அந்தப் பகுதி அபிவிருத்திக்காக ஈடு காட்டலாம். பின்னால், ஸப்ளிமெண்டரி பட்ஜெட்டில் வசதி செய்து கொள்ளலாம் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

ஏழை மாணவர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளத்தைப்பற்றி இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக பின் தங்கிய மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைபற்றி, கொடுத்திருக்கும் வரையில் நன்றி செலுத்துகிறேன். அரசாங்கம் சலுகைகள் கொடுக்கிறார்கள் என்பதனால், பல மாணவர்கள் படிக்க

வருகிறார்கள். பின்தங்கியவர்களுக்கு, ஹரிஜன மாணவர்களுக்குக் கொடுப்பதுபோல் நிறையச் சலுகைகள் கொடுக்கப்படுவதில்லை. ஒரு 10 பிள்ளைகள் மனுப்போட்டால், ஒரு பிள்ளைக்கு கொடுக்கப்படுகிறது. மாணவர்கள் எத்தனை என்று பார்த்து, பர்சன்டேஜாக, ஒரு 10 பர்சென்டு என்ற முறையில் கொடுக்கப்படுகிறது. ஆண்டு முடிவடையப்போகிறது. அவர்களெல்லாம் எங்களிடம் வந்து சலுகை வாங்கித்தாருங்கள் என்று கேட்கிறார்கள். இப்பொழுது ஒதுக்கி வைத்திருக்கும் தொகை போதாது; சலுகை கொடுக்கத் தகுதியுள்ளவர்களைக் கணக்கில் கொண்டு, அவர்களுக்கென்று, சப்ளிமெண்டரி கிராண்டு தரவேண்டும், அதற்கு ஆவன செய்ய சர்க்கார் முன்வரவேண்டும் என்றும், அது விஷயமாக அவர்கள் சிந்திக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தக் கல்வித் துறையைப் பொறுத்தவரையில் மாகாண முழுவதும் பள்ளிச் சீரமைப்புத் திட்டம் சிறந்த முறையில் நடப்பதாகப் பத்திரிகை வாயிலாகப் படித்தேன். அதுபற்றி எல்லோருக்கும் தெரியும். ஆனால் சென்னை நகரைப் பொறுத்த வரையில் தனிப்பட்டவர்கள் நடத்துகிற பள்ளிகள் இருக்கின்றன. அவர்களிடம் இந்த திட்டம் இல்லை. இந்தக் குறைபாட்டையும் தீர்ப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும். கல்வி அதிகாரிகளுக்குத் தாக்கீது அனுப்பிச் சென்னையிலும் அத்திட்டத்தைக் கொண்டுவந்து இங்குள்ள ப்ரைவேட் பள்ளிகளை ஒன்றாக இணைத்து செயல்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கல்லூரிகளில் தமிழிலேயே போதனைகள் நடக்கவேண்டும் என்பதற்காக தமிழில் மிகுந்த ஊக்கம் கொண்டிருக்கிற அரசாங்கத்திற்கும், அமைச்சர் அவர்களுக்கும் தாழ்மையாக ஒரு எச்சரிக்கை விடுக்க விரும்புகிறேன். உடனடியாகத் தமிழ் வந்துவிட வேண்டும். தமிழே ஆட்சிமொழியாக வேண்டும் என்று நாம் மிக வேகமாக எடுக்கிற நடவடிக்கைகள் எல்லாம் நம்முடைய தரத்தைக் குறைத்துவிடுமோ—(வால்யு ஆப் தி யூனிவர்சிடி எஜுகேஷன்) என்கிற பயம் உண்டாகிறது. பல ஆண்டு காலமாக ஆங்கிலத்தில் பழகி, அதில் இருக்கக்கூடிய செல்வத்தை எல்லாம் அநுபவித்துக்கொண்டிருக்கக்கூடிய நமக்கு அது போய்விடக்கூடாது. தமிழில் ஆர்வம் கொண்டு, தமிழிலேயே படித்து கல்லூரிகளில் பட்டம் பெறுவது என்றால் சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில்தான் உத்தியோகம் கிடைக்குமே தவிர, இந்த மாகாணத்தைவிட்டு அப்பால் போகக்கூட—படித்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு செல்லக்கூட—முடியாத நிலைமை உண்டாகக்கூடிய அபாயத்தைத் தவிர்க்க வேண்டும். ஆகவே, இவ்விஷயத்தில்—கோ ஸ்லோ பாலிஸி—என்று சொல்வார்களே அந்த முறையில் நடவடிக்கைகளை எடுத்துக்



கல்வித் தரம் குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **SRI M. ALAGIRISAMY**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதி மந்திரி அவர்கள் சபை முன் வைத்து இருக்கும் 1960-61-ம் வருஷத்திய நிதி நிலை அறிக்கையை வரவேற்று அதன்மீது நான் கொண்டிருக்கும் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். பொதுவாக வரிச் சலுகை அளிக்கப்பட்டிருக்கும் இந்த வரவு செலவுத் திட்ட உரையை நம் ராஜ்யத்திலே உள்ள—குறிப்பாக காய்கறி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் வரவேற்பார்கள். ஆனாலும்கூட இம்மாதிரி வரிச் சலுகை அளிக்கப்படாமல் இருந்தால் அதை உபயோகப்படுத்திக்கொண்டு கிளர்ச்சியில் ஈடுபடலாம் என்று நினைத்திருந்தவர்கள் இந்த வரிச் சலுகை கண்டு ஏமாந்து இருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். பொதுவாக இந்த வருட நிதி நிலை அறிக்கையில் ஒரு குறிப்பிட்ட மாறுதலைக் காண்கின்றேன். நாம் போடக்கூடிய ஐந்தாண்டுத் திட்டத்திற்கும், ஒவ்வொரு வருடமும் நாம் போடுகின்ற, நாம் தீர்மானித்து அளிக்கின்ற நிதி நிலை அறிக்கைக்கும் இருக்கக்கூடிய சம்பந்தத்தை இவ்வாண்டு தெளிவுபடுத்தி அறிக்கையை விரிவாகச் சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த அறிக்கையைப் பார்க்கும்போது கடந்த ஆண்டுகளிலேயும், இப்போதும் நம்முடைய நாட்டிலே நடந்து வரக்கூடிய திட்ட வேலைகளைப்பற்றி, நம் நாடு எவ்வாறு இந்தத் திட்டங்களின் மூலமாக முன்னேறி இருக்கிறதென்பதைப்பற்றி படம் பிடித்துக் காட்டக்கூடிய முறையில் இந்த அறிக்கை அமைந்திருக்கிறது.

அந்த அறிக்கையின்மீது நடந்துகொண்டிருக்கிற விவாதத்திலே ஈடுபட்ட கனம் அங்கத்தினர்கள் பலர் விலைவாசி ஏற்றத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். திட்டத்தின் அடிப்படையில் பரவலாக பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து பல திட்டங்களை நிறைவேற்றி வருவதன் மூலமாக நம்முடைய பொருளாதார அமைப்பிலே பண வீக்கம் ஏற்பட்டு வருவது சர்வ சாதாரணமான அம்சம். இந்தப் பண வீக்கத்தின் காரணமாக விலைவாசிகளின் ஏற்றமும் தவிர்க்க முடியாததாக இருக்கிறது. ஆகவே, விலையேற்றத்தை முழுவதும் கட்டுப்படுத்த முடியாது என்பது என்னுடைய அபிப்பிராயம். இருப்பினும் இருக்கக்கூடிய நிலைமை மனதில் வைத்து உற்பத்தியாகக்கூடிய உணவுப் பொருள்களை சரியான முறையில் விநியோகிக்கத்தக்க முறையைக் கையாள வேண்டும். இப்போது இருக்கக்கூடிய விநியோக முறை அமைப்பு ஏற்றதாக இல்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே, உற்பத்தியாகக்கூடிய உணவுப் பொருள்களை கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலமாக விநியோகம் செய்ய வழிவகை காண்பதுதான் சரியான முறையாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயம்.

[Sri M. Alagirisamy] [14th March 1960

உணவு உற்பத்தி அதிகமாக ஏற்படவேண்டுமானால் இன்று நாட்டில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கக்கூடிய மக்களுக்கு உரம் காலாகாலத்தில் கிடைக்கச் செய்யவேண்டும். இப்போது அப்படிக் கிடைப்பது இல்லை. ஆகவே, வரக்கூடிய வருடத்திற்கு நம் மக்களுக்குத் தேவைப்படக்கூடிய உரம் எவ்வளவு என்பதை முதலிலே கணக்கிட்டு, இவ்வருட இறுதிக்குள்ளாகவே விநியோகிப்பதற்கு முன்னேற்பாடாகப் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது எனது அபிப்பிராயம்.

நம்முடைய ராஜ்யத்தில் குறிப்பாக பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அனைத்தையும் எடுத்து முடித்திருக்கிறோம். இது பெருமைப்படக்கூடிய அம்சமாகும். எனினும், இனி எடுத்து நடத்துவதற்கு நம் ராஜ்யத்தில் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எதுவும் இல்லை. இனி சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களிலேயே நாம் அதிக கவனம் எடுத்துக்கொள்ள வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். குறிப்பாக என்னுடைய மதுரை ஜில்லாவைச் சேர்ந்த தொகுதியில் மஞ்சள் ஆறு நீர்த்தேக்க திட்டத்தைப்பற்றி இந்தச் சபையில் அடிக்கடி கூறி வந்திருக்கிறார்கள். இந்த மஞ்சள் ஆறு நீர்த்தேக்க திட்டத்தை எடுத்து நிறைவேற்றுவதன் மூலமாக அந்தப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு அதிக நன்மை ஏற்படும் என்பதுமட்டும் அல்ல. நீர்த்தேக்கத்தில் அதிகமாக நீர் இருக்கக்கூடிய சந்தர்ப்பங்களில் எல்லாம் ராமநாதபுரம் போன்ற வரண்ட பிரதேசத்தில் உள்ளவர்களுக்கும் உதவி செய்யமுடியும். இதற்கு ஆகும் செலவுத் தொகை ஏதோ ஒரு சில லட்சம் ரூபாய் அதிகமாக இருப்பினும்கூட இந்தத் திட்டத்தை எடுத்து நடத்துவதன் மூலமாக மதுரை ஜில்லாவில் உள்ளவர்களுக்கும், வறண்ட பகுதியாக இருக்கும் ராமநாதபுரம் ஜில்லாவில் உள்ளவர்களுக்கும் அதிக நன்மை ஏற்படும். அந்தப் பிராந்தியங்களில் உள்ள மக்கள் இத்திட்டம் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்க்கப்படும் என்று எண்ணினார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது சேர்க்கப்படும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் சேர்க்கப்படவில்லை. இனி வர இருக்கின்ற மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது சேர்ப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நமது மாநில அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் பெரியகுளம் நகரைச் சுற்றி பல கண்மாய்கள் இருக்கின்றன. மலை அடிவாரத்தில் கண்மாய்கள் அமைந்திருக்கின்ற காரணத்தினால் அவை பல காலமாகக் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே, அடிக்கடி அந்தக் கண்மாய்களில் நிரம்புகின்ற மணலை அகற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். இன்றையதினம் அங்கே பல கண்மாய்கள் இருந்தும் ஒரு போகம் கூட சாகுபடி செய்யக்கூடிய தண்ணீர் அவற்றில் தேங்குவது



14th March 1960] [Sri M. Alagirisamy]

இல்லை. ஆகவே, அந்தக் கண்மாய்களை டீசில்ட் செய்தால் நிச்சயமாக இரண்டு போகம் சாகுபடி செய்யக்கூடிய வாய்ப்பு கிடைக்கும்.

அடுத்தபடியாக, ரோடுகளைப்பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் தாண்டிக்குடிகாட் ரஸ்தா போட்டதன் காரணமாக அங்குள்ளவர்கள் பொருளாதாரத்தில் அதிக முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். அந்த ரஸ்தாவின் இரு பக்கங்களிலும் சரிவு நிலங்கள் இருக்கின்றன. அந்த சரிவு நிலங்களைப் பலர் ஆக்கிரமிப்புச் செய்துகொண்டு விவசாயம் செய்து வருகிறார்கள். அந்த ஆக்கிரமிப்பில் இருந்து அவர்களை வெளியேற்ற வேண்டும் என்று பலதடவை சர்க்காரிடம் கேட்டிருக்கிறோம். சமீபத்தில்கூட மராமத்துத் துறை அமைச்சர் அவர்கள் அந்தச் சரிவு நிலங்களில் விவசாயம் செய்யப்படுகிற காரணமாக எவ்வாறு அந்த ரோடுக்கே அபாயம் ஏற்பட்டு வருகிறது என்பதை நேரே பார்த்தார்கள். ஆகவே, உடனடியாக அந்த நிலங்களில் இருந்து ஆக்கிரமிப்பு செய்திருக்கிறவர்களை வெளியேற்றத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் தாண்டிக்குடிகாட் ரஸ்தாவையே அடித்துச் செல்லக்கூடிய அபாயம் ஏற்பட்டுவிடும் என்று சொல்லிக்கொண்டு என்னுரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI M. MUNI REDDI: Mr. Deputy Speaker, with due apologies to Mr. Vinayakam who devoted more than seven minutes of his speech for an attack on the Corporation, if he, an experienced legislator, had only devoted the same time for giving useful suggestions, it would have been good. 10 a.m.

DEPUTY SPEAKER: The hon. Member need not attack another Member. He may continue his speech.

SRI M. MUNI REDDI: Several hon. Members have expressed their views on the Budget. It is apparent that this is more or less a balanced budget; whether it is surplus or deficit, in the present circumstances, it does not matter much. But what matters is, how the policies of the Government are framed and how the formulated schemes are executed in pursuance of those policies. As we see, about one-third of the speech of the Hon. Minister for Finance has been devoted to the subject of development of agriculture. Rightly the country's future depends upon the development of agriculture. The Government have suggested some methods for improvement of agriculture. So far as soil conservation and land improvement under the Land Improvement Act are concerned, it is commendable that the Government have done very well. The Hon. Minister for Agriculture accompanied the Sub-Committee formed under the Land Improvement Act and we had the opportunity of visiting Ootacamund and other places. We are grateful for the valuable guidance given by the Hon. Minister for Agriculture. We have witnessed the vigorous execution of the schemes.

[Sri M. Muni Reddi] [14th March 1960

These schemes will go a long way in improving our agriculture. But so far as minor irrigation schemes are concerned, we are utterly disappointed. Last year, ten lakhs of rupees was earmarked for the improvement of tanks. At page 10 of the Budget speech, we find that silt has been removed from 29 tanks so far and that 20 new tanks would be taken up for such work during the year 1960–61. We have something like 20,000 tanks in our State and at this rate it will take hundreds of years to improve all of them. It is stated: 'Under this scheme the silt in the deep bed of the tank is removed and used for strengthening the bund and raising the level of the foreshore lands'. I would like to submit that most of the tanks have got silted up. Every year, floods carry silt into the tanks. Unless we prevent this, I do not think any benefit will result from the removal of silt. Government must take steps to prevent silt getting into the tanks. When the Hon. Minister for Agriculture visited Ootacamund and other places with the sub-committee, I repeatedly pointed out to him that the silt getting into tanks through floods should be stopped first. This may cost 100 to 200 rupees per tank. The ten lakhs provided for in the last year should have been spent on such works. We have got 35 lakhs of acres of land under 25,000 tanks. For the past several years, I have been drawing the attention of the Government to the dilapidated condition of these tanks. Unless we take steps to improve the tanks, our food problem will not be solved. There are 'Raja Kalvai' in every tank which run for miles and there is much percolation going on in these. If the sluice is opened, the entire water does not reach the tail-end. Percolation takes away a month's supply of water. If the 'Raja Kalvais' are cemented, perhaps we may get one month's water-supply. So, let us stop the silt getting into tanks and cement the 'Raja Kalvais' to prevent percolation. Then we can take up what is called removal of silt.

So far as co-operative farming is concerned, it is a failure. Why is it a failure? Perhaps some Members are building castles in the air about co-operative farming. We had a canteen run for the legislators one year ago in the Hostel itself. What happened to that? The Government in 1954 or so, organized some co-operatives and huge sums of money were spent. Reports were placed on the table of this House and what did they show? They were a failure and the Government could not recover even the expenses. When the very legislators are unable to understand themselves, share food equally among themselves, perhaps it is too much for the legislators to expect people to take to co-operative farming. Co-operative farming is a failure because the society in which we are living is on a hierarchical plane. We have got individualistic gains to look for so much so that we will not be able to nourish any idea of co-operative farming.

With regard to animal husbandry, I would like to submit that the Key Village Centres have played a very important part in developing our agricultural economy. The credit for this goes to the Director of Animal Husbandry. He addressed a meeting at



14th March 1960] [Sri M. Muni Reddi]

the Cattle Show held just a few days ago. He gove on that occasion a very good account of the activities of the department in developing the cattle wealth of the country. We have now got three or four Key Village Centres which are doing good work. Cattle wealth goes much to improve agriculture. I have given several valuable suggestions about the improvement of cattle wealth not only to our Government but to other Governments as well. For we have a Cattle Farm in Hosur. We have a number of research stations in our State for research and for the preservation of breeds. In the Hosur Cattle Farm, 1,200 or more cows and she-calves are maintained for the purpose of research.

DEPUTY SPEAKER: The hon. Member has got one minute more.

SRI M. MUNI REDDI: What I submit is this. So many animals need not be maintained for research and experiments at the Farm. Retaining a small number of animals for the purpose of research and preservation of breed, the remaining animals can be distributed among the villages at book value. A cow will give at least 10 measures of milk per day. If it could be sold for five rupees, it will bring in 150 rupees per month to the villager. The Government can callect from this 20 rupees towards repayment of loan every month, 30 rupees for providing special fodder to the cattle and five rupees for inspection and other purposes. Even then it will leave a margin of eighty to ninety rupees for the villager. So, thus, there will be not only an all-round development of agriculture but milk production also will increase. The purchasing power of the agriculturist will increase. I have made these suggestions to the Director of Animal Husbandry also. I consider this an important suggestion and I hope the Government will consider this.

With these few words, I thank the Deputy Speaker for giving me this opportunity to speak.

* SRI W. P. A. R. CHANDRASEKHARAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது கனம் நிதியமைச்சர் அவர்கள் சமர்பித்திருக்கும் வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த ஆண்டு புது வரிகள் போடாமலும், அழுகும் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களித்தும் சமர்பித்திருக்கிறதை நான் வரவேற்கிறேன். இந்த வருடம் புது வரி போடாமல் விட்டதை வரியே போடக் கூடாது என்ற கொள்கைக்காக அல்ல. ஆனால் புது வரி போட்டு மக்களிடையே அது நிலைத்தபின் இடைக் காலம் குறைந்தது மூன்று வருடம் விடப்பட்டு அடுத்த புது வரிகள் போடப்படாமல் வரி வசூலிக்கும் விதத்திலும், வரி செலுத்தும் விதத்திலும் நல்ல நிலைமை ஏற்படும் என்ற கொள்கைக்கு இது உகந்ததாக இருக்கின்றது என்பதை கருத்திற்கொண்டு இந்த வரி போடாத திட்டத்தை ஆதரிக்

கிறேன். அதோடு அழுகும் பொருள்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருப்பதுபோல் பாலுக்கும் வரிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்த சந்தர்ப்பத்தில் விலைவாசி உயர்வு, அதாவது பணவீக்கம் என்று நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள், எனக்கு முன்னால் பேசிய நண்பர்களும் குறிப்பிட்டார்கள், அதுபற்றி நான் கூற விரும்புவது என்னவென்றால், அபிவிருத்தி அடையும் எந்த நேரத்திலும் விலைவாசி உயர்வு தவிர்க்க முடியாத ஒரு விஷயமாகும். ஆனால் அதை எப்படி சமாளிக்கலாம் என்றால், விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு விலைவாசி உயர்வால் ஏற்படும் நன்மைகள் அவர்களுக்கு கிடைப்பதற்கு ஏது இருக்கிறது. ஆனால் விவசாயத் தொழிலாளர்களுக்கு அதை அனுசரித்து கூலி நிர்ணயம் செய்து கொடுப்பதன் மூலமாகவும், மாதாந்திர சம்பளம் வாங்கும் மத்திய தர வகுப்பாருக்கும் சம்பளக் கமிஷன் அறிக்கை வந்தவுடன் அதன் மூலம் நிவாரணம் அளிப்பதின் மூலமாகவும், விவசாயிகளுக்கு பாதகம் விளைவிக்காத நிலையில் விவசாயப் பொருள்களின் விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முக்கியமான விவசாயப் பொருளான நெல்லுக்கு (Paddy Board) பாடி போர்ட் என்று ராஜ்ய அளவில் ஒரு போர்ட் நிர்ணயித்து அதன்மூலம் உற்பத்தி செய்வோர், தொழிலாளர், உபயோகிப்பவர் அந்தமாதிரி பிரதிநிதித்துவம் கொடுத்து அதை அமுல் நடத்தினால் அப்போதைக்கப்போது எல்லா விஷயங்களையும் பரிசீலனை செய்து அவர்கள் அரசாங்கத்திற்கு சரியான யோசனைகள் கூறமுடியும். அப்படி ஒரு பாடி போர்ட் அமைக்காவிட்டாலும்கூட ஜில்லா அளவில் அபிவிருத்தி கௌன்ஸில் ஏற்படும் நேரத்தில் சப் கமிட்டீஸ், உணவு, உடை சம்பந்தமான மூலப் பொருள்களின், உற்பத்தி விலை, அதன் விநியோகம் சம்பந்தமாக ஜில்லா அளவில் யோசனைகள் கூறுவதற்கு அபிவிருத்தி கௌன்ஸில்களில் சப்-கமிட்டீஸ் நிறுவினால் உபயோககரமாகயிருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், வரி போடாமல் இருக்கும் விஷயத்தில், மத்திய சர்க்கார் போட்டிருக்கும் எக்ஸைஸ் வரி மட்டரக வாய்புகையிலைக்கு ஒரு ரூபாய் கிரயம் உள்ள புகையிலைக்கு ரூபாய் 9, அணா 6 எக்ஸைஸ் வரியிருக்கிறது. இந்தமாதிரி அதிகமாக இருக்கும் வரிகளைப்பற்றி மத்திய அரசாங்கத்தினிடம் எடுத்துச் சொல்லி தரவாரியாக அதன் வீக்க தாக்கம்கூடக் குறைவாக அமைந்திருக்கும்படிச் செய்ய அவர்களிடம் சொல்ல வேண்டுமென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, இந்த விலைவாசி மூலம் பாதிக்கப்படும் விவசாயப் பொருள்கள் விஷயமாக யுத்த காலத்தின் அவசியம் அல்லது அவசரம் என்று ஏற்படுத்திக்கொண்டு, அதாவது ரசாயன உரம், அதன் மூலப் பொருள்களைத் தருவிக்கும் அளவில் மத்திய அரசாங்கம் அதை ஒரு முக்கியமான விஷயமாக எடுத்துக்கொண்டு தேவைப்படும் அளவுக்குள்ள ரசாயன உரங்களின் மூலப் பொருள்களை தருவித்து ராஜ்ய அளவில் விநியோகிக்க வேண்டும். அப்படி விநியோகிக்கும்போது இப்





பொழுது பாசன வசதிக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறதாக கூறப்படும் 2,92,000 ஏக்கரும், முன்னால் இருக்கிற ஏக்கர் அத்தனையையும் சேர்த்து கணக்கிட்டு ரசாயன உரம் விநியோகிக்க மத்திய சர்க்கார் ஆவன செய்ய வேண்டுமென்று நமது சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டிற்கும் ஜில்லா அளவில் பரிசோதனை நிலயங்கள் ஏற்படுத்திக் கொடுப்பதும் மண் பாதுகாப்புத் திட்டத்தை உடனடியாக அமுலுக்கு கொண்டு வருவதும் நல்ல முறையாக இருக்கும். மேலும் தனிப்பட்ட நபர்கள் மண் பரிசோதனை, தண்ணீர் பரிசோதனை விஷயமாக ஸ்தாபனங்கள் நிறுவி அதன் மூலம் ஏற்படும் செலவுக்கு விவசாய வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், அநேகமாக பெரிய நீர்பாசன திட்டங்கள் எல்லாம் பூர்த்தியாகிவிட்டதென்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். கோதாவரி, கிருஷ்ணா நதியிலிருந்து, அதாவது ஆந்திர ராஜ்யம் சம்பந்தமாக நமக்கு கிடைக்க வேண்டியதும், பிற ராஜ்யங்களிலிருந்து கிடைக்க வேண்டிய நமது ராஜ்ய பெரிய நீர்பாசன விஷயம் சம்பந்தமாக தக்கதை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீர்பாசன திட்டங்கள் பூர்த்தியாகும் நிலையில் இருப்பதால், எனக்கு முன் பேசிய நண்பர் அழகிரிசுவாமி அவர்கள் குறிப்பிட்டது போல் மஞ்சள் ஆறு, நிலக்கோட்டை தாலூகாவில் சாத்தியாறு, மாவூத்தாறு முதலியவற்றில் உடனடியாக பாசன வசதிகளை நிறுவிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, புட் ப்ரொடக்ஷன் ஆண்ட் மைனர் இரிகேஷன் என்ற தலைப்பின்கீழ் அனுமதிக்கப்படுகிற தொகையில், போதிய அளவு கான்ட்ராக்டர்கள் வராத நேரத்தில் அந்தந்த திட்டங்கள் ஆங்காங்கு அப்படியப்படியே இருக்கிறபடியால் கான்ட்ராக்டர்கள் வராத நேரத்தில் டிபார்ட்மென்ட் மூலம் மைனர் இரிகேஷன் ஆண்ட் புட்ப்ரொடக்ஷன் தலைப்பின்கீழ் இருக்கும் வேலைகளை செய்து கொடுப்பதற்கு சர்க்கார் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது தவிர ஜீனி பற்றுக்குறையைப் பற்றி நமது வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 40,000 டன் ஜீனி பற்றுக்குறையாய் இருக்கிறது. இன்னும் 60,000 டன் பற்றுக்குறையாகப் போக ஏது இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த நிலையை அனுசரித்து மதுரை தாலூகாவில் கூட்டுறவு முறையில் ஒரு ஜீனி ஆலை நிறுவுவதற்கு சர்க்கார் எல்லாவித உதவிகளையும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசாங்க உணவு அமைச்சர் தென்னகத்தில் அதிகமாக ஜீனி ஆலைகள் அனுமதிக்கப்படுமென்று குறிப்பிட்டிருப்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். ரோடு வசதிகளைப் பொறுத்தமட்டில் அழகிரிசுவாமி அவர்கள் தாண்டிக்குடி ரோட்டைப்பற்றி சொன்னார்கள். நிலக்கோட்டையில் பாலமேடு பிர்க்கா மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. வத்தலகுண்டு வட பகுதியையும் வைகையின் தென் பாகத்தையும் இணைக்க காஸ்வேக்கும், கண்பாலத்திற்கு நடுத்தா பால

மாக இப்பொழுது கட்டி வருகிறார்கள். அப்படி ஒரு பாலம் வைகையாற்றில் அமைத்துக்கொடுக்க வேண்டுமென்றும் ரோடு வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சியைப்பற்றி நான் இங்கு ஒரு விஷயத்தை குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்மொழி வளர்ச்சி செய்ய வேண்டியது அவசியம்தான். ஆனால் பஸ் ஸ்டான்ட் என்பதற்கு இப்போது "பேருந்து நிலையம்" என்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது. அவ்விதமில்லாமல் பஸ் நிற்குமிடம் என்று இருந்தால் போதுமானது என்று நான் கருதுகிறேன். அவ்விதமிருந்தால்தான் பொதுமக்கள் சுலபமாக புரிந்துகொள்ள முடியும். அதேபோன்று ஆங்கிலத்தை கற்பித்துக் கொடுக்கும் விஷயத்தில் ஐந்தாவது வகுப்பிலிருந்து கற்பித்துக் கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் ஆரம்ப பாடசாலைகளில் எல்லாம் செக்கன்டரி கிரேட் ஆசிரியர்களை அதிக அளவில் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU: சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, இங்கு கொண்டுவரப்பட்டிருக்கும் நிதி நிலை அறிக்கையின்மீது எனது கருத்தை சொல்ல விரும்புகிறேன். பொதுவாக இந்த அறிக்கையானது, அரக்கு மாளிகையில் கண்ணாடி கற்களை பொறுத்தி வைத்திருப்பது போன்றுதான் காட்சி அளிக்கிறது. இவற்றின்மீது ஆராய்ச்சி என்னும் அனல் வீசினால் நிச்சயமாக இந்த மாளிகை உருகிகருகிப் போகும் என்பது என் கருத்து. கண்ணாடி கற்கள் என்று நான் குறிப்பிடுவது அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற புள்ளி விவரங்களைத்தான். வழக்கமாக புள்ளி விவரங்களை சற்று கூர்ந்து கவனித்துப் பார்த்தேன். அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற புள்ளி விவரங்களானது, ஒவ்வொரு ஆண்டுக்கும் முன்னேற்றம் என்று குறிப்பிட்டிருக்கின்ற புள்ளி விவரங்களை பார்க்கின்ற நேரத்தில் அவற்றில் கடந்த ஆண்டில் தந்திருக்கின்ற புள்ளி விவரங்களைவிட மிகவும் மாறுதலாக, தவிர கூடுதலாக இருப்பதாக தெரியவில்லை. கடந்த ஆண்டு தந்த நிதி நிலை அறிக்கையில் புன்செய் தான்யங்களை எடுத்துக்கொண்டாலும் சரி, அரிசி போன்ற தானியங்களை எடுத்துக்கொண்டாலும் உற்பத்தி குறைவாகத்தான் இருக்கிறது என்று இந்தப் புள்ளி விவரங்கள் மூலம் தெரியவருகின்றன. கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 1957-58-ல் அரிசி உற்பத்தி 32·34 என்று சம டன் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இந்த ஆண்டு தந்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையில் 32·36 என்று இருக்கிறது. புஞ்சை தான்யங்கள் என்ற இனத்தில் கடந்த ஆண்டு அறிக்கையில் அதாவது 1957-58-ல் 16·86 என்று இருந்தால் இந்த ஆண்டு அதைப்பற்றி குறிப்பிடுகின்ற நேரத்தில் 15·27 என்று இருக்கிறது. அதே போன்றுதான் புஞ்சை தான்யங்கள் இனத்தில் 1958-59-ல் 17·23 இருந்ததால் இந்த ஆண்டு தந்திருக்கின்ற அறிக்கையில் 15·35 என்றிருக்கிறது. அதே போன்றுதான் மொத்தத்தில் 1957-58-ல்



49·20 என்று இருந்தால் இந்த ஆண்டு அறிக்கையில் 47·63 என்றும் அதே போல் 1958-59 ஆண்டு அறிக்கையில் 50·21 என்று இருந்தது, ஆனால் இப்போது தந்திருக்கின்ற இந்த ஆண்டு அறிக்கையில் 48.33 என்று இருக்கிறது. இதே போன்றுதான் பருத்தி, கரும்பு, நிலக்கடலை முதலிய எல்லா இனங்களிலும் காணப்படுகின்றன. கரும்பு இனத்தை எடுத்துக்கொண்டு பார்த்தால், கடந்த அறிக்கையில் 1957-58-ம் ஆண்டில் 3·40 என்று இருந்தால் இந்த ஆண்டு அறிக்கையில் 4·03 என்றும் 1958-59-ல் 3·61 என்று இருந்தால் இந்த ஆண்டு அறிக்கையில் 3·84 என்று இருக்கிறது. இப்படிப்பட்ட புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு நாம் எப்படி இந்த அறிக்கை மீது நமது கருத்தைச் சொல்வது. உண்மையிலேயே இவைகள் எல்லாம் தவறாக இருந்தால் அதை அமைச்சர் அவர்கள் கவனித்து ஒழுங்காக கொடுத்திருப்பார்களானால் நமக்கு சிறிதளவு நம்பிக்கை ஏற்பட்டிருக்கும், நமது முன்னேற்றத்தையும் கணிக்க முடியும். அவைகள் அதிகாரிகள் செய்கின்ற தவறாக இருந்தாலும் அதற்கு அமைச்சர்தான் பொறுப்புடையவர். எழுதியவர் ஏட்டை கெடுத்தாலும், அதை பாடிய அமைச்சர் அவர்கள் ஒழுங்காக அந்தத் தவறுகளை எல்லாம் திருத்தி பாடியிருப்பார்களேயானால் இந்த அறிக்கை தேவைதானா, இது நிறைவேற்றப்பட வேண்டியதுதானா என்று நம்மால் கூறியிருக்க முடியும். இவ்விதமான புள்ளி விவரங்களை கொண்டிருக்கும் அரக்கு மாளிகை ஆராய்ச்சி என்னும் அனல் அருகில் செல்லும்போது, இது எவ்வளவு அழகான முறையில் திட்டவட்டமாக தயாரித்தாலும் சரி, அவைகள் எல்லாம் உருகிப் போகும், அது நிலைபெற்று நிற்க முடியாது என்றுதான் எங்களால் கூற முடியும். அதே போன்று அமைச்சர் அவர்கள் அவர்களுடைய வாசகங்களை கவனித்தால்,

"மேலே கண்டவாறு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்ததன் காரணமாக ஏக்கர் ஒன்றுக்கு விளைச்சல் கணிசமாக உயர்ந்திருக்கிறது. இதைப்பற்றிய சில புள்ளிவிவரங்கள் சென்ற ஆண்டு அறிக்கையில் கொடுக்கப்பட்டன."

என்றும்,

"நடைமுறை ஆண்டு விளைச்சலின் கணக்குப்படி நம் ராஜ்ய சராசரி விளைச்சல் 1,344 ராத்தல் அளவிற்கு உயர்ந்திருப்பதாகத் தெரிகிறது."

என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் இம்மாதிரிப்பட்ட புள்ளிவிவரங்களை தந்துவிட்டு, நாம் முன்னேறிவிட்டோம், முன்னேறிவிட்டோம் என்று சொல்லுகிறார்களே தவிர அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற புள்ளிவிவரங்களை எல்லாம் ஆராய்ந்து பார்த்தால் இதற்காக எவ்வளவோ பணம் ஒதுக்கப்பட்டிருந்தும், எவ்வளவோ திட்டங்களை தீட்டியும், எவ்வளவோ பிரயாசைப்பட்டும் விவசாயத்தில் நல்ல பலனை காணவில்லை என்பது உண்மை. இதற்கு இந்தப் புள்ளிவிவரங்களே சான்றாக இருக்கிறது. ஐந்து ஆண்டுகளுக்கும் நிதியை ஒதுக்கி வைத்துவிட்டு, ஒவ்வொரு ஆண்டுக்கும் தனித்தனியாக அதிகப்படியான

பணத்தை செலவழித்தும்கூட நல்ல முறையில் திட்டங்கள் எல்லாம் பலன் அளித்திருக்கிறது என்று எங்களால் சொல்ல முடியாது. அதே போன்றுதான் பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் எடுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறும் பொழுது, பத்திரிகைகளில், பரம்பிக்குளம் தண்ணீரை சென்னை மாகாணத்திற்கு தரமுடியாது என்று புதிதாக பதவியேற்ற கேரளத்து முதலமைச்சர் திரு. பட்டம் தாணு பிள்ளை அவர்கள் சொல்லியிருப்பதாக செய்தியை காண்கிறோம் . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தச் செய்தி உங்கள் கட்சிப் பத்திரிகையில் வந்ததோ என்னவோ தெரியவில்லை. வேறு எந்தப் பத்திரிகையிலும் வந்ததாக தெரியவில்லை.

SRI C. N. ANNADURAI : பம்பாயிலிருந்து வெளி வருகிற "டைம்ஸ் ஆப் இந்தியா" என்ற பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM : அதிலும் தண்ணீர் கொடுக்க முடியாது என்று சொல்லப்படவில்லை. இன்னும் முடிவான ஒப்பந்தம் ஏற்படவில்லை, என்றுதான் கூறப்பட்டிருந்ததே ஒழிய தண்ணீர் கொடுக்க முடியாது என்று சொல்லவில்லை. தண்ணீர் கிடைக்கக்கூடாது என்ற எண்ணம் இவர்களுக்குத்தான் இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை . . . . (ஆரவாரம்.)

SRI C. N. ANNADURAI : அந்த எண்ணம் எங்களுக்கு சிறிதளவும் கிடையாது, அதற்கு நாங்கள் ஆற்றல் பெற்றவர்களுமில்லை . . . தமிழ் தேசிய பத்திரிகை ஒன்றுகூட இதைப்பற்றி கண்டித்து எழுதியிருக்கிறது.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றியுள்ள கடிதப் போக்குவரத்தை யாரும் அறிந்துகொள்ள முடியாது. இதைப்பற்றி ஒருவருக்கும் தெரியவும் முடியாது. ஆனால் பத்திரிகைகள் ஏதோ கண்டபடி எழுதிக்கொண்டிருப்பார்கள். அதை நம்பிக்கொண்டு வரக்கூடியதையும் வராது என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை. வரும் என்ற நம்பிக்கையிலே கனம் அங்கத்தினர்கள் பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் இதில் சிலர், இம்மாதிரியான திட்டங்கள் நிறைவேற்றப்படுவதினால் எங்கே ஆளும் கட்சிக்கு பலம் ஏற்பட்டுவிடப் போகிறதோ என்ற பயத்தின் காரணமாக வரக்கூடியதையும் வரக்கூடாது என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன் . . . (குறுக்கீடு.)

DEPUTY SPEAKER : ஆர்டர், ஆர்டர்.

SRI C. N. ANNADURAI : அந்தமாதிரியான தப்பெண்ணம் ஒன்றும் எங்கள் கட்சியைப் பொறுத்த அளவில் இல்லை என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU : இம்மாதிரியான செயல்களைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் அவசரப்படாமல் அமைதியாக விளக்கம் தந்திருந்தால் பாராட்டத்தக்கதாக இருக்கும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் பேசும்போது விளக்கம் தருகிறேன்.

DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU : பெண் கொடுப்பது உறுதியாவது முன்னால் பந்தலைப் போட்டுவிட்டேன், தாலி தயார் செய்துவிட்டேன், மணமேடைப் போட்டுவிட்டேன் என்று கூறுவது, மணமகனுக்கு முறையாகாது. பத்திரிகைகளில் இவ்விதமெல்லாம் செய்திகள் வருகின்றன. இந்த நிலையில் இந்த திட்டத்திற்காக லட்சக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து பூர்வாங்க வேலைகளை ஆரம்பித்துவிட்டு, பின்னால் அவர்கள் திடீரென்று இல்லை என்று மறுத்துவிட்டால் செய்த செலவு எல்லாம் வீணாகப் போகும் என்கிற வேதனையின் காரணமாகத்தான் இதைச் சொல்லுகிறேனே தவிர வேறு ஒன்றும் அல்ல. இதற்காக பணம் செலவு செய்கின்ற நேரத்தில் அவசரப்பட்டு இதில் பணம் செலவு செய்யக்கூடாது என்பதற்காகத்தான் இதை வருத்தத்தோடு குறிப்பிட்டேன். இதற்கு தகுந்த முறையில் அமைதியாக அமைச்சர் அவர்கள் பதில் தந்தால் அமைச்சர் அவர்களுக்கு என்றும் நாங்கள் நன்றிக்குரிய மக்களாக இருப்போம்.

அடுத்தபடியாக, சமுதாய நல திட்டங்களில் நடைபெறும் வேலைகளைப்பற்றி நாம் குற்றஞ்சாட்ட முடியும். சமுதாய நல திட்டத்தை இந்த அரசாங்கம் வைத்திருப்பதே, மக்கள் பணத்தைக்கொண்டு ஆளும் கட்சியினர் தங்கள் கட்சியை வளர்ப்பதற்காகத்தான் என்று எண்ண வேண்டியிருக்கிறது. பிளாக் டெவலப்மெண்ட் ஸ்கீம் என்று சொல்லி ஒவ்வொரு வட்டாரங்களையும் தேர்ந்தெடுத்து அபிவிருத்தி செய்கிறோம் என்று சொல்லி அந்த "பிளாக் டெவலப்மெண்ட்" ஏரியாக்களில் எல்லாம் "பிளாக்கிங் தி டெவலெப்மெண்ட்" தான் செய்து கொண்டிருக்கிறார்கள். சமுதாய நல அபிவிருத்தி என்று சொல்லிக்கொண்டு அவர்கள் கட்சியின் கீழ் உள்ள தொண்டர்களுக்குத்தான் பலவிதமான சலுகைகள் காட்டுகிறார்கள். இந்த விதத்தில் மக்களுடைய பணம் பாழாக்கப்படுகிறது என்று நான் நிச்சயமாக சொல்ல முடியும். வெறும் கட்சி மாச்சரியத்தின் பேரில், ஏதாவது மாற்று கட்சிகளின் கொடிகள் நாட்டப்பட்டிருந்தாலும் கூட அந்த இடங்களை பிளாக் டெவலப்மெண்ட் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்று சொல்லி, உள்ளூர் காங்கிரஸ் காரர்கள் பகிரங்கமாக கூறுகிற அளவுக்கு இருந்து வருகிறது
என்பதை நான் மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள் 10.30 a.m.
கிறேன். அதேபோன்று கிராம சேவக்குகள் என்று எடுக்கப்பட்டவர்கள், மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினால், வேலைக்கு எடுத்து, ஆர்டர்கள் கொடுத்து விட்ட பிறகு கூட,

[Dr. (Srimathi) Sathiyavanimuthu] [14th March 1960

மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்தினால் கொடுக்கப்பட்ட ஆர்டர்களை ரத்து செய்திருக்கிறார்கள். இதை நான் ஆதாரபூர்வமாகக் காட்ட முடியும். சமுதாய நலத் திட்டம் என்று சொல்லப்படுவது ஒரு குறிப்பிட்ட கட்சியின்—ஆளுகிற கட்சியின்—கஜானப் பெட்டி சாவியும் கையில் இருக்கிற காரணத்தினால் மக்களுடைய பணத்தை தங்களுடைய நலனுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளக்கூடிய முறையில் தான் இருந்து வருகிறது. இதை தயவு செய்து மாற்றிக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று பஞ்சாயத்து அமைப்பில், பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் நடைபெறும் தேர்தல்களிலே அரசியல் கட்சிகள் ஈடுபடாமல் இருப்பது நன்மை பயக்கும் என்ற ஒரு கருத்தை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கருத்து நல்லதாக இருக்கலாம்—பாராட்டக் கூடியதாக இருக்கலாம். மாற்றுக் கட்சிகளுக்குச் சொல்லக் கூடிய இந்தக் கருத்தை ஆளுகிற கட்சி கடைப்பிடிக்கப் போகிறதா என்று கேட்கிறேன். காரணம், நகர சபைத் தேர்தல்களில் கட்சி ரீதியில் போட்டியிடக் கூடாது என்று இந்த மன்றத்திலே பேசி விட்டு, கட்சிக் கூட்டத்திலும், கட்சிக் காரியக் கமிட்டிக் கூட்டத்திலும் கட்சி ரீதியில் தான் போட்டியிடவேண்டும் என்று ஆளும் கட்சியினரால் முடிவு செய்ததால் தான் கோளாறு ஏற்படுகிறது. ஆகையால் தான் நான் சொல்லுகிறேன், மாற்றுக் கட்சிகளுக்குச் சொல்வதை தங்கள் கட்சி கடைபிடித்தால் மாற்றுக் கட்சிகள்—குறிப்பாக திராவிட முன்னேற்ற கழகம்—நல்ல கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் என்றுமே ஒத்துழைப்பைத் தரும்.

DEPUTY SPEAKER : தங்களுடைய நேரம் முடிந்து விட்டது. அதோடு தங்களுக்கு அளிக்கப்பட்ட நேரத்திற்கு மேல் இரண்டு, மூன்று நிமிஷங்கள் அதிகமாகவே ஆகிவிட்டது.

DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU : எனது நேரத்தை நிதி அமைச்சர் அவர்கள் பாழாக்கி விட்டார். அதனால் இன்னும் இரண்டு நிமிஷங்கள் அளிக்க வேண்டுகிறேன்.

அதே போன்று புள்ளிவிவரக் கோளாறு மற்றொன்று கடந்த ஆண்டுக்கு முன் ஆண்டு மின்சார அமைச்சர் அவர்கள் இந்த ராஜ்யத்தில் 20,000 கிராமங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி பேசும்போது 20,000 அல்லது 21,000 என்று புள்ளி விவரங்களைக் கொடுத்து வந்தார்கள். இந்த அறிக்கையிலும் இதைப் பற்றி காண்கிறேன். "இரண்டாவது ஐந்தாண்டு திட்ட முடிவில் நம் ராஜ்யத்தில் உள்ள சுமார் 18,000 கிராமங்களில் 10,000 கிராமங்கள் மின்சார வசதி பெற்றிருக்கும்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆண்டுக்கு ஆண்டு கிராமங்கள் வெள்ளத்தில் போகுமா, அல்லது தீக்கிரையாக எரிந்து போகுமா, அல்லது திரையிடப்பட்டு யிருக்கிறதா, கிராமங்கள் எப்படி குறையும் என்று



14th March 1960] [Dr. (Srimathi) Sathiyavanimuthu]

தெரியவில்லை. உண்மையில் கிராமங்களில் குறைந்ததா அல்லது புள்ளிவிவரக் கோளாறு என்று தெரியாது. ஒரு இலாகா பல மாதங்களாக இருந்து செயலாற்றி வரும்போது, அவர்கள் கொடுத்துக் குறிப்பிட்டிருக்கிற புள்ளிவிவரத்தை வைத்துக் கொண்டு பேசும்போது இப்படிப்பட்ட கோளாறுகள் இருந்தால் இந்தப் புள்ளிவிவரங்களை நம்பி எப்படிப் பேச முடியும்?

அதே போன்று சாலைகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். சாலைகளை நல்ல முறையில் சீராக அமைக்கவேண்டுமென்று பேசப்படும்போது ஆளுகிற கட்சியைச் சேர்ந்தவர்கள், நகர சபையின் நிர்வாகத்தின் கீழுள்ள சாலைகள் குண்டும் குழியுமாக இருக்கிறது என்று . . .

DEPUTY SPEAKER : உங்கள் டைம் ஆகிவிட்டது. மேலும் இது பொது விவாதம். இதைப்பற்றி மான்யக் கோரிக்கையின் பேரில் பேசலாம்.

DR. (SRIMATHI) SATHIYAVANIMUTHU : நகர சபையைச் சேர்ந்தவர்கள் "அமெச்சூர் பாலிடிஷ்யன்ஸ்" என்று கூறுகிறார்கள். நான் அவர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் தங்கள் மூலமாக, நல்ல "அமெச்சூர் பாலிடீஷ்யன்ஸ்"—ஆக உள்ள, முதிர்ந்த அரசியல் வாதிகளாக உள்ளவர்கள், சுகாதார இலாகாவிற்கு அமைச்சராக இருப்பவர், பொறுப்பை கையில் வைத்துக் கொண்டு, கொசுக்களைக் கூட ஒழிக்க முடியாமல், "அமெச்சூர் பாலிடீஷ்யன்ஸ்"—ஆக இருக்கக் கூடிய நகராண்மைக் கழகத்தைச் சேர்ந்தவர்களை, கொசுக்களை ஒழியுங்கள் என்று கூறுவதாவது கேலிக்குரியது என்று கூறி, மேலும் நேரம் இல்லாத காரணத்தினால் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

SRI T. T. DANIEL : Mr. Deputy Speaker, Sir, while discussing the Budget, I like to bring to the notice of the Government some facts for their consideration. In view of the proposal to introduce a legislation to fix a ceiling on land the price of the land has already begun to fall down. The sellers are not effecting the sales because they do not know what the provisions of the intended legislation would be.

(Sri V. K. Krishnamurthy in the Chair).

This opportunity has been availed of by the decree-holders and the properties of the debtors are being purchased by the decree-holders in Court auction at low prices. I would, therefore, urge that this Government should take note of this new development that has arisen because of the intended land legislation and to pass immediately a Moratorium Act to stay the execution proceedings of all the decrees pending in the Civil Courts till the passing of the land legislation.

Regarding unemployment in the State, it is really regrettable to note that the Government have not so far conducted economic survey to find out the percentage of the educated and uneducated population in the State. I would submit to the Government that

[Sri T. T. Daniel] [14th March 1960

the economic survey could be conducted through the agencies of Panchayats and Municipalities and the unemployment problem should be tackled at he Block level with the co-operation of the people living within the Block area.

Regarding the upward trend in the price of foodgrains, I would say that this is only an inevitable incident to the growing undeveloped economy in the State. Sir, this has really affected the low income group and this factor must weigh with the Government when they analyse the recommendations of the Pay Commission. I would say that the Government should take really concrete steps to bring down the price of rice at least to twelve annas per measure and for this I would suggest that the food policy of the country as a whole has to be boldly altered. The Government should import from foreign countries such quantity of rice as is necessary so that the price of foodgrains may be lowered and it may be within the purchasing capacity of the common man.

So far as education is concerned, nearly 15 crores of rupees have been allotted for this purpose. We are glad also to note that 80 lakhs of rupees have been allotted for the mid-day meal programme in the State. Out of the 21,000 Primary Schools, nearly in 20,000 there is mid-day meal programme. I would say that for the effective continuance of this mid-day meal programme in the State, in every district there should be a public fund for that purpose and out of that fund this mid-day meal programme should be carried out. This would be an effective permanent and everlasting measure. I would bring to the notice of the Government that so far as Kanyakumari district is concerned, a fund has been collected in that manner and with the co-operation of the public also and with the assistance of erstwhile T.C. State Government. There is mid-day meal programme for all the primary schools in my district. I would suggest to the Government that this mid-day meal programme should be extended to High Schools also. Instances are reported that many students studying in the various classes in the High Schools sometimes fall fainting in the class room when the teachers are teaching on account of starvation. We had tried noon meal programme in our own district under the auspices of the Bharat Sevak Samaj. During the course of a few months with the co-operation of the public we were able to introduce mid-day meal programme in nine High Schools. I think in other districts also the public should take up this programme and with the co-operation of the Government the mid-day meal programme should be extended to High Schools also.

Regarding service conditions of the private school teachers, I would say, Sir, that whenever the Government introduce any reform to improve the conditions of the teachers they must keep in mind the following factors. There must be security of service, regularity of payment of salary and there should be provision for Provident Fund, Pension and Insurance Schemes. The teachers should be given all the benefits and concessions which the N.G.Os. are entitled to.



14th March 1960] [Sri T. T. Daniel]

I am sure the teachers working in the aided schools also will have a fair deal in the hands of the Government when they deal with the recommendations of the Pay Commission.

In this connection I have to tell the Government with feelings of sorrow that a Graduate trained teacher in the Kanyakumari district is getting only Rs. 55 a month in an aided school. This is the lowest pay which a B.T. trained teacher gets in the whole world. In spite of our fervent appeal to the Government that the pay of teachers should be increased to at least Rs. 85, the Government have not so far tackled the problem. I submit that this delay in dealing with this problem would only cause buildings in the minds of the teachers. The Director of Public Instruction recently came over there to address the secondary school teachers in a conference and he knows well what the feelings of the teachers are. I would only say that it is not proper on the part of any civilised Government to allow the teachers weep. If they weep, I only wish to tell the Government, that the public also will weep along with them.

Sir, I would urge the necessity and importance of the mid-day meal programme on the ground that in our country lions and tigers have dens in the wild forests and they have a prey and they are not starving. Birds living in nests, have got food and they do not also starve. But, Sir, children of men studying in the primary schools, high schools and colleges are starving. Therefore this is a problem which will have to be deeply considered and we must put our heads together to solve the problem permanently.

Then, Sir, coming to the allowances drawn by officers of the Government, I would say that out of the Rs. 24 crores allotted under the Budget Rs. 2 crores are allotted for payment of salaries to the officers and Rs. 11 crores for establishment and another 12 crores of rupees for allowances and honorarium. I believe that this amount includes the travelling allowances to be paid to the officers. Sir, it is generally talked about that the travelling allowances drawn by the officers in the State is really very very high. This Government which has got only a revenue income of Rs. 80 crores cannot afford to spend so much on travelling allowances for officers. If we are able to bring down the expenditure under this head to some extent at least, I believe that that amount could be better used or usefully used for ameliorating the conditions of the Non-Gazetted Officers.

Then, Sir, in regard to the ways and means forecast, I would say that it should be the policy of the Government not to liquidate funded debts by creation of unfunded debts. The policy of liquidating funded debts by incurring huge unfunded debts, I would say, is highly detrimental to the economic stability of the State. When I went through the ways and means forecast, I found that nearly Rs. 37 crores of rupees are expected to be the amount which the

[Sri R. Subramaniam] [14th March 1960

கழிவு உரத்தை முனிசிபாலிடிகளிலிருந்து வெளியிடங்களுக்குக் கொண்டு போவதை விட, கிராமங்களிலேயே குப்பை உரம் முதலிய உரங்களைத் தயாரித்து கிராமங்களுக்குக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வது நல்லது. காரணம், முனிசிபாலிடிகளிலிருந்து வெளி இடங்களுக்கு கழிவு உரத்தைக் கொண்டுபோவதற்கு வாகன வசதிகள் வேண்டியிருக்கின்றன. வாகன வசதிகள் இருப்பதில்லை. இந்த விஷயத்தையும் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். நமது ராஜ்யத்தில் 1,344 ராத்தல் அளவிற்கு விளைந்திருந்தாலும், அகில இந்திய ரீதியில் விளைச்சல் 816 ராத்தலாக இருப்பதால் மற்ற ராஜ்யங்களில் உள்ள பற்றுக்குறை நமது ராஜ்யத்தையும் பாதிக்கிறது. தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் இதை விளக்கி மற்ற ராஜ்யங்களும் உற்பத்தியை அதிகப்படுத்தும்படி செய்ய முயற்சி செய்ய வேண்டும் என்று கனம் நிதி அமைச்சரை நான் கேட்டுக்கொள்கிறேன். தேசம் பூராவிலும் விளைச்சல் அதிகரித்தால்தான் சென்னை மாநிலம் அபிவிருத்தி அடையும். மற்ற ராஜ்யங்களில் குறைவாக விளைந்தால் அது சென்னை ராஜ்யத்தையும் பாதிக்கிறது. எனவேதான் இந்தப் பிரச்னையை தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் விளக்கி மற்ற ராஜ்யங்களும் விளைச்சலை அதிகப்படுத்தும்படி செய்ய முயற்சி செய்ய வேண்டும் என்று கனம் நிதி அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப்பாசனத் திட்டத்தைப் பொறுத்தவரை திட்ட கால அளவுப்படி 2·92 லட்சம் ஏக்கராவுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டும். இப்போது 2·52 லட்சம் ஏக்கராவுக்குக் கொடுத்து விட்டோம். மீதி 0·40 லட்சம் ஏக்கராவுக்கு வரும் ஆண்டில் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே, திட்ட காலத்திற்குள் 2·92 லட்சம் ஏக்கராவுக்கும் தண்ணீர் கொடுத்து விட முடியும். பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நம்முடைய ராஜ்யத்தில் இல்லாததால் நாம் அண்டை ராஜ்யங்களை எதிர்பார்க்கிறோம். அண்டை ராஜ்யங்களில் ஓடக் கூடிய தண்ணீரை நம் மாகாணத்திற்குக் கொண்டு வர முயற்சி செய்ய வேண்டும். இப்போது பரம்பிக்குளம் திட்டத்தைப் பற்றிய வேலையைச் செய்கிறார்கள். கிருஷ்ணா-பெண்ணாறு திட்டத்தையும் எடுத்துக் கொள்ளவேண்டும். கோதாவரியிலிருந்து கிருஷ்ணா-பெண்ணாற்றுக்குத் தண்ணீர் வந்து அங்கிருந்து நமக்கு வர வேண்டும். இது நீண்ட காலத் திட்டம். ஏராளமாக பணம் செலவாகும். இந்த ப்ராஜக்டை சென்ட்ரல் கவர்மெண்டார் எடுத்துக் கட்டி முடிக்கும்படி வற்புறுத்தவேண்டும். அநேக இடங்களில் சென்ட்ரல் கவர்மெண்டார் இந்த மாதிரித் திட்டங்களுக்கு அதிகப் பண உதவி கொடுக்கிறார்கள். ஒரு ராஜ்யத்தில் இருக்கும் தண்ணீர் இன்னொரு ராஜ்யத்தில் போய்ப் பாய வசதி செய்து கொடுக்கிறார்கள். பக்ரா டாம் தண்ணீரை ராஜஸ்தானுக்குக் கொண்டுபோக முயற்சிக்கப்படுகிறது. அதே மாதிரி கோதாவரி தண்ணீரை நம்முடைய ராஜ்யத்திற்குக் கொண்டு வர



14th March 1960] [Sri R. Subramaniam]

முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மிக முக்கியம். நமது மாகாணத்தில் 33,000 குளங்கள் இருக்கின்றன. அதன் மூலம் சுமார் 22 லட்சம் ஏக்கரா நிலங்களுக்குத் தண்ணீர் வசதி கிடைக்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் சீர்ப்படுத்தப்பட்ட குளங்கள் 1,319 தான். இந்த வருஷம் 319 குளங்கள் சீர்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. முப்பத்தி மூன்று ஆயிரம் குளங்கள் உள்ள நம் ராஜ்யத்தில் இவ்வளவு சிறிய தொகை சீரமைப்புக்காக ஒதுக்கியிருப்பது போதாது. இதனால் குளங்களைச் சீர் செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது இந்த வகையில் கணிசமான தொகை 25 கோடி ரூபாய் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவ்வாறு ஒதுக்கவில்லையென்றால் இந்த வேலை அதிக வேகமாக நடைபெறாது.

கிராமங்களைப் பொறுத்த வரையில் சமுதாய நலத் திட்டங்கள் முக்கியமாக இருக்கவேண்டியது அவசியம். கட்சிக்காக ஏற்படுத்தப்பட்ட திட்டமென்று சிலர் சொன்னார்கள். அந்தத் திட்டம் நடைபெறுகின்ற இடங்களில் நேரில் சென்று பார்க்க முடியாதவர்கள் ஏதாவது சொல்லிக் கொண்டு போகலாம். நேரில் சென்று பார்த்தால்தான் அந்தத் திட்டத்தினால் ஏற்பட்டு வரும் பயன் தெரியும். இந்தத் திட்டத்திற்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணம் 1,392 லட்சம். இதில் நாம் செலவிடப் போவது 1,274 லட்சம்தான். அங்கே பார்த்தால் எதற்கெடுத்தாலும் பணம் இல்லையென்று சொல்லுகிறார்கள். சாதாரணமாக ரோடுகள் போடுவது, பாலம் கட்டுவது ஆகியவற்றுக்குப் பணம் இல்லையென்று சொல்லுகிறார்கள். ஆனால், இந்த ஆண்டு இறுதியில் 118 லட்ச ரூபாய் மிச்சமாகிறது. ஏன் மிச்சமாகிறது என்று புரியவில்லை?

கிராம ரஸ்தாக்கள் போடுவது ஒரு பர்லாங்குக்கு மேல் சென்றால் ஹைவேஸ் டிப்பார்ட்மெண்டாரிடம் விட்டுவிட வேண்டும். அதோடுகூட போட்ட ரஸ்தாக்களைச் சரிவர பராமரிப்பதில்லை. நம்முடைய ராஜ்யத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலையை ஏற்படுத்த முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய ராஜ்யத்தில் சேலத்தில் இப்போது இரும்புக் கனி கிடைக்கிறது. நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி கிடைக்கிறது. இவை இரண்டையும் பயன்படுத்தி இரும்பு உருக்குத் தொழிற்சாலையை ஏற்படுத்தவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். காவிரி பகுதியில் எண்ணை இருப்பதாக ஹேஷ்யமாகச் சொல்லப்படுகிறது. அதைக் கண்டு பிடிக்க இப்போது இரண்டு டிப்பார்ட்மெண்ட்கள் இருக்கின்றன. நம்முடைய ராஜ்யத்தின் சார்பிலும் மத்திய அரசாங்கத்தின் சார்பிலும் ஜியலாஜிகல் சர்வே நடத்தப்பட்டு வருகிறது. இது வரை யாரும் அதில் அக்கறை காட்டி தீவிரப்படுத்த முன்

[Sri R. Subramaniam] [14th March 1960

வரவில்லை. இப்போது சென்ட்ரல் கவர்மெண்டாரை கேட்டிருக்கிறார்கள். இந்த ஆராய்ச்சியைத் தீவிரப்படுத்தி நம்முடைய காவிரி எண்ணையைக் கண்டு பிடிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தஞ்சை மருத்துவக் கல்லூரியைப் பொறுத்தவரையில், ஒரு வருஷமாக ஒரு ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டு இருக்கிறார்கள். அந்த வேலையைச் சீக்கிரம் முடிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

* SRI N. K. PALANISAMI : சபைத் தலைவர் அவர்களே, அழுகும் பொருள்களுக்கு வரி இல்லை. புதிய வரி எதுவும் இல்லை. பற்றாக் குறையும் பெரிய அளவுக்கு இல்லை. இவையெல்லாம் வரவேற்கக் கூடிய முறையிலே இருந்தபோதிலும், பொதுந் தேர்தல் சீக்கிரம் வருவதை உத்தேசித்து இம்மாதிரி பட்ஜெட் தயாரித்திருப்பதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. பல மாகாணங்களில் இம்மாதிரி பட்ஜெட் தயாரித்திருக்கிறார்கள். மத்திய சர்க்காரை எடுத்துக்கொண்டாலும்கூட சைக்கிள் பார்ட்ஸ், டீசல் எண்ணை தவிர மற்றவைகளுக்குப் புதிய வரி ஒன்றுமில்லை. ஆனாலும் சர்க்கார் அனுஷ்டிக்கக்கூடிய அடிப்படையான கொள்கையில் இருக்கக்கூடிய குறைபாடுகளை எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய நாங்கள் தொடர்ந்து விமர்சனம் செய்து வந்தபோதிலும் அந்தக் குறைபாடுகளை ஏற்றுக் கொண்டு மாற்றம் செய்யக்கூடிய வகையிலே இந்த பட்ஜெட் இல்லை. அழுகும் பொருள்களுக்கு வரி போடக்கூடாது என்று நாங்கள் மட்டுமல்ல, சகல கட்சிக்காரர்களும் சொன்னார்கள். பத்தாயிரக் கணக்கானவர்கள் அதை எதிர்த்து பெரிய ஹர்த்தால் நடத்தினார்கள். சர்க்கார் அன்றையதினம் "False prestige" வைத்துக் கொண்டு நீக்க முடியாது என்று சொன்னார்கள். இப்போதாவது அதை நீக்கியது பற்றி சந்தோஷப்படுகிறேன்.

அரிசி மீது போடப்பட்டிருக்கக்கூடிய விற்பனை வரியை எடுத்துவிடவேண்டுமென்று எல்லோரும் சொன்னார்கள். சர்க்கார் பிடிவாதமாக அதை எடுத்துவிட மறுக்கிறது. "டாக்ஸ் ரிலிப்" நல்லதுதான். யாருக்கு 'டாக்ஸ் ரிலிப்" கொடுக்கவேண்டும்? இன்றையதினம் "டர்ன் ஓவர்" 10,000 ரூபாய் என்று வைத்திருக்கிறார்கள். பெரிய பெரிய வியாபாரிகள் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். பத்தாயிரம் மினிமம் என்பதை 25,000 என்று செய்வதன் மூலமாக சிறிய வியாபாரிகளுக்குச் சலுகை கொடுத்து, அதன் மூலம் பணக்காரர்களுக்கு வரி போட முடியும். சர்க்கார் அடிப்படைக் கொள்கையில் மாற்றம் எதுவும் இல்லை. இப்போது இருக்கும் முறை பணக்காரர்களுக்குச் சலுகை கொடுக்கும் வகையில்தான் இருக்கிறது. இதை மாற்றாமல் ஒன்றும் செய்ய முடியாது.

நாம் போட்டிருக்கும் டார்கெட்டை அநேகமாகப் பூர்த்தி செய்து விட்டோம். இன்னும் பலவற்றை "over fulfil' செய்திருக்கிறோம். டில்லியில் நடந்த விவசாய மகாநாட்டில் நமது சர்க்கார் முதல் பரிசு வாங்கியது பற்றி நாம் எல்லோரும்



14th March 1960] [Sri N. K. Palanisami]

பெருமைப்படுகிறோம். மற்ற மாகாணங்கள் எல்லாம் நமக்குப் பின்னால்தான் இருக்கின்றன. கோவாப்பரேட்டிவ் பார்மிங் பஞ்சாபில் 35,000 இருக்கிறது. நம் மாகாணத்தில் குறைவாக இருக்கிறது. மற்றபடி எல்லா விஷயங்களிலும் முன்னேறி இருக்கிறோம். ரோடுகள், எலக்ட்ரிசிடி விஸ்தரிப்பு ஆகியவைகளில் எல்லாம் முன்னேறியிருக்கிறோம். அதை நான் வரவேற்கிறேன். நாம் உணவு விஷயத்தில் எவ்வளவு கோடி ரூபாய் செலவழித்திருக்கிறோம் என்று பார்க்கவேண்டும். 1955-ம் வருஷத்திலிருந்து 5 வருஷ காலத்தில் எவ்வளவு கோடி ரூபாய் செலவழித்து இந்த ஆறு லட்சம் அதிகப்படியான உற்பத்தியைச் செய்திருக்கிறோம் என்பதைப் பார்க்கவேண்டும். கிட்டத்தட்ட இரிகேஷனுக்கு மட்டும் 12 கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது. இன்னும் விவசாய இலாகா தனியாகப் பணம் செலவழித்திருக்கிறது. இப்படி கோடி கோடியாகப் பணம் செலவழித்த பிறகும் கூட ஆறு லட்சம்தான் உற்பத்தியாகி இருக்கிறது. இதில் என்ன கோளாறு? இந்தக் குறைபாடுகளையெல்லாம் மனதில் கொண்டு மூன்றாவது திட்டத்தைச் சரிவரப் போடமுடியும்.

இன்றையதினம் திட்டத்திற்கு அதிகப் பணம் செலவாகியிருக்கிறதென்று சொல்லப்படுகிறது. திட்டமிட்ட பொருளாதாரத்தில் விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. யார் கட்டுப்படுத்துவது? இதற்கு மாகாண சர்க்கார் பொறுப்பில்லையா? திட்டக் கமிஷன் அடிக்கடி வலியுறுத்தியும்கூட உணவு விஷயத்தில் கட்டுப்பாடு செய்யப்படவில்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1956-ம் வருஷ விலைவாசிகளை வைத்துத் தான் கன்ட்ரோல் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது. திடீரென்று கண்ட்ரோலையும் எடுத்து கொள்முதலையும் நீக்கிவிட்டிருக்கிறார்கள். ஒரு வாரத்தில் மட்டும் விலைவாசியானது 501 புள்ளியிலிருந்து 105 புள்ளிக்கு உயர்ந்திருக்கிறது. அதாவது 9 புள்ளி 11-00 a.m. ஏறியிருக்கிறது. உணவு விலை விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கும் நிலைமையை சர்க்கார் கட்டுப்படுத்த என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? உணவு பாங்கு ஏற்படுத்தப்போவதாகச் சொன்னார்கள். அமெரிக்காவிலிருந்து உணவு இறக்குமதி செய்து சேமித்து வைத்தால் இங்கே எப்படி விலை இறங்கும்? விலைவாசியைக் கட்டுப்படுத்தாமல் எந்தவிதமான திட்டமும் போட முடியாது.

ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலமாக தேசீய வருமானத்தை உயர்த்தப்போவதாகச் சொன்னார்கள். எந்த அளவு தேசிய வருமானம் உயர்ந்திருக்கிறது? ஐந்து வருஷ காலத்தில் 25 சத விகிதம் உயர்ந்துவிடும் என்று சொன்னார்கள். மூன்றரை வருஷங்களில் 10.4 சத விகிதம்கான் வருமானம் உயர்ந்திருக்கிறது, இன்னும் ஒன்றரை வருஷம் பாக்கி இருக்கிறது. சென்ற வருஷம் 'பம்பர் க்ராப்' இருந்ததால் சற்று அதிகம் வந்தது. [illegible]யாவது 'மெயின்டெயின்' செய்தால்தான் 15 சத விகிதமா[illegible]து கிடைக்கும். இருபத்தைந்து சத விகித குறியீட்டை அடைவதற்கான முயற்சி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

[Sri N. K. Palanisami] [14th March 1960

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அடிப்படையான தொழில்கள் நிறுவப்படவேண்டுமென்று இருக்கிறது. சித்தரஞ்சன் தொழிற்சாலை போன்று சிலவற்றைத்தவிர, நாம் அடிப்படையான தொழில்களை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறுவ முடியவில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தியா முழுமைக்கும் உள்ள பட்ஜெட்டைப்பற்றிப் பேசுகிறாரா? சென்னை பட்ஜெட்டைப்பற்றிப் பேசுகிறாரா?

SRI N. K. PALANISAMI : இரண்டும் சேர்த்துத்தான் பேசுகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் போடக்கூடிய காலத்தில் 25 லட்சம் பேர்கள் வேலையில்லாமல் இருந்தார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பிக்கக்கூடிய நேரத்தில் 75 லட்சம் பேர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். இவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். இம்மாதிரியான குறைபாடுகள் இருக்கின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் போடும் நேரத்திலாவது இந்தக் குறைபாடுகளை யெல்லாம் அவசியம் நீக்கவேண்டும். திட்டக் கமிஷனையே ஒழித்துவிட வேண்டும், திட்டமே வேண்டாம் என்று யாரோ சொல்கிறார்கள். கொள்ளை லாபம் அடிக்க சுதந்திரம் வேண்டும் என்று நினைப்பவர்கள்தான் அம்மாதிரி சொல்லலாமே தவிர, யாரும் சொல்ல முடியாது. அம்மாதிரி சொல்வது தேச நலனுக்கு விரோதமானது என்று நான் எச்சரிக்க விரும்புகிறேன்.

தொழில்களுக்கு எந்த அளவு வரி போட முடியுமோ அந்த அள்வுக்குப் போட்டாய்விட்டது. It has reached its saturation point . இதற்கு மேல் தொழில் அபிவிருத்தி செய்யவேண்டுமென்றால், சர்க்கார் சில தொழில்களைத் தாங்களே ஏற்று நடத்த வேண்டும். இல்லாவிட்டால் தொழில் அபிவிருத்தி ஏற்பட முடியாது. இன்னும் லாபம் வரக்கூடிய பல தொழில்களைச் சர்க்காரே ஏற்று நடத்தவேண்டும். இருபது லட்சம் பேர்கள் நம்பியிருக்கும் கைத்தறித் தொழிலுக்கு ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அதிகமான அளவுக்கு நூலை ஏற்றுமதி செய்வதற்கு உத்தரவு கொடுத்ததன் காரணமாக நூல் விலை அதிகரிக்கிறது. 1946-ம் வருஷத்தில் வெள்ளையர் ஆட்சியில்கூட, குறிப்பிட்ட அளவு குறைந்த விலையில் நூல் வாங்கி சொஸைட்டிகளுக்கு சப்ளை செய்யப்பட்டது. ஆனால் நமது கனம் அமைச்சர் அவர்கள் சமீபத்தில் மதுரையில் பேசியபோது, 'இரண்டு வாரத்திற்கு நூல் வாங்காமல் விட்டுவிட்டால், தானாக விலை குறைந்துவிடும்' என்று குறிப்பிட்டதாகப் பத்திரிகையில் பார்த்தேன். இப்படிப்பட்ட வாதங்கள் சரியல்ல. ஒரு பக்கம் நூல் விலை ஏறி விட்டது; இன்னொரு பக்கம் ரிபேட் குறைந்துவிட்டது. இந்த இரண்டு காரணங்களினால் ஒவ்வொரு ப்ரைமரி சொஸைட்டியிலும் ஏராளமான கைத்தறித் துணிகள் தேக்கம் அடைந்திருக்கின்றன.



14th March 1960] [Sri N. K. Palanisami]

இருபது லட்சம் பேர்களுடைய வாழ்க்கையைப் பாதிக்கக்கூடியதாக இருப்பதால், இதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிர்வாகத்தில் இருக்கும் குறைபாடுகளை நாம் கவனிக்காமல் இருக்க முடியாது. கம்யூனிடி டெவலெப்மென்டை எடுத்துக் கொண்டால், அதில் போஸ்ட்-இன்டென்ஸிவ் ஸ்கிமுக்கு ஒரு லட்சம் ரூபாய்க்குமேல் செலவிடப்படுகிறது. எஸ்டாபிளிஷ்மென்ட்டுக்காக மட்டும் அந்தத் தொகையில் பாதி செலவாகிறது. இம்மாதிரியான குறைபாடுகளைப் போக்குவதற்கு முதல், இரண்டாவது கட்ட போஸ்ட்-இன்டென்ஸிவ் ஸ்கீம்களையும் ஒன்றாக இணைத்து பொதுவாக அதிகாரிகளைப் போட்டு வேலை செய்வதன் மூலம் இந்தச் செலவைக் குறைத்துக்கொள்ள முடியும்.

ஈரோடுக்கு மூன்றாவது மைலில் ஷூ மானுபாக்சரிங் யூனிட் ஒன்று ஏற்படுத்தினார்கள். அதற்கு 60 ஆயிரம் ரூபாய் செலவாயிற்று. முதலில் 45 பேர்கள் வேலை செய்தார்கள். அடுத்த முறை நான் பார்த்தபோது அங்கே 13 பேர்கள் வேலை செய்தார்கள். சமீபத்தில் பார்த்தபோது அங்கே நான்கு கோழிகள் இருக்கின்றன. அவற்றைப் பராமரிக்க மூன்று வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். இம்மாதிரியான குறை எல்லாம் போக்கப்படவேண்டும்.

இன்னும் கட்டிடத்திற்காக 60 லட்ச ரூபாய்க்குமேல் ஒதுக்கப்பட்டிருக்கிறது. (நேரம் ஆனபடியால், தலைவர் அவர்கள் அடுத்த கனம் அங்கத்தினரைப் பேச அழைத்தார்).

* SRIMATHI A. S. PONNAMMAL : கனம் தற்காலிக சபா நாயகர் அவர்களே, கனம் நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் 1960-61-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

கடந்த இரண்டு மூன்று நாட்களாக இங்கே விவாதம் நடைபெற்றது. அப்பொழுது ஒரு சில கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். ஏதோ வரி போடுவதற்கு வேறு வகை இல்லை, இது மாதிரி அழுகும் பொருள்களுக்கு வரியை ரத்து செய்திருப்பது அவ்வளவு ஒன்றும் பிரமாதமில்லை என்றெல்லாம் இங்கே கூறினார்கள். அது மாத்திரமல்ல. இன்னொரு கனம் அங்கத்தினர் 'வரி போட்டுத்தான் அரசாங்கம் நடக்கவேண்டுமா?' என்ற கேள்வியைப் போட்டார்கள். இப்படிக் கேட்டவர் ஒரு முக்கியமான அங்கத்தினர்; தொழிலாளர் மத்தியில் வேலை செய்யக்கூடிய அங்கத்தினர். வரி போட்டுத்தான் இந்த நாட்டினுடைய அரசாங்கத்தை நடத்த வேண்டுமா என்று கேட்டால், பண்டைக் காலத்தில் கதை சொல்வார்கள், சாமியார்களெல்லாம் ஏதோ பச்சிலையை நசுக்கி அதிலேயிருந்து பௌன் பௌனாக செய்வார்கள் என்று. ஒரு வேளை அப்படி திட்டங்களை அவர் செய்து கொடுத்து வரி இல்லாமலேயே அரசாங்கத்தை நடத்தச் சொல்கிறாரோ என்னவோ தெரியவில்லை.

அதற்கடுத்து, இன்னொரு கனம் அங்கத்தினர் கூறினார், சமுதாய நலத் திட்டத்தின் மூலமாக, மக்களுடைய வரிப் பணமெல்லாம் கட்சிக்காகச் செலவிடப்படுகிறது என்று. அப்படிக் கூறியதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். காரணம் என்னவென்றால், அங்கே சமுதாய நலத் திட்டத்திலே ஈடுபட்டிருப்பவர்கள் கிராம மக்கள் மத்தியிலே சென்று, மக்களுடைய மனப்பான்மையை மாற்றி, நாம் போடும் திட்டங்களுக்கு அவர்களுடைய ஒத்துழைப்பை நாடி, அங்கே இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் அளவில் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அதிலே ஒரு சிலர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களும் இருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்களும் இருக்கிறார்கள் என்பதை நான் பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறேன். ஏதோ கட்சிக்காகப் பயன்படுத்துகிறார்கள் என்று சொல்வது நல்லதல்ல.

கதர்த் திட்டத்தை நாம் அதிகமாகப் புகுத்த வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். கிராமப் பகுதியில் இருக்கும் மக்கள் ஒரு சில மாதங்கள் வேலை செய்துவிட்டு, வருஷத்தில் பாதி மாதங்களுக்கு வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். தொழில் செய்வதற்கு மூலப்பொருள் இல்லாமல் மக்கள் அவஸ்தைப்படுகிறார்கள். ஆகவே, கதர்த் திட்டத்தை அபிவிருத்தி செய்யும்போது, இந்நிலைமையில் உள்ள மக்கள் கதரை உற்பத்தி செய்யவேண்டும், நூலை நூற்கவேண்டும், அதன்மூலம் பணம் கிடைக்கவேண்டும் என்ற அடிப்படையிலே வேலை நடக்கிறதே தவிர, கட்சியை பலப்படுத்தவேண்டும் என்பது நோக்கமல்ல. சர்க்கார் இன்ன இன்ன காரியங்களை மக்களுக்காகச் செய்திருக்கிறார்கள் என்று, சர்க்கார் அதிகாரிகள் சொல்லித்தான் ஆகவேண்டும்.

விவசாயத்தை அதிகமாக பெருக்கவேண்டும். நாட்டில் நாளுக்கு நாள் மக்களுடைய எண்ணிக்கை அதிகமாகப் பெருகிக்கொண்டிருக்கிறது. நிலப்பரப்பும் குறைந்து கொண்டு வருகிறது. எவ்வளவுதான் உற்பத்தியைப் பெருக்கினபோதிலும், நமக்கு பற்றாக்குறை இருக்கிறது. இதைப் போக்குவதற்காக பெரிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை முடித்திருக்கிறோம், சிறு சிறு நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு என்ன காரியம் செய்யவேண்டுமோ அதற்கும் அதிகமாக பணம் ஒதுக்கியிருக்கிறோம். ஆனால், ஒவ்வொரு பட்ஜெட்டிலும் இன்னும் துரிதமாக இந்தக் காரியங்களைச் செய்தால் நிச்சயமாக உற்பத்தி அதிகமாகப் பெருக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

குறிப்பாக என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால்—அங்கே எனக்கு முன் பேசிய என்னுடைய தொகுதி அங்கத்தினர் கூறினார்—மஞ்சளாறு திட்டம், சாத்தயாறு திட்டம், மாவூத்தாறு திட்டம், குள்ளக்கொம்பைத் திட்டம், ஆலங்குளம் அணைக்கட்டுத் திட்டம் இப்படி ஒவ்வொரு தொகுதியிலும் பல அணைக்கட்டு வேலைகள் நடக்கவேண்டியிருக்கின்றன. குறிப்பாக, மதுரை ஜில்லாவை எடுத்துக்கொண்டால், அங்கே சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அனேகம் இன்னும் சாங்ஷன் ஆகாத நிலைமையில் இருக்கின்றன.



அவைகளையெல்லாம் சீக்கிரமே சாங்ஷன் செய்தால் நிச்சயமாக உணவு உற்பத்தியை பெருக்க முடியும் என்பதை நான் அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. இன்னும் உர விநியோகத்திலே பல சங்கடங்கள் இருக்கின்றன. உரம் வேண்டுமென்று கேட்கும்போது, ஸ்டாக் இல்லை, குட்ஸ் ட்ரெயின் வரவில்லை என்றெல்லாம் சொல்லப்படுகிறது. அதனால் காலதாமதம் ஆகிறது. விவசாயத்திற்கு வேண்டிய உரம் காலா காலங்களில் கிடைக்காததால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்", "பருவத்தே பயிர் செய்", "ஆடிப்பட்டம் தேடி விதை" என்று சொல்வார்கள். அதுபோல், காலத்தில் உற்பத்தி செய்யவேண்டுமானால் நல்ல முறையில் எந்தக் காலத்தில் உரம் வேண்டுமோ அந்தக் காலத்தில் உரம் கிடைக்க நமது அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் இன்னும் அதிகப்படியாக உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ப்ளாக் டெவலப்மென்ட் பகுதியில் விவசாயத்திற்காக கடன் கொடுக்கப்படுகிறது. ஜமீன் கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு கடன் கிடைப்பதற்கு ஏறக்குறைய ஒன்றரை வருஷம் ஆகும்போல் இருக்கிறது. அதில் ஏதோ சட்டங்கள் குறுக்கிடுவதாகச் சொல்லப்படுகிறது. ஒருவர் நிலத்தில் பயிரிட்டு வந்தாலும், அந்த நிலத்தைக் காட்டி கடன் பெறமுடியாத நிலை இருக்கிறது. அந்தத் தடையை அகற்றி, பத்து ஆண்டுக் காலம் ஒரு நிலத்தை விவசாயி அனுபவித்தால், 'ரீ-பேயிங் கபாஸிட்டியும்' அவருக்கு இருந்தால், ஜமீன் கிராமங்களில் இருக்கும் மக்களுக்கு கடன் கிடைக்க வகை செய்யுமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இன்னும் வைகை நதி மெயின் சானல் ஓடும் இடங்களை அடுத்து பெரியார் வாய்க்கால் வருவதற்கு முன்பே 150, 200, 220 கெஜங்களுக்கு மேற்கொண்ட தூரத்தில் கிணறுகள் வெட்டி தண்ணீர் இரைத்து விவசாயம் செய்து வந்திருக்கிறார்கள். இப்போதும் ஒரு சில இடங்களில் ஆயில் என்ஜின் வைத்தும் தண்ணீர் இரைத்துப் பயிர் செய்துக்கொண்டு வருகிறார்கள். பெரியார் வாய்க்காலின் அடுத்த தாலுகாக்களுக்குத் தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது. வாய்க்காலின் இரு புறமும் வானம்பார்த்த பூமியாக விவசாயம் செய்யக்கூடியவர்கள் கிணற்றிலிருந்து பம்ப் செட் வைத்து தண்ணீர் பாய்ச்சினால் ஒரு வேளை வைகை நதித்தண்ணீரை இழுத்துக்கொள்ளுமோ எனக்கருதி பம்ப் செட் வைக்க அனுமதிக்காமல் இருப்பது நல்லதல்ல. எனவே பொதுப்படையாக ஆராய்ந்து ஆற்று ஓரங்களில் கிணற்றின் மூலம் விவசாயம் செய்யக்கூடிய ஏழை விவசாயிகளுக்கு பம்ப் செட் வைக்க அனுமதி தர வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, தரிசு நிலங்கள், விவசாயத்திற்கு லாயக்கற்ற நிலங்கள் நிறைய இருக்கின்றன. இப்பொழுது நமக்கு புளி பற்றாக்குறையாக இருக்கிறது. ஒரு வீசை ரூ. 3 விற்கிறது. இந்த

[Sri K. S. G. Haja Sheriff] [14th March 1960

him on having abolished the sales tax on perishables. If the House remembers, Sir, I expressed grave concern at the time of the introduction of this tax and even stated that the valuable foreign exchange which we were earning on exporting some of these perishables would be depleted or we would not be earning much. I am happy that we have yielded to popular will and we will be saving a lot of troubles hereafter. I am also happy that at least some of the hon. Friends belonging to the Dravida Munnetra Khazhagam will feel elated after the abolition of this tax because during the elections to the Madras City Corporation held last year, they were making capital out of this tax. I was thinking at that time that if they began to implement at least 1/15th of what they were promising to the people, the City would be looking prettier or healthier. But I must confess that I am thoroughly disappointed in this regard. Within the course of one year not only has the position deteriorated considerably but the City has become dirtier, more unclean and with more of dust. I say this without any fear of contradiction from any quarter and I am prepared to prove this, however much the opposite party could try to disprove it. I would therefore appeal on the floor of this House that we, the Members who are granting enormous sums of money for the improvement of the City, should take a serious note of what is happening and try to do the needful before things get from bad to worse. This City is being visited not only by high dignitaries from foreign countries but also by persons belonging to all classes or creeds from all over the Globe. Therefore, it is our duty to see that they carry very good impressions which should be lasting impressions.

Sir, I congratulate the Hon. Minister for Industries on rather very good running of his Department. Many industries which have already been established are going to be switched on for more production and many new industries are going to come up and many industries that are going to be started shortly will also be coming up. Sir, in this connection, I would like to say one thing. I rather feel that these industries instead of being located at headquarters, should be located as far as possible in the interior so that we can stop to some extent influx of the people there to the urban areas. Especially when we are introducing electricity and when we are connecting the remotest places with roads and when we are introducing all amenities in the villages, I feel that we can do very well in locating these industries in the interior than at headquarters of the State or at headquarters of districts. That would, to a very great extent, minimise the exodus of rural people to urban areas, improve the interior places and mkae villagers live in a very happy condition.

Sir, I must say that I am rather disappointed to see that there has been no mention about the serious situation in the City affecting traffic. Hon. Minister should be aware that this has come to a very intolerably bad position and there have been bottlenecks in the City. There is a Traffic Advisory Committee but I am afraid



14th March 1960] [Sri K. S. G. Haja Sheriff]

whether things are taking very good shape quickly. I expressed the same fear sometime ago when I spoke on the Governor's Address that it is high time that we should see that these bottlenecks are removed. If we are not going to do the needful and do what we should, on the lines of the proposals submitted by the Commissioner of Police, I am afraid that things will become more difficult with the result we will have to pay a very heavy price in looking after it.

One thing I would like to point out. I must congratulate the Hon. Minister for Electricity on extending electricity to the remotest corners but still there are several industries which are unable to get sufficient power with the result they have to cut down their production. This is creating a very bad situation; not only the capital that has been put in there will be blocked but it will also create unemployment problem. I understand that more power will be generated in and around the City during the Third Plan-period. Until then I do not know what arrangements are going to be made by Government to cater to the needs of the industries that are located here. I hope the needful will be done in giving more power and required power to these industries.

I must say that small-scale industries are coming up. But at the same time we must say that they are not coming up in such large numbers as we want. By starting more industries we will be not only solving the unemployment problem but we will also be spreading more welfare and happiness among the people. If at all there is any opportune time this is the time to start a large number of small-scale industries because no longer we will be importing any consumer goods from foreign countries. We have to produce these goods in our own country to meet the growing demand of the people, when the standard of living of our people is increasing day by day on account of the growing economic prosperity. I want that easy loans be given to the industries so that many industrialists could come forward to start more number of small-scale and medium-scale industries. I am one of those who feel that whether these industries come up in the public sector or private sector they will bring more welfare and happiness to the people in the surrounding places. To that extent I will be happier if more number of industries are started.

In his speech the Hon. Finance Minister has appealed for the co-operation of all parties. I am very distressed to see that instead of giving full co-operation to the Government who are straining their every nerve for the amelioration of the poor people, some members are opposing it only for opposition sake. I would complement them if while opposing it they give concrete suggestions or alternative programmes. Merely opposing it for opposition sake is not going to give any result. Let us all therefore co-operate with the Government who are doing their very best for the improvement of the land and the people. Thank you, Sir.

[14th March 1960

**SRI K. RAMACHANDRAN :** கனம் தலைவர் அவர்களே, 34 லட்சம் ரூபாய் பற்றாக்குறையோடு வந்திருக்கும் இந்த பட்ஜெட்டிலே பல குறைகள் தெரிகின்றன, நல்ல அம்சங்களும் இருக்கின்றன. முக்கியமாக, வரிவிலக்கு பற்றி பாராட்டுகிறேன். அதே சமயத்தில், வரி விலக்களிக்கப்பட்டிருக்கும் அழுகும் பொருள்களோடு, பாலுக்கும் வரி விலக்கு அளிக்கவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது; ஆகவே, அந்த விஷயமாக கண்டிப்பாக இந்த செஷனிலேயோ அல்லது கூடிய சீக்கிரத்திலோ, ஒரு முடிவு காணவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த பற்றாக்குறை மிகவும் குறைவாக இருப்பதால், இதைச் சரிக் கட்டவில்லையென்றும், அதிகமான பற்றாக்குறையை நாங்கள் எதிர்பார்க்கின்றோம், சம்பளக் கமிஷன் அறிக்கை வெளி வந்தால் அது சம்பந்தமாக அதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கும்போது, அதிகத் தொகை தேவைப்படலாம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, பற்றாக் குறையைச் சரிக்கட்டுவதோடல்லாமல், அதிகமான பற்றாக் குறையையும், சமாளிப்பதற்கான வழிவகைகள் செய்யப்படும் என்று தெரிகிறது. இந்த என்.ஜி.ஓ.-க்கள் உபாத்தியாயர்கள் இவர்கள் பிரச்சினை அதிகமாகிக் கொண்டு வருகிறது. அவர்கள் குறைகளை நிவர்த்திக்க வழிவகை கண்டு ஓரளவுக்கு அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்க, வழி முறைகளை இந்த அமைச்சரவை செய்யவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதனால் அதிகச் செலவு ஏற்பட்டாலும், யாரும் மறுக்கவில்லை, அதை அனுமதிக்க நாங்கள் தயார் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயத்தைப் பொருத்த வரையில், உணவு உற்பத்தியில் நாட்டம் செலுத்தி, பலமுறைகளைக் கையாள்வதையும் இந்த உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவற்றிலே, உரம் பற்றாக் குறையாக இருப்பது ஒன்று. அது, சற்று உற்பத்தி பெருக்க முடியாமல் இருப்பதற்கு ஒரு காரணம். பற்றாக்குறை ஒரு புறம் இருந்தாலும், இருக்கும் உரத்தை வினியோகிக்கும் முறை சரியாக இல்லை. இன்றைக்கு இருக்கக்கூடிய உரத்தை சரியான முறையில் வினியோகித்தால், சற்று அதிக உற்பத்தியை அடைய முடியும். ஆனால், வினியோக முறையைப் பார்த்தால், தவறுதலாகச் செய்பவர்கள் மேலும், நடவடிக்கை எடுக்க முடியாத வண்ணம் விதிகள் அமைந்திருக்கின்றன. ஆகவே, இந்த வினியோகத்தில், கட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டும். கூட்டுறவு இயக்கத்தின் மூலம் வினியோகித்தாலும், அது ஓபன் மார்க்கெட்டுக்கு வந்து விடும் பரிதாபமான நிலைமை இருக்கிறது. அதோடு மட்டுமின்றி, வினியோகிக்கும், வியாபாரிகள் கலப்பு செய்யும் நிலைமையும் இருக்கிறது. இவைகளை நிவர்த்திக்க, கண்டிப்பான, சரியான முறைகளை வகுக்க வேண்டும். என்னைப் பொருத்த வரை இப்பொழுது ஏற்படுத்தும் பஞ்சாயத்துக்கள் மூலமாக உரத்தை வினியோகிக்க வழிவகை செய்யலாம் என்று நினைக்கிறேன். இந்த விஷயத்தில் ஓரளவுக்கு சரியான முறையை வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



14th March 1960] [Sri K. Ramachandran]

அதே மாதிரித்தான் விதைகள் விஷயமும். நல்ல பொறுக்கு விதைகள் கொடுத்தால், விளைவு அதிகமாகும் என்று தெரிந்திருந்தும்கூட, பல இடங்களில் சரியான காலத்தில், சரியான விதைவகை கிடைக்கச் செய்வதில்லை. நல்ல பருவத்தில் விதை வினியோகம் செய்ய, நல்ல ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

இந்த பேக்கேஜ் பிளானைப் பற்றிச் சொன்னார்கள். அதன் முக்கியமான அம்சங்களைப் பற்றிச் சொன்னார்கள். என்னைப் பொருத்த வரையில், பிளாக் டெவலப்மெண்டிலே இருப்பதைவிட ஒன்றும் இதில் அதிகமாக இருப்பதாகத் தெரியவில்லை. முன்னூற்று அறுபது வட்டாரங்களில், 176 வட்டாரங்களை எடுத்து அபிவிருத்தி திட்டத்தின் மூலம் அதே முறையில் வழிவகை செய்யலாம் என்றும் தோன்றுகிறது.

பெரிய நீர்ப்பாசன திட்டங்களைப் பொருத்த வரையில், பரம்பிக்குளம் நிச்சயமாக நிறைவேறும் நிலையில் இருப்பதாகத் தெரிகிறது. நாங்கள் வருத்தப்படுவதெல்லாம், இன்னும் சில திட்டங்களை இதிலே சேர்த்துச் செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டால் நன்றாக இருக்கும். அவைகள் மூலமாகத்தான் ஒரு அரசாங்கத்திற்கும், மற்ற அரசாங்கத்திற்கும் ஊடே நல்ல உறவு ஏற்பட முடியும் என்று நான் நம்புகிறேன். பரம்பிக்குளம் திட்டத்திற்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது திட்டத்தில், அப்பர் பெரியார் திட்டத்தையும் சேர்த்துக் கொண்டால், அது பல லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு வசதி அளிக்கும். அதோடு பல லட்சம் கிலோ வாட் மின் விசை உற்பத்தி செய்ய முடியும். அதனால், வறண்ட பிரதேசமான ராமநாதபுரம் பிராந்தியங்களுக்கு நன்மை பயக்கும். இந்த திட்டத்தைப்பற்றி பட்ஜெட் உரையில் சொல்லாவிட்டாலும், அமைச்சரவர்கள் பதிலிலாவது, நிதியமைச்சரவர்கள் இந்த திட்டம் மூன்றாவது திட்டத்தில் முதலிடம் பெறும், முதலிடம் கொடுக்கத் தயார் என்ற குறிப்பைச் சொல்லும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். இது ரொம்பகாலமாக அந்த மக்கள் எதிர் பார்த்துவரும் திட்டம்.

இன்னொரு முக்கிய விஷயம். இப்பொழுது வைகை அணையிலிருந்து தண்ணீர் கொடுக்கிறார்கள். இதைச் சேர்த்து உரையில் சொல்லிவிட்டால், நாங்கள் பயன்படுத்திக்கொண்டு விடுவோமோ என்றுதான் குறிப்பிடவில்லையென்று நினைக்கிறேன். வைகைத் திட்டம் வரண்ட ராமநாதபுரத்திற்கு ஒரு வரப் பிரசாதம் என்றே சொல்லவேண்டும். ஆனாலும் இப்பொழுது இருப்பது ஒரு தாற்காலிக முறைதான். அதற்கு ஒரு நிரந்தரமான முறையாகச் செய்யவேண்டும் என்றும், அதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்றும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.
உதாரணமாக வைகையாற்றுக்கு இரு பக்கத்திலும்கூட 11
கால்வாய்க்ள் தோண்டி, வரத்துக் கால்வாய், ஷட்டர்சும் a.
அமைக்க நல்ல திட்டம் இருக்கிறதென்று சொல்கிறார்கள்.

[Sri K. Ramachandran] [14th March 1960

இவற்றையெல்லாம் அசரப் போட்டுவிடாமல், உடனடியாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்பக் கட்டத்திலேயே முடித்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மைனர் இர்ரிகேஷனைப் பொருத்த வரையில் நிறைய கண்மாய்கள் வரத்துக் கால்வாய்கள் எல்லாம் செப்பனிடப்பட வேண்டிய நிலைமையில் இருக்கின்றன. 'கண்மாய்களைச் செப்பனிடுவதோடுகூட வரத்துக் கால்வாய்களையும் செப்பனிடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். இன்னொன்று. இனாம் கண்மாய்களை விலக்கிவிடுவது என்கிற நிலைமையையும் நீக்கவேண்டும். எந்தக் கண்மாய்களாக இருந்தாலும் அவற்றையெல்லாம் செப்பனிடவேண்டும். இந்தக் கண்மாய்கள், வரத்துக் கால்வாய்கள் இவற்றைச் செப்பனிடும் வேலைகளை உணவு உற்பத்திப் பெருக்கு டிபார்ட்மெண்டின்கீழ் விட்டுவிடுவது நல்லது என்று சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அடுத்தாற்போல் குளங்களை ஆழப்படுத்துகிற திட்டம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இது சில்ட் கிளியரன்சுக்கு உதவியாக இருக்கும். அதுவும் ரொம்ப முக்கியமான விஷயம்.

(Deputy Speaker in the Chair.)

இன்றைக்குப் பல கண்மாய்கள் எப்.டி.எல். செய்யப்படாமல் இருப்பதுதான் பெரிய விசேஷ பிரச்சனையாக இருக்கிறது. ஆனால் இந்த இன்டென்சிவ் இர்ரிகேஷன் மூலமாகக் குளத்தை ஆழப் படுத்துவதனால் நல்ல பலன் ஏற்படும் என்று சொல்லிக்கொண்டு இந்தத் திட்டத்தை இதர பகுதிகளுக்கும் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தொழிலைப் பொருத்தவரையில் நான் பார்ப்பது எல்லாம் மேஜர் இண்டஸ்ட்ரிகளில் சர்க்கார் பங்கு மிகக் குறைவாக இருக்கின்றன. மாநில அரசாங்கம் அங்கும் இங்குமாக மிகக் குறைந்த பங்கே வைத்துக்கொள்ளுகின்றனர். இவர்களே நேரிடையாக ஒரு பெரிய தொழிலை எடுத்து நடத்துகிறார்கள் என்று பெருமைபடக்கூடிய அளவுக்கு பட்ஜெட் உரையிலே எதுவுமே காண முடியவில்லை. அதுவும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் ஒரு தொழில் திட்டம் என்று அறிவிப்பதை நாம் பார்க்கிறோம். அந்த முறையில் சர்க்காரே பப்ளிக் செக்டாரில் பல தொழில்களை எடுத்து நடத்தக்கூடிய நிலைமையை நாம் உண்டாக்க வேண்டும். அதற்கு வேண்டிய வழிவகைகளைக் காணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுகூட பிரைவேட் செக்டாரில் இருந்து அதிகமான தொழில்களை ஆரம்பித்திருக்கக்கூடிய பகுதிகளிலேயே இந்தத் தொழில்களை ஆரம்பிக்காமல் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கக்கூடிய பிரதேசங்களில் சர்க்காரே பப்ளிக் செக்டாரில் பல பெரிய தொழில்களை ஆரம்பிக்கவேண்டுமென்று நான் இந்தச் சபையில் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்டதொரு



14th March 1960] [Sri K. Ramachandran]

கொள்கையை சர்க்கார் ஏற்றுக்கொண்டால்தான் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் இருக்கக்கூடியவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

சாலைகளைப் பொருத்தவரையில் ரொம்பவும் குறைவாகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அதிகமாக ஒதுக்க வேண்டும். சென்ட்ரல் ரோட் பண்டில் இருந்துகூட கடந்த நான்கு வருஷங்களுக்கு 204 லட்சம் ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது. ஐந்தாவது ஆண்டுக்கு 15 லட்சம்தான் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். கார்ப்பொரேஷனைப்பற்றி ரொம்பக் கவலைப்படுகிறார்கள். அதுவும் கவலைப்படக்கூடிய விஷயமாக இருந்தாலும் கிராமாந்திரங்களில் இருபத்தைந்து, முப்பது மைல்களுக்கு நல்ல ரோடுகளே கிடையாது என்கிற நிலைமை நீடிப்பதைப் பார்க்கும்போது சர்க்கார் இவ்விஷயத்தில் அசிரத்தையாக இருப்பதாகவே நான் நினைக்கிறேன். சென்ட்ரல் ரோடு பண்டில் இருந்து நான்கு வருஷங்களுக்கு 204 லட்சம் ரூபாய் ஒதுக்கிவிட்டு ஐந்தாவது வருஷத்திற்கு மட்டும் 15 லட்சம் ஏன் ஒதுக்கவேண்டும்? இன்னும் ஐம்பது, அறுபது லட்சம் வேண்டும் என்று கேட்டு வாங்கவேண்டும். அதற்குத் தேவையான பணத்தை வாங்கி, நல்ல ரோடுகளை அமைப்பதற்குத் தக்க வழிவகைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்த வரையில் மிட்-டே மீல்ஸ் ஸ்கீம் மிகவும் நல்ல திட்டம். ஆனால் அவ்வினத்தில் நாம் செலவழிக்கிற ஒவ்வொரு பைசாவும் ஏழை மக்களுக்குப் போய்ச் சேருகிறது என்றால்தான் நாம் திருப்திப்பட முடியும். அவ்வாறு இப்போது திருப்திப்படுவதற்கில்லை. திருப்திக் குறைவாகத்தான் இருக்கிறது. பலவிடங்கள்—நான் வேண்டுமென்றே சொல்லவில்லை—சரியான முறையில் அத்திட்டம் நடப்பது இல்லை. இந்தத் திட்டத்தில் மிகவும் கண்காணிப்பாக இருக்கவேண்டும். இந்தத் திட்டத்தினால் குழந்தைகள் பயன் அடையவேண்டும் என்கிற முறையில் நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். நான் ஒரு யோசனைகூடச் சொல்வேன். இப்போது பஞ்சாயத்து பூராவாக அமைந்து வருகிறது. இத்திட்டத்திற்காக சர்க்கார் 2 கோடி செலவு செய்தால் பப்ளிக் டொனேஷன் 1½ கோடி வரவேண்டும் என்று சொல்கிறோம். அப்படி இருக்கக்கூடிய இந்தப் பெரிய திட்டத்தை பஞ்சாயத்தின் மூலமாக ஏன் அமுல் நடத்தக்கூடாது? மிட்-டே மீல்ஸ் ஸ்கீமை அவர்களிடம் நடத்தும்படியாக விட்டுவிட்டால் ஓரளவுக்கு இதில் வெற்றி அடைய முடியும் என்று சொல்லிக்கொண்டு கவனமாக இத்திட்டத்தை நல்ல முறையில் அமுல் நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையெல்லாம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொருத்தவரையில் நாம் அதிகமாக விஸ்தரித்துக்கொண்டு வருகிறோம். குறிப்பாக ஒரு கிராமத்திற்கு வீட்டு வசதிக்காக மின்சாரம் விஸ்தரிப்பது என்பதைக்

[Sri K. Ramachandran] [14th March 1960]

காட்டிலும், விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காகப் பம்பு செட்டுகளுக்காக வேண்டும் என்று கேட்டால் உடனடியாக விஸ்தரித்துக் கொடுக்கக்கூடிய நிலைமையில் அந்த இலாகா செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்டு கவுன்சில் இப்போது வருகிறது. அதில் இருந்து பல கமிட்டிகளைக் கலைத்துவிடுகிறோம். அதற்கு முன்னால் ஏற்பட்டிருக்கும் அனுபவங்களை வைத்து ஒரு குறிப்புச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஜில்லா டெவலப்மெண்டு கவுன்சில்களுக்குப் பணம் ஒதுக்கும்போது ஆங்காங்கு உள்ள தேவைகளைக் கவனித்து அவற்றுக்குத் தகுந்தாற்போல நிதி ஒதுக்கித் தரவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இல்லாத பட்சத்தில் ஒரு பக்கம் குறைவான அபிவிருத்தியை அடைந்திருக்க, இன்னொரு பக்கம் அதிகமான அபிவிருத்தியை அடைந்து வருகிறது என்கிற புகாரைத்தான் நான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே இனிமேல் வரப்போகிற ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில்களுக்கு தேவைக்கு ஏற்றாப்போல கணிசமான நிதி ஒதுக்குவதற்கு முன்வரவேண்டும். அதுவும் சற்று பின் தங்கிய பகுதிகளாக இருந்தால் கொஞ்சம் அதிகமாகவே நிதி ஒதுக்கித் தகுந்த உதவி செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நிர்வாகத்திலே இன்றைக்கு இருக்கக்கூடியவர்களுக்கு சம்பளம் அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஓரளவுக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவு அவசியமாகக் கொடுக்கவேண்டும். அதிகமாகச் சம்பளம் வாங்குகிறவர்கள் சம்பளத்தைக் குறைக்கலாம். ஏதாவது வரி கொடுங்கள் என்று சொல்லலாம். அது ஒரு விஷயம். ஆனால் நிர்வாகத்தின் நிலைமை இன்றைக்கு அவ்வளவு திருப்திகரமாக இல்லையென்ற குறிப்பு நான் சொல்ல விரும்புகிறேன். நிறைய 'டிலே' ஏற்படுகிறது. ஒரு பேப்பர் எழுதினால் ஐந்து மாதம், ஆறு மாதமானாலும் கூட அதற்குப் பதில் வருவது கிடையாது. லஞ்சம் பூராவும் போய்விட்டது என்று சொல்லி பெருமைப்படக்கூடிய நிலைமையில் இல்லை. எந்தத் துறையிலும் கீழே எப்படி இருக்கிறதோ அப்படியே தான் மேலேயும் இருக்கிறது.

குறிப்பாக எங்கள் பகுதியில் 1950-வது வருஷத்தில் சாங்ஷன் செய்யப்பட்ட ஆஸ்பத்திரி இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. பத்து வருஷங்களாகிவிட்டது. இன்னும் பள்ளிக்கூடமாக இருந்தாலும் அப்படித்தான், இப்படி அட்மினிஸ்ட்ரேஷனில் இருக்கக்கூடிய காலதாமதத்தை குறைக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு நான் முடித்துக் கொள்கிறேன்.

*** SRI P. URKAVALAN:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த பட்ஜெட்டை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். விவசாயம்தான் இந்த நாட்டில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. பெரும்பாலும் விவசாய மக்கள் வாழ்கிற நாடு இது என்பதை அனுசரித்து விவசாயத் துறைக்கு முதல் இடம்



14th March 1960] [Sri P. Urkavalan]

கொடுக்கப்பட்டிருக்கிறது. பெரும்பாலான மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்வது கூட நம் மாகாணத்தில் விவசாயத் துறை அபிவிருத்தி அடைந்து இருப்பதைத்தான் காட்டுகிறது. நூற்றுக்கு 75 பேர் விவசாயம் செய்துதான் ஜீவனம் பண்ணக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள் நிலை ஒரு செண்டு நிலம் கூட உரிமையாக, உடமையாக இல்லாத நிலைமையில் அநேக விவசாயிகள் இருக்கிறார்கள். அந்த நிலையை மாற்றுவதற்குப் புறம்போக்கு நிலங்கள் என்று—ஏரிப் புறம்போக்கு, ஆற்றுப் புறம்போக்கு, ஓடைப் புறம்போக்கு—என்று இருக்கக்கூடிய நிலங்களை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் இப்படிச் சாகுபடி செய்யப்படாமல் இருக்கின்றன. அந்த நிலங்களை எல்லாம் கூட்டுறவு முறையில் சாகுபடிக்குக் கொண்டுவர சர்க்கார் முயற்சி செய்யவேண்டும். கூட்டுறவு முறை நல்ல முறையில் நடைபெறாது என்று பலர் கூறுகிறார்கள். அப்படிக் கூறுகிறவர்களுக்கு விவசாயம் என்ன என்றே தெரியாது. ஆகவே, இத்திட்டத்தை நாம் பரிசீலனை பண்ணி, கூட்டுறவு விவசாயப் பண்ணைகளை ஆங்காங்கு ஏற்படுத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்கு முன் வரவேண்டும். விவசாயத் துறைக்கு முக்கியமாக மின்சாரம் அவசியம். மின்சாரத்தை எடுத்துக் கொண்டால் அநேகமாக கிராமங்களுக்கு விஸ்தாரம் பண்ணியிருக்கிறோம். மேலும் விவசாயத்திற்கு மோட்டார் வைத்துக் கொண்டிருக்கிறோம். இருந்தபோதிலும் கூட விவசாயத்திற்கு நாம் மின்சாரம் ஷிப்ட் முறையாகத்தான் கொடுக்கின்றோம். விவசாயத்திற்கு மின்சாரம் மிகவும் அவசியம். மின்சாரம் ஆங்காங்கு கிராமங்களில் விஸ்தரிப்பு பண்ணிக்கொண்டிருக்கிறோம். மேலும் விவசாயத்திற்கு மோட்டார் வசதி செய்து கொடுக்கிறோம். இருந்தாலும் விவசாயத்திற்கு மின்சாரம் ஷிப்ட் முறையாகக் கொடுக்கப்படுகிறது. தொழிற்சாலைக்கு பகல் நேரத்திலே கொடுத்துவிடுவதனால் விவசாயத்திற்கு இரவில் கிடைக்கிறது. இதனால் விவசாயம் மிகவும் பாதிக்கப்படுகிறது. ஆகவே இதை மாற்றி தொழிற்சாலைக்கு இரவிலே கொடுத்துவிட்டு விவசாயத்திற்கு பகலிலே கொடுத்தால் நல்ல முறையிலே விவசாயம் செய்வதற்கு ஏதுவாகும்.

விவசாயத்திற்கு நீர்ப்பாசன திட்டங்கள் மிகவும் அவசியம் ஆகும். பெரிய பல நீர்ப்பாசன திட்டங்கள் கட்டியிருக்கிறார்கள். சிறிய நீர்த்தேக்கங்கள் கட்டியிருக்கிறார்கள். இன்னும் நம் ராஜ்யத்தில் ஒரே ஒரு பெரிய திட்டம்தான் இருக்கிறது. அதுதான் பரம்பிக்குளம் திட்டமாகும். அதை இப்போது கனம் நிதி மந்திரி அவர்கள் பட்ஜெட்டிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த திட்டத்தைப்பற்றி கேரள ராஜ்யத்துடன் கலந்தே பேசி அதை கொண்டு வரவேண்டுமென்று அபிப்பிராயத்தில் இருக்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள்.

இந்தத் திட்டத்தின் மூலம் சர்க்கார் சங்கரன்கோவில், கோவில்பட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் போன்ற இடங்களுக்கு இரண்டு மூன்று லட்ச ஏக்கருக்கு பாயக்கூடிய தண்ணீர் இருக்கிறதென்று

கூறியிருக்கிறார்கள். இதை சர்க்கார் உடனடியாக தீவிரமாக கொண்டுவந்து வாழும் மக்களுக்கு பயன்படுத்த வேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

குளங்கள் மராமத்து செய்வதில் சர்க்கார் மிகவும் அக்கரைக் காட்டியிருக்கிறார்கள். இது வரவேற்கத் தக்கதுதான். ஆனால் சொற்ப குளங்கள்தான் மராமத்து செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் கூறியிருக்கிறார்கள். மராமத்து செய்யப்படவேண்டிய குளங்கள் லட்சக்கணக்காக இருக்கின்றன. அங்கு நீர்ப்பிடிப்பு வெகு விஸ்தாரமாக இருப்பதை நாம் சுருக்கமாக வழிப்படுத்தி இந்த நீர்ப்பிடிப்பு உள்ள இடங்களை விவசாயத்திற்கு பயன்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த முறையை சீக்கிரம் கொண்டுவந்து பயன்படுத்த வேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

புது வரி இல்லாமல் இருந்த வரியையும் எடுத்துவிட்டு இன்று சர்க்கார் நல்ல முறையிலே பணியாற்றி இருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் நன்கு தெரியும். அதோடுகூட சமுதாயநல திட்டத்தின் அபிவிருத்தி ஏரியாவில் நாம் அளவுகடந்த பணத்தை செலவு செய்துக்கொண்டிருக்கிறோம். அங்கு படித்தவர்களுக்கு வேலை கொடுக்கிறோம். அங்கு செலவு செய்யும் பணத்தை நல்ல வழியில் பயன்படுத்துவதற்கு நாம் முன்வரவேண்டும். அங்கு ஒரு சில படித்தவர்களை திடீரென்று சமுதாயநல திட்ட அதிகாரிகள் என்று போட்டுவிடுகிறார்கள். அவர்களுக்கு கிராமங்களில் போய் என்ன செய்வதென்று தெரியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பெரும்பாலும் கிராம சேவக் என்று பயிற்சி கொடுத்து அவர்களை கிராம சேவை செய்வதற்கு அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு அங்கத்தினர் குறிப்பிட்ட மாதிரி அவர்கள் கட்சிப் பிரசாரம் செய்வதற்கு ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் எல்லோரையும் உடனடியாக வீட்டுக்கு அனுப்பி வைக்கவேண்டும். எந்த அதிகாரிகள் எவராக இருந்தாலும்—சமுதாயநல திட்டத்திற்கு பாடுபடும் அதிகாரியோ, கிராம சேவக் களோ கட்சி பிரசாரம் செய்வது என்றால் அவர்களை வீட்டுக்கு அனுப்புவதோடு மட்டும் அல்லாமல் அவர்கள் மேல் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தமிழை ஆட்சி மொழியாக கொண்டு வந்து நல்ல முறையிலே பயன்படுத்தி இருக்கிறோம். இது எல்லோரும் வரவேற்கத்தக்கது. கல்வி விஷயத்தில் ஏழை மாணவர்களுக்கு மத்தியான உணவு அளித்து வருகிறோம். அதன் பலனாக லட்சக்கணக்கான பிள்ளைகள் நல்ல முறையிலே பயன்பட்டு வருகிறார்கள். கனம் அமைச்சர் அவர்கள் மேலும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

* SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : கனம் தலைவர் அவர்களே, 1960-61-ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையைக் கனம் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்ததை வரவேற்று ஒரு சில



வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் நிறைவேற்றும் தருவாயில் இருக்கிறோம். இந்தத் திட்டத்தினுடைய வெற்றியை எடுத்துக் காட்டுகிற ஒரு அளவுகோலாக இந்த அறிக்கை அமைந்திருக்கிறது என்று நாம் குறிப்பிட வேண்டும். அதோடுகூட இரண்டு ஐந்தாண்டு திட்டங்களிலே இது வரையில் நாம் சென்று இருக்கும் பாதையிலே நாம் வெற்றி கண்டிருக்கிறோம். நம் நாட்டில் மிகவும் முக்கியமானது விவசாயம். அதற்குப் பின்பு மின்சாரம், தொழில் அபிவிருத்தி. அப்படி பலவகையிலே பார்த்தால் இன்று நாம் எடுத்துக்கொண்ட திட்டம் வெற்றி திட்டமாக அமைந்திருக்கிறது என்பதை இதிலிருந்து பார்க்கிறோம். எடுத்த எடுப்பிலேயே அழுகும் பொருளுக்கு வரியை ரத்து செய்து இருப்பது ஒரு முக்கியமான அம்சம் ஆகும். அழுத குரல்கள் எல்லாம் அமர்த்தப்பட்டிருக்கிறது. பாலுக்கு அழும் குழந்தைகளுடைய அழுகையையும் நிறுத்தும் படியான வகையிலே பாலுக்கு இருக்கும் வரியையும் ரத்து செய்வதற்கு ஏற்ப நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

விவசாயத்தை எடுத்துக்கொள்ளும்போது நாட்டின் பொருளாதாரத்திற்கு அடுத்தபடியாக இருப்பது விவசாயம்தான். மேலும் சமுதாயத்திலே அடித்தளத்திலே இருக்கும் விவசாயிகள் 100-க்கு 70 பங்கு மேல் நம் நாட்டில் இருக்கிறார்கள். அவர்களுடைய முன்னேற்றமே சமுதாயத்தின் முன்னேற்றமாக இருக்கும் என்று ஆங்காங்கு சர்க்கார் விவசாயத்திற்கு முக்கிய இடம் கொடுப்பது மட்டும் அல்லாமல் இந்தியாவிலுள்ள அத்தனை மாகாணங்களையும் விட அதிகமாக நம் மாகாணத்தில் முன்னேற்றத்தை கண்டிருக்கிறோம் என்பதை நாம் பார்க்கிறோம். அதிகப்படியாக விளைச்சலைக் காட்டியதோடு மட்டுமல்லாமல் இன்னும் ஏக்கருக்கு அதிகப்படியாக விளைச்சலைக் காட்டக்கூடிய ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளை விட அதிகமாக மாற்றத்தைக் காட்டவேண்டுமென்ற ஒரு விருப்பத்தையும் பல நடவடிக்கையும் எடுத்துக்கொண்டிருப்பதையும் நாம் காணுகிறோம். சிறிய நீர்ப்பாசன திட்டங்களில் வெற்றி கண்டிருக்கிறோம் என்பதை நாம் எல்லோரும் அறிகிறோம். என்னுடைய தொகுதியை எடுத்துக் கொண்டாலே, மூன்று கால்வாய் திட்டங்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் கனம் அமைச்சர் அவர்கள். அதாவது மானூர் திட்டம், மாராந்த திட்டம், பள்ளிக்கடை திட்டம் ஆகிய மூன்று கால்வாய்களை பழுதுபார்க்கும் திட்டங்களாகும். மானூர் திட்டத்தின் மூலமாக ஒரு லட்சத்திற்குள்தான் பணம் செலவழித்திருக்கிறார்கள். அப்படி இருந்தும் இந்த வருஷத்தில் இரண்டு போகம் விளையக்கூடிய அளவிற்கு தண்ணீர் வரக்கூடிய முன்னேற்றத்தை கண்டிக்கிறோம். ஒரு லட்சம் பெறுமான பயிர் இந்த இடத்தில் விளைய இருக்கிறது. ஆலங்குளம் கால்வாய் பற்றி கனம் அமைச்சரிடத்தில் எடுத்துச்சொல்லியிருக்கிறோம். அதை இந்த ஆண்டில் நிறைவேற்றி வைப்பார்கள் என்று நம்புகிறோம். நிறைவேற்றி வைக்கவேண்டுமென்றும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மூன்று ஆயிரம் கிணறுகள் வெட்டுவதற்கு 1960-61-ம் ஆண்டி மான்யமாகவும் கடனாகவும் கொடுப்பதாக அறிவித்திரு கிறார்கள். இது மிகவும் வரவேற்கத்தக்கது. மூன்று ஆயிர கிணறுகள் போதாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இந்தக் கிணறுகள் வெட்டுவதற்கு எக்ஸ் கிரிமினல் டிரைபினருக்கு இரண்டாயிரம் ரூபாய் மான்யம் ஆகவும் 1,000 ரூபாய் கடனாகவும் கொடுக்கும் திட்டத்தினால் பயன் பெறும் வண்ணம் சில பேர்கள் இதற்கு விண்ணப்பிந்திருந்தார்கள் விண்ணப்பித்திருந்தவர்களில் அதிகம் பேர்களுக்கு கிடைத்திருக் கிறது. இருந்தபோதிலும் இதிலேயும் ஒரு முட்டுக்கட்டை வந்து சேறுகிறது என்று அறிகிறேன். கிருஸ்தவமதத்தை சேர்ந்தவர் களுக்கு இந்தக் கிணறுகள் வெட்டுகின்ற திட்டத்தில் இடம் இல்லை என்பதை அறிய நாம் எல்லோரும் மிகவும் வேதனைப்படுகிறோம். கிருஸ்தவமதமாக இருக்கலாம். ஆனால் அவர்கள் பொருளா தாரத்தில் இந்துக்களையும், முஸ்லிம்களையும் விட அதிக முன்னிலையில் இல்லை என்பதை நன்றாக அறிகிறோம். ஆகவே முட்டுக்கட்டையான நிலை அவர்களுக்கு இருக்கக்கூடாது. மதத்தின் அடிப்படையிலே கிணறு வெட்டுவதற்கு மான்யம் கொடுக்கக்கூடாது. பொருளாதாரத்தின் அடிப்படையிலே எல்லோருக்கும் அதை கொடுக்கும்படியாக ஒரு தகவலை சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு உடனடியாக தெரிவிக்கவேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கூட்டுறவு இயக்கத்தின் மூலம் இரண்டு ஐந்தாண்டு காலத்தில் 85 சத விகித கிராமங்களில் 45 சத விகித மக்களுக்கு கடன் வசதி செய்துகொடுப்பது என்று திட்டமிட்டிருந்தோம். ஆனால் இந்த நடைமுறை ஆண்டிற்குள்ளாகவே எல்லா கிராமங்களிலும் கூட்டுறவு சங்கங்கள் அமைத்து ஆகவேண்டுமென்றும் 45 சத விகித மக்களுக்கு பயன் ஏற்படவேண்டுமென்றும் திட்டமிட்டு கடந்த ஆண்டிலே 19 கோடி ரூபாய் கடன் ஆக வழங்கப்பட்ட சென்றும் 1960-61-ல் 22.5 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தி இருப்பதாக கூறி இருக்கிறார்கள். இந்த வகையில் இது புரட்சி கரமானது என்றுகூட நான் சொல்ல விரும்புகிறேன். குத்தகைக்கு எடுத்து பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு யாதொரு நிபந்தனையின்றி அவர்களுக்கு கிணறு வெட்டுவதற்கு கடன் தொகை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து இருப்பது மிகவும் போற்றத் தகுந்த அம்சமாகும். இதில் இன்னும் ஒரு சிறு குறை இருக்கிறது. சிறிய நீர்பாசனங்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய் அள்ளி இறைத்திருக்கிறோம்.

நாம் சிறு நீர்ப்பாசனங்களுக்காக அள்ளி இறைத்தபோதிலும், அந்தப் பாசனத்திற்காக நாம் விவசாயிகளுக்கு உரம் மட்டும் கொடுத்தால் போதாது, கடன் வசதி கொடுத்தால் மட்டும் போதாது, இன்னுமொரு பாதையில் கவனம் செலுத்தவேண்டும். உர வசதி செய்து கொடுக்கிறோம், கடன் வசதி செய்து கொர்டுக்கிறோம், ஆனால் உரத்தை அவ்ர்கள் பயிரிடும் நிலத்திற்கு எடுத்துச் செல்வதற்கு நல்ல பாதை வசதிகள் இல்லை.





பாதைகள் நன்றாகயில்லை. பாதையின் நடுவில் வாய்க்கால்கள் இருக்கும். எனது தொகுதியில் இப்படிப்பட்ட கஷ்டங்களினால் விவசாயிகள் பலயிடங்களில் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். ஆகவே எங்கெங்கெல்லாம் சிறு சிறு பாதைகள், அல்லது சிறு சிறு பாலங்கள் இவைகள் அவசியமோ அவைகளை உடனடியாக பி.டப்ளியூ.டி. செய்து கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் சரியான பாதைகள் அமைத்துக் கொடுத்தால்தான் நாம் விவசாயிகளுக்கு கொடுக்கக் கூடிய உர வசதி, கடன் வசதி இவைகளை அவர்கள் சரியானபடி பயன்படுத்த முடியும் என்று இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன். அடுத்தபடியாக, நெல்லையைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். மற்ற ஜில்லாக்கள் எல்லா வற்றிற்கும் விவசாயத்திற்காக அதிகப்படியான தொகை செலவு செய்திருப்பதாக இந்த அறிக்கையில் காண்கிறோம். ஆனால் இதில் நெல்லையைப் பற்றி குறிப்பிடத்தக்க விஷயம் ஒன்றும் இல்லை என்பதை நினைக்கும்போது என் மனம் வேதனைப் படுகிறது. பரம்பிக்குளம் வருகிறது, ஆனால் எங்களுக்கோ ஒரு பம்பை யாராவது வருமோ என்று எதிர்பார்க்கிறோம். அதுபற்றி ஒரு வார்த்தையும் இதில் கூறப்படவில்லை. மேற்கிலிருந்து வரும் ஆறுகளின் தண்ணீரை விவசாயத்திற்கு உபயோகிக்க அங்குள்ள அரசாங்கத்துடன் இன்னும் பேசி முடிக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். அப்படிப்பட்ட ஆறுகள் நெல்லையில் அதிகமாக யிருக்கின்றன. புனலாறு, கல்லாறு, நாமநதி, கடானாறு, சேர்வ ராயன் என்பன போன்ற திட்டங்கள் பல இருக்கின்றன. அவைகளெல்லாம், வருகிறது வருகிறது என்று என்ஜினியர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, உடனடியாக அவைகளுக்கு எவ்வளவு தூரம் முக்கியத்துவம் கொடுக்க முடியுமோ அப்படிக் கொடுத்து அவைகளை உடனடியாக நிறைவேற்றிக்கொடுத்து நெல்லையிலுள்ள விவசாயிகளுக்கு உதவிபுரியுமாறு கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் நெல்லையில் உள்ள விவ்சாயிகள் முன்னேற்றம் காண முடியும். அடுத்தபடியாக, போரிங் வெல்ஸ் எங்கள் ஜில்லாவில் இல்லை. மற்ற ஜில்லாக்களில் உள்ளதைப்போன்று கிணறுகள் ஆழப்படுத்தும் திட்டம் நெல்லை மாவட்டத்திற்கு இல்லை. சங்கரன்கோவில், நாங்குனேரி போன்ற பஞ்சப் பகுதி களுக்கு ஆற்று நீரும் கிடையாது. அந்த இடங்களில் ஊற்று நீரைக் கொண்டாவது விவசாயிகளுக்கு தேவையான, விவசாய முன்னேற்ற திட்டங்களை வகுத்துக் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் நெல்லை விவசாயிகள் முன்னேற்றம் காண முடியும். குளங்களை ஆழப்படுத்துவது போன்ற திட்டங்களில் அதிகமாக முன்னேற்றம் அடைந்து இருக்கிறது. எங்கள் ஜில்லாவில், மைனர் இரிகேஷன் ஸ்கீமில், எவ்வளவோ குளங்கள் எங்கு பார்த்தாலும் ஆழப்படுத்தப்பட்டிருக்கிறது, என்பதை மக்களே சொல்கிறார்கள். அநேகமாக எல்லா குளங்களும் ஆழப்படுத்தப்பட்டு விட்டன. அப்படியில்லாதது, அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் இருக்கும். எங்கள் ஜில்லாவில், மைனர் இரிகேஷன் திட்டம் மிகவும் முன்னேற்றகரமான விதத்தில் அமைந்திருக்கிறது என்று

நான் சந்தோஷத்துடன் சொல்வேன். அடுத்தபடியாக, தண்டத் தீர்வையைப் பற்றி சொல்லாமல் இருக்க முடியாது. இருபது ஆண்டுகளுக்கு மேலாக தாம்பரவர்ணிப் பாசனத்தில் உள்ள நிலங்களுக்கு, அண் ஆத்தரைஸ்ட் இடங்களில் பயிர் செய்து வந்திருக்கிறார்கள். அவைகளைச் சுற்றி நஞ்சைகளும் இருக்கும், நடுவில் புஞ்சையும் இருக்கும். நடுவில் உள்ள நிலத்தில் தண்ணீர் வந்து தேக்கமுறுவதைத் தடுக்க முடியாமல் இருக்கும். உழைப்பையும், தன் மனதில் ஊக்கத்தையும் வைத்துக்கொண்டு ஒருவன் பயிரிடும்போது, அதைப் பயிரிட வேண்டாமென்று ஒருவனும் தன்னை கட்டுப்படுத்திக் கொண்டிருக்க முடியாது. அங்கு பயிரிடக் கூடாதென்று சர்க்கார் சொல்கிறார்கள். அவர்கள், அங்கு பயிர் செய்பவர்கள். அங்கு பல்லாண்டுகளாக பயிர் இட்டுக் கொண்டு வந்து அதன் பயனை அடைந்தவர்கள். ஆகவே, இதில் இப்பொழுதும் பயிரிடுகிறார்கள். வெள்ளையர்கள் இந்த நாட்டை ஆண்டபோது, சொல்லப்படுகிறது, பதினைந்து வருடங்களுக்கு ஒரு முறை இதற்கு ஒரு கமிட்டி நியமித்து எதைச் சுற்றி எங்கெங்கு நஞ்சை இருக்கிறது, புஞ்சை இருக்கிறது, குளங்கள், நீர் நிலைகள் இவைகள் மராமத்து செய்யப்பட்டனவா என்றெல்லாம் ஆராய்ந்து பார்த்து எந்த நிலங்களை அயன் நஞ்சையாக்க முடியுமோ அதை அயன் நஞ்சையாக்கி பட்டா போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அந்த நிலை சுதந்திரம் பெற்று இவ்வளவு ஆண்டுகளாகியும் ஏற்படவில்லை என்ற குறை விவசாயிகளுக்கு இருக்கிறது. ஆகவே, அதற்காக ஒரு ஸ்பெஷல் சர்வே டிவிஷனை நெல்லை மாவட்டத்திற்கென்று போட்டு எந்தெந்த நிலங்கள் எங்கெங்கு இருக்கிறது, எத்தனை வருடங்களாக யார் யார் அதை பயிரிடுகிறார்கள், அதைச் சுற்றியுள்ள நிலை என்ன, அவைகளின் பாசன வசதி என்ன, அவைகள் எத்தனை ஆண்டுகளாக பயிரிடப் படுகிறது, அதனால் அயல் நஞ்சைகளுக்கு ஏதாவது பாதகம் ஏற்பட்டிருக்கிறதா அல்லது தீய்ந்து போயிருக்கிறதா அல்லது வரி வஜா செய்யப்பட்டிருக்கிறதா என்றெல்லாம் ஆராய்ந்து பார்த்து அம்மாதிரியான நிலங்களுக்கு விலக்களித்து நஞ்சைத் தீர்வை போட்டு ஊக்கம் அளிக்க வேண்டும். (பெல்) கடைசியாக, சமுதாய நலத் திட்டங்களை கட்சி பலத்திற்காக நாங்கள் பயன் படுத்துகிறோம் என்று சொல்வதை நான் மறுக்கிறேன். எனக்குத் தெரியும், நெல்லை மாவட்டத்தில் ப்ளாக் இருக்கிற இடங்களில் அங்குள்ள எந்த சேவக்கைப் பார்த்தாலும் ஆளும் கட்சிக்கு எதிராகத்தான் இருக்கிறார்கள் என்பதை நாங்கள் நன்கு அறிவோம். எந்த ப்ளாக் ஆபீஸிலும் மாற்றார் கட்சிக் கொடிதான் அங்கு பறக்கிறதே தவிர ஆளும் கட்சியின் கொடி அல்ல. கிணறு போன்றவைகளின் விஷயத்தில் கூட, காங்கிரஸ்காரர்கள் பஞ்சாயத்து போர்ட் மெம்பர்களாகவோ அல்லது தலைவர்களாகவோ இருக்கிற இடங்களில் கிணறு வசதி போன்றவைகள் செய்து கொடுக்காது, தலைவர்கள் எதிர் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தால் அங்குதான் கிணறுகள், அந்த ஊர்களில்தான் கொடுக்கிறார்கள், ஆனால் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் இருக்கும் இடங்களுக்கு மேற்படி வசதிகளைச்





செய்து கொடுக்க மறுக்கிறது என்பதை பிரத்தியட்ச உதாரணங்களுடன் நான் எடுத்துக் காட்ட முடியும் என்று சொல்லிக் கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **SRI T. SAMPATH :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சபைமுன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் வரவு செலவுத் திட்டத்தையும், நிதி நிலை அறிக்கையையும் ஆதரித்து சில கருத்துக்களை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். பட்ஜெட்டை எந்தக் கண்ணோட்டத்துடன் பார்த்தாலும் அது நல்ல வகையில் அமைந்திருப்பதாகத்தான் நான் எண்ணுகிறேன். ஏற்றத்தாழ்வு இல்லாமல் சமநிலையில், க்ஷேமநல ராஜ்யத்திற்கு எந்த வகையில் ஒரு வரவு செலவுத் திட்டம் அமைய வேண்டுமோ அந்த வகையில் இது அமைந்திருக்கிறது. ஒரு மாகாணத்தின் வரவு செலவுத் திட்டத்தின் அளவைப் பொறுத்துத்தான் அந்த ராஜ்யத்தின் பொருளாதார உயர்வு தாழ்வு இருக்க முடியும் என்பது பொருளாதார நிபுணர்களின் சித்தாந்தம். அந்தக் கண்ணோட்டத்துடன் நமது வரவு செலவுத் திட்டத்தைப் பரிசீலனை செய்து பார்த்தால் வருவாய் அளவில் பெருத்த முன்னேற்றம் அடைந்திருப்பதை நாம் காண்கிறோம். அதே அளவில் செலவும் அதிகரித்து இருந்து இருந்தது. நமது ராஜ்யத்தின் வருவாய் 1938-39-ல் 16 கோடியாக இருந்தது. 1954-55-ல் ஆந்திர ராஜ்யம் நம்மை விட்டுப் பிரிந்து செல்வதற்கு முன்பாக 44 கோடியாக அது பெருகியுள்ளது. ஆனால் சென்ற ஆண்டில் மதிப்பிடப்பட்ட தொகை 73 கோடியாக பெருகியுள்ளது. அதேயளவில் திருத்தப்பட்ட மதிப்பீட்டின் வருவாய் 78 கோடியாக பெருகியுள்ளது. 1960-61-ல் மதிப்பிடப்பட்டிருக்கும் வருவாய் 80 கோடியாக இருக்கிறது. 1953 முதல் 1957 வரை பற்றாக்குறை பட்ஜெட்டாக இருந்தது நம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் 1957-ல் இருந்து 1959 வரையில் உபரி பட்ஜெட்டாக இருக்கிறது. இந்த வருடம் மட்டும் சொற்பமாக பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நாம் நமது நிதியமைச்சர் அவர்களை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். நாம் கைக்கொண்ட திட்டங்கள் காரணமாக கிராமங்களில் நல்லதொரு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை யாராலும் மறுக்கமுடியாது. அதிகப்படியான உணவு உற்பத்தி, மின்சார உற்பத்தி, நீர்பாசன வசதிகள் காரணமாக அதிகப்படியான நிலங்கள் விவசாயத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் இந்தத் திட்டத்தின் அடிப்படையான நோக்கங்களின் உண்மையை நாம் கண்டோமா என்ற பிரச்னை எழலாம். இதைத்தான் நேற்றையதினம் பிரஜா சோஷியலிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். திட்டங்களின் அடிப்படையான நோக்கம் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர வேண்டும் என்பதுதான். வாழ்க்கையில் மக்களுக்கு, சம உரிமை, சம சந்தர்ப்பம், எல்லோருக்கும் கிடைக்கவேண்டும். அதை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதுதான். அரசாங்கம் அதற்கு வேண்டிய சூழ்நிலையை அவசியம் ஏற்படுத்த வேண்டும். அதற்கு, அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது. அந்த வகையில் இந்த பட்ஜெட்டை பரிசீலித்துப் பார்த்தால், அந்த நிலையை

ஏற்படுத்துவதற்கு இந்த பட்ஜெட்டில் வழிவகைகள் செய்யப் பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அப்படிப் பார்த்தால் பல துறைகளிலும் அதற்கு வழிவகைகள் செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் நிச்சயமாக சொல்ல முடியும்.

12 noon இருப்பினும் ஏழை மக்களை சம்பந்தப்பட்டவரையில் இந்த பட்ஜெட்டில் எதிர்பார்த்த சலுகை கொடுக்கப்படவில்லை என்ற புகார் சொல்லப்படுகின்றது. அந்த வகையில் பார்த்தால் இன்னும் ஏழை மக்களுக்கு என்று சில சலுகையை அதிகமாக கொடுத் திருக்கலாம் என்று எண்ணுகிறேன். உதாரணமாக அன்றாட வாழ்க்கைக்கு அவசியமான உணவு தான்யங்கள் மீது இப்போது இருந்து வருகின்ற விற்பனை வரியை நீக்கியிருந்தால் இன்னும் திருப்திகரமாக அமைந்திருக்கும் என்று சொல்ல ஆசைப் படுகிறேன். விற்பனை வரி சட்ட சம்பந்தமாக நடந்த விவாதத்தின் போது இதைப்பற்றி எல்லா அங்கத்தினர்களும் வற்புறுத்தி னார்கள். நமது அண்டை மாகாணங்களாக இருக்கக்கூடிய ஆந்திரம், மைசூர், கேரளம் போன்ற இடங்களில் எல்லாம் இந்த அன்றாட தேவைக்கு அவசியமாயிருக்கின்ற உணவுப் பொருள்கள் மீதுள்ள வரிகள் நீக்கப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக பெருத்த அளவில் வருவாய் பாதிக்காது என்று எண்ணுகிறேன். இப்போது நமக்கு 81 கோடி ரூபாய் வருமானத்தில் ஒரு கோடி ரூபாய் குறைந்து விட்டாலும் பாதமில்லை, உணவு தான்யங்களின் மீது போடப்பட்டிருக்கும் வரியை நீக்கினால் மக்கள் இன்னும் அதிக திருப்தியோடு இதை வரவேற்பார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்தாற்போல், விவசாயத் துறையில் ஏற்பட்டிருக்கும் அபி விருத்திகளைப்பற்றி இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள்ளாக நாம் ஆண்டு ஒன்றுக்கு 12 லட்சம் டன் உணவு உற்பத்தி அதிக மாக செய்தாக வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக் கிறது. அப்படியிருந்தும் ஒன்பது லட்சம் டன் தான் உணவு உற்பத்தி பெருக்க முடிந்திருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக் கிறது. இதற்கு காரணம் அதிகமாக ரசாயன உரம் கிடைக் காதது தான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நேற்று டாக்டர் மதுரம் அவர்கள் பேசும்பொழுது நாம் ரசாயன உரத்தை மட்டும் நம்பியிருப்பது சரியல்ல, என்று சொன்னார்கள். அவர் களுடைய கருத்தை நான் முற்றிலும் ஆதரிக்கிறேன். ரசாயன உரத்தை மட்டும் நம்பி நாம் விவசாயத்தில் ஈடுபடக்கூடாது. இயற்கை உரங்கள் அதிகமாக இருக்கின்றன. இதில் நாம் அதிக மாக கவனம் செலுத்த வேண்டும். நமக்கு அதிகமாக கிடைத்துக் கொண்டிருக்கிற பசுந்தழைகள் உரங்களை அதிகமாக நாம் பயன் படுத்திக் கொள்ளவேண்டும். அவ்விதம் நாம் இயற்கை உரத்தை அதிகமாக பயன் படுத்தினால் இப்போது இருப்பதை விட இன்னும் அதிகமாக உணவு உற்பத்தியை பெருக்க முடியும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆனால், இந்த ரசாயன உரம் சென்ற ஆண்டில் இரண்டு லட்சம் டன் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருந்தது. ஆனால் ஒரு லட்சம் டன் தான் வழங்கப்





பட்டது. ரசாயன உரம் வழங்கப்படுவதில் பலவிதமான குறைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதாவது அந்தந்த ஜில்லாக் களுக்கு ஒதுக்கப்படும் கோட்டா அந்தந்த ஜில்லாக்களை விட்டு வெளியே போகாமல் இருக்கக்கூடிய பாதுக்காப்பை மட்டும் அரசாங்கம் செய்து கொடுத்தால் அதுவே இது சம்பந்தமான பல குறைகளை போக்கும் என்று நான் நினைக்கிறேன். இது சம்பந்த மாக ஒரு ரிப்போர்ட்டை சமர்ப்பிக்கும்படி மத்திய அரசாங்கம் ஒரு கமிட்டியை நியமித்து, அந்தக் கமிட்டி ஆங்காங்கு பல இடங் களிலும் போய் விசாரணை செய்தது. அதிலும் நான் இதே கருத்தை வெளியிட்டேன். அதே போன்று நம்முடைய மாகா ணத்திலும் ரசாயன உரத்தை எப்படி விநியோகிக்கலாம் என்பதைப் பற்றியும், இதில் கலப்படம் சேர்க்காமல் பாது காத்துக்கொள்வது பற்றியும் பரிசீலனை செய்வதற்காக ஒரு கமிட்டியை அமைத்தால் நல்லது என்று என்னுடைய யோசனையை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், 1963-ம் ஆண்டில் தான் நெய்வேலியிலிருந்து யூரியா கிடைக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த காலம் வரையில் நிலைமையை நாம் சமாளித்தாக வேண்டும். ஆகவே இந்த நிலைமையை மத்திய அரசாங்கத்தினிடம் வற் புறுத்திச் சொல்லி இன்னும் நமது மாகாணத்திற்கு அதிக கோட் டாவை தரும்படி வழி வகை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், நிலங்களை பண்படுத்தும் திட்டங்களில், மண் வளப் பாதுகாப்பு திட்டங்களைப் பற்றியும் பல யோசனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. தற்போது இருக்கக்கூடிய ஏற்பாட் டின்படி சர்க்காரே எல்லா வேலைகளையும் செய்து முடித்துவிட்டு, பின்னால் அதற்கான செலவுத் தொகைகளை நிலச் சொந்தக்காரர் களிடமிருந்து வசூல் செய்துகொள்ளலாம் என்று திட்டமிடப் பட்டிருக்கிறது. ஆனால் இந்தத் திட்டத்தை மாற்றவேண்டும் என்றும் ஒரு யோசனை சொல்லப்பட்டிருக்கிறது. இந்த முறையை மாற்றுவதும் சரியல்ல என்று எண்ணுகிறேன். இதற்கு உதாரணமாக எங்கள் ஜில்லாவைத்தான் குறிப்பிடுகிறேன். வடி கால், பாய்கால் இவைகளை வெட்டிக் கொடுப்பதற்காக குடிமரா மத்து சட்டம் என்ற ஒரு சட்டம் இப்போது இருந்து கொண் டிருக்கிறது. ஆனால் இந்தச் சட்டம் ஏட்டளவில் தான் இருந்து கொண்டிருக்கிறதே தவிர அது சரியாக அமல் செய்யப்படுவதாக தெரியவில்லை. நிலச் சொந்தக்காரர்களிடம் ஒப்படைத்து விட்டால் இந்த வேலை சரியாக வெற்றிகரமாக நடக்காது என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். ஆகையினால் முன்பு இருந்ததைப் போலவே இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல் நீர்ப்பாசன விஷயமாக சில அபிவிருத்தித் திட்டங்கள் தரப்பட்டிருக்கிறது. சிறிய நீர்ப்பாசனத் திட்டத் திற்காக அரசாங்கம் அதிக அளவில் பணம் ஒதுக்கியிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் தஞ்சை ஜில்லாப் பொறுத்த மட்டில் இந்த சிறு நீர்ப்பாசன திட்டத்தில் யாதொரு பயனையும் அடைய முடியவில்லை. தஞ்சை ஜில்லாவில் வடிகால், பாய்கால்

வசதிகள் சரியாக இல்லை. அதன் காரணமாக நீரோட்டம் தடைப்
பட்டு விளைவுகள் அதிகமாக பாதிக்கப்படுகிறது. வாய்கால்கள்
மிகவும் சீர்கேடான நிலைமையிலிருக்கிறது. அது மட்டுமல்ல,
பிளாக்குகளில் சிறிய பாசன வசதிக்காக 40 ஆயிரம் ரூபாய்
ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் அந்தப் பணத்தை
வடிகால், பாய்கால், வாய்க்கால்கள் செப்பனிடுவதற்கு ( Salt
Clearance of Channels) உபயோகப்படுத்த வேண்டும் என்று சொன்
னால், அதற்கு விதிகள் இடம் கொடுக்கவில்லை என்று அதிகாரிகள்
ஆட்சேபனை சொல்லுகிறார்கள். இந்த வகையில் எங்கள் ஜில்லா
வில் சிறிய நீர்ப்பாசனத்தில் நன்மையை அடைய முடியவில்லை.
ஆகவே அரசாங்கத்திற்கு நான் சொல்ல பிரியப்படுவது என்ன
வென்றால் இந்தத் தொகையை இந்த வடிகால், பாய்கால் திட்டங்
களுக்கு ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member's time is up.

SRI T. SAMPATH : I will be finishing now, Sir. எங்கள்
ஜில்லாவைப் பொறுத்தளவில் நீர்ப்பாசன வசதிகளை பரிசீலனை
செய்வதற்கு ஒரு தனி இன்ஜினியரிங் யூனிட் ஒன்று ஏற்படுத்த
வேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.
எங்கள் ஜில்லாவில் சுமார் 14 லட்சம் ஏக்கர்கள் இருந்தும் உணவு
உற்பத்தியில் முன்னேற்றம் காணவில்லையே என்று உணவு மந்திரி
அவர்கள் குறிப்பிட்டார்கள். எங்கள் ஜில்லாவில் அதிகமான
பெருத்த அளவில் விவசாயம் செய்கிறார்கள். மற்றைய ஜில்லாக்
களில் சிறிய விவசாயத்தில் ஈடுபடுகிறார்கள். மூன்று ஏக்கர்,
நான்கு ஏக்கர் நிலத்தில்தான் விவசாயம் செய்கிறார்கள். தஞ்சை
யில் ஆறு ஏக்கர்களுக்கு குறைந்த விவசாயமே கிடையாது.
அந்த அளவில் பார்த்தால், தஞ்சை நல்ல முறையில்தான்
விவசாயத்தில் அபிவிருத்தி அடைந்து இருக்கிறது என்பது
விளங்கும். வசதியை மட்டும் செய்து கொடுத்தால் இன்னும்
அதிகமான அளவில் உணவு உற்பத்தியை பெருக்க முடியும் என்ற
அபிப்பிராயத்தை நான் சொல்ல விரும்புகிறேன். இந்த
இப்போது தஞ்சையில் இருக்கிற 14 லட்சம் ஏக்கர்களையும் இரு
போக நிலங்களாக மாற்ற முடியும் என்றும் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன். அரசாங்கம் ஷை நிலங்களை இரு போகமாக்கு
வதற்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுத்தால் முக்கியமாக
வாட்டர் சார்ஜில் 14 லட்சம் ஏக்கர் நிலங்கள் இரு போகமாக்கப்
படும். நிலச்சுவான்தார்களுக்குச் சலுகை காட்டினால் நிலங்களை
அதிகமாக இரு போக சாகுபடிக்கு கொண்டு வரமுடியும். இதன்
காரணமாக இப்போது இருப்பதை விட இன்னும் ஏக்கர்
ஒன்றுக்கு இரண்டு மூட்டை அதிகமாக விளைவு எடுக்க முடியும்
என்ற உறுதியையும் சொல்லிக்கொண்டு, அதற்கான வழி வகைகளை
அதி விரைவில் அரசாங்கம் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The hon. member has taken more time. Sri S. M. Annamalai will now speak.





* SRI S. M. ANNAMALAI : சட்ட மன்ற உதவித் தலைவர்
அவர்களே, 1960-61-ம் ஆண்டு வரவு செலவு திட்டம் சட்ட மன்றத்
தின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த வரவு செலவு
திட்டத்தைப் பார்க்கின்ற பொழுது ஒரு ஞாபகம் வருகிறது. இது
அழுகிப்போன வெங்காயத்தைப் போல்தான் இருக்கிறது.
அழுகிப்போன வெங்காயத்தில் உரிக்க உரிக்க தோல்தான்
இருந்து கொண்டிருக்கும். படித்து படித்து பார்த்த பின்னும்
இந்த வரவு செலவு திட்டத்தில் உண்மையில் பாமர மக்களுக்கு
யாதொரு விதமான பலனும் இல்லை என்றுதான் சொல்ல வேண்டி
யிருக்கிறது. அதற்கு காரணம், நிலங்களுக்கு உச்ச வரம்பு
1959-ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் வரும் என்று சொன்னார்
கள். அதுவும் வரவில்லை. அதற்கு அடுத்தபடியாக கைத்தறி
நெசவாளர்களுக்கு, தள்ளுபடி பணத்தையே நம்பி வாழ்ந்து
கொண்டிருக்கும் கைத்தறி தொழிலுக்கு நிரந்தரமான பரிகாரம்
எதுவும் சொல்லப்படவில்லை. அதைப்பற்றி ஒன்றையும் வரவு
செலவு திட்டத்தில் காணவில்லை. அதோடு கெஜட் பதிவில்லா
அதிகாரிகளுக்கு சம்பளத்தை உயர்த்தவேண்டும் என்று பெரும்
கிளர்ச்சி நடந்து கொண்டிருந்தும் கூடிய சீக்கிரம் சம்பளக்
கமிஷன் அறிக்கை வரும் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறதே
ஒழிய இந்த சட்ட மன்றக் கூட்டத்தில் அது வருவதாக தெரிய
வில்லை. அதற்கு அடுத்தபடியாக நம்முடைய மாநிலத்தில் வேலை
யில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது. அதையும் போக்கு
வதற்கு இந்த நிதி நிலை அறிக்கையிலே ஒரு திட்டமும் கிடையாது.
சில அலுவலகங்களில் லஞ்சம் அதிகமாகத் தாண்டவமாடிக்
கொண்டிருக்கிறது, அதையும் ஒழிப்பதற்கு இதிலே ஒரு திட்ட
மும் கிடையாது. உணவு தான்யங்களின் விலைவாசியானது ஏறிக்
கொண்டே போய்க்கொண்டிருக்கிறது, அதையும் தடுக்க ஒரு
திட்டமும் கிடையாது. மின்சாரக் கட்டணத்தை—குறைந்த
பட்சக் கட்டணத்தை—குறைக்கவேண்டுமென்று மக்கள் சார்
பாகப் பல முறை கேட்டும் கூட, கூடிய சீக்கிரம் கவனிக்கப்படும்
என்று சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய, அதைக் குறைப்பதற்
கான திட்டம் ஏதும் இந்த நிதி நிலை அறிக்கையில் காணப்பட
வில்லை. அதற்கு அடுத்தபடியாக கிருஷ்ணா-கோதாவரித்
தண்ணீரை நம்முடைய மாநிலத்திற்குக் கொண்டுவருவதைப்
பற்றிப் பல முறைகள் பேசப்பட்டு வந்தும் கூட, அதைப் பற்றி
ஒரு வாக்கியம் கூட இதிலே காண முடியவில்லை. ஆகையால், பிற்
போக்கான நிலையில் உள்ள மக்களுக்கு, பாமர மக்களுக்கு, நமது
மாநில மக்களுக்கு இது ஒரு நல்ல விதமான பட்ஜெட் என்று
நம்மால் சொல்ல முடியாது.

அதற்கு அடுத்தபடியாக அங்கத்தினர்கள் பேசும்போது
இங்கே சொல்லிக் கொள்வதெல்லாம் "மாநில சர்க்கார் வரி போட
வில்லை" என்பது. இது வரையில் ஏறத் தாழ 10 மாநிலங்களின்
வரவு-செலவுத் திட்டங்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.
பீகார் மாநிலத்தில், மாநில சர்க்காரினால் தாக்கல் செய்யப்பட்ட
வரவு செலவுத் திட்டம் 108 லட்சம் ரூபாய் உபரியாக இருக்கிறது.
அதே சமயத்தில் எல்லா கெஜட் பதவி இல்லாத

[Sri S. M. Annamalai] [14th March 196(

உத்தியோகஸ்தர்களுக்கும் 10 ரூபாய் அதிகம் சம்பளம் கொடுத்து
108 லட்சம் ரூபாய் சர்ப்ளசாக இருக்கிறது. அதே போன்று
மைசூர் மாநிலத்தில் எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் 5 ரூபாய்
சம்பள உயர்வு கொடுத்து விட்டு 36 லட்சம் ரூபாய் டெபிஸிட்
டோடு வரவுசெலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்திருக்கிறார்கள்.
பிற மாநிலங்களை எடுத்துப் பார்த்தால் ஜம்மு-காஷ்மீர் தவிர மற்ற
எந்த மாநிலத்திலும் வரி விதிக்கவில்லை. இந்த நேரத்தில் சென்னை
மாநிலத்தைப் பொறுத்த வரையில் வரி எதும் விதிக்கவில்லை
என்றால் நாம் உண்மையில் பெருமைபடக்கூடியதாக எதுவும்
இல்லை. காரணம், 1962-ம் ஆண்டில் தேர்தல் வருகிறது. இப்படித்
தேர்தல் வருகிற காரணத்தினால் மேலும் புதிதாக வரிகளைச்
சுமத்தினால் ஆளுகிற கட்சியின் மீது வெறுப்பு ஏற்பட்டு விடுமோ
என்ற காரணத்தினால் எல்லா மாநிலங்களிலும் வரியே இல்லாமல்
வரவு-செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக இந்த வரவு-செலவுத் திட்டத்தில், இரண்ட
வது ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவிற்குள் 190 விதைப் பண்ணை
கள் ஆரம்பிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே
சமயத்தில் நிதி இலாகா செயலாளர் அவர்கள் ஒரு அறிக்கை
கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே இரண்டாவது
ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள் 210 விதைப் பண்ணைகள் ஆரம்
பிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி இந்தப்
புள்ளி விவரங்களைப் படித்துப் படித்துப் பார்த்தால் உண்மையி
லேயே ஒன்றுக் கொன்று, ஒன்றுக்கு மற்றொன்று வித்தியாசத்
தோடு கூடியிருக்கிறது. இப்படிப்பட்ட புள்ளி விவரங்களை
வைத்துக்கொண்டு நாங்கள் எப்படிப் பேச முடியும்? புள்ளி
விவரங்களெல்லாம் இப்படித் தாறுமாறாக இருந்தால் எப்படித்
தான் மாநில மக்களுக்கு நன்மை ஏற்படும். உணவுப் பொருள்
களைப் பொறுத்த வரையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்
தில் 12.79 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்யப் போகிறோம்
என்று சொல்லிவிட்டு இப்போது ஏறத்தாழ 9 லட்சம் டன் தான்
வரும் என்று சொல்லுகிறார்கள். அதே போன்று 2 லட்சம் கைத்
தறி நெசவாளர்களை கூட்டுறவு சங்கத்தில் சேர்க்கப் போகிறோம்
என்று சொல்லிவிட்டு, இப்போது பாதி அளவுகூட ஐந்தாண்டுத்
திட்ட காலத்தில் சேர்க்க முடியாது என்று தெரிகிறது. அதே
போல "லோ டாரிப்"—அதாவது மினிமம் காரண்டி—பற்றி
நிதித் துறைச் செயலாளர் அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்திருக்
கிறார்கள். இந்த லோ டாரிப்பானது ஒரு குதிரை ஓட்டத்திற்கு
6 ரூபாயாக இருந்தது 15 ரூபாயாக மின்சார இலாகாவினால்
உயர்த்தப்பட்டிருக்கிறது. நிதித் துறைச் செயலாளருடைய
அறிக்கையைப் படித்துப் பார்த்தால் அவர்கள் சொல்லியிருக்
கிறார்கள் டாரிப் சார்ஜ் குறைந்து விட்டது என்று. மின்சார
இலாகா வெளியிட்ட கெஜட் நோட்டிபிகேஷனைப் பார்த்தால்
6 ரூபாயாக இருந்த டாரிப் 15 ரூபாயாக உண்மையிலேயே
உயர்த்தியிருக்கிறார்கள். இப்படி ஒன்றுக்கொன்று மாறாக இருக்
கிறது. இதைக் குறைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை கூடிய
சீக்கிரம் எடுக்கவேண்டும்.



14th March 1960] [Sri S. M. Annamalai]

அடுத்தபடியாக விலைவாசிகள் உயர்வினால் மக்கள் ஒரு சுழலில் மாட்டிக் கொண்டு தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நிதி அமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார். அதே சமயத்தில் உணவு இலாகா அமைச்சர் அவர்கள், "தானிய விலைகள் உயரவில்லை, உணவுப் பொருள்களின் விலையை நிர்ணயிக்கப் போவதில்லை, உணவு தான்யங்களை வாங்கப் போவதில்லை" என்று இந்தச் சட்ட மன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில், "உணவு விலை ஏறிக்கொண்டே போகிறது, ஆகையால் சர்க்காரே உணவுப் பொருள்கள் வியாபாரத்தை நடத்தப் போகிறது" என்று அழகாகச் சொன்னார்கள். ஸ்டேட் டிரேடிங் கொள்கை இப்போது சர்க்காருடைய கவனத்தில் இருக்கிறதா? அல்லது அதை கைவிட்டு விட்டார்களா? எப்படி விலைவாசி உயர்வைத் தடுக்கப் போகிறார்கள் என்று இந்த நிதி நிலை அறிக்கையில் காணப்படவில்லை. நிதி அமைச்சர் அவர்கள், "விலைவாசி உயர்வுச் சுழலில் தத்தளித்துக் கொண்டிருக்கிறோம்" என்று சொல்லுகிறார்களே தவிர உணவு இலாகா அமைச்சர் அவர்கள், "விலைவாசி உயரவில்லை, குறைந்து கொண்டிருக்கிறது, உணவு தான்யங்களின் விலையை நிர்ணயிக்கப் போவதும் இல்லை, சம்பா அறுவடையில் உணவுக் கொள்முதல் இல்லை" என்று அழகாகச் சொல்லுகிறார்கள்.

அடுத்தபடியாக, டிஸ்ட்ரிக்ட் டெவலெப்மெண்ட் கவுன்ஸில்ஸ் ஆக்டை இந்தச் சட்ட மன்றத்தில் நிறைவேற்றினோம். டிஸம்பர் மாதம் 1-ம் தேதியிலிருந்து இந்த ஆக்ட் அமுலுக்கு வந்துவிட்டது. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் சட்டம் ஜனவரி 1-ம் தேதியிலிருந்து அமுலில் வந்தது. ஆனால் கெஜட் நோட்டிபிகேஷனில் விதிகளைத் தயாரித்து நாங்கள் ஜனவரி 1-ம் தேதிக்குள் அனுப்பி விடுகிறோம் என்று கண்டு விட்டு, ஜனவரி 13-ம் தேதி கெஜட் நோட்டிபிகேஷன் விட்டார்கள். பொது மக்களிடமிருந்து ஆட்சேபணைகள் இருந்தால், 6 வாரங்களுக்குள் அனுப்பிவிட வேண்டுமென்று கெஜட் நோட்டிபிகேஷனில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஜனவரி 13-ம் தேதி கெஜட் நோட்டிபிகேஷன் செய்து, 6 வாரங்களுக்குள் ஆட்சேபணைகள் இருந்தால் தெரிவிக்கலாம், அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்லி, பிப்ரவரி 26-ம் தேதி ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்லி, இப்படி 6 வாரங்கள் முடிவதற்கு முன்னால் அமைச்சர்கள் ஜில்லா அபிவிருத்திக் கவுன்ஸில் கூட்டத்தை ஆரம்பித்து வைக்கப் போகிறோம் என்று சொல்லி அந்த இடத்தில் வந்து ஆரம்பித்து வைத்தால் அது எந்த நியாயத்தைச் சேர்ந்தது? ஆறு வாரம் முடிவதற்கு முன்னால் ஜில்லா அபிவிருத்திக் கவுன்ஸிலை ஆரம்பித்து வைக்கப்போகிறோம் என்று டெவலெப்மெண்ட் கமிஷனர் அவர்கள் என்து மாவட்டமாகிய வட ஆற்காடு மாவட்டத்திற்கு வந்தார்கள். நான் இதைப் பற்றிக் கேட்டபோது, உடனே ஜில்லா கமிட்டிக் கூட்டத்தை ஒத்தி வைத்து விட்டு டெவலெப்மெண்ட் கமிஷனர் அவர்கள் வந்து விட்டார்கள். இதைப் பார்க்கும்போது நிர்வாக யந்திரமானது எந்த அளவில் இயங்கி வருகிறது என்று நன்றாகத் தெரிய வருகிறது. உண்மையிலேயே இந்த நிர்வாக

[Sri S. M. Annamalai] [14th March 1960

யந்திரத்திற்காக அதிகச் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள் என்று நிதி நிலை அறிக்கையில் கண்டிருக்கிறது. இப்படி அதிகச் செலவு செய்தும் கூட நிர்வாக யந்திரமானது நல்ல முறையில் நடைபெறுகிறதா என்றால் உண்மையிலேயே கிடையவே கிடையாது.

அடுத்தபடியாக பஞ்சாயத்து சட்டத்தில், ஆரம்பப் பள்ளிகளை பஞ்சாயத்து யூனியன்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறோம். உயர் நிலைப் பள்ளிகளை யார் நடத்துவது? ஜில்லா அபிவிருத்திக் கவுன்ஸிலிடம் கொடுக்கப் போகிறோமா, அல்லது வேறு யாராகிலும் தனிப்பட்ட கமிட்டியை நியமித்து அதன் மூலமாக நிர்வகிக்கப் போகிறோமா? இதைப் பற்றி சர்க்கார் திட்டவட்டமாகக் கூறவேண்டும். காரணம் ஏறத்தாழ இரண்டு நாட்களுக்கு முன்னால் ஜில்லா அட்வைஸரி போர்டு என்று கெஜட் நோட்டிபிகேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜில்லா அபிவிருத்திக் கவுன்ஸில் வந்தவுடன் ஜில்லா போர்டு இருக்காது என்று சொன்னார்கள். ஆனால் இப்போது ஒரு நோட்டிபிகேஷன் வந்திருக்கிறது. அதைப் பார்த்தால் டிஸ்ட்ரிக்ட் போர்டு அட்வைஸரி போர்டாக மாறி எல்லா மெம்பர்களும் இருந்து நிர்வாகத்தை நடத்தவேண்டுமென்று நோட்டிபிகேஷன் வந்திருக்கிறது. இப்படி இந்த நிர்வாக யந்திரத்தைப் பார்ப்போமானால் உண்மையில் மிக மிக மோசமான நிலையில் இருந்து கொண்டு வருகிறது.

அதைப் போலவேதான் இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் சல்பர் கிடைக்கிறது. அதைப் பற்றி நான் பல முறை சுட்டிக்காட்டி இந்த சட்ட மன்றத்தில் கேள்வி கேட்டும் கூட, பரிசீலனையில் இருந்து வருகிறது, பரிசீலனை முடிந்த பின் பார்த்துத்தான் ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்லப்பட்டது. அதைப் பற்றி இதிலே ஒன்றையுமே காணோம்.

அதே போல நமது ரெவின்யூ அமைச்சருடைய தொகுதியில் இருக்கக் கூடிய வடகளும்பலூர் என்ற இடத்தில் மைகா இருப்பதாக ஆராய்ச்சி மூலம் தெரிகிறது. இப்படிப்பட்ட கனிப் பொருள்களையெல்லாம் எடுப்பதற்கு வேண்டிய திட்டங்களைக் காணோம்.

சர்க்கார் அலுவலகங்களில் லஞ்சம் அதிகமாகத் தாண்டவமாடுகிறது. அதை ஒழிக்க ஒரு கமிட்டியை நியமிக்கவேண்டும். அதோடு கமண்டல நதியின் குறுக்கே செண்பகத் தோப்பு அணையைக் கட்டவேண்டுமென்று சொல்லி அது சர்க்கார் பரிசீலனையில் இருந்து வருகிறது. அதையும் நிறைவேற்ற வேண்டும். வட ஆற்காடு மாவட்டத்திற்கு கிருஷ்ணா-கோதாவரித் தண்ணீர் கிடைக்கும்படி செய்யவேண்டிய திட்டங்களையும், செண்பகத் தோப்பு அணைத் திட்டத்தையும், ஸல்பர் போன்றவைகளை வெட்டியெடுக்கக்கூடிய திட்டங்களையும் ஆரம்பிக்க வேண்டுமென்று கூறி, இது ஒரு தேர்தல் பட்ஜெட், அழுகிய வெங்காயத்தைப் போன்ற பட்ஜெட் என்று சொல்லிக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.



14th March 1960]

SRI S. LAZAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் ஸ்ரீ எஸ். எம். அண்ணாமலை, தாம் பேசியபோது, எதற்கோ டெவலெப்மெண்ட் கவுன்சில்ஸ் ஆக்ட் நடைமுறைக்கு வந்து ஆறு மாத காலம் ஆக வேண்டும் என்று சொன்னார். டெவலெப்மெண்ட் கவுன்ஸில்ஸ் ஆக்டின் கீழ் இந்தக் கவுன்ஸில்களைக் 'கான்ஸ்டிட்யூட்' செய்வதற்கான விதிகள்தான் இது வரையிலும் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்த விதிகள்தான் வெளியாகியிருக்கின்றன. கனம் அங்கத்தினர் எதைக் குறிப்பிடுகிறார் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

## V.— NNOUNCEMENTS.

### BUSINESS OF THE HOUSE.

DEPUTY SPEAKER : Under rule 155 of the Madras Legislative Assembly Rules, the Speaker has consulted the Hon. the Leader of the House and the Business Advisory Committee and has allotted 18th, 21st, 22nd, 23rd and 25th March 1960 for voting cn certain Demands and he has also fixed the time as follows :

| | | | |
|---|---|---|---|
| 18th March 1960, Demand No | XIX | Agricultural and Fisheries | 4 hours. |
| Do. | XX | Animal Husbandry. | |
| Do. | XXXIX | Capital Outlay on Agriculture. | |
| 21st March 1960, Demand No. | II | Excise Department. | 4 hours. |
| Do. | XIII | Administration of Justice. | |
| Do. | XIV | Jails. | |
| Do. | XV | Police. | |
| 22nd March 1960, Demand No. | XXXIV | Road Transport Schemes-Working Expenses. | 4 hours. |
| Do. | XLII | Capital Out-lay on Road Transport Schemes | |
| 23rd March 1960, Demand No. | IV | Forest Department. | 2 hours. |
| Do. | XXXVI | Capital Out-lay on Forests. | |
| 25th March 1960, Demand No. | XXIV | Harijan Uplift. .. | 4 hours. |

The other Demands found in the Notice Paper, dated 10th March 1960 would be taken up between 6th to 12th April and 21st to 29th April 1960. The order of Demands will be decided later.

According to rules, the time fixed for the receipt of Cut Motions is 3 p.m., today, the 14th March 1960. I extend the time for the receipt of the cut motions relating to the above items till 3 p.m. to-morrow, the 15th March 1960.

The cut motions for the other Demands should be given before 3 p.m. on 25th March 1960.

## IV.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1960–61—*cont.*

* SRI M. KULANDAISAMI GOUNDER : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். என் தொகுதியாகிய

[Sri M. Kulandaisami Gounder] [14th March 1960

ஏர்க்காட்டில் சேர்வராயன் மலைப்பிரதேசத்தில், மலை ஜாதியினர்
இருக்கும் பகுதிகளில் ஒரு வசதியும் இல்லை. அங்கே மலைக்கு
மேல் ரோடு வசதி இல்லை. அங்கு சில ஊர்களில் பள்ளிக்கூட வசதி
இல்லை. சில ஊர்களில் ஆஸ்பத்திரி இல்லை. சேர்வராயன் மலைப்
பிரதேசத்தில் 64 கிராமங்கள் இவ்வாறு வசதியில்லாத நிலையில்
இருக்கின்றன. அங்கு மலை ஜாதிக் குழந்தைகளுக்கு ஸ்லேட்டுகள்,
புஸ்தகங்கள் முதலியவைகள் கொடுத்து கல்வி வசதியும் செய்து
கொடுத்து அவர்களை ஆதரித்தால் இன்னும் சில ஆண்டுகளில்
அவர்கள் முன்னுக்கு வருவார்கள். சேர்வராயன் மலையின் மேல்,
சேலம் டவுனிலிருந்து ஏர்க்காட்டுக்குப் போகக்கூடிய ஒரு ரோடு
இருக்கிறது. சேர்வராயன் மலையில் அடிவாரத்திலிருந்து போகும்
ரொம்ப நெருக்கடியான ரோடு. மேலே செல்லும் பஸ்ஸும் கீழே
இறங்கும் பஸ்ஸும் சந்திக்குமானால் அவை ஒன்றோடொன்று
மோதிக்கொள்ளக்கூடிய அளவுக்கு அவ்வளவு குறுகலான
ரோடாக அது இருக்கிறது. அடிவாரத்திலிருந்து மேலே போகும்
இந்த ரோடை இன்னும் கொஞ்சம் அகலப்படுத்தி ரோடின்
பக்கங்களில் 1½ கெஜத்திற்கு ஆரல் கட்டிவிட்டால் ஆபத்து
இல்லாமல் இருக்கும். மேலும் பனைமரத்துப்பட்டி பகுதியில் ஒரு
ரோடு 17 மைல் தூரத்திற்கு மங்களபுரம் வரையில் போகிறது.
அந்த ரோடு இப்போது வசதியானதாக இல்லை. டவுன் பக்கத்தில்
2 பர்லாங், 3 பர்லாங் நீளமுள்ள ரோடுகள் தார் ரோடுகளாகவும்,
ஜல்லி ரோடுகளாகவும் ஆகிக்கொண்டிருக்கின்றன. ஆனால் பனை
மரத்துப்பட்டியிலிருந்து போகும் இந்த 17 மைல் நீள ரோடு ஒரு
வசதியும் இல்லாததாக இருக்கிறது. அந்த ரோடு வழியாக 30
ஊர்களுக்குச் செல்லலாம். திம்பம்பட்டி, வேடம்பட்டி,
திருவானூர், மங்களபுரம், குமரபாளையம், காட்டூர் ஆகிய
ஊர்களும் இன்னும் பாக்கி பல ஊர்களும் அந்த 30 ஊர்கள். அந்த
30 ஊர்களில் ஜனத்தொகை 50,000. இவ்வாறு 50,000 ஜனத்
தொகை இருக்கும் இடத்தில் பஸ் வசதியோ, ஆஸ்பத்திரி
வசதியோ, பள்ளிக்கூட வசதியோ இல்லை. ஆக, இந்த மலை
ஜாதியினர் இருக்கும் இடம் பட்டிக்காடாக இருக்கிறது. அந்தப்
பகுதி பூராவுக்கும் பனைமரத்துப்பட்டிக்குப் போகும் ஒரு பஸ்
தான் இருக்கிறது. கோணமடுவிலிருந்து குரால்நத்தத்திற்குப்
போகும் ஒரு ரோடு 6 மைல் தூரத்திற்கு இருக்கிறது. அந்த ரோடு
ஜல்லி ரோடாக ஆகிறது. அந்த ரோடில் உடனடியாக ஒரு பஸ்
போட்டால் அங்குள்ள ஜனங்களுக்கு மிகவும் சௌகரியமாக
இருக்கும். மேலும் பனைமரத்துப்பட்டியிலிருந்து மங்களபுரம்
போகும் ரோடு ஜல்லி ரோடாக ஆகவில்லை. அதை ஜல்லி ரோடாக
ஆக்கி அங்கே ஒரு பஸ் கொண்டுவந்தால் ஜனங்களுக்கு மிகவும்
சௌகரியமாக இருக்கும். அந்த 17 மைல் தூரப் பிரதேசத்திலும்
ஒரு ஆஸ்பத்திரிகூட இல்லை. ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டு
மானால் சேலத்திற்கு வர வேண்டும்;. இல்லாவிட்டால் ஆத்தூ
ருக்கோ, திருமானூருக்கோ போக வேண்டும். மற்ற இடங்களில்
ஆஸ்பத்திரி இல்லை. யாருக்காவது மலேரியாக் காய்ச்சலோ வேறு
காய்ச்சலோ வந்தால் அவரை மாட்டு வண்டியில் போட்டுக்
கொண்டு வெகு தூரத்திலுள்ள ஆஸ்பத்திரி இருக்கும் ஊருக்குக்



14th March 1960] [Sri M. Kulandaisami Gounder]

கொண்டுபோக வேண்டும். ஆஸ்பத்திரி அருகாமையில் இல்லாத
தால், பெண்கள் பிரசவிக்கும் காலங்களிலும் கஷ்டம் ஏற்படுகிறது.
எனவே பக்கத்தில் ஆஸ்பத்திரி இருந்தால் அவர்களுக்கும்
சௌகரியமாக இருக்கும். பனைமரத்துப்பட்டிப் பகுதியில் ஒரு
ஆஸ்பத்திரியும் கிடையாது. பனைமரத்துப்பட்டியில் ஒரு
ஆஸ்பத்திரியும், கோரநந்தத்தில் ஒரு ஆஸ்பத்திரியும், திருமா
னூரில் ஒரு ஆஸ்பத்திரியும் அமைத்தால் அங்குள்ள ஜனங்களுக்கு
சௌகரியமாக இருக்கும். பனைமரத்துப்பட்டிப் பகுதியில் வேடப்
பட்டி பஞ்சாயத்துப் பிரதேசம் தாழ்ந்த பூமியில் இருக்கிறது.
அங்குள்ள ஜனங்களுக்கு பஞ்சாயத்து நிலங்களை உழவுத்
தொழிலுக்காகக் கொடுத்தார்கள். அவர்கள் அவைகளில்
நான்கு வருஷங்கள் விவசாயம் செய்து வந்தார்கள்.
நான்கு வருஷங்களுக்குப் பிறகு அந்த முறை நிறுத்தப்
பட்டுவிட்டது. அந்த ஜனங்கள் கூலி ஜீவனத்திற்கும் வழி
யில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். மறுபடியும் வேடப்பட்டு பஞ்சா
யத்து நிலங்களை அங்குள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு
விவசாயத்திற்காகக் கொடுத்தால் அவர்கள் பிழைப்பார்கள்.
மேலும் என் தொகுதியில் வாழைப்பட்டி என்ற பகுதியில்
புழுதிக்குட்டை என்ற கிராமம் இருக்கிறது. இந்த மாதம்
2, 3-ம் தேதிகளில் அங்கே ஒரு முகாம்—மீட்டிங்—நடந்தது. அது
பற்றிய ப்ரோகிராமை எனக்குக்கூட அனுப்பியிருந்தார்கள்.
நானும் அங்கே போயிருந்தேன். வேலூரிலிருந்து நேர் வடக்கே
7 மைலில் ஒரு நீள ரோடு போகிறது. அந்த ரோடில் அந்தப்
பகுதியில் ஒரு வசதியும் இல்லை. அந்த ரோடில் அங்கு கால்
நடையாகத்தான் போக வேண்டும். அந்த ரோடில் அங்கே பஸ்
கிடையாது, குதிரை வண்டியும் போவதில்லை, சைகிளும் போவ
தில்லை. அங்கே 7 மைல் கால்நடையாகத்தான் போக வேண்டும்.
அங்குள்ள புழுதிக்குட்டை என்ற கிராமத்தில் மலையின் மேல் 15
ஊர்கள் இருக்கின்றன. புழுதிக்குட்டைக்குப் போகும் ரோடை
ஜல்லி ரோடாக ஆக்கி அங்கே சந்தை, ஆஸ்பத்திரி, பள்ளிக்கூட
வசதிகள் ஏற்படுத்திக்கொடுத்தால் ஜனங்களுக்கு வசதியாக
இருக்கும். அங்கே இப்போது சந்தையே இல்லை. மலை மேல்
இருப்பவர்களுக்கு வேலூர் சோமவாரச் சந்தை ஒன்றுதான் 12-30 p.m.
இருக்கிறது. அங்கு ஜனங்கள் வந்தால் இரண்டு நாட்கள் தங்கி
யிருந்து போகவேண்டியிருக்கிறது. அந்தப் புழுதிக்குட்டை
கிராமத்தில் ஒரு சந்தை, ஒரு ஆஸ்பத்திரி, ஒரு நல்ல ரோடு
ஆகியவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்தால் ஜனங்களுக்கு
வசதியாக இருக்குமென்று சொல்ல விரும்புகிறேன்.

இரண்டாவது, இந்த மலை ஜாதியினருக்கும் ஹரிஜனங்
களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சலுகைகளைக் கொடுக்கவேண்டு
மென்று சபாநாயகரை வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.
ரோடு முதலியவை போடுவதற்கு ஹரிஜனங்களுக்குப் பணம்
கொடுப்பதுபோல் மலைவாசிகளுக்குக் கொடுக்கவேண்டும். மலை
வாசிகள் ராயரிடம் போய்ப் பணம் கேட்டால் பாதிப் பணந்தான்
கொடுக்கிறார்கள். ராயர் மேலூரில் இருக்கிறார். அதை வந்து
ஜனங்கள் என்னிடம் வந்து தெரிவிக்கிறார்கள். கிணறு வெட்ட,

[Sri M. Kulandaisami Goundar] [14th March 1960

காலனி கட்ட பணம் மலைவாசிகளுக்கு இல்லையென்று ராயர் தெரிவிக்கிறார் என்று என்னிடம் வந்து சொல்லுகிறார்கள். ஹரிஜனங்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகளைப் போல் மலைவாசிகளுக்கும் கொடுத்து ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

SRIMATHI A. SUARES: Mr. Deputy Speaker, this year's budget has a small deficit of 34 lakhs of rupees. This is inevitable when great plants are being carried out to improve the economy of the State. The no-additional-taxation feature of the budget is welcomed by everyone. The relief from sales tax on a few articles of food is also a boon to the people and we hope that the prices will come down at least to some extent. The Government deserve to be congratulated on the great progress made in carrying out the Second Five Year Plan, particularly the development schemes undertaken to increase food production. The proposal to introduce compulsory education in schools in stages from the next school year is also welcome.

The protection granted to my community for a period of ten years ended in January this year. The community is grateful indeed for the liberal treatment it was given during the past ten years. Full advantage has been taken by the community to utilise the safeguards provided for in the Constitution. If the quota in the services was not fully filled up, it was partly because the candidates were expected to have some technical qualifications which they did not possess, or because candidates with higher qualifications applied for the same posts. Anglo-Indian schools have increased in strength and some of them have been upgraded. The present strength of the schools is 17,668. It has increased from 13,435 in 1957. The number of Anglo-Indian children in schools is 8,612. More and more Anglo-Indians are entering colleges, both Arts and professional. At the last session, this House ratified the Constitution (VIII Amendment) Bill which was passed by the Lok Sabha. This amending Bill extended the period during which the nomination of Anglo-Indian to the Lok Sabha and to the State Assemblies could continue for another ten years. This amending Bill has been acclaimed with gratitude by the community. But what is more vital to the community is the educational safeguards. In Article 337 of the Constitution, provision was made for special grants for the benefit of the Anglo-Indian community. That has not been extended so far. The school year in Anglo-Indian schools starts in January. Work has started in the schools on the same lines as in past years. School fees have not been increased. Teachers' salaries have not been decreased. The number of children in the orphanages remains the same. No change has been made in the food and in the conditions of living, in the hope that the Central Government and the State Government will continue to give the same aid that was given not only during the past ten years but for a much longer period, perhaps from the time of the Government of India Act, 1935.



14th March 1960] [Srimathi A. Suares]

The Anglo-Indian schools have built up a tradition during the
past century—a tradition of good teaching, good discipline, moral
education, congenial environment and friendly companionship.
If there was something lacking in the early decades of the past
century, it was the fact that the schools were largely for the
members of the community. This has changed considerably. for
50 per cent and even more seats are now thrown open to non-
Anglo-Indians with the result that children of various communities
study together, play together and are welded together to form
one great nation.

The cost of maintaining such schools is naturally a little higher
than that of other types of schools. Buildings and equipment are
of the best types. Teachers with good qualifications are employ-
ed and they are paid a little higher salary than teachers in other
schools. School uniforms are in vogue. Great attention is paid
to extra-curricular activities. There are 46 such schools in our
State. These schools are rendering yeoman service in the cause of
education. The Anglo-Indian schools are now fitted into the larger
pattern of Indian education. If there is reorganisation in edu-
cation, these improvements are embodied in the scheme of Anglo-
Indian education. The three-language formula has been subscrib-
ed to by the Anglo-Indian schools. Bifurcated courses and basic
education techniques have been introduced. Higher secondary
schools will be introduced in 1963. The regional language has an
important place in our scheme of study and the standard is being
raised every year. Our schools are popular not only in the Madras
State but throughout the whole of India. Leading educationists
in the whole of India have realised the value of this system of
education. It is an unqualified boon to Government servants.
They may move from Kashmir to Quilon or from Bombay to
Shillong and yet they will find the same uniform system of
education throughout the country.

The budget estimate for 1960-61 shows a provision of Rupees
8,67,900 under Anglo-Indian education. This is about the same
grant given in past years. I wish to express my deep appreciation
of this kind of gesture of the Madras Government.

I make an earnest appeal to the Government of Madras to be
please to allot the full amount noted in the Budget for the year
1960–61 pending the decision of the Central Government in this
matter. Even if the decision is not favourable to our schools, I
plead that the Madras Government will continue to give the Grant
in view of the fact that the instruction imparted in our schools is
of a high standard. Education is a State subject and the State
Government is entitled to take decisions in the matter if no all
India policy is specigcally laid down.

From past experience we know that our Government has
treated the Anglo-Indian schools very sympathetically. During
the 10-year protection period, the Government was entitled to

enforce three 10 per cent cuts according to the Constitution. But actually only one cut was enforced. This has emboldened our schools to hope for liberal treatment even in the future.

We feel that our Prime Minister is aware of the great contribution that Anglo-Indian Schools are making to the general education in India. When the resolution was moved by the leader of my community in the Lok Sabha on the 7th August 1959, in relation to the inclusion of English in the VIII Schedule, the Prime Minister gave an assurance on the floor of the Lok Sabha stating that full facilities will be granted to Anglo-Indian education and that the special privileges enjoyed by the Anglo-Indian Schools will not only be maintained but also extended if necessary.

Without these special facilities our schools will find it difficult to carry on, for the number of indigent children in each school is fairly high. The orphanage schools will be badly hit for they are mainly residential schools and if the destitute grant is cut down, it may be difficult with the present high cost of living even to provide two meals a day. Almost half the Budget amount goes towards boarding grants for the destitute children.

In the Madras State more than 50 per cent of the children in each school are indigent. In other States it may be possible to double the school fees and thus make the school self-supporting, but this would not be possible in the Madras State. The unemployment problem among the Anglo-Indians with lesser education is acute in the present day and if the Anglo-Indian students are not given education at least up to the High School level, the position will deteriorate still further. The mother tongue of the Anglo-Indian is English and unless the Anglo-Indian schools are continued the Anglo-Indian children will not have the opportunity of studying at least up to the High School standard and compete for suitable jobs.

In conclusion, while thanking the Madras Government for their great generosity in the past years, I plead that they will continue the same generosity in future, for the 8,612 Anglo-Indian children who are in the schools now are as much the children of the country as any other group of children. Therefore their future is bound up with the future of the Indian Nation and they will contribute to the progress of the country as their fore-fathers had done both in times of peace and war.

* **Sri M. P. SARATHI**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1960-61-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின்மீது என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். முக்கியமாக, இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பார்த்தால், நிதி நிலைமை திருப்தியாகத்தான் இருக்கிறது. ஆனால், நிர்வாகத் திறன் திருப்தியாக இல்லை. ஏனென்றால், சென்ற ஆண்டிலே கொடுக்கப்பட்ட ஆடிட் ரிபோர்ட்டிலே, சர்க்காரால் கோரப்பட்ட மான்யங்கள் பலவற்றில் கோரிய அளவுக்குச் செலவு செய்யவில்லை





என்று குறிப்பிட்டிருக்கிறது. முப்பத்தி நான்கு இனங்களில் கோரிய மான்யத் தொகையை அவர்கள் செலவு செய்யவில்லை என்பதைப் பார்க்கிறோம். அதாவது 26 சதவீதத்திற்குமேல் செலவு செய்யாமல் விடப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டி ருப்பதைப் பார்க்கிறோம். இதற்கு யாது காரணமோ தெரிய வில்லை.

முக்கியமாக உணவுப் பிரச்னையில் அதிக கவனம் செலுத்திய தாகவும், அதில் ஐந்தாண்டுத் திட்டங்களில் பெரும் அளவு உற்பத்தி செய்யப்போகின்றோம் என்றும் ஆண்டு தோறும் 12.79 லட்சம் டன் அதிக உற்பத்தி செய்யப்போகிறோம் என்று சொல் லியும் ஏறக்குறைய 5 லட்சம் டன் உணவுதான் இது வரைக்கும் உற்பத்தி செய்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், அடுத்த ஆண்டில் 'திட்டக் காலத்தில் உணவுத் தானியங்கள் உற்பத்தி 9 லட்சம் டன் அளவு உயருமென எதிர்பார்க்கப் படுகிறது' என்று குறிப்பிட்டார்கள். 'எதிர்பார்க்கப்படுகிறது' என்று குறிப்பிட்டார்களே தவிர, கண்டிப்பாக 9 லட்சம் டன் உற்பத்தி செய்யப்படும் என்று குறிப்பிடவில்லை. இதிலேயே ஒரு சந்தேகத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் என்ன காரணம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, 'உரம் பற்றாக்குறையாக இருப்பதைப் போக்கி உர உற்பத்தியை அதிகப் படுத்தி, கண்டிப்பாக நம்முடைய திட்டத்தின் எல்லையை அடையாவிட்டாலும் 9 லட்சம் டன் உற்பத்தியையாவது அடைந்து விடுவோம்' என்று சந்தேகக் குறியுடனேயே கூறு கிறார்கள். உரம் எங்கே போய்விட்டது? நமக்குப் பற்றாக் குறையாக இருந்தால், மத்திய அரசாங்கத்திடமிருந்து கேட்டு வாங்குவதற்கு என்ன? அமைச்சர்களெல்லாம் பயந்துகொண் டிருக்கிறார்களோ என்றுகூட எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. இப்போது இந்திய சர்க்கார், அமெரிக்காவிலிருந்து வாங்கி கோதுமை பாங்கு ஏற்படுத்தியிருக்கிறார்களே, அது போல நம் முடைய திட்டத்திற்குப் பாதி அளவாவது உற்பத்தியைப் பெருக்குவதற்காக வேண்டி உரத்தைத் தாராளமாகக் கொடுக்க வேண்டுமென்று ஏன் மத்திய சர்க்காரிடம் மன்றாடிக் கேட்க வில்லை என்று நான் கேட்கின்றேன்.

அடுத்தபடியாக, விலைவாசி நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே போகிறது என்பதைப் பார்க்கின்றோம். இதற்கெல்லாம் காரணம் அமைச்சர் சொல்கிறார்கள், எப்போதும் விலை ஏறிக்கொண்டு போவது நாட்டுக்கு நல்லது என்று கூட கவர்னர் உரையில் குறிப் பிட்டிருக்கிறார்கள். விலைவாசி ஏறிக்கொண்டு போவதால் நாட் டுக்கு எந்த விதத்தில் நல்லது என்று தெரியவில்லை. ஆனால், மத்திய அரசாங்கத்திலிருந்து நோட்டு அடித்துத் தள்ளுகிறார் களே, அதில் ஏதாவது மாகாண சர்க்காருக்குப் பங்கு இருக்கிறதா என்றால், அதில் ஒரு பங்கும் காணோம். எவ்வளவு நோட்டு அடிக் கின்றார்கள், என்ன ஆனது என்று கேட்கக்கூடிய சூழ்நிலைகூட நம்முடைய அமைச்சர்களுக்கு இல்லை என்று நினைக்கிறேன்.

ஏழைகளின்மீது புது வரி போட்டால் நாட்டில் கொந்தளிப்பு ஏற்படும் என்ற சூழ்நிலையில் புது வரி போடாமல் விட்டுவிட்டதற்காக மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறேன். உண்மையிலேயே போடக்கூடிய இடங்களில் வரி போடாவிட்டாலும் நல்ல வருமானம் வரக்கூடிய பல தொழில்களைச் சர்க்காரே ஏற்று நடத்தலாம். ஆனால் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட பல பெரும் தொழில்கள் எல்லாம் ஏற்படுத்தப் போகிறோம், ஏற்படுத்தப் போகிறோம், திட்டமிட்டுள்ளோம் என்று சொல்லிய போதிலும் பெருந்தொழில்களைத் தனிப்பட்ட முதலாளிகளுக்குக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். 'வாருங்கள், எங்களுடைய நாட்டில் தொழிற்சாலைகளை ஆரம்பியுங்கள், அதற்கு எவ்வளவு வேண்டுமானாலும் சர்க்கார் உதவி செய்யும்' என்று சொல்லிக்கொண்டேயிருக்கிறார்கள். சோஷலிச சமுதாயத்தை நாங்கள் ஏற்படுத்தப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டு பெரும் முதலாளிகளை இந்த நாட்டிலே ஏற்படுத்துவதற்கு சர்க்கார் முனைந்துகொண்டு வருகிறது. பஸ் தொழிலை தேசிய மயமாக்க வேண்டுமென்று இந்தச் சபையிலே பல கனம் அங்கத்தினர்கள் பேசிக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், அதுவும் இல்லாமல், ஏதோ அன்னியன் ஆண்டுகொண்டிருந்தபொழுது, 1944-ல் பஸ் தொழிலைத் தேசிய மயமாக்கவேண்டுமென்று சொல்லி, 1947-ல் நீங்கள் சுதந்திரம் வாங்கிய ஆண்டுக்குள்ளாக நகரத்தில் பல சிடி பஸ்கள் தேசீய மயமாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அதனுடைய தீர்மானம் என்னவென்றால், 1944-ல் போட்ட சர்க்காருடைய கொள்கைத் திட்டம் என்னவென்றால், பஸ் தொழிலை ராஜ்யம் பூராவும் தேசீய மயமாக்கவேண்டுமென்று திட்டம் போட்டிருக்கிறார்கள். நீங்கள் கொடுத்த பட்ஜெட்டிலே குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், 1948-ல் என்ன நிலவரத்தில் இருந்ததோ, அதே நிலவரத்தில்தான் ஸிட்டியைப் பொறுத்த வரையில் இருக்கிறதே தவிர, மேற்கொண்டு ராஜ்யம் பூராவும் அதை ஏற்று நடத்துவதற்கு இந்தக் காங்கிரஸ் சர்க்கார்—இதைக் காங்கிரஸ் சர்க்கார் என்றுதான் குறிப்பிடவேண்டும்—முனைவதாகக் காணோம். ஏனென்றால், பஸ் தொழிலை தேசீய மயமாக்கினால் காங்கிரஸ் ஆட்சி நிலைத்து நிற்காது என்ற எண்ணமோ என்னவோ, அதனால்தான் அவர்கள் அதிலே கையை வைப்பதற்கு பயப்படுகிறார்கள் என்று நான் கருதவேண்டியிருக்கிறது.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் தீட்டப்பட்ட திட்டங்களில் ஒன்று கூட ஒதுக்கப்பட்ட தொகை சரியானபடி செலவு செய்யப்படவில்லை என்பதை நிதி அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரங்களே எடுத்துக் காட்டுகின்றன. எங்கு பார்த்தாலும் சாலைகள் சரியானபடி இல்லை என்பது இதற்கு ஒரு அத்தாட்சி. ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ரோடுகளுக்காக ரூ. 678.64 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தும் கூட, முதல் மூன்று ஆண்டுகளில் செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 261.05 லட்சம் தான். 1959-60-ல் திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ. 132.82 லட்சம். 1960-61-ல் ரூ. 140.14 லட்சம் செலவிட திட்டமிடப்பட்டிருக்கிறது.



போடப்பட்ட திட்டம் ரூ. 678.64 லட்சத்திற்கு இருந்தபோதிலும் கூட, 1960-61-ம் ஆண்டில் செலவழிக்கப்படும் தொகையும் சேர்த்து மொத்தம் ஐந்து ஆண்டுகளில் ரூ. 534.01 லட்சம்தான் செலவு செய்யப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏன் கோடிக்கணக்கான ரூபாய் செலவழிப்பதற்கு திட்டம் போட்டுவிட்டு, இவ்வளவு ரூபாய் செலவு செய்யப்படாமல் விடப்படுகிறது என்று ஒன்றும் புலப்படவில்லை. அதே மாதிரி மாநில நெடுஞ்சாலைகளுக்கு என்று ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 370.85 லட்சம் ரூபாய் செலவழிப்பதாக திட்டம் போடப்பட்டிருக்கிறது. ஆனால் முதல் மூன்று ஆண்டுகளில் செலவு செய்யப்பட்டது ரூ. 136·91 லட்சம்தான். 1959-60-ம் ஆண்டுச் செலவு, 1960-61-ம் ஆண்டுச் செலவு ஆகியவற்றைச் சேர்த்தாலும் மொத்தம் ஐந்தாண்டு முடிவில் ரூ. 287.91 லட்சம்தான் செலவழிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. திட்டம் போடுவது ரூ. 370 லட்சத்திற்கு, ஆனால் செலவு செய்வது ரூ. 287 லட்சத்திற்கு. ஏன் ரோடுகளெல்லாம் சிமெண்டு ரோடு ஆகிவிட்டதா? ரோடுகள் போடுவதற்கு எங்கும் இடமில்லையா? ஏன் இம்மாதிரி கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்யப்படாமல் விடப்படுகிறது என்பது புலப்படவில்லை. அதே மாதிரிதான் மாவட்டக் கழக சாலைகள்கூட ஐந்து ஆண்டுகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 232.64 லட்சம். ஆனால் செலவு செய்யப்படுவது ரூ. 200.47 லட்சம் தான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 32 லட்ச ரூபாய் செலவு செய்யப்படாமல் விடப்படுகிறது. அதே மாதிரி ரயில்வே பாலங்கள் கட்டுவதற்காக மத்திய அரசாங்கத்தினிடமிருந்து 9 இடங்களில் பாலம் கட்டுவதற்கு கடன் உதவிக்கு சாங்ஷன் வாங்கப்பட்டது. ஆனால் பணம் இல்லாத காரணத்திற்காகவோ அல்லது வேறு எந்த காரணத்திற்காகவோ தெரியாது, 4 இடங்களில்தான் பாலங்கள் கட்டுவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரே இடத்தில் தான் பாலம் கட்டப்பட்டு வேலை முடிக்கப்பட்டிருக்கிறது. ஒன்பது பாலங்கள் கட்டுவதற்குத் திட்டம் போட்டுவிட்டு, நடைமுறையில் ஒரு பாலம்தான் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. இதே மாதிரியாகத்தான் மருத்துவத் துறையிலும் எவ்வளவோ லட்சக்கணக்கான ரூபாய் செலவழிக்காமல் விடப்பட்டிருக்கிறது. மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஐந்தாண்டு காலத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 813.65 லட்சம். ஆனால் செலவு செய்யப்படுவது ரூ. 528.73 லட்சம்தான். ஏறக்குறைய இந்தத் துறையில் 300 லட்சம் ரூபாய் மிச்சப்படுத்தப்படுகிறது. நர்ஸுகள் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 6.50 லட்சம். ஆனால் 1960-61-ம் வருஷச் செலவையும் சேர்த்து செலவழிக்கப்போவது ரூ. 4.17 லட்சம்தான் என்று சர்க்கார் கொடுத்த புள்ளி விவரமே எடுத்துக் காட்டுகிறது. போட்ட திட்டத்தை நிறைவேற்ற முடியாததற்கு என்ன காரணம் என்பது புலப்படவில்லை. இது திட்டம் போடுவதிலுள்ள குறைபாடுகளையே எடுத்துக் காட்டுகிறது. போட்ட திட்டத்தை போட்டபடி நிறைவேற்றியிருக்கவேண்டுமே தவிர, ஏதோ சம்பிரதாய முறையில் பட்ஜெட்டை சரிக்கட்டி காட்டுவதில் பிரயோசனம் இல்லை. பல லட்ச ரூபாய்க்கு சரியாக வரவு

[Sri P. M. Sarathi] [14th March 1960

செலவு திட்டத்தை தீட்டிவிட்டோம் என்று கூறுவதில் பலன் இல்லை. மக்களுக்கு நல்லபடி சேவை செய்யவேண்டும். வரக்கூடிய பணத்தை மக்களுக்குப் பயன்படும் விதத்தில் செலவழிக்க வேண்டும். மத்திய சர்க்காரோடு வாதாடி அதிகப் பணம் பெற்று மக்களின் நலனுக்காக செலவு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI P. M. MUNUSAMI GOUNDER : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இன்றையதினம் சபையில் விவாதத்தில் இருக்கும் நமது நிதி அமைச்சர் அவர்களுடைய வரவு செலவு திட்டத்தை குறித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படு கிறேன். எந்த விதமான அதிகப்படி வரியும் இல்லாத வகையில் வரவு செலவு திட்டத்தை புகுத்தியது குறித்து நிதி அமைச்சர் அவர்களுக்கு முதற்கண் என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதிலும் குறிப்பாக சில எதிர்க்கட்சி அங்கத் தினர்கள் பேசும்பொழுது நாம் பார்த்தோம், ஏதோ வெங்கா யத்தை உரித்தால் தோல் இருக்கிறது என்ற முறையில் நிதி அமைச்சர் அவர்கள் வரவு செலவு திட்டத்தை வகுத்திருப்பதாக சொன்னார்கள். அதைக் கேட்கும்பொழுது நாம் வருந்தாமல் இருக்க முடியவில்லை. மற்றொரு அங்கத்தினர் திட்டங்களை தீட்டு கிறார்களே தவிர, திட்டப்படி ஒன்றுகூட நிறைவேறவில்லை என்ற முறையில் பேசினார்கள். அவர் அம்மாதிரி எதைக் கொண்டு சொல்லுகிறார் என்பது புலப்படவில்லை. இம்மாதிரி தப்பு எண்ணம் கொண்டு அவர்கள் சொல்லுவதைப் பார்க்கும்பொழுது, அவர்கள் சரியான முறையில் திட்டங்களைப் புரிந்துகொள்ளவில்லை என்றுதான் நாம் கருதவேண்டியிருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் இல்லை. நமது நிதி அமைச்சர் அவர்கள் 8, 9 ஆண்டுகளாக தொடர்ந்தாற்போல் நிதி நிலை அறிக்கையை வெற்றிகரமாக சமர்ப்பித்து வருகிறார்கள். அவர் மக்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று இப்படி வருஷா வருஷம் வெற்றிகரமாக பட்ஜெட் தயாரித்து வருகிறார்கள். இந்த வருஷம் எல்லா அம்சங்களையும் கொண்ட ஒரு அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்கள் என்பதை நாம் நன்றாக அறிகிறோம். சில குறைபாடுகள் இருந்துகொண்டு தான் இருக்கும். அவைகளை அவ்வப்பொழுது நாம் எடுத்துச் சொல்லி, சர்க்கார் நிவர்த்தி செய்வது மிக்க அவசியமாக இருக் கிறது.

விவசாயத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய சர்க்காரால் என்னென்ன திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன, அந்தத் திட்டங்களின் மூலம் நாம் எவ்வளவு உற்பத்தியை பெருக்கியிருக் கிறோம் என்றெல்லாம் பார்க்கும்பொழுது எல்லாவிதமான முறையிலும் நாம் முன்னேற்றத்தை அடைகிறோம் என்பது எடுத்துக்காட்டாக இருக்கிறது. ஆனால், குறிப்பாகப் பார்க்கும் பொழுது மற்ற நாடுகளைவிட அதிகமாக விளைவிக்கக்கூடிய நிலைக்கு நாம் இன்னும் வரவில்லை என்பது நமது நிதி அமைச்சர் அவர்கள் உரையிலிருந்தே நாம் காண்கிறோம். அதாவது நமது ராஜ்யத்தில் ஏகராவுக்கு நெல் 1,300 ராத்தல்தான் விளைவிக்கக்கூடிய நிலையில்



14th March 1960] [Sri P. M. Munusami Gounder]

இருக்கிறோம். இருப்பினும் விளைச்சல் ஜப்பானில் 2,650 ராத்த லாகவும், அமெரிக்காவில் 2,150 ராத்தலாகவும், சைனாவில் 1,610 ராத்தலாகவும் உள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறது. அதற்குக் காரணம் ரசாயன உரத்தை நமது நாட்டில் அதிகமாக உற்பத்தி செய்ய முடியவில்லை என்பது சிறிது சூசமாக குறிப்பிடப்பட்டி ருக்கிறது. இருந்தாலும்கூட, நாம் பொதுவாக பார்க்கும் பொழுது நமது விவசாயிகள் போதுமான அளவு அதிகமாக உழைத்து வேலை செய்யவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. ரசாயன உரங்கள், இன்னும் மற்ற உதவிகள் சர்க்கார் அளித்தாலும் கூட, விவசாயிகளின் உழைப்பு சிறிது குறைவாக இருக்கிறது என்பதைச் சொல்லவேண்டியிருக்கிறது. இரண்டு குடும்பங்கள் ஒரே மாதிரியாக இருக்கும்பொழுது, ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நல்லபடி கவனம் செலுத்தி அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள். அதேமாதிரி பக்கத்தில் இருப்பவர்கள் அதில் பாதி கூட விளைச்சல் உண்டாக்குவதில்லை. அதிலிருந்து அவர்கள் உழைப்பு குறைவு என்பது நன்றாகத் தெரிகிறது. நம் சர்க்காரின் மீது பழி சொல்வதைக் காட்டிலும், நன்கு உழைத்து இப்பொழுது கிடைக்கும் விளைச்சலைவிட பன் மடங்கு அதிகப்படுத்த, விவசாயத்தையும் ஒரு தொழில் போல நடத்தவேண்டும் என்று பிரசாரம் மூலம் எடுத்துச் சொல்லி 1 pm
வேலையை நன்றாகச் செய்யச் சொன்னால், விளைச்சலை அதிகப்படுத்த முடியும். நம் நாடு ஒரு விவசாய நாடாக இருப்பதால், அநேக காலமாக பழைய முறைகளைக் கையாண்டு வந்திருக்கிறார்கள். இப்பொழுது, நமது சர்க்கார் இராச்சியத்தை நடத்தும் காலத்தில், நூதனக் கருவிகள் மூலமும், மண்ணரிப்புத் திட்டங்கள் மூலமாகவும், நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலமாகவும், அதிகமாக விளைச்சலை உற்பத்தி செய்திருக்கிறோம். இன்னும் அதிகப்படுத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. முதலாவது, இரண்டாவது திட்டங்களில், அநேகமாக பெரிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றி விட்டோம். இனிச் செய்வதற்குப் பெரிய திட்டங்கள் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனாலும், செய்யவேண்டிய இரண்டு பெரிய திட்டங்கள் இன்னும் இருக்கின்றன.

குறிப்பாக, 7, 8 வருஷங்களாகவே சொல்லப் பட்டுவரும் கிருஷ்ணா-கோதாவரித் திட்டம். கோதாவரித் தண்ணீரை, சென்னை மாகாணத்திற்குத் திருப்பவேண்டும் என்ற திட்டம் வெகுகாலமாக இருக்கிறது. ஆகவே, சரியான முறையில், கிருஷ்ணா-கோதாவரித் திட்டத்தை அமல் செய்யவேண்டும். பக்கத்து மாகாண முதல் அமைச்சரோடு பேச்சு வார்த்தைகளும் நடத்தி வெற்றிகாண வேண்டியதவசியம்.

நிதியமைச்சரவர்கள் சேலம் மாவட்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்த காலத்தில் கவனித்து இருப்பார்கள். காவேரி நதியொன்றுதான் நம் மாவட்டத்தில் வற்றாத நதி. அதன் தண்ணீர் சமுத்திரத்தில் கலக்கும் நிலை இருக்கிறது. ஆகவே, சிறிதுகூட, தண்ணீர் வீணாகாமல் செய்யவேண்டியது அவசியம்.

[Sri P. M. Munusami Gounder] [14th March 1960

ஆகவே, ஹோசூர் தாலூக்காவிலிருந்து, காவேரியை தென் பெண்ணையாற்றுடன் சேர்த்து திருப்பிவிட முடியுமா என்று திட்டம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். தென் பெண்ணை யாற்றுக்குத் திருப்ப வேண்டிய லெவெல் இருக்கிறதா என்று எஞ்சினியர்களிடம் ஆலோசனை செய்து பார்க்கவேண்டும். ஆலோசனை செய்து, சாத்தியமானால், அந்தத் திட்டத்தையும் அமுலுக்குக் கொண்டுவந்தால் கிருஷ்ணகிரி நீர்த் தேக்கம், சாத்தனூர் நீர்த் தேக்கம் இவற்றில் வருஷம் பூராவும் நீர் நிறைந் திருக்கும் நிலை ஏற்படும். அப்படிச் செய்தால், அங்கு சாகுபடிக்குக் கொண்டுவரக்கூடிய நிலம் மும்மடங்காக ஆவதற்கு வேண்டிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. காவேரிக்கும், தென் பெண்ணை யாற்றுக்கும் உள்ள தூரம் 15 மைல்தான். அவ்வளவு குறுகிய இடத்தில், நாம் இந்த திட்டத்தை மேற்கொண்டு ஆரம்பித்தால், விசேஷமான வெற்றியைக் காணமுடியும் என்பதை நிதி அமைச்ச ரவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

சிறிய நீர்பாசனத் திட்டங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், பழைய ஏரி குளங்களில், மண் அடிக்கப்பட்டு, நீர் தேக்கம் செய்தால், அதிக விளைச்சல் காணமுடியும். பரீட்சார்த்தமாக வாவது சில வட்டாரங்களில் இந்த வேலையை செய்து பார்க்க வேண்டும். ஏற்கனவே பல ஆண்டுகளாய்ச் சொல்லி வந்தும், பல குளங்கள், ஊருணிகள் மண்ணால் மூடப்பட்டிருக்கின்றன. ஒரு மாதத்திற்கு வேண்டிய தண்ணீர்கூட தங்குவதற்கில்லை. சேலம் ஜில்லாவில் ஜமீந்தாரிகளும், பெரிய எஸ்டேட்டுகளும் இருந்த காலத்தில் அவைகள் பராமரிப்பின்றி தூர்ந்துபோய் விட்டன. ஆகவே, இப்பொழுது அவைகளையெல்லாம், மண் தூர் எடுத்து, ஆழப்படுத்தி, கரையை உயர்த்தி, வேலை செய்தால், அதிகமான ஏக்கராக்களை சிறிய நீர்பாசனத் திட்டங்கள் மூலம், வெள்ளாமை செய்ய முடியும்.

குடி தண்ணீர் சம்பந்தப்பட்ட மட்டில், பெரிய கிணறுகள் வெட்ட மானியங்கள் வழங்குகிறோம். சுமார் ரூ. 1,000 ஒரு கிணற்றுக்கு என்று வைத்திருக்கிறோம். ஆனால், இந்தத் தொகை சேலத்திற்குப் போதாது. அங்கெல்லாம் மலைக் காட்டு பிரதேசம். ஆழமாக வெட்ட வேண்டியிருக்கிறது. அதோடு, மலையைக் குடைந்து வெட்ட வேண்டியிருக்கிறது. சாதாரண இடங்களைப் போல், 1½ அல்லது, 2 மடங்கு அதிகமாகக் கொடுக்கவேண்டும். எல்லா மலைப் பாங்கான இடங்களுக்கும் அதிகமான பணத்தை ஒதுக்கினால்தான், செய்யும் திட்டங்கள் நல்ல முறையில் நிறை வேற முடியும். அநேக இடங்களில் கிணற்று வேலை பாதியில் விடப்படுகின்றன. தண்ணீர் வருவதில்லை. சமீபத்தில், மராமத்து இலாகா அமைச்சரவர்கள் வேப்னபள்ளி பிர்காவில் சுற்றுப் பிரயாணம் செய்த காலத்தில், கிணற்றுக்கு ஆழம் அதிகம் வேண்டும், அதற்குப் பணம் அதிகம் வேண்டும் என்று அவர்களிடம் விண்ணப்பித்துக் கொண்டார்கள், அவர்களும் அதை ஒப்புக் கொண்டார்கள். அதைக் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



14th March 1960] [Sri P. M. Munusami Gounder]

நம் மாகாணத்தில், ஜில்லாக்களில் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஒரு அபிவிருத்தி சபையை ஏற்படுத்தியிருக்கிறோம். இவை பின்னால் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் மூலம் வேலை செய்யும். அப்படிச் சபைகள் நிறுவும் போது, சேலம் போன்ற ஜில்லாக்களை இரண்டாகப் பிரித்து வேலை செய்யவேண்டும் என்று பல வருடங் களாகக் கோரி வருகிறோம். அந்த கலெக்டர் 100, 120 மைல் களுக்கு அப்பால் இருந்து வேலைகளைக் கவனிக்க வேண்டி யிருக்கும்போது, அதிக கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. அதற்குப் பரிகாரம் தேட வேண்டியிருக்கிறது. அப்படியின்றி, அவர்கள் 4 தாலூக்காக்களை மாத்திரம் வைத்து வேலை செய்தால், அதிக தீவிரமாக வேலை செய்யமுடியும். ஆகவே, இந்த ஜில்லாவை இரண்டாகப் பிரித்து இரண்டு கலெக்டர்களை நியமிக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்லிக்கொண்டு, என் உரையை முடிக் கிறேன். வணக்கம்.

* SRI A. MARIAPPAN : உதவி சபாநாயகர் அவர்களே, கனம் நிதியமைச்சர் கொண்டுவந்திருக்கும் இவ்வாண்டு நிதி நிலை அறிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன். அறிக்கையில், சில பொருள்களுக்கு வரி விலக்கு அளித்திருப்பதற்காக நான் என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அப்படி விதி விலக்கு அளித்திருக்கும் சமயத்தில், அந்தப் பொருள்களுடன் வெங்காயம், பால், கை இயந்திர எண்ணெய் முதலிய பொருள்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த ஆண்டு அறிக்கையில், புதிய வரித்திட்டம் எதுவும் இல்லை என்பதைச் சொல்லும் போது, எதிர் கட்சி அங்கத்தினர்கள், 1962-ல் பொதுத் தேர்தல்கள் வரவிருக்கின்றன, ஆதலால்தான் இந்த மந்திரி சபை புதிய வரி எதுவும் போடவில்லை என்று குத்திக் காட்டுகிறார்கள். நமது மத்திய சர்க்கார் 26 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கும் விஷயத்தைப்பற்றி அவர்கள் மறந்துவிட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். மேலும், புது வரிகள், பல இதர வரிகள் போட்ட பிறகும், சில உப தேர்தல்கள் நடந்திருக்கின்றன. அப்பொழுதெல்லாம், எதிர்க் கட்சி அங்கத்தினர், ஆளும் கட்சிக் காரர்களைப்பற்றி மிகவும் தாறுமாறாக பிரசாரம் செய்தும், அந்தத் தேர்தல்களில் காங்கிரஸ்தான் ஜயித்து இருக்கிறது. பொது மக்கள் மனதில் புது வரிகளைப் பற்றி கவலையே படவில்லை என்பதுதான் தெளிவாகிறது. நல்ல முறையிலே ஆட்சி நடப் பதையும், இந்த சர்க்கார் பொது மக்களுக்குச் செய்யும் உதவி களையும், நன்மைகளையும், பொது மக்கள் மனதில் வைத்திருக் கிறார்கள் என்பது நன்கு விளங்கும். வரி போடுவதுபற்றி காங்கிரஸ் அரசாங்கம் பயப்படவில்லை என்று உதவி சபாநாயகர் அவர்கள் மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மற்றும் ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். நம் மாநிலத்தில், சலவைத் தொழிலாளிகள், க்ஷவரத் தொழிலாளிகள் போன்ற வர்கள் ஹரிஜனங்களைக் காட்டிலும் மோசமான நிலையில் இருக் கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான சலுகைகளும் கொடுக்கப்

[Sri A. Mariappan] [14th March 1960

படுவதில்லை. நம் மாகாண சலவைத் தொழிலாளிகளுக்கு அவர்கள் உபயோகிக்கும் உபகருவிகளை மானியமாகக் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு, அதே மாதிரி, க்ஷவரத் தொழிலாளிகளுக்கு வேண்டிய உபகரணங்களுக்கும் மானியம் கொடுக்கவேண்டும் என்றும், அவர்களும் மிகக் கேவலமான பொருளாதார நிலையில் இருப்பதால் இவைகளைச் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

குறிப்பாக சேலத்தைப் பொறுத்த வரையில் இரும்பை எடுப்பதற்கு, அதை ஆராய்வதற்கு மேற்கு ஜெர்மெனியில் இருந்து நிபுணர்கள் வந்திருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். சீக்கிரத்தில் சேலத்தில் இரும்புத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் சர்க்கார் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக நம்முடைய மாகாணத்தில் சில இடங்களில் குடி தண்ணீர் வசதி மிகவும் கஷ்டமாக இருக்கிறது. சேலம் ஜில்லாவில் ராசிபுரம் போன்ற இடங்களில் குடி தண்ணீருக்கு மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரி ராசிபுரம் போன்ற பலவிடங்கள் நம் ராஜ்யத்தில் இருக்கின்றன. அவைகளுக்குச் சர்க்கார் தனிச் சலுகை கொடுத்து அங்கெல்லாம் உள்ள குடிதண்ணீர் கஷ்டத்தைப் போக்க முன்வரவேண்டும். ராசிபுரம் போன்ற நகரங்களின் குடிதண்ணீர் கஷ்டத்தை நீக்குவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்யவேண்டும்.

அதேமாதிரியாக மாகாணத்தில் இருக்கக்கூடிய தலைமை ஆஸ்பத்திரிகளில் என்ன என்ன சௌகரியங்கள் செய்யப்படுகின்றனவோ அவை அத்தனையும் ஜில்லாவில் இருக்கக்கூடிய தலைமை ஆஸ்பத்திரிகளிலும் செய்துதருமாறு சர்க்காரை நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்த வரையில் நமது சர்க்கார் அவர்களுக்கென்று 129 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். மத்திய சர்க்காரைப் பொறுத்த வரையில் பெரும் அளவுக்கு கைத்தறி நெசவாளர்களுக்கு கொடுக்காவிட்டாலும் மாகாண சர்க்கார் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காகப் பாராட்டுகிறேன். ஆனால் இந்த 129 லட்சம் ரூபாயைக் கொண்டு கூட்டுறவு இயக்கத்திற்கு வெளியில் இருக்கக்கூடிய எல்லா நெசவாளர்களையும் கூட்டுறவு இயக்கத்தின்கீழ் கொண்டு வர முடியாது. ஒரு சிலரைத்தான் கொண்டு வர முடியும். ஆங்காங்கே உள்ள எல்லா நெசவாளர்களும் கூட்டுறவு இயக்கத்தின்கீழ் வர விரும்புகிறார்கள். ஆகையால் இன்னும் அதிகமாக கைத்தறி நெசவாளர்களுக்குப் பணம் ஒதுக்கித் தரவேண்டும் என்று நான் வற்புறுத்திக் கூறுகிறேன்.

மீண்டும் நூல்களின் விலை ஏறிய சமயத்தில் மக்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி மாகாண சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டதற்காகப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் மக்கள் விரும்புகின்ற அளவுக்கு நூல் விலை குறையவில்லை. நமது மாகாணத்தில் 20-ம் நம்பர் நூல் 21 ரூபாய் வரையில் விற்பனை



14th March 1960] [Sri A. Mariappan]

யானது. மீண்டும் 19½ ரூபாயாக வந்தது. இப்போது மீண்டும் 21½ ரூபாயாக ஏறியிருக்கிறது. ஆகையால் நூல் விலை ஏறாமல் இருப்பதற்குச் சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் நமது மாகாணத்தில் அதிகமாக நூல் உற்பத்தி செய்வதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். எல்லா ஜில்லாக்களிலும் நூற்பு மில்களை ஏற்படுத்த வேண்டும் என்று பல ஆண்டுகளாகக் கேட்டுக்கொண்டு வருகிறோம். இந்த ஆண்டிலாவது வைப்பார்கள் என்று நம்புகிறேன். அவசியம் இந்த ஆண்டில் அங்கே ஒரு நூல் நூற்பு மில்லை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் 16 ஸ்பிண்டில் கொண்ட, 32 ஸ்பிண்டில் கொண்ட சிறிய சிறிய நூற்பு இயந்திரங்களை ஆங்காங்கே பெரும்பான்மையாக வைக்குமாறு வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

மின்சார சக்தியைப் பொறுத்த வரையில் நம்முடைய மாகாணத்தில்—நம் தேசத்தில் உள்ள இதர எல்லா மாகாணங்களையும் விடச் சிறப்பாக—நல்ல முறையில் எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. அதற்காக மின்சார இலாகாவைப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் எங்கள் ஜில்லாவில் உள்ள சேலம்-ஈரோடு மின்சார விநியோக கம்பெனியார் நல்ல முறையில் அந்தப் பகுதியில் மின்சாரத்தை விஸ்தரிக்க மறுக்கிறார்கள். சேலம் நகரத்தைச் சுற்றிலும் உள்ள கிராமங்களுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்கவேண்டும் என்கிறபோது அவர்கள் தடையாக இருக்கிறார்கள். சர்க்கார் அந்தக் கம்பெனியை எடுத்துக்கொண்டு விடுவார்கள் என்கிற காரணத்திற்காக நாம் ஏன் இப்போது வீணைகச் செலவு செய்யவேண்டும் என்று அசிரத்தையாக இருக்கிறார்கள். அதுவும் குறிப்பாக சேலம் நகரத்தை எடுத்துக்கொண்டால் சேலம் நகரத்திற்கு ஒரு மைல் இரண்டு மைல் தூரத்தில் உள்ள இடங்களுக்கு எல்லாம்கூட அவர்கள் மின்சாரத்தை விஸ்தரிப்பது இல்லை. இதனால் அங்கே உள்ள அநேகம் கிராமங்களில் சங்கடமாக இருக்கிறது. இந்தச் சங்கடத்தை நிவர்த்திக்க உடனடியாக சர்க்கார் அந்த சேலம்-ஈரோடு மின்சார விநியோகக் கம்பெனியை எடுத்துக்கொண்டு, பக்கத்தில் உள்ள கிராமங்களுக்கு எல்லாம் மின்சாரத்தை விஸ்தரிக்கத் தக்க நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும். ஆகவே உடனடியாக அந்தக் கம்பெனியை எடுத்துக்கொள்ளுமாறு நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சேலத்திற்கு ஒரு பாலிடெக்னிக்தான் இருக்கிறது. நமது ராஜ்யத்திலேயே அதிகமாக ஜனத்தொகை கொண்டதும், அதிகப் பரப்பளவு கொண்டதும் ஆகிய சேலம் ஜில்லாவிற்கு ஒரு பாலிடெக்னிக் போதாது. ஆகையால் சர்க்கார் செலவிலேயே அங்கே இன்னொரு பாலிடெக்னிக் ஏற்படுத்துமாறு நான் வற்புறுத்திக் கூறுகிறேன்.

அதே நேரத்தில் சேலம் ஜில்லாவில் பெரும் பகுதி ஜமீன்தாரி பகுதிகளாக இருந்த காரணத்தினால், அங்குள்ள ஏரிகளைப் பலர் ஆக்கிரமித்துக்கொண்டு அதில் சாகுபடி செய்து வருகிறார்கள்.

[Sri A. Mariappan] [14th March 1960

அந்த ஏரிகளில் தண்ணீர் நிற்கமுடியாது போகிற காரணத்தினுல் தான் அந்த ஜில்லாவிலேயே குடிதண்ணீர் கஷ்டம் மிக அதிகமாக இருக்கிறது. ஆகவே அம்மாதிரி ஜமீன்தாரி பகுதிகளில் இருந்து ஏரிகளில் சாகுபடி செய்து கொண்டிருக்கக்கூடியவர்களை அப்புறப் படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை நான் முடித்துக்கொள்கிறேன்.

* **SRI R. KANDASAMI** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் தற்கால மக்களின் சூழ்நிலையை அனுசரித்து, வறுமையை அனுசரித்து மிகத் திறமையுடன் அந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித் திருப்பதுபற்றி நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். உதாரணமாக ஆந்திர ராஜ்யம், சென்னை மாகாணத்துடன் ஒருங்கே இருக்கும்போது எங்கள் ஹரிஜன மக்களுக்காக ஒரு கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருந்தார்கள். ஆனுல் இன்றைக்கோ கிட்டத்தட்ட 3 கோடி ரூபாய் வரையில் ஒதுக்கியிருப்பதைப் பாராட்டுகிறேன். எங்கள் மக்களும் வாழ்த்துவார்கள் என்பதற்கு ஐயம் இல்லை.

தவிர என்னுடைய தொகுதியாகிய திருச்செங்கோடு டவுனைப் பொறுத்த வரையில் 25 ஆயிரத்துக்கு மேல் ஜனங்கள் இருக் கிறுர்கள். அங்கே குடிதண்ணீர் கஷ்டம் சொல்லி முடியாது. அமைச்சர்கள் அத்தனைபேரும் வந்து நன்கு பார்த்து அறிந்திருக் கிறுர்கள். அங்கேயுள்ள அர்த்தநாரீஸ்வரர் கோயில் சரித்திர வரலாற்றை உடையது. வருடா வருடம் லட்சக்கணக்கான மக்கள், யாத்திரிகர்கள் அங்கே விஜயம் செய்கிறுர்கள். அப்போ தெல்லாம் அங்கே ஏற்படுகிற குடிதண்ணீர் கஷ்டம் சொல்லி முடியாது. அதனுல் அங்குள்ள பஞ்சாயத்து போர்டு 2 லட்சம் ரூபாய் சேகரம் பண்ணி வைத்திருக்கிறுர்கள். அந்தப் பணத் தோடு சர்க்காரும் கொஞ்சம் பணம் போட்டு, கூடிய சீக்கிரம் திருச்செங்கோட்டுக்கு ஒன்பது மைல் தூரத்தில் உள்ள கொக்கராயம்பட்டியில் ஓடும் காவேரி நதியில் இருந்து பைப் மூலம் தண்ணீர் கொண்டுவருவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தவிர மேட்டூர் காவேரி நீர்த்தேக்கத்தில் இருந்து 16-வது கண் மாய் வழியாக வழிந்தோடும் தண்ணீர் சமுத்திரத்தில் போய் அநாவசியமாக விழுகிறது. அந்தத் தண்ணீரை கால்வாய் மூலமாக பொன்னியாற்றுக்குக் கொண்டுவந்து கொன்னை ஆற்றில் விட்டால் ஐம்பதாயிரம் ஏக்கரா பாசன வசதியைப் பெறும். பத்தாயிரம் ஜனங்கள் இத்திட்டத்திற்கு சர்க்காருடன் ஒத்துழைக்கத் தயா ராக இருக்கிறுர்கள். அமைச்சர் அவையும் அதை நன்கு உணர்ந் திருக்கிறுர்கள். மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அவசியம் இதை நிறைவேற்றித் தரும்படியாகச் சபையின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.



14th March 1960] [Sri R. Kandasami]

குறிப்பாக சேலம் முனிசிபாலிட்டியார் நடத்திவந்த காலேஜை சர்க்காரே எடுத்து நடத்துவதைப் பார்த்து அந்த ஜில்லாவில் உள்ள மக்கள் மிகவும் வரவேற்பதோடு அதைப் பாராட்டுகிறுர்கள். நானும் என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிற்க நம்முடைய மாநிலத்திற்கு வெளிநாட்டுப் பேரறிஞர்கள் ஐசன் ஹோவர், க்ருஷேவ் முதலியவர்கள் எல்லாம் வந்து நம்முடைய திட்ட வேலைகளை எல்லாம் பாராட்டி மிகவும் நன்ருக நடப்பதாக மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறுர்கள். ஆனுல் நம் நாட்டு ஸ்ரீ சின்னதுரை அவர்களுக்கு மட்டும் அது புரியாமல் இருப்பது விநோதமாக இருக்கிறது. நமது தி.மு.க. பெரியவர்களும் கூட ஒரு விஷயத்தை மட்டும் சொல்லாமல் விட்டு வைத்திருக்கிறுர்கள். அதாவது, ஹிமய மலை எத்தனை உயர்ந்து வளர்ந்திருக்கிறது பார். தெற்கே அத்தகைய உயரமுள்ள மலையே இல்லாமல் விட்டிருக்கிறுர்கள், என்று இனி அப்படியும் சொல்ல ஆரம்பித் தாலும் ஆரம்பிப்பார்கள். எப்படியோ எல்லோரும் இந்தத் திட்டங்கள் எல்லாம் நன்ருக அமைந்திருக்கிறது என்று உள்ளூர நினைக்கிறுர்கள். ஆனுல் வெளியில் வெங்காயம் விட்டுப் போச்சு என்பதாகப் பேசுகிறுர்கள். ஆகவே, இனிமேலாவது நாட்டின் நலனைக் கருதி எல்லாவிதமான அபிவிருத்தித் திட்டங்களிலும் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்பதாகச் சபையின் சார்பாக நானும் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வரவு செலவுத் திட்டத்தைப்பற்றி பல பெரியவர்கள் சொல்லி இருக்கிறுர்கள். நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. கைத்தொழில், விவசாயம், கல்வி ஆகிய எல்லாத் துறைகளிலும் நம் சர்க்கார் அதிகமான முன்னேற்றத்தைக் காணவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொண்டு அத்தகைய முன்னேற்றத்திற்கு ஏற்றதொரு வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரித்து நமது அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருப்பதற்காக நான் அவரைப் பாராட்டி என் உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**SRI N. MARUDACHALAM** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த வரவு செலவுத் திட்டத்தின்மீது நான் சில கருத் துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த வரவு செலவுத் திட்ட மானது பழைய மாதிரியே இருக்கிறதே தவிர புதிதாக ஒன்றும் விசேஷமாக இல்லை என்பதை நான் குறிப்பிடுகிறேன். அதே சமயத்தில் இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஹரிஜனங்களுக்கு என்று தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஹரிஜனங்களுக் கென்று ஒதுக்கப்பட்ட தொகை காலாகாலத்திலே அவர்களுக்குத் தேவையானபோது கொடுத்து உதவி செய்யப்படுகிறதா என்று பார்த்தால் அதுதான் இல்லை. ஏற்கனவே அமைச்சர் அவர்கள் ஹரிஜனங்களுக்குச் சாங்ஷன் செய்யப்படுகிற ஸ்காலர்ஷிப் தொகை காலாகாலத்தில் கிடைப்பது இல்லை. அதன் காரணமாக இப்போது மத்திய சர்க்கார் நமக்குப் பணத்தை அலாட் செய்து விடுகிறுர்கள். இதனுல் இனி காலதாமதம் தவிர்க்கப்படும் என்று கூறி இருக்கிறுர்கள்.

[Sri N. Marudachalam] [14th March 1960

அதே சமயத்தில் 1956-57-ல் மத்திய அரசாங்கம் நமக்கு மான்ய மாக கொடுத்த தொகையில் 50 லட்சம் ரூபாய் ஹரிஜனங்களுக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. அதில் 23 லட்சந்தான் செலவிடப் பட்டிருக்கிறது. பாக்கி திருப்பி அனுப்பப் பட்டிருக்கிறது. காரணம் என்ன? ஹரிஜனங்கள் அந்த அரசாங்கத்தின் நன்மை களைப் பெற மறுத்து விட்டார்களா? என்ன காரணத்தால் அது திருப்பி அனுப்பப் பட்டிருக்கிறது என்பது புரியவில்லை.

**THE HON. SRI P. KAKKAN:** இப்பொழுது நடப்பது, இரண்டா வது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஐந்தாவது வருடம். இந்த வருடம் செலவழிக்கப்படாவிட்டால் அடுத்த வருடம் செலவழிக்கப்படும். திருப்பி அனுப்பப்படவில்லை.

**SRI N. MARUDACHALAM:** சென்ற வருடம் அந்தப் பணம் ஏன் செலவழிக்கப் படவில்லை என்றுதான் நான் கேட்கிறேன்? அதை பாக்கி வைக்கக் காரணம் என்ன? ஹரிஜனங்கள், அதை வேண்டாமென்று சொல்லிவிட்டார்களா? ஹரிஜனங்கள், முக்கிய மாக விவசயாத்துறையில் பண்ணையாட்களாக இருக்கிறார்கள். மேலும், ஜனங்கள் அருவருக்கத் தக்க வேலைகளை அவர்களே செய்கிறார்கள். சர்க்கார் ஆஸ்பத்திரியில் உள்ள நோயாளிகளின் வேலைகளை அவர்களே கவனிக்கிறார்கள். முனிசிபல் வேலைகளை எல்லாம் அவர்களே செய்கிறார்கள். ஒரு அங்கத்தினர் கூறினர், இப்பொழுது கொசு உபத்திரவம் அதிகமாகப் போய் விட்டதென்று. அதையும் தீர்த்து வைக்கும் வேலையில் ஈடுபடுபவர்கள் ஹரிஜனங் களே. முனிசிபல் தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் சம்பளத் தைப் பார்த்தால், அவர்களுக்கு கொடுப்பது 18 ரூபாய்தான். பெண்களுக்கு 15 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாவற்றையும் சேர்த்து 53 ரூபாய்தான் வருகிறது. கொஞ்சம் அதிகமாக கிடைக்கலாம், ஸிட்டியில். மற்றயிடங்களில் இப்படித் தான் கொடுக்கப் படுகிறது. இன்று விலைவாசி ஏறி இருக்கிறது என்று சொல்லும்போது, இவர்களுக்கு மட்டும் குறைந்தா விட்டது. ஆகவே, குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளம் 30 ரூபாயாவது கொடுத்தால்தான் அவர்கள் வாழ்க்கை நடத்த முடியும். இன்று அதிகமாக வேலை செய்வதும் ஹரிஜனங்கள்தான். அவர்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும் கூலி, ஒரு ரூபாய், 1.25 நயா பைசா, 1.75 நயா பைசா என்றிருக்கிறது. இன்று விலை வாசிகள் உயர்ந்து கொண்டே போய்க்கொண்டிருக்கிறது என்பதை அரசாங்கமே ஒப்புக்கொள்கின்றது. ஆகவே, அந்த முறையில் குறைந்தபட்ச கூலி 2 ரூபாய் என்றாவது ஆக்கப்படவேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்த முடியும். விவசாயிகளைப் பற்றி ஒரு வார்த்தை கூற விரும்பு கிறேன். எனது தொகுதியில், மேற்குப் பகுதியில் ஒன்பது குளங்கள் இருக்கின்றன. அவைகளை ஆழப்படுத்தி தண்ணீர் தேக்க வைக்க ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டம் இருக் கிறதே தவிர அதைச் சரிவர செய்யவே இல்லை. பேசிக்கொண் டிருப்பதை பேசிக்கொண்டுதான் இருக்கவேண்டும், ஆனால்



14th March 1960] [Sri N. Marudachalam]

குளங்கள் ஆழப்படுத்தப்படாமல் அப்படியே இருக்கவேண்டும் என்றுதான் நிலை இருக்கிறது. அங்குள்ள பூமிக்கு சமமாக இருக் கிறது. சிலயிடங்களில் ஹைவேஸ் டிபார்ட்மென்டார் வேலை செய்கி றார்கள். அவர்கள் ஏதோ செலவு காட்டுகிறார்களே தவிர மேடு மேடாகத்தான் இருக்கிறது. அவை, இன்னும் அதிக மேடாகத் தான் போய்கொண்டிருக்கிறது. மேட்டை இடித்து தண்ணீரை நிறுத்தினால்தானே விவசாயிகள் விவசாயம் செய்யமுடியும்? கிணறுகளை நம்பித்தான் விவசாயிகள் விவசாயம் செய்யமுடியும். ஆகவே, அந்தக் குளங்களில் உடனடியாக மராமத்து வேலைகள் செய்யப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கிணறுகள் வெட்டுவதற்கு வெடி மருந்து கொடுக்கப்படுகிறது. சென்ற காலத்தில் அந்த வெடி மருந்துகள் தாசில்தார் உத்தரவு இருந்தால் கொடுக்கப்படும், இல்லை என்றால் ரெவின்யூ ஆபீஸர் உத்தரவு வேண்டும். இப்பொழுது அப்படியில்லை. இப் பொழுது கலெக்டர் உத்தரவு வேண்டும். கலெக்டர் உத்தரவு இருந்தால்தான் வெடி மருந்து கொடுக்கப்படுகிறது. கலெக்டர் உத்தரவு இருந்தாலும், சுற்றளவு 200 அடி விஸ்தீரணம் இருக்க வேண்டும். ப்ளான் எடுத்து கலெக்டரிடம் கொடுக்க வேண்டும். அதை அவர் தாசில்தாருக்கு அனுப்புவார். அதை அவர் ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கு அனுப்பி வெடி மருந்து கைக்குக் கிடைப் பதற்கு முன்பு செய்த வேலைகள் எல்லாம் பாழாகிவிடும். ஆகவே, முன்மாதிரி கொடுக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று கோவையில் தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக ஏற்பட்டிருக்கிறது என்பது தெரிந்த விஷயமே. எனக்கு முன் பேசியவர்கள் சொல்லியிருப்பார்கள், தண்ணீர் என்பது எல்லோருக்கும் அவசியமானதொன்றாகும், என்று. நான் சொல்வது, சிறுவாணி அணைக்கட்டு கட்டினாலொழிய கோவை நகரத்திற்கு தண்ணீர் சப்ளை செய்ய முடியாது. முன்பு ஒரு லட்சம் ஜனத்தொகை கொண்ட நகரம் இப்பொழுது மூன்று லட்சம் ஜனத்தொகை கொண்டதாக விரிவடைந்திருக்கிறது. அப்படி விரிவடைந்திருக்கும்போது இப்பொழுது பீளமேட் டையும் அதோடு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்தி லிருந்து தாக்கீது வந்திருக்கிறது. அதையும் சேர்த்துக் கொண் டால் அவர்களுக்கும் தண்ணீர் கொடுக்க வேண்டும். இதுபற்றி சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபார்சு செய்ய வேண்டும். சென்னை அரசாங்கந்தான் பொருளுதவி செய்ய வேண்டும். சிறுவாணி அணைக்கட்டானது கேரள பார்டரில் கட்ட வேண்டியிருக்கிறது. கேரளத்தோடு பேச்சு வார்த்தை நடத்தி சிறுவாணித் திட்டத்தை நடத்தி அங்குள்ள மக்களுக்கு தண்ணீர் வசதி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி) இன்று பல கிராமங்களில் ஆஸ்பத்திரி வசதியோ அல்லது பிரசவ வசதியோ எதுவும் கிடையாது. அவ்வளவு மோசமான நிலையில் அவைகள் இருக்கின்றன. ஆகவே, அப்படிப்பட்ட கிராமங்களுக்கு நல்ல ஆஸ்பத்திரி வசதி செய்து கொடுப்பதோடுகூட எல்லாயிடங் களிலும் பிரசவ விடுதிகள் கட்டவேண்டும். கல்வி சகாய நிதி

[Sri N. Marudachalam] [14th March 1960

ஏற்படுத்துவதோடுகூட எல்லா இதர வசதிகளையும் செய்து தர வேண்டும். கடைசியாக, இந்த வரவு செலவுத் திட்டத்தின் கடைசியில் வாழ்த்துச் செய்தி கூறும்போது, அமைச்சர் அவர்கள் கூறினார்கள், இந்த வரவு செலவுத் திட்டத்தை தயார் செய்த ஆபீஸர்களுக்கு நன்றி கூறினார்கள். பெரிய பெரிய அணைக்கட்டுத் திட்டங்களைக் கட்டிய என்ஜினியர்களுக்கு வாழ்த்துக் கூறினார்கள். ஆனால் பெரிய பெரிய அணைகள் கட்டும்போது, கட்டிடத்திற்கு கல் சுமந்தும், பாறைகளை உடைத்தும் கட்டிடங்களையும், மற்ற அணைத் திட்டங்களையும் கட்டி முடித்தவன் தொழிலாளி. ஆகவே, என்ஜினியர்களுக்கு மட்டும் நன்றி செலுத்தினால் போதாது. அணைக்கட்டுகளைக் கட்டி நாட்டுக்கு நன்மை செய்த தொழிலாளர்களுக்கும் இந்த சபை தனது நன்றியைச் செலுத்த கடமைப்பட்டிருக்கிறது என்றும் கூறிக்கொண்டு நான் எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

### V.—ANNOUNCEMENTS—*cont.*

#### (2) DECISION OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

DEPUTY SPEAKER : The Business Advisory Committee met at 10-30 a.m. to-day and decided as follows :—

1. That the House may meet on the afternoon of 16th March 1960 to consider the amendments to the Tiruchirappalli Kaoiruvaram and Mattuvaram Rules, 1959.

2. That on the 24th March 1960 the Appropriation Bills and any other pending Official Bills be considered.

3. That the House, after adjourning on the 25th March 1960, may reassemble on the 6th April 1960 and continue till the 30th April 1960.

4. That in April, voting on Demands for Grants for the year 1960-61 may be taken up between the 6th and 12th April, and again between the 21st and 29th April 1960.

5. That the Madras Ceiling on Land Holdings Bill may be introduced on the 6th April and that it may be taken up for consideration between the 14th and 20th April 1960.

6. That the Appropriation Bill and any other Official Bills may be considered on the 30th April 1960.

The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.



14th March 1960]

### VI. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

* 34. *Notification issued with G.O. Ms. No. 44, L.A., dated 11th Jaunary* 1960, *declaring each of the local areas forming a Development Block in South Cuddalore Development District for the purposes of the National Extension Service Scheme of Community Development to be a Panchayat Development Block and to constitute for such Panchayat Development Block a Panchayat Union.* [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

*35. *Notification issued with G.O. Ms. No. 45, L.A., dated 11th January* 1960, *declaring each of the local areas forming a Development Block in Chingleput Development District for the purposes of the National Extension Service Scheme of Community Development to be a Panchayat Development Block and to constitute for such Panchayat Development Block a Panchayat Union* [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

* 36 *Notification issued with G.O. Ms. No. 46, L.A., dated 11th January* 1960, *declaring each of the local areas forming a Devolopment Block in East Coimbatore Development District, for the purposes of the National Extension Service Scheme of Community Development to be a Panchayat Development Block and to constitute for such Panchayat Development Block a Panchayat Union.* [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

* 37. *Notification issued with G.O. Ms. No. 47, L.A., dated 11th January* 1960, *declaring each of the local areas forming a Development Block in West Coimbatore Development District, for the purposes of the National Extension Service Scheme of Community Development to be a Panchayat Development Block and to constitute for such Panchayat Development Block a Panchayat Union.* [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

* 38. *Notification issued with G.O. Ms. No. 48, L.A., dated 11th January* 1960, *declaring each of the local areas forming a Development Block in North Madurai Development District for the purposes of the National Extension Service Scheme of Community Development to be a Panchayat Development Block and to constitute for such Panchayat Development Block a Panchayat Union.* [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

* 39. *Notification issued with G.O. Ms. No. 49, L.A., dated 11th January* 1960, *declaring each of the local areas forming a Development Block in South Madurai Development District, for the purposes of the National Extension Service Scheme of Community*

[14th March 1960

*Development to be a Panchayat Development Block and to constitute for such Development Block a Panchayat Union.* [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

* 40. *Notification issued with G.O. Ms. No.* 50. *L.A.. dated* 11*th January* 1960, *declaring each of the local areas forming a Development Block in the Nilgiris Development District, for the purposes of the National Extension Service Scheme of Community Development to be a Panchayat Development Block and to constitute for such Development Block a Panchayat Union.* [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

* 41. *Notification issued with G.O. Ms. No.* 51, *L.A.. dated* 11*th January* 1960, *declaring each of the local areas forming a Development Block in East Ramanathapuram Development District, for the purposes of the National Extension Service Scheme of Community Development to be a Panchayat Development Block and to constitute for such Development Block a Panchayat Union.* [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

* 42. *Notification issued with G.O. Ms. No.* 52, *L.A., dated* 11*th January* 1960, *declaring each of the local areas forming a Development Block in West Ramanathapuram Development District, for the purposes of the National Extension Service Scheme of Community Development to be a Panchayat Development Block and to constitute for such Development Block a Panchayat Union.* [*Laid on the table of the House under section* 170 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

** 43. *Notification issued with G.O. Ms. No.* 53, *L.A., dated* 11*th January* 1960, *declaring each of the local areas forming a Development Block in North Salem Development District, for the purposes of the National Extension Service Scheme of Community Development to be a Panchayat Development Block and to constitute for such Development Block a Panchayat Union.* [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

** 44. *Notification issued with G.O. Ms. No.* 54, *L.A., dated* 11*th January* 1960, *declaring each of the local areas forming a Development Block in South Salem Development District, for the purposes of the National Extension Service Scheme of Community Development to be a Panchayat Development Block and to constitute for such Development Block a Panchayat Union.* [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

** 45. *Notification issued with G.O. Ms. No.* 55, *L.A., dated* 11*th January* 1960, *declaring each of the local areas forming a Development Block in East Thanjavur Development District, for the*



14th March 1960]

*purposes of the National Extension Service Scheme of Community Development to be a Panchayat Development Block and to constitute for such Development Block a Panchayat Union.* [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

** 46. *Notification issued with G.O. Ms. No.* 56, *L.A., dated* 11*th January* 1960, *declaring each of the local areas forming a Development Block in West Thanjavur Development District, for the purposes of the National Extension Service Scheme of Community Development to be a Panchayat Development Block and to constitute for such Development Block a Panchayat Union.* [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

** 47. *Notification issued with G.O. Ms. No.* 57, *L.A., dated* 11*th January* 1960, *declaring each of the local areas forming a Development Block in North Tiruchirappalli Development District, for the purposes of the National Extension Service Scheme of Community Development to be a Panchayat Development Block and to constitute for such Development Block a Panchayat Union.* [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

** 48. *Notification issued with G.O. Ms. No.* 58, *L.A., dated* 11*th January* 1960, *declaring each of the local areas forming a Development Block in South Tiruchirappalli Development District, for the purposes of the National Extension Service Scheme of Community Development to be a Panchayat Development Block and to constitute for such Development Block a Panchayat Union.* [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

** 49. *Notification issued with G.O. Ms. No.* 59, *L.A., dated* 11*th January* 1960, *declaring each of the local areas forming a Development Block in North Tirunelveli Development District, for the purposes of the National Extension Service Scheme of Community Development to be a Panchayat Development Block and to constitute for such Development Block a Panchayat Union.* [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

** 50. *Notification issued with G.O. Ms. No.* 60, *L.A., dated* 11*th January* 1960, *declaring each of the local areas forming a Development Block in South Tirunelveli Development District, for the purposes of the National Extension Service Scheme of Community Development to be a Panchayat Development Block and to constitute for such Development Block a Panchayat Union.* [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

APPENDIX I.

[Vide answer to starred question No 336 asked by Sri S. Lazar and Sri K. Sattanatha Karayalar at the meeting of the Legislative Assembly held on 14th March 1960, page 383 supra.]

*Research work done in the Agricultural College, Coimbatore.*

The research work done at the Agricultural College and Research Institute covers a vast range of subjects. Briefly, the research work in the main is directed towards increasing agricultural production in all its aspects by—

(i) evolving methods for improving cultivation practices of different crops of the State on scientific lines;

(ii) evolving better strains of seeds for the various crops;

(iii) evolving better practices of manuring and fertilizing the crops;

(iv) evolving better methods of pest control and plant protection;

(v) designing better and more suitable implements and equipment required for agriculture; and

(vi) conducting soil analysis with a view to find out the various deficiencies in a particular soil and advising the types of fertilizers that will be required and their proportionate percentage, etc.

The interested agriculturists, with the aid of the Extension staff in the field, adopt the methods recommended by the Agricultural Department in their own fields and they refer the difficulties and/or achievements to the Department for further advice.

The Extension division of the Agricultural Department is the main agency to carry to the agriculturists results of the research by means of publicity through pamphlets, leaflets, posters, radio talks, propaganda meetings and other educational activities. A monthly journal in Tamil 'Mezhichelvam' also carries information on the scientific agriculture in simple language to the agriculturists. The Community Development Agency at the Block level is the most important one to undertake extension activities in agriculture in the blocks through the Extension officers in agriculture and the Grama Sevaks. Demonstration plots are laid and various practices as recommended by the Agricultural Department are demonstrated in practice in the fields of agriculturists by the Block staff. The functional Village Leaders' training camp organized by the Block agency assemble together agriculturists in each block at various camps where not only demonstrations are held and talks given but exchange of ideas between the ryots from various villages is also promoted. In this State, 2,690 camps have been held in Block areas till the end of August 1959 in which 128,447 agriculturists have been trained in all matters connected with improvement of agriculture. This has been one of the very successful methods of disseminating the knowledge to agriculturists.



APPENDIX II.

Vide answer to starred question No. 345 asked by Sri N. K. Palanisami at the meeting of the Legislative Assembly held on 14th March 1960, page 392 supra.]

(a) Total amount of loan advanced by this Government to private industries during the last three years :—

| *Year.* (1) | | | *Amount.* (2) RS. | nP. |
|---|---|---|---|---|
| 1956-57 | .. | .. | 11,27,865 | 00 |
| 1957-58 | .. | .. | 24,88,962 | 00 |
| 1958-59 | .. | .. | 24,56,687 | 44 |

(b) Total shares owned by this Government in private industries, industries-war:—

| *Serial number and name of the concern.* (1) | *Industry.* (2) | *Total shares owned by the Government.* *Number of shares.* (3) | *Amount.* (4) RS. | *Remarks* (5) |
|---|---|---|---|---|
| The Madras Industrial Investment Corporation, Limited, Madras. | .. | 10,200 | 1,02,00,000* | .. |
| The Fertilizers and Chemicals, Travancore, Limited, Alwaye. | Chemical and Fertilizer .. | 256,933 | 25,69,330 | .. |
| Radio and Electricals, Limited, Madras-6. | Manufacture of power and distributions, transformers. | 12,533 | 62,665 | .. |
| The Ramaraju Surgical Cotton Mills, Limited, Rajapalayam. | Manufacture of surgical cotton goods. | 198 | 19,800 | .. |
| Dhrangadhara Chemical Works, Limited, Dhrangadhara (Sourashtra), Bombay. | Manufacture of caustic soda and soda ash. | 10,000 | 10,00,000 | .. |
| Messrs. Seshasayee, Limited, Tiruchirappalli. | Manufacture of porcelain insulators. | 10,000 | 40,000† | .. |
| Madras Cements, Limited, Rajapalayam. | Manufacture of cements .. | 10,000 | 10,00,000 | .. |
| Messrs. Southern Structurals, Madras-17. | Manufacture of railway goods wagons. | 20,000 | 1,00,000‡ | .. |

* This unit is advancing loans to industrialists for more than one lakh of rupees.

† Rs. 60,000 will be paid on completion of certain conditions.

‡ Rs. 1,00,000 will be paid on completion of certain conditions.

SRI V. SANKARAN: தனிப்பட்டவர்கள் நடத்தக்கூடிய பள்ளிக்கூடங்களாக இருந்தாலும், சர்க்காரிலிருந்து அவர்களுக்கு கிராண்ட் கொடுத்துக் கொண்டிருப்பதால், குறைந்த பட்சம் சர்வீஸ் கண்டிஷன் முதலியவற்றில் சர்க்கார் நடத்தும் பள்ளிக்கூடங்களில் இருப்பது போன்று அமல் நடத்தப்படுவதற்கு அரசாங்கம் ஏதாவது விதிகளை அமைப்பார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: நான் முன்பே சொன்னேன், மானேஜ்மெண்டும் ஆசிரியர்களும் ஒரு ஒப்பந்தம் எழுதிக் கொள்ளுகிறார்கள். அதன் பிரகாரம் நடக்கவேண்டும் என்பதுதான் சாதாரணமாக இருந்து வருவது. ஒப்பந்தத்தை மீறுவார்களானால் அதற்கும் மேல் புகார் செய்வதற்கு விதியில் இடமிருக்கிறது.

SRI N. K. PALANISAMI: ஸார், இந்த ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கும் போதே ராஜிநாமா கடிதத்தையும் எழுதி வாங்கி விடுகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அப்படியானால் இதை மாற்றி அவர்களுக்கு வேலை உத்திரவாதம் செய்யக் கூடிய விதத்தில் ஏதாவது விதிகள் அமைக்கப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: சாதாரணமாக ஸெகண்டரி ஸ்கூலில் ஆசிரியர்களாக வருபவர்கள், இரண்டு பட்டங்கள், அதாவது பி.ஏ.பி.டி. பெற்றவர்கள் வருகிறார்கள். இவ்விதம் படித்தவர்களே ராஜிநாமா கடிதம் எழுதிக்கொடுக்கிறார்கள் என்றால், இதில் நாம் யாருக்கும் உதவி செய்வது என்பது இயலாத காரியம் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI T. S. RAMASWAMI: May I know whether there are different scales of pay even amongst Government teachers? If so will the Government take action to unify the scales?

THE HON. SRI C. SUBRAMANIAM: I do not know whether the hon. Member is referring to Kanyakumari or non-Kanyakumari area. That is being regularised.

SRI K. VINAYAKAM: Apart from the statutory guarantee or otherwise given to the teachers employed in secondary schools, is the Hon. Minister aware of the fact that a school in Kodambakkam in the City has not paid their teachers salaries for the past ten months in spite of representation to the Minister? What action do the Government take on such kinds of representations?

THE HON. SRI C. SUBRAMANIAM: It does not arise out of the main question. Since this is an important feature in the City of Madras I would like to refer to it. The trouble there in the High School is dispute within the management and the whole matter is before the Court. Therefore we are unable to do anything in the matter. Without getting proper orders from the Court, we cannot do anything. Even if we want to distribute grants directly to the teachers without passing it through management, we have to get orders of Court. That is the real difficulty.



## *Labour Ministers' Conference*

* 365 Q.—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Industries be pleased to state the subjects discussed and decisions taken at the Labour Ministers' Conference held at Delhi in the first week of January 1960?

THE HON. SRI R. VENKATARAMAN: The following subjects were discussed at the 16th Session of the Labour Ministers' Conference held on the 3rd and 4th January 1960 at New Delhi:—

(1) Action taken on the conclusions of the 15th Session of the Labour Ministers' Conference;

(2) Working of the Code of Discipline;

(3) Application of labour legislation to the public sector undertakings;

(4) Safety, prevention of accidents and strengthening of factory inspectorates;

(5) Free legal aid to workers in cases of industrial disputes;

(6) Matters relating to the Employees' State Insurance Scheme; and

(7) Implementation of the Minimum Wages Act, 1948.

The decisions reached at the above conference have since been communicated by the Government of India and they are under consideration of this Government.

SRI S. LAZAR ஸார், இந்த மகா நாட்டில் தொழிலாளர்களுக்குக் கொடுக்கவேண்டிய போனஸ் சம்பந்தமான பிரச்னையைப்பற்றியும், மானேஜ்மெண்டார் கோர்ட் தீர்ப்புகளை நிறைவேற்றாதபோது தொழிலாளர்கள் கோர்ட்டுக்குப் போகும்போது ஏற்படுகிற கஷ்டங்களைப்பற்றியும், அதனால் ஏற்படுகிற காலதாமதங்கள் பற்றியும் பரிசீலனை செய்யப்பட்டதா? அப்படியானால் அதன் பேரில் ஏதாவது முடிவுகள் எடுக்கப்பட்டனவா?

THE HON. SRI R. VENKATARAMAN: இவைகள் பரிசீலனை செய்யப்படவில்லை.

SRI S. M. ANNAMALAI; ஸார், இந்த மகாநாட்டில் பீடித் தொழிலாளர்கள் பாதுக்காப்புச்சட்டத்தை எல்லா மாகாணங்களுக்கும் விஸ்தரிப்பதுபற்றி வற்புறுத்தப்பட்டதா?

THE HON. SRI R. VENKATARAMAN: இது தென் பிராந்தியத்தைப்பற்றியுள்ள பிரச்னை. இதைப்பற்றி தென் பிராந்தியத்திலுள்ள தொழிலாளர் மந்திரிகள் எல்லோரும் கூடி விவாதிக்கப் போகிறார்கள்.

SRI P. G. MANICKAM: மினிமம் வேஜஸ் ஆக்ட் பிரகாரம் நமது மாகாணத்தில் சம்பளம் கொடுத்து வருவது போன்று மற்ற மாகாணங்களிலும் கொடுக்கப்பட்டு வருகிறதா? அல்லது ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா?

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, 15th March 1960.**

The House met in the Assembly Chamber, Fort St. George, **at** half past eight of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTHAVATSALU NAIDU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Secondary School Teachers*

*366 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether teachers in private Secondary Schools have been given statutory guarantee in respect of salaries and other service conditions as given to teachers in Public Secondary Schools, Municipal and District Board Schools; and

(*b*) if so, the details of the same?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

**SRI N. K. PALANISAMI:** ஸார், பப்ளிக் ஸெக்ன்டரி ஸ்கூல்களிலும், டிஸ்ட்ரிக்ட் போர்ட் பஞ்சாயத்து போர்ட் இவைகள் நடத்தும் ஸ்கூல்களிலும் இருக்கும் ஆசிரியர்களுக்கும் கிடைத்து வரும் சம்பளங்கள், சர்வீஸ் கண்டிஷன் மாதிரி ஏன் தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களில் இருக்கும் ஆசிரியர்களுக்கும் கொடுக்கக்கூடாது? ஏன் இந்த பாரபட்சம் காட்டப்படுகிறது?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** பாரபட்சம் ஒன்றும் இல்லை. தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களை நியமிப்பதற்கு முன்னால் அவர்கள் ஆசிரியர்களோடு ஒரு ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். அந்த ஒப்பந்தத்தின் படி இரண்டு பேரும் நடக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையின் பிரகாரம் இரண்டு பேரும் நடந்து வருகிறார்கள். இதில் அதிகமாக பிரச்னை இருப்பதற்கில்லை.

**SRI M. K. SOMASUNDARAM:** ஸார், தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் எழுதிக்கொடுக்கும் எக்ரிமென்டில் இருக்கும் சம்பளத்தைக் கூடக் கொடுக்கச் சில இடங்களில் மறுக்கிறார்கள். அதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்?

**THE HON. SRI C. SUBRAMANIAM:** எக்ரிமென்டை மீறுவதாக இருந்தால் டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்குப் புகார் செய்யலாம். அதற்கும் மேலாக டி.பி.ஐ.-க்கு அப்பீல் செய்யலாம். பின்னால் சர்க்காருக்கும் இதைப்பற்றி அப்பீல் செய்யலாம்.

[15th March 1960

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த வித்தியாசம் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் தென் பிராந்தியத்திலுள்ள தொழில் மந்திரிகள் அடிக்கடி கூடி விவாதிக்கின்றார்கள், குறைந்த பட்ச கூலி சம்பந்தமாக.

SRI V. K. KOTHANDARAMAN : "கோட்ஸ் ஆப் டிஸிப்ளின்" பேரில் எந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது? அதைப்பற்றி கொஞ்சம் விவரங்கள் கூற முடியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : அங்கத்தினர் அவர்களுடைய கேள்வி எனக்கு சரியாக விளங்க வில்லை. எந்த அடிப்படையில் இதை விரும்புகிறார்கள் என்று தெரியவில்லை.

SRI T. S. RAMASWAMI : May I know the decisions cu free aid to labour organisations?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது தேவையில்லை என்றுதான் முடிவு செய்யப்பட்டது.

SRI P. S. CHINNADURAI : தொழிலாளர்கள் இன்ஷூரன்ஸ் திட்டத்தில் ஆயுள் இன்ஷூரன்ஸ் திட்டத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று இந்த அரசாங்கம் அந்த மகாநாட்டில் ஆலோசனை கூறியதா?

THE HON. SRI R. VENKATARAMAN : இது 'ஹெல்த் இன்ஷூரன்ஸ்'. ஆயுள் இன்ஷூரன்ஸ் வேறு, ஹெல்த் இன்ஷூரன்ஸ் வேறு. கனம் அங்கத்தினர் கூறுவது மாதிரி உலகத்தில் எங்குமே இருப்பதாகத் தெரியவில்லை.

SRI J. MATHA GOWDER : ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் தான் இருக்க வேண்டும் என்றுள்ள கொள்கையைப்பற்றி அந்த மகாநாட்டில் ஏதாவது முடிவு செய்யப்பட்டதா?

THE HON. SRI R. VENKATARAMAN : அங்கு என்னவெல்லாம் முடிவு செய்யப்பட்டது என்பதைப்பற்றி என்னுடைய பதிலில் சொல்லிவிட்டேன். அதில் சொல்லாததெல்லாம் அங்கு விவாதிக்கப்படவில்லை என்று அர்த்தம்.

*Salary of Members of the Madras Legislature*

* 367 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have reconsidered to raise the salary of the Members of the Madras Legislature?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI A. A. RASHEED : Is the Minister aware of the fact that in West Bengal, Bihar, Bombay and recently in Kerala they have raised the salaries of Members of Legislature? If so why not salaries of members of Madras Legislature also be raised?

THE HON. SRI C. SUBRAMANIAM : I may tell for the information of hon. Members that salaries of Members of Legislature are Rs. 150 per mensem in Andhra, Rs. 150 in Mysore, Rs. 120 in Kerala.



15th March 1960]

SRI A. A. RASHEED : In Kerala there is a proposal to raise it to Rs. 150?

THE HON. SRI C. SUBRAMANIAM : Proposals cannot be taken as decisions. Therefore almost all the States in Southern Zone are paying Rs. 150 or so per month. I do not think it is advisable to increase the salary now.

SRI V. SANKARAN : முதலாவது தானாகவே செய்வதற்கு ஏதாவது சங்கோஜமாக இருந்தால், ஏற்கனவே கேரளா போன்ற இடங்களில் இதற்கு பிரபோஸல் கொண்டுவந்திருக்கிறார்கள், அதன் அடிப்படையில் கொண்டு வரலாமல்லவா? இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் சங்கோஜத்திற்கோ கூச்சத்திற்கோ இடமில்லை. இது சரியா என்பதைத்தான் நாம் ஆலோசித்துப் பார்க்கவேண்டும். என்னைப் பொறுத்த வரையில், இதில் கட்சித் தலைவர்கள் எல்லாம் கூடி ஒரு முடிவு செய்தால் அதைப்பற்றி பரிசீலனை செய்வதற்குத் தயார்.

SRI C. MUTHIAH PILLAI : இம்மாதிரிப்பட்ட கருத்துக்களைப்பற்றி அங்கத்தினர்கள் அபிப்பிராயம் தெரிவிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. இதைப்பற்றி ஏதாவது அபிப்பிராயம் சொல்லப்பட்டதா? அல்லது இப்போது சாதாரணமாக நடந்து வருவதுபோல் புரட்சி செய்துதான் இதை கேட்கவேண்டுமா? அல்லது தானாகவே செய்வார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : புரட்சி செய்வது என்றால் இந்த சபையிலுள்ளவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். அதற்கான உரிமை, அதிகாரங்கள் எல்லாம் இந்த சபைக்கு இருக்கிறது. அது ஒருபுறமிருக்க, எல்லா அங்கத்தினர்களுக்கும் இதைப்பற்றி கருத்து தெரிவிக்கவில்லை. சிலர் இவ்விதம் நினைப்பதாகக் கேள்விப்பட்டேன். இதில் எல்லாக் கட்சித்தலைவர்களும் ஒன்று சேர்ந்து ஒரு முடிவு எடுப்பதாக இருந்தால் அதைப் பற்றி பரிசீலனை செய்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

SRI K. R. NALLASIVAM : ஸார், சோஷலிஸ அடிப்படையை ஒப்புக்கொண்டிருக்கக்கூடிய இந்த சர்க்கார், சம்பளத்தில் சட்ட சபை அங்கத்தினர்களுக்கும் மந்திரிகளுக்கும் இடையே இருக்கக் கூடிய ஏற்றத்தாழ்வைக் குறைக்க வேண்டிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : சோஷலிஸ்ட் கட்சியிலே ருக்கக்கூடிய கனம் நல்லசிவம் அவர்கள் ஒரு தொழிலாளியைப் பால் இருக்க ஆரம்பித்து மற்றவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக ருந்தால் இங்கேயும் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வதை முழுக்குக் கொண்டுவரலாம்.

SRI S. NAGARAJA MONIGAR : ஸார், சில அங்கத்தினர்களுக்கு இப்போது கொடுக்கப்படும் சம்பளம் கூடத் தேவை ல்லை, அவர்களுடைய பொருளாதார நிலை அம்மாதிரி இருக்கலாம்.

[15th March 1960

அத்தகையவர்களை நீக்கிவிட்டு மற்றவர்களைப் பற்றி கவனிக்க முடியுமா? சம்பளத்தை உயர்த்தாவிட்டாலும், தினசரி பாட்டா வையாவது அதிகரிக்க நடவடிக்கை எடுப்பார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதைப் பற்றி யெல்லாம் சர்க்கார் முடிவு செய்யக் கூடியது ஒன்றுமில்லை. எல்லாக் கட்சிகளும் ஒன்றுகச் சேர்ந்து முடிவு செய்ய வேண்டிய விஷயம். ஆகையால் ஆரம்பம் கட்சித் தலைவர்களிடமிருந்து வரவேண்டும்.

*Archakas' behaviour in Tiruchendur and Kanyakumari temples*

* 368 *Q.*—SRI M. P. SARATHI, SRI A. A. RASHEED, SRI K. SATTANATHA KARAYALAR, SRI T. S. RAMASWAMI: கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) திருச்செந்தூர், கன்னியாகுமரி முதலிய ஆலயங்களில் பணிபுரியும் பட்டர்கள் அங்கு வரும் பக்தர்களிடம் அசட்டையாகவும் மரியாதைக் குறைவாகவும் நடப்பதாக அரசாங்கத்திடம் புகார் வந்ததா?

(ஆ) அது பற்றி என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The Union Deputy Minister for Railways has written to the Home Minister referring to the method of distribution of Prasadams to worshippers relently.

(*b*) The Home Minister has written to the Deputy Minister for Railways explaining the position.

SRI A. A. RASHEED: Sir, may I know the reasons for th Hon. Minister to convert a private complaint into a public contr versy by issuing a press statement?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I have no idea about it. I do not know to which press statement the hon. Member refers. This Government have not issued any press statement.

*Oil exploration operations.*

*369 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

இம்மாநில சோழ மண்டலக் கரையில் காவிரி படுகையில் எண்ணெய் ஆராய்சி முடிந்து விட்டதா? அதன் விபரமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: The investigation is still in its preliminary stages. From time to time we have impressed on the Government of India and the Oil and Natural Gas Commission the imperative need to push through these investigations expeditiously and shall continue to do so.



5th March 1960]

SRI A. VEDARATHNAM: ஸார், இந்த ஆராய்ச்சியை ார் நடத்துகிறார்கள்? எந்தப் பகுதியில் இப்போது நடைபெற்று வருகிறது? இன்னும் எவ்வளவு காலம் தொடர்ந்து நடைபெறும்?

THE HON. SRI R. VENKATARAMAN: இந்த ஆராய்ச்சியை ஆயில் அண்டு நாச்சுரல் காஸ் கமிஷன்-மத்திய சர்க்காரினுல் நியமிக்கப்பட்டது—நடத்துகிறார்கள். நடக்கக் கூடிய இடம் தஞ்சை, திருச்சி, வங்காள விரிகுடா பகுதி. எவ்வளவு காலம் நடத்தப்படும் என்பதற்கு, எண்ணெய் கண்டுபிடிக்கப்படும் வரை என்று நினைக்கிறேன்.

SRI R. SRINIVASA IYER: Sir, is the State Department of Geology taking any active part in this matter? May I know whether the Central Government Oil and Natural Gas Commission are exploring the availability of oil by themselves or with the aid of foreigners?

THE HON. SRI R. VENKATARAMAN: This is being done with foreign assistance. Already there have been one or two investigations by foreign geologists, and so far as the Geological Department of this State is concerned, it has not got the necessary equipment to carry on this investigation.

SRI K. RAMACHANDRAN: ஸார், இது கிட்டத்தட்ட ஒரு வருஷத்திற்கு மேலாக நடந்து வருகின்றதாகத் தெரிகிறதே, இது வரையில் நடந்திருக்கக்கூடிய ஆராய்ச்சியில் ஏதாவது பலன் கிடைக்கக் கூடியதாகத் தெரிகிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN: பிற நாடுகளில் எண்ணெய் கண்டுபிடிக்க 100 ஆண்டுகளாகக்கூட இன்வெஸ்டிகேஷன் செய்கிறார்கள். ஆகையால் ஒரு வருஷம் என்பது அதிகக் காலம் என்று யாரும் நினைக்கக்கூடாது. இப்போது 'ஏரோ மாக்னடிக் ஸர்வே', 'ஸீஸ்மிக் ஸர்வே' என்று இரண்டு செய்கிறோம். இந்த இரண்டு ஸர்வேக்களில் எண்ணெய் இருந்தால் என்னென்ன அறிகுறிகள் தென்படுமோ அந்த அறிகுறிகளெல்லாம் தென்படுகின்றன. அந்த அளவுக்கு நம்பிக்கை ஊட்டுவதாக இருக்கிறது.

SRI A. VEDARATHNAM: ஸார், இந்த ஏரோ மாக்னடிக் ஸர்வே செய்ததில் எந்தப் பகுதியில் எண்ணெ இருப்பதாக அறிகுறிகள் தென்பட்டிருக்கின்றன? அதே பகுதியில்தான் இப்போது ஆராய்ச்சி நடத்தப்படுகிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN: கடலுக்குள் அதிகமாக இருக்கலாம் என்று ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கடற்கரைப் பகுதியிலும் இருக்கலாம் என்று ஒரு யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர்கள் இந்தப் பெட்ரோலியம் எப்படிக் கிடைக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டால் எந்தப் பகுதியில் கிடைக்கலாம் என்று தெரிய வரும். மிருகங்கள், மீன் போன்றவைகள், ஆயிரம் ஆயிரம் வருஷங்களுக்கு முன் செத்து மடிந்து அது எண்ணெய்யாக

[15th March 1960

மாறியதால்தான் பெட்ரோலியம் கிடைக்கிறது. பொதுவாக எந்தப் பகுதியில் கடல் இருந்து நிலமாக மாறியதோ அப்பகுதியில் பெட்ரோலியம் இருக்கலாம்.

SRI K. R. VISWANATHAN : ஸார், இந்தப் பரிசீலனையை ஒரு பரந்த எல்லையில் வருஷக்கணக்கில் செய்து கொண்டிருப்பதை விட்டு குறுகிய எல்லையில் தீவிரமாகப் பரிசீலனை செய்து ஒரு முடிவை எடுப்பது நல்லதல்லவா என்பதை சர்க்கார் ஆலோசிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : எண்ணெய் எங்கெங்கு கிடைக்கலாம் என்று தோன்றுகிறதோ அந்த இடங்களிலெல்லாம் பரிசீலனை செய்யவேண்டும். நாமாக குறுகிய இடத்தில் பரிசீலனை செய்தால் அங்கு எண்ணெய் இல்லாமல் போய் விடலாம்.

*Publication of news regarding sexual crimes in newspapers*

* 370 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken to ban the publication in newspapers and periodicals of crimes involving sex and immorality?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government are examining proposals to introduce a Bill to regulate the publication of reports of judicial proceedings in the press so as to prevnt the publication of obscene or indecent matter relating to crimes involving sex and immorality.

SRI V. SANKARAN : ஸார், ஏற்கெனவேயே, இந்த மாதிரி "எல்லோஜார்னலிஸம்"-ஐத் தடுக்க ஒரு மசோதா கொண்டு வரப் போவதாக இரண்டு அல்லது மூன்று செஷன்களாகச் சொல்லப் பட்டு வருகிறது. அந்த மசோதா எப்போது வரும் என்று திட்ட வட்டமாகச் சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகிற மஞ்சள் பத்திரிகைகளின் போக்கைத் தவிர்க்க சட்டம் என்பது வேறு விஷயம். அது தனியாகப் பரிசீலனையில் இருக்கிறது. இது குறிப்பிட்ட ஒரு விஷயம். கோர்ட் நடவடிக்கைகளைப் பற்றிக் கேவலமாகப் பிரசுரிப்பது என்பது. இதைப் பற்றி இப்போது ஒரு மசோதா தயாரிக்கப் டிருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது.

SRI S. LAZAR : ஸார், இது போன்ற கேஸ்களை பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதால், மக்களுக்குச் சட்ட அறிவு மிகக் குறைவாக இருக்கக்கூடிய காரணத்தினால், அதனால் மக்களுக்கு ஏற்படக்கூடிய பலனும் குறைவு, சம்மந்தப்பட்டவர்களுக்கு அதனால் ஏற்படக்கூடிய தீமை அதிகம் பொது மக்களுக்கும் தவறான போக்கில் கருத்துக்களைக் கொண்டு செல்ல வாய்ப்பும் ஏற்படுகிறது. ஆகையால் இந்த மசோதாவைத் துரிதமாகச் சட்ட சபையின் முன்பு கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?



15th March 1960]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் சொல்லுகிற மாதிரி சட்ட அறிவு குறைவு என்பது மாத்திரமல்ல. பரிபூர்ண சட்ட அறிவு இருந்தாலும் சில பத்திரிகைகளின் போக்கு வாசிப்பவர்களிடை மிகவும் கேவலமான, கீழ்த்தரமான உணர்ச்சியைக் கிளப்பும். நல்ல வார்த்தைகளான "இன்பம்", "பருவம்" இவைகளெல்லாம் மிகவும் கேவலமான கருத்துக்களை அளிக்கக்கூடிய வகையில் அன்றாடம் ஒரு பத்திரிகை கையாண்டு வருகிறது. இதையெல்லாம் தவிர்ப்பதற்கு ஒரு சட்டம் வேண்டுமென்பதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. அதைப்பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. அதைச் சீக்கிரத்தில் கொண்டுவரவேண்டும் என்பதுதான் எண்ணம்.

SRI K. ANBAZHAGAN : ஸார், பத்திரிகை ஆசிரியர்களுடைய ஆலோசனைக் குழு ஒன்றை அரசாங்கம் ஏற்படுத்துவதன் மூலமாக, அந்தக் குழுவின் மூலமாக நல்ல கருத்துக்களை பத்திரிகை ஆசிரியர்களுக்குச் சொல்லி இந்தவகை தவறுதல்களைத் தவிர்க்கக் கூடாதா ? இதற்குத் தனியாக ஒரு சட்டம் தேவைதானா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பத்திரிகை ஆலோசனைக்குழு என்பது புதிதல்ல. இப்போது இல்லாது இருந்து, சமீபத்தில் கனம் நிதி அமைச்சர் அவர்கள் ஆரம்பிக்கப்படும் என்று சொன்ன போதிலும், இது முன்பே இருந்தது. எனக்கும் இதில் பரிச்சயம் உண்டு. அதன் மூலம் இம்மாதிரி கேவலமான போக்குகளை—நடத்தைகளை—தடுக்க முடியாது.

SRI P. S. CHINNADURAI : சமீபத்திலே நானாவதி வழக்கு—பிரசித்தமான ஒரு வழக்கு—எல்லாப் பத்திரிகைகளாலும் மிகவும் பிரகாசமாக விளம்பரப்படுத்தப்பட்டது. இந்த வழக்கின் முழு விவரங்களையும் வெளியிட்டன பெருவாரியான பத்திரிகைளெல்லாம். இப்படிப்பட்ட வழக்குகள் தாங்கள் கூறுகிற இந்த அடிப்படையில் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எனக்கு அவகாசம் இருந்த நேரத்தில் நான்கூட இந்த நடவடிக்கைகளைப் படித்திருக்கிறேன். நான் குறிப்பிட்டது பத்திரிகைப் போக்கில் "ஆப்ஸீனிட்டி" என்றும், "இண்டீஸென்ஸி" என்றும் சொல்லக் கூடியவைகளைத் தவிர்ப்பதற்கு, அதற்குத் தகுந்தவாறு இந்த மசோதா தயாரிக்கப்பட்டு வருகிறது.

SRI A. GOVINDASAMY : இம்மாதிரிப் பத்திரிகைகளைக் கண்டிக்க ஏற்கனவே இருக்கக் கூடிய சட்டம் போதாதா ? இதற்குப் புதிதாக ஒரு சட்டம் தேவையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஏற்கனவே இருக்கக்கூடிய சட்டம் போதாததால்தான் இந்த ஆபாசம் அன்றாடம் வந்துக்கொண்டிருக்கிறது.

SRI V. K. KRISHNAMURTHY : தலைவர் அவர்களே, கூடா ஒழுக்கங்களைப் பற்றிய வழக்குகளை நீதி மன்றங்களில் விசாரிக்கும் போது, மன்றங்களின் நடவடிக்கைகளைப் பற்றி பத்திரிகைகளில்

பரப்பரப்பான தலையங்கங்களுடன் பிரசுரிப்பதால், சமுதாயம் சீரழிந்து போகும் என்பதால், இம்மாதிரி பிரசுரிப்பதைத் தடுத்து சமுதாயத்தைச் சீரமைக்க அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் அவர்கள் அவருடைய எண்ணத்தைத் தெரிவிக்கிறார். நான் முன்பே விடையளித்தேன். கூடிய சீக்கிரம் கொண்டுவரவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து.

## *Immoral Traffic Act*

* 371 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to appoint more police officers to enforce the provisions of the Immoral Traffic Act?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: There is already a Special Police Officer of the rank of Assistant Commissioner of Police with a staff consisting of one Inspector, two Sub-Inspectors, four Head constables and twelve Police constables to enforce the provisions of the Suppression of Immoral Traffic Act, 1956 in Madras City. The Government, do not, at present, have under consideration any proposal for appointing more Special Officers to enforce the provisions of the Act in the mufussal.

SRI N. K. PALANISAMI: இந்தச் சட்டத்தை அமல் நடத்துவதற்கான அதிகாரம் ஜில்லாக்களில் உள்ள போலீஸ் அதிகாரிகளில் எந்த ராங்கில் உள்ள அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: வெளி ஊர்களில் இன்ஸ்பெக்டர்களும் அவர்களுக்குக் கீழே உள்ள அதிகாரிகளும் இதை அமல் நடத்துகிறார்கள்.

SRI A. A. RASHEED: Is it a fact that lovers sitting in parks during nights have been arrested under this Act?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: If they are mere lovers, they would not be touched, Sir. (Laughter)

SRI S. LAZAR: இப்போது மத்திய சர்க்கார் இது சம்பந்தமாக ஒரு சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்தச் சட்டம் வந்த பிறகு, அச்சட்டத்தின்படி நியமிக்கவேண்டிய குறிப்பிட்ட ஒரு அதிகாரியை நியமிக்காததால் இன்று வரையிலும் எந்த விதமான வழக்கையும் பதிவு செய்யமுடியாத நிலைமை இருக்கிறது என்பது இந்த அரசாங்கத்திற்குத் தெரியுமா? அந்த அதிகாரியை சீக்கிரமே நியமிக்க அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மத்திய அரசாங்கம் பார்லிமெண்டில் நிறைவேற்றியிருக்கும் அந்தச் சட்டம் இங்கே அமலுக்கு வந்திருக்கிறது. அச்சட்டத்தின் கீழ் என்னென்ன



நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவைகளை எடுப்பதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. கனம் அங்கத்தினருக்கு மேலும் விவரங்கள் வேண்டுமானால் அதற்கு அவர் தனிக் கேள்வி போடலாம்.

SRI A. GOVINDASAMY: வெறும் காதலர்களாக இருப்பவர்கள் 'அரெஸ்ட்' செய்யப்பட மாட்டார்கள் என்று கனம் அமைச்சர் கூறினார். யார் வெறும் காதலர்கள் என்பதைப் பொறுத்தவரையில் அமைச்சர் இந்த விஷயத்தை எந்தக் கண்ணோட்டத்துடன் பார்க்கிறார் என்பதை அவர் தெரிவிப்பாரா? (சிரிப்பு.)

THE HON. SRI M. BHAKTAVATSALAM: யாரும் ஆபாச நடத்தையோடு இல்லாமல் இருந்தால் நமக்கு யாருக்கும் அதைப் பற்றி ஆட்சேபனை இல்லை.

SRI K. VINAYAKAM: Sir, in the question it is stated, . . . . to enforce the provisions of the Immoral Traffic Act?' Does that Act encourage immoral traffic or is it intended to suppress immoral traffic? I think it is the other way about. It is known as Suppression of Immoral Traffic Act.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, the hon. Member has been a teacher. So, he may give some lessons to the hon. Member who has put the question about the point raised by him.

## *Chief Probation Superintendent*

* 372 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether it is a fact that the Chief Probation Superintendent, Jail Department, has been suspended;

(*b*) if so, for how long;

(*c*) the reasons for suspension; and

(*d*) the steps taken by the Government regarding this case?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) & (*c*) The Chief Probation Superintendent has been under suspension since March 1958, for certain charges pending against him.

(*d*) The matter is under active consideration of the Government.

SRI A. A. RASHEED: May I know the nature of the charge and also the reasons for the delay in taking action against him?

THE Hon. Sri M. BHAKTAVATSALAM: The Tribunal that went into the question took about a year and that is the main reason for the delay. There have been various charges of corruption, etc.

[15th March 1960

*Hemp fibre*

*373 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வேதாரண்யத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் சணல் நாரைக் கொண்டு கிராமக் கைத்தொழில் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) அப்படியானால் அதன் விவரமென்ன?

THE HON. SRI M BHAKTAVATSALAM : (a) & (b) The Honourable Member may refer to the answer given to the supplementary question asked by him on 1st September 1959 in connection with his starred question No. 60. The question of starting a departmental unit to utilise the sunn hemp available in and around Vedaranyam will be considered by Government only after watching the working of the existing Training Centre for weaving carpets out of sun hemp at Gopalasamudram in Cheranmahadevi Block, Tirunelveli district and the demand for the carpets and druggets made of sun hemp for some more time.

SRI A. VEDARATHNAM : இதுவரையில் அங்கே இந்தப் பரீட்சையை நடத்தியதில் அதன் பலன் என்ன என்பதை கனம் அமைச்சர் தயவு செய்து அறிவிக்க் முடியுமா? அத்தொழில் அங்கே வெற்றிகரமாக நடைப்பெறக்கூடும் என்ற நம்பிக்கையை இந்தப் பரீட்சை அளித்திருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதை இப்போது உறுதியாகச் சொல்லுவதற்கில்லை, ஆகையால்தான் இன்னும் கொஞ்ச காலம் அந்தப் பரிசீலனையை நடத்த வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது.

*Motor Vehicles Taxation Bill*

*374 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the Government are aware of the proposal of the Union Government to bring forward a Bill governing Motor Vechicles Taxation;

(b) whether thi. Government have been consulted about the same : and

(c) the suggestions made by this Government?

THE HON. SRI V. RAMAIAH : (a) to (c) The Government are not aware of the proposal of the Government of India to bring forward a bill on Motor Vehicles Taxation. The Government of India have been consulting this Government on the question of levy of single point tax and fixing a ceiling on motor vehicles tax. This Government did not agree to these proposals.



15th March 1960]

SRI S. LAZAR : இப்போதுள்ள சட்டத்தில் நிறையக் குறைகள் இருக்கின்றன என்பது இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதை மாற்றியமைக்கும்படி மத்திய சர்க்காருக்கு இந்த சர்க்கார் ஆலோசனை கூறியுள்ளதா?

THE HON. SRI V. RAMAIAH : இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI A. A. RASHEED : May I know the reasons for not agreeing to the suggestion of the Government of India?

THE HON. SRI V. RAMAIAH : There is no suggestion, Sir.

SRI N. K. PALANISAMI : May I know whether the Central Government are competent to make laws in this regard since it is a State subject?

THE HON. SRI V. RAMAIAH : A separate question may be put, Sir.

*Compulsory National Service by students*

*375 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether this Government have received any communication from the Centre regarding the scheme for compulsory national service by students as suggested by the All-India Educational Conference held in 1958; and

(b) if so, the details thereof?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) No formal communication from the Government of India has been received, Sir.

(b) Does not arise.

*Outbreak of fire at Mirsahibpet*

*376 Q.—SRI A. A. RASHEED, SRI K. VINAYAKAM. } Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the amount of total loss due to the fire in Mirsahibpet, Madras, on 28th December 1959;

(b) the help rendered to the homeless; and

(c) the steps taken to rehabilitate the families rendered homeless?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) The total loss is estimated at Rs. 58,000.

(b) A sum of Rs. 5,550 was sanctioned by the Government for the grant of cash relief and clothing grant to the affected people. The residents who were affected were given shelter temporarily in the adjacent Corporation Schools and arrangements were also made by the Corporation and private agencies to feed the families affected in the fire accident.

[15th March 1960

(c) The Government have under consideration a proposal for the reconstruction of the huts and improvement of the slum. The Commissioner, Corporation of Madras has been asked to formulate a scheme in this regard.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that the families have not yet been rehabilitated and if so, may I know when they will be rehabilitated?

THE HON. SRI M. A. MANICKAVELU : To rehabilitate them properly and adequately, it will take some time and that is being done.

SRI K. VINAYAKAM : May I know whether the work of rehabilitating these poor victims would be entrusted to the Commissioner, Corporation of Madras or the City Improvement Trust? Is the Hon. Minister aware of the fact that a notorious South Indian cinema star has been pleased to construct houses wherever poor people were affected like this and if so, may I know whether he has done the same thing in this case also?

SRI K. ANBAZHAGAN : Sir, I rise to a point of order. The hon. Member, while referring to a cinema star has used the word ' notorious '. I feel that word is objectionable and it is an unparliamentary expression. So, the hon. Member should not be permitted to use that word here.

DEPUTY SPEAKER : I do not think it is objectionable.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, may I make a suggestion. I would request the hon. Member Sri Vinayakam to withdraw the word ' notorious ' and to use the word ' reputed '.

SRI K. VINAYAKAM : Sir, with pleasure, I withdraw the word ' notorious ' and susbtitute the word ' reputed ' in its place. Now, let me repeat my question. Is the work of rehabilitation of these affected victims entrusted to the Corporation of Madras, or the Ctly Improvement Trust or in the alternative to this reputed cinema star, Sir?

THE HON. SRI M. A. MANICKAVELU : It is entrusted to the Corporation of Madras, Sir.

SRI A. GOVINDASAMY : பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சினிமாத்துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் உதவி செய்வதை அரசாங்கம் வரவேற்கிறதா அல்லது கிண்டல் செய்கிறதா? (சிரிப்பு.)

THE HON. SRI C. SUBRAMANIAM : This question should be put to the Hon. Member Sri Vinayakam.

SRI A. GOVINDASAMY : He is on the Government side.

THE HON. SRI C. SUBRAMANIAM : May be. But, he does not represent the Government. As far as we are concerned, any help from any quarter is always welcome and it will be accepted with greatful thanks, Sir.



15th March 1960]

SRI K. ANBAZHAGAN : இதில் பாதிக்கப்பட்ட எல்லாக் குடும்பங்களுக்கும் குடியிருப்பு வசதி செய்துதர அரசாங்கம் முன் வந்துள்ளதா? அவர்களுக்கு அளிக்கப்படும் தொகை குடியிருப்பு மனை கட்டிக்கொள்வதற்குப் போதாததாக இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அந்தக் குறையைப் போக்க அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது இதற்காக 80,000 ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. கூரை வீடுகளாக இல்லாத வீடுகளாகக் கட்டினால்தான், அதாவது ஓட்டு வீடுகளாகவோ அல்லது வேறு விதமான நல்ல வீடுகளாகவோ கட்டினால்தான் இந்த மாதிரியான தீ விபத்துகள் ஏற்படாது. இந்தத் திட்டத்திற்கான பணம் மத்திய சர்க்காரிலிருந்து வராது. எனவே சென்னை அரசாங்கமே இதற்கான செலவை ஏற்றுக் கொண்டு இத்திட்டத்தை நிறைவேற்ற விருக்கிறது.

SRI N. R. THIAGARAJAN : ஜெர்மனியில் Reich stagல் தீ விபத்து ஏற்பட்டதே, அதைப் போலவே இங்கும் ஏற்பட்டதா? 9.00 a.m.

THE HON. SRI M. A. MANICKAVELU : Reich stag சமாசாரம் எனக்குத் தெரியாது. இங்கு நடந்த விபத்து சமையல் பண்ணும் போது அஜாக்கிரத்தையாக இருந்தால் ஏற்பட்டது.

*Agricultural development in Thanjavur*

*377 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில், போர்டு பவுண்டேஷன் மூலம் (Ford Foundation) விவசாய அபிவிருத்தி வேலை எப்போது துவங்கும்?

(ஆ) விவசாயத் துறையில் இத்திட்டத்தின் மூலம் என்னென்ன வேலைகள் மேற்கொள்ளப்படும்?

(இ) நீர்ப்பாசனம் இல்லாத இடங்களுக்குத் தண்ணீர் வசதி இருந்தால் பாசன வசதி செய்து கொடுக்கும் திட்டங்கள் மேற் கொள்ளப்படுமா?

(ஈ) இந்த திட்டத்தில் சர்க்கார் பங்கு என்ன, மக்கள் பங்கு என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) to (d) The Government of India have sent only a draft outline of a Scheme of intensifying agricultural production in selected areas with aid from the Ford Foundation. The scheme can be implemented only after the finalised scheme which is awaited from the Government of India is received and full details are worked out. As the whole matter is still in the stage of examination, it is too early to give a precise answer to clauses (b) to (d) of the question. As regards clause (a), it is proposed to inaugurate the Scheme on the Tamil New Year's day (13—4—1960).

SRI A. VEDARATHNAM : இந்தத் திட்டம் அமுலுக்கு வந்தால் இதைச் செயல் முறையில் கொண்டு வரும்போது இப்போது இருக்கும் அரசாங்க உத்தியோகஸ்தர்களே அதைச செய்வார்களா? அல்லது அமெரிக்க நிபுணர்கள் அந்த வேலையை ஏற்றுக்கொண்டு நடத்த முன் வருவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதை நிறைவேற்றும் பொறுப்பை நம்முடைய உத்தியோகஸ்தர்களே ஏற்றுக்கொள்ளுவார்கள். ஏதாவது நமக்கு அயல்நாட்டு நிபுணர்களின் சேவை வேண்டியிருந்தால் அதை நாம் பெற்றுக் கொள்ளலாம்.

SRI S. NAGARAJA MONIGAR : இவ்வளவு முக்கியமான ஒரு திட்டத்தை இந்த மாகாணத்தில் ஒரு இடத்தில் ஆரம்பிப்பதைவிட இன்னும் சிறியவையாக ஆக்கி தாலுகா அளவில் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : புதிய ஒரு திட்டம் சீராக நிறைவேற்றப்பட வேண்டுமென்றால் ஒரு இடத்தில் நிறைவேற்றிப் பார்த்து, அது எவ்வாறு பலன் அளிக்கிறது என்று பார்த்து, பிறகு பல இடங்களில் பரவலாக ஆரம்பிக்கலாம்.

*Hindu Marriage Act*

* 378 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have framed necessary rules and regulations under the ' Hindu Marriage Act, 1955 ' enabling parties to a marriage under the said Act to get their marriage registered; and

(*b*) if not, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No Sir.

(*b*) The Government do not consider that there is any need to frame rules under the Hindu Marriage Act, 1955.

SRI S. LAZAR : ஸார், ஸ்பெஷல் மேரேஜ் ஆக்டில் விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்தச் சட்டத்தில் விதிகள் செய்யப்படவில்லை. சாதாரணமாக நடக்கக்கூடிய ஒவ்வொரு கல்யாணத்தையும் இந்தச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்ய முடியும் என்று சட்டம் சொல்லுகிறது. ஆனால் நடைமுறையில் அதிகாரங்களோ, விதிகளோ ஏற்படுத்தாத காரணத்தால் ஒரு திருமணத்தைக்கூட ரிஜிஸ்டர் செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் இதற்கான விதிகளை ஏற்படுத்த முன் வருமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : திருமணங்களைப் பதிவு செய்ய இந்த விதிகள் இல்லாதது தடையாக இருக்கிறதென்று நினைக்கவில்லை. இதற்கு விதிகள் அமைப்பது என்றால், நிர்ப்பந்தமாகப் பதிவு செய்வது என்ற முடிவு ஏற்பட்டால் அதற்கு அவசியம் விதிகள் ஏற்படலாம். மேலும், இது அகில





இந்தியச் சட்டமானதால் அகில இந்திய ரீதியில் விதிகள் அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்து இருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் எல்லாத் திருமணங்களையும் கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டுமென்ற கருத்து இருக்குமானால் அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளும்.

SRI S. LAZAR : அவரவர்கள் இஷ்டப்பட்டால் பதிவு செய்து கொள்ளலாம் என்றாலும் இப்போது இருக்கும் முறையிலே பதிவு செய்யமுடியவில்லை. ஆனால் ஸ்பெஷல் மேரேஜ் ஆக்ட் கீழ் கல்யாணம் செய்துகொள்ளுகிறவர்கள் பதிவு செய்துகொள்ள முடிகிறது. சாதாரணமாக நடக்கக்கூடிய ஒவ்வொரு இந்து மதக் கல்யாணமும் பதிவு செய்துகொள்ளமுடியும் என்ற அடிப்படையில் இந்தச் சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பது சரிதானா? இப்போது எந்த இடத்திலே இந்தத் திருமணத்தைப் பதிவு செய்து கொள்ளுவது என்று சொல்லமுடியுமா? அதற்கு விதிகள் ஏற்படுத்தப்பட வேண்டாமா? இந்த விதிகளைச் சீக்கிரம் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகிற சிக்கல்களைப்பற்றி எனக்குத் தனியாக ஒன்று எழுதி அனுப்பினால் அதற்கு மேல் கவனம் செலுத்தி விதிகள் அமைப்பு அவசியமா என்று ஆராய்ந்து வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளலாம்.

SRI S. NAGARAJA MONIGAR : திருமணங்கள் முடிந்து வாழ்வு பூராவும் ஒற்றுமையாக வாழ இந்தச் சட்டமா? திருமணமானவர்களைப் பிரிப்பதற்குக் கனம் அங்கத்தினர் இதில் இடம் கேட்கிறாரா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பிரிக்கிற விஷயம் இந்தச் சட்டத்தில் இல்லை.

*Kottur Harijan Colony, Madurai*

* 379 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Government have ordered investigation of the defective construction of Kottur Harijan Colony in Madurai district; and

(*b*) if so, the result of the investigation?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) Certain defects were noticed in the construction when the Colony was in an incomplete stage. They were set right and the beneficiaries were put in possession of the houses.

SRI N. K. PALANISAMI : ஸார், இதைத் திருத்தியமைக்க எவ்வளவு செலவாயிற்று என்ற கணக்கு இருக்கிறதா?

[15th March 1960

THE HON. SRI P. KAKKAN : வீடு ஒன்றுக்கு 200 ரூபாய் வீதம் கொடுத்துத் திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது.

SRI A. GOVINDASAMY : இந்த காண்ட்ராக்டானது அந்தக் காலனியில் வாழ்கிற மக்களுக்கே கொடுக்கப்பட்டதா? அல்லது வெளியில் இருக்கிறவர்களுக்குக் கொடுக்கப்பட்டதா?

THE HON. SRI P. KAKKAN : அந்தக் காலனியில் உள்ள மக்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளுக்குத்தான் கொடுக்கப்பட்டது.

### *Penicillin*

* 380 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have instructed City hospitals not to use Penicillin injections prepared at the Pimpri Factory?

THE HON. SRI M. A. MANICKAVELU : The answer is in the negative.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that a Member of the Parliament died soon after the Penicillin injection prepared at Pimpri was administered to him?

THE HON. SRI M. A. MANICKAVELU : It was so reported. But it was investigated later. The thing was tested by five Indian and one United States Organisations and found to conform to the standards accepted by the British and United States Pharmacopias. Also Mr. Ray, Director of Indian Institute of Biochemistry and Experimental Medicine, has stated that on the basis of test procedures accepted as adequate in the present state of knowledge, the product from Pimpri did not reveal any defect.

### *Tank Repairs-cum-Land Reclamation Scheme*

* 381 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Central (Union) Committee on Minor Irrigation has made recommendations regarding the Tank Repairs-*cum*-Land Reclamation Scheme in Madras;

(*b*) the details of the recommendations; and

(*c*) the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The estimates in respect of the works under the Desilting-*cum*-Reclamation Scheme may be modified so as to reclaim poramboke lands under the tanks according to a phased programme and included in the Third Five-year Plan.

(*c*) The Government of India have been told that the suggestions are acceptable. It is proposed to continue the scheme during 1960–61 as also during the period of the Third Five-Year Plan.



15th March 1960]

A modified scheme known as the "Desilting-*cum*-Plantation Scheme" is also proposed to be tried, wherever feasible, so that when the scheme is expanded to cover areas, where it is not now being implemented, the Government may be in a position to decide the final shape of the scheme.

SRI T. SAMPATH : May I know whether silt clearance of channels has been included in these minor irrigation works?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Silt clearance of channels is quite a different scheme and does not come under the Desilting-*cum*-Reclamation Scheme.

### *School of Arts and Crafts, Madras*

* 382 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the amount allotted for the School of Arts and Crafts, Madras;

(*b*) the profit derived from the School in 1958; and

(*c*) the strength of the School and whether they are given suitable employment after the completion of their studies?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Rs. 1,36,400 for 1957–58 and Rs. 1,54,400 for 1958–59.

(*b*) The School is not a commercial concern. The question of this institution deriving profit does not, therefore, arise.

| (*c*) | *Year.* | *Strength.* |
|---|---|---|
| | 1957–58 | 320 |
| | 1958–59 | 278 |

No appointment is guaranteed to any student. But the students who come out successful from the Crafts Section of the School, particularly in wood work, get themselves employed immediately in the school itself.

SRI N. K. PALANISAMI : அவர்களுக்கு டிப்ளோமா கொடுக்கப்பட்டிருக்கிறதா? கொடுக்கப்படாவிட்டால் அதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : இது க்ராப்ட் ட்ரெயினிங் சென்டர். அதனால் பயிற்சிதான் அளிக்கப்படுகிறது.

SRI A. VEDARATHNAM : இந்தப்பள்ளியில் பெண்கள் பயிற்சி பெற தனியாக வசதி உண்டா? இல்லையானால் அதை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது இல்லை.

[15th March 1960

THE HON. SRI C. SUBRAMANIAM : The question of compensation does not arise now because it is only from the next academic year the Government would take over the management of the College. I am sure the hon. Member is aware that it is at the request of the Municipality we are taking over the management and the Government have also paid grants for the purpose of putting up buildings and also for equipment.

SRI S. NAGARAJA MONIGAR : அந்த ஜில்லாவில் வேறு ஒரு கலாசாலையை சர்க்கார் ஆரம்பித்து நடத்தவேண்டியிருக்க, முனிசிபாலிடியார் நடத்தி வந்ததை அரசாங்கத்திற்கு ஒப்புவித்த படியால், முனிசிபாலிடியாருக்கு அரசாங்கம் ஏதாவது நன்றி செலுத்துகிறார்களா ?

(பதில் இல்லை.)

*Domestic servants*

* 386 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have furnished to the Centre recently any statistics regarding the employment of domestic servants?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

SRI N. K. PALANISAMI : டொமஸ்டிக் ஸர்வெண்ட்ஸ் விஷயத்தில் லீவ் வசதி, டெர்மினேஷன் போன்றவைகளில் சர்க்காரே பாதுகாப்பு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அது ரொம்ப சாத்தியமில்லாத காரியம் இப்போது.

SRI C. NATARAJAN : தலைவர் அவர்களே, தொழிலாளர் சட்டத்திலே, வீட்டில் வேலை செய்பவர்களுக்கு ஏதாவது வசதி இருக்கிறதா ? அப்படி இல்லையென்றால், அதைச் சேர்க்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது இருக்கும் சட்டத்தில் இடம் இல்லை. அவர்களைச் சேர்ப்பது என்று சொன்னால், அதை அமல் நடத்துவது மிகவும் இயலாத காரியமாக இருக்கும். அதனால் இப்பொழுது அதைப்பற்றி யோசனை இல்லை.

*Housing Schemes.*

* 387 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries be pleased to state the reasons for the delay in sanctioning housing schemes submitted by private employers during the last six months?

THE HON. SRI R. VENKATARAMAN : The observance of the procedural formalities prescribed by the Government of India in sanctioning the housing projects of the Private Employers, necessarily takes some time which cannot be avoided.



15th March 1960]

MR. A. A. RASHEED : Is it a fact that the scheme submitted by the private employer as far back as twelve months ago has yet to be sanctioned?

THE HON. SRI R. VENKATARAMAN : Now the authority to sanction has been transferred to the State Government. I do not think there will be any further delay.

*Sea erosion in North Madras*

* 388 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Works be pleased to state whether the Government have sanctioned the scheme for the construction of stone revetment in North Madras area to prevent sea erosion?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir.

SRI N. K. PALANISAMI : இந்தத் திட்டம் எப்பொழுது சாங்ஷன் செய்யப்பட்டது ? எப்பொழுது கட்டப்படும் ? இவ்வளவு காலதாமதம் ஆவதற்கு என்ன காரணம் ?

THE HON. SRI P. KAKKAN : இந்தத் திட்டம் நான்கு வருஷத் தவணைக்குள் கட்டப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஐந்து லட்ச ரூபாய் கடனாக கார்ப்பரேஷனுக்கு அரசாங்கம் கொடுத்திருக்கிறது. 3,500 அடி நீளத்திற்குச் சுவர் கட்ட வேண்டும். இதுவரையில் 250 அடி நீளம் கட்டியிருக்கிறார்கள்.

SRI K. ANBAZHAGAN : இந்தக் கடலரிப்பைத் தடுக்க நகராண்மைக் கழகத்திற்கு ஐந்து லட்ச ரூபாய் கடன் தருவதாக அரசாங்கம் தெரிவித்திருக்கிறார்கள். இதற்காக உதவித் தொகை அளிப்பது அரசாங்கத்தின் கடமை அல்லவா ? உதவித் தொகை எவ்வளவு அளிக்கிறார்கள் ?

THE HON. SRI P. KAKKAN : உதவித் தொகை என்பது இப்பொழுது பிரச்னை அல்ல. கடலரிப்பைத் தடுக்க சுவர் கட்ட வேண்டுமென்று அரசாங்கமும் கார்ப்பரேஷனும் திட்டமிட்டது. வேலை நடப்பதற்காக ஐந்து லட்ச ரூபாய் கொடுத்திருக்கிறோம். அவர்கள் எவ்வளவு ஈவு செலவு செய்யவேண்டும், அரசாங்கம் எவ்வளவு கொடுக்கவேண்டும் என்பது பரிசீலனைக்குப்பின்னால் தான் முடிவு செய்யப்படும்.

SRI A. VEDARATHNAM : இதுமாதிரி கடலரிப்பு இம் மாகாணத்தில் வேறு பகுதிகளில் ஏற்பட்டிருப்பதைத் தடுக்கவும் அரசாங்கம் இதுமாதிரி ஏதேனும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன்வருமா ? அதைப்பற்றி ஆலோசிக்கப்பட்டதா ?

THE HON. SRI P. KAKKAN : எங்கு கடலரிப்பு ஏற்பட்டாலும் அதைத் தடுக்க அரசாங்கம் யத்தனிக்கும்.

SRI A. GOVINDASAMY : இந்தக் கடலரிப்பைத் தடுப்பதற்கு மத்திய அரசாங்க நிதி ஏதாவது உண்டா ?

THE HON. SRI P. KAKKAN : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

[15th March 1960

SRI M. K. SOMASUNDARAM : திருநெல்வேலி ஜில்லாவில் மணப்பாடு என்னும் இடத்தில் கடலரிப்பு ஏராளமாக ஏற்பட்டிருக்கிறது. அதைத் தடுக்க என்ன நடவடிக்கை இந்த அரசாங்கம் எடுத்திருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : நடவடிக்கை எடுத்திருக்கிறது. அங்கு கடல் அரிப்பைத் தடுப்பது, அங்குள்ள மக்களை பக்கத்தில் கொண்டுசேர்ப்பதற்கு வீடு கட்டிக் கொடுப்பது போன்றவை சம்பந்தமாக நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN : தனுஷ்கோடி பக்கத்தில் வருஷா வருஷம் கடல் உள்ளே வருவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அம்மாதிரி பல இடங்களில் இருப்பதால் இதற்கென்று ஒரு திட்டம் போட்டு, கடலரிப்பைத் தடுக்க ஏற்பாடு செய்ய முடியுமா ? கொஞ்ச வருஷத்திற்கு முந்தி கோயில் உள்ளேயே தண்ணீர் வந்திருப்பதையும் பார்த்தோம். அங்குள்ள பகுதிகளில் ஒவ்வொரு சதுரமாக மூழ்கிக்கொண்டு வருகின்றன. எல்லாவற்றுக்கும் சேர்த்து ப்ளான் போட்டு நடவடிக்கை எடுக்க முடியுமா ? அதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா ? மத்திய சர்க்காரிலிருந்து ஏதாவது உதவித் தொகை கிடைக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : தனுஷ்கோடியில் ஏற்பட்டிருக்கும் கடலரிப்பைத் தடுக்க வேண்டுமென்று அரசாங்கம் யத்தனித்து, மத்திய சர்க்காரிடமும் தெரிவித்திருக்கிறது. தனுஷ்கோடியில் ஏற்படும் கடலரிப்பைப் பரிசீலனை செய்யும்படி சொன்னதில், அவர்கள் இப்பொழுது என்ன சொல்கிறார்கள் என்றால், அங்கே விரைவில் வரக்கூடிய மரங்களை, இடை இடையே தென்னைமரங்களை நடவேண்டுமென்றும், ரயில்வேயிலிருந்து கிடைக்கும் கழிவு நிலக்கரியைப் போட்டுப் பார்க்கவேண்டுமென்றும், அதுவும் முடியாவிட்டால், பூனாவிலுள்ள ஆராய்ச்சி நிலையத்தில் கடலரிப்பைத் தடுக்கக்கூடிய முறைகளைப் பரிசீலனை செய்து முடிவு தெரிவிக்க இந்த அரசாங்கம் அங்கு எழுதி ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்றும் சொல்கிறார்கள்.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : இதை சர்க்காரோ, கார்ப்பரேஷனோ எப்பொழுது ஆரம்பித்து எப்பொழுது முடிப்பார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : 1962-ம் ஆண்டுக்குள்ளே இதை முடிக்கவேண்டும் என்று அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

SRI V. SUBBIAH : கடல் பிரதேசமே பக்கத்தில் இல்லாத நடுவாந்தர கிராமங்களில் பலவற்றுக்கு ஆறுகளில் வெள்ளம் வருவதன் மூலமாக பாதகம் ஏற்படுகிறது. வெள்ளக் கொடுமையினால் பல கிராமங்கள் அழித்துக்கொண்டு போகப்பட்டிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதற்கெல்லாம் என்ன பாதுகாப்பு அரசாங்கம் செய்யப் போகிறார்கள் ?

(பதில் இல்லை.)



15th March 1960]

*Cholera*

* 389 *Q*.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that two students of the Stanley Medical College staying in the Stanley Medical College Hostel died of cholera recently; and

(*b*) if so, what precautions have been taken to prevent such recurrences?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI A. A. RASHEED : Is it a fact that two students died due to diarrohea which was considered as cholera at that time?

THE HON. SRI M. A. MANICKAVELU : It is an unfortunate question put by the hon. Member. He has asked whether anyone died of cholera. No such thing happened and no such death occurred.

*Madras Estates Land Act*, 1908

* 390 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal to amend the Madras Estates Land Act, 1908 so that all the intermediaries between the peasants and the State be removed?

THE HON. SRI M. A. MANICKAVELU : There is no proposal to amend the Madras Estates Land Act, 1908 so as to eliminate all intermediaries between the Government and the ryot cultivating the land.

SRI N. K. PALANISAMI : காங்கிரசினுடைய அடிப்படையான கொள்கை உழைப்பவர்களுக்கும், ஸ்டேட்டுக்கும் நடுவில் இருக்கும் இன்டர்மீடியரிகளை ஒழிக்கவேண்டுமென்று பல வருஷங்களாகப் பேசப்பட்டு வந்தது 20,000 இனாம்களுக்கு மேற்பட்டு இருந்தும், பத்து வருஷ காலமாக இன்னும் ஒழிக்கப்படாமலிருப்பதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : காரணம், கேள்வி சரியான வகையில் கொடுக்கப்படாததுதான். (சிரிப்பு). எஸ்டேட் லாண்டு ஆக்டை அமெண்டு பண்ணுவதாக உத்தேசம் இல்லை. இம்மாதிரி இனாம்களை எடுப்பதுபற்றி ஆலோசனையில் இருக்கிறது.

*Investigation into the conduct of Ministers*

* 391 *Q*.—SRI A. A. RASHEED : Will the Hon the Chief Minister be pleased to state—

(*a*) whether the Union Government have invited the views of the State Government in regard to appointment of a Committee to investigate into the conduct of Ministers; and

(*b*) if so, the views furnished by this Government?

[15th March 1960

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) No.

(b) Does not arise.

SRI A. A. RASHEED : Sir, Has the attention of the Government been drawn to the charges levelled by Dr. C. D. Deshmukh against the Ministers in general and the Ministers of the South in particular and, if so, what action has been taken by the Government?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not know whether charges have been laid particularly against the Ministers in the South. But as far as Dr. C. D. Deshmukh's allegations are concerned, I thought it was public matter now.

SRI A. GOVINDASWAMY : தென்னாட்டில் ஒரு மந்திரி லஞ்சம் வாங்கியதாக தனக்கு புகார் வந்திருப்பதாக நேரு அவர்கள் கூறியிருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : லஞ்சம் வாங்கியிருப்பதாக புகார் வந்திருப்பதாக எங்களுக்கு தகவல் இல்லை.

*Grievances of workers in catering establishments*

* 392 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have received strike notice from the workers of the catering establishments in the State during November 1959 regarding their grievances; and

(b) if so, the steps taken by the Government to prevent the strike?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) The Labour Officers, Madras I and II held discussions with the parties. As a result, agreement has been reached on certain general issues. In respect of other issues, the Union has been advised to take up the matter separately with the employers of individual establishments concerned.

SRI V. K. KOTHANDARAMAN : ஹோட்டல் தொழிலாளர்களுடைய சட்டத்தை அமுல் நடத்துவதற்காக அதிகாரிகளையும், சிப்பந்திகளையும் நியமிக்க முடிவு செய்யப்பட்டதா ? அப்படியிருந்தால் அந்த முடிவை இதுவரையிலே நிறைவேற்றாததற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : நிறைவேற்றி ஆகிவிட்டது.

*Letting prisoners on parole*

* 393 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to introduce the system of letting prisoners on parole; and

(b) if so, when?



15th March 1960]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No Sir. There is no proposal to introduce a system of periodical releases on parole as a measure of rehabilitation. However the system of granting parole leave to prisoners to enable them to attend to specific items of work is already in force.

(b) Does not arise.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that a prominent Judge of the Madras High Court suggested that prisoners should be let on parole? If so, why should not the Government reconsider their earlier decision?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, there was a Committee called the 'Jail Reforms Committee' constituted by this Government and a very prominent Judge of the High Court (Retired) presided over the Committee. That Committee recommended that there need not be this kind of a premature release by way of parole.

*Defects in the educational system*

* 394 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government have examined the remarks made by the Madras Public Service Commission in its report for the year 1957–58, that the candidates while they were in schools and colleges, were not trained to write essays and composition in their own words but passed examinations by answering one word questions or by mugging up text books; and

(b) if so, the steps taken by the Government to rectify the defects pointed out by the Commission?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) Yes Sir.

It has since been decided by the Board of Secondary Education that question papers should contain questions requiring answers of the essay type and that such questions should carry a major portion of the marks allotted for the purpose. In addition there will be a few questions requiring short answers but *not one word answers.* This revision in the type of question papers has been introduced with effect from the S.S.L.C. Public Examination held in March 1959.

SRI S. NAGARAJA MONIGAR : இப்படி ஒரு சொல் விடை அளிக்கக்கூடிய முறையை பரீக்ஷையில் புகுத்தியது மூலம் நாட்டு மக்களுடைய முன்னேற்றத்தில் ஒரு தயக்கத்தை உண்டுபண்ணி விட்டோம். அப்படிச் செய்ய காரணமாக இருந்த கல்வி நிபுணர்கள் யார்? அவர்கள் மீது ஏதாகிலும் இத்தருணத்திலே குறைபாடுகள் சொல்ல சந்தர்ப்பம் இருக்கிறதா?

[15th March 1960

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கத்தினர் கேள்வி மூலமாக என்ன சொல்ல விரும்புகிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதிலே தவறு ஒன்றும் கிடையாது. மற்ற நாடுகளில் இம்மாதிரி ஒரு சொல் விடை அளிக்கக்கூடிய விதத்தில் பரீக்ஷைகள் நடைபெறுகின்றன. அதை நம்முடைய நாட்டில் பரிக்ஷை செய்து பார்த்தோம். அதன் மூலம் நன்மை ஏற்படவில்லை. அதனால் சிறிது அளவு மாணவர்களிடையே தரக்குறைவு ஏற்பட்டது என்ற காரணத்திற்காக இப்பொழுது அந்த முறையை மாற்றியிருக்கிறோம்.

SRI K. VINAYAKAM : Sir, drawing a lesson out of this experience, will the Government at least desist from the temptation to interfere with education introducing too many innovations but allow education to continue as it is for at least 25 years more?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, it all depends on the opinion that we have on the present system of education. If we are all satisfied that there is nothing wrong in it, I am prepared to leave it without any interference as the hon. Member would put it. But the real question is, are we satisfied with the existing state of affairs? That is the question we have to answer first.

SRI R. SRINIVASA IYER : பரீக்ஷை இல்லாமல் கிளாஸ் அடெண்டு செய்துவிட்டால் போதும், அதையெல்லாம் பார்த்து பாஸ் போடலாம் என்ற மாதிரி ஒரு இயக்கம் இருக்கிறதா? அதுபற்றி சர்க்கார் அபிப்பிராயம் என்ன? பரீக்ஷை இல்லாமலே செய்வதற்கு நோக்கம் உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM : பல இயக்கங்கள் இருக்கின்றன. பரீக்ஷை இல்லாமலே இருக்கவேண்டுமென்பது ஒன்று. படிக்காமலே கூட பட்டம் பெறலாம் என்பது ஒன்று. (சிரிப்பு). இம்மாதிரி பல இயக்கங்கள் இருக்கின்றன.

DEPUTY SPEAKER : கேள்விகள் முடிவுற்றன.

*Not.*—**An asterisk at the commencement of a speach indicates revision by the Member**

## II. CALLING ATTENTION TO THE SHOOTING UP OF PRICES OF PADDY AND OTHER COMMODITIES.

SRI N. K. PALANISAMI : Mr. Deputy Speaker, Sir, I beg to call the attention of the Hon. the Minister for Home to a matter of urgent public importance, namely, shooting up of prices of paddy and other commodities consequent on the discontinuance of the scheme of procurement by the Government and also the closure of Fair Price Shops.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I would like to make the following statement with reference to the matter raised by the hon. Member. Sir, under the scheme of procurement and distribution started last year, the intention was to run fair price shops only during the lean months of the year. Accordingly, Fair Price Shops



15th March 1960] [Sri M. Bhaktavatsalam]

were opened from the middle of July, 1959 in all the districts of the State. The offtake of rice which was of the order of 6,000 tons per week in the middle of September, gradually fell down to less than 2,500 tons beginning from December 1959. It was reported that as a result of the fall in the open market prices of rice, the offtake of rice through Fair Price Shops was negligible in many places. In view of this, the Collectors were requested to close down the Fair Price shops wherever the offtake was poor, particularly in the rural areas. With the end of the lean season, all Fair Price Shops in the muffassal districts were closed by the end of January 1960 and those in Madras City by the end of February 1960.

Procurement operations were discontinued with effect from the 1st November 1959 as it was considered it would not be worthwhile to procure kuruvai and other shorter crops. So long as there was procurement the Government were meeting the requirements of bulk consumers like Government hospitals, industrial workers' Co-operative hostels, plantation labour establishments, etc. In the absence of Government procurement it was felt that the Price Control Order would not be effective in holding down the prices in the open market. On the other hand, it was reprsented that the order was hampering the normal operations of the Co-operative Marketing Societies and other quasi-Government institutions. In view of this, the Government decided to rescind the Price Control Order also.

As regards procurement from the main harvest in January 1960 the report received from the Collectors of all districts showed that the crop prospects were brighter than in the previous year in all districts of the State except in Chingleput and North Arcot districts and that in expectation of this, prices of paddy and rice were showing a downward trend since the begining of December 1959. It was considered that the present conditions were quite suitable to allow the normal economic forces to play in the market without any serious risk of an unusual rise in prices. The Government consulted the State Food Advisory Committee also. The general view of the Committee was that it would not be advisable to undertake procurement under the present conditions and that it could be possible to bring down the prices without undertaking procurement. Two Members of the Committee however, expressed the view that procurement should be undertaken. Considering all the factors, the Government decided not to undertake procurement of samba crop. The Government are aware that there may be an upward trend in prices during the lean months after July next and there may be need for opening Fair Price Shops on a fairly large scale. The Government expect that adequate supplies of rice will be forthcoming from the Central reserves to meet the reasonable requirement of the Fair Price Shop that might be opened.

The following are the wholesale prices of second sort paddy and rice per maund prevailing in some of the market centres of this State since November 1959 when procurement was discontinued. 9-30 a.m.

[Sri M. Bhaktavatsalam] [15th March 1960

| Name of the Centre. | Paddy. | | | | Rice | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Nov. | Dec. | Jan. | Feb. | Nov. | Dec. | Jan. | Feb. |
| Cuddalore .. | 15·95 | 15·95 | 12·14 | 12·51 | 22·01 | 21·77 | 19 00 | 18·39 |
| Vellore .. | 14·69 | 15·00 | 13·70 | 14·00 | 21·71 | 20·73 | 20·50 | 20·19 |
| Kumbakonam. | 14·17 | 14·00 | 12·01 | 11·96 | 22·79 | 22·50 | 20 50 | 19·38 |
| Tiruchirapalli. | 13·75 | 12.91 | 11·55 | 12·74 | 21·61 | 20·18 | 18·87 | 18·94 |
| Salem .. | 13·34 | 13.01 | 12·64 | 12·95 | 20·96 | 20·46 | 18·86 | 18·94 |
| Madurai .. | 13·20 | 13·55 | 12·62 | 12·08 | 22·08 | 22·58 | 20 07 | 19·07 |
| Nagercoil .. | 15·42 | 14·81 | 18·21 | 12·39 | 21·69 | 21·19 | 19·17 | 19.25 |
| State average .. | 14·36 | 14·16 | 12·59 | 12·58 | 21·98 | 21.33 | 19·57 | 19·17 |

Sir, the figures will show that on the whole the prices of both paddy and rice have fallen down by nearly Rs. 2 per maund since November 1959 and that there is no increase in price as a result of the Government giving up procurement.

### III.—ANNOUNCEMENT.
### AGRICULTURAL INCOME-TAX (AMENDMENT) BILL, 1960.

DEPUTY SPEAKER: I have to announce that the Governor has given his recommendation for the introduction of the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1960, in the Legislative Assembly.

### IV.—GOVERNMENT BILL.

### THE MADRAS AGRICULTURAL INCOME-TAX (AMENDMENT) BILL, 1960.*

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I beg leave to introduce the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1960.

DEPUTY SPEAKER: The question is—

'That leave be granted for the introduction of the Madras Agricultural Income-tax (Amendment) Bill, 1960.'

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I introduce the Bill.

DEPUTY SPEAKER: The Bill is introduced.

### V.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1960-61—*cont.*

DEPUTY SPEAKER: Now we shall continue the discussion on the Budget for the year 1960–61. The hon. Member, Sri S. Pakkirisami Pillai, will speak now.

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 15th March, 1960.



15th March 1960]

SRI S. PAKKIRISAMI PILLAI: கனம் தலைவர் அவர்களே, இந்த பட்ஜட் விவாதத்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கொடுத்ததற்காக, என்னுடைய வணக்கத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்த பட்ஜட்டில் காணக்கிடைக்கும் விசேஷங்கள், ஏற்கனவே மந்திரியார் சொன்ன பிரகாரம், புதிய வரிகள் இல்லாது இருப்பது, அரசாங்க சிப்பந்திகளுக்கு சம்பள கமிஷன் செய்யவிருக்கும் சிபாரிசுகளுக்காக கணக்கில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஞாகத்தில் வைத்திருப்பது, மூன்றாவது திட்டம் இரண்டாவது திட்டத்திலிருந்து தொடர்ந்து செயல்படப்போவது முதலியவை. இவை தவிர, இதற்கு முன்னால் இருந்த வருஷங்களைக் காட்டிலும் இந்த வருஷம் விசேஷம் ஒன்றும் கிடையாது. பல கோடி ரூபாய்கள் நம் ராஜ்யத்தில் செலவிடப்படுகிறது. இந்த ரூபாய்கள் செலவிடப்படும் விளைவாக அபிவிருத்திகள் இருந்துதான் தீரவேண்டும். அந்த அபிவிருத்திகள் மூலைமுடுக்குகளிலும்கூட போகும் நிலைமை இருந்தாலும்கூட, உண்மையிலேயே நாட்டின் முதுகெலும்பு போன்ற விவசாயிகளுக்கு அந்தப் பலன் அத்தனையும் கிடைக்கிறதா, அவர்கள் அவற்றை அனுபவிக்க முடிகிறதா என்று யோசிக்கும்போது, அப்படி அவர்கள் வாழ்க்கையில் அனுபவிக்கும் நிலையில் இல்லை என்பதைச் சொல்லி, உதாரணங்களுடன் காண்பிக்க முடியும்.

சாதாரண விவசாயிகளுக்கு கொஞ்சம் பணம் கிடைக்கலாம். ஆனால், அந்த பணம் ஜாடாவும், இப்பொழுது, வெவ்வேறு மூல்யமாய் அபகரிக்கப்படுகிறது. வரி மூலமாகவும், இன்னும் மற்ற பிளாக் டெவலப்மெண்டில் உண்டான ஒவ்வொரு திட்டத்திற்காகவும் கொடுக்கும் பணம் மூலமாகவும், இவைகளெல்லாம் சேர்ந்து, ஏற்படக்கூடிய சிறிய உற்பத்தி லாபமும் அபகரிக்கப்படுகிறது என்கிற நிலையைப் பார்க்கிறோம். இந்த விஷயம் சாதாரணமாய் மக்களிடம் பழகும் காரணத்தால் நன்றாகத் தெரியும்; அவர்கள் கூடப்போய்ப் பார்த்தால் அவர்கள் கஷ்டம் தெரிகிறது. விவசாயிகள் வரிச்சுமையால் அவற்றைக் கட்டக்கூட முடியாத நிலையில் இருக்கும்போது, கடன் பளுவாலும் கஷ்டப்படுகிறார்கள். இதே நிலையில்தான் வெவ்வேறு தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளிகள் கஷ்டப்படுகிறார்கள். 1939-க்கு முன்னால் அவர்கள் ரூ. 20, 22 வாங்கி வந்த காலத்தில் அனுபவித்த வாழ்க்கை சுகம், இப்பொழுது சுமார் ரூ. 100 வாங்கும் நிலையில் இருந்தாலும் கூட, அந்த வாழ்க்கைச் சுகம், அனுபவிக்க முடியவில்லை. இதற்குக் காரணம், விலைவாசிகள் ஏறியிருப்பது ஒன்று. எல்லா வழிகளிலும், எல்லாச் சாமான்களையும் விலை கொடுத்து வாங்கும் நிலையில். சம்பளம் போதாமல். கடன் வாங்கி, கடனுக்கு வட்டி கொடுக்கும் நிலைமையில் இருக்கிறார்கள். அப்படியிருப்பதால், அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். இதை ஆராயும்படி முக்கியமாக நெசவாளிகளுக்கும் இதர தொழிலாளிகளுக்கும் ஒரு சம்பள விகிதத்தைக் தயாரிக்கும்படி ஒரு வேஜ் போர்ட் கமிஷன் ஏற்பாடு செய்யப்பட்டது. பெரிய அறிஞர்கள், முதலாளிகள், முதலாளிகளின் பிரதிநிதிகள், தொழிலாளிகளின் பிரதிநிதிகள் என்று அத்தனைபேரும் சேர்ந்த ஒரு முக்கூட்டு கமிட்டி போட்

[Sri S. Pakkirisami Pillai] [15th March 1960

பட்டு, அவர்கள் வேவ்வேறு பாகங்களுக்கும் சென்று, விசாரணை செய்து ஒரு ரிப்போர்ட் சமர்ப்பித்தார்கள். விசாரணை செய்ததன் விளைவாக வந்த அந்த ரிப்போர்ட் சில விகிதங்களைச் சிபாரிசு செய்தது. அவர்கள் செய்திருக்கும் சிபாரிசுகள் போதாது என்றும், அது மிகக் குறைவு என்றும், தொழிலாளிகள் அபிப்பிராயப் படுகிறார்கள். அதை எதிர்த்து முதலாளிகள் கூச்சல் போடுகிறார்கள். அரசாங்கத்தார், அந்த சிபாரிசுகளை ஒத்துக் கொண்டபோதிலும்கூட, அதை அங்கீகரித்திருந்தும்கூட, இப்பொழுது அதற்கு எதிராக பல வழிகளிலும் எதிர்க்கும் நிலையில், முக்கியமாக தமிழ் நாட்டு பஞ்சாலை முதலாளிகள் கிளப்பும் பெரிய கூச்சலை, அவர்கள் கூச்சல் இடுகிறதைப் பார்க்கிறோம். அவர்கள் இப்படி கூச்சல் போடுவதற்குக் காரணம் அரசாங்கம் தங்கள் பக்கம் இருக்கிறது, கூச்சல் போட்டால் அவர்கள் தங்கள் பக்கம் வருவார்கள் என்ற எண்ணம் அவர்கள் மனதில் இருக்கிறது.

இதற்கு முன்னால், உத்தண்டராமன் அவர்களுடைய கமிட்டியின் கீழே ஒரு வேலை நிர்ணயம் செய்தார்கள். அந்த வேலை நிர்ணயம் வெவ்வேறு வழிகளில் தொழிலாளர்களைப் பாதிக்கும் நிலையில் இருந்து அங்கிருக்கிறவர்களுக்கு சுமக்க முடியாத வேலைப் பளுவாக அமைந்தது. அதன் விளைவாக அநேகத் தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். அந்த முறையில், அரசாங்கம் அவர்கள் பக்கம் உறுதுணையாக இருந்திருக்கிறது. இப்பொழுது இருக்கும் நிலையில், அரசாங்கம் யார் பக்கம் இருப்பார்கள் என்பதை நாம் சொல்ல முடியவில்லை. அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. முதன் மந்திரி—ஏழைகளின் பிரதிநிதி—காமராஜ் அவர்களுடைய மந்திரி சபையில் தொழிலாளர்களுக்கு நல்ல சலுகை கிடைக்கும் என்ற எண்ணம் எல்லோருக்கும் இருக்கிறது. அதுவும் தொழிலாளர்களின் தலைவராக இருந்த ஸ்ரீ வெங்கடராமன் அவர்கள் அந்த இலாகாவுக்குத் தலைமை தாங்கி மந்திரியாக இருக்கும் காலத்தில் இந்தத் தொழிலாளர்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய சம்பள உயர்வு கிடைக்கும்படியான வழிக்கு கூடிய சீக்கிரத்தில் ஏற்பாடு செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்த நிலைமையில் தொழிலாளர்கள் பயந்து கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் இவ்விஷயத்தில் எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் பெரிய ஒரு கிளர்ச்சி வருவதற்கு வழி ஏற்படும்.

இரண்டாவது இங்கே—நம் சென்னை நகரத்தில்—புனிதத் தலைவர்களின் பெயரால் இருக்கும்படியான தொழிலாளர் காலனிகள் இரண்டு இருக்கின்றன. திரு. வி. க. நகர், சர்மா நகர் என்று இந்த இரண்டு இடத்திலும் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்து பத்து ரூபாய்; பன்னிரண்டு ரூபாய் என்று குடிக்கூலி வாங்கும்படியான நிலைமை இருந்து கொண்டிருந்தாலும் போதுமான அளவுக்குக் குடிதண்ணீர் வசதி இங்கெல்லாம் கிடையாது. குடிதண்ணீர் இல்லாமல் இங்கே வசிக்கின்றவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எது இல்லாவிட்டாலும் குடிதண்ணீர் இல்லாவிட்டால் எந்த இடமும் பாழான



15th March 1960] [Sri S. Pakkirisami Pillai]

இடம்தான். அதோடு மூன்று நாளைக்கு முன்னால் லேபர் டிபார்ட்மெண்டில் இருந்து மின்சார இலாகாவுக்கு கரண்டு சார்ஜ் பணம் செலுத்தவில்லை என்று சொல்லி மின்சார இலாகா அந்தக் காலனிகளுக்கு விளக்கு இல்லாமல் செய்துவிட்டார்கள். தெரு விளக்குகள் எல்லாம் இப்போது அணைக்கப்பட்டுவிட்டன. அங்கே ஒரே இருட்டு மயமாக இருந்து கொண்டிருக்கிறது. கனம் மந்திரி அவர்கள் கூடிய சீக்கிரத்தில் கவனித்து இதற்கு ஆவன செய்யும் படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நாம் சமீபத்தில் பார்த்தோம். மின்சாரக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டு இருக்கிறது, இனிமேல் எவ்வித கட்டுப்பாடும் தொழிற்சாலைகளுக்கு இராது, தொழிலாளர்கள் தொடர்ந்தாற்போல வேலை செய்யலாம் என்கிற தன்மையில் பத்திரிகையில் செய்தி வந்திருந்தது. ஸ்டாகரிங் எல்லாத் தொழிற்சாலைகளிலும் இருக்கிறது. அதை மாற்ற முடியுமா என்று பார்க்க வேண்டும். உதாரணமாக பி. அண்டு ஸி. மில்லிலே இப்போது காலை 6½ மணிக்குத் தொழிலாளர்கள் வரவேண்டும். 11½ மணிக்கு இடைவெளி. ½ மணி கூட சாப்பிடுவதற்கு ரெஸ்ட் இருப்பதில்லை. சீக்கிரம் சீக்கிரமாகச் சாப்பிட்டுவிட்டுப் போகும்படியான நிலைமை இருக்கிறது. இதற்கு ஸ்டாகரிங்தான் காரணம். இதைத் தளர்த்திவிட்டால் சாப்பாட்டுக்குச் சரியான வசதி செய்ய முடியும். ராத்திரி, காலையில் சௌகர்யமாகப் போவதற்கு வழி ஏற்படும். ஆகவே இந்த ஒரு விஷயத்தை அரசாங்கம் உடனடியாக எடுத்துக்கொண்டு செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக எல்லா அழுகு பொருள்கள் மீதும் இருந்த விற்பனை வரி நீக்கப்பட்டது. இப்போது பாலுக்கு இருக்கிற ஒரு வரியையும் நீக்கவேண்டும் என்பது அநேகர்—முக்கியமாகப் பால் வியாபாரிகள்—கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் ஒரு உணவுப் பொருளைச் சார்ந்தது. பாலுக்கு வரி போட்டால் நல்லது அல்ல. அதை நீக்கவேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் இதில் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri M. KALYANASUNDARAM:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கடந்த ஒன்பது ஆண்டு காலமாக தொடர்ந்து நமது ராஜ்யத்தின் நிதி நிலைக்குப் பொறுப்பு வகித்து வந்திருக்கூடிய நமது நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கக்கூடிய கருத்துக்கள் மிகமிக முக்கியமானவை என்று நான் கருதுகின்றேன். அவற்றுக்கு இந்தச் சபையிலும் சரி, வெளியிலும் சரி போதுமான கவனம் செலுத்தவேண்டும். தம்முடைய சொந்த அநுபவத்தை வைத்துக் கொண்டு, இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை ஆரம்ப முதல் முடிவு வரையில் உருவாக்கி, அமுல் நடத்துவதிலும் சிறந்த அநுபவம் பெற்ற ஒருவர் கூறி இருக்கக்கூடிய பிரசங்கம் இது. ஆகவே அதற்குள்ள ஒரு தனி முக்கியத்துவத்தோடு இதைப் பரிசீலனை செய்யவேண்டியது மிகவும் அவசியம். முதலில் ஒரு விஷயத்தை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

[Sri M. Kalyanasundaram] [15th March 1960

அதாவது நம்முடைய மாநில அரசாங்கம் செய்யக்கூடிய நடவடிக்கைகளை—இந்த நடவடிக்கைகளை—மட்டும் தனியாக எடுத்துப் பரிசீலனை செய்வது சரியாக இருக்காது. ஏனென்றால் நமது அரசியல் சட்ட அமைப்பில் அமைந்திருக்கிற இந்த அரசாங்கம்—பல்சக்கிரத்தில் அமைந்துள்ள ஒரு பல் போன்றதுதான். மத்திய அரசாங்கத்தின் நிதி அமைச்சர், தேசிய அபிவிருத்திக் குழு, ப்ளானிங் கமிஷன் இவர்கள் எல்லாம் எடுக்கக்கூடிய முடிவுகள் நம்முடைய ராஜ்யத்தையும், மற்ற ராஜ்யங்களையும் ஒருமிக்க சேர்த்தே பாதிக்கக்கூடியதாகும். அந்தச் சூழ்நிலையில்தான் நம் அரசாங்கத்தின் நிதி நிலை அறிக்கையையும் அமைச்சர் அவர்களுடைய பிரசங்கத்தையும் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. நமது அமைச்சர் அவர்கள் புதிய வரி எதுவும் போடவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். புதிய வரி போடாமலே பட்ஜெட்டில் கிட்டத்தட்ட ஒரு சிறிய தொகைதான் துண்டு விழக்கூடும் என்கிற விளக்கத்தை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய மனதிற்குள் தெரியும். இப்படி விளம்பரத்திற்காகச் சொல்லலாமே தவிர இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் புதிய வரிகள் மூலம் நம்முடைய திட்ட வேலைகளுக்காக ராஜ்ய சர்க்கார்களும், மத்திய சர்க்காரும் சேர்ந்து புதிய வரிகளின் மூலம் வசூலிக்கவேண்டியது 450 கோடி என்று தீர்மானித்திருக்க புதிய வரியின் மூலம் ஆயிரம் கோடி ரூபாய்க்கு அதிகமாக வசூலாகியிருக்கிறது என்பதை டெல்லி அமைச்சர் அவர்களும் ஒத்துக் கொள்கிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்களும் ப்ளானிங் அட்வைசரி கமிட்டி கூட்டத்திலும் சரி, தன்னுடைய உரையிலும் சரி இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 12½ கோடி புதிய வரியின் மூலமாக வசூல் செய்வதாகச் சொல்லியிருந்தாலும் 20 கோடிக்கு வசூலாகியிருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே கிட்டத்தட்ட ஆயிரம் கோடி அளவுக்கு அதிகமாக புதிய வரிகள் நம் மக்கள் மீது சுமந்திருக்கிறதென்பதை மனதில் வைத்து இப்போது புதிய வரி போடாமல் விட்டிருக்கிறோம் என்று சொல்லலாமேயொழிய அதைப்பார்த்து சந்தோஷப்பட முடியாது. மக்களுக்கு புதிய வரிச்சுமை ஏற்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களேயானால் என்னால் ஒத்துக்கொள்ள முடியாது. அதற்குப் பொறுப்பாளி யார் வேண்டுமானாலும் இருக்கலாம். ரயில்வே அமைச்சர் அவர்கள் இவ்வாண்டு 5 சத வீதம் சாமான் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறார்கள். அதோடு மத்திய சர்க்கார் நிதி அமைச்சர் அவர்கள் எக்சைஸ் வரி புதிய பல பொருள்களுக்குப் போட்டிருக்கிறார்கள். இந்த வரிகள்—புதிய எக்சைஸ் வரியும் சரி, ரயில்வே சாமான் கட்டண உயர்வு வரியும் சரி—பல பொருள்களுடைய விற்பனை விலையை அதிகரிக்கத்தான் செய்யும். அதன் மூலம் விற்பனை வரி அதிகமாக வசூலாகும். நம் பட்ஜெட்டில் வழக்கத்தைவிட 40 அல்லது 50 லட்சம் ரூபாய் அதிகமாகத்தான் கிடைக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே இவ்வாண்டு நாம் நம்முடைய நிதி நிலை அறிக்கையின் மூலம் புதிய வரி போடாமல் விட்டிருக்கிறோம் என்று சொல்லலாமே தவிர, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மக்களின் மீது சுமத்தப்பட்டிருக்கக்கூடிய வரிப் பளு மிக அதிகமானது,



15th March 1960] [Sri M. Kalyanasundaram]

அது அதிகரித்து கொண்டேதான் போகிறது என்பதை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற புள்ளி விவரங்களைக் கொண்டே நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். புதிய வரிகள் போடவில்லை என்பதை பிரசாரத்திற்கு வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாமே தவிர, உண்மை அது அல்ல என்று கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்த திட்டகாலத்திலே பல சாதனைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதைக் குறித்து கனம் அமைச்சர் அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள். இந்த சந்தோஷத்தில் நானும் பங்கு கொள்ளத்தான் விரும்புகிறேன். அவர்கள் கொடுத்திருக்கும் புள்ளிவிவரங்கள் சரியானவை. இதில் இங்கு எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. 152 கோடி ரூபாய்க்கு திட்டம் இட்டோம் இரண்டாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில். 181 கோடி ரூபாய் அதுவரைக்கும் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது ஒரு சாதனையா என்று கேட்டால் கட்டாயம் சாதனை என்றே ஒப்புக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். இதனால் என்ன பலன் ஏற்பட்டது? பல புதிய நீர்த்தேக்கங்கள் தோன்றியுள்ளன. திட்டமிடப்பட்டபடி மூன்று லட்சம் ஏக்கர் பூமி சாகுபடிக்கு வர இருக்கிறது. அங்கங்கே வந்துவிட்டது என்றுகூட சொல்லலாம். உற்பத்தி பெருகியிருக்கிறதா? கட்டாயம் பெருகியிருக்கிறது. நம் ராஜ்யத்தில் பெருகி இருக்கிறது. எல்லா உணவுப்பொருளின் உற்பத்தியும் கிட்டதட்ட 50 லட்சம் டன் பெருகியிருக்கிறது. தேசம் பூராவையும் எடுத்துக்கொண்டால், நம்முடைய தேசத்தின் சரித்திரத்திலேயே உயர்ந்த கட்டத்தை அடைந்திருக்கிறோம். 1958-59-ல் உணவுப்பொருள் உற்பத்தி பற்றிய புள்ளிவிவரங்கள் காட்டுவது என்ன? 1949-50-ல் 100 புள்ளி இருந்ததாக வைத்துக்கொண்டு பார்த்தால் இப்பொழுது 128 புள்ளி உயர்ந்திருக்கிறது. யுத்தத்திற்கு முன்னால் ஏற்பட்ட நிலைமை அல்ல. 1949-50-ல் 100 புள்ளி என்று வைத்துக்கொண்டு இப்பொழுது 128 புள்ளி உணவுப்பொருள் உற்பத்தியாகி இருக்கிறது. அதாவது 7 கோடியே 35 லட்சம் டன் நம் தேசத்தில் உற்பத்தியாகி இருக்கிறது. தொழில் துறையில் உற்பத்தி பெருகியிருக்கிறதா என்றால் அதுவும் பெருகியிருக்கிறது. நாங்கள் அதற்கு புள்ளிவிவரம் கொடுக்கமுடியும். நேரம் இல்லாத காரணத்தினால் என்னுடைய விவரங்களை இப்போது கொடுக்க முடியவில்லை.

உணவுப் பொருள்களின் உற்பத்தி சரித்திரத்திலேயே இல்லாத அளவிற்கு பெருகி இருக்கும் நேரத்திலே விலைவாசி எப்படி இருக்கிறது என்பதை நாம் பார்த்தால் அப்போதுதான் மக்கள் என்ன பலனை அனுபவிக்கிறார்கள் என்று நாம் பாராட்டிக் கொள்வதற்கோ, சந்தோஷப்படுவதற்கோ நமக்கு உரிமை உண்டு. திட்டங்கள் நிறைவேற்றுவது பற்றி நாம் சந்தோஷப்படலாம். நம்முடைய நிர்வாக யந்திரம் திறமையாக பணிபுரிந்து வருகிறதென்று சந்தோஷப்படலாம். பரிபூர்ணமாக, இதனால் மக்களுக்கு என்ன பலன் ஏற்பட்டது என்பதைப் பார்த்துதான் நாங்கள் இந்த சந்தோஷத்தில் பங்கு கொள்ள முடியும் என்பதை அவர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

[Sri M. Kalyanasundaram] [15th March 1960

உணவு அமைச்சர் அவர்கள் சிறிது நேரத்திற்கு முன்பு பல புள்ளிவிவரங்களைக் கொடுத்தார்கள். ஆனால் அது கேட்ட நண்பருடைய குறையினாலோ என்னவோ 1959 நவம்பர், டிசம்பரில் இருந்து தொடர்ச்சியாக ஜனவரி, பிப்ரவரி வரைக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வருஷத்தினுடைய விலைவாசி புள்ளி விவரங்களை இந்த மாதத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். 1959 ஜனவரி, பிப்ரவரியிலே எப்படி இருந்தது, 1960 ஜனவரி, பிப்ரவரியிலே எப்படி இருந்தது என்பதை ஒப்பிட்டுப்பார்த்து, இதில் விலை இறங்குமுகமாக இருக்கிறதா என்று திருப்தி அடையலாம். அதற்குள்ள புள்ளிவிவரம் கொடுக்கிறேன். உணவு மந்திரி அவர்களே பதில் சொல்லட்டும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் அவர்கள் கொடுத்த நோட்டீஸ்படி கொள்முதலை நிறுத்தியதில் இருந்து விலை அதிகமாக இல்லை என்பதைக் காட்டுவதற்காகத்தான் அதைக் கொடுத்தேன்.

SRI M. KALYANASUNDARAM: 1959 ஜனவரியில் வாழ்க்கைப் புள்ளி 421. 1960 ஜனவரியில் 441. 1959 பிப்ரவரியில் 411. அப்படி குறைந்துகொண்டிருக்கிறது. ஆனால் 1960 பிப்ரவரியில் 448; இப்படி ஏறிக்கொண்டிருக்கிறது. ஜன்வரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களில் எப்போதும் விலை குறையக்கூடிய காலம். இரண்டு மாதங்களினுடைய புள்ளிவிவரங்களையும் இந்த மாதத்தில் இருக்கக் கூடிய விலைவாசியையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இறங்குமுகமாக இருக்கிறதா ஏறுமுகமாக இருக்கிறதா என்றால் அறுவடைக் காலத்திலே ஏறுமுகமாக இல்லை. உணவு அமைச்சர் அவர்கள் சில நிமிஷங்கள் முன்னால் சொன்ன இந்தக் காரணமே சரியில்லை. ஆனால் கொடுத்த புள்ளிவிவரத்திலே நிரூபிக்கப்படுகிறது. ஆனால் அதிக புள்ளிவிவரங்களுக்கு போக வேண்டிய அவசியமே இல்லை. ஏனென்றால் உணவு அமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டு விட்டார்கள். சென்னை நகரத்தை மற்ற நகரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஒரு பாயிண்டு இரண்டு பாயிண்டு வித்தியாசம் ஏற்படலாம். விலைவாசி உயர்ந்து இருப்பதனால் ஏற்பட்டிருக்கும் கஷ்டத்தை நிதி அமைச்சர் அவர்கள் தகராறுக்கு இடம் இன்றி ஒப்புக்கொண்டுவிட்டால் நான் புள்ளிவிவரங்களுக்குப் போக வேண்டிய அவசியம் இல்லை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் கூறியிருக்கும் வார்த்தைகளை மட்டும் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கனம் நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட் உரையில் 38-ம் பக்கத்தில் "விலை உயர்வின் காரணமாக பெரும்பான்மையான மக்களுக்கு சேமிக்கும் சக்தியே இல்லாமல் போய்விடுகிறது. இதன் காரணத்தால்தான் சென்ற ஆண்டு அறிக்கையில் விலை உயர்வினால் ஏற்படக்கூடிய ஆபத்தை எடுத்துக் காட்டியிருந்தேன். அங்கு குறிப்பிட்டதுபோலத் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கும் தாறுமாறாகக் கட்டுப்பாடில்லாத விலையுயர்வுக்கும் பெரிய முரண்பாடுள்ளது என்பதை உணரவேண்டும்" என்று கூறியிருக்கிறார்கள். பக்கத்திலே இருக்கும் உணவு அமைச்சர் அவர்களை உணரச்



15th March 1960] [Sri M. Kalyanasundaram]

சொல்லுகிறார்களா? அல்லது அவர்களுக்குப் பின்னால் இருக்கும் அங்கத்தினர்களை உணரச்சொல்லுகிறார்களா? யாரை உணரச் சொல்லுகிறார்கள்? யார் உணரவேண்டும்? அமைச்சர் உணர்ந்திருக்கிறார்களா? தேசம் உணரவேண்டுமா? உணர்ந்துதான் அதற்குள்ள யோசனையைச் சொல்லுகிறார்கள். டெல்லி சர்க்கார் உணரவேண்டுமா? யார் உணரவேண்டும்? உணரும் அமைச்சர் என்ன சொல்லுகிறார்கள். அடுத்து பார்க்கிறோம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வகுக்கும் அதே நேரத்தில் இரண்டாவது திட்டகாலத்தில் ஏற்பட்டிருக்கும் அந்த அனுபவத்தை அடிப்படையாகக்கொண்டு விலைவாசிகளை, அதிலும் முக்கியமாக விவசாயப்பொருள்களை ஓரளவுக்குள் . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM: ஓரளவுக்குள்.

SRI M. KALYANASUNDARAM: ஓரளவிற்குள் கட்டுப்படுத்துவதற்காக வழிவகைகளை வகுக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதை மறுமுறையாக இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் வலியுறுத்தியதை எதிர்க்கட்சியிலே வலியுறுத்தியிருக்கிறோம். யாருக்கு வலியுறுத்த வேண்டியது அவசியம்? மந்திரி சபைக்கே வலியுறுத்தவேண்டிய அவசியம் இருக்கிறதா? தேசிய அபிவிருத்திக் கவுன்சிலுக்கு வலியுறுத்த வேண்டிய அவசியம் இருக்கிறதா? அல்லது திட்டக் கமிஷனுக்கு வலியுறுத்தவேண்டிய அவசியம் இருக்கிறதா? யார் முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள். நோயைத் தெரிவித்த வைத்தியர் ஏன் மருந்தை அதற்குத் தெரிவிக்க முடிக்கவில்லை? மருந்தைப்பற்றிய ஞானக்குறைவு இருக்கிறதா? நோயைப்பற்றி ஆராய்ச்சி பண்ணத் தெரிந்தவர்களுக்கு மருந்தைக் கண்டுபிடிப்பதற்கு திறமைக் குறைவுக்கு என்ன காரணம்? அல்லது கொள்கை கோளாறு? அவரே இந்தப் பிரச்சனையை எடுத்துச் சொல்லிவிட்டு தன்னால் கையால் ஆகாதவர்போல் பரிதாபகரமான நிலைமையில் இங்கே நிற்கிறார். அதைப்பார்க்க வருத்தப்படுகிறேன். அவர்கள் பெற்று இருக்கிற மகிழ்ச்சியும் என்னால் பொறாமைப்படியவில்லை என்பதை நான் அவர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். விலைவாசி உயர்வினால் என்ன பாதகம் ஏற்படுகிறது என்பதை நான் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. கனம் அமைச்சர் அவர்களே தெட்டத் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். "திட்டமிட்ட பொருளாதாரத்தின் அடிப்படையே தகர்ந்துவிடும்" என்பதுதான் அவர்கள் சொல்லியிருக்கும் கருத்து. அப்படி இருந்தும் பார்க்கிறோம். திட்டத்தைத் தீட்டுவதற்கு சக்தியற்றவர்கள்போல் திகைக்கின்றார்களே, அதுதான் எனக்குப் புரியவில்லை. அதன் காரணத்தை நன்றாக ஆராய்ந்து அதற்கு யோசனை அவர்கள் கொடுக்கட்டும். நாங்கள் கேட்டோம் என்பதற்காக ஆட்சேபிக்க வேண்டிய அவசியம் இல்லை. ப்ரொக்யூர்மெண்ட் அவசியமா இல்லையா என்பதைப்பற்றி இன்னும் சர்ச்சை வேண்டுமா என்று உணவு அமைச்சர் அவர்களையே கேட்க விரும்புகிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய ஆதாரங்கள் போதுமானவை.

[15th March 1960

SRI R. KRISHNASAMI NAIDU : பாயிண்ட் ஆப் ஆர்டர்—முக்கியமான கட்சித் தலைவர் ஒருவர் கனம் அமைச்சர் அவர்களை கையால் ஆகாதவர் என்ற முறையில் பேசுவது இங்கிதமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்கள் சொன்னதிலிருந்து கையால் ஆகாததனம் வந்தது என்றால் என்னுடைய திறமையைப்பற்றி மற்றவர்கள் பேச வேண்டிய அவசியம் இல்லை.

SRI M. KALYANASUNDARAM : அப்படிப்பட்ட வார்த்தை யாரையாவது புண்படுத்துவதாக இருந்தால் நான் சொல்லியிருக்க மாட்டேன். சாதாரணமாக பழக்க வழக்கத்தில் இருப்பதைத்தான் நான் சொன்னேன். அது புண்படுத்தக்கூடிய வார்த்தை அல்ல என்று நான் நினைக்கிறேன். அதற்குப் பரிகாரம் கண்டுபிடிக்க முடியாமல் தவிக்கிறார் என்பதைத்தான் நான் சொல்லுகிறேன். அவரை அவமதிக்கும் நோக்கம் அல்ல. எதற்காக நான் அவரை அவமதிக்கவேண்டும்? என்னுடைய கொள்கையில் உயர்வு இருக்கும்போது பிறரை அவமதித்து நான் பயப்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

அமைச்சர் அவர்கள் இந்த சபையிலும் சரி அல்லது வெளியிலும் சரி, டெல்லியில் நம்முடைய மக்களின் தலையெழுத்தை நிர்ணயிக்கும் பெரியோர்களானாலும் சரி, அவர்கள் நமக்கு
10 a.m. வாக்களித்தது என்ன? உற்பத்தியைப் பெருக்குங்கள். விலைவாசி தானாகவே இறங்கிவிடும். உற்பத்தி பெருகிவிட்டால் சுபிட்சம் தானாகவே வந்துவிடும் என்றெல்லாம் சொன்னார்கள். உற்பத்தி பெருகியது, ஆனால் விலைவாசி குறைந்ததா, சுபிட்சம் வந்ததா என்பது பற்றி நிதியமைச்சர் அவர்களே பதில் சொல்லி விட்டார்கள், நிலைமை திருப்திகரமாக இல்லை என்று. என்.ஜி.ஓ-க்களைப்பற்றி குறிப்பிட்டிருப்பதைப்பற்றி நான் வரவேற்கிறேன். அவர்கள் என்ன நோக்கத்தோடு குறிப்பிட்டார்கள் என்று தெரியாது. சென்னை சர்க்கார் அமைத்திருக்கக்கூடிய பே கமிஷன் அதிகப்படியாக சிபார்சு செய்துவிடக் கூடாது என்பதற்காக ஏற்கெனவே நாங்கள் 20 கோடி ரூபாய் செலவு செய்து விட்டோம் என்று இங்கு பகிரங்கமாக கான்வாஸ் செய்கிறார்களோ, தெரியாது. அப்படி 20 கோடி ரூபாய் சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுத்தும்கூட அவர்கள் திருப்தி அடையவில்லை, விலைவாசி உயர்வுதான் இதற்குக் காரணம் என்றால் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த உங்களுக்கு சக்தியில்லையா அல்லது அதற்குள்ள அதிகாரந்தான் உங்களுக்கு இல்லையா என்று கேட்கிறேன். அப்படி விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தியிருந்தால் இந்த 20 கோடி ரூபாயைச் செலவழித்திருக்க வேண்டிய அவசியமில்லை. அப்படி செலவு செய்ததினால் என்ன பலன் ஏற்பட்டிருக்கிறது? சர்க்கார் காரியாலயங்களில் வேலை செய்வோர், விலைவாசிகள் உயர்ந்து விட்டது, எங்களது சம்பளம் போதாது, மத்திய சர்க்கார் சம்பளக் கமிஷன் செய்திருக்கும் சிபார்சுபடி, அந்த அடிப்படையில் எங்கள் சம்பளத்தையும் உயர்த்த வேண்டுமென்று கோருகிறார்கள். ஆகவே, 20 கோடி ரூபாய் செலவு செய்தும் அதிருப்திதான் மிச்சம் என்று சொன்னால், சர்க்காரின்



15th March 1960] [Sri M. Kalyanasundaram]

கொள்கையில் ஏதோ கோளாறு இருக்கிறது. என்றுதான் அர்த்தம். அந்தக் கோளாறுக்குப் பரிகாரம் காணவேண்டும். 20 கோடி ரூபாய் செலவழித்து விட்டோம். ஆகவே, மேலும் என்.ஜி.ஓ - க்களுக்கோ அல்லது மற்ற கீழ்த்தர சிப்பந்திகளுக்கோ ஒன்றும் அதிகமாகக் கொடுக்கக்கூடாது என்பதற்காக இதைக் கொண்டுவந்தால் அதை ஒப்புக்கொள்ள முடியாது. விலைவாசியைக் கட்டுப்படுத்துங்கள். கட்டுப்படுத்த வேண்டும் என்பதைப்பற்றி அமைச்சர் அவர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். அதைத்தான் எதிர்கட்சிக்காரர்களும் சொல்லி வர்த்தகத்தை அரசாங்கமே செய்ய வேண்டும். அறுவடைக் காலத்திலும் சரி, அல்லது மற்ற காலங்களிலும் சரி, விலை ஒரே நிலையில் இருக்க வேண்டும். உற்பத்தி செய்பவர்களுக்கும் நியாயமான விலை கிடைக்க வேண்டும், அதை வாங்குபவர்களுக்கும் நியாயமான விலையில் கிடைக்க வேண்டும். அப்படிச் செய்ய முடியாவிட்டால் அரசாங்கம் எவ்வளவு திட்டங்கள் போட்டாலும் சரி, அதனால் யாதொரு பயனும் இருக்காது. கொள்ளை லாபம் அடிப்பவர்களுக்குத்தான் அதன் பயன் போய்ச் சேரும். அவர்களுக்குத்தான் மிகுந்த லாபம் கிடைக்கும். உற்பத்தி அதிகரிப்பால் ஏற்படும் விளைவையும் எடுத்துக் காட்டுகிறேன். சமீபத்தில் ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் விவசாயிகளிடம் ஒரு பெரிய கூக்குரல் ஏற்பட்டிருக்கிறது, மிளகாய் வத்தலின் விலை திடீரென்று குறைந்து போய் விட்டதென்று. மிளகாய் வத்தல் மார்கட்டுக்கு வரும் காலம் இது. அதன் விலை ஏன் குறைந்தது? உற்பத்தியாகும் காலத்திலேயே குறைகிறது, விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும் முறையில் குறைகிறது. விலைவாசி குறைந்தாலும் கிளர்ச்சி செய்கிறார்களே என்று அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும். ஆகவேதான் நான் சொல்கிறேன், உற்பத்தி செய்யக் கூடியவர்களுக்கும் நியாயமான விலை கிடைக்க வேண்டும், அதை வாங்குபவர்களுக்கும், அதை உபயோகிப்பவர்களுக்கும், அவர்களின் சக்திக்கு உகந்த முறையில் நியாயமான விலையில் கிடைக்க வேண்டும். அப்படிச் செய்ய முடியாவிட்டால், அரசாங்கத்தின் கொள்கையில்தான் ஏதோ கோளாறு இருக்கிறது என்று அர்த்தம். அதற்கு வேண்டிய பரிகாரம் காணப்பட வேண்டும். இதுபற்றி அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும். அப்படி பரிகாரம் காண, ராஜ்ய சர்க்காருக்கு மட்டும் அதிகாரம் இல்லை. அமைச்சர் அவர்கள், அவர்கள் செல்வாக்கை உபயோகித்து தேசீய அபிவிருத்திக் கௌன்ஸிலிலும் சரி, ப்ளானிங் கமிஷனின் முன்பும் சரி, மத்திய சர்க்கார் நிதியமைச்சர் முன்பும் சரி, எடுத்துச் சொல்லி அடிப்படைக் கொள்கைகளையே இந்திய சர்க்கார் மாற்ற வேண்டும் என்று சொல்ல வேண்டும். ப்ளானிங் கமிஷனும், தேசீய அபிவிருத்திக் கௌன்ஸிலும் இதன் அடிப்படைக் கொள்கையை மாற்ற வேண்டுமென்று சொல்ல வேண்டும். இல்லாவிடில் நாம் போடும் திட்டங்கள் மக்களுக்குப் பலனளிக்காது. உழைக்கக் கூடிய மக்கள், அவர்கள் தொழிலாளர்களானாலும் சரி அல்லது சர்க்கார் ஊழியர்களானாலும் சரி, சம்பளம் அதிகம் வேண்டுமென்றுதான் கேட்டுக்கொண்டிருப்பார்கள். அதுபற்றி நிதி

[Sri M. Kalyanasundaram] [15th March 1960

அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அது விஷ சக்கரம் என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். விலைவாசி சம்பளத்தை விரட்டிக்கொண்டு போகிறது, சம்பளம் விலைவாசியை விரட்டிக் கொண்டு போகிறது என்று சொல்கிறார்கள். அது, படிக்க நன்றாகத்தான் இருக்கிறது. சம்பளம் விலைவாசியை விரட்டுகிறதா அல்லது சர்க்கார் போடும் திட்டங்கள் விலைவாசியை உயர்த்து கிறதா? உழைக்கக்கூடிய மக்களைக் காண்பித்து அவர்களின் ஊதியம் அதிகமாகப் பெறுவதால்தான் விலைவாசி அதிகமாகிறது என்று எடுத்துக்காட்டும் கெட்டிக்காரத்தனம் வேண்டாமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, சர்க்கார் என்ன செய்யவேண்டுமென்பதைப்பற்றி நான் சில யோசனைகள் கூற விரும்புகிறேன். உணவுப் பண்டங்களை, மக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருள்களை, சர்க்காரே வியாபாரம் செய்யக் கூடிய ஒரு திட்டத்தை மேற்கொள்ளாமல் இருந்தால் எந்த நிதியமைச்சரும், அது ஸி. சுப்பிரமண்யம் அவர்களாக இருந் தாலும் சரி அல்லது யாராக இருந்தாலும் சரி, பலன் இதுவாகத் தான் இருக்கும் என்று எடுத்துககூற விரும்புகிறேன். உணவுப் பண்டங்கள், அத்தியாவசியமான பண்டங்களின் ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். 35 ரூபாய்க்கு சரக்கு வாங்கினால் அதை 150 ரூபாய்க்கு விற்கிறார் கள், வியாபாரிகள். ஆகவே, சர்க்காரே ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தை நடத்தினால் அதனால் ஏற்படக்கூடிய லாபம் ஏதாவது இருக்குமானால் அது சர்க்காருக்கே போகும். விலையும் நியாயமாக இருக்கும். ஆகவே, இறக்குமதி, ஏற்றுமதி, உள் நாட்டில் உபயோகமாகவுள்ள அத்தியாவசியமான பண்டங்களின் வியாபாரத்தை சர்க்காரே ஸ்டேட் ட்ரேடிங் மூலம் எடுத்து நடத்தாமல் இருந்தால், 10,000 கோடி ரூபாய்க்கு ப்ளான் போட்டாலும் சரி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தினால் மக்களுக்கு என்ன பலன் கிடைத்ததோ அதேபோல்தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பலனும் மக்களுக்குக் கிடைக்கும் என்ற அபாயத்தை நான் சர்க்காருக்கு எச்சரிக்க விரும்புகிறேன். நமது ராஜ்யம் அபிவிருத்தி அடையக் கூடா தென்று நான் அபசகுனம் பிடித்த மாதிரி சொல்லவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உள்ள அபாயத்தைத்தான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 450 கோடிக்கு வரிகள் போடவேண்டுமென்று சொன்னார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதைவிட கூடுதல் வரிகள் போடவேண்டுமென்று தேசிய அபிவிருத்திக் கௌன்ஸிலும், ப்ளானிங் கமிஷனும் யோசனை கூறினால் நான் ஆச்சரியப்படமாட்டேன். அப்படி நிதியமைச்சர் அவர்கள் அடுத்த தேர்தலுக்குப் பிறகும் அவர் நிதியமைச்சராக இங்கு வந்தால் கட்டாயம் முதல் வருடத்திலேயே புதிய வரிகள் கொண்டு வர வேண்டியிருக்கும். அதற்குள் வேறு சூழ்நிலை காரணமாக அவர்கள் வேறு எங்கேயாவது போக வேண்டி வந்தால் அங்கும் இதைச் செய்ய வேண்டியிருக்கும். ஆகவே, இந்த அடிப்படைக் கொள்கை மாற வேண்டும். முக்கியமாக பணப் புழக்கத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் சர்க்காருக்கு இருக்க வேண்டும். அது நம் நாட்டில் யார் மூலம் நடக்கிறது? பாங்க் மூலம்



15th March 1960] [Sri M. Kalyanasundaram]

இரண்டாயிரம் கோடி ரூபாய்க்கு நோட் அடித்துக் கொடுத்து விட்டார்கள். அது பாங்கர்ஸ்க்கு போகிறது. அவர்கள் கையில் பணப் புழக்கம் இருக்கிறது. அதை ரிசர்வ் பாங்க் கட்டுப்பாடு செய்யலாம். அது பயன் அளிக்கக்கூடியதல்ல. பணம் பூராவும் பாங்கில் இருக்கிறது. அந்த பாங்க்கள்தான் மக்களின் முக்கியமான எதிரிகள் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பாங்க் என்ற ஸ்தாபனத்தை அல்ல நான் குறிப்பிடுவது. அதை நிர்வகிக்கும் தனிப்பட்ட நபர்களைத்தான் நான் குறிப்பிடுகிறேன். பாங்குகளை சர்க்கார் நடத்தும் நிலை ஏற்படுமானால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் புது வரிகளைப் போட்டு மக்களை கசக்கிப் பிழியாமல் பாங்குகளில் உள்ள பணத்தை பயன்படுத்திக் கொண்டு வெளிநாடுகளுடன் வர்த்தகம் செய்து வந்தால் அதனால் மக்களுக்கு நல்ல பயன் கிடைக்க முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் எங்கெங்கு வற்புறுத்த வேண்டுமோ அங்கெல்லாம் வற்புறுத்த வேண்டும். எங்களை வற்புறுத்தி பிரயோஜனமில்லை, எங்களை உணரச் செய்வதில் அர்த்தமில்லை. ஏனெனில், அதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம், அதை வற்புறுத்தியும் வருகிறோம். இதை அமைச்சர் அவர்கள் சொன்னால் அவருக்கு பக்கபலமாக இருந்து சொல்லி வற்புறுத்த எதிர்கட்சிகள் தயார் என்று நான் நம்பு கிறேன். என் கட்சியைப் பொறுத்த வரையில் நாங்கள் அதற்குத் தயார் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI K. KAMARAJ : சுதந்திராக் கட்சி அதை ஒப்புக்கொள்ளுமா?

SRI M. KALYANASUNDARAM : ஆனால் இந்த சபையில் சுதந்திரா கட்சியின் நிலைமை வேறாக இருக்கிறது. சுதந்திராக் கட்சியை பின்பற்றுகிறவர்களே சிலர் அந்தப் பக்கத்திலும் இருந்து கொண்டிருப்பதினால் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு அந்தப் பொறுப்பு கொஞ்சம் குறைந்திருக்கிறது என்று நினைக்கிறேன்.

இன்னொரு யோசனை என்னவென்றால், பஸ் போக்குவரத்து எல்லாம் இன்று தனியார் கையில்தான் அதிகமாக இருந்து வருகின்றன. அரசாங்கம் ஏற்றெடுத்து நடத்துகிற பஸ் போக்கு வரத்தில் லாபம் இல்லை என்று சொல்ல முடியாது, இந்தப் பொறுப்பை வகித்துக்கொண்டிருக்கிற கனம் அமைச்சர் வெங்கட் ராமன் அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தபோது பெங்களூருக்கு பஸ் விட்டிருப்பதைப்பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். பஸ் சர்வீஸ் தொடங்கி நான்கு மாதங்கள்தான் ஆகியிருக்கும், இதற்குள் பஸ்ஸினுடைய கிரயம் பூராவும் கிடைத்துவிட்டது என்ற முறையில் மிகவும் சந்தோஷத்தோடு, மிகவும் உற்சாகத்தோடு சொன்னார்கள். நான்கு மாதத்திற்குள்ளேயே பஸ்ஸின் கிரயம் பூராவும் கிடைத்திருக்கிறது என்று சொன்னால், அதிலும் சர்க்கார் நடத்துகிற சர்வீஸ், சர்க்கார் நடத்துகிற பஸ் சர்வீஸைப்பற்றி யாருக்கும் சொல்ல வேண்டிய தில்லை, அப்படி சர்க்கார் நடத்துகிற சர்வீஸிலே கிடைத்திருக் கிறது என்றால் தனியார் நடத்தும் போக்குவரத்தில் எவ்வளவு

லாபம் கிடைக்கும் என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். அவர்கள் பகிரங்கமாக கொடுக்கும் கணக்கிலே லாபம் கிடைப்பதாகத்தான் சொல்லப்படுகிறது. ஆகவே சர்க்கார் நடத்துவதாக இருந்தாலும் லாபம் இருக்கிறது என்று புரிந்து கொள்வதற்கு இது ஒரு அளவுகோலாக இருக்கிறது என்பதை நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே, இதில் என்னுடைய யோசனை என்னவென்றால், எல்லா பஸ் போக்கு வரத்துகளை ஏற்று நடத்த முடியாவிட்டாலும், குறைந்த தூரங்களில் இருக்கும் பஸ் போக்குவரத்தை எல்லாம் தனியார்களுக்கு விட்டுக்கொடுத்தாலும் கூட, நெடுந்தூரத்தில் போய்க்கொண்டு இருக்கும் பஸ் போக்குவரத்தை எல்லாம், அதாவது, 50 மைல்களுக்கு அப்பால் இருக்கும் பஸ் போக்குவரத்தை எல்லாம், அதேபோன்று எக்ஸ்பிரஸ் பஸ் போக்குவரத்தை எல்லாம் சர்க்கார் நடத்துவதாக இருந்தால் நிச்சயமாக லாபம் கிடைக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இதன் மூலம் சர்க்காருக்கு லாபம் கிடைக்கும், புதிய வரிகள் போட வேண்டிய அவசியமில்லை. இதற்காக நாஷனல் டெவலப்மென்ட் கௌன்ஸிலில் போய் கேட்கவேண்டிய அவசியமில்லை. நமது மந்திரி சபைக்கே அதிகாரமிருக்கிறது. ஆகவே இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் புதிய தொழில்கள் அதிகமாக பெருகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இதற்கான ஆதாரங்கள் எங்கே திரட்டப் போகிறார்கள் என்பதுதான் தெரியவில்லை. சர்க்காருடைய நோக்கங்களை எல்லாம் பார்ப்பதற்கு முன்னால் இதற்காக செய்யப்பட்டிருக்கிற ஆதாரங்களை எல்லாம் பார்த்தால் எந்தவிதமான நம்பிக்கையும் ஏற்படுவதாக தெரிவில்லை. இதல்லாமல் வேறு எந்த கொள்கை பேசினாலும் பிரயோசனமில்லை. எவ்வளவு கஷ்டப்பட்டாலும் பிரயோசனமில்லை. இப்போதிருக்கின்ற நிலை நீடித்துக்கொண்டிருந்தால் எந்தவிதமான பலனும் ஏற்படப்போவதில்லை. அதே நேரத்தில் பொதுமக்களைப் பொறுத்தவரையில் கஷ்டங்கள்தான் ஏற்படும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொண்டு, இவர்கள் கைக்கொண்டிருக்கிற கொள்கையில் இருக்கிற ஒருசில அபாயத்தை மட்டும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER: The hon. Member has got two minutes more.

SRI M. KALYANASUNDARAM: I may be given five more minutes, Sir. பொதுவாக மேலும் மேலும் தனியார் துறைக்கு ஊக்கம் கொடுக்காமல் பொதுத் துறைக்கு, அதில் அதிகமான அளவில் அபிவிருத்தி ஏற்படுவதற்கு வழி செய்ய வேண்டும். இது சோஷியலிஸம், அல்லது கம்யூனிஸம் என்ற தத்துவார்த்த பிரச்னை அல்ல. பொதுமக்களிடையே, இந்த சர்க்கார் ஒரு பெரிய நம்பிக்கையையும், ஆசையையும் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். வெல்பேர் ஸ்டேட் என்கிற ஆசையை





எங்கும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் அந்த நம்பிக்கை ஏற்படுவதாகத் தெரியவில்லை. அதோடு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் சொல்லப்பட்டிருக்கிற திட்டங்களை எல்லாம் எவ்விதம் நிறைவேற்றப் போகிறார்கள், எவ்விதம் இந்தக் கடமையை செய்து முடிக்கப் போகிறார்கள் என்ற நினைப்பில்தான் பேசுகின்றேனே தவிர, வேறு எந்த தத்துவார்த்த போட்டிக்காகவும் இதை நான் குறிப்பிடவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். சர்க்கார் நடத்தக் கூடிய தொழில்கள் இதில் எது இருக்கின்றது என்று பார்த்தால் இதில் ஒன்றும் கிடைக்கவில்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தைப் பொறுத்த அளவில் நமது ராஜ்யத்தைப் பொறுத்தவரை தொழில்கள் வளரவில்லை என்பது உண்மை. மூன்றாவது திட்டகாலத்தைப் பொறுத்த அளவில் இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்தால் அதிலும் தனியார் துறைக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு உதாரணத்தை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். நம்முடைய ராஜ்யத்திலுள்ள காகிதப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சி பாராட்டுவதற்குரியதாகும். ஆனால், அதுவும் தனியார் கையிலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய சர்க்கார் இதில் ஒரு கோடி ரூபாய் மூலதனம் போடுவதாக சொல்லப்பட்டிருக்கிறது. அதோடு சென்னை இன்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் ஒரு கோடி மூலதனம் போடுவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவும் சர்க்காருடைய பொறுப்பில்தான் நடத்தப்பட்டு வருகிறது. அதோடு டெவலப்மென்ட் கார்ப்பரேஷனில் இருந்து 50 லட்சமும், ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷனிலிருந்து 50 லட்சமும் கொடுக்கப்படவிருக்கிறது என்றும் தெரிகிறது. மத்திய சர்க்கார் இதற்கான உதவியை கொடுப்பதாக உறுதியளித்திருப்பதாகவும் தெரிகிறது. இது தவிர, எக்ஸ்போர்ட்-இம்போர்ட் ஸ்தாபனத்திலிருந்தும் இரண்டு கோடி ரூபாய் கொடுப்பதாக உறுதி கொடுத்திருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. ஆனால் இவ்விதம் எல்லாப் பொதுப் பணத்தையும் தனியார்களுடைய லாபத்திற்காகத்தான் கொடுத்து உதவ வேண்டியிருக்கிறது, இது அவசியம்தானா என்பதைத்தான் நாம் முக்கியமாக கவனிக்க வேண்டும். அதோடு இவ்விதம் பங்கு எடுப்பதில் "அண்டர் ரைட்டிங்" இனத்தில் 2½ சதமானமும், "ப்ரோக்கரேஜ்" இனத்தில் 1 சதமானமும் கிடைக்கும். இவ்விதம் கிடைக்கும் வசதியை நாம் இன்று பெறுவதற்கு வசதியில்லை. இந்த வசதி இப்போது தனியார் கம்பெனிக்குத்தான் போய் சேருகிறது. ஆகவே, இதற்கெல்லாம் காரணம் என்னவென்றால், சர்க்கார் துறையில் எடுத்து நடத்த முடியாத நிலைமை இருப்பதுதான். சர்க்கார் நடத்துவதற்கு ஏதாவது வாய்ப்பு இருக்கிறதா என்பதைப்பற்றி நாம் ஆலோசனை செய்யவேண்டும். அதல்லாமல் எந்தவிதமான பிராஜெக்ட்டுகள் செய்தார்களோ தெரியவில்லை.

[Sri M. Kalyanasundaram] 15th March 1960]

இன்று சேஷசாயி பிரதர்ஸ் கையில் இது ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதனுடைய விவரங்களை நான் அறிய விரும்புகிறேன். ஏற்கனவே சேஷசாயி பிரதர்ஸ் கம்பெனியில் இரண்டரை லட்சம் ரூபாய்க்கு நமது சர்க்காருக்கு பங்கு இருக்கிறது. இப்போது, பங்கு ரூபாய் 10 என்றாலும் இன்றைய நிலையில் பங்கு 4½ ரூபாயாக இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் சர்க்கார் அங்கு இருக்கவும் முடியவில்லை, வெளியேறவும் முடியவில்லை, இந்த நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. மேலும் இவர்கள் ஸ்தாபனத்தையே சர்க்கார் எடுத்துக்கொள்ளப் போவதாகவும் கேள்விப்படுகிறேன். இந்த சந்தர்ப்பத்தில் இரண்டு கோடி ரூபாய் மூலதனம் போட்டும், மேலும் பல உதவிகள் செய்து கொடுத்தும் இவர்கள் கையில் ஒரு தொழிலை ஒப்படைப்பது என்றால் இதற்கு போதுமான அஸ்திவாரம் இருக்கிறதா என்பதைப்பற்றி சர்க்கார் கவனித்துப் பார்க்க வேண்டும் என்பதோடு மட்டுமல்ல, இதில் சர்க்காருடைய பொறுப்பு என்ன என்பதையும் நான் அறிய விரும்புகிறேன். சர்க்கார் இதில் பங்கு எடுத்துக்கொண்டதின் காரணமாக வெறும் ஒரு டயரக்டர் மட்டும் மீட்டிங்குகளில் போய் கலந்துகொண்டு விட்டு வரக்கூடிய நிலைதான் இருக்குமா என்பதும் தெரியவில்லை. அவ்விதமிருந்தால் அதை மாற்றி அங்கேயே ஒரு ரெஸிடன்ட் டயரக்டராக ஒருவரை நியமிக்கவேண்டும்—ஏன் இதை சொல்லுகிறேன் என்றால், இனிமேல் இந்த நடவடிக்கையை மாற்றிக்கொள்ள முடியும் என்று நான் நம்பவில்லை, அந்த அளவுக்கு வெகு தூரத்திற்கு இவர்கள் போய்விட்டார்கள் என்று நம்புகிறேன். அதனால்தான் நிரந்தரமான ஒருவரை ரெஸிடன்ட் டயரக்டராக போட்டு அங்கேயுள்ள வேலைகளை எல்லாம் பாதுகாத்து வருவதோடு, அங்குள்ள வேலைகளை எல்லாம் கண்காணித்துக்கொள்வதற்கும் வசதியாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய நாட்டில் இந்தவிதமான தொழில்கள் வளர வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். ஆகவே, இந்த யோசனைகளை எல்லாம் சர்க்கார் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு சாதாரண ஒன்றிரண்டு விஷயங்களையும் ஒன்றிரண்டு நிமிடங்களில் கூறி முடித்துக்கொள்கிறேன்.

நம்முடைய நிர்வாகத்தில் ஒன்றிரண்டு டிப்பார்ட்மென்ட்கள் சரிவர தங்கள் வேலைகளை நிறைவேற்றவில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (அக்ரிகல்ச்சர்) விவசாய டிப்பார்ட்மென்ட்டை பொறுத்த அளவில் நாம் 12½ லட்சம் டன் தான்யம் அதிகமாக பெருக்க வேண்டும் என்று திட்டம் போட்டிருந்தும் 9 லட்சம் டன்தான் சாதனையாக்க முடிந்திருக்கிறது. இதைப்பற்றி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட ஆலோசனைக் குழுவிலும் சொல்லப்பட்டது. ஏன் சாதனை குறைவாக ஏற்பட்டது என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டதா? இல்லையென்றால் தக்கவிதத்தில் வேண்டிய ஆராய்ச்சி செய்யவேண்டும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம்.



15th March 1960] [Sri M. Kalyanasundaram]

இரண்டாவதாக கம்யூனிட்டி டெவலப்மென்ட் சம்பந்தப்பட்ட மட்டில் திட்ட ஆலோசனைக் குழு அறிக்கையிலேயே பல விவரங்கள் சொல்லப்பட்டிருந்தன. இதற்காக ஒரு ஸ்பெஷல் ஆபிஸரும் நியமித்து இதிலிருந்து நன்மை என்ன, தீமை என்ன என்பதை விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தும், எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. ஆகவே, இதில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே இன்னொரு டிபார்ட்மெண்ட்—அசிரத்தையாக இருக்கக்கூடிய டிப்பார்ட்மெண்ட்—மெடிகல். பப்ளிக் ஹெல்த்தின்கீழ் போதுமான அளவுக்கு அர்பன், ரூரல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்ட தொகை செலவாகியிருந்தாலும், "அதர் ஹெல்த் ஸ்கீம்ஸ்" என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்டதில் 9·41 லட்சம் ரூபாய்க்கு 6·75 லட்சம் ரூபாய்தான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே பல கட்டிட வேலைகள் நிறைவேறவில்லை. இந்த இலாகாவில் என்ன கோளாறு இருக்கிறது? இதிலே அபிவிருத்தி வேலைகள் ஏதாவது கைவிடப்பட்டிருக்கிறதா என்பது தெரியவேண்டிய விஷயம். என்ன காரணத்தினால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை என்று பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்திலே இன்று நான் பங்கெடுத்துக்கொண்டு இதுவரையில் பேசிய கனம் அங்கத்தினர்கள் கூறிய சிலவற்றிற்கு சமாதானம் கூறுகிற முறையில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

முதன் முதலாக என்னுடைய இலாகாவைப் பொறுத்த அளவில் அதிகமான முக்கியத்துவம் கொடுப்பது என்னவென்று சொன்னால், இந்த ராஜ்யத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தை எந்த அளவுக்குக் குறைக்க முடியுமோ, எந்த அளவுக்கு நமது ராஜ்யத்தில் வேலை வாய்ப்பு வசதிகளை அதிகரிக்க முடியுமோ, அந்த அளவில்—அந்த அடிப்படையில்—சர்க்கார் வேலை செய்து வருகிறது என்று நான் திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன். நமது ராஜ்யத்தில் இன்றைக்கு வேலை வாய்ப்பு வசதிகள் அதிகரித்து வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. நான் இதைச் சொன்னவுடன் நம் ராஜ்யத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தையே ஒழித்து விட்டோமா என்று கேட்பது சரியாகாது. வேலையில்லாத் திண்டாட்டம் முழுவதையும் ஒழிப்பது என்பது பல நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக சுதந்திர நாடுகளாக இருந்து, தொழில் காலத்தில், யந்திரப் புரட்சி ஏற்பட்ட காலத்திலிருந்து தாங்களாக சிறந்த முறையில் ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் அமைத்து, சிறந்த யந்திரங்களை அமைத்து, நல்ல முறையில் முன்னேற்றமடைந்திருக்கக்கூடிய நாடுகளினாலேயே முடியாது

[Sri R. Venkataraman] [15th March 1960

இருக்கும்போது, 10 ஆண்டுகளுக்குள் நம் நாடு—நம் ராஜ்யம்—அடைந்துவிடும் என்று எதிர்ப்பார்ப்பது அவ்வளவு சுலபமல்ல என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம் ராஜ்யத்தில் எந்த அளவுக்கு வேலை வாய்ப்பு வசதிகள் அதிகரித்திருக்கின்றன என்பதைக் குறித்து சில புள்ளிவிவரங்களைக் கூற முடியும். நம் ராஜ்யத்தின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் போடுகிற காலத்தில் நாம் ஒரு "காம்பொஸிட் ஸ்டேட்"-ஆக இருந்தோம். இவ்வாறு "காம்பொஸீட் ஸ்டேட்"-ஆக இருக்கும்போது முதலில் நம் ராஜ்யத்திற்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கிய தொகை ரூபாய் 173.6 லட்சம். இந்த 173 கோடி ரூபாயைப் பொதுத் துறையில் சர்க்கார் செலவழித்தால் சற்றேறக்குறைய 3,30,000 பேர்களுக்குப் புதிதாக பொதுத் துறையில்—சர்க்கார் துறையில்—வேலை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. கனம் அங்கத்தினர் ஒருவர்—கனம் சுப்பிரமணியம் என்று நினைக்கிறேன்—பேசும்போது கேட்டார்கள், "10 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்று முதலில் சொன்னீர்கள், இப்போது குறைவாகச் சொல்லுகிறீர்களே" என்று. சர்க்கார் துறையில்—பொதுத் துறையில்—ஒரு கால் மடங்கு வேலை கிடைத்தால், முக்கால் மடங்கு தனியார் துறையிலும் இதரத் துறைகளிலும் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று நம்முடைய நாட்டில் கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்த முறையில் பார்க்கும்போது "ரீ-ஆர்கனைஸ்ட் மெட்ராஸ் ஸ்டேட்"-ஐ எடுத்துக்கொண்டால் 152 கோடி ரூபாய் நம் ராஜ்யத்திற்குச் செலவாகும்போது 2,84,000 பேர்களுக்கு வேலை வசதிகள் நம் ராஜ்யத்தில் கிடைக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. சர்க்கார் துறையில்—அதாவது பொதுத் துறையில்—2,84,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இதை மூன்று மடங்காகப் பெருக்கினால், தனியார் துறையில் சற்றேறக்குறைய 7 அல்லது 7½ லட்சம் பேர்களுக்கு, ஆக மொத்தம் 10 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. நாம் நம்முடைய நாட்டில் இது வரையில் வேலை எவ்வளவு கிடைத்தது, வேலை வாய்ப்பு வசதிகள் எவ்வளவு கூடியிருக்கிறது என்பதற்கு புள்ளிவிவரங்கள் சேகரிக்கவில்லை. ஆனால் கடந்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளாக இதற்கான புள்ளிவிவரங்களைச் சேகரிக்கத் தொடங்கிவிட்டோம். அவ்வாறு சேகரித்ததில் இப்போது எம்ப்ளாய்மெண்ட் மார்க்கெட் இன்பர்மேஷன் என்று ஒரு புள்ளிவிவரம் சேகரித்திருப்பதில், அதன்படி 1959-ம் வருஷம் மார்ச் மாதம் 31-ம் தேதியில் இருந்த நிலையை நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். நடப்பு வருஷத்திற்கு இன்னும் புள்ளிவிவரம் தயாராகவில்லை என்ற காரணத்தினால் முடிந்த வருஷத்தினுடைய புள்ளிவிவரத்தைக் கொடுக்கிறேன். நம்முடைய ராஜ்யத்தில் இன்றைக்கு 2,150 ஸ்தாபனங்கள் பொதுத் துறையில் இருக்கின்றன. நான் சொல்வதெல்லாம் பொதுத் துறையைப் பற்றியது. அவற்றில் மத்திய சர்க்கார் ஊழியத்தில் நம்முடைய ராஜ்யத்தில் இருக்கக்கூடியவர்கள் 1,51,878; ராஜ்ய



15th March 1960] [Sri R. Venkataraman]

சர்க்கார் ஊழியத்தில் இருக்கக்கூடியவர்கள் 1,98,404; "க்வாஸி-கவர்ன்மெண்ட்" என்று சொல்லுகிற—சர்க்கார் பொறுப்பு ஓரளவுக்கு உள்ள ஸ்தாபனங்கள்—ஸ்தாபனங்களில் உள்ளவர்கள் 60,867 பேர்கள். ஸ்தல ஸ்தாபனங்களில் உள்ளவர்கள் 1,09,339. ஆக 1959-ம் வருஷம் மார்ச் மாத இறுதியில் நம் ராஜ்யத்தில் 5,20,458 பேர்கள் பொதுத் துறையில் வேலையில் இருக்கிறார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குமிடையில், இந்த மூன்று வருஷ காலத்தில் வேலை வாய்ப்பு எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்று கணக்குப் பார்த்தால் 45 சதவிகித அளவுக்கு 3 வருஷங்களில் உயர்ந்திருக்கிறது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இவ்வாறு பார்க்கும்போது பொதுத் துறையில் ஏறக்குறைய 3,65,000 பேர்கள் முதல் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் வேலையில் இருந்தது, இன்றைக்கு 5,20,000 பேர்கள் வேலையில் இருக்கிறார்கள்; ஆக 1,60,000 பேர்களுக்கு மேல் மூன்று வருஷங்களுக்குள் பொதுத் துறையில் வேலை அதிகமாகக் கிடைத்திருக்கிறது. பாக்கி இருக்கக்கூடிய இரண்டு வருஷங்களுக்கு இதே அடிப்படையில் கணக்குப் போட்டால் இன்னும் குறைந்த பட்சம் 1,00,000 பேர்களுக்கு அதிகமாக நாம் வேலை கொடுக்க முடியும்; ஆக நம்முடைய திட்ட அளவாகிய 2,56,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துவிடும் என்று நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போல தனியார் துறையில் எந்த அளவு வேலை வாய்ப்பு வசதிகள் கிடைத்திருக்கின்றன என்பதைப் பார்க்கும்போது, பொதுத் துறைக் கணக்கைப் போல் மூன்று மடங்கு என்று கணக்கிட்டிருப்பது ஓரளவுக்கு உண்மை என்று ஒரு ஜில்லாவை எடுத்துப் பரிசீலனை செய்ததில் தெரிகிறது. கோவை ஜில்லாவைப் பொறுத்த அளவில் "எம்ப்ளாய்மெண்ட் மார்க்கெட் இன்பர்மேஷன்" தயாரிக்கப்பட்டிருக்கிறது. பொதுத் துறையில் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள், தனியார் துறையில் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கிட்டதில் 1959-ம் வருஷம் ஜூன் மாதம் 30-ம் தேதி பொதுத் துறையில் வேலையிலுள்ளவர்கள் 43,075 பேர்கள், தனியார் துறையில் வேலையிலுள்ளவர்கள் 1,23,686 பேர்கள். ஆகவே, அந்த அளவுக்கு மற்ற இடங்களிலும் சராசரியாக உயர்வு ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் நாம் இன்றைக்கு எதிர்பார்த்த அளவுக்கு 6 லட்சத்துச் சில்லரை—அதாவது 7 லட்சம்—பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்று நாம் கண்டுகொள்ள முடியும். (குறுக்கீடு) கனம் அங்கத்தினர் அவர்கள் தஞ்சை ஜில்லாவின் கணக்கைப் பார்த்தால் குறைவாக இருக்கும் என்று சொல்லுகிறார்கள். நான் சொல்லுகிறேன் சென்னையின் கணக்கை எடுத்துப் பார்த்தால் அதிகமாக இருக்கும் என்று. நாம் எப்போதும் சராசரியாகத் தான் பேசவேண்டுமே தவிர, எங்கள் கிராமத்தில் வேலை கிடைக்கவில்லை என்று சொல்வதெல்லாம் பொருத்தமல்ல என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, சபையின் முன்னால் ராஜ்யத்தில் இருக்கக்கூடிய வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்து விட்டேன் என்று சொல்ல முடியாது—அவ்வாறு நான் சொல்லவில்லை. ஆனால் வேலை வாய்ப்பு வசதிகள் அதிகரித்திருக்கின்றன, வேண்டிய முயற்சிகளெல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன, எந்த அளவுக்கு திட்டமிட்டோமோ அந்த அளவுக்கு வெற்றி அடைந்து கொண்டிருக்கிறோம், திட்டமெல்லாம் செவ்வனே நடந்து வருவதன் காரணமாக எதிர் நோக்கியவைகளெல்லாம் கைகூடாக வந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நேரத்தில், தொழிலாளர்கள் சம்பந்தமாக ஒன்றிரண்டு பிரச்னைகள் அங்கத்தினர்கள் குறிப்பிட்டதைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். உதாரணமாக டெக்ஸ்டைல் வேஜ் போர்டைப் பற்றி கனம் அங்கத்தினர் பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் சில அபிப்பிராயங்களைக் கூறினார்கள். சர்க்கார் இந்த விஷயத்தில் ஒன்றும் செய்யவில்லை என்று ஓரளவுக்கு குற்றச்சாட்டாகக் கூடச் சொன்னார்கள். ஒரு வேஜ் போர்டு நியமித்து, அதனுடைய ரிப்போர்ட் கிடைத்தவுடனேயே சர்க்கார் எதுவும் செய்ய முடியாது. ரிப்போர்ட் கிடைத்தவுடன் தொழிலாளர்கள் என்ன சொல்லுகிறார்கள், முதலாளிகள் என்ன சொல்லுகிறார்கள் என்று பார்த்து, அவர்களுக்குள் ஏதாவது சமரச ஏற்பாடு ஏற்பட்டு விட்டால் சர்க்கார் தலையீடு ஏதும் இல்லாமல்—ஒரு குடும்ப விவகாரத்தைத் தாங்களே தீர்த்துக்கொண்ட மாதிரி—தீர்க்கப் பட்டுவிட்டால் நல்லது என்பது சர்க்காருடைய கருத்து. அப்படி அது தீரவில்லையென்றால் அதற்கான ஒரு மாநாட்டை ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் கூட்டுவது என்று யோசனை செய்திருக்கிறோம். 10.30 a.m. இரு தரப்பாரையும் கேட்டு அவர்கள் இது சம்பந்தமாக என்ன தெரிவிக்கிறார்கள் என்பதை அறிவதற்காக ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் ஒரு மாநாடு கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சர்மா நகர், திரு.வி.க. நகர் ஆகிய இடங்களில் இருக்கும் குறைகளைப்பற்றி சில கனம் அங்கத்தினர்கள் பேசினார்கள். புதிதாக எந்த இடத்தில் காலனி அமைத்தாலும் அதற்கு தண்ணீர் வசதி அளிப்பதில் கஷ்டம் ஏற்படுகிறது. அதற்கு காலாகாலத்தில் எல்லா வசதிகளும் வருவது கஷ்டமாக இருக்கிறது. நாம் "டெவலெப்ட் ஏரியா"—வை எடுத்து அங்கே வீடுகளைக் கட்டுவதில்லை. வயல்களை எடுத்து அங்கே வீடுகளைக் கட்டினோம். அதன் காரணமாக அங்கே சில குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், அங்குள்ளவர்கள் இதற்கு முன்னால் எங்கே இருந்தார்கள், அங்கே அவர்களுக்கு தண்ணீர் வசதி எந்த அளவுக்கு இருந்தது, அங்கே அவர்கள் எவ்வளவு சுகாதார வசதிகளுடன் இருந்தார்கள் என்பதையெல்லாம் பார்த்து அதை அவர்களுடைய இப்போதைய வசதிகளுடன் ஒப்பிட்டுப்பார்த்தால், சர்க்கார் செய்தது தவறில்லை என்பது நிச்சயமாகத் தெரியும். அவ்வாறு அவர்களுடைய முந்திய நிலைமையை இப்போதைய நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் சர்க்கார் செய்த காரியத்தால் அவர்கள் ஓரளவு நன்மையடைந்திருக்கிறார்கள் என்பது நிச்சயமாகத் தெரியும். அவர்கள்



மூன்று ரூபாய் கொடுப்பதுபற்றி கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். நான் அங்கே சென்றிருக்கிறேன். எனக்கு அந்தத் தொழிலாளர்களுடன் அதிகமான பழக்கம் உண்டு. அவர்கள் "நாங்கள் முன்பு இருந்த இடங்களில் ஒரு வீட்டில் எட்டுக் குடித்தனங்கள் இருக்கும். ஒவ்வொரு குடித்தனக்காரரும் 12 ரூபாய் வீதம் பணம் கொடுத்து, ஒரு பானைத் தண்ணீருக்கு மண்டையை உடைத்துக்கொண்டிருந்தோம். இப்போது அவ்வளவு கஷ்டப் படவில்லை . எங்களுக்கு அந்த அளவுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது" என்று எனக்குப் பத்திரம் வாசித்துக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இன்னும் அதிகமான வசதிகள் செய்வதற்கு சர்க்கார் முயற்சி செய்து வருகிறது. எனவே சர்க்கார் செய்த காரியம் தவறு என்று சொல்வது பொருந்தமில்லை.

தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதை எடுத்துக் கொண்டால், "ஸப்ஸிடைஸ்ட் இண்டஸ்ட்ரியல் ஹௌஸிங்" திட்டத்தின் மூலம் தொழிலாளர்களுக்கு நான்கு வருஷங்களில் 1,738 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வருஷம் 160 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அடுத்த வருஷத்தில் 1,350 வீடுகள் கட்டத் திட்டமிட்டிருக்கிறார்கள். அவையெல்லாம் அடுத்த வருஷத்திலேயே கட்டி முடிக்கப்பட்டுவிடும் என்று சொல்வதற்கில்லை. முதல் ஐந்தாண்டுத் திட்ட இறுதி ஆண்டில் கட்டப்பட வேண்டிய 200, 300 வீடுகள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்ப வருஷத்தில் கட்டப்பட்டதுபோல, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் கட்டப்பட வேண்டிய வீடுகளில் சில மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட ஆரம்ப வருஷத்தில் கட்டி முடிக்கப்படக்கூடும். தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதில் நாம் எந்த அளவிற்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுவதற்காக இந்தப் புள்ளிவிவரங்களைத் தெரிவித்தேன்.

குறைந்த வருமானக்காரர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதைப் பொறுத்த வரையிலும், இந்த நான்கு வருட காலத்தில் 1,553 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. 846 வீடுகள் இப்போது பாதி கட்டத்தில் இருக்கின்றன. அடுத்த வருஷத்தில் 693 வீடுகள் கட்டத் திட்டமிட்டிருக்கிறோம்.

கைத்தறி நெசவாளர்களுக்கென வீடுகள் கட்டித் தருவதை எடுத்துக்கொண்டால், இந்த நான்கு வருஷ காலத்தில் 946 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 518 வீடுகள் இப்போது பல கட்டங்களில் இருக்கின்றன. அடுத்த வருஷத்தில் பாக்கி கட்டவேண்டிய வீடுகள் 350.

அரசாங்கம் சென்னை நகரத்தில் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருப்பதை உணர்ந்து, சென்னை நகரத்திற்குப் பக்கத்தில் "ஸாடிலைட் டவுன்ஸை—புதிய நகர்களை—அமைக்கவேண்டுமென்று உத்தேசித்து, மேற்கு சென்னை என்ற புதிய ஊரை அமைக்கத்

[Sri R. Venkataraman] [15th March 1960

திட்டமிட்டிருக்கிறது. பல வருஷங்களுக்கு முன்பு தியாகராயநகர் எவ்வாறு அமைக்கப்பட்டதோ அவ்வாறே வெஸ்ட் மெட்ராஸ் என்ற நகரை அமைப்பதற்கு ஆயிரம் ஏக்கர்கள் கொண்ட ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதற்கான நில ஆர்ஜிதம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோல, வட சென்னையில் வியாசர்பாடியில் ஒரு திட்டத்தை நிறைவேற்று வதற்காக அங்கே ஆயிரம் ஏக்கர்களை வாங்க ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது. இவ்விரண்டு திட்டங்களின் செலவு சற்றேறக் குறைய 5 கோடி ரூபாய் ஆகும். நான் இதுவரை கூறிய விவரங்களைப் பார்த்தால், வீடுகளை அதிகப்படுத்துவதற்கும், மனைகளை மக்களுக்கு அதிகமாக வழங்குவதற்கும் நாம் செய்து வரும் சாதனை மற்ற அளவைவிட ஓரளவு அதிகமாகவே இருப்பது தெரியும் என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தொழிற்சாலைகளைப்பற்றியும் தொழில்களைப் பற்றியும் பல கருத்துக்கள் சொல்லப்பட்டன. தொழிலைப்பற்றிப் பேசியபோது தொழில் துறையில் கொள்கை அடிப்படையில் சில குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டன. உதாரணமாக, ஸ்ரீ சின்னதுரை, இந்த பட்ஜெட் உரை சுதந்திராக் கட்சியின் உரையைப் போல இருக்கிறது என்று சொன்னார். மற்றொரு கனம் அங்கத்தினர், இந்தக் காங்கிரஸ் நிர்வாகம் பொது உடைமைக்காரர்கள் நிர்வாகம் போல இருக்கிறது என்று குற்றம் சாட்டினார். இந்த பட்ஜெட் எந்தக் கட்சியின பட்ஜெட்டைப் போல இருக்கிறது என்று கனம் அங்கத்தினர் சொல்கிறாரோ அந்தக் கட்சி அந்தக் கருத்தை ஒப்புக்கொள்கிறதா? இல்லை. இது பொது உடைமை கட்சி பட்ஜெட்டாக இருக்கிறது என்று அந்தக் கட்சியினர் சொல்கிறார்கள். நான் ஒரு சிறு கதை சொன்னால் கனம் அங்கத்தினர்கள் கோபித்துக்கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஆறு குருடர்கள் சேர்ந்து ஒரு யானையைப் போய்ப் பார்த்தார்களாம். (சிரிப்பு.) நான் அதற்கு மேல் அந்தக் கதையைச் சொல்லவில்லை. அவர்களைப் போல அவரவர்கள் கைக்கு எது எது அகப்பட்டு அது எப்படி எப்படித் தோன்றுகிறதோ அப்படி இருக்கிறது இந்த பட்ஜெட் என்று அவரவர்கள் சொல்கிறார்கள். கனம் அங்கத்தினர் ஸ்ரீ சின்னதுரை, எல்லாக் காரியங்களையும் ஏன் சர்க்கார் துறையில் செய்யவில்லை, சர்க்கார் அவ்வாறு செய்யாததால் இது யானையின் காலைப் போல இருக்கிறது, மரத்தைப் போல இருக்கிறது என்று சொன்னார். நாம் என்ன லட்சியத்தை வகுத்துக்கொண்டிருக்கிறோம், எந்தக் கண்ணோட்டத்துடன் நாம் அந்த லட்சியத்தை வகுத்துக்கொண்டிருக்கிறோம் என்று பார்க்க வேண்டும். அந்த லட்சியத்திற்குரிய கொள்கையை நாம் வகுத்துக்கொண்டிருக்கிறோம். இப்போது நாம் செய்துவரும் காரியங்களை மாற்றியமைத்தால், அதனால் லட்சியத்தைப் பொறுத்தவரையில் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதைப் பார்க்க வேண்டும். ஸ்ரீ கல்யாணசுந்தரம் அவர்களும், ஸ்ரீ சின்னதுரை



15th March 1960] [Sri R. Venkataraman]

அவர்களும் சொன்ன ஒரு கருத்தை நான் மனப்பூர்வமாக ஒத்துக்கொள்கிறேன். இந்த சர்க்கார் கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளில் தனியார் துறைக்கு அதிகமாக ஆக்கமும் ஊக்கமும் அளித்திருக்கிறது என்பதில் சற்றும் சந்தேகம் இல்லை. அவ்வாறு செய்ய வேண்டிய காரணம் என்ன என்பதைச் சற்று சிந்திக்க வேண்டுகிறேன். தாரங்கதரா கெமிகல் கம்பெனிக்கு 10 லட்ச ரூபாய் மூலதனம் கொடுத்திருக்கிறோம். 'மெட்ராஸ் சிமெண்ட்ஸ்'-க்கு 10 லட்ச ரூபாய் மூலதனம் கொடுத்திருக்கிறோம். 'ஸௌத் இண்டியா பிஸ்கட்ஸ்'-க்கு 10 லட்ச ரூபாய் மூலதனம் கொடுத்திருக்கிறோம். 'ஸதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ்'-க்கு 2 லட்ச ரூபாய் மூலதனம் கொடுத்திருக்கிறோம். ஆக மொத்தம் நாம் தனியாருக்கு 40, 50 லட்ச ரூபாய் கொடுத்திருக்கிறோம். இவ்வாறு நாம் பணம் கொடுத்ததன் விளைவாக அவை ஒவ்வொன்றும் 1½ கோடி ரூபாய் அளவில் தொழிற்சாலைகள் அமைக்கின்றன. ஆக, நம் ராஜ்யத்தில் மொத்தத்தில் 7, 7½ கோடி ரூபாய் மதிப்புக்கு தொழில் வளம் ஏற்படச் செய்வதற்காக நாம் 50 லட்ச ரூபாய் கொடுத்திருக்கிறோம். சர்க்காரே எல்லாத் தொழில்களையும் நடத்த வேண்டுமானால், 50 லட்ச ரூபாயில் அரை பாக்டரியைக்கூட அமைக்க முடியாது; கால், அரைக்கால் பேருக்குக்கூட வேலை கொடுக்க முடியாது. நாம் தனியார் துறைக்கு இவ்வாறு ஆக்கமளித்ததன் விளைவாக, இந்த ஏழு தொழிற்சாலைகளின் மூலம் 17,000 பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, 50 லட்ச ரூபாய் முதலில் 17,000 பேருக்கு வேலை வாய்ப்பு உண்டுபண்ணுவது நல்ல திட்டமா, அல்லது 50 லட்ச ரூபாய் செலவில் சர்க்காரே தொழிற்சாலை வைத்து ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுப்பது நல்ல திட்டமா என்ற கேள்விக்கு மக்களே தீர்ப்புச் சொல்வார்கள்.

SRI P. S. CHINNADURAI: தொழிற்சாலைகளை சர்க்காரே அமைத்து நடத்துவதற்கு, வேண்டிய மூலதனத்தை சர்க்கார் திரட்டக்கூடாது என்று நாங்கள் சொல்லவில்லையே! சர்க்கார் அவ்வாறு செய்யக்கூடாது என்று யார் தடுக்கிறார்கள்?

THE HON. SRI R. VENKATARAMAN: மூலதனத்தை சர்க்கார் திரட்ட வேண்டுமானால், அதற்கு இரண்டு வகைகள் இருக்கின்றன. ஒன்று வரி. மற்றொன்று கடன். கடன் வாங்க வேண்டுமென்றால், அதற்கும் எல்லை இருக்கிறது. வரி விதிக்க வேண்டும் என்றால், அதற்கும் எல்லை இருக்கிறது. சர்க்கார் ஒரு வருஷத்திற்குள் 14 அல்லது 10 கோடி ரூபாய் அளவுக்கு வரியோ கடனோ வாங்கினால், மற்றக் காரியங்களைச் செய்வதற்கு என்ன பண்ணுவது? மற்றத் துறைகளில் செய்யவேண்டிய காரியங்களுக்காகவும் சர்க்கார் தனியாரிடமிருந்து பணம் வசூலிக்க வேண்டியிருக்கிறதே! ஒரு வருஷத்தில் தொழில்களுக்காக அவ்வளவு ரூபாய் கடன் வாங்கினால் அந்தக் காரியங்களெல்லாம் தயங்கிவிடாதா? எப்போதும், நாம் என்ன நினைக்கிறோம்? நமக்கு வேண்டிய காரியங்களுக்கு மட்டும் பணம் கிடைத்தால் போதும் என்று நினைக்கிறோம். ஆனால் சர்க்கார் பல துறைகளில் பல காரியங்கள்

செய்ய வேண்டியிருக்கிறது. சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அவைகளை நிறைவேற்றவும் தனியாகக் கடனும் வரியும் வாங்க வேண்டியிருக்கிறது. இவ்வாறு ஒவ்வொன்றாகப் பார்த்தால், தொழில்களுக்காக மாத்திரம் சர்க்கார் 14, 15 கோடி ரூபாயை மக்களிடமிருந்து வாங்கிவிட்டால் மற்றத் துறைகளில் ஆக்கம் இல்லாமல் போய்விடும் என்பது தெரியும். ஆகவேதான், தனியார் சுதந்திரமாக அவரவர்கள் தொழில்களை நடத்தலாம் என்ற கொள்கையை சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை; அதே சமயத்தில், சர்க்காரே எல்லாத் தொழில்களையும் நடத்தலாம் என்ற கொள்கையையும் சர்க்கார் ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குக் காரணம், அதிகமாகப் பின்தங்கியுள்ள நாடுகள் இன்று கலப்புப் பொருளாதார சமூக அமைப்பு முறையில்தான் தொழில்வளம், வேலை வாய்ப்புகள் முதலியவை பெறமுடியும் என்ற கருத்திற்கிணங்க நாம் நமது கொள்கையை வகுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, இதை கனம் அங்கத்தினர்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். சர்க்காருக்கு இருக்கக்கூடிய நிதி வசதியை எவ்வளவு அதிகமாகப் பல பேருக்கு விநியோகம் பண்ணிக் கொடுப்பதன் மூலமாக பெரிய அளவுக்குத் தொழில்களை ஏற்படுத்த முடியுமோ அந்த அளவக்கு நம்முடைய ராஜ்யத்தில் வேலை வாய்ப்பு வசதிகளும் அதிகரிக்கும். இந்த நோக்கத்துடன்தான் சர்க்கார் இந்த முறையைக் கையாள்கிறது.

கனம் சின்னதுரை அவர்கள் இங்கு வந்து உட்கார்ந்து அவருடைய திட்டத்தை நிறைவேற்றலாம். இப்போது நாங்கள் செய்கின்ற இந்த முறை, மக்கள் அவர்களுக்கு வோட்டு அளித்து இங்கு உட்கார வைக்கின்றபோது மிக்க உதவியாக இருக்குமென்று நினைக்கிறேன். நாங்கள் ஏராளமாக தொழில்களைத் தனியார் துறையில் வளர்த்துக் கொடுத்துவிட்டால் மக்கள் சோஷலிஸ்ட் கட்சியை அதிகாரத்தில் வைக்கின்றபோது அவர்கள் பல தொழில்களை சர்க்கார் வசமாக்க முடியும். நாங்களே மிகக் குறைந்த அளவில் தொழில்களை ஆரம்பித்தால் அவர்கள் வந்தால் அப்போது ஒன்றும் செய்ய முடியாது. தொழில் வளம் பெருக தனியார் துறையை ஊக்குவிக்கும் திட்டம் இன்று வெற்றிகரமாக நடந்து வருகிறது.

கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் தனியார் கம்பெனியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏன் பேப்பர் கம்பெனிக்கு ஒரு கோடி ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். சென்னை ராஜ்யம் தோன்றிய நாளில் இருந்து இன்று வரையில் 5 கோடி ரூபாய் வரையில் மூலதனம் போட்டு ஒரு பெரிய தொழிலை அமைக்க யாரும் முன்வரவில்லை. (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம்: சர்க்கார் கொடுத்தால் முன் வருகிறார்கள். பொதுப் பணந்தானே.) இப்போது கனம் அங்கத்தினர் அவர்கள் ஏன் சர்க்கார் கொடுக்கவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் சர்க்கார் கொடுத்தால் முன் வருகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். சர்க்கார் கொடுத்திருக்கிறார்கள்.



ஆகவே, அவர்கள் தொழிலை ஆரம்பிக்க முன் வந்திருக்கிறார்கள். இதில் கோபம் என்? ஐந்து கோடி ரூபாய் போட்டு பெரிய தொழிற்சாலை அமைக்க நம்முடைய ராஜ்யத்தில் முன் வரக்கூடியவர்கள் யாரும் கிடையாது. இன்னும் 10, 12 கோடி ரூபாய் வரை போட்டு மற்றொரு தொழிற்சாலை ஏற்படுத்தவும் முயற்சி செய்யப் பட்டு வருகிறது. அதற்கு சர்க்கார் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் கொடுக்க யோசனை செய்து கொண்டிருக்கிறது. இந்த அளவுக்கு, 10, 12 கோடி ரூபாய் போட்டு பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தி வளர்கிறோமோ அந்த அளவுக்கு நேரடியான வேலை வாய்ப்பும், அதிலிருந்து பல உப தொழில்களை ஏற்படுத்தவும் வழி ஏற்படுகிறது. இந்த முறையிலே சிறிய அளவு உதவித் தொகையாகக் கொடுத்து பல பெரிய தொழில்களை நம்முடைய ராஜ்யத்தில் வளரச் செய்கிறோம். இதற்காக சர்க்கார் எவ்வளவு தூரம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியாது. எத்தனையோ நாட்களாக ஸ்டேட் டெவலப்மெண்ட் அட்வைசரி கமிட்டி, யாராவது காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்த முன்வரவேண்டுமென்று கேட்டு, இங்கிருக்கும் மூலப் பொருள்கள் போதாத காரணத்தினால் சென்னை ராஜ்யத்தில் காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்க முடியாது என்று அபிப்பிராயம் மாறி, இன்று அமெரிக்காவில் இருந்து நிபுணர்கள் வந்து இங்கிருக்கும் குறைந்த பட்ச மூங்கிலையும், சக்கையையும் (பகாஸ்) சேர்த்து காகிதம் செய்ய முடியும் என்று புதிதாக ஒரு திட்டம் வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். நமது ராஜ்யம் அவர்களுக்கு என்றும் கடமைப் பட்டிருக்கிறது என்று கூற விரும்புகிறேன். இதனால் நஷ்டம் வந்து விட்டது என்று யாரும் சொல்ல முடியாது. இரண்டு கோடி ரூபாய் அளவுக்கு எக்ஸ்போர்ட்-இம்போர்ட் பாங்கானது, "இந்தத் திட்டம் சரியாக இருக்கிறது, பணம் போடுகிறேன்" என்று முன் வந்தால், அது சரியா இல்லையா என்று வெங்கட்ராமன் ஆராய்ந்து பார்த்தாரா என்று சொல்ல முடியாது. இது போன்ற பெரிய தொழில்களை ஆரம்பிக்க வெளி நாட்டு நிபுணர்கள் முதலீடு செய்ய வரும்போது அரசாங்கமும் ஒரு கோடி ரூபாய் அளவில் பணம் கொடுக்க முன் வந்தது.

SRI M. KALYANASUNDARAM: திரு. வெங்கட்ராமன் அவர்கள் ஒரு கோடி ரூபாய் கொடுக்க இசைந்த பிறகு அவர்கள் பணம் போட முன் வந்தார்களா? அல்லது அவர்கள் கொடுக்க முன் வந்த பிறகு வெங்கட்ராமன் அவர்கள் கொடுக்க இசைந்தார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN: அவர்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்கள். அதன் பிறகுதான் நாங்கள் முன் வந்தோம். இந்த மாதிரித் தொழிலை ஆரம்பிக்க முடியுமா முடியாதா என்று சந்தேகம் ஒரு சமயம் இருந்தது. இப்போது முடியும் என்று தெரிந்து எவ்வளவு செலவாகும் என்று கணக்கிடப்பட்டது. ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று தெரிந்தது. வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிதி

[Sri R. Venkataraman] [15th March 1960

எவ்வளவு, உள்நாட்டில் எவ்வளவு சேகரிக்க முடியும், என்ற பிரச்னை எழுந்தது. உள்நாட்டில் சேகரிக்க முடியாது என்ற நிலைமை ஏற்பட்டது. ஆகவே, அந்தத் தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்பதற்காக சர்க்கார் இதைக் கொடுக்க முன் வந்திருக்கிறது. இந்தக் கொள்கையை ஒப்புக் கொள்ளும்படி கனம் அங்கத்தினர்களை கேட்டுக்கொள்ளுகிறேன். வெட்டுப் பிரேரணை கொடுத்து எத்தனை பேர் இதற்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லையென்று சொன்னால், அலுமினியம் தொழிற்சாலையை நாம் வைக்க முடியாது. 10, 12 கோடி ரூபாய்க்கு மேல் போட்டு ஆரம்பிக்க வேண்டிய பல்வேறு தொழில்களை இந்த சட்டசபையை மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்—இந்தக் கொள்கையில் சர்க்காருக்கு ஓரளவுக்கு ஆதரவு கொடுத்து மேலும் மேலும் பல பெரிய தொழில்கள் நம்முடைய ராஜ்யத்தில் வளர வழிசெய்ய வேண்டுமென்று. இந்தக் கொள்கைக்கு மக்கள் ஆதரவு கொடுக்கிறார்களா, இந்த சட்டசபை ஆதரவு கொடுக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். நிச்சயமாக நம்முடைய ராஜ்யத்தில் தொழில் வளரவேண்டும் என்று சொன்னால், இந்த மாதிரி முதலீடுகள் கொடுப்பது அவசியமாகிறது. ஆகவே, இந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

SRI C. N. ANNADURAI: ஏறக்குறைய 4 கோடி ரூபாய் வேறு வகைகளிலே கிடைப்பதன் மூலம் சேஷசாயி கம்பெனியார் 5 கோடி ரூபாய் மூலதனம் உள்ள காகிதத் தொழிலை ஆரம்பித்திருக்கிறார்கள். அது தவிர வேறு வழியில்லை என்று சொல்லுகிற சர்க்கார் சேஷசாயி கம்பெனியாருக்கு ஒரு கோடி ரூபாய் கொடுப்பதற்குப் பதிலாக அதே முறையைக் கையாண்டு இந்தக் காகிதத் தொழிற்சாலையை ஏன் ஆரம்பிக்கக் கூடாது?

THE HON. SRI R. VENKATARAMAN: சர்க்கார் ஒரு கோடி ரூபாய் கொடுப்பதற்குப் பதிலாக எக்ஸ்போர்ட்-இம்போர்ட் பாங்கில் இருந்து வாங்கமுடியாது. ஆகவே, 5 கோடி ரூபாய், 10 கோடி ரூபாய் மூலதனம் போட்டு தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்றால் . . .

SRI C. N. ANNADURAI: அமைச்சர் அவர்களிடம் தெரிந்து கொள்ள விரும்பியது, சேஷசாயி கம்பெனியார் எந்த முறையைக் கையாண்டு 4 கோடி ரூபாய் பெற்றார்களோ, அந்த முறையைச் சர்க்கார் கையாண்டு தொழிற்சாலையை ஏற்படுத்துவதில் என்ன தடை இருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினர் அவர்களுக்கு ஒரு விஷயத்தைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். எக்ஸ்போர்ட்-இம்போர்ட் பாங்கிலிருந்து சர்க்காருக்குப் பணம் கொடுக்க மாட்டார்கள். எக்ஸ்போர்ட்-இம்போர்ட் பாங்கில் இருந்து 2 கோடி ரூபாய் எனக்குக் கொடுப்பதாய் இருந்தால் 4 கோடி ரூபாய் வேறு யாராவது கொடுப்பதாய் இருக்கவேண்டும். தனியாருக்குத்தான் அங்கிருந்து பணம் கிடைக்குமே தவிர சர்க்காருக்குத் தரமாட்டார்கள்.



15th March 1960] [Sri R. Venkataraman]

SRI C. N. ANNADURAI: எக்ஸ்போர்ட்-இம்போர்ட் பாங்க் தனியாருக்குத் தருவார்கள், சர்க்காருக்குத் தரமாட்டார்கள். நான் சொன்னது, சேஷசாயி கம்பெனியார் எந்தெந்த முறையைக் கையாண்டார்களோ அந்த முறையில் எக்ஸ்போர்ட்-இம்போர்ட் பாங்கில் இருந்து சர்க்காருக்குத் தரமாட்டார்கள் என்றாலும், சர்க்கார் என்ற முறையில் வேறு நாடுகளில் இருக்கும் சர்க்காரிடம் இருந்து கடன் தொகை பெற்று ஏன் இந்தத் தொழிலை ஆரம்பித்திருக்கக் கூடாது?

THE HON. SRI R. VENKATARAMAN: சர்க்கார் உத்தரவாதம் கொடுக்காவிட்டால் ஒருவரும் முன்வர மாட்டார்கள். இரண்டு கோடி ரூபாய் வேறு சர்க்காரிடமிருந்து வாங்கவேண்டுமென்றால் ஏற்கனவே வேறு பல தொழில்களை நடத்துவதற்காக ஏராளமாக வெளிநாடுகளில் இருந்து வாங்கிக்கொண்டிருக்கும்போது, அந்தத் தொழில்களில் ஒருசில பாதிக்கப்படும். இந்தத் தொழிலை அவ்வாறு கடன் வாங்கிய தொகையில் இருந்து ஆரம்பிக்க வேண்டுமென்றால் அவ்வாறு வேறு தொழில்களுக்காக வாங்கிய ரூபாய் குறைந்துவிடும். வெளிநாடுகளில் இருநது 100 கோடி ரூபாய் கடன் கிடைக்கிறது என்று வைத்துக் கொள்ளுவோம். அதைப் பல துறைகளில் செலவழிக்க இருக்கிறோம். உதாரணமாக, கச்சா பிலிம் தொழிற்சாலை வைக்கப் போகிறோம். அடுத்தபடியாக கிண்டியில் சர்ஜிகல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் தொழிற்சாலை வைக்கப் போகிறோம். வெளிநாட்டு உதவியுடன் இவைகளை வைக்கப் போகிறோம். ஒரு பெரிய "ப்ரோடா டைப்" தொழிலை பிரஞ்சு உதவியுடன் வைக்கப் போகிறோம். இவைகள் எல்லாம் அந்த 100 கோடி ரூபாயில் வருகிறது. பேப்பர் தொழிற்சாலைக்கு 2 கோடி ரூபாய் ஒதுக்குவதாகச் சொன்னால் அது 98 கோடி ரூபாயாகக் குறைந்துவிடும்.

SRI C. N. ANNADURAI: வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் கடன் தொகை வேறு வழிகளில் பயன்படுவதாகவும், இதற்குப் போவது சரியாக இருக்காது என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்தத் தொழிலை சர்க்காரே ஏற்றுக் கொண்டு நடத்த ஏன் பொதுமக்களிடம் இருந்து பங்கு பெற்றிருக்கக் கூடாது?

THE HON. SRI R. VENKATARAMAN: அதுதான் ஆரம்பத்திலேயே சொன்னேன்—ஒரு எல்லை தான் இருக்கிறது என்று. சென்னை ராஜ்யத்திலே கடன் எழுப்பவேண்டுமென்று சொன்னால்

[Sri R. Venkataraman] [15th March 1960

பத்து கோடி ரூபாய் எழுப்பலாம். வரிகள் போடவேண்டுமென்றாலும், சற்றேறக்குறைய கடன் எழுப்புகிற அளவுக்குத் தான் போடலாம்.

SRI P. S. CHINNADURAI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சரிடமிருந்து ஒரு விளக்கம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன் அதாவது . . .

DEPUTY SPEAKER : The hon. Member should not interrupt too much.

SRI P. S. CHINNADURAI : I am not interrupting too much, Sir. I only want some clarification from the Hon. Minister. Because, he has not understood what the Members have said here.

DEPUTY SPEAKER : The Members could express their views when the relevant demands come up before the House for discussion.

SRI P. S. CHINNADURAI rose—

DEPUTY SPEAKER : I hope the hon. Member will resume his seat.

SRI P. S. CHINNADURAI : I am only seeking the Chair's permission to get some clarification.

DEPUTY SPEAKER : I have not given permission to the hon. Member. The hon. Member should not rise too often.

THE HON. SRI R. VENKATARAMAN : கடன் என்று சொன்னாலும், பங்கு என்று சொன்னாலும் 'க்ரெடிட்' தான். இந்த ராஜ்யத்திலே எவ்வளவு 'க்ரெடிட்' கிடைக்குமோ அந்த 'க்ரெடிட்' தான் கிடைக்கும். அதைக் கடனாகவும் வாங்கலாம்; பங்காகவும் வாங்கலாம். கனம் அங்கத்தினர்கள் பொதுவாக என்ன நினைக்கிறார்கள் என்றால், பங்கு என்று சொன்னால், அது ஒரு இடத்திலிருந்து வரும்; கடன் என்று சொன்னால், அது வேறு இடத்திலிருந்து வரும் என்று நினைக்கிறார்கள். அப்படி அல்ல, இந்த ராஜ்யத்தினுடைய க்ரெடிட் லிமிட் என்னவோ அந்த க்ரெடிட் லிமிட்டுக்குத்தான் எந்தத் துறையிலிருந்தும் வரமுடியும்.

SRI M. KALYANASUNDARAM : கடனாக சர்க்கார் கொடுப்பார்களானால் நிச்சயமாக அந்தப் பணத்திற்கு உத்தரவாதம் இருக்கும். சுதர்சனம் ஆயில் மில்லுக்குப் பத்து லட்சம் ரூபாய் கடன் கொடுத்தால், இயந்திரமாவது மிச்சம் இருக்கும். அது ஆறு லட்சம் ரூபாய்க்காவது தேறும். அப்படி இல்லாமல் ஒரு கோடி ரூபாய் 'ஈக்விடி ஷேர்' ஆகப் போட்டிருக்கிறோம். பத்து ரூபாய் பங்கு 4½ ரூபாய்க்கு குறைந்து நாம் நஷ்டம் அடையவேண்டியிருக்கிறது. கடனாகக் கொடுத்திருந்தால் பொருளாவது மிச்சம் இருக்கும்.



15th March 1960]

THE HON. SRI C. SUBRAMANIAM : 4½ ரூபாய் எங்கே ஆகியிருக்கிறது ?

SRI M. KALYANASUNDARAM : அப்பேர்ப்பட்ட கம்பெனியினிடத்திலே ஒரு கோடி ரூபாய் வரை 'ஈக்விடி ஷேர்' ஆக கொடுக்கப்பட்டதால் ஏற்படக்கூடிய பலனை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம அங்கத்தினர் சொல்வதை இன்னும் நன்றாகக் கூர்ந்து கவனிக்கவேண்டும். காரணம் என்னவென்றால், சர்க்காரே தொழிலில் ஈடுபடவேண்டுமென்றால் லாப நஷ்டம் நிச்சயமாக வரும். சர்க்கார் தொழிலை எடுத்துக்கொண்டு அதில் லாபமே தான் வரவேண்டுமென்றால, சர்க்கார் தொழிலிலே ஈடுபடவே முடியாது.

SRI M. KALYANASUNDARAM : சர்க்கார் எடுத்து நஷ்டம் வந்தாலும் வரட்டும்.

THE HON. SRI R. VENKATARAMAN : இன்றைக்கு தொழில் நடத்துவதிலோ, ஏதோ லாபம் வந்தால்தான் சர்க்கார் தொழிலை நடத்தவேண்டும், லாபம் வராவிட்டால் சர்க்கார் தொழில் நடத்தக் கூடாது, உடனே சர்க்காரைக குறை சொல்லவேண்டியது என்று அந்தக் கொள்கையைத்தான் சட்டசபை ஏற்றுக்கொள்ளுகிறது என்றால், சர்க்கார் தொழிலே செய்யமாட்டார்கள். அமமாதிரி கடந்த காலத்திலே நடநதுவிட்டது. இன்றைக்கும் தைரியமாக, ஓரளவு இதனால் பொதுமக்களிடமிருந்து கிடைக்கக்கூடிய கட்டணத்தைக்கூட பொருட்படுத்தாமல் தொழில்களை ஏற்று நடத்துவோம் என்று சர்க்கார் முன்வந்திருக்கிறது. 'க்ரிடிஸிஸம்' இருந்தாலும், அதை எதிர்நோக்கி நிற்போம் என்று முன்வந்திருக்கிறதென்றால், ராஜ்யத்திலே தொழில் வளத்தைப் பெருக்குவதற்காகத்தான். அவ்வாறு செய்தாலல்லாமல் இன்றைக்குத் தொழில் வளம் பெருக முடியாது; வேலையில்லாத் திண்டாட்டம் போகவேண்டும், வேலை வாய்ப்பு வசதிகள் பெருக வேண்டும் என்று ஒரு புறம் கூறி, மற்றொரு புறத்திலே எது லாபகரமாக இருக்கும் என்று தெரிந்ததோ அதைப் போய் சர்க்கார் நடத்தவேண்டும்; யார் யார் தனியார் துறையில் நல்ல லாபம் அடைகிறார்களோ, அதைப் போய்ப் பிடுங்கிக்கொள்வதால் ராஜ்யத்திற்கும் உகந்ததல்ல; மக்களுக்கும் உகந்ததல்ல. ஆகவே தான் மீண்டும் சொல்கிறேன், ராஜ்யத்திலே இன்றைக்குத் தொழில் வளம் பெருக வேண்டுமென்றால், அதற்கு ஓரளவு 'ரிஸ்க்' கட்டாயம் சர்க்கார் எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும். அதைச் சர்க்கார் எடுத்துக்கொள்ள முன்வந்திருக்கிறது. முன்வந்திருப்பதனால்தான், இந்த பட்ஜெட் உரையிலேயே சொல்லியிருக்கிறோம், ஒரு கோடி ரூபாய் போடுகிறோம் என்று. மேற்கொண்டு போட மற்றும் திட்டங்கள் இருக்கின்றன. இந்தச் சபையில் அது

[Sri R. Venkataraman] [15th March 1960

சம்பந்தமாக நல்லதொரு வெட்டுப் பிரேரணையைக் கொடுத்து அபிப்பிராயத்தைத் தெரிவித்துவிட்டால் ரொம்ப நன்றாக இருக்கும்; தொழில் வளம் எந்த அளவு ஏற்படுத்துவது, எப்படி நாங்கள் நடத்துவது, சர்க்கார் தொழில் நடத்த வேண்டுமா, நடத்த வேண்டாமா என்பது மக்களுக்கும் புரிந்துவிடும்.

அடுத்தபடியாக, ஒரு சில வார்த்தைகள் 'ஹாண்ட்லூமை'ப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய ராஜ்யத்தில் கைத்தறி நெசவாளர்கள் பிரச்னையைப் பெரிய அளவு சர்க்கார் அவ்வப்போது கண்காணித்து வந்திருக்கிறதென்பதை யாரும் மறுக்க முடியாது. நம்முடைய ராஜ்யத்தில் இன்றைக்கு எந்த அளவுக்குக் கூட்டுறவு இயக்கத்திலே கைத்தறி நெசவு வளர்ந்திருக்கிறது என்பதற்குச் சில புள்ளிவிவரம் கொடுக்கிறேன். ராஜ்யத்திலே இருக்கும் 460,000 தறிகளில் 1953-54-ல் 114,000 தறிகள் சற்றேறக்குறைய கூட்டுறவு இயக்கத்தில் இருந்தது. கனம் அங்கத்தினர் திரு. சண்முகம் அவர்கள் கவனிப்பார் என்று நம்புகிறேன். அவர்களதான் குறைவாகச் சேர்ந்ததாகச் சொன்னார்கள். 1959-60-ல் 214,774 தறிகள் கூட்டுறவு இயக்கத்தில் வந்துவிடுகின்றன. அடுத்த வருஷம் 18 ஆயிரம் தறிகள் கூட்டுறவு இயக்கத்திற்குள் கொண்டுவருவதாக உத்தேசம் இருக்கிறது. ஆகவே, திட்டமிட்டபடி நாம் நிறைவேற்றியிருக்கிறோம், தறிகளைக் கூட்டுறவு இயக்கத்தில் கொண்டுவருவதற்கு. கனம் அங்கத்தினர் திரு. சண்முகம் அவர்கள் குறிப்பிட்டு சொன்னார்கள், புள்ளிவிவரத்தில் குறைவாக இருக்கிறது என்று. ஐந்து வருஷங்களுக்கு கடைசி வருஷத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால் நாம் எந்த அளவு தறிகளைக் கொண்டுவரவேண்டுமென்று நினைத்தோமோ, அதைவிட ஆயிரம், இரண்டாயிரம் அதிகமாகவே கொண்டுவரக்கூடிய நிலைமை இருக்கிறது.

துணி விற்பனையை எடுத்துப் பார்த்தால், 1953-54-ம் வருஷத்தில் 2 கோடி ரூபாய் பெறுமானமுள்ள துணி கூட்டுறவு இயக்கத்தின் மூலமாக கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்தார்கள். 1958-ம் ஆண்டு மார்ச் மாதம் முடிய கணக்கிட்டிருக்கிற அளவுக்கு 7 கோடி 7 லட்சம் ரூபாய் அளவுக்கு உற்பத்தி செய்திருக்கிறார்கள். விற்பனையை எடுத்துக்கொண்டால், 7 கோடி 48 லட்சம் ரூபாய்க்கு கடந்த 1958-ம் வருஷத்தில் விற்பனை ஆகியிருக்கிறது. ஆகவே, கைத்தறி முன்னேற்றம் அடையவில்லை என்று சொல்பவர்களுக்கு இந்தப் பெரிய புள்ளிவிவரங்கள் மறுப்புக் கூறுகின்றன, தாமாகவே. அடுத்தபடியாக, பிரச்னைகள் வந்த காலத்திலெல்லாம் சர்க்கார் அவர்களுடைய பிரச்னைகளை உடனடியாகக் கவனித்திருக்கிறது. ஆரம்பக் காலத்தில் . . .

DEPUTY SPEAKER: May I know how long will the Hon. Minister take to conclude his speech?

THE HON. SRI R. VENKATARAMAN: Another ten minutes, Sir. Can I take that much of time, Sir?



[15th March 1960]

DEPUTY SPEAKER: The Hon. Minister has already taken more than half an hour.

THE HON. SRI R. VENKATARAMAN: That is because of the interruptions, Sir, But for the interruptions, I would have concluded my speech a few minutes earlier.

துணித் தேக்கம் ஏற்பட்ட காலத்தில், சர்க்கார் தங்களுடைய நிதியிலிருந்து 25 லட்ச ரூபாய் கொடுத்து, அவர்கள் துணியை ராஜ்ய கூட்டுறவு சங்கம் மூலமாக வாங்கி விற்பனை செய்த காரணத்தினால் துணித் தேக்கம் நிவர்த்திக்கப்பட்டது என்பது கனம் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அடுத்தபடியாக, 'ரிபேட்' தொகை கொடுக்கும் அளவு கூட, மற்ற ராஜ்யங்களைவிட நம்முடைய ராஜ்யத்திலே அதிகமாகக் கொடுத்திருக்கிறோம் என்பதை நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். பிற ராஜ்யங்களில் இரண்டு வாரங்களுக்குத்தான் தள்ளுபடி கொடுக்கப்பட்டது. ஆனால், சென்னை ராஜ்யத்தில் மூன்று வாரங்களுக்கு நாம் கொடுத்திருக்கிறோம். மூன்றாவது வாரத்திற்குக் கொடுத்த ரிபேட் சென்னை ராஜ்ய சர்க்கார் நிதியிலிருந்து கொடுக்கப்பட்டது. தவறாகப் பிரசாரம் செய்தார்கள். "இந்தக் கைத்தறி வாரத்தின்போது டில்லி சர்க்கார் உங்களுக்கெல்லாம் நாமம் போட்டுவிட்டது; கழிவுப் பணம் கிடையாது என்று சொல்லிவிட்டார்கள்" என்று. உண்மையை நான் இங்கே விளக்க விரும்புகிறேன். அகில இந்தியாவிலும் இரண்டு வாரங்கள் அவரவர்கள் இஷ்டப்படி கொடுக்கலாம் என்று ராஜ்ய சர்க்காருக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. அவ்வாறு இரண்டு வாரம் கொடுக்கப்பட்டது. சென்னை ராஜ்யத்தில் தீபாவளிக்கு ஒரு வாரம், பொங்கலுக்கு ஒரு வாரம் கொடுத்தார்கள். மற்ற எல்லா ராஜ்யங்களிலும் எந்த அளவு கொடுக்கப்பட்டதோ அதே அளவு நம்முடைய ராஜ்யத்திலும் கொடுக்கப்பட்டது. ஆனால், தேக்கம் அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தால் மேற்கொண்டு கழிவுத் தொகை ஒரு வாரத்திற்கு ராஜ்ய சர்க்கார் அதிகமாகக் கொடுத்தது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், மற்றொரு தவறான பிரசாரம்—'14 நயே பைசே வடநாட்டில் கொடுத்தார்கள், தமிழ்நாட்டில் 10 நயே பைசேதான் கொடுத்தார்கள், நாமம் போட்டு விட்டார்கள்' என்று. நாமம் போட்டுக்கொள்வதில் அவர்களுக்கு ரொம்ப ஆர்வம் இருப்பதாக நான் நினைக்கிறேன். அங்கேயும் பத்து நயே பைசேதான், இங்கேயும் பத்து நயே பைசேதான். தெரியாமல் கண்டபடி நாமம் நாமம் என்று சொல்வதானது மக்களிடத்திலே தவறான அபிப்பிராயத்தை உண்டாக்குவதாகும். உண்மையாக, இந்தியா பூராவும் 6 நயே பைசே சாதாரண ரிபேட்; ஸ்பெஷல் ரிபேட் 4 நயே பைசே. ஆக, 10 நயே பைசேவுக்குமேல் யாரும் எங்கேயும் கொடுக்கவில்லை. 14 நயே பைசே கொடுக்கப்பட்டது என்றும், அதை சென்னை ராஜ்யம் கொடுக்கத் தவறிவிட்டது என்றும் சொல்வதானது முற்றிலும் தவறாகும்.

[Sri R. Venkataraman] [15th March 1960

11 a.m. அடுத்தபடியாக கூட்டுறவு இயக்கத்திற்கு அப்பாற்பட்டவர்களுக்கும் சில சலுகைகள் செய்யப்பட்டிருப்பதை நான் சொல்ல விரும்புகிறேன். இந்த ராஜ்யத்தில் பெரிய நெருக்கடி ஏற்பட்டு பட்டு நூல் கிடைக்காமல் சென்ற வருஷத்தில் மிகவும் கஷ்டம் உண்டாகிவிட்டது. உடனடியாக ராஜ்ய சர்க்கார் இதற்காக நடவடிக்கை எடுத்து 8 லட்சம் அளவுக்கு பட்டு நூல் இறக்குமதி செய்து, ராஜ்யத்தில் இருக்கிற எல்லா தறிகளுக்கும் விநியோகம் செய்தோம். இரண்டாவதாக, ஹைட்ரோ சல்பேட் போன்ற சாயப் பொருள்கள் கிடைக்காமல் இருந்த காலத்தில், ராஜ்ய சர்க்கார் அதற்கு வேண்டிய முயற்சி எடுத்து சாயப் பொருள்கள் விநியோகத்தை அதிகரிக்கச் செய்திருக்கிறது. மூன்றாவதாக, 'யார்ன் பிரைஸ்' உயர்ந்தவுடன் ராஜ்ய சர்க்கார் அதற்காக நடவடிக்கை எடுத்து, மகாநாடு ஒன்றை கூட்டி, அதற்கு வியாபாரிகளையும், மில் முதலாளிகளையும், கைத்தறி நெசவாளர்களின் பிரதிநிதிகளையும் அழைத்து சரியான முறையில் விலைவாசிகள் குறைக்கப்படாவிட்டால் ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காரிடம் சொல்லி விலைக் கட்டுப்பாடு போன்ற நடவடிக்கைகள் எடுக்க நேரிடும் என்று வற்புறுத்தியதின் பேரில், எச்சரிக்கை செய்ததின் பேரில், விலைவாசி ரூ. 2½ அளவுக்கு குறைந்துவிட்டது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, கைத்தறி நெசவுத் தொழில் சம்பந்தமாக எந்தெந்த பிரச்னை எந்தெந்த சமயத்தில் எழுந்த போதிலும் அந்தந்த சமயத்தில் ராஜ்ய சர்க்கார் உடனடியாக அவைகளுக்கு வேண்டிய பரிகாரத்தைத் தேடிக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, நான் நீண்ட நேரம் பேசியதற்காக மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI P. S. CHINNADURAI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, On a point cf personal c'arification Sir குருடன் யானையை தடவிப் பார்த்த போல் நான் பட்ஜெட்டை ஆராய்ந்து பார்த்ததாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி எனக்கு வருத்தம் இல்லை. ஐராவதத்தையே கொண்டு வருவதாக மக்களுக்கு நம்பிக்கை ஊட்டினார்கள். ஐராவதத்தையே கொண்டுவந்து நிறுத்தியிருப்பதாகவும் சொன்னார்கள். குருடன் போல நான் தடவிப் பார்த்தாலும், ஜீவன் உள்ள யானைக்கும் கல் யானைக்கும் உள்ள வித்தியாசம் என்னால் புரிந்து கொள்ள முடியும். ஜீவன் உள்ள யானை அல்ல, இது கல் யானை என்று சொல்லுவது எந்த வகையிலும் தவறு இல்லை. குருடனாக இருந்தாலும், குருடனுக்கு இருக்கிற இதர புலன்களை ஒருபோதும் ஏமாற்றிவிட முடியாது என்பதை இந்த நேரத்தில் . . .

DEPUTY SPEAKER : The Hon. Member may resume his seat there will be no further discussion.

* SRI R. KRISHNASAMI NAIDU : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த வருஷத்திய வரவு செலவு கணக்கையும் நமது நிதி அமைச்சர் அவர்கள் அதை சமர்ப்பித்த முறையையும் மற்ற



15th March 1960] [Sri R. Krishnasami Naidu]

எல்லோருடனும் நானும் பாராட்டுகிறேன். இந்த வருஷத்திய நிதி நிலை அறிக்கையானது சென்ற வருஷத்தைவிட இன்னும் சிறப்பான முறையில், எல்லோரும் எளிதில் உணர்ந்து கொள்ளத்தக்க வகையிலே தயாரிக்கப்பட்டிருக்கிறது. பட்ஜெட் சம்பந்தமான பல விஷயங்களையும் புரிந்துகொள்ளுவதற்காக பல வழிவகைகள் அவர்கள் சொல்லியிருப்பதும், அதற்கான பிரசுரங்களை அங்கத்தினர்களுக்கு கொடுத்திருப்பதும் எல்லோராலும் வரவேற்கத் தக்க விஷயமாகும். நீண்ட நேரம் பேசுவதற்கு விஷயங்கள் இருந்தாலும்கூட, இந்த சந்தர்ப்பத்தில் எனக்கு குறுகிய காலம் கொடுக்கப்பட்டிருப்பதால் ஒரு சில விஷயங்களை மட்டும் கூற விரும்புகிறேன்.

ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த, சங்கரன்கோவில், ஸ்ரீவில்லிப்புத்தூர், சாத்தூர், கோவில்பட்டி ஆகிய தாலுகாக்கள் வறண்ட பிரதேசமாக இருந்துகொண்டிருக்கின்றன என்பதை அரசாங்கத்திற்கு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நான் வலியுறுத்திக் கொண்டிருக்கவேண்டும், ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கவேண்டும் என்ற ஒரு கடமை உணர்ச்சியால் சில வார்த்தைகள் குறிப்பிட விரும்புகிறேன். அந்த வறண்ட பிரதேசங்களுக்கு மருந்து கேரளத் தண்ணீர் அன்றி வேறு ஒன்றுமில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து இந்த வறண்ட பிரதேசமான 4, 5 தாலுகாக்களில் உள்ள பூமிகளை செழிப்பாகச் செய்வதற்கு அரசாங்கம் தொடர்ந்து முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கு வேண்டிய நிதி வசதிக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பூர்த்தி செய்வதற்காக வேண்டி ஒரு லட்சிய அளவை வைத்துக்கொண்டு, அதை ஓரளவுக்கு எட்டிப் பிடிக்கும் வகையிலே காரியங்கள் சரிவர நடைபெற்றுக்கொண்டு வருவது கண்டு நான் சந்தோஷமடைகிறேன். இவ்வளவு அதிகமாக உற்பத்தி ஆனாலும் கூட நாட்டிலே இதனுடைய பயனை அடைந்தவர்கள் யார் என்றெல்லாம் விவாதத்தினிடையே பேசப்படுகிறது. 1947-ம் வருஷத்திற்கு முன்னால் பல தலைமுறை தலைமுறையாக தகப்பன் பட்ட கடன் மகன், மகன் பட்ட கடன் பேரன் இம்மாதிரி ஒவ்வொரு குடும்பத்திலும் தொடர்ந்து அவரவர்கள் மூதாதைகள் பட்ட கடன்களை வழிவழியாக விவசாயிகள் ஏற்றுக்கொண்டார்கள். பிரிவினையாகும் பொழுது சொத்தும், கடனும் அவரவர்களுடைய தலையில் கட்டப்பட்டு வந்தன. அவர்கள் ஆண்டவன் மீது பழியை போட்டுவிட்டு கடனையெல்லாம் ஒப்புக்கொண்டிருந்தார்கள். அம்மாதிரி தீராத கடனையெல்லாம் இப்பொழுது சில வருஷங்களில் விவசாயிகள் தீர்த்து விட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். எந்த கிராமத்திற்கு போகட்டும், எந்தப் பகுதிக்கு போகட்டும், எந்த ஜில்லாவுக்கு போகட்டும், சிறிய, பெரிய விவசாயிகள் இன்றைய தினம் கடன் இல்லாமல் இருக்கிறார்கள். அப்படி கடன்பட்டிருந்

தால் நிலத்தை அபிவிருத்தி செய்வதற்காக வாங்கிய கடனாக இருக்கும் அது. மாடுகள் வாங்குவதற்காகவோ அல்லது பம்பு செட்டுகள் வாங்குவதற்காகவோ ஏற்பட்ட கடனாகத்தான் இருக்கும். இம்மாதிரி அவர்கள் மூலதனத்திற்காக, வருவாய் வரக் கூடிய இனத்திற்காக, அவர்கள் நிலத்தை அபிவிருத்தி செய்வதற்காக கடன் வாங்கியிருப்பார்களே தவிர, முன்னால் பட்ட கடன்களையெல்லாம் சில வருஷங்களுக்குள்ளாக தீர்த்திருக்கிறார்கள். அவர்கள் வருவாய் பெருகியிருக்கிறது. உற்பத்திப் பெருக்கின் காரணமாக சிறிய பெரிய விவசாயிகள் இம்மாதிரியான செழிப்பான நிலையை அடைந்திருக்கிறார்கள். கிராமங்களுக்குச் சென்று பார்த்தால் இந்த பத்து வருஷ காலத்தில் பரவலாக எந்த வகையிலும் சிறிய, பெரிய விவசாயிகள் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு சரியான தொழுவங்கள், நல்ல வீடுகள், அழகான வீடுகள் போன்ற வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்களுடைய குடும்பத்திலுள்ள குழந்தைகளுக்கு நல்ல படிப்பு வசதிகள் பெருகியிருக்கின்றன. இம்மாதிரியெல்லாம் சிறிய, பெரிய விவசாயிகளுக்கு பல வசதிகள் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றன என்பதை நியாய புத்தி உள்ள எவரும் மறுக்க முடியாது. நிலமே இல்லாதவர்கள் இப்பொழுது நிலம் வாங்குகிறார்கள். நில உச்சவரம்பு வருவதன் காரணமாக நிலத்திற்கு உண்மையான மஹிமை அல்லது மதிப்பு குறைந்துவிட்டது என்று பிரசாரம் செய்யப்பட்டது. ஆனால், சென்ற சில வாரங்களில் விவசாயிகள் எங்கு பார்த்தாலும் நிலத்தை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். நிலத்தை ஒருவருக்கொருவர் வாங்கிக்கொடுப்பதற்கான காரியங்கள் அதிகமாக நடந்துகொண்டிருக்கின்றன. நிலமே இல்லாதவர்கள் அதிகமாக நிலத்தை வாங்கிக்கொள்ளுகிறார்கள். சிறிய, பெரிய விவசாயிகள் தங்களுடைய நிலத்தை செழிப்பாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். உற்பத்தி பெருகுவதன் காரணமாக . . .

DEPUTY SPEAKER : There is much of noise, I request the hon. Members to maintain silence.

SRI R. KRISHNASAMI NAIDU : கிராமத்திலுள்ள எளிய விவசாயிகள் இப்பொழுது நிலத்திற்கு சொந்தக்காரர்களாக ஆகிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் புதிதாக நிலம் யாராவது வாங்கினால், இதற்கு முன்னால் நிலம் இல்லாத விவசாயிகள்தான் வாங்குகிறார்கள். போட்டா போட்டியுடன் வாங்குகிறார்கள். நிலத்தை வாங்குவதற்கு போதிய பணம் அவர்கள் கையில் இருக்கிறது. உற்பத்தி பெருகியதின் காரணமாகத்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் கேட்கும் கேள்விக்கு இதுதான் விடை என்பதை நான் தெரிந்துக்கொள்ளுகிறேன். தைரியமாகக் கூற முடியும் இதுதான் நியாயமான பதில். தற்காலிகமான சமாதானம் அல்ல. அரசாங்கத்தின் திட்டங்களின் மூலமாக கிராமப் பொருளாதாரம் நல்ல வகையிலே உருவாகியிருக்கிறது. மக்கள் சுபிட்சமான நிலையிலே முன்னேற்றம் அடைந்து





வருகிறார்கள். நான் கதை சொல்ல விரும்பவில்லை. இருந்தாலும் ஒரு உதாரணம் சொல்லுகிறேன். மதுரையில் 35 வருஷத்திற்கு முன்னால் எனது நண்பர் ஒருவர் இருந்தார். அவர் வீட்டிற்கு நான் போவது வழககம். அது ஒரு சிறிய வீடு. அந்த வீட்டில் ஒரு அம்மாள் குடியிருந்தாள். அந்த அம்மாள்தான் அவர்களுடைய கணவனுக்கும் மகனுக்கும் சம்பாதித்து சோறு போட்டார்கள். அந்த அம்மாள்தான் இடியாப்பம், இட்லி போன்றவைகளைச் சுட்டு, விற்று பணததைச் சேகரித்து வருவாள். அந்த அம்மாளின் கணவரும் மகனும் ஒன்றும் வேலை செய்யாமல் சீட்டு, 15-ம் புள்ளி கட்டம் ஆடி காலத்தைப் போக்கிக்கொண்டிருந்தார்கள். மத்தியான வேளையில் மகன் வருவான். 'அந்தக் கிழட்டுப் பயல் இன்னும் வீட்டுக்கு வரவில்லையா? இப்படி இருந்தால் குடும்பம் எப்படி உருப்படும்' என்று கேட்டுவிட்டு சோற்றை போடச்சொல்லி சாப்பிடுவான். பிறகு தாயைக் கேட்டு ஏதாவது சில்லரையையும் வாங்கிக்கொண்டு போய்விடுவான். பிறகு தகப்பன் வருவான். 'சின்னப் பயல் இன்னும் வரவில்லையா? இப்படி இருந்தால் வீடு எப்படி உருப்படும்?' என்று கேட்பான். பிறகு அவனும் சாப்பிட்டுவிட்டு, கொஞ்சம் சில்லரையை வாங்கிக் கொண்டு போய்விடுவான். இம்மாதிரி தகப்பனுக்கும், மகனுக்கும் அந்த அம்மாள் உழைத்து சம்பாதித்துப் போடவேண்டும். இந்த இரண்டு பேர்களும் வேலையில்லாமல் இப்படி ஒருவரை ஒருவர் சொல்லிக்கொண்டு, அவர்களுக்காக உழைக்கும் அந்த அம்மாளை தாறுமாறாக திட்டிவிட்டு, அந்த அம்மாள் போடும் சாப்பாட்டை சாப்பிட்டுவிட்டு போய்விடுவார்கள். இம்மாதிரி இருந்தால் அந்தக் குடும்பம் எப்படி முன்னேறும்? அந்த அம்மாள் மாதிரி அரசாங்கம் பல திட்டங்களை வகுத்து நல்ல காரியங்களை செய்து வருகிறது. அது மட்டும் போதாது. அத்துடன் எல்லோரும் அவரவர்களுடைய வேலையை சரிவரச் செய்து அரசாங்கத்துடன் ஒத்துழைத்தால்தான் திட்டங்களினால் மக்களுக்கு நல்ல பலன் கிடைக்கும்.

கூட்டுறவுப் பண்ணை முறையின்கீழ் எத்தனை ஏகர் நிலம் சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது, அதற்காக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் கேள்வி மேல் கேள்வியாக அங்கத்தினர்கள் கேட்டுக்கொண்டே போகிறார்கள் :—

(1) உறுப்பினர்களின் பங்குத் தொகைக்காக, ஒவ்வொருவருக்கும் ரூ. 10 வீதம் (ரூ. 10-க்கும் அதற்கு மேற்பட்டும் தீர்வையுள்ள நிலம் படைத்த உறுப்பினர் நீங்கலாக) இலவச மான்ய உதவியும் ;

(2) விதை, உரம் வாங்குவதற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 5 முதல், ரூ. 10 வரை மான்ய உதவியும் ;

(3) ஒரு ஜதை உழவு மாடுகள் வாங்க ரூ. 400, பாதி கடனாகவும், பாதி மான்யமாகவும் ;

[Sri R. Krishnasami Naidu] [15th March 1960

விவசாயக் கருவிகளும், போக்குவரவு சாதனங்களும் வாங்க பாதிக் கடனும், பாதி மான்யமாகவும ;

(5) நிலங்களில் நிரந்தரமான சீர்திருத்தம் செய்ய, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 வரையில் பாதிக் கடனாகவும், பாதி மான்யமாகவும் ;

(6) கிணறுகள் வெட்டுதல், பம்பு செட்டு அமைத்தல் போன்ற நீர்பாசன வசதிகளுக்காக, ஆரம்ப கட்டத்தில் தேவையான தொகை பூராவும் வட்டியில்லாக கடனாகவும் ;

(7) கிடங்கு கட்டுவதற்கு ரூ. 5,000 வரையில் 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தககூடிய வட்டியில்லாக் கடனாகவும், மேலும் ரூ. 5,000 வரை மான்யமாகவும் ;

(8) மாட்டுத் தொழுவங்கள் கட்டுவதற்கு, ரூ. 2,500 வரை 10 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் கடனாகவும், ரூ. 2,500 மான்யமாகவும், அரசாங்கம் உதவியளிக்கின்றது.

இந்த மாதிரி அரசாங்கம் கூட்டுறவுப் பண்ணைக்கு, ஒரு ரக பண்ணைக்கு உதவிகள் அளிக்கின்றது. இது ஒரு ரகம். இது தவிர, டெனெண்ட்ஸ் ஸொசைடி, இன்னும் என்னென்னவோ இருக்கின்றன. இம்மாதிரி யளிக்கப்படும் உதவிகளை வர்க்கப் பெயரால், பெரிய பெரிய வார்த்தைகளைப் போட்டு, இவை வர்க்க ரீதியாகக் கொடுக்கப்படுகின்றன என்றெல்லாம் குறை கூறுகிறார்கள். அரசாங்கம் மூடுமுறையாகக் கொண்டுவந்து இப்படி வசதிகளைச் செய்கிறார்கள் எனறு குற்றம் சாட்டுகிறார்கள். கிராமப்புறங்களில் சென்று பார்த்தால் தெரியும். சிறு சிறு நிலச்சுவாந்தார்கள், பண வசதியற்ற ஏழை விவசாயிகள், இந்த திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டால், எவ்வளவு வளம் அடைவார்கள் என்பதை விளக்கிச் சொல்ல வேண்டியது, என்போன்ற, இங்கே பேசும் அங்கத்தினர்களுடைய கடமை, அதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு இங்கே பணியாற்ற வேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு, இந்த வரவு செலவு திட்டத்தைப் பாராட்டி என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **SRI S. LAZAR** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஒரு டெவலப்மெண்ட் பட்ஜெட்டைத் தயாரிக்கும்போது, பற்றாக்குறை பட்ஜெட்டாக வகுப்பது தவறில்லை யென்ற நியதி இருந்தாலும்கூட, சராசரி, இரண்டு, மூன்று ஆண்டு காலமாக, கூடிய மட்டும் சரிக்கட்டப்பட்ட பட்ஜெட்டாகவே கொடுத்து வருவது மிகவும் பாராட்டக்கூடிய அம்சம் என்று நினைக்கிறேன். எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர்கள் மேற்கொண்டு வரிபோடுதற்கு வழியில்லை யென்பதால்தான் அரசாங்கம் வரி போட முடியவில்லை என்று பேசினார்கள். அப்படி அவர்கள் பேசியது, வரி விதிக்கும் முறைகளை நன்கு ஆராயவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. காரணம் இன்னும் வருவாய் வரக்கூடிய இனம் எத்தனையோ இருக்கின்றன. இதுவரைக்கும் இந்தியாவிலேயே வரிக்குள்ளாகாத இனம் ஒன்று இருக்கிறது. அதுதான் அட்வர்டைஸ்மெண்ட் டாக்ஸ், விளம்பர வரி. 1950-ம் ஆண்டிலே, பம்பாய்



15th March 1960] [Sri S. Lazar]

மாகாணத்தில் அந்த வரியைப் போட முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால், அடுத்த ஆண்டிலேயே அதை கைவிட்டுவிட்டார்கள். பத்திரிகை விளம்பரங்கள், சுவரொட்டி விளம்பரங்கள், சினிமா விளம்பரங்கள் இவைகள் இந்த வரியின்கீழ் வரலாம்.

அடுத்தபடியாக, இந்த வரவு செலவு திட்டத்தில் பல செலவு இனங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றையும் பரிசீலனை செய்து பார்க்கப் போதிய அவகாசம் இல்லை. இந்த சந்தர்ப்பத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். மேற்கத்திய நாடுகளிலும், அமெரிக்காவிலும் இதற்கென்று சில கமிட்டிகளை நியமித்து ஒவ்வொரு செலவினத்தையும் ஒரு கமிட்டியைக் கொண்டு பட்ஜெட் கூட்டம் நடக்கும்போதே, பரிசீலனை செய்து ரிப்போர்ட்டுகளை இங்கே வைக்கும் அளவில், நல்ல முறையில் செய்தால், இந்த பட்ஜெட்டை நல்ல முறையில் அமைக்க முடியும் என்ற கருத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நீதி ஸ்தலங்களிலே ஏராளமாகக் கோர்ட்டு பீஸ் விதிக்கப்படுகிறது. அது சம்பந்தமாக சில புள்ளிவிவரங்களைத் தர விரும்புகிறேன். சாதாரணமாக நீதி நிர்வாகம் அரசாங்கத்தின் அடிப்படையான கடமை. எப்படி "லா அண்டு ஆர்டர்" அரசாங்கத்தின் கடமையோ, அதேபோல்தான் நீதி நிர்வாகமும் என்று பெரிய பொருளாதார அறிஞர்களும் ஒத்துக்கொண்டு இருக்கிறார்கள். இந்த வரவு செலவுத் திட்டத்தைப் பார்த்தோமேயானால், கோர்ட்டுகள் கட்டணங்களிலே, ரூ. 114 லட்சம் வருவாய், செலவு ஏறக்குறைய் ரூ. 76 லட்சம். ஸிவில் விவகாரங்களைப்பற்றிச் சொல்லுகிறேன். ரூ. 40 லட்சத்திற்கும் மேல் அதிகப்படியான வருவாய் இருக்கிறது. அதேபோல், கிரிமினல் துறையையும் சேர்த்துப் பார்த்தால் வருவாய் ரூ. 170 லட்சம், செலவினம் ரூ. 137 லட்சம், ஆக ரூ. 33 லட்சம் உபரியாக இருக்கிறது. இது உலகத்தில் எந்த நாட்டிலும் இல்லாத முறையென்று என் கருத்து மட்டுமல்ல, சமீபத்தில் லா கமிஷனும், டாக்சேஷன் என்குயரி கமிட்டியும் அவர்கள் அறிக்கைகளில் தெரிவித்திருக்கிறார்கள். ஆடம் ஸ்மித், மில் போன்ற பெரிய, பெரிய நிபுணர்களும் இது சரியான முறையில்லை யென்று கண்டித்திருக்கிறார்கள். இந்த வரியை நீக்க வேண்டும் என்று நான் சொல்ல வில்லை. கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாய வருமான வரி. ப்ளான்டேஷன் ஏரியாக்களுக்கு இருந்தது, முதலில் 1958-ம் நான்-ப்ளான்டேஷன்களுக்கும் கொண்டுவந்தோம். அதைச் சட்ட பூர்வமாக ஏற்படுத்தியிருக்கிறோம். புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது, 1957-58-ல் ப்ளான்டேஷன் ஏரியா மட்டுந்தான் இருந்தது. பிறகு 1958-59-ல் நான்-ப்ளான்டேஷனும் சேர்ந்தது. ஆனால் கணக்கைப் பார்த்தால், 1957-58-ல் ரூ. 131 லட்சம் வருவாய் இருந்தது. 1958-59-ல் ரூ. 88 லட்சந்தான் வந்திருக்கிறது. 1959-60 அல்லது 1960-61-ல் ரூ. 150 லட்சம் எதிர்பார்க்கப்படுகிறது. இப்படி நான்-ப்ளான்டேஷனும் சேர்ந்த பிறகு வருவாய் குறைந்திருப்பதற்குக்

காரணம் என்னவென்று தெரியவில்லை. தனிப்பட்ட ப்ளான்டேஷன் ஏரியாக்களுக்கு மாத்திரம் ரூ. 131 லட்சம் வந்திருக்க, இரண்டும் சேர்ந்த பிறகு எப்படி ரூ. 88 லட்சமாகக் குறைநதது. காரணம், அந்த வரியைச சரியாக வசூலிக்க வில்லை யெனபதுதான். ஆனால், அடுத்த ஆண்டிலும், அதிக வருவாய் இல்லை என்பதைத் தான் பார்க்கிறோம்.

விவசாயத்தைப் பொருத்த வரையில், நில உச்ச வரம்புக்கு பிறகு இந்த வரி அவசியம் இல்லை யென்றுதான் நான் கருதுகிறேன். ஏற்கனவே நிலச்சுவான்தார்களின் வருவாய் வெகுவாகக் குறைந்திருக்கிறது. நியாய வாரச் சட்டம், ஆட்களை வெளியேற்றக் கூடாது என்ற சட்டம் இவைகளால, அவர்களின் வருவாய் மிகக் குறைந்து விட்டிருக்கிறது. இந்த நிலையில், இந்த நிலச் சீர்திருத்தம அவசியமா ? வந்த பிறகு வருமானம் இன்னும் அதிகமாய் குறையும்.

மோட்டார் துறையிலிருந்து, ரூ. 6 கோடிக்கும் மேல் வருவாய் வருகிறது. இங்கே சரியான கவனத்தைச் செலுத்தத் தவறியிருக்கிறோம் என்றுதான் நான் கருதுகிறேன். ஏராளமான டயர்கள், ரோட்டுகளில் கிடக்கும் லாடங்களால் பாதிக்கப்படுகின்றன. இதன் காரணததால், நாட்டுக்கே ஒரு நஷ்டம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிச்சயமாக இந்த நஷ்டத்தை நிவர்த்தி செய்ய முடியும. ஆனால் இது விஷயத்தில் எந்த விதமான முயற்சியும் நாம் இன்று வரை செய்ய வில்லை.

மேலும், இந்த மோட்டார் துறையில், மக்களுக்குச் சாதாரணமான வசதிகள கூடக் கிடையாது. பிரயாணிகளுக்கு அவசியமாக உட்காருவதற்கு வேண்டிய பெஞ்சுகளோ, நாற்காலிகளோ அந்த அலுவலகங்களில் கிடையாது. மறற வசதிகளான, லெட்ரின் முதலியவைகளும் மிகவும் கவனிக்கத் தக்க விஷயம். அதே போல் மற்ற அரசாங்க அலுவலகங்களிலும் இந்த வசதிகள் செய்ய வேண்டியது மிகமிக அவசியம். நாம் இப்பொழுது இருக்கக் கூடிய தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு எந்த அளவுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று சட்ட பூர்வமாக வற்புறுத்தி யிருக்கிறோமோ, அந்த அளவுக்காவது இந்த சர்க்கார் அலுவலகங்களில் வசதி செய்து கொடுக்க வேண்டுவது மிகமிக அவசியம்.

இப்பொழுது, ட்ரெஷரி தனியாக இயங்கவில்லை. ரெவின்யூ அதிகாரிகளின் கீழ் இயங்குகின்றன, அடிக்கடி மாறுதல்கள் ஏற்படுவதன் காரணத்தால், வேலை தாமதமாகிறது இந்த ட்ரெஷரிகளில். ஆகவே, இந்த ட்ரெஷரிகளைப் பொறுத்த வரைக்கும், இதற்கென்று ஒரு தனி சர்வீசையே ஏற்படுத்தினால், இவை நல்ல முறையிலே இயங்கும் என்று கருதுகிறேன்.

இப்போது பல சட்டங்களின்கீழ் அபராதத் தொகை விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த அபராதத் தொகைகள் எல்லாம் பல ஆண்டுகள் முன்னால் ஏற்படுத்தப்பட்டது. இன்று பணத்தின் மதிப்புக் குறைந்து வந்திருக்கிறது. அதேசமயத்தில் அந்த விகிதங்கள் அதிகப்படவில்லை. இதற்குப் புள்ளி விவரங்கள் கொடுக்க முடியும். இப்போது ஏறக்குறைய நீதிஸ்தலங்களுக்கு வரக்கூடிய கிரிமினல் கேஸ்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வருகிறது. ஆனால், அங்கு வசூலாகும் வருவாயைப் பார்த்தால் மிகவும் குறைந்தே இருக்கிறது. உதாரணமாக 1957-58-ம் வருஷம் 58 லட்சமாக இருந்தது, 1960-61-க்கு 48 லட்சமாகக் குறைந்திருக்கிறது. தாவாக்களின் எண்ணிக்கையோ மிக மிக அதிகரித்து வருகின்றன. இது சம்பந்தமாக மத்திய சர்க்கார் ஒரு மசோதா கொண்டு வந்திருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தோம். அதேமாதிரி நாமும் செய்தால் வருவாய் கொஞ்சம் அதிகமாக வரும் என்று எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.



அதோடு பங்களூர் மகாநாட்டில் காங்கிரஸ் கட்சியில் நிறைவேற்றிய தீர்மானப்படி அதிகாரங்களை அங்கங்கே பகிர்ந்து கொடுத்துக் காரியங்களைச் செய்ய முற்பட்டோமானால் நல்ல முறையில் காரியங்களைச் செய்ய முடியும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அதோடு ஸ்லம் கிளியரன்ஸ் சட்டத்தின்படி, மதுரை, சேலம், திருச்சி, கோயம்பத்தூர் ஆகிய இடங்களில் அந்த திட்டத்தை விஸ்தரிப்பதற்கு என்று சென்ற ஆண்டு ஒதுக்கிய பணத்தில் ஒரு பைசா கூடச் செலவழிக்கப்படவில்லை என்று சொல்லிக் கொண்டு அதையும் சீக்கிரம் தாமதமின்றி அந்த நகரங்களுக்கு செலவழிக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கன்னியாகுமரி ஜில்லாவில் உள்ள ஆசிரியர்களுடைய நிலைமையாக இருந்தாலும் சரி, கெஜெட் ஆபீசர்களுடைய நிலைமையாக இருந்தாலும் சரி எல்லாவற்றையம் ஒரே முறையின் கீழ் கொண்டுவரவேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.

விவசாயத்தில் நல்ல முறையில் அதிகமாக உணவு உற்பத்தி செய்யவேண்டுமென்று சொன்னால் இன்றைக்கு 30 கோடியிலிருந்து 40 கோடி வரைக்கும் வெளிநாட்டுக்குப் பணத்தைக் கொடுத்து உணவுப் பொருள்களை வாங்கிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக அந்தத் தொகையை இங்குள்ள விவசாயிகளுக்கு—நல்ல முறையில்—நார்மல் விளைச்சலுக்கு மேல் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு லாண்டு ரெவின்யூ ரெமிஷன் மூலம் கொடுக்கும்படியான ஒரு முறையைக் கையாண்டால் விவசாயிகள் மிகவும் உற்சாகத்தோடு வேலை செய்வார்கள், உற்பத்தியும் பெருகும். ஆகவே இப்படி அவர்களுக்கு ஒரு உற்சாகம் அளிக்கக்கூடிய முறையைக் கையாளவேண்டும் என்று தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*SRI T. THIRUMALAIMUTHU VEERASAKKAYA THIRU VENKADASAMI NAICKER : கனம் உதவி சபாநாயகர் அவர்களே 1960-61-ம் வருஷத்திய நிதி நிலை அறிக்கையின் மீ

[Sri T. Thirumalaimuthu Veerasakkaya Thiruvenkadasami Naicker] [15th March 1960

சில விஷயங்களைப் பற்றி என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் தம்முடைய நிதி நிலை அறிக்கையில் சமுதாய நலத் திட்டம் சம்பந்தமாக 1960-61-ம் வருஷத்திற்கு 3 கோடி ரூபாய்க்கு அதிகமாகச் செலவிடப் போவதாகவும், புதிதாக 32 அபிவிருத்தி வட்டாரங்கள் இத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படும் என்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் தலைப்பின் கீழ் பார்க்கும்போது 3 கோடிக்கு அதிகமாக ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும்கூட உத்தியோகஸ்தர்கள், சிப்பந்திகள், கட்டிடங்கள் மற்றும் பயிற்சி சாமான்கள் ஆகியவற்றின் செலவு இந்த வகையிலே 2 கோடிக்கு அதிகமாகவே செலவழிந்து போகக்கூடிய நிலைமை இருப்பதாகத் தான் தெரிகிறது. இத்திட்டத்திற்காக 3 கோடிக்கு அதிகமாக ஒதுக்கி வைத்திருக்கிற நிலையில் 2 கோடிக்கு நிர்வாகச் செலவு ஆகி விடுகின்ற காரணத்தினால் மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் பாக்கியுள்ளவற்றை செலவழிக்கும்போது ப்ளாக்குக்கு 50 ஆயிரம் ரூபாயாவது செலவழிக்கப்படுமா என்பது சந்தேகமாகத் தெரிகிறது. இது எதைப்போல இருக்கிறது என்றால் "தோட்டத்தில் பாதி கிணறு" என்பதாகத்தான் இருக்கிறது. ஆகவே இந்தத் திட்டத்தினால் குறிப்பாக கிராம மக்களுக்கு ஒரு கணிசமான அளவு கூட நன்மை கிடைக்கக்கூடிய வகையில் இந்தத் திட்டங்கள் இல்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மேலும் சிலவிடங்களிலே சில பகுதிகளில் எஸ்.இ.ஓ. போன்றவர்கள் சரிவர வேலை செய்வதில்லை. அவர்கள் ப்ளாக் ஹெட் குவார்ட்டர்சுகளில் இருந்து கொண்டு ஆங்காங்கு எங்கும் போகாத நிலைமையில் காரியங்கள் எதையும் செய்யாமல் சும்மா இருந்து கொண்டிருக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அந்த இலாகாவுக்கென்று அதிகப்படியான ரூபாய் செலவழிக்கிற இந்த நேரத்தில் அதிகப்படியான பலன் கிடைக்கும்படியான மார்க்கத்தைத் தேடாமல் மக்களிடமிருந்து வரியாக வாங்கக் கூடிய பணம் அத்தனையும் இவ்விலாகா மூலம் வீண் விரயம் ஆகிறதென்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக விவசாய உணவுப் பொருள் உற்பத்தி சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது குளங்களை அதிகமாக ஆழப்படுத்தி, அதன் கரைகளை உயர்த்துவதனாலே நீரை அதிகமாகத் தேக்கி வைத்து குளத்தின் உள்வாயில் உள்ள நீர்ப்பிடி நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வரமுடியும் என்பதாக சொன்னார்கள். அந்த முயற்சியினால் அதிகப்படியான பலன் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது உண்மையாக இருந்தபோதிலும்கூட குளத்திற்குத் தண்ணீர் வரக்கூடிய வரத்துக் கால்வாய்கள் பலகாலமாக கவனிக்கப்படாமல் மேடிட்டுக் கிடக்கின்றன. அதனால் பெரும் வெள்ளம் வருகிற காலத்தில் பக்கத்தில் உள்ள நிலங்களின் சத்தையும், சத்தைகளையும் அடித்துக்கொண்டு போகிற நிலைமை இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் குளங்களை ஆழப்படுத்துவதோடு கூட குளத்திற்கு நீர்



[Sri T. Thirumalaimuthu Veerasakkaya 15th March 1960] Thiruvenkadasami Naicker]

வருகிற வரத்துக் கால்களையும் ஆழப்படுத்தி, அகலப்படுத்தி கரைகளை நல்ல முறையில் உயர்த்தி வைத்தால்தான் வெள்ளம் வருகிற காலத்தில் குளம் நன்றாக நிரம்புவதற்கு வழி ஏற்படும். இப்படிச் செய்து விவசாயிகளுக்கு உதவி செய்தால் விவசாயம் நல்ல முறையில் செய்ய முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு ஆகக்கூடிய செலவைக்கூட கிஸ்தியோடு சேர்த்து விவசாயிகளிடமிருந்து வசூல் செய்து கொள்வது மிகவும் நல்லதாக இருக்கும். ஆகவே, இப்படிச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி சம்பந்தமாக ஆரம்பப் பள்ளிகளுக்கு வரக்கூடிய குழந்தைகளுக்கு மதிய உணவு கொடுப்பது என்கிற திட்டம் சிறந்த முறையில் நடக்கிறதாகவும், இந்த ஆண்டிலும் அவ்வினத்திற்காக 80 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். என்னைப் பொறுத்த அளவில் என் தொகுதியில் பலவிடங்களில் நான் கேள்விப்பட்ட அளவிலும், நேரில் பார்த்த அளவிலும்கூட மதிய உணவுத் திட்டமானது வெற்றிகரமாக நடைபெறவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் விபரமாகச் சொல்ல வேண்டுமானால் கனம் மின் சாரத்துறை அமைச்சர்கூட ஒரு சந்தர்ப்பத்தில் எங்கள் மதுரை ஜில்லாவில் ப்ளானிங் கமிஷன் போர்டு கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்கள். அன்றையதினம் அவர்களும் கூடச் சொன்னார்கள். மதிய உணவு கொடுக்கும் திட்டமானது சில பள்ளிகளில் ஒழுங்காக நடைபெறவில்லை. தாம் நேரில் பார்த்தபோதுகூடச் சரியான முறையில் இல்லாமல் இருந்தது என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதனால் ஆசிரியர்களும்கூட பணம் சேகரிப்பதற்காகப் பலவிடங்களுக்குப் போகவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதனால் அவர்கள் வகுப்பில் பாடம் கற்பிக்கும் நேரம்கூட வீணாகச் செலவழிக்கப்படவேண்டிய நிலைமை இருக்கிறது. அதனால் கல்வித்தரம் குறைகிறது.

அடுத்தாற்போல இப்போது எங்கள் ஜில்லா அதிகாரிகளுக்கு ஒரு ஜி.ஓ. வந்திருப்பதாகத் தெரிகிறது. அதாவது பள்ளிக்கு வருகிற குழந்தைகள் எல்லோரும் ஒரேமாதிரியான உடைதான் போட்டுவர வேண்டும் என்று சொல்வதாகத் தெரிகிறது. எல்லோரும் ஒரேமாதிரியான உடைதான் போட்டு வரவேண்டும் என்று சொன்னால் ஏழைக் குழந்தைகளின் பெற்றோர்களுக்கு இது மிகவும் பாதகமாக இருக்கும். ஆகையால் இப்படிப்பட்ட கட்டுப்பாடு எதுவும் இல்லாதவாறு இந்த உத்தரவை சீக்கிரமே மாற்றி அமைக்கவேண்டும் என்பதாக அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜன முன்னேற்றம் சம்பந்தமாகப் பல கோடி ரூபாய்கள் நாம் செலவழித்து வந்திருந்தபோதிலும் கூட இன்றையதினம் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கக்கூடிய திட்டமானது நல்ல முறையில் வெற்றிகரமாக நடைபெறவில்லை என்பதை நான் அநேக இடங்களில் பார்த்துத் தெரிந்து கொண்டிருக்கிறேன்.

[Sri T. Thirumalaimuthu Veerasakkaya Thiruvenkadasami Naicker] [15th March 1960

அவர்கள் பூராவும் விவசாயிகளே. பெரும்பாலும் நிலத்தையே நம்பி சாகுபடி செய்து வாழ்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு விவசாயத் துறைக்கு வேண்டிய ஒத்தாசை புரிந்தால் அவர்கள் பொருளாதாரத் துறையில் அதிகமாக முன்னேறி நல்ல முறையில் வாழ்வார்கள். அதற்கு வேண்டிய வழி ஏற்படும்.

ரோடுகள் சம்பந்தமாக ஒரு வார்த்தை. கடந்த வருஷத்தில் பெய்த பெரு மழையின் காரணமாக எங்கள் ஜில்லாவில் பல ரோடுகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அவைகளை உடனடியாகப் பழுது பார்க்காமல் விட்டுவிட்டால் இப்போதுள்ள நிலைமையில் போக்குவரத்துக்கு மிகவும் கஷ்டமான நிலைமை ஏற்பட்டுவிடும். அவைகளை எல்லாம் உடனடியாகக் கவனித்து ஆவன செய்யவேண்டும்.

கடைசியாக அழுகும் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்திருப்பது போல பாலுக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கவேண்டும் என்று சொல்லிக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

1-30 a.m. * SRI A. A. RASHEED : Mr. Deputy Speaker, Sir, the Budget for the year 1960-61 has been acclaimed on the hand as being a budget of the common man and it has been criticised and attacked on the other hand as being dull and disappointing.

(Sri. T. Sampath in the Chair.)

The Budget is welcome because there is no fresh taxation imposed. Secondly, sales tax o nperishable articles has been removed. The Budget is attacked because no exemption has been given from sales tax in respect of other articles and also the existing taxes have not been reduced. What is the truth? The truth lies in between these two. I would like to ask the Hon. Minister for Finance—unfortunately, he is not here and of course, I would ask the Finance Minister through the one Minister who is present here—how it is that in the year 1957-58, our share of income-tax was 616.07 lakhs of rupees, in 1958-59, 636.72, in 1959-60, 625 and in the revised estimates of the same year, 652 whereas the Budget Estmate now before the House shosw the share as 437 lakhs of rupees.

SRI S. LAZAR : Look at the Grants-in-aid from the Centre.

SRI A. A. RASHEED : I understand that the grants-in-aid from the Centre have increased to 273 lakhs of rupees. However, why should we not get our share of income-tax, viz., 7 crores of rupees and also insist on the grants-in-aid being given? We have been getting for the last three years nearly seven crores of rupees as our share of income-tax.

Another point is, we have got special irredeemable loans amounting to 2·52 lakhs of rupees. Why should the Government keep this legacy for the last several centuries? It is stated that the loan was



15th March 1960] [Sri A. A. Rasheed]

first floated nearly three hundred years ago, 1696 or so, and the amount was 2·5 lakhs of rupees. Why should we pay 8 per cent interest? Why not be done with the loan by paying away the entire amount? We can float loans now bearing 3 to 4 per cent interest.

Then, Sir, I would request hon. Members on the other side not to be little our achievements. The Budget speech gives a very impressive reading. A number of industries are going to be established during the Third Plan period. I would like to say, however that the Central Government are following, though not wantonly, a policy of . . . . (Sri M. Kalyanasundaram : Discrimination?) I will not say ' discrimination ' but " go slow ", whenever questions relating to Southern India come up. I do not know how many industries on which decisions have been taken by the Central Government are yet to be established. Now we have to depend upon only one major project and that is Neiveli. It has become to be all and end all of our aspirations and hopes. I pray that this Neiveli project really becomes successful so that our industries may thrive. But I do realise that the Madras Government alone cannot work wonders. Of course, they must start more industries. How can they do it when they are adopting a dog in the manager policy? They have not reduced the taxes which are crippling industries. On the other hand, they are not prepared to invest large amounts of money in the private sector. The Hon. Minister for Industries owes an explanation not only to the Opposition but also to the members on this side of the House in this connection. He cannot simply say that more industries would be established in the public sector. More industries can be established in the private sector provided incentives are provided and the proper climate created for indigenous as well as foreign investment in our State.

Another important point which I would like to discuss is regarding the introduction of Tamil as medium of instruction at the University level. I find two inconsistent statements have been made by the Minister for Education. He has stated that this will be on an experimental basis. Again he says that by 1963-64, all colleges must fall in line and that, otherwise, grants will be withheld. I cannot understand how a Minister could make such a statement, without consulting the proper authorities like the Senate, the Academic Council and the Syndicate. In his Budget speech, he has said that he consulted the Vice-Chancellors of the Madras and the Annamalai Universities. But more consultation is one thing and getting their consent is another. Dr. A. Lakshmanaswami Mudaliar has been openly opposing this scheme. He said that the Government could not afford to experiment with higher education, especially in the matter of medium of instruction. Even Dr. C. D. Deshmukh has said that English should continue as the medium of world thought. I understand from the statements made now and then by the Union Government that they are not also in favour of this scheme. Yet, why should this Government, in spite of opposition, try to work this experiment? Another point the Government must

[Sri A. A. Rasheed] [15th March 1960

realise is that they will be paving the way for the linguistic Balkanisation of the country. Chances of employment in other states will be very few. If all the Universities in India were to adopt the regional language as medium of instruction in colleges, what will happen? Parochialism will take hold of everybody. Every State will think that it is separate from the other States and that it has nothing to do with them. I would request of the Hon. Minister one thing. Let him proceed with the experiment that has to be carried on in Coimbatore. But let him wait for the outcome of the experiment. Then only he must proceed further. Until then, let him keep his statement that grants will be withdrawn in abeyance.

Another point I wish to stress is the behaviour of the Police towards the public. Government must issue fresh instructions that they must change their present behaviour. The Police must not be under the impression that they are the champions of imperialism to oppress the public. A mere four oz. of liquor found in the baggage of certain distinguished visitors led to their arrest and detention. But on the other hand, hundreds of murder cases remain undetected even to-day. I read the other day the report issued by the Police Department. It says that the number of murder cases have increased in 1958-59. Guilty persons get acquitted for want of proper evidence being let in. I would request the Government to appoint more number of Police Officials to see that the guilty persons are brought to justice.

Sir, the sales tax on perishable articles has been removed. It is welcome. What about the sales tax on the East India Tanned Leather? It employs 20,000 persons in the State. Why should not the Government at least consider the question of exempting it from sales tax levy? If not exempted at least to reduce the rate of levy on it. (Interruption). I am not speaking for my sake but for the industry as a whole. This industry employs, as I said, nearly 21,000 persons and it earns a foreign exchange to the extent of Rs. 30 crores for our State. But that industry has been given a step-motherly treatment.

TEMPORARY CHAIRMAN (Sri T. SAMPATH) : The hon. Member has already exceeded his time.

Sri A. A. RASHEED : Two seconds Sir, I will finish. Mr. Chairman, I would sum up the Budget as the Budget of the past achievements with a promise for future. Thank you, Sir.

* Sri A. VEDARATHNAM : கனம் அவைத்தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்குமுகத்தான் நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். குறிப்பாக வரி எதுவும் இல்லாத ஒரு நிதிநிலை அறிக்கை என்பதற்காக நான் இதை வரவேற்கவில்லை. இந்த ஆண்டில் வரி எதுவும் இருக்காது என்பதை முன்கூட்டியே அறிந்து சென்ற ஆண்டிலேயே நமது நிதி அமைச்சர் அவர்கள் இதை அறிவித்ததற்காக நான் இதை



15th March 1960] [Sri A. Vedarathnam]

வரவேற்கிறேன். அதோடு மட்டுமல்ல. இன்னும் அடுத்த வருடத்தைப்பற்றி ஜோஸ்யம் கூறியிருக்கிறார்கள். தேர்தல காரணத்திற்காக வரி இல்லாத ஒரு அறிக்கையை இந்த மாநிலத்தில் கொணடு வந்திருப்பதாகவும், இதுபோன்று பல மாநிலங்களிலும் வரியிலலாத நிதிநிலை அறிக்கைகளை சமர்பித்திருப்பதாகவும் இங்கு குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன. 1937-ம் ஆணடுக்கு முன்பு இந்த மாகாணத்தோடு கேரளம், ஆந்திரம், கானடகம் எலலாம் சேர்ந்திருந்த காலத்தில் 16 கோடி, 17 கோடிக்குள்ளதாகத்தான் வரவு செலவுத் திட்டமே இருந்தது. அந்த மாநிலங்கள் எல்லாம் மொழி வாரியாக பிரிந்த பிறகும கூட 81 கோடி ரூபாய் அளவில் நமது மாநிலத்தில் வருவாய உயர்ந்திருக்கிறது என்று சொனனால் அவ்வளவும் வரிகள் மூலமாகத்தானே சம்பாதிக்கப்பட்டிருக்கிறது? இத்தனை ஆண்டுகளும் வரிகள் போட்டால் தேர்தலில தங்களுக்கு ஆதரவு கிடைக்காது என்று நினைத்திருந்தால் இந்த நிலையை எய்திருக்க முடியுமா? என்பதை குற்றம் கூறுபவாகள் எண்ணிப் பார்கக வேணடுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான்கு மாநிலங்களும் சேர்ந்திருந்தபோது எவ்வளவு வருமானம வந்ததோ, அந்த அளவு இந்த கல்வி இனததிற்காக மட்டும் ஒதுக்கப்பட்டிருககிறது என்பதை நான் இஙகு குறிப்பிட விரும்புகிறேன். அதிலும் சிறப்பாக அழுது கொணடிருந்த அழுகும் பண்டங்களின் அழுகையைப் போககி அழகானதொரு நிதுநிலை அறிக்கையை இங்கு சமர்பித்ததற்காக நாம நிதியமைசசர் அவர்களுக்கு நன்றி கூற வேண்டியிருக்கிறது. இந்த சட்டசபை அஙகததினர்கள் சிலர் குற்றச்சாட்டுகள் கூறும்போது இந்த அறிக்கையை வெங்காயத்தோடு ஒப்பிட்டார்கள். ஏன் அப்படிச் சொன்னார்கள் என்று ஆராய்ந்து பார்த்தால், அது இப்பொழுது வந்த விஷயமல்ல. குரு பரம்பரையாக வந்த விஷயம் எனறு தோன்றுகிறது. குருவை விட்டுப் போனாலும் அந்த உதாரணம் அவர்களிடம் அப்படியே இருந்து கொண்டிருக்கிறது. இந்த அறிக்கையில் வேறு பல விஷயங்களும் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன. பெரிய திட்டங்கள் ஒன்றும நம் மாநிலத்தில் கிடையாது. ஆகவே, நமது உணவு உற்பததியை அதிரிகப்பதற்கு வழி இல்லை என்றெல்லாம் கூறப்பட்டது. பக்ராநஙகலைக் காட்டிலும் பெரிய திட்டம் இந்த மாநிலத்திலும் இருக்கிறது. ஆனால் அதில் நாம் போதிய கவனம் செலுத்தவில்லை எனபதுதான் குறையே தவிர திட்டம் இல்லை என்று கூறுவதற்கில்லை. அதுபோன்று பெரிய சென்ட்ரலைஸ்ட் ஸ்கீமாக வேண்டுமானால் இல்லையென்று சொல்லலாமே தவிர திட்டம் இங்கு இல்லை எனறு சொல்ல நான் தயாராயில்லை. மூன்று நான்கு தினங்களாக இந்த வரவு செலவுத் திட்டத்தின்மீது பேசிய ஒவ்வொரு அங்கத்தினரும் அவரவர்கள் பகுதியில் ஏதாவது ஒன்றிரண்டு பாசனத் திட்டம்பற்றி குறிப்பிடாத அங்கத்தினர் இல்லை என்றே சொல்லலாம். அநேகமாக எல்லோரும் ஒவ்வொரு திட்டத்தைப்பற்றி குறிப்பிட்டார்கள். குளங்கள் மட்டும், 33,000 இருக்கிறது. அவைகள் மூலம் பாசனம் கிடைக்க வேண்டிய விஸ்தீரணம் 22 லட்சம் ஏக்கர் என்று சொன்னால் பக்ராநங்கலில் கால் பகுதி விஸ்தீரணம் பாயக் கூடியது குளங்களில்

[Sri A. Vedarathnam] [15th March 1960

மட்டும் இருக்கிறது. ஒவ்வொரு உறுப்பினரும் அவரவர் பகுதியில் உள்ள ஒன்றிரண்டு ஆறுகளைப்பற்றி குறிப்பிடாமல் இல்லை. அந்தத் திட்டங்களை எல்லாம் எடுத்துக் கொண்டால் இத்தனை ஆயிரம் ஏக்கர்களுக்கு பாசன வசதி செய்து கொடுக்க முடியும் என்று ஒவ்வொருவரும் கூறினார்கள். இதை மட்டும் கவனத்தில் எடுத்துக் கொண்டு, சிறிய நீர்ப்பாசனத்திற்காக மத்திய அரசாங்கமும் போதிய ஆதரவு காட்ட முன்வந்திருப்பதால் பக்ராநங்கல் திட்டத்திற்கு எவ்வளவு செலவாயிற்றோ அதைவிட குறைந்த செலவில் பக்ராநங்கல் மூலம் எவ்வளவு ஏக்கர்களுக்கு பாசன வசதி கொடுக்க முடிந்ததோ அதைவிட அதிக ஏக்கர் விஸ்தீர்ணத்திற்கு பாசன வசதி கொடுக்கும் திட்டம் நம் மாநிலத்தில் இல்லாமல் இல்லை. அதை எடுத்து வேலை செய்யும் அமைச்சர் அவர்களுக்குத் தான், அவர்கள் தலையில்தான் ஏராளமான இலாகாக்களை சுமத்தியதால் இதில் முழு கவனத்தையும் அவர்களால் செலுத்த முடியவில்லை என்று நான் நினைக்கிறேன். ஆகவே, மற்ற இலாகாக்களை அவரிடமிருந்து நீக்கிவிட்டு பொது மராமத்து இலாகா ஒன்றை மட்டும் அவரிடம் கொடுத்து இந்தத் திட்டத்தில் அவர்களது முழு கவனத்தையும் செலுத்தும்படிச் செய்தால் ஒரு கோடி ஏக்கருக்கு அதிகமாக இந்த மாநிலத்தில், ஆயிரம் ரூபாய் செலவிட்டாலும் அதற்குத் தகுந்த பாசனம் கிடைக்கும். நூறு கோடி ரூபாய் செலவு செய்த பின்னர்தான் அதன் பலன் கிடைக்கும் என்பதில்லை. டி-ஸென்ட்ரலைஸ்ட் பாரத்தில் இந்தத் திட்டம் இருப்பதால், எல்லாத் திட்டத்திலும் மிக முக்கியமான திட்டமாயிருக்கும். இந்த சிறுபாசனத் திட்டத்தில் கவனம் செலுத்தி அதைப் பூர்த்தி செய்துவிட்டால் எந்தக் காலத்திலும் இவர்களை இந்த ஸ்தானத்திலிருந்து யாராலும் அசைக்க முடியாது என்று சொன்னால் அதை யாரும் மறுக்க முடியாது.

அடுத்தபடியாக, கல்வித் திட்டத்தில் பல முக்கியமான விஷயங்கள் இங்கு கூறப்பட்டிருக்கிறது. எனக்கு முன் பேசியவர் பேசியதைப் போன்று கல்லூரியில் தமிழை போதனா மொழியாக வைப்பதைப்பற்றி பலர் குறை கூறிப் பேசினார்கள். எனக்கு அதைக் கேட்க மிகவும் வருத்தமாக இருந்தது. நம் நாட்டில் இப்பொழுது ஆரம்பகல்வி, உயர்தரக் கல்வி ஆகியவைகளில் இப்பொழுது தமிழ் மொழி மூலம் பாடங்கள் போதிக்க வேண்டுமென்று கொண்டு வந்திருக்கிறோம். இதுபற்றி எனக்கு முன் பேசிய அங்கத்தினர் அவர்கள் யாரை உதாரணமாக காட்டினார்களோ அவரை வைத்து நான் சொல்கிறேன். நமது பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகிய டாக்டர் லக்ஷ்மணஸ்வாமி முதலியார் அவர்கள் ஒரு கூட்டத்தில் கூறியதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் மீடியமாக ஹைஸ்கூல்களில் வந்த காரணத்தால் மாணவர்கள் பேசும் தமிழைப் பார்த்தால் எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். மாணவர்கள் அழகாக தமிழில் பேசும் ஆற்றல் பெற்றிருப்பதைக் கண்டு ஆசிரியர்களும் ஆச்சரியப்படுகிறார்கள் என்று அவர்கள் கூறிய உதாரணத்தையே நான் ரஷீத் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். ஆங்கிலத்தை அடி-



15th March 1960] [Sri A. Vedarathnam]

யோடு எடுத்துவிட வேண்டுமென்று நமது அரசாங்கம், முயற்சி செய்யவில்லை. அதற்குப் பதிலாக ஐந்தாம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் ஆரம்பிக்க வேண்டுமென்றும் ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியர்களின் திறமைக் குறைவாக உள்ளவர்கள் போதிக்கக் கூடாதென்று, திறமையை அதிகரிக்கும் திட்டத்தை வகுத்து, கல்லூரிகளில் மீடியம் ஆப் இன்ஸ்ட்ரக்ஷன் ஆங்கிலமாக இருக்கக்கூடாது என்று சொல்கிறார்களே தவிர ஆங்கிலத்தை எடுத்துவிட வேண்டுமென்று யாரும் சொல்லவில்லை என்ற விஷயத்தை அவர்கள் மறந்து விடுகிறார்கள் என்று நினைக்கிறேன். சைனா, ஜப்பான் போன்ற நாடுகளில் ஆங்கிலம் இல்லாமலே அவர்கள் விஞ்ஞானத் துறையில் வளர்ந்து கொண்டு வரும் விஷயத்தை கனம் அங்கத்தினர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாடபோதனை, சரித்திரம், கணிதம் முதலிய பாடங்களில்கூட தமிழில் நடந்தாலும் எந்தவிதமான தவறும் ஏற்பட்டு விடப் போவதில்லை. ஆங்கிலத்துக்குரிய ஸ்தானம் குறையவில்லை. தம்முடைய தாய் மொழிக்கு அடுத்தபடி ஆங்கிலம். அதன் பின்னால்தான் தேசிய மொழி ஹிந்தி என்ற நிலைமை இருக்கிறது. ஆகையினால் அந்த நிலையை மறந்து விட்டுப் பேசுவது முறையல்ல என்பதைக் கூறிக்கொள்கிறேன். ஆங்கிலம் இருக்கவேண்டியது தான், வேண்டாம் என்று யாரும் கூறவில்லை. ஆனால் ஆங்கிலம் தான் மீடியமாக இருக்கவேண்டும் என்று சொல்வது அவ்வளவு சரியல்ல. அவ்விதம் தமிழ் நாட்டிலுள்ளவர்கள் கூறுவது அவமானம் என்றுதான் நான் கருதுகிறேன். வேறு பல நாட்டில் எல்லாம் கல்லூரிகளில் அவரவர்கள் தாய் மொழியில்தான் பாடபோதனை நடந்து வருகின்றன என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இதனால் எந்தவிதமான சங்கடங்களும் ஏற்படாது என்பதை நான் எடுத்துக்காட்டவும் விரும்புகிறேன்.

இந்தக் கல்வித் திட்டத்தைப்பற்றி நல்ல விதமான ஒரு அறிக்கையைக் கொடுத்த நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் ஆதாரக்கல்வியைப் பற்றி இதில் ஒரு சில வார்த்தைகள் சொல்லியிருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆனால் அறிக்கை விரிந்து விடும் என்று நினைத்தோ அல்லது வேறு எந்த காரணத்தாலோ இது விடப்பட்டிருக்கிறது. நம்முடைய நாட்டில் நாம் வகுப்புவாகமற்ற வர்க்க பேதமற்ற, சுரண்டலற்ற ஒரு சமுதாயத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதுதான் நம்முடைய குறிக்கோள். இதை நாம் அடைய வேண்டுமானால் ஆதார கல்வியில்லாமல் முடியாது என்று சொன்னால், அதை யாரும் எளிதில் மறுக்க முடியாது. சுரண்டலை அடிப்படையாக ஏற்படுத்துகின்ற ஒரு கல்வித் திட்டத்தை வைத்துக்கொண்டிருக்கின்ற நாம் ஒரு சுரண்டல் அற்ற ஒரு சமுதாயத்தை அமைத்துவிடலாம் என்பது கனவில்கூட நினைக்க முடியாத விஷயம். நம்முடைய எதிர்காலத்தை நம்பி இந்த கல்வி திட்டத்தை நம்முடைய மாகாணம் மட்டுமல்ல, எல்லா மாகாணங்களும் நடத்த ஒப்புக்கொண்டிருக்கிறது. இந்தத் திட்டக்கில் இன்னும் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[Sri A. Vedarathnam] [15th March 1960

அடுத்தபடியாக, உரம் பற்றுக்குறையைப்பற்றி இங்கு பேசப்பட்டது. கிராமங்களில் மனித உரம் ஏராளமாக வீணாக்கப்பட்டு வருகிறது. பப்ளிக் ஹெல்த் டிபார்ட்மெண்டார் "வார்தா லட்ரின்" முறையை ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். ஒரு மனிதனுடைய கழிவு உரத்தில் அதாவது நைட் ஸாயில் குறைந்தது 25 சென்ட் நிலத்திற்குப் போதுமான உரம் என நிபுணர்கள் கருதுகிறார்கள். அதோடு நமக்கு இருந்துகொண்டிருக்கும் உரப் பற்றுக்குறையையும் அதை உபயோகித்து போக்கமுடியும் என்றும் நம்புகிறேன்.

அதே போன்று உணவு உற்பத்தி அதிகமாகியும், மேலும் உணவு உற்பத்தி அதிகமாகிக்கொண்டிருக்கின்ற காலத்திலும் விலை இறங்கவில்லை அதற்குக் காரணம் என்ன என்று பல எதிர்கட்சி அங்கத்தினர்கள் கேட்டார்கள். உணவு உற்பத்திக்கும் பிரஜா உற்பத்திக்கும் போட்டி நடந்து வருகின்ற காலமாக இருக்கிறது. இதை உணர்ந்திருந்தால் இந்த கேள்வியை கேட்டிருக்க மாட்டார்கள். உணவு உற்பத்தியை விட நம்முடைய ஜனத் தொகை உற்பத்தி அதிகமாக ஏறிக்கொண்டே போகிறது. அதனால்தான் உணவு உற்பத்தி அதிகமாகியும் விலை குறையாததற்கு காரணமாக இருக்கிறது என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

SRI A. A. RASHEED : On a point of explanation, Sir. I have never said that Tamil should never be the medium of instruction at University level. What I said was when we are experimenting this new measure at Coimbatore College at least we must wait for the results of the experiment and then only go ahead with it. Besides that, this is a matter which has to be decided by experts. However, there are other countries such as Belgium and Switzerland, where they do not have their own language as Belgium and Swiss. Here also it is the same thing. We have been brought up like that. That is all I wanted to say.

SRI P. S. SANTHANAM : சட்டமன்ற தற்காலிக தலைவர் அவர்களே, இன்று நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற நிதி நிலை அறிக்கையின் மீது என் கருத்தினை கூற விரும்புகிறேன். 1960-61-ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் முக்கியமாக நம்முடைய தமிழ்நாட்டில் ஏறத்தாழ மூன்றரைக் கோடி மக்களில் விவசாயத்தை நம்பி வாழக்கூடியவர்கள் இரண்டே முக்கால் கோடி பேர்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில், இவர்களை நம்பி விவசாயம் வளரும், விவசாயத்தை நம்பி பொருளாதாரம் வளரும், பொருளாதாரத்தை நம்பி தொழில் வளங்கள் வளரும் என்பது அமைச்சர் அவர்களுடைய திட்டம். இந்த அடிப்படையில் விவசாயத்திற்கான திட்டங்கள் எல்லாம் நன்றாக நடந்தேறி வருகிறது என்றும், விவசாயத்திற்கு வேண்டிய பெரிய நீர்பாசனத் திட்டங்கள் எல்லாம் நம்முடைய தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டு விட்டன என்றும், சிறிய நீர்பாசனத் திட்டங்கள்தான் பாக்கி, அவைகள் எல்லாம் 1961-ம் ஆண்டில் நிறைவேற்றப்படவிருக்கிறது என்றும், அவைகள்தான் விவசாய



15th March 1960] [Sri P. S. Santhanam]

உற்பத்திக்கு மூலகாரணம் என்றும் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். உண்மையில் இதைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்க்கும்போது நம்முடைய மனதில் ஒரு பழமொழி ஞாபகத்தில் வருகிறது. அதாவது "வயிற்றுப் பிள்ளையை நம்பி மாடு மேய்க்கிற பிள்ளையை காலை வாரிவிடுவது" போல் பெரிய பணக்காரர்களை நம்பிக்கொண்டு, சுதந்திரம் வந்து 11 ஆண்டுகளுக்கு மேலாகியும் ஏழைகளுக்கு எல்லாவிதமான நன்மைகளும் செய்து கொடுத்திருப்பதாக தெரியவில்லை. ஆனால் சிலர் சுதந்திரம் வந்த பின் விவசாயம் நன்கு வளர்ந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் பெருமளவு விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்ற பெருங்குடி மக்களுக்கு சர்க்கார் என்ன செய்திருக்கிறது என்பதைப்பார்த்தால், அவர்களுக்கு கொடுக்கக்கூடிய மான்யங்கள் எல்லாம் காலாகாலத்தில் கொடுக்கப்படாமல் தவறி விடுகிறது. இன்றைக்கு விவசாய நிலையைப்பற்றி பார்க்கும்போது ஆண்டு தோறும் அதாவது 1957-லிருந்து 1959-வரையிலும் சாகுபடி கிட்டம் உயர்ந்து கொண்டு வந்திருக்கிறது என்று புள்ளி விவரங்களில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் விலைகள் எல்லாம் குறைந்திருப்பதாக தெரியவில்லை. விலை உயர்ந்து கொண்டேதான் போகிறது. விலையைக் குறைப்பதற்கு சர்க்கார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் எல்லாம் விலையை உயர்த்தக்கூடியவர்களுக்கு சாதகமாகவே இருந்துகொண்டிருக்கின்றன. விவசாய உற்பத்தியை பெருக்கவேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் அவர்களுக்கு வேண்டிய உரங்களையோ அல்லது அவர்களுக்கு அவசியப்படுகிற கருவிகளையோ நல்ல முறையில் காலாகாலத்தில் கொடுப்பதற்கு நாம் தயங்கிவிடுகிறோம். அந்தக் காரணத்தினால் தான் விவசாயிகள் தங்கள் பொருள்களை அதிக விலைக்கு விற்று விடுகிறார்கள். இதனால் அவர்கள் பேரில் கோபப்படுவதற்கு ஒன்றுமில்லை. உதாரணமாக இந்த நாட்டில் விவசாயத்தை நம்பி வாழக்கூடியவர்களில் முக்கால்வாசி பேர்கள் ஹரிஜனங்கள்தான். அத்தகையவர்களுக்கு சர்க்கார் அதிகமான சலுகை கொடுக்க வேண்டும். அதற்காக ரூபாயும் இதில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஹரிஜனங்களுக்கு என்று 1956-57-லிருந்து 1960-61 வரையில் 353·10 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 1960-61-ல் 83·45 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் ஹரிஜனங்களுக்கு கிடைத்திருக்கின்ற நலன்களைப்பற்றி பார்ப்போமானால் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 18 ஆயிரம் கிராமங்கள் இருக்கின்றன. ஹரிஜனங்கள் இல்லாத கிராமமே கிடையாது என்று சொல்லிவிடலாம். ஹரிஜனங்களை நம்பித்தான் பணக்காரர்களும் முதலாளித்துவ வர்க்கமும் வாழ்க்கை நடத்திக் 12 noon.
கொண்டிருக்கின்றன. இம்மாதிரி 18 ஆயிரம் கிராமங்களில் இருக்கக்கூடிய ஹரிஜனங்களை மனதில் வைத்துக்கொண்டு இதில் ஒதுக்கியிருக்கிற தொகையையும் பார்ப்போமானால் குறைவு என்று நான் சொல்லவேண்டும். குறிப்பாக 1960-61-ல் 3,000 கிணறுகள் வெட்டுவதற்காக சர்க்காரில் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக இதில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் 18,000 கிராமங்கள் இருக்கின்றன, ஏறத்தாழ ஒரு கிராமத்திற்கு ஒரு கிணறு என்று

[Sri P. S. Santhanam] [15th March 1960

கணக்குப் பார்த்தால்கூட நாம் 18,000 கிணறுகள் வெட்ட வேண்டியிருக்கிறது. (கனம் ஸ்ரீ பி. கக்கன் : ஏற்கனவே பல கிராமங்களில் வெட்டப்பட்டிருக்கிறதே, அதை கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டாமா?) அது வேறு இருக்கிறது. மாடுகள் வாங்குவதற்காக, விவசாயக் கருவிகள் வாங்குவதற்காக, விதைகள் வாங்குவதற்காக 285 ரூபாய் வீதம் 6,790 குடும்பங்களுக்கு சென்ற ஆண்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு நாம் பார்க்கும் நேரத்தில் ஏறத்தாழ 1,954 ஜோடி காளைகள் வழங்கப்படும் என்று இருக்கிறது. மற்றப்படி உரங்கள், விவசாயக் கருவிகள் பற்றி இதில் குறிப்பிடப்படவில்லை. 1,954 ஜோடி காளை மாடுகள் வழங்கப் போகிறோம் என்று இந்தப் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் ஹரிஜன மக்கள் வாழக்கூடிய 18.000 கிராமங்களை எடுத்துக்கொண்டு பார்த்தால் ஒரு கிராமத்திற்கு ¼ மாடு அளவுக்குக்கூட வராது என்று தெரிகிறது. இத்தகைய திட்டத்தைப் போற்றவேண்டுமென்று சொன்னால் எப்படிப் போற்றுவது. சர்க்கார் திட்டம் போடுகிறார்கள், ஹரிஜன மக்கள் நல்ல முறையில் வாழவேண்டும், அவர்களுடைய விவசாயத்திற்கு வேண்டிய மாடுகள் வாங்கிக் கொடுக்கவேண்டும், உரங்கள் கிடைக்க வழி செய்யவேண்டும், மற்ற வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று. ஆனால் ஒரு கிராமத்தில் செல்வாக்கு உள்ளவர்கள் வசதியுள்ளவர்கள்—கிராம உத்தியோகஸ்தர்கள் சொல்லக்கூடியவர்களுக்குத்தான்—கட்சி பாகுபாடுகள் பேரில் இந்த உதவிகளெல்லாம் கொடுக்கப்படுகிறதே தவிர வேறு யாருக்கும் கொடுக்கப்படுவதில்லை. நான் இதைச் சொல்லும்போது அமைச்சர் அவர்களுக்கு என் மீது வருத்தம் ஏற்படலாம்—என்ன சந்தானம் இப்படி சொல்கிறானே—என்று. நான் இதை வேதனையோடுதான் சொல்லிக்கொள்ள வேண்டியிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்தில் தையல் யந்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள். அத்தனையும் காங்கிரஸ்காரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. வட ஆற்காடு மாவட்ட எம்.எல்.ஏ.க்கள் பலர் இருக்கிறார்கள். எம்.பி. ஒருவர் இருக்கிறார், 7 அல்லது 8 எம்.எல்.ஸி. க்கள் இருக்கிறார்கள். அவர்கள் யாரையும் கேட்பது கிடையாது. யாரோ இரண்டு அல்லது மூன்று பேர்கள் சொல்லுகிறார்கள் என்று, ஹரிஜன இலாக்காவினர் சொல்லுகிறார்கள் என்று அத்தகையவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. நல்ல முறையில் பார்த்துக்கொடுக்காமல், வேண்டியவர்களுக்கு மட்டும் கொடுக்கப்படுகிறது. இந்த முறையானது ஏனோ தானோ என்று இருக்கிறது என்பதைத்தான் இந்த மன்றத்தில் எடுத்துக் கூறி நான் கண்டிக்க வேண்டியிருக்கிறது. அது மாத்திரமல்ல. சர்க்கார் ஹரிஜனங்களுக்கு காலனி கட்டிக்கொடுக்கவேண்டும் என்று பல லட்சக் கணக்கான ரூபாய்களை ஒதுக்கியிருக்கிறார்கள். சாதாரண முறையில். . .

SRI S. THANGAVELU : On a point of Order Sir, மதிப்பிற்குரிய நண்பர் சொன்னார், காங்கிரஸ்காரர்களுக்குத்தான் கொடுக்கிறார்கள், மற்றவர்களுக்குக் கொடுப்பதில்லை என்று. எப்படிக் கொடுத்தாலும் ஆதித்-திராவிட மக்களுக்கு—ஹரிஜன மக்களுக்கு—மட்டும்தானே கொடுக்கப்படுகிறது, வேறு யாருக்கும் கொடுக்கப்படுவதில்லையே என்று கேட்க விரும்புகிறேன்.



15th March 1960] [Sri S. Thangavelu]

TEMPORARY CHAIRMAN (SRI T. SAMPATH) : இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை. கனம் அங்கத்தினர் சந்தானம் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

SRI P. S. SANTHANAM : கனம் அங்கத்தினர் சொல்வதைப் போல் புலையன், பறையன், பள்ளன், என்று இம்மாதிரி 18 ஜாதிகள் இருக்கின்றன. இவர்களுக்குள் கொடுப்பதைப்பற்றி எனக்கு ஆட்சேபனையில்லை. ஆனால் ஒருதலைப் பட்சமாக கொடுக்கக் கூடாது என்றுதான் சொல்லுகிறேன். எந்தப் பொருளை யார் யாருக்குக் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. தையல் மெஷினை தையல் தெரியாதவர்களுக்குக் கொடுக்கிறார்கள். அதனால் அவர்கள் அந்த மெஷினை விற்றுச் சாப்பிடக்கூடிய நிலையில் இருக்கிறார்கள்.

THE HON. SRI P. KAKKAN : கனம் சேர்மன் அவர்களே, இந்த மாதிரி சாமான்கள், மாடுகள் முதலியவைகள் கொடுப்பதெல்லாம், அதற்கென்று ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு பரிசீலனை செய்து, கருவிகளாக இருந்தால் அந்தத் தொழிலை கற்றுக் கொண்டிருக்கிறார்களா என்று பார்த்துத்தான் கொடுக்கிறார்கள் என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். அவர்கள் இந்த மன்றத்தில் பிரதிநிதியாக இருப்பதால் அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். இதில் ஒன்றும் பட்சப் பிரதி பட்சமாகக் கொடுப்பதில்லை என்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI P. S. SANTHANAM : ஆனால் உண்மையிலேயே நான் மன வேதனையோடு சொல்லுகிறேன். இந்த சட்ட மன்றத்தில் உள்ள எந்த அங்கத்தினரைக் கேட்டு எதுவும் செய்வதில்லை. எனது தொகுதியில் 4 தையல் மெஷின்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு சப்-ரிஜிஸ்டிரார் ஆபிஸ் கிளார்க்குக்கு ஒரு மெஷினும், கிராம சேவக்கின் சொந்தக்காரருக்கு ஒரு மெஷினும், இன்னும் ஒரு உத்தியோகஸ்தருக்கு ஒரு மெஷினும், இப்போது எழுந்து பேசிய மதிப்பிற்குரிய தங்கவேலு அவர்களுக்கு ஒரு மெஷினும், அவருடைய சகபாடிக்கு ஒரு மெஷினும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லாம் காங்கிரஸ்காரர்கள் என்பதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. யார் இவர்களைப் பற்றி ஸர்ட்டிபை செய்தார்கள்? இவர்களுக்கு உண்மையிலேயே தையல் தெரியுமா? மக்களுடைய பிரதிநிதிகளைக் கேட்டுக் கொடுத்தார்களா? இல்லை. மக்கள் பிரதிநிதியாக எம்.எல்.ஏ.க்கு என்ன மதிப்பு இருக்கிறது. சர்க்காரால் நாமினேட் செய்யக்கூடிய அங்கத்தினர்களை வைத்துக் கொண்டு அவர்கள் கமிட்டி போட்டு செய்தார் என்று சொல்லக் கூடிய நிர்வாக அமைப்பைப் பற்றித்தான் நான் வருத்தத்தோடு சொல்லவேண்டியிருக்கிறது. ஹரிஜனங்கள் அன்பினால் முற்போக்கு அடையவேண்டும், அவர்கள் பொருளாதாரத் துறையில்

[Sri P. S. Santhanam] [15th March 1960

முன்னேற வேண்டும், கல்வித் துறையில் முன்னேற வேண்டும் என்று சர்க்கார் நல்ல திட்டங்கள் போட்டிருந்தும்கூட அந்தத் திட்டங்களெல்லாம் நல்ல முறையில் அவர்களுக்குப் பயன்படவில்லை.

ஹரிஜனங்களுக்குக் கல்வி வசதி செய்து கொடுக்க செங்கம் தாலூகாவில் 3 பிர்க்காவிலும், திருவண்ணாமலை தாலூகாவில் 3 பிர்க்காவிலும் மொத்தம் 17 ஹரிஜன வெல்ஃபர் ஸ்கூல்கள் இருக்கின்றன. மழை வந்தால் உள்ளேதான் விழுகிறது. வெய்யிலும் உள்ளேதான் விழுகிறது. இப்படிப்பட்ட நிலையில் இருக்கின்றன. நான்கில் ஒரு பங்கு கொடுத்தால் பாக்கிப் பணத்தை சர்க்காரிலிருந்து கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் எப்படிக் கொடுக்க முடியும்? அவர்களுடைய நிலையை உணர வேண்டும். அமைச்சர் அவர்கள் இதை நன்கு பரிசீலித்து வேண்டிய பணத்தை ஒதுக்கி அந்தத் தொகை பூராவும் நலல முறையில் பயன்படும்படி செய்யவேணடும்.

நிதி அமைச்சர் அவர்கள் கடைசியாகச் சொல்லியிருக்கிறார்கள், அழுகக்கூடிய காய்கரிகளுக்கு வரியைத் தள்ளிவிட்டோம் என்று. சென்ற வாரத்தில் கூட வருகடலை வியாபாரிகள் வறண்ட மனத்தோடு கண்டு பேசியிருக்கிறார்கள். இதைக் கொஞ்சம் சிந்துத்துப் பார்க்கவேண்டும். வங்காளத்திலிருந்து வருகிறது பச்சைக் கடலை. அவர்கள் இரண்டு மூட்டை அல்லது ஒரு மூட்டை வறுத்து வறுகடலை தயாரிக்கிறார்கள். அது வறுத்த பிறகு இரண்டு அல்லது மூன்று நாட்கள் இருந்தால் அதனுடைய நிறம் மாறி விடுகிறது. அதை பிரதி தினமும் வறுக்க வேண்டும், பிரதி தினமும் விற்க வேண்டும். அதற்கு இப்போது பல முனை வரி போட்டிருக்கிறார்கள். இதை ஒரு குடிசைத் தொழில் போல பாவித்து இதற்குப் போட்டிருக்கக்கூடிய வரியை நீக்கி அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

SRI M. A. MUTHIA CHETTIAR: அவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டின் வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்த நிதி மந்திரி அவர்கள் சொல்லியதைப்பற்றி நான் பாராட்டுகிறேன். நான் பார்த்த வரையில் 8 வருஷங்களாக அவர்கள் பட்ஜெட்டை அசெம்பிளியின் முன்பு சமர்ப்பித்துச் செய்த பிரசங்கத்தில் இதுதான் ரொம்ப அழகாக எழுதப்பட்டிருக்கிறது என்பதை அவர்களே கூட பார்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இதை ரொம்ப நன்றாக எழுதியிருக்கிறார்கள். அதோடு அவர்கள் இந்த 8 வருஷங்களாக நம்முடைய ராஜ்யத்தின் வரவு-செலவு இலாகாவைத் திறம்பட நடத்தி வருவதைப் பற்றி நாம் மகிழ்ச்சியடைகிறோம். அதுவும் சாதாரணமாக வரவு-செலவுத் திட்டத்தைப்பற்றி மகிழ்ச்சி அடைவதாகச் சொல்வது சரியாகாது. ஓரளவுக்கு இரண்டு ஐந்தாண்டு திட்டங்களைப் பூர்த்தி செய்திருப்பது பெருமைக்குரியது. இதைப் பற்றி அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் நம் ராஜ்யத்திலுள்ள ஆபீஸர்களுடையவும், டிபார்ட்மெண்டுகளுடையவும் உதவியினால்தான் இவ்வளவும் சாதிக்க முடிந்தது என்று அவர்களுக்குப் பாராட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களைப் பாராட்டும் விஷயத்தில் இந்தச் சட்ட சபையிலுள்ள எல்லோரும் கலந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். இது வரையில் அவர்கள் டில்லி சென்று பல கூட்டங்களில் சண்டை போட்டு, நமது திட்டங்களுக்காக பணம் கொண்டு வந்து திட்டங்களையெல்லாம் நிறைவேற்றியிருப்பது பற்றி நாம் மகிழ்ச்சியடைகிறோம். வரும் காலத்திலும் அவர்கள் செய்யக் கூடியதற்கு இந்தச் சட்டசபையானது அவர்களுக்கு உதவியாக, துணையாக, இருக்கவேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பொதுமக்களின் ஆர்வம் குறைந்தாலும், கனம் அமைச்சர்கள் இன்னும் அதிகமான பணத்தை நமது ராஜ்யத்திற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து கொண்டுவர வேண்டும். அவர்கள் இதுவரை செய்துள்ள முயற்சியை நான் குறைத்துப் பேசவில்லை. அவர்கள் இதுவரையில் எவ்வளவோ சிரமம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டிருந்திராவிட்டால், இவ்வளவு பணம் வந்திருக்காது, திட்டங்கள் பூர்த்தியடைந்திருக்காது. பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களும், ஹைட்ரோ எலெக்ட்ரிக் திட்டங்களும் பூர்த்தியடைந்ததற்கு அவர்களுடைய பெரு முயற்சிதான் காரணம். இனிமேல் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். விவசாய அபிவிருத்திற்கு முக்கியமாக வேண்டியது நீர்ப்பாசனத் திட்டங்கள்தான். டாம்ஸ் எலெக்ட்ரிசிடிக்கு வேண்டும். எலெக்ட்ரிசிடியை விவசாய காரியங்களுக்கும் பயன்படுத்த வேண்டும் என்று கனம் அமைச்சரே சொல்லியிருக்கிறார். குந்தாத் திட்டம் முடிகிறது. இன்னும் பல திட்டங்கள் போட்டிருக்கிறார்கள். நெய்வேலித் திட்டம் வேறு இருக்கிறது. தெர்மல் ஸ்டேஷன்ஸ் ஜாஸ்தியாக வேண்டும். அவை ஜாஸ்தியானால் எலெக்ட்ரிகல் ரிஸோர்ஸஸ் ஜாஸ்தியாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். சென்ற வருஷம் கனம் நிதி அமைச்சர் ஸோனல் கவுன்சிலைப் பற்றிச் சொன்னார். இந்தத் தடவை அவர் அதைப் பற்றிக் குறிப்பிடவில்லை. ஸோனல் கவுன்சில் மூலம் இந்த அரசாங்கத்தார் எடுத்த நடவடிக்கைகளை சட்டசபை அங்கத்தினர்களுக்கு, கனம் நிதி அமைச்சரோ கனம் மராமத்து அமைச்சரோ தெரிவிப்பார்கள் என்று நம்புகிறேன். நமது ராஜ்யத்தில் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் இல்லை என்று சொல்வதற்கில்லை.



15th March 1960] [Sri M. A. Muthia Chettiar]

THE HON. SRI C. SUBRAMANIAM: மற்ற ராஜ்ய சர்க்கார்களுடன் பேசி அவர்களுடைய சம்மதத்தின் பேரில்தான் அவற்றை நாம் பயன்படுத்த முடியும். அதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன. ஒவ்வொரு தடவையும் எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டிருக்க வேண்டியது அவசியமில்லை.

SRI M. A. MUTHIA CHETTIAR: அதற்கு ஸோனல் கவுன்சிலில் முயற்சி செய்வார்கள் என்று நினைக்கிறேன்.

[15th March 1960

THE HON. SRI C. SUBRAMANIAM: லேபர் கவுன்சிலில் தீர்மானிக்கப்பட்டாலும் தீர்மானிக்கப்படலாம், அல்லது நாமே நேரில் பேசி சம்மதித்துக் கொண்டாலும் சம்மதித்துக்கொள்ளலாம். அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படவில்லை என்று சொல்வதற்கில்லை.

SRI M. A. MUTHIA CHETTIAR: எப்படியாவது மைசூர் அரசாங்கத்துடனும் கேரள அரசாங்கத்துடனும் பேசித் தண்ணீர் கொண்டுவந்தால் நல்லது. கிருஷ்ணா-கோதாவரித் தண்ணீரை இங்கு கொண்டுவர வேண்டும். கிருஷ்ணா கோதாவரித் தண்ணீரைக் கொண்டு வந்து தண்ணீர் சப்ளை வேண்டியிருக்கிறது. கோதாவரித் தண்ணீர்தான் கிருஷ்ணாவுக்குப் பாய வேண்டும். செங்கற்பட்டு, சென்னை, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலத்தில் சில பகுதிகள், திருச்சிராப்பள்ளியின் 'அப்பர் ரீச்சஸ்' ஆகிய இடங்களுக்கு கிருஷ்ணாத் தண்ணீரை கொண்டுபோகக் கூடும் என்பது என் அபிப்பிராயம். கடலூரிலிருந்து வேலூருக்குத் தண்ணீர் கொண்டு வரலாம். கால்வாய் வெட்டி மணப்பாறை வழியாக திருப்பத்தூர், தொண்டி முதலிய இடங்களுக்குத் தண்ணீர் கொண்டுவரலாம். இதற்கான திட்டம் சாதாரணமாக நிறைவேற்றப்படக்கூடியது. கனம் அமைச்சர்கள் ஸ்ரீ காமராஜ், ஸ்ரீ கக்கன் இவ்விருவருக்கும் இது நன்றாகத் தெரிந்ததுதான். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பிரமாதமாகச் செலவு செய்ய வேண்டியதில்லை. சுமார் 10 கோடி ரூபாய்தான் செலவாகக் கூடும். இத்திட்டத்தை கனம் அமைச்சர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக வெகு காலமாகச் சொல்லிக்கொண்டிருக்கும் பம்பையாற்றுத் திட்டத்தின் மூலம் திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம் ஆகிய மூன்று ஜில்லாக்களுக்கும் பாசன வசதி அளிக்க முடியும். அந்தத் திட்டம் வந்தால் இப்போது 'நான்-இர்ரிகேடட்' ஏரியாவாக இருக்கும் இடங்களுக்கும் பாசன வசதி அளிக்கலாம். அது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வந்தாலும் போதும். அதைக் கொண்டு வருவதற்கு கனம் அமைச்சர் செய்துவரும் முயற்சி கைகூட வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

*1960-1961*-ல் *32* கம்யூனிடி டெவலப்மெண்ட் ப்ளாக்குகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். பிற்பட்ட பகுதிகளை முதலில் எடுத்துக்கொள்ள வேண்டும். ராமநாதபுரம் ஜில்லாவில் முதுகுளத்தூர் உட்பட எல்லாப் பிற்பட்ட பகுதிகளிலும் கம்யூனிடி டெவலப்மெண்ட், நாஷனல் எக்ஸ்டென்ஷன் ஸெர்விஸஸ் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

மேலும், சிறு பாசனத் திட்டங்கள் சம்பந்தமாக கனம் அமைச்சர்கள் செய்துள்ள முயற்சி எல்லோருக்கும் திருப்தியாக இருக்கும் என்று நினைக்கிறேன். 'ஸப்ஸாயில் வாடர்ஸை' பயன்படுத்துவதைப் பொறுத்த வரையில், முன்பு ஸப்ஸிடியாக 250



15th March 1960] [Sri M. A. Muthia Chettiar]

ரூபாய் கொடுத்து வந்தார்கள்; இப்போது இதற்கு 1,000 ரூபாய் கொடுக்க முன்வந்திருக்கிறார்கள். இதைப் பாராட்டுகிறேன். இருந்தாலும், ட்யூப் வெல்ஸ் போட்டால்தான் நன்றாகத் தண்ணீர் வரும். ஆயிரக்கணக்கான ட்யூப் வெல்ஸுக்கு ஏற்பாடு செய்தால் நல்லது. ஆற்றுப்பாசன வசதி இல்லாத இடங்களில் அதைச் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் சம்பந்தமாக சட்டசபை அங்கத்தினர்களையும் மற்றவர்களையும் கொண்ட ஒரு கமிட்டியை ஏற்படுத்தினார்கள். அதுபற்றி சந்தோஷப்பட்டோம். அந்தக் கமிட்டி கூடிப் பேசுவதாக பத்திரிகைகளிலிருந்து அறிகிறோம். அந்தக் கமிட்டியின் முடிவுகளையும் ஆலோசனைகளையும், டெல்லிக்கு அவைகளைக் கொண்டு போவதற்குமுன் இந்த சபையில் தெரிவித்து அவைகள் பற்றி இரண்டு, மூன்று நாட்கள் விவாதிப்பதற்கு இந்த சபை அங்கத்தினர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்று நம்புகிறேன். சட்டசபைக் கமிட்டி அமைக்கப்பட்டு அது ஆலோசித்திருந்தாலும் அதன் ஆலோசனைகளும் சட்ட சபைக்கு வரவேண்டியது அவசியம். சட்ட சபைக் கமிட்டியின் ஆலோசனைகளை சட்ட சபையின் இந்தக் கூட்டம் கலைவதற்குள், அதாவது ஏப்ரல் மாத முடிவிற்குள் இந்த சபையில் கொண்டு வந்து விவாதித்தால் நல்லது. கனம் அமைச்சர்கள் டெல்லியில் அந்த ஆலோசனைகளை வற்புறுத்திப் பேசுவதற்கு அத்தகைய விவாதம் உதவும்.

நமது சர்க்காரின் சம்பளக் கமிஷனின் ரிப்போர்டு சீக்கிரம் வெளிவரும் என்று சொல்லியிருக்கிறார்கள். கடந்த சில வருஷங்களில் நமது ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்கு கொஞ்சம் அதிகமான சம்பளம் அளித்ததால் சர்க்காருக்கு அதிகச் செலவு ஏற்பட்டிருக்கிறது என்று கனம் நிதி அமைச்சர் சொல்லியிருக்கிறார். மத்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் செய்யும் இதே மாதிரியான வேலையைத்தான் ராஜ்ய சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் செய்கிறார்கள். ஆனால் இரு சர்க்கார்களின் உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களுக்கும் இடையில் அதிக 'டிஸ்பாரிடி' இருக்கிறது. நமது ராஜ்ய சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுப்பதற்கு சர்க்காருக்கு அதிகப் பணம் வேண்டும் என்று சொல்லப்படுகிறது. பாக்கு, உருளைக்கிழங்கு முதலியவைகளுக்கு இருந்த வரி நீக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவைகளுக்கு இருந்த வரியை நீக்கியது நல்லதுதான். இருந்தாலும், நமது ராஜ்ய சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

வீட்டு வசதியைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சென்னை மக்களைக் காப்பாற்ற வேண்டுமானால், இந்த ஊர் விரிவாகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். ஸாடிலைட் டவுன்ஸை செங்கல்பட்டு போன்ற இடங்களுக்குப் பக்கத்தில் அமைக்கவேண்டும். 'க்ரேடர் மெட்ராஸ் ஸ்கீமையும்' ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இப்போது நவதானியங்கள் சென்னைக்கு லாரிகள் மூலம் ஆந்திர தேசத்திலிருந்து வருகின்றன. ஜனங்

களுக்கு பல தானியப் போக்குவரத்து வசதிகள் செய்துகொடுக்கலாம். ரேணிகுண்டாவிலிருந்து விழுப்புரத்திற்கு ஒரு ரயில் பாதையும், செங்கற்பட்டிலிருந்து அரக்கோணத்திற்கு ஒரு ரயில் பாதையும், ஆவடியிலிருந்து தாம்பரத்திற்கு ஒரு ரயில் பாதையும் அமைத்தால் இந்த ஆறு இடங்களிலும் கோடவுன்ஸ் ஏற்பட்டு ஜனங்களுக்கு சௌகரியம் ஏற்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

பர்மா, மலேயா, ஸிலோன் முதலிய நாடுகளிலிருந்து நம் நாட்டிற்கு 'இவாக்வீஸ்' அதிகமாக வருகிறார்கள். அவர்களுடைய குழந்தைகளுக்கு கல்விச் சலுகைகள் அளிக்க வேண்டும். இதற்கு இந்திய அரசாங்கம் 10 லட்ச ரூபாய் கொடுத்தால் போதும். அவர்கள் கொடுக்காவிட்டால், சென்னை அரசாங்கமே இதற்கென 10 லட்ச ரூபாய் ஒதுக்கிவைத்து, இவர்களுக்கு அரைச் சம்பளச் சலுகையாவது கொடுக்க ஏற்பாடு செய்வார்கள் என்று நம்புகிறேன்.

ஹைவேஸைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கல்கத்தா, பம்பாய் ஆகிய இடங்களுக்குச் செல்லும் ஒரு பாதையைப்பற்றி இதற்கு முன்பு கனம் நிதி அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். அதைப் பற்றி இப்போது கனம் நிதி அமைச்சர் குறிப்பிடவில்லை. அதே மாதிரி பம்பாயிலிருந்து வெஸ்ட் கோஸ்ட் வழியாக சென்னைக்கு வரக்கூடிய ரோடைப்பற்றி இதற்கு முன்பு கனம் நிதி அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் இப்போது அதைப்பற்றி அவர் குறிப்பிடவில்லை. அந்த ரோடைப்பற்றி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆலோசிப்பார்கள் என்று நம்புகிறேன். இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களையும் வெற்றிகரமாக நடத்திய கனம் நிதி அமைச்சரைப் பாராட்டுகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தையும் அவர் வெற்றிகரமாக நடத்துவார் என்று நம்புகிறேன்.

SRI A. E. CHANDRASEKHARA NAYAGAR : சபைத் தலைவர் அவர்களே, இச்சபையில் சமர்ப்பித்துள்ள நிதிநிலை அறிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மிகச் சிறந்த முறையில் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதிகமாக ரிவைஸ்டு எஸ்டிமேட் வரமுடியாமல் நல்ல முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

கல்விக்காக கடந்த ஆண்டைவிட அதிகமான தொகை இவ்வாண்டு ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் அரசியல் சட்டத்தில் உறுதியளிக்கப்பட்டபடி கட்டாயக் கல்வி முறையை அமுலுக்குக் கொண்டு வருவதிலும், தேசிய பாஷையான ஹிந்தியைப் பரப்புவதிலும் அதிக அக்கறை செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும் மத்திய சர்க்கார் வசூலிக்கும் இன்கம் டாக்ஸ், எக்ஸைஸ் போன்றவைகளின் மூலம் நம் ராஜ்யத்திலிருந்து கிடைக்கும் மொத்த தொகையையும் கொடுத்து,





அதிலிருந்து நாம் பெறும் சதமானம் எவ்வளவு என்ற தொகையையும் காண்பித்தால் மிகவும் சௌகரியமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சாதாரணமாக "மலேரியா எராடிகேஷன்", "பிலேரியா கண்ட்ரோல்" ஆகியவைகளுக்காக கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்படுகின்றன. அதனால் என்ன பலன் அடைகிறோம்? இன்றைய தினம் பல திட்டங்கள் மத்திய சர்க்காராலும், ராஜ்ய சர்க்காராலும் நடத்தப்பட்டு வருகின்றன. மத்திய சர்க்காரால் நடத்தப்படும் ஸ்கீம் நல்ல முறையில் மக்களுக்கு தெரிவது என்று கருதுகிறேன். ஏராளமான பணம் உபகரணங்களும், வாகனங்களும் வாங்குவதற்காகச் செலவழிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் திட்டங்கள் நடைபெறும் முறை அதிகாரிகளுக்கே புரியவில்லை. அங்குள்ள மக்களுக்கும் புரியவில்லை. இந்த மாதிரித் திட்டங்களை நடத்தும்போது அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள பொது ஸ்தாபனங்களுக்கும், பொது மக்களுக்கும் தெரியப்படுத்தி, எந்தெந்த இடங்களில் ஆரம்பித்து நடத்தப் போகிறார்கள் என்பதை நல்ல முறையில் விவரித்து விளம்பரம் செய்து நடத்தினால் இதனால் மக்களுக்கு நல்ல பலன் ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சர்க்காரால் செய்யப்படும் பல அபிவிருத்தி வேலைகளில், 25,000 ரூபாய்க்கு மேற்பட்ட வேலைகளைப் பற்றிய எல்லா விவரங்களையும் புஸ்தக ரூபத்தில் வெளியிடவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். கூடுமானால் அந்த வேலைகள் நடக்கும் பிரதேசங்களிலுள்ள மக்களுக்குத் தெரியும் வகையில் புத்தக ரூபமாக திட்டத்தைப் பற்றிய எல்லா விவரங்களையும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். பல லட்சக் கணக்கான ரூபாய் வேலைகள் நடக்கின்றன. ஆற்காடு, ராணிப்பேட்டை முனிசிபாலிடியில் குடி நீர்த் திட்டம் 10 லட்சம் ரூபாயில் நடைபெற்று வருகிறது. அதைப் பற்றிய எஸ்டிமேட் விவரம் ஸ்தல ஸ்தாபனத்திடம்கூடக் கிடையாது. ஆகவே, இதையெல்லாம் தெரியப்படுத்தும் வகையில் புஸ்தக ரூபமாக விவரங்களைக் கொடுக்கவேண்டும்.

வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும்போது ஜில்லாக்களிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளை மனதில் கொண்டு தயாரிக்க வேண்டும். சில ஜில்லாக்கள் மிகவும் பின் தங்கிப் போவது, சில ஜில்லாக்கள் முன்னேறிக்கொண்டே போவது என்று இருந்தால் போகப் போக சங்கடமான நிலைமை ஏற்பட்டு வரும். குறிப்பாக வட ஆற்காடு ஜில்லா பின் தங்கிய ஜில்லா. விவசாயத்தில் மிக்க ஊக்கம் உள்ளவர்கள், அந்த ஜில்லா மக்கள். போதுமான வசதிகள் அங்கு கிடையாது. மாகாணத்திலேயே தஞ்சை ஜில்லாவுக்கு அடுத்தபடியாக அதிகமான உணவு உற்பத்தியை வட ஆற்காடு ஜில்லா மக்கள்தான் செய்கிறார்கள். இந்த ராஜ்யத்திலேயே வேறு எந்த ஜில்லாவிலும் இல்லாத அளவுக்குக் கிணறுகள் இருக்கின்றன. இந்த ஜில்லாவுக்கு லிப்ட் இரிகேஷன் ஸ்கீம் மூலம் தண்ணீர் கொடுக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

[Sri A. E. Chandrasekhara Nayagar] [15th March 1960

ஏற்கனவே பாலாறு பேரேஜ் என்று ஒரு ஸ்கீம் 50 லட்சம் ரூபாய் திட்டம் தயாரிக்கப்பட்டது. காவேரிப்பாக்கம் ஏரிக்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. அவைகள் எல்லாம் இந்த பட்ஜெட்டில் காணப்படவில்லை.

தொழில் வளம் எல்லா ஜில்லாக்களிலும் பரவலாக விஸ்தரிக்கப் படவேண்டும். சென்னையிலும், அடுத்தாற்போலுமே ஏற்படுத்திக் கொண்டிராமல் ஜில்லாக்கள் தோறும் ஏற்படுத்தி வேலை வாய்ப்புகளை அதிகரிப்பது சிறந்த முறையாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த முறையில் வட ஆற்காடு ஜில்லாவிலும் பெரிய தொழில்களை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(Deputy Speaker in the chair.)

என்னுடைய தொகுதியில் பாரி கம்பெனி கழிவு நீரினாலும், தோல் ஷாப் கழிவு நீரினாலும் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் பாழடைந்து வருகின்றன. அங்கே பலர் சுகாதாரமற்ற முறையிலே வாழ்க்கை நடத்த வேண்டிய நிலையிலே இருக்கிறார்கள். இந்த நிலையைப் பல தடவை இந்தச் சபையிலும் தெரிவித்திருக்கிறோம். அதிகாரிகளுக்கும் தெரிவித்திருக்கிறோம். இன்னும் நிவாரணம் கிடைக்கவில்லை. அதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிற்பட்ட மக்கள் சம்பந்தமாக சர்க்காருடைய நிலை, கொள்கை என்னவென்று திட்டவட்டமாகச் சொல்ல முடியவில்லை. பிற்பட்ட மக்களுடைய குரல் எழுப்பப்படவில்லையென்பதால் புறக்கணித்துக்கொண்டே போகக் கூடாதென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். அரசியல் சட்டத்தில் உறுதியளிக்கப்பட்ட, காகா கலேல்கார் கமிஷன் தயாரித்த ரிப்போர்ட் அமுலுக்குக் கொண்டுவரப் படாமல் இருக்கிறது. அதை அமுலுக்குக் கொண்டுவர மத்திய சர்க்காரை வற்புறுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

விலைவாசி உயர்ந்து கொண்டு போகிறது என்று சொல்லப்படுகிறது. சித்தாந்த ரீதியாகச் சொல்லுகிறார்களே தவிர, அநுபவ ரீதியாக விலைவாசி உயர்வு எந்த அளவுக்கு மக்களைப் பாதிக்கிறது என்று சொல்ல முடியாது. விலை உயர்வினால் யார் பலன் அடைகிறார்கள்? உற்பத்தி செய்கிறவர்களுக்கு லாபம் போய்ச் சேருகிறது. உற்பத்தி செய்கிறவர்களுக்கு இன்றைய தினம் பல சௌகரியங்களை சர்க்கார் செய்து கொடுத்திருக்கிறது. விலைவாசி உயர்வினால் பாதகம் எவ்வளவு? சாதகம் எவ்வளவு? என்று கணக்குப் பார்த்தால் சாதகந்தான் அதிகமாக இருக்குமென்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

கிராமாந்தரங்களில் சுகாதாரம் சீர்கேடுற்றிருக்கிறது என்று ஏற்கனவே இந்தச் சபையில் தெரிவித்திருக்கிறோம். கிராம சுகாதாரத் திட்டத்தை தயாரித்து நம் ராஜ்யம் பூராவுக்கும் விஸ்தரித்து கிராம மக்கள் நல்ல வாழ்க்கை நடத்தச் செய்ய



15th March 1960] [Sri A. E. Chandrasekhara Nayagar]

வேண்டும். ஒரு "ரூரல் ஹெல்த் ஸ்கீம்"-ஐ தயாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், மனித சக்தியை அதிகமான அளவுக்கு நல்ல முறையில் பயன்படுத்த 10 கோடி ரூபாய் திட்டத்தைத் தயாரிக்க நிபுணர் கமிட்டி ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சர்க்கார் பல அரிய பெரிய காரியங்களைச் செய்து வருகிறது. அந்தக் காரியங்கள் எல்லாம் மக்களுக்குப் புரியாமல் இருக்கின்றன. போதுமான விளம்பரம் கிடையாது. நம்முடைய விளம்பர இலாகா இவைகளையெல்லாம் தகுந்தாற்போல் விளம்பரம் செய்யவில்லை என்பது என் கருத்து. ஆகவே, நாட்டிலுள்ள ஒவ்வொரு ஏழைக் குடியானவனும் திட்டங்களைப் பற்றி புரிந்து கொள்ளக்கூடிய வகையில் விளம்பரம் செய்யவேண்டியது மிகவும் அவசியம் என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த பட்ஜெட்டை வரவேற்று இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*SRI M. JANGAL REDDIAR: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த 1960-61-ம் வருஷத்திய பட்ஜெட்டைப் பார்த்தால் அணுவளவு திருப்தி ஏற்பட்டிருக்கிறது. இதற்குமுன் தயாரிக்கப்பட்ட பட்ஜெட்டுக்கும் இந்த பட்ஜெட்டுக்கும் வித்தியாசம் என்னவென்றால், இதில் வரி ஒன்றும் போடவில்லை. இதுதான் 'எலெக்ஷன் ஸ்டண்ட்' என்று சொல்வது. 'எலெக்ஷன் ஸ்டண்டை' முன்னிட்டு பட்ஜெட்டில் வரி போடாமல் தயாரித்திருப்பார்களோ என்னமோ தெரியவில்லை. இதற்குமுன் அழுகும் பொருள்களுக்கு வரி விதிக்கும்போது நாங்களெல்லோரும் அதை எதிர்த்தோம். 'அந்த வரி வேண்டாம், பல லட்சம் ரூபாய் அதனால் வந்துவிடாது' என்று சொன்னோம். அப்பொழுது அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. எலெக்ஷனை முன்னிட்டு இப்பொழுது அதை வாபஸ் வாங்கிவிட்டார்கள். வாபஸ் வாங்கினதைப்பற்றி சந்தோஷப்படுகிறோம். அந்த மக்களுக்காவது சலுகை இருக்கட்டும், அவர்கள் நன்றாக வாழட்டும் என்று நினைக்கிறோம். பாலுக்கு அந்த சலுகை கொடுக்கவில்லை என்று குறை சொல்கிறேன். மக்களுக்குப் பால் அவசியம். அதற்கு வரியை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். 12-30 p.m.

மத்திய அரசாங்கத்தார் வரி போடும்போது மாகாண அரசாங்கங்களையும் கொஞ்சம் கலந்து போட்டால் நன்றாக இருக்கும். நாட்டு மக்களுடைய நிலை மாகாண அரசாங்கத்திற்குத் தெரிவதைப்போல் மத்திய அரசாங்கத்திற்குத் தெரியாது. ஏனென்றால் அவர்களுக்கு நேரடியாக பழக்கமோ தொடர்போ மக்களோடு இருப்பதில்லை. மாகாண அரசாங்கத்தைக் கேட்டு மத்திய அரசாங்க பட்ஜெட் தயாரிக்கவேண்டும். மத்திய அரசாங்கத்தை மாகாண அரசாங்கம் அணுகி, 'நீங்கள் வரி போடும்போது எங்களைக் கலந்துகொண்டு, மக்களுக்கு நலனாக உள்ளவகையில் செய்யவேண்டும்' என்று சொல்லவேண்டும். சில சந்தர்ப்பங்களிலாவது தலையிடவேண்டும்.

[Sri M. Jangal Reddiar] [15th March 1960

எலெக்ட்ரிக் பம்ப் செட்டுக்கு வரி போடுகிறார்கள். எலெக்ட்ரிக் பம்ப் செட் விவசாயத்திற்கு இன்றியமையாதது. அதற்கு வரி போட்டால், அந்த வரி விவசாயிகளைத்தான் பாதிக்கிறது. அந்த வரி மூலம் விவசாய மக்கள் எப்படி உருப்பட முடியும்? ஒரு பம்புக்கு வருஷத்திற்கு, பத்து ரூபாய், என்று ஏற்றிக்கொண்டு போகிறார்கள். அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருப்பதால் அது விவசாயிகளுடைய க்ஷேம நிலைக்கு உகந்தது இல்லை என்று அரசாங்கத்திற்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

வரிகளைப் போட்டு மக்களைக் கசக்கிப் பிழிகிறார்கள். மக்களுக்காக அரசாங்கமா? அரசாங்கத்திற்காக மக்களா? மக்களுக்காகத்தான் அரசாங்கம் இருக்கவேண்டும். இப்பொழுது அரசாங்கத்திற்காகத்தான் இந்த மக்கள் வாழ்கிறார்களோ என்று நினைக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. இந்தப் போக்கை மாற்றிக் கொள்ளவேண்டும்.

சென்ற பட்ஜெட்டில் க்ரூட் ஆயிலுக்கு வரி போட்டபோது அதை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டதற்கு, பிற்பாடு விதிவிலக்கு அளிப்பதாகச் சொன்னார்கள். இந்த பட்ஜெட்டில் அது பற்றி ஒன்றும் காணோம். க்ரூட் ஆயிலுக்கு வரி போட்டதனால் விவசாயிகள்தான் பாதிக்கப்படுகிறார்கள். ஏனென்றால் அவர்கள்தான் அதைப் பயன்படுத்துகிறார்கள். அதைக் கொண்டு பம்ப் செட் போட்டு உணவு உற்பத்திக்குப் பயன்படுத்துகிறார்கள். உணவு உற்பத்தி பெருகவேண்டுமென்று அரசாங்கம் ஒரு பக்கம் சொல்கிறது; வெளி நாட்டிலிருந்து பல கோடி ரூபாய்க்கு உணவுப் பொருள்களை இறக்குமதி செய்கின்றார்கள். ஆனால், உள்நாட்டில் விவசாய உற்பத்தி கெடுவதற்கு எவ்வளவு சீர்கேடு செய்ய முடியுமோ அவ்வளவும் செய்கின்றார்கள். பத்து ரூபாய்க்கு விற்ற ஒரு பாரல் க்ரூட் ஆயில் இப்பொழுது 70 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இவ்வளவு விலை கொடுத்து வாங்கி விவசாயி பயிரிட முடியுமா என்று கேட்கிறேன். சென்ற பட்ஜெட்டில் சொன்னார்கள் விவசாயிகளுக்கு ஒரு பர்மிட் முறை ஏற்படுத்தப் போகிறோம் என்று. ஆனால், இந்த பட்ஜெட்டில் அதுபற்றி ஒன்றும் காணோம். அதனால் விவசாயிகளாகிய நாங்கள் ஏமாற்றம் அடைந்திருக்கிறோம்.

அமோனியம் சல்பேட்டைப்பற்றி சொல்கிறார்கள். எழுபத்தைந்து ரூபாய் வரை ஒரு மூட்டை விற்றது. இது எப்படி விற்றது? ஏன் விற்றது? ப்ளாக் மார்க்கெட்டை அடியோடு ஒழித்து நியாயமான முறையில் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்றும், அதற்குத் தகுந்த திட்டம் தயாரிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பசுந்தாள் உரத்திற்கான அவுரி, பில்லிபசரா போன்ற விதைகள் ப்ளாக் ஏரியாவில் பாதி விலைக்குக் கொடுக்கிறார்கள். ப்ளாக் இல்லாத இடங்களில் முழு விலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. ப்ளாக் ஏரியாவில் 15 ரூபாய் என்றால், ப்ளாக் அல்லாத ஏரியாவில் 30 ரூபாய் கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது.



15th March 1960] [Sri M. Jangal Reddiar]

ப்ளாக் ஏரியாவில் இருக்கும் மக்கள் யார், நான்-ப்ளாக்கில் இருக்கும் மக்கள் யார் என்று அரசாங்கத்தை நான் கேட்கிறேன். இப்படிப்பட்ட பாகுபாடு கூடாது. பாகுபாடு இருந்தால் உற்பத்தி பெருகமுடியாது. விவசாய உற்பத்தி பெருகவேண்டுமானால், சலுகை கொடுக்கும்போது நாட்டு மக்கள் எல்லோருக்கும் கிடைக்கும்படி கொடுக்கவேண்டும். எல்லோருக்கும் பாதி விலையில் நியாயமான முறையில் கிடைக்கும்படிச் செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்து கிணறுகள் தோண்டும் விஷயம். இரண்டு மூன்று வருஷங்களாக நமது தென்னாட்டில் குறிப்பாக இரண்டு மூன்று ஜில்லாக்களில் மழை இல்லை. வடாற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு ஜில்லாக்களில் மழை குறைந்துவிட்டது. கிணறுகளில் தண்ணீர் மிக ஆழமாகப் போய்விட்டது. எவ்வளவு தோண்டினாலும் போதுமான ஜலம் கிடைக்க வசதி இல்லை. மேலும் மேலும் ஆழப்படுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. கிணறுகள் வெட்டுவதற்கும், ஆழப்படுத்துவதற்கும், அதிகக் கடன் தொகையோ மான்யத் தொகையோ மத்திய அரசாங்கத்திடமிருந்து வாங்குவதற்கான ஒரு திட்டம் தேவை. குறிப்பாக கிணறுகளை ஆழப்படுத்த ஒரு திட்டம் தேவை என்பதை வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்.

நீர்ப்பாசனத்தைப் பற்றிச் சொல்லவேண்டுமானால், சிறு சிறு ஏரிகள் எல்லாம் நீண்ட நாட்களாகத் தூர் எடுக்காமல் தூர்ந்து போய்விட்டன. அவைகளை புல் டோஸர் போன்றவற்றைக் கொண்டு ஆழப்படுத்த ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். அதுபற்றி இந்த பட்ஜெட்டில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை.

கால்நடையைப்பற்றி நாம் சொல்கிறோம், ஒரு கிராமத்திற்கு ஒரு நல்ல பொலி காளை தேவை என்று. ஒரு தாலூகாவுக்கு இரண்டு அல்லது மூன்று பொலி காளைகளை குறிப்பிட்ட இடத்தில் வைத்திருக்கிறார்கள். கூடுமானவரை 500 பசு மாடுகள் இருக்கும்போது ஒரு காளையாவது வேண்டும். ஆயிரம் மாட்டுக்கு ஒரு காளை கூட இல்லாமலிருக்கிறது. பத்தாயிரம் மாட்டுக்கு ஒரு காளை என்று இருக்கிறது. கால்நடை அபிவிருத்தி செய்வதென்றால், பசுமாட்டின் எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் காளைகள் இருக்கவேண்டும்.

கூட்டுறவுப் பண்ணையைப்பற்றி நான் இப்பொழுது பேசினால் அதிக காலதாமதம் ஆகலாம். விதைப் பண்ணையை எடுத்துக் கொண்டு, லட்சக் கணக்கான ரூபாய் அரசாங்கம் மான்யமாகக் கொடுக்கிறார்கள். விதைப் பண்ணையில் நான்கூட விதை நெல் வாங்கியிருக்கிறேன். ஒரு மூட்டை நெல் கிரயம் 44 ரூபாய். அதற்கு அரசாங்கம் பல ஆயிரம் ரூபாய் மான்யமாகக் கொடுத்தும் அவர்கள் 44 ரூபாய்க்கு ஒரு மூட்டை என்று விற்கிறார்கள். மூட்டை ஒன்று 164 ராத்தல் கொண்டதாகும். இது அரசாங்கத்திற்கு லாபமா? அல்லது மக்களுக்கு லாபமா என்று

கேட்கிறேன். விதைப் பண்ணை என்பது மிகவும் மோசடி என்று சொல்கிறார்கள். விதையும் மோசம்: நான் ஒரு விவசாயி. எனக்குத் தெரியும். நாங்கள் தயாரிக்கும் விதைகள் 100-க்கு 95 முளைக்கின்றன. கூட்டுறவு விதைப் பண்ணையில் வாங்கும் விதைகள் 100-க்கு 85 தான் முளைக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் முளைப்பதில்லை. ஏனென்றால் அங்கு பராமரிப்பு கிடையாது; பாதுகாப்பு கிடையாது. அப்படிப்பட்ட விதை மூட்டை 44 ரூபாய்க்கு விற்கிறார்கள்; விவசாயி தயாரிக்கும் விதை ஒரு மூட்டை 22 ரூபாய் ஆகிறது. எவ்வளவு பாகுபாடு இருக்கிறது பாருங்கள். அரசாங்கத்திலிருந்து உதவி பெற்று தயாரிக்கும் விதை மூட்டையின் விலை 44 ரூபாயாகிறது என்றால், கூட்டுறவுப்பண்ணை வந்துவிட்டால் என்ன நேருமோ என்று பயம் ஏற்படுகிறது. கூட்டுறவுப்பண்ணை ஏற்படுத்துவதால் நாட்டுக்கு நன்மை ஏற்படும் என்று சொல்வதைவிட, ஒரு ஜில்லாவுக்கு ஒரே பண்ணையை நடத்திக் காட்டினால் போதும்; எதிர்க்கட்சிக்காரர்களாகிய நாங்கள் பிரசாரம் பண்ண வேண்டியதில்லை. கூட்டுறவுப் பண்ணை கிராம மக்களே பிரசாரம் பண்ணிவிடுவார்கள். மந்திரிகளுக்கும் நேராகத் தெரிந்துவிடும்.

கிராமத்திற்கு ரோடுகள் அவசியம் தேவை. பள்ளிக்கூடம், மின்சாரம், கிணறுகள் முதலியவைகளை முக்கியமாக ஒவ்வொரு கிராமத்திற்கும் சாங்ஷன் செய்ய வேண்டும். ஏனென்றால் இவை ஒரு கிராமத்திற்கு அடிப்படையான தேவைகளாகும். நமது அரசாங்கம் எதில் தம் கட்சியை வளர்த்துக்கொண்டு போகலாம், எந்தத் திட்டத்தைக் கையாண்டால் வரும் எலெக்ஷனில் அதிக வோட்டுகளைப் பெறலாம் என்று நடத்திக்கொண்டு போவதுபோல் தோன்றுகிறது. நாட்டின் நலனை உத்தேசித்து, மக்களுக்கு எது நன்மையோ அதைச் செய்யவேண்டுமென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மந்திரிகள் இப்பொழுது பிரசாரம் செய்கிறார்கள் என்றால் பெரும் உத்தியோகஸ்தர்களும் செய்கிறார்கள், பர்த் கண்ட்ரோல் முறையைப் பற்றி. அதை நாங்களும் ஒத்துக்கொள்கிறோம். அதைப்போல் இவர்கள் ஒரு கண்ட்ரோல் செய்யவேண்டும். அதிகாரம் அதிகமாக வளருகிறது. ஒரு உத்தியோகஸ்தர் இருந்த இடத்தில் ஒன்பது அதிகாரிகளைப் போடுகிறார்கள். ஆனால், வேலை அந்த அளவுக்கு இல்லை. முன்னால் நடந்த வேலைக்கும் குறைவாக இருக்கிறது. இருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் சரிவர சம்பளம் கொடுப்பதில்லை. அவர்களுக்கு சேவைக்கு வேண்டிய ஊதியம் கிடைக்காததால், அவர்கள் அதிகமாகக் கேட்கிறார்கள். ஆகவே, உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்டு போகாமல், செலவைக் குறைத்து, ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய வருமான வரியை ஏற்படுத்தினார்கள். அதனால் எத்தனை லட்ச ரூபாய் வருமானம் கிடைத்தது? அதிகார வர்க்கத்திற்காக செலவு எவ்வளவு? எவ்வளவு நிகர லாபம் என்று பார்த்தால் ஒரு ரூபாய் வருமானம் வந்தால் அதில் ¾ ரூபாய்





செலவாகிவிடும் என்று நினைக்கிறேன். எங்களைப் போன்ற சாதாரண விவசாயிகள் படும் கஷ்டத்தைத் தவிர, அதனால் வேறு ஒன்றும் லாபம் இருக்காது.

THE HON. SRI C. SUBRAMANIAM: இது பற்றிய கணக்கை நன்றாக படித்து விட்டு பேசுங்கள்.

SRI M. JANGAL REDDIAR: இதில் கஷ்டத்திற்குத் தகுந்த வருமானம் கிடைப்பதில்லை என்று நினைக்கிறேன். இதனால் சாதாரண விவசாயிகள் ரொம்பவும் அவஸ்தைப்படுகிறார்கள். கணக்கை தயாரிக்க முடியவில்லை. கணக்குப் பிள்ளை வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. உத்தியோகஸ்தர்களிடம் அடி பணிந்து நிற்கவேண்டியிருக்கிறது. இம்மாதிரி பல தொல்லைகளுக்கு அவர்கள் ஆளாகிறார்கள். சாதாரண விவசாயிகள் இதனால் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். ஆதலால், அரசாங்கம் இந்த விவசாய வருமான வரியை நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*SRIMATHI D. RAGUPATHI DEVI: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டு அறிக்கையானது நம்முடைய மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்களால் பாராட்டும் முறையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. விற்பனை வரியிலிருந்து அழுகும் பொருள்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருப்பது அனைத்து மக்களாலும் பாராட்டக் கூடிய செய்தியாகும். அனைத்து மக்களும் அதை பாராட்டுகின்றனர்.

மிக்க மாண்புக்குரியது சமூகக் கல்விதான். மக்களுக்கு சிந்திக்கும் திறனை அளித்து சீரிய வழிவகைகளை போதிக்கிறது. உயர்ந்த எண்ணங்களை உண்டாக்கி, ஒற்றுமையை ஏற்படுத்தி, தீய எண்ணங்களை உழைக்கச் செய்கிறது. இன்றைய சிறுவர்கள்தான் எதிர்காலத்தில் பாரதத்தின் வீரர்கள். அவர்கள் அறிவுத் திறனும் மனப் போக்கும் வளர்வதற்கு நம்முடைய நாட்டின் நல் வாழ்வுக்கும், முன்னேற்றத்திற்கும் நாம் வகுத்துள்ள திட்டங்களை நாமே தடை செய்வதற்கு ஒப்பாகும் என்றால் மிகையாகாது. விஞ்ஞானத் துறையை எடுத்துக்கொண்டாலும் நம்முடைய நாடானது பல நாடுகளை விட பிற்பட்ட நிலையில் இருக்கிறது. இன்று சில நாடுகள் அடைந்துள்ள முன்னேற்றமானது நம் நாட்டு மக்களாலும் நினைக்க முடியாத நிலையில் இருக்கிறது. இதுபற்றி நன்கு உணர்ந்து நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் கல்வி, விஞ்ஞான வளர்ச்சிக்காக ரூ. 15 கோடி ஒதுக்கியிருப்பது மிகவும் பாராட்டத்தக்க செய்தியாகும்.

ஜாதி, சமய வேறுபாடுகள் என்கின்ற நச்சுப் புகை சமுதாயத்தில் மண்டியிருந்த காலத்தில் அதில் சிக்கி மூச்சுத் திணறி அல்லலுற்ற மக்கள் ஹரிஜன மக்கள். ஹரிஜன மக்கள் இன்று அடைந்துள்ள முன்னேற்றத்தை நாம் எல்லோரும் அறிவோம். இருப்பினும், இன்னும் பெருவாரியான லக்ஷ

கணக்கான ஹரிஜன மக்கள் மிகவும் பிற்பட்ட நிலையில் இருக்கிறார்கள்? அவர்களின் நலனுக்காக ரூ. 2.95 கோடி ஒதுக்கியிருப்பது மிகவும் வரவேற்கக்கூடிய செய்தியாகும். ஹரிஜன மக்களைப் போலவே நாட்டில் பல பிற்பட்ட சமுதாயத்தினர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய நலன்களும் இதே முறையில் கவனிக்கப்படவேண்டியது மிகவும் அவசியம் என்பதையும் நான் இங்கே வற்புறுத்தி சொல்லிக்கொள்ளுகிறேன்.

பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டிருந்தாலும், உணவுப் பொருள்களின் விலைவாசியானது இன்று மக்களால் தாங்க முடியாத அளவுக்கு உயர்ந்திருக்கிறது. விவசாயிகளுக்கு தேவைப்படும் பொருள்களை, அதாவது பம்பு செட்டுகள், மோட்டார்கள், உரங்கள், ரசாயன உரம் மட்டுமன்றி இயற்கை உரங்கள் முதலியவற்றை நாம் அதிகமாக உற்பத்தி செய்து அவற்றின் விலைகளையும் ஓரளவு கட்டுப்படுத்தி அவர்களுக்கு நாம் காலாகாலத்தில் கொடுக்க முற்படுவோமானால், நாம் ஓரளவுக்கு அவர்களுக்கு உதவி செய்தவர்களாவோம். நாம் விவசாயிகளுக்கு பல வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தும் கூட, அதிகாரிகளின் கவனக் குறைவால் அந்த உதவிகள் அவர்களுக்கு தக்க சமயத்தில் பயன்படாமல் போகின்றன. விவசாய அலுவலகங்களுக்கு விவசாயிகள் சென்று விதைகளையும், உரங்களையும், பூச்சி மருந்துகளையும் கேட்கிறார்கள். கேட்கும்பொழுது அவர்களுக்கு இருப்பு இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். அன்றேல் வருவதற்கு 10 நாட்கள் ஆகும் என்று கூறிவிடுகிறார்கள். இந்த நிலையானது விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை உண்டு பண்ணுவதோடு, அவர்களுக்கு விவசாயத்தில் உள்ள ஆர்வத்தையும் குறைக்கச் செய்கிறது. மருந்து வகைகள் விவசாயிகளுக்கு கையில் வருவதற்கு முன்னால் பூச்சிகள் தங்களுடைய வேலையை முடித்துக்கொள்கின்றன. இந்த நிலையானது பெருகி பல இடங்களில் இருந்துகொண்டிருப்பதின் காரணமாக விவசாய உற்பத்தியானது பெரும் அளவில் மட்டுப்படுகிறது என்பதையும் இங்கு சொல்ல விரும்புகிறேன். இந்த நிலையானது அலுவலகத்தில் அதிகாரிகள் சொல்ல, வெளியில் இந்த மருந்து 3 மடங்கு அல்லது 4 மடங்கு கூடுதல் விலைக்கு கிடைக்கிறது. ஆகையால் அரசாங்கம் இதை நன்றாகக் கவனித்து, இதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாய அலுவலகங்களிலிருந்து விவசாயிகளிடம் நல்ல விளைச்சல் இருக்கும்போது விதை வித்துக்களுக்காக வருகிறார்கள். ஆனால், அவர்கள் அரசாங்கத்திற்கு சரியாகக் கொடுக்க முன்வருவதில்லை. இதற்குக் காரணம் அவர்களுக்கு உடனடியாக பணம் கொடுக்கப்படுவதில்லை. பணம் கொடுப்பதற்கு 15, 20 நாட்கள் ஆகின்றன. வியாபாரிகளானால், சரக்கு நன்றாக இருந்தால் உடனடியாக முதலில் பணம் கொடுத்துவிடுகிறார்கள். அவ்வப்பொழுது கணக்கை தீர்த்துவிடுகிறார்கள். விவசாய அலுவலகங்களிலிருந்து அவர்கள் விவசாயிகளை அணுகும்பொழுது கணக்கை உடனடியாக தீர்க்குமாறு செய்யவேண்டியது மிகவும்





அவசியம். அவ்வாறு பணத்தை உடனடியாகக் கொடுத்தால் விவசாய அலுவலகங்களிலிருந்து விதைக்காக விவசாயிகளை தேடிக்கொண்டு செல்லவேண்டியதில்லை. விவசாயிகளே தாங்களாக முன்வந்து விவசாய அலுவலகங்களில் நல்ல விதைகளை கொடுத்துவிட்டுச் செல்வார்கள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

கிராமப்புறங்களில் கடன் தொல்லைகள் அதிகமாக இருக்கின்றன. ஆதலால் இப்பொழுது இருப்பதைவிட கூட்டுறவு பாங்குகள் இன்னும் அதிகமாக ஏற்படுத்தவேண்டும். கூட்டுறவு பாங்குகள் ஏற்படுத்துவதோடு அல்லாமல், நில அடமான பாங்குகளையும் ஏற்படுத்தி, அவர்களுக்கு கடன் கொடுத்து, அவர்களுடைய கடன் பளுவை நாம் நீக்கவேண்டும். அத்துடன் அந்த நிலங்களில் விவசாய அபிவிருத்திக்காக அவர்களுக்கு நாம் பணத்தை கொடுத்தோமானால், விவசாயிகளுக்கு நாம் பெரிய அளவில் உதவி செய்தவர்களாவோம்.

தேசிய விஸ்தரிப்புத் திட்டமும், சமுதாய நலத் திட்டமும் இன்னும் பிற்பட்ட பகுதிகளில் அமலாக்கப்படவில்லை. இதில் பிற்பட்ட பகுதிகளை முதலில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இங்கே கேட்டுக்கொள்ளுகிறேன். மிகவும் பிற்போக்காக உள்ள 200 கிராமங்களுக்கு மேற்பட்ட மேட்டுப்பாளையம் தொகுதியின் நிலையை அமைச்சர்கள் எல்லோரும் நன்றாகப் பார்த்திருக்கிறார்கள். அந்த இடத்தை பிளாக் டெவலப்மெண்டு ஸ்கீமில் சேர்க்க வேண்டியது மிக அவசியம் என்பதை நான் முன்பே எடுத்துக் கூறியிருக்கிறேன். இன்னும் இது சேர்க்கப்படவில்லை. இனியும் காலதாமதமில்லாமல் அதைச் சேர்க்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேட்டுப்பாளையம் தொகுதி முழுவதற்கும் மேட்டுப்பாளையத்தில் ஒரு இடத்தில்தான் சர்க்கார் ஆஸ்பத்திரி இருக்கிறது. சுற்றுப்புற, கிராமங்களிலிருந்து அந்த ஆஸ்பத்திரிக்கு படுக்கையிலேயே வைத்து வைத்தியம் செய்துகொள்ளக்கூடிய நிலையில் வரும் ஏழை நோயாளிகள் எண்ணற்றவர் இடமின்றி திரும்புகின்றனர். இதற்குக் காரணம் அங்கு இட நெருக்கடி மிக அதிகமாக இருக்கிறது. வைத்திய வசதியும் குறைவாக இருக்கிறது. வராந்தாக்களில் படுக்கைகள் போடப்பட்டிருக்கும் காரணத்தினால், வெளியில் இருந்து மருந்து வாங்கிக்கொள்ளுவதற்காக வருபவர்களுக்கு உட்காருவதற்குகூட இடமில்லாமல் நிற்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகலால் இதன் அவசியத்தை அமைச்சர் அவர்கள் நன்றாக உணர்ந்து இந்த ஆஸ்பத்திரி கட்டடத்தை விஸ்தரிப்பதற்கும், இங்கே ஒரு எக்ஸ்ரே பிளாண்டு வைப்பதற்கும் ஆவன செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கணுவக்கரை, சிறுமுகை ஆகிய பிர்க்காக்களில் தாய் சேய் நல நிலையங்கள் ஏற்படுத்துவது அவசியம் என்று நான் இங்கே வற்புறுத்துகிறேன். அந்த இடங்களில் தாய் சேய் நல நிலையங்களை உடனடியாக அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Srimathi D. Ragupathi Devi] [15th March 1960

விவசாயிகளும், வியாபாரிகளும் நிறைந்துள்ள மேட்டுப்பாளையத்தில் ஒரு 'ச்ப்-டிரெஷரி' ஏற்படுத்துவது அவசியம் என்று நான் முன்பே ஒரு தடவை கூறியிருக்கிறேன். அதற்கு ஆவன செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் 8 மாதங்களுக்கு முன்பாக மிகுந்த ஆர்வம் காட்டினர். அது காலதாமதப் பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு காரணம் தெரியவில்லை. இதனுடைய காரணத்தை அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து அது சம்பந்தமாக உத்தரவை உடனடியாக பிறப்பிக்குமாறு நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இறுதியாக, ஆயிரக்கணக்கான வறண்ட ஏக்கர்கள் கொண்ட பிரதேசமான இந்தப் பகுதியை செழிப்படையச் செய்வதற்கு குந்தாவில் விடப்படும் கழிவு நீர் பாய்ச்சுவதுதான் ஒரே வழி என்பதை அமைச்சர் அவர்களுக்கு நினைவூட்டிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

***SRI T. KARIA GOUNDER:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1960-61 வருஷ வரவு-செலவு திட்டத்தை நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருப்பதை ஒட்டி, அவர்களை பாராட்டி, மனமார வாழ்த்தி, சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மூன்று, நான்கு நாட்களாக நடந்த விவாதத்தில் ஒரு நண்பர் இந்த பட்ஜெட்டை சுதந்திராக்கட்சி பட்ஜெட் என்று சொன்னார்கள். மற்றொரு நண்பர் அழுகிய வெங்காயத்தைப்போல் உரிக்க உரிக்க தோல் மட்டும்தான் வருகிறமாதிரி இருக்கக்கூடிய பட்ஜெட் என்று கூறினார். ஒரு நண்பர் உப்புச் சப்பு இல்லாத பட்ஜெட் என்று கூறினார். மற்றும் ஒரு நண்பர் முன்னால் பார்த்தால் சாயபு குதிரை, பின்னால் பார்த்தால் செட்டியார் குதிரை என்று சொன்னார்கள். பின்னால் பார்த்தால் செட்டியார் குதிரை என்று சொன்னவர் அந்த இனத்தைச் சார்ந்தவர் என்பதாலோ என்னவோ. சர்க்கார் கொண்டுவரும் எந்த திட்டத்தையும் எதிர்த்துத்தான் பேசுகிறது என்று சட்ட சபையிலுள்ள பல அங்கத்தினர்கள் இருக்கிறார்கள் போலும். அவர்கள் இந்த திட்டங்களை ஊனக் கண் கொண்டு பார்க்கிறார்களா அல்லது ஞானக்கண் கொண்டு பார்க்கிறார்களா என்று தெரியவில்லை. (குறுக்கீடு) அவர்களுக்கும் இன்னும் இரண்டு வருஷம் போனால் கண்ணாடி போடும் நிலை வரலாம். இந்த திட்டத்தை நண்பர்கள் ஞானக்கண் கொண்டு பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். எனக்கு முன்னும் பேசிய அங்கத்தினர்கள் சிலர் கனம் நிதியமைச்சரவர்கள் தன் உடல் நிலை சரியாக இல்லாதிருந்தும் (குறுக்கீடு)—அவர்கள் சொல்லாவிட்டாலும், டாக்டர்கள் சொல்லியிருப்பார்கள்—ஒன்றரை மணி நேரம் வரைக்கும் நின்று கொண்டே தன் உரையை ஆற்றியதற்கு, அந்த உரைமீது குற்றம் சொல்வதென்பது, தர்மம் இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த வரவு-செலவு திட்ட விவாதத்தில், என்.ஜி.ஓ.-க்களைப் பற்றிப் பேசப்பட்டது. சம்பளக் கமிஷன் ரிபோர்ட் வந்த பிறகு அவர்களுக்குச் சலுகை கொடுக்க வேண்டியிருக்கும் என்பது அவர்கள் அறிக்கையிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இரண்டாவது முறையாகச் சொல்கிறேனே என்னவோ, என்.ஜி.ஓ.-க்களிடம் சர்க்காருக்கு விரோதம் இல்லை. ஆனால், இங்கு இப்படிப் பேசுகிறவர்கள் அவர்களின் ஆதரவைப் பெற அப்படியெல்லாம் பேசுகிறார்களோ என்னவோ. அதற்காகத்தான் சொல்கிறேன், ஒன்று சர்க்கார் திட்டங்களை ஒப்புக் கொள்ளவேண்டும். வரி போட வேண்டும். அல்லது திட்டங்களைக் கை விடவேண்டும். வரியும் போடக்கூடாது, திட்டங்களையும் கைவிடக்கூடாது என்றால் அது எப்படி சாத்தியமாகும்? அப்படி சாத்தியமென்றால், நண்பர்கள் வழிவகைகளை சர்க்காருக்கு சொல்லி விளக்கவேண்டும் என்று அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். என்.ஜி.ஓ.-க்களுக்கு நிவாரணம் கண்டிப்பாக அளிப்போம் என்று அறிக்கையில் சொல்லியிருப்பதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



15th March 1960] [Sri T. Karia Gounder]

விவசாயத் துறையில் முன்னேற்றம் கண்டிருப்பதில் சந்தேகம் வேண்டியதில்லை. ஆனால், அந்த முன்னேற்றம் பற்றி புள்ளி விவரங்களில் ஒரு சந்தேகம் இருக்கலாம். சரியான மழை பெய்யாவிட்டால், விவசாயத் துறையில் உற்பத்தி குறையும். இது எல்லோருக்கும் தெரியும். சென்ற வருஷத்தில் எங்கள் ஜில்லாவில் மழை குறைவு. நாலணாப் பலிதம், ஆறணாப் பலிதம்தான் கண்டது. அதிகமானால், எட்டணா பலிதத்திற்கு மேல் இல்லை. ஒரு ரூபாய்க்கு பலிதம் விளைந்தால் நல்லதுதான், அரசாங்கமும் பல லட்ச டன்கள் அதிக உற்பத்தி என்று காட்ட முடியும். கனம் கோவிந்தசாமி அவர்கள் தொகுதியில் அதிகமான மழை பெய்து வெள்ளம் கூட அடித்திருக்கிறது. தென் ஆற்காடு ஜில்லாவில் அப்படி நடந்திருக்கிறது. அதனால், கனம் கோவிந்தசாமி கூட சட்டசபைக் கூட்டத்திற்கு வர முடியவில்லை என்பதை ஞாபக மூட்ட விரும்புகிறேன். புள்ளி விவரங்கள் எப்படியிருந்த போதிலும், உற்பத்தியில், பெருக்கத்தைப் பற்றி யாருக்கும் சந்தேகம் வேண்டியதேயில்லை. அதே சமயத்தில் மக்கள் உற்பத்தியும் ஜாஸ்தியாகியிருக்கிறது. இதைச் சொன்னால், காங்கிரஸ்காரர்கள் குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றி பேசுகிறார்கள் என்பார்கள். குடும்பக் கட்டுப்பாடு திருப்திகரமாகச் செய்தால்தான் உற்பத்தியான பொருளை சரியானபடி வினியோகிக்க முடியும். ஆகவே, இந்த குடும்பக் கட்டுப்பாட்டு விஷயத்தில், கனம் நிதியமைச்சரவர்கள் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

உர வினியோகத்தைப் பற்றிச் சொல்லும்போது, இப்பொழுதெல்லாம் எடை போட்டுக் கொடுக்கிறார்கள் எங்கள் ஜில்லாவில். மற்ற ஜில்லாக்களைப் பற்றி தெரியாது. மூட்டைக் கணக்கைப் பற்றி ஏதோ ஹைகோர்ட்டில் தீர்ப்புக் கொடுத்தார்கள். ஆனால் இப்பொழுதெல்லாம், 224 பவுண்டு எடை போட்டுக் கொடுக்கிறார்கள். உரம் இறக்குமதியில் கொஞ்சம் குறைவு இருக்கிறது வாஸ்தவம். இந்த வருஷத்தில் அதுவும் சரிக்கட்டி விடுவார்கள் என்று அறிந்து சர்க்காரைப் பாராட்டுகிறேன்.

[Sri T. Karia Gounder] [15th March 1960

செட்டி நாட்டு அரசர் பேசினார்கள். சர்க்கார் அவர்கள் மனதைச் செலுத்தினால், பாலாறு விஷயத்தில் நல்லதொரு திட்டத்தைச் செய்தால், அவர்கள் மந்திரியாக இருக்கும் காலத்திற்குள்ளாகவே அதைச் செய்து கொடுத்தால், அதனால் பயன் அடையும் நான்கு ஜில்லாக்களும் அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கும் என்பதையும் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சிறிய நீர்ப்பாசன திட்டங்களைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இதற்கான திட்டங்களை, சரிபார்ப்பதில் மேல் என்ஜினியர்களுக்குப் போய் அங்கங்கு தயக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே சர்க்கார், இந்தக் காரியங்களில் என்ஜினியர்களைத் துரிதப்படுத்தி, தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் வெற்றி பெற்றால்தான் நம் உணவு உற்பத்தி கணிசமான அளவில் பெருகும்.

கிணறு வெட்டும் திட்டத்தில், மானியத்திற்காக ஒரு கிணற்றுக்கு ரூ. 1,000 என்று வைத்திருக்கிறார்கள். கோயம்புத்தூர் முதலிய ஜில்லாக்களில் அது சரியாக இருக்க முடியாது. ஆனால், எங்கள் ஜில்லாவிலும் அது காணாது. நூறு அடி ஆழம் போன பிறகுகூட தண்ணீர் சில இடங்களில் கிடைப்பதில்லை. ஆகவே, இந்த மானியத் தொகையை சற்று அதிகப்படுத்தித் தரவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்க்கொள்ளுகிறேன். கடனாகக் கொடுக்கும் தொகையையும் உயர்த்திக்கொடுக்க வேண்டும் என்று கனம் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த தேங்காய் உற்பத்திக்காக 3, 4 பண்ணைகளை நிறுவியிருக்கிறார்கள். மனிதனுக்குக் காலரா நோய் வருவதுபோல்—அந்தக் காலரா இப்பொழுதெல்லாம் வருவதில்லை—தென்னமரத்திற்கு ஒரு நோய் இப்பொழுது வந்திருக்கிறது. பாலாற்றின் கரையில் நாங்களெல்லாம் அந்த தேங்காய் உற்பத்தியால் வெகுவாகப் பயன் அடைய வேண்டியவர்கள். அதை நம்பியிருப்பவர்கள். அங்கே இப்பொழுது கடுமையான நோய் வந்திருக்கிறது. அது என்ன நோய் என்றே தெரியவில்லை? சிறிது நாட்களில், தென்னங் கீற்றெல்லாம் நோய்வாய்ப்பட்டு, ஓலைகளெல்லாம் கருகி, மரம் பட்டுப்போய்விடுகிறது. அந்த விஷயத்தில் தீவிர கவனம் செலுத்தி அரசாங்கத்தார் தகுந்த பரிகாரம் தேடித்தரவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

நெய்வேலியைப்பற்றி பேசப்படுகிறது. அதற்கு ஆகும் தொகையை நாமே கடனாகப் பெற்றுக்கொண்டு, 20 வருஷத்தில் திருப்பிக் கொடுத்துவிடக்கூடிய திட்டத்தின்கீழ் மத்திய சர்க்காரிடம் பெற்று நாமே அதை எடுத்து நடத்த முடியுமா என்று யோசிக்கலாம். மத்திய சர்க்காரிடம் இருந்தாலும் தவறு ஒன்றும் இல்லை. இதில் வடக்கு-தெற்கு என்ற பிரச்னை ஒன்றும் கிடையாது. அந்த திட்டம் துரிதமாக நடந்து நமக்கு நல்ல பயனைத் தாவிருக்கிறது.



15th March 1960] [Sri T. Karia Gounder]

நகரத்திலுள்ள தொழிலாளிகளுக்கு வீடு கட்டும் திட்டங்கள் இருக்கின்றன. அதேபோல், கிராமத்தில் உள்ள தொழிலாளிகளைப் பற்றியும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். விவசாயத் தொழிலாளிகளும் இதரத் தொழிலாளிகளும் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் வீட்டு வசதியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அதேபோல் ரோடு வசதியும் இல்லை. டிராக்டர்களைக் கொண்டும், புல்டோசர்களைக் கொண்டும், சரியான ரோடுகளைப் போட்டுக்கொடுக்க இந்த அமைச்சரவை ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மின்சாரத்தைப் பற்றிச் சொல்கிறார்கள். அதே சமயத்தில் க்ரூடாயில் விலையைப் பற்றியும் சொல்கிறார்கள். க்ரூடாயில் விலையைப்பற்றிக் கவலையில்லை. எங்கள் பக்கத்தில் எல்லோரும் என்ஜின்களையெல்லாம் விற்றுவிட்டார்கள். க்ரூடாயில் வரி விஷயங்களெல்லாம் மத்திய சர்க்கார் செய்திருக்கும் விஷயங்கள். நாம் ஒன்றும் போடவில்லை. இந்த மின்சாரக் கட்டணம் விஷயமாக சர்க்கார் சிறிது கவனம் செலுத்தி மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் தொல்லைகள் தீர ஏற்பாடு செய்யவேண்டும். நான் ஒரு நெல் மிஷின் வைத்திருக்கிறேன். அது அரைக்கவும் இல்லை, மூடிக்கிடக்கிறது. ஆனாலும், பணம் கட்டவேண்டும் என்கிறார்கள். ரூபாய் 50 கட்டவேண்டும் என்கிறார்கள். அதையும் உணர்ந்து, மின்சாரக் கட்டணத்தில் உள்ள தொந்தரவையும் நீக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு நண்பர் பேசுகின்றார். திருச்செங்கோட்டுக்குக் காவேரித் தண்ணீரை கொண்டுவரவேண்டும் என்று. எப்படிக் கொண்டு 1-00 p.m.
வருவது, அங்கே காவேரி எப்படி வரும் என்று எனக்குத் தெரியவில்லை.

THE HON. SRI P. KAKKAN : காவேரியில் வீணாகப் போகக்கூடிய தண்ணீரைக் கால்வாய் மூலம் திருச்செங்கோட்டுக்குக் கொண்டுவர முடியுமா என்பதைப் பரிசீலனை செய்யவேண்டும் என்பதாகத்தான் அங்குள்ள மக்கள் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அந்த அபிப்பிராயத்தைத்தான் அந்த அங்கத்தினர் இங்கே வெளியிட்டார். அதைப் பரிசீலனை செய்து பார்ப்பதில் தவறு இல்லையென்று தெரிவித்தார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

SRI T. KARIA GOUNDER : ஸ்தல அபிவிருத்தித் திட்டத்திலே மத்திய சர்க்கார் 50 லட்சமும் நாம் 25 லட்சம் ரூபாய் கொடுக்கப்போவதாக நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதை தேசீய வளர்ச்சியில்லா பகுதியிலே காரியங்கள் செய்கிறார்கள். இந்த 25 லட்சம் ரூபாயோடு இன்னும் 25 லட்சம் ரூபாய் சேர்த்து வசதி செய்ய கோருகிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member's time is up. He must resume his seat.

[15th March 1960

**SRI T. KARIA GOUNDER :** எப்போது நான் பேசுவதற்கு முன் வந்தாலும் உதவி சபாநாயகர்தான் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார்கள். அதனால் கொஞ்சம்கூடச் சலுகை எடுத்துக் கொள்ள முடியவில்லை. நேரம் அதிகமாக எடுத்துக்கொண்டு விட்டதாக அவர்கள் சொல்லி மணியடித்துவிட்டதனால் அவருக்கு என் நன்றியைச் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**SRI A. V. P. ASAITHAMBI :** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் அனைவரும் பாராளுமன்ற சம்பிரதாயப்படி நடந்து இந்த மன்றத்தினுடைய கௌரவத்தை உயர்த்தவேண்டும் என்று அண்மையில் ஒரு தீர்ப்பின்போது சபாநாயகர் அவர்கள் சொன்னார்கள். அந்த மாதிரி இந்த மன்றத்தின் கௌரவத்தைச் சட்டத்திற்கு உட்பட்டு உயர்த்துவதிலேதான் திராவிட முன்னேற்றக் கழகம் இது வரைக்கும் பாடுபட்டு வந்திருக்கிறது. இனிமேலும் நிச்சயமாகப் பாடுபடும்.

ஆனால் இந்த மன்றத்திலே சர்க்கார் கட்சித் தலைவராக இருககிற நிதி அமைச்சரும், கல்வி அமைச்சருமான கனம் சுப்பிரமணியம் அவர்கள் பாராளுமன்ற சம்பிரதாயத்திற்கு உட்பட்டு நடந்து கொள்கிறார்களா என்கிற ஐயப்பாடு முறையாக எழுவது உண்டு. மார்ச்சு மாதம் 10-ம் நாள் இங்கே பட்ஜெட் சமர்ப்பித்தார்கள். ஆனால் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. அளகேசன் அவர்கள் இந்த பட்ஜெட்டில் இருக்கிற அம்சத்தை மார்ச் மாதம் 10-ம் நாளுக்கு முன்பே பகிரங்கமாக ஒரு பொதுக்கூட்டத்தில் வெளியிட்டிருக்கிறார்கள். இந்த அளவுக்கு பட்ஜெட் ரகசியமானது வெளிவருகிறது என்று சொன்னால், அகில உலக நாடுகளில் பாராளுமன்ற சம்பிரதாயப்படி அந்த இலாகாவுக்குப் பொறுப்பாக இருக்கிற அமைச்சர் அவர்கள் ராஜீநாமா செய்திருக்கவேண்டும். இங்கே இருக்கிற சர்க்கார் கட்சித் தலைவர் இன்னும் அந்த நல்ல காரியத்தைச் செய்யாமல் இருப்பதானது உண்மையில் பாராளுமன்ற சம்பிரதாயத்தை அவர்கள் நல்ல முறையில் கடைப்பிடித்து எங்களுக்கு எல்லாம் வழிகாட்டியாக இருக்கிறாரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** இன்னும் கொஞ்சம் நன்றாகப் பாராளுமன்ற சம்பிரதாயத்தைப் படித்து இருந்தார்கள் என்றால் நன்றாக இருக்கும். அதுதான் அரை குறை.

**SRI A. V. P. ASAITHAMBI :** இருக்கலாம். அவர் "மெட்ராஸ் பாலிடிஷியன்". நாங்கள் எல்லாம் அரைகுறை அரசியல் தெரிந்தவர்கள்; ஆகையால் இந்தச் சம்பிரதாயத்தைச் சரிவரத் தெரிந்துக் கொள்ளாதவர்களாக இருக்கலாம். தெரிந்ததை அவர்கள் சொல்லட்டும்.

வரி விதிப்பைப் பற்றியோ, வரி விலக்கைப் பற்றியோ எந்த அம்சமாக இருந்தாலும் அந்த அம்சம் பட்ஜெட் சமர்ப்பிப்பதற்கு முன்பு மற்றவர்களுக்குத் தெரியக்கூடிய அளவுக்கு ரகசியம்



15th March 1960] [Sri A. V. P. Asaithambi]

பகிரங்கமாகி இருக்கிறது என்று சொன்னால் அது பார்லிமெண்டரி சம்பிரதாயத்திற்கு விரோதமாக இருக்கிறது என்பது எனது கருத்து. என் கருத்தை எடுத்துச் சொல்வதற்கு இங்கே எனக்கு உரிமை உண்டு. அதைச் சொல்கிறேன். அவர்கள் ராஜீநாமாச் செய்தால் செய்யட்டும். பதவியை விடமாட்டேன் என்று சொல்லிவிட்டால் எட்டு அல்ல, இன்னும் எத்தனை ஆண்டுகள் வேண்டுமானாலும் பதவியில் இருக்கட்டும்.

நேற்றைய தினம் என் கட்சியைச் சேர்ந்தவர் ஒருவர் பரம்பிக்குளத் திட்டத்தைப்பற்றி இந்த மன்றத்தில் பிரஸ்தாபித்தபோது, அதற்கு ஆதாரமாக ஒரு பத்திரிகையில் வந்த செய்தியை எடுத்துக்காட்ட முற்பட்டபோது, அந்தக் கருத்துத் தவறானது, என்பதை விளக்கிச் சொல்லாமல் "அவைகளை எல்லாம் இந்த மன்றத்தில் பேசி நடக்கக்கூடிய காரியத்தைகூட நடக்க விடாமல் தடுத்து விடுகிறீர்களே" என்று மூடி மறைத்தார்.

கடிதப் போக்குவரத்துக்களும், பேச்சுவார்த்தைகளும் நடைபெறலாம். நடைபெறுகின்ற அந்த விஷயங்களை இந்த மன்றத்திலே அங்கத்தினர்கள் கேட்டால் அவை அறிவிக்கப்பட வேண்டியவை. ஆனால் இவை பத்திரிகைகளில் எல்லாம் வந்து வெளியாகிவிடுமே என்கிற சந்தேகம் அமைச்சர் அவர்களுக்கு இருக்கலாம். அப்படி இருந்தால் இங்கே இருக்கிற பத்திரிகைக்காரர்களை வெளியே போகச் சொல்லிவிட்டு அந்தக் கடிதங்களையும், மற்றவைகளையும் இங்கே வைக்கவேண்டுமே தவிர, பாராளுமன்றத்தினால் ஆளப்பட்ட அங்கத்தினரைப் பார்த்து "இதைப் பற்றி பேசாதே" என்று சொல்வதற்கு—நான் நிச்சயமாக நம்புகிறேன்—சபாநாயகரைத் தவிர வேறு யாருக்கும் உரிமை கிடையாது என்று இந்த இடத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இதே மாதிரியான முறையில் பாராளுமன்ற சம்பிரதாயத்திற்குக் கட்டுப்பட்டு நாங்கள் எந்தக் காரியமாக இருந்தாலும் சரி இன்றைய தினம் செயல்பட்டு வருகிற நேரத்தில் சபையின் முன்பாக வைக்கப்பட்டுள்ள பட்ஜெட்டிலே என்ன என்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதையும் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

ஆனால் ஆளும் கட்சிக்காரர்கள் கட்சி மனோபாவத்தோடு ஒவ்வொரு காரியத்திலும் ஈடுபடுவதை நாங்கள் பலமுறை இந்த மன்றத்தில் சுட்டிக்காட்டி இருக்கிறோம். அதே மாதிரிதான் இந்தச் சட்ட மன்றத்திலே சென்னை கார்ப்பரேஷன் தேர்தலிலே காங்கிரஸ் கட்சிக்குப் படுதோல்வி ஏற்பட்டுவிட்டது என்ற காரணத்தினால் காங்கிரஸ் கட்சியில் இருக்கிற முக்கியமான அங்கத்தினர்கள்—மதிப்பிற்குரிய ஸி. ஆர். ராமசாமி, ஹாஜா ஷெரீப், விநாயகம் போன்றவர்கள் "கார்ப்பரேஷன் சரிவர நிர்வகிக்கப்படுவது இல்லை, ரோடுகள் சரிவர கவனிக்கப்படுவதில்லை. அமைச்சர்கள் சும்மா இருக்கிறார்களே." என்று பேசினார்கள். அவர்கள் பேசுவதிலே எனக்குக் கவலை இல்லை. அவர்கள் குற்றச்சாட்டு கூறுவதிலும் எனக்குக் கவலை இல்லை. ஆனால் அவர்கள்

[Sri A. V. P. Asaithambi] [15th March 196

பேசுகின்ற தோரணையைப் பார்த்தால் எனக்குக் கேரளாவின் நினைவு வருகிறது. கேரளாவில் காங்கிரஸ் அல்லாத ஒரு அரசாங்கம் இருந்த நிலைமையில் அந்த அரசாங்கத்தை ஒழித்து விடுவதற்காக ஆரம்ப காலத்தில் என்ன என்ன நடவடிக்கைகளை காங்கிரஸ் கட்சிக்காரர்கள் எடுத்துக்கொண்டார்களோ அதே மாதிரியாக சென்னைக் கார்ப்பரேஷனை ஒழித்துக் கட்டுவதற்காக இவர்கள் இங்கே அஸ்திவாரம் போடுகிறார்களோ என்கிற சந்தேகம் ஏற்படுகிறது. ஆனால் அந்த நிலைமை வருவதாக இருந்தாலும் நாங்கள் கவலைப்படப்போவது இல்லை. அதையும் ஏற்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில் இன்றைய தினம் அவர்கள் சாட்டிய குற்றச் சாட்டுகளுக்கு கார்ப்பரேஷன் பொறுப்பாக இருக்கிறதா, அரசாங்கமே பொறுப்பாக இருக்கிறதா என்று பார்ப்போமேயானால் முழுக்க முழுக்க அரசாங்கமேதான் பொறுப்பாக இருக்கிறது என்பதை என்னால் சொல்ல முடியும்.

"ரோடு சரியாக இல்லை. அரசாங்கம் என்ன செய்கிறது? யார் கையிலோ விட்டுவிட்டு இது பேசாமல் இருக்கிறதே?" என்று மதிப்பிற்குரிய ஸி. ஆர். ராமசுவாமி சொன்னார்கள். இந்த ரோடுகள் இவ்வளவு சீரழிந்து இருப்பதற்கு கார்ப்பரேஷன் எந்த அளவுக்குப் பொறுப்பானதாக இருக்கிறது, இதற்குக் காரணம் கார்ப்பரேஷன் தானா என்று உண்மையைப் பார்க்கப்போனால் கார்ப்பரேஷன் இதற்குக் காரணம் அல்ல, அரசாங்கமேதான் பொறுப்பு என்பது தெரியும். டிராம் லைன் அப்புறப்படுத்தி அந்த ரோடுகளை மீட்டும் சரியான முறையில் செப்பனிடவேண்டும் என்கிற ஒரு நிலைமையில்தான் அந்தச் சீரழிவு ஏற்பட்டிருக்கிறது. முதலிலேயே யாருமே டிராம் சர்விசை எடுத்து நடத்த முன் வந்திராவிட்டால் அந்தக் கம்பெனி மூடப்பட்டவுடனேயே அந்த டிராம் சர்வீசை எடுத்து நடத்த இந்தச் சர்க்கார் முன்வந்திருக்க வேண்டும். அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதிலே இந்த அரசாங்கம் தவறிவிட்டது. இரண்டாவது அந்தத் தண்டவாளங்களைப் பெயர்த்து எடுப்பது என்றால்—காங்கிரஸ் கட்சியார் கார்ப்பரேஷனில் இருந்தபோது—கார்ப்பரேஷனே அந்தக் காரியத்தைச் செய்து மீட்டும் சரியான முறையில் ரோடுகளை உடனடியாகச் செப்பனிடவேண்டும் என்று நாங்கள் சொன்னோம். காங்கிரஸ்காரர்கள் அதை எதிர்த்தார்கள். எதிர்த்ததோடு அன்றி தனிப்பட்ட ஒரு நபருக்கு தண்டவாளங்களைப் பெயர்த்து எடுத்துக்கொள்ளக்கூடிய உரிமையைக் கொடுத்துவிட்டார்கள்.

தனிப்பட்டவர்கள் அந்தத் தண்டவாளங்களை பெயர்த்து ரோட்டைச் சரிப்படுத்துகிறார்களா இல்லையா என்று பார்ப்பதில்; ஹைவேஸ் என்ஜினியர்தான் அதற்கு பொறுப்பு. கார்ப்பரேஷனும் ஹைவேஸ்சும் எல்லாவித ஒப்பந்தமும் செய்து விட்டார்கள். முன்னால் கார்ப்பரேஷன் மேயர் அரசு அவர்கள்கூட ஹைவேஸ் என்ஜினியருக்கு, சர்க்காருக்கு உட்பட்டவருக்கு 3—6—1959 தேதியிலும், 7—8—1959 தேதியிலும், 1 [illegible] 959 தேதியிலும் இந்த ரோடுகள் எல்லாம் சரியாகயில்லை



15th March 1960] [Sri A. V. P. Asaithambi]

நீங்கள் சரிப்படுத்த வேண்டும், நீங்கள் சர்டிபிகேட் கொடுத்தது தவறு என்று சுட்டிக் காட்டி கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். ஆனால் அதுபற்றி நாளது வரையில் இந்த சர்க்கார் ஒருவித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. அதுமாத்திரமல்ல. கொசு கடிப்பதாக அங்கத்தினர் அவர்கள் ரொம்பவும் சலித்துக் கொண்டார்கள். இந்த கொசுவைக் கூட போக்கடிக்க முடியவில்லையே என்று. ட்ரெயினேஜ் ஸிஸ்டம், ஆறு லட்சம் மக்களின் கழிவுப் பொருள்களை மாற்றி எடுத்துச் செல்லும் ஸிஸ்டம் சென்னையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

DEPUTY SPEAKER : The hon. Member's time is up.

SRI A. V. P. ASAITHAMBI : பழைய காலத்தில் போடப் பட்ட அந்தத் திட்டத்தை 20 லட்சம் மக்களுக்கு ஏற்றதாக மாற்றியமைக்கும்படி எதிர்கட்சி கௌன்ஸிலர்கள் வற்புறுத்தி அந்தமாதிரியான திட்டம் ஒன்று கார்ப்பரேஷனில் காங்கிரஸ் காரர்கள் இருந்தபோது 6—3—1958-ல் கமிஷனரால் தயாரிக்கப் பட்டு கொடுக்கப்பட்டது. எதிர்கட்சிகாரர்களின் தூண்டுதலால் கொடுக்கப்பட்ட திட்டம் என்பதற்காக 12—3—1958-ல், பைனான்ஸ் கமிட்டியில், அதில் ஸி. ஆர். ராமசுவாமி அவர்களும் ஒரு அங்கத் தினர், அதை ரிக்கார்ட் செய்து விட்டு விட்டார்கள். அதை, நாளது தேதி வரையிலும் அமுலுக்கு கொண்டு வரவில்லை. அடுத்த படியாக, கூவம் நதி இம்புரூவ்மெண்ட் கமிட்டி என்று ஐந்து ஆண்டு களுக்கு முன்பு ஒரு கமிட்டி போட்டார்கள். ஒன்றேகால் கோடி ரூபாய் செலவு செய்து கூவம் நதியிலிருந்து வரும் துர்நாற்றத்தைப் போக்கி, சீர்படுத்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதைச் சேர்க்க சிபார்சு செய்தார்கள். அதைச் செய்தார்களா? அதற்கு யார் பொறுப்பு? கார்ப்பரேஷன் பொறுப்பா அல்லது சர்க்கார் பொறுப்பா? ஏன் கூவம் நதி இம்புரூவ்மெண்ட் ஸ்கீமை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கவில்லை? அதை, இவர்கள் சொல்லி வடக்கு சேர்க்கவில்லையா? அப்படி அது உண்மையென்றால் வடக்கு வஞ்சிக்கிறது என்பதற்கு இதை விட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? எதை எடுத்துப் பார்த்தாலும் சரி, திட்ட காலத்திற்குள்ளாக அனைவருக்கும் கல்வி கொடுக்க முடியவில்லை என்று சுப்பிரமண்யம் அவர்கள் கை விரிக்கக் காரணம் பணம் இல்லை என்பதுதான். பணம் இல்லாததற்கு காரணம் என்ன? இந்த மாநிலத்திலிருந்து கிடைக்கக் கூடிய ரெவின்யூ எல்லாம் வேறு இடத்திற்கு போவதுதான் காரணம். இதற்குள்ள மருந்து 44 பக்கங்களில் அடங்காது. வருடா வருடம் 34, 38 பக்கங்கள் என்று பக்கம் பக்கமாக வாசித்துக்கொண்டு போகிறார்களே, இதனால் இந்த நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறதா? அதனால் விலைவாசிதான் குறைந்திருக் கிறதா? மக்கள் முன்பு இருந்ததை விட இப்பொழுது சௌக்கியமாக வாழும் நிலை ஏற்பட்டிருக்கிறதா? ஒன்றும் இல்லை. ஏட்டளவில் அவ்வளவு செய்கிறோம், இவ்வளவு செய்கிறோம் என்று சொல்லுகிறார்களே தவிர நடைமுறையில் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவேயில்லை. இதற்குக் காரணம் நமது அரசியல்

[Sri A. V. P. Asaithambi] [15th March 1960

அமைப்பிலுள்ள கோளாறுதான். ஆகவே அது மாற்றியமைக்கப் படவேண்டும். அந்தளவிற்கு நிதியமைச்சர் அவர்களும் மற்றவர்களும் வேண்டியதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு மேலும் அதிக நேரம் கேட்க நான் விரும்பவில்லை, ஆகவே நான் இந்த பட்ஜெட்டை எதிர்க்கிறேன்.

* SRIMATHI KAMALAMBUJA AMMAL: கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்று சில யோசனைகள் கூற விரும்புகிறேன். பொதுவாக இந்த மன்றத்திலே பேசப் பட்டதெல்லாம், விலைவாசி உயர்வைப் பற்றித் தான் பலர் விவாதித்தனர். அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் அறிக்கையிலே, ஊதிய உயர்வு கூட விலைவாசி உயர்வுக்கு ஒரு காரணம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது, முழுக்க முழுக்க உண்மை. கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் அவர்கள் பேசிய போது ஏதோ படிப்பதற்கு நல்ல முறையில் அமைந்திருக்கிறதே யொழிய உண்மையில் நடைமுறையில் அது சரியானபடி இல்லை என்று கருத்து வெளிப்படும்படி பேசினார்கள். அதைச் சற்று சிந்தித்துப் பார்த்தால், கடந்த ஐம்பது வருட கால சரித்திரத்தை எடுத்துப் பார்த்தால் நமக்கு நன்கு புலப்படும். ஐம்பது, அறுபது வருடங்களுக்கு முன்பு ஒரு போலீஸ் கான்ஸ்டேபிளுக்கு என்ன வருமானம் இருந்தது? ஏழரை ரூபாய்தான் இருந்தது. ஆசிரியர்களை எடுத்துப் பார்த்தால் அவர்கள் சம்பளமும் மிகக் குறைவாகத்தான் இருந்தது என்பது தெரிய வரும். ஊதியக் குறைவுக்கு ஏற்றளவில் அப்பொழுதும் விலை நிர்ணயக் கட்டுப்பாடு இருந்தது. அப்பொழுது ஒரு ரூபாய்க்கு எட்டு படி அரிசி கிடைக்கும். நல்ல உயர்ந்த ரக அரிசி வேண்டுமென்றால் ரூபாய்க்கு ஆறு படி கிடைக்கும். இந்த அடிப்படையைக்கொண்டு காலத்தை அனுசரித்துப் பார்த்தால் ஊதிய உயர்வு விலைவாசி உயர்வுக்கு ஒரு காரணமாகும் என்பதை நான் நிரூபிக்க முடியும். ஆகவே ஊதிய உயர்வு கொடுத்துக் கொண்டே வந்தாலும் விலைவாசி இறங்காது. நாட்டிலே உணவுப் பொருள்களின் உற்பத்தி பெருகினாலொழிய விலைவாசி உயர்வைத் தடுக்க முடியாது என்ற காரணத்திற்காகத் தான் விவசாயத்துறையில் முக்கியமாக அதிக கவனம் செலுத்தப் பட்டு வருகிறது. நமது நாடு விவசாய நாடு. விவசாயத்தை முன்னிட்டுத்தான் நாம் பொருளாதாரத் துறையில் வளர முடியும். ஆகவே அப்படி பார்க்கும்போது விவசாயத்தில் நல்ல கவனம் செலுத்தி விவசாயப் பொருள்களை அதிகப்படியாக உற்பத்தி செய்து நம் நாட்டின் தேவைக்கு போக மீதியை அயல் நாடுகளுக்கு அனுப்பினால்தான் நமது நாட்டின் பொருளாதாரத்தை நாம் உயர்த்த முடியும் என்பதினால்தான் விவசாயத்தில் நமது அரசாங்கம் அதிக கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. முக்கியமாக சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் பலவற்றை உருவாக்கி அவைகளை அமுலாக்க அரசாங்கம் விளைந்திருக்கிறதைப் பற்றி நாம் பெருமைப்படத்தான் வேண்டும். எப்படி சிறிய சிறிய அளவில் தண்ணீரைச் சேர்த்து பெருவெள்ளமாக கொண்டுவரமுடியுமோ, அதேபோல் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை அமுல் நடத்துவதால் விளைச்சலை அதிகப்படுத்த



15th March 1960] [Srimathi Kamalambuja Ammal]

முடியும். இன்று, கரம்பாக இருக்கிற நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வரலாம் என்ற யோசனையோடு சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை கொண்டுவந்து அதற்கு அதிகப்படியான தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை அமுல் நடத்துவதில் ஒரு சிறிய சங்கடம் இருக்கிறது. அதைத்தான் நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக எஸ்டிமேட் தயாரித்து அதை அனுப்பும்போது குறிப்பிட்ட ஒரு தொகை இருந்தால் மாத்திரம் அதை கலெக்டர் சாங்ஷன் செய்ய முடியும். அதற்கு மேற்பட்ட தொகையாக இருந்தால் அது அரசாங்கத்திற்கு வந்து அவர்கள் உத்தரவு பிறப்பிப்பதற்குப் பின்னர் தான் அந்த வேலையை எடுத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. ஆகவே, இந்த நிர்ப்பந்தத்தை நீக்கினால், ஓரளவு சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை அமுல் நடத்தும்போது கலெக்டர் அவர்களுக்கு அந்த அதிகாரத்தை கொடுத்தால் வேலைகள் துரிதமாக நடக்க முடியும். கூட 100 அல்லது 200 ரூபாய் கூடி விட்டாலும், அதாவது குறிப்பிட்ட தொகைக்கு கூடுதலாக 100 அல்லது 200 ரூபாய் கூடி விட்டாலும்கூட அது அரசாங்கத்திற்கு போய் அங்கிருந்து உத்தரவு வரவேண்டுமென்ற நிலை இருந்தால், மிகுந்த கால தாமதமாகும். எஸ்டிமேட் போட்டு என்ஜினியர் ஆபீஸில் சிறிது காலம் தாழ்த்தப்படுகிறது, கலெக்டர் ஆபீஸுக்கு வரும்போது அங்கு சிறிது காலம் தாழ்த்தப்படுகிறது. பின்னர் அரசாங்கத்திற்கு வரும்போது அங்கும் சிறிது காலம் தாழ்த்தப்படுகிறது. ஆகவே இப்படி அதிகப்படியாக காலம் எடுக்கப்படுவதைத் தவிர்க்க வேண்டும். ஆகவே, இப்படிப்பட்ட காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கு என்ஜினியருக்கு பவர்ஸ் கொடுத்தால் வேலை துரிதமாக நடக்கும். ஆனால் என்ஜினியருக்கு மேல் ஒருவர் இருக்கவேண்டுமென்று விரும்பினால், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் சம்பந்தப் பட்ட வரையில் கலெக்டருக்கு பூர்ண அதிகாரம் கொடுத்தால் இந்தப் பாசனத் திட்டங்கள் எல்லாம் நல்ல முறையில் விரைவிலே நிறைவேற்ற முடியும், என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும் பெரிய அணைக் கட்டுத் திட்டங்களுக்கும் நடுவிலே சிறு சிறு அணைக்கட்டுகள் இருக்கின்றன. இந்தத் திட்டங்களிலும் போதிய கவனம் செலுத்தப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவை சில பகுதிகளில் எல்லைப் பிரிவின் காரணமாக நிறுத்தி வைக்கப் பட்டிருக்கின்றன. எல்லைப் பிரிவினை மசோதா ஏப்ரல் முதல் தேதியில் அமுலுக்கு வந்தால் சௌகரியமாகயிருக்கும். அதற்குள் வரவில்லையென்றால் இப்பொழுது கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பவர்கள் மேலும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்க வேண்டிவரும். எனது தொகுதியில் "புதுப்பாளையம்" என்ற இடத்தில் ஐந்தாண்டுகளுக்கு முன்பாக ஒரு அணைக்கட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு எல்லைப் பிரச்னை காரணமாக அதை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லும் ஒரு சூழ்நிலை இன்று இருக்கிறது. எல்லைப் பிரச்னை எந்தெந்த இடங்களைப் பாதிக்கும்

என்று நமக்குத் தெரியும். ஆகவே பாதிக்கப்படும் என்ற இடங்களைத் தவிர்த்து விட்டு, மற்றயிடங்களில் இந்த அணைக்கட்டு வேலைகளைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, பாதிக்கப்படாத இடங்களில் அணைக்கட்டுகள் கட்டுவதற்கு முக்கியத்துவம் கொடுத்து அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய உற்பத்திக்கு வடிமுனை கிணறுகளை எல்லாம் அதிகமாக ஏற்படுத்தி அதன் மூலம் மின்சார மோட்டார்களை உபயோகப்படுத்தி தண்ணீரை உபயோகித்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். மின்சார வடிமுனை கிணறுகளில் தண்ணீர் இறைப்பது சம்பந்தமாக தண்ணீர் கிடைக்காத காலத்திலும் கூட, மின்சாரத்தை உபயோகப்படுத்தாமல் இருந்தாலும்கூட மினிமம் சார்ஜ் கொடுக்கவேண்டும் என்று நிர்ப்பந்தம் இருந்து வருகிறது. மின்சாரத்தை உபயோகிக்காமல் இருந்தும் மினிமம் சார்ஜ் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுவார்கள் என்பதை தெரிவித்துக்கொள்வதோடு கூட இதனால் விவசாயம் மிகவும் பாதிக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இதைப்பற்றி மின்சார அமைச்சர் அவர்கள் கவனித்துப் பார்த்து பில்ட்டர் பாயின்ட் இருக்கும் இடங்களில் ஏதாவது சலுகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீமின்கீழ் இரண்டு மூன்று ஜில்லாக்களை சேர்த்து வேலைகளை கவனிப்பதற்கு ஒரு சூப்பர்வைசரை போட்டிருப்பதாக தெரிகிறது. இப்படி ஒரே சூப்பர்வைசர் இரண்டு மூன்று ஜில்லாக்களிலுள்ள வேலைகளை கவனிப்பது என்றால் அதில் மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே, இந்த காலதாமதத்தை போக்குவதற்கு மேலும் சூப்பர்வைசர்களை நியமித்தோ அல்லது ஒரு ஜில்லாவுக்கு ஒரு சூப்பர்வைசர் என்று நியமித்து அவர்களின்கீழ் வேலை செய்யும் சிப்பந்திகளையும் நியமித்து வேலைகளை துரிதமாக நடத்துவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சமுதாய நலத்திட்டத்தைப் பொறுத்த அளவில் இப்போது வட்டார அபிவிருத்தி திட்டங்களின்கீழ் எல்லா இடங்களும் அனேகமாக சேர்ந்துவிடுவதினால் ஸ்தல ஸ்தாபன அபிவிருத்தி திட்டங்களின்கீழ் அனேகமாக பெரும் அளவில் வேலைகளை எடுத்துக்கொள்வதில்லை. இப்போதுள்ள நிலையில் ஸ்தலஸ்தாபன அபிவிருத்தி திட்டத்தின்கீழ் செலவு செய்வதற்காக சுமார் 75 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நம் மாகாணத்தில் பெரும்பாலும் எல்லா ஜில்லாக்களிலும் வட்டார அபிவிருத்தி திட்டம் அமுலிலிருக்கிறது. இல்லாத பகுதிகள் சிலவே. ஒதுக்கப்பட்ட தொகையை முழுவதும் செலவு செய்வதற்கு முடியாமல் மிகுந்து இருப்பதை நாம் காண்கிறோம். ஆகவே, இதில் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையில் 25 சத





மானத்தை வட்டார அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் செய்யப்படும் வேலைகளுக்கு ஒதுக்குவதற்கு இந்தத் திட்டத்தில் ஏதாவது வழிவகை செய்தால் நன்றாக இருக்கும். இப்போது 75 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால் அதை வட்டார அபிவிருத்தி இல்லாத இடங்களில் பூராவும் செலவு செய்து விட முடியாது. ஆகவே, இதிலுள்ள பணத்தை வட்டார அபிவிருத்தித் திட்டங்களின்கீழ் செலவு செய்வதற்கு ஏதாவது விதிகளில் தடங்கல்கள் இருந்தால் அதை மாற்றி, அதையும் வட்டார அபிவிருத்தி அமுலிலிருக்கும் இடங்களில் நடைபெறும் வேலைகளுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கல்விக்காகவும் இதில் நிதி ஒதுக்கியிருக்கிறோம். முக்கியமாக வருங்காலத்தில் கட்டாய கல்வியை கொண்டுவர வேண்டும், 11 வயது வரையிலும் கட்டாயக் கல்வி கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அப்படியானால் நாம் அதிகமான பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தவேண்டியிருக்கும், அப்போது அதற்கான அளவில் ஆசிரியர்களும் வேண்டும். ஆசிரியர்கள் அதிகமாக வேண்டுமென்றால் ஆசிரியர் பயிற்சி பள்ளிக்கூடங்கள் அநேக இடங்களில் ஏற்படுத்தவேண்டும். இப்போதுகூட ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்களில் சில இடங்களில் ஆசிரியர் இல்லை என்ற குறைபாடுகள் இருந்துகொண்டிருக்கின்றன. ஓராசிரியர் பள்ளி நடந்து வரும் இடங்களில்கூட ஒருவரை மாற்றும் போது வேறு ஒரு ஆசிரியரை நியமிக்க வேண்டுமென்றால், அதற்கு போதுமான ஆசிரியர் இல்லை என்ற சூழ்நிலை தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, ஆசிரியர் பயிற்சி பள்ளிகளை அமைக்கவேண்டும் என்று கல்வி அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது.)

* SRIMATHI KOLANTHAI AMMAL: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்த நமது அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியை செலுத்திக்கொண்டு ஒருசில கருத்துக்கள் சொல்ல விழைகிறேன். நம்முடைய வரவு செலவு திட்டத்தைப் படித்துப் பார்ப்போமானால் நல்ல முறையில் கடந்த ஆண்டில் மக்களுடைய ஒத்துழைப்பின் காரணமாக பல திட்டங்கள் நிறைவேறியிருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதோடுகூட ஆண்டுக்கு ஆண்டு எல்லாத் துறைகளிலும் நாம் உற்சாகத்தோடு ஒற்றுமையாக முன்னேற்றத்திற்கு பாடுபட்டிருக்கிறோம் என்பதை இந்த அறிக்கையானது நமக்கு எடுத்துக் காட்டுகின்றது. இத்தகைய முறையிலே தொடர்ந்து வரும் ஆண்டுகளில் நம்முடைய மக்களுக்கு நல்ல தொடர்பும், அதிகாரிகளுடைய ஒத்துழைப்பும் இருந்தால் நமது திட்டங்களை எல்லாம் நிறைவேற்றுவதற்கு நல்லதொரு வாய்ப்பாக இருக்கும், அதன்மூலம் சீக்கிரமாக நம்முடைய நாடு நல்லதொரு முன்னேற்றத்தை அடையும் என்பதில் எந்தவிதமான ஐயத்திற்கும் இடமில்லை. அதற்கு மேல் இந்தத் திட்டத்திலே நம்முடைய சோயம்

[Srimathi Kolanthai Ammal] [15th March 1960

புத்தூர் ஜில்லாவைப் பொறுத்த வரையிலும் சில குறிப்புகள் இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன். அதில் முக்கியமாக குடிதண்ணீர் விஷயமாக கோயம்புத்தூர் நகர மக்கள் படும் கஷ்டங்களை நாங்கள் நேர்முகமாக பார்க்கின்றோம். புதிதாக கட்டுகின்ற வீடுகளுக்கு குழாய் கனெக்ஷன் கொடுப்பதற்கு மறுத்துவிடுகிறார்கள். அதோடு இருக்கிற பள்ளிக்கூடங்களுக்கும் கல்லூரிகளுக்கும் சில சமயங்களில் குடிதண்ணீர் கிடைப்பதில்லை. குறிப்பாக மார்ச்-ஏப்ரல் மாதங்களில் இந்தக் குறை இருந்து கொண்டிருக்கின்றது. ஆகையால் பல ஆண்டுகளாக வற்புறுத்தி வரும் ஏற்கெனவே உள்ள சிறுவாணித் திட்டத்தை விரிவுபடுத்த அதற்குரிய மான்யத்தை கொடுத்து, அல்லது அதற்கு வேண்டிய தொகையை கடனாகக் கொடுத்து, அல்லது அதற்கு வேண்டிய உதவியை மத்திய சர்க்காரிடம் வற்புறுத்திக் கூறி பெற்று, கோவை நகரத்திற்கு வேண்டிய குடிதண்ணீர் வசதியை நல்ல முறையில் ஏற்படுத்த வேண்டும் என்று நம்முடைய அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். காரணம், கோவை நகரத்தைப் பொறுத்த அளவில் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கக்கூடிய இடம். அதோடு விவசாயத்துறையில் அங்குள்ள மக்கள் பல முன்னேற்றங்களைச் செய்வதற்கும் பாடுபட்டு உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் பல காரியங்களை முற்போக்காகச் செய்து வருகிறார்கள் அங்குள்ள மக்கள். அப்படி இருக்கும்போது குடிதண்ணீருக்கு அங்குள்ள மக்கள் எல்லாம் கஷ்டப்படுகிறார்கள் என்பதோடு மட்டுமல்ல, அங்குள்ள பொதுமக்களின் சுகாதாரமும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, இங்கு நடைபெறக்கூடிய திட்டங்கள் எல்லாம் வேலைகள் எல்லாம் நல்ல முறையில் நடந்தேற வேண்டுமானால் அங்கு குடிதண்ணீருக்காக போடப்பட்டிருக்கும் திட்டத்தை உடனடியாக நடத்துவதற்கு நிதி ஒதுக்க வேண்டுமென்று மிகவும் வற்புறுத்தி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு மேல், என்னுடைய தொகுதியாகிய பல்லடம் தாலூகா ஒரு பஞ்சப் பிரதேசம் என்பது இந்த மாகாணத்திலுள்ளவர்கள் அனைவரும் நன்றாக அறிந்திருப்பார்கள். இப்போது பரம்பிக்குளம் திட்டம் நிறைவேற்றப்படும்போது இந்த பகுதியில் பெரும் அளவுக்கு நீர்பாசன வசதி கிடைக்கக்கூடிய அளவில் இல்லை. அதோடு இதற்கு ஈடு செய்யக்கூடிய நிலையில் பெரிய நீர்பாசனத் திட்டங்கள் இல்லாவிட்டாலும், சிறிய நீர்ப்பாசனத்திற்கு வசதியாக இருக்கும் குளம் குட்டைகளை செப்பனிடுதல், மழை காலத்தில் வரக்கூடிய தண்ணீரைக்கொண்டு தேக்கி வைத்து அதன் கீழ் இருக்கும் கிணறுகளுக்கு ஊற்று ஏற்படுவதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்துதல், அதற்கு மேல், குந்தாவிலுள்ள கழிவு நீரை கோயம்புத்தூர், அவனாசி, பல்லடம் முதலிய தாலூகாக்களுக்கு பயன்படுத்துதல் போன்ற இரண்டு மூன்று திட்டங்களை நிறைவேற்றிக் கொடுப்பதாக இருந்தால் அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு ஓரளவு குறைகளை நீக்கினதாக இருக்கும் என்பதை



15th March 1960] [Srimathi Kolanthai Ammal]

குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, பெரிய நீர்ப்பாசன திட்டங்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து கொண்டிருக்கும் நாம், இந்த உணவு உற்பத்தியை தீவிரமாக பெருக்க வேண்டும் என்ற அடிப்படையில் சிறிய நீர்பாசன திட்டங்களுக்கு அதிகமான அளவில் பணம் ஒதுக்கவேண்டும் என்பதோடு, குளம், குட்டைகளை செப்பனிடுவதில் ஒதுக்கப்படுகிற இடங்களில் பல்லடம் தாலூகாவும் ஒன்றாக அமைய வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் புதிய கிணறு வெட்டுவதற்காக 1,000 ரூபாய் கடனாக கொடுக்கப்படுகிறது. ஆனால் கோயம்புத்தூர், பல்லடம் போன்ற இடங்களில் 1,000 ரூபாய்க்குள் கிணறு வெட்டுவது என்பது முடியாது. ஆகவே, அங்கு குறைந்தது 2,000 ரூபாயாவது வேண்டும். ஆகவே, இந்த சலுகையை 2,000 என்று கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு இந்த முறிக்கையில் ஏழைகள் நல்ல முறையில் விவசாயத்தில் ஈடுபடுவதற்காக மான்யமாக உதவி சலுகை கொடுப்பதற்கு சர்க்கார் முன் வந்திருக்கிறது. அதோடுகூட இதில் ஏதாவது நஷ்டங்கள் ஏற்பட்டாலும் அதை ஈடு செய்வதற்கும் ஒரு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1-30 p.m. இந்த பெரும் உதவிக்காக நாம் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம். ஏழை விவசாயிகளுக்கு நல்ல முறையில் சலுகை அளிக்கப்படுமானால் அதிகமான அளவில் உணவு உற்பத்தியில் முன்னேற்றம் காண முடியும் என்பதை உறுதியாக சொல்ல முடியும். இன்னும் ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தில் நில ஆர்ஜிதம் செய்வதில் சில கால தாமதங்கள் ஏற்படுவதாக இருக்கிறது. இதனால் பாதிக்கப்படும் ஏழை மக்கள் இந்தத் திட்டங்களில் நம்பிக்கை இல்லாத அளவுக்கு பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

**DEPUTY SPEAKER:** I hope the House gives permission to sit till 1-35 p.m. to enable the hon. Member Srimathi Kolanthai Ammal to finish her speech.

**SRIMATHI KOLANTHAI AMMAL:** மூன்று ஆண்டுகள், இரண்டரை ஆண்டுகள் அளவில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகையால் இதற்கு நமது சட்டத்தில் ஒரு திருத்தம் கொண்டுவந்து கலெக்டர் அவர்களே "எமெர்ஜென்ஸி பவர்ஸ்"-ல் வீடு கட்டுவதற்கான நிலங்களை எடுக்கும் அளவுக்கு நிர்ணயிக்கவேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்தில் குறிப்பிட்ட சில அங்கத்தினர்கள் சேர்ந்து கொள்கிறார்கள். சொஸைடிகளிலும் அப்படியே. மேற்கொண்டு அங்கத்தினர்கள் சேர வேண்டுமானால் சென்னை வரையில் விண்ணப்பம் வந்து, 6 மாதம் அல்லது ஒரு வருஷம் ஆன பிறகுதான் அங்கத்தினராக ஆக முடியும். இதற்கும் நமது கூட்டுறவுச் சங்கத்தைத் திருத்தி, ஒரு அங்கத்தினர் ஜில்லாவிலேயே காரியத்தை முடித்துக்கொள்கிற அளவுக்கு சட்டம் அமைய வேண்டுமென்று நான் வற்புறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

[Srimathi Kolanthai Ammal] [15th March 1960

அடுத்தபடியாக, நம்முடைய பிளாக்குகளெல்லாம் நல்ல முறையில் வேலை செய்து பொது மக்களுக்கு நல்ல பணியைச் செய்கிறது என்ற காரணத்தினால் ஆளும் கட்சியில் இருக்கிற அங்கத்தினர்களும், எதிர் கட்சி அங்கத்தினர்களும் பல முறை இந்த சட்டமன்றத்தில், எங்கள் தொகுதியில் பிளாக் டெவலப்மெண்ட் வரவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லியிருப்பதைக் கேட்டிருக்கிறோம். அப்படி இருக்க நேற்று ஒரு அங்கத்தினர் பிளாக் அபிவிருத்தித் திட்டம் காங்கிரஸ் கட்சியின் பிரசாரத்திற்கு உதவுகிறது என்றெல்லாம் அவர்கள் சொல்வார்களானால், உண்மையாக இருக்குமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த அபிவிருத்தித் திட்டம் கிராம நலம் பாதுகாக்கப்படுவதற்கு ஏற்றபடி அமைந்திருக்கிறது என்பதைத் தான் நாம் இங்கே குறிப்பிடுகிறோம். ஆகையால் இன்னும் எங்கள் பகுதியில் பிளாக் அபிவிருத்தித் திட்டம் வராமல் இருக்கிறது அத்தகைய இடங்களுக்கு இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு வேண்டிய நிதியை ஒதுக்கி அதையும் இந்தத் திட்டத்திலேயே சேர்த்துக் கொள்ளவேண்டும். இல்லையென்றால் சமூக நல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பணம் செலவழிக்க உதவி செய்யவேண்டும். நாண்-பிளாக் ஏரியாக்களுக்கு இந்தப் பணத்தைச் செலவழிக்க முடியாத காரணத்தினால் ஆரம்பப் பாடசாலை கட்டிடம் கட்டக் கூட பணம் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆக, பிளாக் அபிவிருத்தித் திட்டம் வரும் வரையில் நாண்-பிளாக் ஏரியாக்களுக்கு குறிப்பிட்ட தொகை ஒதுக்கி பண உதவி கொடுத்தால் தான் அந்தத் திட்டம் வரும் வரையில் ஓரளவுக்கு சிறு சிறு வேலைகளைச் செய்ய முடியும். ஆகையால் அதற்கும் பணம் ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு தன்னுடைய கோயம்புத்தூர் ஜில்லாவிலே பல தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்வதன் காரணமாக தொழிற்சாலைகளுக்கும், விவசாயத்திற்கும் ஏராளமான மின்சாரம் செலவழிக்கப்படுகிறது. அந்த மின்சாரத்தைச் செலவழிக்கும்போது காரண்டி எடுத்துக் கொண்டு செலவழிக்கிறார்கள். அவர்கள் மினிமம் காரண்டி வாங்கிக்கொண்டு அஃபிஷியல் முறையில் ஏற்படக் கூடிய கஷ்டங்கள் காரணமாக அவர்களுக்குப் பர்மிஷன் வரும் வரையில் உபயோகத்திற்குக் கிடைப்பதில்லை. அதற்குக் கூட மின்சார கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்த உபயோகப்படுத்தாத காலத்திற்கு மின்சாரக் கட்டணம் வசூலிக்காமலிருக்க ஆவன செய்யவேண்டுமென்று மின்சார இலாகா அமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய நெய்வேலி பழுப்பு நிலக்கரி திட்டம், 86 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படப் போகிற ஒரு திட்டம், தென்னாட்டை வளம்பெறச் செய்யக் கூடிய ஒரு பெரிய திட்டம். வடக்கு வளர்கிறது என்று சொல்லக் கூடியவர்களுக்கு, தென்னாட்டில் இப்படிப்பட்ட ஒரு பெரிய திட்டம், 86 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படுவதால், அதோடு கூட மூன்று பெரிய



15th March 1960] [Srimathi Kolanthai Ammal]

தொழிற்சாலைகள் ஏற்படுவதற்கு, செயற்கை உரம் உற்பத்தி ஆக, மின்சார உற்பத்தி ஆக, இரும்பு கனிப்பொருள்களை உருக்க, இத்தகைய தொழில்களுக்கு நமது நெய்வேலி பழுப்பு நிலக்கரி உபயோகப்படுத்தினோமானால், தெற்கு வளர்கிறது என்பதற்கு ஒரு பெரிய எடுத்துக் காட்டாக இருக்கும். அந்தத் திட்டம் நல்ல முறையில் நிறைவேறும் என்று நம்பிக்கை இருக்கிறது.

ஆகவே, இப்படிப்பட்ட சிறந்த வரவு-செலவுத் திட்டத்தை இந்தச் சபையின் முன்பு சமர்ப்பிக்க அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொண்டு, பல்லடம் தாலுகாவிற்கு பரம்பிக்குளம் தண்ணீர் இல்லையென்றால் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு பணம் கொடுத்து செப்பனிட வேண்டிய நிதியை ஒதுக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

DEPUTY SPEAKER: The House with now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

## VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### *A. Statutory Rules and Orders.*

* 51. *Notification issued with G.O. No. 2182, L.A., dated 29th December 1959 bringing into force the provisions of the Act, other than Sections 1 and 196 of the Madras Panchayats Act, 1958 [Laid on the table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958)].*

* 52. *Notification issued with G.O. Ms. No. 2192, L.A. dated 30th December 1959 extending the term of office of the members of Othakadai Panchayat (Madurai District) under section 10(1) of the Madras Village Panchayats Act, 1950 [Laid on the table of the House under section 113(4) of the Madras Village Panchayats Act, 1958, (Madras Act X of 1950)].*

* 53. *Amendment to rule (7) of the Madras Shops and Establishment Rules, 1948 issued in G.O. Ms. No. 4218, I.L.C., dated 2nd November 1959 [Laid on the table of the House under section 49 of the Madras Shops and Establishments Act, 1947 (Madras Act XXXVI of 1947)].*

† 54. *Notification issued with G.O. Ms. No. 70, Local Administration, dated 11th January 1960, regarding the powers delegated to the Inspector of Municipal Councils and Local Boards [Laid on the table of the House under section 113 (4) of the Madras Village Panchayats Act, 1950 (Madras Act X of 1950)].*

† 55. *Notification issued with G.O. Ms. No. 72, Local Administration, dated 12th January 1960, appointing one Advisory Committee to advise special officers of District Boards [Laid on the table of the House under section 2(1) of the Madras District Boards (Amendment) Act, 1957 (Madras Act XIII of 1957)].*

# APPENDIX I TO THE BUDGET SPEECH.

[The figures up to the end of 1953–4 include those relating to the Andhra areas. The figures from 1956–7 take into account the Reorganization of States from the 1st November 1956.]

## REVENUE AND EXPENDITURE ON REVENUE ACCOUNT OF THE MADRAS STATE.

| Major heads. | 1938–9. | 1952–3. | 1953–4. | 1954–5. | 1955–6. | 1956–7. | 1957–8. | 1958–9. | 1959–60. Budget Estimate. | 1959–60. Revised Estimate. | Budget Estimate, 1960–1. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. | RS LAKHS. |
| **A. REVENUE.** | | | | | | | | | | | |
| Union Excise Duties. | .. | 2,88·75 | 2,25·44 | 1,66·49 | 1,82·56 | 1,75·14 | 3,14·48 | 5,88·58 | 5,81·00 | 6,00·00 | 6,10·00 |
| Taxes on income other than Corporation tax—Share of Income-tax. | 22·50 | 9,42·44 | 7,50·82 | 5,67·38 | 5,59·54 | 5,23·85 | 6,16·07 | 6,36·72 | 6,25·00 | 6,50·00 | 4,37·00 |
| Agricultural Income-tax. | .. | .. | .. | .. | 1,41 94 | 1,12·51 | 1,29·67 | 86·55 | 1,47·00 | 1,47·00 | 1,50·00 |
| Estate Duty .. | .. | .. | .. | 5·28 | 17·57 | 22·35 | 28·41 | 25·18 | 28·41 | 24·00 | 24·00 |
| Taxes on Railway fares. | .. | .. | .. | .. | .. | .. | 31·07 | 70·37 | 70·00 | 80·00 | 82·00 |
| Land Revenue—Gross receipts including portion due to irrigation. | 7,00·78 | 8,70·85 | 6,68·67 | 5,95·41 | 5,97·34 | 6,19·86 | 6,91·52 | 6,67·34 | 6,68·38 | 6,55·35 | 6,61·65 |
| Excise .. .. .. | 3,72·23 | 47·26 | 30·86 | 27·22 | 28·62 | 30·29 | 27·97 | 22·63 | 25·70 | 23·39 | 23·39 |
| Stamps .. .. | 1,73·37 | 4,51·88 | 3,69·23 | 2,62·47 | 3,59·56 | 3,62·76 | 3,50·00 | 3,91·81 | 3,60·45 | 4,02·63 | 4,27·63 |
| Forest .. .. .. | 45·63 | 1,58·17 | 1,22·14 | 1,31·89 | 1,77·08 | 1,75·17 | 1,29·19 | 1,30·63 | 1,00·09 | 1,34·29 | 1,35·84 |
| Registration .. .. | 32·70 | 1,01·03 | 90·60 | 60·46 | 69·66 | 78·85 | 79·42 | 86 26 | 76·94 | 87 03 | 87·03 |
| Taxes on Vehicles .. | 81 22 | 4,25·95 | 4,17·04 | 3,59·89 | 4,00 87 | 4,37·73 | 4,54·29 | 4,99·58 | 4,78·02 | 5,19·01 | 5,30·02 |
| Sales tax .. .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 14,76·11 | 15,26·56 | 15,42·60 | 15,55·51 |
| Other taxes and duties—General sales tax .. | .. | 13,23·18 | 11,99·26 | 8,68·98 | 9,82·07 | 11,16·77 | 11,78·05 | † | † | † | † |
| Other items .. | 3·19 | 3,78·67 | 1,22·08 | 2,49·35 | 2,66·40 | 2,75·61 | 3,84·67 | 2,07·50 | 1,86·95 | 2,07·17 | 2,12·60 |
| Total .. | 3·19 | 17,01·85 | 13,21·34 | 11,18·33 | 12,48·47 | 13,92·38 | 15,62·72 | 2,07·50 | 1,86·95 | 2,07·17 | 2,12·60 |
| Irrigation—Direct receipts * .. | 6·31 | 15·52 | 10·64 | 6·59 | 7·22 | 9·14 | 9·57 | 10·62 | 22·27 | 10·15 | 8·95 |
| *Deduct*—Working expenses. | — 38·39 | — 1,65·55 | — 1,38·01 | — 44·32 | — 45·46 | — 57·72 | — 59·46 | — 64·57 | — 58·00 | — 69·14 | — 62·21 |
| Net receipts .. | — 32·08 | — 1,50·03 | — 1,27·37 | — 37·73 | — 38·24 | — 48·58 | — 49·89 | — 53·95 | — 35·73 | — 58·99 | — 53·26 |

* Excludes land revenue.

† Shown under "Sales Tax".

[15th March 1960

† 56. *Notification issued with G.O. Ms. No. 75, Local Administration, dated 12th January 1960 appointing officers to exercise or perform the powers or duties of the Inspector* [*Laid on the table of the House under section* 170 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958)].

† 57. *Notification issued with G.O. Ms. No.* 2083, *Local Administration, dated 10th February* 1959, *regarding choosing of by Presidents of Panchayats of a Member to a District Development Council under the Madras District Development Council Act*, 1958.

† 58. *Notification issued with G.O. Ms. No.* 1677, *Local Administration, dated 26th September* 1959, *extending the term of office of the members of the Santhiyur Attayampatti Panchayat (Salem District) under section* 10 (1) *of the Madras Village Panchayats Act*, 1950 [*Laid on the table of the House under section* 113 (4) *of the Madras Village Panchayats Act*, 1950 (*Madras Act X of* 1950)].

† 59. *Amendment to the Madras Industrial Establishments (National and Festival Holidays) Rules*, 1959 *issued in G.O. Ms. No.* 4812, *I.L.C. (Labour), dated 14th December* EFLF [*Laid on the table of the House under section* 12(3) *of the Madras Industrial Establishments (National and Festival Holidays) Act*, 1958 (*Madras Act XXXIII of* 1958)].

‡ 60. *Notification issued with G.O. Ms. No.* 366, *Revenue, dated 21st January* 1960, *under the Madras Hindu Religious and Charitable Endowments Act*, 1959, *regarding the Madras Hindu Religious and Charitable Endowments Act*, 1959, *regarding the appointment of the Chairmen from the Members of the Area Committees* [*Laid on the table of the House under section* 116 (3) *of the Hindu Religious and Charitable Endowments Act*, 1959 (*Madras Act* 22 *of* 1959)].

*B. Reports, Notifications and other papers.*

§ 16. *Publication of Half-yearly review of the activities of department under the administrative control of Home Department for the first half of the year* 1959.

* 17. *Short Report of the achievements and various activities of the Hindu Religious and Charitable Endowments (Administration) Department for the period from 1st April to 30th September* 1959).

* 18. *Administration Report of Madras State Electricity Board for* 1957-58.

* 19. *Budget Speech.*

* 20. *Appendices to the Budget Speech.*

* 21. *Introduction to the Budget.*



D 1 V211,31 N60 N61.28;1

15th March 1960]

* 22. *Annual Financial Statement.*

* 23. *Budget Memorandum.*

* 24. *Detailed Budget Estimates of Revenue.*

* 25. *Demands for Grants and Detailed Budget Estimates.*

* 26. *Detailed Civil Works Budget.*

* 27. *Detailed Irrigation Budget.*

* 28. *Government Commercial Undertakings.*

* 29. *Plan Supplement.*

* 30. *Narrative Notes on the Plan.*

* 31. *Economic Classification of the Budget.*

* 32. *Vote on Account.*

‡ 33. *Annual Financial Statement for* 1960–61 *and Supplementary Financial Statement for* 1959-60 *of the State Electricity Board.*

---

* Placed on the table on 10th March 1960.

† Placed on the table on 11th March 1960.

‡ Placed on the table on 11th March 1960.

§ Sent by post on 4th March 1960.

61315